Bible Pearls (TAMIL)

பைபிள் முத்துக்கள்

50 ஆண்டுகளுக்கும் கூடுதலான (1963-2016)
பிரசங்கப்பணியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட
200 பிரசங்கக் குறிப்புகள்

R.ஸ்டான்லி

அன்பளிப்பு

எவருக்கு ____

எவரிடமிருந்து ____________________________________

என்று ____

எதற்கு ____

____

____

''கருப்பையில் இருக்கும்போதே
ஆண்டவர் என்னை அழைத்தார்;
என் தாயின் வயிற்றில் உருவாகும்போதே
என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்.
அவர் என் வாயைக்
கூர்மையான பட்டயம் ஆக்கி,
தமது கரத்தின் நிழலினால்
என்னை மறைத்து,
என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கி,
என்னைத் தமது அம்பறாத் தூணியில்
மறைத்து வைத்தார்.
அவர் என்னிடம்,
நீ என் தாசன்;
நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார்!''

(ஏசாயா 49:1-3)

பைபிள் முத்துக்கள்

50 ஆண்டுகளுக்கும் கூடுதலான
(1963-2016) பிரசங்கப் பணியிலிருந்து
தெரிந்தெடுக்கப்பட்ட 200 பிரசங்கக் குறிப்புகள்

R. ஸ்டான்லி, B.E., M.Tech.
திருமறைப் போதகராய் மாறிய
ஒரு கட்டிடப் பொறியியலர்

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>

Bible Pearls (Tamil)

Copyright 2017 R. STANLEY

First Edition : January 2017

இப்பிரசங்கக் குறிப்புகளைப் பிரசங்கிக்கத்
தாராளமாய்ப் பயன்படுத்தலாம்.
எங்கிருந்து எடுக்கப்பட்டவை என்று சொல்லத் தேவையில்லை.
ஆனால் அச்சடிக்கவோ மொழிபெயர்க்கவோ
ஆசிரியரது அனுமதி தேவை.

இந்நூலில் திருமறையின் பழைய மொழிபெயர்ப்பும் (OV)
புதிய மொழியாக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

2016இல் வெளிவந்த இந்நூலின் ஆங்கிலப் பதிப்பை
ஆசிரியரே தமிழாக்கியுள்ளார்.

இப்புத்தகத்தின் விற்பனையில் இலாபமேதுமிருந்தால்
அது ஆசிரியரது எழுத்துப்பணிகளுக்கும்
தானதர்மச் செயல்களுக்கும் பயன்படுத்தப்படும்.

Printed by AMR Prints, Chennai

விலை ரூ. 1000/-; வெளிநாடுகளுக்கு US $ 30
முழுநேர இறைப்பணியாளருக்கு ரூ. 500/- மட்டுமே

அர்ப்பணிப்பு

ஆங்கிலத்திலும் தமிழிலும் எனக்கு ஆர்வமுண்டாக்கி
இம்மொழிகளை எனக்குக் கற்றுத் தந்த
பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் நினைவுக்கு!

— அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் —

Mr. S.A. தாமஸ்
(1905-1971)
ஆங்கிலம்

Mr. M. தர்மதுரை
(1922-2005)
தமிழ்

நன்றி

இந்நூலைத் தயாரிப்பதில் எனக்குத் தன்னலமின்றிப்
பேருதவியாயிருந்த இந்நண்பர்களுக்கு மனமார்ந்த நன்றி.
உலகெங்கும் இந்நூலைப் பயன்படுத்துவோர் பெறவிருக்கும்
ஆசீர்வாதங்களுக்கேற்ப தேவன் இவர்களுக்குப்
பலனளிக்க வேண்டுகிறேன்.

— தட்டெழுத்து —

Mr. S. எபநேசர்
Mrs. உஷா எபநேசர்

— பக்க வடிவமைப்பு —

Mr. K. குணசேகரன்

— அச்சுப்பிழை திருத்தம் —

Mrs. லினெட்டா சம்பத்குமார்
Mr. மரிய ஜோசப்
Mr. C. சுதாகர்
Mr. S. அந்தோனி அற்புதம்
Mrs. T.P.S. கோகிலா பொன்னுசாமி
Mr. A. ராஜேஷ்

ஆங்கிலப் பதிப்பின் வேலை துவங்கிய 2014இலிருந்தும்,
தமிழ்ப் பதிப்பின் வேலை துவங்கிய ஜூலை 2016இலிருந்தும்
நூற்றுக்கணக்கான சகோதர சகோதரிகள்
எனக்காய்ப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தனர்.
அவர்கள் ஒவ்வொருவருக்கும் இறையாசி பெருகட்டும்!

துவக்க வரிகள்

தேவன் என்னைப் பதினாறு வயதினில், கல்லூரியில் நுழைந்துள்ள ஆண்டாகிய 1962இல், எனது மறுபிறப்பை அடுத்து உடனே, தமது திருவார்த்தையைப் பிரசங்கிக்க அபிஷேகம்பண்ணினார். தென் தமிழகத்திலுள்ள எனது சொந்தவூராகிய நாசரேத்தில், ஓர் இளம் வாலிபனாக, சகோதரன் N. தானியேல், சுவிசேஷகர் N. ஜீவானந்தம், சாது கொச்சுக் குஞ்சு, Dr. சாம் கமலேசன், Dr. தியோடார் வில்லியம்ஸ், Dr. விக்டர் மனோகரம், வேதநாயகம் சாஸ்திரியார், மற்றும் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர்களான அருள்திரு ஜோசப் ஆபிரகாம், அருள்திரு K.S. ஆபிரகாம் போன்ற சிறந்த தேவ மனிதரின் பிரசங்கங்களைக் கேட்கும் சிலாக்கியம் கிடைத்தது. ஏறத்தாழ இந்தியாவின் பிரபலப் பிரசங்கிமார் எல்லாருமே நாசரேத்தில் பிரசங்கித்திருக்கிறார்கள். அவர்களில் சாது சுந்தர்சிங்கும் ஒருவர் எனக் கேள்விப்பட்டு மெய்சிலிர்த்தேன். நாசரேத்திலுள்ள ஆங்கிலிக்கன் ஆராதனைகளில் தவறாது பங்குபெற்றதால் ஆண்டொன்றுக்குக் குறைந்தது 100 பிரசங்கங்கள் கேட்டுவந்தேன். அவ்வூருக்கருகிலுள்ள திருமறையூர் வேதாகமக் கல்லூரியிலிருந்து பயிற்சியர்கள் வந்து எங்கள் தெரு ஜெபக்கூட்டங்களிலும் வீட்டு ஜெபக்கூடுகைகளிலும் பிரசங்கிப்பார்கள். நான் பிரசங்கிக்கத் துவங்குமுன் இவையெல்லாம் என்னில் ஏற்படுத்திய தாக்கத்தை நான் குறைத்து மதிப்பிட முடியாது.

விருதுநகரிலுள்ள CSI புனித யோவான் ஆலய ஞாயிறு ஆராதனை ஒன்றில்தான் 1963 மே மாதம் முதன்முறையாகப் பிரசங்கித்தேன். அது ஒரு சில வேத வசனங்களைச் சேர்த்து நான் கொடுத்த எனது சாட்சிதான். அச்சபையின் ஆயராயிருந்த அருள்திரு. C.E. சவுந்திரராஜ் அவர்கள் (2017இல் அவருக்கு வயது 86) ஆராதனை முடிந்ததும் என்னைத் தட்டிக்கொடுத்து சொன்ன வார்த்தைகளை நான் மறக்கவே இல்லை: ''தம்பி, தேவன் உன்னை அதிகமதிகமாய்ப் பிரசங்க ஊழியத்தில் பயன்படுத்துவார். திருவசனத்தால் உன்னை நிறைத்துக்கொள்; உண்மையாயிரு!'' இந்நூலின் முதல் பிரதி அவருக்கே கொடுக்கப்பட்டது. இதே ஆலய ஞாயிறு ஆராதனையில் 2016 ஆகஸ்டு 14 அன்று இந்நூலின் ஆங்கிலப் பதிப்பு *(Bible Pearls)* வெளியிடப்பட்டது.

இராணுவ அதிகாரியாயிருந்த எனது தந்தை (1913-1973) அவர்களிடமிருந்தே கவனமாய்ப் பிரசங்க ஆயத்தம் செய்யவேண்டுமென்ற ஊக்குவிப்பு கிடைத்தது. 45 நிமிடம் பிரசங்கிக்க, நாசரேத்திலுள்ள தேரி எனும் பனைமரக் காட்டில், 3 அல்லது 4 மணி நேரம் முழங்காலில் ஆயத்தப்படுவார். அவரது பிரசங்கக் குறிப்புகளை

ஆவலுடன் பார்த்திருக்கிறேன். நன்கு ஆயத்தப்படுத்தப்பட்ட குறிப்புகளில்லாது பிரசங்கிக்கக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டேன். ஹாலந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாமில் 1983இல் நடந்த உலக சுவிசேஷகர் மாநாட்டில், பண்டிதர் பில்லி கிரஹாம் இரு பிரசங்கிமாரது பிள்ளைகளைக் குறிப்பிட்டார். ஒருவன் அடுத்தவனிடம், ''எங்கள் அப்பா ஒரு கில்லாடி; பிரசங்கக் குறிப்பு இல்லாமலேயே பிரசங்கிப்பார்'' என்றான்! அடுத்தவன், அதற்குப் பதிலடியாக, ''எங்கள் அப்பா அதைவிடக் கில்லாடி; யோசிக்காமலேயே பிரசங்கிப்பார்'' என்றான்! ''இவ்விரண்டு பேரையும்போல் நான் கில்லாடியல்ல; எனக்குப் பிரசங்கக் குறிப்புகள் கட்டாயம் தேவை'' என்று பில்லி கிரஹாம் கூறி முடித்தார்.

பிரசங்கக் குறிப்புகளைக் கிரமமாக, சிரமமெடுத்து, ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற ஒழுங்குக்குள் துவக்க முதலே நான் வந்துவிட்டதற்காய்த் தேவனைத் துதிக்கிறேன். அவ்வப்போது பிரசங்கபீடத்தில் புதுக் கருத்துகளும் அகத்தூண்டல்களும் வந்தாலும், தடம் மாறிச் சென்றுவிடாதபடி இக்குறிப்புகள் என்னைக் காத்துக்கொள்கின்றன. ''என்ன பேசுவோமென்று கவலைப்படவேண்டாம்; அந்த வேளையில் கொடுக்கப்படும்'' (மத் 10:19,20). இது பிரசங்கபீடத்திற்குரிய வாக்கு அல்ல. சிறையிலடைக்குமுன் விசாரனையின்போது நாம் கொடுக்கவேண்டிய பதிலையே இங்கு இயேசு குறிப்பிட்டார் (வச 18,19). சோம்பேறித்தனத்திற்குப் போர்வையாகத் திருவசனம் எதையும் பயன்படுத்தாதிருப்போம்.

பலவித சபையாருக்குப் பிரசங்கிக்க தேவன் தமது அநாதிக் கிருபையால் ஆண்டுகளிலெல்லாம் என்னைக் கொண்டுசென்றார்: புராதனச் சபைகளும் புதிய சபைகளும், பெந்தெகொஸ்தேயினரும் பெந்தெகொஸ்தேயல்லாதவரும், வரங்களை வலியுறுத்துவோரும் மற்றவர்களும், கிருபைவாதிகளும் கிரியைவாதிகளும், இந்தியரும் வெளிநாட்டவரும். அவரது வசனத்தை உண்மையாய், சமரசமின்றி, பிரசங்கிக்க எனக்கருளினார். அடுத்த அழைப்பை எதிர்பார்த்து நான் பிரசங்கித்ததேயில்லை. அப்போஸ்தலன் பவுலுடன் சேர்ந்து எனது சாட்சி: ''கர்த்தர் எனக்குத் துணை நின்று, என்னால் பிரசங்கம் நிறைவேற என்னைப் பலப்படுத்தினார்'' (2 தீமோ 4:17). ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குக் கூடுதலான (2016) எனது பிரசங்கப்பணியினால் தேவன் மகிமைப்பட்டார், அவரது மக்கள் பக்திவிருத்தியும் சவாலுமடைந்தனர். ''இந்த மகத்துவமான வல்லமை நம்மால் அல்ல, தேவனால் உண்டாயிருக்கிறது என்று விளங்கும்படி'' தெய்வீகச் சத்தியங்களாகிய பொக்கிஷங்களை ''மண் பாண்டங்களில்'' வைத்திருக்கும் அவருக்கே துதியுண்டாகட்டும் (2 கொரி 4:7).

பிரசங்கிக்கப்படாத குறிப்புகளேதுமிருந்தால் தரும்படி எனது இளம் உடன் ஊழியர் ஒருவர் கேட்டார்! நான் பிரசங்கித்துத் தீராத அளவு பிரசங்கக் குறிப்புகளைத் தேவன் நிறைவாய்த் தந்தவண்ணமிருக்கிறா ரென்று ஒரு பயிற்சிக் கருத்தரங்கில் எனது சாட்சியைத் தொடர்ந்து இவ்விதம் கேட்டார்! தேவன் தரும் கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால் கிடைக்கும் பலாபலன் இது: ''உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; பரி பூரணமும் அடைவான்'' (மத் 25:29). அந்நண்பர் அவ்விதம் கேட்டதி லிருந்து, எனது பிரசங்கக் குறிப்புகளைத் தொகுத்துக் கிறிஸ்தவ உலகிற்குக் கொடுத்துவிடவேண்டுமென்ற வாஞ்சை பெருகிவந்தது. எங்கெல்லாம் இக்குறிப்புகளைப் பிரசங்கித்தேனோ, அங்கெல்லாம் மக்களது வாழ்வில் விந்தை மாற்றங்கள் ஏற்பட்டன. எனது பிரசங்கங் களில் தாற்பரிய விளக்கம் (descriptive) மட்டுமல்ல, செயலாக்கும் நடை முறையும் (prescriptive) எப்பொழுதும் இடம் பெறும். ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்ற மக்களது கேள்விக்கு நேரடியான பதில்கள் நமது பிரசங்கங்களில் இருக்கவேண்டும் (லூக் 3:10,12,14; அப் 2:37).

எனது பிரசங்கக் குறிப்புகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 200 குறிப்புகள் பல்வேறு தலைப்புகளில் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தனித் தியானத்திற்கும், குழு ஆராய்ச்சிக்கும், பிரசங்கிக்கவும் இவற்றைப் பயன்படுத்தலாம். ஒரு கேள்வி: ''பிறரது பிரசங்கங்களைப் பிரசங்கிக் கலாமா?'' நமக்கிருக்கும் எதுவும் நமக்குச் சொந்தமானதல்ல. நமக் கிருப்பதெல்லாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டதே (1 கொரி 4:7). அப்போஸ்தலன் பவுல் தேவனிடமிருந்தே நேரடியாக வெளிப்பாடுகள் பெற்றார் (1 கொரி 11:28; 15:3; கலா 1:12). ஆனால் தன்னிடமிருந்து பெற்றவற்றையே பிறருக்குப் போதிக்க தீமோத்தேயுவைப் பணித்தார்; இப்படியே இது தொடரவேண்டும் என்றார் (2 தீமோ 2:2). இறைச்சத்தி யங்களைக் கடத்த இதுவே தேவனது பொதுவான முறை. எனவே, இன் னொருவர் பிரசங்கக் குறிப்புகளை வைத்துப் பிரசங்கிப்பதில் எத்தவறு மில்லை. பிரசங்க ஊழியத்தைத் துவங்குகையில், இங்கிருக்கும் பிர சங்கக் குறிப்புகளை, ஆங்காங்கே தேவையான மாற்றங்களைச் செய்து கொண்டு, பயன்படுத்துவது நல்ல பயிற்சி. இக்குறிப்புகளைவிட உயர மாகவும், ஆழமாகவும் செல்ல உங்களைத் தடுப்பது யார்? பிரசங்க பீடத்தில் ஏறுமுன் ஆவியானவரது அபிஷேகத்தின் புதுப்பித்தலுக்காய்க் காத்திருக்க மட்டும் தவறிவிடாதீர்கள்.

பிரசங்கங்கள் நன்கு கட்டமைக்கப்பட்டிருக்குமானால், மக்களது மனதில் அவை கூடுதல் காலம் நிலைத்திருக்கும். ஒழுங்கும் கிரமமும் தெய்வீகமானது (லூக் 1:1-4; 1 கொரி 14:40). ஒரு கட்டிடப் பொறியிய லராய் நான் பெற்றிருந்த தொழிற்பயிற்சி இப்பிரசங்கக் குறிப்புகளை

ஆயத்தம்பண்ணுகையில் கைகொடுத்தது. இக்குறிப்புகளை நீங்கள் நேரமெடுத்துத் தியானித்தால் கிரமமும் ஒழுங்குமாய்ப் பிரசங்க ஆயத்தம் செய்யப் பயிற்சி பெறுவீர்கள். இங்குள்ள ஒவ்வொரு வசனத்தையும் வேதத்தில் வாசித்து, இக்குறிப்புகள் அனைத்தையும் படித்து முடிப்பது மூன்றாண்டு வேதக் கல்லூரிப் படிப்பிற்கும் மேம்பட்டதாயிருக்கும். கையெழுத்தாய் எழுதி வைத்துக்கொண்டு பிரசங்கபீடத்தில் நான் பயன்படுத்திய குறிப்புகளே இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. மாதிரிப் பக்கமொன்று 20ஆம் பக்கத்தில்.

மக்களுக்கு இறைச் செய்திகளைப் பெற்றுக்கொள்ள இறைப் பிரசன்னத்தில் அமர்ந்து காத்திருக்கவேண்டிய தரமான நேரத்தைப் போதகர்கள் மற்றும் பிரசங்கிமாரிடமிருந்து நிர்வாகப் பொறுப்புகள், கட் டிடத் திட்டங்கள் மற்றும் அளவுக்கு மீறிய பயணங்கள் திருடிவிடுகின் றன (அப் 6:3,4). கொழுத்த ஆயரும் மெலிந்த ஆடுகளும்தான் இதன் விளைவு. இந்நிலைமீது தேவன் சினங்கொள்கிறார் (எசேக் 34). ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை நிறுவிய தலைவனாய் (1971-2003), எனக்கு எவ்வளவோ நிர்வாக மற்றும் பணிக்களப் பொறுப்புகளிருந்தன. ஆனால், தேவ கிருபையால், எவ்வளவு நியாயமான அவசரமான வேலைகளிருந் தாலும், அதற்காக எனது பிரசங்க ஆயத்த நேரத்தைப் பலியாக்கவில்லை. இல்லையேல் இவ்விதமானதொரு நூலை வரும் தலைமுறைகளுக்கு விட்டுச்செல்ல முடியாது. ''ஆசாரியனது உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்; வேதத்தை அவன் வாயில் தேடுவார்களே'' (மல் 2:7). திருவசனத்தைப் பிரசங்கிக்கவும் போதிக்கவும் அழைக்கப்பட்டவர்கள் தங்கள் நேரத்தைச் சில்லறைக் காரியங்களில் வீணடித்தால், இறைமக்கள் அன்றைய இஸ்ரவேலரைப்போல் ''உபதேசிக்கும் ஆசாரியன்'' இல்லாது போவர் (2 நாளா 15:3). கூட்டம் கூட்டம் என்று மக்கள் அலைந்தாலும் வேத வசனப் ''பஞ்சம்'' தலைவிரித்தாடும் (ஆமோஸ் 8:11,12).

இங்கு பிரசங்கக் குறிப்புகள் பல்வேறு பொருள்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்விதமான ஒரு தொகுப்பில் அதே கருத்துகளும் குறிப்புகளும் திரும்பத் திரும்ப வருவது தவிர்க்க முடியாதது. முடிந்த இடங்களிலெல்லாம் அத்தியாயங்களுக்கிடையே இணைப்பு (link) கொடுத்திருக்கிறேன். வசன அட்டவணை (பக்கங்கள் 1108-1142), பொருள் அட்டவணை (பக்கங்கள் 1143-1160), நபர்கள் அட்டவணை (பக்கங்கள் 1161-1164), மற்றும் மேற்கோள் அட்டவணை (பக்கங்கள் 1165-1166) ஆகியவை உங்களுக்குப் பிரசங்க ஆயத்தத்தில் பேருதவும். மிக அதிகமாய்க் கையாளப்பட்ட வசனம் ***அப்போஸ்தலர் 1:8*** என்பது சுவாரஸ்யம்! புதிய ஏற்பாட்டு நற்செய்திப்பணியை விளைவிக்கும் பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதலுக்கான எனது பசிதாகத்திற்கு இது ஒரு சான்று!

அத்தியாயக் குறிப்புகளின் முடிவில் காலியிடம் இருந்தால் மெல்லிய கோடுகள் தரப்பட்டுள்ளன. உங்கள் மனதில் தோன்றும் கூடுதல் குறிப்புகளை அங்கு எழுதிக்கொள்ளலாம். எல்லாப் பக்கங்களிலுமே இவ்விதம் குறித்துக்கொள்ள ஓரங்களில் காலியிடமுண்டு. பக்கங்கள் மீது எழுதத் தயங்காதீர்கள்.உங்களுக்கும், கர்த்தர் தாமதிப்பாரானல், சந்ததிகளுக்கும் இது ஒரு சொத்தாய் மாறிவிடும். பிழைகளிருப்பின் தயங்காது சுட்டிக் காட்டுங்கள்.

இந்நூலை வாசிக்கும் பலர் இதிலுள்ள சில பிரசங்கங்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டிருப்பீர்கள். ஒரே பிரசங்கத்தைத் திரும்பப் பண்ண நான் தயங்குவதில்லை— அதே சபையாருக்கல்ல! (அப் 13:42). ஆனால் புதியதோர் அபிஷேகமின்றிப் பிரசங்கபீடத்தில் ஏறத் துணியேன். வெறும் எழுத்து கொல்லும்; ஆவியோ உயிர்ப்பிக்கும்! (2 கொரி 3:6; 4:18). இளம் பிரசங்கிகளுக்கு எனது அறிவுரை: ''பிறரது பிரசங்கக் குறிப்பையோ, உங்களுடையதையோ, எதைப் பயன்படுத்தினாலும் இருட்டறையில் தேவன் பேசக் கேட்காமல் சபையார்முன் போகத் துணியாதீர்'' (மத் 10:27).

எந்தப் பிரசங்கம் ஆயத்தம்பண்ணினாலும் அதன் முதற் பயனாளி நான்தான் (2 தீமோ 2:6). நான் ஆசீர்வதிக்கப்பட்டுத்தான் பிறருக்கு ஆசீர்வாதமானேன் (எரே 31:14; ஆதி 12:2). பிரசங்க ஆயத்தத்திற்கு தேவனுக்குமுன் உட்கார்ந்தபோதெல்லாம், நான் கற்ற சத்தியங்கள் என் விசுவாசத்திற்கும் வாழ்விற்கும் வலுவூட்டின. இப்பிரசங்கக் குறிப்புகள் அதையே உங்களிலும் செய்துவிடும்.

கிறிஸ்தவ வாழ்வின் துவக்கமாகிய ''மனந்திரும்புதல்'' முதல் பூவுலக வாழ்வின் முடிவாகிய ''மரணம்'' வரை நான் போதித்த 200 திருத்துதல் திருவுபதேசப் பாடங்களுடன் 2013இல், *''பைபிள் புதையல்கள்''* என்ற 832-பக்க நூல் வெளிவந்தது. வேதப் பிரியர்களுக்கும், வேதப் பிரசங்கிமாருக்கும் இது ஒரு கைநூலாய் மாறிவிட்டதற்காய்த் துதிக்கிறேன். *''பைபிள் முத்துக்கள்''* என்ற இந்நூல் அதைப் போன்ற ஒன்று. இவ்விதமான பெரிய வேலைகளை நான் மேற்கொள்வதற்கு எனக்கு உந்துவிசையாய் அமைந்தது அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகளே: ''பயனுள்ள ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல் ... தேவனது ஆலோசனை எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்'' (அப் 20:20,26). நான் நித்திரையடையும்வரை தேவ சித்தத்தின்படி எனது தலைமுறையினரைத் தொடர்ந்து சேவிக்க எனக்காய் ஜெபியுங்கள் (அப் 13:36).

ஜனவரி 2017 — R. ஸ்டான்லி

பொருளடக்கம்

(A) மனந்திரும்புதல் & இரட்சிப்பு

1. மறுபிறப்பின் மகிமை ... 21
2. சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷம் ... 24
3. இரட்சிப்புக்கு இடையூறுகள் ... 32
4. மனந்திரும்புதலின் கனிகள் ... 36
5. ''கிறிஸ்துவிடம் வருதல்'' என்றால் என்ன? ... 40
6. மறுபிறப்பு நாள் வாழ்த்துக்கள்! ... 45
7. அனைத்தும் அர்ப்பணம் ... 49

(B) திருமறை & திருவுபதேசம்

8. பைபிள் என்றால் என்ன? ... 56
9. பைபிளின் பயன்கள் ... 58
10. விஞ்சும் விவிலியம் ... 64
11. திருமறைப் போதனையைப் பெறவேண்டிய பாணி ... 70
12. திருமறைத் தியானத்தில் நிறைவான பயன் ... 75
13. இணையற்ற கிறிஸ்தவம் ... 82
14. நிகரற்ற கிறிஸ்தவ வாழ்வு ... 90
15. நல்லதும் உண்மையானதுமான கூற்றுக்கள் ... 96
16. தரிசனம் ... 100
17. ''பாக்கியவான்கள்'' ... 106
18. திரித்துவ தேவன் ... 110
19. தேவனும் நாமும் ... 112
20. கிறிஸ்துவில் விடுதலை ... 114
21. இறங்கினார், ஏறினார், ஆதலால் 121
22. உயிர்த்தெழுதலின் வல்லமை ... 129
23. தேவன் வெறுக்கும் மார்க்கம் ... 133
24. தேவ கிருபைக்கு நமது பிரதிபலிப்பு ... 142
25. ஆராதனையின் அடுத்த பக்கம் ... 145
26. வல்லமையின் அடுத்த பக்கம் ... 152
27. திருவுபதேசம் கற்பது கட்டாயமா? ... 158

28. திருவுபதேசம் கற்பதின் பயன்கள் ... 162
29. துர்வுபதேசங்களுக்குத் தப்பி
ஆரோக்கிய உபதேசத்தைத் தழுவுவது 166
30. ஆன்மீக முரண்பாடுகள் ... 170
31. ஒவ்வொரு நிருபத்தின் துவக்கச் செய்தி ... 174
32. நிருபங்களிலுள்ள கடைசி அறிவுரைகள் ... 176

(C) கிறிஸ்தவ வாழ்வு

33. மெய்க் கிறிஸ்தவன் யார்? ... 180
34. சமநிலைக் கிறிஸ்தவன் யார்? ... 188
35. திருரத்தத்தின் ஆசீர்வாதங்கள் ... 197
36. வெற்றி வேந்தர் மூலம் வெற்றி ... 200
37. நீதிமானாய் வாழ்வது எப்படி? ... 206
38. சொற்களில் சுத்தம் ... 211
39. கிறிஸ்தவ வாழ்வில் முன்னுரிமை பெறவேண்டியவை... 215
40. ''பின்னே ... முன்னே ... மேலே!'' ... 220
41. கிறிஸ்தவக் கண்ணோட்டம் ... 231
42. கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் என்ன? ... 233
43. கனியின்மையிலிருந்து கனி நிறைவு ... 241
44. திருச்சித்தம் பற்றிய திருவசனங்கள் ... 244
45. இறைநடத்துதலின் மறுபக்கம் ... 251
46. நாம் திருச்சித்தம் செய்யத் தவறுவதேன்? ... 258
47. சிலுவைக்குப் ''பின்னர்'' இயேசு மொழிந்தவை ... 262
48. ''என்னை நேசிக்கிறாயா?'' ... 269
49. இயேசுவைப்போல நேசிப்பது எப்படி? ... 272
50. பணமும் மனமும் ... 276
51. கீழ்ப்படிதலை எளிதாக்குவது எங்ஙனம்? ... 280
52. அப்போஸ்தலக் கிறிஸ்தவன் யார்? ... 288
53. முதிர்ச்சியின் அடையாளங்கள் ... 292
54. பல்பரிமாண வளர்ச்சி ... 298
55. பிதாவானவரை அவமதிக்கும் செயல்கள் ... 307
56. பின்மாற்றக்காரனின் காரணப் பெயர்கள் ... 313
57. தேவன் அறிவார்! ... 315

58. பொல்லாத ஆவிகளை வெல்லுவது எங்ஙனம்? ... 322
59. சோர்புண்டாக்கும் அம்புகள் ... 329
60. தனித்திருத்தல் எனும் ஒழுங்கு ... 336
61. எளிமை எங்கே போயிற்று? ... 343
62. தியாக வாழ்வு ... 352
63. எனது அர்ப்பணிப்பு ... 359
64. ''மறவாதே!'' ... 360

(D) ஜெபம் & தொழுகை

65. ஆண்டவரோடு அமைதி நேரம் ... 366
66. காலைதோறும் 376
67. மூன்று மூவரிடமிருந்து ஜெபப் பாடங்கள் ... 385
68. பரிசுத்த வாரம் தரும் ஜெபப் பாடங்கள் ... 390
69. மன்றாட்டு ஜெபம் ... 396
70. வேறுவிதமாய்ப் பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் ... 402
71. இறைவழிபாட்டிற்கு இடர்பாடுகள் ... 410
72. ஓசன்னா! அல்லேலூயா! ... 415
73. ஞாயிறு முதல் சனி வரை தொழுகை ... 420

(E) எழுப்புதல் & ஆதிநிலையேகுதல்

74. எழுப்புதல் பற்றிய பாடங்கள் ... 424
75. ஆவியானவரும் ஆதிநிலையடைதலும் ... 431
76. உன்னத உதவியாளரின் உதவிகள் ... 438
77. புதிய பாடல் ... 443
78. கர்த்தருக்குள் மகிழ்ச்சி ... 450
79. அன்றையப் பண்டிகை; இன்றையக் கொண்டாட்டம்! ... 457
80. கண்ணீரின் பள்ளத்தாக்கு ... 465
81. சுத்திகரிக்கும் அக்கினி ... 468
82. உள்ளத்தில் உண்மை ... 472
83. தூயாவியானவரும் தூதறிவிப்பும் ... 475
84. நமது தரிசனத்தை மங்கச் செய்பவை ... 478
85. ''நரை முடி'' ... 481
86. மகிமை விலகும்போது 485

87. புலம்புவோம், வாரீர்! ... 487
88. எழுப்புதல் முகாம்களுக்காய் ஜெபிப்பது எப்படி? ... 493
89. துவக்க உற்சாகத்தைத் தக்கவைப்பது எப்படி? ... 498
90. எழுப்புதல் அணைவது ஏன்? ... 503

(F) நற்செய்தியறிவிப்பு & மிஷனரிப்பணி

91. ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம்! ... 512
92. நற்செய்திப்பணியும் உடலுறுப்புகளும் ... 519
93. தைரியமற்ற சீடன் ... 526
94. பரிசுத்த வாரம் தரும் நற்செய்திப்பணிப் பாடங்கள் ... 530
95. அப்போஸ்தலரது நற்செய்திப்பணியின் இரகசியங்கள் ... 539
96. பரிசுத்த ஆவியானவரும் நற்செய்திப்பணியும் ... 544
97. இறையரசை விரிவாக்குவது எங்ஙனம்? ... 547
98. சுவிசேஷத்தைப் பிரபலமாக்குவது எங்ஙனம்? ... 554
99. தேவனுக்காக எப்படிச் செல்லவேண்டும்? ... 558
100. மிஷனரிப்பணி ஏன்? ... 564
101. மிஷனரிப்பணிக்காய் ஜெபித்தல் ... 570
102. மிஷனரிப்பணிக்குக் கொடுத்தல் ... 580
103. மிஷனரிப்பணிக்குச் செல்லுதல் ... 589
104. மிஷனரி அழைப்பு என்றால் என்ன? ... 598
105. மிஷனரிகளை அனுப்புவதென்றால் என்ன? ... 608
106. நாம் மிஷனரி தரிசனத்தை இழப்பதேன்? ... 614
107. மிஷனரிப்பணியில் தோல்விகளுக்குக் காரணம் ... 623
108. மிஷனரி அழைப்பிற்கு நாம் கீழ்ப்படியாததேன்? ... 634
109. விளைச்சல் குறைவதேன்? ... 641
110. மிஷனரிகளின் பிரச்னைகள் ... 646
111. சுற்றுப்புற சுவிசேஷப்பணி ... 653
112. நற்செய்திப்பணியை விரைவுபடுத்துவது எங்ஙனம்? ... 662
113. கிறிஸ்தவமே தானதர்மம்தான்! ... 668

(G) திருச்சபை

114. மகிமையுள்ள சபை ... 674
115. மிஷனரிச் சபையின் சிறப்பம்சங்கள் ... 682

116. எது ‘மெகா’ சபை? ... 689
117. சபைகளில் ஜெபக் குறைவு ஏன்? ... 697
118. திருச்சபையில் தீயவை ... 702
119. திருச்சபை எவ்விதம் ஆவியானவரைப் புண்படுத்துகிறது? ... 709
120. சபைகளில் பரிதாபங்கள் ... 714
121. ஆலயக் கட்டிடங்கள் யாருக்கு? ... 719
122. திருவிருந்துக்குமுன் தற்பரிசோதனை ... 722
123. ஒரு மனம், ஒற்றுமை ... 724
124. மணமகளை ஆயத்தப்படுத்தும் தூயாவியானவர் ... 729

(H) பிரசங்கித்தல் & ஊழியம்

125. திருவசனத்தை வல்லமையாய்ப் பிரசங்கிப்பதெப்படி?... 736
126. நீங்கள் பிரசங்கிக்கும்போது நினைவிற்கொள்ள 741
127. நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி? ... 748
128. தேவன் கனம்பண்ணிய பிரசங்கம் ... 750
129. எப்படிப் பிரசங்கிப்பது? ... 752
130. பிரசங்கிமார் எடுக்கவேண்டிய தீர்மானங்கள் ... 753
131. “என் ஆடுகளை மேய்ப்பாயாக!” ... 755
132. தேவனது ஊழியமும் அவரது இரக்கமும் ... 761
133. கர்த்தர் பணியில் கனி நிறைவு ... 768
134. கர்த்தரை எப்படிச் சேவிக்கவேண்டும்? ... 776
135. ஊழியரும் மக்களும் ... 779
136. தொண்டா, தொழிலா? ... 780
137. தேவன் அங்கீகரிக்கும் ஊழியம் ... 788
138. ஆடும் அடித்தளம் ... 792
139. ஊழியங்கள் உருக்குலைவு ... 798
140. இன்றைய இழுபறிகள் ... 804
141. தீர்க்கதரிசிகள், ஆசாரியர், இராஜாக்கள் ... 809
142. (அ) கிறிஸ்தவர்களின் தீர்க்கதரிசனப் பணி ... 813
143. (ஆ) கிறிஸ்தவர்களின் ஆசாரியப் பணி ... 821
144. (இ) கிறிஸ்தவர்களின் இராஜரீகப் பணி ... 831
145. உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுவது எப்படி? ... 837

(I) வேலை, சகவுறவுகள் & தலைமை

146. தேவன் உங்களை அங்கே வைத்திருப்பதேன்? ... 846
147. தொழிலகத்தில் தொழுகை ... 855
148. மண்ணுலகில் விண்ணுலகப்பணி ... 861
149. பயன் நிறைந்த ஆசிரியர் ... 867
150. எடுத்த வேலையை முடிப்பதெப்படி? ... 873
151. தேவ இரக்கமும் மனித உறவுகளும் ... 876
152. சொற்களும் சகவுறவுகளும் ... 882
153. குழுவுரையாடல்களுக்கு ஆலோசனைகள் ... 885
154. பாபேல் தரும் பாடங்கள் ... 887
155. ''நிகரே இல்லாத தலைவா!'' ... 890
156. ஊழியருக்கு உபதேசம் ... 894
157. தலைவர்களது சிலாக்கியங்களும் பொறுப்புகளும் ... 901
158. உண்மையும் உத்தமமுமான பவுல் ... 903
159. ஆன்மீக அதிகாரம் ... 916
160. அப்போஸ்தலனின் அடையாளங்கள் ... 920
161. இறைப்பாணியில் இறைப்பணி ... 923
162. சீடரிடமிருந்த சீரற்றவை ... 926
163. தள்ளப்பட்ட தலைவன் ... 931
164. ''ஐயோ!'' ... 933
165. தேவ ஊழியருக்குத் தற்பரிசோதனை ... 935
166. இயேசுபோல் நன்றாய் முடிப்பது எப்படி? ... 936

(J) சிலுவை & பாடுகள்

167. கிறிஸ்துமஸ் சிலுவைகள் ... 940
168. அனுதின வாழ்வில் சிலுவை ... 947
169. உலகம் சிலுவையில்; நானும் சிலுவையில்! ... 954
170. சிட்சை ஏன்? ... 958
171. கவலையை மேற்கொள்ளும் சிலுவை ... 965
172. சிலுவையிலிருந்து ஏழு வார்த்தைகள் ... 971
173. தடங்கல் ஓட்டம் ... 976
174. அவதிகளில் அன்பரது அடிச்சுவடுகள் ... 981
175. துன்புறுத்தப்படுதலும் இரத்தசாட்சிகளும் ... 988
176. உயிருள்ளவரை உண்மையாயிரு! ... 994

(K) குடும்பம்

177. இன்ப இல்லம் ... 1006
178. குடும்பமும் கர்த்தருடைய ஜெபமும் ... 1010
179. சிறந்த தந்தையாயிருப்பது எப்படி? ... 1014

(L) இளைஞர்

180. பிசாசின் முப்பெரும் பொய்கள் ... 1020
181. எதிர்பாராததை எதிர்பார்! ... 1023
182. கிறிஸ்துவில் புது வாழ்வு ... 1029
183. வெற்றியுள்ள கிறிஸ்தவன் ... 1033
184. பாவத்தை வெல்ல ஏழு படிகள் ... 1036
185. ''என்னைத் தீட்டுப்படுத்தமாட்டேன்!'' ... 1039
186. பின்மாற்றம் ... 1043

(M) நபர்கள் வாழ்க்கை & பொதுவானவை

187. ''என் தாசன்'' (என் ஊழியன்) ... 1048
188. தாவீதின் இதயம் ... 1053
189. யோசேப்பு: நடைமுறைக் கிறிஸ்தவன் ... 1056
190. பவுலும் இயேசுவும் ... 1058
191. அரிமத்தியா யோசேப்பு ... 1063
192. ஸ்தேவான் ஒரு வல்லவன்! ... 1066
193. கூடவே கூடாது! ... 1069

(N) இறப்பு & இரண்டாம் வருகை

194. பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி? ... 1072
195. இரண்டாம் வருகையும் நடைமுறை வாழ்வும் ... 1077
196. உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள் ... 1081
197. இரண்டாம் வருகையின் ஆசிகள் ... 1084
198. இறப்பின் இலாபங்கள் ... 1090
199. பரலோகமே, பரவசமே! ... 1093
200. தேவாட்டுக்குட்டியானவரின் கலியாணம் ... 1099
பிரசங்க ஊழியத்தில் எனது சாட்சி ... 1106
வசன அட்டவணை ... 1108
பொருள் அட்டவணை ... 1143
நபர்கள் அட்டவணை ... 1161
மேற்கோள் அட்டவணை ... 1165

A

எனது பிரசங்கக் குறிப்புகளிலிருந்து மாதிரிப் பக்கம் (அத்தியாயம் 145)



HOW TO FULFILL YOUR MINISTRY

Introduction

- All the children of God are called to serve Him in some way or the other

I have preached & taught enough on "How to be an effective & efficient minister."

This talk is on –

"HOW TO FULFILL YOUR MINISTRY"

+ Paul to Timothy : 2 Tim 4:5
+ Paul to Archippus : Col 4:17 "Take heed" ← A note of seriousness
+ Paul's personal testimony : Acts 20:24 He said: "I've finished the race," before he died (2 Tim 4:7)

- Fulfilment of ministry is not to be considered as Success in the ministry – It's just fulfilling God's will –

– Acts 13:36 (David could not build the temple)
– Dt 34:5,6 (Moses could not enter Canaan)

① Make your calling & election sure.

2 Pet 1:10,11 --. No stumbling
--- "finishing line" (entrance)

- Don't try to do everything – spreading too thin –

Rom 12:3-5
eg) Apostles--- widows-- Deacons (Acts 6:1-7) Result

Don't extend beyond your sphere –

2 Cor 10:13,14

Do only what God assigns to you (eg. Jesus – Jn 17:4) He didn't come to ~~Tibet~~ India! or CHINA

1

மறுபிறப்பின் மகிமை

What it means to be Born Again

முகவுரை

- யோவான் 3:1-3 ... *ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் ...*
  ''மறுபிறப்பு'' — இன்று அதிகமாய்ப் பேசப்படுவது
- இந்து மதம் போதிக்கும் ''மறுபிறவி'' என்பதல்ல —
  இன்று இவ்வுலகிலேயே அனுபவிக்க வேண்டியது (வச 12).

மறுபடி பிறக்கும்போது நிகழ்வது —

1. பிசாசின் பிள்ளைகள் கடவுளது பிள்ளைகளாகின்றனர்.

கிறிஸ்துவைப் புறக்கணிப்பவன் பிசாசினால் உண்டானவன்
(யோ 8:42,44அ)

யோ 1:12 ... *தேவனுடைய பிள்ளைகளாகும்படி ...*
கடவுளுக்குப் பிள்ளைகள்தான் உண்டு, பேரப்பிள்ளைகளல்ல.
படைப்பினால் தேவனோடிருந்த உறவு.
ஆதாமின் மீறுதல் (ரோ 5:14,15,18).
பாவிக்குப் பதிலாகக் கிறிஸ்துவின் மரணம்.

மறுபடி பிறப்பது என்றால் கிறிஸ்துவை நமது பாவங்களைச் சுமப்பவராகவும் நமது இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளுதலாகும்.

2. இருளின் பிள்ளைகள் ஒளியின் பிள்ளைகளாகின்றனர்.

எபே 5:8-11 ... *இருளின் செயல்கள் ... ஆவியின் கனி*
ஊனியல்பின் செயல்பாடுகளை வெறுத்தல் (கலா 5:19-21)
— *விபச்சாரம்* ... இச்சையான பார்வை
— *சிலை வணக்கம்* ... கடவுளைவிட அதிகம் நேசிக்கப்படுவது
— *கொலை* ... இருதயத்தில் பகை

தங்கள் செயல்பாடுகள் தீயவையாயிருப்பதால் மனிதர் ஒளியைவிட இருளை விரும்புகின்றனர். கிறிஸ்துவாகிய ஒளியிடம் வாருங்கள் — (யோ 3:19-21)

பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுதல் (1 யோ 1:7-9).
வரிக்காரனது ஜெபம்: — *''பாவியாகிய என்மீது கிருபையாயிரும்!''*

தேவனால் பிறந்தவன் பாவம் செய்துகொண்டிருக்கமாட்டான்
(1 யோ 3:8,9)

அதாவது, வழக்கமாகவே பாவம் செய்யமாட்டான் —
எ.கா.) ஆட்டுக்குட்டி vs. பன்றி

மறுபடி பிறப்பது என்றால்
பாவத்தை வெறுத்து, சோதனைக்கு மறுப்பு தெரிவிப்பதாகும்.

3. ஊனியல்பின் பிள்ளைகள் திருவாக்கின் பிள்ளைகளாகின்றனர்.

ரோ 9:6-8,30-32
10:3,4 | இஸ்மவேல் vs. ஈசாக்கு

மார்க்கச் சடங்குகள், தானதர்மச் செயல்கள், முதலியன
எ.கா.) பவுல் (பிலி 3:4-9)
கொர்நேலியு (அப் 10:1,2)
பரிசேயன் (லூக் 18:11,12)

நமது நீதிவாழ்வு ... அழுக்கான கந்தை (ஏசா 64:6)
மதமே பாவம்தான்: கடவுளை மனிதன் தேடுவது
பைபிள் போதிப்பது: மனிதனைக் கடவுள் தேடுவது

''ஆபிரகாம் எங்களது தந்தை'' என்று சொல்லாதீர் (மத் 3:9)

இரட்சிப்பு நற்செயல்களாலல்ல, கிருபையினாலானது (எபே 2:8.9)
செய், செய் என்பதல்ல, செய்தாயிற்று!

எ.கா.) நம்மை நாமே தூக்கமுடியுமா?

மறுபடி பிறப்பது என்றால் நமது நற்செயல்களையல்ல,
தேவ கிருபையையும், கிறிஸ்துவின் நீதியையுமே சார்ந்திருத்தலாகும்.

4. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் கீழ்ப்படிதலின் பிள்ளைகளாகின்றனர்.

1 பேது 1:13-16 ... *முந்திய இச்சைகள்* vs. *பரிசுத்தம்*
கொலோ 3:6,7 ... *தேவ கோபம் ... கீழ்ப்படியாமை*

ஆதாமிலிருந்து நமக்கு வந்த முரட்டாட்டமும் எதிர்ப்புமுள்ள சுபாவம்.

இப்பொழுதோ தேவனையே பிரியப்படுத்த விருப்பம்.
இது அன்பின் வெளிப்பாடு (1 யோ 5:3) ... *பாரமானவையல்ல*
கடவுள் கடினமான எஜமான் என்று முறையிடுவதில்லை!

இயேசுவின் அழைப்பு: *''எனது நுகம் எடுங்கள் ...*
''என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்
''நான் சாந்தமும் மனத்தாழ்மையும் ...

அதாவது, திருச்சித்தத்திற்கு விட்டுக்கொடுக்கும் வாழ்வு.

மறுபடி பிறப்பது என்றால்
இளகிய மனதும் கீழ்ப்படியும் மனப்பான்மையும் பெறுதலாகும்.
எ.கா.) பவுல் — *''நான் என்ன செய்வது உமது சித்தம்?''*

5. நரகத்தின் பிள்ளைகள் இறையரசின் பிள்ளைகளாகின்றனர்.

மத் 13:38-40,43

விண்ணகச் சிந்தை கொள்ளுதல் (செல்வந்தன் vs. லாசரு)

குடியுரிமை பரலோகில்.

எல்லாம் மாயை எனப் புரிதல்.

இறைமக்களின் சகவாசம் (1 யோ 5:1,2; 3:14).

வாழ்வின் அடிப்படை நோக்கிலேயே மாற்றம்.

(மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும்...
மாற் 8:36 ... செல்வந்தன்)

வெற்றி நிச்சயம், வெல்லும் மனப்பான்மை!

மறுபடி பிறப்பது என்றால்
விண்ணரசு வருவதற்காய்க் காத்திருந்து வாழ்தலாகும்.

மறுபடியும் பிறப்பது எப்படி?

உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள் (லூக் 24:47).
கிறிஸ்துவை உங்கள் ஆண்டவரும் இரட்சகருமாய்
ஏற்றுக்கொள்ளுங்கள் (அப் 16:31).

முடிவுரை

ஒருமுறைதான் பிறந்தால், இருமுறை இறப்பு;
இருமுறை பிறந்தால், ஒருமுறைதான் இறப்பு!
வெளி 20:14; 21:8

2

சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷம்

The Gospel from Golgotha

முகவுரை

''சுவிசேஷம்'' — Gr. *இவாஞ்சலியான்* = நல்ல செய்தி
— மூலப்பதம் = "Godspell"
= கடவுளைப் பற்றிய செய்தி

நீர்த்துப்போகச் செய்தலும் கலப்படமும் இன்று சகஜம்.

அது ''வேறே சுவிசேஷம்''

— *கிறிஸ்துவின் ''சிலுவைக்குப்'' பகைவர்*
(பிலி 3:18,19)

பொருளாதாரத்தை முக்கியத்துவப்படுத்தும் சுவிசேஷம்.
வளவாழ்வு உபதேசம் — *''வயிறு ... பூமிக்கடுத்தவை''*
சுகபோக வாழ்வை வாக்களிக்கும் சுவிசேஷம்.

எனவேதான் —

சுவிசேஷத்தைப் பவுல் அழைக்கும் விதம்:
*''**சிலுவையைப்** பற்றிய உபதேசம்''* (1 கொரி 1:18)

அவர் சொன்னது,
*''**சிலுவையிலறையப்பட்ட** கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்''*
(வச 23)

அத்துடன் சொன்னது,
*''கிறிஸ்துவை, **சிலுவையிலறையப்பட்ட** அவரையேயன்றி,
வேறெதையும் பிரசங்கிப்பதில்லை''* (2:2)

சிலுவையிலிருந்து கிறிஸ்து பேசியவை
சுவிசேஷத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் —

அதைச் ''சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷம்'' என்றழைக்கிறேன்.

சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷமானது —

1. மன்னிப்பின் செய்தி (A Message of Forgiveness)

*''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்வது இன்னதென்று
அறியாதிருக்கிறார்களே''* (லூக் 23:34)

- இதைத்தான் தமது சீடர்கள் பிரசங்கிக்க இயேசு விரும்பினார்:
  ''மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எல்லா நாட்டினருக்கும் ...''
  (லூக் 24:47)
- கடவுளது மன்னிப்பு நிகரற்றது —
  — அவர் பாவியை மன்னிக்கிறார்;
  பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடுகின்றன!
  பாவிகளாயிருப்பதாலேயே பாவம் செய்கிறோம்;
  பாவம் செய்வதால் பாவிகள் அல்ல.

  பாவ சுபாவம் — வேர்; பாவங்கள் — கனி
  (காரணம்) (விளைவு)

  எ.கா.) பாவ அறிக்கை முடிவடையுமுன் கெட்ட குமாரன்
  மன்னிக்கப்பட்டான்!
- இயேசுவானவர் நமது பாவங்கள் ''யாவற்றையும்'' சுமந்தார்!
  கடந்தகால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள்!
  நீதிமானாக்கப்படுதல் = பாவமே செய்யாதது போல!
  ''பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் ... உறைந்த மழை ...
  பஞ்சு'' (ஏசா 1:18)

  தேவன் நமது பாவங்களை என்ன செய்தார்?
  நான்கு பரிமாண அன்பு (எபே 3:18,19) ...
  அகலம் ... நீளம் ... ஆழம் ... உயரம்
  — பாவங்களை விலக்கினார் ... *கிழக்கு ... மேற்கு* (சங் 103:12)
  — பாவங்களைத் தூக்கியெறிந்தார் ... *முதுகுக்குப்பின்* (ஏசா 38:17)
  — பாவங்களை அமிழ்த்தினார் ... *கடலாழத்தில்* (மீகா 7:19)
  — பாவங்களை அகற்றினார் ... *மேகங்கள் போல்* (ஏசா 44:22)
  மன்னிக்கப்பட்ட பாவங்கள் மறக்கப்பட்டாயிற்று!
  பரிந்துபேசுபவர் x பழிசுமத்துபவன் (1 யோ 2:1; வெளி 12:10)
- நமது பொறுப்பு— ''கிறிஸ்து மன்னித்ததுபோல
  பிறரை மன்னிக்கவேண்டும்!''

2. நிச்சயத்தின் செய்தி (A Message of Assurance)

*''**இன்று** என்னுடன் பரதீசில் இருப்பாய் என்று **மெய்யாகவே** உனக்குச் சொல்லுகிறேன்''* (லூக் 23:43)

வலது பக்கமோ இடது பக்கமோ இருந்த ஒரு திருடன்
சரியான தீர்மானம் செய்தான்!

- எனது இரட்சிப்பைக் குறித்து நான் நிச்சயமாயிருக்கமுடியுமா?
  ஆம், ஆம், ஆயிரம் முறை ஆம்!
  எ.கா.) *''மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறோம் என்று **அறிந்திருக்கிறோம்**''* (1 யோ 3:14)
  அப்படி நம்புகிறோம், எண்ணுகிறோம் என்றல்ல;
  அப்படி ''அறிந்திருக்கிறோம்!''
  கிறிஸ்துவோடு இணைவது திருமண இணைப்பு போன்றது.
  வாசியுங்கள்: (1 யோ 5:10-13) ... *''கொண்டிருக்கிறான் ... இருக்கிறது''*
- அப்படியானால், நிச்சயம் சாத்தியமா என்று கேட்கப்படுவதேன்?
  இரட்சிப்பை முக்காலத்தில் புரிந்துகொள்ளத் தவறுவதாலேயே —
  கடந்த கால இரட்சிப்பு — பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை
  நிகழ்கால இரட்சிப்பு — பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை
  வருங்கால இரட்சிப்பு — பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* விடுதலை
  அதாவது, நீதிமானாக்கப்படுதல் (குறிப்பிட்ட சமயம்);
  பரிசுத்தமாக்கப்படுதல் (நெடுகவே நடப்பது);
  மகிமைப்படுத்தப்படுதல் (குறிப்பிட்ட சமயம்)
- சாட்சிகள்: (1 யோ 5:7) —
  பிதாவானவர் (யோ 1:12)
  வார்த்தை (பைபிள் சொல்கிறது; விசுவாசிக்கிறேன்; அவ்வளவுதான்)
  ஆவியானவர் (ரோ 8:16)
  சத்தங்கள், தரிசனங்கள், சொப்பனங்கள் இவைகளையெல்லாம்
  நாடி நிற்கவேண்டாம்.
  முதலாவது, சத்தியம் (Fact) — அடுத்து, விசுவாசம் (Faith) —
  கடைசியாக, உணர்வுகள் (Feelings)

3. குடும்பத்திற்குச் செய்தி (A Message for the Family)

''மாதுவே, அதோ, உன் மகன் ... சீடனை நோக்கி: அதோ, உன் தாய்'' (யோ 19:26,27)

குடும்பங்களைக் குறித்து தேவனது கரிசனை இங்கு தெளிவு.
குடும்பம் — படைப்பில் அடிப்படையானது.
— இரட்சிப்பிலும் அப்படியே.

எ.கா.) • நோவாவும் குடும்பமும் — பெருவெள்ளம் (நீதிமானாய் இருந்தவன்)

- ராகாபும் குடும்பமும் — நியாயத்தீர்ப்பு (துன்மார்க்கமாய் வாழ்ந்தவள்)
- சகேயுவும் குடும்பமும்
- பிலிப்பி நகர் சிறையதிகாரி —
  ''இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?'' (அப் 16:30)
  *''நீயும் **(அத்துடன்)** உன் வீட்டாரும்''* (வச 31)

- இயேசுவின் போதனை: *''வீட்டிற்குள் நுழைகையில், சமாதானம் கூறுங்கள்''* (லூக் 10:5,6)
  சமாதானத்திற்குத் தகுதியானவன் இருந்தால் ...
  சமையலறை சரியான திசையில் இருந்தால் என்றல்ல!
  (வாஸ்து!)
- புதிய உடன்படிக்கையில் பரம்பரைப் பாவம் கிடையாது —
  எரே 31:29-31 (Generational sin)
- ஒவ்வொருவரும் தனக்குத்தானே பொறுப்பு —
  யோ 1:12 ... *பிள்ளைகள்,* பேரப்பிள்ளைகளல்ல!
  கிறிஸ்தவ இல்லம், இந்து இல்லம்,
  இஸ்லாமிய இல்லம்
  எங்கு பிறந்திருந்தாலும் **மறுபடி** பிறக்கவேண்டும்!
- பெற்றோரது பொறுப்பு —
  — தந்தையர்க்குக் கூடுதல் பொறுப்பு (நீதி 1:8)
  எ.கா.) ஆபிரகாம் (ஆதி 18:19)
  சொத்துக்கள், நகைகள், சேமிப்பு ... இவையல்ல.

4. தெய்வீக உறவின் செய்தி (A Message of Fellowship)

''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?''
(மத் 27:46)

— சிலுவையிலிருந்து வந்த நடுக் கதறல்.

- *''நமது பாவங்கள் ... பிரிவினை ... முகத்தை மறைக்கின்றன''*
  (ஏசா 59:2)

அவ்விதமே, நம்மனைவரது அனைத்துப் பாவங்களும் இயேசுவின் மீது வந்தபோது, பாவத்தைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணராகிய பிதாவானவர் தமது முகத்தை மறைத்தார்.

அறுபடாத நெருக்கவுறவை நாம் தேவனோடு
அனுபவிப்பதற்காக கிறிஸ்து கைவிடப்பட்டார்.

■ கிறிஸ்துவின் உடல் பிய்க்கப்பட்டபோது —

அ) நடுவிலிருந்த பிரிவினைச் சுவர் தகர்க்கப்பட்டது —
எபே 2:12-14 ... யூதர் vs. யூதரல்லாதோர்
இனி இனவெறி, இடவெறி கிடையாது.
ஒரே இரத்தத்தால் கழுவல்; **ஒரே** இரத்தத்திலிருந்து தோற்றம் (அப் 17:26).
இனி அன்னியரல்ல, *''உடன் குடிமக்கள்''* (எபே 2:19)

ஆ) தேவாலயத் திரைச்சீலை மேலிருந்து கீழ் வரை கிழிந்தது —
அதைத் திரும்பத் தைக்கக்கூடாது!
— இனிச் சடங்காச்சாரம் கிடையாது!
எபி 10:19-22 ... *மகா பரிசுத்தத் தலத்திற்கு வழி*
— இனிப் புனிதத் தலங்கள் கிடையாது (மறுரூப மலை)
— இனி இயேசுவைத் தவிர நடுவர் தேவையில்லை!
(1 தீமோ 2:5; எபி 8:6)

இ) இனி உணர்ச்சிவசப் பரவசங்கள் கிடையாது —
திருப்பிரசன்னத்தை **உணருகிறீர்களோ** இல்லையோ —
இம்மானுவேல் (= தேவன் நம்மோடு)
ஜான் வெஸ்லி:
''தேவன் நம்மோடிருக்கிறார்; அதுதான் காரியம்!''

இரட்சிப்பின் அனுபவமானது தேவனோடு ஐக்கியம் கொள்ள ஆழ்ந்த விருப்பத்தை நம்மில் உருவாக்குகிறது —
திருவசனத் தியானம் & ஜெபம்.
வேறெதுவும் அவ்வளவு முக்கியமல்ல.
மார்ட்டின் லூத்தர்: ''கிறிஸ்து இருந்தால் சிறையும் சிம்மாசனம்;
கிறிஸ்து இல்லையேல் சிம்மாசனமும் சிறைதான்!''

5. *திருப்தியின் செய்தி* (A Message of Satisfaction)

''தாகமாயிருக்கிறேன்'' (யோ 19:28)

- *''திறந்த ஊற்றாய்''* மாறும்படி இயேசு நமக்காய்க் காயப்பட்டார் (சக 13:1)

மேய்ப்பன் அடிக்கப்பட்டார். ஆனால் அவர் ஆடுகளை விட்டு ஓடவில்லை; அவற்றை இன்னும் *அமர்ந்த தண்ணீர்களருகே* நடத்திச் செல்கிறார் (சக 13:7/ சங் 23)

தண்ணீர் மட்டுமல்ல, நமக்குள்ளேயே *ஊற்று* (யோ 4:14)

- மனிதன் நாடிச் செல்லும் மாற்றுக்கள் —

அ) பணம் —

''எல்லாத் தீங்குக்கும் வேர் ... அநேக வேதனைகள்'' (1 தீமோ 6:9,10)

பணக்காரன் நன்கு சாப்பிடுவான்; ஏழை நன்கு தூங்குவான்!

தேவனை அறியாதோர்: *''எதை உண்போம் ... குடிப்போம்?''*

''நீங்களோ முதலாவது இறையரசைத் தேடுங்கள்''

ஆ) பாலியலின்பம் —

குறிப்பாக வாலிபர்

திரைப்படங்கள் / காதல் / ஆபாசப் படங்கள் / இன்டர்நெட் உனது வாழ்வை வீணடிக்காதே.

''உன்னைப் படைத்தவரை வாலிபத்தில் நினை'' (பிர 12:1)

இ) சாதனைகள்/வேலை/ —

நமது தொழிலையே தொழுவது! (பிர 2:4-6,10,11)

ஒரு விண்வெளி வீரர்:

''சந்திரனில் நடந்துவிட்டேன்; அடுத்து?''

இவையெல்லாம் *வெடிப்புள்ள தொட்டிகள்* (எரே 2:13).

தூயாவியானவரும் திருச்சபையும் (விசுவாசிகள்) சேர்ந்து அழைப்பு: *''தண்ணீர்களருகே வாருங்கள்''* (வெளி 22:17)

அந்தப் பழம்பெரும் சிலுவைக்கு
உலக இன்பங்களும் செல்வங்களும் நிகராகுமோ?

சிலுவையே கடவுளது **கூட்டல்** அடையாளம்!

6. *முற்றுப்பெற்றதின் செய்தி* (A Message of Finished Work)

''முடிந்தது'' (யோ 19:30)

கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியினால் பரிசுத்த தேவனது அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டன. எதையும் அதனுடன் கூட்டக்கூடாது.

- இரட்சிப்பு ஓர் இலவச ஈவு!

எபே 2:8-10 ... *உங்களால் உண்டானதல்ல ...*

தேவனைப் பொருத்தவரை: எல்லாம் கிருபையினாலேயே.

நம்மைப் பொருத்தவரை: எல்லாம் விசுவாசத்தினாலேயே.

''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!''

(ஆப 2:4; ரோ 1:17; கலா 3:11; எபி 10:38)

— இதுவே மார்ட்டின் லூத்தரின் முழக்கம்

''செய்'' என்பதல்ல, ''செய்தாயிற்று'' என்பதே!

- நற்செயல்களினால் அல்ல —

அ) ஞானஸ்நானம் (குழந்தை/வயது வந்தோர்)

ஆ) சபையில் அங்கம் — ஒரு சபையும் இரட்சிக்காது.

இ) தானதர்மம்

''நமது நீதி யாவும் அழுக்கான கந்தைதான்''

கிறிஸ்து தரும் ஆடை vs. நமது கந்தை (ஏசா 64:6)

எ.கா.) பரிசேயன் vs. வரிக்காரன் (லூக் 18)

- கலாத்திய விசுவாசிகள்

''கிருபையிலிருந்து விழுந்தார்கள்'' (கலா 5:4)

அவர்களில் கிறிஸ்து மறுபடியும் ''உருவாகணும்'' (4:19)

நியாயப்பிரமாணம் vs. கிருபை: இஸ்மவேல் vs. ஈசாக்கு

அவனுக்குக் காம்பவுண்டுக்குள்ளேயே இடமில்லை.

பாடுங்கள்:

*சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்,
பாவப் பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்;
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.*

(முழுப் பாடல்: பக்கம் 54)

கிறிஸ்தவம் vs. மற்ற மார்க்கங்கள் —
நற்செயல்களுக்காக ✓ vs. நற்செயல்களினால் ✗ (எபே 2:9,10)
இலவச ஈவு vs. சம்பாதித்த பரிசு

7. *பாதுகாப்பின் செய்தி* (A Message of Security)

''பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்''
(லூக் 23:46)

- உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவிடம் ஒப்படைத்துவிட்டால், நாளையைக் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை —

  கிறிஸ்து — நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.
  கிறிஸ்து — இருந்தவர், இருப்பவர், இனிவருபவர்.
  கிறிஸ்து — அகரமும் னகரமும்: துவக்குகிறவர், முடிக்கிறவர்.

''இரட்டைப்'' பாதுகாப்பு — கிறிஸ்துவின் கரங்களில்
பிதாவின் கரங்களில் (யோ 10:28,29)
பன்னிருவரில் ஒருவன்தான் கெட்டுப்போனான்!

- பவுல்: *நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன் ... ஒப்புக்கொடுத்ததை அந்நாள்வரை காப்பார்* (2 தீமோ 1:12)
- சிலுவையிலறையப்பட தமது உடலை ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இப்பொழுது தமது ஆவியை ஒப்படைக்கிறார்!

பாடுங்கள்: *''இயேசுவுக்கே ஒப்புவித்தேன்!'' (All to Jesus I surrender)*

■ அர்ப்பணிக்க ஓர் அழைப்பு —
தந்தையாம் தேவனிடம் வாருங்கள்:
அவர் உங்களை **மன்னிப்பார்**.
அவர் உங்களுக்கு **நிச்சயமளிப்பார்**.
அவர் உங்கள் **குடும்பத்தை** இரட்சிப்பார்
அவரோடு நீங்கள் **தெய்வீக உறவு** கொள்ளலாம்.
அவர் உங்கள் வாஞ்சைகளைத் **திருப்திபண்ணுவார்**.
கிறிஸ்துவின் **முடிக்கப்பெற்ற இரட்சிப்பை** அனுபவிப்பீர்கள்.
நீங்கள் என்றும் **பாதுகாப்பாய்** இருப்பீர்கள்.

இன்றே இரட்சிப்பின் நாள்!

(171 & 172ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

3

இரட்சிப்புக்கு இடையூறுகள்

Hindrances to Salvation

முகவுரை

கிறிஸ்துவின் பிறப்பு — 2 சுவிசேஷங்களில் மட்டும் உண்டு.
கிறிஸ்துவின் இறப்பு — 4 சுவிசேஷங்களிலும் உண்டு.

- ''சிலுவையோடு சம்பந்தப்படுத்தாவிடில் பைபிளில் ஒரு வார்த்தைகூடப் புரியாது.'' — மார்ட்டின் லூத்தர்
- ''சிலுவையைப்போல் பிசாசுக்குக் கோபமூட்டுவது எதுவுமில்லை.'' — C.H. ஸ்பர்ஜன்
- திருமறையின் மையப்பொருளே கிறிஸ்துதான்.

  அவரைக் குறித்த முதலாம் திருவாக்கே
  சிலுவையிலறையப்படுதலை அடுத்ததே —
  ஆதி 3:15

■ பழைய ஏற்பாட்டில் சிலுவைக்கு முன்னடையாளங்கள் —

- விறகை ஈசாக்கு சுமந்து செல்லுதல் (ஆதி 22:6)
- வெண்கல சர்ப்பம் (யோ 3:14)
- மாராவில் மரக்கிளை (யாத் 15:22-25) —
  அதாவது, நமது கசப்புகளையெல்லாம் எடுத்துக்கொண்டு
  இயேசு நமக்காய்ச் சாபமானார் (கலா 3:13)
- அடிக்கப்பட்ட கன்மலை (1 கொரி 10:4)

எனவே,
சிலுவை என்பது கடவுள் பிற்காலத்தில் நினைத்ததல்ல; அது அவரது முன்னறிவு (வெளி 13:8) ... *உலகத்தோற்றத்திற்குமுன் அடிக்கப்பட்டவர்*

சிலுவையின் செய்தி

பாடம்: **1 கொரிந்தியர் 1:18-31**
சிலுவை தரும் முதன்மையானதும், முதலானதும்,
மிகப்பெரியதுமான ஆசீர்வாதம் **இரட்சிப்பே** —

வச 18, 21 ... *இரட்சிக்கப்படுகிற ... இரட்சிக்க ...*
மத் 1:21 ... மரியாளிடம் தேவ தூதன் சொன்னது.
லூக் 1:68,69,77 ... சகரியாவின் தீர்க்கதரிசனப் பாடல்

இப்பகுதி (1 கொரி 1:18-31) குறிப்பிடும் **இரட்சிப்புக்கான நான்கு** இடையூறுகள் —

1. மார்க்கம் (Religion)

1 கொரி 1:22 ... *''யூதர்* ***அடையாளம்*** *கேட்கிறார்கள்''*
பழைய ஏற்பாட்டின் **நிழலாட்டங்களின் நிறைவேறுதலானவராய்** இயேசு வந்தார். யூதரோ அவரை ஏற்க மறுத்தனர்.

லூக் 2:34 ... பாலகன் இயேசுவைப்பற்றி சிமியோனின் தீர்க்கதரிசனம்

ஏசா 8:14 ... அவரே **ஆலயமானவர்**;
மக்களோ அவரைக் **குறித்துத்** தடுமாறினர்!

வைதீக யூதன் ஒருவரது மனமாற்றம் —
பிலி 3:3-8 ... பவுல்

மார்க்கவாதிக்கும் மனந்திரும்பும் பாவிக்கும் வேறுபாடு —
லூக் 18:10-14 ... பரிசேயனும் வரிக்காரனும்

இரட்சிப்பானது மார்க்கச் செயல்பாடுகளினால் அல்ல —
எபே 2:8-10 ... (எ.கா) விருத்தசேதனம் (வச 11)

2. தர்க்கம் (Reasoning)

1 கொரி 1:19-22 ... *''கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்''*
சொந்த அறிவை வைத்து ஆன்மீகக் காரியங்களைப் புரிந்துகொள்ள முயலுதல் —
எ.கா.) யோ 3:4,9,10 ... நிக்கொதேமு ... மறுபிறப்பு
1 கொரி 15:35-38 ... கேள்வி கேட்பது ... உயிர்த்தெழுதல்
இயல்பான மனிதன் vs. *ஆன்மீகக் காரியங்கள்*
1 கொரி 2:14

சில கிரேக்கர்: *''இயேசுவைக் காண விரும்புகிறோம்''* (யோ 12:20-24)

சுவிசேஷத்தின் ''எளிமையே'' ஞானிகளுக்குப் பெரும் இடறல் —
எ.கா.) நாகமான் ... 2 இரா 5:9-14

தேவனது வழிகள் எளிமையானவை, ஆனால் மகத்துவமானவை —
ஏசா 55:7-9 (மனந்திரும்பிப் பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ள இப்பகுதி அழைக்கிறது)

3. உடல் பலம் (Robustness)

1 கொரி 1:25-27

நமது உடலில் எந்தக் கோளாறும் வரும்வரை நாம் கடவுளை நினைப்பதில்லை!
ஒரு வியாதி வந்த பின்னர் பலர் மனந்திரும்பியுள்ளனர்!

எ.கா.) யாக்கோபு (ஆதி 32:24-27) ... *தொடை ...*

வாலிபர், நங்கையருக்கு ஓர் அழைப்பு —
பிர 12:1,6-8 ... *உன் சிருஷ்டிகரை நினை*

நமது *''உடல்களைக்''* கடவுளுக்கு அர்ப்பணிப்பதே அர்த்தமுள்ள ஆராதனையின் முதற்கட்டமாகும்
(ரோ 12:1) ... *ஜீவ பலி ...*

4. செல்வம் (Riches)

1 கொரி 1:26,28/எரே 9:23

இரட்சிக்கப்படுவதற்குச் செல்வம் பெருந்தடையாகலாம் —
எ.கா.) செல்வந்தனாகிய வாலிபன்
மத் 19:16-26 ... *துக்கத்துடன் திரும்பினான்*

செல்வந்தனாகிய மதியீனன் (லூக் 12:15-21)

துங்கனை அல்ல, **தங்கத்தை** மக்கள் வணங்குகின்றனர் —
யோபு அப்படியல்ல (யோபு 31:24-28).
செல்வந்தர்களுக்குக் கடவுளின் கட்டளை (1 தீமோ 6:17)

இன்று ஒருவேளை நீங்கள் செல்வந்தராயிராதிருக்கலாம்;
ஆனால் இது நாளைக்கான முன்னெச்சரிப்பு!

இரட்சிப்பானது விலையுயர்ந்த தங்கத்தினால் அல்ல,
கிறிஸ்துவின் விலைமதியா இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டது —
(1 பேதுரு 1:18,19)

■ *முடிவுரை*

☐ நீங்கள் யார்?

திருவாளர் மார்க்கமா? (Mr. Religion)
திருவாளர் தர்க்கமா? (Mr. Reasoning)
திருவாளர் பலமா? (Mr. Robustness)
திருவாளர் செல்வமா? (Mr. Riches)

இவை ஒருவேளை உங்களிடம் இருக்கலாம் —
ஆனால் கிறிஸ்து செய்ததையே செய்யுங்கள் —

பிலி 2:7,8 ... *வெறுமையாக்கி ...*
தாழ்த்தி ...
கீழ்ப்படிந்து ...

☐ அப்பொழுது தேவன் செய்வது (1 கொரி 1) —

1. கிறிஸ்து உங்களுக்கு நீதியும் பரிசுத்தமும் (x மார்க்கம்) ஆவார் (வச 30)
2. கிறிஸ்து உங்களுக்கு ஞானம் (x தர்க்கம்) ஆவார் (வச 30)
3 கிறிஸ்து உங்களுக்கு வல்லமை (x உடல் பலம்) ஆவார் (வச 24)
4. கிறிஸ்து உங்களுக்கு மீட்பு (x செல்வம்) ஆவார் (வச 30)

இதுவே ***சிலுவையின் செய்தி —***

கிறிஸ்துவே எனக்கு நீதியானவர்.
கிறிஸ்துவே எனக்கு ஞானமானவர்.
கிறிஸ்துவே எனக்குப் பலமானவர்.
கிறிஸ்துவே எனக்கு மீட்பானவர். அல்லேலுயா!

(23 ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

4

மனந்திரும்புதலின் கனிகள்
Fruits of Repentance

முகவுரை

தாம் தீர்மானித்திருந்த கனிநிறைவுக்கு மனிதனைத் திரும்பக் கொண்டுவரும் தேவனின் செயல்பாட்டை விளக்குவதே திருமறை —

தீர்க்கர் மூலம் அழைப்பு (ஓசி 14:1,4-6)
பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கன் (மத் 3:8,10)
இயேசு கிறிஸ்து (யோ 15)
பரிசுத்த ஆவியானவர் (ஏசா 32:15)

☐ கனிகொடுப்பதற்கு வேதம் நெடுகவே வலியுறுத்தும் நிபந்தனை **''மனந்திரும்புதல்''** ஆகும் —

எசேக் 19:10-12
18:31,32
லூக் 13:6-9
:1-5

திருமுழுக்கினர் யோவான் இதை *''மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள்''* என்றழைக்கிறார் (மத் 3:8)

☐ பைபிளை நான் ஆராய்ந்து படித்தபோது கண்ட **மனந்திரும்புதலின் ஐந்து முக்கிய கனிகள் —**

1. தாழ்மை

— பெருமையிலிருந்து மனந்திரும்புதல்.
மோவாபின் பெருமையே அவனைக் கனியற்றவனாக்கிற்று —
ஏசா 16:6,9-11

பொதுவாகக் காணப்படும் பெருமை —

அ) மார்க்கப் பெருமை

மத் 3:8,9 ... *ஆபிரகாமின் பிள்ளைகள்*
லூக் 18:11-14 ... *பரிசேயனின் ஜெபம்*
பிலி 3:4-7 ... *கிறிஸ்துவுக்காய் நஷ்டம் என்றெண்ணுதல்*
2 கொரி 12:6,7 ... *உயர்த்தாதபடி முள் (வெளிப்பாடுகள்)*

ஆ) சமுதாயத்தில் பெருமை
படிப்பு, பதவி, பணம், இனம் ...
எரே 9:23,24; 1 கொரி 1:26-29

இ) தோற்றம் குறித்த பெருமை
1 கொரி 4:7 ... அது கடவுளது **ஈவு.**

2. தன்னடக்கம் / கட்டுப்பாடு

— தீய விருப்பங்களிலிருந்து மனந்திரும்புதல்

இருட்டின் கனியற்ற செயல்கள் —
எபே 5:9-13 ... இருட்டின் இரகசியப் பாவங்கள் (வச 3)

ஆவியின் கனிக்கு எதிரான ஊனியல்புச் செயல்கள் —
கலா 5:19,22,23 ... முதல் நான்கும் பாலியல் பாவங்கள்

பழைய ஏற்பாட்டில் மூன்று எடுத்துக்காட்டுகள் —

அ) ***கனிதரும்*** *செடியாகிய யோசேப்பு —*
ஆதி 49:22
39:7-9 ... *மறுத்தான் ... ஓடினான் ...*

ஆ) பாவ அறிக்கைக்குமுன் தாவீதின் வாழ்வில் **வறட்சி**
சங் 32:3,4 ... *கோடைகால வறட்சி ...*

இ) யோபுவின் சாட்சி:
இப்பாவம் *எனது சம்பத்தையெல்லாம்* ***அழிக்கும்*** —
யோபு 31:9,12

3. நாவடக்கம்

ஆரோக்கிய நாவு கனி நிறைந்தது —
நீதி 15:4 ... *வாழ்வு தரும் மரம்*
18:20,21 ... *வாழ்வு ... நாவின் அதிகாரம்*

அடங்கா நாவு கனி தராது —
யாக் 1:26 *(பயனற்றது* — கனியற்றது)
3:2உடன் ஒப்பிடுங்கள் ... *பூரண மனிதன்*

நமது உள்ளான நிலையைக் காட்டுவது நமது நாவுதான் —
யாக் 3:8-12 *(ஊற்று* = உள்ளான மனிதன்)
மத் 12:33,34 ... *நல்ல மரம்/நல்ல கனி ... இருதயம்/வாய்*

வார்த்தைகளைக் கொண்டு மனந்திரும்புதல் கனிதரும் —
ஓசி 14:2,5,6 ... *உதடுகளின் பலி*

நாம் மனந்திரும்ப வேண்டியவை —
வீணான வார்த்தைகள் (மத் 12:36,37)
நியாயந்தீர்க்கும் வார்த்தைகள் (மத் 7:1,2)
பொய் வார்த்தைகள் (எபே 4:25) மிகைப்படுத்துதல் ...
அவதூறு வார்த்தைகள் (மத் 5:22-24) ... ஒப்புரவாகுதல்
(இது இயேசுவைத் தூஷிப்பது — மத் 25:40)

துதி செலுத்துவதற்கே திரும்புவோம்!
எபே 5:4 ... *புத்தியீன வார்த்தைகள்* விபச்சாரம் போன்றவை
எபி 13:15 ... *உதடுகளின் கனி*

ஒரு தீர்மானம் ... சங் 17:3 ... *என் வாய் மீறக்கூடாது.*

4. சரியான சகவுறவுகள்

ஊனியல்பின் செயல்கள் x ஆவியின் கனி
கலா 5:19-21 ... 17இல் 9 சகவுறவுகளை அடுத்தவை.
: 22,23 ... 9இல் 7 சகவுறவுகளை அடுத்தவை.

கனி கொடுத்தலில் நமது முக்கிய பங்கு —
சக 8:12,13,16,17 ... *உண்மை ... நியாயம் ... சமாதானம்*

தேவ பக்தியோடு *சகோதர சிநேகமும் அன்பும் கூட்டுங்கள் —*
2 பேது 1:7,8
கிறிஸ்தவ வாழ்வின் இரு பகுதிகள்:
(தேவனை நேசி + மனிதனை நேசி)

பிந்திப்போகுமுன் *கசப்பின் ''வேரைப்''* பிடுங்கியெறியுங்கள் —
எபி 12:12-15 ... *முடமாயிருப்பது பிசகிப்போகுமுன் ...*
மத் 5:25 ... ***சீக்கிரம்*** *நல்மனம் பொருந்து.*

☐ அதிகாரத்தை எதிர்ப்பது — *''கனியற்ற மரங்கள்''* (யூதா 8,12)

பிள்ளைகள்	→	பெற்றோர்
மனைவிமார்	→	கணவன்மார்
வேலையாட்கள்	→	அதிகாரிகள்
மாணவர்	→	ஆசிரியர்
பரிசுத்தவான்கள்	→	மூப்பர்கள்

5. எளியவர்மீது கரிசனை

— பண ஆசையிலிருந்து மனந்திரும்பி
தேவையுள்ளோருக்குப் பகிர்ந்து கொடுக்க ஆயத்தம்.

திருமுழுக்கினன் யோவான் — *மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள்*
லூக் 3:8,10-14 ... மூன்று கேள்விகளுக்கும் பதில்!

முள் நிலம் — *செல்வத் திரளினால் நெருக்கம்* (மத் 13:22)
நீதி 11:28 ... *செல்வத்தை நம்பியிருக்கிறவர்கள்*
1 தீமோ 6:10 ... *பண ஆசை*

கனியின்மை — *''ஐயோ''* — பிறர்மீது கரிசனையின்மை —
ஏசா 5:1,2,8

எளியவர்க்கு வழங்குவதால் *நீதியாகிய கனிகள்* —
2 கொரி 9:6-10

■ *முடிவுரை*

- 5 விரல்கள் — பெரு விரல் ... பெருமை
  ருசி விரல் ... இச்சை
  நீண்ட விரல் ... நாவு
  மோதிர விரல் ... உறவுகள்
  சுண்டு விரல் ... எளியவர்

- முழுக்க முழுக்க சரிசெய்யுங்கள் —

அ) வேர்

ரோ 11:16 ... *வேர்* பரிசுத்தம், கிளைகள் பரிசுத்தம்.
நீதி 12:12 ... நீதிமானுடைய *வேர்* கனிதரும்.
மத் 3:10 ... *வேர்* அருகே கோடரி

ஆ) *சிறு நரிகள்* (உன் 2:15)

5

''கிறிஸ்துவிடம் வருதல்'' என்றால் என்ன?

What does "Coming to Christ" mean?

முகவுரை

நமது சொந்த இரட்சிப்பைக் குறித்துப் பேசும்போது,
''நான் ......ஆம் ஆண்டு கிறிஸ்துவிடம் வந்தேன்'' என்போம்.

கிறிஸ்துவிடம் ''வருவது'' என்றால் பொருளென்ன?

எபிரெயர் 12:22-25

இதில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆசிகளின் எழுத்தின்படியான
நிறைவேறுதல் வருங்காலத்தில்தான் எனினும்,
ஒவ்வொன்றும் இன்றும் நடைமுறை அர்த்தமுள்ளது —

1. சீயோன் மலை

பழைய ஏற்பாட்டில் சீயோன் மலையைப் பற்றிப் பேசும் பல பகுதிகள்
அழுத்திக் கூறுவது —

சகவுறவுகளில் நடைமுறை நீதி வாழ்வு.

ஏசா 33:14-16 ... சகவுறவுகளில் **மாய்மாலம்**
(ஒப்பிடுக: சங் 24:3-5)

புல 5:18 ... சீயோனிலுள்ள நரிகள் **தந்திரத்தையும், வஞ்சகத்தையும்** குறிப்பிடுன்றன.

ஆமோ 6:1,6 ... சீயோனில் நிர்விசாரம் — நமது சகோதரன்
யோசேப்பைக் குறித்துக் **கரிசனையின்மை**

ஒப்புரவாகிக் காரியங்களைச் சரிசெய்ய அழைப்பு — மத் 5:23-26

2. ஜீவனுள்ள தேவனின் நகரமாம் பரம எருசலேம்

தேவனது நகரத்தைக் குறித்த முக்கிய விபரங்களடங்கிய பகுதிகளில்
ஒன்று சங்கீதம் 48.

வச 1,2,7 ... *''தர்ஷீசின் கப்பல்களை உடைக்கிறீர்''*
இது வெளிப்படுத்தப்பட்ட இறைச்சித்தத்திற்குக்
கீழ்ப்படியாது எதிர்த்துச் செல்லுதலுக்கு அடையாளம் (யோனா)

தமக்குமுன் **ஒளிவுமறைவையும் மாய்மாலத்தையும்** தேவன்
பொறுக்கமாட்டார் —

சங் 101:6,8	ஒப்பிடுக: யோனாவின்
ஏசா 48:2,8-11	மாய்மால அறிக்கை (யோனா 1:8,9)

கீழ்ப்படியாமை யாவும் தண்டிக்கப்படும் (2 கொரி 10:4-6).

அது ***''ஜீவனுள்ள** தேவனது நகரம்''* என்றழைக்கப்படுகிறது.
அவரைக் **குற்றமற்ற மனச்சாட்சியோடு** ஆராதிக்கவேண்டும்
(எபி 9:14)

சுத்திகரிக்கும் இயேசுவின் **இரத்தத்தை** நாடுங்கள்.

3. ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர்

தேவ தூதர் நமக்குப் *''பணிவிடை'' செய்யும் ஆவிகள்* (எபி 1:14)

அவர்களது **பணி** நமக்குத் தரும் நடைமுறைப் **போதனைகள்**—

- மத் 13:49 —**பிரித்தெடுக்கும்** வேலை
  எ.கா) ஆதி 19:15-17 ... லோத்து
- மத் 18:7-10 — எவரையும் **அற்பமாய்** எண்ணாதீர்.
  எவருக்கும் **இடறலாய்** இராதீர்.
- 1 கொரி 11:5-10 — தலையில் முக்காடு
  படிப்பினை: கணவருக்குக் **கீழ்ப்படிந்திருத்தல்.**
  குடும்ப வாழ்வில் சரியான ஒழுங்கு.
- லூக் 12:8,9 — கிறிஸ்துவை உலகில் **அறிக்கையிடுதல்.**
  ''கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்க தேவன் தமது தூதரைப்
  பயன்படுத்தினார்!''

4. பரலோகில் பெயரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை

- *''முதற்பேறானவர்''* —

தேவனுக்கு இஸ்ரவேலர் முதற்பேறானவர்கள் —
யாத் 4:22; எரே 31:9ஆ

ஆன்மீக ரீதியில், **சுயநீதியால்** அவர்கள் அதை இழந்தனர்.
ரோ 9:6-8 ... *மாம்சத்தின்படி பிள்ளைகள் ... வாக்கு ...*
:25,26 ... *என் ஜனங்கள் ... தேவப் பிள்ளைகள் ...*
:32-10:3 ... *சுய நீதி*
சுயநீதியைக் குறித்துக் கிறிஸ்துவின் எச்சரிப்பு:
— பரிசேயனும் வரிக்காரனும் (லூக் 18:9)

ஊனியல்பின் இச்சையினால் ஏசா முதற்பேறானவனுக்குரிய
ஆசீர்வாதங்களை அலட்சியம் பண்ணினான் —
எபி 12:16 ... *கூழுக்காய் விற்றுப்போட்டான்*
ஒப்பிடுக: வெளி 14:1,4 *(1,44,000 கறைபடாதோர் ...
... முதற்பலன்கள்)*

- *பரலோகில் பெயரெழுதப்பட்டுள்ளது* —

தேவன் சீயோனில் **எழுதுகிறார்** — சங் 87:3,5-7
தேவன் பரிசுத்த நகரிலிருந்து பெயரை நீக்குகிறார் —
வெளி 22:19 ... விருப்பமான வசனங்களுக்கு மட்டும்
கீழ்ப்படிதல் என்பது வேண்டாம்
வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' (2 தீமோ 3:16,17/அப் 20:26)

5. எல்லாருக்கும் நியாயாதிபதியாகிய தேவன்

எபிரெயர் நிருபத்தில் தேவனை நியாயாதிபதியாய்க் குறிப்
பிடும் வசனப்பகுதி ஒன்று தெரிந்து பாவம் செய்வதையும்
பின்மாற்றத்தையும் கண்டிக்கிறது (எபி 10:26-31,38,39)

பின்மாற்றத்திற்கு மூன்று முக்கிய காரணங்கள் —

1. நம்பிக்கையை அறிக்கையிடத் தவறுதல் (எபி 10:23)
2. கூடிவருதலைத் தவிர்த்தல் (எபி 10:24,25)
3. பொருளாதாரச் சிந்தையேயுள்ள உலகைப் பின்பற்றுதல் (எபி 11:13,16)

6. பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவிகள்

வெளி 6:9-11 — இரத்தசாட்சிகளுக்கு வெண்ணுடை
வெண்மை = பூரணம்

ரோ 8:29-31,35,36
— *நீதிமான்களாக்கப்பட்டோர் பூரணராக்கப்படுன்றனர்*
... பாடுகளினால்
எ.கா.) பாடுகளினால் இயேசு பூரணரானார் (எபி 2:10)

எபி 12:6,9 — நமது **பரிசுத்தத்திற்காகவே** சிட்சை

கேள்விகள்: பாடுகளுக்குத் தப்பியோட முயலுகிறீர்களா?
பாடனுபவிக்க மனதுண்டா? (வாட்ச்மன் நீ)
முறுமுறுக்கிறீர்களா?

7. புதிய உடன்படிக்கையின் நடுவர்

புதிய உடன்படிக்கை என்றால் என்ன?
(எபி 8:8-13)

✗ *செய்வாயாக ... செய்யாதிருப்பாயாக*
✓ *நான் செய்வேன் ... நான் செய்வேன்*

நடுவராயிருப்பவர் கிறிஸ்து (9:15)

நமது பாவங்கள் **மன்னிக்கப்படுவதும், மறக்கப்படுவதும்**, அவற்றை விட்டுவிடுவதற்கு நம்மை ஊக்குவிக்கவேண்டும் (1 யோ 2:1).

மனம் திறப்பதும் அறிக்கையிடுவதும் **நிசமாயிருக்கவேண்டும்** (1 யோ 1:7-10)

அதாவது, பாவத்தை **விட்டுவிட** வழிநடத்தவேண்டும் (நீதி 28:13)

தேவனுக்கேற்ற துக்கத்தின் முக்கியத்துவம் (2 கொரி 7:10,11)

8. ஆபேலின் இரத்தத்தைவிட நன்மையானவைகளைப் பேசும் இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தம்

- எபி 13:12-15

இரத்தம் → *பரிசுத்தமாகுதல்* → *நிந்தை*
மனிதர் நடுவில் **பிரபலமாயிருக்க** நாடாதீர்!
நாம் ஒதுக்கப்படும்போது கர்த்தரைத் துதிக்கிறோமா?

- *ஆபேலின் இரத்தத்தைவிட நன்மையானவற்றைப் பேசும் இரத்தம்* (எபி 12:24)

ஆபேலின் இரத்தம் **பழிவாங்கக்** கூப்பிடுகிறது (ஆதி 4:9,10).
கிறிஸ்துவின் இரத்தமோ **ஒப்புரவாகுதலுக்கும், சமாதானத்திற்கும், மன்னிப்புக்கும்** அடுத்தவற்றைப் பேசுகிறது.

எனவேதான், இந்த அத்தியாயமும் அடுத்ததும் **அன்பை** வலியுறுத்துகின்றன (12:14; 13:1)
சகோதரர் நடுவில் சமாதானம் *சீயோன் மலையின் பனியாம்* (சங் 133:1,3)

■ *முடிவுரை*

- கிறிஸ்துவிடம் வருவது:
  என்னே சிலாக்கியம்!
  என்னே பொறுப்பு!
- இந்த 8 அம்சங்களைத் தழுவிய கேள்விகள் —

1. எனது **சகவுறவுகளில்** உண்மையாயிருக்கிறேனா?
2. தேவனுக்குக் **கீழ்ப்படிதலில்** முழுமனதாயிருக்கிறேனா?
3. **பிரிந்து வாழ்ந்து, அர்ப்பணிப்புடன்** நடக்கிறேனா?
4. **மாம்ச இச்சைகளை** மேற்கொள்ளுகிறேனா?
5. **சாட்சி பகர்தலிலும் சபை கூடுதலிலும்** தவறாதிருக்கிறேனா?
6. **பாடனுபவிக்க** மனதுண்டா?
7. எனது பாவ அறிக்கையில் **தேவனுக்கேற்ற துக்கமுண்டா?**
8. இறைமக்களை உளமார **நேசிக்கிறேனா?**

6

மறுபிறப்பு நாள் வாழ்த்துக்கள்!

Happy Rebirthday!

முகவுரை

ஒருவரது பிறந்தநாளைவிட மறுபிறப்பு நாள் முக்கியமானது.

ஏனெனில்,

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்;
ஆவியினால் பிறப்பதோ ஆவியாயிருக்கும்! (யோ 3:6)

பிறப்பில் நாம் மண்ணுலகில் நுழைகிறோம்;
மறுபிறப்பின்றி நாம் விண்ணுலகில் நுழையமுடியாது (யோ 3:3,5)

பிறந்த நாள் கொண்டாடுவது நன்று;
ஆனால், மறுபிறப்பின் நாள் தேவனுக்குப் புகழ்பாடித்
துதிசாற்றுவதற்கு இன்னும் மேலானது!

நமது பெற்றோரும் இனத்தாரும் நமது பிறப்பில் அகமகிழ்கின்றனர்;
தூதர்கள் நமது மறுபிறப்பன்று விண்ணில் நடனமாடுகின்றனர்!
(லூக் 15:7,10)

நமது மறுபிறப்பின் நாட்களின்போது தேவனைத் துதிக்க,
இதோ சில முக்கிய காரியங்கள் —

1. *முன்குறிப்பு* (Foreordination)

எபே 1:4 ... *உலகத் தோற்றத்திற்கு முன்னரே கிறிஸ்துவுக்குள் முன்குறிப்பு*

வெளி 13:8 ... கல்வாரி என்பது தேவன் பின்னால் தீர்மானித்ததல்ல.
உலகம் தோன்றுமுன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி!

ரோ 8:29,30 ... *முன்னறிவு ... முன்குறிப்பு ... அழைப்பு ... நீதிமானாக்குதல் ... மகிமைப்படுத்துதல்*

துவக்கியவர் தேவனே;
எனவே பெருமையடிக்க இடமில்லை — ***கிருபை*** — எபே 2:8,9

நான் ''அல்பா'' அல்ல;
இயேசுவே எனது விசுவாசத்திற்கு ''அல்பா'' (எபி 12:2)

யோ 15:16 ... இயேசு: *''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை;*
நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்!''

2. *பின்னணி* (Background)

- பெற்றோர் மூலம் கிடைத்த நன்மை — 2 தீமோ 1:5
  பாட்டி ... அம்மா ...
- ஆசிரியர், மூத்தோர் மூலம் நன்மை
  எ.கா.) அப் 22:3 ... கமாலியேலின் பாதத்தில் பவுல்
  ஓய்வு நாள் பள்ளிகள், VBS, YFC, SU, SFJ, முதலியன.
- சபைப் பின்னணி
  எ.கா.) பவுல் — பிலி 3:4-7
  விருத்தசேதனம்... நியாயப்பிரமாணம் ... வைராக்கியம்
  இவையெல்லாம் அவனுக்கு *''லாபம்''* (வச 7).

இவைகளைக் கொண்டிருப்பதில் தவறில்லை;
ஆனால் *கிறிஸ்துவை அறிவதற்கு* இவை நிகராகா (வச 8)

நமது இரட்சிப்புக்கு நாம் இவைகளைச் சார்ந்திருக்கமுடியாது.

நான் வளர்ந்த நாசரேத்தில் (1947-1963) சபைப் பின்னணி—
நேர் முழங்காலில் நிற்றல் ... சுருக்க ஜெபங்கள், விசுவாச
அறிக்கைகள் மனனம் ... பிரசங்க பீடத்திலிருந்து திருவசனம்
வாசிக்கப்படுதல் ... முதலியன.

3. *தேவன் பயன்படுத்திய கருவிகள் (ஆத்தும ஆதாயகர்)* (Instruments)

- யோ 1:40-42அ ... பேதுருவை இயேசுவிடம் அந்திரேயா கொணர்ந்தார்.
- அப் 8:29-40 ... அதிகாரியைக் கிறிஸ்துவிடம் பிலிப்பு நடத்தினார்.
- அல்லது அது ஓர் எழுப்புதல்/சுவிசேஷக் கூட்டத்தில் நடந்திருக்கலாம் —

எ.கா.) பெந்தெகொஸ்தே நாள்
3000 பேர் பேதுருவின் பிரசங்கம் மூலம் இரட்சிக்கப்பட்டனர்.

வீட்டு ஜெபக்கூட்டம் —
கொர்நேலியு, பிலிப்பிய சிறைஅதிகாரி, ...

- ஒரு கைப்பிரதி நம்மைக் கிறிஸ்துவிடம் நடத்தியிருக்கலாம்.

எனது 6ஆம் வகுப்பு ஆசிரியரும், புகுமுக வகுப்பு வேதியல்
விரிவுரையாளரும் என்னைக் கிறிஸ்துவிடம் நடத்தினர் (1962).

Back to the Bible நிறுவன ஊழியர் கிறிஸ்டியன் உவைஸ் எழுதிய *''உத்தம கிறிஸ்தவன்''* என்ற நூலை வாசித்துக்கொண்டிருக்கையில் 1962 நவம்பர் 18 அன்று இரட்சிப்பின் நிச்சயம் பெற்றேன்.

4. *போஷிப்பு/வளர்ச்சி* (Nurture)

- தேவனுடைய வார்த்தை ... *பால்* ... 1 பேது 2:1-3
  ஆராய்ச்சி வேதாகமங்கள், உதவி நூல்கள், முதலியன.
- தேவனுடைய குடும்பம்
  எபே 3:18,19 ... *அனைத்துப் பரிசுத்தவான்களுடன் சேர்ந்து*
  தேவனுடைய நாற்பரிமாண அன்பைப் புரிவது.
  ஐக்கியங்கள், ஜெபக் குழுக்கள், சபைகள் ...
- தேவனுடைய ஊழியர்
  செடிக்கு நீரூற்ற ஓர் அப்பொல்லோ (1 கொரி 3:6)
  எபே 4:11-13 ... *பக்குவம் ... பக்திவிருத்தி ... பூரண மனிதன்.*
  பிரசங்கங்கள், பத்திரிகைகள், ஊழியங்கள்.

5. *போராட்டம்* (Warfare)

- சோதனைகள், தோல்விகள்
- விசுவாசப் பரீட்சைகள்
- சிட்சை
- சுகவீனங்கள்
- பிரச்னைகள், இக்கட்டுகள்
  ''சிட்சிக்கப்பட்டும் கொல்லப்படவில்லை'' (2 கொரி 6:9)
  ''பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல், தேறுதல்'' (அப் 9:31)

6. *ஊழியம்* (Ministry)

- எத்தனையோ பேர் *நாள் முழுவதும் சும்மா நின்றுகொண்டிருக்கும் போது* (மத் 20:3,6), அவரது பணியில் நம்மை விறுவிறுப்பாய் வைத்துள்ள தேவனைத் துதிக்க வேண்டும்.
- ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம்!
  எ.கா.) ஆபிரகாம் (ஆதி 12:2,3)
- சபைகளிலும் சங்கங்களிலும் பொறுப்புகள்
- *தேவனுக்குமுன் இராஜாக்கள், ஆசாரியர்கள்*
  அ) ஆராதிக்க/துதிக்க (1 பேது 2:5)
  ஆ) அறிவிக்க/சாட்சிபகர (: 9)

- நம்மை நம்பி ஊழியம் தந்த தேவனைத் துதிப்போம் (1 தீமோ 1:12)

7. *குடும்பம்* (Family)

- தம்பதியர் ஒருவருக்கொருவர் வளர்ச்சியில் உதவி
  அ) பவுல் கூறுவது
  மனைவி → கணவன் — எபே 5:22,23
  கணவன் → மனைவி — :28,29
  ஆ) பேதுரு கூறுவது
  மனைவி → கணவன் — 1 பேது 3:1,2
  கணவன் → மனைவி — :7
- பெற்றோர் ↔ பிள்ளைகள்
  பிள்ளைகளை வளர்க்கும் அனுபவத்தில்தான் திருச்சபையைக் கவனிக்கும் நடைமுறைப் பயிற்சி பெறுகிறோம் (1 தீமோ 3:4,5)

■ *முடிவுரை*

இந்த ஆசீர்வாதங்களை ஒவ்வொரு ஆண்டும் மறுபிறப்பின் நாளில் நினைவுகூர்ந்து குறிப்பாய்த் தேவனைத் துதிப்போம்.

தமது மக்கள் எகிப்தில் எப்படியிருந்தார்களென்பதையும்,
அவர் அவர்களை எப்படி விடுவித்தாரென்பதையும்,
முக்கியமாக அவர்களது விடுதலையின் நாளையும்,
தேவன் அடிக்கடி அவர்களுக்கு நினைப்பூட்டவில்லையா?
எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள்...''
(யாத் 13:3)

பாடுங்கள்: (Happy day, Happy day!)

இன்ப நாள், இன்ப நாள்,
என் பாவம் தீர்ந்துபோன நாள்!
பேரன்பர் என்னை இரட்சித்தார்,
சீராக்கி இன்பம் நல்கினார்!
இன்ப நாள், இன்ப நாள்,
என் பாவம் தீர்ந்துபோன நாள்!

— Philip Doddridge, 1702-1751

7

அனைத்தும் அர்ப்பணம்

What it means to follow the Lord wholly

முகவுரை

- அப் 26:27-29

நீங்கள் கொஞ்சங்குறைய (almost) கிறிஸ்தவரா?
அல்லது, சராசரிக் (average) கிறிஸ்தவரா?
அல்லது, முழுக்க முழுக்க (altogether) கிறிஸ்தவரா?
அல்லது, துடிதுடிப்பான (all-out) கிறிஸ்தவரா?

எ.கா.) காலேப்
யோசு 14:8...***''நானோ** கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன்''*
எண் 14:24 ... தேவனே கொடுத்த சாட்சி

பெரும்பாலானோரைச் (majority) சேராதீர்.
சராசரி நிலைக்குச் (mediocrity) சறுக்கிவிடாதீர்

கல்வி உலகிலும், வர்த்தக உலகிலும்
மக்கள் உசிதத்தையே நாடுன்றனர்.

ஆன்மீகக் காரியங்களில் நாம் உசிதத்தை நாடுவோம் —

''பத்தில் ஒன்று'' என்ற கிறிஸ்தவம் வேண்டாம்;
''பத்தில் பத்து'' என்ற கிறிஸ்தவமே இன்றையத் தேவை!

அப்போஸ்தலனாகிய பவுல் எல்லாவற்றிலும் உசிதம் —

1 தீமோ 1:15 ... தனது தகுதியின்மையை உணர்ந்ததில்
பிலி 3:4,7,8 ... தன்னை வெறுமையாக்கியதில்
1 கொரி 14:18 ... ஆன்மீக வரங்களைப் பயிற்சிப்பதில்
எபே 3:8 ... பரிசுத்தவான்களோடு தன்னை ஒப்பிடுகையில்
1 கொரி 15:9 ... ஊழியத்தின் தகுதியில்
:10 ... ஊழியத்தில் பிரயாசப்படுவதில்

கர்த்தரை முழுமையாய்ப் பின்பற்றுவதென்றால் என்ன?
(முற்றிலும் ஒப்புக்கொடுத்தல், அர்ப்பணிப்பு, பிரதிஷ்டை)

1. கர்த்தரை ''முழு'' இருதயத்தோடு விசுவாசியுங்கள்.

யோசு 14:6,10 ... *கர்த்தர் சொன்ன ''வார்த்தை''*
21:45 ... *ஒரு ''வார்த்தையும்'' தவறவில்லை*
முழுச் சம்பவம் — எண்ணாகமம் 13 & 14

விசுவாசம் அடிப்படையானது / அடித்தளமானது.
அது இல்லாது தேவனைப் பிரியப்படுத்த முடியாது.
நமது பெயரே ''விசுவாசிகள்'' என்பதுதானே?
விசுவாசமில்லாது வாழ முடியாது.

''அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்'' இல்லாது
வாழ்கிறோமா என்று அடிக்கடி தற்பரிசோதனை (எபி 3:12).
அநேகரது விசுவாசம் ஆடிப்போயிற்று.

விசுவாசமானது சந்தேகத்திற்குச் **செத்தது**;
சோர்புக்குச் **செவிடானது**;
இன்னல்களுக்கு **ஊமையானது!**

மனுமகன் வரும்போது ... விசுவாசத்தைக் காண்பாரோ? (லூக் 18:8)
விசுவாசத்தைப் பலமிழக்கச் செய்பவை —
விஞ்ஞானம் ... பாடுகள் ... சோதனைகள்
(Technology ... Trials ... Temptations)

எ.கா.) தீமோத்தேயு (1 தீமோ 6:20,21)
பேதுரு (கடல் அலைகள்)
இயேசு *(எழுதியிருக்கிறதே!)*

உதவி: கிரமமான திருமறைத் தியானம் (ரோ 10:17)

2. கர்த்தரை ''முழு'' உணர்வோடு நேசியுங்கள்.

விசுவாசம் + + + + + + (2 பேது 1:5-7)
விசுவாசம்: மூலைக்கல் அன்பு: தலைக்கல்
உபா 6:4,5/மத் 22:37 (அனைத்தும் உள்ளடக்கம்)
மாபெரும் கட்டளை:
(இருதயம் + ஆத்துமா + பலம் + மனது)

யோ 21:15-17 ... மாபெரும் நிபந்தனை
வெளி 2:4 ... *ஆதி அன்பு* ... வாஞ்சை
... மாபெரும் குறைவு

ஐக்கியத்தினால், நெருக்கவுறவினால் அன்பு வளருகிறது.
உதவி: ஜெபத்தில் போதுமான நேரம் (உரையாடல்)

பன்னிருவரை இயேசு தெரிந்தெடுத்த முக்கிய காரணம் (மாற் 3:14)
ஜெபத்திற்கு நேரம் குறியுங்கள் (எ.கா. — தானியேல்)
நாளின் துவக்க மணி நேரங்கள்.
ஜெபிக்க, ஜெபிக்க தேவனோடு ஒட்டிக்கொள்வீர்கள்!

3. கர்த்தருக்கு ''முழு'' மனதோடு கீழ்ப்படியுங்கள்.

அன்பு → கீழ்ப்படிதல் (1 யோ 5:2,3)
''அன்புதான் வேர்;
கீழ்ப்படிதல் கனி!'' — மேத்யூ ஹென்றி

என்ன செய்வது, கீழ்ப்படிய வேண்டுமே, என்றல்ல;
''மனப்பூர்வமான'' கீழ்ப்படிதல்.

கீழ்ப்படியவேண்டியவை
— திருவசனக் கட்டளைகள் (எபி 10:7)
— ஆவியானவரின் சத்தம் (மத் 4:1)
— பரிசுத்தவான்களின் ஆலோசனை (எபி 10:24,25)

உறவின் அடிப்படையில்தான் கீழ்ப்படிதல் எளிதாகிறது:
நாம் வேலைக்காரர்; எனவே **ஆண்டவருக்குக்** கீழ்ப்படிவோம்!
நாம் போர்வீரர்; எனவே **தளபதிக்குக்** கீழ்ப்படிவோம்!
நாம் குமாரர்; எனவே **தந்தையானவருக்குக்** கீழ்ப்படிவோம்!
நாம் பரிசுத்தவான்கள்; எனவே **தேவனுக்குக்** கீழ்ப்படிவோம்!

உதவி: தற்பரிசோதனையும் அர்ப்பணிப்பின் புதுப்பிப்பும்.
கீழ்ப்படிதல் குறைவுபட்டால் வெளிப்பாடு நின்றுபோகும்.
''உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்''
(மாற் 4:24,25)

4. கர்த்தரை ''முழு'' பலத்தோடு சேவியுங்கள்.

கீழ்ப்படிதல் → அர்த்தமுள்ள சேவை (1 சாமு 15:22)
''எதைச் செய்தாலும், கர்த்தருக்கென்று செய்யுங்கள்''
(கொலோ 3:23,24)

ஏழு ஆலோசனைகள் —
அ) எப்பணியையும் செய்ய ஆயத்தமாயிருங்கள்
பிர 9:10 ... *''எதுவோ''*
இறைப்பணியில் சிறிய வேலை என்று எதுவுமில்லை.

ஆ) தள்ளிப்போடாதீர்கள்
நீதி 27:1 ... *நாளையத்தினம் ... அறியாயே ...*

இ) எல்லாவற்றையும் கிரமமும் ஒழுங்குமாய்ச் செய்யுங்கள்
1 கொரி 14:40

ஈ) செய்வன திருந்தச் செய்யுங்கள்
நீதி 22:29 ... *வேலையில் கவனம் ... ராஜாக்கள்*

உ) தரமாய்ச் செய்திட முயன்றிடுங்கள்
1 கொரி 3:12,13 ... *பொன் ... வெள்ளி ... தரம் ...*

ஊ) கடினம் என்று எந்த வேலையையும் ஒதுக்காதீர்கள்
2 தீமோ 2:3,6 ... *தீங்கனுபவி ... சேவகன் ...*
கிரயம் செலுத்தாத பணி எதையும் சாதிக்காது.

எ) தத்துவங்களைத் தியாகம் செய்யாதீர்கள்
எது சரி x எது வசதி
2 தீமோ 2:5 (பந்தயத்தில் சட்டங்கள்)

உதவி: இந்த ஆலோசனைகளையெல்லாம் பின்பற்றிக் கர்த்தருடைய வேலையில் ''பெருகுகிறீர்களா'' எனச் சோதித்தறியுங்கள்.
ஊக்கம் பெறுங்கள்: *உங்கள் முயற்சி வீண்போகாது* (1 கொரி 15:58)

5. கர்த்தரை ''முழு'' ஆவியோடு மகிமைப்படுத்துங்கள்.

சேவை → தேவ மகிமை ... 1 கொரி 10:31/கொலோ 3:17)
''உங்களுக்கிருப்பது இரு நோக்கங்களானால் ஒன்று அதிகம்தான்!''
— ஜார்ஜ் வெர்வர்

தேவன் அனைத்தையும் தமது மகிமைக்கென்றே ஏற்படுத்தினார் —

- ☐ கிறிஸ்து உயர்த்தப்பட்டது தேவ மகிமைக்காக (பிலி 2:9,11)
- ☐ ஆவியானவர் அனுப்பப்பட்டது கிறிஸ்துவை மகிமைப்படுத்த (யோ 16:14)
- ☐ திருச்சபை ஒருமனப்பட வேண்டியது பிதாவின் மகிமைக்காக (ரோ 15:5,6)
- ☐ உலகு நற்செய்திமயமாக வேண்டியது தேவ மகிமைக்காக (ரோ 15:9)

உதவி:

மனிதரைப் பிரியப்படுத்துவதற்கான சோதனைக்கு ஆளாகாதீர் —

கலா 1:10 ... *நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்தினால் ...*
எபே 6:6,7 ... *பார்வைக்கு அல்ல, கர்த்தருக்கு ஊழியம்*
கொலோ 3:24 ... *முழுமனதுடன் ... மனிதருக்கல்ல ... கர்த்தருக்கு*

■ ***முடிவுரை***

- விசுவாசம் → அன்பு → கீழ்ப்படிதல் → சேவை → தேவ மகிமை
- காலேபின் சாட்சி: *''நான் **உத்தமமாய்** கர்த்தரைப் பின்பற்றினேன்''*

காலேப் = நாய் — எஜமானை நம்பும்
எஜமானை நேசிக்கும்
எஜமானுக்குக் கீழ்ப்படியும்
எஜமானைச் சேவிக்கும்
எஜமானைப் பிரியப்படுத்தும்

இதுதான் ''உத்தமம்'' (faithfulness) என்பது!
இதுதான் கர்த்தரை முழுமையாய்ப் பின்பற்றுவதாம்!

■

அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே
அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத் தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

''சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்...''

நான் உம்மை நம்பி இரட்சகா! வீண் வெட்கம் அடையேன்;
பேரன்பைக் குறித்தாண்டவா! நான் சாட்சி கூறுவேன்.

சிலுவையண்டையில், நம்பி வந்து நிற்கையில்,
பாவப்பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்;
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

ஆ! உந்தன் நல்ல நாமத்தை நான் நம்பிச் சார்வதால்,
நீர் கை விடீர்! இவ்வேழையைக் காப்பீர் தேவாவியால்.

மா வல்ல வாக்கின் உண்மையைக் கண்டுணரச் செய்தீர்;
நான் ஒப்புவித்த பொருளை விடாமல் காக்கிறீர்!

நீர் மாட்சியோடு வருவீர், அப்போது களிப்பேன்;
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர், மெய்ப் பாக்யம் அடைவேன்.

At the Cross! At the Cross!

I'm not ashamed to own my Lord, or to defend His cause;
Maintain the honour of His Word, the glory of His Cross.

At the Cross! At the Cross!
Where I first saw the light,
And the burden of my heart rolled away;
It was there by faith I received my sight,
And now I am happy all the day!

Jesus, my Lord! I know His name — His name is all my trust:
Nor will He put my soul to shame, nor let my hope be lost.

Firm as His throne His promise stands; and He can well secure
What I've cornmitted to His hands, till the decisive hour.

Then will He own my worthless name before His Father's face;
And in the New Jerusalem, appoint me to my place.

B

8

பைபிள் என்றால் என்ன?

What is the Bible?

புதிய ஏற்பாட்டில் பைபிளுக்குப்
12 காரணப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

அவற்றில் ஒவ்வொன்றும் பைபிள் தரும் செய்தியின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை வலியுத்துகின்றது.

1. *''தேவனுடைய வார்த்தை''* (Word of God)
   — தேவனது அதிகாரத்தோடு பேசப்பட்ட செய்தி
   மத் 4:4

2. *''கர்த்தரது/கிறிஸ்துவின் வசனம்''* (Word of Christ)
   — மையக் கருத்தாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்தி
   அப் 8:25/கொலோ 3:16

3. *''தீர்க்கதரிசன வார்த்தை''* (Word of Prophecy))
   — பரிசுத்த ஆவியானவரது தூண்டுதலில் வந்த செய்தி
   2 பேது 1:20,21

4. *''சுவிசேஷ வசனம்''* (Word of the Gospel)
   — மனிதருக்குக் கொடுக்கப்படும் நற்செய்தி
   அப் 15:7

5. *''ஒப்புரவாகுதலின் உபதேச வசனம்''* (Word of Reconciliation)
   — தேவனோடு ஒப்புரவாக மனிதனை அழைக்கும் செய்தி
   2 கொரி 5:19

6. *''இரட்சிப்பின் வசனம்''* (Word of Salvation)
   — மனிதனைப் பாவத்திலிருந்து விடுவிக்கும் செய்தி
   அப் 13:26

7. *“தேவ கிருபையின் வசனம்”* (Word of God’s Grace)
— நம்மைத் திருச்சபையில் கட்டியெழுப்பும் செய்தி
அப் 20:32

8. *“சத்திய வசனம்”* (Word of Truth)
— சாத்தானின் பொய்களை வெளியரங்கமாக்கும் செய்தி
2 கொரி 6:7

9. *“ஜீவ வசனம்”* (Word of Life)
— இருளை அகற்றும் செய்தி (வச 15)
பிலி 2:16

10. *“நீதியின் வசனம்”* (Word of Righteousness)
— நம்மைப் பரிசுத்த வாழ்வுக்குள் நடத்தும் செய்தி
எபி 5:13

11. *“விசுவாச வார்த்தை”* (Word of Faith)
— காணப்படாத தேவன் மீதும் கிறிஸ்து முடித்தவற்றின் மீதும் நமக்கு விசுவாசத்தை உண்டாக்கும் செய்தி
ரோ 10:8

12. *“தேவனுடைய நல் வார்த்தை”* (Good Word of God)
— நமது நன்மைக்காகவே வரும் தேவனது செய்தி
எபி 6:5

மனிதருடைய வாழ்க்கையின் அத்தனை தேவைகளையும் இவ்விதம் சந்திக்கும் வேதம் உலகில் எங்குமில்லை. பைபிள் இவ்வளவு பயனுள்ளதாயிருப்பதற்குக் காரணம் அது தேவனது வார்த்தை; படைத்தவராகிய அவருக்கேயல்லாது யாருக்குப் படைக்கப்பட்ட மனிதனின் தேவை புரியும்?

நமது எல்லாவித வேத ஆராய்ச்சியிலும் பைபிளின் இந்தக் காரணப் பெயர்களை நினைவிற்கொள்ளவேண்டும்.

9

பைபிளின் பயன்கள்

The Benefits of the Bible

முகவுரை

- இறைமக்கள் உயிர்மீட்சியடைந்து ஆதிநிலையேகிய பல சம்பவங்களைப் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.

ஒரு முக்கியமான எழுப்புதல் —

யோசியா ராஜாவின் ஆட்சிக்கால எழுப்புதல் —

2 இரா 22-24 / 2 நாளா 34,35
2 இரா 22:1 ... 8 வயது முதல் 39 வரை ... 31 ஆண்டுகள்
:2 ... அவனைக் குறித்த சிறு சாட்சி
2 நாளா 34:3,4 ... எருசலேம் முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டது.

தேவாலயத்தில் தேவனுடைய புத்தகம் கண்டெடுக்கப்பட்டதே அவனது ஆளுகையில் முக்கிய சம்பவம் —
2 இரா 22:8

அவர்களது பரிதாப நிலைக்குக் காரணத்தைக் கண்டுகொண்டான் —
(வச 13)

இன்றையச் சபையின் நிலையும் இதுவே —
தேவனது புத்தகம் தேவாலயத்திலேயே தொலைந்துவிட்டது.
அதற்குரிய இடத்திற்குப் பைபிள் கொண்டுவரப்பட்டால்,
திருச்சபையின் சீர்கேடுகள் யாவும் சரியாகும்.

- ***திருவசனத்திற்குத் திரும்புவோம்!***

அதிகமாய் விற்பனையாவது பைபிள்தான், சந்தேகமில்லை;
விற்கப்பட்டது அல்ல, வாசிக்கப்படுவது எத்தனை?
வாசிக்கப்படாது உலகில் கிடக்கும் பைபிள்களையெல்லாம்
கூட்டிச்சேர்த்தால் இன்னும் 10 ஆண்டுகளுக்கு வேதாகமச் சங்கங்கள் பைபிளை அச்சடிக்கத் தேவையிருக்காது!

வேதத்தைச் சரிவரப் பயன்படுத்தாததற்குக் காரணம்
அதின் பயன்கள் சரிவர அறியப்படாததே.

பைபிளின் ஆறு முக்கிய பயன்கள் —

1. அன்றன்றுள்ள அப்பம் (Our Daily Bread)

மத் 4:4 ... வேதத்தைப்பற்றி கிறிஸ்து சொன்ன முதல் வார்த்தைகள்
எ.கா.) யோபு 23:12 ... அத்தியாவசியத் தேவை.
உள்ளான மனிதனைப் பலப்படுத்துதல் ... ஆன்மீகக் கேடுபாடுகள்

☐ **சிந்தனைக்கு** ஆகாரம்

எ.கா.) வேதத்தில் இயேசுவுக்கு இருந்த ஆர்வம் அவரது வயதுக்கு மிஞ்சிய ஞானம் கொடுத்தது (லூக் 2:47,52)

சங்கீதக்காரன் — சங் 119:99,100
"எனக்குப் போதித்தவர்களைவிட ..."

பிலி 4:8 ... *உண்மையுள்ளவை எவையோ*
:7 ... ஜெபத்தின் மூலம் தேவ சமாதானம்
:9 ... திருவசனத்தின் மூலம் சமாதானத்தின் தேவன்

வேதாகம அட்டவணை ஒன்றினைப் பயன்படுத்துங்கள்.

பைபிள் இல்லாத நாள் பாழான நாள் —
சங் 1:2 ... *"இரவும் பகலும் ..."*
தினசரி நடத்துதல் — *"அவன் செய்வதெல்லாம் ..."*
(தீபம்) *"கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்"*

☐ **உடலுக்கு** ஆரோக்கியம்

மத் 8:8,16 ... தமது வசனத்தின் மூலம் சுகப்படுத்தினார்.
சங் 107:20 ... வசனத்தை அனுப்பிக் குணமாக்கினார்.
(ஓர் ஆராய்ச்சி வேதமும், வேதாகமப் பொருளகராதியும் வாங்குங்கள் / (Study Bible & Bible Dictionary)

2. பரிசுத்தப் பெரும்பாதை (Highway of Holiness)

யோ 17:17 ... *உமது வசனத்தினால் அவர்களைச் சுத்தமாக்கும்*
15:3 ... *வசனத்தினால் சுத்தமாயிருக்கிறீர்கள்*

பவுலும் இதையே சொல்லுகிறார்:
"திருவசனத்தினால் கழுவி ..." (எபே 5:26)

சங் 12:6 ... *7 தரம் உருக்கப்பட்ட வெள்ளி போன்ற சுத்த சொற்கள்*
திருவசனம் தீயவை அனைத்துக்கும் எதிரி — 1 பேது 2:1,2

பின்மாற்றத்திற்கு மாற்று மருந்து —
சங் 19:7-13 ... *பிழைகள் ... மறைவான குற்றங்கள் ... துணிகரப் பாவங்கள் ... பெரும் பாதகம்*

- உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி (யாக் 1:23-25)
அறுவை சிகிச்சைக்கான கத்தி (எபி 4:12,13)
தடுக்கமுடியாத பாவ உணர்வுக்குள் அது நம்மைக் கொண்டுவருகிறது.
(2 இரா 22:11 ... *மேலாடையைக் கிழித்தான்)*
பாவத்திலிருந்து வேதம் நம்மை விலக்கும்;
வேதத்திலிருந்து பாவம் நம்மை விலக்கும் (சங் 119:104)
— குறிப்பாக, வாலிபர், நங்கையர் (வச 9)
மேலெழுந்தவாறு வேதம் வாசித்தால் போதாது;
வேதம் நம்மை வாசிக்கவேண்டும்!

3. கர்த்தருடைய பட்டயம் (Sword of the Lord)

சாத்தானை இயேசு தோற்கடித்த விதம் —
"எழுதியிருக்கிறதே" (மத் 4:4,7,10)

பிசாசு ஒரு வேத வசனத்தைச் சுட்டிக்காட்டியபோது,
இயேசு சொன்னது — *"**இப்படியும்** எழுதியிருக்கிறதே!"*

அவருக்கு வந்த 3 சோதனைகளும் குறிப்பவை —

அ) கற்கள் — *மாம்ச இச்சை* — புசிப்புக்கு நல்லது	*"உலகம்"*
ஆ) இராஜ்யங்கள்—*கண்ணிச்சை*—பார்வைக்கு இன்பம்	
இ) கோபுரம் — *வாழ்வின் பெருமை* — தேவர்கள்போல்	

திருவசனம் நம்மில் குடிகொள்ளும்போது இவற்றை மேற்கொள்ளலாம் —

1 யோ 2:14ஆ,16
உலகம் x வசனம் (World x Word)

— வழக்கமான சில பாவங்களுக்கு அடிமைத்தனம்
யோ 8:32-34 ... *சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.*

இந்தப் பட்டயத்தால் நாம் சாத்தானைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கலாம் —

வெளி 2:12,13அ (பெர்கமு).

சத்துருவின் வெள்ளம் போன்ற படையெடுப்பிற்கு எதிராக ஆவியானவர் உயர்த்தும் வெற்றிக்கொடி ... ஏசா 59:19,21

4. *அசைக்கமுடியா அடித்தளம்* (Unshakable Foundation)

எதுவுமே நிச்சயமோ, நிரந்தரமோ இல்லாத காலமிது.
ஆனால் திருமறையோ அசையாத கன்மலை —

எ.கா.) மலைப்பிரசங்கத்தின் முடிவு வார்த்தைகள் —
அடித்தளம் எங்கே? *மணல் ... பாறை* (மத் 7:24-27)

எது மணல்? —

அ) பாரம்பரியங்கள்

மத் 15:3-6 ... தமது கால மார்க்கத் தலைவர்களை இயேசு கடிந்துகொண்டார்.

திருமறைக்கு ஒவ்வாத பாரம்பரியங்களை அவர் எதிர்த்ததாலேயே சிலுவையில் அறையப்பட்டார்.

நமக்கு இன்னொரு மார்ட்டின் லூத்தர் (1483-1546) தேவை.
திருச்சபையிலிருந்து திருமறைக்கு அதிகாரம் அல்ல;
திருமறையிலிருந்தே திருச்சபைக்கு அதிகாரம்!

திருச்சபை என்ன விசுவாசிக்கிறது என்பதைவிட திருமறை என்ன சொல்லுகிறது என்பதே காரியம்.

ஆதியிலே ''வார்த்தை'' இருந்தது — ''சபை'' அல்ல!

ஆ) மனிதனது தர்க்கங்கள்

எ.கா.) சதுசேயர் ... அற்புத வல்லமையில் நம்பிக்கையற்றோர்
மத் 22:28-33 ... *தேவ வசனமும் தேவ வல்லமையும்* தெரியாததால் *தப்பான எண்ணம்*

கொரிந்தியருக்குப் பவுல் —
மனித ஞானம் vs. *தேவ வல்லமை* (1 கொரி 2:4)

இ) நவீன உபதேசங்கள்

இயேசு: *''**அநேகக்** கள்ளத் தீர்க்கர்கள் ... **அநேகர்** வஞ்சிக்கப்படுவர்* (மத் 24:4,5,11) — கடைசி நாட்கள்!
பவுல்: *''பிசாசின் உபதேசங்கள்''* (1 தீமோ 4:1)
''ஒளியின் தூதன் ... நீதியின் ஊழியர்போல்'' (2 கொரி 11:13-15)
வேறே இயேசு ... வேறே ஆவி ... வேறே சுவிசேஷம் (வச 4)

ஓரினச் சேர்க்கையாளர்களைத் திருச்சபை அனுமதிக்கிறது பாருங்கள்!

5. *ஜெபப் பாடப்புத்தகம்* (Textbook on Prayer)

கண்டெடுக்கப்பட்ட கர்த்தருடைய புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்த படியே ஆராதனை முறையை யோசியா இராஜா சீர்ப்படுத்தினான் —
2 இரா 23:21

யோசியா கொண்டாடிய பஸ்கா நிகரற்று விளங்கியது —
2 நாளா 35:17,18

- திருவசனத்தின்படியே இயேசு ஜெபித்தார்.
  எ.கா.) பேதுருவிடம்: *''ஆயிரமாயிரம் தூதருக்காய் என் பிதாவிடம் வேண்டலாமே? ... அப்படியானால் வேத வாக்கியம் எப்படி நிறைவேறும்?''*

- திருச்சித்தத்தின்படியே ஜெபம் ஏறெடுக்கப்படவேண்டும்.
  திருவசனமே திருச்சித்தம். (God's Word is God's Will.)
  நீதி 28:9 ... *வேதத்தைக் கேளாதவன் ... அருவருப்பான ஜெபம்*
  யோ 15:7 ... ஏற்புடையது *(என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்)*
  எ.கா.) எரேமியா புத்தகத்தில் எழுதியிருந்தபடியே தானியேல் ஜெபித்தான் —
  தானி 9:2,3/10:12 ... அந்த ஜெபம் *உடனே கேட்கப்பட்டது!*

☐ நம்மில் அநேகர் அந்தச் சமாரியப் பெண்ணைப் போலிருக்கிறோம் —
''நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்'' (யோ 4:22)
தேவனை நமக்கு விளக்குவது பைபிள்தான்!

ஜெபமில்லாத வேதத் தியானம் வறட்சியாயிருக்கும்;
வேதத் தியானமில்லாத ஜெபம் ஆபத்தானது.

வேதத்தைத் திறந்து வைத்துக்கொண்டு ஆண்டவரோடு
பேசும்போது ஜெபம் ஆழ்ந்த அர்த்தமுள்ளதாகிறது.

6. கட்டுவோரின் தூக்குநூல் (Builders' Plumbline)

இன்று எங்கும் ஊழியங்கள் எழும்பியவாறு இருக்கின்றன;
ஆனால் வேதாகமப் பாணி என்ன ஆனது?

கடவுளது திட்டத்தின்படியே நோவா பேழையைக் கட்டினான் (ஆதி 6:22)

கடவுளது திட்டத்தின்படியே மோசே ஆசரிப்புக் கூடாரத்தை அமைத்தான் (யாத் 39:42,43)

சட்டங்கள் மீறப்பட்டால் பந்தயத்தில் பதக்கம் கிடைக்காது (2 தீமோ 2:5)

இறையரசைக் கட்டுவதற்கான வரைபடம் இறைநூல்தான்!

எனவேதான் அப்போஸ்தலர் அடிக்கடி கேட்ட கேள்வி —
''வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?''
எ.கா.) *''தீர்க்கர்களின் வார்த்தைகள் ஒத்திருக்கின்றன''* (அப் 15:13-15)

அவர்களது சாட்சி —

''எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணத் துணியோம்'' (1 கொரி 4:6)
வேதத்திற்குக் கூடுதலான வெளிப்பாடுகள், அனுபவங்களுக்கு எச்சரிக்கை!

என்ன கட்டுகிறோம் என்பதல்ல, எப்படிக் கட்டுகிறோம் —

*''அவனவனது வேலை அக்கினியினால் பரிசோதிப்பு ...
பொன் ... வெள்ளி ... மரம் ... வைக்கோல்''*
(1 கொரி 3:12,13) ... மரம், வைக்கோல் ... துரித வேலை!
''வானமும் பூமியும் ஒழியும், திருவசனமோ ...'' (மாற் 13:31)

■ *முடிவுரை*

நமது பெருமிதம் ... (உபா 4:8) ... *பிரமாணம் ... கட்டளை ...*
தேவன் தமது வார்த்தையை மகிமைப்படுத்தியதால் (சங் 138:2ஆ)
பைபிளையே உங்கள் நெருங்கிய நண்பனாக்கிடத் தீர்மானியுங்கள்.

''ஷேக்ஸ்பியரை உருவாக்கியது இங்கிலாந்து;
இங்கிலாந்தை உருவாக்கியது பைபிள்!'' — Victor Hugo

10
விஞ்சும் விவிலியம்
The Supremacy of the Scriptures

முகவுரை

- பணவீக்கத்தைக் (inflation) குறித்துப் பேசுகிறோம்.
  — அது நமது பொருளாதாரத்தைப் பாதிக்கும்
  மண்ணுலகுக்கடுத்த பிரச்னை.

ஆனால் விண்ணுலக வாழ்வைப் பாதிக்கும் பிரச்னை ஒன்றுண்டு:
— அது திருவசனப் பஞ்சம்.
(ஆமோஸ் 8:11,12) ... *அப்பத்துக்கும் தண்ணீருக்கும் அல்ல*
அதாவது, பொருளாதாரச் செழிப்பு, ஆனால் ஆன்மீகத் தரித்திரம்.
மக்கள் *அங்குமிங்கும்* கூட்டங்களுக்கு *ஓடினாலும்* ...

திருச்சபையினர் எண்ணிக்கையில் வெகுவாய்ப் பெருகுகிறார்கள்;
ஆனால் கூடிக்கொண்டே போகும் ஆன்மீகத் தரித்திரமும்
பைபிள் அறிவின்மையுமே எனது கவலை.

உலகிலுள்ள பல்வேறு ஊழியங்களின் பெயர்களில் மிக
உன்னதமானது—
"Back to the Bible"
— Dr. தியோடர் H. எப் (1907-1985) நிறுவியது.

ஆம், ''திருமறைக்குத் திரும்புவதே'' அனைத்து ஆன்மீகக்
கேடுபாடுகளுக்கும் நிவாரணம்.

விவிலியம் **விஞ்சியது, மேன்மையானது, இன்றியமையாதது** என்று
நான் நம்புவதேன்? —

1. எழுப்புதல் (Revival)

விவிலியம்தான் உயிர்மீட்சிக்குத் திறவுகோல்.
— *''உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்''*
சங் 119:25,107,154 (மும்முறை)

— *வசனம் கேட்ட யாவர்மீதும் ஆவியானவர் இறங்கினார்*
அப் 10:44 ... கொர்நேலியுவின் குடும்பம்

— தேவன் அவனுடன் **பேசியபோது** எசேக்கியேலுக்குள் ஆவி புகுந்தது
எசேக் 2:2

— அருள்மாரி vs. பெருவெள்ளம்
தமது சீடர் மீது இயேசு பரிசுத்த ஆவியை ஊதினார் (யோ 20:22)
பிசாசு தனது வாயிலிருந்து வெள்ளத்தைக் கக்குகிறான்
(வெளி 12:15)

வெறும் அசைவு உயிர்மீட்சி ஆகாது;
அது மக்களைத் திருமறைக்குத் திருப்பவேண்டும் —

— யோசியா ராஜா (2 இரா 22:8/பஸ்கா ... 23:21,22)
— *நான் பேசும் வார்த்தைகள் ஆவி ... ஜீவன்* (யோ 6:63)
— சீக்கிரம் அணைந்துவிட்ட எழுப்புதல்கள்
— அந்நிய அக்கினியைக் கொண்டுவந்த எழுப்புதல்கள்

2. ***துதியும் ஆராதனையும்*** (Praise & Worship)

விவிலியம்தான் ஆராதனைக்கு அடித்தளம்.

— சங் 138:2 ... *தொழுதுகொள்ளுவேன் ... வார்த்தை ... நாமம்*
— கொலோ 3:16 ... *வசனம் ... பரிபூரணமாய் ... சங்கீதங்கள்*
தற்காலப் பாடல்கள் நெடுங்காலம் நிற்காததேன்?
சிறப்புப் பாடல்கள் என்கின்றனர்;
ஆனால் அதில் சிறப்பு ஒன்றுமில்லையே. சோகைதான்!
வசனச் செறிவு இல்லை.

— எஸ்றா, நெகேமியா கால எழுப்புதல் — (வசனம் → ஆராதனை)
நெகே 9:3

— திருவசனமே தொழுகைக்கு நடத்தும்.
எ.கா.) எம்மாவு சென்ற சீடரும் மற்ற சீடரும் (லூக் 24:27,45,51-53)
''வேத வாக்கியங்கள் ... தொழுது ... துதித்து''

— ஆராதனையில் தேவனது பல நாமங்கள்;
ஆனால் எல்லாவற்றிற்கும் மேலானது: *''தேவனுடைய வார்த்தை''*
(வெளி 19:13)

3. ***ஆவியின் வரங்கள்*** (Gifts of the Spirit)

விவிலியம்தான் வரங்களை அப்பியாசிக்க வழிகாட்டி.
1 கொரி 12:8 ... ஒன்பது வரங்களில் முதல் இரண்டு —
ஞானத்தைப் போதிக்கும் ''வசனம்''
அறிவை உணர்த்தும் ''வசனம்''

— மூன்று சோதனைகளில் இரண்டு வரங்களைப் பயன்படுத்த ...
(அப்பம் + கோபுரம்) ... ஆனால், *''எழுதியிருக்கிறதே''*

— தீர்க்கதரிசனம் உரைத்தல் — 1 பேது 4:10,11
''தேவனுடைய வாக்கியங்களின்படி''

— வரங்களின் துர்ப்பிரயோகம் திருவசனத்தால் திருத்தம்
1 கொரி 14:36,37

— தீர்க்கதரிசனம் சொல்லுதல் — பரபரப்பானது, பிரபலமானது.
ஆனால் அதின் மூன்று பயன்களில் முதலாவதும் இரண்டாவதும்:
1 கொரி 14:3
1. பக்திவிருத்தி
2. புத்தி
3. ஆறுதல் (தேறுதல்)
ஆனால் இன்று கவர்ச்சியானது 3ஆவதுதான்!

4. ***அற்புதங்கள்*** (Miracles)

விவிலியம்தான் அற்புதங்களின் இரகசியம்.

— அடையாளங்கள் *உறுதிப்படுத்துவது* வசனத்தை;
ஊழியனையோ ஊழியத்தையோ அல்ல (மாற் 16:20)

— *இயேசு* ***போதித்துக்****கொண்டிருக்கையில் ... தேவ வல்லமை*
லூக் 5:17 (அசாதாரண அற்புதம் — திமிர்வாதம், வச 18,26)

திரள்கள் அங்கு கூடியது ***வசனம்*** கேட்க (வச 1)
ஒரு பெரிய அற்புதம் — திரளான மீன்கள் —
''உமது வார்த்தையின்படியே'' (வச 5)

அப்படியே மரியாளும் — *''உமது வார்த்தையின்படியே''*
(லூக் 1:38)

— திருவசனம் பிரசங்கிக்கப்பட்டதால் பவுல் மூலம் *விசேஷித்த அற்புதங்கள்* (அப் 19:10-12)

— திருமறையில் முதல் அற்புதம்:
தமது வார்த்தையால் தேவன் வானம், பூமியைப் படைத்தார்.
இதுதான் விசுவாச அத்தியாயத்தில் முதல் வருவது! (எபி 11:3)

— திருமுழுக்கினன் யோவான்:
அவன் அற்புதம் செய்யவில்லை, அவனிடம் செய்தி இருந்தது.
அவன் மக்களைச் சுகமாக்கவில்லை, ஆனால் செத்துக்கிடந்த நாட்டையே எழுப்பினான் — (யோ 10:41,42)

5. பரிசுத்தமாகுதலும் பூரணமடைதலும் (Sanctification)

விவிலியம்தான் பரிசுத்தமடைவதற்கு வழி.
நம்மைச் சுத்திகரிப்பது இயேசுவின் இரத்தம்;
ஆனால் நெடுகவே பரிசுத்தமடைவது திருவசனத்தால்:

— யோ 17:17 ... *சத்தியம் ... வசனம் ... சுத்தமாக்கும்*
ஏற்கனவே இயேசு சொல்லியிருந்தது:
வசனத்தினால் சுத்தமாயிருக்கிறீர்கள் (யோ 15:3)

— *திருவசனம் கொண்டு தண்ணீர் முழுக்கு*
திருச்சபையைச் சுத்திகரித்தல் ... எபே 5:25-27

— பைபிள்:
கண்ணாடி ... வெளிக்காட்டுகிறது (யாக் 1:23,24)
பட்டயம் ... கத்தி ... பிரிக்கிறது (எபி 4:12,13)

சோதனைகள் கொடூரமாயிருந்தாலும் —
சங் 119:9 ... *"வாலிபன்" தன் வழியை ...*
பின்மாற்றத்தைத் திருமறை தடுக்கிறது (சங் 19:10-13) *எச்சரிப்பு*

6. ஆன்மீக அனுபவங்கள் (Spiritual Experiences)

விவிலியம்தான் நமது அனுபவங்களுக்கு உரைகல்.

— ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அனுபவ அறிவில்லாது வெறும் பொருள் சார்ந்த அறிவோடிருந்தனர்.

இப்பொழுது அளவுக்கு மீறி அனுபவம் சார்ந்தவர்களாகிவிட்டனர் — அதாவது, அனுபவங்களிலிருந்தே உபதேசங்கள் தோன்றுகின்றன.

ஆனால் பேதுருவோ ... 2 பேது 1:16-21 ... *மறுரூப மலை*

— தரிசனங்கள், சொப்பனங்கள் (எரே 23:28,29) ... *பதர்*

— பைபிளுக்குக் கூடுதலானவை
1 கொரி 4:6 ... *எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாமல்*
(வேதாகம வரம்பு / Biblical Boundary)

— கிறிஸ்துவும் அப்போஸ்தலரும்:
"வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?"
(ரோ 4:3; கலா 4:30)

— பெந்தெகொஸ்தே நாளின் அனுபவங்கள்
*"இதுதான் தீர்க்கன் **உரைத்தது**"* (அப் 2:16)

அப்படியே கொர்நேலியு குடும்பத்தின் அனுபவம்:
அப் 15:13-15 ... யாக்கோபு மேற்கோள் காட்டினார் (ஆமோஸ்).
"இதற்குத் தீர்க்கருடைய வார்த்தைகள் ஒத்திருக்கின்றன ... எழுதியிருக்கிறபடி"

— திருவசனத்தால் உள்ளக் கிளர்ச்சி (லூக் 24:27,32)

7. உபதேசங்கள் (Doctrines)

விவிலியம்தான் உபதேசங்களுக்குப் பாடப் புத்தகம்.

— திருவசனத்திலிருந்துதான் திருச்சபை அதிகாரம் பெறுகிறது;
திருச்சபையிலிருந்து திருவசனம் அதிகாரம் பெறுவதில்லை.

— திருவசனமல்ல, பாரம்பரியங்களைச் சார்ந்த எத்தனையோ உபதேசங்கள் நமது சபைகளில் உண்டு:
இயேசுவின் காலத்திலும் அப்படியே —
மத் 15:3,6,9 ... *வீணாய் ஆராதனை ...*
நாளாவட்டத்தில் பாரம்பரியமே சத்தியத்தின் இடத்தை எடுத்துவிடுகிறது.

— திருவசனம் தெரியாததால் உபதேசக் குழப்பம்
எ.கா.) 7 சகோதரன், ஒரு பெண் ... (மத் 22:29)

— தேவனது வழிகளை மேம்படுத்தமுடியாது.

எ.கா.) உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டது —
வண்டி ... தோள்கள்
1 நாளா 13:7-11/15:12-15
அந்த வண்டியையே உடைத்து விறகாக்கி,
அந்தக் காளைகளைத் தாவீது பலியிட்டான்!

— *நான் சொன்ன இந்த வார்த்தைகள்... பாறை... மணல்* (மத் 7:24-27)

— *காலம் வரும் ... கட்டுக்கதைகள்*
எனவே, *திருவசனத்தைப் பிரசங்கியுங்கள்* (2 தீமோ 4:2-4)

■ ***இன்றைய நிலை***

— திடமான வேத போதனை அபூர்வம்.

— போதகராயிருக்கவேண்டிய மேய்ப்பர்கள் செய்வது
அ) நிர்வாகம்
ஆ) சுவிசேஷச் செய்திகள் மட்டுமே பிரசங்கித்தல்

— *உபதேசிக்கும் ஆசாரியன்* இல்லாத நிலை ...
2 நாளா 15:3
சுகமளிப்பு ஊழியங்களுக்கோ பஞ்சமில்லை (வச 4).
குறுகிய காலப் பலன்களிலேயே நாட்டம்!

■ *முடிவுரை*

தனி நபர்களே : திருமறைத் தியானத்தில் நேரம் செலவிடுங்கள்.
: ஆராய்ச்சி வேதங்கள், நூல்களைப் பயன்படுத்துங்கள்.

திருச்சபைகளே: திருமறையைப் போதிப்பதற்கு முதலிடம் கொடுங்கள்.
பரவசமல்ல, பக்திவிருத்திதான் முக்கியம்.
பைபிளை ‘‘எப்படிப்’’ படிக்கவேண்டுமென்று
மக்களுக்குக் கற்றுக்கொடுங்கள்.

1 பேது 1:24,25 ... *புல் ... பூ ... வசனம் ...*
சூழமைவு: மறுபிறப்பு (வச 23) / வளர்ச்சி (2:2)

11

திருமறைப் போதனையைப் பெறவேண்டிய பாணி

How to receive Bible Teaching

■ பாடம்: நெகேமியா 8

எஸ்றா: ஆலயத்தைத் திரும்பக் கட்டினான்.
நெகேமியா: மதிலைத் திரும்பக் கட்டினான்.

நாம் ஆதிநிலையேகும் காலக்கட்டத்தில் இருக்கிறோம்.
இதற்கான பாடப்புத்தகம் பரிசுத்த வேதாகமமே: அப் 15:15

திருமறை போதிக்கப்படும்போது அதனைப் பெற்றுக் கொள்ளவேண்டிய விதம்:

நெகேமியா 8இலிருந்து படிப்பினைகள் —

1. ***ஒருமன ஆவி*** (Oneness in spirit)

‘‘ஒருமனப்பட்டுக் கூடி’’ (வச 1)

- அப்பொழுதுதான் போதிக்கிறவர் சரளமாய்ப் பேசமுடியும்.
(சங் 133:1-3) ... *பனிபோல் இறங்கும்*

— திருவசனத்தைக் கேட்கும்போது, நமது கலாச்சாரம் மற்றும் மொழி வேறுபாடுகள், சபைப் பிரிவினைகள் போன்றவற்றை மறந்துவிடவேண்டும்.

2. ***கவனமாய்க் கேட்டல்*** (Attentiveness)

‘‘கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்’’ (வச 3)

ஏனோதானோ என்றிருக்கக்கூடாது.
‘‘எனக்கு-எல்லாம்-தெரியும்’’ என்ற மனப்பான்மை கூடாது.
ஏனோதானோ என்று நீங்கள் இருந்தால் கூட்டத்தில் இருக்கும் சராசரியானவர்களை அது பாதிக்கும்.

தாகமாயிருங்கள்!
‘‘காலை முதல் மதியம் வரை’’ (5 அல்லது 6 மணி நேரம்!)
எ.கா.) கொர்நேலியு: அப் 10:33,34 ... *தேவனுக்குமுன் ...*
இறைவாக்கு: ஏசா 44:3அ ... *தாகமுள்ளவன்மேல் ...*
அப்பொழுதுதான் நமது **வறட்சி** நீங்கும்.

3. *பயபக்தி* (Reverence)

''எல்லாரும் எழுந்து நின்றார்கள்'' (வச 5)

தமது வசனத்துக்கு நடுங்குகிறவர்களையே கர்த்தர் நோக்குகிறார்: ஏசா 66:1,2

— அதிகாரிகளோடு தொலைபேசியில்கூட சேவகர் எழுந்து நின்று பேசுவர்.

— கூப்பிய கரங்களோடு அல்லது முந்தானையை விரித்து நற்செய்திப் பிரசுரங்களைச் சில கிராமத்தினர் வாங்குவர்.

- கர்ஜிக்கும் யூதா கோத்திரச் சிங்கம் (ஆமோஸ் 3:8)

4. *தொழுகையின் ஆவி* (Worshipfulness)

''கைகளை உயர்த்தி ... குனிந்து ... ஆராதித்து'' (வச 6)
சங் 138:2 ... *பணிந்து ... துதித்து ... வார்த்தை*
33:1-4அ ... *துதி ... கீர்த்தனம் ... வார்த்தை*

''வாயில் துதி'' ... ''கையில் வசனம்'' (சங் 149:8)

திருவசனச் சத்தியங்களைக் கேட்கும்போது உங்கள் உதடுகள் துதியை முணுமுணுத்துக் கொண்டிருக்கட்டும்.

தனித்தியானத்தின்போது அமைதியாய் நவநாவுகளில் பேசிக்கொண்டுமிருக்கலாம்.

அப்பொழுது நீங்கள் இருக்குமிடத்தில் இறைப்பிரசன்னத்தின் **நறுமணமும்** உங்கள் மனதில் ஆவியானவர் தரும் **புத்துணர்வும்** நிறைந்திருக்கும்.

தேவனது வார்த்தை வார்த்தையின் தேவனை வெளிப்படுத்தவே!

5. *புரிந்துகொள்ளுதல்* (Understanding)

''தெளிவாய் வாசித்து ... அர்த்தம் சொல்லி ... விளங்கப்பண்ணினார்கள்'' (வச 7,8)

- ☐ பிரசங்கிமாரும் போதகர்களும் விளக்குகிறார்கள்.
- ☐ பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார்.
- ☐ **நாம்** விளங்கிக்கொள்ள முயலவேண்டும் —

மத் 24:15ஆ ... *வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்*
அப் 17:11 ... பெரோயா விசுவாசிகளின் தொடர்ந்த முயற்சி

விதைக்கிறவன் உவமை:

— வழியருகே ... *''உணராதிருக்கிறான்''* (மத் 13:19)
— நல்ல நிலம் ... *''உணருகிறவன்''* (வச 23)

2 தீமோ 3:7 ... *''எப்பொழுது கற்றாலும் ஒருபோதும் உணராத ...''*

தேவனது உதவி நாடுங்கள் (சங் 119:18,19)...*கண்களைத் திறந்தருளும்*

6. *நொறுங்கியிருத்தல்* (Brokenness)

''ஜனங்களெல்லாரும் அழுதார்கள்'' (வச 9)

எவ்வளவாய்த் தாங்கள் தேவனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிவிட்டோமென உணர்ந்திருப்பார்கள்.

மக்களது அழுகையைத் தலைவர்கள் நிறுத்தவேண்டியதாயிற்று; இன்றோ அவர்கள் சிரிப்பதை நிறுத்தவேண்டியதாயுள்ளது!

நமது **மாய்மாலத்தை** திருவசனம் வெளிப்படுத்தும் (எபி 4:12,13)
நம்மைத் திருவசனம் **பரிசுத்தமாக்கும்** (யோ 17:17)

திருவசனமே திருச்சித்தம்; அது ஊனியல்பின் வழிகளுக்கும், உலகப் போக்கிற்கும், பிசாசுக்கும் எதிரானது. திருச்சித்தம் விட்டு நாம் விலகும்போது திருவசனம் நம்மை உணர்த்தும்.

7. *மகிழ்ச்சி* (Joyfulness)

''போங்கள் ... புசியுங்கள் ... குடியுங்கள்'' (வச 10அ)

வசனத்தைச் சரியாய்த் தியானிப்பது இதயத்தை மகிழ்விக்கும் —
சங் 19:8அ ... *நியாயங்கள் ... சந்தோஷம் ...*
119:14 ... *செல்வத்தில் களிகூருவதுபோல ...*

செய்தித்தாள்கள் நமக்குச் சோகம் உண்டாக்குகின்றன;
நம்பிக்கை இழக்கச் செய்கின்றன;
வேதமோ *''மகிமையான, நம்பிக்கையால்''* நம்மை நிரப்புகிறது
தீத்து 2:13

பில்லி கிரகாம்: ''நான் ஒரு சாதகவாதி; ஏனெனில், திருமறையின்
(1918-) இறுதிப் புத்தகத்தை வாசித்துவிட்டேன்!''

ஏதோவொன்று உங்களுக்குப் புதிதாகப் புரிந்துவிட்டால்
குதிக்கவோ அல்லேலூயா போடவோ தயங்காதீர்!

சாப்பாடு மிக ருசியாக இருந்தால் நான் **சத்தமாகச்** சவைப்பேன்!
ஒரிசாவில் ருசியான ஆகாரம் பரிமாறப்பட்டிருக்கும்;
அதை முன்னால் வைத்துக்கொண்டு எவ்வளவு நீண்ட ஜெபம் செய்வார்கள்! நான் பொறுமையிழப்பேன்!

''கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பலம்'' (வச 10ஆ)

8. பிறரோடு பகிர்ந்துகொள்ளுதல் (Sharing)

''ஒன்றுமில்லாதோர்க்குப் பங்குகளை அனுப்புங்கள்'' (வச 10,12)

திருவுபதேசங்களை நிறைய கேட்கும் சிலாக்கியமானது நமது பொறுப்பையும் கூட்டும். தானியத்தைக் கட்டி வைக்கக்கூடாது, அதை விற்கவேண்டும் —

நீதி 11:24-26

நாம் பகிர வேண்டிய மூன்று குழுவினர் —

அ) விசுவாசிகள்
ஆ) பெயர்க் கிறிஸ்தவர்கள்
இ) கிறிஸ்தவரல்லாதோர் (சந்திக்கப்படாதோர்)

''*கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்!*''

வசனத்தைக் கேட்கும்போது பாதி புரியும்;
அதைப் பகிரும்போது மீதி பாதி புரியும்!

9. ஆதிநிலையேகுதல் (Restoration)

நீங்கள் கற்கும் காரியங்களைத் திருச்சபையின் உயிர்மீட்சிக்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் பயன்படுத்துங்கள்;
நீங்கள் எந்தச் சபைப் பிரிவினராயிருந்தாலும்!
(நீங்கள் ஒரு தலைவர்!) ...*''தலைவர் ... ஆசாரியர்''*
(வச 13-17)

கூடாரப்பண்டிகை எவ்வளவு குதூகலமாய்க் கொண்டாடப்பட்டது!
(லேவி 23:39-43)

இருக்கும் நிலை போதும் என்றிராதீர்கள்!
''பூர்வ பாதைகளுக்கு'' மக்களை அழையுங்கள்!

அது **கடினமான** பணிதான் — *''மலைக்குச் சென்று ...''* (வச 15)
நீங்கள் பிரபலமாகாது போகலாம்.

10. தொடர்ந்து செய்தல் (Continuation)

''தினந்தோறும் முதல் நாள் முதல் கடைசி நாள் வரை'' (வச 18)

நீங்கள் கற்றுக்கொள்ளும் யாவற்றையும் உங்களது அடுத்த வேத ஆராய்ச்சிக்கு முகவுரையாய்க் கொள்ளுங்கள்.

1908 முதல் சீனாவிலும் பிற பகுதிகளிலும் எழுப்புதலில் பக்தன் யோனத்தான் கோபோர்த் (1859-1936) வெகுவாய்ப் பயன்படுத்தப்பட்டார். 19 வருடத்தில் சீன மொழிப் புதிய ஏற்பாட்டை 55 முறை வாசித்தாராம்!

அவ்வப்போது வரும் எழுச்சியல்ல, திருவசனத்தில் தினமும் திளைத்திருப்பதே தொடர்ந்து, நின்று போகாது, கனிகொடுக்க வழிவகுக்கும் (சங் 1).

12

திருமறைத் தியானத்தில் நிறைவான பயன்

Maximum Benefit from Bible Meditation

முகவுரை

- *உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்* (சங் 119:25,107,154)

வேதத் தியானத்திற்கு முன்னுரிமை:

— சங் 138:2ஆ ... *''தேவன் வார்த்தையை மகிமைப்படுத்தியிருக்கிறார்''*
— யோ 1:1 ... *''ஆதியிலே வார்த்தை இருந்தது ...''*
— மாற் 13:31 ... *''வானமும் பூமியும் ஒழியும், ஆனால் ...''*
— மரியாள் vs. மார்த்தாள் (தேவை vs. முக்கியம்)

வேதத் தியானத்தில் மக்கள் போதுமான நேரம் செலவிட விருப்பமின்மைக்குக் காரணம்:

வேதத்திலிருந்து நிறைவான பயனைப் பெற்றுக்கொள்வது எப்படி எனக் கற்றுக்கொள்ளாததே.

''என்ன'' கேட்கிறோம்/வாசிக்கிறோம் என்பதைவிட
''எப்படிக்'' கேட்கிறோம்/வாசிக்கிறோம் என்பதே முக்கியம் —
லூக் 8:18

திருவசனத்திலிருந்து நிறைவான பயன் பெறுவது எப்படி?

1. தனிப்பட்ட செய்தியாக எடுத்துக்கொள்ளுங்கள் (Receive)

— மத் 26:21,22 ... *''ஆண்டவரே, நானோ?''*

— வெளி 2 & 3 (2:11,17,29; 3:6,13,22)
*''**காதுள்ளவன்*** (ஒருமை) ... ***சபைகள்*** (பன்மை)*''*

— ஓசி 8:12 ... *''அவனுக்கு ... **அந்நிய** காரியமாய்''*

— எ.கா.) முழு வேதத்தையும் இயேசு தமக்கென்றே எடுத்துக்கொண்டார்.
எபி 10:5-7 ... *''என்னைப்பற்றி எழுதியிருக்கிறது''*
எதற்கு? *''உம் சித்தம் செய்ய''*

திருவசனமே நமது வாழ்க்கைக்குத் திருச்சித்தம்!

தியானிக்கும் பகுதியைக் குறித்து இக்கேள்விகள் கேளுங்கள் —
இப்பகுதி என்ன சொல்லுகிறது —
அ) என்னைக் குறித்து?
ஆ) பிறரோடுள்ள எனது உறவைக் குறித்து?
இ) உலகத்திற்கு எனது பொறுப்பைக் குறித்து?

— *''சாந்தமாய்'' ஏற்றுக்கொள்ளுங்கள்* (யாக் 1:21)
... **அர்ப்பணிப்பின்** சிந்தை
... **நொறுங்கிய** ஆவி (ஏசா 66:1,2)

— தேவனே பேசிய வார்த்தை என்று ஏற்றுக்கொள்ளுங்கள்.
தேவையான *''விசுவாசம்''* (எபி 4:2)

— நமது மனப்பான்மை முக்கியம் ...
எ.கா.) கப்பர்நகூம் vs. நாசரேத் (மாற் 6:5,6)

— நீங்கள் ஒரு பிரசங்கம் ஆயத்தம்பண்ணினாலும், முதலாவது பயன்பெறவேண்டியது நீங்கள்தான் (2 தீமோ 2:6)

2. திரும்பத் திரும்ப வசனத்தை அசைபோடுங்கள் (Ruminate)

ஆடுமாடுகள் அசைபோடுவது போல.
அதாவது, இருதயத்தில் வசனத்தை வைத்துக்கொண்டு திரும்பத் திரும்பத் தியானிப்பது.

— *வார்த்தையை மரியாள் இருதயத்தில் ''வைத்துக்கொண்டாள்''*
லூக் 2:19 ... மேய்ப்பரும் மக்களும் சொன்னதை ...
:50,51 ... இளைஞன் இயேசு சொன்னதை ...

— வாசிப்பது 30 நிமிடம் அல்லது 1 மணி நேரம்தான் என்றிருக்கலாம்; ஆனால் தியானமோ *''இரவும் பகலும்''* (சங் 1:2)
வெறுமனே வேதப் பிரியம் போதாது;
வேதத் தியானம் வேண்டும்.

— தியானிக்கத் தவறும்போது விதைகள் போய்விடும்.
மத் 13:4,19 ... *கேட்டு, உணராமல் ... பறவைகள்*

— சங்கீதக்காரனின் அனுபவம் —
சங் 119:97 ... *நேசிக்கிறேன் ... நாள் முழுதும் தியானம்*
நினைவுபடுத்த சிறு அட்டைகளில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

— தரிசனத்தைக் குறித்துப் பேதுரு *''சிந்தித்துக்கொண்டிருந்தார்''*

அப் 10:19... *பேதுரு ...* *ஆவியானவர் ... மூன்றுபேர்*

(உள்ளே) (மேலிருந்து) (வெளியேயிருந்து)

— திருவசனத் தியானமானது தேவ சத்தத்தின் எதிரொலி போன்றது...

சங் 62:11 ... *ஒரு தரம் பேசினார் ... இரு தரம் கேட்டேன் ...*

— இங்குதான் மனனம் செய்வது உதவுகிறது:

தியானிப்பதால் மனனம் செய்வது சுலபமாகிறது.

மனனம் செய்வதால் தியானிப்பது மேம்படுகிறது.

(Meditation → Memorisation → Meditation)

— திருவசனத் தியானம் ***எல்லையற்றது***

சங் 119:96 ... *''மகா விஸ்தாரம்''*

3. *ஆராய்ச்சி நூல்களைப் படியுங்கள்* (Refer)

— ப.ஏ. vs. பு.ஏ. ... தேவன் நம்மோடு பேசும் இரு உதடுகள்.

புதியது பழையதில் மறைந்துள்ளது;

பழையது புதியதில் மலர்ந்துள்ளது.

மத் 13:52 ... *''பொக்கிஷம் ... புதியதும் பழையதும்''*

ஏசா 34:16 ... *''ஜோடுகள்''* ... *''தேடி வாசியுங்கள்''*

ஒத்துவாக்கிய வேதாகமங்கள் (Reference Bibles)

வேதமே வேதத்திற்குச் சிறந்த வியாக்கியானம்.

வசனத்தை வசனம் விளக்கும்.

— ஒரு பிரசங்கத்தைக் கேட்ட பின்னர் தொடர்ந்து ஆராயுங்கள்.

அப் 17:10-12 ... பிரசங்கியார் பவுலாயிருந்தாலும்!

இதுவே அறிவு சார்ந்த படிப்பு தரும்.

இல்லங்களில் வேத ஆராய்ச்சிக் குழுக்கள்.

— வேதத்தை ஓராண்டில் அல்லது ஈராண்டில் வாசித்து முடியுங்கள்.

— தேவையற்ற/முக்கியமற்ற எதுவும் பைபிளில் கிடையாது.

''வேதவாக்கியங்கள் எல்லாம்... பயனுள்ளவை''

நால்வகைப் பயன். (2 தீமோ 3:16,17)

ஆராய்ச்சி வேதங்களைப் பயன்படுத்துங்கள் —

NKJV Study Bible	*நிறைவாழ்வு வேதாகமம்*
NIV Study Bible	*வாழ்வியல் விளக்க வேதாகமம்*
ESV Study Bible	*ஆய்வுரை வேதாகமம்*
Life Application Study Bible	*சொல்லோவிய வேதாகமம்*

ஏன்?

பவுல் → தீமோத்தேயு → உண்மையுள்ள மனிதர் → பிறருக்கு

(2 தீமோ 2:2)

எல்லாருக்கும் பவுலைப்போல வெளிப்பாடு நேரே வராது.

தேவனானவர் *''போதகர்களைத்''* தந்துள்ளார் ... *பக்திவிருத்தி*

(எபே 4:11-13)

முழு வேதத்தையும் குறித்த பொதுவான அறிவு பெற —

"Unlocking the Bible" by David Pawson

"Wilmington's Guide to the Bible"

நாம் இவ்விதம் **ஆராய்ந்து** படிக்காவிடில்,
வசனத்தைச் சரியாக, நிதானித்து அர்த்தப்படுத்த முடியாது —
2 தீமோ 2:15 ... *பகுத்துப் போதித்தல்*

4. *திருமறைக்கேற்ப வாழ்க்கையை மாற்றுங்கள்* (Reform)

— நாம் வேதத்தை வாசிக்கும்போது

வேதம் நம்மை வாசிக்கிறது!

- அது ஒரு கண்ணாடி: யாக் 1:23
  சுய வஞ்சகம் (வச 22-24)
  நிறைவான விடுதலை (வச 25)
- அது ஓர் அறுவை சிகிச்சைக் கத்தி: எபி 4:12,13
  கீழ்ப்படியாமையைத் தண்டிக்கிறது (வச 11)

— கீழ்ப்படிய வேண்டிய குறிப்பான பகுதிகளைக் கண்டுபிடியுங்கள்:

எ.கா.) திருமுழுக்கினன் யோவான் (லூக் 3:10-14)

— அதின் எச்சரிப்புக்களை அசட்டை செய்யாதீர் (சங் 19:11)

நீங்கள் கவலையீனமாயிருந்தால், படிப்படியான சரிவு:

''பிழைகள்'' (வச 12)

''மறைவான குற்றங்கள்'' (வச 12)

''துணிகரமான பாவங்கள்'' (வச 13)

''பெரும் பாதகம்'' (வச 13)

— வேதத்திலிருந்து பாவம் உங்களை விலக்கும்;
பாவத்திலிருந்து வேதம் உங்களை விலக்கிக் காக்கும்.
(சங் 119:9,11; 1 பேது 2:1,2)

— திருமறையானது *''கிருபையுள்ள **வார்த்தை**''*
அப் 20:32
காலைதோறும் புதியது ... புல 3:23
அதை வீணாய்ப் பெறக்கூடாது ... 2 கொரி 6:1,2

— திருவசனத்தால் **கழுவப்படும்** அனுபவம் பெறுங்கள்
யோ 17:17 ... *உமது வசனத்தால் பரிசுத்தமாக்கும்*
குற்றவுணர்வு (Condemnation) அல்ல,
பாவ உணர்வு (Conviction)
எ.கா.) சீமோன் பேதுரு vs. யூதாஸ்காரியோத்து

— கீழ்ப்படிதலை ஒத்திப்போடாதீர்.
ஒவ்வொரு கீழ்ப்படிதலுக்கும் புதிய வெளிப்பாடு கிடைக்கும்:
உள்ளவனுக்கு இன்னும் கொடுக்கப்படும் (மாற் 4:24,25)

5. *கனிகொடுக்கத் தடுப்பவற்றை அகற்றுங்கள்* (Remove)

— திருவசனமே விதை.
நமது இதயமே நிலம்.
கற்களும் முட்களும் அகற்றப்படவேண்டும்.

''கற்கள், முட்கள்'' எவற்றைக் குறிக்கின்றன?

அ) கெட்ட தோழமை ... சங் 1:1,2 — உபதேசம்
எரே 15:16,17அ — சாட்சி

அதாவது, உலக வழிகள் ... பகட்டு, கவர்ச்சி (1 பேது 1:24,25)

ஆ) பண ஆசை/ஓங்கி நிற்கும் பொருளாதாரச் சிந்தை
(மத் 13:22) ... *செல்வம் ... வசனத்தை நெருக்கி ...*

உலக ஆசிகளில் உத்தம உக்கிராணத்துவம் இல்லையேல்
தெய்வீக வெளிப்பாடுகள் வராது (லூக் 16:11) — ஒரு சவால்

தங்கத்தை விரும்புவதைவிடத் திருவசனத்தை விரும்புகிறோமா?
(சங் 119:72) ... *1000 கிலோ தங்கம்*
அல்லது, இது வெறும் ஏட்டுச் சுரக்காயா?

இ) சகவுறவுகளில் தகராறு
1 பேது 2:1-3 ... *கர்த்தரைப்போல தயை* ...

சுருங்கக்கூறின், திருமறையின்மீது பசி தாகத்தைக் குறைக்கும் எதையும் தூக்கியெறியுங்கள்.

6. *தியானித்ததைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுங்கள்* (Relate)

— வெளியே வழிந்துசெல்லும் அளவுக்கு உள்ளே ஓடிவரும்.
தேக்கம் இருக்கக்கூடாது.
கொலோ 3:16 ... *''பாடுவதற்கு''* முன்னர் *''போதித்து ...''*
கொடுங்கள், கொடுக்கப்படும்.
படிக்கும்போது ஒரு பாதியும் பகிரும்போது அடுத்த பாதியும் எனக்குப் புரிகிறது.

— பகிர்வது நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, கட்டாயம்.
அப் 20:20,26,27 ... *வீடுகள்தோறும் ...*
இது பிரசங்கிப்பதல்ல, பகிர்வது.

— தெசலோனிக்கேயா விசுவாசிகள் (1 தெச 1:8) ... *பிரசித்தமாயிற்று*

— பூரணமடையக் காத்திருக்காதீர் (சமாரியப் பெண்)
எ.கா.) ஒரு கூட்டத்தில் பங்கேற்றுத் திரும்பியவுடன்
நண்பர்களோடு குறிப்புகளைப் பகிருங்கள்.

எ.கா.) சொந்த சாட்சி —
காலைதோறும் நான் தியானித்ததை
எனது கல்லூரி ஜெபக் குழுவினரோடு
மாலைதோறும் பகிர்வேன் (1962-1968).

- பைபிளிலிருந்து நாம் கற்கும் ஒவ்வொரு சத்தியமும் ஒரு தாலந்து
5 தாலந்து, 2 தாலந்து ... *''உத்தம ஊழியர்''* (மத் 25:20-23)
1 கொரி 4:1,2 ... *''இரகசியங்களின் உக்கிராணக்காரர்''*

- எவ்வளவு கற்கிறோமோ அவ்வளவு பகிர வேண்டும்!
''எவனிடம் அதிகம் கொடுக்கப்படுகிறதோ ...'' (லூக் 12:48)

7. கற்றதைக் கொண்டு கர்த்தரை ஆராதியுங்கள் (Revere)

— திருவசனத்தில் கற்றதைக் கொண்டு உங்கள் தொழுகையை மேம்படுத்துங்கள்: *வார்த்தை* → *தொழுகை* (சங் 138:1,2)

''புத்தகத்தை வாசித்து ... கர்த்தரைத் தொழுதனர்'' (நெகே 9:3)
''கிறிஸ்துவின் வசனம் ... கீர்த்தனம்'' (கொலோ 3:16)

வேதத்தின் தேவனை அறியவே தேவனின் வேதம் படிக்கிறோம்.

— யூதத் தலைவர்களின் தவறுதல் (யோ 5:39,40).
முழங்காலில் நின்று வேதத்தைத் தியானிப்பது மேல்.

— *வேத வாக்கியங்களிலெல்லாம்* கிறிஸ்து (லூக் 24:27)

ஆதியாகமம்	—	பெண்ணின் வித்து
யாத்திராகமம்	—	பஸ்கா ஆட்டுக்குட்டி
லேவியராகமம்	—	பாவப் பரிகாரப் பலி
எண்ணாகமம்	—	அடிக்கப்பட்ட கன்மலை
உபாகமம்	—	தீர்க்கதரிசியானவர்
யோசுவா	—	இரட்சிப்பின் அதிபதி
யோபு	—	எனது மீட்பர்
நீதிமொழிகள்	—	எனது ஞானம்
தீர்க்கதரிசனங்கள்	—	சமாதானப் பிரபு
மத்தேயு	—	யூதருக்கு இராஜா
மாற்கு	—	யேகோவாவின் பணியாளர்
லூக்கா	—	மனுமகன்
யோவான்	—	இறைமகன்
அப்போஸ்தலர்	—	அறுவடையின் ஆண்டவர்
நிருபங்கள்	—	திருச்சபையின் ஆண்டவர்
வெளிப்படுத்துதல்	—	நாடுகளின் ஆண்டவர்

திருமறையின் மையக்கருத்து கிறிஸ்துவே!
The Bible is Christocentric!

■ முடிவுரை

திருமறைத் தியானத்தில் இந்த முறைகளைப் பின்பற்றினால்,
தேவன் விரும்பியவற்றை அது நமது வாழ்வில் நிறைவேற்றும் —
(ஏசா 55:10,11) ... *வெறுமையாய்த் திரும்பாது*

13

இணையற்ற கிறிஸ்தவம்

Christian Superlatives

முகவுரை

- விசுவாசிகளின் எண்ணிக்கை விரைவாய்ப் பெருகி வந்தாலும், அவர்களில் பெரும்பாலானோர் ஆன்மீக வாழ்வில் ''சராசரிக்குக் கீழாக,'' அல்லது ''சராசரி'' அளவில்தான் இருக்கின்றனர் —

  தேவனது சித்தமோ நாம் உயர, உயரச் செல்லவேண்டுமென்பதே —
  பிலி 3:12-16
  ''முன்னோக்கி ... மேல்நோக்கி''
  வச 12 — கிறிஸ்து செய்ததும் நான் செய்யவேண்டியதும்
  வச 15 — *''தேவன் வெளிப்படுத்துவார்''*
  அதாவது, நமக்கிருக்க வேண்டிய உள்ளான நிச்சயம்.

- சராசரி அளவிலேயே மக்கள் நின்றுபோவதற்குக் காரணம் ''கிறிஸ்தவ வாழ்வின் இணையற்ற காரியங்களை அறியாதிருப்பதே.''

ஆன்மீக வாழ்வில் இணையற்றவை என்று பல காரியங்களைத் திருமறை குறிப்பிடுகிறது. அவற்றில் ஏழினைக் கவனிப்போம் —

1. ஒருவரும் சேரக்கூடாத ஒளி (Unapproachable Light)

1 தீமோ 6:16
ஒருவரும் தேவனைப் பார்க்க முடியாது!
கிறிஸ்துவோ அவரை நமக்குள் கொண்டுவந்துவிட்டார்
(யோ 1:18)

நாம் அவரை நெருங்க முடியாது;
அவரோ *''நம்மோடு வாசம்பண்ணுகிறார்''* (வச 14)
இம்மானுவேல் = தேவன் நம்மோடிருக்கிறார்

''நம்மோடு'' மட்டுமல்ல, ''நமக்குள்ளும்'' இருக்கிறார் —
கொலோ 1:27 ... *''மகிமையின் நம்பிக்கையாய்க் கிறிஸ்து நமக்குள்''*

இது ஒரு புதிர்; ஆனால் ஓர் அற்புதம்!
கிறிஸ்து மட்டுமல்ல, பிதாவானவரும் நமக்குள் (யோ 14:23)

இது பரிசுத்த ஆவியானவர் மூலம் சாத்தியமாகிறது (2 கொரி 5:5-7)

தேவப் பிரசன்னம் எனும் உண்மை vs. நமது உணர்வுகள்.
மோசே: *''வேறே பெரிய இனம் ஏது?''* (உபா 4:7)

- *சேரக்கூடாத ''ஒளி''* மட்டுமல்ல,
  எட்டாத *''உயரமும்!''* —
  ஏசா 57:15 ... *உன்னதம் ... பணிந்த ஆவி ...*
  உயிர்ப்பிக்க ... வாசம்பண்ணுகிறேன்

கட்டிடங்கள் அல்ல, உடல்கள் —
ஏசா 66:1,2 ... *என் வசனத்துக்கு நடுங்குகிறவன் ...*
உங்கள் ''உடலே'' பரிசுத்த ஆவியின் ஆலயம் (1 கொரி 6:19)

2. *விவரிக்கமுடியாத ஈவு* (Indescribable Gift)

2 கொரி 9:15

ஆன்மீக வரங்களில் இன்று புதிய உற்சாகம்.
ஆனால் கிறிஸ்துவே வரங்களிலெல்லாம் வரம்!
ரோ 8:32 ... *சொந்தக் குமாரனையே தந்துவிட்டவர் ...*

நீங்கள் கிறிஸ்துவை உடையவராயிருக்கையில்,
உங்களுக்கு எல்லாம் இருக்கிறது

எபே 1:3 ... *கிறிஸ்துவோடு ஆவிக்குரிய அனைத்து ஆசிகள்*
யோ 17:10 ... *எனது யாவும் ... உமது ... அவர்களில் ...*

சில சமயங்களில் நாம் அந்த மூத்த மகனைப்போல் புலம்புகிறோம் —
''ஓர் ஆட்டுக்குட்டியையாவது ...''
ஆனால், லூக் 15:29,31 ... *''மகனே, எனது **அனைத்தும்** உனக்கே!''*

மாபெரும் இந்த ஈவினால் நமக்கு இரு ஆசீர்வாதங்கள் —

அ) பாவ மன்னிப்பு
அப் 13:38,39 ...மோசேயின் பிரமாணம் செய்யமுடியாதது ...
முழுமையாய் நீதிமானாக்கப்படுதல்

புதிய உடன்படிக்கை: எரே 31:34இ/50:20
எபி 10:15-18

மன்னிப்பேன்; **அத்துடன்** இனி நினைக்கமாட்டேன்!
அவ்விதமே, மன்னிப்பார்; **அத்துடன்** சுத்திகரிப்பார் (1 யோ 1:9)

எனவே, தைரியம் (எபி 4:16; 10:19,20) ... *கிருபாசனம் ...*

ஆ) நித்திய ஜீவன்
ரோ 6:22,23
அது ஓர் *''ஈவு''* — அதை நமது தகுதியினால் பெற்றுவிட்டோம்
என்று கனவிலும் நினைக்கக்கூடாது.

''கிருபையினாலே ... உங்களால் உண்டானதல்ல''
எபே 2:7-9 ... *கிருபையின் மகா பெரிய ஐசுவரியம் ...*
கிருபையினாலே ...

இந்த நித்திய ஜீவன் ஒரு ''வெளிப்பாடு'' ஆகும் —
யோ 17:2,3 ... *உம்மையும் இயேசுவையும் அறிவது ...*
இந்த வெளிப்பாடு நமது ஆராய்ச்சினால் அல்ல,
கிறிஸ்துவே தருவது —
மத் 11:25-27 ... *ஞானிகள் ... பாலகர் ...*

இந்த ''இரட்சிப்பைத்தான்'' தீர்க்கர்கள் நெடுங்காலமாய் ஆராய்ந்து வந்தனர் (1 பேது 1:10,11); தூதர்களுக்கு இதை உற்றுப் பார்க்க ஆசை (வச 12).

3. *புரிந்துகொள்ளமுடியாத சமாதானம்* (Incomprehensible Peace)

பிலி 4:6,7 ... *எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம்*

''கிருபையோடு'' (நித்திய ஜீவனாகிய ஈவு) *''சமாதானம்''* —
எ.கா.) நிருபங்களில் துவக்க வாழ்த்துக்கள்
ரோ 1:7; 1 கொரி 1:3; கலா 1:3; ...

இச்சமாதானத்தை உலகம் புரிந்துகொள்ள முடியாது;
நம்மாலும் முடியாது!

- பிலிப்பி நகரிலுள்ள விசுவாசிகளுக்குக் குடியுரிமை இல்லாததால் அவர்களுக்குப் பல்வேறு இன்னல்களும் நிச்சயமின்மையும் இருந்தன. ஆனால் —
  ''சமாதானத்தின் தேவன்'' மூலம் *''தேவ சமாதானம்''* (பிலி 4:7,9)

இச்சமாதானம் விளக்கப்பட்டுள்ள ஒரு பகுதி —
சங் 94:17-19

அப்படியானால் போராட்டங்கள் இருக்காதா?

உலகைப் பொருத்தவரை, சமாதானம் என்றால் யுத்தமின்மை;
கிறிஸ்தவ வாழ்விலோ —

யோ 16:33 ... *உலகில் உங்களுக்கு உபத்திரவம் **உண்டு;***
... திடன்கொள்ளுங்கள் ... சமாதானம்

பாடுகளுக்கென்றே *''நியமிக்கப்பட்டிருக்கிறோம்''*

1 தெச 3:3,4 ... *உபத்திரவம் ... சோதனைக்காரன் ...*

இதைத்தான் சாதகப்படுத்த சோதனைக்காரன் முயலுகிறான் (வச 5)

எனவேதான், *''உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மீது வையுங்கள்*
... கர்ஜிக்கிற சிங்கம்'' (1 பேது 5:7-9)

- சமாதானத்தை ஜெபம் கொண்டுவராவிடில், ஜெபத்தில் குறை —

மேலெழுந்தவாறு கடமைக்கான ஜெபம்.
ஜெபம் என்பது தேவனோடு ''விவாதித்தல்'' அல்ல,
அவர்மீது ''விழுந்துவிடுதல்.''

ஏனோதானோ என்றல்ல, கருத்தாய் ஜெபிப்போம்.

ஜோசப் ஸ்கிரிவன் (1819-1886) என்பவர்,
தனக்கு நியமிக்கப்பட்டிருந்த இரு பெண்கள் இறந்ததையடுத்துத்
தனது தாய்க்கு எழுதியது —

சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்!
(*"What a Friend we have in Jesus"* என்ற பாடல்)

இப்பாடல் இயற்றப்பட்ட காரணத்தைப் பாருங்களேன்!

- தேவனோடு ஒட்டிக்கொள்வதாலேயே சமாதானம் (ஏசா 26:3)

''பூரண சமாதானம்''

4. *சொல்லி முடியாத களிப்பு* (Inexpressible Joy)

1 பேது 1:6-9 ... *சோதனைகள் ... விசுவாசம் ... சந்தோஷம்*

ஏனெனில், கிறிஸ்தவ வாழ்வு தரிசிப்பதால் அல்ல, விசுவாசிப்பதால்:
''விசுவாசத்தினாலுண்டாகும் சந்தோஷம்'' (ரோ 15:13)

- இதைத்தான் பவுல் அடிக்கடி வலியுறுத்தினார் —

*''**கர்த்தருக்குள்** சந்தோஷமாயிருங்கள்''* (பிலி 4:4)
மற்றவை யாவும் மாறும், மறையும்.

- தீர்க்கன் ஆபகூக்கின் அனுபவம் —

அவனது வாழ்வில் நிறைய கேள்விகள் —

ஆப 1:2,3,13,14 ... அவனது *பாரம்* (குழப்பம்) (வச 1)
ஏன்? ... ஏன்? ... ஏன்?

2:2 (தேவனது பதில்)
*''**விசுவாசத்தினால்** நீதிமான் பிழைப்பான்''* (வச 4)

3:1 (தீர்க்கனின் ஜெபமும் பாடலும்)
''உயிர்ப்பியும், ஓ கர்த்தாவே!'' (வச 2)
''அத்தி மரம் துளிர்விடாமல்'' (வச 17-19)
*''நான் **கர்த்தரில்** மகிழ்வேன்!''*

அவன் ''பாரத்தோடு'' துவங்கினான் (1:1);
''பாடலோடு'' முடித்தான் (3:19ஆ ← வாத்தியத்தில் வாசிக்க)

இவ்வித மகிழ்ச்சியை நீங்கள் இழக்கும்போது,
நீங்கள் திறமையாய் எதையும் செய்ய முடியாது

எனவேதான்,
''கர்த்தரில் மகிழ்வதே உங்கள் பலம்'' (நெகே 8:10)

- உலகம் கண்டுபிடித்துள்ள மாற்று:

''சிரிப்புச் சங்கங்கள்'' (Laughing Clubs)
''நகைப்பிலும் துக்கம் ... சஞ்சலம்'' (நீதி 14:13)

5. வாக்குக்கடங்காத பெருமூச்சு (Unutterable Groans)

ரோ 8:26-30 ... *ஆவியானவர்தாமே ...*

''பரிசுத்த ஆவியானவர்'' நமக்காக ஏறெடுக்கும் ஜெபங்களைவிட ''நமது'' ஜெபங்களைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

நாம் *''கேட்காததும்'' ''நினைக்காததும்''* நமக்குக் கிடைப்பதெப்படி?
நமக்குள் செயலாற்றுகிற ''வல்லமையினாலேயே'' — எபே 3:20
அதாவது, பரிசுத்த ஆவியானவர் மூலம்.

- ஜெபத்தில் நமக்கு இரு உதவியாளர்கள் —
  அ) பரிந்துபேசும் கிறிஸ்து (எபி 7:25) (அங்கிருந்து)
  ஆ) பலப்படுத்தும் ஆவியானவர் (ரோ 8:26) (இங்கிருந்து)

ஆவியானவரின் இந்த மன்றாட்டுப் பணியே நமக்கு நடப்பதையெல்லாம் ''நிர்ணயிக்கிறது'' —
ரோ 8:28 ... *சகலமும் நன்மைக்கென்றே ...*
நன்மையோ தீமையோ...எதிர்பார்ப்பதோ எதிர்பார்க்காததோ

*''எல்லாம் **நன்மைக்**கென்றே!''*
வச 29 — அதாவது, இயேசுவைப்போல் மாறவே!

''மகா மேன்மையான'' வாக்குத்தத்தங்கள் யாவும்
இந்த நோக்கத்திற்காகவே — 2 பேது 1:3,4
''கற்பனை செய்யமுடியாத'' திருவாக்குகள்!

6. எண்ணக்கூடாத மக்கள் (Innumerable People)

வெளி 7:9,10 —	*''நாடுகள்''*	— அரசியல், பூகோளம்
	''கோத்திரங்கள்''	— இனம்
	''மக்கள்''	— கலாச்சாரம்
	''மொழிகள்''	— மொழிவாரியாக

இங்குதான் அகிலவுலகச் சபையின் சித்திரம் உண்டு —

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் தேவன் மக்களை எழுப்பியுள்ளார்!

நமது குடும்பம் பெரிது! எபி 12:22-24

''பரலோகத்தில் பெயரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை!''

''சிறு மந்தைக்கு இராஜ்யம்'' கிடைத்துவிடுகிறது'' (லூக் 12:32)
வல்லரசு அல்ல (Super-Power), மாவல்லரசு (Supra-Power)!

குருத்தோலை ஞாயிறு vs. பரலோகக் கூட்டம் (வெளி 7:10)
ஓசன்னா! = எங்களை விடுவியும்! — அரசியல் சுதந்திரம்

- பரிசுத்தவான்களின் சகவாசமின்றி தேவ *அன்பின் நீளம், உயரம், அகலம், ஆழத்தைப்* புரியமுடியாது — எபே 3:17-19

பரஸ்பர ஊக்குவிப்பு, பக்திவிருத்தி, ஆலோசனை —
இதெல்லாம் இன்று மிகவும் குறைவு —
எனவேதான் பலவீனமாயிருக்கிறோம்.

''திருச்சபைக்கு'' எதிராகத்தான்
பாதாளம் தாக்குப்பிடிக்க முடியாது (மத் 16:18)

- கலாச்சாரங்களைத் தாண்டி உறவு கொள்ளுங்கள்.
  ஒரே ஊர், ஒரே மொழி என்றெல்லாம் கூடாதீர்கள்.
  பரலோக முன்ருசி!
- கிறிஸ்துவின் உடலின் இன்னொரு உறுப்பினருக்கு விரோதமாய் எதையும் செய்யாதிருங்கள்
  — அது நம்மை நாமே அழிப்பதாம் (கலா 5:15)
  — அது கிறுக்குத்தனம்
  (கிறுக்கன்தான் தன்னையே கீறிக்கொள்வான்!)
  ''தனது சொந்த மாம்சத்தைப்'' பகைப்பதா? (எபே 5:29)

7. சகிக்கமுடியாத நாள் (Intolerable Day)

மல் 3:2

அது எப்படியிருக்கும்? செப் 1:15
— யூதர்களின் பேரழிவைவிடக் (holocaust) கொடியது.
— சுனாமியைவிடப் பயங்கரமானது.
— 9/11 இரட்டைக் கோபுரங்கள் விழுந்ததைவிட நாசமானது.
''உயரமான கோபுரங்கள்'' (வச 16)

- நமது இரு பிரதிபலிப்புகள்:
  அ) *எவ்வளவு பரிசுத்தமாயிருக்கவேண்டும்!* (2 பேது 3:10-12)

எதிர்மறையான பயத்தினால் அல்ல,
சாதகமான நம்பிக்கையுடன் (வச 13).
புதிய வானம், புதிய பூமி

ஆ) *இவ்வளவு பெரிய இரட்சிப்பு குறித்து **நாம்** கவலையற்றிருந்தால் ...*
எபி 2:4

அதாவது, வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு குறித்து உலகை எச்சரிக்க அழைக்கப்பட்டுள்ளோம் —

ஆவியானவரின் அசைவாட்டத்தில் சேர்ந்துகொள்ளுங்கள்

— *பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு குறித்து*
உலகைக் கண்டித்துணர்த்த (யோ 16:8-10)

— பாவிகளைக் கூவியழைக்க (வெளி 22:17)
''ஆவியும் மணவாட்டியும் வா என்கின்றனர்!''

இவையிரண்டும் இணைவதைப் பாருங்கள் —

2 கொரி 5:10,11 ... *நியாயாசனம் ...*
மனிதருக்குப் புத்தி சொல்கிறோம்

1 பேது 4:17 ... *நியாயத்தீர்ப்பு ... தேவனுடைய வீடு*
சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதோர் ...

14

நிகரற்ற கிறிஸ்தவ வாழ்வு

The Unique Aspects of Christian life

முகவுரை

இயேசு: *''தேவையானது **ஒன்றே**!''* (லூக் 10:42)
பவுல்: *''**ஒன்று** செய்கிறேன்!''* (பிலி 3:13)
இவ்விதம் குறிக்கோள் தெளிவாயிருக்கவேண்டும்.

- கிறிஸ்து நிகரற்றவர்:

  உன்னதப்பாட்டு 5:8-16

  10 காரியங்கள்: *நிறம், தலை, கண்கள், கன்னங்கள், உதடுகள், கரங்கள், உடல், கால்கள், முகம், வாய் ... முற்றிலும் அழகுள்ளவர்!*

  இயேசு: ***நானே** வழி, **நானே** சத்தியம், **நானே** ஜீவன், **நானே** வாசல், **நானே** அப்பம், ...*

  ''சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் தேவனைப்போல் ஒருவருமில்லை'' (தானி 3:29)

- கிறிஸ்தவனும் ஒருவருக்கும் குறைந்தவனல்ல —
  தீர்க்கன் பிலேயாம்: *''அவர்களைப் போன்ற மக்கள் யாருமில்லை''* (எண் 23:9,10,23,24)

  யோசேப்பைக் குறித்துப் பார்வோன்: *''தேவாவி பெற்ற இந்த மனிதனைப் போல் வேறொருவன் உண்டோ?''* (ஆதி 41:38)

- கிறிஸ்தவ வாழ்வில் குறைந்தது 10 நிகரற்றவை உண்டு —

1. ***கேள்விகளிலெல்லாம் கேள்விக்கு*** (Question of Questions) நம்மிடம் பதில் உண்டு.

இந்த அதி முக்கியமான கேள்விக்குப் பதிலுண்டு —
''இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?''
அப் 16:31 ... *விசுவாசி ...*

இரட்சிப்பின் துவக்க அனுபவத்திற்கு மட்டுமல்ல, முடிவு வரை.

அதாவது, முதலிலிருந்து முடிவுவரை: *விசுவாசம்*

கிறிஸ்துவாகிய நபர் மீது **விசுவாசம்.**

மரணத்துக்கேதுவான (ஒரே) *பாவம்*

— அவிசுவாசம் (எ.கா. சிலை வணக்கம்)

பாவங்களிலெல்லாம் பாவம் (1 யோ 5:16,20,21)

2. ***வெளிப்பாடுகளிலெல்லாம் வெளிப்பாடு*** (Revelation of Revelations) நமக்கு உண்டு.

மத் 16:16-18 ... *கிறிஸ்து ... ஜீவனுள்ள தேவனின் குமாரன்*

வேறெந்த வெளிப்பாடும் இந்த மையமான வெளிப்பாட்டைத் தழுவியதே.

திருமறையின் பிரதான நோக்கம் —

யோ 20:31 ... *இயேசு தேவ குமாரனாகிய கிறிஸ்து*

எ.கா.) எம்மாவூர் சீடர் (லூக் 24:27)

இன்னும் அதிகமதிகமாய் **''அவரை''** அறிய!

வேட்கைகளிலெல்லாம் வேட்கை ... பிலி 3:8,10

இதற்காக மீதியெல்லாம் ''குப்பை'' என்ற கணிப்பு!

3. ***ஈவுகளிலெல்லாம் ஈவு*** (Gift of Gifts) நமக்குக் கிடைத்திருக்கிறது.

ரோ 8:32 ... ''அவர்'' நமதாகும்போது ''அவரது'' யாவும் நமக்கே!

மற்ற ஈவுகள் (வரங்கள்) யாவும் ''அவராலேயே'' (எபே 4:7,8)

எ.கா.) நகை vs. நகைப்பெட்டி

தொண்டியோடு துணை வரும்!

ஒவ்வொரு கிறிஸ்தவனும் வரம் (= கிறிஸ்து) பெற்றவனே!

வெறுமனே சுகம் அல்ல, சுகமளிப்பவர்!

வெறுமனே இரட்சிப்பு அல்ல, இரட்சகர்!

யோ 7:37-39 ... கிறிஸ்தற்ற பெந்தெகொஸ்தே எதற்கு?

4. ***சிலாக்கியங்களிலெல்லாம் சிலாக்கியம்*** (Privilege of Privileges) நமக்கு ஆசீர்வாதமாய்க் கிட்டியுள்ளது.

உபா 4:8 ... *எனது கட்டளைகள், நியாயங்கள்*

ரோ 3:1,2 ... *பிரதம மேன்மை: வேதம்*

எ.கா.) பேதுரு: *''யாரிடம் போவோம்? உம்மிடம் வசனங்கள் உண்டே''* (யோ 6:66-68)

சிலாக்கியத்தோடு வரும் பொறுப்பு!

விவிலியம் என்றால் என்ன?

— கடவுளது சொந்த வார்த்தை!

— அவை *''ஆவியாயும் ஜீவனாயும்''* இருக்கின்றன.

— திருத்தத் தேவையில்லை; திருத்த முடியாது.

— நித்தியமானது, ஆனால் பார்க்க முடிவது (மாற் 13:31).

5. ***கட்டளைகளிலெல்லாம் கட்டளைக்கு*** நாம் கீழ்ப்படிய முடியும். (Commandment of Commandments)

மதங்கள் பாரமானவை;

இயேசுவின் நுகமோ இலகுவானது (மத் 11:28-30)

அன்பு செலுத்தக் கட்டளை (மத் 22:35-40).

இக்கட்டளை மற்ற கட்டளைகளை எளிதாக்குகிறது!

எ.கா.) 10 கட்டளைகளில் முதல் 4, அடுத்த 6 (யாத் 20:1-17)

இது விடப்படுமானால் சட்டங்கள், திட்டங்கள் எனும் பிரமாணச் சடங்கில் சிக்கிக்கொள்வோம்.

அவரை நேசித்தாலோ, அவருக்குக் கீழ்ப்படிந்துவிடுவோம்;

அவரது கட்டளைகள் **பாரமாயிருக்காது** (1 யோ 5:3)

செய்யாதிருப்பாயாக ... செய்யாதிருப்பாயாக ... (யாத் 20)

ஒவ்வொன்றும் ஒரு சிறையாகிவிடும்!

6. ***போராட்டங்களிலெல்லாம் போராட்டத்தில்*** நாம் வெற்றி பெறலாம். (Struggle of Struggles)

ரோ 7:13-24

அதாவது, ஆவிக்கும் ஊனியல்பிற்கும் போராட்டம்.

இது ஒருபோதும் தீராது.

இங்கு தோல்வியென்றால் எங்கும் தோல்விதான்.

நீதி 25:28 ... *தனது ஆவியை அடக்காதவன் ...*
மதில் இடிந்த நகரம்
16:32 ... *தனது மனதை அடக்குபவன்*
நகரைக் கைப்பற்றுபவனைவிட வல்லவன்

சிலுவை மரணத்தோடு தினமும் நம்மை அடையாளப்படுத்தி,
உயிர்த்தெழுதலின் வல்லமையை உரிமை பாராட்டுவோம்
(ரோ 6:11-14)

வேறெந்த வழியிலும் வெற்றி கிட்டாது.
கிறிஸ்தவர்கள் மட்டுமே வெற்றி வீரர்கள் (ரோ 7:24,25).

7. ***வாக்குகளிலெல்லாம் வாக்கு*** (Promise of Promises)
நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கட்சியும் மதமும் தங்களுடையவர்களுக்கு வாக்குகளை வழங்குகிறது; ஆனால் திருமறையின் வாக்கு —

2 பேது 1:3,4 ... *திவ்விய சுபாவத்திற்குப் பங்கு*
1 யோ 3:1,2 ... *அவருக்கு ஒப்பாயிருப்போம்*

இதை எப்பொழுதும் உரிமைபாராட்டுங்கள்.
சகலமும் இதற்கென்றே நடக்கிறது (ரோ 8:28,29)

8. ***மகிழ்ச்சிகளிலெல்லாம் மகிழ்ச்சியை*** (Joy of Joys)
நாம் அனுபவிக்கலாம்.

ஏசா 56:7 ... தேவனோடு நேரம் செலவழிப்பது (சங் 27:4)
நீதி 8:30,31 ... சிருஷ்டிப்புக்குமுன் கிறிஸ்து

பிறயாவும் குறுகிய காலம் அனுபவித்தபின் நம்மை வறட்சியில் விடும்.

அளவுக்கு மீறிய தேன்கூட வாந்தி வரப்பண்ணும்;
திருப்பிரசன்னமோ அப்படியல்ல —
அவர் சமூகத்தில் நிரந்தரப் பேரானந்தம் சங் 16:11; 21:6

9. ***பணிகளிலெல்லாம் பணி*** (Task of Tasks)
நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

லூக் 4:43 ... *''மற்ற நகர்களிலும் நான் பிரசங்கிக்கவேண்டும் ... இதற்காகவே ...''*

அதாவது, நரலோகத்திற்குத் தப்பிப் பரலோகம்
செல்லுவதெப்படியென்று மக்களுக்குச் சொல்லுதல்.

''மாபெரும்'' ஆணை (பேராணை / Great Commission)
வெறும் கட்டளையல்ல.
நாம் ஆணையரின் அதிகாரிகள்!
(Commissioned Officers)

1 தீமோ 1:15 ... கிறிஸ்து வந்ததின் பிரதான நோக்கம்

''இயேசு'' — இதின் அர்த்தமே: *மக்களை இரட்சிப்பார்* (மத் 1:21)

சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டிய இப்பணி மற்றெதையும்விட
முக்கியமானது (அப் 1:7,8)

தேவனோடு *சக ஊழியராய்* இருப்பது என்னே பாக்கியம்!
(1 கொரி 3:9) ... கடவுளின் உடன் ஊழியர்!

பன்னாட்டு அமைப்புகளில் பணியாற்றும் வாலிபர், நங்கையர்
எவ்வளவாய் மார்தட்டுகின்றனர்!

10. ***விருப்பங்களிலெல்லாம் விருப்பத்தின்*** (Desire of Desires / Hope of Hopes)
நிறைவேறுதலை நாம் காண்போம்.

முதல் வருகை: லூக் 2:28-32 (சிமியோன்)
இரண்டாம் வருகை: ஆகாய் 2:6,7
''சகல இனத்தாராலும் விரும்பப்படுகிறவர்!''

திருமறையிலுள்ள இறுதி ஜெபம் —
''கர்த்தராகிய இயேசுவே, வாரும்!'' (வெளி 22:20)

■ ***முடிவுரை***

கிறிஸ்து திரும்ப வரும்போது,

1. **கேள்வி —**
மனிதன் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கமாட்டான்;
அவரை நீதியரசராய்ச் சந்தித்திருப்பான்.
2. **வெளிப்பாடு —**
அவரை எல்லா மகிமையோடும் நமது கண்கள் காணும்;
இனி அரைகுறை வெளிப்பாடு கிடையாது.

3. **வரம்/ஈவு —**
 நாம் அவரோடு சிம்மாசனத்தில் அமர்ந்திருப்போம்;
 எல்லாம் நமக்குச் சொந்தமாயிருக்கும்.
4. **சிலாக்கியம் —**
 விவிலியத்தின் மறைபொருள்கள் முழுவதுமாய் விளங்கிவிடும்;
 நமது அறிவு நிறைவு பெறும்.
5. **கட்டளை —**
 நாம் அவரை என்றென்றும் சேவிப்போம்;
 எவ்விதக் கவனச் சிதறலும் இராது.
6. **போராட்டம் —**
 நமது போராட்டங்கள் யாவும் ஓய்ந்துபோகும்;
 நம்மீது பழி சுமத்துகிறவன் தள்ளப்பட்டிருப்பான்.
7. **வாக்குத்தத்தம் —**
 நாம் அவரைப் போலவே இருப்போம்;
 கறை, திரை, பிழை ஒன்றுமிருக்காது.
8. **மகிழ்ச்சி —**
 நாம் அவரோடு இருப்போம்;
 நித்தியமாய் அவரோடு இணைக்கப்பட்டிருப்போம்.
9. **பணி —**
 முழங்கால்கள் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கையிடும்;
 எல்லா நாடுகளும் அவரைச் சேவிக்கும்.

''பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்!''

15

நல்லதும் உண்மையானதுமான கூற்றுக்கள்

Good, Acceptable & Faithful Sayings

முகவுரை

ஒரு சத்தியத்தை வலியுறுத்தவேண்டியபோது,
இயேசு பயன்படுத்திய வார்த்தைகள்: *''மெய்யாகவே மெய்யாகவே''*
அதேபோல் பவுல் பயன்படுத்திய சொற்றொடர் —

''இது நன்மையும் தேவ அங்கிகரிப்பும் உள்ளது''
''இது உண்மையும் ... அங்கிகரிப்புக்குப் பாத்திரமானதாயும்''

தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் எழுதிய கடிதங்களில் பவுல் நடைமுறையாகவும் நெருங்கியவராகவும் இருந்தார்.

இந்நிருபங்களில் ஏழு முறை இச்சொற்றொடர்கள் வருகின்றன —

(1) 1 தீமோத்தேயு 1:15 ... *தனிப்பட்டவரது இரட்சிப்பு*

- சரித்திர உண்மைகளை மனதளவில் ஒப்புக்கொள்வது போதாது.
- ''நமது'' இரட்சகர் என்றல்ல,
 ''எனது'' இரட்சகர் என்றாகவேண்டும்.
- உள்ளான நிச்சயம் அவசியம் —
 இதைத் தருவது ஆவியானவர் (ரோ 8:16; எபே 4:30)
- நியாயப்பிரமாணத்தை ஆசரிப்பதில் பவுல் குற்றமற்றவர் (பிலி 3:4-7), ஆனாலும் அவரது அறிக்கை:
 ''பாவிகளில் பிரதான பாவி நான்'' (1 தீமோ 1:15)
- ஜான் வெஸ்லி: ''சிவப்பிந்தியரை இரட்சிக்கச் சென்றேன்;
 என்னை இரட்சிப்பது யார்?''

(2) 1 தீமோத்தேயு 4:9 ... *ஆன்மீகப் பயிற்சிகள்* (வச 7-9)

ஓடுவதும் உடற்பயிற்சி செய்வதும் இன்று சாதாரணம்.

- தினசரி உணவு
 மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல (இயேசு) ... (மத் 4:4)
 திருவசனமாகிய ஞானப்பால் (பேதுரு) ... (1 பேது 2:3)
 உமது வசனம் தேன் (சங்கீதக்காரன்) ... (சங் 19:10; 19:103)

- தினசரி ஜெபம்
  ''அன்றன்றுள்ள அப்பம் இன்று தாரும் ...'' (மத் 6:11)
  இயேசுவின் அதிகாலை ஜெபப் பழக்கம் (மாற் 1:35)
  அவசரப்படாமல் போதுமான நேரம் எடுங்கள் (ஏசா 40:31)
- வாராந்திர உபவாசம்
  பழைய, புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தர்.
  திருச்சபைச் சரித்திரம்.
  ஆன்மீகப் போராட்டம் (மத் 17:20,21)
- அடிக்கடி தற்பரிசோதனை
  அ) *''நீர் என்னை ஆராய்ந்திருக்கிறீர்''* (சங் 139:1-4)
  ஆ) *''தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்''* (வச 23,24)

(3) 1 தீமோத்தேயு 5:4 ... *பக்தியுள்ள குடும்பம்*

வீட்டில் பயபக்தியான வாழ்வு

- இல்லம்தான் இறைவனின் அடிப்படையான படைப்பு —
  அதைத்தான் சாத்தான் குறிவைக்கிறான்.
  தூயாவியானவரால் நிறைந்த வாழ்வு = முன்மாதிரியான குடும்ப வாழ்வு (எபே 5:18-21,22 ...)

உறவுகள் —

- கணவன், மனைவி
  பெற்றோர், பிள்ளைகள்
- குடும்பத்தினரோடு தரமான நேரம் செலவிடுங்கள்.
- குடும்ப ஜெபம்
  (முக்கியத்துவ வரிசை: முதலாவது, தேவன்; அடுத்து, குடும்பம்; மூன்றாவது, வேலை) (1 தீமோ 3:4,5)

(4) 1 தீமோத்தேயு 3:1 ... *வேலையில் உத்தமம்*

உங்கள் அழைப்பு எதுவாயினும் ...

எ.கா.) வேலைக்காரர் (1 தீமோ 6:1; கொலோ 3:22-24)
எ.கா.) தானியேல் (தானி 6:3,4)

- முதலாவது, உண்மை; அடுத்துதான், திறமை (சங் 78:72)
  ''சிறு காரியங்களிலும்'' உண்மையாயிருங்கள்.

(5) 1 தீமோத்தேயு 2:3 ... *கிறிஸ்தவப் பணி* (வச 1-7)

- ஒவ்வொரு நாட்டிற்காகவும்,
  ஒவ்வொரு மாநிலத்திற்காகவும் ஜெபம்.
  எ.கா.) ஓர் உலகப்படத்தை வைத்துக்கொண்டு வில்லியம் கேரி ஒவ்வொரு நாட்டிற்காகவும் ஜெபித்தார்.
- ஜெபிக்க வேண்டியவை — களங்களில் கூடுதல் பணியாளர்
  — ஊழியத்தில் பிரச்னைகள்
  — புதிய விசுவாசிகள்
  — பாடனுபவிக்கும் திருச்சபைகள்
  — எதிர்ப்போர் (ஸ்தேவான் ஜெபித்தான்; பவுல் மாறினான்)
- முடிந்த வகையிலெல்லாம் சுவிசேஷத்தைப் பகிருங்கள்.
- மிஷனரிப் பணிகளைத் தாங்குங்கள்.

(6) 2 தீமோத்தேயு 2:11,12 ... *பொறுமையுடன் சகிப்பு*

- கடவுளுக்குக் கபடமில்லாத ஒரு மகன் உண்டு;
  ஆனால் காயமில்லாத மகன் கிடையாது!
  உங்கள் பிரச்னை போல் யாருக்கும் கிடையாது என்றெண்ணாதீர்!
  — பாதங்களே இல்லாத ஒருவனைப் பார்க்கும்வரை
  எனக்குப் புது செருப்பு இல்லையே என்று முறுமுறுத்தேன்!
- சுகபோக வாழ்வை வலியுறுத்தும் சுவிசேஷத்திற்கு எச்சரிக்கை —
  பிர 7:14; 11:7,8 ... *வாழ்வு ... தாழ்வு ...*
- பாடுபட மனமிருக்கட்டும்.
  பாடுகளுக்குத் தப்ப அல்ல, அனுபவிக்க ஆயத்தமாயிருங்கள்.
  பாடுகள் தரும் பரிசுத்தம் — எபி 12:11-13 ... *நீதியின் கனி*
- சிலுவை சுமப்போம்; சிம்மாசனம் அமர்வோம்!
- நமது கண்ணீர் வழியாகத்தான் தேவனது வானவில் தெரியும்!
- *ஒன்றுக்கும் கவலைப்படாமல் ... தேவ சமாதானம்* (பிலி 4:6,7)
  பாடுகளை வீணாக்காதீர்! (Don't waste your sorrows!)
  எனது வாழ்வில் இக்கட்டுகள் வரும்போதெல்லாம்
  ஆன்மீக வாழ்வில் ஒரு படி ஏறியிருக்கிறேன்.

(7) தீத்து 3:8 ... *நற்செயல்கள்*

- *உங்கள் வெளிச்சம் மனிதர் முன் ...* (மத் 5:14-16)
  — வீட்டில்
  — ஊரில்
  — உலகில்
- *நற்செயல்களுக்காய் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்* (எபே 2:8,9)
- பிறரது உடனடித் தேவைகளைச் சந்தியுங்கள் (தீத் 3:14)
  யாக் 2:14-17 ... *உடை ... உணவு ...*
- உங்கள் எதிரிகளுக்கும் உதவுங்கள் — மத் 5:16,43-45
- உதவியற்றோருக்கு உதவுவது உன்னதருக்கே செய்வதாம்.
  பரலோகில் பரிசுகள் (மத் 25:31-40)

■ ***முடிவுரை***

''உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமான''
இக்காரியங்களுக்குக் கீழ்ப்படிந்தால், வானவில் போன்ற வாழ்வு நமதாகும் —

1. சொந்த இரட்சிப்பு (Personal Salvation)
2. ஆன்மீகப் பயிற்சிகள் (Spiritual Disciplines)
3. பயபக்தியுள்ள குடும்பம் (Godly Home)
4. வேலையில் உத்தமம் (Sincere Work)
5. கிறிஸ்தவப் பணி (Christian Mission)
6. பொறுமையுடன் சகிப்பு (Patient Endurance)
7. நற்செயல்கள் (Good Works)

இவ்வித வாழ்வு எவரைத்தான் கவராது?

16

தரிசனம்

Vision

முகவுரை

☐ *(தீர்க்க)தரிசனம் இல்லாத இடத்தில் மக்கள் சீர்கெட்டு* (= கட்டுப்பாடின்றி) *போவர்* (நீதி 29:18)

''தரிசனம்'' (Vision) என்பதற்குச் சொல்லகராதி தரும் பொருள் — புரிந்துகொள்ளுதலிலும் நிதானிப்பதிலும் திறன்/ புத்திக்கூர்மையான தொலைநோக்கு/தெய்வீகக் கண்ணோட்டம்/ மனதில் சித்திரம்.

☐ ஏலியின் நாட்களில் தரிசனமோ வெளிப்பாடோ இல்லை.
(1 சாமு 3:1) — வச 2,3
ஏலியின் மங்கிய கண்கள் ...
அணைந்துகொண்டிருக்கும் விளக்கு

2:17 ... தேவனது நாமம் அவமகிமைப்பட்டது.
2:22 ... மக்கள் தங்கள் விருப்பம்போல் அலைந்தனர்.
பலியானது அசட்டை செய்யப்பட்டது.

☐ பின்வாங்கிய சீயோனுக்குத் தரிசனம் இல்லை (புல 2:9)

நபருக்கு நபர் தரிசனம் வேறுபடலாம்;
ஆனால், அடிப்படையாக நமக்கு **ஐவகை தரிசனம்** வேண்டும்,
அது மேலும் மேலும் தெளிவாக வேண்டும்.
பார்வையே இல்லாத ஒருவனுக்குக் கிட்டப் பார்வை,
தூரப் பார்வை என்றெல்லாம் பேசி எதற்கு?

1. தேவனது பரிசுத்தத்தையும் நமது ஒன்றுமில்லாமையையும் குறித்த தரிசனம்

தன்னை அறிவதே அறிவிலெல்லாம் அறிவு.
நம்மை நாம் அறியாததே நமது பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம். இப்படித்தான் என்று நினைத்துக்கொண்டே வாழ்கிறோம்.

மகா பரிசுத்தரைப் பற்றிய தரிசனத்தின் மறுபக்கமே இத்தரிசனம்.

- ஏசாயா (ஏசா 6:1-5)
  பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் ... அசுத்த உதடுகளுள்ளவன்

- யோபு (யோபு 42:5,6)
  முன்பு காதால் கேள்விப்பட்டேன் ... இப்போது கண்ணால் பார்க்கிறேன் ... என்னை அருவருத்து மனந்திரும்புகிறேன்
- பேதுரு (லூக் 5:8)
  அற்புதமான மீன்பிடிப்பு ... *''ஆண்டவரே, என்னைவிட்டுப் போய்விடும்; நான் பாவியாகிய மனிதன்!''*
- பவுல் (பிலி 3:8-11)
  கிறிஸ்துவின் மகத்துவம் vs. பவுலின் வெறுமை
  கிறிஸ்துவின் மேன்மைக்கு முன்பாக
  எனது பெருமைகளெல்லாம் குப்பை!

  தேவனது உன்னத மகிமை ... நமது பாழான நிலைமை!

- இத்தரிசனத்தைத் தர தேவன் நமது வாழ்வில் இக்கட்டுகளை வரவிடுகிறார்.

  — அவரது அற்புதங்கள், வெளிப்பாடுகளால் அவருக்குமுன் நொறுங்கி விழுந்த சம்பவங்களை நினைத்துப் பாருங்கள்.

  — *''புலம்புகிறவர்கள்''* பாக்கியவான்கள் (மத் 5:4)
  உலகுக்கடுத்த பிரச்னைகள் அல்ல, ஆன்மீக நிலை (வச 3)

  — *உயர்ந்தவர், உன்னதர் ... உடைந்தவர்களை உயிர்ப்பிக்க* (ஏசா 57:15)

2. உயர்த்தப்பட்ட கிறிஸ்துவையும் அவருக்குள் நமது நிலையையும் குறித்த தரிசனம்

எல்லாம் ''வைத்திருப்பது'' ஒன்று;
வைத்திருப்பதை ''அறிந்திருப்பது'' வேறு.

- எபேசு நகர் விசுவாசிகளுக்கான பவுலின் ஜெபம் (எபே 1:17-21)
  — கிறிஸ்துவில் தேவன் நிறைவேற்றியது (1:20);
  நம்மில் தேவன் செய்வது (2:1,4-6).

  கிறிஸ்தவ வாழ்வின் மாபெரும் இரகசியம் —
  கொலோ 1:26,27 ... *மகிமையின் நம்பிக்கை ...*
  ''கிறிஸ்து நமக்குள்''

  ''கிறிஸ்துவுக்குள்'' (In Christ) என்று குறிப்பிடப்பட்டுள்ள எல்லாப் பகுதிகளையும் புதிய ஏற்பாட்டில் தேடி வாசியுங்கள்.

ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளப்பட்ட வாழ்வு =
கிறிஸ்து **நம்மில்** ... நிலை (கொலோ 2:9,10) (Standing)
நாம் **கிறிஸ்துவில்** ... நடை (கொலோ 1:28) (State)

- *''திருவசன அறிவின்மையால் எனது மக்கள் அழிகிறார்கள்''* (ஓசி 4:6) — சிறைப்பிடிப்பு (ஏசா 5:13)
  ''சத்தியத்தை (= இயேசுவை) *அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்''* (யோ 8:30-32)
  இயேசு இதை அவிசுவாசிகளிடமல்ல, சீடர்களிடமே சொன்னார்.

☐ சிரமமெடுத்து ஜெபத்துடன் திருவசனத்தைத் தியானிப்பதே இதற்குப் பரிகாரம் — குறிப்பாக பு.ஏ. நிருபங்கள்

3. திருச்சபையையும் அதில் அங்கங்களாயிருக்க நமக்குக் கிடைத்த சிலாக்கியத்தையும் குறித்த தரிசனம்

திருச்சபை = பரிசுத்தவான் எவனும் வெளியே கிடையாது;
பாவி எவனும் உள்ளே கிடையாது.

இத்தரிசனம் செயல்பாடுகளிலேயே தெளிவாகிறது —
1 கொரிந்தியர் 12 இலிருந்து ஐந்து தத்துவங்கள் —

- உட்படுத்தும் தத்துவம் (Induction) (வச 12,13)
  — நாமல்ல, ஆவியானவரே நம்மை உட்படுத்தினார்.
  ''நீங்களல்ல, நானே ... தெரிந்துகொண்டேன்'' (யோ 15:16)
  ''தேவனோ ...'' (எபே 2:4-9) — பெருமையடிக்க இடமேது?
- பாகுபாடின்மை (Indiscrimination) (வச 14-20)
  — வகுப்பு வேறுபாடில்லை — யாவரும் அரசர், ஆசாரியர்.
  தேவ அன்பில் பாகுபாடு கிடையாது.
  கிறிஸ்துவின் உடலின் பிற அங்கங்களையும் மதியுங்கள்.
  ஒதுங்கியிராதீர் ... எல்லாச் சபைகள் (வெளி 2 & 3)
- சகசார்புத் தன்மை (Interdependence) (வச 20,21)
  — கூட்டுமுயற்சி
  இன்றையவுலகின் ''நான்'' எனும் சிந்தனைக்கு எதிர்.
  எ.கா.) 2 சாமு 10:9-12 (பிறரது பலக்குறைவில் எனது பலம்)

- இன்றியமையாமை (Indispensability) (வச 22-24)
  — நாம் தேவனுக்கல்ல, ஒருவருக்கொருவர் இன்றியமையாதோர்.
- இணைப்பு அடையாளம் (Identification) (வச 26,27)
  — பிறரது இன்பத்திலும் இன்னலிலும் பங்கேற்பு (ரோ 12:15)

திருச்சபையை மணக்கவே கிறிஸ்து வருகிறார்.
நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், அனாதை விடுதிகள்,
இப்படிப் பல நாம் கட்டலாம்; ஆனால் அவையெல்லாம் சபை
கட்டுதலை மையப்படுத்தவேண்டும் —
*''நான் என் **சபையைக்** கட்டுவேன்''* (மத் 16:18)

4. தொலைந்த உலகையும் அதைச் சந்திக்க நமது பொறுப்பையும் குறித்த தரிசனம்

- அரசன் அகிரிப்பா முன் நின்றுகொண்டு பவுல் இதைப்
  ''பரம தரிசனம்'' என்றழைக்கிறார் (அப் 26:16-19)
  இது கிறிஸ்து தந்த பணித்திட்டத்தின் அடிப்படை
  (அப் 1:8 vs. அப் 26:20)
- ஏசாயாவின் பரம தரிசனம் மிஷனரி அழைப்பை உள்ளடக்கியது—
  தரிசனம் பிறப்பிப்பது பணித்திட்டம்! (Vision begets Mission!)
  *''**பூமி** கர்த்தரது மகிமையால் நிறைவு ... யார் போவார்?''*
  (ஏசா 6:3,8)

உலகப் போர் வந்துவிடுமோவெனக் கலங்கி நிற்கிறோம்.
அச்சுறுத்தலின் நடுவிலேயே பணியாற்றும் மிஷனரிகளை
நினையுங்கள். மிஷனரி தரிசனத்தை இழப்பது எளிது ...

— விறுவிறுப்பான மிஷனரி இயக்கங்களுடன் தொடர்புகொண்டி
ருங்கள். அநேகருக்கு மிஷனரிச் சிந்தை கிடையாது (பிலி 4:15)

— மிஷனரிப்பணிச் சுற்றறிக்கைகளை வாசியுங்கள்.
மிஷனரிகளுக்காய்த் தவறாது ஜெபியுங்கள் (எபே 6:19,20)

— மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்று வாருங்கள் —
இயேசு: *''உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்''*
யோ 4:35 (வச 30,39)

வில்லியம் பூத்: *''நம்மெல்லாருக்கும் நரகம் குறித்த தரிசனம் தேவை!''*
பரலோகத்தைவிட நரகத்தைக் குறித்தே இயேசு அதிகம் பேசினார்.
கி.பி. 2016 முடிந்துவிட்டது! — கூட்டப்பட்ட கிருபையின் காலம்.

5. புதிய வானம், புதிய பூமியையும் அங்கு நமது நித்திய வாழ்வையும் குறித்த தரிசனம்

இத்தரிசனம் இல்லையேல், நமது பாடுகளில் அழிந்துவிடுவோம்
(ரோ 8:18)
பேதுரு: *''நீதி'' வாசமாயிருக்கும் புதிய வானம் புதிய பூமி
வரக் காத்திருக்கிறோம்* — 2 பேது 3:13
மண்ணுலகிற்குப் பயன்படாத அளவு விண்ணுலகச் சிந்தையா,
விண்ணுலகிற்குப் பயன்படாத அளவு மண்ணுலகச் சிந்தையா?
(பிலி 3:18-21) — *நமது குடியிருப்பு*
''மாரநாதா'' — ஆதிக் கிறிஸ்தவரின் வாழ்த்துச் சொல் (1 கொரி 16:22)

■ *முடிவுரை*

□ இந்த ஐந்து காரியங்கள் எதிலும் நமது தரிசனம் மங்கிவிடாது,
பிரகாசமாகவே இருக்கவேண்டும். சமநிலை காத்துக்
கொள்ளுங்கள். தரிசனம் இழந்தால் தரித்திரம்தான்!

பெதஸ்தா குருடன் —
முதல் தொடுதல் → இரண்டாம் தொடுதல் (மாற் 8:24)

□ தேவன் தரும் தரிசனத்தின் குணாதிசயங்கள் —
அ) அது பார்க்க முடியாததைப் பார்க்கிறது.
2 கொரி 4:18 ... காண்பது vs. காணாதது
எ.கா.) எபி 11:27 ... *விசுவாசத்தினாலே*
— நம்பிக்கையின் தக்க வைப்பு
— கற்பனையினால் வெடிப்பு

ஆ) அது முழுப்படத்தையும் பார்க்கிறது.
ஒரு ஜப்பானிய சபை மேய்ப்பர் —
''உலகிலுள்ள எனது சபையையே பார்த்துக்கொண்டிருந்தேன்;
இப்பொழுதோ, எனது சபையைத் தேவன் வைத்துள்ள உலகைப்
பார்க்கிறேன்!''

இ) அது முடிவான பலனைப் பார்க்கிறது.

எ.கா.) ஏசா 6:3 ... *பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கிறது*

ஆனால், ''*அசுத்த உதடுகளுள்ள மனிதர்*'' (வச 5)

கொழுத்த இருதயங்கள், மந்தமான காதுகள், ... (வச 9,10)

- ☐ நமக்கு இரண்டாம் தொடுதல் தேவை; ஏன், மூன்றாம் தொடுதலும் கிடைத்தால் நல்லது!
- ☐ நீதிமானின் பாதை ''*அதிகமதிகமாய்ப் பிரகாசித்துக்கொண்டே*'' இருக்கும் (நீதி 4:18)

1. A vision of the Holiness of God & our nothingness
2. A vision of the Exalted Christ & our position in Him
3. A vision of the Church & our privilege to be its members
4. A vision of the Lost World & our responsibility to reach it
5. A vision of the New Heaven and New Earth & our eternal living over there

(84ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

17

''பாக்கியவான்கள்''

Blessedness

முகவுரை

- ஆசீர்வாதம் vs. ஆசீர்வதிக்கப்பட்டிருத்தல் (பாக்கியம்)
  Blessing vs. Blessedness

''ஆசீர்வாதம்'' — நாம் பெறுவது — ஈவு
''ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது'' — நாம் ஆவது — நிலை

அதுபோலவே, சுகமடைதல் vs. சுகமாயிருத்தல்

— ''*பாக்கியவான்கள்*'' எனப் பல வேதப்பகுதிகள் துவங்குகின்றன.
— பாக்கிய வசனங்கள் (Beatitudes) நமக்குத் தெரியுமே.
— 150 சங்கீதங்களில் 5 சங்கீதங்கள் ''*பாக்கியவான்கள்*'' என்று துவங்குகின்றன; ஒவ்வொன்றும் பாக்கியத்தின் ஓர் அம்சத்தைக் குறிப்பிடுகிறது —

1) சங்கீதம் 1 — ''*... பாக்கியவான்*''

சங் 1:1 ... 150 அத்தியாயங்கள் கொண்டதொரு புத்தகத்திற்கு என்னே துவக்கம்!

''உலகிலிருந்து **பிரிந்து வாழ்தல்**'' (Separation)

அதிகம் பிரசங்கிக்கப்படாத முக்கிய திருவுபதேசம் —

தேவன் : படைப்பு ... ஆதி 1:4
இயேசு : யோ 15:18,19 ... *இவ்வுலகத்தாரல்ல*
அப்போஸ்தலர்: அப் 2:40 ... *உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்*
பவுல் : 2 கொரி 6:17,18... *பிரிந்து வாருங்கள்... பிதா...*
யாக்கோபு : யாக் 1:27 ... *சுத்தமான பக்தி ...*
4:4,5 ... *விபசாரரே, விபசாரிகளே ...*

இயேசுவானவர் *பாவிகளின் நண்பராய்* இருக்கவில்லையா?
ஆம், ஆனால் ''*விலகியிருந்து*'' பரிசுத்தம் காத்தார் — எபி 7:26

உலகில் தேவன் திருச்சபையை வைத்தார்;
பிசாசோ சபைக்குள் உலகைப் புகுத்திவிட்டான்!

ஆதிச்சபை : சபைக்குச் சமுதாயம் பயந்தது.
இன்றோ : சமுதாயத்திற்குச் சபை பயப்படுகிறது.
உலகின் நவநாகரிகங்கள், தீய இச்சைகளுக்கு எச்சரிக்கை!

2) சங்கீதம் 32:1,2 — *''... பாக்கியவான்''*

''தேவனோடு **ஒப்புரவாகுதல்''** (Reconciliation)
''மன்னிப்பு'' — மல்லிப்பூவிலும் மணமானது.
பாவமன்னிப்பின் **மகிழ்ச்சிக்கு** இணையேது? —

1 யோ 1:4 ... *உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி....*
:7-9 ... *ஒளியில் நடந்தால் ... பாவங்களை அறிக்கையிட்டால்*

நாம் நமது பாவங்களை மூடினால் தேவன் அவைகளை வெளிக்கொண்டு வருவார்;
நாம் அவைகளை அறிக்கையிட்டால் அவர் அவைகளை மூடுவார்.

தேவனது மன்னிப்பு பூரணமானது —

4 பரிமாணங்கள்:	கடலின் ஆழம் (மீகா 7:19)	depth
	வானத்தின் மேகம் (ஏசா 44:22)	height
	முதுகுக்குப் பின்னால் (ஏசா 38:17)	length
	மேற்கு-கிழக்கு (சங் 103:12)	width

ஆழம், உயரம், நீளம், அகலம்!

குற்றவுணர்வோடு வாழ்வதிலும் பரிதாபம் வேறில்லை.

பாடுங்கள்: *நீங்கிற்றே, நீங்கிற்றே, நீங்கிற்றே,*
என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே!

பிசாசு தருவது : குற்றவுணர்வு (Condemnation)
ஆவியானவர் தருவது : பாவவுணர்வு (Conviction)

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படமுடியாத பயங்கர பாவம் இல்லை.
''உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும்'' ... (ஏசா 1:18)

பனி ... பஞ்சு ... கறை — (கறை எளிதில் போகாது)

ஏற்கனவே கிறிஸ்துவிடம் நீங்கள் வந்திருக்கலாம் —
தேவனோடுள்ள உறவைப் பாதிக்கும் பாவங்கள் உங்களிடமுண்டா?

3) சங்கீதம் 41:1,2 — *''... பாக்கியவான்''*

*''எளியவர் மீது **இரக்கம்''*** (Compassion)

தானதர்மம் குறித்த உபதேசம் போதுமான அளவு போதிக்கப்படவில்லை —

— *''சுத்தமான''* பக்தியின் முதல் அம்சம்
யாக் 1:27 ... *''திக்கற்ற பிள்ளைகள் ... விதவைகள்''*

— திருமுழுக்கினன் யோவானின் முதல் நடைமுறை உபதேசம்
லூக் 3:9-11 ... *''கோடரி ... கனிகள் ... இரு உடைகள்''*

— மேசியாவின் பணிக்குச் சான்று
மத் 11:15 ... *''எளியோருக்குச் சுவிசேஷம்''*

— சகேயுவின் முதல் அறிக்கை
லூக் 19:8 ... *''சொத்தில் ஏழைகளுக்குப் பாதி''*

— முதல் கிறிஸ்தவர்களின் முதல் காணிக்கை எளியவருக்குத்தான்.
''விற்று ... தேவையுள்ளோருக்குப் பகிர்வு'' (அப் 2:44,45)

எளியவருக்கென்று இன்னொரு தசமபாகம்? கூடாதா?

4) சங்கீதம் 119:1,2 (112:1) — *''... பாக்கியவான்கள்''*

திருவசனத் **தியானம், அப்பியாசம்** (Meditation)

119ஆம் சங்கீதத்தின் 176 வசனங்களில் ஒவ்வொன்றும் இறைவார்த்தை குறித்துப் பேசுகிறது.

— எத்தனை வேதாகமங்கள் அச்சடிப்பு அல்லது வாசிப்பு?
திருச்சபைகளில் திருவசன அறிவின்மை

— தினமும் திருமறைத் தியானத்திற்கு எவ்வளவு நேரம்?

— இதிலுள்ள ஆனந்தத்திற்கு அளவில்லை
(சங் 119:96,97) ... *மகா விஸ்தாரம்*

— கடிகாரம் அடிக்குமுன் அதிகாலையிலெழுந்து தியானம் —
(சங் 119:147,148) ... *ஜாமங்களுக்குமுன் ...*

— பெற்றோரும் பிள்ளைகளும்
''உன் பிள்ளைகளை மறப்பேன்'' (ஓசி 4:6ஆ)
''அந்நிய காரியமாய் எண்ணினர்'' (8:12)

5) **சங்கீதம் 128:1-4 — ''...** ***பாக்கியவான்''***

''குடும்ப வாழ்வில் **பரிசுத்தம்''** (Consecration)

— குடும்ப ஒற்றுமையின்மையைக் கடவுள் வெறுக்கிறார்.
மல் 4:5,6 ... **சங்காரம்** (சாபம்)
இதுதான் திருமுழுக்கினன் யோவானின் பணி —
தந்தையர் ↔ பிள்ளைகள்

— இயேசு: *''ஒரு வீட்டில் நுழைகையில் சமாதானம் சொல்லுங்கள்''* (லூக் 10:5)

— தம்பதியர்: அன்பு, கீழ்ப்படிதல், உண்மை, பரஸ்பரப் பணிவு (எபே 5:22-33)

— பெற்றோரும் பிள்ளைகளும் (எபே 6:1-4)
கீழ்ப்படிதல் ... அவர்களோடு தரமான நேரம் ...
அவர்களுக்குப் போதனை ...
எ.கா.) ஆபிரகாம் (ஆதி 18:17-19)
குடும்ப ஜெபத்தைத் திரும்பத் துவங்குங்கள்.

■ ***முடிவுரை***

பாழுலக வழிகளிலிருந்து பிரிந்து வாழ்தல்,
தேவனோடு ஒப்புரவாகி நல்லுறவு,
எளியவருக்கு இரக்கம்,
திருமறைத் தியானம், குடும்ப வாழ்வில் பரிசுத்தம்
— இவையே உண்மையான பாக்கிய வாழ்வு.

இவ்வித ''பாக்கியம்'' பெற்றவன் ''பிறர்க்கு'' ஆசீர்வாதம்!

18

திரித்துவ தேவன்

The Trinitarian God

(1 பேதுரு நிருபத்தில் ஒரு பகுப்பாய்வு)

முகவுரை

அ) தேவனது குணாதிசயத்திற்காய் அவரை ஆராதியுங்கள் (2:5,9)
ஆ) அவரது குணாதிசயத்திற்கு ஏற்ப நடந்திடுங்கள் (2:11,12)

அ) பிதாவானவர்

1. பாரபட்சமற்ற பிதா (1:17)
   — பயபக்தியான நடக்கை
2. பொறுமையுள்ள தேவன் (3:20
   — கீழ்ப்படிதல்
3. உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தா (4:19)
   — பாடுகளில் ஒப்புக்கொடுத்திருத்தல்
4. வல்லமையுள்ள தேவன் (5:6)
   — கவலையின்மை, அடங்கியிருத்தல்

ஆ) குமாரனானவர்

1. பழுதற்ற ஆட்டுக்குட்டி (1:19)
   — பரிசுத்த நடக்கை (வச 20-22)
2. தயையுள்ள கர்த்தர் (2:1-3)
   — வசனத்திலும் பரிசுத்தவான்கள் மீதும் பிரியம்
3. பிரதான மேய்ப்பர் (5:4/2:25)
   — சேவை மனப்பான்மை
4. ஏகாதிபத்திய கிறிஸ்து (4:11)
   — தேவனை மகிமைப்படுத்துதல்

இ) தூயாவியானவர்

1. பரலோகிலிருந்து அனுப்பப்பட்ட ஆவியானவர் (1:12)
   — தெளிந்த புத்தி, நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பு (வச 13)
2. மகிமையுள்ள ஆவியானவர் (4:14)
   — பாடுகளில் மகிழ்ச்சி (வச 12,13)

■ *முடிவுரை*

தேவனது குணாதிசயங்கள் திருமறையில் வெகுவாய்க் குறிப் பிடப்பட்டுள்ளன. அவைகளில் ஒவ்வொன்றும் அவரை அதற் கேற்றவாறு ஆராதிக்கவும், நாம் அதற்கேற்றவாறு நடந்துகொள் ளவும் ஊக்குவிக்கின்றது. அதுதான் கீழ்க்கண்ட வசனத்தின் பொருள் —

2 கொரி 3:18 —

''நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமை யைக் கண்ணாடியில் காண்கிறதுபோலக் கண்டு, ஆவியா யிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்!''

19

தேவனும் நாமும்

God & Us

முகவுரை

விவிலியத்தின் தேவன் ''தனிப்பட்ட'' உறவுகொள்ளக்கூடியவர்.
அவர் நம்மோடு ஐக்கியங்கொள்ள வாஞ்சிக்கிறார்.
இந்த உறவு இன்று போதுமான அளவு அனுபவிக்க முடியாததுபோல் தோன்றலாம்; ஆனால் அது நிசமானது.
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி தேவன் நம்மோடு ஏழு பரிமாண உறவு கொண்டுள்ளார் —

1. நம் நடுவில் தேவன் (God AMONG us)

யோ 1:14 ... *வார்த்தை சதையாகி நம் நடுவில் வாசம்பண்ணினார்*
2 கொரி 6:16 ... *அவர்களுக்குள் உலாவி அவர்கள் தேவனாய் இருப்பேன் ... என் மக்கள் ...*

ஆசீர்வாதம்: அவதாரம், அடையாளப்படுத்திக்கொள்ளுதல்.

2. நம்முடன் தேவன் (God WITH us)

மத் 1:23 ... *இம்மானுவேல் ... தேவன் நம்மோடிருக்கிறார்*
யோ 14:16 ... *இன்னொரு தேற்றரவாளன் ... உங்களோடு இருக்க*
16:13 ... *எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்*

ஆசீர்வாதங்கள்: துணை, வழிநடத்துதல்

3. நமக்குள் தேவன் (God IN us)

1 கொரி 6:19,20 ... *உங்களில் குடியிருக்கும் ஆவியானவர் ... உங்கள் உடலாலும் ஆவியாலும் மகிமைப்படுத்துங்கள்*
ரோ 8:9,10 ... *தேவ ஆவியானவர் உங்களில் தங்கியிருக்கிறார் ... கிறிஸ்து உங்களுக்குள் ...*
கொலோ 1:27,28 ... *கிறிஸ்து உங்களில் ... அவரில் பூரணம்*

ஆசீர்வாதங்கள்: பரிசுத்தமாகுதல், மறுரூபப்படுதல்

4. நமக்காக தேவன் (God FOR us)

ரோ 8:31,35 ... *தேவன் நமது பக்கம் இருந்தால் ... உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ ...*

1 யோ 2:1 ... *பிதாவிடம் நமக்காய்ப் பரிந்துபேசுகிறவர்*
ரோ 8:34 ... *குற்றம் சாட்டுகிறவன் யார்?*
கிறிஸ்து நமக்காய் வேண்டுதல் செய்கிறார்.

ஆசீர்வாதங்கள்: பாதுகாப்பு, பரிந்துரை

5. *நம்மீது தேவன்* (God UPON us)

அப் 1:8 ... *பரிசுத்த ஆவி உங்கள்மீது ... சாட்சிகள்*
19:6 ... *பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது வந்திறங்கினார் ... நவநாவுகள் ... தீர்க்கதரிசனம்*
லூக் 2:25 ... *இஸ்ரவேலின் ஆறுதல் ... பரிசுத்த ஆவியானவர் சிமியோன்மீது ...*

ஆசீர்வாதங்கள்: வல்லமை, ஊழியம்

6. *நமக்கப்பால் தேவன்* (God BEYOND us)

1 தீமோ 6:16 ... *சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர்*
ரோ 11:33 ... *ஆழம் ... ஆராய்ந்து முடியாதது ... அவரது நியாயங்கள் ... வழிகள் ...*
மத் 6:1,6,18 ... *அந்தரங்கத்திலிருக்கும் பிதா*

ஆசீர்வாதங்கள்: வியப்பச்சம், மறைவு, இரகசியங்கள்

7. *நம்மை நோக்கிய தேவன்* (God TOWARD us)

1 தெச 1:10 ... *பரலோகிலிருந்து அவரது மகன் வரக் காத்திருப்பு*
வெளி 22:7,12,20 ... *இதோ சீக்கிரம் வருகிறேன் ... நான் அளிக்கும் பரிசு ... கர்த்தராகிய இயேசுவே, வாரும்!*

ஆசீர்வாதங்கள்: கிறிஸ்துவின் மறுவருகை, பரிசுகள், நித்திய உறவு

■ *முடிவுரை*

இந்த 7 பரிமாண உறவைப் புரிந்துகொள்ளும்போது
நமது ஆராதனை கூடுதல் அர்த்தம் பெறுகிறது.
இதை வானவில் உறவு எனலாமா?
இப்படித்தான் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும்,
முழு மனதோடும், முழு பலத்தோடும் தேவனை ஆராதிக்கமுடியும்.

20

கிறிஸ்துவில் விடுதலை

Liberty in Christ

- **கலாத்தியர்** நிருபம் முழுவதும் ''விடுதலை'' எனும் கருத்தைக் கொண்டது.

  இந்நிருபத்தில் விடுதலையைக் குறித்த 5 **முக்கிய வசனப்பகுதிகள்** உண்டு.

  ஒவ்வொன்றும் ஒவ்வொரு அத்தியாயத்திலும் உண்டு.

  6ஆம் அத்தியாயம் 5ஆம் அத்தியாயத்தின் தொடர்ச்சி.

(1) கலாத்தியர் 1:4

இந்தப் பொல்லாத உலகிலிருந்து (world) விடுதலை பெற்று
தேவனது நன்மையான, நித்தியமான சித்தம் (will) செய்தல்.
அல்லது, நமது **''பிதாவாகிய தேவனது சித்தத்தில் வாழ்தல்''**

- இறைச்சித்தம் நிறைவேற்றுவது அதிமுக்கியமானது —
  எ.கா.) இயேசுவின் வாழ்க்கை:

— அவரது மலைப் பிரசங்கத்தின் இறுதி (மத் 7:21)
— அவரது மாதிரி ஜெபத்தில் உள்ளடக்கம் (லூக் 11:2)
— கெத்செமனேயில் அவரது ஜெபத்தின் கருத்து (லூக் 22:42)

- இந்த மூன்று இடங்களிலும்,
  ''பிதாவானவர்'' என்றிருப்பதைப் பாருங்கள். அதாவது —

  இது ஏதோ **சட்டதிட்டக் கட்டுப்பாடு** அல்ல,
  மகிழ்ச்சியான **விடுதலையின் வெளிப்பாடு!**

பாருங்கள்: எபே 1:6,10 *(தயவுள்ள சித்தம்)*
அப்படியே, கொலோ 1:9-11 ... *அவர் சித்தம் ... நமது நடக்கை*

தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிதலால் கிட்டும் ஆசீர்வாதங்கள் —
எ.கா.) ரோ 15:30 — மகிழ்ச்சி
1 பேது 2:15,16 — விடுதலை (சுயாதீனம்)
4:1,2 — ஓய்வு, இளைப்பாறுதல்

எனவேதான் தாவீது அறிக்கையிட்டது —

*''உமது சித்தம் செய்ய **விரும்புகிறேன்**''* (சங் 40:8)

- ''தேவ சித்தத்தை எப்படிக் **கண்டுபிடிப்பது** ?''
  என்று பிரசங்கங்கள் கேட்டிருக்கிறோம்.

  ''தேவ சித்தத்தை எப்படித் **தவறவிடுகிறோம் ?''**
  என்று பார்ப்போம்.

  அ) உலக மக்களது சகவாசத்தில் திளைத்திருத்தல்
  சங் 1:1,6 ... *பக்தியற்றோர் ... பாவிகள் ... பரிகசிப்போர்*
  யாக் 4:4 ... *உலக சிநேகம்*

  ஆ) உலகப் பொருட்கள்மீது பேராசை
  (பொருளாதாரச் சிந்தை)
  1 யோ 2:15-17 ... *பிதாவின் அன்பு ...*

  இ) எதிர்காலம் நமது கையில் எனும் பெருமை
  யாக் 4:13-15 ... *''தேவனுக்குச் சித்தமானால் ...''*

கிறிஸ்துவில் விடுதலையனுபவிக்கும் வாழ்வோ —

அ) தூயோர் உறவை நாடும்.
ஆ) செல்வத்தைத் துச்சமென எண்ணும்.
இ) ''அனந்த நம்பிக்கையோடு'' கர்த்தரையே சார்ந்து வாழும்.

(2) கலாத்தியர் 2:4

கிறிஸ்து இயேசுவுக்குள் விடுதலை
அல்லது, **''தேவ குமாரனுக்குள் வாழ்க்கை''**

இது வச 20,21இல் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வித வாழ்வின் விளக்கம் (ரோமர் 6)

- *''நான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டுள்ளேன்''*
  ரோ 6:6,7
  இது வெறும் ''உணர்வு'' அல்ல,
  ''உண்மை!'' — *''அறிந்திருக்கிறோம்''* (வச 6)

- *''ஆயினும் பிழைத்திருக்கிறேன்''*
  ரோ 6:8 ... *அவரோடு பிழைத்திருப்போம்*
  இதுவும் வெறும் ''உணர்வு'' அல்ல;
  ''விசுவாசம்'' — *''நம்புகிறோம்''* (வச 8)

- *''நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்''*
  ரோ 6:9-11

அதாவது, *''கிறிஸ்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்''* (வச 10)

''நான் கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறேன்'' (வச 11)

அதாவது, *''தேவனுக்கென்று கிறிஸ்து எனக்குள் பிழைத்திருக்கிறார்''*

இதுதான் ''நான்-அல்ல-கிறிஸ்துவே'' எனும் அனுபவம்!

- *''நான் மாம்சத்தில் பிழைத்திருப்பது,*
  *தேவகுமாரன்மீது **''விசுவாசத்தால்''** பிழைத்திருக்கிறேன்''*
  ரோ 6:12-14
  இங்கு ''விசுவாசம்'' என்பது தேவ குமாரன் என்னில் வாழ்கிறார் என நம்புவது.
  இங்கு ''பிழைத்திருத்தல்'' என்பது ஒப்புக்கொடுத்தலாகும் (வச 13).
  நாம் ஒப்புக்கொடுக்கிறோம் ... அவர் பயன்படுத்துகிறார்.
  நாம் ஒப்படைத்துவிடுகிறோம் ... அவர் இயக்குகிறார்.
  எல்லாம் *''**கிருபையின்** கீழ்தான்''*

தொகுத்துக் கூறின்,

கலா 2:20இல் ஐந்து முறை ''நான்'' என்றிருக்கிறது ...

முதலாவது, ''நான்'' = பழைய மனிதன் சிலுவையிலறையப்பட்டாயிற்று.
இரண்டாவது, ''நான்'' = புதிய மனிதன் பிழைத்திருக்கிறான்.
மூன்றாவது, ''நான்'' = கிறிஸ்து புதிய மனிதனாய் எனக்குள் வாழ்கிறார்.
நான்காவது, ''நான்'' = மாம்சத்தில் புதிய மனிதன்
ஐந்தாவது, ''நான்'' = புதிய மனிதன் கிறிஸ்து மூலம் ஒப்புக்கொடுக்கிறான்.

ஆம், தேவ குமாரனுக்குள் வாழ்வதே மெய்யான விடுதலை வாழ்வு;
இதைத்தான் இயேசு இப்படிச் சொன்னார் —

''குமாரன் உங்களை விடுதலையாக்கினால் ...'' (யோ 8:36)

(3) கலாத்தியர் 3:13,14

நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்கப்பட்டு
வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தை அனுபவிப்பது.

அல்லது, **''தேவனது வாக்குகளில் வாழும் வாழ்க்கை''**

இரு முக்கியமான திருவாக்குகளைத் திருமறை குறிப்பிடுகிறது —

அ) கிறிஸ்துவாகிய ஈவைப்பற்றிய வாக்கு (வச 16,22)
ஆ) ஆவியானவராகிய வரத்தைப்பற்றிய வாக்கு (வச 2,14)

இவையிரண்டையும் தேவனது இணை ஈவுகள் எனலாம்.

இவ்விரு ஈவுகளின் (Parallel Gifts) முக்கிய ஆசீர்வாதம் —
''ஆதரவு'' அல்லது ''உதவி''

— யோ 14:16 ... *இன்னொரு தேற்றரவாளன்*
— பிலி 2:1 ... *கிறிஸ்துவுக்குள் ஆறுதல், தேறுதல்*

''உதவியாளர்கள்'' என இவர்களது பணிகளை ஒப்பிடுவோம் —

இயேசு கிறிஸ்து	**பரிசுத்த ஆவியானவர்**
1) இரட்சிப்புக்கு உதவி (எபி 2:10; 5:9)	பரிசுத்தமாகுதலுக்கு உதவி (2 தெச 2:13; 1 பேது 1:22)
2) *''பாவத்திற்கு'' மரிக்க* உதவி (ரோ 8:10 அ)	*''நீதிக்குப் பிழைத்திருக்க''* உதவி (ரோ 8:10ஆ)
3) *''குடிக்க''* பானம் (யோ 7:37)	*''புறப்பட''* நதிகள் (யோ 7:38,39)
4) *''அதிகாரம்''* தருகிறார் (யோ 1:12)	*''வல்லமை''* அருளுகிறார் (அப் 1:8)
5) ''ஊழியங்களுக்கு'' உதவி (1 கொரி 12:5; எபே 4:13)	''வரங்களுக்கு'' உதவி (1 கொரி 12:4,7-11)
6) பரத்தில் உதவியாளர் (1 யோ 2:1)	இகத்தில் உதவியாளர் (ரோ 8:26,27)

இச்சத்திய வாக்குகளை ஏற்றுக்கொள்வோம்,
விசுவாசிப்போம்,
அறிக்கையிடுவோம்,
அனுபவிப்போம்!

(4) கலாத்தியர் 4:5,7

வேலைக்காரனை மகனாக்கிய மீட்பு.
அல்லது, **''தேவனது குடும்பத்தில் வாழ்வு''**

தேவ குடும்பத்தில் வாழ்வு என்பது என்ன?
(கலாத்தியர் 4இலிருந்து பாடங்கள்) —

அ) விடுவிக்கப்பட்டுள்ள வாழ்வு (Release)

அதாவது, *''உலகத்தின் வழிபாடுகளிலிருந்து''* (பஞ்ச பூதங்கள்)
வச 3-5 ... *மீட்டு ... புத்திர சுவீகாரம்*
வச 9,10 ... *அடிமைத்தனம்*

நாட்கள், மாதங்கள், இவற்றையெல்லாம் ஆசரிப்பது
நம்மீது சம்பிரதாயங்களைத் திணிக்கின்றன.
எ.கா.) யூத ஓய்வு நாள்
விலக்கப்பட்ட ஆகார வகைகள்

இப்பொழுதோ நமது சுயவிருப்பம்தான் —
ரோ 14:5-8
என்னே விடுதலை!

ஆ) நெருங்கிய உறவுள்ள வாழ்வு (Relationship)

வச 6,7
''அப்பா'' ... அன்பின் அழைப்பு
''பிதாவே'' ... உறவின் வெளிப்பாடு

குடும்பத் தலைவனை ''அப்பா'' என்றழைக்க அடிமைக்கு உரிமை கிடையாது.

''அப்பா'' எனும் பதம் இன்னும் இரு இடங்களில் வருகிறது —
மாற் 14:36 — கெத்செமனே
ரோ 8:15 (வச 16-18) — *புத்திர சுவீகார ஆவி*

இரு பகுதிகளும் **பாடுகளைப் பற்றியவை** —

எபி 12:5-8 ... *பிதாவினால் சிட்சை*

இ) ஒய்வும் மகிழ்வும் நிறைந்த வாழ்வு (Restfulness & Rejoicing)

வச 22,23 ... *அடிமையானவள் ... சுயாதீனமானவள்*

வச 27,28 ... *மகிழ்ந்திரு ... ஆர்ப்பரி ...*

உடல் பலத்தால் ஆபிரகாம் இஸ்மவேலைப் பெற்றான்;
ஓய்ந்து, இளைப்பாறியபோதுதான் ஈசாக்கைப் பெற்றான்.

வேலை செய்யத் துவங்குமுன்
அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எ.கா.) வேலை கொடுக்குமுன் தேவன் ஓய்வு கொடுத்தார் (ஆதி 1,2)

வேலைக்குமுன் ஆதாமுக்கு ஓய்வு கிடைத்தது!

அன்புள்ள தந்தையின் கரங்களிலும் *விடுதலையான தாயின்* மடியிலும் தவழும் வாழ்க்கையின் மாண்புதான் என்னே! (வச 26)

(5) கலாத்தியர் 5:1,13,16

ஊனியல்பிலிருந்து விடுதலையாகி ஆவிக்குள் நடக்கை.
அல்லது, ‘‘**தேவ ஆவியானவருக்குள் வாழ்வு**’’

ஆவிக்குள் **பிழைத்திருப்பதென்றால்,**

ஆவிக்கேற்றபடி **நடப்பதாம்** (வச 25); அதாவது

ஆவியினால் **நடத்தப்படுவதாம்** (வச 18)

ஊனியல்பு → ‘‘*கிரியைகள்*’’ → பளுவானது.
தூயாவி → ‘‘*கனி*’’ → வெளிப்படுவது.

நமது சொந்த பலத்தால் 14ஆம் வசனக் கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியாது —

(அதாவது நம்மைப்போல் பிறரை நேசிப்பது)

அப்படியானால், அதை நிறைவேற்றுவது எப்படி?
அதற்கான பதில்: வச 22,23 ... *தூயாவியின் கனிகள்*

ஆம், பலத்தினாலும் அல்ல,
பராக்கிரமத்தினாலும் அல்ல,
பரிசுத்த ஆவியினாலேயே ஆகும்!

ஆவிக்குள்ளான வாழ்வு என்றால் ஒருவரையொருவர் நேசித்து வாழ்வதாம் —

வச 22,23 *அன்பு, சமாதானம், பொறுமை,*
தயவு, நற்குணம், சாந்தம்

9 கனிகளில் 6 சகவுறவுகளைப் பற்றியதே!
(மூன்றில் இரண்டு பங்கு)

நடைமுறை வெளிப்பாடு (6:1,2) ... *குற்றத்தில் அகப்பட்டால்*

முடிவுரை

கிறிஸ்துவில் விடுதலையான வாழ்வு என்றால் —

1. தேவ சித்தத்தில் வாழ்வது
2. தேவ குமாரனை விசுவாசித்து வாழ்வது
3. தேவ வாக்குகளை உரிமை பாராட்டி வாழ்வது
4. தேவ குடும்பத்தில் அன்புடன் வாழ்வது
5. தேவ ஆவியானவர் மூலம் வாழ்வது

1. Will of God
2. Son of God
3. Promises of God
4. Family of God
5. Spirit of God

‘‘*நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்*’’ (கலா 5:1)

பிரமாணத்தின் கீழ் வாழ்வதற்கும்,
கிருபையின் கீழ் வாழ்வதற்கும் வேறுபாடு இதுவே.

(21ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

21

இறங்கினார், ஏறினார், ஆதலால் ...

Because He descended and ascended ...

முகவுரை

- கிறிஸ்துவின் வாழ்க்கை:

  நான்கு முக்கிய கட்டங்கள்

  மனுவுருவெடுத்தது — பரத்திலிருந்து இகத்திற்கு
  மரித்தது — இகத்திலிருந்து பாதாளத்திற்கு
  உயிர்த்தது — பாதாளத்திலிருந்து இகத்திற்கு
  பரமேறியது — இகத்திலிருந்து பரத்திற்கு

இச்சரித்திரச் சம்பவங்கள் நமது அனுபவத்தில் பிரதிபலிக்கவேண்டும்.

- புதிய ஏற்பாட்டு நிருபங்களின் உபதேசம் —

  கிறிஸ்துவோடு அடையாளப்படுத்திக்கொள்ளவேண்டும்.
  சிலுவையிலறையப்பட்டு, அடக்கம்பண்ணப்பட்டு,
  எழுந்திருந்து, அவரோடு உட்கார்ந்து ...
  (ரோ 6:3-6; எபே 2:6)

  இவ்வித அடையாளப்படுத்துதலாலேயே அனைத்து
  ஆன்மீக ஆசீர்வாதங்களும் நமதாகின்றன (எபே 1:3)

  தீர்க்கதரிசனம்: சங் 68:18,19 ... *உன்னதம் ஏறி ... வரங்கள் ...*
  வாசம் ... ''தினசரி ஆசிகள்''

  இந்த ஆசிகளில் முதன்மையானது: **விடுதலை**
  அதாவது, இரட்சிப்பு (வச 19,20)
  எபே 4:8 ... *சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி ...*

  ''சாத்தானின் சிறைக்கைதிகள்
  கிறிஸ்துவின் பிள்ளைகளாகின்றனர்!''

  இவை யுத்தத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள்!
  எனவேதான் கிறிஸ்து *''நமது இரட்சிப்பின் அதிபதி''*
  என்றழைக்கப்படுகிறார் (எபி 2:10)

கிறிஸ்துவின் மூலம் கிட்டும் விடுதலையின் ஏழு அம்சங்கள் —

1. மாம்சீகச் சிறையிலிருந்து விடுதலை (Carnalism)

- கிறிஸ்து நமக்காய் *மாம்சத்தில் பாடுபட்டபடியால்* நாம் இனி *மாம்ச இச்சைகளில்* வாழக்கூடாது ... 1 பேது 4:1,2,3,4
  இஷ்டம் போன்ற *இச்சை* வாழ்வு இனி கிடையாது (வச 3)

  கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம் (ரோ 6:14)
  — இனி பாவத்திற்கு அடிமைகளல்ல (வச 6,7)

  எ.கா.) ஞானஸ்நானம் — அது அடையாளப்படுத்துவது ... ரோ 6:3-6
  நோவா — இச்சைக்கும் இழிவுக்கும் விற்கப்பட்ட
  உலகிற்குத் தப்புவிக்கப்பட்டான் (1 பேது 3:20-22)

- கிறிஸ்துவின் மரணம் — பாவத்தின் **தண்டனையிலிருந்து**
  (கடந்த காலம்) விடுதலை (ரோ 6:23)
  உயிர்த்தெழுதல் — பாவத்தின் **வல்லமையிலிருந்து** விடுதலை
  (நிகழ்காலம்)
  ''கிறிஸ்து எழுந்திராவிடில் இன்னும் பாவத்தில்'' (1 கொரி 15:3,17)
  பரமேறுதல் — பாவத்தின் **பிரசன்னத்திலிருந்தே** விடுதலை
  (எதிர்காலம்) (எபி 9:27,28)

- பூவுலகுக்கு வருமுன் பரலோகில் கிறிஸ்துவின் பிரிவுரை:
  ''ஓர் உடல்'' (எபி 10:5-7)
  அவர் அதைத் தூய்மையாய்க் காத்துச் சிலுவையில் பிதாவிடம் ஒப்படைத்தார்.
  அப்படியே *நமது உடல்களை ஜீவபலியாய்* ... ரோ 12:1,2
  (கொல்லப்பட்டுள்ள மிருகம், பறவை போலல்ல.)
  இதன் பொருளென்ன? இறைச்சித்தத்திற்கு இணைந்து சிந்திக்கப் புதிதாக்கப்பட்ட மனது (ரோ 12:2).
  கிறிஸ்துவைப் போலவே ... *''உம் சித்தம் செய்ய''* (எபி 10:7)

2. பணப் பிரியச் சிறையிலிருந்து விடுதலை (Materialism)

- உயிர்த்த கிறிஸ்துவைப் பவுல் சந்தித்தபோது ...
  ''சிலுவையேயன்றி எதைக் குறித்தும் பெருமையில்லை''
  கலா 6:14
  ''உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டுள்ளது''
  ''நானும் உலகிற்குச் சிலுவையில் அறையப்பட்டுள்ளேன்''

கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளுக்காய்ப் பவுலின் கண்ணீர் —
பிலி 3:18,19 (பிரசங்கிமார்)

- ''ஆன்மீக'' ஆசீர்வாதங்கள் நம்மைத் திருப்திப்படுத்தும்போது, ''இவ்வுலக'' நன்மைகள் நம்மைக் கவராது (கொலோ 3:1-3)

எ.கா.) ஆபிரகாம் —
சோதோமின் இராஜாவின் பொருட்கள்
vs.
சாலேமின் இராஜாவின் அப்பம் (ஆதி 14:18-23)

- சுகபோக வாழ்வு உபதேசம் — இன்று மிகப் பிரபலமானது. இயேசு அன்றே அதற்கெதிராய்ப் பேசினார் (யோ 6:58-66).

பரலோக மன்னா ... பூவுலக ஆகாரம்
அநேகர் அவரைவிட்டுப் பிரிந்தனர் (வச 60,66)
நீங்களும் போய்விட விருப்பமா?
பேதுரு: *''நித்திய ஜீவ **வார்த்தைகள்**''* (வச 68)

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் யூதாசை இயேசு ''பிசாசு'' என்றழைத்தார் (வச 67-71) — பொருளாசை

- திருச்சபையில் சதுசேயர் (அப் 23:8)
''உயிர்த்தெழுதல், தூதர், ஆவி'' எதையும் நம்புவதில்லை.
எனவேதான் அவர்கள் "Sad-you-see!"

மிகவும் பரிதபிக்கப்படவேண்டிய நிலை (1 கொரி 15:19,20)
''காட்டு மிருகங்கள்'' (வச 32)

3. சடங்காச்சாரச் சிறையிலிருந்து விடுதலை (Ritualism)

- கிறிஸ்துவின் மரணம் சடங்காச்சார மார்க்கத்திற்குச் சாவுமணி — *''திரைச்சீலை மேலிருந்து இரண்டாய்க் கிழிந்தது''* (மத் 27:51)

எனவே,
— புனிதத் தலம் கிடையாது ... *''எங்கேயெல்லாம்''*
யோ 4:20,21,23/அப் 7:47-49)
தேவாலயம் → வீடு வீடாய் *(ஜீவனுள்ள கற்கள்)*

— ஆசாரியர் வகுப்பு கிடையாது ... *''யாரென்றாலும்''*
அனைத்து விசுவாசிகளும் ஆசாரியர் (1 பேது 2:5,9)

- கிழிந்துபோன திரைச்சீலையை மறுபடியும் தைக்காதீர் —
அலங்கரிக்கப்பட்ட பீடங்கள்
மெழுகுவர்த்திகள் கொளுத்துதல்
சிலுவைக்குமுன் வணங்குதல்
ஆயர்களுக்குச் சிறப்பாடைகள் ...

இவையெல்லாம் *''செத்த கிரியைகள்.''*
கிறிஸ்துவின் இரத்தம் இவையெல்லாவற்றினின்றும்
நம்மைக் *கழுவுகிறது* (எபி 9:14)

- நடைமுறைச் சத்தியங்கள் —

அ) கிருபாசனம் எல்லாருக்கும் திறப்பு — நடுவர் கிடையாது.
கத்தோலிக்கர் — இயேசுவைக் கொண்டுவந்த மரியாள்!
புராட்டஸ்டன்ட்ஸ்—இயேசுவிடம் கொண்டுவரும் பிரசங்கிமார்!

இயேசு ''நமக்காகவே'' அங்கு நுழைந்துவிட்டார்!
நம்மை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவர் (எபி 7:25-27)

ஆ) கர்த்தரின் பந்தி — சடங்காச்சார வாசனை கூடாது.
இது அவரை *''நினைவுகூருவதற்கு''* மட்டுமே (1 கொரி 11:25)

இ) *ஆகாரம் ... பானம் ... பண்டிகைகள் ...*
ரோ 14:5,6,9 ... நிழல் vs. பொருள்
சடங்கு vs. உட்கருத்து
(Shadow/Substance ... Ritual/Reality)

4. பிரமாணச் சிறையிலிருந்து விடுதலை (Legalism)

- *''கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் முடிவு''* (ரோ 10:4)

பிரமாணம் x விசுவாசத்தினாலுண்டாகும் நீதி
(வச 6,7) ... *''யார் ஏறுவான் ... இறங்குவான்?''*
அதாவது, நீங்கள் செய்யவேண்டியதில்லை;
கிறிஸ்து ஏற்கனவே செய்துவிட்டார்!
("Do" vs. "Done!")

நமக்காகச் ''சாபமாகி'' நம்மை நியாயப்பிரமாணத்தின்
''சாபத்திலிருந்து'' விடுதலையாக்கினார் (கலா 3:13)
கையெழுத்து அழிக்கப்பட்டது ... சிலுவையில்
ஆணியறையப்பட்டது (கொலோ 2:14)
கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார், ஆனால் எழுந்தார்;
கிரியாப்பிரமாணம் சிலுவையிலறையப்பட்டது, எழுந்திராது!

புதிய உடன்படிக்கையென்பது பழையதோடு சேர்க்கப்பட்டதல்ல;
புதிய உடன்படிக்கை பழையதை நிராகரித்துவிட்டது!

- *''உயிர்த்தெழுதலின் வல்லமை''* மற்றும் *''பாடுகளின் ஐக்கியம்''* ஆகியவற்றை அறிவதற்காய்ப் பவுலின் பிரமாணக் கொள்கை தூக்கியெறியப்பட்டது (பிலி 3:4-10)

அதாவது, முதலாவது — உயிர்த்தெழுதலின் வல்லமை
அடுத்து — பாடுகளின் ஐக்கியம்
அதாவது, பாடனுபவிக்க வல்லமை!

ரோமர் & கலாத்தியர் நிருபங்களை அடிக்கடி வாசியுங்கள்.
இல்லையேல் கிறிஸ்துவில் உங்கள் சுயாதீனம்
கள்ள உபதேசிகளால் திருடப்படும் —
கலா 2:4 ... *விடுதலையை இரகசியமாய் உளவுபார்க்க ...*

எ.கா.) விசேஷித்த நாட்கள் ... தனிப்பட்டவரது விருப்பு
உணவு வகைகள் ... தனிப்பட்டவரது விருப்பு

''நியாயந்தீர்க்க நீ யார்? எழுந்தது கிறிஸ்தல்லவா?'' (ரோ 14:1-10)

உபவாசம், தசமபாகம் போன்றவைகூட —
புது ரசம் ... புதுத் துருத்தி (மாற் 2:18-22)

5. *தோல்விச் சிறையிலிருந்து விடுதலை* (Defeatism)

- பரமேறிய கிறிஸ்துவின் வரமாகிய ஆவியானவர் இறங்கியதும் பேதுருவுக்கும் பிற சீடருக்குமிருந்த தோல்வி மனப்பான்மை பறந்தோடியது —

அப் 2:32,33/4:10,13 ... *தைரியம் ...*

இயேசு பரமேறியிராவிடில்,
ஆவியானவர் இறங்கியிருக்கமாட்டார் —
யோ 16:7 ... *''நான் போவது உங்களுக்கு நல்லது''*

- பரமேறிய கர்த்தரிடமிருந்து ஊழிய வரங்கள் —

எபே 4:8-13 ... *அப்போஸ்தலர் ... தீர்க்கதரிசிகள் ...*

''ஒவ்வொருவருக்கும்'' வரங்கள் —
ரோ 12:4-6 ... *கிருபையின்படி வரங்கள்*

- *''சகல அதிகாரமும் ... ஆகையால் போங்கள்''* (மத் 28:18,19)

பாதாளத்தின் வாசல்கள் சீடரின் தீவிரத்தைத் தணிக்க முடியவில்லை —
எங்கும் சென்று பிரசங்கித்தனர்! (மாற் 16:20)
''கிறிஸ்து எழுந்திராவிடில் பிரசங்கம் வீண்!'' (1 கொரி 15:14)

அவர்கள் விட்ட சவால் —
''பாதாளமே, உன் ஜெயம் எங்கே?'' (1 கொரி 15:55)
''எனவே ... அசையாதவர்களாய் ... பணியில் பெருகுங்கள் ... உங்கள் உழைப்பு வீண்போகாது'' (வச 58)

பாடுங்கள்: *ஜெய கிறிஸ்து முன்செல்கிறார்,*
ஜெயமாக நடத்திடுவார்;
ஜெயக் கீதங்கள் நாம் பாடியே,
ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்;
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே!
— சகோதரி சாராள் நவரோஜி (1938-2014)

6. *பிரிவினைச் சிறையிலிருந்து விடுதலை* (Factionalism)

- கிறிஸ்து இறங்கியதாலும் ஏறியதாலும், *கிரேக்கனென்றுமில்லை, யூதனென்றுமில்லை* (கொலோ 3:1,11)

யூதனா, கிரேக்கனா — இனவாரி
விருத்தசேதனமா, இல்லையா — சடங்காச்சாரம்
புறவினத்தானா, புறநாட்டவனா — பூகோள ரீதி
அடிமையா, சுயாதீனனா — சமூக அந்தஸ்து

எ.கா.) எதிர்த் துருவங்கள் போன்ற இரு இனத்தார் —
யூதர் & புறவினத்தார்
''பிரிவினைச் சுவர் தகர்த்தெறியப்பட்டது'' (எபே 2:14)
''பகையைக் கொன்று'' ... (வச 16)

சிலுவை: ஒப்புரவாகுதலின் சின்னம்

- கிறிஸ்து நமது அஸ்திபாரமானால் இடம், இனம், நிறம் என்றெல்லாம் கிறிஸ்தவர்கள் பிரிந்து நிற்பது எப்படிச் சாத்தியம்?
  ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?''

தனி நபர்களைச் சுற்றிய வட்டங்கள் வேண்டாம் —
பவுல் ... அப்பொல்லோ ... கேபா ...
கடிந்து கொள்ளல்: *''பவுலா உங்களுக்காய்ச் சிலுவையிலறையப்பட்டான்?* (1 கொரி 1:10-13)

பிரசங்கிமாரும் தலைவர்களும் மக்களுக்குச் சொந்தம்;
மக்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தம்;
கிறிஸ்து பிதாவுக்குச் சொந்தம்! (1 கொரி 3:21-23)

- கிறிஸ்தவரல்லாதோருக்குமுன் நமது பலமின்மைக்கும் சாட்சியின்மைக்கும் முக்கிய காரணம் —
  தனிக்காட்டுத்தனம் ...
  சபைப்பிரிவு வெறி ...
  சொந்த சாம்ராஜ்யங்கள் ...
  ஒருவரையொருவர் குற்றம் சாட்டுதல்
  தேவனுக்குத்தான் இருதயங்கள் தெரியும்!

7. *பாதக நோக்குச் சிறையிலிருந்து விடுதலை* (Pessimism)

அதாவது, அவிசுவாசம்

- பயத்தினால் சீடர் அறையைப் பூட்டி உள்ளே இருந்தனர் ...
  உயிர்த்த கர்த்தர் உள்ளே நுழைந்து *''சமாதானம்''* என்றார்!

அவர்கள் பயம் பறக்கும்படி அவர்கள்மீது ஊதினார் —
யோ 20:19-22

- **எல்லாச்** சபைகளுக்கும் கிறிஸ்துவின் செய்தி —
  வெளி 1:17-19 ... *பயப்படாதே ... ஆதியும் அந்தமும் ...மரித்தேன்...உயிர்த்தேன்...பாதாளம்...மரணச் சாவிகள்*

- உயிர்த்து 40 நாட்கள் கழித்துக் கிறிஸ்து பரமேறினார் —
  மறுபடியும் பயம், பாதகச் சிந்தை —
  வெண்ணுடையில் இருவரைத் தேவன் அனுப்பினார்;
  அவர்கள் சொன்னது —

*''ஏன் மேலேயே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? ...
புறப்பட்டுச் சென்று பணியில் ஈடுபடுங்கள் ...
சென்றபடியே அவர் திரும்ப வருவார் ...''*
(அப் 1:9-11)

- அவர் திரும்ப வருவார் என்பதற்குப் பரமேறுதலே அத்தாட்சி — (யோ 14:1,3) ... *உங்களுக்காக ஓரிடத்தை ஆயத்தம்பண்ணச் செல்கிறேன் ... உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.*

■ *முடிவுரை*

கிறிஸ்து இறங்கியதாலும் ஏறியதாலும் —

மாம்சீகச் சிறை ஒழிந்தது
பணப் பிரியச் சிறை ஒழிந்தது
சடங்காச்சாரச் சிறை ஒழிந்தது
பிரமாணச் சிறை ஒழிந்தது
தோல்விச் சிறை ஒழிந்தது
பிரிவினைச் சிறை ஒழிந்தது
பாதகநோக்குச் சிறை ஒழிந்தது

இனிச் சிறை கிடையாது; சிறகடித்துப் பறந்திடுவோம்!

(20ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

22

உயிர்த்தெழுதலின் வல்லமை

The Power of Resurrection

முகவுரை

பக்தியுள்ள யூதன் என்ற வகையில் பவுலுக்கு எத்தனையோ சிறப்புகளிருந்தன — பிலி 3:4-6; அப் 22:8; 26:5; 2 கொரி 11:22

சொல்லப்போனால், அவரது மார்க்கத்தில் பிறரை அவர் மிஞ்சியிருந்தார்; ஆனால் கிறிஸ்துவின் ***''உயிர்த்தெழுதலின் வல்லமையை''*** அறிவதற்காக எல்லாவற்றையும் *''குப்பை''* என்றெண்ணினார் — (பிலி 3:10)

''மரித்தோரின் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்காகவே'' அவன் நியாயந்தீர்க்கப்படுவதாக யூத சங்கத்தார்முன் அறிவித்தார் (அப் 23:6)

மன்னன் அகிரிப்பாமுன் அவரது சவாலும் இதுவே — (அப் 26:7,8)

''உயிர்த்தெழுதலின் வல்லமையைக்'' குறித்த நடைமுறை அறிவும் அனுபவமும் இன்று நமக்குண்டா?

மரணத்திற்கு முன்பும் அதற்குப் பின்பும் நாம் ''உயிர்த்தெழுதலின் வல்லமையை'' அனுபவிக்கமுடியுமென இயேசு வாக்களித்தார் — (யோ 11:25,26)

உயிர்த்தெழுதலின் வல்லமையை இன்று அனுபவிப்பது:

1. உயிர்த்தெழுதலினால் நீதிமானாக்கப்படுதல்

ரோ 4:17-25 ... *ஆபிரகாம் ... நீதிமான்... அவனுக்காக மட்டுமல்ல ... நமக்காகவும் ... நாம் நீதிமான்களாக்கப்பட உயிர்த்தெழுந்தார்.*

5:10 ... *மரணத்தினால் ஒப்புரவாகுதல் ... ஜீவனால் இரட்சிப்பு*

10:9,10 ... *விசுவாசம் ... தேவன் எழுப்பினார் ... இரட்சிப்பு*

எபே 1:18-20 ... *விசுவாசிக்கும் நமக்கு வல்லமை ... எழுப்பி ...*

2:1,4-6 ... *கிறிஸ்துவுடன் உயிர்ப்பித்தார் ... இரட்சிப்பு*

கொலோ 2:12,13 ... *அடக்கம் ... எழுந்து ... ஞானஸ்நானம் ... மன்னித்து*

1 பேது 3:21 ... *ஞானஸ்நானம் ... உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது*

2. உயிர்த்தெழுதலினால் பாவத்தின்மீது வெற்றி

ரோ 6:4-14 ... (இந்த முழுப் பகுதியையும் வாசியுங்கள்)
எழுப்பப்பட்டு ... நடந்துகொள்ள ... பாவத்திற்கு அடிமைகளல்ல ... விடுதலை ... தேவனுக்குப் பிழைத்து ... உறுப்புகளை ஒப்புக்கொடுங்கள் ... பாவம் மேற்கொள்ள மாட்டாது

1 கொரி 15:14,17 ... *கிறிஸ்து எழுந்திராவிடில் ... பிரசங்கம் வீண் ... விசுவாசம் வீண் ... இன்னும் பாவத்தில் ...*

3. உயிர்த்தெழுதலினால் ஊழிய வரங்கள்

யோ 7: 39 ... *இயேசு மகிமைப்படவில்லை ... பரிசுத்த ஆவி அருளப்படவில்லை*

அப் 2:32,33 ... *இயேசுவைத் தேவன் எழுப்பினார் ... வாக்குப்பண்ணப்பட்ட ஆவி ... பொழிந்தருளினார்*

ரோ 1:4,5 ... *உயிர்த்தெழுதல் ... கிருபை ... அப்போஸ்தலத்துவம்*

எபே 4:7-12 ... *கிறிஸ்துவின் ஈவு ... உன்னதம் ஏறி ... வரங்கள்*

அப் 4:33 ... *உயிர்த்தெழுதல் ... வல்லமை ... சாட்சி*

4. உயிர்த்தெழுதலினால் மன்றாட்டுப்பணி

ரோ 8:34 ... *கிறிஸ்து ... மரித்து ... உயிர்த்து ... வேண்டுதல்*

எபி 4:14-16 ... *பிரதான ஆசாரியன் ... வானங்கள் ... கிருபாசனம்*

7:25 ... *வேண்டுதல் செய்ய உயிரோடிருக்கிறார்*

யோ 14:12,14; 16:23,24 ... *எனது நாமத்தில் பிதாவிடம் ...*

5. உயிர்த்தெழுதலினால் நமது உடல்களுக்குப் புத்துயிர்

ரோ 8:11 ... *இயேசுவை எழுப்பிய ஆவி ... ஆவியானவர் மூலம் சாவுக்கேதுவான உடல்களை உயிர்ப்பிக்கிறவர்*

2 கொரி 12:9 ... *முள் ... கிருபை ... கிறிஸ்துவின் வல்லமை*

13:4 ... *சிலுவையிலறையப்பட்டார் ... தேவ வல்லமை ...*
பலவீனம் ... வல்லமையால் ஜீவன்

ரோ 8:23 ... *ஆவியின் முதற்பலன்கள் ... சரீர மீட்பு*

1 கொரி 15:42-50; 53-55 ... *விதைக்கப்படும் ... எழுந்திருக்கும்*
... பூவுடல் ... பூமி ... வானம் ...
அழியாமை ... சாவாமை
அதாவது, மகிமைப்படுத்தப்பட்ட உடல்கள்

6. உயிர்த்தெழுதலின் வல்லமையால் சகவுறவுகள்

யோ 20:17 ... உயிர்த்த இரட்சகரின் வார்த்தைகள்:
என் சகோதரர் ... என் பிதா ... உங்கள் பிதா
... என் தேவன் ... உங்கள் தேவன்
நாமெல்லாரும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள்

ரோ 14:7-10 ... *கிறிஸ்து மரித்து ... எழுந்து ... உன் சகோதரனை*
ஏன் நியாயந்தீர்க்கிறாய்?

அப் 3:14,15 ... *நீங்கள் கொலை செய்தீர்கள் ... தேவன் எழுப்பினார்*
... நாங்கள் சாட்சிகள்
(ஒன்று சேர்ந்து சாட்சி பகருதல்)

4:32-34 ... உயிர்த்தெழுதலின் வல்லமை விசுவாசிகளை
ஒன்றிணைத்தது.

7. உயிர்த்தெழுதலின் வல்லமையால் பாடுகள் சகிப்பு

ரோ 8:34-36 ... *கிறிஸ்து மரித்தார் ... எழுந்தார் ... துன்பம் ...*
வியாகுலம் ... உபத்திரவம் ... பஞ்சம்

2 கொரி 1:8-10 ... *உபத்திரவம் ... மரித்தோரை எழுப்புகிறவர் ...*
விடுவித்தார் ... விடுவிக்கிறார் ... விடுவிப்பார்

4:7 ... *மண் பாத்திரங்கள் ... வல்லமை ... தேவனால்*

:11,14 ... *மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம் ...*
சாவுக்கேதுவான உடல் ... கிறிஸ்துவின் ஜீவன் ...
அவரை எழுப்பினார் ... நம்மையும் எழுப்புவார்

2 தீமோ 2:8-11 ... *கிறிஸ்து எழுந்தார் ... துன்பம் ... கட்டப்பட்டு*
... சகிக்கிறேன் ... அவரோடு பிழைத்திருப்போம் ...

எபி 11:35 ... *வதைக்கப்பட்டார்கள் ... மேலான உயிர்த்தெழுதல்*

சிமிர்னா சபைக்கு மட்டும்தான் இயேசு தம்மை *''மரித்தும்*
உயிர்த்தவராய்'' அறிமுகம் செய்தார் (வெளி 2:8)
இந்தச் சபை கொடுமையான உபத்திரவத்தில் இருந்தது —
வச 9 ... *தரித்திரம் ... தூஷணம்*
வச 10 ... *பாடுகள் ... காவல் ... உபத்திரவம்*
''மரணம் வரை உண்மையாயிருந்தால்'' திருவாக்கு —
வச 10,11 ... *ஜீவ கிரீடம் ... இரண்டாம் மரணமில்லை*

பாடுங்கள்: *ஜீவிக்கிறார், இயேசு, ஜீவிக்கிறார்;*
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்;
துன்பத்தில் என் நல் துணை அவரே,
என்றென்றும் ஜீவிக்கிறார்!

செங்கடல் அவர் சொல்ல இரண்டாய் நின்றது,
பெருங்கோட்டை ஒன்று தரைமட்டமானது,
அவர் சொல்லக் குருடனின் கண் திறந்தது,
அவர் தொடக் குஷ்டரோகி சுத்தமாயினான்!

உம்மை என்றும் விடாமல் நான் தொடரவே,
என்னை என்றும் விடாமல் நீர் பிடிக்கவே,
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டைக் காட்டும் நல்ல மேய்ப்பரே!

23

தேவன் வெறுக்கும் மார்க்கம்

The Religion God hates

முகவுரை

''மார்க்கம்'' அல்லது ''மதம்'' என்றால் ''நம்பிக்கையும் அதற்கேற்ற செயல்பாடும்'' என்று பொருள்படும்.

தேவனது வழிகளுக்குச் சாத்தான் எப்பொழுதும் எதிரானவன். அவற்றிற்கு அவன் மாற்றுக்களைக் கண்டுபிடிப்பான் —

தேவனுடைய சபை vs. *சாத்தானுடைய கூட்டம்*
(அப் 20:28; வெளி 2:9)

கிறிஸ்துவின் உபதேசம் vs. *பிசாசின் உபதேசம்*
(2 யோ 9; 1 தீமோ 4:1)

இவ்விரண்டும் நதிகள்போல் சரித்திரம் முழுவதும் ஓடுகின்றன —

நெருக்கமான வாசல் vs. *விசாலமான பாதை* (மத் 7:13,14)
தேவனது சிறுபான்மையினர் vs. பிசாசின் பெரும்பான்மையினர்

சாத்தானின் மார்க்கமாகிய விசாலமான பாதையை ஆண்டவர் வெறுக்கிறார். அதின் பல்வேறு வெளிப்பாடுகளைத் திருமறை சுட்டிக்காட்டுகிறது —

1. ***காயீனின் மார்க்கம்*** (Religion of Cain)

ஆதி 4:3-5 ... காயீன் ... *''ஒரு'' காணிக்கை ...*
ஆபேல் ... *மந்தையில் ''முதலீற்று''*

இயேசுவின் இரத்தத்தின் புண்ணியங்களை விசுவாசியாத ''கிரியைகளின்'' மார்க்கம் —
அதாவது, கிறிஸ்து முடித்த இரட்சிப்பு (எபே 2:8,9; ரோ 10:9,10)

ஆபேலின் காணிக்கை ஒரு ''பலி'' (எபி 11:4)
இரத்தம் சிந்துதல் இல்லாது பாவ மன்னிப்பு கிடையாது —
(ரோ 3:23-27; எபி 7:22,14)

கிறிஸ்துவை விசுவாசியாது செய்யப்பட்டால் ''மார்க்கச் செயல்களும்'' தேவனது பார்வையில் *பொல்லாதவைதான்* (1 யோ 3:12)

2. ***ஏசாவின் மார்க்கம்*** (Religion of Esau)

இவ்வித மார்க்கம் ஆன்மீகத்தைவிடச் சிற்றின்பம் நாடும். தனது உடனடித் தேவைக்காக முடிவான ஆன்மீக ஆசீர்வாதத்தை ஏசா விற்றுப்போட்டான் —

ஆதி 25:29-34 ... *தலைப்பிள்ளைப் பாகம்*

ஏசாவைப் புதிய ஏற்பாடு *''சீர்கெட்டவன்''* என்றழைக்கிறது —
எபி 12:16

''சேஷ்ட புத்திர பாகம்'' என்பது மேசியாவின் வம்ச வரிசையைக் குறிக்கும்; ஏசா அதை அசட்டை செய்ததால், இச்சிலாக்கியம் இளையவனான யாக்கோபுக்குக் கிடைத்தது —
லூக் 3:34 (இயேசுவின் வம்ச வரலாறு)

ஏசா அதை நித்தியமாய் இழந்தான் (எபி 12:17)

கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் மார்க்கத்தைத் தேவன் வெறுக்கிறார்
ரோ 9:13; மல் 1:1-3

இந்த மார்க்கத்திற்கு எதிராய் இயேசு எச்சரித்தார் —

யோ 6:27 ... *அழிந்துபோகும் ஆகாரம் ... நித்திய வாழ்வு ...*
தேவ குமாரன் ... அவரது முத்திரை

மத் 6:31-33 ... *எதை உண்போம், குடிப்போம், உடுத்துவோம்?*
... புறவினத்தார் ... முதலாவது தேவ இராஜ்யம்

3. ***பிலேயாமின் மார்க்கம்*** (Religion of Balaam)

மோவாப் இராஜாவின் கீழ் பிலேயாம் ஒரு தீர்க்கனாயிருந்தான். அவன் மீதிருந்த ஆவியின் அபிஷேகம் மறுக்க முடியாதது —
எண் 24:2

மேசியாவைக் குறித்து நேர்த்தியாய்த் தீர்க்கதரிசனம் உரைத்தான் —
எண் 24:14-19 ... *நட்சத்திரம் ... செங்கோல் ...*

இப்படியெல்லாமிருந்தும், பொருளாசை அவனது இதயத்தை அரித்துப்போட்டது —

எண் 22:18 ... பாலாக் வாக்குப்பண்ணிய பரிசுகள்
:19 ... ஜெபித்துப்பார்க்க அவசியமென்ன?!

தேவன் கடிந்துகொள்கிறார் —
''உன் வழி எனக்குமுன் மாறுபாடாயிருக்கிறது'' (வச 32)

வியாபார நோக்குடைய மார்க்கத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு!

பிலேயாமைக் *''கூலியமர்த்தலாம்''* (நெகே 13:1)

பிலேயாமின் வழியை அப்போஸ்தலன் பேதுரு கண்டிக்கிறார் —
2 பேது 2:14-16 ... *பொருளாசையில் பழகிய இருதயம் ...*
அநீதத்தின் கூலி ... அக்கிரமம் ...
தீர்க்கதரிசியின் மதிகேடு ...

யூதா இதனைப் *''பிலேயாமின் வஞ்சகம்''* என்றழைக்கிறார் —
... *கூலிக்காக விரைந்தோடி* ... (யூதா 11)

பொருளாசையுள்ள இருதயத்தோடு ஜெபிப்பதையும், பிரசங்கிப்பதையும், தீர்க்கதரிசனம் உரைப்பதையும் திருமறை நெடுகவே கண்டிக்கிறது —

எரே 6:13,14 ... *பொருளாசை ... தீர்க்கதரிசி ... ஆசாரியன்*
மத் 10:7,8 ... *பிரசங்கியுங்கள் ... குணமாக்குங்கள் ...*
இலவசமாய்க் கொடுங்கள்
23:14 ... *விதவைகளின் வீடுகளைச் சூறையாடி ...*
நீண்ட ஜெபங்கள்
2 கொரி 2:17 ... *ஆதாயத்திற்காகத் திருவசனக் கலப்படம்*

4. *பரிசேயர் மார்க்கம்* (Religion of the Pharisees)

தேவாலயத்திற்கு ஜெபிக்கச் சென்ற பரிசேயனை இங்கு குறிப்பிடுகிறோம் (லூக் 18)

இது சுயநீதியின் மார்க்கம் —
வச 9 ... *தாங்கள் நீதியுள்ளவர்களென்று தங்களை*
நம்பியிருந்தவர்களைப்பற்றிய உவமை ...
வரிக்காரனோ கடவுளது கிருபைக்காய்க் கெஞ்சினான் (வச 13)

இதுவே இயேசுவின் காலத்துப் பரிசேயர் பலரது மனநிலையாயிருந் திருக்கும் —
எ.கா.) லூக் 7:29,30 ... *ஆயக்காரரும் தேவன் நீதியுள்ளவர்*
என்று அறிக்கையிட்டனர் ... பரிசேயரோ
அவரது ஆலோசனையைத் தள்ளி ... யோவானால்
ஞானஸ்நானம் பெற மறுத்தனர்.

பரிசேயனாயிருந்த பவுல் இந்த சுயநீதியிலிருந்துதான் மனம் திரும்பினார் —
பிலி 3:5 ... *நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்*
:8 ... *அவைகளைக் குப்பையென்று எண்ணினேன்*
:9 ... *எனது சொந்த நீதியல்ல ... கிறிஸ்துவின்மீதுள்ள*
விசுவாசத்தால் கிட்டும் தேவநீதி

சுயநீதியைப் பவுல் *''குப்பை''* என்றழைக்கிறார்;
அதை ஏசாயா *''அழுக்கான கந்தை''* என்றார் (ஏசா 64:6)

தேவ நீதிக்கு அடிபணியாது *''தங்கள் சொந்த நீதியை''* நிலைநாட்ட விரும்பும் இஸ்ரவேலருக்காய்ப் பவுல் புலம்பினார் (ரோ 10:3,4)

கடவுளது சாட்சியின்படி யோபு *''நீதிமானாய்''* இருந்தாலும், அவரும் தனது சுயநீதியிலிருந்து மனந்திரும்பினார் —
(யோபு 1:1,8; 33:8,9; 42:5,6)

சுயநீதிக்காரர் பொதுவாகப் பிறரை அவமதிப்பர் (லூக் 18:9)

5. *பரிசேயர்-வேதபாரகர் மார்க்கம்* (Religion of Pharisees & Scribes)

பரிசேயரும் வேதபாரகரும் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி சேர்த்தே குறிப்பிடப்படுகின்றனர் (மத் 3:7; 23:13,14 ...)

நியாயப்பிரமாணத்தை வியாக்கியானிப்பதில் வேதபாரகர் வித்தகர்கள்; அதை அப்பியாசிப்பதில் ஓரம் செல்லுவோர் பரிசேயர்.

இவ்விரு திறத்தாரும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள இறைத் திட்டங்களைத் தவறாய் விளக்கிய மார்க்கத் தலைவராம்.

திரும்பத் திரும்ப *''உங்களுக்கு ஐயோ''* என்று இவர்களைப் பார்த்து இயேசு கூறியதிலிருந்து இவர்களது மார்க்கத்தைக் கடவுள் எவ்வளவாய் வெறுத்தாரென்பது தெளிவு (மத் 23).

இவர்களை இயேசு, *''சர்ப்பங்களே, விரியன்களே''* என்றும் *''பிசாசின் பிள்ளைகள்''* என்றும் கடிந்துகொண்டார் (மத் 12:34; 23:33; யோ 8:44)

பரிசேயர் அனைவரும் மோசம் என்று சொல்லிவிடமுடியாது; நிக்கொதேமு போன்ற நல்லவர்களும் இருந்தனர் (யோ 3).

அப்படியே வேதபாரகர் அனைவரும் மோசம் அல்ல;
எஸ்றா போன்ற சிறந்தோரும் இருந்தனர் (எஸ்றா 7:6,10)

பரிசேயர் வேதபாரகரின் மார்க்கம் —

அ) வெளிப்படையானவற்றை அளவுக்குமீறி வலியுறுத்தினர்
மத் 23:25-28 ... *பாத்திரத்தின் வெளிப்புறம் ... வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறை ... பார்வைக்கு அழகு*
இது கட்டாயமாக ''மாய்மாலத்திற்கு'' நடத்தும் (வச 28)
(வச 13அ,14அ,15அ ...)

ஆ) திருவசனத்தின் இடத்தைப் பாரம்பரியங்களுக்குக் கொடுத்தனர் ... மாற் 7:5-13 (கலா 1:14)
''உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வார்த்தையை அவமாக்குகிறீர்கள்'' (வச 13)

நமது எல்லாச் சபைப் பிரிவுகளிலும் பரிசேயத்துவம் உண்டு —
ஆங்கிலிக்கன் பரிசேயத்துவம்,
மெதடிஸ்டு பரிசேயத்துவம்,
பெந்தெகொஸ்தே பரிசேயத்துவம், முதலியன.

''பரிசேயரது புளித்தமாவைக்'' குறித்து இயேசு எச்சரித்தார் —
லூக் 12:1

மாவு முழுவதையும் கொஞ்சம் புளித்தமாவு புளிக்கச் செய்யும் —
1 கொரி 5:6; கலா 5:9

''மாவு முழுவதையும்'' = தனி நபரின் முழு வாழ்வையும்
= திருச்சபையின் முழு வாழ்வையும்

6. *சதுசேயர் மார்க்கம்* (Religion of Sadducees)

சதுசேயர் என்பவர் ஆசாரிய வம்சத்தைச் சேர்ந்த மேல்மட்டத்தினர்.
''*உயிர்த்தெழுதலை நம்பாதோர்*'' என இவர்கள் அறிமுகப்படுத்தப் படுகின்றனர் (மத் 22:23; மாற் 12:18; லூக் 20:27)

உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர் பிரசங்கித்தது சதுசேயருக்கு *''மிகுந்த கடுப்பை''* உண்டாக்கியது —
அப் 4:1,2

இவர்களுக்கும் பரிசேயருக்கும் வேறுபாடு என்னவெனில், இவர்கள் *''உயிர்த்தெழுதல், தேவதூதர், ஆவி''* ஆகியவற்றை நம்பமாட்டார் (அப் 23:7,8)

இந்த மார்க்கம் நம்பாதவை —

அ) மரணத்திற்குப்பின் வாழ்வு

1 கொரி 15:19 ... *இவ்வுலகிற்காக மட்டும் நாம் கிறிஸ்துமேல் நம்பிக்கையாயிருந்தால் ... பரிதாபம்*

இவ்வித மக்களைப் பவுல் *''துஷ்ட மிருகங்கள்''* என்றழைக்கிறார்.
வச 32 ... *மிருகங்கள் ... புசிப்போம் ... குடிப்போம் ... சாவோம்*

மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு, கிறிஸ்துவின் மறுவருகை ஆகியவை குறித்து இன்று பிரசங்கங்கள் குறைவு, கவனம்!

ஆ) தேவனது அற்புத வல்லமை

''வேத வாக்கியங்களையும் தேவ வல்லமையையும் அறியாததால் தப்பான எண்ணம் கொள்கிறீர்கள்'' என்று சதுசேயரை இயேசு கடிந்துகொண்டார் (மத் 22:29)

தேவனது வல்லமை அப்போஸ்தலர் மூலம் குணமளிக்கவும் பிசாசுகளைத் துரத்தவும வெளிப்பட்டபோது சதுசேயர் *''பொறாமையினால் நிறைந்தார்கள்''* (அப் 5:14-18)

நமது வேதாகமக் கல்லூரிகளிலும் திருச்சபைகளிலும் உள்ள
''நவீனவாதிகள்தான்'' இன்றையச் சதுசேயர்.
''அற்புத வல்லமையை'' இவர்கள் நம்பமாட்டார்.
''அற்புதங்களின் காலம் கடந்துவிட்டது'' என்றே போதிப்பர்.

''தேவனால் முடியுமா?'' எனக் கேட்காதீர்;
''தேவனால் முடியும்'' என்று முழங்குவீர் (சங் 78:17-20).
தேவ கோபத்தைக் கிளறாதீர் (வச 21,22).

7. *ஆசாரியன்-லேவியன் மார்க்கம்* (Religion of Priest & Levite)

இங்கு நாம் குறிப்பிடுவது நல்ல சமாரியன் சம்பவத்தில் வரும் நபர்கள் — (லூக் 10:29-37)

தேவனுக்குச் செய்யவேண்டியவற்றை வலியுறுத்தி, மனிதருக்குச் செய்யவேண்டியவற்றை அலட்சியம்பண்ணும் மார்க்கம்.

நல்ல சமாரியன் கதையின் பின்னணி இதை விளக்குகிறது —
(வச 25-29)

சாலையில் காயப்பட்டுக் கிடந்தவனைக் கவனிக்க முடியாத அளவு அந்த ஆசாரியனும் லேவியனும் ஆலயப் பணிகளில் தீவிரமாயிருந்திருக்கலாம்.

ஒரு புறம் சாய்ந்த இந்த மார்க்கம் கடிந்துகொள்ளப்படுகிறது. திருமறையெங்கும் **இரக்கச்** செயல்கள் வலியுறுத்தப்படுகின்றன —

ஏசா 1:15-18 ... இரக்கமில்லாத ஜெபம் அர்த்தமற்றது.
தானி 4:27 ... எளியவர்க்கு இரங்குங்கள்.
ஏசா 58:5,6,7... தேவனுக்கு உகந்த உபவாசம்
லூக் 3:11 ... உடைகளையும் உணவையும் பகிருங்கள்.
19:8,9 ... ஏழைகளுக்குப் பாதிச் சொத்து
அப் 10:2,4 ... ஜெபங்களும் தானதர்மங்களும்
எபி 13:15,16... தொழுகையும் பகிர்தலும்

சமூகநலக் கண்ணோட்டமில்லாத மார்க்கம் —
அ) செத்தது (யாக் 2:15-17)
ஆ) வஞ்சகமானது (1 யோ 4:20)

இவ்வித மார்க்கத்தைத் தேவன் வெறுக்கிறார் (ஏசா 1:15-17)

8. *யூதாஸ் ஸ்காரியோத்தின் மார்க்கம்* (Religion of Judas Iscariot)

''காட்டிக் கொடுத்தவன்'' என்றே யூதாஸ் அழைக்கப்படுகிறான். இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் முன்னரே, அவன் *''திருடன்''* என்றழைக்கப்படுகிறான் —

யோ 12:6 ... *திருடன் ... பணப்பை ... எடுத்துக்கொள்வான்*

பணக்காரியங்களில் உண்மையற்றோரை யூதாஸ் குறிப்பிடுகிறான். தேவன் அதை வன்மையாய்க் கண்டிக்கிறார் —

லூக் 16:11 ... *உலகப் பொருள் ... மெய்யான பொருள்*

பணக்காரியங்களில் அப்போஸ்தலரின் உத்தமம் அபாரம் —

2 கொரி 8:20,21 ... *தேவனுக்குமுன் ... மனிதருக்குமுன்*

பொருளாசையின்றித் திருப்தியாயிருப்பதைத் தலைமைத்துவத் திற்கு அடிப்படைத் தகுதியாய் அவர்கள் குறிப்பிட்டனர் —

1 தீமோ 3:3,8; தீத் 1:7 ... *மூப்பர் ... உதவிக்காரர் ...*

யூதாசைப்போல் தற்கொலை செய்தாலும் செய்யாவிட்டாலும் பொருளாசையே தற்கொலைதான் —

1 தீமோ 6:9,10 ... *விழுகிறார்கள் ... அமிழ்த்துகிறது ... உருவக் குத்துகிறார்கள் ... அழிவு ... கேடு*

யூதாசை இயேசு *''கேட்டின் மகன்''* என்றழைத்தார் (யோ 17:12)

இறைவனுக்குரியதை இறைவனுக்கும்,
இராயனுக்குரியதை இராயனுக்கும் கொடாதவரும் திருடர்தான் —
மல் 3:8; மத் 22:21; ரோ 13:7

தவறான வழிகளில் சம்பாதித்துவிட்டு, *''அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று தாரும்''* என ஜெபித்தால் தேவன் அந்த ஜெபத்தை அருவருக்கிறார்!

9. *நிக்கொலாயினரின் மார்க்கம்* (Religion of Nicolaitans)

நிக்கொலாயினரைக் குறித்து இரு வசனங்கள் —
வெளி 2:6 ... *நிக்கொலாய் மதத்தினரின் செயல்பாடுகள்*
:15 ... *நிக்கொலாய் மதத்தினரின் போதனை*
''நான் இதை வெறுக்கிறேன்'' என்கிறார் ஆண்டவர்.

ஒழுக்கக் கேட்டையும் சிலை வணக்கத்தையும் பரப்பிய ஒரு துர்வுபதேசக் கூட்டம்தான் நிக்கொலாயினரென்று கருதப்படுகிறது.

அவர்கள் சுயாதீனத்தை அளவுக்குமீறி வலியுறுத்தி,
சன்மார்க்க நெறிகளை அலட்சியப்படுத்தி,
ஒழுக்கக்கேட்டுக்கு வழிநடத்தியவர்கள் (வெளி 2:14.15)

ஒழுக்கக்கேடு இன்று சர்வ சாதாரணம். தன்னடக்கத்தை மார்க்கவுலகும் பொதுவுலகும் வற்புறுத்துவதேயில்லை.

இது சரி, இது தவறு, என்ற கோடு மறைந்துவிட்டது. பரிசுத்த தேவனுக்கும் அவரது மாறாத வார்த்தைக்கும் எதிரான போக்கு இது.

எவர் செய்தாலும், எங்கு செய்தாலும், எப்பொழுது செய்தாலும்,
எதற்காய்ச் செய்தாலும் பாவம் பாவம்தான்!
சகிப்பு (tolerance) என்ற பெயரில் உலகம் சமரசம் (compromise) பண்ணுகிறது.

எபேசு சபையைப் போல நாம் தேவன் வெறுப்பதை வெறுப்போம்— வெளி 2:6

10. லவோதிக்கேயர் மார்க்கம் (Religion of Laodiceans)

இது *''வெதுவெதுப்பான''* மார்க்கத்தைக் குறிக்கிறது — வெளி 3:15,16 ... *''அனலுமல்ல குளிருமல்ல''*

''நான் உன்னை வாந்திபண்ணிப்போடுவேன்'' என்று கிறிஸ்து சொல்வாரானால் இதை எவ்வளவு வெறுக்கிறார் பாருங்கள்!

திருச்சபையின் பெரும் பகுதியின் இன்றைய நிலை இதுவே — ஆனால், *''நான் செல்வந்தன் ... குறைவில்லை''* என்று அது தம்பட்டம் அடித்துக்கொள்ளும் (வச 17)

ஆனால் அதற்குத் தெரியாத அதின் நிலை: *''நிர்ப்பாக்கியம், பரிதாபம், தரித்திரம், குருட்டுத்தனம், நிர்வாணம்''*

அதற்கு ஆராதனைகள், பாடல்கள், பிரசங்கங்கள், நிகழ்ச்சிகள், திட்டங்கள், சொத்துக்கள், இப்படி யாவும் உண்டு;
கிறிஸ்துவோ வெளியே தள்ளப்பட்டுள்ளார் (வச 20).

வேறு வார்த்தைகளில் சொன்னால்,
அதற்குத் *''தேவபக்தியின் தோற்றமுண்டு, வல்லமை கிடையாது!''* (2 தீமோ 3:5)

இன்று தேவனது கவலை இந்துத்துவமோ, கம்யூனிசமோ அல்ல, திருச்சபையின் செத்த நிலையே! (வெளி 3:2)

பரிகாரம்: கிறிஸ்துவின் ஐசுவரியம், பரிசுத்தம், பிரகாசம் போன்றவற்றை அனுபவிக்க அவரோடு ஐக்கியப்பட மனந்திரும்பி வாருங்கள் (வச 18-20).

(3ஆம் அத்தியாயத்திலுள்ள குறிப்புகளையும் படியுங்கள்.)

24

தேவ கிருபைக்கு நமது பிரதிபலிப்பு

How to Respond to God's grace

முகவுரை

''கிருபை'' என்பது ''தேவனது இலவச இரக்கம்'' எனப் பொருள்படும். புதிய உடன்படிக்கையில், இது நாம் அவருக்குப் பிரியமானபடி நடக்க அவர் நமது இதயத்தில் அருளும் உதவி (எபி 8:8-12). நாம் தேவ கிருபைக்குத் தகுதியுள்ளவர்களாக முடியாதெனினும், நாம் அதற்கு எவ்விதப் பிரதிபலிப்பு கொடுக்கவேண்டுமென்று விவிலியத்தில் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

எனவேதான் நமக்குத் திருமறை தரும் எச்சரிப்பு —

''தேவ கிருபையை வீணாய்ப் பெறாதீர்'' (2 கொரி 6:1)
இதன் பொருள் என்ன?
நாம் தேவன் விரும்புகிறபடி கிருபைக்குப் பிரதிபலிக்கவேண்டும்.
அதைச் செய்வது எப்படி?

1. கிருபை நம்மை இரட்சிக்கிறது (எபே 2:5,8)

— எனவே ஒருபோதும் பெருமையடிக்காதீர் (வச 9).

— இரட்சிக்கப்படாதோரை அவமதியாதீர்.

— கிருபையிலிருந்து விழுந்து விடாதீர் (கலா 5:4).
அதாவது, தேவன் நம்மை ஏற்பது என்றைக்கும் *கிருபையினாலேயே*, நமது *கிரியைகளினால்* அல்ல.

— பிரசங்கத்தில் தேவ கிருபையை விருதாவாக்காதீர் (கலா 2:18,21)
கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (அப் 20:24).

— நவீன உபதேசங்களின் பின்னே போகாதீர் (எபி 13:8,9).

2. கிருபை நமக்குப் பரிசுத்தத்தைப் போதிக்கிறது (தீத் 2:11,12)

— எனவே தெளிந்த புத்தியுடன் வாழுங்கள் (வச 11,12).

— எளிமையாய், பக்தியாய், உண்மையாய் இருங்கள் (2 கொரி 1:12)

— கிருபை இருக்கிறதென்று பாவத்தில் வாழாதீர் (ரோ 5:20-6:2).

கிருபை என்பது பாவம் செய்ய உரிமம் அல்ல (யூதா 4)

— பரிசுத்தமும் சகவுறவுகளும்

எபி 12:14,15 ... *கசப்பான வேர் ... கிருபை இழந்து ...*

— தாழ்மையின் மேல் தாழ்மைப்படுங்கள்; ஏனெனில் *தாழ்மையுள்ளோருக்கு அதிகக் கிருபையளிக்கிறார்* (யாக் 4:6)

1 பேது 5:5 ... *அடங்கியிருங்கள் ... உயர்த்துவார்*

3. கிருபை நமக்குச் சோதனையில் உதவுகிறது (எபி 4:15,16)

— எனவே சோதிக்கப்படும்போது தைரியமாய்க் கிருபாசனத்திற்கு ஓடுங்கள்; சோதனை எதுவானதாயும் இருக்கட்டுமே!

— நீங்கள் ஜெயிக்கப்படமாட்டீர்களென நிச்சயித்திருங்கள் (ரோ 6:14)

ஆனால் நமது உடலை ஒப்புக்கொடுத்து வாழவேண்டும் (வச 13)

4. கிருபை தேவனைச் சேவிக்க நமக்குதவுகிறது (எபி 12:28,29)

— எனவே இறைப்பணியில் முழுமூச்சுடன் செயல்படுங்கள்

1 கொரி 15:10 ... *எல்லாரிலும் அதிகப் பிரயாசம்*

— தேவன் தந்துள்ள வரங்களனைத்தையும் பயன்படுத்துங்கள்

ரோ 12:6-8 ... *வெவ்வேறு வரங்கள்*

— எவ்விதத் தியாகம் செய்யவும் தயங்காதீர்

2 கொரி 8:1,2 ... *தரித்திரம் ... உதாரத்துவம்*

— பிரசங்கிப்பதிலும் எழுதுவதிலும் தைரியமாயிருங்கள்

ரோ 15:16...*கிருபையினால் தைரியமாய் எழுதினேன்*

5. கிருபை நம்மைப் பாடுகளில் பலப்படுத்துகிறது.

2 கொரி 12:9 ... *என் கிருபை உனக்குப் போதும்*

— எனவே பாடுகளில் மகிழுங்கள் (வச 9ஆ,10)

— எதிர்ப்பிலும் உபத்திரவத்திலும் கிருபையைச் சார்ந்திருங்கள்

அப் 13:43

6. கிருபை நம்மைச் சோர்பிலிருந்து விலக்கிக் காக்கிறது.

2 தெச 2:16,17

— எனவே எச்சூழலிலும் இதயம் துவளாமல் முன்சென்றுகொண்டேயிருங்கள்.

— ''தாங்கும்'' கிருபை

பாடுங்கள்: *தேவ கிருபை என்றுமுள்ளது,*
அவர் கிருபை என்றுமுள்ளது,
அவரைப் போற்றித் துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்!

காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது!

7. கிருபை நம்மை நித்திய மகிமைக்குள் நடத்திச் செல்லும்.

எபே 2:6 ... *மேன்மை ... வருங்காலங்கள்*

— எனவே மகிமையான எதிர்காலத்தைக் குறித்து ஆனந்த எதிர்பார்ப்புடன் வாழுங்கள்.

— புதிய ஏற்பாட்டின் பல நிருபங்கள் மட்டுமல்ல, வெளிப்படுத்தல் புத்தகமும் கூறும் ஆசீர்வாதம்:

''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை
உங்களனைவரோடும் இருப்பதாக'' (வெளி 22:21)

தமது இரண்டாம் வருகையைக் குறித்துக் கிறிஸ்துவே வாக்குப் பண்ணியதை அடுத்து உடனே இந்த ஆசீர்வாதம் கூறப்படுகிறது (வச 20)

25

ஆராதனையின் அடுத்த பக்கம்

The Other Side of Worship

முகவுரை

- இது திருச்சபையில் ஆதிநிலையேகும் காலம் —
  அப் 3:19-21
  தேவனது பிரசன்னத்திலிருந்து *''இளைப்பாறுதலின்''* (புத்துயிர்) *''காலங்களை''* எதிர்நோக்கியிருக்கிறோம்.
  ''எல்லாம்'' சீர்திருத்தப்படவேண்டுமென்பதே இறைத்திட்டம்
  — நாமோ நமக்குப் பிரியமானதை மட்டும் பிடித்துக்கொள்கிறோம்
  — அதிலும் சில பகுதிகளில் மட்டும் கவனம் செலுத்துகிறோம்
  எ.கா.) தசமபாகப் பழக்கம் திரும்பி வருதல் (மல் 3:8-10)
  இதில் பரிசேயர் ஒரு பக்கத்தை மட்டும் எடுத்துக்கொண்டனர்
  மத் 23:23 ... *தசமபாகம் ... இரக்கம் இல்லை*
- இன்று அதிகம் பேசப்படும் ஆன்மீகப் பயிற்சி —
  ''ஆராதனை/தொழுகை''
  அபிஷேகத்தை நம்பாத சபைகளிலும் துதி ஆராதனைகள்.
  ஆனால், ஆராதனை என்பது பாடுதல், ஆரவாரித்தல், கைதட்டுதல், கரங்களை உயர்த்துதல், குதித்தல், ஆடுதல், இவை மட்டுமல்ல.
  ஆராதனை என்று வேதம் போதிப்பதில் இது 10 சதவீதம்கூட கிடையாது.
  இது ஒரு பக்கம் மட்டுமே —
  எ.கா.) எப்பிராயீம் *''திருப்பிப் போடாத அப்பம்''* (ஓசி 7:8)

ஆராதனையின் மறுபக்கம் 7 பயிற்சிகளை உள்ளடக்கியுள்ளது —

1. உடலைப் படைத்தல் (Surrender of our bodies)

- உண்மையைச் சொன்னால்,
  நாம் எதையும் ஆண்டவருக்குக் ''கொடுக்க'' முடியாது —
  ரோ 11:33-36 ... ஒரு புகழாரம், தேவாரம்.
  — தேவன் முழுமையில் முழுமையானவர், பூரணத்தில் பூரணமானவர், நிறைவில் நிறைவானவர்!

ஆராதிக்கும் ஓர் யூதனுடைய வார்த்தைகள் இவை!

அப்படியிருக்க ... ரோ 12:1 ... *உடல்கள்...புத்தியுள்ள ஆராதனை*
என்னே மகிமையான சத்தியம்!
எவ்வளவு முக்கியமான காரியம்!

- உடலைப் பரிசுத்தமாய்க் காப்பதற்கு எளிதான மாற்றாய்த் துதியும் ஆராதனையும் ஆகிவிடலாம் —
  எ.கா.) ஆகான் — ஆயி நகரில் தோல்வி
  அவன் துதி என்ற அர்த்தமுள்ள ''யூதா'' கோத்திரத்தான்!
  யோசுவா: *''அறிக்கையிட்டு'' மகிமை செலுத்து* (யோசு 7:16-21)
  வாயினால் துதித்துவிட்டு உடலின் பாவங்களை மறைக்காதீர்.
- எனவேதான் *''பரிசுத்த'' கைகளை உயர்த்துங்கள்* (1 தீமோ 2:8).
  இல்லையேல், நமது உடற்பாவனைகள் தேவனைக் கவராது —
  (அப் 17:24,25) மார்ஸ் மேடையில் பவுல்:
  ''மனிதரது கைகளால் பணிவிடை கொள்ளுவதில்லை!''
- நமது **உடல்களே** பரிசுத்த ஆவியின் ஆலயம் (1 கொரி 6:19,20)—
  அதாவது, தசையாலும் இரத்தத்தாலும் ஆகியவை.
  எனவேதான் எருசலேமின் ஆலயத்தைத் துர்ப்பிரயோகம் செய்தவர்களுக்கு இயேசு சாட்டையடி கொடுத்தார் (மத் 21:12,13)
  எ.கா.) தங்களது பொற்கோயில் Operation Blue Star என்ற திட்டத்தில் தீட்டுப்படுத்தப்பட்டதை சீக்கிய இனத்தார் இன்னும் மன்னிக்கவில்லை.
  புகழ் பாடுவதைவிட புனிதமாய் வாழ்வது முக்கியம்.
  இல்லையேல், வறட்டுக் கூச்சல்தான்!

2. கேள்வி கேட்காத கீழ்ப்படிதல் (Unquestioning Obedience)

- “Worship” என்ற பதம் ஆங்கில வேதாகமத்தில் முதலில் வருவது—
  ஆதி 22:5 ... *தொழுதுகொண்டு ...*
  கடவுளுக்குக் கீழ்ப்படிவதற்காகத் தனது ஒரே மகனைப் பலி கொடுப்பதையே *''தொழுகை''* என்றழைத்தான் ஆபிரகாம்!

இதற்குமுன் அவன் சாதாரண வகையில் தொழுதுகொண்டிருக்கிறான் (ஆதி 21:33): இப்பொழுது ஆராதனையின் மறுபக்கம்!

அவன் கேள்வியேதும் கேட்கவில்லை!
ஏன்? — அவர் தேவன்! அவர் ஆண்டவர்! அதுதான் ஆராதனை!

- ஆபிரகாம் — தனி நபரது கீழ்ப்படிதல்
அந்தியோகியாவிலுள்ளோர் — கூட்டுக் கீழ்ப்படிதல்
அப் 13:1-4

பரிவுள்ள பர்னபாவும், பலமுள்ள பவுலும்
அவர்களுக்கு இரு கண்கள் போல!
ஆனால், விவாதமோ கேள்வியோ கிடையாது!
இதுதான் ஆராதனையின் மறுபக்கம்!

ஆபிரகாம்: கிறிஸ்தவர்களுக்குத் தகப்பன்
அந்தியோகியாவிலுள்ளோர்: கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்ட முதல் சபையினர் (அப் 11:26)

- ஆராதனை என்பது ''என்னைப்'' பரவசப்படுத்த அல்ல,
''எம்பெருமானை'' உயர்த்த!
எப்படியாவது பரமனைப் பிரியப்படுத்தவேண்டுமென்பதே குறியாயிருக்கவேண்டும்.

இங்குதான் சவுலரசன் தவறினான் —
1 சாமு 15:20-22 ... கீழ்ப்படிதலே பலியிலும் மேல்!
கீழ்ப்படிதல் இல்லையேல்,
நமது ஆராதனைகளும் ஆரவாரங்களும் அர்த்தமற்றவை.

3. *அன்பு நிறை உறவுகள்* (Loving Relationships)

☐ மனிதனை நேசிப்பது = தேவனை நேசிப்பது (மத் 22:35-39)
இரண்டாம் கட்டளை, ஆனால் இரண்டாந்தரமானதல்ல.
ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்.
சகவுறவுகளுக்கு மாற்றாக ஆராதனை அமையமுடியாது.

☐ தேவனுக்குப் பலிகள் vs. அன்பில் நடந்துகொள்ளுதல்
எபே 4:31-5:2

☐ மனிதரை மதிப்பது தேவனுக்குப் பயப்படுவதின் மறுபக்கம் —
லூக் 18:2,4 ... *ஒரு நீதிபதி* ... விதவை ...
''நான் தேவனுக்குப் பயப்படாதவன்; மனிதரை மதியாதவன்''

- தேவனைத் துதிக்கும் நாவு மனிதனைத் தூற்ற முடியாது —
(தேவனை ஆராதிப்பது ... மனிதனை அழிப்பது)
யாக் 3:9-11 ... *தித்திப்பும் கசப்பும் ,,,*
- காணாத தேவனிடம் அன்புகூருவது எப்படி?
(1 யோ 4:20,21)
- சிலுவை — ✝ — உறவுகள்: நெடுக்கு & குறுக்கு

☐ *முதலாவது ஒப்புரவாகு ...*
மத் 5:23,24 ... *பலிபீடம்* (தொழுகை!)

யாருக்காவது உதவ இன்னும் ஒரு மைல் நடப்பதைவிட
இன்னும் ஒரு மணி நேரம் ஆராதிப்பது சுலபம்!
ஆனால் இவ்வித ஆராதனை மணமற்றது!

4. *அள்ளிக் கொடுக்கும் காணிக்கை* (Extravagant Offering)

☐ நம்மைப் பாதிக்காத தொழுகை ஒரு காசு பெறாது!
எ.கா.) அன்னாள் (1 சாமு 1:24-28)
அவர்கள் கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள்.
மகனைக் கொடுப்பதைவிட மாட்டைப் பலியிடுவது சுலபம்.

☐ உங்களுக்கு ''இரு பிள்ளைகள்'' இருந்தால் ஒன்று அதிகம்!
தலைப்பிள்ளை கர்த்தருக்கு (யாத் 13:1,2)

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இச்சவாலைச் சந்திக்க
முன்வராவிடில் உலகம் நற்செய்திமயமாகாது.

☐ இன்னோர் எடுத்துக்காட்டு: பாவியாகிய பெண் (லூக் 7:37,38)

அவள் அழுதாள், துடைத்தாள் —
இதைக்கூட நாம் செய்துவிடுவோம்.
ஆனால் அவள் இன்னும் ஓர் அடி முன்சென்றாள் —
தனக்கிருந்த விலையுயர்ந்ததைக் கொடுத்துவிட்டாள்.

இன்னும் சில பல்லவிகள் எளிதில் பாடிவிடுவோம்;
பத்தில் ஒன்றிற்கு மேல் கொடுக்கச் சொன்னாலோ பதறுவோம்!
"Worship" என்பதற்கு மூல வார்த்தை = "Worthship"

அதாவது, தகுதியானவருக்குத் தகுதியானதைப் படைப்பது.

C.T. ஸ்டட்: ''கிறிஸ்து எனக்காய் மரித்திருப்பாரானால்,
எனது தியாகம் எதுவும் பெரிதல்ல!''

பத்திலொன்றிலிருந்து பத்தில் பத்துக்கு வளர்வதே
தொழுகையெனும் ஏணியில் ஏறுவதாம்.

5. *தானதர்மச் செயல்கள்* (Charitable Deeds)

- ''ஆன்மீகத் தொழுகையைக்'' கிறிஸ்தவ உலகு சமூகச் சேவையிலிருந்து பிரித்துவிட்டது —
  இது தவறு — ஏசா 1:13-17

  ஆராதனைக் கூடுகைகளில் உள்ள செயல்பாடுகள் வீதிகளில் அன்பின் தொண்டுகளாய் வெளிப்படவேண்டும்!

  இவ்வசனப் பகுதி குறிப்பிடும் சிவேரென்ற பாவங்கள் ''செய்ய வேண்டியதைச் **செய்யத் தவறியவை**'' எனும் பாவங்களாம் (sins of omission).

- ஒன்றில் அதிக ஆர்வம் காட்டி அடுத்ததை ***மறப்பது*** —
  எபி 13:15,16 ... *ஸ்தோத்திர பலி ... தானதர்மம்*

  ஆராதனைப் பல்லவிகளில் பல ஆண்டவரை இராஜாவே என்று அழைக்கின்றன — மக்களை வெள்ளாடுகள், செம்மறியாடுகள் என்று பிரிப்பது அந்த இராஜாதான்! (மத் 25:31-46)

  ஆதிக் கிறிஸ்தவரின் சமநிலை வாழ்வு —

  அ) *''தேவனைத் துதித்தல்''* & *''மக்களிடத்தில் தயவு''*
  ஆ) *''அப்பம் பிட்குதல்''* & ''அப்பமில்லாதோர்க்குப் பகிர்தல்''
  அப் 2:44-47

- அன்னை தெரசா பல மணி நேரங்கள் முழங்காலில் நின்று துதித்த பின், அவர்களது பாதங்கள் தெருக்களுக்கு விரைந்தன!

  ''சமூகச் சேவையில்லாத ஆன்மீகச் செய்தி உடலில்லாத உயிர்;
  ஆன்மீகச் செய்தியில்லாத சமூகச் சேவை உயிரில்லாத உடல்!''
  — *E. ஸ்டான்லி ஜோன்ஸ்* (1884-1973)

(113ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

6. *முன்மாதிரியான வாழ்க்கை* (Exemplary Lifestyle)

- தேவனுக்குமுன் பேசப்படுபவை (பெரிய வார்த்தைகள்) vs.
  மனிதருக்குமுன் செய்யப்படுபவை (நற்செயல்கள்)
  மத் 5:16 ... *''உங்கள் நற்செயல்கள் ... வெளிச்சம் ...
  பிதாவை மகிமைப்படுத்தும்படி ...''*

- ஆன்மீகமற்றது என்று கிறிஸ்தவனுக்கு எதுவும் கிடையாது!
  1 கொரி 10:31 ... *புசித்தாலும் ... குடித்தாலும் ... தேவ மகிமை*
  — எல்லாமே புனிதம்தான்!

  தொழுகை: சபைக்குள் நின்றுவிடக்கூடாது ...
  சமுதாயத்தில் ... நாட்டில் ... தொடரவேண்டும்.

  மூன்று குழுவினர் (வச 32)
  - *''யூதர்''* — பெயர்க் கிறிஸ்தவர்
  - *''கிரேக்கர்''* — கிறிஸ்தவரல்லாதோர்
  - *''தேவ சபை''*— மெய்க் கிறிஸ்தவர்

  வாழ்க்கையையே தொழுகையாக்குவது ஆராதனையின் அடுத்த பக்கம் —
  வேரும் கிளைகளும் (ரோ 11:16)
  ''வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் ...''

- ஆலயத்திற்கு உள்ளேயும் **அத்துடன்** வெளியேயும் ஆராதனை —

கொலோ 3:16,17	கொலோ 3:18-24	
சங்கீதங்கள்,	*தம்பதியர்,*	*''கர்த்தருக்குள்''*
ஞானப்பாட்டுகள்,	*பெற்றோர்-பிள்ளைகள்,*	*''கர்த்தருக்கு''*
கீர்த்தனைகள்	*எஜமான்-வேலையாள்*	

- இன்று சமுதாயத்தில் கவர்ச்சியே இல்லாதது திருச்சபைதான்.
  — சொற்கள் அலங்காரம்தான்;
  செயல்களோ அலங்கோலம்!

7. *அநியாயமாய்ப் பாடுபடுதல்* (Unjust Suffering)

- அநியாயத்தையும் அவமரியாதையாய் நடத்தப்படுவதையும் பொறுமையாய்ச் சகிப்பது ஆராதனையின் அடுத்த பக்கம் —
  1 பேது 4:14-16 ... *நிந்தனை ... மகிமை ...*

□ இயேசுவைக் கொலை செய்கிறோமென்று ரோமச் சேவகர் நினைத்திருப்பர்; ஆனால் அவரோ தேவனுக்கு *''நறுமணமுள்ள பலியாகத்''* தம்மை ஒப்புக்கொடுத்துக்கொண்டிருந்தார்!

□ ஸ்தேவானும் அப்படியே (அப் 6:12-15; 7:54-60)

— தேவதூதன் போன்ற முகம்
— திறந்த வானங்கள்
— தேவ மகிமையின் தரிசனம்
— பிதாவின் வலப்பக்கத்தில் எழுந்து நிற்கும் இயேசு
— மன்னிப்பு
— ஒப்புக்கொடுப்பு
இவையெல்லாம் தொழுகையன்றோ?

□ பரலோகில் ஒரு காட்சி —
''அழகாய் நிற்கும் யார் இவர்கள்?''
வெளி 7:9-15
... மிகுந்த உபத்திரவம் ... தேவ சிங்காசனம் முன் அவரது ஆலயத்தில் இராப்பகலாய்ச் சேவிப்போர்!

26

வல்லமையின் அடுத்த பக்கம்

The Other Side of Power

முகவுரை

• சோரம்போன சபை	vs.	அப்போஸ்தல சபை
(Apostate Church)		(Apostolic Church)
***வல்லமை** இல்லாத*		தேவ பக்தி & வல்லமை
தேவ பக்தியின் ''தோற்றம்''		பரிசுத்தம் & பலம்
(2 தீமோ 3:5)		

''வல்லமை'' எனும் சொல் இன்று பிரபலமாய்க் கிறிஸ்தவப் பிரசங்கங்களிலும் எழுத்துக்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

வல்லமை முகாம்கள், கருத்தரங்குகள்.
வல்லமை ஊழியம்.
வல்லமை வெடித்துக் கிளம்புகிறது!
வல்லமை வெளிப்பாடு, முதலியன.

ஆனால் இவையெல்லாவற்றிலும் பிரதானமாக வலியுறுத்தப்படுவது அற்புத சுகம் மற்றும் உடற்பாவனையில் வெளிப்பாடுகள்தான்.
இது சமநிலையைக் கெடுத்து, திருமறைக்கு ஒவ்வாத, கேள்விக்குரிய பல செயல்பாடுகளுக்குள் நம்மை நடத்தியுள்ளது.
(திருமுழுக்கினன் யோவான் —
அற்புதங்கள் இல்லை — லூக் 1:17/யோ 10:41)

''வல்லமை'' என்பதின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள ஒரு சில புதிய ஏற்பாட்டுப் பகுதிகளைக் கவனிப்போம்—

1. தேவ வல்லமையால் இரட்சிப்பு (Salvation)

ரோ 1:16 ... *சுவிசேஷமே நம்மை இரட்சிக்கும் வல்லமை*
1 கொரி 1:18,24 ... *சிலுவையைப்பற்றிய செய்தி*

கொலோ 2:11,12 ... இன்றைய உயிர்த்தெழுதல்
1 கொரி 6:14 ... இனிவரும் உயிர்த்தெழுதல்

2. *தேவ வல்லமையால் தூய சிந்தனை* (Pure thinking)

2 கொரி 10:4- 7அ ... *எல்லா எண்ணங்கள் ... கீழ்ப்படிதல்*
சிந்தனையின் தூய்மையைக் காத்துக்கொள்வது
கிறிஸ்தவ வாழ்வில் பெரிய போராட்டம்.

''பரிசுத்தமற்ற ஒரு மனிதனைத் தேவன் பரிசுத்தமற்ற உலகிலிருந்து தூக்கியெடுத்து, அவனைப் பரிசுத்தப்படுத்தி, திரும்பவும் அவனைப் பரிசுத்தமற்ற உலகிற்குள் வைத்துப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளுகிறாரே, இதுதான் அற்புதங்களிலெல்லாம் அற்புதம்!''

— *லியோனார்டு ரேவன்ஹில், 1907-1994*

சுகமளிப்புக்குப் போலிகள் உண்டு;
பரிசுத்த வாழ்வுக்குப் போலிகள் கிடையாது!

நிமிடந்தோறும் இந்த வல்லமையை அனுபவித்துப் பரிசுத்தமாய் வாழ வழிவகுக்கும் சிலாக்கியத்தில் களிகூருங்கள்.

3. *தேவ வல்லமையால் சீடத்துவ ஒழுங்கு* (Discipleship)

2 கொரி 6:4-10 ... *சகிப்பு ... பரிசுத்த ஆவி ... தேவ வல்லமை*

நடபடிகள் புத்தகத்தில் இறைமக்களுக்கு மூன்று பெயர்கள் —

அ) *சீடர்கள்* — ஏறத்தாழ 30 தடவை
ஆ) *விசுவாசிகள்* — ஒரு சில தடவை
இ) *கிறிஸ்தவர்கள்* — ஒரே தடவை

ஏன் இப்படி?

மனிதன் அடிப்படையில் ஒழுங்கற்றவன் —
அதற்குக் காரணம் சாத்தான் (ஆதி 1:2அ)

முதல்பெற்றோரின் முதல் மகனைப் *பிசாசினால் உண்டானவன்* என்கிறது வேதம் (1 யோ 3:12)
மனிதனது உயிருக்குத் தேவன் வைத்துள்ள மதிப்பிற்கு விரோதமாய் அவன் செயல்பட்டான் (ஆதி 4:8)
ஒழுங்கைத் திரும்ப நிலைநாட்டுபவர் தேவன் (1 கொரி 14:33)

எனவேதான் அவர் திருச்சட்டத்தைத் தந்தார்!

பழைய ஏற்பாட்டில் அதைக் கல்லில் எழுதினார்;
புதியதில் அதை இதயத்தில் எழுதுகிறார் (2 கொரி 3:3)

''சீடராக்குங்கள்'' என்பதும் ''ஒழுங்குள்ளவராக்குங்கள்'' என்பதும் ஒன்றையொன்று சார்ந்த சொற்கள் ("disciple" vs. "discipline")

இது ஒரே நாளில் வரக்கூடிய மாற்றம் அல்ல.
இது வாழ்நாள் முழுவதும் எடுக்கவேண்டிய பயிற்சி.
இது கடினம்தான்.

''முரட்டாட்டமுள்ள'' மக்களாகிய நம்மைத் தேவ வல்லமை ''சிறைப்பிடித்து'' தேவனது மனப்பூர்வமான ''அடிமைகள்'' ஆக்குகிறது (சங் 68:17,18)

ஒழுங்குபடுத்தப்படவேண்டிய பகுதிகள் (2 கொரி 6:4-10)

- பொறுமை/சகிப்பு
- தேவையா விருப்பமா?
- உபத்திரவங்கள்
- முயற்சிகள்
- கண் விழிப்பு/அதிகத் தூக்கம்
- உபவாசம்/உணவுப் பழக்கம்
- பரிசுத்தம்
- அன்பு/உறவுகள்
- கனம்/கனவீனம் (எப்படிக் கையாளுவது)
- பேர் புகழ்/பிரபலம்
- எளிமை

4. *தேவ வல்லமையால் வெளிப்பாடு* (Revelation)

2 கொரி 4:4-7

இருளிலிருந்து ஒளியை வரப்பண்ணின தேவனது படைப்பின் அதே வல்லமைதான் நமது வாழ்வில் இருளகற்றிப் பிரகாசமும் வெளிப்பாடும் கொண்டு வரும்.

ஆன்மீகச் சத்தியம் ஒன்றை நீங்கள் புதிதாய் விளங்கிக்கொள்ளும்போதெல்லாம் தேவனது இந்த வல்லமை செயல்படுகிறதென அறியுங்கள்!

எ.கா.) லூக் 10:17- 24 ... *சாத்தான் விழுதல் ... வெளிப்பாடு*

வெளிப்பாடு என்பது உள்ளான மனிதனில் கிடைப்பது;
எனவே அது பகட்டாக, பரபரப்பாக இல்லாமல் இருக்கலாம்;
ஆனாலும் அது நிசமானது.

உபா 32:1-3 ... *உபதேசம் ... மழை ... பனி*

நீங்கள் இறைவார்த்தையைத் தியானிக்கும்போது தேவ வல்லமை உங்களில் ஆழமாய்ச் செயலாற்றுகிறதென்று விசுவாசியுங்கள்.

5. *தேவ வல்லமையால் பலக்குறைவை மேற்கொள்ளல்*

(Overcoming weakness)

2 கொரி 13:4 ... பலவீனம் ... தேவ வல்லமை

எ. கா.) பவுலின் உடல் பலவீனம் —

2 கொரி 12:7-10) ... *முள் ... துன்பங்கள் ... வல்லமை*

நமது வாழ்வில் தேவ வல்லமை என்றால் பலவீனங்கள் இருக்காது என்பதல்ல; ஆனால் பலவீனங்களில் வெற்றி!

- பேன்னி கிராஸ்பி அம்மையார் பார்வையற்றவர்களாயிருந்தார்கள்; ஆனால் பாடல் இயற்றுவதில், பாடுவதில் வல்லவராயிருந்தார்கள்.
- டேவிட் பிரெய்னார்டு காச நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்; ஆனால் மன்றாட்டு ஜெபத்தில் வல்லவராயிருந்தார்.
- பில்லி கிரஹாமின் உடலில் பல வாதைகள் உண்டு; ஆனால் அவர் நற்செய்தியறிவிப்பில் வல்லவர்.
- ஏமி கார்மைக்கல் அம்மையார் 20 ஆண்டுகள் படுக்கையில்; ஆனால் கோவிலில் விடப்பட்ட பெண் பிள்ளைகளை மீட்பதில் வல்லவராயிருந்தார்கள்.
- A.W. டோசர் & லியோனார்டு ரேவன்ஹில் ஆகியோர் காலில் பலவீனப்பட்டிருந்தனர்; ஆனால் வல்லமையான தீர்க்கராயிருந்தனர்.

உங்கள் பலவீனம் என்ன? —
அங்குதான் தேவ வல்லமை விளங்கும்!

6. *தேவ வல்லமையால் சாட்சி பகருதல்* (Witnessing)

2 தீமோ 1:7,8 ... *பலமுள்ள ஆவி ... வெட்கப்படாமல் ...*
எபே 3:5-7 ... *சுவிசேஷம் ... செயல்படும் அவரது வல்லமை*
அப் 1:8 ... *பரிசுத்த ஆவி ... வல்லமை ... சாட்சிகள்*

இந்த வல்லமை ஏற்கனவே உங்களிடமுண்டு; பயன்படுத்துங்கள்!

பிரசங்கம் மற்றும் சாட்சி பகருதல் குறித்த தவறான எண்ணங்கள் —

- சரளமாய்ப் பேசினால் அது வல்லமை.
  — இது வெறும் பேச்சுத்திறனாய் இருக்கலாம்.
  D.L. மூடி அவர்களுக்குச் சொல்வாக்கு குறைவு;
  ஆனால் இறைச்செய்தியை வல்லமையாய்ப் பிரசங்கித்தார்.

- சத்தமாய்ப் பேசினால் அது வல்லமை.
  — சரித்திரத்தில் இடிமுழக்கம்போல் பேசியவர்களில் ஒருவர் ஹிட்லர்.
  ஆனால் அவரைத் தூண்டி நடத்தியது பிசாசு.
- பெருவாரியாய் வெற்றி கிட்டினால் அது வல்லமை.
  —மறைந்து செய்யப்படும் ஊழியங்கள் பெரும் பயனுள்ளவை.

பெயர்ப்புகழ் பெறாத சிலர் —

- மார்ட்டின் லூத்தருக்கு இறையியல் கற்றுக்கொடுத்து, புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்க ஊக்குவித்தது யார்?
- செருப்புக்கடையொன்றில் D.L. மூடியைச் சந்தித்து அவருக்குக் கிறிஸ்துவை அறிமுகம் செய்தது யார்?
- பிரசங்க வேந்தன் C.H. ஸ்பர்ஜனின் மனைவி யார்?
- பில்லி கிரஹாமின் இரட்சிப்புக்காக 20 ஆண்டுகள் உத்தமமாய் ஜெபித்த மூதாட்டி யார்?
- வில்லியம் கேரியின் இந்திய ஊழியத்தைத் தாங்கியது யார்?
- ஜான் வெஸ்லியின் சகோதரன் சார்லஸ் வெஸ்லிக்கு உதவி அவரைப் பாடலியற்றுபவராய் மாற்றியது யார்?
- சவக்கடல் தோல் சுருள்களைக் கண்டெடுத்தது யார்?
- வேத வியாக்கியான வித்தகரான G. கேம்பெல் மார்கனுக்கு பிரசங்கக் கலையைக் கற்றுக்கொடுத்தது யார்?
- ஜார்ஜ் முல்லரைப் பாவ வாழ்க்கையிலிருந்து பிடுங்கியெடுத்து அவரைச் சீடனாக்கியது யார்?
- வரம் பெற்ற தேவ பக்தியுள்ள தீர்க்கனாகிய தானியேலின் பெற்றோர் யார்?

பெயரே தெரியாத இவ்வித மகான்கள் இல்லையேல் சபைச் சரித்திரம் அரைகுறையாயிருந்திருக்கும்.

நீங்கள் சாட்சி பகரும்போதெல்லாம் இறைவன்மை பெருமளவில் செயல்படுகிறதென்று நம்புங்கள்.

7. தேவ வல்லமையால் காக்கப்படல் (Being kept)

1 பேது 1:3-5

மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையிடப்பட்டுள்ளோம் (எபே 4:30)

இதன் பொருளென்ன?

தச்சுப்பட்டறைக்கு எடுத்துச்செல்லுமுன் கடையில் தெரிந்தெடுத்த மரங்களுக்கு அடையாள முத்திரை குத்துதல்.

நாம் தேறிவிடுவோமா என்று நம்மை அச்சுறுத்தும் சூழ்நிலைகள் நமது விசுவாசத்தை அசைக்கத்தான் செய்யும்! ஆனால் —

- *உங்களிலிருக்கிறவர் பெரியவர்* (1 யோ 4:4)
- *நீங்கள் என் கையில்... யாரும் பறிக்கமுடியாது* (யோ 10:28,29)
- *முன்குறித்தார், அழைத்தார், நீதிமான்களாக்கினார், மகிமைப்படுத்தினார்*

''எல்லாம் நன்மைக்கே'' (ரோ 8:28-30)

■ *முடிவுரை*

நம்மில் ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் வல்லமையின் *''மகா மேன்மையான மகத்துவத்தை''* அறியும் பிரகாசமுள்ள மனக்கண்களை தேவன் நமக்குத் தரும்படி வேண்டுவோம் (எபே 1:18,19)

அமைதி சக்தி —

எ.கா.) சூரியனின் வெளிச்சமும் வெப்பமும்.
பாறைகளைத் துளைத்துச் செல்லும் வேர்கள்.

27

திருவுபதேசம் கற்பது கட்டாயமா?

Is Doctrinal Study a must?

முகவுரை

வேதவுபதேசத்தைக் கற்றுக்கொள்ளவேண்டிய அதிமுக்கியத்துவத்தைக் கீழ்க்கண்ட பகுதிகள் சுட்டிக்காட்டுன்றன —

- ☐ ஆதிச் சபையின் 4 பரிமாண வளர்ச்சியில் முதல் அம்சம் —
  அப் 2:42 ... *உபதேசம் ... ஐக்கியம் ... அப்பம் பிட்குதல் ...*
- ☐ திருமறையின் 4 பயன்களில் முதலானது —
  2 தீமோ 3:17 ... *உபதேசம் ... கடிந்துகொள்ளுதல் ... சீர்திருத்தம்*
- ☐ தனது மாணவன் தீமோத்தேயுவுக்குப் பவுலின் அறிவுரை —
  1 தீமோ 1:3 ... *கட்டளையிடு ... வேற்று உபதேசம்*
- ☐ கடைசி நாட்களைக் குறித்த முக்கிய எச்சரிப்பு —
  2 தீமோ 4:3,4 ... *சத்தியம் ... கட்டுக்கதைகள்*

தங்களது நிருபங்கள் அனைத்திலும் துர்வுபதேசங்களை அப்போஸ்தலர் எதிர்த்திருக்கின்றனர் —

- ***ரோமர்***

  3:3-9 ... யூதர்தான் விசேஷித்தவர் என்ற எண்ணம்
  8:1,31-35 ... இறைமக்களை நியாயப்பிரமாணத்தினால் குற்றவுணர்வுக்குள் கொண்டுவருதல் *(யார்? ... யார்? ... யார்? ... யார்?)*
  அத் 14 ... பிரமாணக் கொள்கை — நாட்கள், ஆகாரம் பற்றிய சட்டதிட்டங்கள் — *கிறிஸ்துவுக்குள் சுயாதீனம்* (வச 6)

- ***1 கொரிந்தியர்***

  1:1-13 / 3:21-23 ... தனி நபர்க் கட்சிகள்
  11:20-34 ... கர்த்தரது பந்தியின் தவறான ஆசரிப்பு (தகுதியின்றி பங்கேற்பு)
  15:33-58 ... உயிர்த்தெழுதலை மறுதலித்தல் (மதியீனம் — வச 36)

- ***2 கொரிந்தியர்***

  3:5-8,15,16 ... புதிய உடன்படிக்கையின் மேன்மையைப் புரிந்துகொள்ளாமை

  11:3,4 ... *வேறொரு இயேசு ... வேறே ஆவி ... வேறே சுவிசேஷம்*

  11:13-16 ... *கள்ள அப்போஸ்தலர் ... கபடமுள்ள வேலையாட்கள் ... ஒளியின் தூதன்*

- ***கலாத்தியர்***

  1:6 ... *வேறே சுவிசேஷம்* (கிருபையல்ல, பிரமாணம்)

  3:2,3 ... *ஆவியில் துவங்கி, மாம்சத்தில் முடிவு*

  5:4 ... *கிருபையிலிருந்து விழுந்தீர்கள்*

  இந்த முழு நிருபமும் நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பும் புத்தியில்லாத செயலைக் கண்டிக்கிறது.

- ***எபேசியர்***

  4:14 ... *பலவிதப் போதகக் காற்றுகள் ... வஞ்சகம் ... தந்திரம்*

- ***பிலிப்பியர்***

  3:2,3 ... *நாய்களுக்கு எச்சரிக்கை! — சுன்னத்துக்காரர்*

  3:8 . . . *சடங்காச்சார மார்க்கம் ''குப்பை.''*

- ***கொலோசெயர்***

  2:8 ... *லவுகீக ஞானம் ... மாயமான தந்திரம்*

  :20-23 ... *உடலைப் பேணாதிருத்தல் ... பிரமாணக் கொள்கை*

- ***1 தெசலோனிக்கேயர்***

  3:3-5 ... இறைமக்களின் இன்னல்களைச் சாதகமாய்ப் பயன்படுத்தும் *சோதனைக்காரன்*

  (அதாவது, ஏதாவது உதவி கிடைக்காதா என்று இக்கட்டிலிருக்கும் மக்கள் எளிதில் துர்வுபதேசத்தைத் தழுவிவிடுவர்.)

- ***2 தெசலோனிக்கேயர்***

  2:1-3 ... *''கர்த்தரது''* நாள் குறித்த வஞ்சகங்கள்

  :9-12 ... சத்தியத்தை நேசியாதவர்கள் *''பொய்யையும் மாயையையும்''* நம்புவர்.

- ***1 தீமோத்தேயு***

  1:3 ... *கட்டுக்கதைகள் ... முடிவிலா வம்ச வரலாறுகள்*

  :19 ... *விசுவாசக் கப்பல் சேதம்*

  4:1 ... *வஞ்சிக்கிற ஆவிகள் ... பிசாசுகளின் உபதேசம்*

  6:4,5 ... *வாக்குவாதங்கள்... தர்க்கங்கள்... பொல்லாத ஊகங்கள்*

- ***2 தீமோத்தேயு***

  2:16-18 ... *சீர்கேடான வீண் பேச்சு ... அரிபிளவை ... உயிர்த்தெழுதல் ... நடந்தாயிற்று ...*

  பரிகாரம்: 2:15 ... *''வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதி''*

- ***தீத்து***

  3:9-11 ... *புத்தியீனத் தர்க்கங்கள் ... நியாயப்பிரமாணம் குறித்த வாக்குவாதங்கள்*

- ***எபிரெயர்***

  இது முழுக்க முழுக்க உபதேச நிருபம் —

  கருப்பொருள்: புதிய உடன்படிக்கை பழையதைவிட மேன்மையானது.

  எ.கா.) 8:1,2 ... *''முக்கிய''* பொருள் ... போதுமான பிரதான *ஆசாரியர்*

- ***யாக்கோபு***

  2:17 ... செயலற்ற விசுவாசம் செத்தது.

  அதாவது, ''நற்செயல்களினால்'' அல்ல, ''நற்செயல்களுக்காய்'' இரட்சிப்பு (எபே 2:8-10)

- ***1 & 2 பேதுரு***

  2 பேது 2:1-3 ... *கள்ளத் தீர்க்கர் ... கள்ளப் போதகர் ...* பரிசுத்த *அப்போஸ்தலர், தீர்க்கர்களுக்கு* எதிரானவர்கள் (3:1-3)

  3:15,16 ... *வேத வசனங்களைப் புரட்டுதல்*

- ***1,2 & 3 யோவான்***

  1 யோ 4:1-3 ... *கள்ளத் தீர்க்கர் ... அந்திக் கிறிஸ்து*

- ***யூதா***

  வச 3,4 ... *பக்கவழியாய்த் தந்திரமாய்ச் சிலர் நுழைந்துள்ளனர் ... விசுவாசத்திற்காய்ப் போராடுங்கள்.*

- *வெளிப்படுத்துதல்*

  2:14 ... *பிலேயாமின் போதனை*

  :15 ... *நிக்கொலாய் மதத்தினரின் போதனை*

  :20 ... *கள்ளத் தீர்க்கதரிசியாகிய யேசபேல்*

■ *முடிவுரை*

துர்வுபதேசங்களுக்கு எதிராய்ப் புதிய ஏற்பாடு இத்தனை எச்சரிப்புகளைத் தந்திருந்தும், மக்கள் உபதேசம் கற்பதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் —

அ) அது வறட்சியாயிருக்கிறது (It's dry.)
இல்லை, அது *''மழைத் துளிகள்''* போலவும் *''பனியைப்''* போலவும் புத்துணர்வு தரும் (உபா 32:2)

ஆ) அது கடினமாயிருக்கிறது (It's difficult.)
நாம் பால் குடிக்கும் பருவத்திலிருந்து திடமான உணவுக்குக் கடந்து செல்லவேண்டுமே! (எபி 5:13,14)

இ) அது பிரிவினையுண்டாக்குகிறது (It's divisive.)
துர்வுபதேசங்கள் மூலம் ''பிரிவினைகள்'' உண்டாக்குவோரை அகற்றவேண்டுமே! (ரோ 16:17)

(28ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

28

திருவுபதேசம் கற்பதின் பயன்கள்

The Benefits of Doctrinal Study

முகவுரை

திருமறையை ''உபதேசத்திற்காக'' அல்ல, ''தியானப் பயனுக்காகப்'' படிப்பதே முக்கியம் என வாதாடப்படுவதுண்டு. ஆனால், தியானத்தை வழிவிலகிச் செல்லாது காப்பது அடித்தளமாகிய ஆரோக்கிய உபதேசப் போதனைதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

கவனிக்க வேண்டிய சில காரியங்கள் —

□ உபதேசம் கற்பது வறட்சியானது அல்ல.
உபா 32:1,2 ... *உபதேசம் ... பனி ... மழைத்துளி*

□ உபதேசம் கற்பது திருமறையின் நான்கு பயன்களில் முதலானது.
2 தீமோ 3:16,17 ... *உபதேசம் ... கடிந்துகொள்ளுதல் ... திருத்தம் ... படிப்பித்தல்*

□ உபதேசம் கற்பது ஆன்மீக வளர்ச்சியின் நான்கு ஏதுக்களில் முதலானது.
அப் 2:42 ... *உபதேசம், ஐக்கியம், அப்பம் பிட்குதல், ஜெபம்*

திருவுபதேசம் கற்பதின் முக்கிய பயன்கள் —

1. அது உங்களது அறிவையும் புரிதலையும் மேம்படுத்தும்.

1 கொரி 1:4,5 ... *உபதேசம் ... அறிவு ... சம்பூரணம்*

அறிவும் தெளிவும் தேவனது வார்த்தையிலிருந்து அவரது ஆவியானவர் மூலம் வரும் —

கொலோ 1:9,10...*விசுவாசிகளுக்காய் அப்போஸ்தலரது ஜெபம்: ''அவர் சித்தம் ... நமது நடக்கை ... நமது செயல்கள்''*

2 தீமோ 3:15-17 ... *வேதவாக்கியம் ... ஞானம் ... உபதேசம்*

விவிலியத்திலிருந்து உபதேசம் கற்பது திருவார்த்தையைக் குறித்த நமது அறிவை வளமாக்கும்.

2. அது உங்கள் கண்களைப் பிரகாசிப்பிக்கும்.

நம்மெல்லாருக்கும் நமக்கே தெரியாத குறைகளுண்டு.

சங் 119:130 ... *வசனத்தின் நுழைவு வெளிச்சம் தரும்.*

லூக் 24:44,45 ... *வேத வாக்கியம் ... கண்களைத் திறந்தார்*

பல குழப்பமான காரியங்கள் தெளிவாகும்.
குழப்பம் x தெளிவு
படிக்கும்போதெல்லாம் ஏறெடுக்கவேண்டிய ஜெபம் —
''கர்த்தாவே, என் கண்களைத் திறந்தருளும்'' (சங் 119:18)

3. அது உங்களை விடுவிக்கும்.

யோ 8:31,32 ... *சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.*
இக்கூற்று அவிசுவாசிகளுக்கல்ல, *சீடர்களுக்கு!*
நெடுகவே திருவசனம் மூலம் விடுதலைமேல் விடுதலை அடையும் அனுபவத்தை இது குறிப்பிடுகிறது.

திருமறையானது *''பட்டயத்திற்கு''* ஒப்பிடப்பட்டுள்ளது — (எபே 6:17)

உங்களை அடிமைப்படுத்தியிருக்கும் கட்டுகளை அது அறுத் தெறிந்து உங்களைப் பக்தியாய் வாழச்செய்யும் —

ரோ 6:17,18 ... *உபதேசம் ... விடுதலையானீர்கள்*
1 தீமோ 6:3 ... *தேவபக்திக்கேதுவான உபதேசம்*

உங்களைக் கட்டியிருக்கும் விலங்குகள் தெறிக்கும்.
''வெற்றிக் கொடி'' என்பது திருவசனம்தான் —
ஏசா 59:19,21

4. அது உங்கள் வாழ்விலும் பணியிலும் உங்களை ஊக்குவிக்கும்.

நீங்கள் சத்தியத்தில் நிலைத்திருக்கிறீர்களென்றால், பயமிராது —

2 தீமோ 2:19 ... *நிச்சயம் நிறைந்த வாழ்வு*
திருமறையின் ஒட்டுமொத்தச் செய்தி:
தேவன் நம்மையறிவார்; நாம் அவரை அறிய வேண்டும்.
ரோ 15:4 ... *''திருவசனத்தினாலுண்டாகும் ஆறுதல்''*
பொது மொழிபெயர்ப்பு: மறைநூல் தரும் ஊக்கம்

''நம்பிக்கையில்'' நங்கூரமிடப்பட்டிருப்பீர்கள்!
பிடிப்பின்மை, நிலையின்மை, உறுதியின்மை ... இவையெல்லாம் பறந்துபோகும்.

5. அது துர்வுபதேசங்களை உங்களுக்கு அடையாளங்காட்டும்.

தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட முதல் அறிவுரை (1 தீமோ 1:3):
''வேற்று உபதேசம் கூடாது என்று கட்டளையிடு''

கடைசிக்காலத்தின் ஒரு முக்கிய அடையாளம் (2 தீமோ 4:3).
தீத்துவுக்குப் பவுலின் அதே விதமான அறிவுரை (தீத் 2:1)

திருமறையைப் போதிக்கையில் எனது நோக்கங்கள் —

அ) திருமறையை எப்படி அர்த்தப்படுத்தவேண்டும்; துர்வுபதேச வெள்ளங்களுக்கு எப்படித் தப்பவேண்டும் என்று விசுவாசிகளுக்குக் கற்றுக்கொடுத்தல்;

ஆ) இன்றையத் துர்வுபதேசங்களை அவர்களுக்கு அடையாளம் காட்டி ஆரோக்கிய உபதேசத்தில் அவர்களை நிலைநிறுத்துதல்.

- பகுப்பாய்வு
- பொருள் சார்ந்த விளக்கங்கள்
- யாருக்கும் எதிராக அல்ல, சத்தியத்திற்கு ஆதாரமாக.
- கடினமான பணிதான்! (கலா 4:16)

''சத்தியத்தைச் சொன்னதினால் சத்துருவானேனோ?''

*''சத்தியத்தை **அன்புடன்** சொல்ல வேண்டும்''* என்ற ஜெபத் துடனேயே போதிக்கிறேன் (எபே 4:15)

6. அது நீங்கள் மற்றவர்களைக் காப்பாற்றவும், விடுவிக்கவும், வழிநடத்தவும் உங்களைப் பக்குவப்படுத்தும்.

எபே 4:12,14 ... *பரிசுத்தவான்கள் ... ஆயத்தம் ... அலசடி ...*
1 தீமோ 4:6 ... *சகோதரர்க்குப் போதி ... தேறினவர்களாய்*
தீத்து 1:9 ... *ஆரோக்கிய உபதேசத்தால் புத்தி ... போதனை*

வாக்குவாதத்தினால் அல்ல, ஆரோக்கிய உபதேசத்தால்.

''உபதேசப்'' போதனை வகுப்புகள் இன்று அபூர்வம்.

மூத்த மேய்ப்பர்/பிரசங்கிமார்/தலைவர் ஆகியோரின் தவறுதல் — ஆனால் விசுவாசிகள் குழம்பி நின்றபோது ஆதி அப்போஸ்தலரும் மூப்பரும் கூடிவந்ததைப் பாருங்கள் — (அப் 15:6)

''எங்களுக்கும் பரிசுத்த ஆவிக்கும் நலமாய்க்கண்டது'' (வச 30,31)

விளைவு:
விசுவாசிகள் ஊக்கமடைந்து *சந்தோஷப்பட்டார்கள்* (வச 30,31)

7. அது உங்களைத் திருவசனப்பணியில் தைரியப்படுத்தும்.

ஆரோக்கிய உபதேசம் தருவது ஆரோக்கிய மனது.
அப்பொழுது பயத்திற்கு விடுவிக்கப்படுவீர்கள் —
2 தீமோ 1:7 ... *பயம் இல்லை ... தெளிந்த புத்தி ...*

உங்கள் வாழ்வில் எத்தனையோ பிரச்னைகள் இருக்கலாம் —
அவை உங்களை முடமாக்கி, ஊமையாக்கிவிடக்கூடாது—
2 தீமோ 2:9 ... *நான் கட்டப்பட்டிருக்கிறேன் ...*
திருவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை

ரோமச் சேவகனது கண்காணிப்புடன் வீட்டுக் காவலில் பவுல் இருந்தபோது —
''தைரியமாய்ப் பிரசங்கித்து, உபதேசித்து ...'' (அப் 28:30,31)

உபதேசப் பாடங்கள் உங்களை விறுவிறுப்பாக்கும்,
விசையுள்ளவர்களாக்கும், விழிப்புள்ளவர்களாக்கும்.

■ ***முடிவுரை***

- Doctrinal study: Enriches, Enlightens, Emancipates, Encourages, Exposes, Equips and Emboldens
- உபதேசம் கற்கும்போது ஏறெடுக்கவேண்டிய ஜெபம்—சங் 119:66

''உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப்
போதித்தருளும்; உமது கற்பனைகளின் பேரில்
விசுவாசமாயிருக்கிறேன்!''

(27ஆம் அத்தியாயத்தின் குறிப்புகளையும் படியுங்கள்)

29

துர்வுபதேசங்களுக்குத் தப்பி ஆரோக்கிய உபதேசத்தைத் தழுவுவது எப்படி?

How to escape false doctrines and embrace Sound Doctrine

முகவுரை

ஒரு பிரசங்கியார் இப்படிக் கேட்டார்:

''உபதேசத்தைப்பற்றிப் பேசுவானேன்?
இயேசுவைப்பற்றி மட்டும் பேசுவோமே!''

- 2 தீமோ 3:16 — முதற் பயன் — *உபதேசம்*
  அப் 2:42 — ஆதிச் சபை, வளர்ச்சியின் முதல் அம்சம் — *உபதேசம்*
  2 தீமோ 4:3,4 — கடைசிக்கால அடையாளம்

சத்தியமல்ல, கட்டுக்கதைகள் வசனமல்ல, அனுபவங்கள்	ஆமோஸ் 8:11 *பஞ்சம்!*

- அகிலவுலக நற்செய்திப்பணியோடு துர்வுபதேசமும் *''வெள்ளம்''* போலப் புரண்டு வருகிறது; ஆனால் *ஆவியானவர் சத்துருவுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்!*

அந்தக் *''கொடி''* திருவசனம்தான் —
(ஏசா 59:19-21)

எப்பொழுதுமே சாத்தானுக்கு எதிரான *''கொடி''* திருவசனமே —
''எழுதியிருக்கிறதே ... எழுதியிருக்கிறதே'' (மத் 4)

சாத்தானுடைய தாக்குதல் எப்பொழுதும் தேவனது வார்த்தையின் உண்மைக்கெதிராகவே இருக்கும் —

எ.கா.) ஏவாளிடம் ...*''தேவன் சொன்னாரா?''*
(ஆதி 3:1)

எனவே சாத்தானுக்கெதிரான நமது ஒரே போராயுதம் இறைவார்த்தையே —
(எபே 6:17)
''ஆவியின் பட்டயம்''

துர்வுபதேசங்களுக்குத் தப்பி ஆரோக்கிய உபதேசத்தைத் தழுவுவது எப்படி?

1. குழந்தையுள்ளமும், கீழ்ப்படிதலும் இருக்கவேண்டும்.

ஏசா 28:9 ... *யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்?*

பால் மறந்தோர் ...

1 பேது 2:3 ... *புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் போல ... திருவசனம்*

யோ 7:17 ... *அவர் சித்தம் செய்ய மனதுள்ளவன் ...*

ஏனெனில்,

உபதேசத்தின் முடிவான நோக்கு பரிசுத்தமும்
பக்திவிருத்தியும்தான் —

ரோ 6:17 ... *உபதேசச் சட்டம் ...* பாவத்திலிருந்து விடுதலை
1 தீமோ 1:3,4 ... *பக்திக்கு ஏதுவாயிராத உபதேசங்கள் வேண்டாம்*

2. திருவசனத்தை அனுபவங்களுக்கு மேலாக வைக்கவேண்டும்.

2 பேது 1:16-21 ... *மறுரூப மலை ... அதிக உறுதியான வசனம்*
1 கொரி 14:37,38 ... *தீர்க்கதரிசி ... கர்த்தரது கட்டளைகள் ...*

அனுபவத்திலிருந்து சத்தியத்திற்கல்ல,
சத்தியத்திலிருந்து அனுபவத்திற்குச் செல்லவேண்டும்.

எ.கா.) மத் 22:23-33 ... 7 சகோதரர் ... ஒரு பெண்
(சதுசேயரின் வாதம்: உயிர்த்தெழுதல் என்றிருந்தால்
எவ்வளவு பெரிய குழப்பம் ஏற்படும்!)
இயேசு: *வேத வாக்கியங்கள்...தேவ வல்லமை*

3. ஓரமாய்ச் சென்றுவிடாது சமநிலை காக்கவேண்டும்.

A.W. டோசர்: சத்தியம்... இரு செட்டைகளுள்ள பறவை
... இரு பக்கங்களுள்ள நாணயம்

எ.கா.)	தேவ அன்பு	vs.	தேவ கோபம்	(ரோ 11:22)
	கனிகள்	vs.	வரங்கள்	(1 கொரி 14:1)
	வாழ்வு	vs.	தாழ்வு	(பிர 7:14)
	நற்செய்திப் பணி	vs.	சமூக சேவை	(மத் 10:7,8)
	வாழ்க்கை	vs.	திருப்பணி	(2 தீமோ 2:21)

எபே 4:11-15 ... முழுமையான வளர்ச்சி ...
ஐந்து ஊழியங்களும் ... *''பலவித காற்று''*

உதாரணம்: ஒரு யானையும் ஐந்து குருடர்களும்
''தேவனது முழு ஆலோசனை'' (அப் 20:26)

எ.கா.) சுவிசேஷங்களை எழுதியவர்கள் இயேசுவைச் சித்தரித்தது —
மத்தேயு: இராஜா vs. மாற்கு: பணியாளர்
லூக்கா: மனுமகன் vs. யோவான்: இறைமகன்

எ. கா.) இளைஞன் இயேசுவின் வளர்ச்சி (லூக் 2:52)
''வளர்த்தி'' vs. *''ஞானம்''*
''தேவ கிருபை'' vs. *''மனிதர் தயவு''*

4. வேத விளக்கத் தத்துவங்களைப் பின்பற்றவேண்டும்.

அ) இரு ஏற்பாடுகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை
மனதிற்கொள்ள வேண்டும் —

1 தீமோ 1:5-7 ... *கட்டளையின் பொருளென்னவெனில்*
... ஆன்மீகமானது, சடங்காச்சாரமானதல்ல.

ரோ 14:5,6,17 ... *நாட்கள் ... ஆகாரம் ...* விடுதலை

கொலோ 2:16,17,20-23 ... *தொடாதே ... ருசிபாராதே*
நிழல் vs. *பொருள்*

எபி 13:8,9... *''கிறிஸ்து மாறாதவர்... கிருபை... ஆகாரம்''*

ப.ஏ. — பொருளாதார நலன்கள் (உபா 28)
பு.ஏ. — ஆன்மீக ஆசிகள் (எபே 1:3)

ஆ) உவமைகள் அல்லது நிகழ்வுகளின் ஒவ்வொரு குறிப்புக்கும்
ஆன்மீக விளக்கம் தருவதைத் தவிர்க்கவேண்டும் —
கதை போதிக்கும் நெறியோடு நிறுத்திக்கொள்ளவேண்டும்.

இ) வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் படிக்கவேண்டும் —
ஏசா 34:16 ... *ஜோடி*

எ.கா.) பூமியின்மேல் *சமாதானம்* (லூக் 2:14)
பூமியின்மேல் *பட்டயம்* (மத் 10:34)

அதாவது, நமக்குச் சமாதானம் தரும் இயேசு
அந்தச் சமாதானத்தைப் பிறர்க்குப் பறைசாற்ற விடாது
நம்மைத் தடுக்கும் எந்த உறவையும் அறுத்தெறிய
விரும்புகிறார் (மத் 10:32,33,35-39).

ஈ) அந்தந்த வசனப் பகுதியின் மொத்தக் கருத்தைப்
பெற்றுக்கொள்ளவேண்டும் —

எ.கா.) வெளி 22:11,12 ... *அநீதி செய்கிறவன் இன்னும் அநீதி ...*
உலகத்தின் போக்குக்கு இறங்கி வந்துவிடாது பரிசை
நோக்கி முன்செல்லவேண்டுமென்று ஜெயங்கொள்
வோருக்கு இது ஒரு சவால்தானேயன்றி வேறல்ல.

எந்த வசனத்தையும் அதின் சூழமைவை விட்டுப்
பிரித்தெடுக்கக்கூடாது —
எ.கா.) மாற் 13:11 ... இது பிரசங்கபீட ஆயத்தத்திற்கல்ல,
சிறையடைப்பிற்கு முன்னுள்ள விசாரணைக்கு!
பொது அறிவில் (common sense) தெளிவு கிடைக்குமானால்
வேறு அறிவு தேவை இல்லையே!

5. தரமான வேத ஆராய்ச்சி நூல்கள், வியாக்கியானங்களைப் பயன்படுத்தவேண்டும்.

1 தீமோ 4:13 ... *வாசிக்கிறதிலும் உபதேசிக்கிறதிலும்...*

"Unless someone guides me ..." என்ற எனது சிறுநூலைப்
படியுங்கள்.

எல்லாருக்கும் பவுலைப்போல நேரடி வெளிப்பாடு வராது —
2 தீமோ 2:2...*பவுல்→தீமோத்தேயு→உண்மையுள்ளோர்→பிறர்*

1 யோ 2:27 ... இவ்வசனம் தேவனால் நியமிக்கப்பட்ட
போதகர்களையல்ல, துர்வுபதேசிகளையே
குறிப்பிடுகிறது (வச 26)

■ *முடிவுரை*

☐ அடித்தளம் — இறைச்சித்தம் ... இறைவார்த்தை (மத் 7:21-27)
(மணல் vs. *பாறை)*

☐ மேற்கட்டிடம் — *பொன் ... மரம் ...* (1 கொரி 3:12-15)
திருவசனமாகிய *நெருப்பு* (எரே 23:28,29)

30

ஆன்மீக முரண்பாடுகள்

Spiritual Paradoxes

முகவுரை

''முரண்பாடு'' (paradox) என்பது தனக்குள்ளே எதிரிடையாய்த் தோன்றினாலும் உண்மையாயிருக்கும் கூற்று, சூழ்நிலை, நபர் அல்லது செயலாகும். ஆன்மீக வாழ்வில் இவ்வித முரண்பாடுகள் ஏராளம். அவற்றில் முக்கியமான 20 முரண்பாடுகள் இங்கு வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இந்த முரண்பாடுகளைப் புரிந்துகொண்டு கையாளக் கற்றுக்கொள்வது ஆன்மீக வாழ்வின் முதிர்ச்சிக்கு உதவும்.

1. தீமையின் நன்மை (The good of evil)

யோசேப்பின் சகோதரர் அவனுக்குத் தீங்கிழைத்தனர்,
தேவனோ அதை நன்மையாய் மாற்றினார் —
ஆதி 45:4-8 ... *நீங்கள் விற்றீர்கள் ... தேவன் அனுப்பினார்*

2. சாபத்தின் ஆசீர்வாதம் (The blessing of curse)

உபா 23:5 ... *சாபத்தைத் தேவன் ஆசீர்வாதமாக மாற்றினார்*
நீதி 26:2 ... *காரணமற்ற சாபம் தங்காது*
1 பேது 4:14 ... *அவர்களால் தூஷிக்கப்படுகிறார் ...*
உங்களால் மகிமைப்படுகிறார்

எனவேதான் நம்மைச் சபிக்கிறவர்களை நாம்
ஆசீர்வதிக்கவேண்டும் (மத் 5:44)

3. அபகீர்த்தியின் கீர்த்தி (The honour of dishonour)

இயேசுவின் பெயருக்காய் அவமானப்படும் பாக்கியம்
கிட்டியதற்காய் அப்போஸ்தலர் அகமகிழ்ந்தனர் —

அப் 5:41 ... *அவமானம் ... சந்தோஷம் ...*
2 கொரி 6:8 ... *கீர்த்தி ... அபகீர்த்தி ... கனம் ... கனவீனம் ...*

4. இழப்பின் இலாபம் (The gain of loss)

பிலி 3:8 ... *எல்லாம் நஷ்டம் ... கிறிஸ்துவை ஆதாயம்பண்ண*
2 கொரி 6:10 ... *ஒன்றுமில்லாமை ... எல்லாம் உடையவர்கள்*

5. இருளின் வெளிச்சம் (The light of darkness)

மீகா 7:8 ... *இருட்டில் உட்கார்ந்து ... கர்த்தர் வெளிச்சம்*
சங் 112:4 ... *இருளில் வெளிச்சம்*
139:11,12 ... *இரவும் வெளிச்சமாயிருக்கும் ... எல்லாம் சமம்*
ஏசா 58:10 ... *உனது இருள் நடுப்பகல் போலிருக்கும்*

தேவன் *காரிருளில்* ''வாசம்'' பண்ணுகிறார் (1 இரா 8:12,13);
நெருங்கக்கூடாத ஒளியில் ''வாசம்'' பண்ணுகிறார் (1 தீமோ 6:16)

6. தரித்திரத்தின் செழிப்பு (The prosperity of poverty)

2 கொரி 6:10 ... *தரித்திரர் ... அநேகரைச் செல்வந்தராக்குகிறோம்*
8:2 ... *கொடிய தரித்திரம் ... மிகுந்த உதாரத்துவம்*
மாற் 12:42-44 ... *ஏழை விதவை ... எல்லாம் கொடுத்துவிட்டாள்*

7. தாழ்மையின் மேன்மை (The top of bottom)

பிலி 2:5-11 ... *அடிமை ... எல்லாவற்றிற்கும் மேலான நாமம்*
யாக் 1:9 ... *தாழ்ந்த சகோதரன் ... உயர்வு*
1 பேது 5:6 ... *அடங்கியிரு ... உயர்த்துவார்*

8. பலவீனத்தின் பலம் (The strength of weakness)

2 கொரி 12:9,10 ... *பலவீனம் ... வல்லமை ...*
13:4 ... *பலவீனத்தினால் சிலுவையில் ... வல்லமையால்*
1 கொரி 2:3,4 ... *பலவீனம் ... ஆவியின் பலம் ...*
எபி 11:34 ... *பலவீனத்தில் பலங்கொண்டார்கள்*

9. நிச்சயமின்மையின் மனவுறுதி (The confidence of uncertainty)

பல காரியங்கள் நமக்குத் தெரியாது;
ஆனால் மனவுறுதியாயிருக்கலாம்.
எபி 11:8 ... *எங்கே என்று தெரியாது ஆபிரகாம் புறப்பட்டான்*
ரூத் 3:18 ... *பொறுத்திரு ... முடிக்குமுன் இளைப்பாறமாட்டான்*
யோபு 23:8-10 ... *நான் காணேன் ... அவரோ அறிவார்*
35:14 ... *தரிசனம் இல்லை ... காத்துக்கொண்டிரும் ...*
அப் 20:22-24 ... *அறியாதிருந்து ... சந்தோஷத்தோடே ...*

10. மதியீனத்தின் ஞானம் (The wisdom of foolishness)

1 கொரி 1:25அ ... *தேவனது பைத்தியம் ... மனித ஞானம்*
:21 ... *பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கம்*

11. மரணத்தின் வாழ்வு (The life of death)

ரோ 6:8-11 ... *பாவத்திற்கு மரித்து, தேவனுக்குப் பிழைத்து ...*
1 கொரி 15:21,22 ... *ஆதாமில் இறக்கிறோம் ...*
கிறிஸ்துவில் உயிரடைகிறோம்
கலா 2:20 ... *சிலுவையிலறையப்பட்டேன் ... பிழைத்திருக்கிறேன்*
யோ 11:25 ... *மரித்தாலும் பிழைப்பான்*

12. துக்கத்தின் இன்பம் (The joy of sorrow)

சங் 30:5ஆ ... *இரவில் புலம்பல் ... காலையில் களிப்பு*
84:6 ... *அழுகையின் பள்ளத்தாக்கு ... நீரூற்று ... மழை*
யோ 16:21 ,22 ... *பிரசவ வேதனை ... குழந்தை ... சந்தோஷம்*
1 பேது 1:6-8 ... *சோதனைகள் ... துக்கம் ... களிகூருங்கள்*

13. போராட்டங்களின் சமாதானம் (The peace of conflicts)

சங் 120:7 ... *நான் சமாதானத்திற்கு ... அவர்கள் போருக்கு ...*
நீதி 16:7 ... *சத்துருக்கள் ... சமாதானம் ...*

இஸ்ரவேலரை மீதியானியரும் அமலேக்கியரும் நெருக்கிக்
கொண்டிருக்கையில்தான், *''யேகோவா ஷம்மா''* —
நியா 6:13,23,24 ... *சமாதானமருளும் கர்த்தர்*

ரோ 16:20 ... *சமாதானத்தின் தேவன் ... சாத்தானை நசுக்கி ...*
பிலி 4:6,7 ... *கவலை ... தேவ சமாதானம்*

14. கடைநிலையின் முதல்நிலை (The first of last)

மத் 19:30; 20:16 ... *முந்தினோர் ... பிந்தினோர் ... முந்தினோர்*
1 கொரி 4:9; 12:28அ ... *அப்போஸ்தலர் ... கடைசி ... முதலாவது*
15:8-10 ... *கடைசியாய் எனக்கு ... எல்லாரிலும் அதிகமாய்*

15. தோல்வியின் வெற்றி (The victory of defeat)

லூக் 24:21; 46-47 ... *எழுந்திருப்பாரென்று நம்பியிருந்தோம்*
அப் 2:22-28 ... *கொலை ... பாதாளம் ... பரிபூரண ஆனந்தம்*

16. தூரத்தின் சமீபம் (The nearness of remoteness)

மத் 6:9 ... *''பரமண்டலங்களிலிருக்கிற'' எங்கள் பிதாவே ...*
ஆனால், யோ 14:23 ... *பிதாவும் நானும் அவனில் வாசம்பண்ணுவோம்*
உபா 4:7; சங் 145:18 ... *இவ்வளவு சமீபமாய்த் தேவன் ...*
சங் 34:18 ... *நொறுங்குண்ட இருதயம் ... கர்த்தர் சமீபம்*
ரோ 10:6-8 ... *பரலோகம் ... பாதாளம் ... சமீபம்*
எபி 4:14-16 ... *வானங்கள் ... கிருபாசனம் ... சேருங்கள்*

17. எதிர்காலத்தின் நிகழ்காலம் (The present of future)

மத் 6:10 ... *உமது இராஜ்யம் வருவதாக ...*
ஆனால், லூக் 17:21 ... *இராஜ்யம் உங்களுக்குள் ...*
ரோ 8:23,24 ... *முதற்பலன் பெற்ற ... காத்திருந்து தவிக்கிறோம்*
எபி 2:8 ... *கீழ்ப்படுத்தினார் ... கீழ்ப்பட்டிருக்கவில்லை ...*

18. தனிமையின் ஐக்கியம் (The company of loneliness)

இயேசு: யோ 16:32 ... *தனியே விடுவீர்கள் ... தனியே இரேன்*
பவுல்: 2 தீமோ 4:16,17 ...*எல்லாரும் விட்டனர் ... கர்த்தர் துணை*

19. அடிமைத்தனத்தின் சுயாதீனம் (The freedom of slavery)

1 கொரி 7:22 ... *கர்த்தரது சுயாதீனன் ... கிறிஸ்துவின் அடிமை*
9:19-20 ... *ஒருவருக்கும் அடிமையல்ல ... எல்லாருக்கும் அடிமை*
10:23,24 ... *அனுபவிக்க உரிமையுண்டு ... தகுதியாயிராது*

20. கவர்ச்சியின்மையின் அழகு (The beauty of unattractiveness)

ஏசா 53:2 ... *அழகு இல்லை ... சவுந்தரியம் இல்லை*
ஆனால், மத் 3:17; 17:5 ... *நேச குமாரன் ... பிரியம்*
நீதி 31:30 ... அழகு வீண் ... *கர்த்தருக்குப் பயம் ...* புகழ்
1 பேது 3:3,4 ... *வெளியலங்காரம் ... மறைந்திருக்கும் குணம்*

குறிப்பு:

இந்த முரண்பாடுகளில் சிலவற்றை மாற்றிச் சொல்லலாம்.
எ.கா.) இழப்பின் இலாபம் vs. இலாபத்தின் இழப்பு (மாற் 8:36)

31

ஒவ்வொரு நிருபத்தின் துவக்கச் செய்தி

The First Message of each NT Epistle

புதிய ஏற்பாட்டின் 21 நிருபங்கள் ஒவ்வொன்றிலும் வாழ்த்துதலுக்கு அடுத்து வரும் முதலாவது சத்தியம் அந்த நிருபத்தை விளங்கிக்கொள்ள ஒரு திறவுகோலாய் அமைகிறது —

1) ரோமர்
— *உலகெங்கும் பிரசித்தமாகும் விசுவாசம்* (1:8)

2) 1 கொரிந்தியர்
— *தேவனுடைய போதுமான கிருபை* (1:4-7)

3) 2 கொரிந்தியர்
— *சகல ஆறுதலின் தேவன்* (1:3-7)

4) கலாத்தியர்
— *வேறே சுவிசேஷம்* (1:6-10)

5) எபேசியர்
— *ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்* (1:3-6)

6) பிலிப்பியர்
— *தாம் தொடங்கியதைத் தேவன் முடிப்பார்* (1:6)

7) கொலோசெயர்
— *முதன்மையானவராகிய கிறிஸ்துமீது விசுவாசம் & எல்லாப் பரிசுத்தவான்கள்மீது அன்பு* (1:3)

8) 1 தெசலோனிக்கேயர்
— *விசுவாசத்தின் கிரியை, அன்பின் பிரயாசம், நம்பிக்கையின் பொறுமை* (1:2)

9) 2 தெசலோனிக்கேயர்
— *துன்பங்கள், உபத்திரவங்களில் பொறுமை, விசுவாசம்* (1:3-6)

10) 1 தீமோத்தேயு
— *வேற்று உபதேசம் வேண்டாம்* (1:3)

11) 2 தீமோத்தேயு
— *வரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடு!* (1:3-7)

12) தீத்து
— *குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்து!* (1:5)

13) பிலேமோன்
— *பரிசுத்தவான்களுக்குப் புத்துணர்வூட்டும் அன்பு* (வச 7)

14) எபிரெயர்
— *தமது குமாரன் மூலம் தேவன் பேசினார்* (1:1,2)

15) யாக்கோபு
— *பலவிதச் சோதனைகளில் சந்தோஷம்* (1:2,3)

16) 1 பேதுரு
— *கிறிஸ்துவின் உயிர்ப்பால் ஜீவனுள்ள நம்பிக்கை* (1:4)

17) 2 பேதுரு
— *தேவ பக்தியும் திவ்விய சுபாவமும்* (1:3,4)

18) 1 யோவான்
— *ஜீவ வார்த்தை* (1:1)

19) 2 யோவான்
— *சத்தியத்தில் நடத்தல்* (வச 1-4)

20) 3 யோவான்
— *ஆத்துமாவிலும் எல்லாவற்றிலும் சுகம்* (வச 2)

21) யூதா
— *விசுவாசத்திற்காய்ப் போராடுங்கள்* (வச 3)

(32ஆம் அத்தியாயத்திலுள்ள குறிப்புகளையும் படியுங்கள்,)

32

நிருபங்களிலுள்ள கடைசி அறிவுரைகள்

The Final Exhortations in the Epistles

முகவுரை

''முதலாவதாக ... பிரதானமாக ... கடைசியாக ...'' போன்ற பதங்களெல்லாம் அப்போஸ்தலரது எழுத்துக்களில் அடிக்கடி இடம் பெறுபவை. வெறுமனே தங்கள் மொழி நடையை அழகுபடுத்த அல்ல, எங்கே அழுத்தம் கொடுக்க விரும்பினார்களோ அதைக் குறிக்கவே இப்பதங்களைப் பயன்படுத்தினார்கள். பவுல், பேதுரு, யோவான் ஆகியோரது நிருபங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள ***''கடைசியாக''*** என்ற பதத்தை ஒட்டியவை இங்கு தொகுக்கப் பட்டுள்ளன. இவற்றில் நேர்த்தியான நடைமுறை ஆலோசனைகள் உண்டு. இவை வேதப் புத்தகங்களின் வரிசையில் அல்ல.

(1) பிலிப்பியர் 4:8 — உங்கள் சிந்தனா வாழ்க்கையைக் காத்துக்கொள்ளுங்கள்.

கடைசியாக *சகோதரரே, உண்மையுள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.*

விளைவு: *தேவ சமாதானம்* (வச 7)
சமாதானத்தின் தேவன் (வச 9)

நீதி 23:7அ ... *இருதய நினைவு எப்படியோ, அப்படியே மனிதன்!*

பிலி 4:8இலுள்ள 8 காரியங்களில் முதல் வருவது —
''உண்மையுள்ளவைகள் எவைகளோ''

ஒவ்வொரு நாளின் முடிவிலும் அந்த நாளில் நீங்கள் சிந்தித்தது, பேசியது எல்லாம் உண்மைதானா என்று அலசிப் பாருங்கள்.

(2) 1 பேதுரு 3:8,9 — சகோதர சிநேகத்துடன் வாழுங்கள்.

மேலும் ***(= கடைசியாக),*** *நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களாய் இரக்கம் ... மனவுருக்கம் ... இணக்கம் ...*

(ஆங்கில வேதத்தில் “Finally” என்றிருப்பது தமிழில் *''மேலும்''* என்றுள்ளது)

சகோதர சிநேகம் ஏன்?

☐ நமது அழைப்பு (வச 9) ... *ஆசீர்வாதமாயிருக்க.*
நம்மால் எவரும் புண்பட்டுவிடக்கூடாது.

☐ நமது நாட்கள் நன்றாயிருக்க (வச 10-12)
☐ கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (பிலி 4:5)

(3) பிலிப்பியர் 3:1; 4:4 — கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருங்கள்.

மேலும் ***(= கடைசியாக)****, என் சகோதரரே,*
கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள் ... சந்தோஷமாயிருங்கள் .
சந்தோஷமாயிருக்கவேண்டியது ‘‘நமது’’ பொறுப்பு (சங் 84:5-7)

உங்களது மகிழ்ச்சியின்மைக்குச் சூழ்நிலைகளையும்,
நிகழ்வுகளையும், நபர்களையும் பழிசாட்டாதீர்.
மனத்தொய்வுண்டாக்கும் சூழ்நிலைகளைக் கையாளக்
கற்றுக்கொள்ளுங்கள்.
மகிழ்ச்சியாயிருப்போரோடு நட்புகொள்ளுங்கள்.
மகிழ்ச்சியானவன் வேலையில் நேர்த்தியாயிருப்பான்
(நெகே 8:10)

(4) 2 தெசலோனிக்கேயர் 3:1,2 —
நற்செய்திப்பணியில் விறுவிறுப்பாயிருங்கள்.

கடைசியாக *சகோதரரே, கர்த்தர் வசனம் ... எங்கும் பரவ ...*
பொல்லாத மனிதர் ...

நீங்கள் எதைச் செய்தாலும்,
அதை இறையரசின் விரிவாக்கத்தோடு இணையுங்கள்.
மிஷனரிச் சிந்தையுடனிருங்கள்.
முன்னாள் மிஷனரிகளிடமிருந்து நாம் பெற்றனுபவிக்கும்
நன்மைகளை எண்ணிப்பாருங்கள் —
நமது மொழிகளில் விவிலியம் ...
கிறிஸ்தவ மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் ...
ஊர்களில் முக்கியமான இடங்களில் ஆலயங்கள் ...

(5) எபேசியர் 6:10 — முழு மூச்சாய்ச் சத்துருவோடு போராடுங்கள்.

கடைசியாக, *என் சகோதரரே, கர்த்தரது வல்லமையில்*
பலப்படுங்கள்... சர்வ ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளுங்கள்.
‘‘சர்வ’’ ஆயுதங்கள் என்பதில் அழுத்தம் (வச 11,13).
எந்தவோர் ஆயுதத்தையும் விட்டுவிடாதீர்கள்.

எ.கா.) போராயுதங்களைப் பயன்படுத்துவதில் சோம்பேறித்தனம்
வேண்டாம் —
அ) காலணிகள் — முன்செல்ல (advance)
ஆ) பட்டயம் — தாக்க (attack)

(6) 2 கொரிந்தியர் 13:11 — பூரணம் நோக்கி நடைபோடுங்கள்.

கடைசியாக, *சகோதரரே, நற்சீர் பொருந்துங்கள்.*

அநேகக் கிறிஸ்தவர்களின் சோகக்கதை —
Salvation ... Satisfaction ... Stagnation
இரட்சிப்பு ... திருப்தி ... தேக்கம்

முன்சென்றுகொண்டேயிருங்கள்! *ஆசையாய்த் தொடருங்கள்!*
(பிலி 3:13,14)

வாழ்வின் எப்பகுதியிலும், மேம்பாட்டுக்கான மாற்றத்தை
மனதார ஏற்றுக்கொள்ளுங்கள்.
வளையக்கூடியவர் பாக்கியவான்கள்;
அவர்கள் ஒடிந்துபோகமாட்டார்கள்!

(7) வெளிப்படுத்தல் 22:21 —
தேவ கிருபையை அணைத்துக்கொள்ளுங்கள்.

இதுதான் திருமறையின் கடைசி வசனம்.
இப்படித்தான் நாம் வாழ்க்கையை முடிக்கவேண்டும் —

It’s grace hath brought me safe thus far,
And grace will lead me Home!

— John Newton, 1725-1807

நித்திய தேவனாம் சத்திய பரன்தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளதே!

‘‘கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக’’ என்ற முழக்கத்துடன்
செருபாபேல் தனது பணியை முடிப்பான்! (சக 4:7-9)

(முகாம்கள் அல்லது கருத்தரங்குகளில் இறுதிச் செய்திக்காய்
இவ்வத்தியாயக் குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.)

(31ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

C

33

மெய்க்கிறிஸ்தவன் யார்?

Who is a True Christian?

யாக்கோபு நிருபத்திலிருந்து பாடங்கள்

முகவுரை

- பைபிளிலுள்ள ஒவ்வொரு புத்தகமும் ஒரு பொருளை மையமாய்க் கொண்டது; அதில் பிற கருத்துக்களும் இடம்பெறலாம்.

  எ.கா.) ரோமர் — விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்
  எபேசியர் — பூவுலக வாழ்வில் விண்ணுலக ஆசிகள்
  பிலிப்பியர் — பாடுகளிலும் மகிழ்ச்சி

  நடைமுறைக் கிறிஸ்தவத்தைக் குறிப்பாய் விளக்கும் ஒரு புத்தகம் உண்டு —

  ''யாக்கோபு எழுதிய நிருபம்''

  புதிய ஏற்பாட்டிலேயே, சுத்தமான பக்திக்கு (true religion) **வரையறை** தரப்பட்டுள்ளது இந்த நிருபத்தில்தான் — (1:27)

- இந்நிருபம் பிராந்தியச் சார்புடையது அல்ல; அனைத்துலகிற்கும் உரியது (பூகோள ரீதி)

  1:1 ... எங்கும் *''சிதறியிருக்கிறவர்கள்''*
  பாலஸ்தீனத்திலிருந்து சிதறடிக்கப்பட்டு மத்திய தரைக்கடல் நாடுகளில் குடியேறியவர்கள்.

- எக்காலத்துக்கும் உரியது (சரித்திர ரீதி/கால வரிசை)
  சிதறடிக்கப்படுவது முதல் (1:1) இரண்டாம் வருகை வரை (5:8,9)

- நம்பிக்கையையும் நடையையும் குறித்தது
  (இறையியல் & நடைமுறை)

  2:19,20 ... *விசுவாசம் ... செயல்பாடு ...*
  மிகவும் நடைமுறையானது;
  அலைகள் ... மரம் ... நிலம் ... குதிரைகள்

  கேட்டால் போதாது, அப்படியே செய்யவேண்டும் (1:22)

- இந்நிருபம் மென்மையாகவும் கடினமாகவும் பேசுகிறது —

  எ.கா.) *''என் சகோதரரே''* (14 தடவை) 1:2,16,19; 2:1,5,14; 3:1,10; 4:11; 5:7,9,10,12,19

  ''வீணான மனிதனே'' (2:20)

  ''விபசாரரே, விபசாரிகளே'' (4:4)

- நடைமுறைக்கேற்ப இருந்தாலும் சரியான இறையியல் —

  யாதொரு மாறுதலும் இல்லாத பிதாவானவர் (1:17,27)

  நமக்குள் வாசம்பண்ணும் தூயாவியானவர் (4:5)

  அதிசீக்கிரம் வரவிருக்கும் குமாரனானவர் (5:8,9)

- திருமறையில் பிற பகுதிகளோடு பல இணைப்புகள் —

  பழைய ஏற்பாட்டிலிருந்து குறைந்தது 40 குறிப்புகள்.

  மலைப்பிரசங்கத்திலிருந்து 20க்கும் அதிகமான மேற்கோள்கள்.

- இந்நிருப ஆக்கியோனின் பின்னணி —

  இயேசுவின் உடன் பிறந்த சகோதரனாயிருந்து முதலில் அவரை ஏற்க மறுத்தவர் (மாற் 6:3; யோ 7:5).

  பின்னர் திருச்சபையில் ஒரு தூணானவர் (கலா 2:9).

  அவர் ''நீதிமானாகிய யாக்கோபு'' என்றழைக்கப்பட்டார்.

  அறிவும் அனுபவமும் இணைந்தவர். (James the Just)

மெய்க்கிறிஸ்தவனின் அடையாளங்கள் —

1. அவன் முழுமூச்சாய்ச் சோதனைகளை எதிர்ப்பான்.

சோதிக்கப்படாதவர் எவருமில்லை.

சோதிக்கப்படாத பகுதியுமில்லை.

மறுபிறப்பை அடுத்து சோதனைகள் பெருகுகின்றன.

சோதனை பாவமல்ல —

இயேசு *''நம்மைப்போல் எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டார்''* (எபி 4:15)

சோதனைகளை மேற்கொள்வதெப்படி? —

(அ) சோதனைகளுக்காய்த் தேவனைக் குற்றம் சாட்டாதீர் (யாக் 1:13-16)

சுய விருப்பங்கள் → சோதனைகள் → பாவம் → மரணம்

எ.கா.) சோதனை நிறைந்த இடத்திற்குச் செல்லுதல்.
உங்கள் தோல்விகளுக்கு நீங்களே பொறுப்பெடுங்கள்.
தனது தோல்விக்கு ஆதாம் தேவனைப் பழிசாட்டினான்.

(ஆ) இருமனதிற்கு முற்றுப்புள்ளி வையுங்கள் (4:7-9).
பாவத்தை அடியோடு வெறுத்திடுங்கள் (இரகசிய ஆசைகள்).
சமரசம் வேண்டாம்.
தவறுதல்களுக்காய் ஆழ்ந்த துக்கமடையுங்கள் —
''துயரம் ... துக்கம் ... அழுகை''

தேவனுக்கு முழுவதுமாய் அடிபணிதலே சாத்தானை எதிர்க்கப் பலம் தரும் (வச 7)

(இ) உலகின் பாவ வழிகளை அறவே அகற்றிவிடுங்கள்.
அதின் கவர்ச்சிகள் மீது துராசை வேண்டாம் (4:4,5).

1:27இ ... *உலகத்தால் கறைபடாதபடி ...*

தலைகீழாய்ப் போய்க்கொண்டிருக்கும் உலகம்.

பாவத்திற்கு மறுப்பு தெரிவித்தால் கிரீடம் (1:12)

2. அவன் தனது நாவைக் கவனமாய்க் கட்டுப்படுத்துவான்.

- நாவடக்கத்தின் அதிமுக்கியத்துவம்:

  1:26 ... *வீணான பக்தி*

  3:2 ... *பூரண புருஷன் ... முழுவுடல்*

- நாவடக்கம் கடினம் —

  3:3-8 ... உதாரணங்கள்:

  குதிரைகள் (வச 3)

  கப்பல்கள் (வச 4)

  நெருப்பு (வச 5)

  பறப்பன, ஊருவன, நீந்துவன (வச 7)

- நாவடக்குவது எப்படி —

  அ) தீர்மானியுங்கள்: சங் 39:1; 17:3ஆ (Purpose)
  ஆ) ஜெபியுங்கள்: சங் 141:2,3 (Pray)
  இ) அப்பியாசியுங்கள் — (Practise)

  (i) *கேட்கத் துரிதம், பேசப் பொறுமை, கோபிக்கத் தாமதம்.*
  எதைப்பற்றியும் பேசத் துடிக்கும் சோதனையை மேற்கொள்ளுங்கள்.

  (ii) மனிதனைச் சபிப்பது படைத்தவரைச் சபிப்பது என்றறியுங்கள் (3:9,10)

  தூற்றுதல், தீதாய்ப் பேசுதல்.
  எவரையும் புண்படுத்திவிடாதீர்.

  (iii) பொய்யையும் மிகைப்படுத்துதலையும் வெறுத்திடுங்கள் (5:12)

3. அவன் மக்களோடு அன்பாய்ப் பழகுவான்.

- பாடப் புத்தகங்கள் தருவது அறிவு; தேவன் தருவதோ ஞானம்!

  அறிவிலும் தகவலிலும் இன்றையப் பெருக்கம்.
  சுபாவ அன்பற்ற உலகம்.
  வெறும் *அறிவு ''இறுமாப்பை உண்டாக்கும்''* —
  தன்னைப் பெருமையடிப்பது — ஆனால் மேலிருந்து வரும் ஞானம் சாந்தமுள்ளது, சமாதானமுள்ளது.
  3:14-18 ... *பொறாமை, கசப்பு, தன்னலம், பாரபட்சம்*
  4:1 ... *யுத்தங்கள், சண்டைகள்*

- சகவுறவுகளை மேம்படுத்துவது எங்ஙனம் —

  அ) எவருக்கும் விரோதமாய்ப் பேசுவதை நிறுத்துங்கள் (4:11,12)
  எவருமே 100 சதவீதம் கெட்டவரோ நல்லவரோ கிடையாது!

  ஆ) மற்றவர்களில் பூரணத்தை எதிர்பாராதேயுங்கள் —
  ''உன்னிலும் நல்லவன்'' எனும் மனப்பான்மை.

  5:9 ... உங்களுடைய குறைவுகளையும் *''நியாயாதிபதி வாசலில் நிற்கிறார்''* என்பதையும் உணருங்கள்.

  உங்கள் குறைவுகளை உங்கள் தோழனிடம் சொல்லி
  ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள் —
  5:16 (எல்லாருக்கும் குறைவுகள் உண்டு.)

  இ) யாராவது வழிவிலகினால், அதை ஒலிபரப்பாது அவரை வழிக்குக் கொண்டுவர எல்லாவிதத்திலும் உதவுங்கள் — (5:19,20)

(151 & 152ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

4. அவன் எல்லாரையும் பாரபட்சமின்றி நடத்துவான்.

- பாரபட்சத்தைக் கண்டிக்க 13 வசனங்கள் கொண்ட நீண்ட பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது —

  2:1-13 ... (இதை எடுத்து முழுவதும் வாசியுங்கள்.)

  ''பாரபட்சம்'' என்பது விபசாரம், கொலை போன்றது (2:10,11)

- செல்வந்தர் vs. எளியவர்

  — இது திருச்சபையில்தான் துவங்குகிறது (2:2).
  — இது நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்கிறது (2:6).

- ஜாதி வெறி —

  இந்தியச் சமுதாயம் 4 பெரும் பிரிவுகளாய்ப் பிளக்கப்பட்டுள்ளது:

  பிராமணர் — ஆச்சாரிய ஜாதி
  — கடவுளது வாயிலிருந்து தோன்றியவர்களாம்.
  ஷத்திரியர் — போருக்குச் செல்லும் ஜாதி
  — கடவுளது புயங்களிலிருந்து தோன்றியவர்களாம்.
  வைஷ்ணவர் — வியாபாரம் செய்யும் ஜாதி
  — கடவுளது வயிற்றிலிருந்து தோன்றியவர்களாம்.
  சூத்திரர் — (தீண்டப்படாத) தொழிலாளர் ஜாதி
  — கடவுளது பாதங்களிலிருந்து தோன்றியவர்களாம்.

  ஆனால் பைபிள் கூறுவது: (அப் 17:26,28) —
  சகல மக்களையும் *ஒரே இரத்தத்தினால் தோன்றப்பண்ணினார்.*
  யூதன் என்றும் கிரேக்கன் என்றும் இல்லை.

வேண்டுமென்றே எளியவரையும் நலிந்தவரையும் தேவன் தெரிந்தெடுக்கிறார் — (யாக் 2:5; 1 கொரி 1:26-29)

5. அவன் எளியவர்க்குத் தயாளமாய் உதவுவான்.

- ஆதிச்சபையின் சரித்திர நூல் **''நடபடிகள்''**
  என்றழைக்கப்படுகிறது;
  இன்றையக் கிறிஸ்தவமோ அதிக **''வார்த்தைகள்தான்!''**

  ஆதிச்சபையில் முதல் நடபடி (செயல்பாடு) தானதர்மம்தான் —
  அப் 2:44,45 ... *பகிர்ந்து கொடுத்தார்கள்*
  4:34,35 ... *ஒருவனுக்கும் குறைவில்லை*

  அப்போஸ்தலன் யாக்கோபு இதனைத் திரும்ப வலியுறுத்து
  கிறார் —
  யாக் 2:14-17 ... வெறும் *''வார்த்தைகள்'' — ''சமாதானம்!*
  விசுவாசத்தின் *''கிரியைகள்''* (செயல்கள்)

- தானதர்மம் பற்றிய பிரசங்கங்கள் அபூர்வம். ஆனால் —
  + யோவான் ஸ்நானகன் (கிறிஸ்துவுக்குமுன்) (லூக் 3:10,11)
  + கிறிஸ்து — *''இந்தச் சிறியருக்குச் செய்தது''* ... (மத் 25:40)
  + பவுல், பர்னபாவிடம் யாக்கோபு, பேதுரு,யோவான் சொன்னது
  (கிறிஸ்துவுக்குப்பின்)
  ''எளியவரை நினைத்துக்கொள்ளுங்கள்'' (கலா 2:9,10)

- ''கிறிஸ்தவமே தானதர்மம்தான்'' என்று சொல்லலாம்!
  ''தானதர்மமே கிறிஸ்தவம்'' என்று சொல்லமுடியாது!

  இன்றையக் கிறிஸ்தவம் திரிக்கப்பட்டுள்ளது;
  ஓரங்களுக்குச் சென்றுவிட்டது —
  ஒன்றுக்காக அடுத்ததை விட்ட நிலை.

Dr. ஸ்டான்லி ஜோன்ஸ் (1884-1973):
தானதர்மம் இல்லாத ஆன்மீகம் உடல் இல்லாத ஆவி.
ஆன்மீகம் இல்லாத தானதர்மம் ஆவி இல்லாத உடல்.
ஒன்று அலைந்து திரியும் ஆவி; அடுத்தது பிரேதம்.

- நமது நற்செய்திப்பணிகளைவிட அன்னை தெரசா அவர்களும்,
  கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்களும் இந்தியாவில்
  அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

  இந்தியாவில் இன்னும் ''பட்டினி இறப்புகள்'' உண்டு.

ஏழ்மையானோரைத் தூக்கிவிட முடிந்ததெல்லாம் செய்யுங்கள்
யாக் 1:9-11 ... *தாழ்ந்தவன் ... செல்வந்தன்*

தானதர்மம் விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, கட்டாயம் —
4:17 ... *நன்மை ... பாவம்*

நன்மை செய்யாதிருப்பது பாவம் (Sin of omission)

6. அவன் எல்லாவற்றிற்காகவும் ஊக்கமாய் ஜெபிப்பான்.

ஜெபம் என்பது கிறிஸ்தவனின் மூச்சு.
மீனுக்கு நீர் போல ஜெபம் அவனுக்கு!

- ''உயிர்வாழ சாப்பாடு'' vs. ''சாப்பிட உயிர்வாழ்வு''

  அப்படியே, ''உயிர்வாழ ஜெபம்'' vs. ''ஜெபிக்க உயிர்வாழ்வு''
  எபி 7:25ஆ ... *வேண்டுதல் செய்ய இயேசு உயிரோடிருக்கிறார்*

```
CHRISTIAN — CHRIST - I - A - N
                     N   B   E
                         O   A
                         V   R
                         E
```

- யாக்கோபு ஒரு மன்றாட்டு வீரர் எனச் சரித்திரம் கூறுகிறது.

  அது அவரது முழங்கால்களில் தெரியுமாம்.

  ஜெபத்தைப்பற்றி அவர் தரும் மூன்று படிப்பினைகள் —

அ) ஜெபத்தின் அதிமுக்கியத்துவம் (Priority in Prayer)
1:5-8 ... *ஞானமே முக்கியம்.*
சொப்பனத்தில்கூட சாலொமோன் (1 இரா 3:5-9)

அதாவது, ஆன்மீகக் காரியங்கள் ... (எ.கா.) கர்த்தர் ஜெபம்
நாமம் / இராஜ்யம் / சித்தம் / பாவங்கள் / சோதனை / தீமை

ஆ) ஜெபத்தில் பிரச்னை (Problem in Prayer)
4:1-3 ... இறைச்சித்தத்தின்படியே கேளுங்கள்
— அவர்கள் ஒருவர்மீது ஒருவர் விரோதத்தோடு
ஜெபித்திருக்கிறார்கள்.

இ) ஜெபத்தில் தரித்திருப்பு (Persistence in Prayer)

5:13-18 ... தனி ஜெபம், கூட்டு ஜெபம்

— உடல் நலக்கேடு (வச 14)

— ஆன்மீகப் பிரச்னை (வச 16)

— பொருளாதாரத் தேவை (வச 18) *''மழை''*

7. அவன் மனவுறுதியோடு எதிர்காலத்திற்காய்த் தேவனை நம்புவான்.

4:13-16 ... *கர்த்தருக்குச் சித்தமானால் ...*

- வாழ்க்கையில் ஆசைகளும் விருப்பங்களும் இருப்பது தவறல்ல;

ஆனால் அவை ஆண்டவரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும் —

சங் 37:4,5 ... *உன் வழியைக் கர்த்தருக்கு ...*

பொருளாதார நெருக்கடியுள்ள இவ்வுலகில்,
நிச்சயமற்ற எதிர்காலமே இளைஞரின் பெரும் கவலை —

ஆனால், இயேசு சொன்னது: *''பிதா அறிவார்''* — (மத் 6:31-33)

■ *முடிவுரை*

உண்மையான கிறிஸ்தவன் யார்?
அவனை அடையாளம் காணும் விதம் —

1. சோதனைகளை எப்படி மேற்கொள்கிறான். ← (அ) பிசாசு

2. எப்படிப் பேசுகிறான்.
3. பிறருடன் எப்படிப் பழகுகிறான். ← (ஆ) மக்கள்
4. பிறரை எப்படி நடத்துகிறான்.
5. எளியவருக்கு எவ்விதம் உதவுகிறான்.

6. எப்படி ஜெபிக்கிறான்.
7. எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்கிறான். ← (இ) தேவன்

அதாவது, (அ) பிசாசை எப்படி எதிர்க்கிறான்.
(ஆ) மக்களிடம் எப்படி இருக்கிறான்
(இ) தேவனை எப்படிச் சார்ந்திருக்கிறான்.

(37ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

34

சமநிலைக் கிறிஸ்தவன் யார்?

Who is a Balanced Christian?

முகவுரை

- Menier's Syndrome என்ற காதிரைச்சலால் அவதிப்பட்டேன்—
காதுக்குள் நத்தை வடிவிலான உறுப்பிலுள்ள திராவகம்
சரிவதால் தலைச்சுற்றும் சமநிலையிழப்பும் உண்டாகும்.

- பறவை — 2 இறக்கைகள்
புகைவண்டி — 2 தண்டவாளங்கள்
நாணயம் — 2 பக்கங்கள்

- சத்தியம் என்பது இணைகோடுகள் போன்றது.

- முழுப்பொய்யைவிடப் பாதி உண்மை அபாயம் (ஆதி 3:5)
''திருப்பிப்போடாத அப்பம்'' (ஓசி 7:8)
எனவேதான் ஆண்டவரோடு நடப்பதில் தடுமாற்றம்!

துர்வுபதேசங்களில் பெரும்பாலானவை
ஓரக்கொள்கைகளினாலேயே.
மற்றவை அடிக்கப்படுமளவு ஒரே சத்தியத்தை அழுத்துவது ...
கேடான மதங்கள் (cults) உருவாகியது இப்படியே.

- அளவுக்குமீறி வலியுறுத்துவது ஓரக்கொள்கைக்கும்,
ஓரக்கொள்கை தனித்து வினோதமாய்ச் செயல்படவும் நடத்தும்.
Extremism → Eccentricity → Seclusion/Sectarianism

- *''எழுதியிருக்கிறதே... இப்படியும் எழுதியிருக்கிறதே''* (மத் 4:5-7)
சமநிலை இழப்பதால் —

... திருச்சபையில் பிரிவினைகள் (divisions)
... கிறிஸ்தவர்களின் குன்றிய வளர்ச்சி (dwarfing)
... உபதேசத்தில் வஞ்சகங்கள் (deception)

- நமக்குச் சமநிலை தேவைப்படும் பல பகுதிகளில் முக்கியமான ஏழு —

1. திருமறைத் தியானம் ''அத்துடன்'' ஜெபம்

- அளவுக்குமீறி வேத ஆராய்ச்சியில் நேரம்,
  அல்லது ஜெபித்துக்கொண்டு மட்டும் இருப்பது!
- தேவன் பேசுவதை முதலாவது கேளுங்கள்; அடுத்து நீங்கள் பேசுங்கள் — பிர 5:1,2
- எஸ்றா & நெகேமியா கால எழுப்புதலும் ஆதிநிலையேகுதலும் —
  நெகே 9:3 ... திருவசனம் வாசிக்க 6 மணி நேரம்
  தொழுதுகொள்ள 6 மணி நேரம்

  அதிகமாய் ஒன்றும் சாதிக்காது சீக்கிரமாய் அணைந்துபோன எழுப்புதல்களைப் பார்த்திருக்கிறேன்;
  மட்டுமல்ல அந்நிய அக்கினியும் வந்துவிடுகிறது.
- உபவாசம் —
  இயேசு (மத் 4:4) ... அந்த 40 நாட்களிலும் அவர்
  இறைவார்த்தையை உண்டுகொண்டிருந்தார்.
  பல பிரசங்கிமாரது உபவாசக் காலங்களைத் தொடர்ந்து
  துர்வுபதேசங்கள் வெளியாவது இதில் தவறுவதால்தான்!
- ஞாயிறு ஆராதனைகள் — தொழுகைக்கு அதிக நேரம்;
  வசனத் தியானத்திற்கோ போதுமான நேரமில்லை.
  ஆனால், அப் 2:42; 20:7-11; கொலோ 3:16
- தொழுகை —
  ''ஆவியோடும் உண்மையோடும் (= சத்தியத்தோடும்)''
  இன்று திருமறைச் சத்தியச் செறிவு குறைவு.

  தொழுகை ''அத்துடன்'' திருவசனம் (சங் 138:2).
  திருவசனத்திலிருந்து கிடைக்கும் வெளிப்பாடுதான் தொழுகைக்கு
  உந்துவிசை; உரையாடலான உறவு.
- அதே வேளையில், வெறும் தலையறிவு தலைக்கனமுண்டாக்கும்.
  1 கொரி 8:1 ... இதயவுணர்வு ... தலையறிவு
- தேவனது வார்த்தை ''அத்துடன்'' தேவனது வல்லமை
  எ.கா.) 7 சகோதரர் + 1 பெண்மணி (மாற் 12:24)

2. பழைய ஏற்பாடு ''அத்துடன்'' புதிய ஏற்பாடு

- 2 ஏற்பாடுகள் — தேவனது இரு உதடுகள்
  புதியது பழையதில் மறைந்துள்ளது;
  பழையது புதியதில் மலர்ந்துள்ளது.
- *தேறின வேதபாரகன் ... புதியது ''அத்துடன்'' பழையது* (மத் 13:52)
- *வேதவாக்கியங்கள் ''எல்லாம்'' பயனுள்ளவை* (2 தீமோ 3:16)
  ''இஸ்ரவேலருக்கு நேரிட்ட ***யாவும்*** ...'' (1 கொரி 10:11)
- ஆனால் நாம் பழைய உடன்படிக்கையின் கீழ் இல்லை,
  அதிலுள்ள சடங்காச்சாரப் பகுதி நீங்கிப்போயிற்று —
  எ.கா.) இயேசு ... ஓய்வுநாளைக் குறிப்பிடவில்லை!
  மத் 19:16-20

  ஆசரிப்பு ... ஆகாரம் —
  அவரவரது மன விருப்பம் (ரோ 14:5,6)

  வெளித் தோற்றம் vs. உள்ளான நிலை

  ஆனால், சன்மார்க்கத்தின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது —
  எ.கா.) கொலை | *''ஆனால் நான் உங்களுக்குச் சொல்வது...''*
  விபசாரம் | (மத் 5:21,22,27,28)
- நியாயப்பிரமாணம் vs. கிருபை —
  ''நியாயப்பிரமாணம் ... ஆனால் கிருபையும் சத்தியமும்''
  (யோ 1:17)
  பிரமாணக் கொள்கையும் கிடையாது;
  அதே வேளையில் கட்டுப்பாடின்மையும் கிடையாது.
  ''கிருபை பெருகும்படிப் பாவத்தில் நிலைத்திருக்கலாமா?''
  (ரோ 5:20-6:1)

  ''இனிப் பாவம் செய்யாதே!'' (யோ 5:14)
  சட்டதிட்டப் பிரமாணம் அல்ல, ஆனால் ஒழுங்கு (discipline)
- பழைய ஏற்பாடு ... *செய்வாயாக!* (Do!)
  புதிய ஏற்பாடு ... செய்தாயிற்று! (Done!)
  செயலாற்ற பலம்: **இருதயம்** (x கற்பலகை) *கட்டளைகள்.*
  பாவங்கள் இனி நினைக்கப்படுவதில்லை!
  (எபி 8:10,12)

- ஆண்டுக்கொருமுறை அல்லது ஈராண்டுக்கொருமுறை பைபிள் முழுவதையும் வாசித்து முடியுங்கள்:
  ஆரோக்கிய விகிதாச்சாரம்:
  ப.ஏ. ஒரு தடவை, பு.ஏ. இரு தடவை!
  ஒத்த வாக்கிய வேதங்களைப் பயன்படுத்துங்கள்.

3. தேவன்மீது அன்பு ''அத்துடன்'' மனிதர்மீது அன்பு

தேவனை நேசியுங்கள் ... அயலானை நேசியுங்கள் (மத் 22:35-40)
எ.கா.) *''எனது அயலான் யார்?''* (யாருக்கு நான் அயலான்?)
லூக் 10:29,30 (நல்ல சமாரியன்)
ஆசாரியன் & லேவியன் → மார்க்கம் = தேவனை ஆராதித்தது, மனிதனை மறந்தது.
எ.கா.) தசமபாகம், ஆனால் இரக்கம் இல்லை ... மத் 23:23

■ சமநிலைக்கு அழைப்பு —

□ கிறிஸ்துமஸ்: *தேவனுக்கு மகிமை ...*
மனிதர்மேல் பிரியம் (லூக் 2:14)

□ இயேசு: இறைமகன் ... மனுமகன்
தேவ கிருபை ... மனிதர் தயவு (லூக் 2:52)
''பிதாவுக்குப் பிரியமானவர்'' (லூக் 3:22);
''பாவிகளின் சிநேகிதன்'' (லூக் 7:34)

□ சிலுவை: ✝ தேவனோடு ''அத்துடன்'' மனிதரோடு ஒப்புரவு.
செங்குத்தான ''அத்துடன்'' சமதளமான உறவுகள்.
(அப் 24:16)

□ பெந்தெகொஸ்தே: *தேவனைத் துதித்து* ''அத்துடன்''
மனிதரிடம் தயவுபெற்று (அப் 2:47)
(பிரிந்திருத்தல் vs. ஒதுங்கியிருத்தல்)
(Separation vs. Seclusion)
ஒன்றில்லாது அடுத்தது முழுமையடையாது —

- *தேவனிடம் அன்புகூருகிறேன் என்று சொல்லியும் சகோதரனைப் பகைக்கிறவன்* ... (1 யோ 4:20)
- *நீ பலிபீடத்திடம் (கடவுளிடம்) வரும்போது, ... உன் சகோதரனோடு முதலாவது ஒப்புரவாகு* (மத் 5:23,24)
- *கோபமில்லாமல்* (↔) *பரிசுத்த கரங்களை உயர்த்தி* (↑)
  (1 தீமோ 2:8)

4. குடும்பம் ''அத்துடன்'' வேலை/ஊழியம்

- அளவுக்கு மீறிய இரு நிலைகள்:
  வேலை ... ஊழியம் ... குடும்பத்தைக் கவனியாமை
  குடும்பம் ... குடும்பம் ... வேலை/ஊழியத்தில் கவனக்குறைவு
- ஒரு மனிதனைப் பயிற்றுவிப்பதும் பரீட்சிப்பதும் குடும்பமே —
  எ.கா.) *சொந்தக் குடும்பத்தை விசாரியாதவன்*
  1 தீமோ 3:4,5
- இயேசு இரண்டையும் சமநிலையில் வைத்தார் —
  எ.கா.) தேவாலயம்: 12 வயது (லூக் 2:48-51)
  என் பிதாவின் காரியம் ... அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்
  எ.கா.) *என் தாயார் யார்? ... சகோதரர் யார்?* (மாற் 3:31-35)
  சிலுவை மீதிலோ ... *''அதோ, உன் மகன்!''*
  (யோ 19:26,27)
  எ.கா.) கணவன் — மனைவி
  இயேசுதான் பூரண மாதிரி —
  ''சபையைக் கிறிஸ்து நேசிப்பதுபோல...''
  (எபே 5:25)

□ முக்கோண அறிவுரை —



ஒன்றுக்காய் அடுத்ததை அசட்டை செய்யாதீர்!
வேலை நேரமற்ற பிற வேளைகளுக்குத் திட்டமிடுங்கள் —
— குடும்பத்திற்கு (வாழ்க்கைத் துணை/பிள்ளைகள்)
— வேலைக்கு / ஊழியத்திற்கு

Work while you work;
Play while you play;
This is the way
To be happy and gay!

உங்கள் நேரத்தை எவ்விதம் பகுத்துப் பயன்படுத்தலாமென்று உங்கள் வாழ்க்கைத்துணையுடன் கலந்தாலோசியுங்கள். பெரிய பிரச்னை வரும்வரை காத்திருப்பானேன்?

5. வளமை ''அத்துடன்'' வறுமை (நிறைவு/குறைவு)

☐ எவ்வளவு வறுமையிலிருக்கிறோமோ அவ்வளவு ஆன்மீக வளம் என்று நினைத்த காலமுண்டு. இப்பொழுது அடுத்த ஓரத்திற்குச் சென்றுவிட்டோம்.

ஆன்மீகத்திற்கு வளவாழ்வு அளவுமானி அல்ல —

எ.கா.) உலகின் மிகப்பெரிய செல்வந்தர் சிலர் நாத்திகர்.
வறுமையிலிருக்கும் சிலரோ விசுவாசத்தில் வல்லவர் (யாக் 2:5)

எ.கா.) மரியாள் ... புறாக்குஞ்சுகள் ...
ஆட்டுக்குட்டி கொண்டுவர வசதியில்லை (லேவி 12:6,8).
ஆனால், *''பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்!''*
(லூக் 2:22-24)

☐ சுகபோக வாழ்வு உபதேசம் (Prosperity Gospel)
— மிகப் பிரபலமானது!

- சமநிலைக்கு அழைப்பு —

உபா 32:39 ... *தேவன் ... நான் கொல்லுகிறேன் ... ஆற்றுகிறேன்*
யோபு 2:10 ... *தீமையையும் பெறவேண்டாமா?*
இவையெல்லாவற்றிலும் அவன் பாவம் செய்யவில்லை.
(யோனா அப்படியல்ல — யோனா 4:5-8)
சங் 66:11,12 ... *வலை ... வருத்தம் ... வளம்*
சங் 74:16 ... *பகல் உமது ... இரவும் உமது*
பிர 7:14 ... *மகிழ்ந்திரு ... சிந்தனை செய்*
ஏசா 45:7 ... *வெளிச்சம் ... இருள்*
எரே 31:28 ... *இடிக்கவும் ... கட்டவும்*
புல 3:38 ... *தீமையும் நன்மையும்*
பிலி 4:12,13 ... *வாழ்ந்திருக்கவும் ... தாழ்ந்திருக்கவும் ...*
கிறிஸ்து மூலம் எல்லாம் செய்யப் பலம்

- உங்களது தேவைக்கு மிஞ்சி உங்களிடமிருப்பது தேவையிலிருப்போருக்குக் கொடுக்கவே (2 கொரி 8:14,15)
- ஆரோக்கியம் — வியாதி வருவது விசுவாசக் குறைவினால் அல்ல — விசுவாச வீரர் பலர் வியாதிப்பட்டிருக்கின்றனர்!

இப்பொழுது உடலில் நமக்கு *முதற்கனிகள்* மட்டுமே ...
''சரீர மீட்பு'' எதிர்காலத்தில்தான் (ரோ 8:22,23)
அதுவரை, *''தேவ கிருபை போதும்!''*

- செல்வாக்கு: ப.ஏ. — பெரும்பாலும் பொருளாதார நலன்கள்
புதி.ஏ. — பிரதானமாக ஆன்மீக ஆசிகள்

6. நற்செய்தியறிவிப்பு ''அத்துடன்'' தானதர்மம்

- சிலர் ஆன்மீகத் தேவைகளை மட்டும் கவனித்து, உடலுக்கடுத்த காரியங்களை விட்டுவிடுன்றனர் — அது கண்டிக்கப்பட்டுள்ளது: யாக் 2:15-17 ... *''சமாதானம்''* "Soap – Soup – Salvation" என்று இரட்சண்ய சேனை நிறுவனர் வில்லியம் பூத் கூறியதைக் கிண்டல் செய்வர்.

ஆனால் இயேசு: *''பிரசங்கியுங்கள்... சுகமாக்குங்கள்''* (மத் 10:7,8)
குணமாகாத குஷ்டரோகி பரலோகம் சென்றுவிடலாம்;
மன்னிக்கப்படாத பாவி அங்குச் செல்லமுடியாது!

- அப்போஸ்தலர் —
கலா 2:9,10 ... பேதுரு + யாக்கோபு + யோவான்
பவுல் + பர்னபா
''தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்!''
- இரு குழுவினர் — எதிர்பாராத அதிர்ச்சி:

அ) *''தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? அற்புதங்கள்''* ...
(மத் 7:22,23)

ஆ) *''எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராய்க் கண்டோம்?''*
(மத் 25:41-46)

- அடுத்த குழுவினரைக் கண்டனம்/கிண்டல் செய்யாதீர். இணைந்து ... ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.

எ.கா.) நற்செய்தியறிவிப்பு இயக்கங்கள் = பாதங்கள் — ''செல்!''
நிவாரணப்பணி நிறுவனங்கள் = கரங்கள் — ''செய்!''

கிறிஸ்து நமது *''சரீரத்திற்கும்''* இரட்சகர் (எபே 5:23ஆ)

- இறைப்பணிக்கு, அத்துடன், இல்லாதோருக்குக் கொடுங்கள். இல்லாதோருக்கென இன்னொரு தசமபாகம் கொடுத்தாலென்ன?

— பணம் சேகரிக்கும் திட்டங்கள்:
''உற்சாகமாய்க் கொடுக்கிறவன் தேவனுக்குப் பிரியம்''
இவ்வசனச் சூழமைவு? 2 கொரி 9:7-10 — தானதர்மம்!

7. சபைகள் ''அத்துடன்'' சங்கங்கள்

- தேவன் அநேக மிஷனரி இயக்கங்களையும், நற்செய்தியறிவிப்பு ஊழியங்களையும் எழுப்பியுள்ளார் —

எ.கா.) YFC, CCC, FMPB, GEMS, BYM, IEM, வேதாகமச் சங்கங்கள், World Vision, Compassion International, முதலியன,

இவைகளுக்கும் சபைகளுக்குமிடையே இழுபறிகள் இருந்துவருகின்றன.

சரியானதொரு புரிதலே நிவாரணம் —

- சபைகள் பிறப்பிப்பது சங்கங்கள் (அப் 13:1-4); சங்கங்கள் பிறப்பிப்பது சபைகள் (பவுலும் உடன் ஊழியரும் சபைகள் நிறுவினர்).

சபையின் பணி மிஷனரி ஊழியம்;
மிஷனரி ஊழியத்தின் பணி சபை நிறுவுதல்.

- சபைகளும் சங்கங்களும் —

எ.கா.) எபே 4:13
மேய்ப்பர் + போதகர் + தீர்க்கர் —
தங்கல் ஊழியர் (local/residential)
அப்போஸ்தலர் + சுவிசேஷகர்
சலன ஊழியர் (translocal/mobile)

தேவனது அழைப்பு: எனது ஜனங்களைப் போகவிடு! (Go!)
எனது ஜனங்களை வளரவிடு! (Grow!)

- சபை சார்ந்த சங்கங்கள் (Para-Church organisations) — சபையின் கரங்களது நீட்டல் —
எ.கா.) திருமறை மொழிபெயர்ப்பு,
கன்னி நிலங்களில் நற்செய்தியறிவிப்பு,
சிறப்பான குழுக்களுக்கு ஊழியம் (பார்வையற்றோர், போதை மருந்துகளுக்கு அடிமைப்பட்டோர், முதலியோர்)

அளவுக்கு மீறித் தனித்தியங்கக்கூடாது;
ஒருவர் மீது ஒருவர் சார்ந்து செயல்படவேண்டும்.
பரஸ்பர உறவு, ஒருவரையொருவர் புரிந்துகொள்ளல் வேண்டும்.

- ஊழியச் சங்கங்களைச் சபைகள் தாழ்வாக எண்ணக்கூடாது —

எ.கா.) சவுல் ... 1000
தாவீது ... 10000 (1 சாமு 18:6-9)

போட்டியோ, ஒப்பிடுதலோ கூடாது;
ஒருவருக்கொருவர் உதவவேண்டும்.
சவுலோ தாவீதோ, யார் வென்றாலும்,
வெற்றி இஸ்ரவேலுக்குத்தானே!
திருச்சபை வாழ்வில் உத்தமமாயிருங்கள்;
ஊழியச் சங்கங்களுக்கு உதவுங்கள்.

இரண்டுக்கும் பலமும் உண்டு, பலக்குறைவும் உண்டு.
நாம் சேர்ந்தியங்கவேண்டும்.

ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவேண்டும்

- சாரம் (ஊழியச் சங்கங்கள்) இல்லாது கட்டிடம் கட்டுவது எப்படி? சாரம் என்பது கட்டிடம் (சபைகள்) கட்டுவதற்குத்தான்!

■ *முடிவுரை*

- சமநிலை என்றால் சமரசம் அல்ல!
Balance does not mean neutrality!

- திருவாக்கு: *''நீங்கள் இடதுபுறமோ வலதுபுறமோ சாய்ந்தால் ...''* (ஏசா 30:21)

(54ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

35

திருரத்தத்தின் ஆசீர்வாதங்கள்

The Blessings of the Blood

முகவுரை

கலா 6:14-16 ... *"சிலுவையைக் குறித்தே மேன்மை"*
பவுலின் புரட்சிகரமான, முழுமையான மனந்திரும்புதல் —
"புது சிருஷ்டி" (வச 15)
"இந்தப் பிரமாணம்" (வச 16)

அதாவது, புதிய உடன்படிக்கை குறித்த தெளிவான வெளிப்பாடு
(1 கொரி 11:23-25) ... *நான் கர்த்தரிடம் பெற்றது ...*

இரத்தத்தில்தான் உயிர் இருக்கிறது (ஆதி 9:4).
நமது மீட்பு கிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே —
(1 பேது 1:18,19)

இயேசுவின் இரத்தத்தின் ஆசீர்வாதங்கள் —

1. நியாயத்தீர்ப்பிலும் அந்தகாரத்திலுமிருந்து விடுதலை

யாத் 12:12,13 / எபி 11:28 ... தலைப்பிள்ளை தப்பிற்று!
அப்படியே, யோசு 2:15-18 ... ராகாப்! படுபாவியும் இரட்சிக்கப்பட
"வேசியாகிய ராகாப்" (எபி 11:31) [முடியும்!
எபி 2:14,15 ... *மரண பயம்*
(தெய்வீக வல்லமை இயல்பான பயத்தை மேற்கொள்ளுகிறது)
கொலோ 1:13,14 ... *இருளின் அந்தகாரம்*
எ.கா.) எபே 6:12

2. நீதிமானாக்கப்படுதலும் பரிசுத்தமாக்கப்படுதலும்

படி 1 — எபே 1:7 ... மன்னிப்பு
படி 2 — வெளி 1:5 ... கழுவப்படுதல்
படி 3 — 1 யோ 1:7 ... தொடர்ந்த சுத்திகரிப்பு
படி 4 — வெளி 7:14 ... பாடுகள், உபத்திரவங்களினால் துவைப்பு

3. சாட்சியும் நுழைவும்

1 யோ 5:8-11 ... உள்ளான நிச்சயம்.
இனிக் குற்றவுணர்வு இல்லை.

எனவே நாம் *தைரியமாய் மகா பரிசுத்த தலத்தில்* நுழையலாம் —
எபி 10:19-22

பிதாவானவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளும் அவர் வழியாகவுமே பார்க்கிறார் —

முழுமையாய் அடையாளப்படுத்திக்கொள்ளுதல் — ரோ 6:3-6
மரணம் ... அடக்கம் ... உயிர்ப்பு
இங்குதான் திருமுழுக்கின் முக்கியத்துவம் தெளிவாகிறது.

4. இறைமக்களோடு நெருக்கவுறவு

எபே 2:11-16 ... எ.கா.) யூதரும் புறவினத்தாரும்
1 கொரி 11:25 ... கர்த்தருடைய பந்தி

"என்னை நினைவுகூரும்படி ..." (1 கொரி 11:24)

அ) கர்த்தரது மரணம் (வச 26)
ஆ) கர்த்தரது உடன்படிக்கை (வச 25)
இ) கர்த்தரது சரீரம் (வச 29/10:16,17) (1 யோ 1:7)
ஈ) கர்த்தரது வருகை (வச 26)

கர்த்தரது பந்தி அவிசுவாசிகளுக்கு உரியதல்ல — யாத் 12:43-47
தகுதியின்றிப் பங்கேற்பு — சுகவீனம் (வச 29,30)
தகுந்த ஆயத்தத்தோடு பங்கேற்பு — ஆரோக்கியம்!

யாத் 15:22-26 ... முதலாவது மரம்; அடுத்து சுகமளிப்பு வாக்கு.
ஏசா 53:5/மத் 8:16,17 ... குணமாக்கும் தழும்புகள்

5. கீழ்ப்படிதலும் சேவையும் நிறைந்த வாழ்வு

- அடிப்படையாக நாம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் (எபே 2:1-3)
  இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவுவதோடல்லாது,
  கீழ்ப்படிதலுக்குள்ளும் நம்மை நடத்துகிறது —

  1 பேது 1:2 ... *தெரிந்துகொள்ளப்பட்டதே அதற்குத்தான்!*
  எபி 12:24,25 ... *ஆபேலின் இரத்தத்தைவிட*
  மேலானவைகளைப் பேசும் ... எனவே கீழ்ப்படியுங்கள்.

ஆபேலின் இரத்தத்தின் கூப்பிடுதலுக்குக்
காயீன் தப்ப முடியவில்லை!

கிறிஸ்துவின் இரத்தம் நம்மீது பரிசுத்தத் தாக்கம் ஏற்படுத்தி
கீழ்ப்படிதலின் வட்டத்திற்குள் நம்மைக் காக்கிறது.

- எபி 9:14 ... *தேவனைச் சேவிக்க மனச்சாட்சி சுத்திகரிப்பு.*
  (வச 21 ... *சுத்தம்பண்ணப்பட்ட பாத்திரங்கள்)*
  இரத்தமின்றி எச்சேவையும் அங்கீகரிக்கப்படாது (எ.கா. காயீன்)
  எபி 13:20,21 ... *எல்லா நற்செயலுக்கும் தகுதி ...*

6. சாத்தான்மீது வெற்றி

வெளி 12:11 ... *இரத்தம் + சாட்சி*
இது சுலபமல்ல ... மாயா ஜாலமல்ல ...
உயிரைப் பணயம் வைத்துப் போராட்டம்
— *''மரணம் நேரிடுவதாயிருந்தாலும் ...''*

நம்மைத் தாக்கச் சத்துருவின் ஆயுதங்கள் —
அ) மாம்சம் (ஊனியல்பு)
சிலுவையின் மூலமே வெற்றி (கலா 5:24).
அவ்விதம் எண்ணியவாறே வாழவேண்டும்.

ஆ) உலகம்
சிலுவையின் மூலமே வெற்றி (கலா 6:14)
சோதோமும் எகிப்தும் (வெளி 11:8)
பேய்த்தனமான இசை மற்றும் கொட்டு மேளம் வேண்டாம்.
மனதைக் கெடுக்கும் பிசாசுகளின் ஆதிக்கம்.

7. நித்திய வாழ்வும் உயிர்த்தெழுதலும்

யோ 6:53-55 ... *என் மாம்சம் ... என் இரத்தம்*
எபி 9:12 ... *நித்திய மீட்பு*

கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழ் நாம் பாதுகாப்பாய் இருக்கிறோம்.

வெளி 5:9,10 ... *மீட்கப்பட்டோரின் பாடல்*
:12,13 ... *அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்*

இவ்விதக் கிறிஸ்தவ வாழ்வானது துவக்கம் முதல் முடிவு வரை
கிறிஸ்துவின் இரத்தத்தாலேயே மூடப்பட்டுள்ளது.

36

வெற்றி வேந்தர் மூலம் வெற்றி

Victory through the Victor

முகவுரை

ரோ 8:37 ... *முற்றும் ஜெயங்கொள்வோர்* (வெற்றி+)
1 கொரி 15:57 ... *ஜெயம் கொடுக்கும் தேவன்*
2 கொரி 2:14 ... *எப்பொழுதும் வெற்றியடையப்பண்ணும் தேவன்*

இவ்வளவு மகிமையான திருவாக்குகளிருந்தும், வெற்றியுள்ள
கிறிஸ்தவரைவிடத் தோல்வியில் துவளும் கிறிஸ்தவரே அதிகம் —

தனி வாழ்வில் தோல்விகள்
குடும்ப வாழ்வில் தோல்விகள்
பொது வாழ்வில் தோல்விகள்
ஊழியப் பாதையில் தோல்விகள்

உள்ளும் புறம்பும் நாம் வெற்றியாயிராவிடில்,
தோல்விகள் நிறைந்த இவ்வுலகிற்கு எதைத்தான் கொடுப்போமோ?

கிறிஸ்தவப் பணியில் சோர்புறுவதற்கு முக்கிய காரணங்களில்
ஒன்று ''தோல்விகள்.''
தோல்வி ஏன்? — பலம் குறைவு
பலம் ... போராட்டம் (எபே 6:10,11)
பலம் ... போராட்டம் (2 தீமோ 2:1,3,4)

எப்பொழுதையும்விடப் பிசாசு அதிகம் சீறுகிறான் (வெளி 12:12).
ஆனால் வெற்றி வேந்தர் மூலம் வெற்றி நமதே! *(''கர்த்தருக்குள்'')*

எப்படி?

கிறிஸ்துவுக்குள் ... கிறிஸ்துவின் மூலம்

1. கிறிஸ்துவின் மாதிரி மூலம் (Example of Christ)

அதாவது, கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதின் மூலம்.
தொட்டில் முதல் தொழுமரம் வரை கிறிஸ்துவைப் பிசாசு
விட்டானில்லை.
''எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாது'' (எபி 4:15)

இரகசியம்:

அ) பிதாவானவரின் அதிகாரத்திற்கு முழு அடிபணிதல்
எபி 10:5-7 ... *இதோ வருகிறேன் ... ஓர் உடல் ...*

நூற்றுக்கதிபதியின் அறிக்கை (மத் 8:8,9).
தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பிசாசுக்கு எதிர்த்து நில் (யாக் 4:7)

ஆ) ஜெபத்தின் மூலம் விழித்திருப்பு
எதிர்பாராத வேளையில்தான் பிசாசு தாக்குகிறான்.
ஜெபத்தில் விழிப்பு (மத் 26:41/எபி 4:7).
உபவாசத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டும் (மத் 17:21)

பார்ப்பதற்குப் பிசாசு கவர்ச்சியாகத்தானிருப்பான்!
அவன் பெரிய தந்திரசாலி (2 கொரி 11:14).
எ.கா.) உயர்த்துவதில் கரிசனை கொண்டவன்போல் (மத் 4:5-10).
நலம் நாடுபவன் போல் (பேதுரு) (மத் 16:21-23).

ஜெபத்தில் பெற்ற விழிப்பினால்
இயேசு அவனை அடையாளம் கண்டார்.

இ) இயேசு இதைச் சொல்வாரா, செய்வாரா, ஆமோதிப்பாரா?
நான்கு சுவிசேஷங்களையும் கருத்தூன்றிப் படியுங்கள் —
What Would Jesus Do? (WWJD)

2. கிறிஸ்துவின் இரத்தம் மூலம் (Blood of Christ)

அதாவது, கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை நமதாக்குவது.

கிறிஸ்துவின் இரத்தம் என்றால் பிசாசுக்கு நடுக்கம்.
சிவப்பு நூலின் பக்கமே வரமாட்டான் (யோசு 2:17,18)

— அவன் குற்றம் சாட்டுவதில் கில்லாடி (வெளி 12:10,11)
நம்மீது பழிசுமத்திக்கொண்டேயிருப்பான் (ரோ 8:34)

மரித்தவர் கிறிஸ்துதானே! (Conviction vs. Condemnation)
பாவ உணர்வு vs. கண்டனத் தீர்ப்பு

— தேவனுக்குமுன் ஒளிவுமறைவின்றி வாழுங்கள்.

கிறிஸ்துவின் இரத்தம் கழுவிக்கொண்டேயிருக்கும் (1 யோ 1:7)
அது மனச்சாட்சியைக் குற்றவுணர்விலிருந்து
விடுவிக்கும் (எபி 9:14)

— உணர்வுகளையே சார்ந்திராதீர்.
கிறிஸ்துவோடு அறையப்பட்டு, மரித்து,
அடக்கம்பண்ணப்பட்டாயிற்று (ரோ 6:6,7,11)

சத்தியம் → விசுவாசம் → உணர்வுகள்
(Fact → Faith → Feeling

அடுத்த முறை உங்கள் பழைய பாவத்தைப் பிசாசு நினைப்பூட்டினால், அவனது எதிர்காலத்தை அவனுக்கு நினைப்பூட்டுங்கள்!

D.L. மூடி: ''கிறிஸ்துவின் ஒரு சொட்டு இரத்தம்
வானம் பூமியிலும் விலையுயர்ந்தது!''

3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம் (Resurrection of Christ)

அதாவது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுவதின் மூலம்

— *கிறிஸ்து எழுந்திராவிடில்* ... (1 கொரி 15:17)

— அவர் நம்மில் வாழ்கிறார்! எப்படி? *விசுவாசத்தினால்* (எபே 3:17)

— பிசாசைவிடக் கிறிஸ்து பெரியவர் (1 யோ 4:4)
எனவே வெற்றி பெறுவோம்!

— இயேசு: *''திடமனதாயிருங்கள்* (தொய்வு வேண்டாம்);
நான் உலகை ஜெயித்தேன்!'' (யோ 16:33)

— உயிர்த்தெழுதலினால்,
எல்லா நாமத்துக்கும் மேலான நாமம் அவருக்கு (எபே 1:19-21)
''கர்த்தரது நாமம் பலத்த கோட்டை'' (நீதி 18:10)
(அதிவேக ஏவுகணையும் அதனைத் தகர்க்க முடியாது)

— தாவீது & கோலியாத்து: *''கர்த்தர் நாமத்தில் ...''* (1 சாமு 17:45)
கடந்தகால வெற்றிகளை மறந்துவிடாதீர்:
சிங்கம், கரடி (1 சாமு 17:37)

— கிறிஸ்து இப்போது பிதாவின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார்.
உதவிக்குத் தைரியமாய் சிம்மாசனத்திற்கு வாருங்கள்
(எபி 4:14-16) பரலோகத்திலிருந்து உடனடி உதவி!

4. *கிறிஸ்துவின் ஆவி மூலம்* (Spirit of Christ)

அதாவது, கிறிஸ்துவின் ஆவியினால் நிறைந்திருப்பதின் மூலம்.

''சத்துரு வெள்ளம்போல் ... ஆவியானவர்'' (ஏசா 59:19)

பவுல்: *''கிறிஸ்துவின் ஆவி என்னை விடுதலையாக்கிற்று''*
(ரோ 7:23,24; 8:2,9,10)

ஆவியின் கனி மாம்சச் செயல்களை அதமாக்கும் (கலா 5:19-23)

''இதற்கு விரோதமான பிரமாணம் (= சட்டம், சத்துவம்) *இல்லை''*

— நம்மில் வாழும் ஆவியானவரின் வைராக்கியம் (யாக் 4:5).
இச்சைகளுக்கு உடனே மறுப்புச் சொல்ல உதவுகிறார்.
ஆபிரகாமின் மகனுக்கு மணமகளை அழைத்துச் சென்ற
எலியேசர் போல் ஆவியானவர் நம்மைச் சுமந்து செல்கிறார்!
யாரும் வழியில் மணமகளைத் தொடமுடியாது!

— நமது உடலே ஆவியானவரின் ஆலயம் (1 கொரி 3:16; 6:19)
இதை நினைவிற்கொண்டே வாழுங்கள்.
''பரிசுத்த'' ஆவியானவர் — முதலாவது **பரிசுத்தம்**
(தூற்றுக்கூடை, அக்கினி) (மத் 3:11,12)
அடுத்து **வல்லமை** (வார்த்தை + வாழ்க்கை) ... (அப் 1:8; 5:32)

— அடிக்கடி நிரப்பப்பட தேவனுக்குமுன் காத்திருங்கள் (அப் 4:31)
''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் ...'' (ஏசா 40:31)
இயேசு நிரப்பப்பட்டார் (லூக் 4:1); *ஆவியின் வல்லமை* (வச 14)

5. *கிறிஸ்துவின் வசனம் மூலம்* (Word of Christ)

அதாவது, கிறிஸ்துவின் வசனத்தை ஆயுதமாய்ப் பயன்படுத்துவதால்
திருவசனம் — வாள், துப்பாக்கி
ஹெல்மட், பூட்ஸ் எல்லாமிருந்தும் துப்பாக்கி இல்லையேல்?

பத்திரமாய்த் திரும்பி வருவதா, எதிரியைத் துரத்துவதா, எது நோக்கு?
தாக்கும் ஒரே ஆயுதம்: *வசனம் ... பட்டயம்* (எபே 6:10-17)

செயல்பாடுகள்: ***அதமாக்குவோம், தகர்ப்போம்*** ... 2 கொரி 10:4-6
வீண் சிந்தனைகள்/இருமனம் x திருவசனம் (சங் 119:113)
தேவையற்ற கேள்விகள், கற்பனைகள்

நமது தலையில் கூடுகட்டாதபடிக் கழுகை விரட்டுவோம்!

— பாக்கெட்டில் புதிய ஏற்பாடு ...
தலையணைக்கடியில் வேதம் ... இவையெல்லாம் போதாது.
''வசனம் நிலைத்திருப்பதால் ... ஜெயித்தீர்கள்'' (1 யோ 2:14)

— *''எழுதியிருக்கிறதே''* (மத் 4:1-11)
மூன்று மேற்கோள்களும் உபாகமத்திலுள்ளவை (8:3; 6:16; 6:13)
இருதயத்தில் இறைவார்த்தை (சங் 119:11)
எ.கா.) இச்சையுடன் பார்க்கச் சோதிக்கப்படும்போது,
நினைக்கவேண்டியது:
''விபசாரம் செய்யாதிருப்பாயாக!'' (மத் 5:27,28)

தினசரித் தியானத்தில் தேவன் பேச எதிர்பாருங்கள்
(சங் 81:13,14) ... *செவிகொடுத்து... எதிரிகளைத் தாழ்த்தி...*
ஜெபத்தையும் வசனத்தியானத்தையும் சமநிலைப்படுத்துங்கள்.
சமநிலையிழப்பதால் எத்தனை பேர் வஞ்சிக்கப்படுகின்றனர்!
திருவாக்குகளைச் சார்ந்து நில்லுங்கள்.

6. *கிறிஸ்துவின் சபை மூலம்* (Body of Christ)

அதாவது, கிறிஸ்துவின் உடலாம் சபையில் ஐக்கியப்படுவதின் மூலம்

நரக வாசல்கள் திருச்சபையை மேற்கொள்ளாது (மத் 16:18)

அழிக்க முடியாத நகரம் ...
அசைக்க முடியாத மலை (எபி 12:22,27)

ஐக்கியத்தில் பலம் (பிர 4:9,12) ... *அனல் ... மேற்கொள்ளுதல்*
விலகியோடு ... சேர்ந்துகொள் (2 தீமோ 2:22)

யாருமில்லாது தனித்து நிற்காதீர்!
அனுதினமும் புத்திசொல்லுதல் (எபி 3:13)
— *பாவத்தின் வஞ்சனை*

''தேவன் அதின் நடுவில் ... அது அசையாது'' (சங் 46:5)
உறுதியான அடித்தளம்!

எத்தனையோ எதிர் சக்திகள் ... ரோ 8:37-39
எதுவும் நம்மைக் கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரிக்காது.

இந்த அன்பை அறிந்துகொண்டு வளருவது பரிசுத்தவான்களின் சகவாசத்தில்தான் (எபே 3:18).

அதாவது, கிறிஸ்துவின் அன்பைப்பற்றிய அறிவையும் அனுபவத்தையும் விசுவாசிகள் ஒருவரோடொருவர் பகிர்தல்.

7. *கிறிஸ்துவின் மறுவருகை மூலம்* (Return of Christ)

அதாவது, கிறிஸ்துவின் மறுவருகையை எதிர்பார்ப்பதின் மூலம்.
இதுதான் முடிவான வெற்றி!

''*தோற்கடிக்கப்படக் கடைசிப் பகைவன்*'' (1 கொரி 15:23-26)
''*நாம் அவருடன் அரசாளுவோம்!*'' (வெளி 3:21; 19:11-16)
''*பரிசுத்தவான்கள் இராஜ்யத்தைச் சுதந்தரிப்பர்!*'' (தானி 7:18)

சோதனையே இல்லாத நாட்டிற்குள் நுழைவோம் (வெளி 21:27)

■ ***முடிவுரை***

- ஆ, நமது வெற்றி நமது வெற்றி வேந்தர் மூலமாகவே —

முதலாவது, அவரது வாழ்க்கை மூலம்
இரண்டாவது, அவரது மரணத்தின் மூலம்
மூன்றாவது, அவரது உயிர்த்தெழுதல் மூலம்
நான்காவது, அவரது ஆவியானவர் மூலம்
ஐந்தாவது, அவரது வார்த்தை மூலம்
ஆறாவது, அவரது சபை மூலம்
ஏழாவது, அவரது மறுவருகை மூலம்

ஒவ்வொரு வெற்றியும் நம்மைக் கூடுதல் பலமுள்ளவர்களாக்கும்;
ஒவ்வொரு தோல்வியும் நம்மைக் கூடுதல் ஞானமுள்ளவர்களாக்கும்.

ஒருபோதும் விட்டுவிடாதீர்கள், தளர்ந்துவிடாதீர்கள்!

கற்றுக்கொண்டேயிருங்கள்:

''*என் கைகளைப் போருக்கும், என் விரல்களை யுத்தத்திற்கும் கர்த்தர் படிப்பிக்கிறார்* (பழக்குவிக்கிறார்)'' (சங் 144:1)

தேவன் இல்லாது நம்மால் ஒன்றும் செய்ய முடியாது;
நாம் இல்லாது அவர் எதையும் செய்ய மாட்டார்!

(47ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

37

நீதிமானாய் வாழ்வது எப்படி?

How to live Righteously

முகவுரை

ஒவ்வொரு சங்கீதமும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் கொண்டது.
சங்கீதம் 45 — மேசியாவுக்கும் அவரது மணவாட்டிக்குமுள்ள அன்பின் உறவுப் பாடல்.

இராஜா-இராணி என்று சித்திரிக்கப்பட்டுள்ளனர் (வச 1,5,6,9,11)
இராஜாவின் மிகவுன்னத குணம்: ''*நீதி*'' (வச 4,6,7)

எனவே, **''நீதிமானாய் வாழ்வது எப்படி''**
என்று இச்சங்கீதம் 7 படிப்பினைகளைத் தருகிறது —

1. *நீதியை விரும்புங்கள்.*

— ''*நீர் நீதியை விரும்பி*'' ... (வச 7அ)

— ''*நீதியின்மேல் பசி தாகம் ... பாக்கியவான்கள்*'' (மத் 5:6)

— இயேசு சிலுவையிலறையப்படுதலைக் கண்காணித்த நூற்றுக் கதிபதியின் சாட்சி: ''*இந்த மனிதன் நீதிபரன்*'' (லூக் 23:47)

அது எப்படிச் சாத்தியமாயிற்று?

இயேசு நீதியை ''*விரும்பினார்*'' (சங் 11:7)
அவர் அதை நடைமுறையில் நிறைவேற்ற ''விழைந்தார்''
எ.கா.) திருமுழுக்கு (மத் 3:15)

— நீதியை ''வாஞ்சியாது'' நீதியாய் ''வாழ்வது'' சாத்தியமன்று!
யோபு 14:4 ... *அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ?*

இந்த வாஞ்சையில் வளருவது எப்படி —

அ) உங்கள் தகுதியின்மையை உணருங்கள் (ஏசா 64:6)
ஆ) கிறிஸ்துவை உங்கள் நீதியாக்குங்கள் (2 கொரி 5:21)
இ) நீதியை நடப்பித்துக்கொண்டேயிருங்கள் (1 யோ 3:7)

2. தீயதை வெறுத்திடுங்கள்.

— *''நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்''* (வச 7அ)

— *''கர்த்தரை நேசிப்போரே, தீமையை வெறுத்திடுங்கள்''* (சங் 97:10)

— தீவிரமானதொரு தீர்மானம்:

சங் 101:2-4,8 ... *மாட்டேன் ... வெறுக்கிறேன் ...*
நல்லது செய்வோரை உலகம் பாராட்டும்;
தீயதைக் கண்டிப்போரையோ அது சிலுவையிலறையும்:

எ.கா.) திருமுழுக்கினன் யோவான்
... *''சில காலம்தான்''* விரும்பப்பட்டான் (யோ 5:35)

கிறிஸ்து இயேசு
... சுகமளிப்பவர் ... *நல்ல போதகர்* ...
ஆலயத்திலிருந்து வியாபாரிகளைத் துரத்தியபோதோ!

□ பாவத்தைத் தேவன் பார்க்கிற விதமாய்ப் பார்க்கவேண்டும்
எ.கா.) *பாவத்தைப் பாராத சுத்தக் கண்ணர்* (ஆப 1:13)
தமது மகனையே சிலுவையில் ''கைவிட்டவர்'' (மத் 27:46)

□ பாவமானது தனி நபர்களையும் நாடுகளையும் எவ்வளவாய்ப் பாதித்துள்ளதென நினைவிற்கொள்ள வேண்டும் —
புல 5:15,16 ... *கிரீடம் விழுந்தது*
நீதி 14:34 ... *இகழ்ச்சி*

ஒரு தொழுநோயாளி பரலோகம் சென்றுவிடலாம்;
ஒரு தரித்திரன் பரலோகம் சென்றுவிடலாம்;
மன்னிக்கப்படாத பாவியோ அங்குச் செல்லவே முடியாது.

தீயதை வெறுக்குமளவிற்குத்தான் நீதியை நேசிப்போம்!

3. பிறரைவிட நீதியாய் நடக்க முயலுங்கள்.

''எல்லா மனுபுத்திரரிலும் ...'' (வச 2)
''உமது தோழரைவிட'' ... (வச 7)

''எல்லாரும்'' பாவம் செய்து தேவ மகிமை இழந்தோம் (ரோ 3:23)
''எந்த'' மனிதனும் பொய்யன் (ரோ 3:4)

சன்மார்க்கமும் உண்மையும் எங்கும் தொலைந்துவிட்டன.
நாம் பிறரோடு நம்மை ஒப்பிட்டுத் திருப்தியாயிருக்கும்வரை
நீதி வாழ்வில் முன்னேற மாட்டோம்.
நாம் *''அவரது குமாரனைப் போல''* மாறுவதே தேவ சித்தம் —
ரோ 8:29

சீர்கெட்ட இவ்வுலகில் —
எதிர்நீச்சல் போடுங்கள்! (பிறர் செய்யலாம்; நான் மாட்டேன்!)
பெரும்பான்மையினரோடு ஓடாதிருங்கள்!
''அவர்கள் போகட்டும்; நான் தேவன் பக்கம் நிற்பேன்!''

பரிசுத்தம் நாடும் **சிறுபான்மையினரோடு** சேர்ந்துகொள்ளுங்கள் —
2 தீமோ 2:22 ... *''சுத்த இருதயமுள்ளவர்களோடு ...
நீதி அடைய நாடு''*

4. உங்கள் நாவை அர்ப்பணியுங்கள்.

''உமது உதடுகளில் அருள்'' (வச 2)
இராஜாவின் முதல் அழகு!
தச்சன் வாயிலிருந்து வந்த *''கிருபை நிறை வார்த்தைகள்''*
(லூக் 4:22)
அவர் ஒரு மாவட்டத் தலைவரோ, இராணுவத் தளபதியோ,
காவல் துறை ஆணையரோ அல்ல! ஒரு தச்சன்தான்!

நீதிமான்களின் **முதல்** அடையாளம் —
1 பேது 3:10-12 ... *நாவைப் பொல்லாப்புக்கு விலக்கி ...*

பூரணத்தின் பிரதான அடையாளம் —
யாக் 3:2 (1:26/5:12)
தினசரி ஜெபம் — சங் 19:14 ... முதலாவது, *வாய்*
141:3 ... காவல் (Police!)
(சாலை விபத்துக்களைவிட மோசமானது!)

''வாயின் வார்த்தைகளைக்'' குறித்து நீதிமொழிகள் புத்தகத்திலுள்ள வசனங்களையெல்லாம் எடுத்துப் படியுங்கள்.

5. தாழ்மையுடன் நடந்துகொள்ளுங்கள்.

''உமது மகத்துவம் ... ஜெயம் ... சாந்தம்'' (வச 4)
ஒன்றுக்கொன்று முரண்பாடல்ல; ஒன்றையொன்று முன்னேற்றுவது.

இதுதான் தெய்வீகத்தின் அதிசயம்!

''இராஜா ... நீதியுள்ளவர் ... தாழ்மையுள்ளவர்'' (சக 9:9; மத் 21:4)

- இயேசு இராஜாவிடமிருந்து கற்கவேண்டிய பிரதான பாடம் —
  மத் 11:29 ... *சாந்தம் ... மனத்தாழ்மை*
  இதுதான் இறுக்கமற்ற, *இளைப்பாறுதலான* வாழ்வு (வச 28)

''நீதியும் சாந்தமும்'' —
செப் 2:3 ... *''நீதியை ... மனத்தாழ்மையைத் தேடுங்கள்''*
யாக் 3:13 ... *''நல்ல நடக்கை ... சாந்தம்''*

நாம் *''நீதியின் விருட்சங்கள்''* என்றழைக்கப்படுகிறோம் (ஏசா 61:3)—
இந்த மரங்கள் *''நொறுங்கிய தன்மை, சாந்தகுணம், மனத்தாழ்மை''*
ஆகிய மண்ணில்தான் செழித்து வளரும்.

''மனிதருடைய கோபம் x தேவனுடைய நீதி
... ஆனால் *பொறுமை, சாந்தம்''* (யாக் 1:19-21)

☐ தாழ்மையுள்ளோருக்கே இறை நடத்துதல் வாக்களிப்பு (சங் 25:9)
☐ தாழ்மையுள்ளோருக்கே மகிழ்ச்சி (ஏசா 29:19)

6. தேவ பக்தியுள்ள நண்பர்களைத் தெரிந்தெடுங்கள்.

''அரசரின் குமாரத்திகள்'' (வச 9)
''உன் ஜனத்தை மறந்துவிடு'' (வச 10)
''தோழிகளாகிய கன்னிகைகள்'' (வச 14)

- முதலாம் சங்கீதமே நீதிமான்களையும் தீயோரையும் வேறுபிரித்துக் காட்டுகிறது (சங் 1:1,6)
- அவபக்தியுள்ளோரிடமிருந்து பிரிந்திருக்கக் கேட்கப்பட்ட 5 கேள்விகளில் முதலாவது வருவது *''நீதி''* —
  2 கொரி 6:14 ... *நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது?*

இயேசு *''பாவிகளின் சிநேகிதன்,''*
அதே வேளையில் *''பாவிகளுக்கு விலகினவர்''* —
எபி 7:26

அவபக்தியுள்ளோர் நடுவிலுள்ள ''கொண்டாட்டங்கள்'' கண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது —
யோபு 20:4,5 ... *மாயக்காரனின் சந்தோஷம் ஒரு நிமிடம்*
நீதி 14:13 ... *நகைப்பு ... துக்கம் ... சஞ்சலம்*
— அவபக்தி (வச 12,14)
1 கொரி 15:32-34 ... *துஷ்ட மிருகங்கள் ... புசிப்போம் ...*
குடிப்போம் ... மோசம் போகாதீர்கள் ...
ஆகாத உறவு ... நீதிக்கேற்ப விழித்து ...

7. வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் துப்புரவாக்குங்கள்.

''வஸ்திரங்கள் ***எல்லாம்*** *வாசனை''* (வச 8)
''உள்ளாகப் ***பூரண*** *மகிமை''* (வச 13)

சில தோல்விகளையும் பாவங்களையும் கண்டும் காணாமலும் விட்டுவிடுவது கிறிஸ்தவ வாழ்வின் பரிதாபங்களில் ஒன்று.

உதாரணம் —
- *கல்லறைகள், பாத்திரங்கள்* (மத் 23:26-28)
- *பரிமள தைலத்தில் செத்த ஈக்கள்* (பிர 10:1)

மனந்திரும்பப்படாத பாவங்கள் புற்றுநோய்போல் அரித்துவிடும்.
முழுச் சுத்திகரிப்புக்கு ஓர் அழைப்பு (2 கொரி 7:1) —

''மாம்சம்'' — வெளிப்புறம் / *''ஆவி''* — உட்புறம்

ஆழ்ந்த சுத்திகரிப்பு *(எலும்புகள்)* (சங் 51:7,8,9)
முழுமையான மனந்திரும்புதல் ... பின்பு வருத்தமில்லை!
(2 கொரி 7:8-11)

■ *முடிவுரை*

☐ சங்கீதம் 45:6,7ஐத்தான் பிதாவாகிய தேவன் *தமது குமாரனிடம்* தீர்க்கதரிசனத்தில் சொன்னாரென்று எபிரேயர் 1:8,9 கூறுகிறது.

☐ நீதி நிறைந்த வாழ்வு என்பது உலகு நினைப்பதுபோல் சுவாரஸ்யமற்றது அல்ல;
அதுதான் வழிந்தோடும் ஆனந்த வாழ்வு — *''ஆனந்த தைலம்''*

''ஆனந்தமே, பரமானந்தமே,
இயேசு அண்ணலை அண்டினோர்க்கானந்தமே!''

(33ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

38

சொற்களில் சுத்தம்

Holiness in Words

முகவுரை

☐ நல்ல வார்த்தைகளும் பரிசுத்த வாழ்வும் பிரிக்க முடியாதவை —

1 சாமு 2:2,3 ... *பரிசுத்தர் ... அகந்தையான பேச்சு*
யோபு 1:1/2:10/42:7 ... *உத்தமன் ... உதடுகளில் பாவமில்லை*
சங் 15:1-4 ... *பரிசுத்த பர்வதம் ... புறங்கூறுதல்*
நீதி 4:23,24 ... *இருதயம் ... வாய்*
10:19 ... *உதடுகளை அடக்குகிறவன் புத்திமான்*
எபே 4:24-27/கொலோ 3:8-10 ... *பரிசுத்தம் ... பேச்சு*
1 பேது 2:21,22 ... *அவரது அடிச்சுவடுகள் ... வாயில் வஞ்சனையில்லை*

☐ வார்த்தைகளில் பரிசுத்தத்தின் அதிமுக்கியத்துவம் —

முடிவான பரிசோதனை: நியா 12:5,6
நமது முடிவை நிர்ணயிப்பது: மத் 12:36,37
முன்மாதிரியான வாழ்வின் முதல் அம்சம்: 1 தீமோ 4:12
கிறிஸ்து இராஜாவின் முதல் அலங்காரம்: சங் 45:2
பூரணத்தின் அடையாளம்: யாக் 3:2
இல்லையேல், சுய வஞ்சகம், வீண் பக்தி: யாக் 1:26
நல்ல நாட்கள் பெற முதல் வழி: 1 பேது 3:10

தீய நாவானது நமது வாழ்வில் செயல்படும் திருவசனத்திற்கெதிராய்ச் செயல்படுகிறது — 1 பேது 2:1-3

கர்த்தருடையவை போல நமது வார்த்தைகளில் *''தயவு''*

■ *நாவை அடக்குவது எங்ஙனம்?*

நாவைப் ''பழக்குவிக்க'' முடியாது; ''பயிற்றுவிக்க'' வேண்டும்; கட்டுப்படுத்தவேண்டும் —

யாக் 3:3-8

1. பேச்சு என்பது கடவுள் தந்த வரமென்று உணர்ந்து, அதைத் துர்ப்பிரயோகம் செய்யக்கூடாது.

எத்தனை பேர் செவிடும் ஊமையுமாயிருக்கின்றனர்!
ஊமையரைப் படைத்தது யார்? (யாத் 4:10-12)

நமது நாவுக்கு நாம் சொந்தக்காரர் அல்ல; அதைப் பயன்படுத்துவோர், அவ்வளவுதான் — 1 கொரி 6:20 ... *கிரயத்திற்குக் கொள்ளப்பட்டீர்கள்*

2. அறிக்கையிட்டு, அர்ப்பணித்து, நாவில் ஒரு சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- ஏசா 6:5,6 ... நாவு சுத்திகரிக்கப்பட்ட **பின்னர்தான்** மிஷனரி அழைப்பு
- பெந்தெகொஸ்தே நாள் — அப் 2:3,4

பிற அவயவங்களை ஒப்புக்கொடுப்பதுபோல் நாவையும் ஒப்புக்கொடுங்கள் —

ரோ 6:13 ,19 ... *நீதியின் ஆயுதங்களாய் ...*
12:1,2 ... *உடலை உயிருள்ள பலியாய் ...*

ஒரு தீர்மானம்: சங் 17:3ஆ ... *வாய் மீறாதபடித் தீர்மானம்*

3. பிறரைக் குறித்த தீதானவற்றைக் கேட்க மறுத்துவிடுங்கள்.

சங் 15:3 ... *பரிசுத்த பர்வதம் ... நிந்தைப் பேச்சை எடுக்காது ...*

கேட்கிறவன் இல்லாது பேசுகிறவன் இரான்.

புறங்கூறுகிறவர்களின்மீது தேவன் சினங்கொள்கிறார் —
சங் 50:19-21 ... *உன்னைக் கடிந்துகொள்வேன்*
எ.கா.) மிரியாம் & ஆரோன் (எண் 12)

புறங்கூறுவோர்க்குப் புறமுதுகு காட்டி ஓடிவிடுங்கள் —
2 தீமோ 3:1-5 ... *விட்டு விலகு*

சபைத் தலைவரின் மனைவிக்கு ஒரு முக்கிய தகுதி —
1 தீமோ 3:11 ... *அவதூறு பண்ணாதவள் ...*

பிறரைப்பற்றிய தீதான காரியங்களைத் தோண்டித் துருவாதீர் —
நீதி 16:27,28 / 17:4.9

பிசாசுதான் தூற்றுவோருக்குத் தலைவன் (வெளி 12:10)

4. உங்களது பேச்சும் உரையாடலும் கேட்போருக்குப் பக்திவிருத்தி உண்டுபண்ணவேண்டும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

எபே 4:25-27 ... *ஒருவருக்கொருவர் ... உண்மை*
:29-32 ... *கெட்ட வார்த்தை ... பக்திவிருத்தி*

மக்களை ''அழிக்க'' அல்ல,
''ஆசீர்வதிக்கவே'' அழைக்கப்பட்டுள்ளோம்!

— யாக் 3:8-12 *(''நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'')*
கட்டியெழுப்ப; தட்டித் தகர்க்க அல்ல!

நீங்கள் பேசுவதைக் கேட்டபின்
அந்நபர் கறைபடாது புத்துணர்வுடன் செல்லவேண்டும்.

5. தேவனுக்குப் புகழ்பாடவும் சுவிசேஷத்தைப் பறைசாற்றவுமே நாவை அதிகமதிகமாய்ப் பயன்படுத்துங்கள்.

உதடுகளின் கனி — எபே 5:4 ... *ஸ்தோத்திரம் செய்தல்*
எபி 13:15 ... *ஸ்தோத்திர பலி*
ஏசா 57:19 ... *சமாதானம் கூறும் உதடுகள்*

தங்களது தற்புகழுக்காய்த் திட்டமிடப் பேச்சுத் தொடர்புத் திறனை மக்கள் பயன்படுத்தியபோது, தேவன் அவர்களது மொழிகளைத் தாறுமாறாக்கினார் —
ஆதி 11:1-9 ... பாபேல்

6. திருவசனத்தை அமைதியாகவும், சத்தமாகவும் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.

யோசு 1:8 ... முதலாவது *''வாய்,''*
அடுத்து மனது ... *''தியானம்''*

திருவசனத்தால் நிறைந்திருக்கும்போதுதான், பிறரோடு பேசும்போது வார்த்தைகளில் *''கிருபை''* நிறைந்திருக்கும் (கொலோ 3:16)

வீட்டிலே நீங்கள் எதைக் குறித்து அதிகம் பேசுகிறீர்கள்?
உபா 11:18-21 ... *என் வார்த்தைகள் ... பிள்ளைகள் ... வீடு ...*

7. நாவை எப்படிப் பயன்படுத்தினீர்களென்று அந்தந்த நாளின் முடிவில் நினைத்துப் பாருங்கள்.

மத் 12:33-37 ... *வீண் வார்த்தை ... நியாயத்தீர்ப்பு*

நம்மை நாமே நிதானித்து நியாயந்தீர்த்துக்கொண்டால், நாம் உலகத்தோடு நியாயந்தீர்க்கப்படமாட்டோம் —
1 கொரி 11:31,32

ஒவ்வொரு நாளையும் இந்த ஜெபத்துடன் துவங்குங்கள் —
சங் 19:14 ... *வாயின் வார்த்தைகள் ... இருதயத்தின் தியானம்*
141:3 ... *வாய்க்குக் காவல்* (Police protection!)

பல் துலக்கும்போதும், வாய் கழுவும்போதும் நாவடக்கத்தின் தேவையை உங்களுக்கு நினைவூட்டிக்கொள்ளுங்கள் —
மத் 15:1 ... *உள்ளே போவது ... வெளியே வருவது*

நமது ஆகாரத்தைக் குறித்து நாம் கவனமாயிருப்பதுபோல் நமது வார்த்தையைக் குறித்தும் இருந்தால் ... வச 16-20

Tongue Control —

1. Realize: Speech a gift from God
2. Receive: Cleansing by confession
3. Refuse: Listening to evil reports
4. Remember: Speech to edify others
5: Release: For praising God & evangelising
6. Read: God's Word again and again
7. Review: Performance at the day's end

(152ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

39

கிறிஸ்தவ வாழ்வில் முன்னுரிமை பெறவேண்டியவை

Christian Priorities

முகவுரை

- முக்கியமில்லாதவற்றை முக்கியப்படுத்தி, முக்கியமானவற்றைக் கவனியாதிருப்பது நமக்கு வழக்கம் (மத் 23:23,24)
- செய்ய வேண்டியதைச் செய்யாது, செய்ய வேண்டாததைச் செய்வது.
  விளைவு: நோக்கமின்மை,
  திசை தெரியாமை,
  நிறைவு பெறாமை, முதலியன.

நாம் ''**முதலாவது**'' செய்யவேண்டியவை என்று சில காரியங்களைத் திருமறை குறிப்பிடுகிறது. அவை **முன்னுரிமை** பெறவேண்டும் —

1. உள்ளான பரிசுத்தம் (Inward Purity)

மத் 23:25-28 ... ***முதலாவது*** *உட்புறத்தைச் சுத்தம்பண்ணு ...*
மாய்மாலமும் வெளிப்பகட்டும் வேண்டாம்.
திரும்பத் திரும்ப *''ஐயோ!''* (வச 13,14,15,23,25,27,29)

நமது பிரபல கோஷங்கள் —
இயேசு நேசிக்கிறார்! இயேசு இரட்சிக்கிறார்!
இயேசு விடுவிக்கிறார்! முதலியன.

ஆனால் ''இயேசு பார்க்கிறார்!'' ... ''இயேசு கவனிக்கிறார்!''
என்றில்லையே (எபி 4:13)

உன்னத வெளிப்பாடுகளில் ஒன்று — (எல்-ரோயி)
''நீர் என்னைக் ***காண்கிற*** *தேவன்!''* (ஆதி 16:13)

பாருங்கள்: யோபு 34:21,22/நீதி 15:11

யோவானின் செய்தி:
அ) ஆட்டுக்குட்டியாகிய இயேசு (Lamb)
— இரட்சிப்பு (யோ 1:29)
ஆ) ஒளியானவராகிய இயேசு (Light)
— பரிசுத்தம் (யோ 1:6-8)

இரட்சிப்பை வலியுறுத்தி, பரிசுத்தமாகுதலை விட்டுவிடுகிறோம்.

திருவசனத்தால் அடிக்கடி தற்பரிசோதனை அவசியம்
— *இருபக்கமும் கூருள்ள பட்டயம்* (எபி 4:12,13) ... *''கண்கள்''*

- *உள்ளத்தின் ஆழத்தில் உண்மை* (சங் 51:6)
  தேவன் மட்டுமே அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைக் கொண்டுவர முடியும் — யோபு 14:4

2. நித்திய காரியங்கள் (Eternal Values)

மத் 6:31-34 ... *முதலாவது தேவனுடைய இராஜ்யம் ...*
கிறிஸ்தவர் vs. கிறிஸ்தவரல்லாதோர்

1 கொரி 15:19 ... *''இம்மைக்காக மாத்திரம் ...''*
மிருகங்கள்போல் வாழ்தல் (வச 32)

— உலகின் தற்காலிகம்
உலகப் பொருட்கள்மீது பற்று ... (1 யோ 2:15-17)

— *மேலிருப்பவைகளை நாடுங்கள்* (கொலோ 3:2,3)
எ.கா.) செத்தவன்மீது தூவப்பட்டுள்ள மலர்களால் அவனுக்கு என்ன பயன்?

— ஆன்மிகக் காரியங்கள் மட்டுமே திருப்தி செய்யும்
(எரே 2:13; 18:14; ஏசா 55:1,2)

இரு செல்வந்தர்: லூக் 12:16-21; 16:19-31

நாம் கவனமாகவும் விழிப்பாகவும் இல்லையேல்,
எல்லாக் கேட்டிற்குள்ளும் அமிழ்ந்துவிடுவோம் —

பண ஆசை — எல்லாத் தீங்குக்கும் வேர் — 1 தீமோ 6:6-11
நித்திய காரியங்கள்: *நீதி, தேவ பக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்தகுணம் முதலியன*

நீங்கள் பணத்தை வைத்திருக்கிறீர்களா,
அல்லது பணம் உங்களை வைத்திருக்கிறதா?

3. சரியான சகவுறவுகள் (Right Relationships)

மத் 5:21-24 ... ***முதலாவது*** *ஒப்புரவாகு*

இல்லையேல் காணக்கூடாத தேவனிடம் அன்புகூருவதெப்படி?

நமது வாழ்வில் நியாயப்படுத்துபவற்றை பிறரில் கண்டனம் செய்வதுதான் பல உறவுப் பிரச்னைகளுக்குக் காரணம் —

மத் 7:1-5 ... *முதலாவது உன் கண்ணிலிருக்கும் உத்திரம்*

சகேயுவின் **முதல்** அறிக்கை (லூக் 19:8)
சிலுவையில் இயேசுவின் **முதல்** வார்த்தை (லூக் 23:34)

- தவறிழைத்தது யாராயிருந்தாலும் ‘‘நீங்கள்’’ முதலடி எடுத்து வையுங்கள் (மத் 5:23,24; 18:15)
- *இன்னொரு மைல்* (மத் 5:41)
- *உங்களால் முடிந்தவரை* ... (ரோ 12:18-21)
  முடியாவிடில் தேவனிடம் உதவி நாடுங்கள் (லூக் 17:3-5)

4. திருமறைத் தியானம் (Bible Meditation)

ரோ 3:1,2 ... *யூதனது* ***மேன்மை*** (ஒப்பிடுக: உபா 4:8)
2 பேது 1:19,20 ... ***முந்தி*** *அறியவேண்டியது ... வேதம்*

பைபிள்தான் உலகில் அதிகம் விற்பனை என்கிறோம்.
எத்தனை பிரதிகள் விற்கப்பட்டனவென வேதாகமச் சங்கங்கள் பெருமைகொள்கின்றன;
ஆனால், எத்தனை பிரதிகள் வாசிக்கப்படுகின்றன?

- தேவனது குற்றச்சாட்டு:
  ‘‘எனது வேதத்தைக் கொடுத்தேன் ... அதை ***அந்நிய காரியமாய்*** *எண்ணினார்கள்’’* (ஓசி 8:12)
  யோபுவோ — *‘‘எனக்குத் தேவையான உணவைவிட ...’’* (யோபு 23:12)
  ‘‘வேதத்தை மறந்தார்கள்; அவர்கள் பிள்ளைகளை மறப்பேன்’’ (ஓசி 4:6ஆ)
- பிள்ளைகளுக்கு வேதம் கற்பிப்போம் (2 தீமோ 3:15; 1:5)
  திருமறைக்குத் திரும்புவோம்! Back to the Bible!
  கிரமமாய் வாசிப்போம் — வேத வாசிப்பு அட்டவணை ‘‘அனுதின மன்னா’’

5. முழுமனதுடன் தொழுகை (Wholehearted Worship)

மத் 22:35-38 ... ***முதலாம்*** *கட்டளை ...*
இருதயம் ... ஆத்துமா ... மனது

10 கட்டளைகள்: 1) (முதலாவது) *உன் தேவனாகிய கர்த்தர் நானே*
2) (இரண்டாவது) *விக்கிரகங்கள் வேண்டாம்*

அன்பைக் காட்ட நேரமெடுக்க வேண்டும்.
தொழுகை = வேண்டுதலிலும் துதியிலும் தேவனோடு உறவு.

- கிறிஸ்துவின் வாழ்வில் ஜெபத்திற்கு முக்கிய இடம் —
  திருமுழுக்கில் (லூக் 3:21)
  வனாந்தரத்தில் (லூக் 4:1,2)
  ஊழியத்தின்போது (மாற் 1:32-35)
  சிலுவையிலறையப்படுமுன் (மத் 26:36; எபி 5:7)
  சிலுவையின்மீது (லூக் 23:34; மத் 27:46; லூக் 23:46)
  இப்பொழுது பரலோகில் (எபி 7:25)
- அவர் நமக்கு ஜெபிக்கக் **கற்றுக்கொடுத்திருக்கிறார்** (மத் 6:9)
  எப்பொழுதும் ஜெபிக்கக் **கட்டளையிட்டிருக்கிறார்** (லூக் 18:1)
- ஆதிச்சபை ஜெபத்திலும் துதியிலும் தேறியிருந்தது.

6. குடும்பச் சமாதானம் (Family Peace)

லூக் 10:5 ... *எந்த வீட்டில் நுழைந்தாலும்,*
முதலாவது, சமாதானம் கூறுங்கள்!
குடும்பப் பிரச்னை உலகெங்குமுள்ளது.

பெற்றோரும் பிள்ளைகளும் —

பழைய ஏற்பாட்டின் கடைசி வசனம் (மல் 4:5,6).
வாக்குத்தத்தமுள்ள **முதலாம்** கட்டளை (எபே 6:2; யாத் 20:12)

- குடும்ப ஜெபம்
- குடும்பத்திற்கு நேரம்

இல்வாழ்வு சீராக இல்லையேல் திருத்தொண்டில் பயனில்லை — 1 தீமோ 3:5

7. அகிலவுலக நற்செய்திப்பணி (World Evangelisation)

மாற் 13:3,4,10 ... *சுவிசேஷம்* ***முந்தி*** *அறிவிக்கப்படவேண்டும்*

- பிறரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருபவர்தான் சீடர் —
  யோ 15:8 ... கனியில்லையேல் அகற்றப்படும் (வச 2).
  கனியற்ற கிறிஸ்தவன் போலிக் கிறிஸ்தவன்!

  அந்திரேயா செய்த முதல் காரியம் —
  யோ 1:40-42 ... *தன் சகோதரனை இயேசுவிடம் கொண்டுவந்தான்*
- தனித்தாள் ஆத்துமாதாயம் (Personal Soulwinning)
- சுற்றுப்புற நற்செய்திப்பணி (Neighbourhood Evangelism)
- தொலைவிட மிஷனரி ஊழியம் (Frontier Missions)

உங்களது சபையின் செலவினங்களில் முதலிடம் எதற்கு?

■ ***முடிவுரை***

முதலாவது செய்யவேண்டியவற்றிற்கு நமது வாழ்வில்
இவ்விதம் முன்னுரிமை கொடுத்தால், பரிசுகள் வழங்கப்படும்
நாளில் துக்கிக்கத் தேவையிருக்காது (வெளி 22:12)

□

கரை ஏறி உமதண்டை நிற்கும்போது இரட்சகா
உதவாமல் பலனற்று வெட்கப்பட்டுப் போவேனோ?

ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா,
வெறுங்கையனாக உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமோ?

ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை வைத்திடாமல் சோம்பலாய்க்
காலம் கழித்தோர் அந்நாளில் துக்கிப்பார் நிர்ப்பந்தராய்!

வாழ் நாளெல்லாம் வீணாளாகச் சென்று போயிற்றே, ஐயோ!
மோசம் போனேன் விட்ட நன்மை அழுதாலும் வருமோ?

பக்தரே, உற்சாகத்தோடு எழும்பிப் பிரகாசிப்பீர்;
ஆத்துமாக்கள் இயேசுவண்டை வந்து சேர உழைப்பீர்!

40

''பின்னே ... முன்னே ... மேலே!''

"Behind ... Forward ... Upward"

(**பிலிப்பியர்** நிருபத்தில் ஒரு வேதபாடம்)

முகவுரை

- வசனப்பகுதி: பிலி 3:12-14
  (அ) ***பின்னானவைகளை விடுங்கள்***
  (ஆ) ***முன்னானவைகளை நாடுங்கள்***
  (இ) ***மேலானவைகளைத் தேடுங்கள்***

இது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் முப்பரிமாண அழைப்பு.

பின்னானவை ... நமது கடந்தகால வாழ்க்கை
முன்னானவை ... நமது நிகழ்கால ஓட்டம்
மேலானவை ... நமது எதிர்கால இலக்கு

ஒன்று அடுத்ததற்கு வழிநடத்துகிறது;
ஒன்றை விட்டு அடுத்ததைப் பார்க்கமுடியாது.

- எந்தவொரு வசனப் பகுதியையும் பகுத்தாய்வு செய்யும்போது, அதை ஒட்டியுள்ள வசனங்களையும், அப்புத்தகத்தின் மொத்தக் கருத்தையும் கவனிக்கவேண்டும். (Context)

  ஒட்டியுள்ள வசனங்கள் : மேலும் கீழும்
  ஒட்டு மொத்தக் கருத்து: முழுப் புத்தகம்
  (இன்னும் மொத்தக் கருத்து என்றால் முழு வேதமும்)

நமது தியானத்திற்கு,
நான் முழுப் புத்தகத்தையும் பகுப்பாய்வு செய்துள்ளேன்.
அதாவது, பிலிப்பியர் நிருபம் முழுவதும்.
4 அத்தியாயங்கள்.

— சிறையிலிருந்து எழுதப்பட்ட கடிதம் (1:7)

— வாழ்வில் பல பிரச்னைகள், கவலைகளால் அலசடிபட்ட பின்னர் எழுதப்பட்ட கடிதம் (2:27)

— ''முதிர்ச்சியடைந்த'' ஒரு தேவ மனிதனின் கடிதம் (3:16)

— இரத்த சாட்சி மரணத்திற்காய்க் காத்திருந்த சமயம்.

இப்படியாக இது முழுக்க முழுக்க **நடைமுறையான** கடிதம்.
அப்போஸ்தலனது இதயத் துடிப்பைப் புரிந்துகொள்ள
முழுக் கடிதத்தையும் ஒரேடியாக வாசித்து முடியுங்கள்.

(அ) பின்னானவைகளை விடுங்கள்!

எவற்றை விடவேண்டும்?
மூன்று காரியங்கள் இந்நிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன:

1. சுயநீதி (Self-righteousness)

- ☐ 3:4-9 ... ஏழு மேன்மைகள்
  அதாவது, உடலைச் சார்ந்தவற்றில் நம்பிக்கை (வச 4).
  ''நானில்லாது உங்களால் ஒன்றும் முடியாது'' (யோ 15:5)
- ☐ அவன் ஒரு பரிசேயன்... *''பிரமாணத்தின்படி பரிசேயன்''* (வச 5இ)
  அநேக பரிசேயரின் பொதுவான பிரச்னை —
  லூக் 18:9-14 ... பரிசேயன் vs. ஆயக்காரன்

  விருந்தில் ஒரு விபசாரி (?) அவரது பாதங்களைக் கழுவியபோது
  இயேசு ஒரு பரிசேயனிடம் சொன்னது (லூக் 7:39-48)
- ☐ *நாம் **எல்லாரும்** அழுக்கானவர்கள்... நமது நீதி **எல்லாம்**...* (ஏசா 64:6)
  நாமாக முயலுவதெல்லாம் சொருகு மணல்தான் —
  யோபு 9:30,31 ... *மழை நீர் ... சவுக்காரம் ... சேற்றுப் பள்ளம் ... அருவருப்பு*
  எரே 2:22 ... *அதிக சவுக்காரம்... அக்கிரமத்தின் கறைகள் ...*
- ☐ தேவனது காரியங்களில் நாம் தீவிரமாயிருக்கலாம் —
  ரோ 10:2,3 ... *அறிவற்ற வைராக்கியம்*
  எந்த அறிவு? எரே 9:23,24 ... சாதனைப் பெருமையா?
- ☐ இடப் பெருமை, இனப் பெருமை, நிறப் பெருமை,
  உடைப் பெருமை, கிருபைப் பெருமை
  (Place, Race, Face, Lace, Grace)

  ''பெருமையுள்ளோரைத் தேவன் எதிர்க்கிறார்'' (யாக் 4:6)
  நீதி 29:23 ... *அகந்தை ... தாழ்த்தும் ... தாழ்மை ... கனம்*
  S-**I**-N ... P-R-**I**-D-E (மைய எழுத்து: "I")

நாம் பெயர்பெற்றவராய் (standing) இருக்கலாம்;
அதை ''அந்தஸ்து'' (status) என்று நினைக்கக்கூடாது
(1 கொரி 1:26-31)

2. தன்னல நாட்டம் (Self-ambition)

முந்திய குறிப்பு தேவனோடுள்ள நமது உறவைக் குறிப்பிடுகிறது;
இது மனிதரோடுள்ள உறவைப் பற்றியது —

- ☐ 2:1-4
  வாது ... வீண் பெருமை
  உறவுப் பிரச்னைகளுக்கு வேர் — யாக் 3:16
  கொடிய காலங்களின் முதல் அடையாளம் — 2 தீமோ 3:1,2

நம்மை நாம் நேசிப்பது தவறல்ல;
மற்றவர்களையும் நம்மைப்போல் நேசிக்கவேண்டும்!

''உன்னைப்போல் பிறனையும் நேசி!

- ☐ பிரச்னைகளை உண்டாக்குபவராயல்ல, தீர்ப்பவராயிருங்கள்!
  4:2,3 ... *எயோதியாள் & சிந்திகேயாள்*
- ☐ கலந்துரையாடலானது வாக்குவாதமாகிவிடக்கூடாது —
  2:16 ... *முறுமுறுப்பில்லாமல் ...*

  ஆராதிக்கும்போது *''பரிசுத்த கரங்கள்''* என்றால் என்ன?
  1 தீமோ 2:8 ... *கோபம், தர்க்கம் இல்லாமை*
- ☐ திருப்பணியில் தன்னல நாட்டம் —
  1:12-17 ... *பொறாமையினால் பிரசங்கம்*

  பவுலை ஊழியத்தில் மிஞ்சிவிடத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தனர்; அவரது சிறைவாசத்தைச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டனர்.

  பவுலோ அதின் சாதகப் பகுதியைப் பார்த்தார் —
  1:18 ... *எப்படியாவது கிறிஸ்து பிரசங்கிக்கப்படுகிறார்!*

  அவர் போட்டியில்லாத கூட்டு முயற்சியைப் பலவிதங்களில்
  படம் பிடித்துக்காட்டுகிறார் —

— உடன்பட்டவர்கள் (1:5; 4:15)
— தகப்பனும் மகனும் (2:22)
— சகோதரரும் உடன் ஊழியரும் (2:25)
— உத்தம கூட்டாளி (4:3)

☐ குதர்க்கமான உறவுகள் பழைய வாழ்க்கைக்குரியவை
(கொலோ 3:7-14)

3. உலகச் சிந்தை (Earthlymindedness)

☐ 3:17-21 ... உடலுக்கடுத்தவை + பொருளாதாரம்
இவையெல்லாம் புறவினத்தாரின் வேட்கை (மத் 6:31-34)

எனவேதான் பொருளாசை *விக்கிரகாராதனை* எனப்படுகிறது —
எபே 5:5/கொலோ 3:5இ

☐ கட்டாக உடலை வைத்திருப்பது முக்கியம்;
ஆனால் ஆன்மீக ஆரோக்கியம் அத்தியாவசியம் —
1 தீமோ 4:8,13-15 ... ஆன்மீகப் பயிற்சிகள்

உன் ஆத்துமா வாழ்கிறதுபோல ... 3 யோ 2
எ.கா.) நீதி 30:8அ ... சன்மார்க்கம்
:8ஆ ... செல்வம்

☐ போதுமென்ற மனது — 4:11-13
நீயோ தேவ மனிதனே ... பண ஆசை ... போதுமென்ற மனது
(1 தீமோ 6:6-11)

பரவாயில்லை, இதிலென்ன இருக்கிறது என்றெல்லாம்
நினைக்கவைக்குமளவு பண ஆசை வஞ்சகமானது.

(ஆ) முன்னானவைகளை நாடுங்கள்!

முகவுரை

- முந்திய குறிப்பு: பின்னானவைகளை விடுங்கள்!
கிறிஸ்தவ வாழ்க்கையே ஒன்றை விடுவதும்
அடுத்ததைப் பிடிப்பதுமாகும் (leaving & cleaving).
பழைய கட்டுகளை உடைத்து புதிய உறவுகளை உருவாக்குவது.

(Breaking of old bonds & making of new bonds)

— சங் 1:1,2 ... *பரிகசிப்பவரோடு உட்காராமல்,*
பரிசுத்த வேதத்தோடு உட்காருங்கள்.

— குடும்ப வாழ்வு: பெற்றோரோ, மாமனார் மாமியாரோ
இல்லாத காலத்திலேயே, பெற்றோரை விட்டு
மனைவியோடு ஒட்ட அறிவுரை (ஆதி 2:24).

— கானானுக்குள் நுழைய விரும்பினால்
எகிப்தை விடவேண்டும்.

— *''அக்கரைக்குப் போக''* இக்கரை விடவேண்டும்!

— *''மனந்திரும்புங்கள்''* + *''விசுவாசியுங்கள்''*

— எரேமியா: *''பிடுங்கவும், அழிக்கவும், கட்டவும்,*
நாட்டவும்'' (எரே 1:10)

''விட்டுவிடுதல்'' என்பது முழுமையாயிருக்கவேண்டும் —
*''பின்னானவைகளை **மறந்து**''* ... (3:13)

அவ்வப்போது இவைகள் தலை தூக்கலாம்;
ஏனெனில், எகிப்து (வெங்காயம், வெள்ளைப் பூண்டு)
நம்மை எளிதில் விடாது (எண் 11:5)

எனவேதான், மூலமொழியில் *''மறந்து**கொண்டே**''*
என்றிருக்கிறது.

அதே வேளையில்,
அடித்தளத்தையே திரும்பத் திரும்பப் போடக்கூடாது;
மேற்கட்டிடத்தை எழுப்பவேண்டும்!

முன்னானவைகள் எவை?
இதே நிருபத்திலிருந்து மூன்று காரியங்கள் —

1. சுவிசேஷத்திற்கு ஏற்ப வாழ்க்கை

☐ 1:27 ... *சுவிசேஷத்திற்குப் பாத்திரராய்* ''நடந்துகொள்ளுங்கள்''
கிறிஸ்தவர்களிடம் பிறர் எதிர்பார்ப்பது (மத் 5:15)

நாம் நம்பும் விவிலியத்திற்கு ஏற்ற வாழ்வு —

எ.கா.) கூந்தல் தைலம் விற்கும் வழுக்கைத் தலையன்.
''வைத்தியனே, உன்னையே குணமாக்கிக்கொள்!''

எ.கா.) *''கர்த்தரின் பட்டயம், (அதுவே) கிதியோனின் பட்டயம்!''*
(நியா 7:17,18) ... 300 பேரிடம் சொல்லப்பட்டது.

வார்த்தையானது வாழ்க்கையாக (மாம்சமாக) வேண்டும்.
தோலுறை பைபிள் தோல் மூடிய பைபிள் ஆகவேண்டும்!

- இன்று எத்தனையோ மொழியாக்கங்களில் பைபிள் உண்டு — எது தலை சிறந்தது?

  மக்கள் வாசித்துப் புரிந்துகொள்வதில் எளியது, தலைசிறந்தது உங்கள் வாழ்க்கையே!
  2 கொரி 3:2,3 ... *மையினால் அல்ல, ஆவியினால் எழுதப்பட்டு எல்லா மனிதராலும் வாசிக்கப்படும் ஜீவனுள்ள நிருபங்கள்!*

☐ 2:15,16 ... மாறுபாடான சந்ததியில் குற்றமற்றவர்கள்.
''உலகத்தில் சுடர்கள்'' (வச 14)
''உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது'' (மத் 5:16)

☐ 2:12 ... *நான் தூரமாயிருக்கும்போதும் கீழ்ப்படிதல் —*
— யார் பார்த்தாலும் பார்க்காவிடினும் பரிசுத்த நடக்கை

☐ 4:8 ... உங்கள் சிந்தனை வாழ்க்கையில் கவனமாயிருங்கள்.
''எல்லாக் காவலோடும் உங்கள் இருதயத்தைக் காத்திடுங்கள்; அதிலிருந்துதான் ஜீவ ஊற்றுகள்!'' (நீதி 4:23)

2. சந்திக்கப்படாதோருக்குச் சுவிசேஷம்

☐ இந்த நிருபத்தில் நற்செய்தியறிவிப்பு மையக் கருத்தாகும் —

1:3 ... *சுவிசேஷத்திற்கு உடன்பட்டோர்*
1:7 ... *சுவிசேஷப் போராட்டத்தில் பங்கு*
1:12 ... *சுவிசேஷப் பிரபலம்*
1:17 ... *சுவிசேஷத்திற்காய் உத்தரவு*
1:27 ... *சுவிசேஷத்திற்குப் பாத்திரமான நடக்கை*
2:22 ... *சுவிசேஷத்திற்காய் ஊழியம்*
4:3 ... *சுவிசேஷத்திற்காய்ப் பிரயாசம்*
4:15 ... *சுவிசேஷப்பணியில் துவக்கமுதல் உடன்பாடு*

தொலைந்தோரைச் சந்திக்கப் பவுலின் பாரம் இங்கு தெளிவு!

விறுவிறுப்பாய் அவன் செயல்பட்டதே அவனைப் பிலிப்பி நகருக்குக் கொணர்ந்தது —
→ *ஆசியா* → *பித்தினியா* → *மக்கெதோனியா*

ஐரோப்பாவில் முதலாவதாக நிறுவப்பட்ட திருச்சபை
பிலிப்பிய சபைதான் (அப் 16:6-40)

☐ நமக்கிருப்பது ''ஆத்தும வாஞ்சையா,''
நமது ''திட்டங்களின் நிறைவேற்றமா?''
ஆத்தும தாகத்தை இழந்துவிட்டால்,
நாம் ஓர் இயக்கம் (mission) அல்ல, இயந்திரம் (machine)!

டேவிட் லிவிங்ஸ்டன்: (Anywhere provided forward!)
''எங்கென்றாலும் சரி, முன்செல்லவேண்டும் அவ்வளவுதான்!''

இயேசுவின் தரிசனம்: *''வேறே ஆடுகள்''* (யோ 10:16)
''மற்ற பட்டணங்கள்'' (லூக் 4:43)

3. இறப்பு வரை தியாகம்

☐ 2:17 ... *''பான பலி''* — பலியின்மேல் ஊற்றப்பட திராட்சை ரசம்.
அப்படியே, 2 தீமோ 4:6

இக்கருத்து இந்நிருபம் முழுவதும் பயணிக்கிறது —

☐ கடிதத் துவக்க வாழ்த்து —
''ஊழியக்காரர் (= அடிமைகள்)'' அப்போஸ்தலர் என்றல்ல (1:1)

☐ உன்னத வாசகம் (2:5-11)
இது ''இயேசு கவிதை'' (Jesus hymn) என்றழைக்கப்படுகிறது —
அடிமையின் ரூபமெடுக்கக் கிறிஸ்து தாமாகவே
தமது மேன்மைகளைக் களைந்தார் — 2:6,7
''சேவை செய்ய; சேவை பெற அல்ல''

☐ மரணம்வரை தியாகம் செய்வது கிறிஸ்துவுக்கு மட்டுமல்ல, அவரைப் பின்பற்றும் சீடர் யாவருக்கும் அவசியம் —
லூக் 9:22-26 ... *எல்லாரையும் நோக்கி ...*
இப்போதனை இன்று அபூர்வம்.

☐ தியாகச் சேவைக்கு எடுத்துக்காட்டுகள் —
அ) தீமோத்தேயு (2:19-22) ... *உண்மையாய் விசாரிக்க ...*
ஆ) எப்பாப்பிரோதீத்து (2:25-30) ... *வாஞ்சை ...*

- □ நற்செய்திக்காய்த் துன்புறுத்தப்படுவது பெருகிவரும் காலமிது.
  நமது உயிரை நேசித்தால்தான் பயப்படுவோம் —
  1:28-30 ... *விசுவாசிக்க மட்டுமல்ல ...*
  (துணிந்தவனுக்குத் தூக்கு மேடை பஞ்சு மெத்தை!)

- □ இந்நிருபம் ''மகிழ்ச்சியின்'' நிருபம் என்றழைக்கப்படுகிறது —
  தியாகமும் பாடுகளும் கிறிஸ்தவனது மகிழ்ச்சியைக் கூட்டத்தான் வேண்டும் —

  தனது ஓட்டத்தைக் கட்டுகளோடேயே ''சந்தோஷமாய்'' முடிப்பதைப் பவுல் எதிர்நோக்கியிருந்தார் —
  அப் 20:22-24

  இது தப்பித்துக்கொள்வதற்கான முயற்சி அல்ல —
  1:21-26 ... இறந்துபோவது மேலானது என்றாலும்
  இருந்து தொண்டாற்றுவதை அவர் தெரிந்தெடுத்தார்!

(இ) மேலானவைகளைத் தேடுங்கள்

முகவுரை

- பிலி 3:12-14 ... பின்னானவைகளை விடுங்கள்
  முன்னானவைகளை நாடுங்கள்
  மேலானவைகளைத் தேடுங்கள்
  (அதாவது, விண்ணகப் பரிசை எதிர்நோக்குங்கள்)

  முதல் இரண்டும் **சமதளப்** (horizontal) பரிமாணங்கள்;
  மூன்றாவது குறிப்பு **செங்குத்துப்** (vertical) பரிமாணம்.

  இது நீளம், அகலம், உயரம் போன்றது.
  எ.கா.) கனசதுரம் (cube) — நீளம், அகலம், உயரம் —
  அல்லது, சமபக்க முக்கோணம் — சரிசம முக்கியத்துவம்.

- **மேலானவைகளை நாடுங்கள்!**

மேலானவைகளுக்கான பரம அழைப்பு என்றால் என்ன?

1. அது தேவ மகிமைக்காய் வாழ அழைப்பு.

இந்நிருபத்தில் தேவ மகிமையைக் குறித்துள்ள வசனங்களைக் கவனித்தால் இந்த அழைப்பு நன்கு விளங்கும் —

- □ 1:10,11 ... *நீதியின் கனிகளால்* அலங்காரம் பெறும் நேர்த்தியான வாழ்வு ... அது *இயேசு கிறிஸ்துவினால்* வருவது.
  அதாவது, கிறிஸ்து போல நடந்துகொள்ள முயலுவது.
  ''அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல ...'' (1 யோ 3:3)

- □ 1:20 ... *கிறிஸ்து எனது சரீரத்தினால் மகிமைப்பட*
  (உடலில் தேவனை மகிமைப்படுத்துதல் — 1 கொரி 6:20 —
  சூழமைவு: வச 18,19 ... பாலியல் வாழ்வில் பரிசுத்தம்)

- □ 4:15-19 ... *கொடுப்பதில் தாராளம் ... தேவனுக்கு உகந்த பலி*
  (இந்த மக்கெதோனியக் கிறிஸ்தவர்/2 கொரி 8:1-3; 9:13)
  கொடுப்பது பெறுவதற்காயல்ல, தேவனை மகிமைப்படுத்த.

- □ 4:20 ... *பிதாவாகிய தேவனானவருக்கு மகிமை*
  (நிருபத்தை முடிக்குமுன் பவுல் பாடுகிறார்!)
  கிறிஸ்துவே அதற்கு மாதிரியானவர் (2:11)

  நமது வாழ்வின் முடிவில் இப்படிச் சொல்ல முடியவேண்டும் —
  ''உம்மை மகிமைப்படுத்தினேன் ... வேலையை முடித்தேன்''
  (யோ 17:4)

  — இரு நோக்கங்களிருந்தால் ஒன்று அதிகம்!

2. அது விண்ணகச் சிந்தையோடு நடக்க அழைப்பு.

- □ இந்நிருபத்தில் கிறிஸ்துவின் நாள் அடிக்கடி குறிப்பிடப் பட்டுள்ளது —
  1:5 ... *நற்கிரியை ... கிறிஸ்துவின் நாள் வரை*
  :11 ... *கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவு*
  2:14 ... *கிறிஸ்துவின் நாளில் மகிழ்ச்சியுண்டாக ...*
  3:20 ... *கிறிஸ்து வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.*
  4:5 ... *கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.*

நமது தேவைகளை நிறைவேற்றுவதற்கான தேவ வாக்கைக் குறிப் பிடும்போதும், *''உங்கள் குறைவு ... **மகிமையில்** நிறைவு''* (4:19)

நித்திய நோக்குடன் வாழுங்கள்.
நமது நிலை: மண்ணுலகிற்குப் பயனில்லாத அளவு விண்ணுலகச் சிந்தையா, விண்ணுலகிற்குப் பயனில்லாத அளவு மண்ணுலகச் சிந்தையா?
மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ 3:1-4)

☐ சராசரியான வாழ்க்கைத் தரத்தில் திருப்தியடையாதிருங்கள் —
உன்னதருக்காய் உசிதம் (1:9)
"My utmost for His Highest" — Oswald Chambers

☐ திரித்துவ தேவனின் ஆசிகளை அனுபவித்து வாழுங்கள் —
2:1 ... ஒருமனப்பாட்டிற்கு
3:3 ... ஆராதனைக்கு
*''கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன் வைத்திருக்கிறேன் ...
அசைக்கப்படுவதில்லை ... பாதாள அழிவு இல்லை''*
(அப் 2:25-28)

☐ கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருங்கள் —
3:8 ... பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளோடு
சுவிசேஷங்களைப் படியுங்கள்.

☐ உயிர்த்தெழுதலை எதிர்நோக்குங்கள் (3:10,11) ...
முதலாம் உயிர்த்தெழுதல் —
இரவு பகலாய் எதிர்பார்ப்பு (அப் 26:6-8)
இல்லையேல் மிருகம் போன்று வாழ்வு (1 கொரி 15:32)
''இம்மைக்காக மாத்திரம்'' ... (:19)

☐ நமது குடியுரிமை பரலோகில் (3:20,21)
பிலிப்பி ... ரோமர் ஆட்சி ... பரதேசிகள்
''மோட்ச யாத்திரை செல்கிறோம் மேலோக வாசிகள்!''
— சகோதரி சாராள் நவரோஜி (1938-2014)

☐ அப்படியானால் உலகக் காரியங்களைக் கவனிக்கக்கூடாதா?
4:6,7... *ஒன்றுக்கும் கவலைப்படாமல்... எல்லாவற்றையும்*

3. அது பந்தயப் பரிசைப் பெற முயலுவதற்கு அழைப்பு.

3:14 ... *பந்தயப்பொருள் ... இலக்கு*

நேர்த்தியாய் முடிக்க அழைக்கப்பட்டுள்ளோம்.
நன்றாய்த் தொடங்கி ஆனால் வெற்றியாய் முடிக்காதோரது
சரிதைகள் சரித்திரத்தில் ஏராளம் —
அவற்றினைப் படித்துப் படுகுழிகளுக்குத் தப்புவோம் —
எ.கா.) இஸ்ரவேலர்:
1 கொரி 10:1,5,6,11,12
:13 ... ஜெயிக்க முடியாத சோதனை இல்லை.

துவக்கத்தைவிட முடிவு முக்கியம் (பிர 7:8)

☐ தேவன் செய்வது vs. நாம் செய்யவேண்டியது
1:5/2:13 2:12
(Calvinistic) (Arminian)

☐ நன்றாய் ஓடுகிறோம் என்று அறிவதெப்படி?
— அவ்வப்போது சீர்தூக்கிப்பார்க்க நேரமெடுங்கள்.
— வேலை நெருக்கடியிலிருந்து சற்று ஓய்வெடுங்கள்.
''தேவன் வெளிப்படுத்துவார்'' (3:15)

☐ நமக்காக மட்டுமல்ல, நமது தொடர்புகளுக்காகவும் —
2:19,20 ... தொடர்பணி

☐ பவுலைப் பின்பற்றுங்கள் (3:17) (1 கொரி 4:16/11:1)
''ஓட்டத்தை முடித்தேன்'' என்று சாகுமுன்னே சொல்லிவிட்டார்!
(2 தீமோ 4:6-8)

■ *முடிவுரை*

1:5 ... *தொடங்கினவர் முடிப்பார் ... நிச்சயம் ...*
அவரே அல்பாவும் ஓமெகாவுமானவர்.
அவரே துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர்.

இருந்தவர்...	*இருப்பவர்...*	*இனிவருபவர்...*
கடந்தகால வாழ்வு.	நிகழ்கால ஓட்டம்.	எதிர்காலப் பரிசு.
பின்னானவைகளை விடுங்கள்.	முன்னானவைகளை நாடுங்கள்.	மேலானவைகளை தேடுங்கள்.

நாளொரு மேனியாய் வளருவீர்!

(41ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

41

கிறிஸ்தவக் கண்ணோட்டம்

The Christian Outlook

முகவுரை

■ கிறிஸ்தவ வாழ்வின் 5 பரிமாணக் கண்ணோட்டம் —
பாடம்: **பிலிப்பியர் 3:1-21**

1. பின்திரும்பிய பார்வை (Backward Look)

பழைய வாழ்க்கையைப் பின்திரும்பிப் பார்ப்பது (வச 7,8)
சுயநீதி, நாம் சரிதான் என்ற எண்ணம், ஆகியவைதான்
நாம் மனந்திரும்பவேண்டிய கொடிய பாவங்கள் —
ஏசா 64:6 ... *அழுக்கான கந்தை*

தன்னை நியாயப்படுத்துதலும், சுய நீதியும் இணைபிரியாதவை —
எ.கா.) ஆதாம்-ஏவாள் — பழிசுமத்துதல், இவைகளால் மறைக்க
முயற்சி (ஆதி 3:8-13)

பாடுங்கள்: *எந்தக் கிரியை செய்துமே உந்தன் நீதி கிட்டாதே;*
கண்ணீர் நித்தம் சொரிந்தும், கஷ்ட தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே; நீரே மீட்பர் இயேசுவே!

தேவனது பிள்ளைகள் என்றழைக்கப்படுவதற்கு நமது தகுதி
யின்மை எப்பொழுதும் நமது மனதிலிருக்கவேண்டும் (1 யோ 3:1)

2. முன்னோக்கிய பார்வை (Forward Look)

அதாவது, *அடையவேண்டியதை* நாடி ... (வச 12,13)
கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்துவோடு கைகோர்த்து நடப்பது.
''எதற்காக இயேசுவினால் பிடிக்கப்பட்டேனோ,
அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ...'' (வச 12)

படிப்பினை:

தேவன் இல்லாது என்னால் ஒன்றும் செய்யமுடியாது;
என்னை இணைக்காது அவர் ஒன்றும் செய்யமாட்டார்!
இதுதான் ''ஐக்கியம்'' என்பதற்குப் பொருள்.

இலக்கு: ''பூரணம்''
படிகள்: நீதிமானாக்கப்படுதல் → பரிசுத்தமாக்கப்படுதல் →
மகிமைப்படுத்தப்படுதல் (ரோ 8:30)

3. மேல் நோக்கிய பார்வை (Upward Look)

அதாவது, உன்னதத்தை நோக்கிப் பார்த்தல் (வச 14,20,21)
பூமிக்கடுத்த சிந்தனைக்கு எதிரானது (வச 18,19)
மண்ணுலக ஆசிகளுக்கான மார்க்கம் (1 கொரி 15:19)

இது மிருகம் போன்ற வாழ்வு (1 கொரி 15:32)

நமது நட்புறவுகள் இவ்விதமான எண்ணங்களை
நம்மில் திணித்துவிடும் (வச 33,34).

இயேசு சொன்னது: *''நீங்கள் உலகத்தாரல்ல''* (யோ 15:19)

4. உள் நோக்கிய பார்வை (Inward Look)

அதாவது, நம்மை நாமே பார்ப்பது (வச 15,16)
''சிந்தை ... சிந்தை ... சிந்தை''

நம்மை நாமே சோதித்தறிய பவுல் இங்கே அழைக்கிறார் —
''தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்''

எல்லாக் காவலோடும் இதயத்தைக் காத்துக்கொள்ளுங்கள் (நீதி 4:23).
தொடர்ந்து கழுவப்படவேண்டும் — 1 யோ 1:7
(ஒளியில் நடந்தால் = திறந்த வாழ்வு)
வெளித்தோற்றம் (அலங்காரம்) vs. உள்ளான மனப்பான்மை

5. வெளி நோக்கிய பார்வை (Outward Look)

அதாவது, நம்மைச் சுற்றிப் பார்ப்பது (வச 17)
பரிசுத்தவான்களின் ஐக்கியம், இறைப்பணியாளரின் உறவு

சிலுவையைப்பற்றிய செய்தியின் ஸ்தானாபதியாகப்
பவுல் சிறையிலிருந்து இக்கடிதம் எழுதுகிறார் (1:7)

''சுவிசேஷப் பிரபல்யமே'' அவரது தணியா தாகம் (1:12)
நம்மைச் சுற்றியுள்ளோருக்கு நற்செய்தியறிவிப்பதே
நமது குறியாயிருக்கவேண்டும்.

■ *முடிவுரை*

இந்த 5 பரிமாணக் கண்ணோட்டத்துடன் நாம் வாழ்ந்தால்
''சொல்லி முடியாத'' மகிழ்ச்சி நமதாகும் —
பிலி 3:1; 4:4 ... *சந்தோஷம் ... சந்தோஷம் ... சந்தோஷம்*

(40ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

42

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் என்ன?

What's Abiding in Christ?

முகவுரை

கனியின்மையிலிருந்து கனிநிறைவுக்கு மனிதனை தேவன் மீட்டெடுப்பதே பைபிளின் சாராம்சம்.

முதலாவது தேவன் இஸ்ரவேலரோடு இடைபட்டார்; பயனில்லை—

ஏசா 5:1,2,7 ... *கசப்பான பழங்கள்*
ஓசி 10:1அ ... *பயனற்ற செடி ... தனக்குத்தானே கனி*
மத் 21:33,34,43 ... *கனியின்மை*

முடிவாக, தேவன் தமது மகனையே அனுப்பி அவரை முன் நிறுத்தினார்; இயேசு தம்மை **''மெய்யான''** *திராட்சைச் செடி* என்றழைத்தார் —

யோ 15:1 ... கடந்த காலக் கனியற்ற செடியுடன் ஒப்புமை

சங்கீதம் 80இல் ஒரு தீர்க்கதரிசனச் சித்திரம் —

வச 3,7,19 ... திருப்பிக் கொண்டுவர மும்முறை வேண்டல்
வச 8,14-16 ... இஸ்ரவேலராகிய திராட்சைச் செடியின் நிலைமை
வச 17,18 ... கனியின்மைக்குப் பரிகாரம் கிறிஸ்துவே!

கனிதருவதற்கு **ஒரே** நிபந்தனை —
''*கிறிஸ்துவில் நிலைத்திருப்பு* (தரித்திருப்பு)'' (யோ 15:4-7)
(மனந்திரும்புதலால் ஆதிநிலை — நிலைத்திருப்பதால் கனி)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தலின் பொருளை **யோவான் 15**இலிருந்து படிப்போம்.

கீழ்க்கண்ட குறிப்புகளின் அடிப்படையில் ஆராய்வோம் —

1. *எனது பிதா* (வச 1,8,10,15,23,24)
2. *எனது வார்த்தை* (வச 3,7,20)
3. *எனது சீடர்* (வச 8)
4. *எனது அன்பு* (வச 9)
5. *எனது கட்டளைகள்* (வச 10)

6. *எனது சந்தோஷம்* (வச 11)
7. *எனது சிநேகிதர்* (வச 14)
8. *எனது நாமம்* (வச 16,21)
9. *எனது சாட்சிகள்* (வச 26,27)

1. எனது பிதா (யோ 15:1) (My Father)

☐ கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால், கிறிஸ்துவை நமது **மூத்த ''சகோதரனாய்க்''** கொண்ட தேவ குடும்பத்தில் நாம் அங்கமாயிருக்கும் சிலாக்கியத்தை அனுபவிப்பதாகும்.

யோ 20:17 ... *என் பிதா ... உங்கள் பிதா*
எபி 2:11-13 ... இயேசு நமது அண்ணன்.
யோ 1:12 ... கிறிஸ்துவை ஏற்பதால் அங்கம் வகிப்பு
1 யோ 3:1 ... அன்பின் பிரமாண்ட வெளிப்பாடு
ரோ 8:15-17 ... இனிப் பயமில்லை! *அப்பா, பிதாவே!*
நிலைத்திருத்தல்: *கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்*

☐ இதன் உச்சக்கட்டம் வெளிப்படுத்தல் புத்தகத்தில் —

பிதாவின் பரதீசு (வெளி 2:7)
பிதாவின் வல்லமை (2:26,27)
பிதாவின் நாமம் (3:12)
பிதாவின் சிம்மாசனம் (3:21)

2. எனது வார்த்தை (யோ 15:3,7) (My Word)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால், ஜீவனுள்ள தேவ ***''வார்த்தையை''*** மகிழ்வுடன் உண்டு அதின்படி நடத்தலாகும்.

☐ நாம் ஒரு செடியானால், திருவசனம் பல்வேறு நிலைகளில் முக்கிய பங்கு வகிக்கிறது —

விதை (லூக் 8:11)
பிறப்பு (1 பேது 1:23)
வளர்ச்சி (1 கொரி 3:6) ... *''நீருற்றுவது''*
கிளை நறுக்குதல் (யோ 15:2,3)
கனி கொடுத்தல் (சங் 1:2,3)

□ நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் திருவசனமிருந்தால் கனி நிறைவு — உபா 6:6-11

(அ) இருதயத்தில்
(ஆ) பிள்ளைகளுக்கு
(இ) குடும்ப உரையாடல்களில்
(ஈ) வெளியுலகில்
(உ) தூங்குகையில் (தியானம்), முதலியன.

''கண்களுக்கிடையே ஞாபகக் குறி'' = அடையாளப் பட்டம்
அதாவது, சில வசனப்பகுதிகளை சிறு நாடாக்களில் எழுதி தோலுறையில் வைத்து, நெற்றியிலும் இடது புயத்திலும் கட்டிக்கொள்ளுவர் (உபா 6:4-9; 11:13-21)

எச்சரிப்பு: புதிய வெளிப்பாடுகள், தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள் போன்றவை மீது மோகம்.

3. *எனது சீடர்* (யோ 15:8) (My Disciples)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் அவரைத் **''தேவனது மாதிரியாக''** வைத்து அவரைப்போல் நடந்துகொள்வதாகும்.
லூக் 6:40 ... *''குருவைப்போல் சீடன்''*

□ இயேசுவின் வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய முக்கிய பகுதி **நீதியாய்** நடப்பதாகும் —
எபி 1:9 ... தமது தோழர் நடுவில் அவர் ''தலைவராய்'' (= மாதிரியாய்) உயர்ந்து நிற்கிறார்.

□ தாவர வளர்ச்சியில் நீதி —

விதைப்பு	(ஓசி 10:12அ)
மழை	(ஓசி 10:12ஆ)
சூரியவொளி	(மல் 4:2)
மரம்	(ஏசா 61:3)
கனிகள்	(2 கொரி 9:10)

□ கிறிஸ்துவின் பெயர் — *''நமது நீதியாயிருக்கும் கர்த்தர்''*
''அவருக்கு'' இடும் நாமம் (எரே 23:5,6)

திருச்சபையின் பெயர் — *''நீதியின் கிளை''*
அவரது நாமத்தின்படியே அது அறியப்படும் (எரே 33:15,16).

□ நீதிமானாயிருப்பது —

நிலையின்படி (standing) vs.	நடையின்படி (state)
(1 கொரி 1:30)	(1 யோ 3:7)

4. *எனது அன்பு* (யோ 15:9) (My Love)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் நமது **''மணவாளன்''** என்ற வகையில் அவருடன் நெருக்கமாய் வாழ்வதாகும்.

நமது அன்பு அவரது அன்புக்குப் பிரதிபலிப்பு —
*''அவர் **முந்தி** நம்மிடம் அன்புகூர்ந்தார்''* (1 யோ 4:19)

□ ப.ஏ. — பிரமாணம் — விலங்கு — கடமை
புஏ. — பிரியம் — விடுதலை — களிப்பு

□ நிருபங்களின் உபதேசம் —
ரோ 7:4 ... *கிறிஸ்துவோடு விவாகம்* (பிரமாணத்திற்கு மரித்து...)
2 கொரி 11:2 ... *கிறிஸ்துவுக்குக் கற்புள்ள கன்னிகை* (வஞ்சகம், வச 3)
எபே 5:25 ... *சபையைக் கிறிஸ்து நேசித்தார்*

□ ஒரு **தோட்டம்** என்ற சூழமைவில் இது **உன்னதப்பாட்டு** நூலில் அழகாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளது —
உன் 1:2; 2:3; 3:6; 4:12-14; 5:1; 6:2,3; 7:11-13; 8:5,6

— உங்களுக்கும் ஆண்டவருக்குமிடையில் எதுவும் வரக்கூடாது.

— எதையும் எவரையும்விட அவரையே நேசியுங்கள்.
எ.கா.) சீமோன் பேதுருவிடம் இயேசு (யோ 21:15)

— ஒளிவுமறைவின்றி அவரோடு ஐக்கியங்கொள்ளுங்கள்.
பயமில்லை, குற்றவுணர்வில்லை (1 யோ 4:16-19)

5. *எனது கட்டளைகள்* (யோ 15:10) (My Commandments)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் அவரை நமது **''இராஜாவாக''** ஏற்று அவருக்கு அடிபணிந்து நடப்பதாகும்.

□ ஒருவரையொருவர் நேசிக்கவேண்டுமென்பதே பிரதான கட்டளை—

யோ 15:12 ... *இதுவே எனது கற்பனை*

1 யோ 3:11,23 ... *இதுவே ஆதிமுதல் கேட்ட விசேஷம்*

1 யோ 4:21 ... *அவராலே பெற்ற இந்தக் கற்பனை*

□ அன்பில்லையேல் கனியில்லை!

மீகா 7:1,2 ... *சகோதரனை வேட்டையாடுகிறான்*

நீதியின் கனியானது **சமாதானத்தைப்** பிறப்பிக்கும் —

யாக் 3:18

:14-17 ... அதற்கு எதிரிடையானது!

கிறிஸ்துவை அறியும் அறிவில் கனி நிறைவு எங்ஙனம்?

2 பேது 1:7,8 ... *சகோதர சிநேகம் ... அன்பு*

நடைமுறையில் —

அ) தேவையுள்ளோருக்கு உதவுதல் கனிதரும் வாழ்வு

தீத்து 3:14 (இதற்கு எதிரிடை: ஏசா 5:1,2,8)

ஆ) செழித்து வளர உயிருள்ள சபையில் ஐக்கியம்

சங் 92:12,13 ... தனித்து, ஒதுங்கி வாழாதீர்!

இ) விழுந்தவர், தொலைந்தவர், இவர்களுக்கெதிராய்ப் பெருமிதம் கூடாது — ரோ 11:17-20

6. எனது சந்தோஷம் (யோ 15:11) (My Joy)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால், பரலோகப் பரிசை மனதிற்கொண்டு அவமானத்தை எண்ணாதிருப்பதாகும். அவர் நமக்குப் **''பலனளிக்கிறவர்.''**

□ மகிழ்ச்சியைப் பெரும்பாலும் உபத்திரவம், பாடு இவற்றோடு சம்பந்தப்படுத்தியே புதிய ஏற்பாடு பேசுகிறது —

மத் 5:4; யோ 16:33; அப் 13:50,52

ரோ 12:12: 2 கொரி 7:4; பிலி 4:4 (சிறையிலிருந்து எழுதியது)

எபி 12:2; 1 பேது 1:6

□ கடைசியில்தான் தீர்க்கன் ஆபகூக் இதைக் கற்றான் —

முதலாவது வினவிக்கொண்டிருந்தான் — ஆப 1:2,13

பின்னர் விளங்கிக்கொண்டான் — 3:17,18,19...*''கர்த்தருக்குள்''*

□ சிட்சையானது கனி கொடுக்கச் செய்கிறது —

எபி 12:11 ... *நீதியின் பலன்*

ஆம், கிளை நறுக்கப்படும்போது வேதனைதான்; ஆனால் ...!
ஆம், புயலில் ஆடும்போது பயம்தான்; ஆனால் ...!
எல்லாச் சூழலிலும் கர்த்தரை நம்புங்கள்; கனிகொடுங்கள்

(எரே 17:7,8) ... *''உஷ்ணம் வரும்போது பயப்படாமல் ...''*

7. எனது சிநேகிதர் (யோ 15:14) (My Friends)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால், பொல்லாத இத்தலைமுறையில் **''தேவனது சிநேகிதனாய்''** நிற்பதாகும்.

□ வச 18,19 ... *உலகத்தால் வெறுக்கப்படுவது*
யாக் 4:4 ... *உலகத்திற்குச் சிநேகிதன்*

பிரிந்து வாழுதல் கனிதரும் —

சங் 1:1,3,4 ... *பக்தியற்றோர் ... பரிகசிப்போர் ...*

ஆதி 12:1,2/ஏசா 41:8,9... ஆபிரகாம் தேவனுக்குச் சிநேகிதன்

□ கலப்பட விதை கூடாது —

உபா 22:9,10 ... *எருதையும் கழுதையையும் ...*

வாலிபரே, நங்கையரே!

உங்கள் நட்பு குறித்து எச்சரிக்கை!

உங்கள் திருமணம் குறித்து எச்சரிக்கை!

□ நாம் பாவவுலகின் வழிகளிலிருந்து பிரிந்து வாழும்போதுதான், கர்த்தரோடு நண்பராய் அவரது இரகசியங்களை அறியலாம் —

யோ 15:15 ... *நான் ''எல்லாவற்றையும்'' உங்களுக்குச் சொன்னேன்*

ஆதி 18:17,18 ... *நான் ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?*

□ நம்புங்கள் / சார்ந்திருங்கள் / விசுவாசியுங்கள் / ...

யாக் 2:23 ... *ஆபிரகாம் தேவனை ''விசுவாசித்தான்'' தேவனுக்குச் ''சிநேகிதன்'' எனப்பட்டான்*

8. எனது நாமம் (யோ 15:16) (My Name)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால், தேவனது வலப்பக்கத்தில் நமக்காகப் **''பரிந்து பேசும்''** ஊழியப் பலனை அனுபவிப்பதாகும்.

☐ நாம் பாவம் செய்யும்போது கிறிஸ்து பரிந்து பேசுகிறார் —
1 யோ 2:1
எபி 4:16 ... *இரக்கம்* — மன்னிப்பிற்கு
... *கிருபை* — மேற்கொள்வதற்கு

சத்திரக்காரனிடம் நல்ல சமாரியன் சொன்னதுதான் இதற்கு உதாரணம்!

☐ நாம் **ஜெபிக்கும்போது** கிறிஸ்து பரிந்து பேசுகிறார் —
யோ 16:23,24 ... *என் நாமத்தினால் பிதாவிடம்*

தேவ சித்தத்தின்படி நாம் ஜெபிக்கவேண்டுமானால்
''கிறிஸ்துவின் வார்த்தைகளில்'' நாம் ஊறிப்போகவேண்டும் —
யோ 15:7 ... *என் வார்த்தைகள் உங்களில் ...*

நான்கு சுவிசேஷங்களையும், வெளிப்படுத்துதலையும் திரும்பத் திரும்ப வாசித்து, 21 நிருபங்கள் மூலம் விளக்கம் பெறுங்கள்.

☐ யாரும் நம்மைக் குற்றஞ்சாட்டமுடியாது —
ரோ 8:31-34 ... *யார்? ... யார்? ... யார்?*

☐ தேவனது நாமத்திற்கு அபகீர்த்தி கொண்டுவரும் எதையும் செய்யோம் என்று தீர்மானிப்போம் — 2 தீமோ 2:19

இதைச் செய்யும் அளவுக்குத்தான் இயேசுவின் நாமத்தின் அதிகாரத்தையும் வல்லமையையும் பயன்படுத்த முடியும்
(பிசாசு: *பவுலை அறிவேன்!)*

9. எனது சாட்சிகள் (யோ 15:26,27) (My Witnesses)

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு கிறிஸ்துவுக்குச் **''சாட்சியாயிருப்பதாகும்''**

''பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் ...'' (அப் 5:32)

☐ தமது சீடருக்குக் கிறிஸ்துவின் பிரிவு வார்த்தைகள் —
அப் 1:8,9 ... *வல்லமை ... சாட்சிகள்*

☐ ஆவியானவரது வல்லமையினால் சாட்சி பகர்வதே கனிதரும் —
எசேக் 34:26,27 ... *மழை ... பழங்கள்*
47:12 ... *பரிசுத்த தலத்திலிருந்து நதி ...*
கனிதரும் மரங்கள்
சக 4:11-14 ... *இரு ஒலிவ மரங்கள் ... அபிஷேகம்*
யோசுவா — மார்க்கத் தலைவன்
செருபாபேல் — அரசியல் தலைவன்
:6 ... *என் ஆவியினாலேயே ஆகும்.*

☐ அருள்மாரி பெற்றிட ஜெபியுங்கள் —
யோவேல் 1:11-13 ... *புலம்புங்கள் ... உபவாசியுங்கள்*
2:23,24 ... *முன்மாரி ... பின்மாரி*

பரிசுத்த ஆவியினால் நிறைந்து வாழுங்கள்!

ஆவியானவருடன் பங்காளிகள்:
''ஆவியும் மணவாட்டியும்'' (வெளி 22:17)

■ *முடிவுரை*

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்றால் அவரைப்பற்றிக் கூடுதலாக வெளிப்பாடு பெற்று அவரோடு கீழ்க்கண்ட உறவுகளை அனுபவிப்பதாகும் —

1) நமது மூத்த சகோதரன்
2) தேவனுடைய வார்த்தையானவர்
3) நமக்கு முன்மாதிரியானவர்
4) நமது மணவாளன்
5) நமது இராஜா
6) நமக்குப் பரிசளிப்பவர்
7) நமது சிநேகிதன்
8) நமக்காய்ப் பரிந்துபேசுபவர்
9) உலக இரட்சகராகிய இயேசு

நாம் இவ்விதம் கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் (யோ 15:7) —

விளைவு : *''மிகுந்த கனிகள் கொடுப்போம்''* (வச 8)
முடிவு : *''பிதா மகிமைப்படுவார்''* (வச 8)

43

கனியின்மையிலிருந்து கனி நிறைவு

From Barrenness to Fruitfulness

முகவுரை

2 பேது 1:5-8
''தெய்வீக சுபாவத்திற்குப் பங்கு'' (வச 4)

விசுவாசமே அடிப்படையானது/அடித்தளமானது —

- *எங்களைப்போல் அருமையான* ***விசுவாசம்*** (வச 1)
- ***விசுவாசித்தவர்கள்*** *எல்லாரும்* (அப் 2:44)

இந்த 7 குணநலன்களும் மொத்தமாக விசுவாசத்தோடு கூட்டப்படுவதில்லை; ஒவ்வொன்றாய் முந்தியதோடு, படிப்படியாய்.

ஏதுக்கள்: *''வல்லமை''* (வச 3) + *''வாக்குகள்''* (வச 4)

ஏழு இரட்டைக் குணங்கள்: (எதிர்மறைப் பகுப்பாய்வு)
''அதிக ஜாக்கிரதையுடன்'' — கவலையீன விசுவாசிகள் அதிகம்.

*1. **நற்பண்பு** இல்லாத **விசுவாசம்*** (Faith without Virtue)

(''தைரியம்'' என்ற பழைய மொழியாக்கம் சரியல்ல.)
யாக் 2:17-20 ... விசுவாசத்தின் சமதளப் பரிமாணம்
:21-26 ... நற்பண்புக்கு இரு எடுத்துக்காட்டுகள் —

- ஆபிரகாம் — தனக்கிருந்த மிக அருமையானதைத் தேவனுக்குக் கொடுத்துவிட ஆயத்தம்.
  (ஓர் ஆண்)
- ராகாப் — அந்நியரைப் பாதுகாக்க ஆயத்தம்.
  (ஒரு பெண்)

யோ 1:47-51 ... நாத்தான்வேல் ↑↓ திரளான தூதர்கள்
(தேவன் மகிமைப்பட்டார்)

அப் 11:24 ... பர்னபா →← திரளான மக்கள்
(மனிதர் ஆசீர்வதிக்கப்பட்டனர்)
இவ்விதம், தேவன் மகிமைப்பட்டார்! (மத் 5:16)

*2. **அறிவு** இல்லாத நற்பண்பு* (Virtue without Knowledge)

மத் 10:16 ... மனிதரிடமிருந்து துன்புறுத்தல்
ரோ 16:18-20 ... சாத்தானிடமிருந்து அழுத்தம்
(துர்வுபதேசம், வச 17)

எ.கா.) யேகோவா சாட்சிக்காரர் —
நற்பண்பு என்ற பெயரில் அவர்களை ஏற்கக்கூடாது (2 யோ 10)

*3. **தன்னடக்கம்** இல்லாத அறிவு* (Knowledge without Self-control)

1 கொரி 8:1 ... *அறிவு இறுமாப்பை உண்டாக்கும்.*
:7-13 ... விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவை சம்பந்தமாகப் பிறருக்கு இடையூறு.
உடுத்துவது போன்றவற்றிலும் இது அவசியம்.

*4. **பொறுமை** இல்லாத தன்னடக்கம்* (Self-control without Patience)

(அவ்வப்போது அல்ல, நெடுகவே தன்னடக்கம்
எபி 10:36-39 (தன்னடக்கம் = திருச்சித்தம்)

நமது விருப்புகளுக்கு மறுப்பு.

தன்னடக்கத்தின்போது நம்மைத் தளர்த்திக்கொடுக்கவேண்டும்.
இறுதிவரை தாக்குப்பிடிக்காததால் பேரிழப்படைகிறோம்.

உடனே பாராட்டுப் பரிசு கிடைத்துவிடாது;
உடனே அற்புதங்கள் நிகழ்ந்துவிடாது;
ஆனால் மனவுறுதியாயிருக்கவேண்டும்.

*5. **தேவ பக்தி** இல்லாத பொறுமை* (Patience without Godliness)

1 பேது 2:20 ... *குற்றத்திற்கு அடிபடும்போது பொறுமை?*
:21-23 ... *கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்*

அடங்காத **நாவினாலேயே** நம்மில் அநேகருக்கு அவதி (வச 22)
எ.கா.) ''நான் பொறுமையாயிராதிருந்தால் உன்னை ஒழித்துக்கட்டியிருப்பேன்!'' என்கிறோம்.

*6. **சகோதர சிநேகம்** இல்லாத தேவபக்தி* (Godliness without Brotherly Kindness)

1 யோ 4:20,21 (வெறுக்கவில்லை; ஆனால் பிடிக்காது!)

எ.கா.) பலிபீடத்தருகில் தனது சகோதரனுக்கு எதிரான காயீன்
— மத் 5:23,24 ... *நீ பலிபீடத்திற்கு வரும்போது ...*

18:15 ... தவறிழைத்தது யாராயினும் முதலடி
எடுத்துவைக்கவேண்டியது ''நீங்கள்தான்''

— நாம் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்திருந்தோம்;
அவர்தானே நம்மைத் தேடி வந்தார்!

7. அன்பு இல்லாத சிநேகம் (Brotherly Kindness without Love)

1 கொரி 13:3 ... தன்னலம், புகழ் நாட்டம், முதலியன.
தன்னலமற்ற அன்பின்றித் தானதர்மச் செயல்கள்.

■ *முடிவுரை*

- கனியின்மையிலிருந்து கனிநிறைவு என்பது **விசுவாசத்திலிருந்து அன்புக்குச்** செல்லும் பயணம்.
- விசுவாசமானது கிறிஸ்தவ வாழ்வின் **அடிக்கல்**; அன்பானது அதின் **உச்சக்கல்**.
- விசுவாசத்தால் எகிப்திலிருந்து வெளிவரலாம்; அன்பினால்தான் கானானுக்குள் நுழையலாம்.

எகிப்து — அடிமைத்தன நாடு
கானான் — ஆசீர்வாத நாடு

ஒன்றுக்கும் அடுத்ததுக்கும் இடையிலுள்ள பண்புகளைத்
தவறவிட்டால், வனாந்திரத்தில்தான்,
அதாவது கனியற்ற பாலைநிலத்தில்தான் விடப்படுவோம்!



44

திருச்சித்தம் பற்றிய திருவசனங்கள்

Thoughts on the Will of God

முகவுரை

பைபிளில் *''உபதேசமும்''* உண்டு, *''உதாரணங்களும்''* உண்டு—
ஏசா 8:20 ... *வேதம் ... சாட்சி ... ஆகமம் ...*
புதிய ஏற்பாட்டிலுள்ள சில வசனங்களின் அடிப்படையில்
''திருச்சித்தம்'' குறித்துப் படிப்போம்.

திருப்பணி செய்வதைவிடத் திருச்சித்தம் செய்வதே முக்கியம்
(மத் 7:21)

1) ரோமர் 1:9-11

அ) **ஜெபம்** (வச 9)
பவுல் ... அப் 9:6 ... *நான் என்ன செய்ய நீர் சித்தம்?*
கர்த்தரது ஜெபம் ... மத் 6:10 ... *உம் சித்தம் ...*
கெத்செமனேயில் இயேசு ... மத் 26:39,42

ஆ) பரிசுத்த **வாஞ்சை** (வச 11)
பிலி 2:13 ... *தமது சித்தத்தின்படி விருப்பத்தையும்*
செய்கையையும் உண்டாக்குகிறவர்
எ.கா.) முழுநேரத் திருப்பணியில் இறங்க ஒரு ''விருப்பம்''

2) ரோமர் 9:2

நமது **மனச்சாட்சியில்** ஆவியானவரின் சாட்சி.
நீதி 20:27 ... *மனிதனின் ஆவி கர்த்தர் தந்த தீபம்.*
தேவாவியானவர் நமது ஆவியுடன் பேசுகிறார் (1 கொரி 2:11)
மனச்சாட்சியைச் சுத்தமாய்க் காத்துக்கொள்ளுங்கள் —
(அப் 24:16; 1 தீமோ 1:5)
அதாவது, உங்களது ஆவியில் விழிப்புடன் காத்திருங்கள்.

3) ரோமர் 12:2

மனதைப் ''புதிதாக்குதல்'' ... தேவனது நன்மையான சித்தம்
(மனதைப் ''புறக்கணித்தல்'' அல்ல!)

எங்ஙனம்?

அ) உடலை ஒப்புக்கொடுப்பது (வச 1)

ரோ 6:12,19 ... *''அதின் இச்சைகளுக்குக் (விருப்பங்களுக்குக்) கீழ்ப்படியாதபடி''*
x தேவனது விருப்பங்கள்

1 கொரி 9:26,27 ... *நிச்சயத்துடன் ஓட உடல் கட்டுப்பாடு*

கட்டுப்பாடு x கவனச்சிதறல் / தடம்புரளுதல்

கட்டுப்பாடின்மை → திடமின்மை, நிச்சயமின்மை

ஆ) உலகத்தோடு ஒத்துப்போகாதிருப்பது (வச 2)

மறுரூபம் x உலகப்போக்கு

1 யோ 2:15-17 ... உலகின் இச்சைகள் vs. தேவ சித்தம்

உலகிடமிருந்து அதின் வழிகளைக் கற்றுக்கொள்ளாதீர்.

''தெளிந்த புத்தியுள்ள ஆவியை எழுப்பிவிடுங்கள்'' (2 தீமோ 1:6,7)

4) 2 கொரிந்தியர் 5:5-7,9

நமது **நிச்சயத்திற்கு** அச்சாரம் ஆவியானவரே (வச 5).
எனவே, நம்மையல்ல, ஆவியானவர் தரும் நம்பிக்கையையே சார்ந்திருப்போம்.

அ) கர்த்தரது ஆன்மீகப் பிரசன்னத்தை விசுவாசித்து வாழுங்கள் (வச 6)

ஆ) அடையாளங்கள் அல்லது உணர்ச்சிகளை நாடாது, விசுவாசத்திலேயே முன்செல்லுங்கள் (வச 6,7)

சத்தியம் → விசுவாசம் → உணர்வுகள்

Fact → Faith → Feelings

ஆவியானவர் தமது ஆதீனத்தின்படி நமக்குத் தரிசனங்களும் சொப்பனங்களும் **தரலாம்;** நாம் அவைகளை நாடிக் காத்து நிற்கத் தேவையில்லை.

இ) எல்லாவற்றிலும் *தேவனைப் பிரியப்படுத்துவதே* உங்கள் குறியாய் இருக்கட்டும் (வச 9)

5) கலாத்தியர் 2:1,2

*''தேவ **அறிவிப்பினால்** எருசலேம் சென்றேன்''*

இந்த வெளிப்பாடு பவுலுக்கு எப்படி வந்தது?

அ) **கிருபையின்** சுவிசேஷத்தில் உறுதியாய் நின்றார் —
(அப் 15:1,2) ... விருத்தசேதனத்திற்கு எதிர்ப்பு

எழுதப்பட்டிருக்கும் சுவிசேஷ வெளிப்பாட்டிற்கு வெளியே வேறே வெளிப்பாடு தேவையில்லை.

கலா 1:6-9 ... **கிருபையின்** சுவிசேஷத்தைத் தவிர்த்த எதுவும் *''வேறே சுவிசேஷம்தான்''*

திருமறைக்கு வெளியேயுள்ள வெளிப்பாடுகளுக்கு எச்சரிக்கை!

ஆ) உடன் தலைவர்களோடு கலந்தாலோசித்த தீர்மானம் (அப் 15:2)

2 கொரி 13:1 ... *இரண்டு மூன்று சாட்சிகள்*

நீதி 11:14 ... *ஆலோசனைக்காரர்* (ஆட்டிப்படைக்கிறவர் அல்ல) பெருகினால் பாதுகாப்பு

தேவ பக்தியுள்ள தலைவர்களோடு முரண்படுவது ஆபத்து.

6) கலாத்தியர் 5:18

*''**ஆவியினால்** நடத்தப்படுவது''*

ஆவியானவர் நடத்தும்போது —

அ) பிரமாணக் கொள்கை (legalism) இராது.

''நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களல்ல''

= அழுத்தமும் நெருக்கமும் இருக்காது.

ஆவியானவரின் குணம், *''அன்பு, சந்தோஷம், சமாதானம், தயவு'' ... இப்படிப்பட்டவைகளே* (வச 22,23)

அதாவது, *கிறிஸ்துவில்* ***விடுதலை*** (வச 1)

ஆ) பயம் இராது (ரோ 8:14,15) ... *''அப்பா, பிதாவே!''*

தேவனது குடும்பத்திலிருக்கிறோம் என்ற உணர்வு (ரோ 8:16).
பரிசுத்த ஆவியானவரின் சாட்சி.

தந்தையானவர் தமது பிள்ளைகளைத் தவறாய் நடத்தமாட்டார் எனும் மனவுறுதி.

இ) நமது பலவீனங்களுக்கு ஆவன செய்யப்படும் —

ரோ 8:26,27 ... *ஆவியானவர் ... ஆவியானவர்தாமே*
சில இக்கட்டான சூழல்களில் இறைச்சித்தம் ஜெபத்திலும்
தெளிவாய்த் தெரியாவிடில் பதறத் தேவையில்லை.
பரிசுத்த ஆவியானவர் பொறுப்பெடுத்துக்கொள்வார்!
ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், பகுத்தறிதல், நவநாவுகள், அர்த்தம் சொல்லுதல்
போன்ற வரங்களைப் பயன்படுத்தி உதவுவார்.

நான் நவநாவுகளில் *இரகசியங்களை*
(= நமக்கு விளங்காதவைகளை) பேசுகிறேன்.

ரோமர் 8:28ஐ முழுக்க முழுக்க நம்புதல்.
''அவரது தீர்மானம்'' = நம்மை இயேசுபோல் ஆக்கும்
அவர் சித்தம் (வச 29,30)
1 தெச 4:3,7

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் ... தேவ சித்தம்.
பரிசுத்தம் நோக்கிய எம்முயற்சியும் இறைச்சித்தமே.

7. எபேசியர் 5:15-17

''மதியற்றவர்களாயிராமல் கர்த்தர் சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளுங்கள்'' (வச 17)

மதி (= ஞானம்) என்றால் என்ன?

அ) *கவனமாய் நடத்தல்* (வச 15)

= விழிப்பாய்
= கண்டிப்பாய்
= இடறாமல்
= பொறுப்புணர்வுடன்

அதாவது, ஏனோதானோ என்றல்ல, கவனமாய்.

ஆ) நேரத்தை வீணடிக்காது நடத்தல் (வச 16)
= நேரத்தை உசிதமாய்ச் செலவழித்தல்
= வாய்ப்புகளைத் தவறவிடாதிருத்தல்

இதுதான் மெய்யான ஞானம் (பிர 11:4,6).
உணர்ந்துகொள்ளவேண்டியது → *''நாட்கள் பொல்லாதவை''*
''நாளை நமதல்ல'' (நீதி 27:1)

நேரத்தை வீணடிக்காது கவனமாய் வாழுபவன்
இறைச்சித்தத்தை எளிதில் தவறவிடமாட்டான்.

8) பிலிப்பியர் 2:19-28

தத்துவ ரீதியின் அடிப்படையில் நடத்துதல் —

வச 19 — தீமோத்தேயு — *''அதேனென்றால்''* (வச 20)
வச 23,24 — நானே — *''என் காரியங்கள் எப்படி நடக்குமென அறிந்தவுடன்''*
வச 25 — எப்பாப்பிரோதீத்து — *''ஆகையால்''* (வச 26-28)
''ஆகையால்'' என்பது தேவனது சொற்களஞ்சியத்தில்
அடிக்கடி வரும்!
''ஆனாலும்'' என்பது பெரும்பாலும் விதிவிலக்குதான்!
பொது அறிவு வெளிச்சம் தருமானால், வேறே அறிவு எதற்கு?

9) பிலிப்பியர் 4:6-9

''காத்துக்கொள்ளப்பட்ட'' சிந்தை!
உண்மையான மார்க்கம் மனதில்தான் குடிகொள்கிறது.

அ) ஸ்தோத்திரத்துடன் ஜெபம் (வச 6)
பதைபதைப்பது திருச்சித்தம் அறிவதற்குத் தடை.
தளர்த்திக் கொடுத்திருப்பது இறைச்சித்தம் அறிய உதவும்.
''எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம்''

''விசுவாசிக்கிறவன் பதறான்'' (ஏசா 28:16)
... திட அஸ்திபாரம் ... பரீட்சிக்கப்பட்ட கல் ...
விலையேறப்பெற்ற மூலைக்கல் ...

ஆ) தூய மனது (வச 8)
உண்மை ... ஒழுக்கம் ... நீதி ... கற்பு ... அன்பு ...
அசுசியானவற்றை வடிகட்டிவிடுங்கள் —

எ.கா.) செய்தித்தாள்களில் அவபக்தியான தகவல்கள்.
எங்கும் தலைவிரித்தாடும் ஊழல்.
பிறரது தவறுகள், தோல்விகள்.

இவை நமது காதுகளில் ''விழலாம்,'' ஆனால் மனதில் ''தங்கக்கூடாது.'' தூய மனதிலேயே இறைத்திட்டம் எழுதப்படும்.

இ) நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றுதல் (வச 9)

முன்மாதிரியானவர்களைப் பின்பற்றவேண்டும்;
அதே வேளையில் பூரணமான தலைவர்கள் கிடையாது என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

இயேசு இல்லாது தேவனை அறியமுடியாது;
பவுல் போன்றோர் இல்லாது இயேசுவை அறியமுடியாது —
(1 கொரி 11:1)...*நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல்...*

நம்மை நடத்துவதற்குத் தேவ மனிதர் நட்சத்திரங்கள் போல! (வெளி 1:20)

10) கொலோசெயர் 1:9

பிறருக்காய் ஜெபியுங்கள்.
தேவ சித்தம் அறிவதில் மக்கள் நிறைவாய் வளரும்படித் தேவ ஊழியர் தினமும் அவர்களுக்காய் ஜெபிக்கவேண்டும்.

... கேட்ட நாள் முதல் ... ஜெபம் ... அவரது சித்தம்

பிறருக்கு நமது பணி —
கிறிஸ்துவின் உடலிலுள்ள பிற அங்கத்தினர்கள் தேவ சித்தம் அறிந்து செயல்படும்போது நமக்கு அது இலகுவாகிறது.

11. யாக்கோபு 4:13-16

''ஆண்டவருக்குச் சித்தமானால் ...''

இது நீண்டகாலத் திட்டங்களைக் குறிக்கும் —
''ஒரு வருடம் தங்கி ...'' (வச 13)
— அன்றாடகக் காரியங்களைக் குறித்ததல்ல.

அ) *''உங்களுக்குத் தெரியாதே ...''* (வச 14)

நாளையைக் குறித்து எல்லாம் தெரியாததால் ஸ்தோத்திரம்!
எப்பொழுது எப்படி சாவோமென்று நமக்குச் சொல்லப்பட்டால் தினமும் சாவுதான்!

ஆ) *''உங்கள் ஜீவன் கொஞ்சக் காலம்''* (வச 14)

''வாழ்வு குறுகியது'' என்பது எப்பொழுதும் மனதிலிருக்க வேண்டும்

இந்த அறிவு வெளிப்படவேண்டிய விதம் —

i) இணக்கம், தாழ்மை, மென்மை
(x அகங்காரம், *வீம்பு* ... வச 16)
(எ.கா.) மன்னன் எசேக்கியா ... (ஏசா 38:15)

ii) முடிந்த நன்மையெல்லாம் செய்தல் (வச 17)

''தேவனுக்குச் சித்தமானால்'' எனும் சொற்றொடரின் துர்ப்பிரயோகம்
— விருப்பு, விறுவிறுப்பு இல்லாமைக்குச் சாக்கு.
— தோல்விகளையும் சோம்பலையும் மறைக்க முயற்சி.

12) 1 யோவான் 5:14-16

வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தின்படியே ஜெபம் ஏறெடுக்கப்படவேண்டும் — அதாவது, **திருவசனத்தின்படி**

எ.கா.) பாவம் செய்யும் சகோதரனுக்காய் ஜெபம் (வச 16,17)
இருவிதப் பாவங்கள்.
அடிப்படை விசுவாசத்தையே மறுதலிப்பது மன்னிக்கப்பட முடியா பாவம் (வச 20,21)

எ.கா.) *''விக்கிரக வணக்கம்''*

திருவசனத்தால் நிரம்பியிருக்குமளவுக்குத்தான் திருச்சித்தம் தெளிவாகும்;
நமது ஜெபங்களும் ஏற்புடையதாகும் —
யோ 15:7 ... திருமறைக்கேற்ப ஜெபியுங்கள்.
16:23 ... கிறிஸ்துவின் நாமத்திற்கேற்ப ஜெபியுங்கள் — *''என் நாமத்தினால்''*

(46ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

45

இறைநடத்துதலின் மறுபக்கம்

The Other Side of Guidance

முகவுரை

- தேவனது பிள்ளைகளாயிருப்பதின் ஆசீர்வாதங்களில் முக்கியமானதொன்று அவரது **''நடத்துதல்''** —
  ரோ 8:14 ... *ஆவியினால் நடத்தப்படுவோர்*

  இவ்வுலகில் இறைநடத்துதலின்படி நடப்பது விண்ணுலக வாழ்வுக்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது —
  1 யோ 2:17 ... *என்றும் நிலைத்திருப்பான்*

- இறைநடத்துதலின் ஒரு பக்கத்தை மட்டுமே நாம் அறிந்திருப்பதாலேயே நாம் இறைச்சித்தத்தைத் தவறவிடுறோம் —
  ஏசா 22:22 / வெளி 3:7 ... சத்தியம் இணைகோடுகள் போன்றது.
  எ.கா.) பறவையின் இரு இறக்கைகள் / இரு தண்டவாளங்கள்
  ஒரு பக்கம்: தேவன் வாசலைத் ''திறக்கிறார்''
  மறு பக்கம்: தேவன் வாசலை ''அடைக்கிறார்''

  தவறான கருத்து —
  திறந்த வாசல்களெல்லாம் தேவனது ஆதீனம்.
  மூடிய வாசல்களெல்லாம் பிசாசின் ஆதிக்கம்.

- நாம் பொதுவாகவே கடின மனதுடையவர்களானதாலும், நமது சொந்த வழிகளிலேயே செல்ல விரும்புவதாலும், திறந்த வாசல்களைவிட மூடிய வாசல்கள் மூலமாகவே தேவன் பெரும்பாலும் நம்மை நடத்துகிறார்.

  இச்சத்தியத்தை விளக்க ஆதியாகமத்திலிருந்து ஏழு எடுத்துக்காட்டுகளைப் பொறுக்கியுள்ளேன்.

  ஆதியாகமத்தைத் ''துவக்கங்களின்'' புத்தகம் எனலாம்.
  சுவாரஸ்யமாக, தேவன் ''தடுத்து நிறுத்திய''
  பல காரியங்களை அது சுட்டிக்காட்டுகிறது.

நல்ல மனிதனின் *''நடைகள்'' கர்த்தரால் உறுதிப்படும்* (சங் 37:23). அவனுக்கு வரும் ''தடைகளும்'' அப்படியே!

1. பாபேல் கோபுரம்

சிதறிப்போகாதிருக்க மக்கள் எடுத்த முயற்சியைத் தேவன் ''தடுத்தார்'' —

- ஆதி 11:1-9 ... (9:1 ... பூமியை நிரப்ப தேவனது கட்டளை)
- அப் 1:8 → 2:46, 47 → 8:1

  இப்படியிருந்தும் தங்கள் மனப்பான்மையை விட்டு அவர்கள் வெளிவரவில்லை (அப் 11:19-21)

  — அந்தியோகியா திருச்சபை நிறுவப்பட்டது.

  தேவனது பரிபூரண சித்தம்: *''நாம் பூமிக்கு உப்பு.''*
  உப்புத் தூண்கள் அல்ல;
  குப்பியிலிருந்து தூவப்படவேண்டிய உப்பு!

- நமது ஊர் / நமது மொழி ... பொதுவான மனப்பான்மை ... நமக்கு உலகளாவிய தரிசனம் (World Vision) தேவை —
  *''தேவன் இவ்வளவாய் **உலகில்** அன்புகூர்ந்தார்''*

2. ஆகார்

இம்சையிலிருந்து தப்ப முயன்ற ஆகாரைத் தேவன் ''தடுத்தார்'' —

- ஆதி 16:8-10
  பின்னர் தேவனே ஆகாரை அனுப்பிவிட ஆபிரகாமைப் பணித்தார் (ஆதி 21:10-12)
  குணநலன் மேம்படப் பொறுத்திருங்கள்.
- கெத்செமனேயின் பாத்திரம் — தப்பிக்க வழியில்லை.
  தனித்து விடப்பட்டார் ... லூக் 22:42,43
  (இக்கட்டான சூழலில் நெருங்கிய நண்பரும் துணை நிற்காது போகலாம்.)
- பவுலின் முள் — 2 கொரி 12:7-9
  ஜெபத்திற்குப் பதில் அமைதி அல்லது எதிர்பாராதது.
  மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் பயன்படுத்தப்பட்டது தூதன்.

  இந்த விண்ணகவாசிகளை முதலாவது ஏதேன் தோட்டத்திற்குச் செல்லும் வழியைக் ''காவல்'' செய்ய நியமிக்கப்பட்டபோதுதான் சந்திக்கிறோம்! (தடுப்பு)

3. அபிமெலேக்கு

பாவம் செய்யாதபடி தேவன் அவனைத் ''தடுத்தார்'' (ஆதி 20:1-6)

- இப்பகுதியில் நமக்கு எப்பொழுதும் உதவும் இருவர் உண்டு —

அ) நமக்குள்ளிருக்கும் ஆவியானவர்

யாக் 4:4,5 ... தாழ்மையும் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலும் வெற்றி தரும் (வச 6,7)

2 தெச 2:7 ... *தடைசெய்கிறவர்*

ஆ) நமக்காய்ப் பரலோகிலிருக்கும் கிறிஸ்துவானவர்

எபி 2:18 ... *உதவி செய்ய வல்லவர்*

4:14,15 ... *பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்.*

1 யோ 2:1 ... *நமக்காகப் பரிந்து பேசுகிறவர்.*

ராபர்ட் முரே மச்செயின் (1813-1843):
''அடுத்த அறையில் கிறிஸ்து எனக்காய் ஜெபித்துக்கொண்டிருக்கிறாரென்றால் பதினாயிரம் எதிரிகள் வந்தாலும் பயப்படேன். தூரம் ஒரு காரியமா? எனக்காக ஜெபித்துக்கொண்டிருக்கிறார்!''

நாம் நிசமாகவே தேவனுக்குமுன் பரிசுத்த வாழ்வை வாஞ்சித்தால், பாவம் செய்வதிலிருந்து நம்மை அவர் தடுப்பார் என்று நிச்சயிக்கலாம் (யாக் 1:13-15).

நமக்குத் தெரியாதிருக்கலாம், ஆனால் பிசாசின் வலைகள் அத்தனையும் ஆண்டவருக்குத் தெரியும்.

நமக்குள் உண்டாகும் சலசலப்பே நம்மைப் பாவம் செய்யாது தடுக்கும் ஆவியானவரின் மெல்லிய சத்தம்!

4. ஆபிரகாம்

ஈசாக்கைப் பலியிடாது ஆபிரகாமைத் தேவன் ''தடுத்தார்''
ஆதி 22:9-14

நமது செல்வாக்கை வைத்து நாமே வெளிவந்துவிடக்கூடாது.
பணமிருந்தால் கொடுப்போம் (pay);
பணமில்லையேல் ஜெபிப்போம் (pray) அல்லவா?

எ.கா.) விசுவாசியானதொரு மாணவன் தொழிற் கல்லூரியில் சேர முயலுகிறான். இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் பணம் கொடுத்து இடம் வாங்கிவிட்டால் இதில் தேவன் எங்கே? (Capitation fee)

தந்திர வழிகளைக் கையாளாதீர்.
ஓர் ''ஆட்டுக்குட்டியைத்'' தேவன் தரும்வரை காத்திருங்கள் — அது ஒரு முட்புதரில் இருக்கலாம் (ஆதி 22:13,14)

பிரபலமற்ற பொறியியல் கல்லூரியில் பயின்றேன் (1963-1968)
விளைவு: ஓர் இயக்கம் பிறந்தது!

அடுத்து மிகப் பிரபலமானதொரு கல்லூரியில் படித்தேன் (1968-1970) (Indian Institute of Technology, Madras)

- சோதனைகள் தமது வரம்பை மிஞ்ச ஆண்டவர் விடார் —

யோபு 1:12 ... *அவன்மேல் மட்டும் உன் கையை நீட்டாதே*

2:6 ... *ஆனாலும் அவன் உயிரை மட்டும் தப்பவிடு*

38:8,10,11 ... *அலைகள் ... கதவுகள் ... தாழ்ப்பாள்கள்*

1 கொரி 10:13 ... *தப்பிக்கொள்ள வழி* —
அதாவது, ''ஓடிவிட'' அல்ல,
சோதனையைத் ''தாங்க''

நம்மை உடைக்க அல்ல, உருவாக்கவே சோதனைகளும் வேதனைகளும்!

- தனது முயற்சியினால் சிறையிலிருந்து வெளிவர யோசேப்பு ஆசித்தான், ஆனால் தோல்வி (ஆதி 40:14,23).
  பானபாத்திரக்காரன் மறந்தான்!

5. ஈசாக்கு

எகிப்துக்குப் போவதிலிருந்து அவனைத் தேவன் ''தடுத்தார்''
ஆதி 26:1,2,6,12

- நமது விவாதம் vs. தேவனது திட்டம்
  (பொதுவாக, பொது அறிவு, ஆனால் ...)
  இன்னும் பெரிய ஆசீர்வாதத்திற்காய் நமது பாதையைத் தேவன் மாற்றுவார்.
- ஆசியாவுக்கும் பித்தினியாவுக்கும் செல்லாதவாறு அப்போஸ்தலர் தடுக்கப்பட்டனர்; எனவே மக்கெதோனியா வந்தடைந்தனர்!

அப் 16:6-10 ... *ஆவியானவர் ... தடுத்தார்*

— தடுத்தது சாத்தான் என்று அவர்கள் சொல்லவில்லை!

— தடுக்கப்பட்டதும் நடத்துதலுக்காய் அப்படியே உட்கார்ந்து விடவில்லை ...

போய்க்கொண்டேயிருந்தனர் ... முன்தள்ளிச் சென்றனர் ...
இதுவே *பொதுவாக* இறைச்சித்தம் செய்துகொண்டிருப்பது.

— ஆவியானவர் தடுத்ததை உணர்ந்தபோது, துவண்டு விடாது, திசையை மாற்றிக்கொண்டனர்.

— தேவன் ஒரு கதவை அடைத்தால் இன்னொன்றைத் திறப்பார்.
லீதியாளின் இதயம் திறக்கப்பட்டது (துணி வியாபாரி).
சிறைச்சாலைக் கதவுகள் திறக்கப்பட்டன (சிறையதிகாரி).

6. ராகேல்

தேவன் அவள் கருவுறுவதைத் ''தடுத்தார்'' —
ஆதி 29:31; 30:2 ... *கர்ப்பத்தை அடைத்தார்*
30:22-24... *திறந்தார்*... அவளுக்கு யோசேப்பு கிடைத்தான்!

- ஆன்மீக ஆசிகள் அருளப்படப் பொருளாதார நன்மைகள் தடைபடலாம் —
  - ☐ இவ்வுலகில் தரித்திரர் ... விசுவாசத்தில் செல்வந்தர் (யாக் 2:5)
  - ☐ பேன்னி கிராஸ்பி ... பார்வையின்மை ... 8000 பாடல்கள்
- எல்லாமே முடிவில் நமது நலனுக்காகவே —
  எ.கா.) அன்னாள் ... தீர்க்கன் சாமுவேல்
  எலிசபெத் ... தீர்க்கன் யோவான்

தாமதங்கள் மறுப்புகள் அல்ல;
நம்மை மேம்படுத்த தேவன் தருணம் அளிக்கிறார்.

தேவன் தமது பரந்த திட்டத்தை நிறைவேற்றுகிறார் —
அதாவது, இக்காலத்தில்தான் யாக்கோபுக்குப்
பத்து குமாரர் பிறந்தனர் —
பத்து கோத்திரங்கள்!

7. லாபான்

யாக்கோபுக்குத் தீங்கு செய்யாதவாறு அவனைத் தேவன் ''தடுத்தார்.''
ஆதி 31:22-24, 29,42

அவ்விதமே, தமது மக்களைச் சபிக்காதவாறு பிலேயாமைத் தேவன் ''தடுத்தார்'' —
எண் 22:22,24,26
23:23 . . . மகிமையானதொரு சத்தியம்!
''தேவன் செய்ததுதான் சொல்லப்படும்!'' (பிசாசு செய்ததல்ல!)

இன்னும் மேலான நோக்கமொன்று இருந்தாலன்றி,
எவரும் நம்மைத் தொட ஆண்டவர் அனுமதியார் (சங் 105:14,15)

எ.கா.) ஸ்தேவான்
உதவிக்காரனான ஸ்தேவானைச் சபை இழந்தது;
அப்போஸ்தலனாகிய பவுல் அதற்குக் கிடைத்தார்!

அப்படியே கிரஹாம் ஸ்டெயின்ஸ் (1941-1999) அவர்களின் இரத்தசாட்சி மரணம்
— நாட்டளவில் ஒரு தாக்கம்.
— கிறிஸ்தவர்களது **''மன்னிப்பு''** எனும் பண்பு.
The Hindu செய்தித்தாளில் முக்கிய செய்தி!

■ *முடிவுரை*

- ரயில் பயணத்தை நடத்தப் **பச்சைக்** கொடி மட்டும் போதுமா?
  சிவப்புக் கொடி தேவையில்லையா?
- 24 மணி நேரமும் **சூரியவொளி** இருந்துகொண்டிருந்தால் நமக்கு நன்றாயிருக்குமோ?
  இரவும் தேவையல்லவா?

சொல்லப்போனால், இரவுதான் முதலாவது, அடுத்துதான் பகல் —
ஆதி 1:5 ... *சாயங்காலமும் விடியற்காலையும்*

அதாவது, இருளில் நடக்கப் பழகியவர்கள் பகலில் எளிதாய் நடந்துவிடுவர் —
இதை மாற்றிச் சொன்னால் சரியாகாது!

- வலி என்பதும் ஓர் ஆசீர்வாதமன்றோ?

  வலி மட்டும் இருக்குமானால் தொழுநோயாளிகள் தங்கள் விரல்களை இழக்கவேண்டியதிருக்காதே!
  ‘‘ஒருவரும் விரும்பாத ஈவு’’ (A gift nobody wants)
  என்று வலியை Dr. பால் பிராண்ட் (1914-2003) அழைக்கிறார்.

- இறப்பது ஓர் ஆசீர்வாதமன்றோ?
  ஏதோவோரிடத்தில் மனிதனின் வாழ்வைத் தேவன் நிறுத்தாவிடில்,
  ஆதாமும் ஏவாளும் இன்னும் பாயும் படுக்கையுமாய் திரிந்துகொண்டிருப்பர்!

46

நாம் திருச்சித்தம் செய்யத் தவறுவதேன்?

How (Why) we miss God's Will

முகவுரை

- விசுவாசிகளின் இன்றையத் தேவை கூடுதல் வெளிச்சம் அல்ல, கூடுதல் கீழ்ப்படிதல்.

  கீழ்ப்படியாத தமது மக்களுக்கு வெளிப்பாடுகளைக் கொடுத்துக் கொண்டு தேவன் தமது நேரத்தை வீணடிப்பாரோ?

  ரோ 10:21 ... *கீழ்ப்படியாதோர் ... எதிர்த்துப் பேசுவோர்*
  ஏசா 65:2 ... *முரட்டாட்டமுள்ள ஜனம்*

‘‘திருச்சித்தத்தைக் கண்டுபிடிப்பது எப்படி?’’
என்று போதுமான அளவு கேட்டிருக்கிறோம்.

‘‘திருச்சித்தம் செய்யத் தவறுவதேன்?’’
என்று இப்போது படிப்போம்.

காரணங்கள் —

1. சுயாதீனம் (Independence)

சுய சித்தம்
நமது சொந்தத் திட்டங்கள் + விருப்பங்கள்
யாக் 4:13-16 ... வியாபாரத் திட்டங்கள்
எசேக் 14:4,5 ... பைத்தியமாய் வைத்திருக்கும் விக்கிரகங்கள்
சங் 32:8,9 ... *குதிரை ... கழுதை* (கட்டினாலொழிய)
எபி 10:7,9 ... இயேசு (தாமாக)

2. சிற்றின்பம் (Indulgence)

ரோ 8:12-14 ... ஊனியல்பின்படி ... ஆவியின்படி
12:2 ... உலகப் போக்கு, வேஷம்
1 யோ 2:15-17 ... உலகப் பற்று ... தேவ சித்தம்
விருப்பங்கள் vs. பொருளாசை
பிலேயாமின் குருட்டுத்தனம், செவிட்டுத்தனம்
தத்துவம் + கண்ணோட்டம் (தூதன் + கழுதை)

3. அறிவாற்றல் (Intelligence)

பொது அறிவும் சிந்திப்பதும் அவசியம்;
ஆனால் அளவுக்கு மீறிய அலசல் தவிர்க்கப்படவேண்டும்.

- அறிவு, அடுத்து வாழ்வா? வாழ்வு, அடுத்து அறிவா?
  இரு மரங்கள்: ஆதி 2:9

ஏசா 55:8,9 ... தேவனது எண்ணங்கள் vs. நமது எண்ணங்கள்
2 கொரி 5:5,7,9 ... விசுவாசம் vs. புலனறிவு
எபி 11:8 ... எங்கே என்று தெரியாது புறப்பட்டுப்போனான்.
சங் 77:19,20 ... *உமது வழி சமுத்திரத்தில் ...*
உமது காலடிகள் தெரியவில்லை

(ஒரு சில காரியங்கள் தெரியாதிருப்பதுதான் கிறிஸ்தவ வாழ்விற்குச் சிலிர்ப்பூட்டும். இல்லையேல் மந்தமாயிருக்கும்.)

அப் 27:9-11,21 ... தொழிலில் திறமை vs. ஆன்மீக வெளிப்பாடு

4. பிறர் சொல் (Influence / Interference)

அளவுக்குமீறிக் கலந்தாலோசிப்பது நன்றன்று.
கலா 1:16,17 ... *மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ...*
மற்ற அப்போஸ்தலர் — இனத்தார்
யோ 7:2-8 ... குடும்பத்தினர், நண்பர்
ஏசா 30:1,2 ... எகிப்து, பார்வோன்

முழுநேரக் கிறிஸ்தவப்பணிக்காய் எனது வேலையை ராஜினாமா செய்ததை எனது அம்மா, தம்பி, மாமனார், மாமியாருக்குத் ''தெரியப்படுத்தினேன்,'' அவ்வளவுதான்.

பிரசங்கிமாரது அழுத்தங்களுக்கு எச்சரிக்கை! —

- அப் 21:10-14 ... பவுலும் தீர்க்கன் அகபுவும்
- 1 இரா 13 ... ஒரு தேவ மனிதன் & கிழட்டுத் தீர்க்கன் — சிங்கத்தால் கொல்லப்பட்டான்

5. அவசரம் (Impatience)

ஆதி 15:3,4
16:1-4
17:15-19
... ஆபிரகாம்

எபி 10:35-38 ... தேவ சித்தம் செய்தபின், திருவாக்கைச் சுதந்தரிக்கப் பொறுமை.
ஏசா 50:10 ... *கீழ்ப்படிந்தபின்பும் இருட்டென்றால் அமரிக்கை*

அதையும் இதையும் செய்து வெளிவர முயலாதீர் —
எ.கா.) எபி 11:35 ... மேலான உயிர்த்தெழுதலுக்காய் விடுதலை பெறச் சம்மதியாமை

6. சோம்பேறித்தனம் (Indolence)

எபே 5:15-17... சுறுசுறுப்பாயிருங்கள் *(''காலத்தைப் பயன்படுத்தி'')*

அப் 16:6-10 ... ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ள பொதுவான திருச்சித்தத்தைச் செய்துகொண்டிருங்கள்.

லூக் 12:45-48 ... உள்ளதைக் கொண்டு விறுவிறுப்பான வேலை — உங்களுக்குத் தெரிந்தவற்றிற்கு நீங்கள் கீழ்ப்படிந்து வாழும்போது கூடுதல் வெளிப்பாடு

தேவன் தருவது திசைமானி (compass),
முழு வரைபடம் (blueprint) அல்ல!
''ஓரடி மட்டும் என்முன் காட்டுமேன்!''

7. அறியாமை (Ignorance)

இது அடிப்படையானதொரு காரணமாயினும் நெடுகவே இருக்கும்.
ஒருவரோடு அடிக்கடி பேசிப் பழகினால்தான் அவரது மனதையும் விருப்பு வெறுப்புகளையும் புரிய முடியும்.

அதுபோலவே, தேவனது சிந்தையை அறிவதற்கு ஏதுக்கள் —
திருமறைத் தியானம்
ஜெபம்

அ) திருவசனம் = திருச்சித்தம்
ஏசா 8:19,20 ... *உபதேசம்* ''அத்துடன்'' *உதாரணம்.*
கவனமாய்க் கிரமமாய்ப் படிக்கவேண்டும்—
மேலெழுந்தவாறு வாசிப்பதல்ல
"logos" — "rhema"
''பொது வார்த்தை'' — ''தனிச் செய்தி''

ஆ) ஜெபம்

ரோ 8:26,27 ... ஜெபத்தில்தான் ஆவியானவர் நமது ஆவியையும் மனதையும் உயிர்ப்பித்து இறைச்சித்தம் அறியப் பக்குவப்படுத்துகிறார்.

இது அறிவியலின் பல கிளைகள் போன்றது.
இதில் அறிவு பெருகப்பெருகத் தெளிவு கூடும்.
நாளாவட்டத்தில் கடினமான சூழல்களைத் தைரியமாய்க் கையாளக் கற்றுக்கொள்வோம்.

ஆனாலும், வெறும் தலையறிவு அல்ல.
தேவசித்தத்தை அறிவது அல்ல, செய்வதுதான் காரியம் —
கொலோ 1:9,10 (யோ 7:17அ)

(இவ்வத்தியாயக் குறிப்புகள் ஒரு முழுக் கட்டுரையாக, ஆசிரியரது ''நெஞ்சில் நெருப்பு'' எனும் நூலில், 5ஆம் அத்தியாயமாய்த் தரப்பட்டுள்ளன.)

(44ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

47

சிலுவைக்குப் ''பின்னர்'' இயேசு மொழிந்தவை

Christ's Words AFTER the Cross

முகவுரை

- கிறிஸ்து பிறப்பு — மத்தேயு & லூக்காவில் மட்டும்;
  கிறிஸ்து உயிர்ப்பு — நான்கு சுவிசேஷங்களிலும்.

  கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் ஏராளம்;
  ஈஸ்டர் வாழ்த்து அட்டைகள் அபூர்வம்!

  ☐ கிறிஸ்துமஸ் ஓர் அற்புதம்தான்; அதிலும் பெரியது ஈஸ்டர்!
  ☐ கிறிஸ்து இல்லாது கிறிஸ்துமஸ் கிடையாது;
  உயிர்த்தெழுதல் இல்லாது கிறிஸ்தவம் கிடையாது!
  ☐ மரணத்தில் அல்ல, உயிர்த்தெழுதலில்தான் அற்புதம்!
  ☐ மனிதரது வாழ்வு ஓர் இழவுடன் முடிகிறது;
  கிறிஸ்துவின் இகவாழ்வோ கொண்டாட்டத்துடன் முடிந்தது!
  ☐ நாம் விசுவாசிக்கும் கிறிஸ்து —
  உயிரோடிருந்து இறந்தவர் அல்ல;
  இறந்து எழுந்து உயிரோடிருக்கிறார்!
  ☐ பெத்லெகேமின் சத்திரம் அல்ல,
  கிறிஸ்துவின் காலிக் கல்லறையே கிறிஸ்தவத்தின் தொட்டில்!
  ☐ கிறிஸ்தவம் பிரதானமாக உயிர்த்தெழுதலின் மார்க்கம்!

- சிலுவையிலிருந்து இயேசு மொழிந்தவற்றில் பிரசங்கங்கள் ஏராளம்; சிலுவைக்குப் பின்னர் அவர் மொழிந்தவை அதிகக் கவனம் பெறுவதில்லை.

- உயிர்த்தெழுந்தபின் கிறிஸ்து மொழிந்த 7 வாசகங்கள் கிறிஸ்தவ வாழ்வை வெற்றிநிறை வாழ்வாய் விளக்குகின்றன —

  எ.கா.) ☐ திருச்சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் அவர் தம்மை அறிமுகப்படுத்திய விதம் — வெளி 1:17,18 . . .
  ''மரித்தேன் ... உயிரோடிருக்கிறேன்''
  ☐ கடிதங்களின் முடிவில் அவர் சொன்னது — 3:21 —
  ''ஜெயங்கொண்டேன்''

  இதைத்தான் வெற்றிப் பவனி என்கிறோம் (2 கொரி 2:14-16)

வெற்றி வாழ்வு என்பது எது?

1. அது தெய்வீக உறவின் வாழ்வு.

யோ 20:17 ... *என் பிதா ... உங்கள் பிதா ...*
என் தேவன் ... உங்கள் தேவன் ...

தேவனது தந்தைத்துவத்தை நமக்குப் போதிக்க இயேசு வந்தார் —
எ.கா.) மலைப் பிரசங்கம் —

*''பரலோகிலிருக்கும் **உங்கள்** பிதா''*

மத் 5:16	6:6	6:18
:45	:8	:26
:48	:9	:32
6:1	:14	7:11

- கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் இதுவே (யோ 1:12) —
  பிசாசு ஒரு பிதா vs. தேவன் பிதாவானவர் (யோ 8:42,44)
- இதுதான் பழைய, புதிய உடன்படிக்கைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு.
  பழைய உடன்படிக்கையில் தேவனைப் ''பிதாவே'' என்று யாரும் அழைக்கவில்லை — எனவேதான், *''ஜெபம்பண்ண எங்களுக்குக் கற்றுத்தாரும்''* (லூக் 11:1,2)

  சொல்லுங்கள்: ''தேவனே என் அப்பா!'' ''என் அப்பாவே தேவன்!''

என்னே சிலாக்கியம்!
பிறரோடு அடையாளப்படுத்த மக்களது தயக்கம்;
இயேசுவோ (எபி 2:11,12)
''திரும்பவும் பயப்படாது ... அப்பா, பிதாவே ...'' (ரோ 8:15,16)

2. அது விளங்க முடியாத சமாதான வாழ்வு.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து சொன்னது: *''சமாதானம்!''*
லூக் 24:36 ... எம்மாவூர் சீடர் + 11
யோ 20:19 ... மகதலேனா மரியாள் + 11
:26 ... தோமா + 10

- *''எனது'' சமாதானம்*
  யோ 14:27 ... *என் சமாதானத்தை விட்டுச் செல்கிறேன்*
  16:33 ... *என்னில் உங்களுக்குச் சமாதானம் ... திடன்கொள்ளுங்கள்*

- (பிறப்பில்) *''சமாதானப் **பிரபு**''* (ஏசா 9:6)
- (உயிர்த்தெழுதல், பரமேறுதலில்) *''சமாதான **ராஜா**''* (சாலேம்)
  மெல்கிசேதேக்கின் முறைமைப்படி (எபி 7:2)
  ''அழியாத ஜீவனுக்குரிய வல்லமை'' (வச 15-17)

= ஆழ்ந்த அமைதி, நிம்மதி —
கவலை ... ஜெபம் ... எல்லாப் புத்திக்கும் மேலான
தேவ சமாதானம் ... சமாதானத்தின் தேவன் (பிலி 4:6,7,9)

புயலிலும் அமைதி! (Calm in storm!)
''உலகில் ... உபத்திரவம் ... திடன் ... ஜெயித்தேன்'' (யோ 16:33)

- சமாதானம் இல்லையேல் எது இருந்து எதற்கு?
  — உண்மையான *''பலம்''* (ஏசா 30:15-18)
  (குதிரைகள், வாகனங்கள்)
- புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்களது வாழ்த்துக்கள் —
  ''கிருபையும் சமாதானமும்''
  கிருபையின் வெளிப்பாடே சமாதானம்!

  சமாதானமில்லாத எண்ணற்ற குடும்பங்கள்:
  ''சமாதானம் கூறுங்கள்!'' (லூக் 10:5)

3. அது அசைக்கமுடியாத விசுவாச வாழ்வு.

- தோமாவிடம் இயேசு கூறியது —
  யோ 20:27-29 ... *பார்க்காது ... விசுவாசிப்போர் ...*
  தோமா = திதிமு = இரட்டை
  இரட்டை மனம் நம்மெல்லாருக்கும் சகஜம்.
- உயிர்த்தெழுதல் ... விசுவாசத்திற்கு அடித்தளம் (1 கொரி 15:17)
- எளிய விசுவாசம் மகிமையானது —
  1 பேது 1:8,9 ... *மகிமையால் நிறைந்தது*
- *விசுவாசத்தினால் நீதிமான் **பிழைப்பான்*** (= உயிர் வாழ்வான்)!
  தீர்க்கன் ஆபகூக்கின் பழைய ஏற்பாட்டு முன்னறிவிப்பு (ஆப 2:4)

  இதுதான் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் —
  ரோ 1:17 / கலா 3:11 / எபி 10:38

''நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்''
2 கொரி 5:5
''நடப்பது'' — பயம் (Fear)
''நடக்கப்பண்ணுபவர்'' — விசுவாசம் (Faith)

- *இந்த விசுவாசம் பொன், வெள்ளியிலும் விலையுயர்ந்தது!* (1 பேது 1:7)
  இதைச் சாதாரணமாய் எடுத்துக்கொள்கிறோம்;
  எல்லாருக்கும் இது இல்லையே!
- கிறிஸ்தவர்களுக்குப் பெயரே **''விசுவாசிகள்''** என்பதுதான்.
  அகரம் முதல் னகரம் வரை விசுவாசத்தாலேயே —
  விசுவாச வார்த்தை (ரோ 10:8)
  விசுவாசத்தினால் இரட்சிப்பு (எபே 2:8)
  விசுவாசப் போராட்டம் (1 தீமோ 6:12)
  விசுவாசத்தின் ஆவி (2 கொரி 4:13)

  எனவேதான், *விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர்* (எபி 12:1)

  விசுவாசமே வெல்லும்!
  1 யோ 5:4,5 ... *விசுவாசமே உலகை ஜெயிக்கும்.*
- கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீதுள்ள நமது விசுவாசம் நமது உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையைத் தரும்!

  1999இல் இரத்தசாட்சிகளாய்த் தீக்கிரையாக்கப்பட்ட தனது கணவர் மற்றும் இரு மகன்களின் அடக்க ஆராதனையில் திருமதி கிளாடிஸ் அம்மையார் பாடச் சொன்ன பாடல் —
  "Because He lives . . . I can face tomorrow"
  (அவர் ஜீவிப்பதால் நாளையைத் தைரியமாய் எதிர்கொள்வேன்!)

4. அது வேத வாக்கியங்களோடுள்ள வாழ்வு.

லூக் 24:25-27 ... எம்மாவூர் சாலையில் சீடர்
:44 ... *பஞ்சாகமம், சங்கீதங்கள், தீர்க்கதரிசிகள்*

- தமது நாமத்தைவிடத் தமது வார்த்தையைத் தேவன் மகிமைப்படுத்தியுள்ளார் (சங் 138:2ஆ)
- *''வேத வாக்கியங்களின்படி''* என்ற சொற்றொடர் பாடுகளின் வாரத்தில் அடிக்கடி சொல்லப்பட்டது —

எ.கா.) — *இதோ, உன் இராஜா வருகிறார்* (மத் 21:4,5)
— *என் வீடு ஜெப வீடு* (மத் 21:13)
— *குழந்தைகள், பாலகர் வாயினால் துதி* (மத் 21:16)
— *ஆகாதென்று தள்ளப்பட்ட கல்* (மத் 21:42)
— *அக்கிரமக்காரரோடு சிலுவையில்* (மாற் 15:27,28)
— *அவரது வஸ்திரத்தைப் பங்கிட்டார்கள்* (மத் 27:35)
— *தாகமாயிருக்கிறேன்* (யோ 19:28)
— *எலும்பு ஒன்றும் முறிக்கப்படுவதில்லை* (யோ 19:36)
— சுவிசேஷத்தின் வரையறை (1 கொரி 15:1-4)

- *வேத வாக்கியங்கள் ''எல்லாவற்றிலும்''* (லூக் 24:27).
  வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' பிரயோஜனம் (2 தீமோ 3:16,17).
  அங்குமிங்கும் சில பகுதிகளை மட்டும் எடுக்காதீர்.
- ஆன்மீகப் போராட்டத்தில் ''தாக்குவதற்கு'' ஒரே ஆயுதம் — ஆவியின் பட்டயம்: தேவ வசனம் (எபே 6:17)
  ''எழுதியிருக்கிறதே'' (மத் 4:1-10)
  — வசனங்களை மனனம் செய்யுங்கள்.
  அப்பொழுதுதான் ஆவியானவர் *''நினைவுபடுத்த''* முடியும் (யோ 14:26)

5. அது தைரிய சாட்சியின் வாழ்வு.

- சுவிசேஷப் பேராணை நான்கு சுவிசேஷங்களிலும் —
  மத் 28:18-20 ... *சகல அதிகாரம் ... புறப்பட்டுப் போங்கள்*
  மாற் 16:16-18 ... *போய் ... அடையாளங்கள்*
  லூக் 24:47-49 ... *மனந்திரும்புதல் ... பாவ மன்னிப்பு ...*
  யோ 20:21 ... *பிதா என்னை அனுப்பியதுபோல் உங்களை ...*
  :22,23 ... *ஊதினார் ... பரிசுத்த ஆவி ... மன்னியுங்கள்*
- இயேசுவின் பிரிவு வார்த்தைகள் —
  அப் 1:8 ... *வல்லமை ... சாட்சிகள் ... உலகு*
- பேதுரு, யோவான் போன்ற கோழைகளுக்குத் தைரியம் கொடுத்தது இயேசுவின் உயிர்த்தெழுதலே (அப் 4:33)

- உலகில் மதங்கள் ஏராளம்; சுவிசேஷமோ ஒன்றே!
  பல அவதாரங்கள் உண்டு; இரட்சகரோ ஒருவரே!
  எல்லாமே அவரது உயிர்த்தெழுதலினாலேயே!

  எனவேதான் பவுல் சொன்னது (1 கொரி 15:14) —
  *''கிறிஸ்து எழுந்திராவிடில் எங்கள் பிரசங்கம் வீண் ...
  உங்கள் விசுவாசம் வீண் ... இன்னும் பாவத்தில் ...''*

  உயிர்த்தெழுதலின்றிச் சுவிசேஷம் முழுமை பெறாது —
  1 கொரி 15:1-5
- உயிர்த்தெழுதலையும், நியாயத்தீர்ப்பையும் பற்றிப் பவுல் பேசிய வுடன் தேசாதிபதி பேலிக்ஸ் பீதியடைந்தான் (அப் 24:15,25)

6. அது இணையற்ற அன்பின் வாழ்வு.

தணிந்து போகாத அன்பு.
யோ 21:15-17 ... *என்னை நேசிக்கிறாயா?*

- தேவன் மீதுள்ள அன்புதான் நமது திருப்பணிக்கு ஆதாரம் —
  ''ஆட்டுக்குட்டிகளை ... ஆடுகளை ... மேய்ப்பாயாக''

  வேறெதுவும் அதிகக் காலம் தாக்குப்பிடிக்காது —
  தேவனது கட்டளைகள்/ஆணைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது
  அன்பினால் பிறக்கவேண்டும் —
  ''அவரில் அன்பாயிருந்தால் அவருக்குக் கீழ்ப்படிவோம்''
  (1 யோ 5:2,3)

  இதுதான் **அடிமைக்கும் குமாரனுக்கும் உள்ள வேறுபாடு!**

  வேறெதையும்விட அவரை நேசிக்கக் கற்கவேண்டும் —
  ''இவையெல்லாவற்றையும்விட என்னை நேசிக்கிறாயா?''

இது எங்ஙனம்?

அ) *''அவர் முதலாவது நேசித்ததால் நேசிக்கிறோம்''* (1 யோ 4:19)
அவரது அன்பை அதிகமதிகமாய்த் தியானித்துப், புரிந்து,
பாராட்டும்போது அதற்கேற்றாற்போல் நமது அன்பு வளரும்.

ஆ) அவர் ''யாது'' செய்கிறார் என்பதல்ல, அவர் ''யார்'' என்பதே
நமது அன்புக்கு அடிப்படையாயிருக்கவேண்டும்!
''நன்மையோ தீமையோ''
(ரோ 8:35-39) ... *''மரணமோ ஜீவனோ ...''*
*இவையெல்லாவற்றிலும் முற்றும் **ஜெயம்!***

7. அது சிலுவை சுமத்தலின் வாழ்வு.

யோ 21:18,19 ... *நீ விரும்பாத காரியங்கள் . . .*
மரணம் ... என்னைப் பின்பற்றி வா ...

- சிலுவை சுமந்து இயேசு மரித்தார்;
  நாமோ மரித்துச் சிலுவை சுமக்கிறோம்!

  அனுதினமும் சிலுவை சுமத்தல் —
  ''தன் சிலுவையைத் தினமும் எடுத்து ...'' (லூக் 9:22,23)
  — இன்றையச் சிலுவையற்ற கிறிஸ்தவம்
- மற்றவர்கள், மற்றவைகளால் திசை திரும்பாதீர்கள் —
  ''இவன் காரியம் என்ன? ... உனக்கென்ன?'' (யோ 21:22,23)
  ''நீ'' என்னைப் பின்பற்றிவா ... நான் வருமளவும் ...
- இன்று சிலுவை — நாளை சிம்மாசனம்!
  ''அவருடன் பாடு ... அவருடன் ஆட்சி'' (2 தீமோ 2:8-12 அ)
  எ.கா.) சீடர்கள்— *''எனது பாடுகள்... ஒரு இராஜ்யம்... எனது பந்தி''*
  (லூக் 22:28-30)

■ *முடிவுரை*

வெற்றி வாழ்வு எது? (Triumphant Life)

சிலுவைக்குப் பின்னர் கிறிஸ்து மொழிந்தவற்றிலிருந்து —

1. தெய்வீக உறவின் வாழ்வு	Divine Relationship
2. விளங்கமுடியாத சமாதான வாழ்வு	Incomprehensible Peace
3. அசைக்க முடியாத விசுவாச வாழ்வு	Unshakable Faith
4. வேத வாக்கியங்களோடுள்ள வாழ்வு	Holy Scriptures
5. தைரிய சாட்சியின் வாழ்வு	Bold Witnessing
6. இணையற்ற அன்பின் வாழ்வு	Incomparable Love
7. சிலுவை சுமத்தலின் வாழ்வு	Cross-bearing

(36ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

48

''என்னை நேசிக்கிறாயா?''

"Do you love Me?"

முகவுரை

- கிறிஸ்து மரிக்கும்போது மொழிந்தவைகளைத் தியானிக்குமளவு அவர் உயிர்த்தெழுந்தபின் சொல்லியவைகளையும் தியானிக்க வேண்டும்.

  அவை கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படையானவை.

  (47ஆம் அத்தியாயம் காண்க)

- 40 நாட்களில் பலமுறை சீடருக்குத் தரிசனமானார். 7ஆம் தரிசனத்தைத் தியானிப்போம் — **யோவான் 21:14-22**

''நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?''

- கிறிஸ்தவம் என்பது சட்டதிட்டங்களாலான மார்க்கம் அல்ல; அது ஓர் **உறவு**.
- அது பிரதானமாகத் தத்துவங்களும் செயல்முறைகளும் நிறைந்ததல்ல; அது ஒரு **நபரைக்** குறித்தது.
- ''இயேசுவை நேசிப்பதென்றால் என்ன?'' என்று நமக்குத் தெளிவாகத் தெரிவதில்லை.

  ''நான் இயேசுவை நேசிக்கிறேன்''
  என்று பொருள் புரியாமலே பாடுகிறோம்.

இயேசுவை நேசிப்பதின் 4 நடைமுறை வெளிப்பாடுகளை இவ்வசனப் பகுதி சுட்டிக்காட்டுகிறது —

1. இயேசுவை நேசிப்பதென்றால் அவர் மீது இணையற்ற பக்தி கொள்வதாம்.

பேதுருவிடம் இயேசு: *''**இவர்களிலும் அதிகமாய்** என்னை நேசிக்கிறாயா?''*

— கேட்ட மூன்று கேள்விகளில் இதுவே முதலாவது.

எவரும், எதுவும் தேவனுக்குரிய இடத்தை நமது வாழ்வில் எடுக்கக்கூடாது.

''முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும் அன்பு'' (மத் 22:37)

இயேசு எல்லாவற்றிற்கும் ஆண்டவர்;

இல்லையேல் ஆண்டவரே அல்ல!

நாம் அவரை நேசித்தால், அவருடன் **நேரம்** செலவழிப்போம்:

— பன்னிருவரைத் தெரிந்தெடுத்ததே *''அவரோடு இருக்கவே''* (மாற் 3:14)

— பிதாவை விட்டு நொடிப்பொழுதும் பிரிவதை அவரால் சகிக்க முடியவில்லை: *''என் தேவனே, என் தேவனே''* (மத் 27:46)

— ஜெபத்திற்காக நேரம்

— வேதத் தியானத்திற்காக நேரம்

2. இயேசுவை நேசிப்பதென்றால் மனிதர்மீது பரிவுணர்வு கொள்வதாம்.

''என் ஆடுகளை ... ஆட்டுக்குட்டிகளை ... மேய்ப்பாயாக''

- மக்களுக்கு உதவ எதையும் செய்ய ஆயத்தம்:
  *''நல்ல மேய்ப்பன் தன் **உயிரைக்** கொடுக்கிறான்''* (யோ 10:11)
- தொலைந்து போனோரை மீட்பதில் தீவிரம் —
  ''வேறே ஆடுகள் எனக்குண்டு'' (யோ 10:16)
  ''தொலைந்துபோன ஓர் ஆடு'' (லூக் 15:4)

தேவனது மிஷனரிப்பணித்திட்டத்தில் தீவிர ஈடுபாடு —
''போவது **அத்துடன்** அனுப்புவது''

அவரது மீட்பின் பணியில் ஒத்துழைப்பு —
''முடிந்தது'' = கிரயம் செலுத்தப்பட்டாயிற்று.
''முடியவில்லை'' = அனைவருக்கும் இன்னும் சொல்லப்படவில்லை.

3. இயேசுவை நேசிப்பதென்றால் அவருக்காகப் பாடனுபவிக்க ஆயத்தமாயிருப்பதாம்.

யோ 21:18,19 ... *இன்னவிதமான மரணத்தினால் ...*

வாட்ச்மேன் நீ:

''கிறிஸ்தவர் எல்லாரும் இரத்தசாட்சிகளாய் மரிக்க அழைக்கப்படாதிருக்கலாம்; ஆனால் பாடுபட ஆயத்தமுள்ள மனது எல்லாருக்கும் இருக்கவேண்டும்!''

பாடுகளிலிருந்து தப்பாதீர்கள்; அதில் தரித்திருங்கள்.

- *''**எவனாவது** என்னைப் பின்பற்றி வர விரும்பினால், தன்னைத்தான் வெறுத்து ... சிலுவை எடுத்து''* (லூக் 9:23)
- தவறான உபதேசம்: இயேசு பாடுபட்டார்;
  நாம் பாடுபட வேண்டியதில்லை.
  ஆனால், *பச்சை மரம்* vs. *பட்ட மரம்* (லூக் 23:31)
- பேதுருவிடம் இயேசு: *''என்னைப் பின்பற்றி வா''* (யோ 21:19)
  அதாவது, சிலுவைப் பாதையில் நடந்து வா.

ஒரு காலத்தில்
சிலுவை பற்றிய பிரசங்கம் அவிசுவாசிகளுக்குப் பைத்தியம்.
இப்பொழுதோ,
சிலுவை பற்றிய உபதேசம் விசுவாசிகளுக்கே பிடிக்கவில்லை.
நமது மனப்பான்மை எப்படியிருக்கவேண்டும்?

— அவருக்காய்ப் பாடுபட ஆயத்தமாயிருக்குமளவு அவரை நேசிக்கிறோம்.

— நமது பாடுகளுக்குத் தகுதியான இரட்சகரையே சேவிக்கிறோம்.
''நமது துதிகளுக்குப் பாத்திரர்'' எனப் பாடுகிறோம்;
''நமது துன்பங்களுக்குப் பாத்திரர்'' எனப் பாடமுடியுமா?

4. இயேசுவை நேசிப்பதென்றால் நமது உடனாளிகள் மீது கரிசனை கொள்வதாம்.

(யோ 21: 20-22) ... *இவன் காரியம் என்ன?*
பேதுருவின் கேள்வி அடுத்தவன் காரியங்களை அறியத் துடிப்பது;
அவன் மீது கரிசனையல்ல;
எனவேதான் இயேசு பேதுருவைக் கடிந்துகொண்டார்!

- தன்னலவாதிகளாய் இராதீர்;
  பிறரது தேவைகளில் கரிசனை கொள்ளுங்கள் (பிலி 2:4).
- ஒருபோதும் சந்திக்காத இணைகோடுகளாய் இராதீர்!
- எல்லாருக்கும் கண்ணீர் உண்டு —
  ''ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்திடுங்கள்'' (கலா 6:2)

எனக்கே எவ்வளவோ பிரச்னை என்று சொல்லாதீர்;
யோபு: *''தன் சிநேகிதருக்காய் வேண்டியபோது ...''* (யோபு 42:10)

49

இயேசுவைப்போல நேசிப்பது எப்படி?

How to Love like Jesus

முகவுரை

- இரண்டாவது சம முக்கியத்துவமான கட்டளை —
  மத் 22:35-40 ... *உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல ,,,*
- ஒன்றில்லாது அடுத்தது சாத்தியமில்லை —
  1 யோ 4:20,21 ... *கண்ட சகோதரன் ... காணாத தேவன் ...*
- அன்பை வெளிக்காட்டுவது எங்ஙனம்? —
  கலாத்தியர் 5:22,23இல் நடைமுறைப் பதிலுண்டு.

  இந்தப் பட்டியலிலுள்ள 9 குணநலன்களும் சகவுறவுகளுக்கு அடுத்தவை —
  எட்டு ஆரங்களுள்ள ஒரு சக்கரம் போன்றது.
  அன்புதான் அச்சாணி.
  தூயாவியானவர்தான் எண்ணெய்ப் பசை (lubricant).

இப்பண்புகளை எவ்விதம் வெளிப்படுத்தவேண்டுமென்று
இயேசுவின் வாழ்விலிருந்து எடுத்துக்காட்டுகள் —
''நான் உங்களில் அன்புகூர்ந்ததுபோல'' (யோ 15:12,17)

1. பிறரோடிருக்கும்போது ''மகிழ்வுடன்'' இருங்கள்.

- இயேசு — *பாவிகளின் சிநேகிதன்* (லூக் 7:34)
- புன்சிரிப்பும், நகைப்பும் இறுக்கங்களைத் தளர்த்திவிடும்.
- *நட்பு பாராட்ட வேண்டும்* (நீதி 18:24)
- ஆசாபாசமாய்ப் பழகுங்கள். (இனவாரி, மொழிவாரி வேண்டாம்.)
- போலிப் பெருமை. (ஒதுங்கியிருத்தல் வேண்டாம்.)
- முன்னர் விரலைப் பொசுக்கியிருந்தாலென்ன?
  எ.கா.) லூக் 7:31-33
- நகைச்சுவை: ''வாழைப்பழத் தோலில் நீங்கள் வழுக்கி விழுந்தால் உங்களால் சிரிக்க முடிய வேண்டும்!''
- ஐக்கியம் என்று பேசுகிறோம் —
  ஐக்கியமும் (fellowship) இல்லை, நட்பும் (friendship) இல்லை!

*2. ''**சமாதானமாய்**'' இருங்கள்; சமாதானம்பண்ணுங்கள்.*

- சமாதானம் நாடுங்கள்.
- இயேசுவின் காரியத்தினால் பிலாத்துவும் ஏரோதுவும் நண்பராயினர் — லூக் 23:12
- நீங்கள் ஒரு பிரச்னையா, பரிகாரமா?
- இரகசியங்களை வெளிப்படுத்தி சகோதரரைப் பிரிக்காதீர் — நீதி 16:28
- சமாதானத்திற்காய் ஜெபியுங்கள்.
- ஒப்புரவாகுதல், காரியங்களைச் சரிசெய்தல் —
  தவறிழைத்தவர் யாராயிருந்தாலும் முதலடி எடுத்து வைக்கவேண்டியது நீங்கள்தான்: மத் 5:23,24 & 18:15

*3. மக்களிடம் ''**பொறுமையாய்**'' இருங்கள்.*

- இயேசு — விபசாரி (யோ 8:1-11)
- *எத்தனை முறை நான் மன்னிக்கவேண்டும்?* (லூக் 17:4-6)
  கடுகு விதை vs. *காட்டத்தி மரம்*
  அதாவது, இழைக்கப்பட்ட தீங்கு மிகப்பெரியதாயிருக்கலாம்; ஆனால் எளிய முயற்சியையும் தேவன் கனம்பண்ணுவார்.
- *''இயேசுவின் பொறுமை''* — வெளி 1:9
- நம்மோடுள்ள தேவனது பொறுமையை உணர்வீர் (மத் 18:23-25)
- கணவனிடம் மனைவி: ''என்னிடம் பொறுமையாயிருங்கள்; தேவன் என்னை இன்னும் வனைந்து முடிக்கவில்லை!''
- இயேசு எவ்விதம் தமது சீடரிடம் பொறுமையாயிருக்க முடிந்தது? அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் மாறுவர் என்பதையே கவனித்தார்.

*4. ஒருவருக்கொருவர் ''**தயவு**'' காட்டுங்கள்.*

- 4000 ... *''வழியில் சோர்ந்துபோவார்களே!''* (மாற் 8:1-5)
- அன்னை தெரசா: *''ஒவ்வொருவருக்காய் உதவுங்கள்!''*
- தேவையிலிருப்போருக்குக் காட்டிய தயவு —
  ''அவர்களுக்குச் செய்தது எனக்கே!'' (மத் 25:32-46)
- *''தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்!''* (கலா 2:10)
- ஏழையின் சிரிப்பு (யோபு 31:16-23)
- *''பிறருக்கானவை''* (பிலி 2:4)

- தயவு எனும் மொழி செவிடனுக்கும் கேட்கும், ஊமைக்கும் புரியும்!

*5. ''**நற்குணம்**'' உள்ளவராய் இருங்கள்.*

- அப் 10:38 ... *''பரிசுத்த ஆவி'' ... நன்மை செய்கிறவராய்*
- லூக் 9:52-56 ... *''எலியா ... அக்கினி ... என்ன ஆவி?''*
- பர்னபா *''நல்லவன்''* — அதாவது, ஊக்குவிக்கிறவன்:
  ''ஆறுதலின் மகன்'' (அப் 11:22-25/4:36)

*6. எல்லாவற்றிலும் ''**நம்பகமாய்**'' இருங்கள்.*

- எபி 3:1,2 ... *''இயேசு ... பிதாவுக்கு உண்மையுள்ளவர்''*
- எவற்றில் உண்மை? சொற்கள் — உண்மை/இரகசியங்கள்
  பணக்காரியம் — கடன்/ஊழல்
  வேலை — உத்தமம்/கடின உழைப்பு/ ...
  ''நல்லது, உண்மையுள்ள ஊழியக்காரனே!'' (மத் 25:21,23)
  முழுநேரத் திருப்பணியாளர் மட்டுமல்ல —
  அ) வயலில் இருவர்
  ஆ) திருகலில் இருவர் (லூக் 17:35)

*7. எல்லா மனிதரிடமும் ''**சாந்தமாய்**'' இருங்கள்.*

- *''ஆட்டுக்குட்டி''* என இயேசு அறிமுகம் செய்யப்பட்டார் — யோ 1:29,36

  மக்களின் பாவத்தை (பாரத்தை) அவர் சுமந்துவிடுகிறார் — அவர்கள்மீது பாரத்தைச் சுமத்துவதில்லை!
- *''ஆட்டுக்குட்டி''* மீது *''புறா''*
  மத் 3:16

  இயேசு மீது பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அவர் மக்களை உடைக்கமாட்டார், உருவாக்குவார் —
  ஏசா 42:1,3
- மக்களது பாரங்களை தம்மீது இறக்கிவிட அழைத்தார் —
  மத் 11:28-30

  ஏனெனில், அவர் *''சாந்தமும் மனத்தாழ்மையும்''* உள்ளவர்.
- மக்களோடுள்ள ஈடுபாடுகளில் நாம் சாந்தமாயிருக்கவேண்டும் —
  எ.கா.) கலா 6:1-5 ... *பாரம் ... பாரம்*

- பணியாளராய் மக்களுக்குத் தொண்டாற்றுங்கள் — பிலி 2:6,7

*8. பிறரது நன்மைக்காய் **''தன்னடக்கமுள்ளவராய்''** இருங்கள்.*

- பேதுரு ... *பட்டயம்* ... மத் 26:51-54 (லூக் 22:36,38)
- பழிவாங்குதல் சரிதான்; ஆனால் மானிடராகிய நமக்கு அதைக் கையாளும் திறனில்லை. எனவேதான், *''பழிவாங்குதல் எனக்குரியது''* என்றார் தேவன் (ரோ 12:19). பழிவாங்குதலை நாம் கையிலெடுத்தால் பாழாய்ப் போவோம்.
- கோபத்தில் பேசாதிருங்கள் ... அடக்குங்கள் ... அமருங்கள்
- தன்னலமின்றி வாழுங்கள்.

■ **நமது சாக்குப்போக்குகள்**

☐ அது எனது சுபாவம்; நான் மாற்றிக்கொள்ள முடியாது.
— யாத்திராகமம் 2:11,12இல் மோசேயைப் பாருங்கள்.
எகிப்தியனை வெட்டி வீழ்த்தினான்;
ஆனால் எண்ணாகமம் 12:1-3இல்,
புறங்கூறப்பட்டபோது அமைதி காத்தான்.

☐ அவனோடு (அவளோடு) இருக்கவேமுடியாது.
— ஆவியானவரின் வல்லமையோடு இறையரசின் வாழ்க்கை
ஏசா 11:2,6-9 ... *ஓநாய் ... ஆட்டுக்குட்டி*
— கடினமான நபர்களோடு தேவன் நம்மை வைப்பதேன்?
நீதி 27:17 ... *இரும்பு இரும்பைக் கூர்மையாக்கும்.*

☐ முயற்சிக்கிறேன்; ஆனால் தவறுகிறேன்.
— இது உடனடி அற்புதமல்ல;
நெடுகவே கற்றுக்கொள்ளவேண்டியது (மத் 11:29)

■ ***முடிவுரை***

- இவ்வித நபருக்கு *''விரோதமானது ஒன்றுமில்லை!''*
  கலா 5:23
  பூரணத்தின் அடையாளம்!

50

பணமும் மனமும்

Money & Mind

முகவுரை

- பிரசங்க வசனம் —
  கொலோ 3:2 ... *மேலானவைகளைத் தேடுங்கள், நாடுங்கள்*
  (மேலானவைமீது உங்கள் **மனதை** வையுங்கள்)
  இது ஓர் ஆலோசனை மட்டுமல்ல, முக்கிய எச்சரிப்பு —

  ஏனெனில், *பொருளாசை = விக்கிரகாராதனை* (வச 5)
  பொருளாசைக்காரன் = விக்கிரகாராதனைக்காரன் (எபே 5:5)
- பணத்தைக் குறித்த மனப்பான்மையை மாற்றாத மனந்திரும்புதல் கேள்விக்குரியது —

  எ.கா.) மூன்று குழுவினருக்கும் யோவான் தந்த பதில் —
  லூக் 3:10-14
- *பண ஆசையே ''எல்லாத்'' தீங்குக்கும் வேர்* — 1 தீமோ 6:10
- மலைப் பிரசங்கத்தில் இயேசு எத்தனையோ நற்பண்புகள் குறித்துப் பேசினார்; ஆனால் மிக நீண்ட பகுதி பணத்தைப் பற்றியதுதான் —
  (மத் 6:19-34) ... 16 வசனங்கள்!

  வச 21 ... *உங்கள் பொக்கிஷம் எங்கேயோ ...*

  வச 22,23 ... *கெட்ட கண்* என்றால் எது?
  சூழமைவு : முந்திய வசனம் (21) ... *''செல்வம்''*
  அடுத்த வசனம் (24) ... *''இரு எஜமான்கள்''*

  அதாவது, உலகப் பொருட்கள் மீது இச்சை —
  TV விளம்பரங்களின் தாக்கம்
- காசா, கடவுளா? God or Gad?
  Gad = Fortune! (ஆதி 30:11)
- செல்வந்தராயிருப்பது தவறல்ல.
  கேள்வி யாதெனில், உங்கள் **மனது** அதில்தான் இருக்கிறதா?

சங் 62:10 ... *''செல்வம் பெருகினால்,*
உன் இதயத்தை அதின்மீது வைக்காதே!''
நீதி 11:28 ... *''தன் செல்வத்தை நம்புகிறவன் விழுவான்''*

எ.கா.) யோபுவின் சாட்சி (யோபு 31:24-28) —
''விபச்சாரம்'' போன்ற பாவங்களைப் போலவே
''நீதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டிய அக்கிரமம்''

கொடுமை: *''நான் தேவனை மறுதலித்திருப்பேன்!''*
''மேலிருப்பவர்'' vs. ''கீழிருப்பது''

- பணக்காரியத்தில் ஏமாற்றியதற்கே திருச்சபையில் முதல் நியாயத்தீர்ப்பு — அனனியா, சப்பீராள் (அப் 5:1-11)

அது *பரிசுத்த ஆவியானவருக்கு* விரோதமான செயல் —
ஆவியானவரால் நிரப்பப்பட்டோரது தன்னார்வச் செயல்
(அப் 2:44)

- திருச்சபைக்குப் பணப் பைத்தியம் பிடித்திருப்பதாலேயே உலகத்துக்கு அதே பைத்தியம் பிடித்திருக்கிறது.
  + ''சபை போகிற போக்கில்தானே சமுதாயமும் போகும்!''
  + ''திருச்சபையைத் தேவன் உலகில் வைத்தார்;
    உலகைப் பிசாசு திருச்சபைக்குள் புகுத்திவிட்டான்!''

பொருளாசைப் பிரசங்கிமார் ஆன்மீகப் பிரசங்கிமாரைவிட அதிகம்:
பிலி 3:17-19 ... *அநேகர் ... இவ்வுலகிற்கடுத்தவற்றையே* ***சிந்திக்கிறார்கள்***
2 கொரி 2:17 ... அநேகர் பணத்திற்காய்த் திருவசனத்தைக்
''கலப்படம்'' பண்ணுகிறார்கள்.
கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் குறித்துக் கவனம்!

பணக்காரியங்களில் தேவனைப் பிரியப்படுத்துவது எங்ஙனம்?

1. போதுமென்ற மனதுடனிருக்கப் பழகுங்கள்.

1 தீமோ 6:6-8 ... *பண ஆசை ... வேர் ...*
எவ்வளவுதான் போதும்?
கடல்நீர் போன்றது பணம்! குடிக்கக் குடிக்கத் தாகம்தான்!
செல்வந்தர் நன்கு சாப்பிடுவர்; எளியவர் நன்கு உறங்குவர்!

2. உங்களது செல்வத்தால் தேவனைக் கனப்படுத்துங்கள்.

தேவனைக் கனப்படுத்துவதென்றால் எப்படி?
+ செலவழிக்கத் துவங்குமுன் ஸ்தோத்திர ஜெபம்.
+ அவரது பணிக்காய் ஒரு பகுதி.
தசமபாகம் — துவங்குவதற்கு ஏற்ற இடம்.
அது பாலர் பள்ளிதான்.

விகிதத்தைக் கூட்டிக்கொண்டேயிருங்கள்.

+ எதிர்காலத்திற்காய்த் தேவனை நம்புங்கள்;
இல்லையேல் பணம் உங்களுக்கு எஜமானாகிவிடும்.
(மத் 6:24,25)

3. முன்னுரிமைக்குரியவற்றை (priorities) வரிசைப்படுத்துங்கள்.

செல்வந்தனாவதற்காய் அளவுக்கு மீறி உழைக்காதீர்.
(நீதி 23:4,5)

சரியான வரிசை:
முதலாவது தேவன்.
அடுத்து குடும்பம்.
மூன்றாவதுதான் வேலை/தொழில்.

எ.கா.) குடும்ப நேரத்தை டியூஷன் எடுக்கச் செலவழிப்பது.
பணம் திரட்ட குடும்பத்தை விட்டு வெளிநாடு செல்வது.
வியாபாரிகள் — அளவுக்குமீறி வேலை நேரம்.

4. இல்லாது வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

விருப்பங்கள் வேறு, **தேவைகள்** வேறு.

தவறாய்ப் பயன்படுத்தப்படும் இரு வசனப் பகுதிகள் —

அ) பிலி 4:13 ... *எல்லாம் செய்ய எனக்குப் பலமுண்டு*
:12 ... அதாவது, வருமானத்திற்குள் வாழ்வது.
எ.கா.) எனது பெற்றோரிடம் நான் கற்றது.

ஆ) பிலி 4:19 ... *''உங்கள் குறைவை (தேவையை) எல்லாம் ...''*

5. தேவையிலிருப்போருக்கு மகிழ்வோடு கொடுங்கள்.

+ ஜான் வெஸ்லி: முடிந்த வகையிலெல்லாம் சம்பாதியுங்கள்.
  முடிந்த வகையிலெல்லாம் சேமியுங்கள்.
  முடிந்த வகையிலெல்லாம் கொடுங்கள்.
  (Earn all you can. Save all you can. Give all you can.)
+ புதிய ஆடையொன்று கிடைத்தவுடன்
  பழையதொன்றைக் கொடுத்துவிடுங்கள்.
+ இரு அதிகாரிகளுடன் இயேசு —
  அ) வரிக்காரனாகிய சகேயு
  ''பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்'' (லூக் 19:8)
  ஆ) இளம் தலைவன்: *''விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு என்னைப் பின்பற்றி வா''* (லூக் 18:22)

■ *முடிவுரை*

- *''ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்''* (நீதி 19:17)
- அந்தச் செல்வந்தன் நரகம் சென்றதேன்?
  ஏழை லாசருவைப் பராமரியாது விட்டான் (லூக் 16:19-31).
- முதல் தசமபாகம் சபைக்கும் ஊழியங்களுக்குமென்றால்,
  எளியவருக்கென்று இன்னொரு தசமபாகம் எடுத்து
  வைத்தாலென்ன?
  அப்படிச் செய்தால், எத்தனை பேர் பட்டினியாகிவிடுவோம்?

51

கீழ்ப்படிதலை எளிதாக்குவது எங்ஙனம்?

How to make Obedience easy

முகவுரை

சுவிசேஷத்திற்குக் *கீழ்ப்படிதலிலேயே* கிறிஸ்தவ வாழ்வு
துவங்குகிறது (1 பேது 4:17)
எனவேதான் அவிசுவாசிகள் *''கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்''*
எனப்படுகின்றனர் (எபே 2:2)
பிசாசின் பொய்கள்: தேவன் கடினமான எஜமான்.
அவரது எதிர்பார்ப்புகள் நிறைவேற்ற முடியாதவை.
அவரது கட்டளைகள் கீழ்ப்படிய முடியாதவை.

பிசாசின் பொய் vs. தேவனது மெய்
''கடினம்'' *''களிப்பு''*

- இயேசு: *''என் நுகம் மெதுவானது, சுமை இலகு''* (மத் 11:28-30)
  யோவான்: *''கட்டளைகள் பாரமானவையல்ல''* (1 யோ 5:3ஆ)
- ***''என் நுகம்''* ... *''என் சுமை''*** vs. *''பிரமாணம்''* (யோ 1:17)
  தேவன் புதிய உடன்படிக்கையில் தமது தரத்தைத்
  தளர்த்திவிட்டாரென்பது இங்கு பொருளல்ல —
  சொல்லப்போனால், கிறிஸ்து அதை உயர்த்தியிருக்கிறார் —
  எ.கா.) விபசாரம் vs. இச்சையான பார்வை (மத் 5:27,28)
  கொலை vs. திட்டும் வார்த்தைகள் (மத் 5:21,22)
  ஆனால் நாம் **கீழ்ப்படிய** கிறிஸ்துவில் **கிருபை** தருகிறார்.
  வேறு வார்த்தைகளில் சொன்னால்,
  கீழ்ப்படிதல் இப்பொழுது இலகுவாக்கப்பட்டுள்ளது!

  ''கீழ்ப்படிதலை இலகுவாக்குவது எங்ஙனம்?'' —
  எபிரெயர் நிருபத்திலிருந்து இதனைப் படிப்போம்.
  ஏன் எபிரெயர் நிருபம்? அந்நிருபத்தைப் பெற்றவர்கள் ஒரு
  காலத்தில் நியாயப்பிரமாணத்தின் பாரம் சுமந்தவர்கள்.
  இப்பொழுது கிறிஸ்து மூலம் இரட்சிப்படைந்துள்ளனர்.
  கீழ்ப்படிதல் எப்படி சுலபமாக்கப்பட்டிருக்கிறதென்று
  இந்நிருபம் அவர்களுக்குப் போதிக்கிறது.

எ.கா.) கீழ்ப்படிய அழைப்பு — எபி 1:1; 2:1; முதலியன.

கீழ்ப்படிதலை எளிதாக்கும் 7 ஏதுக்களை **எபிரெயர் நிருபம்** நமக்குப் போதிக்கிறது —

1. விசுவாசம் (Faith)

- எவரையும் நம்பிவிட்டால், அவர் சொல்வதைச் செய்வது நமக்கு எளிதாகிவிடுகிறது.

  எ.கா.) ஆபிரகாம் — எபி 11:8
  தேவனை *''நண்பனைப்''* போல் நம்பினான் (யாக் 2:23)

  தேவனது **சிநேகத்துவத்தைக்** காட்ட இயேசு வந்தார் —
  பாவிகளின் சிநேகிதன் — அவர்களோடு உணவருந்தினார்.
  பரிசுத்தரின் சிநேகிதன் — சீடரிடம்: *எனக்குச் ''சிநேகிதர்''*
  ''பாவ சஞ்சலத்தை நீக்கப் பிராண சிநேகிதருண்டே!''
  "What a friend we have in Jesus!"

- இறைவார்த்தை மூலமே தேவக் கட்டளைகள் நமக்கு வருகின்றன. அவைகளை நம்பினால்தான் அவைகளுக்குக் கீழ்ப்படிய முடியும்.

  எ.கா.) எபி 3:18,19 ... அவிசுவாசத்தினால் கீழ்ப்படியாமை.
  ''அவர்கள் கேட்டது ...'' (4:2)

  — மரியாள்: *''உமது வார்த்தையின்படியே எனக்கு ...''* (லூக் 1:38)
  — பேதுரு: *''உமது வார்த்தையின்படியே ...''* (லூக் 5:5)

- இந்த விசுவாசம் திருவசனத்தைக் *''கேட்பதால்''* வருகிறது. வெறுமனே வாசிப்பதால் அல்ல ...

  அதாவது, வாசிக்கும்போது தேவன் உங்களோடு **பேசுகிறார்** என்று நம்புங்கள் (எபி 4:2)
  ரோ 10:16,17 ... *கேள் → விசுவாசி → கீழ்ப்படி*

- நம்பிக்கையின்மையே கீழ்ப்படியாமைக்குக் காரணம்.
  பாடல்: *''நம்பிக் கீழ்ப்படிவோம்!''* *"Trust and obey!"*

  அவிசுவாசத்தால் இதயம் கடினப்படும்போது கீழ்ப்படிதல் கடினமாகிவிடுகிறது (எபி 3:12)

2. பயம் (Fear)

- தேவனுக்குப் பயந்து, கீழ்ப்படிந்து நோவா பேழை கட்டினான்.
  எபி 11:7 ... அவன் கீழ்ப்படியாதிருந்திருந்தால் மற்றவர்களோடு அழிந்திருப்பான்.

- பயம் என்பதற்கு இரு பக்கங்கள் —

  அ) எதிர்மறையானது ... தண்டனைக்குப் பயம் (consequence)
  ஆ) நேர்மறையானது ... நபர் மீது பக்தி (reverence)

அ) எதிர்மறையான பயம் (Negative Fear) —

பயம் என்னும் பள்ளியில்தான் கீழ்ப்படிதலின் அரிச்சுவடுகளைப் படிக்கிறோம் —

எ.கா.) தேவன் → ஆதாம் → *''நீ சாவாய்!''* (ஆதி 2:16,17)
பெற்றோர் → பிள்ளைகள் → ''அடிப்பேன்''
ஆசிரியர் → மாணவர் → தண்டனை / தோல்வி
''பரீட்சையில் தோல்வியடைவாய்!''

- நீதி 3:7ஆ ... *''தேவனுக்குப் பயந்து தீமையை விட்டு விலகு''*
  பிர 12:13,14 ... *காரியத்தின் கடைத்தொகை ... தேவனுக்குப் பயந்து ...*

- தேவ பயம் இல்லாததாலேயே தனி வாழ்விலும் பொது வாழ்விலும் பாவமும் அக்கிரமமும் —
  எ.கா.) ஆபிரகாம் — அபிமெலேக்கு — சாராள் (ஆதி 20:10,11)

- தேவனிடம் எதையும் மறைக்கமுடியாதென்கிற அறிவு —
  எபி 4:13 ... *வெளியரங்கம் ... கண்கள் ... கணக்கொப்புவிப்பு*

  இந்த அறிவுதான் சோதனைக்குத் தப்பியோட யோசேப்புக்கு உதவியது (ஆதி 39:9)

  ''கீழ்ப்படியாமை தண்டிக்கப்படும்'' (எபி 2:2,3அ)

ஆ) நேர்மறையான பயம் (Positive Fear) —

அதாவது, நமக்குக் கட்டளையிடுவது யார் என்ற அறிவு கீழ்ப்படிதலை எளிதாக்கும் —

- யாத் 20:2 ... 10 கட்டளைகளுக்கு முன்னுரை:
  ''உன் தேவனாகிய கர்த்தர் நானே!''

- லேவி 19:10 ... எளியோர்
  :14 ... செவிடர்
  :16 ... கோள்காரர்
  :18 ... பழிவாங்கல்

  காரணம்:
  *"நான் உங்கள்
  தேவனாகிய கர்த்தர்"*

எ.கா.) *"ஆண்டவரே, அது நீரேயானால் தண்ணீர்மேல் நடந்துவரக் கட்டளையிடும்"* (மத் 14:25-29)

எவ்வளவு ஆபத்தானது! ஆனால் கூப்பிடுவது **யார்?**

3. *விபரங்கள்* (Facts)

- கண்மூடித்தனமாய் ஆண்டவருக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பர்; ஆனால் நாம் "ஏன்" கீழ்ப்படியவேண்டுமென்று புரிந்துகொள்ள அவர் விரும்புகிறார்.

  நமது கீழ்ப்படிதல் உடனடியாய், உள்ளபடி,
  அதே வேளையில் அறிவு சார்ந்து இருக்கவேண்டும்.

- 3:5-8 ... ***"ஆகையால்"*** *இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்*
  அதாவது, பணிவிடைக்காரனாய் மோசே கீழ்ப்படிந்தான் (வச 5)
  குமாரனாய் இயேசு கீழ்ப்படிந்தார் (வச 6)

தேவன் யார் எனப் புரிவதும், அதற்கேற்ற கீழ்ப்படிதலும் —
தேவன் நமது சிருஷ்டிகர் ... சிருஷ்டிகளாய்க் கீழ்ப்படிகிறோம்.
தேவன் நமது தந்தை ... அவரது பிள்ளைகளாய்க் கீழ்ப்படிகிறோம்.
(நான் பிதாவானால் கனம் எங்கே? ... மல் 1:6)
கிறிஸ்து நமது இராஜா... அவரது குடிமக்களாய்க் கீழ்ப்படிகிறோம்.
கிறிஸ்து நமது தளபதி ... அவரது சேவகராய்க் கீழ்ப்படிகிறோம்.
கிறிஸ்து நமது ஆண்டவர் ... அவரது சீடராய்/வேலைக்காரராய்க் கீழ்ப்படிகிறோம் ... *"நான் ஆண்டவரானால் ..."* (லூக் 6:46)
கிறிஸ்துவே தலையானவர் ... நாம் அவரது உடலின் உறுப்புகள்.
கிறிஸ்து நமது போதகர் ... நாம் அவரது மாணவர்.
கிறிஸ்து நமது மேய்ப்பர் ... நாம் அவரது ஆடுகள் (சங் 95:7,8).

- கீழ்ப்படிதலுக்கான "அறிவுக்காகத்" திருப்பாடகன் வேண்டினான் —
  சங் 119:34,73ஆ,125

- பக்தி மட்டுமல்ல, புத்தியும் நிறைந்த கீழ்ப்படிதல் —
  ரோ 12:2 ... *"மனம்" புதிதாகிறதினாலே ...*

  எ.கா.) பேதுருவும் யோவானும் மார்க்கத் தலைவர்களிடம்:
  அப் 4:19 ... *நீங்களே நிதானித்துப் பாருங்கள்*

- குதிரைகளுக்கும் கழுதைகளுக்கும் புத்தி கிடையாது; எனவே அவை கீழ்ப்படியச் சிரமப்படுகின்றன —
  சங் 32:8,9

- நமது உள்ளான மனிதனில் நித்திய சத்தியங்களை ஊன்றுவது திருவசனமே —
  எபி 4:11,12 ... *ஆத்துமா ... ஆவி ...*
  "இருபுறம் கூரான பட்டயம்" = தெளிவான அறிவு
  = அப்பட்டமான உண்மை
  = சமரசமின்மை

4. ஐக்கிய உறவு (Fellowship)

எபி 3:12-15 ... *"இன்று" ... ஒருவருக்கொருவர் புத்தி* (வச 13)
... *"இன்று" அவர் சத்தம் ...* (வச 15)

பிறரது உதவியும் ஒத்துழைப்பும் கீழ்ப்படிதலை எளிதாக்குகின்றன. ஆதாமுக்கு ஒரு கட்டளை கொடுத்ததும், தேவன் அவனுக்கு ஏவாளை உதவியாய்க் கொடுத்தார் (ஆதி 2:15-18)

"தனிமையாய் இருப்பது நல்லதல்ல" —
இல்லையேல் அவன் விபசாரத்தில்
விழுந்துவிடுவான் என்பது பிரதானமல்ல —
அங்கே வேறு பெண்ணே கிடையாதே!

தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்க
ஆதாமுக்கு உதவியாகவே ஏவாள்.

- தேவனுக்குக் கீழ்ப்படிய ஆபிரகாமுக்கு சாராள் உதவினாள் —
  எபி 11:8-11 ... *"சாராளும்"* (வச 11)

  சாராளிடம் சொல்லாமலே ஈசாக்கை ஆபிரகாம் கூட்டிக் கொண்டு போய்விட்டான் என்று சொல்வது தவறு.

- கீழ்ப்படிவதற்குப் பெற்றோரின் உதவி —

  நீதி 1:7,8 ... *தகப்பன் ... தாய் ...*

- ஆலோசனை பெற வாலிபருக்கு ஆவிக்குரிய ஐக்கியம் தேவை —

  பிர 4:9,10,13 ... *ஞானியான இளைஞன்... மூடனான இராஜா*
  எ.கா.) இராஜாவுக்கல்ல, இறைவனுக்கே கீழ்ப்படிய
  அனனியா-அசரியா-மீஷாவேலின் ஐக்கியம் தீர்மானித்தது!
  (தானி 3:28)

5. *முன்னோடிகள்* (Forerunners)

கீழ்ப்படிதலைப் போதித்தும் பார்த்தும் கற்கவேண்டும்!

- கீழ்ப்படிதலுக்கு உன்னத எடுத்துக்காட்டு இயேசுதான் —

  எபி 3:1,2 ... அவரைக் *கவனித்துப்பாருங்கள்.*
  ரோ 5:19 ... *ஒரு மனிதனின் கீழ்ப்படிதலினால் ...*

  அவரது கீழ்ப்படிதல் அவ்வப்போது அல்ல, நெடுகவே இருந்தது —
  பிலி 2:5,8,12 ... *''மரணம்வரை கீழ்ப்படிந்தார்''*
  இந்தச் சிந்தையே ... எப்பொழுதும் கீழ்ப்படிதல் (வச 5,12)

  அவர் தேவனாயிருந்ததாலேயே அது சாத்தியம் என
  எண்ணக்கூடாது — *''மனித சாயலானார்''* அல்லவா? (வச 7)

- மற்ற முன்னோடிகள் —

  பகடிபண்ணினோர் நடுவில் நோவா கீழ்ப்படிந்தான் (எபி 11:7)
  வசதிகளைத் துறந்து ஆபிரகாம் கீழ்ப்படிந்தான் (11:8)
  கவர்ச்சிகளுக்கு மறுப்பு தெரிவித்து யோசேப்பு கீழ்ப்படிந்தான் (11:22)
  செல்வாக்கை விட்டு மோசே கீழ்ப்படிந்தான் (11:24)
  பயமுறுத்தல்களைக் கவனியாது தானியேல் கீழ்ப்படிந்தான் (11:33)
  துன்புறுத்தல்கள் நடுவில் சீடர் கீழ்ப்படிந்தனர் (11:36-38)

  ''மேகம் போன்ற இத்தனை சாட்சிகள்'' (12:1)

- திருச்சபைச் சரித்திரம்

— அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து ஏமி கார்மைக்கல் இந்தியா வந்தார்.
— அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து கேரி இந்தியா வந்தார்.
— அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்கா சென்றார்.

— அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து ஜட்சன் பர்மா சென்றார்.
— அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து ஹட்சன் சீனா சென்றார்.
— கீழ்ப்படிந்து சாது சுந்தர்சிங் இந்தியாவெங்கும் சென்றார்.
— கீழ்ப்படிந்து ஸ்லெசர் நரமாம்சம் உண்ணுவோரிடம் சென்றார்.
— அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து கிரஹாம் ஸ்டெயின்ஸ் ஒரிசா வந்தார்.

- விவிலியத்திலுள்ள வாழ்க்கை சரிதைகள், சுய சரிதைகளைப் படியுங்கள்.
- கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடமிருந்து கற்றவற்றையெல்லாம் களைந்துவிடுங்கள் (கொலோ 3:6-8)

6. *தோல்விகள்* (Failures)

தோல்வியையே சந்திக்காத நபர் எவருமிலர்.
எந்தத் தோல்வியும் முடிவானதல்ல.
கீழ்ப்படிதலைக் கற்க தோல்விகளைப் பயன்படுத்தலாம் —

- தோல்விகளை அனுமதித்துத் தேவன் சிட்சிப்பதேன்? (எபி 12:9)
- இயேசுவின் வாழ்வில் தோல்விகள் அல்ல, *பாடுகள்* (எபி 5:8,9)
- திருப்பாடகனின் சாட்சி —

  சங் 119:67,71 ... *நல்லது ... கற்கிறேன் ...*

— தோல்விகள் நம்மை முழங்காலிடச் செய்கின்றன;
அடுத்தடுத்த தோல்விகள் முகங்குப்புற விழச்செய்யும்.

— தோல்விகள் சிதறிய நமது கவனத்தை ஈர்ப்பவை.
தோல்விகளிலிருந்து கற்காவிடில், தோற்கத்தான் கற்கிறோம்.

எ.கா.) தான் செய்த முதல் காரில் பின்னால் செல்லும்
பல்லிணையைப் (reverse gear) பொருத்த ஃபோர்டு
மறந்தார்; அத்தவற்றைப் பின்னர் யாரும் செய்யவில்லை!

- வாழ்க்கையின் வசதிக் குறைவுகள் பொதுவாக நம்மைத் தாழ்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் வைத்துக்கொள்ளும் — எல்லாம் நன்றாயிருந்தால் அப்படியிருக்காது.

எ.கா.) ஆபிரகாம் லிங்கன்:
— பாடுகள் நிறைந்த குழந்தைப் பருவம்
— பள்ளிப்படிப்பு ஓராண்டுக்கும் குறைவு

— தொழிலில் தோல்வி (1831)
— அரசியலில் தோல்வி (1832)
— தொழிலில் மறுபடி தோல்வி (1833)
— நிச்சயிக்கப்பட்டவள் மரணம் (1835)
— சபாநாயகர் போட்டியில் தோல்வி (1838)
— மணமுடித்து, மனைவியால் பாரம்
— 4 மகன்களில் ஒருவன்தான் 18 வயதைத் தாண்டினான்.
— பலமுறை அரசியலில் தோல்வி
— முடிவில் அமெரிக்க அதிபராய்த் தேர்வு (1860)

7. ***எதிர்காலம்*** (Future)

தமக்குக் கீழ்ப்படிவோருக்குத் தேவன் வாக்குப்பண்ணியவைதான் கீழ்ப்படிதலுக்கு மாபெரும் ஊக்குவிப்பு —

- எபி 4:7-11 ... *நித்திய இளைப்பாறுதல்* — இன்று கீழ்ப்படிதல் ஒரு போராட்டம், ஆனால் ...
- மத் 7:24,25 ... கீழ்ப்படிதலுள்ள வாழ்வும் பணியும் அசைக்கப்படாது.
- உபா 28:14 ... *வாலாகாமல் தலையாவாய்!*

■ ***முடிவுரை***

கீழ்ப்படிதல்தான் ''கீழ் படி'' — முதல் படி!
முதல் படியில் ஏறாமல் அடுத்த படிகளுக்குச் செல்ல முடியாது!

First step → Further steps → Final step

52

அப்போஸ்தலக் கிறிஸ்தவன் யார்?

Marks of an Apostolic Christian

முகவுரை

''அப்போஸ்தலன்'' என்பது ஒரு கிரேக்கச் சொல்;
அதின் பொருள், ''குறிப்பிட்ட பணிக்காய் அனுப்பப்பட்டவன்.''

''திருத்தூதுவர்'' என்ற புதிய மொழியாக்கம் உண்டு.
இதன் லத்தீன் பதத்திலிருந்துதான் ''மிஷனரி'' என்பது வருகிறது.

பலர் தங்களை ''அப்போஸ்தல சபைகள்'' என்றழைக்கின்றனர்.
கிறிஸ்து இயேசுவே அப்போஸ்தலரில் *''அப்போஸ்தலர்''* (எபி 3:1).
அவரைக் கவனித்துப் பார்க்க அழைக்கப்பட்டுள்ளோம்.
ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் *''அப்போஸ்தல முத்திரை''* வேண்டும் (1 கொரி 9:2)

அப்போஸ்தலக் கிறிஸ்தவனின் அடையாளங்கள் இதோ —

1. அப்போஸ்தல அடித்தளம் (Apostolic Foundation)

எபே 2:20 ... *அப்போஸ்தலர் ... அஸ்திபாரம் ...*
இது புதிய ஏற்பாட்டில் காணப்படும் அப்போஸ்தலரது உபதேசங்களையும் பாரம்பரியங்களையும் குறிக்கும்.
நாம் அப்போஸ்தலர் உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும் (அப் 2:42)
நடத்துதலுக்கும் ஆலோசனைக்கும் வேறெங்கும் செல்லத் துணியாதிருப்போம் — 2 தெச 2:15; 3:6

2. அப்போஸ்தல அர்ப்பணம் (Apostolic Consecration)

எ.கா.) அப்போஸ்தலன் பவுல் (1 கொரி 9:1-15)
நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா?
எங்களுக்கு உரிமையில்லையா? ...
''ஆனாலும் இவைகளில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை.''

நியாயமான உரிமைகளையும் இறையரசிற்காய் விடுதல்.
கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கும் இராஜரீகத்திற்கும் முற்றும் அர்ப்பணிப்பு — *''இனி நானல்ல, கிறிஸ்துவே''* (கலா 2:20)

3. *அப்போஸ்தலப் பணி* (Apostolic Mission, Vision, Commission)

ரோ 15:18-20 ... *எனது விருப்பம் ... கிறிஸ்து அறிவிக்கப்படாத இடங்கள் ... அடுத்தவரது அடித்தளத்தில் அல்ல*

கிறிஸ்துவின் பேராணைக்கு முற்றிலும் அடிபணிதல்.
மற்ற யாவும் அடுத்துதான்.
நமது வாழ்வே சுவிசேஷத்திற்காகத்தான் (பிலி 1:27).
அதுவே இயேசுவுக்கு உணவாயிருந்தது (யோ 4:32-35).

சந்திரனில் கால்: ஒருவரும் நடக்காத இடம்.
கன்னி நிலத்தில் கால்: ஒருவரும் சுவிசேஷம் அறிவிக்காத இடம்.
மிஷனரிச் சிந்தை என்பது கிறிஸ்தவனுக்கு விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல; அவனது அழைப்பே அதுதான்.

4. *அப்போஸ்தல அடையாளம்* (Apostolic Identification)

2 கொரி 12:12 ... *அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் ... பொறுமை ... வல்லமை*

அ) *''பொறுமை''* — எல்லாம் உங்களையே சார்ந்திருக்கிறது என்றெண்ணிக் கடினமாய் உழையுங்கள்.

ஆ) *''வல்லமை''* — எல்லாம் தேவனையே சார்ந்திருக்கிறது என்றெண்ணி விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.

வல்லமை இல்லாத பொறுமை எதையும் உருவாக்காது;
பொறுமை இல்லாத வல்லமை எதையும் உடைக்கும்.

5. *அப்போஸ்தல மன்றாட்டு* (Apostolic Intercession)

அப்போஸ்தலர் யாவரும் ஜெப வீரராயிருந்தனர்;
மக்களைத் திரும்பத் திரும்ப ஜெப வாழ்வுக்குக் கூவியழைத்தனர்—

எ.கா.) எபே 6:18 ... *ஜெபம் ... விண்ணப்பம் ... விழிப்பு ...*
1 தெச 5:17 ... *இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.*

அப்போஸ்தலர்கள் ''பாரத்தோடு'' ஜெபித்தார்கள் —

அ) திருச்சபைக்கு வெளியிலிப்போருக்காக
ரோ 9:1,2; 10:1 ... *துக்கம் ... மன வேதனை ...*

ஆ) திருச்சபைக்கு உள்ளிருப்போருக்காக
2 கொரி 11:28,29 ... *ஆழ்ந்த கரிசனை ...*
1 தெச 1:2-4 ... *விசுவாசம் ... அன்பு ... நம்பிக்கை ,,,*

தமது சீடருக்காக மட்டுமல்ல, அவர்கள் மூலம் விசுவாசிக்கப் போகிறவர்களுக்காகவும் ஜெபித்த இயேசுவின் மாதிரி இது — யோ 17:20

6. *அப்போஸ்தலர் அனுபவிக்கும் இழிவு* (Apostolic Humiliation)

1 கொரி 4:9-13 ... *அப்போஸ்தலர் ... கடைசி ... பலவீனர் ... கனவீனர் ... பசி ... வையப்படுகிறோம் ... உலகின் குப்பை*

உன்னத அழைப்புக்கு உயரிய தியாகம் தேவை.

இது மறக்கப்படும்போது, ''அப்போஸ்தலன்'' என்பது பணி என்றிராது பட்டம் என்றாகிவிடுகிறது.

இங்கு சிலுவை ஆழமாய்ச் செயல்படவேண்டும்.
கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு —
2 கொரி 4:10; 1 பேது 4:13

7. *அப்போஸ்தல கிரீடம்* (Apostolic Coronation)

1 தெச 2:19,20 ... கிறிஸ்துவுக்காய் நாம் ஆதாயம் செய்த ஆத்துமாக்களே நமது *''கிரீடம்!''*

2 தீமோ 4:6-8 ... நீதியின் கிரீடம் அப்போஸ்தலன் பவுலுக்கு மட்டுமல்ல, கிறிஸ்துவின் வருகையை வாஞ்சிக்கும் யாவருக்கும்!

இஸ்ரவேலரை நியாயந்தீர்க்கும் சிம்மாசனங்களைப் பன்னிரு அப்போஸ்தலருக்கு இயேசு வாக்களித்தார் (லூக் 22:28-30)
நாம் தேவதூதரையும் நியாயந்தீர்ப்போம் (1 கொரி 6:3)
இயேசுவோடு அவரது அரியணையில் அமர்வோம் (வெளி 3:21)

■ *முடிவுரை*

☐ அப்போஸ்தலரில் அப்போஸ்தலராகிய இயேசு (எபி 3:1) இந்த ஏழு கட்டங்களின் வழியாகவும் சென்றார் —

1. திருமறையே அவரது வாழ்வின் *அடித்தளம்* — எபி 10:7
2. பிதாவானவருக்கு அவரது *அர்ப்பணம்* முழுமையானது — எபி 10:5,10
3. அவரது *பணியே* அவருக்குத் தலையாய கடன் — லூக் 4:18,19,43 யோ 4:34
4. மனுக்குலத்தோடு தம்மை *அடையாளப்படுத்திக்கொண்டார்* — யோ 1:14 எபி 2:17
5. அன்றும் இன்றும் அவர் *மன்றாட்டு* வீரர் — எபி 5:7 7:24,25
6. அவர் அடிமைபோலத் தம்மைத் *தாழ்த்தினார்* — பிலி 2:5-8
7. இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் அவர் *முடிசூட்டப்பட்டார்* — பிலி 2:9,10 வெளி 19:16

☐ புதிய எருசலேமின் அடித்தளத்தில் பன்னிரு அப்போஸ்தலரது பெயர்களும் எழுதப்பட்டிருக்குமென்றால், அவர்களது உபதேசங் களும் பாரம்பரியங்களும் திருச்சபையின் இன்றைய வாழ்வுக்கும் பணிக்கும் எவ்வளவு அடித்தளமானவை என்று பாருங்கள்! வெளி 21:14

53

முதிர்ச்சியின் அடையாளங்கள்

Marks of Maturity

முகவுரை

- நாம் குழந்தைப் பருவத்திலேயே இருப்பது தேவனுக்குக் கவலை. எந்தத் தகப்பனையும் போல, தமது பிள்ளைகள் வளரவேண்டும் என்பது தேவனது விருப்பம் — எபே 4:11
  வயது மட்டும் முதிர்ச்சியைக் குறிக்காது.
  முந்தியவர் என்பதும் முதிர்ச்சியைக் குறிக்காது.
  குழந்தைத்தனம் கொண்ட முதியோர் பலருண்டே!

  அப்படியானால், முதிர்ச்சியின் அடையாளங்கள் யாவை?
  அல்லது ஆன்மீக வளர்ச்சியை அளப்பது எங்ஙனம்?

  தேவனது அழைப்பு: *''என் ஜனங்களைப் போகவிடு!''*
  மட்டுமல்ல, ''என் ஜனங்களை வளரவிடு!''

1. தன்னல மறுப்பு

- பேதுருவிடம் இயேசு (யோ 21:18,19)
  ''மரணம் ... தேவ மகிமை ... என்னைப் பின்பற்றிவா''
  சுயமறுப்பு என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிக்கல் மட்டுமல்ல; உச்சிக்கல்லும் அதுதான்!
- இது *''தினமும்''* நடந்தேறுவது (லூக் 9:23)
  பவுல்: நான் *''தினமும் சாகிறேன்''* (1 கொரி 15:31)
  எ.கா.) அவர் உரிமைகளை எடுத்துக்கொள்ளவில்லை (1 கொரி 9:4-7,12,15அ)

வாழ்வில் எதை விட்டுவிடவேண்டுமென்பது நபருக்கு நபர் மாறும். ஆண்டவருக்குமுன் காத்திருந்து அவரிடம் கேட்கும்போது அவர் நமக்கு அதை வெளிப்படுத்துவார்.
பொதுவாக,
நாம் வெகுவாய் நேசிப்பதையே பலியிடச் சொல்லுவார்—

எ.கா.) ஆபிரகாம் — ஈசாக்கு (= சிரிப்பு / ஆனந்தம்)
ஆதி 22:2 ... தேவன் எவ்வளவு குறிப்பாய்ச் சொன்னார்!

எ.கா.) செல்வந்தனான இளந்தலைவன்
மத் 19:16-22 — அவனது செல்வம்

- சிறு காரியங்களில் சுயமறுப்பை அப்பியாசிக்கும்போது, அதிகக் கிரயம் செலுத்த வேண்டியவற்றிற்குப் பயிற்சி கிடைக்கும் —

எ.கா.) துவக்கத்தில் ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து
தன் தந்தையை விட்டான்;
இப்பொழுது, முதிர்ச்சியடைந்துள்ளபோது,
தேவனுக்குக் கீழ்ப்படிந்து மகனை ஒப்புக்கொடுத்தான்.

- தன்னல மறுப்பு என்பது இன்றையப் போக்கு அல்ல!
''நான் விரும்பிய வழியில் செல்ல வேண்டும்.''
''எனக்கு எல்லாம் வேண்டும்.'' — இதுவே இன்றையக் குரல்.
ஆன்மீக வட்டாரங்களில்கூட,
ஆபிரகாமின் ''விசுவாசத்தைக்'' குறித்துதான் அதிகம்
பேசப்படுகிறது; ''கீழ்ப்படிதலுக்கு'' நடத்திய அவனது
''தன்னல மறுப்பு'' வலியுறுத்தப்படுவதில்லை.

2. ஒருவரோடொருவர் சமாதானம்

- 1 கொரி 3:1-3 ... *குழந்தைகள் ... வாக்குவாதம் ... பிரிவினை ...*
''சிறு பிள்ளைகள் போல் சண்டையிடாதீர்கள்'' என்போமல்லவா?
முதிர்ச்சியடைந்தோர் சமாதானம் காக்க எதையும் விட்டுவிடுவர்.
எ.கா.) ஆபிரகாம் & லோத்து — ஆதி 13:7-11,14,15
- மத் 5:9 ... சமாதானம்பண்ணுவோர் தேவனது ''புத்திரர்,''
வெறுமனே ''பிள்ளைகள்'' அல்ல!
- மனதிலிருந்து குப்பைக்கூளங்களைத் தூக்கியெறிந்தால்தான் சகவுறவுகளில் சமாதானம் உண்டாகும் —
பிலி 4:8,9 ... *உண்மை ... ஒழுக்கம் ... நீதி ...*
- *''அன்பு ... **பூரணம்** ... சமாதானம்''*
கொலோ 3:12-15

- தவறிழைத்தவர் யாராயினும் நீங்கள் முதல்படி எடுத்துவையுங்கள்.
மத் 5:23,24 ... நீங்கள் தவறிழைத்தவர்
18:15 ... நீங்கள் தவறிழைக்கப்பட்டவர்

உங்களால் இயன்ற அளவு முயற்சியுங்கள் —
ரோ 12:18,19 ... பழிவாங்குதல் வேண்டாம்.

- வளர்ச்சி: *ஆவியின் ஒருமைப்பாட்டிலிருந்து* (எபே 4:3)
விசுவாசத்தின் ஒருமைப்பாட்டிற்குச் செல்லுதல் (வச 11)

3. பிறரது பக்திவிருத்தி

- 1 கொரி 13:11 ... *நான் குழந்தையாயிருந்தபோது ...*
புருஷனானபோதோ ...

எ.கா.) வரங்கள் வெளிப்பாடு (1 கொரி 14:18-20)
நமது பரவசத்திற்கல்ல,
பிறரது பக்திவிருத்திக்கு.

வரங்கள்: நம்மை மகிழ்விக்கும் பொம்மைகள் அல்ல;
பிறரை ஆசீர்வதிக்கப் பயன்படும் கருவிகள்.

எ.கா.) கிறிஸ்து: ரோ 15:1-4
''தம்மையே பிரியப்படுத்தாமல் ...''

— தமது பசிக்காகக் கல்லுகளை அப்பங்களாக்க மறுத்தார்;
ஆனால் மக்களது பசிக்காக அப்பம் மீனைப் பெருக்கினார்.

— தம்மைப் பாதுகாக்கத் தூதர் சேனைக்காய் ஜெபிக்கவில்லை;
ஆனால் பேதுரு மற்றும் சீடரின் பாதுகாப்பிற்காய் ஜெபித்தார்.

- உங்களுக்கு என்ன ''கிடைக்கும்'' என்றல்ல;
நீங்கள் எதைக் ''கொடுக்கலாம்'' என்று சபைக்கு வாருங்கள்.
''நீர் பாய்ச்சுகிறவனுக்கு நீர் பாய்ச்சப்படும்'' (நீதி 11:25)
- ''என்னை ஆசீர்வதியும்'' என்றே ஜெபிப்பது குழந்தைத்தனம்;
''என்னை ஆசீர்வாதமாக்கும்'' என்று ஜெபிப்பதோ முதிர்ச்சி!

- எனக்கு என்ன கிடைக்கும் என்றல்ல;
  நான் எதைக் கொடுக்கலாம் என்றே எண்ணவேண்டும் —
  ''செலவழிக்கவும் செலவழிக்கப்படவும்'' (2 கொரி 12:15)
- பிறரைப் புண்படுத்தாதீர்; பண்படுத்துங்கள் —
  ரோ 14:19,21,22 ... *புலால் ... திராட்சை ரசம் ...*

4. தேர்ச்சிக்குப் பயிற்சி

- 1 தீமோ 4:12-15 ... *நிலைத்திரு ... நீ தேறுகிறது ...*

  நமது உடலுக்கடுத்த காரியங்களுக்கு (உணவு, உடை, உடல் நலம், உடல் தோற்றம்) கவலைப்படுமளவு நமது உள்ளான மனிதனுக்காகவும் கரிசனை கொள்ளவேண்டும்.

  ''தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு'' (வச 7-9)

  அதாவது, உனது வரத்தைப் பயன்படுத்து (வச 14) ...
  அசதியாயிராதே ... பயப்படாதே ... *பயமுள்ள ஆவி* அல்ல
  அனல்மூட்டி எழுப்பிவிடு! (2 தீமோ 1:6-8)

கரிசனையின்மை ஆன்மீக முன்னேற்றத்திற்கு எதிரி.

- பிர 9:10 ... *உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ ...*
  எ.கா.) தீப்பிடித்து எரியும் ஒரு வீடு
- பிர 11:1-6 ... *காலையிலே ... மாலையிலே ...*
  (தளர்வதற்கு வாய்ப்பு)
- எபே 4:14-16 ... *உடல் ... கணு ... உறுப்பு ...*
  (தனி நபர் வளர்ச்சியும் கூட்டு வளர்ச்சியும்)

5. திருச்சத்தியத்தை நிதானித்தல்

- எபி 5:11-6:2 ... *மூல உபதேசங்களை விட்டு* முன்செல்லுங்கள்.
  புரிந்து கொள்வதில் *''புருஷராய்''* (= தேறினவர்களாய்) இருங்கள்—
  1 கொரி 14:20
- திருமறைத் தியானக் கலையைத் திரும்பக் கற்றிடுங்கள்.
  பைபிளிலுள்ள வசனப் பகுதிகளை வாசித்துச்
  ''சிந்திக்கப்'' போதுமான நேரமெடுங்கள்.

சிரமமெடுத்துப் படியுங்கள்:
எ.கா.) தெசலோனிக்கேயர் vs. பெரோயர்
அப் 17:1-4 vs. வச 11

வேத ஆராய்ச்சி நூல்களைப் படியுங்கள்.
வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' ... தேறினவனாய் ...
(2 தீமோ 3:15-17)

குழுக்களாய்க் கூடிப் படியுங்கள்.
பிறரது கருத்துக்களைக் கவனியுங்கள்.
இறைமக்களின் சகவாசத்தில் புரிதல் மேம்படும் —
எபே 3:18,19 ... *சகல பரிசுத்தவான்களோடு ...*

- கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளருவதே வஞ்சகத்திற்குத் தப்பும் வழி:
  2 பேது 3:16-18 ... *வஞ்சகம் ... உறுதி ... எச்சரிக்கை*
  நிதானித்தல் x வஞ்சிக்கப்படுதல் (discernment x deception)

6. பிறரைப் பாராட்டுதல்

- பவுலைப் பேதுரு எவ்வளவாய்ப் பாராட்டுகிறார்! —
  2 பேது 3:15,16 ... *ஞானம் ... புரிய அரிது ...*

  பேதுருவின் துவக்கக் காலம்: எதைப்பற்றியும் பேசத் துடிப்பார்.
  பேசுகிறது என்னவென்று தெரியாமலேகூட பேசுவார் ...
  எ.கா.) மாற் 9:6

  நம்மில் நாமே பெருமிதம் கொள்ளுவதில் நாம் கெட்டிக்காரர்.
  யோவானும் இயேசுவுமோ ஒருவரையொருவர் பாராட்டினர்:
  ''பாதரட்சையின் வார்'' ... ''தீர்க்கர்களிலெல்லாம் பெரியவன்''
  லூக் 3:16 7:28
- ''எனக்கு-எல்லாம்-தெரியும்'' எனும் மனப்பான்மை பிறரைப் பாராட்ட நம்மை விடாது.
  ஆனால் எல்லாமே நாம் *''பெற்றதுதானே!''* (1 கொரி 4:7)
- பகுத்தாயலாம்; குறைகூறல், கண்டனம்பண்ணுதல் கூடாது!
  தாராளமாய்ப் பிறரைப் பாராட்டுங்கள் —
  பாராட்டு பெறுவதால் மக்கள் வளருவர்.
  பாராட்டிய பின்னர்தான் திருத்த வேண்டும்:
  எ.கா.) பேதுருவிடம் இயேசு —

மத் 16:13-18 ... *என் பிதா ... இந்தக் கல்லின் மேல்*
:21-23 ... *அப்பாலே போ ... மனிதருக்குரியவை*

அவ்விதமே, சபைகளுக்குக் கிறிஸ்துவின் கடிதங்கள் (வெளி 2 & 3)

முதலாவது பாராட்டு, அடுத்துதான் திருத்தம்.

- எவரையும் அற்பமாய் எண்ணாதீர் —
இறையரசின் சட்டம்: *''ஒரு சிறுவன் நடத்துவான்''* (ஏசா 11:6)
- தம்பதியர் ஒருவரையொருவர் பாராட்டவேண்டும் —
எபே 5:25-29 ... *அன்பு ... பேணுதல் ... வளர்த்தல்*
- குற்றம் சாட்டுவது பேய்த்தனம் (வெளி 12:10).
பாராட்டுவது தெய்வீகம் — *''நல்லது''* (மத் 25:21,23)

7. தந்தைத்துவத்திற்கு வளர்ச்சி

- 1 யோ 2:12-14 ... *பிள்ளைகளே, வாலிபரே, பிதாக்களே*
மூன்று கட்டங்கள் —
  - ☐ *பிள்ளைகள்:* பாவ மன்னிப்பு,
தேவனைத் தந்தையாகவும்
நம்மை அவரது பிள்ளைகளாகவும் அறிதல்.
  - ☐ *வாலிபர்:* பலம், உள்ளில் திருவசனம், வெற்றி
  - ☐ *பிதாக்கள்:* நித்திய தேவனைப் பற்றிய அறிவு

குழந்தைப் பருவம் (கடந்த காலம்)
வாலிபப் பருவம் (நிகழ்காலம்)
தந்தைப் பருவம் (எதிர்காலம்)

வாலிபர் வளரத் தந்தையராய் நாம் உதவவேண்டும்
— அவர்களது பிழைகளைப் பொறுப்பீர்.
— அவர்களிடம் பொறுப்புகளை நம்பிக் கொடுப்பீர்.
— அவர்களுக்கு நடைமுறைப் பாடங்கள் போதிப்பீர்.
— அவர்களைக் கிறிஸ்தவப் பணியில் பயிற்றுவிப்பீர்.

■ *முடிவுரை*

இந்த அடையாளங்கள் இருந்தால் உற்சாகமடையுங்கள்;
இவை இல்லையென்றால் சவாலாய் எடுத்துக்கொள்ளுங்கள்.

54

பல்பரிமாண வளர்ச்சி

Multidimensional Growth

முகவுரை

- திருச்சபையெங்கும் காணப்படும் ஆன்மீகக்
குழந்தைத்தனத்தைப் பார்த்துத் திடுக்கிடுகிறேன்.

திருமறை திரும்பத் திரும்ப அதற்கெதிராய்ப் பேசுகிறது —

1 கொரி 3:1,2 ... *குழந்தைகள் ... பால் ...*
13:11 ... *குழந்தை... புருஷன்... குழந்தைக்கேற்றவை*
14:20 ... *குழந்தைகள் ... புருஷர் ...*
கலா 4:3-5 ... *பிள்ளைகள் ... புத்திரர் ...*
எபே 4:14 ... *குழந்தைகள் ... பூரண புருஷன்*
எபி. 5:12-14 ... *பால் ... மாம்ச உணவு ...*

- இன்னொரு பரிதாபம் என்னவெனில் சரிவிகிதமற்ற வளர்ச்சி —
எபே 4:15,16 ... ***எல்லாவற்றிலும்*** *வளருகிறவர்களாய் ...*

உதாரணங்கள்:

- ☐ நற்செய்திப்பணி குறித்தே பேசிக்கொண்டிருந்தால்
— கால் மட்டுதான் வளரும்.
- ☐ சமூக நலச் சேவை குறித்தே பேசிக்கொண்டிருந்தால்
— கை மட்டுதான் வளரும்.
- ☐ பரிசுத்தம் குறித்தே பேசிக்கொண்டிருந்தால்
— எத்தனை சிறுநீரகங்கள்?!
- ☐ தொழுகை குறித்தே பேசிக்கொண்டிருந்தால்
— இருதயத்தில் கோளாறில்லை,
ஆனால் திமிர்வாதம்!

- ஆன்மீக வாழ்வில் சமநிலையே இன்று பெரிய தேவை.
சமநிலை என்றால் சமரசமோ, நடுநிலையோ அல்ல;
அது பல்வேறு பரிமாண வளர்ச்சியும் முக்கியத்துவமும்.

- பிறந்த குழந்தைக்கு ஆறாம் மாதத்தில் ஒரு கையைச் சேர்ப்பதில்லை,
  அல்லது ஓராண்டு முடிந்ததும் ஒரு காலைச் சேர்ப்பதில்லை, அல்லவா?

  குழந்தையெனினும் அது குட்டியான முழு ஆள்!
  அது *''எல்லாவற்றிலும் வளரவேண்டும்''* (எபே 4:15,16)

  நமது வளர்ச்சிக்காய்க் கவனம் செலுத்தப்படவேண்டிய பன்னிரண்டு பகுதிகளை இங்கு பார்ப்போம் —

1. ***கிருபையின்மேல் கிருபை*** (Grace upon Grace)

யோ 1:16,17

''நியாயப்பிரமாணத்திலிருந்து பெற்ற விடுதலையைப்'' புரிவது—
பாவம் செய்ய **உரிமம்** அல்ல, பரிசுத்தமாய் வாழ **விடுதலை**;
= *''கிருபை **அத்துடன்** சத்தியம்''*

ரோமர், கலாத்தியர் நிருபங்களை அடிக்கடி வாசியுங்கள்.
ரோமர்: எப்படி விடுவிக்கப்படுகிறோம்
கலாத்தியர்: எப்படி அடிமைப்படுகிறோம்

''கிருபையில் பலப்படுங்கள்'' (2 தீமோ 2:1)

பிரமாணக் கொள்கைகளால் கிறிஸ்தவம் வாதிக்கப்பட்டுள்ளது.

கிருபையானது வாழ்வுக்கு மட்டுமல்ல, பணிக்கும் — (சக 4:7)
அ) செருபாபேல் ... *கிருபை ... கிருபை ...*
ஆ) பவுல் (1 கொரி 15:10)... *தேவ கிருபை... உழைத்தேன்*

2. ***விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு*** (Faith to Faith)

ரோ 1:17

விசுவாசத்திற்கு இத்தனை விளக்கங்கள் வேறெந்த நூற்றாண்டிலும் இருந்ததில்லை.

விசுவாசம் குறித்த விவிலியப் போதனை மற்ற மதங்களுக்கு வேறுபட்டது. இன்றோ ஏராளம் குழப்பம்.

கீழை நாடுகளின் சித்தாந்தம் திருச்சபையின் விசுவாசத்திற்குள் தந்திரமாய்ப் புகுந்துவிட்டது.

''ஆசி பெற்றதால்'' அல்ல, ''ஆசி பெறாவிட்டாலும்'' தேவனை நம்புவதே விசுவாசத்தில் நடப்பதாம்.

விசுவாசத்தில் வளருவதென்றால் தேவனோடு நெருங்கி வாழ்வதால் அவர் மீதுள்ள நம்பிக்கையில் பெருகுவதாம்.

பேச்சுத் தொடர்பு மூலம்தான் நெருங்கிப் பழக முடியும்.
ஜெபத்தின் மூலம் நாம் தேவனோடும்,
பைபிள் மூலம் அவர் நம்மோடும் நெருங்கிப் பழக முடிகிறது.

ரோ 10:17 ... *தேவ வசனம் கேட்பதால் விசுவாசம்*
வச 6,7,8... *ஏறிப்போகிறவன்... இறங்குகிறவன்... விசுவாச வார்த்தை*

''அவரது'' என்பதைவிட ''அவரே'' என்பது!

3. ***பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம்*** (Holiness upon Holiness)

வெளி 22:11 ... *பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தம்*

இவ்வித வளர்ச்சிக்குப் பூரண மாதிரி கிறிஸ்துவே —
யோ 17:19 ... *என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்*

பரிசுத்தமாகுதலின் இரு பக்கங்களைப் புரிந்துகொள்வோம் —
அ) நம்மை தேவன் பரிசுத்தப்படுத்துகிறார் (யோ 17:17)
ஆ) நம்மை நாமே பரிசுத்தப்படுத்துகிறோம் (வச 19)
ஒன்று அடுத்ததற்கு வழி நடத்தும்.

- இரண்டாவதை (ஆ) விட்டால்,
  ''கவலையீனக்'' கிறிஸ்தவராவோம் (1 யோ 3:7)
  முதலாவதை (அ) விட்டால்,
  ''களிப்பற்ற'' கிறிஸ்தவராவோம் (பிலி 3:3,9)
- முதலாவதுள்ளது (அ) நமது சிலாக்கியம்
  ''உன்னைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்'' (லேவி 20:8)
  இரண்டாவதுள்ளது (ஆ) நமது பொறுப்பு —
  ''நான் பரிசுத்தராயிருப்பதுபோல் நீங்களும் ...'' (லேவி 19:2)

தேவன் நம்மில் நிறைவேற்றுவதை நினைத்து மகிழ்ந்திடுவோம்.
அவர்முன் நமது நடக்கையைக் கவனித்துச் சீர்ப்படுத்துவோம்.

4. *அறிவோடு அறிவு* (Knowledge upon Knowledge)

தானி 2:21 ... *ஞானிகளுக்கு ஞானம்... அறிவாளிகளுக்கு அறிவு*
எபே 4:11 ... *அறிவு ... நிறைவான வளர்ச்சி ...*
பிலி 3:7,8,10 ... *இயேசுவை அறிகிற அறிவு ...*
2 பேது 3:18 ... *அவரை அறிகிற அறிவில் வளருங்கள்*

''அறிவின்மையாலேயே இறைமக்களுக்கு அழிவு'' —
ஓசி 4:6
அதாவது, பக்தி உண்டு; புத்தி கிடையாது!

திருமறையை அலசி, ஆராய்ந்து படிப்பதாலேயே அறிவும் ஞானமும் பெருகும் —
ஓசி 4:6 ... *அறிவை வெறுத்தாய் ... வேதத்தை மறந்தாய் ...*
லூக் 2:46,47,52 ... *ஞானத்தில் விருத்தியடைந்தார் ...*
2 தீமோ 3:14-17 ... *கற்றவை ... வேத எழுத்துக்கள்*

எங்ஙனம்? அ) ஜெபம் (எபே 1:15-18)
சாலொமோன் ஞானம் வேண்டினான் (1 இரா 3:5-10)
ஞானத்திற்காய் ஜெபிக்கவேண்டும் (யாக் 1:5)
ஆ) தனித்துப் படிக்கவேண்டும் (2 தீமோ 3:15)
இ) ஐக்கியக் குழுக்களில் கலந்துரையாடல்
(எபே 3:18,19; அப் 17:11,12)

5. *வெற்றிமேல் வெற்றி* (Victory to Victory)

ரோ 8:37 ... *''முற்றிலும் ஜெயம்''*

நாம் ஈடுபட்டிருக்கும் போராட்டம்தான் இங்கு குறிப்பு —
வச 33-39
- ☐ *குற்றம் சாட்டப்படல்*
- ☐ *உபத்திரவம்*
- ☐ *வியாகுலம்*
- ☐ *துன்புறுத்தப்படல்*
- ☐ *பசி, நிர்வாணம்*
- ☐ *நாச மோசம், பட்டயம்*
- ☐ *மரணம்*
- ☐ *ஜீவன்* } ஆசீர்வாதங்களின்
- ☐ *தேவதூதர்* } கவர்ச்சி!
- ☐ *அதிகாரங்கள், வல்லமைகள்*

நமது வாழ்வில் கிறிஸ்துவை மையப்படுத்துவதற்கு எதிரான சக்தி எதுவாயினும் — நல்லதோ தீயதோ — அதற்கெதிரானதே இப்போராட்டம் (வச 39).

எ.கா.) சில வேளைகளில் பிசாசைப்பற்றியே
பேசிக்கொண்டிருப்போம்.
திடீரென்று தேவதூதரைப்பற்றியே பேசத் துவங்கிவிடுவோம்.
அக்காலத்தில் தூதர் வணக்கம் சகஜம்!
(கொலோ 2:18,19)

6. *அன்பின்மேல் அன்பு* (Love upon Love)

பிலி 1:9 ... *அன்பு அதிகமதிகமாய்ப் பெருகவும் ...*
எபே 4:16 ... *அன்பினால் உடல் வளர்ச்சி ...*

அன்பு பூரணப்படுதலைப்பற்றிப் பேசியபோது,
நியாயத்தீர்ப்பை அப்போஸ்தலன் யோவான் குறிப்பிடுகிறார் —
1 யோ 4:17,18 — *''தைரியம்''* vs. *''பயம்''*

கண்ணால் காணக்கூடிய சகோதரனை நேசிக்குமளவுக்குத்தான் காணக்கூடாத தேவனை நேசிக்க முடியும் (வச 20,12)

இவ்வித அன்பின் இரகசியம் **முதல்படி** எடுத்துவைப்பது —
''அவர் முந்தி நம்மில் அன்புகூர்ந்ததால் ...'' (வச 19)

அன்பை வெளிப்படுத்த சாதகச் சூழல்களை எதிர்நோக்கியிருந்தால் ஒருபோதும் அன்புசெலுத்த முடியாது.

''நாம் பாவிகளாய் ***இருக்கையிலேயே***
கிறிஸ்து நமக்காய் மரித்தார்'' (ரோ 5:8)

சபைகள் உடைவதால் சபை வளர்ச்சி குன்றுகிறது;
சமுதாயத்திலும் தாக்கம் ஏற்படுத்த முடிவதில்லை.

— பெருகுவதற்குப் பதிலாகப் பிரிவினை
— ஒருமனமில்லாததால் ஒருவர் செய்வதையே பிறரும் செய்தல்
— ஒருங்கிணைப்புக்குப் பதிலாகப் போட்டி
— ஒன்றுசேர்வதற்குப் பதிலாகத் துண்டாக்குதல்

''ஒருமனம்'' — யோ 17:23 — *''ஒருமைப்பாட்டில் தேர்ச்சி''*

7. *தியாகத்தின்மேல் தியாகம்* (Sacrifice upon Sacrifice)

அ) உடல் (physique) ... 2 கொரி 12:14,15; பிலி 2:17
ஆ) உடைமை (possessions) ... 2 கொரி 8:7,2.
இ) உரிமைகள் (privileges) ... 1 கொரி 9:1-23

நிகரற்ற தியாகத்திற்குத் திரித்துவ தெய்வத்துவமே உன்னத எடுத்துக்காட்டு —

பிதாவானவர் — சொந்தக் குமாரனைத் தியாகம்பண்ணினார்
= குடும்பத்தின் மகிழ்ச்சி

குமாரனானவர் — சொந்த ஜீவனைத் தியாகம்பண்ணினார்
= ராஜரீக மேன்மை

ஆவியானவர் — சொந்த அதிகாரத்தைத் தியாகம்பண்ணுகிறார்
= கட்டாயப்படுத்தும் திறன்
(ஆனால் அவர் எதிர்க்கப்படுகிறார், துக்கப்படுத்தப்படுகிறார், அவித்துப்போடப்படுகிறார்.)

எனவேதான் பவுல் சொன்னது —
''தேவனைப் பின்பற்றி ... கிறிஸ்து ... ***பலி****''* (எபே 5:1,2)

8. *பறைசாற்றலின்மேல் பறைசாற்றல்*

(Declaration upon Declaration/Proclamation upon Proclamation)

இயேசு: *''நான் அறிவிப்பேன்''* (எபி 2:12)
— உலகிற்குள் நுழையுமுன்
''நான் அறிவித்தேன்'' (யோ 17:26)
— உலகிற்குள் நுழைந்தபின்
''நான் அறிவிப்பேன்'' (யோ 17:26)
— விண்ணுலகிற்குள் நுழையுமுன்

பவுல்: *''நான் கடனாளி ... என்னாலானமட்டும்... சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆயத்தம்''* (ரோ 1:14,15)
இந்தக் கடன் நமக்கு ஒருபோதும் தீராது!

இன்று மிஷனரி இயக்கங்களிலும் ஊழிய நிறுவனங்களிலும் ஆத்துமாதாயகரைவிட ஆதரவாளரே அதிகம்.

இப்போக்கு ஆரோக்கியமானதல்ல. இயல்பாகவே இளைஞர் விறுவிறுப்பாயிருப்பர்; எனவே உடற்பயிற்சியின் தேவை அவர்களுக்கு வலியுறுத்தப்பட அவசியமில்லை; வயதாகும்போதோ மூட்டுகளில் பிடிப்பு, உடல் பருமன், இப்படிப் பல. அப்பொழுது உடற்பயிற்சி கட்டாயமென்று மருத்துவ ஆலோசனை வருகிறது. ஆன்மீக வாழ்விலும் அப்படியே — போதுமான உடற்பயிற்சி இல்லாததாலேயே ஆன்மீகக் கேடுபாடுகள்.

பவுல்: *''உங்களுடையதை அல்ல, உங்களையே நாடுகிறேன்''* (2 கொரி 12:14)

9. *நினைவூட்டலுக்குமேல் நினைவூட்டல்*

(Reminder upon Reminder)

2 பேது 1:12-15 ... *நினைவூட்ட ... நினைவூட்ட ... நினைவூட்ட*

பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டோம் என்பதை எளிதில் மறந்துவிடக்கூடிய விசுவாசிகளுக்கு நமது ஊழியம் (வச 9).

நினைவூட்டல்களுக்கு எடுத்துக்காட்டுகள் —
கலா 5:21 ... *முன்னே நான் சொன்னதுபோல ...*
பிலி 3:1 ... *எழுதியவற்றையே திரும்ப எழுதுவது*
எபி 3:12,13 ... *அனுதினம் புத்திசொல்லத்* தேவை
நாமே நமக்கு நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் வலியுறுத்தப்படுவது ''தனிநபர்'' வளர்ச்சியைவிடக் ''கூட்டு'' வளர்ச்சியாகும் —
எபே 4:16 ... *உடல் முழுவதும் ... உடல் வளர்ச்சி ...*

இது ஒரு தோட்டத்திற்கு ஒப்புமை (சங் 92:13,14)
அங்குமிங்கும் சில மரங்கள் அல்ல.
நமது ஐக்கியங்களில் ஐக்கியம் இல்லையே!

10. *துக்கத்தின் மேல் துக்கம்* (Sorrow upon Sorrow)

பிலி 2:25-27 ... *இரங்கினார் ... துக்கத்தின்மேல் துக்கம் ...*
2 கொரி 4:7-11 ... *நெருக்கம் ... கலக்கம் ... துன்பம் ...*

விளைவு: அ) நம்மில் செயல்படும் அவரது அன்பு, ஜீவன்
2 கொரி 7:12,15,16அ

ஆ) பிறரை மகிழ்வித்து, தேற்றி, ஊக்குவித்தல்
பிலி 2:28 ... *சந்தோஷமாயிருங்கள் ,,,*

உலைக்களத்தின் வழியாய்க் கொண்டுவந்துதான் ஆலோசகப் பணிக்குத் தேவன் நம்மை ஆயத்தப்படுத்துகிறார் —
இச்சத்தியத்தின் தெளிவான விளக்கம் — 2 கொரி 1:3-6

எனவே, கவலைகளை வீணாக்காதீர்!

''துக்கம் நிறைந்தவர்'' என இயேசு அழைக்கப்பட்டார் (ஏசா 53:3).
அவர் *பச்சை மரம்;* நாம் *பட்ட மரம்* (லூக் 23:31)

அவர் சந்தோஷமாய் **நமக்காய்ச்** சிலுவைச் சுமந்தார்;
நாமும் சந்தோஷமாய் **நமது** சிலுவைகள் சுமப்போம்.

தேவன் தமது இரக்கம், காருண்யத்தின்படி ''வரம்புகளை'' நியமிக்கிறார் (பிலி 2:27)
யோபு 38:11 ... *இம்மட்டும் வா ... இதற்கு மிஞ்சி வராதே*

11. பொறுமையின்மேல் பொறுமை (Patience upon Patience)

''நீடிய பொறுமை'' "L-O-N-G-suffering"

பொறுமைதான் நற்பண்புகளின் மகுடம் —
யாக் 1:4 ... *பொறுமை ... பூரணச் செயல்பாடு ...*

நமது வாழ்வில் செயல்படும் தேவ வல்லமையின் முக்கிய விளைவு —
கொலோ 1:11 ... *சந்தோஷம் ... பொறுமை ... நீடிய சாந்தம்*

வரம் மிகுந்த ஊழியத்தின் அலங்காரம் —
2 கொரி 12:12 ... *அடையாளங்கள் ... எல்லாவிதப் பொறுமை*

இன்றைய உலகின் போக்கு —
குறுக்கு வழியில் உடனடி விளைவுகள்.
விரைவில் வந்த விளைவு நெடுங்காலம் நீடிக்காது.
எ.கா.) செல்வம் (நீதி 20:21)
கலப்பினத் தென்னை — சீக்கிரம் காய்த்து
சீக்கிரம் நின்றுபோகும்.

பொறுமை என்றால் மந்தம், சோம்பல் அல்ல;
அது சகிப்பு, தாக்குப்பிடிப்பு, நிலைத்திருப்பு, ...

நாம் இறுதிக் காலத்தின் இறுதிக் கட்டத்திற்குள் நுழைகையில் இப்பண்பில் நன்கு வளரவேண்டும் —
வெளி 13:10 ... *பரிசுத்தவான்களின் பொறுமை, விசுவாசம்*
14:12 ... *பரிசுத்தவான்களின் பொறுமை*

12. மகிமையின்மேல் மகிமை (Glory to Glory)

2 கொரி 3:18 ... *ஆவியானவரால் ... மறுரூபம் ...*

இது நம்மில் **தேவன்** செய்யும் காரியம்.

மற்ற கவர்ச்சிகளை ''விட்டுக்'' கிறிஸ்துவிடம் திரும்ப அவரது மகிமையைப் ''பார்த்துக்கொண்டே'' இருப்பதுதான் நமது பொறுப்பு (வச 16).

பேதுருகூட மோசே, எலியாவை இயேசுவோடு சமப்படுத்திப் பேசினார்!
இப்படி நமது கவனத்தைத் திசைதிருப்ப பிசாசு கொண்டுவரும் சோதனைகளுக்கு எச்சரிக்கை —

இவர் எனது நேசகுமாரன்! (வேலைக்காரனல்ல!) மாற் 9:7

நமது வளர்ச்சியின் முடிவு இயேசுபோல் மாறுவது —
எபே 4:11 ... *கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி*

(34ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

55

பிதாவானவரை அவமதிக்கும் செயல்கள்

How we dishonour God the Father

முகவுரை

- விவிலியத்தின் துவக்கத்திலேயே தேவன் ஒரு தந்தையாய்க் காட்சியளிக்கிறார்.

— தமது சாயலாகவே பெற்றெடுக்கிறார்	(1:26)
— தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்	(:28)
— பிள்ளைகளுக்கு அதிகாரம் கொடுக்கிறார்	(:28)
— பிள்ளைகளின் தேவைகளைச் சந்திக்கிறார்	(:29)
— பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கிறார்	(2:15)
— கட்டளையிடுகிறார், எச்சரிக்கிறார்	(:16,17)
— திருமணம் நடத்திவைக்கிறார்	(:18,22)
— பிள்ளைகளை மதிக்கிறார், ஊக்குவிக்கிறார்	(:19)
— பிள்ளைகள் எங்கேயிருக்கிறார்களெனக் கவனிக்கிறார்	(3:9)
— தண்டிக்கிறார், ஆனால் மீட்டெடுக்கிறார்	(:15,21)

- ஆனால்,
  நெடுகவே **ஆதியாகமம்** முதல் **வெளிப்படுத்தல்** வரை பிதாவானவரோடுள்ள தொடர்பில் மனிதனது தோல்வி —

உபா 32:5,6,15,18 (பழங்காலத் தீர்க்கன்)	... *அவர் உங்கள் பிதா அல்லவா? ஏன் உங்களைக் கெடுத்துக்கொண்டீர்கள்?*
ஏசா 1:2 (நடுக்காலத் தீர்க்கன்)	... *நான் பிள்ளைகளை வளர்த்தேன் ... அவர்களோ முரட்டாட்டம்பண்ணினர்*
மல் 1:6 (பிந்திய காலத் தீர்க்கன்)	... *நான் பிதாவானால் எனக்குரிய கனம் எங்கே?*

நான் பிதாவானால் எனக்குரிய கனம் எங்கே?

- தமது பிள்ளைகள் மீதுள்ள குறைவுகளை மல்கியா புத்தகத்தில் தேவன் சுட்டிக்காட்டினார்; அவர்களோ அதை ஏற்கவில்லை. அவர்கள் **கேள்விகள்** கேட்டுத் தேவனுக்கு எதிர்த்துப் பேசினர்.

அவைகளில் ஐந்தை இச்செய்தியில் கவனித்து,
பிதாவானவரை அவமதிக்கும் செயல்களைப் புரிந்துகொள்வோம் —

கேள்வி 1

''எங்களை எப்படிச் சிநேகித்தீர்?'' (மல் 1:2)

பிதாவின் அன்பை அவமதித்தல் (Depreciating the Father's Love)

- ஏசா-யாக்கோபு சரிதை (வச 2,3)
  — நாமல்ல, அவரே நம்மைத் தெரிந்துகொண்டார் (யோ 15:16) ஆதி 25:23
  — உலகத்தோற்றத்திற்கு முன்னே தெரிந்துகொண்டார். எனவே, நாம் பெருமையடிக்க ஒன்றுமில்லை (எபே 2:8,9)
  — கிறிஸ்துவை ஏற்றதாலேயே பிள்ளைகளாக முடிந்தது (யோ 1:12 / ஏசாவின் தலைமகனுரிமை) ஆதி 25:29-34

நாம் சாட்சி பகரும்போது சொல்லக்கூடாதவை —

''நான்'' கர்த்தரைச் சந்தித்தேன்.
''நான்'' மனந்திரும்பினேன்.
''நான்'' கிறிஸ்துவிடம் வந்தேன்.
(இல்லை, ''அவர்'' என்னைக் கண்டுபிடித்தார்!)

- தேவனது அன்பைத் தினமும் பாடித் துதிக்கிறோமா?
- அவரது அன்பு கல்வாரியில் உச்சத்தை எட்டியது —
  ரோ 5:7,8 ... *தமது அன்பை வெளிப்படுத்தினார்*
  சங் 22:1-22 ... சிலுவையிலிருந்து இயேசுவின் கதறல்

கேள்வி 2

''உமது நாமத்தை எதினால் அசட்டைபண்ணினோம்?'' (மல் 1:6,7)

பிதாவின் நாமத்தை அவமதித்தல் (Despising the Father's Name)

இது பல வழிகளில் செய்யப்படுகிறது —

- உசிதமானதைப் படைக்காது அவமரியாதை (வச 8)
  — பிதாவானவருக்கு அதிமுக்கிய கனம் தரப்படவேண்டும். இயேசு **தம்மையே** அவருக்குப் படைத்தாரே (எபி 9:14)

தனக்கு **மிகவும் பிரியமானதை** ஆபிரகாம் படைத்தான் (ஆதி 22:12)
(மாறாக, ஏலி ... 1 சாமு 2:29,30)

மகிமைப்பட்ட பின்னரும்,
பிதாவானவருக்கே இயேசு சகல கனமும் கொடுக்கிறார்
(1 கொரி 15:24,28)

— மிகச் சிறந்த **மணிநேரம்** தேவனுக்கு (அதிகாலை)
— மிகச் சிறந்த **பொக்கிஷம்** தேவனுக்கு (பரிமள தைலம்)
— மிகச் சிறந்த **வாழ்வுக்காலம்** தேவனுக்கு (வாலிபம்)
25 வயது முதல் 40 வரை கொடுத்துவிடவேண்டும்.
40க்குமேல் எத்தனை உடல் நலக் குறைவுகள்!
— மிகச் சிறந்த **பிள்ளையைத்** தேவனுடைய பணிக்கு (வச 14அ)

☐ இவ்வுலக ஆசிகளுக்காகவே தேவனைச் சேவித்தல் (வச 10)
யோ 6:23-27 ... சோற்றுக்காகவே ஆண்டவர்
1 கொரி 15:19 ... *இம்மைக்காக மாத்திரம்* ...

அவர் தேவன் என்பதற்காகவே ஆராதிக்கவேண்டும்!
அவர் ''என்ன'' தருகிறார் என்பதல்ல, **''எவராய்''** இருக்கிறார் என்பதே!

☐ களிப்புடன் அல்ல, கடமைக்காய்த் தேவனைச் சேவிப்பது (வச 13அ)
ஜெபம் (சங் 5:2,3/நீதி 8:30)
திருமறைத் தியானம் (சங் 119:14)
சாட்சி பகருதல் (சங் 51:12,13)
எ.கா.) இன்னும் ஜெபம்பண்ணவில்லையே என்று சொல்லாதீர்;
''வாருங்கள், ஜெபிப்போம்'' என்று சொல்லுங்கள்.

☐ திருடிய பணத்தைப் படைத்தல் (வச 13ஆ)
பெற்றோரிடம் திருடியது (மாற் 7:10-13)
அரசிடம் திருடியது (மாற் 12:17; ரோ 13:7)
லாட்டரிச் சீட்டு (பாவப்பட்டோர் பணம்), உழைப்பற்றது!

☐ கர்த்தருடைய ஜெபம் —
*''எங்கள் **பிதாவே** ... உமது நாமம் பரிசுத்தப்படுவதாக!''*
முதல் விண்ணப்பம்

கேள்வி 3

''எதினால் கர்த்தரை வருத்தப்படுத்துறோம்?'' (மல் 2:17)

தேவனது தரத்தை அவமதித்தல் (Despising God's Standard)

இரண்டாம் அத்தியாயம் முழுவதும் தேவனைக் கனவீனப்படுத்திய செயல்களை விளக்குகிறது.

☐ கீழ்ப்படியாமையினாலும் முன்மாதிரியற்ற வாழ்க்கையினாலும் தேவனது உடன்படிக்கையைக் கெடுப்பது (2:5-9).

— தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறோமோ?
(சங் 40:6-8) ... பலியைவிட முக்கியம்.

— நாம் கீழ்ப்படிதலின் பிள்ளைகள் என்றழைக்கப்படுறோம்!
மற்றவர்கள் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்
(1 பேது 1:14/கொலோ 3:6)

— அன்பினால் பிறக்கும் கீழ்ப்படிதல் பாரமானதல்ல
(1 யோ 5:3)

— தந்தையின் கட்டளைகள் பிள்ளைகளின் நலனுக்காகவே
(உபா 10:13)

— மோசேயின் அவிசுவாசமும் கீழ்ப்படியாமையும் தேவனது நாமத்தைப் ''பரிசுத்தக்குலைச்சல்'' ஆக்கின (உபா 32:51)

— திருக்கட்டளைகளுக்கு விருப்பு வெறுப்பு கூடாது
(மல் 2:9) ... *''பட்சபாதம்''*

☐ சரியற்ற சகவுறவுகள் (வச 10)

1 யோ 3:9-11,14 ... தேவனால் பிறந்ததற்கு முக்கிய அடையாளம்

எபே 4:1-6 ... திருவுபதேசத்தின் 7 கூறுகளில் மகுடமானது —
''ஒரே தேவனும் பிதாவுமானவர்''
***''எல்லார்''** மேலும்!*
ஒரே பரம்பரை!

☐ அவிசுவாசிகளின் ஐக்கியம் (2:11)

2 கொரி 6:14-18 ... *பிரிந்து வாருங்கள் ...*

நான் உங்கள் ***பிதாவாய்*** *இருப்பேன் ...*

☐ திருமண உறவில் உண்மையின்மை (2:13-16)

1 பேது 1:14-17 ... *கீழ்ப்படிதலின்* ***பிள்ளைகள்*** *...*

இச்சை ... ***பிதா*** *... பயத்துடன் நடந்து ...*

1 யோ 2:15,16 ... *மாம்ச இச்சை* x ***பிதாவின்*** *அன்பு*

கேள்வி 4

''எதிலே உம்மை வஞ்சித்தோம்?'' (மல் 3:8)

உக்கிராணத்துவத்தில் உண்மையின்மை (Defaulting in Stewardship)

☐ தசமபாகங்கள், காணிக்கைகள் (வச 8-10)

— நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்னரே தானாக முன்வந்து கொடுத்தது (ஆதி 14:18-20)

— நியாயப்பிரமாண காலத்தில் தசமபாகம்: பரிசேயர் (மத் 23:23)

— புதிய உடன்படிக்கையில் இதற்கான சட்டம் கிடையாது, ஆனால் உற்சாகமாய் அள்ளிக் கொடுப்பது!

2 கொரி 8:1-4...*உதாரத்துவம் ... திராணிக்கு மிஞ்சி*

9:6,7 ... *பெருக ... உற்சாகமாய் ...*

பிள்ளைகளது காணிக்கை பிதாவுக்கு மரியாதை (நீதி 3:9)

நடைமுறை ஆலோசனைகள்:

''எல்லாவற்றிலும்'' தசமபாகம் (ஆதி 14:20).
''மொத்த'' வருவாயில் (gross, not net) தசமபாகம்.
வங்கிகளில் கிடைக்கும் வட்டியில் தசமபாகம்.
பாகப்பரிவினையில் கிடைக்கும் சொத்து, நகைகளில் தசமபாகம்.
இறைப்பணியாளரும் கொடுக்கக்கூடிய தசமபாகம் (எபி 7:9,10).

கேள்வி 5

உமக்கு விரோதமாக என்ன பேசினோம்?'' (மல் 3:13)

பிதாவானவரை மனமடிவாக்கும் வார்த்தைகள்

(Disgusting words against the Father)

வாசியுங்கள் 3:14,15

☐ அவிசுவாசிகள் யாவரையும் தேவன் வெறுத்துச் சபிக்கவேண்டுமென எதிர்பாராதீர் (மத் 5:45).

படைப்பின்படி எல்லா மனிதரும் தேவனுக்குச் சொந்தம்.
பாவிகள் அவரைவிட்டு விலகிப்போயினர் (பின்வாங்குதல்!)
அவர்கள் திரும்பத் தம்மிடம் வர அவர் வாஞ்சிக்கிறார்.

''தேவன் இவ்வளவாய் ***உலகில்*** *அன்புகூர்ந்தார்''*

(யோ 3:16; 1 தீமோ 2:3,4)

உலகத்தைக் குறித்த எதிர்மறைச் சிந்தை வேண்டாம்.

— எ.கா.) மூத்த கெட்ட குமாரன் தந்தையின் வீட்டிலிருந்தான்!
தந்தையின் இதய உணர்வுகளைப் பாருங்கள்.

■ ***முடிவுரை***

பிதாவாகிய தேவனைக் கனவீனப்படுத்தும் இவ்விதச் செயல்களை அவரிடம் அறிக்கையிடுவோம் —

ஏசா 64:8,9

''இப்பொழுதும் கர்த்தாவே,
நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களி மண்;
நாங்கள் அனைவரும் உமது கரத்தின் செயல்.
கர்த்தாவே, அதிகமாய்க் கடுங்கோபங்கொள்ளாமலும்,
என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக்கொள்ளாமலும் இருப்பீராக; ...
நாங்கள் அனைவரும் உம்முடைய மக்கள்!''

56

பின்மாற்றக்காரனின் காரணப் பெயர்கள்

Portraits of a Backslider

இஸ்ரவேலரின் பின்வாங்கிய நிலை குறித்துத் தீர்க்கன் எரேமியாவின் இதயக் கதறலே **''புலம்பல்''** புத்தகமாகும்.

இப்புத்தகத்தின் 1,2,4 & 5 அத்தியாயங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள 22 வசனங்கள் எபிரெய வேதாகமத்தில் 22 எபிரெய எழுத்துக்களுடன் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன. 66 வசனங்களுள்ள 3ஆம் அத்தியாயத்தைப் பொருத்தவரை, ஒவ்வொரு மும்மூன்று வசனங் களின் துவக்கமும் 22 எபிரெய எழுத்துக்களின் அகர வரிசையோடு துவங்குகிறது. இது "acrostic" (= சொற்புதிர்) எனப்படும்.

இப்புத்தகத்தில் ஆங்கில மொழியின் 26 எழுத்துக்கள் என்ற எண் ணிக்கையின்படி குறைந்தது 26 காரணப் பெயர்கள் பின்மாற்றக்கார னுக்குத் தரப்பட்டுள்ளன என்பது நான் கண்டது —

a)	தனிமையாய் விடப்பட்ட நகர்	(புல 1:1)
b)	விதவைக்கு ஒப்பான தேசம்	(1:1)
c)	கப்பம் கட்டும் நாயகி	(1:1)
d)	தேற்றுவாரற்ற நேசகி	(1:2)
e)	காட்டிக்கொடுக்கப்பட்ட சிநேகிதி	(1:2)
f)	சிறைப்பட்டுப்போன மக்கள்	(1:3)
g)	சிறைப்பிடிக்கப்பட்ட பிள்ளை	(1:5)
h)	மேய்ச்சல் காணாத மான்	(1:6)
i)	தீட்டுப்பட்ட ஆடை	(1:9)
j)	பரிசுத்தக் குலைச்சலான ஆலயம்	(1:10)
k)	அப்பத்துக்காய்த் தவிக்கும் மக்கள்	(1:11)
l)	மிதிக்கப்பட்ட கன்னிகை	(1:15)
m)	தரையாக்கப்பட்ட குமாரத்தி	(2:2)
n)	எரிந்துபோன கூடாரம்	(2:4)
o)	வேலியிழந்த தோட்டம்	(2:6)
p)	தள்ளப்பட்ட பலிபீடம்	(2:7)

q)	வெறுக்கப்பட்ட புனிதத் தலம்	(2:7)
r)	கைவிடப்பட்ட அரண்மனை	(2:7)
s)	உடைக்கப்பட்ட கதவு	(2:9)
t)	நாடுகடத்தப்பட்ட இராஜா	(2:9)
u)	தரிசனமற்ற தீர்க்கதரிசி	(2:9)
v)	மூர்ச்சித்துக் கிடக்கும் குழந்தை	(2:11.12)
w)	மங்கிய பொன்	(4:1)
x)	குரூரமான தீக்குருவி	(4:3)
y)	களிப்பற்ற இருதயம்	(5:15)
z)	கிரீடம் இழந்த தலை	(5:16)

ஐயோ, பின்வாங்குதல் எத்தனை கொடியது!

நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினால் (3:40-42), நம்மைப் பூரணமாய் ஆரோக்கியமாக்கத் தேவன் வாக்கருளியுள்ளார் —

3:22-24 ... *கர்த்தருடைய கிருபை ... இரக்கங்கள் ... காலைதோறும் புதியவை ... அவரது உண்மை பெரியது!*

(186ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

57

தேவன் அறிவார்!

God Knows!

முகவுரை

■ தேவனது மூன்று அதிமுக்கிய தன்மைகள் —

அவர் சர்வ வியாபகர் = அவர் எங்கும் இருக்கிறார்.
அவர் சர்வ வல்லவர் = அவர் எதையும் செய்யமுடியும்.
அவர் சர்வ ஞானி = அவருக்கு எல்லாம் தெரியும்.
(Omnipresent, Omnipotent, Omniscient)

லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) —
நமக்குள் வாழும் மூவர் —
✗ நாம் யாரென்று நாம் நினைப்பவர்! — பெருமை
✗ நாம் யாரென்று பிறர் நினைப்பவர்! — மாய்மாலம்
✓ நாம் யாரென்று தேவன் அறிபவர்! — உண்மை

எல்லாச் சபைகளும் அறியவேண்டிய சத்தியம் —
வெளி 2:23 ... *நானே உள்ளங்களையும் இதயங்களையும் ஆராய்கிறவர்*

ஏழு சபைகளுக்கும் சொல்லப்பட்ட முதல் காரியம் —
வெளி 2:2,9,13,19 3:1,8,15 | *''உன் செயல்களை **அறிந்திருக்கிறேன்**''*

இருதயங்களை முழுவதுமாய் அறிந்தவர் தேவன் **ஒருவரே** —
எரே 17:9,10 ... *அதை அறியத்தக்கவன்? கர்த்தராகிய நானே*

திருவசனமே அவரது ஆய்வு விளக்கு —
எபி 4:12,13 ... *இதயத்தின் நினைவுகள், யோசனைகள் ...*

பைபிளை வாசிக்கும்போதெல்லாம் உங்கள் வாழ்வை அவர் உங்களுக்குக் காட்ட எதிர்பாருங்கள்.
தேவனை மருத்துவராய் அறிவது — இரட்சிப்படைதல்
அவரை அறுவை மருத்துவராய் அறிவது — பரிசுத்தமாகுதல்
மருத்துவரின் மருந்து (syrup).
அறுவை மருத்துவரின் கத்தி (scalpal).

தேவனுக்கு எதையும் மறைப்பது கூடாதது —
யோபு 34:21,22 ... *அவரது கண்கள் ... இருளில்லை*
நீதி 15:11 ... *பாதாளமும் அழிவும் ... இருதயம் ...*
எரே 23:24 ... *ஒளித்துக்கொள்ளக் கூடுமோ? ... வானம் ... பூமி*
ஆமோஸ் 9:2,3 ... *பாதாளம் ... வானம் ... தேடிப்பிடிப்பேன்*
ஒப 4 ... *நட்சத்திரங்களுக்குள் கூடு கட்டினாலும் ...*
வெளி 5:6 ... *ஏழு கண்கள் ... பூமியெங்கும் ...*

தாவீது இதை நன்கு அறிந்திருந்தான் —
சங் 139:1-12 (வசனங்கள் 1-4இல் 7 எண்ணுங்கள்)

இரகசியங்கள் வெளிவரும் —
ரோ 2:16 ... *மனிதரின் அந்தரங்கங்கள் ... நியாயத்தீர்ப்பு*
எண் 32:23 ... *உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்*
(32/23 ... பிம்பம் — mirror image)

இதுதான் நியாயத்தீர்ப்பின் நாளில் நடக்கும்.

பரிதாபம்: தேவன் அறியார் என்றே வாழ்கிறோம் —
ஏசா 29:15 ... *காண்கிறவர் யார்? அறிகிறவர் யார்?*
யோபு 22:12-14 ... *தேவன் எப்படி அறிவார்?*

''தேவன் அறியார்'' என்று மதியீனமாய் எண்ணிய ஐந்து பேர் —

1. காயீன்

ஆதி 4:3-10

இப்பகுதியின் கருத்து: ''சகவுறவுகள்''
முதல் மகனும் முதல் அண்ணனுமானவன் கொலைகாரனாகிறான்.

படிகள் —

அ) தேவனை விட்டு விலகியது (வச 3,5அ,7)
நீதி 16:7 ... *ஒருவனது வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால்*

ஆ) பொறாமை (காழ்ப்புணர்வு) (வச 5)
பிறர் உயர்த்தப்படுவது நமக்குச் சகிக்காது.
இயேசுவைச் சிலுவையிலறைந்ததற்கு முக்கியக் காரணம் (மாற் 15:10)

இ) கோபம் (வச 5)

தேவ கோபமே ''ஒரு நிமிடம்தான்''

சங் 30:5 ... *அவரது தயவு நீடிய வாழ்வு*

103:8,9 ... *எப்பொழுதும் கோபம் கொண்டிரார்*

அஸ்தமனத்திற்குப் பின்னர் கோபம் இருக்கக்கூடாது —
எபே 4:26 ... *கோபம் ... பாவம் செய்யாதீர்*

ஈ) சதித் திட்டம் + ஏமாற்று (வச 8 அ)

தீய எண்ணங்கொண்ட வார்த்தைகள் —
''வயல் வெளிக்குப் போய் வருவோம்''

உ) கொலை (வச 8ஆ) (1 யோ 3:15)

ஊ) பொய் (வச 9) ... நாம் பொதுவாய்ச் சொல்லுவது —
''எனக்குத் தெரியாது''
''நான் பொறுப்பல்ல''

எ) மனந்திரும்புதல் அல்ல, தண்டனைக்குப் பயம் (வச 13)

''பொல்லாங்கனால் உண்டானவன்'' என்று காயீனை வேதம் அழைக்கிறது (1 யோ 3:11,12)
(இவனது மனைவி யாரென்று அறிவதில் ஏன்தான் மக்களுக்கு அவ்வளவு ஆர்வமோ?)

ஓர் எச்சரிப்பு — யாக் 3:14-16 ... *பொறாமை ... பொய் ... பேய்த்தனம்*
தேவனது கண்டிப்பு — சக 8:17 ... *நான் வெறுக்கிறேன்*
சங் 50:20,21 ... *நான் கடிந்துகொள்வேன்*

படிப்பினை: *''நீ நன்மை செய்தால் ஏற்றுக்கொள்ளப்படுவாய்.*
(ஆதி 4:7) *இல்லையேல், பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்''*

2. ஆகான்

யோசு 7:1,6,11

இப்பகுதியின் கருத்து: ''பொருளாசை'' (வச 20,21)

பொருளாசை ஒரு கொடிய பாவம், இரகசிய பாவம் —
சங் 73:11,12 ... *''தேவன் எப்படி அறிவார்?''*

கேவலமான பாவங்களைப் போலவே இதையும் தேவன் கண்டிக்கிறார் —

எபே 5:3 கொலோ 3:5 1 கொரி 5:11 எபி 13:4,5அ	விபசாரம், வேசித்தனம் போன்றவைகளின் வரிசையிலேயே பொருளாசையும் வருகிறது. ஆனால், இது நாகரிகமாய்க் கருதப்படுகிறது.

ஆகானின் சம்பவத்திலிருந்து சில படிப்பினைகள் (யோசு 7) —

அ) பரிசுத்தமின்மையை அங்கீகரிப்பதைவிட தேவன் தோல்வியை அனுமதிப்பார் (வச 9:11).

ஆ) ஒவ்வொரு **தனி நபரின்** பரிசுத்தத்திலும் தேவன் கரிசனை கொண்டுள்ளார் (வச 13,14).

''ஜனங்கள் — கோத்திரங்கள் — குடும்பங்கள் — பேர்பேராக''

இ) துதியோ ஜெபமோ பரிசுத்தத்திற்கு மாற்றாகாது.
ஆகானின் கோத்திரம் யூதா (= துதி) வச 16,18

ஈ) பாவ அறிக்கை **குறிப்பாயிருக்கவேண்டும்.**
வச 19-21 ... *''இன்னின்னதைச் செய்தேன்''*

உ) பாவத்தை **முழுவதுமாய்** அகற்றவேண்டும் (வச 25,26)
அநேகரது வாழ்வில் ஆகான்தான் ஆகோர் (= பிரச்னை).

■ பொருளாசையைப் பற்றியதில் தேவனது சர்வ ஞானம் மறக்கப்பட்ட இன்னோர் எடுத்துக்காட்டு உண்டு —
கேயாசி — நாகமான் — எலிசா
(2 இரா 5:23-26)

ஊழியத்திலிருந்தாலும் கேயாசியின் உள்ளம் ஊதியத்தில்தானிருந்தது.

ஆனால் பவுல் (அப் 20:33)
இதை யோசு 7:21உடன் ஒப்பிடுக.

பொருளாசை என்றால் என்ன?
= இருப்பதில் திருப்தியின்மை, பிறரிடம் இருப்பதின்மீது ஆசை
(1 தீமோ 6:6-10)

பிரபலமான சுவர் வசனம் —

''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை
உன்னைக் கைவிடுவதுமில்லை''

(எபி 13:5) — இது சொல்லப்பட்ட இடத்தைக் கவனியுங்கள்!

நாமோ பணத்தைப் பார்த்து,
''நான் உன்னை விடுவதில்லை'' என்கிறோம்.

3. சவுலரசன்

1 சாமு 15:13-23
இப்பகுதியின் கருத்து: கீழ்ப்படியாமை

இச்சம்பவத்திலிருந்து பல படிப்பினைகள் —

அ) நாம் அழைக்கப்பட்டுள்ளதே கீழ்ப்படிதலுக்குத்தான் (வச 1)
எபே 2:1,2 ... *கீழ்ப்படிதலின் / கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்*
ரோ 5:19 ... *ஆதாம் / கிறிஸ்து*

ஆ) கீழ்ப்படியவேண்டியவற்றில் விருப்பு வெறுப்பு வேண்டாம் (வச 9)
ஒரு சிலவற்றில் மட்டும் கீழ்ப்படிவது கீழ்ப்படிதலல்ல;
அது வசதி, அவ்வளவுதான்!
பயனற்றவற்றையே சவுல் அழித்தான்.

ஜெபம் அல்லது துதியைவிடக் கீழ்ப்படிதலே மேல் (வச 22)

ஒட்டு வாசகங்கள்: ''இயேசுவை நேசிக்கிறேன்'' (I love Jesus!)
''இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறேன்'' என்பது
அதற்குப் பொருளா? (1 யோ 5:3)

இ) மார்க்கச் செயல்களால் உங்கள் கீழ்ப்படியாமையை
மறைக்க முயலாதீர் (வச 13)

ஈ) உங்கள் கீழ்ப்படியாமைக்குப் பிறர்மீது பழிசுமத்தாதீர்(வச 20,21)
சூழ்நிலைகள் மீது பழிசுமத்துவது தவறு.

நம்மெல்லாருக்கும் கர்த்தருடைய ''வார்த்தை'' (வச 23) உண்டு;
அவரது ''சத்தமும்'' (வச 22) (ஆவியானவரின் குரல்) உண்டு.

எங்கே கீழ்ப்படியத் தவறினோமென்று தேவன் அறிவார்;
அதை அறிக்கையிட்டு மனந்திரும்புவோம்.

4. தாவீது

2 சாமு 12:7-14
இப்பகுதியின் கருத்து: பாலியல் பாவம்

படிப்பினைகள் —

அ) விபசாரம் இரகசியமானாலும் தேவனுக்கு மறைந்ததல்ல (வச 12)
யோபு 24:15 ... *ஒரு கண்ணும் காணாதென்று ...*
யோசேப்பு (ஆதி 39:9) ... வீட்டில் ஒருவருமில்லை...(வச 12)

ஆ) அது நமது சகமனிதருக்கு எதிரான பாவம்.
உரியா ஓர் உண்மையுள்ள சகோதரன் (2 சாமு 11:9-11)
1 தெச 4:3-6 ... *இதில் சகோதரனை வஞ்சியாமல் ...*

இ) தாமதித்து அறிக்கையிடல் பாதகமானது.
சங் 32:3-5 ... *நான் அடக்கிவைத்தவரை ...*
சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இழப்போம் (சங் 51:12)
வெளி 2:21,22 (தேவன் **நேரம்** தருகிறார்!)

ஈ) தேவன் மன்னிக்கிறார்; விளைவுகளோ வேதனை (வச 13,14)

உ) நாம் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும்.
சங் 51:10 ... *நிலைவரமான ஆவி*
யோபு 31:1,4 ... (உடன்படிக்கையைக் காக்கிறோமோ என்று
தேவன் கவனிக்கிறார்)

ஊ) சோதிக்கப்பட்டாலும் நமது உள்ளத்தின் உண்மையைத் தேவன்
கனப்படுத்துகிறார் —
ஆதி 20:6 ... *அபிமெலேக்கு ... உத்தம இருதயம்*

5. அனனியா, சப்பீராள்

அப் 5:1-11
இப்பகுதியின் கருத்து: மாய்மாலம்
மத் 23 — *''ஐயோ''* ... 7 தடவை
வச 13,14,15,23,25,27,29
லூக் 12:1-3...மாய்மாலத்தையே இயேசு முதலாவது எச்சரித்தார்.

படிப்பினைகள் (அப் 5:1-11)

அ) மாய்மாலம் என்பது **சாத்தானோடு** கூட்டு வாழ்க்கை (வச 3).
சாத்தானுக்கு நண்பனாவது எத்தனை கேவலம்!

ஆ) மாய்மாலம் தேவனிடம் சொல்லப்படும் பொய் (வச 3,4).

இ) மாய்மாலம் ஆவியானவரைச் **சோதிக்கிறது** (வச 9).
தேவன் அறியார் என்றெண்ணுவது எத்தனை மடமை!

ஈ) மனந்திரும்பாவிடில் மாய்மாலம் கடுமையாய்த் தண்டிக்கப்படும். ஒருவருக்கொருவர் தெரியாது இத்தம்பதியர் புதைக்கப்பட்டனர்.

நாம் இருப்பதைவிட வேறு தோற்றத்தை மக்களுக்குக் காட்ட முயல வேண்டாம். இது சுலபமல்ல, ஆனால் தேவன் அறிவார் என்று எப்பொழுதும் நினைவிற்கொள்வதே ஒரே வழி.

■ *முடிவுரை*

பரிசோதனையில் இரு கட்டங்கள் —

அ) தற்பரிசோதனை (1 யோ 3:19-21)

ஆ) தற்பரனின் சோதனை (சங் 139:23,24)

முதற்கட்டம் (அ) கவனியாது அடுத்தக் கட்டம் (ஆ) செல்லாதீர்.

ஒரு பாடல்

தேவன் அறிவார், என்னை அறிவார்
எல்லாம் அறிவார், முன்னமே அறிவார்

நானோ அறியேன், அவர் அறிவார்
ஆதியும் அந்தமும் அவர் அறிவார்

உள்ளமதின் நினைவுகளைச் சொல்லாமல் அறிவாரே
கள்ளமாகச் செய்தாலும் பொல்லாப்பு வெளிவருமே
வெள்ளமாய்ப் புலம்பிடுவேன் துள்ளியே எழும்பிடுவேன்

ஞானமதின் ஊற்றுக்கண்ணாம் வானாதி வானவரே
ஆ தேவ ஐஸ்வரியம் ஆழத்தின் ஆழமதே
பாதாளம் அறிந்தவர்க்கு மானிடன் எம்மாத்திரம்?

குறுகியநம் அறிவினின்று நிறைவுக்கு ஏகிடுவோம்
புறை அகன்று நிழலானதை முறையாகக் கண்டிடுவோம்
பிறையாக வளர்ந்திடுவோம், இறைவனை அறிந்திடுவோம்

மறைவினிலே கற்றவைகள் பறைசாற்றி அறிவிப்போம்
துரைகளின்முன் சாட்சியிட்டு தூதர்முன் சான்றெய்துவோம்
மறுதலியாதவர்க்கு மறைவான மன்னாவுண்டு

நாழிகையும் நாளையும் வேளையும் அறிந்தவரே
சளைக்காமல் சாட்சியானால் காளைகள் நாம்தானே
தாளங்கள் மேளமுடன் மணவாளன் வந்திடுவார்

— Dr. லில்லியன் ஸ்டான்லி

58

பொல்லாத ஆவிகளை வெல்லுவது எங்ஙனம்?

How to overcome evil spirits

முகவுரை

- கிறிஸ்தவ வாழ்க்கை துவக்கம் முதல் முடிவு வரை போராட்டம்தான் —

☐ எனவேதான் பவுலின் சாட்சி —
''நல்ல போராட்டத்தைப் போராடினேன் ...
ஓட்டத்தை முடித்தேன்'' (2 தீமோ 4:7)

☐ பைபிளின் கடைசிப் புத்தகத்தின் துவக்க அத்தியாயங்களில் அடிக்கடி வருவது —
''ஜெயிக்கிறவன் எவனோ'' (வெளி 2:7,11, ...)

☐ நமது போராட்டம் *''இரத்தத்தோடும் மாம்சத்தோடும்''* அல்ல —
அதாவது, மனிதரோடல்ல, தீய சக்திகளோடு (எபே 6:12)

☐ சாத்தான் ஒருவன், அவனது உடனாளிகளோ அநேகர்; அவர்கள்தான் பொல்லாத ஆவிகள்.

☐ நாம் **செய்யக்கூடாத** இரு காரியங்கள் —

அ) சாத்தானைக் குறைவாய் மதிப்பிட்டுவிடக்கூடாது.
அவன் *உலகத்தின் அதிபதி* (யோ 14:30)
அவன் *ஆகாயத்து அதிகாரப் பிரபு* (எபே 2:2)

ஆ) அவனை அளவுக்குமீறியும் மதிப்பிட்டுவிடக்கூடாது.
அவன் *அதிபதிதான்;*
ஆனால் தேவன்தான் *இராஜா* (1 தீமோ 6:15).
தேவன் அவனிலும் பெரியவர், வல்லவர் (1 யோ 4:4)

☐ நாம் **மறக்கக்கூடாத** இரு காரியங்கள் —
அ) யுத்தம் நமதல்ல, கர்த்தருடையது!
2 நாளா 20:15ஆ (திருமறையில் அடிக்கடி வருவது)

ஆ) நாமும் போராட வேண்டும்!
1 தீமோ 6:12அ ... *விசுவாசத்தின் நல்ல போராட்டம்*

• திரள் திரளான பொல்லாத ஆவிகள் உண்டு —

நாமனைவரும் எதிர்த்துப் போராடவேண்டிய 5 ஆவிகள்:

1. வஞ்சிக்கும் ஆவிகள் (Deceiving spirits)
2. மனத்தொய்வுண்டாக்கும் ஆவிகள் (Depressing spirits)
3. அழிக்கும் ஆவிகள் (Destroying spirits)
4. குறிசொல்லும் ஆவிகள் (Divinatory spirits)
5. அதிகாரவர்க்க ஆவிகள் (Dynastic spirits)

1. வஞ்சிக்கும் ஆவிகள் (Deceiving spirits)

- கடைசிக்காலத்திற்கான முன்னறிவிப்பு —
  1 தீமோ 4:1 ... *பிசாசுகளின் உபதேசம்*
- *''ஒளியின் தூதர்''* போன்று வஞ்சகம் —
  2 கொரி 11:13-15 (துர்வுபதேசக்காரர்)
- எ.கா.) ஏதேன் தோட்டம் (ஆதி 3:1-5) —
  மக்களை வஞ்சிக்கும் விதம் ...

அ) திருவசனத்தைச் சந்தேகிப்பது... *''தேவன் சொன்னதுண்டோ?''*

ஆ) திருவசனத்தைத் திருக்குவது... *''தொடவும் வேண்டாம்''*

இ) திருவசனத்தை மறுப்பது... *''நீங்கள் சாகமாட்டீர்கள்''*

கவர்ச்சியானது —

சர்ப்பம் என்றால் மினுங்குவது, அழகானது என்று பொருள்.
அதனால்தான் ஆதாம் அதற்கு இப்பெயர் கொடுத்தான்!

■ இந்த ஆவிகளைச் சோதித்தறிவது எப்படி?

அ) அவை தெய்வீக **ஆண்டவரை** அறிக்கையிடுன்றனவா?
1 யோ 4:2,3
யேகோவா சாட்சிக்காரர், மார்மன் கூட்டத்தினர், ...

ஆ) அவை தெய்வீக **வாழ்வைக்** கொண்டுள்ளனவா?
2 பேது 1:4 ... *கேட்டுக்குத் தப்பி*
தெய்வீக சுபாவத்துக்குப் பங்கு
வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தம் —
ரோ 11:16ஆ

இ) அவை தெய்வீகச் **சட்டத்தை** ஏற்றுக்கொள்கின்றனவா?
2 தீமோ 4:3,4 ... *ஆரோக்கிய உபதேசம் ... கதைகள்*
வேதத்திற்குக் கூடுதலான வெளிப்பாடுகள்.
பைபிள்: கூட்டலும் கழித்தலும் ஆபத்து.
''தேவனை நம்புங்கள்;
மற்றவைமீது கொஞ்சம் சந்தேகம் நன்று!''

■ ***இந்த ஆவிகளை மேற்கொள்வது எப்படி?***

அ) தேவ வார்த்தையில் ஊறியிருங்கள் —
எரே 15:16 ... *உமது வார்த்தைகளை* ***உட்கொண்டேன்***
23:28,29 ... *சொப்பனம் ... வார்த்தை*
(பதர்) (கோதுமை)

ஆ) தேவ பக்தியுள்ள தலைவர்களிடம் அடங்கியிருங்கள் —
1 யோ 4:6 ... *சத்திய ஆவி* vs. *வஞ்சக ஆவி*

இ) நவீன, வினோத, உபதேசங்களுக்கு விலகியிருங்கள் —
1 தீமோ 6:3-5 ... பொருளாசைதான் முடிவு

2. மனத்தொய்வுண்டாக்கும் ஆவிகள் (Depressing spirits)

பிரச்னைகள், துன்பங்கள் வழியாய்ச் செல்லும்போது பிசாசு
நமது மனதைத் தொய்வடையச் செய்கிறான் —

1 பேது 5:7-9 ... *கவலைகள் ... பாடுகள் ... சிங்கம்*

2 கொரி 2:7-11 ... பின்மாற்றமடைந்த நிலையை
அவன் சாதகமாக்கிக்கொள்கிறான் ...
''அதிகத் துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடி''

■ ***இந்த ஆவிகளை மேற்கொள்வது எப்படி?***

அ) தேவனது **அன்பைத்** தியானியுங்கள் —
ரோ 8:34-39 ... *குற்றம் சாட்டுபவன் யார்?*
நம்மைப் பிரிப்பவன் யார்?

''தேவன் உங்களை அதிகமாகவோ குறைவாகவோ நேசிக்க
நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது!''

ஆ) கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை உரிமைபாராட்டுங்கள் —
வெளி 12:11 (குற்றச்சாட்டுகள்)

இ) தேவனைத் துதித்துக்கொண்டேயிருங்கள் —
சங் 84:4-7 ... *கண்ணீர் ... நீரூற்று*
Baca → Beracha
(முட்புதர்கள் நிறைந்த அப்பள்ளத்தாக்கைக் கடப்பது
கண்ணீர் நிறைந்த பாதையின் அனுபவம்)

எ. கா.) *அன்னாள்: கசப்பு ... வாடிய முகம் ... பின்னர் துக்கமில்லை!*
(1 சாமு 1:10,18)

ஈ) திருமறைத் தியானத்தைச் கூட்டுங்கள் —
சங் 119:92 ... *வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால்*

உ) ஐக்கியம் நாடுங்கள் —
யாத் 17:11,12 ... *மோசேயின் கரங்கள் ... ஆரோன் ... ஊர்*
உட்காருவதற்குக் கல் கிடைத்தால் போதாது;
தாங்குவதற்குக் கரம் தேவை.

3. அழிக்கும் ஆவிகள் (Destroying spirits)

யோ 10:10 ... *திருடன்... கொல்லவும் அழிக்கவும் வருகிறான்.*

நபர்களைப் பிடித்துக்கொண்டு அல்லது தாக்கிக்கொண்டு, வியாதிகள், பைத்தியம், சாவு போன்றவற்றை உண்டுபண்ணுகிற ஆவிகள் இவை.

■ நினைவிற் கொள்ளவேண்டிய இரு காரியங்கள் —

அ) எல்லா வியாதிகளும் பொல்லாத ஆவிகளின் செயல்பாடு எனக் கூறமுடியாது.

மற்ற காரணங்கள்: ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், ஓய்வின்மை, உடற்பயிற்சியின்மை, முதிர்வயது, பிரசவ வேதனை, முடி விழுதல், பல் விழுதல், கண்களில் புறை, ...

எ.கா.) தீமோத்தேயு: 1 தீமோ 5:23
உணவில் மாற்றம் அறிவுறுத்தப்பட்டது.

ஆ) சாவு **இன்னும்** அழிக்கப்படவில்லை.
1 கொரி 15:26 ... *கடைசிச் சத்துரு*
ஏசா 25:8 ... *புதிய வானம் புதிய பூமி ...*
மரணம் விழுங்கப்படும்.

■ அழிக்கும் ஆவிகளுக்கெதிரான **போராயுதங்கள்** —

அ) கிறிஸ்துவின் அதிகாரம்
''என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்''
மாற் 16:17
எ.கா.) மெலிந்த காவலன் விரையும் வாகனத்தை நிறுத்துகிறான்!

ஆ) தேவனுடைய ஆவியானவர்
ஏசா 59:19 ... *சத்துரு வெள்ளம்போல் வரும்போது ...*
ஆவியானவரால் நிறைந்திருங்கள்: காலியாயிருக்கக்கூடாது!
பரிசுத்த ஆவியின் நிறைவே பிசாசு பிடிக்காதிருப்பதற்கு உறுதியான மாற்று மருந்து.

இ) தேவனுடைய வார்த்தை
மத் 8:16 ... *வார்த்தையினால் ஆவிகளைத் துரத்தினார்.*
திருவசனத்திற்குமுன் பிசாசு நடுங்குகிறான்.

இம்மூன்று போராயுதங்களையும் சீராகப் பயன்படுத்த உதவும் ஏதுக்கள்: விசுவாசம் — ஜெபம் — உபவாசம்
(மத் 17:19-21)

4. குறிசொல்லும் ஆவிகள் (Divinatory spirits)

இந்த ஆவிகளால் முன்னறிவிக்க முடியும், வழிநடத்த முடியும், அற்புதங்கள் செய்ய முடியும், தரிசனங்கள் காட்ட முடியும், மந்திர சக்திகள் காட்ட முடியும், முதலியன.
ஆனால் அவை தேவனால் உண்டானவையல்ல!

மகிமையானதொரு திருவாக்கு:
எண் 23:23 ... *தேவ மக்களுக்கு எதிரான குறிசொல்லுதல் இல்லை*

ஆனாலும் திருமறை சில எச்சரிப்புகள் தருகிறது —

அ) திருவசனத்திலிருந்தே நடத்துதல் தேடுங்கள் —
ஏசா 8:19,20 ... *வேதம் ... சாட்சியாகமம் ... குறிகாரர் ...*

எ.கா.)		
	திருமணம்,	கிரமமான வேதத் தியானம்,
	படிப்பு, வேலை,	ஜெப வாழ்வு,
	ஊழியம், முதலியன	மூத்தோர் ஆலோசனை

ஆ) கவர்ச்சியான எதையும் கண்டு மயங்கிவிடாதிருங்கள் —

எகிப்தின் மந்திரவாதிகள் — யாத் 7

தேவன் நம்மைப் பரிசோதிக்கிறார்! — உபா 13:1-3

இ) மறைவானவற்றில் ஆர்வம் காட்டாதிருங்கள் —

உபா 29:29 ... *மறைவானவை தேவனுக்குரியவை*

ஈ) மாயாஜாலம், பில்லிசூனியம், விக்கிரகாராதனை போன்ற வற்றோடு எவ்விதத் தொடர்பும் வைக்காதிருங்கள்.

அப் 19:19 ... மந்திரவாதிகளின் புத்தகங்கள் எரிப்பு (மதிப்பு: 50,000 வெள்ளிக் காசுகள்!)

உ) தரிசனங்கள், சொப்பனங்கள் பின்னால் ஓடாதிருங்கள் —

பார்த்தது ஒரு தூதனாயிருக்கும்,

அது இயேசு என்று நினைத்துவிடுவோம்!

வெளி 19:10 | அப்போஸ்தலன் யோவான்
22:8,9 | இருமுறை திருத்தப்பட்டார்.

5. அதிகாரவர்க்க ஆவிகள் (Dynastic spirits)

இந்த ஆவிகளை அப்பட்டமாய் அடையாளங்காட்டும் பகுதி — எபே 6:10-12

- *''துரைத்தனங்கள்''* — இயக்குநர்கள்
  பல்வேறு ஆவிகளின் கூட்டங்களின் தலைவர்கள்
- *''அதிகாரங்கள்''* — தாக்குதல்களை முன்னின்று நடத்தும் அதிகாரிகள்
- *''இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள்''* —
  சாத்தான்தான் அதிகாரப் பிரபு —
  அவனது உடன் தலைவர்கள்தான் இவர்கள்.
  (இருள் x வெளிச்சம்)
- *''பொல்லாத ஆவிகளின் சேனைகள்''* — தீய சக்திகள், ஆவிகள்

இவ்வசனப்பகுதியின் சூழமைவு?

எபே 5:22-6:9 → இல்லம்/குடும்பம்

6:18-24 → திருச்சபை/திருப்பணி

குடும்பங்களையும், சபைகளையும், ஊழியங்களையும் சாத்தானின் தாக்குதலிலிருந்து காக்க இது ஓர் அழைப்பு!

- எங்ஙனம்? — *''சர்வ'' ஆயுத வர்க்கம்* (அனைத்துப் படைக்கலன்கள்) (6:11,13) ... *''சர்வ''* என்பது முக்கியம்!

அ) *சத்தியத்தில்* உறுதியாய் அடித்தளமிடுங்கள் — *கச்சை*
''இயேசுவே கிறிஸ்து!''

ஆ) மெய்யான *நீதி வாழ்வை* மேற்கொள்ளுங்கள் — *மார்புக்* கவசம்

இ) *சுவிசேஷம்* அறிவிப்பதில் விறுவிறுப்பாயிருங்கள் — *காலணி*

ஈ) சோதனை, வேதனையில் *விசுவாசமாயிருங்கள் — கேடகம்*

உ) மாபெரும் *இரட்சிப்பில்* களித்திருங்கள் — *தலைச்சீரா*

ஊ) *திருவசனத்தால்* சத்துருவைத் தாக்குங்கள் — *பட்டயம்*

எ) எல்லாப் பரிசுத்தவான்கள், பாவிகளுக்காய் இடைவிடா *ஜெபம்*

முடிவுரை

ஆவிகளின் இப்பட்டியல் முழுமையானதல்ல.
இன்னும் எத்தனையோ பொல்லாத ஆவிகளுண்டு.
ஆனால் இவை எல்லாவற்றையும் எதிர்க்க நம்மோடு
தெய்வீக ஆவிகள் உண்டு —

- பிதாவாகிய தேவன் ... ஓர் ஆவி (யோ 4:24)
- குமாரனாகிய தேவன் ... கிறிஸ்துவின் ஆவி (ரோ 8:9)
- ஆவியானவராகிய தேவன் (அப் 5:3,4)
- தேவ தூதராகிய ஆவிகள் (எபி 1:13,14)

நமக்குத் தேவை ஒரு கண் திறப்பு —

எ.கா.) 2 இரா 6:15-17 ... (சீரியரின் சேனை)
சத்துருக்களால் சூழப்பட்டிருந்தபோது தனது வேலைக்காரனின் கண்கள் திறக்கப்பட எலிசா ஜெபித்தான்:

''நம்மோடிருப்பவர்கள்'' > ''அவர்களோடிருப்பவர்கள்''

59

சோர்புண்டாக்கும் அம்புகள்

Arrows of Discouragement

முகவுரை

- சோர்பு — பிசாசின் மிக வலுவான ஆயுதம்
- விவிலியத்தில் அடிக்கடி வரும் செய்தி: *''கலங்காதிருங்கள்!''*
  உபா 1:21 / யோசு 1:9 / 1 நாளா 28:20
  கிறிஸ்து ஒருபோதும் சோர்படையவில்லை (ஏசா 42:4).
  நாமும் சோர்படையக்கூடாது (எபி 12:3).
- ''சோர்பு'' = நம்பிக்கை இழத்தல்
  = இதயம் துவளுதல்
  = பயந்து நடுங்குதல்
  = தடைகளால் விரக்தியடைதல்
  = உற்சாகம் இழத்தல்

  தனது **பொய்களால்** பிசாசு நம்மைச் சோர்படையச் செய்கிறான்.
  அவன் எல்லாப் பொய்களுக்கும் தந்தை.
  அவனது பொய்கள் பெரும்பாலும் பாதி உண்மைகளாம் —
  அதாவது, சத்தியத்தின் ஒரு பகுதி மட்டும்.
  அது சரியாயிருக்கலாம், ஆனால் சத்தியமல்ல.
  எ.கா.) ஆதி 3:5,22

ஏழு பொய்கள்: ''சோர்புண்டாக்கும் அம்புகள்'' —

1. பரிசுத்த வாழ்க்கையானது வாழமுடியாத அளவு கடினம்.

- ஆம், *அநேக உபத்திரவங்கள் வழியாய்* ... அப் 14:21,22
  அடுத்த பக்கம்: *''அவர்கள் விசுவாசித்திருந்த கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள்''* (வச 23)
  2 தீமோ 1:12 ... *நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று* ...
- ஆம், *நான் நிர்ப்பந்தமான மனிதன் ... மரண சரீரம்* (ரோ 7:22-24)
  அடுத்த பக்கம்: (வச 25-8:2) ... *கிறிஸ்து ... விடுதலை*

- எச்சோதனையும் மேற்கொள்ள முடியாததல்ல (1 கொரி 10:13).
  இச்சிக்க (வச 6), பாலினப் பாவம் செய்ய (வச 8),
  முறுமுறுக்க (வச 10) வரும் சோதனை.
- சில தடைகளை மேற்கொள்ள மனிதனின் பொறுப்பு —
  ... *செல்வம் ... ஒட்டகம்* ... (மத் 19:21-24)
  அடுத்த பக்கம் (வச 25,26) ... *தேவனால் எல்லாம் கூடும்.*
  ''மனுவுடலுள்ள யாவருக்கும் கர்த்தர்...செய்யக்கூடாதது உண்டோ?'' (எரே 32:27)
- *''கோதுமையைப்போல் புடைப்பு''* ... திரும்பத் திரும்ப, கூடிக்கொண்டே ...
  ஆனால் அடுத்த பக்கம்: *''உனக்காய் வேண்டிக்கொண்டேன்''* (லூக் 22:31,32)

  ''ஒருவன் பாவம் செய்தால் ... பரிந்து பேசுகிறவர்'' (1 யோ 2:1)

2. தேவனது வழிகள் புரிந்துகொள்ள முடியாத புதிர்.

- புதிய ஏற்பாட்டில் பதிலளிக்கப்பட்டதொரு பழைய ஏற்பாட்டுக் கேள்வி — ஏசா 40:13,14/1 கொரி 2:16 *(கிறிஸ்துவின் சிந்தை)*
  பழைய ஏற்பாட்டில் முடியாதது
  புதிய ஏற்பாட்டில் சாத்தியமாயிற்று!
  அப்படியே, யோபு 11:7-9 vs. 1 கொரி 2:9,10 *(தேவ ஆவியானவர்)*
  மறைபொருள்கள்தான் தேவனுக்குரியவை (உபா 29:29).
  தேவையானதெல்லாம் வெளிப்படுத்தப்பட்டாயிற்று!
- சிட்சை தாங்கமுடியாது வேதனை —
  சங் 73:13-17 ... *பரிசுத்த ஸ்தலத்தில் நுழையும்வரை* ...
- இன்னலுறும்போது இறைவனெங்கே?
  யோபு 23:1- 3,8,9 ... *தேவனுக்குமுன் அமர்ந்து* ...
  அவரைக் காணேன்; அவரோ என்னை அறிவார் (வச 10)
- நடத்துதலுக்கடுத்த காரியங்களில் (சங் 77:13,19 / ஆனாலும் நடத்துகிறார், வச 20)
  எங்கேயென்று தெரியாது ஆபிரகாம் புறப்பட்டான்;
  ஆனால் நடத்துவது ''யார்'' என்பது அவனுக்குத் தெரியும்.
  சீடர்: *நீர் போகிற இடம் எங்களுக்குத் தெரியாது.*
  வழியை எப்படி அறிவோம்?
  இயேசு: *''நானே'' வழி* (யோ 14:5,6)

3. குடும்ப வாழ்க்கை ருசிக்கமுடியாத அளவு சிக்கல்.

- கடைசிக் காலத்தின் அடையாளங்களில் ஒன்று —
  மல் 4:5,6 ... *பிதாக்கள் ... பிள்ளைகள் ...*
  2 தீமோ 3:1,2 ... *பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை ...*

எனவேதான் மூத்த அப்போஸ்தலராகிய பவுலும் பேதுருவும்
கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள்
உறவுகள் குறித்து அவ்வளவு எழுதினர்.

■ பிரச்னைகள் அதிகம்தான்; ஆசீர்வாதங்களை எண்ணுங்களேன் —

□ இக்கட்டான வேளையில் வாழ்க்கைத்துணையின் உதவி:
(பிர 4:9-12) — 4 நன்மைகள்

வாழ்க்கைத்துணையை இழக்கும்வரை இது புரியாது.
கணவன் அல்லது மனைவியை இழந்தோரின் சாட்சி —
''அவர்/அவள் உயிரோடிருந்தால் மன்னிப்பு கேட்டிருப்பேனே!''

உங்கள் வாழ்க்கைத்துணை பற்றிய நல்ல காரியங்களைப்
பட்டியலிடுங்கள்.

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்;
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம்; எண்ணு ஒவ்வொன்றாய்;
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

வாழ்க்கைத்துணைமீது நீங்கள் ஏற்படுத்தும் புனிதத் தாக்கத்தை
நினைத்து மகிழுங்கள் (1 கொரி 7:14) — பொறுமை

எ.கா.) யோபு தனது மனைவியைத் திருத்தினான் (யோபு 2:9,10)
முடிவில் (42:13-16) — அவனது குமாரத்திகள்:
Miss Universe! Miss World! Miss India!

□ பிள்ளைகளால் வரும் ஆசிகளைச் சுதந்தரியுங்கள்.
சங் 127:3-5 ... அவர்களுக்காய்த் தவறாது ஜெபியுங்கள்.
சூசன்னா வெஸ்லி (18 பிள்ளைகள்) —
ஒவ்வொருவருக்காகவும் தினமும் ஜெபித்தார்.

சாதகச் சிந்தையுடனிருங்கள் —
முட்கள் நடுவில் ரோஜா ✓
ரோஜாவைச் சுற்றி முட்கள் ✗

எச்சரிப்பு:

குடும்பத்திலிருந்தே அனைத்து சந்தோஷத்தையும்
எதிர்பார்த்தால் ஏமாற்றமடைவீர்கள்.
''கர்த்தருக்குள்'' சந்தோஷமாயிருங்கள்!

4. உண்மையாயிருக்கமுடியாத அளவு வேலைத்தலங்களில் ஊழல்.

பாரபட்சம் / இனவெறி / இடவெறி

- 1 பேது 2:11-20
  பொய்க்குற்றம் சாட்டுவோர் (வச 12)
  புத்தியற்ற தலைவர்கள் (வச 15)
  கடுமையான அதிகாரிகள் (வச 18)

இவ்வித சூழலில்தான் தேவனை *''மகிமைப்படுத்த''* வேண்டும்.

- ஊழல்வாதிகள் செல்வத்தைக் குவிக்கலாம்;
  ஆனால் நேர்மையானோரின் பங்கு *''பூரண சமாதானம்''* —
  சங் 37:7,8,10,11,37
  சமாதானத்தை அனுபவியுங்கள்: ஏமாற்றுவதுதான் பாவம்;
  ஏமாறுவது பாவமல்ல!
- எகிப்தில் யோசேப்பு — விபசாரத்திற்குச் சோதனை.
  ஆனால் திருவசனம் அவனைக் காப்பாற்றியது (சங் 105:16-22)
  — பொய்க் குற்றச்சாட்டு
- பாபிலோனில் தானியேல் — விக்கிரகாராதனை.
  தனது தியான ஒழுங்குகளைக் கடைப்பிடித்தான் (தானி 6:10)

5. கவரமுடியாத அளவு திருச்சபையில் மாய்மாலம்.

- இன்று இருக்கும் சபை அன்று இருந்த சபைபோல் இல்லை
  என்பது ஊரறிந்த இரகசியம்!
  சண்டைகள்... பிரிவினைகள் ... நீதிமன்ற வழக்குகள் ...
  தேர்தல் ஊழல்கள் ... பணம் பதுக்கல் ... செத்த நிலை ...
  மூச்சு முட்டும் நிலை ... செய்தியற்ற பிரசங்கிமார் ...

சபையென்றாலே சங்கடமாயிருக்கிறது ...
ஆனால் இயேசு சபையை நேசிக்கிறார் ...
எ.கா.) லவோதிக்கேயா சபை (வெளி 3:16,19,20)

- தூயாவியானவர் சபையைக் கண்டித்துணர்த்துகிறார், திருத்துகிறார்; ஆனால் ஒருபோதும் கண்டனத் தீர்ப்பு செய்யார் — எண் 23:21-23

— 20ஆம் அத்தியாயத்தில் மலையை அடித்ததற்காய் மோசேயிடம் தேவன் கோபப்பட்டபோதிலும்!
— 21ஆம் அத்தியாயத்தில் முறுமுறுத்தோரிடம் சர்ப்பங்களை அனுப்பினார்.

திருச்சபையைத் தூங்கிக்கொண்டிருக்கும் அழகி எனலாம் ...
அது சீக்கிரம் சிங்கம்போல் எழும்பும் ... (வச 24).
திருச்சபையின் எதிர்கால மகிமை (ஏசா 60)
(ஏசா 60:1ஐ எபே 5:14உடன் ஒப்பிடுக.)

- திருச்சபை **இப்பொழுது** கறை திரை இல்லாது இல்லை!
ஆனால் கிறிஸ்து அதை அப்படி மாற்றுவார் — எபே 5:25-27

சீர்திருத்தமும் ஆதிநிலையேகுதலும் முற்றுப்பெறவில்லை.
களிகூருங்கள்! ஆட்டுக்குட்டியானவருக்குத் திருச்சபை மணமுடிக்கப்படவிருக்கிறது! —
அவள் கட்டாயம் ஆயத்தமாவாள்! (வெளி 19:7,8)

6. பின்பற்றமுடியாத அளவு பிரசங்கிமாரிடம் வணிகநோக்கு.

- அதிக லாபமுள்ள தொழில்கள்:
அன்று திரையுலகு ... அடுத்து அரசியல் ... இன்று மார்க்கவுலகு

ஒரு காலத்தில், ஊழியத்திற்காய்ப் பணம்;
இப்போதோ, பணத்திற்காய் ஊழியம்!

இயேசுவின் காலத்தில்,
12இல் ஒருவன்தான் திருடன்;
இன்றோ,
12இல் ஒருவன்தான் உண்மையானவன்!

- ஆனாலும் இதயம் சோர்புற வேண்டாம் ...
பொருளாசை இல்லாத ஊழியர் இன்னும் இருக்கின்றனர் (அப் 20:33-35) ... *நான் ஒருவனது வெள்ளியையும் இச்சிக்கவில்லை*

நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றுங்கள் (பிலி 3:17-19)
— எளிய வாழ்க்கை மேற்கொண்டுள்ள பிரசங்கிமார்
— மேய்ப்பனது உள்ளம் கொண்டுள்ள பாஸ்டர்கள்
— தியாகவுணர்வுடன் உழைக்கும் மிஷனரிகள்
(இப்படிப்பட்டோர் இந்தியாவெங்கும் ஆயிரமாயிரம்)

அமெரிக்க டாலரையும் ஜெர்மானிய யூரோவையும் முத்தமிடாத 7000 பேரைத் தேவன் இன்னும் வைத்திருக்கிறார் — ரோ 11:3-5

7. உலக நற்செய்திப்பணி முடிக்கமுடியாத அளவு பெரியது.

- 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தியாவில் பாதிப்பேர் இன்னும் சுவிசேஷத்தைக் கேட்கவில்லை.

குறைந்தது 10,000 பேரைக் கொண்ட 219 இந்திய மொழிகளில் 75இல்தான் முழு வேதமும், 75இல்தான் புதிய ஏற்பாடும் இருக்கிறது —

ஆனால், மும்பை நகர் மட்டும் ஆண்டுக்கு 400 திரைப்படங்கள்!
அதாவது, நாளொன்றுக்கு ஒன்றுக்கு மேல்!
இதையெல்லாம் காட்டிப் பிசாசு நமைத் தீவிர நற்செய்திப்பணியில் இறங்காதவாறு சோர்புறச் செய்கிறான்.

ஆனால் உற்சாகமூட்டும் தகவல்:
உலகில் அதிவேகமாய் வளரும் மார்க்கம்:
கிறிஸ்தவம் — வளர்ச்சி விகிதம் 6.9%
இஸ்லாமியர் — 2.7%; இந்துக்கள் — 2.2%;
புத்த மதத்தினர் — 1.7%

1960இல் உலகில் 100 பேருக்கு
4 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
1970இல் உலகில் 100 பேருக்கு
5 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
1980இல் உலகில் 100 பேருக்கு
6 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
1990இல் உலகில் 100 பேருக்கு
9 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
2000இல் உலகில் 100 பேருக்கு
12 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.

இன்றோ, உலகிலுள்ள 7 பேரில் ஒருவன் கிறிஸ்தவன்!
எதிர்ப்புகளைக் கண்டு பல சமயங்களில் நாம் துவண்டுவிடுறோம்;
ஆனால் —

1 கொரி 16:9 ... *திறந்த வாசல்கள் ... அநேக எதிரிகள்*
எதிர்ப்பின் காலமே வாய்ப்பின் நாள்!
போராட்டம் இருக்கத்தான் செய்யும்;
ஆனால் கட்டிட வேலை நடந்துகொண்டிருக்கும் (மத் 16:18).

- சகல இனத்தாருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் (மத் 24:14)
- பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையும் (ஆப 2:14)

■ *முடிவுரை*

(1) Holy life too difficult to live.
(2) God's ways too misterious to understand.
(3) Family life too problematic to enjoy.
(4) Workspots too corrupt to remain sincere.
(5) Church too hypocritical to be attractive.
(6) Preachers too commercial to follow.
(7) World evangelisation too big to be accomplished.

நமக்கெதிரான எந்த ஆயுதமும் வாய்க்காது.
பிசாசின் மிகச் சக்திவாய்ந்த ஆயுதம்: சோர்புண்டாக்குதல்
நமது மிக முக்கிய ஆயுதம்: விசுவாசம்

''எல்லாவற்றிற்கும் மேலாக'' ... விசுவாசம் (எபே 6:16).
அது சோர்புண்டாக்கும் *அக்கினி அம்புகளை ''அவிக்கும்''*

நீங்கள் விசுவாசிக்கவேண்டியது —

1. தேவனது உதவியோடு பரிசுத்த வாழ்வு சாத்தியம்.
2. நமக்குத் தேவையானதையெல்லாம் தேவன் வெளிப்படுத்துகிறார்.
3. நமது நன்மைக்காகவே தேவன் குடும்பத்தை ஏற்படுத்தினார்.
4. சீரழியும் உலகிற்கு நாம்தான் உப்பு.
5 . திருச்சபையே கிறிஸ்துவின் மணமகள்.
6. உண்மை ஊழியர் இன்னும் உண்டு.
7. பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையும்.

60

தனித்திருத்தல் எனும் ஒழுங்கு

The Discipline of Solitude

முகவுரை

- லியோனார்டு ரேவன்ஹில் —

பெரிய கழுகுகள் தனியாகப் பறக்கும்.
பெரிய சிங்கங்கள் தனியாக வேட்டையாடும்.
பெரிய மனிதர்கள் தனியாக நடப்பர்.

- நெருக்கடியும் சந்தடியும் நிறைந்த இவ்வுலகில் தேவனோடு தனித்து நேரம் செலவழிப்பது ஒரு மறைந்த கலையாயிற்று.
- ஆனால் துவக்க முதலே தேவன் தமது மக்கள் தனித்திருக்க வாஞ்சித்தார் —

எண் 23:9,10 ... *தனித்து வாசம்பண்ணும் ஜனம்*
மீகா 7:14 ... *உமது மந்தை ... தனித்து வனவாசம்*

தமது மக்களைப் பலப்படுத்துவதில் தேவனது நித்தியமான தத்துவம் இதுவே —

ஏசா 40:28-41:1 ... *அநாதி தேவன் ... காத்திருப்போர் ... மவுனம் ... புதுப்பெலன் ...*
ஒரு சவால்: *நீங்கள் அறியீர்களா? ... ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா?* (வச 21,28)

- யுகா யுகமாய்த் தேவன் தமது மனிதரைத் தனிமையிலேயே ஆயத்தம்பண்ணி வந்திருக்கிறார் —

எ.கா.) மோசே: 40 ஆண்டுகள் + 40 ஆண்டுகள் + 40 ஆண்டுகள்
திருமுழுக்கினன் யோவான் (லூக் 1:80)
இயேசு கிறிஸ்து (லூக் 4:1,2)

அப்போஸ்தலன் பவுல் —

3 நாட்கள் — மனந்திரும்பியவுடன் (அப் 9:9,11)
3 ஆண்டுகள் — ஊழியத்திற்குமுன் (கலா 1:15-18)
சிறைகளில் தனிமை — நிருபங்கள் எழுத நேரம்

தனித்திருத்தலின் பயன்கள் —

1. தேவனோடு நெருக்கவுறவு ஏற்படுத்த முடியும்.

— காதலர்கள் ஒருவரோடொருவர் தனித்திருக்க விரும்புவர்.
ஆள் கூட்டம் அவர்களுக்குப் பிடிக்காது.
அழகான சித்திரம்: உன் 7:11,12
(நேசரிடம் சூலமித்தி சொன்னது)

— பெற்றோர்-பிள்ளைகள் உறவில் நெருக்கம் (2 கொரி 6:16-18)
அவர் ''சர்வ வல்ல'' தேவன்; ஆனாலும் அவர் வாஞ்சிப்பது
தந்தை-பிள்ளைகள் உறவுதான்.

இதைத்தான் இயேசு எப்பொழுதும் வாஞ்சித்தார் —
மத் 14:12,13 ... *வனாந்திரமான ஓரிடத்திற்கு ...*
மாற் 1:35 ... *தனிமையான ஓரிடம் ... ஜெபம்*
லூக் 5:15,16 ... *வனாந்திரத்தில் தனித்துப்போய் ஜெபம்*

பிதாவோடிருந்த இந்த நெருக்கவுறவினாலேயே இயேசு சொன்னது:
''நான் தனியாக இல்லை'' (யோ 8:16,29; 16:32)

மறுபிறப்பினால் தேவனோடு நமக்குக் கிடைத்த
பொது ''ஐக்கியத்தில்'' திருப்தியடைந்துவிடாதீர்.

தேவனோடு நெருக்கவுறவு, நட்புறவு கொள்ளத் துடியுங்கள்.

தேவனுடைய *''ஊழியனாய்''* இருப்பதில் திருப்தியடையாதீர்;
அவரிடம் நெருங்கி அவரது *''நண்பனாய்''* மாறுவீர் —
யோ 15:15

எ.கா.) ஆபிரகாம்: யாக் 2:23 / ஆதி 18:17

இயேசு தமது சீடரைத் தெரிந்தெடுத்ததின் பிரதான நோக்கம்
(மாற் 3:14) ... *அவரோடிருக்க.*

2. திருவசனத் தியானித்தில் திளைத்திருக்க முடியும்.

திருவசனத் தியானத்தில் திளைத்திருக்கவேண்டுமானால் கட்டாயம்
சந்தடி நிறைந்த உலகிலிருந்து தனித்து வரவேண்டும்.

உபா 33:3 ... *சிநேகம் ... உமது பாதம் ... உமது வார்த்தைகள்*
(இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்த மரியாள் போல!)

இதுவே திருப்பாடகனின் அனுபவம் (சங் 1:1,2)
இதுவே தீர்க்கன் எரேமியாவின் அனுபவம் (எரே 15:16,17)

உங்கள் நேரத்தைத் திருடுகிறவர்களுக்கு ஜாக்கிரதை!
எல்லா வைபவங்களிலும் பங்கேற்க நினைக்காதீர்.
அளவுக்குமீறி சந்திப்புகள், விருந்தினர்கள் வேண்டாம்.

— தவறாது தேவனோடு அமைதி நேரம் செலவிடுகிறீர்களா?
அந்த நேரத்தில் யாரும் உங்களைக் கூப்பிடக்கூடாது.
கைபேசிகளை அணைத்துவிடுங்கள்.

பெண் தேடும் காலமாயிருந்தாலும் ஈசாக்கு தனது
தியான வேளையை அசட்டை செய்யவில்லை —
ஆதி 24:63 ... *வயல்வெளியில் ... தியானம் ...*

இன்று வாலிபர் Bride வேட்டையில் Bibleஐத் தொலைக்கின்றனர்!
நிச்சயித்துக் கொள்ளுங்கள்: *''கர்த்தர் எனக்காக யாவையும்
செய்து முடிப்பார்''* (சங் 138:2,8)

— மார்க்கவுலகின் பரவச நிகழ்ச்சிகளும் நமது ''அமைதி நேரத்தைத்''
திருடிவிடக்கூடாது:
எ.கா.) மரியாள் (லூக் 2:18,19)
மேய்ப்பரும் மக்களும் பரவசமடைந்திருந்தனர்;
''மரியாளோ ...''

தேவனோடுள்ள அமைதி நேரத்தில்தான் அவர் நமக்கு
வெளிப்பாடுகள் தருகிறார் —
- மோசே (யாத் 34:1-3) ... *தனித்து வா ...
வேறொருவரும் கூடாது*
- தாவீது (சங் 16:7,8) ... *இராக்காலங்களில் ஆலோசனை*
- சவுலிடம் சாமுவேல் (1 சாமு 15:16)
- இயேசு (லூக் 21:37) ... *இரவில் ஜெபம் ...
பகலில் பிரசங்கம் ...*

இயேசு தமது சீடருக்கு இவ்விதப் பயிற்சியையே கொடுத்தார் —
மத் 10:27 ... *நான் இருளில் உங்களுக்குச் சொல்லுகிறதை ...*

இதைத்தான் தாவீது இவ்விதம் சாட்சியிட்டான் —
''உமது வெளிச்சத்தில் வெளிச்சம் காண்கிறோம்'' (சங் 36:9)

திருமறைத் தியானம் அவசரப்படாமலும், தனித்திருந்தும் செய்யப்படாவிடில் **தற்பரிசோதனை** பயனளிக்காது —
புல 3:28,40 ... *தனித்து உட்கார்ந்து ... மவுனமாய் ...*

''தனிப்பட்ட விதத்தில்'' நான் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது—
சங் 26:2 ... *''என்னை'' ஆராய்ந்துபாரும்*
139:23,24 ... *''என்னை'' ஆராய்ந்துபாரும்*

தனித்திருத்தல் எனும் ஒழுங்கு மறைந்து வருவதாலேயே புத்தக வாசிப்பு குறைந்து வருகிறது —
சிறைவாசத்திலும் பவுல் (2 தீமோ 4:13).
விடுப்பு எடுத்துத் தரமான புத்தகங்களை வாசித்து முடியுங்கள்.

3. மன்றாட்டு ஜெபத்தில் நம்மை ஊற்றிவிட முடியும்.

பழைய ஏற்பாட்டு மன்றாட்டு வீரர்களில் ஒருவர் எரேமியா —
எரே 9:1,2 ... *தண்ணீர் ... கண்ணீர் ... என் ஜனத்தை விட்டு ...*

தேவனோடு தனித்து நின்றபோதுதான் சோதோமுக்காய் ஆபிரகாம் மன்றாடினான் — ஆதி 18:22,33

தனி ஜெபத்தில் இயேசு தேறியிருந்தார் —
மத் 14:22,23 ... *மலை ... தனிமை ...*
இது 5000 பேருக்கு உணவளித்தவுடன்!

படிப்பினை: தேவன் நம்மை எவ்வளவாய்ப் பயன்படுத்துகிறாரோ அவ்வளவாய் அவரோடு தனித்திருக்கவேண்டும்;
இல்லையேல் வெற்றிகள் தோல்விகளில்தான் முடியும்.

இயேசுவை யோவான் அல்லது எலியா அல்லது எரேமியா என்று நினைத்ததற்கு ஒரு காரணம் தனிமையை அவ்வளவாய் அவர் விரும்பியதாயிருக்கலாம் —
மத் 16:14 ... இம்மூவரும் தனிமைக்கும் மன்றாட்டுக்கும் பெயர் பெற்றவர்கள்!

தனித்திருந்து ஜெபிக்கும் பழக்கம் மங்கி வருகிறது.
முழு இரவு அல்லது முழுப்பகல் ஜெபத்திற்கு விரையும் பலருக்கு ஒரு மணி நேரம் தேவனோடு தனித்திருக்க முடியாது!

ஜெபத்தைப்பற்றிய இயேசுவின் போதனையில் முதல் பாடம் —
மத் 6:6 ... *அறைவீடு ... கதவு அடைப்பு ... அந்தரங்கம்*

கூட்டு ஜெபத்தைப்பற்றி 18ஆம் அத்தியாயத்தில்தான் பேசினார்—
மத் 18:19,20

எனவேதான் பவுல் அடிக்கடி *''என்'' ஜெபங்கள்* என்றார் —
ரோ 1:9; 10:1
எபே 1:16; 3:14,15
பிலி 1:3,4
2 தீமோ 1:3

திரள் கூட்ட ஜெபம் பிரபலமாயுள்ள இக்காலத்தில் தனி ஜெபத்தின் முக்கியத்துவம் குறைந்து வருகிறது.

தனி ஜெபத்தில் மக்கள் போதுமான நேரம் செலவிடாததாலேயே சபை ஆராதனைகளில் திருமறைச் சட்டங்களை மீறுகின்றனர் —
எ.கா.) *அந்நிய பாஷை* (1 கொரி 14:17,18)

சிறு குழுக்களாய்க் கூடி ஜெபிப்பதையும் இயேசு முக்கியப் படுத்தினார் —
லூக் 9:28,29 ... மறுரூப மலை
22:39,40 ... ஒலிவ மலை

இச்சிறு குழுக்களிலிருந்தும் கடந்துபோய்த் தனித்து ஜெபித்தார் —
(வச 41)

சிறு குழுக்களாய் ஜெபிப்பதற்கு இன்னும் சில எடுத்துக்காட்டுகள் —
லூக் 9:10 ... இயேசுவும் 12 அப்போஸ்தலரும்
அப் 13:2,3 ... பவுலும் பர்னபாவும் — 5 பேர்
16:13 ... ஆற்றோரம் / பவுல், லூக்கா, தீமோத்தேயு

சிறு ஜெபக்குழுக்கள் பெற்றெடுத்த மிஷனரி இயக்கங்கள் —
எ.கா.) FMPB ... கடற்கரை ஜெபம் (தூத்துக்குடி)
BYM ... காடுகளில் ஜெபம் (காரைக்குடி)
இன்றோ எல்லாமே நிகழ்ச்சிகளாகிவிட்டன.

இன்னொரு எழுப்புதல் வரவேண்டுமானால்
சிறு குழுக்களாய்க் கூடி ஜெபிப்பது திரும்பவேண்டும்.
எ.கா.) தாய்மார் ஜெபக்கூட்டங்கள்

இங்குங்கூட,
தனி நபர்களது தனி ஜெபம் முக்கியத்துவம்
பெறும்போதுதான் குழு ஜெபங்கள் பெரும் பயன் தரும்.

எ.கா) 1963 முதல் எங்கள் கல்லூரி நாட்களில் மாலைதோறும்
ஒரு மணிநேரம் தனித்து ஜெபித்த பின்னர்தான் கூடி ஜெபித்தோம்.

- மன்றாட்டு ஜெபத்தில் **உபவாசம்** ஒரு சிறப்பம்சம்.
  அதுவும் முடிந்தவரை **இரகசியமாகவே** இருக்கவேண்டும் —
  மத் 6:16-18
  உபவாசம் என்பது ‘‘போஜனத்திலிருந்து’’ மட்டுமல்ல,
  ‘‘ஜனத்திலிருந்தும்!’’

- **கண்ணீர்** ஜெப எழுப்புதலே இன்றையத் தேவை!
  புல 3:48-51 ... *கர்த்தர் நோக்கிப் பார்க்குமட்டும் ... கண்ணீர் ...*

  தனிமையில் தனி நபர்களிடமிருந்து புலம்பல் துவங்கவேண்டும் —
  எஸ்றா 10:1 ... *அறிக்கையிட்டு, அழுது, விழுந்து ...*
  நெகே 1:4 ... *உட்கார்ந்து, அழுது, மன்றாடி ...*

  மாற்றுக்களை அறிமுகப்படுத்துவதில் பிசாசு கில்லாடி —
  எ.கா.) அழுது புலம்புவதில் எழுப்புதலுக்குப் பதிலாக
  சிரிப்பு எழுப்புதல் என்று புகுத்தியிருக்கிறான்.

  தேவனுக்கேற்ற துக்கத்திற்குப் பதிலாக, உலகிற்கடுத்த
  கவலைகளால் மக்களை நிரப்புகிறான் (2 கொரி 7:10)

பவுல் ஒரு *‘‘கண்ணீர்ப்’’* பிரசங்கி —
அப் 20:19 ... *மனத்தாழ்மையோடும் கண்ணீரோடும்* ...

அவனது விசுவாசக் குமாரனாகிய தீமோத்தேயுவும் கண்ணீர்
ததும்பியவனாயிருந்தான் —
2 தீமோ 1:3 ... *உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி ...*

■ *முடிவுரை*

- இன்றையப் போக்கு
  — தனித்திருத்தலுக்குப் பதிலாகத் திரள்கூட்டம்
  — அமைதிக்குப் பதிலாக அலறல்/அலட்டல்

  அமைதி, தனித்திருத்தல் ஆகிய பயிற்சிகள் இல்லையேல்
  சத்தமிடுவதெல்லாம் வறட்டுக் கூச்சல்தான் —
  முதலாவது, *‘‘அமர்ந்திருங்கள்’’* (சங் 46:10)
  அடுத்துதான், *‘‘சத்தமிடுங்கள்’’* (சங் 47:1)

  இந்நாட்களில் எங்குமே, அதிலும் குறிப்பாக ஆன்மீக
  வட்டாரங்களில், சத்தம் அதிகம், சத்துவம் குறைவு —

  பாடல்களின் வார்த்தைகள் புரியாத அளவு இசைக்கருவிகள்
  வாசிப்பது திருமறைக்கு உகந்ததல்ல —

  எபே 5:19,20 ... *பாட்டுகள் ... ஒருவருக்கொருவர் புத்தி ...*
  கீர்த்தனம் (ஏசா 6:3)

  இசையானது இரைச்சலானால் இது எப்படிச் சாத்தியம்?

  ‘‘இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி ...’’

  அப்படியே, கொலோ 3:16, *‘‘இருதயத்தில் கர்த்தரைப்*
  பக்தியுடன் பாடி ...’’

  கூட்டங்களின் முடிவில் இரைச்சலாய் இசைப்பதால்
  ஒருவரோடொருவர் பேசி ஐக்கியப்பட முடிவதில்லை.
  இது அஞ்ஞானம்!

61

எளிமை எங்கே போயிற்று?

Whatever happened to Simplicity?

முகவுரை

''வெற்றி'' (success) என்பது பற்றி ஏராளம் பிரசங்கிக்கப்படுகிறது;
''எளிமை'' (simplicity) என்பதோ அதிகம் பேசப்படுவதில்லை —

ஆனால் முதலாம் பாக்கிய வசனமே எளிமைபற்றியதுதான் —
''ஆவியில் எளிமையுள்ளோர் பாக்கியவான்கள்'' (மத் 5:2,3)

வேறு வார்த்தைகளில்,
எளிமையுள்ளோர் பாக்கியவான்கள்;
முடிவான வெற்றி அவர்களுடையது!

அடுத்த இரு பாக்கிய வசனங்களும் எளிமையைப் பற்றியவையே —
''துயரப்படுவோர் ... சாந்தகுணமுள்ளோர்'' (வச 4,5)

■ ***நமது தேவனைப் பற்றிய யாவும் எளிமையானவையே —***

அ) அவரது மேசியா (Messiah) எளிமையானவர்.

ஏசா 11:1 ... *ஈசாயின் அடிமரத் துளிர்*
42:2,3 ... *கூக்குரலிடமாட்டார் ... நெறிந்த நாணல் ...*
53:2 ... *இளம் கிளை ... அழகு இல்லை ...*
மத் 21:4 ... *இராஜா ... சாந்தகுணம் ... கழுதை ...*
11:29 ... *சாந்தமும் மனத்தாழ்மையும்* (= எளிமை)
அவர் மகா பெரியவராயினும் (வச 27)

ஆ) அவரது செய்தி (message) எளிமையானது.

1 கொரி 1:18-25 ... *சிலுவையைப்பற்றிய பிரசங்கம் ... பைத்தியம் ... பலவீனம்*

சுவிசேஷத்தின் எளிமையே மக்கள் ''இடறக்'' காரணம் —
''நம்ப முடியாத அளவு எளிமை!'' (வச 22,23)

எ.கா.) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் ஆப்பிரிக்க ஆதிவாசிக் கிராமத்திலும் பில்லி கிரஹாம் ஒரே செய்தியைப் பிரசங்கித்தார்!

புதிதாய் இறையியல் பட்டம் பெற்ற ஒருவன் பிரசங்கித்துக்கொண்டிருந்தான். கூட்டத்திலிருந்து ஒரு முதியவர் சத்தமாய்ச் சொன்னது —
"**K**eep-**I**t-**S**imple-**S**tupid!"

இதைத்தான் நாம் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம் (மாற் 12:37) —
''(சாதா) ஜனங்கள் இயேசுவை விருப்பமாய்க் கேட்டனர்''
சுவிசேஷத்தை உலகமெங்கும் அதிக அளவில் ஏற்போர் எளிய மக்களே —
1 கொரி 1:19,26-28 ... *பிரபுக்கள் அநேகரில்லை ... பலவீனர்*

இ) அவரது முறைகள் (methods) எளிமையானவை.

எ.கா.) எலிசா & நாகமான்
2 இரா 5:9,10,13 ... *பெரிய காரியம் இல்லையே ...*

நமது ஆன்மீக வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் தேவன் போதிக்கும் வழிமுறைகள் பொதுவாக எளிமையானவையே —

எ.கா.) தாவீதும் உடன்படிக்கைப் பெட்டியும்
2 சாமு 6:1-7 ... ஒரு *புதிய வண்டியில்* ஏற்றினர்.
தேவனது முறையோ, யாத் 25:14 ... *தோள்கள் மீது ...*
பெலிஸ்தியரது முறை: 1 சாமு 6:7
தேவனது முறைக்குத் திரும்பிவரவேண்டும்: 2 சாமு 6:13

- தேவனுடைய வழிகள் எப்பொழுதுமே எளியவைதான் —
ஏசா 35:8 ... *பேதையரும் அதில் இடறுவதில்லை!*

ஆனால் நாம் காணும் இன்றையக் கிறிஸ்தவத்திலோ எல்லாமே குழப்பம்தான் —
சங் 74:3 ... *பரிசுத்த ஸ்தலத்தில் சத்துரு அனைத்தையும் கெடுத்துப்போட்டான்*

- திருச்சபை எப்படித் தனது எளிமையை இழந்தது பாருங்கள் —

□ கூட்டாஞ்சோறு என்றிருந்த கர்த்தரது பந்தி ஒரு சடங்காயிற்று.

□ யாவரும் பங்கேற்கும் ஆராதனை பலர் வந்து போகும் நிகழ்ச்சியாயிற்று.

- ☐ சாட்சி பகருவது உறவினால் என்பது போய்
அது விற்பனை போலாயிற்று.
- ☐ ஒவ்வொருவரும் ஈடுபடும் ஊழியம் என்பது
பிறரைக் கவரும் பொது நிகழ்ச்சியாயிற்று.
- ☐ அழைப்பும் வரமும் பெற்ற ஊழியரே தலைவர் என்பது போய்
படித்தவர், பயின்றவர் என்றாயிற்று.
- ☐ பெருக்கலில் வளர்ந்த சபை கூட்டலில் வளரலாயிற்று.
- ☐ மிஷனரிகளாய்ச் செல்லுவோம் என்பது போய்
மிஷனரிகளைத் தாங்குவோம் என்றாயிற்று.
- ☐ கலப்பையில் கைவைத்தே சீடத்துவப் பயிற்சி என்பது போய்
அது வகுப்பறைப் போதனையாயிற்று.
- ☐ ஐக்கியம் என்பது கூடி வாழ்தல் என்பது போய்
பெருங்கூட்டங்களில் சந்திப்பது என்றாயிற்று.
- ☐ பக்திவிருத்திக்காகவே வரங்கள் என்பது போய்
பரவசமும் பகட்டுமே நோக்கமாயிற்று.
- ☐ மனிதனது திறமை தேவ வல்லமைக்குப் பதிலாயிற்று.
- ☐ கூடுவதற்காகவே கட்டிடங்கள் என்பது போய்
அவை புனிதத் தலங்களாயின.
- ☐ அங்கத்தினரே தயாரிப்பாளர் என்பது போய்
அவர்கள் வாடிக்கையாளராகிவிட்டனர்.
- ☐ வேதபாடங்கள் வசனத்தின்படிச் செய்கிறவர்களுக்கு என்றில்லாது
வசனத்தைக் கேட்பவர்களுக்கு என்றாயிற்று.
- ☐ நற்செய்திப்பணியில் போங்கள் என்பது வாருங்கள் என்றாயிற்று.

மன்னன் கான்ஸ்டன்டைன் ஆட்சியில் 4ஆம் நூற்றாண்டில்தான் திருச்சபை இப்படிச் சீர்கேடடைந்தது. ஆனால் முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்து இவ்விதச் சபையை நிறுவவில்லை.

(William Beckham எழுதிய *"Second Reformation"*
என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

■ *வாழ்வில் எளிமையைத் திரும்பக் கொண்டுவருவது எப்படி?*

1. திருமறைத் தியானத்தில் எளிமையாயிருங்கள்.

சங் 119:130 ... பேதைகளுக்கு எளிதில் புரிகிறது.
1 பேது 2:1-3 ... *குழந்தை போல ...*
யாக் 1:19-21 ... *''சாந்தமாய்'' வசனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

தேவ வார்த்தையை மரியாள் இப்படித்தான் ஏற்றுக்கொண்டாள் —
லூக் 1:38 ... *அடிமை ... உமது வார்த்தையின்படியே ...*
இதுதான் உண்மையான *''ஆசீர்வாதம்!''* (வச 28)

அவளது பாடலைத் தியானியுங்கள் (லூக் 1:46-59) —
எளிமையில் மேன்மை; மேன்மையில் எளிமை!
''தாழ்மை ... அகந்தை ... பசியுள்ளோர் ...''

தேவனது வெளிப்பாடுகள் பிரதானமாக எளிமையுள்ளவர்களுக்கே —
லூக் 10:21 ... *ஞானிகள் ... பாலகர் ...*
2:8,9 ... *மேய்ப்பர் ... தூதன் மூலம் ...*

சின்ன சாமுவேல் போன்ற மனப்பான்மை கொள்ளுங்கள் —
1 சாமு 3:9,10 ... *சொல்லும் ... கேட்கிறேன் ...*
திருமறையைத் திறக்கும்போதெல்லாம் இப்படி ஜெபிக்கிறோமா?

2. ஜெபத்தில் எளிமையாயிருங்கள்.

தந்தையிடம் பிள்ளை கேட்பதுபோல் ஜெபம்
எளிமையாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் நேரடிப் போதனை இதோ —
மத் 7:7-11 ... *கேட்கிற எந்த மகனும் ...*
6:7,8 ... *வீண் அலப்பல் ... பிதாவானவர் ...*

ஜெபத்தில் எளிமையும், தாழ்மையும் காக்க ஒரு சிறந்த வழி
முழங்காற்படியிடுவதாகும்.

ஆலயங்களில் இருக்கைகள் வந்தபின் **முழங்காலிடுவது** மறைந்து
வருகிறது.

முழங்காலிடுவது மேலைநாட்டுக் கலாச்சாரமோ, கீழைநாட்டுக் கலாச்சாரமோ அல்ல, அது பைபிள் கலாச்சாரம் —

சாலொமோன்	—	1 இரா 8:54 / 2 நாளா 6:13
எஸ்றா	—	எஸ்றா 9:5; 10:1
தானியேல்	—	தானி 6:10
இயேசு	—	லூக் 22:41
ஸ்தேவான்	—	அப் 7:60 ... இறக்கும்போதுகூட
பேதுரு	—	அப் 9:40
பவுல்	—	அப் 20:36 / 21:5

முழங்கால் யாவும் முடங்கும் ... நாவுகள் யாவும் அறிக்கையிடும் ...
(பிலி 2:10) — இதற்கு ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிடாதீர்.
''முழங்காலுக்கு'' ஆன்மீக அர்த்தம் கொடுத்தால், ''நாவுக்கு?!''

ஆராதிக்குபோது நாம் *''முழங்கால்படியிட''* அழைக்கப்படுகிறோம்—
சங் 95:6
''பணிந்து குனிவதும் முழங்காலிடுவதும்'' குறைந்து,
''நிற்பதும் கைகளை உயர்த்துவதுமே'' அதிகரித்துவிட்டதால்
''நடுக்கத்துடனே'' களிகூருவது மறைந்துவிட்டது (சங் 2:11).

அப்போஸ்தலன் யாக்கோபின் முழங்கால்கள் வீங்கித்
தடித்திருக்குமாம் — ''அவர் ஒரு ஜெப அப்போஸ்தலன்!''

அக்காலங்களில் முழங்காலில்தான் கால்சட்டைகள் கிழியும்!
முழங்காலில் நிற்பது கூடினால் தூங்கி விழ மாட்டோம்!

சீடர்கள் அன்று தூங்கிவிட்டதற்கு ஒரு காரணம் அவர்கள்
''உட்கார்ந்திருந்ததோ?'' — மாற் 14:32-42
முழங்கால்களுக்குத் திரும்புவோம்! Back to knees!

3. சகவுறவுகளில் எளிமையாயிருங்கள்.

தாழ்மையும் எளிமையுமானோரோடு ஈடுபாடு கொள்ளத் திருமறை
நம்மை அழைக்கிறது —
ரோ 12:16 ... *மேட்டிமைச் சிந்தை*

உங்களுக்கு மிஞ்சிய காரியங்களில் தலையிடாதீர்கள் என்பது
இதன் பொருள் —
சங் 131:1,2 ... *என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன்*

இயேசு பெரும்பாலும் *''தரித்திரரோடு''* இருந்தார் —
மத் 11:5 ... *தரித்திரருக்குச் சுவிசேஷம்*

துன்புறுவோரோடு தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார் —
மத் 25:35-40 ... *''மிகச் சிறியராகிய என் சகோதரர் ...''*

பணக்காரரோடு இயேசு பழகவில்லை என்பது இதன் பொருளல்ல.
சமுதாயத்தின் உயர்மட்டத்தினரைக் காக்கா பிடிக்க அவர்
முயலவில்லை. அவரது சிலுவையைச் சுமந்தது ஒரு கருப்பர்.
(மாற் 15:21 — சிரேனே என்பது வட ஆப்பிரிக்காவிலுள்ளது.)

- சகவுறவுகள் மேம்படுவது பேச்சுத் தொடர்பினாலேயே.
உங்கள் பேச்சில் எளிமையாயிருங்கள் —
''ஆம்'' என்றால் ''ஆம்,'' ''இல்லை'' என்றால் ''இல்லை''
(மத் 5:37)

மிகைப்படுத்தல், இரட்டை அர்த்தம், வெளியொன்று
உள்ளொன்று, இவையெல்லாம் வேண்டாம்.

கரடுமுரடான மனிதனின் வார்த்தைகளைப் பற்றித் திருமறை —
ரோ 3:13,14... *தொண்டை... பிரேதக் குழி... உதடுகள்... விஷம்*

- தாக்கப்படும்போது தாவீதின் மனப்பான்மை கொள்ளுங்கள் —
சங் 22:6 ... *நான் ... மனிதனல்ல ... ஒரு புழு*

யோபு புத்தகத்தின் மிகச் சிறிய அத்தியாயத்தில் ஒரு கேள்வி:
யோபு 25:5,6 ... *புழுவாய் ... பூச்சியாயிருக்கும் மனிதன்*

சாந்தம் (meekness) என்றால் பலக்குறைவு (weakness) அல்ல;
அதுதான் உண்மையான ஆன்மீக பலம்!

- பந்தா பண்ணாதீர்கள்!
இது இன்றையக் கிறிஸ்தவ ஊழியங்களில் வாதை.
எ.கா.) பிரசங்கிமார் கூட்டங்களுக்கு வந்து சேரும் விதம் —
திரைப்பட நட்சத்திரங்கள், அரசியல்வாதிகள் போல்!

இயேசு எவ்வளவு சாதாரணமாய் நடமாடியிருந்தால் அவரது சீடர்
நடுவில்கூட ஒருவன் அவரைக் காட்டிக்கொடுக்க வேண்டியிருக்கும்!
(மத் 26:27-50)

- *''கபடமில்லா இருதயமே''* ஆதிச்சீடர் அன்றையச் சமுதாயத்தில்
தாக்கம் ஏற்படுத்தியதின் இரகசியம் — அப் 2:46

- முகத்துதி பேசுவதை ஒழித்திடுங்கள் —
நீதி 20:19 ... *தூற்றுதல் ... அலப்புதல் ...*
28:23 ... *முகத்துதி ... கடிந்துகொள் ...*
29:5 ... *முகத்துதி ஒரு வலை!*

யாராவது உங்களுக்கு முகத்துதி பாடினால்,
அதைத் தவிர்க்க முடியாவிடில்,
அவர் கூறியது உங்கள் இருதயத்தில் தங்கவேண்டாம்.

தேவனுக்கு முன்பாகச் *‘‘சிறியவன்’’* என்றே இருங்கள் —
1 சாமு 15:17 ... சவுலிடம் சாமுவேல்

4. பெரியதை இச்சிக்காதிருங்கள்.

உலகமானது மதிப்பு, அந்தஸ்து என்றே போகிறது;
கிறிஸ்தவனின் அந்தஸ்து கிறிஸ்துவின் சிலுவைதான் —
கலா 6:14 ... *சிலுவையைக் குறித்தே மேன்மை*

- **உடையில் எளிமையாயிருங்கள் —**

பவுலும் பேதுருவும் இது குறித்து எழுதியுள்ளார் —
1 தீமோ 2:9,10 ... *முத்துக்கள் ... விலையுயர்ந்த ஆடைகள்*
1 பேது 3:3,4 ... *ஆபரணங்கள் ... புறம்பான அலங்கரிப்பு*

நாகரீகமாய் உடுத்துவதற்கு அப்போஸ்தலர் எதிராயில்லை;
ஆடம்பரம், டாம்பீகம் ஆகியவற்றையே கண்டித்தனர்.

‘‘எளிமை’’ என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது.
விக்கிரகங்கள்போல் நகை அடுக்காதீர்கள்.

ஆண்களைப் பற்றி என்ன?
வெயில் கொளுத்தும்போது, வேர்த்துக் கொட்டும்போது,
‘‘டை’’ (tie) கட்டுவது பொருத்தமல்ல, அல்லவா?
‘‘எளிய வாழ்க்கை, உயரிய சிந்தனை!’’
‘‘எளிமைதான் அழகு!’’ — மறந்துவிடாதீர்!

பிரசங்க பீடங்களிலும், கூட்டங்களின் மேடைகளிலும்
திரையுலகப் பாவனை கேவலம், வேண்டாம்!

- **கட்டிடங்களில் எளிமையாயிருங்கள் —**

ஆலயக் கட்டிடங்கள், ஜெபத் தலங்கள் போன்றவை
பிரமாண்டமாயிருக்கவேண்டுமென்ற பைத்தியம்
பிரசங்கிமாருக்குப் பிடித்திருக்கிறது.

சரித்திரத்தின் ஒரு சில தகவல்கள் இங்கு பயனளிக்கும் —
எருசலேம் தேவாலயம் தேவனது ‘‘பூரண’’ சித்தமல்ல;
அது அவரது ‘‘அனுமதி’’ சித்தமே — 2 சாமு 7:1-6

ஆலயத்தைக் கட்ட தேவன் தாவீதை அனுமதிக்கவில்லை.
சாலொமோன் அதைக் கட்டினான் —
அப் 7:47
ஆனால், *‘‘கட்டிடங்களில் தேவன் வாசமாயிருப்பதில்லை’’*
(வச 48-50)

ஒரு இடமும் விசேஷமானதோ, புனிதமானதோ கிடையாது!
(ஜெபக் கோபுரங்கள் / பாராளுமன்றத்திற்கருகே ஜெப அறைகள்)

தனது ஜெப அறையில் ஜெபித்துக்கொண்டிருந்த சிறிய மனிதன்
ஜான் நாக்ஸின் ஜெபங்களுக்கு இரத்த வெறி இராணி மேரி
நடுங்கினாள்!

கட்டிடங்கள் இயேசுவை அசத்தவில்லை —
மத் 24:1,2 ... *ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராமல் ...*

பரிசுத்த ஆவியானவர் தேவாலயத்தில் அல்ல, ஒரு ‘‘மேலறையில்’’
இறங்கினார்! வீடுகளே விசுவாசிகள் கூடும் இடங்களாய் மாறின —
அப் 2:46 ... *வீடு வீடாக ...*

கி.பி. 400இல் ரோமப் பேரரசில், ஒருவரும் மனந்திரும்பாமல்,
கிறிஸ்தவர்களின் சதவீதம் 4இலிருந்து 80 ஆனது!
மன்னன் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவத்தை நாட்டின் மதமாக்கினான்.
எனவே கிறிஸ்தவராவது லாபமும் நாகரீகமுமானதாயிற்று.

சபை இவ்வளவு வளர்ந்து, பிரபலமானபோது, கட்டிடங்கள் கட்டுவது
அதற்கு எளிதாயிற்று —

‘‘நோவா காலத்துப் பேரழிவுக்கு அடுத்தது இதுதான்’’ என்றார் ஒரு
தேவ மனிதர். ‘‘நம்மைக் கொன்றது செங்கற்கள்தான்’’ என்கிறார்!
கி.பி. 476இல் திருச்சபையின் இருண்ட காலம் துவங்கியது.

மெகா-சபைகள் என்ற பெயரில் பாபேலின் ஆவி இன்று
கிறிஸ்தவத்திற்குள்!

— தேவனது சவால்: ஏசா 66:1,2 ... *வானம் ... பூமி ...*
— தீர்க்கதரிசிகள், பிரசங்கிகள் மக்களை ஏமாற்றுகின்றனர்:
எரே 7:3-5 ... *ஆலயம் ... ஆலயம் ... ஆலயம் ...*

இராப்பகலாய் உழைத்து இறைமக்களைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இவர்கள் கட்டிட வேலையில் மும்முரமாயிருக்கிறார்கள் —

கொலோ 1:28,29 ... *பவுல் ... தேறினவனாய் நிறுத்த ...*
4:12 ... *எப்பாப்பிரா ... தேவ சித்தத்தில் தேறி ...*

பெரிய கட்டிடங்கள் வந்ததும், ''ஆராதனை'' (worship) திரும்பிவந்து விட்டதென்றெண்ணுறோம்; ஆனால் ஐக்கியம், அந்நியோநியம் (fellowship) போய்விட்டது.

— இந்தியா போன்றதொரு நாட்டில், கிறிஸ்தவத்தின் எதிரிகள் நமது கட்டிடங்களைக் குறிவைக்கும் இந்நாட்களில், 50,000 பேர் கூடக்கூடிய ஒரே கட்டிடத்தைவிட, ஒவ்வொன்றிலும் 1000 பேர் கூடக்கூடிய 50 கட்டிடங்கள் இருப்பது மேல்! அதுவே பாதுகாப்பு! அதுவே ஞானம்! அதுவே ஆராதனையை உன்னதமாக்கும், ''அந்நியோநியத்தை'' ஆழப்படுத்தும்.

விசுவாசிகளே, ''தேவன் என்னிடம் சொன்னார்'' என்ற
பித்தலாட்டங்களுக்குப் பலியாகாதீர்!
அது வேறே தேவனாயிருக்கும், வேதத்தின் தேவனல்ல!

□ ஆதிச் சபைக்குப் பெரிய கட்டிடங்கள் இல்லை;
ஆனால் அவர்களுக்கு இருந்தது —

''மிகுந்த'' வல்லமை
''மிகுந்த'' கிருபை
''பெரிய'' அற்புதங்கள்
''பெரிய'' உபத்திரவம்
மக்களிடம் ''மிகுந்த'' பயம்

நமக்கோ இவை ஒன்றும் கிடையாது;
''பெரிய'' கட்டிடங்கள்தான் உண்டு!

புதிய ஏற்பாட்டு எளிமைக்குத் திரும்புவோம்!

(116ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

62

தியாக வாழ்வு

A Call to Sacrifice!

முகவுரை

சீடத்துவத்தின் ''அடிப்படை'' நிபந்தனையைப் போதுமான அளவு நாம் வற்புறுத்தாததால் ''தியாகம்'' என்பது இன்று அதிகம் பிரசங்கிக்கப்படாத கருத்தாயிற்று —

லூக் 9:23 ... *தன்னல மறுப்பு ... ''தன்'' சிலுவை*

வச 22ஐக் குறித்து நமக்குப் பிரச்னையில்லை —
அதாவது, ''இயேசுவின்'' பாடுகள்.

இவ்வுலகில் இயேசுவானவர் அனுபவித்த அத்தனையும் நமக்கு நடைமுறைப் படிப்பினைகள் தருகிறது —

எபே 5:1,2 ... *தேவனுக்குச் சுகந்த பலி ...*

இது பழைய ஏற்பாட்டில் அடிக்கடி சொல்லப்பட்டுள்ளது —

''சுகந்த வாசனை'' ''நற்கந்தம்''
ஆதி 8:20,21 ... நோவா
யாத் 29:18 ... *தகன பலி ... சுகந்த வாசனை*
லேவி 1:9 ... *சுகந்த வாசனையான தகன பலி*
எண் 15:3 ... *சுகந்த வாசனை ... தகன பலி*

நாளாவட்டத்தில், மக்கள் தங்கள் வாழ்வில் பரிசுத்தத்தை அசட்டை செய்து, பலிகளிலும் காணிக்கைகளிலுமே கவனம் செலுத்தினர். இதைத் தேவன் கண்டித்தார் —

1 சாமு 15:22 ... சவுல் ... சாமுவேல்
சங் 51:16,17 ... தாவீது ... நாத்தான்
ஓசி 6:6 ... திரும்பிவர ஓசியாவின் அழைப்பு
ரோ 12:1 ... *உடல்கள் ... ஜீவபலி*

நாம் இவ்வசனங்களைத் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளோம். இவ்வசனங்களைச் சொல்லிக்கொண்டு, நமது வாழ்வில் செய்யவேண்டிய **சொந்தத் தியாகங்களை** மறந்துவிட்டோம்.

☐ ''தியாகம்'' என்றால் என்ன?

சொல்லகராதி தரும் பொருள் —

நாம் அதிகமாய் நேசிக்கும், மதிக்கும், ஒன்றை அல்லது ஒருவரைவிட அதிக மதிப்பும் உரிமையும் உள்ளதற்காக, அல்லது உள்ளவர்க்காக, துறந்துவிடுதல்.

தாவீது இதைச் சரியாய்ப் புரிந்திருந்தான் —

எ.கா.) 2 சாமு 24:24,25 ... *''நான் கிரயம் செலுத்தாத எதையும் தேவனுக்குப் படைக்கமாட்டேன்!''*

நம்மைப் பாதிக்கும் எதை நாம் சமீபத்தில் தியாகம் செய்துள்ளோம்?

- நாம் செய்யக்கூடிய சில சொந்தத் தியாகங்களைக் கவனிப்போம் —

1. நம்மையே தியாகம்பண்ணுதல்

மோசே	— யாத் 32:30-32
எஸ்தர்	— எஸ்தர் 4:15,16
பவுல்	— ரோ 9:1-3
ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள்	— ரோ 16:3,4

முரணானது: *''வயிறு''* (வச 18)

C.T. ஸ்டட்: *''கிறிஸ்து எனக்காய் மரித்திருப்பாரானால் அவருக்காக நான் செய்ய நினைக்கும் எத்தியாகமும் பெரிதல்ல!''*
2 கொரி 5:14,15 ... நமக்காக அல்ல, அவருக்காக!

— பவுல் தன்னைப் *பானபலியாய் வார்த்தார்* —
பிலி 2:17 ... *தியாகம் ... சேவை ...*

— வாழ்க்கையின் ஒவ்வொரு ஆசீர்வாதமும் ஒரு குறிப்பிட்ட தியாகம் செய்ய நம்மை நடத்தவேண்டும்:

எ.கா.) லூக் 5:4-11 ... திரளான மீன் பிடிப்பு ... *''எல்லாவற்றையும் விட்டு''*

ஏதாவது பிரச்னை இருந்தால் வேலையை விடுகிறோம்;
ஆனால் இங்கு பேதுரு, யாக்கோபு, யோவான் ...!

ஆசீர்வாதங்களைப் பலியாக ஊற்றிவிடவேண்டும்;
இல்லையேல் *''பயனற்ற திராட்சைச் செடிதான்''* (ஓசி 10:1)

எ.கா.) தாவீது ... *பெத்லகேமின் தண்ணீர்* (1 நாளா 11:16-19)

2. நமது பிள்ளைகளைத் தியாகம்பண்ணுதல்

நம்மையும் வேறெதையும்விட நாம் நமது பிள்ளைகளை நேசிக்கிறோம்.

எனவேதான் வேதம் இப்படிக் கேட்கிறது —
''தமது சொந்தக் குமாரன் என்றும் பாராமல் ...''
ரோ 8:32

பழைய ஏற்பாட்டில் தேவனது கட்டளை —
யாத் 22:29 ... *முதற்பேறானவன் எனக்கு ...*
13:2 ... *மனிதர் ... மிருகங்கள் ... முதற்பேறு எனக்கு ...*

எடுத்துக்காட்டுகள் —

☐ ஆபிரகாம் — ஆதி 22:15-17
''நீ நேசிக்கும் ஒரே குமாரன்'' (வச 2)

☐ மனோவா (சிம்சோன்) — நியா 13:3,8,12

☐ அன்னாள் (சாமுவேல்) — 1 சாமு 1:11,24,27,28
2:11,18,19

(ஆனால் நாம் சொல்வது: ''ஆண்டவர் எனக்கு ஒரு பிள்ளை தந்தால் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன்!'' தெண்டம்!)

☐ சகரியாவும் எலிசபெத்தும்
தங்களுக்கு *''மகிழ்ச்சியும் சந்தோஷமுமாயிருந்த''* மகனைத் *''தீர்க்கதரிசியாக''* ... வனாந்தரத்திற்கு அனுப்பிவைத்தனர் — லூக் 1:14,76,80

சபைச் சரித்திரத்தில் —

☐ ஹட்சன் டெய்லர் — அவரது பெற்றோரது ஜெபம்:
''தேவன் எங்களுக்கு ஒரு மகன் கொடுத்தால் அவன் சீனாவுக்கு மிஷனரியாய்ச் செல்லவேண்டும்!''

☐ ஏமி கார்மைக்கல் — ''தேவன் எனது அம்மா, அப்பாவின் ஜெபங்களுக்குப் பதிலளித்தார்!''

☐ சூசன்னா வெஸ்லியின் 19 பிள்ளைகளில் பெரும்பாலானோர் முழு நேரக் கிறிஸ்தவப் பணியில் இறங்கினர் —

எ.கா.) ஜான் வெஸ்லி & சார்லஸ் வெஸ்லி

நாமோ தன்னலக்காரர் (2 இரா 6:24-29) ... *என் மகன் ... அவள் மகன்*

□ எனது பெற்றோர் ... எங்கள் மகள்.

இன்று நன்கு படித்த பலர் மிஷனரிப்பணிக்கு முன்வருவதில்லை.

3. நமது உடைமைகளைத் தியாகம்பண்ணுதல்

''கொடுத்தல்,'' ''தசமபாகம்'' ஆகியவை குறித்துப் போதனைகள் ஏராளம்; ''தியாகம்பண்ணுதல்'' வலியுறுத்தப்படுவதில்லை.

தசமபாகம் என்பது பழைய ஏற்பாட்டு நியதி;
அது புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படவே இல்லை.
புதிய ஏற்பாடோ ''தியாகமாய்க்'' கொடுப்பதை முன்வைக்கிறது —

□ பரிமள தைலம் ஊற்றப்பட்டது 4 சுவிசேஷங்களிலும் உண்டு —
மத் 26:7 ... *விலையேறப்பெற்றது*
மாற் 14:3 ... *உத்தம தைலம்*
லூக் 7:37,38 ... *கண்ணீர் ... பரிமளத் தைலம்*
யோ 11:2; 12:3 ... *களங்கமில்லாத தைலம்*

□ இயேசுவும் சகேயுவும் ... லூக் 19:8,9 ... *ஆஸ்தியில் பாதி*

□ இயேசுவும் வாலிபத் தலைவனும் ... மத் 19:21 / லூக் 18:22

இது ஒரு தனிநபருக்கு மட்டுமுரியது என்று சொல்லாதீர்;
பொதுவாக மக்களுக்கு இயேசு இதைச் சொன்னார் —
லூக் 12:33 ... *தன்னல மறுப்பு ... சிலுவை*

இது நமக்குரியதல்ல என்றால்,
வச 31 (= *முதலாவது தேடுங்கள்*) என்பதும் நமக்குரியதல்ல அல்லவா?

□ மக்கெதோனியா விசுவாசிகள்
2 கொரி 8:3 ... *தங்கள் திறனுக்கு மிஞ்சி ...*

தேவனது *''சொல்லிமுடியாத ஈவு''* குறித்து அடிக்கடி பேசுகிறோம்
2 கொரி 9:15

நமது ''ஈகை'' எப்படியிருக்கிறது? — தாராளமாயிருக்கிறதா?
வச 13,14 ... ''சொல்ல முடிகிற'' அளவிலாவது இருக்கிறதா?

□ எபிரெயர் நிருபம் பெற்றவர்கள் (எபி 10:34)

எபிரெயர் 11ஐப் பற்றி அவ்வளவு பேசுகிறோம்;
எபிரெயர் 10இலுள்ள இவ்வசனம்?

- நம்மையே தியாகம்பண்ணுவதையும், நமது உடைமைகளைத் தியாகம்பண்ணுவதையும் ஏன் இவ்வளவு வலியுறுத்துகிறோம்? இவையில்லாததுதான் கொடிய கடைசிக்காலத்தின் முதல் இரண்டு அடையாளங்கள் —

2 தீமோ 3:1,2 ... *தற்பிரியராயும் ... பணப்பிரியராயும் ...*

எனவே ''தியாகம்'' குறித்துப் பேசும்போது பொருளாதாரச் சிந்தை (materialism) கண்டிக்கப்படவேண்டும்.

□ இந்த யுகத்தில் பரிசுத்த ஆவியானவர் செய்த முதல் வேலை தமது மக்களுக்குப் பணத்தின்மீதும் பொருளின்மீதும் இருந்த பிடிப்பைத் தளர்த்தியதே — **அப் 2:44**

நாமோ **அப் 2:4இல்** நின்றுவிட்டோம்!
ஆதிச்சபையின் மிகுந்த *''வல்லமையின்''* இரகசியம் —
அப் 4:33-37 ... ஒரு *''லேவியனும்''* கொடுத்துவிட்டான்!

ஆவியின் ''அக்கினி'' பணப்பைத்தியத்தை எரித்துப்போடவேண்டும். பணப்பை மனந்திரும்பும்வரை எவரது மனந்திரும்புதலும் சரியல்ல.

□ இக்கருத்தின்மீது இயேசுவின் நேரடிப் போதனை —
கண் ... வெளிச்சம் ... இருள் (மத் 6:19-24)
சூழமைவு: விபச்சாரப் பார்வையல்ல, பொருளாசை.

இப்போதகம் மக்களுக்கு, குறிப்பாக மார்க்க பக்தியுள்ள பரிசேயருக்கு, பிடிக்கவில்லை — லூக் 16:13,14

□ முட்டாள் யார்? (லூக் 12:20)
வச 21, *''தேவனிடம் செல்வந்தனாயிராதவன்''*

தேவனிடம் செல்வந்தராயிருப்பது எங்ஙனம்? —

அ) பொருளாதாரத் தேவை குறித்துக் கவலைகொள்ளாதீர் —
(வச 22,29,30)

ஆ) இறையரசிற்கு முதலிடம் கொடுங்கள் —
(வச 31,32)

இ) எளியவருக்கு அள்ளிக் கொடுங்கள் —
(வச 33,34)

இதுதான் *திருடப்பட முடியாத, அழிக்கப்பட முடியாத பணப்பை!*

— எனவேதான் தீமோத்தேயுவுக்குப் பவுல் இவ்விதம் எழுதினார்:
1 தீமோ 6:17-19 ... *செல்வந்தர் ... தாராளம் ... உதாரகுணம்*

— எனவேதான் தன்னிடம் வினவிய மூன்று குழுவினருக்கும் யோவானின் பதில் பணத்தைப்பற்றியே இருந்தது ...
லூக் 3:10-14 ... *சாமானியர் ... ஆயக்காரர் ... சேவகர்*

இதைத் தொடர்ந்துதான் நெருப்பைப்பற்றிப் பேசினான் (வச 15,16).
அவனது *''அநேக புத்திமதிகளில்''* இது ஒரு பகுதி (வச 18).

இன்று திருமுழுக்குக்குமுன் இவ்வித அறிவுரைகள் கொடுப்பது யார்?
நாம் பினாமி ஞானஸ்நானமே கொடுக்கிறோமே!
களங்கமற்ற குழந்தைகளுக்காய்ப் பெற்றோரின் வறட்டு வாக்குகள்.

□ வசனங்களை இடம், பொருள், காலம் பார்க்காது எவ்வளவு ஞானமாய் நமது வசதிக்கேற்ப வியாக்கியானிக்கிறோம்!

அ) *''மனிதரால் கூடாததுதான்; ஆனால் தேவனால் எல்லாம் கூடும்''*
மத் 19:25,26
சூழமைவு: வச 23,24 — *மெய்யாகவே ... செல்வந்தன் ...*

ஆ) *கிறிஸ்துவினால் எல்லாம் செய்ய எனக்குப் பலமுண்டு* (பிலி 4:13)
சூழமைவு: வச 11-13 ... *இருப்பதில் திருப்தி*

இ) *நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை ... கைவிடுவதுமில்லை*
சூழமைவு: பொருளாசை/மனதிருப்தி (எபி 13:5)

□ ''தியாகம்'' எனும் உபதேசத்தைக் காலாகாலமாய் நாம் வலியுறுத்தி விழிப்பாயிராததால் சுகபோக வாழ்வு உபதேசம் எனும் களையைச் சத்துரு விதைத்துவிட்டான் —
மத் 13:24,25 ... *மனிதர் தூங்குகையில் ...*

— தம்மைச் சேவிக்க ஒருவன் புறப்பட்டால் அவனுக்கு என்ன ''கிடைக்கும்'' என்றல்ல, என்ன ''கிடைக்காது'' என்றே இயேசு கூறினார்!
லூக் 9:57,58 ... *நரிகள் ... பறவைகள் ... தங்கி ...*

துவக்கத்திலும் அதையும் இதையும் வாக்குப்பண்ணி இயேசு தமது சீடர்களைக் கவர்ந்திழுக்கவில்லை, எனவேதான், பின்னர் பேதுரு இப்படிக் கேட்டார் —
மத் 19:27-30 — நித்தியத்தில்தான் நிச்சயம்!
''மறுஜென்ம காலத்தில் ... சிம்மாசனங்கள்''

''அழைப்பை உறுதிப்படுத்துதல்'' குறித்தே இன்று பேசுகிறோம்;
இயேசுவோ ''செல்லும் செலவைக் கணக்குப்பார்க்கச்'' சொன்னார்—
லூக் 14:27-33 ... *கட்டிடம் ... யுத்தம் ...*
எல்லாமே தலைகீழாயிற்றே! (பூர்வ பாதைகளை மறந்துவிட்டோம்!)

□ பொருளாதாரச் சிந்தை **''தியாகத்திற்கு''** எதிரி.
அப்படியானால் யாரும் செல்வந்தராகக் கூடாதா?
ஆகலாம், ஆனால் —

- செல்வம் பெருகும்போது ...
  சங் 62:10 ... *அதின்மீது இதயத்தை வைக்காதே*
- பகிர்வதில் தயாளமாயிருங்கள் ... நீதி 11:24-26 ... *தண்ணீர் ...*
  ஒப்பிடுக: 2 கொரி 9:6,7 ... *விதைப்பு ... அறுப்பு*
  ''சோதோமின் பாவத்திற்கு'' எச்சரிக்கை! (எசேக் 16:49)
- இன்னும் வேண்டும் எனும் சோதனைக்குத் தப்புங்கள் (பிர 5:10).
  பணம் என்பது கடல் நீர் போன்றது;
  அதைக் குடிக்கக் குடிக்கத் தாகம் கூடத்தான் செய்யும்!

(50ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்)

■ *முடிவுரை*

- ஒரு ஜெபம்: நீதி 30:7-9
  ''அதிகம் வேண்டாம், குறைவும் வேண்டாம்!''
- ஒரு முழக்கம்: 2 கொரி 12:15
  ''செலவழிப்போம், செலவழிக்கப்படுவோம்!''

63

எனது அர்ப்பணிப்பு
My Sevenfold Commitment

கீழ்க்கண்டவற்றிற்கு என்னை அர்ப்பணித்திருக்கிறேன் —

1) பிதாவானவரின் மகிமை (The Glory of the Father)
பிலி 2:9-11

2) கிறிஸ்துவின் கர்த்தத்துவம் (The Lordship of Christ)
அப் 2:36

3) பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் (The Direction of the Spirit)
ரோ 8:14

4) திருமறையின் அதிகாரம் (The Authority of the Bible)
2 தீமோ 3:16,17

5) எனது குடும்ப நலன் (The Welfare of my Family)
1 தீமோ 5:8

6) திருச்சபையின் பக்திவிருத்தி (The Edification of the Church)
எபே 4:15,16

7) அகிலவுலக நற்செய்திப்பணி (The Evangelisation of the World)
மத் 28:18-20

நடைமுறை *''ஞானத்தோடு''* கட்டப்பட்ட
வீட்டின் *''ஏழு தூண்கள்''* போன்றவை இவை —
நீதி 9:1

இவற்றை ''அடித்தளத்தின்'' கற்களுக்கு ஒப்பிடலாம்.
இவை எதிலும் கீறல் உண்டாகாதபடிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

64

''மறவாதே!''
"Forget not!"

முகவுரை

சங் 103:1,2 ... *''அவர் செய்த சகல உபகாரங்களையும் **மறவாதே!**''*
ஜெபத்தின் முடிவிலெல்லாம் இதைச் சொல்லுகிறோம்;
ஆனால் அப்படிச் செய்வதில்லை!

- இறைமக்கள் மறக்கக்கூடாத ஆறு காரியங்களை **உபாகமத்தில்** மோசே குறிப்பிடுகிறார்.

  அவை நமக்கு பொருத்தமானவை.

1. நீங்கள் முன்னே எப்படி இருந்தீர்களென்பதை மறவாதிருங்கள்!

- தமது மக்களிருந்த எகிப்தின் அடிமைத்தனத்தைத் தேவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார்:

  உபா 15:12-15 ... அடிமைகளை நடத்தவேண்டிய விதம்
  16:10-12 ... பண்டிகைகள் கொண்டாட்டம்
  24:17,18 ... நீதி நியாயம்
  :19-22 ... எளியோர்மீது கரிசனை

- இப்படிச் சொல்வதால் நமது பழைய பாவங்களை நினைவுகூர வேண்டும் என்பதல்ல; இரட்சிப்புக்கு முன்னிருந்த நமது அடிமைத்தனத்தை நினைத்துப்பார்க்கவேண்டும் —

  எ.கா.) எபே 2:11-13 ... *முன்னே தூரமாயிருந்தீர்கள் ...*
  1 தீமோ 1:13,14 ... *முன்னே அறியாதவனாயிருந்தேன்*

  நமது பழைய வாழ்வின் நினைவே இன்றைய வாழ்வின் தரத்தை மேம்படுத்தும் —

  2 பேது 1:8,9 ... *கனி ...*
  லூக் 7:44-47 ... நமது பாவ நிலையை உணரும் அளவே தேவனை நேசிப்போம்.

  ''நமது தாழ்வில்'' நம்மை நினைத்தவரைத் துதியுங்கள் —
  சங் 136:23 (எ.கா.) தாவீது, 2 சாமு 7:18

2. *தேவன் வாக்குப்பண்ணியவைகளை மறவாதிருங்கள்.*

உபா 4:23 (உடன்படிக்கை = வாக்குத்தத்தம்)

- இயேசு வாக்களித்தவை நிறைவேறிய பின்னரே சீடர்கள் அவற்றை நினைவுகூர்ந்தனர் —

 எ.கா.) எருசலேம் பவனி ... யோ 12:14-16
 உயிர்த்தெழுதல் ... லூக் 24:6-8
 ஆவியானவர் ஊற்றப்படல் ... அப் 11:15,16

நாமோ வாக்குகள் நிறைவேறியபின்னும் அவற்றை நினைப்பதில்லை.

- கடந்த காலங்களில் தேவன் கொடுத்த வாக்குகளை நினையுங்கள் —

 (அ) குழுவுக்குக் கொடுக்கப்பட்டவை
 (ஆ) தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்டவை.

3. *தேவன் போதித்தவைகளை மறவாதிருங்கள்.*

உபா 4:8-10 ... *கட்டளைகள் ... பெரிய ஜாதி*

- சங்கீதம் 119 முழுவதும் தேவனது **வார்த்தையைப்** பற்றியவை — ''மறவேன்'' என்று திரும்பத் திரும்பப் பாடகன் சொல்லுகிறான்:

 வச 16,61,83,93,109,141,153,176

நாம் போதிக்கப்பட்டவற்றை நினைத்தவாறு இருக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார் —

எண் 15:37-40 ... *ஆடையின் ஓரங்களில் இளநீல நாடா*
(முந்தானை முடிச்சு போல!)

— அடிக்கடி நினைத்துப்பார்ப்பது தியானத்திற்கு உதவுகிறது.
— இவ்வித வீட்டுப்பாடத்தை நாம் செய்தால்தான் ஆவியானவர் *''நினைப்பூட்டுவார்''* (யோ 14:26)

- அவரது போதனைகளை மறப்பதைக் குறித்துத் தேவன் கண்டிப்பாயிருக்கிறார் —

 ஓசி 4:6ஆ ... *உன்* ***பிள்ளைகளை*** *மறந்துவிடுவேன்*

 நாம் நமது பிள்ளைகளை மறக்கிறோமா?
 அப்படியானால், தேவனது போதனைகளை மறப்பதெப்படி?

4. *தேவனது வெற்றிகளையும் அற்புதங்களையும் மறவாதிருங்கள்.*

உபா 7:17-19 ... *பார்வோன் ... அடையாளங்கள் ...*
25:17,18 ... *அமலேக்கு ... தாக்கினான்*

- கடந்தகால அற்புதங்களை நாம் மறந்தால் தேவன் விசனமடைகிறார்—

 சங் 78:41-43 ... *இஸ்ரவேலர் தேவனை மட்டுப்படுத்தினர்*
 மத் 16:8-10 ... *ஐந்து அப்பங்கள் ... ஏழு அப்பங்கள்*

- ஒவ்வொரு போராட்டமும் இன்னலும் முந்தியதைவிடக் கொடியதாயிருக்கும். முந்தியதில் நாம் கற்ற பாடங்களை மறந்துவிடக்கூடாது—

 சங் 77:7-11 ... சங்கீதக்காரனின் அனுபவம்
 எபி 10:32-35 ... எபிரெயருக்கு அறிவுரைகள்
 (கடந்த காலப் போராட்டங்கள்)

- முந்திய வெற்றியை நினைவுபடுத்துவது இன்றையப் போராட்டத்தில் நமது விசுவாசத்தைப் பலப்படுத்தும் —

 எ.கா.) தாவீது (1 சாமு 17:34-37) ... *சிங்கம் ... கரடி ...*

- ''நமது'' வெற்றிகளை மட்டுமல்ல, மற்றவர்களுடையவற்றையும் நினைத்துப்பார்க்க வேண்டும் —

 எ.கா.) எபி 11 → 12:1
 இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்! (எபி 13:8)

5. *நீங்கள் எவ்விதம் தேவனுக்குக் கோபமூட்டினீர்களென்பதை மறவாதிருங்கள்.*

உபா 9:7,24 ... நாம் மனந்திரும்பிய நாள் முதல் கோபமூட்டிய இடங்கள் —

ஓரேப் (வச 8)
தபேரா, மாசா, அத்தாவா (வச 22)

- நம்மைப் பயிற்றுவித்து, நமக்குப் போதித்து, நம்மை உயர்த்தவே சோதனைகளும் சிட்சைகளும் —

 உபா 8:2-5 ... *மறவாதிருங்கள்* (எபி 12:5)
 சிட்சை ஏன்?

எ.கா.) மிரியாமின் அனுபவம் —
உபா 24:9; எண் 12

ஆண்டவர் நமது வாழ்வில் தோல்விகள், பஞ்சங்கள், தவறி விழுதல்,
ஏமாற்றங்கள், வியாதி, துக்கம்,
இப்படிப் பலவற்றை அனுமதிப்பது
நமது கவனத்தைப் பெறவே!

இதை நாம் மறக்காதிருப்போம்! (பிர 11:8)

எ.கா.) மன்னன் எசேக்கியா
ஏசா 38:15-17 ... *கசப்பை நினைத்து ...*
— வெற்றிகளைவிடத் தோல்விகளிலிருந்தே அதிகம் கற்றிருக்கிறேன்.

6. ஆசீர்வாதங்களில் திளைத்துப்போய் ஆசீர்வதிக்கிறவரை மறவாதிருங்கள்.

உபா 6:10-12 ... *வீடுகள்... கிணறுகள்... தோட்டங்கள்... கர்த்தர்*

- நமது பலத்தையும் திறமையையும் நம்மையறியாமலே நாம் வணங்கத் துவங்கிவிடுறோம் —
  உபா 8:11,12,17,18 ... *எனது பலம் ... எனது பணம்*
  32:15,18 ... *யெஷூரன் கொழுத்து உதைத்தான்*

தேவனோடு அமைதி வேளையைச் செலவிட அடிக்கடி தவறினால் அவரை மறந்துவிட்டோம் என்பதே பொருள் —
எரே 2:32 ... *கன்னிகை ... ஆபரணம் ...*

ஆதியன்பின் தியான வாழ்வை நாம் இழந்தது தேவனுக்கு ஆச்சரியம்—
எரே 18:13-15 ... *உறைந்த மழை ... குளிர்ந்த தண்ணீர்*

- மார்க்கச் செயல்பாடுகளும் சடங்குகளும்கூட நாம் தேவனை மறக்கச் செய்ய முடியும் —
  1 கொரி 11:24,25 ... *''என்னை'' நினைவுகூரும்படி ...*
  (கர்த்தருடைய பந்தியிலும் ''நமக்கு'' ஆசீர்வாதம் என்று பங்குபெறக்கூடாது)

நமது வாழ்விலும் பணியிலும் தேவனை மையப்படுத்துவதற்காய் நமது அடித்தளத்தைப் பலப்படுத்துவோம்.

தொழுகைக்கு (worship) அடுத்துதான் தொழில் (work)!

■ *முடிவுரை*

நமக்கு நினைவூட்டுவதற்காகத் தேவன் வைத்துள்ள இரு ஏதுக்கள்—
அ) நமக்கு மூத்தோர்
உபா 32:7 ... *தந்தையர் ... மூப்பர்*

ஆ) அவரது ஆவியானவர்
யோ 14:26 ... *அவர் உங்களுக்கு நினைப்பூட்டுவார்*

- *''தேவனது எல்லா உபகாரங்களுக்காகவும் என்ன செலுத்துவேன்?''*
  சங் 116:12-14

அ) *இரட்சிப்பின் ''பாத்திரத்தை'' எடுத்துக்கொள்வேன்.*
— ஆண்டவரோடுள்ள **ஐக்கியத்தை** (Fellowship) ஆழப்படுத்துவேன்.

ஆ) கர்த்தருடைய நாமத்தைத் ''தொழுதுகொள்வேன்.''
— ஆண்டவரை **ஆராதிப்பதைக்** (Worship) கூட்டுவேன்.

இ) எனது பொருத்தனைகளைச் ''செலுத்துவேன்.''
— ஆண்டவரோடுள்ள பங்காளித்துவத்தை (Partnership) நிறைவேற்றுவேன்.
''அவரது மக்களுக்கு முன்பாக ...''

D

65

ஆண்டவரோடு அமைதி நேரம்

Quiet Time

முகவுரை

அமைதி நேரம் — உலகின் சந்தடிகளைவிட்டுத் தேவனோடு
தனித்து உறவாடும் வேளை.

நேரம் குறியுங்கள்!

மனது தெளிவாயிருக்கும் நேரமே உசிதம் —
சங் 88:13 ... *காலையிலே உமக்குமுன் ...*

காரணம் எதுவாயினும் அவ்வேளையைத் தவறவிடாதீர் —
தானியேல்: தானி 6:10 (எதிர்ப்பு)
பேதுரு & யோவான்: அப் 3:1 (ஊழியப் பளு ... 3000 பேர்)
இது இயேசுவிடம் கற்றது (லூக் 5:15,16)

நமது அலுவலக நேரங்களில் கண்டிப்பாயிருக்கிறோமன்றோ?

அமைதி நேரம்: (A) வேதத் தியானம் = தேவன் பேசக் கேட்பது
(B) ஜெபம் = தேவனோடு பேசுவது

(A) வேதத் தியானம்

நீங்கள் தேவனோடு பேசும் முன் அவர் உங்களோடு பேசட்டும்;
பிர 5:1,2 ... *பலியிடுவதைவிட செவிகொடுக்கச் சேர்வது ...*
ஜெபமும் துதியும் அவரது வெளிப்பாடுகளுக்கு
நமது **பிரதிபலிப்பாகும்.**

வேதத் தியானம்: (அ) பக்தியடைய தியானம்
(ஆ) தெளிவடைய ஆராய்ச்சி

தினசரி அமைதி நேரத்தில் நாம் பிரதானமாய்ச் செய்வது —

(அ) பக்தியடைய தியானம் (Devotional Meditation)

- இந்த ஜெபத்துடன் துவங்குங்கள் —
  சங் 119:18-20 ... *என் கண்களைத் திறந்தருளும்*

குழந்தையுள்ளம் கொள்ளுங்கள் —

மத் 11:25 ... *பாலகருக்கு வெளிப்பாடு*
1 பேது 2:3 ... *புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் போல*

பெரிய எழுத்துள்ள, நல்ல மொழியாக்க வேதம் அவசியம்.

- புதிய ஏற்பாட்டில் துவங்குவது நன்று.
  (பழைய ஏற்பாட்டைப் புதியது விளக்குகிறது.)

  பு.ஏ. — கிறிஸ்துவின் வாழ்வு, போதனை — *சுவிசேஷங்கள்*
  — நற்செய்தி பரவுதல் — *அப்போஸ்தலர் நடபடிகள்:*
  நேற்று நடந்தவை.

  — அறிவுரைகள், உபதேசங்கள் — *நிருபங்கள்:*
  இன்று செய்யவேண்டியது.

  — சபையின், உலகின் எதிர்காலம் — *வெளிப்படுத்துதல்:*
  நாளை நடக்கவிருப்பது.

- முழு அத்தியாயத்தையும் ஒரேயடியாக வாசியுங்கள்.
  அதை இருமுறை வாசியுங்கள்.

  அதில் கீழ்க்கண்ட கேள்விகள் கேட்டுப்பாருங்கள்:

  ☐ விசுவாசிக்க ''**வாக்கு**'' ஏதுமுண்டா?
  ☐ கீழ்ப்படியக் ''**கட்டளை**'' ஏதுமுண்டா?
  ☐ விட்டுவிடப் ''**பாவம்**'' ஏதுமுண்டா?
  ☐ கவனிக்க ''**எச்சரிப்பு**'' ஏதுமுண்டா?
  ☐ புரிந்துகொள்ள ''**வெளிப்பாடு**'' ஏதுமுண்டா?
  ☐ பின்பற்ற ''**முன்மாதிரி**'' ஏதுமுண்டா?

- அந்தந்த நாளுக்கு உங்களுக்கு இதுதான் இறைச்செய்தி —

  எ.கா.) ஒரு வாக்கு: அன்று வரக்கூடிய ஓர் இக்கட்டுக்கு.
  விவிலியம் ஒரு காசோலை போன்றது.
  ஓர் எச்சரிப்பு: சோதனையின் வேளையில் உதவி.

  ஒரு நடத்துதல்: தீர்மானப் பள்ளத்தாக்கில் குழப்பம்:
  எப்பக்கம் திரும்புவது.

  இதுதான் நமது *''அனுதின மன்னா''* (யாத் 16:21).
  காலைதோறும் புதிய கிருபை (புல 3:22,23).

- இன்னொரு வரிசைக் கேள்விகள்:

  இவ்வேதப்பகுதி கீழ்க்கண்டவைபற்றி என்ன சொல்லுகிறது —

  ☐ தேவனுக்கு நேராக எனது பொறுப்பு
  ☐ மனிதருக்கு நேராக எனது பொறுப்பு

அதாவது, தேவனை நேசி | *நியாயப்பிரமாணம் முழுமையும்,*
மனிதனை நேசி | *தீர்க்கதரிசனங்களும்* (மத் 22:35-40)

சிலரது பழக்கம்: நாளொன்றுக்கு 5 சங்கீதங்கள் — *தேவ கிருபை*
நாளொன்றுக்கு நீதிமொழிகள் ஒரு அத்தியாயம் — *மனிதர் தயவு*

- உங்களுக்கு முக்கியமாய்த் தோன்றும் சொற்கள், சொற்றொடர்கள், வரிகள், வாக்கியங்களை அடிக்கோடிடுங்கள்.

  தேவனுடைய வார்த்தையே தேவனுடைய சத்தம்!
  "Logos" vs. "Rhema"

  அன்றன்று பெறும் செய்தியை ஒரு குறிப்பேட்டில் எழுதுங்கள்.

- நாள் முழுவதும் அச்செய்தியை அசைபோடுங்கள் (சங் 1:2)
  எ.கா.) மரியாள் (லூக் 2:19,51)

  அந்தந்த நாளின் செய்தியின் அடிப்படையில் அந்தந்த நாளின் நடக்கையைப் படுக்கைக்குச் செல்லுமுன் சீர்தூக்கிப் பாருங்கள்.
  சுய வஞ்சகத்திற்குத் தப்புங்கள் (யாக் 1:22-24)

- தினசரித் தியான நூல்களைப் பயன்படுத்தலாம்;
  ஆனால் அவை நீங்களே நேரடியாய்த் தியானிப்பதற்குப் பதிலாகா.

(ஆ) தெளிவடைய ஆராய்ச்சி (Analytical Study)

இவ்வித ஆராய்ச்சிக்கு எல்லாருக்கும் தினமும் நேரம் கிடைப்பதரிது. இதற்காக வாரயிறுதிகளில் சில மணிநேரம் ஒதுக்குங்கள்.

மூன்று வழிமுறைகள் —

1) பரந்த ஆராய்ச்சி (Panoramic Study)

— திருமறையை ஒட்டு மொத்தமாய்ப் படித்தல்.
எ.கா.) மீட்பின் திட்டம்

2) தொலை நோக்கு ஆராய்ச்சி (Telescopic Study)

— ஒவ்வொரு புத்தகத்தின் மையக் கருத்தைப் படித்தல்.

எ.கா.) ரோமர் — விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

எபேசியர் — கிறிஸ்துவில் நமது நிலை; ஆன்மீகப் போராட்டம், முதலியன.

3) நுண்ணோக்கு ஆராய்ச்சி (Microscopic Study)

— வசனங்களில் பொதிந்திருப்பவற்றைப் படித்தல்.

எ.கா.) யோ 1:12 ... *நாமம் ... விசுவாசம் ... அதிகாரம்*

அப் 1:8 ... *பரிசுத்த ஆவி ... வல்லமை ... சாட்சி*

புகைப்படமெடுத்தலில் பயன்படும் ஆடிகளுக்கு ஒப்புமை —

1. Wide angle lens (Panoramic)
2. Zoom lens (Telescopic)
3. Micro lens (Microscopic)

உதவி நூல்கள்:

1) ஆராய்ச்சி வேதம் (Study Bible)

NKJV Study Bible	ஆய்வுரை வேதாகமம்
NIV Study Bible	வாழ்வியல் விளக்க வேதாகமம்
ESV Study Bible	நிறைவாழ்வு ஆய்வு வேதாகமம்

Study Bibles by Scofield, Thompson, Dake, etc.

Life Application Study Bible

இவைகளில் நமக்குக் கிடைப்பவை —

புத்தக அறிமுகங்கள்	(Book Introductions)
வசன விளக்கங்கள்	(Notes for Texts)
ஒத்து வாக்கியங்கள்	(Cross References)

2) வேதாகமச் சொல்லகராதி (Bible Concordance)

ஒவ்வொரு வார்த்தையும் வரும் இட அட்டவணை.

கருப்பொருள்கள்மீது படிக்க உதவியாகச் சில எடுத்துக்காட்டுகள் —

மீட்பு, பரிசுத்தம், ஜெபம், பரிசுத்த ஆவியானவர், பரலோகம், நரகம் முதலியன.

3) வேதாகமப் பொருளகராதி (Bible Dictionary)

வரலாறு, புவியியல், கலாச்சாரம் போன்றவற்றின் பின்னணி விளக்கம் —

நபர்கள், இடங்கள், பண்டிகைகள் போன்றவற்றின் விபரங்கள்.

(இஸ்ரவேல் நாட்டிற்குப் பயணிப்பதைவிட மேல்!)

- என்றுமே வேதத்திலுள்ள எல்லாம் நமக்குப் புரிந்துவிடாது. படிக்கப் படிக்கத்தான் நமது அறிவும் புரிதலும் கூடும்.

எ.கா.) கல்வியுலகில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு பாடப்புத்தகம்;

திருமறையோ எல்லா வகுப்புகளுக்கும் ஒன்றே!

■ ***வாழ்க்கையில் கடைப்பிடித்தல் —***

எல்லா அறிவும் வாழ்வில் அப்பியாசிக்கப்படவேண்டும்.

இல்லையேல் — சுய வஞ்சகம்: யாக் 1:22-24

கனியின்மை : லூக் 8:14

தேவ வசனத்தின்படி வாழ்ந்திட அவர் கிருபை நாடுங்கள்.

(B) ஜெபம்

ஜெபத்தில் நாம் செய்யவேண்டிய 4 காரியங்கள்:

P - R - A - Y

Praise ... **R**epent ... **A**sk ... **Y**ield

துதியுங்கள் ... மனந்திரும்புங்கள் ... கேளுங்கள்... ஒப்புக்கொடுங்கள்

1. துதியுங்கள் (Praise)

- கர்த்தருடைய ஜெபம் துதியுடன் துவங்குகிறது —
  "உமது நாமம் பரிசுத்தப்படுவதாக"
- துதியுடன் அவர் சந்நிதியில் பிரவேசியுங்கள் —
  சங் 100:4

ஒரு துதிப்பாடல் பாடலாம் (சங் 100:2ஆ)

தமது மக்களது துதி நடுவில் தேவன் (சங் 22:3)

மேகங்களை அகற்றி மேலுலகைக் கீழிறக்குவது துதியே!

- தேவன் ''யார்'' என்பதற்காய் அவரைத் துதிப்பது = தொழுகை
''யாது'' செய்கிறார் என்பதற்காய்த் துதிப்பது = நன்றி செலுத்துதல்
இரண்டையும் செய்யுங்கள்.
''உபகாரங்களை மறவாதே ... ஸ்தோத்திரி'' (சங் 103:1,2)

- வேதத் தியானத்தில் தேவனைப் பற்றி அறிந்தவற்றைத் துதியாக்குங்கள். வேதத்தின் பரிசுத்த பக்கங்களின் மூலமாகத்தான் அவர் தம்மை வெளிப்படுத்துகிறார்.

எ.கா.) அவரது மூன்று முக்கிய குணாதிசயங்கள் —
தேவன் சர்வ வியாபகர் (Omnipresent)
தேவன் சர்வ வல்லவர் (Omnipotent)
தேவன் சர்வ ஞானி (Omniscient)

அல்லது, சிருஷ்டிகர், இரட்சகர், சுகமளிப்பவர்,
திரும்பத் தருகிறவர், நேசர், மேய்ப்பர், போஷகர்,
காப்பவர், சுத்திகரிப்பவர், கொடுப்பவர் ...

அல்லது, அவரது மீட்பின் நாமங்கள் —

யேகோவா-யீரே	— பார்த்துக்கொள்பவர்
யேகோவா-ரப்பா	— சுகமளிப்பவர்
யேகோவா-நிசி	— வெற்றி தருபவர்
யேகோவா-சிட்கெனு	— நீதியாயிருக்கிறவர்
யேகோவா-ரா	— மேய்ப்பர்
யேகோவா-ஷாலோம்	— சமாதான கர்த்தர்
யேகோவா-ஷம்மா	— பிரசன்னம் தருபவர்
யேகோவா-மாக்கே	— சிட்சிக்கிறவர்
யேகோவா-மேக்காடேஷம்	— பரிசுத்தமாக்குகிறவர்

(422ஆம் பக்கத்தில் இன்னும் சில பெயர்கள்)

வெறுமனே, ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று சொல்லாதீர்கள்!
''ஆவியோடு அத்துடன் சத்தியத்தோடு தொழுவீர்'' (யோ 4:24)

2. மனந்திரும்புங்கள் (Repent)

- *''தேவனே என்னை ஆராய்ந்து பாரும்''* (சங் 139:23,24)
இதயத்தை அவர்முன் அமைதிப்படுத்தும்போதுதான் காரியங்கள் வெளிவரும் —
பாடல்: *''தூய்மை பெற நாடு''* (= நேரமெடு)

- கிருபாசனத்திலிருந்து நமக்காகப் பரிதாபப்பட்டு நமக்கு உதவுகிற இயேசு உண்டு —
எபி 4:15,16 ... *தைரியமாய்க் கிருபாசனத்திடம் ...*

உடனடிக் கழுவுதல் —
1 யோ 1:7,9 ... *கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் ...*

மன்னிக்கப்பட நிபந்தனையுண்டு —
''எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல ...''

ஒப்புரவாகத் தாமதியாதேயுங்கள் —
மத் 5:23,24 ... *முதலாவது ஒப்புரவாகு*
6:14,15 ... *மன்னியுங்கள் ... மன்னிக்கப்படுவீர்கள் ...*

மனந்திரும்புதல் இல்லாத ஜெபம் வீண் —
சங் 66:18 ... *அக்கிரமச் சிந்தை ... ஆண்டவர் செவிகொடார்*
நீதி 15:8 ... *துன்மார்க்கரின் பலி ... அருவருப்பானது ...*

3. கேளுங்கள் (Ask)

தேவனை உயர்த்துவதும் நம்மை ஆராய்ந்துபார்ப்பதும் நமது வேண்டல்களை அவரிடம் சமர்ப்பிக்கத் தகுந்த ஆயத்தம்.

குறிப்பாய்க் கேளுங்கள் — பொதுவாய், ''ஆசீர்வதியும்'' என்றல்ல.
எ.கா.) பர்திமேயு (மாற் 10:46-52)

- கேட்க வேண்டிய முக்கியமானவை நான்கு —

அ) மனநிலைத் தேவை (Intellectual need)
— ஞானம் (யாக் 1:5)
எ.கா.) சொப்பனத்தில்கூட சாலொமோன்!
பெற்றுக்கொள்ளவேண்டிய முக்கிய காரியம் (நீதி 4:7)

ஆ) உடலுக்கடுத்த தேவைகள் (Physical needs)
— உணவு, உடல் நலம் முதலியன.

''அன்றன்றுள்ள ஆகாரத்திற்காய்'' ஜெபிக்க இயேசு போதித்தார். உடல் நலன், பாதுகாப்பு போன்றவற்றிற்காய் ஜெபியுங்கள். அவர் நமது **உடலுக்கும் ஆண்டவர்!**

தனது உடலிலிருந்த முள்ளுக்காய்ப் பவுல் மும்முறை வேண்டினார். தாங்கிக்கொள்ளும் கிருபையைத் தேவன் தந்தார் (2 கொரி 12:7-9)

இ) ஆன்மீகத் தேவைகள் (Spiritual needs)

- பாவத்தின்மீது வெற்றி
  மத் 26:41 ... *''விழித்திருந்து ஜெபியுங்கள்''*
  6:13 ... *''சோதனைக்குட்படப்பண்ணாமல்''*

- இறைச்சித்தம் புரிதல்
  சங் 25:4,5 ... *உமது வழிகள் ... நாள் முழுவதும் ...*

- சாட்சி பகர வல்லமை
  லூக் 11:13 ... *வேண்டிக்கொள் ... பரிசுத்த ஆவி*
  அப் 1:8; 4:31 ... *வல்லமை ... தைரியம்*

ஈ) சமூகத் தேவைகள் (Social needs)

— நமது குடும்பம், நண்பர், சுற்றத்தார்,
வேலை முதலியன

எத்தனையோ பேர் நம்மை ஜெபிக்கக் கேட்கின்றனர்;
நமது ஜெபங்களை நாடி நிற்கின்றனர்.

''என் பிரச்னையே தலைக்குமேல்'' என்று சொல்லாதீர்!
யோபு தன் சிநேகிதருக்காய் ஜெபித்தான் — யோபு 42:10

இந்த 4 பகுதிகளும் வாழ்வைச் சமநிலைப்படுத்துகின்றன —
எ.கா.) இயேசு (லூக் 2:52)

4. ஒப்புக்கொடுங்கள் (Yield)

தேவனுக்குமுன் நம்மைத் தாழ்த்துவதற்கு ஜெப வேளை
சிறந்த சமயம்.

ஒரு பல்லவி: *ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்,*
நொறுக்கும், உருக்கும், உருவாக்கி நிரப்பும்.

அடிப்படையில் மனிதன் பெருமைக்காரன், சுயசித்தக்காரன்.
ஜெபம் நம்மை நொறுக்குகிறது.

இயேசு: *''என் சித்தமல்ல, உம் சித்தம்''* (மத் 26:39,42)
யோவான்: *''அவர் பெருகணும், நான் சிறுகணும்''* (யோ 3:30)
பவுல்: *''நானல்ல, கிறிஸ்துவே''* (கலா 2:20)

கண்ணீர் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!

ஜெபத்தில் இந்நான்கு காரியங்களையும் செய்ய முயலுங்கள் —
நாளாவட்டத்தில் இது உங்களுக்குப் பழக்கமாகிவிடும்.

■ *எப்படி ஜெபிக்கவேண்டும்?*

(அ) உண்மையான மனதுடன் ஜெபியுங்கள். (Sincerity)

அதாவது, நமது இன்றியமையாத் தேவையை உணர்தல்.
அரை மனது கூடாது.
''உங்கள் முழு இருதயத்தோடு தேடினால் ...'' (எரே 29:13)
''பசிதாகமுள்ளோர் பாக்கியவான்கள்'' (மத் 5:6)

தேவனால் கூடும் என்பதை அறிக்கையிடுதல் —
விசுவாசம் (எபி 11:6) ... *பலன் அளிக்கிறவர் ...*

(ஆ) பரிசுத்த ஆவிக்குள் ஜெபியுங்கள். (Spirit)

ரோ 8:26 ... *ஆவியானவர் உதவுகிறார்... ஆவியானவர்தாமே*
நவநாவுகளில் ஜெபிப்பதின் பயன்.
(ஒன்பது வரங்களில் நவநாவுகள் மட்டுமே தேவனை நோக்கியது.)

பேதுருவிலும் யோவானிலும் ஆவியானவர் ஏற்படுத்திய மாற்றம்!

(இ) திருவசனத்தின்படி ஜெபியுங்கள். (Scriptures)

- மாதிரி ஜெபங்களைத் தியானியுங்கள் —
  தாவீதின் சங்கீதங்கள்
  தானியேல் (தானி 9)
  எஸ்றா, நெகேமியா (எஸ்றா 9; நெகே 1)
  இயேசு (யோ 17)
  பவுல் (எபே 1:15-23; 3:14-21; கொலோ 1:9-12)

- தியானித்தவற்றையெல்லாம் ஜெபமாக்குங்கள்.
  திருவாக்கு — அதை நிறைவேற்ற தேவனிடம் கேளுங்கள்.
  எச்சரிப்பு — அதை நினைவுபடுத்த தேவனிடம் கோருங்கள்.

■ *ஜெபத்தில் பிரச்னைகள்*

அ) மயக்கம் (Drowsiness)

உடலில் அல்லது மனதில் களைப்பு.
முழங்காலில் நிற்பது சிறந்தது; மாற்றிக்கொள்ளலாம்.
கொஞ்ச நேரம் வாசித்து அல்லது பாடிப் பாருங்கள்.

ஆ) விலக்கம் (Distraction)

கருத்தூன்றி ஜெபிக்க முடியாமை; பல நினைவுகள்.
ஜெபம் ஒரு போராட்டம்தானே!
இயேசுவின் நாமத்தில் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

ஜெபத்திற்கென ஒரு **தனியிடம்** இருப்பது நன்று.
எ.கா.) இயேசு → தோட்டம்
பேதுரு & யோவான் → தேவாலயம்

பிறரது தொந்தரவு இல்லாத ஒரு ஜெப அறை அல்லது ஜெப மூலை சாலச் சிறந்தது. கைபேசியை அணைத்துவிடுங்கள்.

இ) துக்கம் (Depression)

உங்கள் உணர்வுகளை அதிகம் கவனியாது ஜெபித்துக்கொண்டேயிருங்கள்.
1 பேது 5:7,8 ... *கவலை ... வைத்துவிடுங்கள்.*
பிலி 4:6,7 ... *கவலை ... தெரியப்படுத்துங்கள்.*

■ *முடிவுரை*

அனுதின ''அமைதி நேரத்தைத்'' தேவனோடு செலவழிப்பதில் அசதியும் ஒழுங்கின்மையும் வந்துவிட்டால், உங்கள் ஆன்மீக வாழ்வின் அனலையும் அழகையும் இழந்துவிடுவீர்கள்.

பாடல்:

சால துக்க துன்பத்தாலே, நெஞ்சம் நொந்து சோருங்கால்,
துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்!
(What a Friend we have in Jesus!)

(66ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

66

காலைதோறும் ...

Morning by Morning

முகவுரை

- நாம் அடிக்கடி பாடும் ஒரு பல்லவி —
  ''மகிழ்ந்திடுவோம் ... கர்த்தர் உண்டுபண்ணின இந்நன்னாளிலே''
  சங் 118:24

தீர்க்கதரிசனக் கண்ணோட்டத்தில், இந்த *''நாள்''* கிறிஸ்துவின் முதல் வருகையில் துவங்கிய யுகத்தைக் குறிக்கிறது —

வச 22,23 ... *தள்ளப்பட்ட கல்* ... குருத்தோலை ஞாயிறு
வச 25,26 ... *ஓசன்னா!* (மத் 21:9,42)

இந்த வசனமானது முதல் குருத்தோலை ஞாயிறுக்கு மட்டுமல்ல, கிறிஸ்துவோடும் அவருக்குள்ளும் பூவுலகில் நாம் கழிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் பொருந்தும் —

நாம் மகிழ்ந்து களிகூரக்கூடிய 7 **அனுதின** ஆசீர்வாதங்களை இங்கு கவனிப்பது கீழ்க்கண்டவற்றைச் சமாளிக்க நமக்குதவும் —

☐ செய்ததையே செய்துவரும் சுவாரஸ்யமின்மை (சங் 127:2அ)
☐ மனத்தொய்வுறச் செய்யும் சூழல்கள், நிகழ்வுகள்
☐ எதிர்காலத்தைக் குறித்த கவலை
☐ வாழ்வில் நிச்சயமற்றவை

ஒவ்வொரு நாளையும் சாதக எதிர்பார்ப்புடன் துவங்குங்கள் —
சங் 5:3 ... *காலையில் உமக்குமுன் வந்து காத்திருப்பேன்*
88:13 ... *காலையில் என் விண்ணப்பம் உமக்குமுன் ...*

1. கர்த்தரின் இரக்கங்கள் (Lord's Mercies)

புல 3:22,23 ... (1) *இரக்கங்கள்*
(2) *உண்மை*
(1) + (2) = *''கிருபை''*

இந்த வசனப்பகுதி ‘‘புலம்பல்’’ புத்தகத்தில் வருகிறது, பாருங்கள்!
பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படும் பதம்: *‘‘இரக்கம்.’’*
புதிய ஏற்பாட்டில் அதைக் குறிப்பிடும் வார்த்தை: *‘‘கிருபை’’* —
ஆங்கிலத்தில் *‘‘இரக்கம்’’* என்பது *“mercy”* என்றும்,
தமிழ் வேதாகமத்திலோ அது *‘‘கிருபை’’* என்றும் இருக்கிறது.
சங் 118:1,2,3,4,29

அப்படியே, 136ஆம் சங்கீதத்தில் *‘‘அவர் கிருபை என்றுமுள்ளது’’* என்ற வாக்கியம், 26 வசனங்களில், 26 முறை வருகிறது!
‘‘இரக்கம்’’ + *‘‘சத்தியம்’’* — ப.ஏ.— சங் 85:10
‘‘கிருபை’’ + *‘‘சத்தியம்’’* — பு.ஏ. — யோ 1:17

- அப்போஸ்தலரது கடிதங்களில் அவர்களது வாழ்த்துக்கள் —
  துவக்கமும், முடிவும் — ரோ 1:3 / 16:24
  1 கொரி 1:3 / 16:23
  கலா 1:3 / 6:18
  வெளி 22:21
- இரு பெரும் தேவைகளுக்காய்க் கிருபை —

அ) ஆன்மீகத் தேவைகள்
எபே 2:4-8 (*‘‘கிருபை’’* — 3 முறை)
தேவனது ஈவாகிய இரட்சிப்பில் மகிழுங்கள்.
மகிழ்ச்சிக் கொல்லியாம் குற்றவுணர்வு இனியில்லை.

ஆ) உடலுக்கடுத்த தேவைகள்
2 கொரி 12:7-9 ... *உடலில் முள் ...*
‘‘கிருபை போதும் ... மிகவும் சந்தோஷமாய் ...’’
ஏதோவொரு பலவீனம் இருக்கும்.

‘‘புதியது’’ = காலைதோறும் புதிதாய்க் கிடைப்பது.
‘‘ஆத்துமா, உடல்’’ — இரண்டிற்கும் ஆண்டவர் (1 கொரி 6:20).

2. கர்த்தரின் நீதி/நியாயம் (Lord’s Righteousness/Justice)

செப் 3:5 ... *காலைதோறும் நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார்*

அநியாயமும் ஊழலும் நிறைந்த இவ்வுலகில் தேவன் நமக்கு நியாயம் செய்வார் (வச 3,4)
எ.கா.) சோதோம், கொமோராவில் லோத்துவின் மனச்சாட்சியில் தினமும் வாதிப்பு (2 பேது 2:7-9)

தாவீதின் தினசரி அனுபவம் (சங் 13:1,2 / 5,6).
நமக்கெதிராக இழைக்கப்படும் அநீதியைத் தேவன் தாம் விரும்பும் வழியில் சரிக்கட்டுவார் —
எ.கா.) இயேசு (1 பேது 2:23)
சூழமைவு: அதிகாரிகளுக்குக் கீழ் வேலை (வச 18-22)

இயேசு அநியாயமாய்ப் பாடுபட்டது எப்படிச் சரிக்கட்டப்பட்டது?
அவரைப் பிறருக்குத் தேவன் ஆசீர்வாதமாக்கினார் —
வச 24 ...*அவரது தழும்புகளால் நாம் குணமானோம்!*
***‘‘நமது’’** பாவங்களைச் சுமந்தார்!*

எ.கா) யோசேப்பு
அவனுக்காய்த் தேவன் அநீதியைச் சரிக்கட்டியது —
நாடு முழுவதுக்கும் அவனை ஆசீர்வாதமாக்கினார் ...
‘‘நீங்கள் தீங்கு நினைத்தீர்கள், தேவனோ ...’’ (ஆதி 45:4,5,7,8)

ஆனாலும், புதிய வானம் புதிய பூமி வரும்போதுதான் நாம் முழுமையாகத் திருப்தியடைவோம் —
2 பேது 3:13 ... *நீதி வாசமாயிருக்கும் பு.வா., பு.பூ.*

3. கர்த்தரின் சந்திப்பு/விசாரிப்பு (Lord’s Visitation)

கர்த்தர் தினமும் நம்மை விசாரிக்கிறார் —
இச்சத்தியம் வேதத்தின் 3 புத்தகங்களில் உண்டு —
யோபு 7:17,18 / சங் 8:4; 144:3 / எபி 2:6

சங்கீதப் புத்தகத்திலிருந்து எபிரெயர் நிருபம் எடுத்துள்ளது;
சங்கீதப் புத்தகத்தைவிட **யோபுவின் புத்தகம்** பழமையானது.

எனவே கர்த்தரின் தினசரிச் சந்திப்பின் பிரதான நோக்கத்தைப் புரிந்துகொள்ள யோபுவின் புத்தகத்தைப் பார்ப்போம் —
(‘‘முதலில் சொல்லப்படும் இடம்’’ எனும் தத்துவம்)

யோபு 7:17 ... *மனிதன்மேல் **சிந்தை** வைக்கிறீர்*
:18 ... *அவனை நிமிடந்தோறும் **சோதிக்கிறீர்***
:20 ... *மன்னுயிரைக் **காப்பவரே***
:20 ... *பாவம் செய்தேனானால் ...*
:21 ... *என் **மீறுதல் ... அக்கிரமம்***

முதல் மனிதன் துவக்கித் தேவன் இதைச் செய்துவருகிறார் —
ஆதி 3:8 ... *''குளிர்ச்சியான வேளை''* = காலை நேரம்
மனிதா, நீ உன்னை ''மூட'' நினைக்கிறாய்;
தேவனோ உனக்கு ''உடுத்த'' விரும்புகிறார்!

தேவனது தினசரிச் சந்திப்பும் விசாரிப்பும் நமது **பரிசுத்தம்** குறித்த அவரது கரிசனை என்பது என்னே ஆசீர்வாதம்!

எனவேதான் பழைய உடன்படிக்கையில் *''தினசரிப்''* பலி.
இன்றோ, ''தினசரிச்'' சுத்திகரிப்பு —
எபி 7:26,27

தினசரிச் சுத்திகரிப்பு இல்லையேல் கடினப்பட்டுவிடுவோம் (எபி 3:13)

காரியங்களை அவ்வப்போது தேவனோடு சரி செய்யுங்கள்.
அதிக தூசி சேர்ந்துவிடாது பார்த்துக்கொள்ளுங்கள்.

இரவில் தூங்கச் செல்லுமுன் தற்பரிசோதனை செய்யுங்கள் —
சங் 4:4,5 ... *படுக்கையில் தியானியுங்கள் ...*

படுக்கைக்குச் செல்லுமுன் கால் கழுவுகிறோமல்லவா?
''பாதம் கழுவுதல்'' — வேண்டுமென்றே அழுக்காக்குவதல்ல.

4. *கர்த்தரின் பலம்* (Lord's Strength)

ஏசா 33:2 ... *''காலையில் எங்கள்* ***புயமாயிரும்!''***
பிரச்னைகளும் போராட்டங்களும் இல்லாத நபர் எவருமிலர்!
பிரச்னைகளும் போராட்டங்களும் இல்லாத நாளும் எதுவுமில்லை!
மத் 6:34 ... *அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு ...*

ஒவ்வொரு நாளின் சவால்களைச் சந்திக்கவிருக்கையில்,
நீங்கள் காலையில் அறிக்கையிடவேண்டியது —

''தேவனும் நானும் சேர்ந்து எதிர்கொள்ள முடியாத சவால்
இன்று எதுவும் வராது!''

பவுலின் சாட்சி (2 கொரி 11:24-28)
— அவர் தேவனிடம் கசப்பு கொள்ளவில்லை (வச 31);
மாறாக, அவர் *''என்றும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்''* என்றார்!

*''சோர்ந்துபோகிறதில்லை ... புறம்பான மனிதன் அழிந்தாலும் ...
உள்ளான மனிதன்* ***நாள்தோறும்*** *புதுப்பிக்கப்படுகிறான்''*
2 கொரி 4:16-18
''தவிப்புகள்'' இருந்தாலும் (5:2,4)

அழுகையின் பள்ளத்தாக்கு ... பலத்தின் மேல் பலம் (சங் 84:5-7)
''உன் ***நாட்களுக்குத்*** *தக்கதாக உன் பலம் இருக்கும்''* (உபா 33:25)

— நேற்றைவிட இன்று கடினம்;
இன்றைவிட நாளை கடினம்!
கடலில் அடுத்தடுத்து எழும்பிவரும் அலைகள் போல!

இதைவிட மோசமாக என்னதான் நடந்துவிடும், என்கிறீர்கள் —

எ.கா.) நீங்கள் கடிக்கும் ஆப்பிள் பழத்தில் ஒரு புழுவைப்
பார்ப்பதைவிட ...? அரைப் புழு!

- தொய்வின் சிகரம் —
  ''இதற்குமேல் என்னால் சமாளிக்கமுடியாது!''

இதற்குப் பரிகாரம் கர்த்தருக்குமுன் காத்திருப்பதே —
சங் 84:2,4ஐப் பாருங்கள்.
வச 5,7 ... *கண்ணீர்* → *மழை* (அத்தியாயம் 80)
அவ்விதமே, ஏசா 40:28-31

எ.கா.) இயேசு — பணி பெருகியபோது ஜெபத்தைக் கூட்டினார்.
மாற் 1:32-35

5. *கர்த்தரின் ஈவுகள் (வரங்கள்)* (Lord's Gifts)

சங் 68:18,19 ... *ஏறினார் ... அனுதின நன்மைகள்*
எபே 4:8இல் பவுல் இதை எடுத்தாள்கிறார்.

— தேவன் நமக்குத் தந்துள்ள **ஊழியங்களுக்காய்** நம்மைப்
பக்குவப்படுத்தி பலப்படுத்துவதற்காகவே இவ்வரங்கள்
(வச 7-13)

நாம் யாவரும் தேவனது பணியாளரே —
நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளின்படி
தேவன் நமக்கு வரங்கள், தாலந்துகள் தருகிறார் ...

(தாலந்து = ஏது, வல்லமை, கிருபை, திறன்)
எ.கா.) 5 ... 2 ... 1 ... பல்வேறு சாக்குப்போக்குகள் சொல்லி
இறைப்பணியை அசட்டை செய்யாதீர் (மத் 25:24,25).

நீங்கள் சொல்ல வேண்டியது:
தேவன் அனுப்புமிடம் செல்வேன்; அவர் பணிப்பதைச் செய்வேன்!

- இவ்வரங்கள் இறைப்பிரசன்னத்தை நாம் உணரச் செய்கின்றன —
  ''கர்த்தர் அங்கு வாசமாயிருக்குபடி ...'' (சங் 68:18)

எ.கா.) எங்கும் புறப்பட்டுச் சென்ற சீடர் —
மாற் 16:20... *கர்த்தர் அவர்களுடன் செயல்பட்டு ... அடையாளங்கள்.*
அப்படியே, மத் 28:18-20... *எப்போதும் உங்களுடன் இருக்கிறேன்.*

- எதிர்ப்புகளோ இடர்பாடுகளோ நமக்கு வியப்பாகவோ,
  நம்மை நிறுத்துவதாகவோ இருக்கக்கூடாது —

சங் 68:19இன் வசனச் சூழமைவைப் பாருங்கள் ...
''தேவனுடைய இரதங்கள்'' (வச 17)
''உன்னதத்திற்கு ஏறி'' (வச 18)
''சிறைப்பட்டோரைச் சிறையாக்கி'' (வச 18)
எனவே பயப்படாதிருங்கள்!
திருவசனத்தை அறிவித்துக்கொண்டேயிருங்கள் (வச 11)
''சேனைகளின் இராஜாக்கள் ஓடினார்கள்'' (வச 12)
''தங்கச் சிறகுகள் ... வெள்ளிச் சிறகுகள்'' (வச 13)

இதைக் கருத்தில் கொண்டே அப்போஸ்தலர் ஜெபித்தனர் —
(அப் 4:29-31)

6. கர்த்தரின் ஞானம் (Lord's Wisdom)

நடத்துதல் / ஆலோசனை
ஏசா 50:4,5 ... *''காலைதோறும் என்னை எழுப்புகிறார்''*
துயிலெழப் பழகுங்கள் —

அவர் எழுப்புகிறார்;
ஆனால் **நீங்கள்தான்** எழும்பவேண்டும்!
(எபே 5:14)

ஒவ்வொரு நாளும், குறிப்பாகக் காலை வேளையில்,
கீழ்க்கண்ட கேள்விகள் நம்மை வாதிக்கின்றன —

நான் என்ன செய்யவேண்டும்?
இக்கடிதத்திற்குப் பதில் எழுதலாமா, கூடாதா?
இந்த இரண்டில் எதைத் தெரிந்துகொள்வது?

ஏசாயா 50:4,5 இயேசுவையே குறிப்பிடுகிறது (வச 6)

தமது பிதாவிடமிருந்து இயேசு ஆலோசனைகள் பெற்றதுபோல்,
நாமும் அவர்முன் **காத்திருக்கையில்** நடத்துதல் பெறுவோம் —

மனதை இளைப்பாற விடுங்கள் (வச 6,7)

ஒவ்வொரு நாளும் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியது —
எரே 10:23 ... *''நடக்கிறவனது நடைகள் அவனுடையவையல்ல''*
நீதி 3:5,6 ... *''கர்த்தர்மேல் நம்பிக்கையாயிரு ... சாயாதே ...''*

— அறிவாற்றல் நிரம்பியோர் கவனமாயிருக்க வேண்டும் (எரே 9:23,24)
— இறைப்பாணியிலேயே சிந்திக்கத் திருவசனங்கள் மூலம்
உங்கள் மனதைப் பயிற்றுவியுங்கள்
அப் 17:11 ... *''குணசாலிகள்''*

— வேதத்தைத் **தவறாது** வாசித்துத் தியானியுங்கள்.
உங்களை உயிர்ப்பிக்கும் வரிகள், வசனங்களைக் குறியுங்கள்.
அந்த நாளில் நீங்கள் சந்திக்கவிருக்கும் ஒரு சூழ்நிலைக்கு
அதுவே தேவ செய்தியாயிருக்கும்.
''ஞானத்தைப் போதிக்கும் வசனம்/அறிவை உணர்த்தும் வசனம்''
(1 கொரி 12:8)
இல்லையேல் ''தந்திரம்'' x *''மேலிருந்து வரும் ஞானம்''*
(யாக் 3:13-17)

7. கர்த்தரின் பொருளாதார நன்மைகள் (Lord's Provisions)

தேவன் நமது உடல்களுக்கும் ஆண்டவர் —
1 கொரி 6:20 / எபே 5:23ஆ

''அனுதின'' ஆகாரத்திற்காய் ஜெபிக்க இயேசு போதித்தார் —
மத் 6:11

கர்த்தருடைய ஜெபத்தில்,
முதல் மூன்று விண்ணப்பங்களும் **தேவனுடைய** காரியங்கள் —

''உமது நாமம் ... உமது இராஜ்யம் ... உமது சித்தம்''

அடுத்த நான்கும் நமது தேவைகளை அடுத்தவை —

''ஆகாரம் ... பாவங்கள் ... சோதனை ... விடுவிப்பு''
இந்த நான்கில் முதலில் வருவது *''ஆகாரம்தான்!''*

நமது உடலுக்கடுத்த தேவைகளில் தேவன் எவ்வளவு கரிசனை கொண்டுள்ளார் என்பதை இது காட்டுகிறது —
எ.கா.) ''வேலை'' கொடுக்குமுன் ஆதாமுக்குத் தேவன் ஆகாரம் கொடுத்தார் — ஆதி 1:29; 2:8; / 2:15

''காலைதோறும்'' தேவன் மன்னா கொடுத்தார் —
யாத் 16:21...*எது போதுமோ அதில் திருப்தியாயிருக்கவேண்டும்,*
அதுதான் மிக முக்கியம் —

யாத் 16:17-21 ... *மிகுதி ... கொஞ்சம் ... தேவை*
புதிய ஏற்பாட்டிலும் இது சொல்லப்பட்டுள்ளது (2 கொரி 8:15)

''போதுமெனும் மனதுடன் தேவபக்தி'' (1 தீமோ 6:6-8)
''அன்றன்றுள்ள'' அப்பம்: கவனிக்க, *''அன்றன்றுள்ள''*

- உங்கள் பிள்ளைகள் குறித்து அளவுக்குமீறி கவலை வேண்டாம் —
  யாத் 16:32,33

  ஆபிரகாமின் தேவனே ஈசாக்கின் தேவன்;
  ஈசாக்கின் தேவனே யாக்கோபின் தேவன்!

நீதிமானின் ''சந்ததி'' பிச்சை எடுக்காது —
(சங் 37:25) ← தாவீது கண்டறிந்தது.
(மிகுந்த செல்வம் இல்லாதிருக்கலாம் ... வச 16)

உங்கள் பிள்ளைகளுக்கு விலையேறப்பெற்ற *''விசுவாசத்தை''* விட்டுச் செல்லுங்கள்; அழியும் ''செல்வத்தை'' அல்ல —

லோவிசாள் → ஐனிக்கேயாள் → தீமோத்தேயு
(2 தீமோ 1:5)

— தேவ ஊழியரின் பிள்ளைகள் நன்கு கவனிக்கப்படுவதில்லை.
ஆனால் தீர்க்கன் சாமுவேல்: 1 சாமு 7:15-17
அவர்களோ சரியாய் நடக்கவில்லை (8:1,3)
தேவன் சாமுவேலை அதற்குப் பொறுப்பாக்கவில்லை;
அவன் தனது கடமையை நிறைவேற்றிவிட்டான் — போதும்.

■ *முடிவுரை*

இரக்கங்கள் ... நீதி நியாயம் ... விசாரிப்பு ... பலம் ... ஈவுகள் ... ஞானம் ... பொருளாதார நன்மைகள்

இவை யாவும் தினசரி ஆசிகளாய் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளன; அமைதியாய்த் தினமும் கர்த்தருக்குக் காத்திருந்து இவற்றை நமதாக்கலாம் —

இங்குதான் **தினசரி அமைதி வேளை** தேவைப்படுகிறது!

(65ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

67

மூன்று மூவரிடமிருந்து ஜெபப் பாடங்கள்

Lessons on Prayer from three Trios

முகவுரை

திருமறையில் மூன்று முக்கிய மூவர் குழுக்களைச் சந்திக்கிறோம் —
அ) ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு
ஆ) நோவா, தானியேல், யோபு
இ) பேதுரு, யாக்கோபு, யோவான்

உடன்படிக்கைகள், வெளிப்பாடுகள், பொறுப்புகள் ஆகியவை வாயிலாக இவர்கள் தேவனுக்கு நெருக்கமானவர்கள்.

சுவாரஸ்யமாக, இவர்களிடமிருந்து பல நடைமுறை ஜெபப் பாடங்கள் கற்கிறோம்.

1. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு

யாத் 3:6,15,16; 4:5 ... மோசேயின் வார்த்தைகள்
மத் 22:32; மாற் 12:26; லூக் 20:37 ... இயேசுவின் வார்த்தைகள்
அப் 3:13 ... பேதுருவின் வார்த்தைகள்
7:32 ... ஸ்தேவானின் வார்த்தைகள்

- **ஆபிரகாம்** — மனப் பாரம் (Burden)

ஆதி 18:20-33 ... சோதோமுக்காய் மன்றாட்டு
லூக் 19:41-44 ... *இயேசு எருசலேமிற்காய் அழுதார்*
ரோ 9:1-3; 10:1 ... *இஸ்ரவேலருக்காய்ப் பவுலின் மன வேதனை*

- **ஈசாக்கு** — மனவுறுதி, விசுவாசம் (Confidence, Faith)

ஆதி 25:21 ... தனது மனைவிக்காய் வேண்டினான்.
ஈசாக்கு = நகைப்பு
அதாவது, கவலையற்ற மன நிம்மதி

எ.கா.) ஆதி 24:61-65 ... பெண் தேடும் படலத்தின்போது வயல் வெளியில் தியானம்!
26:12-25 ... துரவுகளை விட்டுக்கொடுத்தான்.
பிலி 4:4-7 ... *கவலை ... ஜெபம் ... சமாதானம்*

- **யாக்கோபு** — புயபலம் சமர்ப்பிப்பு (Surrender)

ஆதி 32:24-30 ... தந்திர வேலைக்கு இனி இடமில்லை.

முக்கியமான சத்தியம்:

- கட்டிடம் — சக 4:6,7 ... புயபலமல்ல, ஆவியானவர்
- பந்தயம் — ரோ 9:16 ... திறமையல்ல, தேவ இரக்கம்
- விவசாயம் — 1 கொரி 3:6,7 ... வேலையல்ல, ஆசீர்வாதம்

2. நோவா, தானியேல், யோபு

எசேக் 14:14,20 ... நீதியாய் வாழ்வதற்கு எடுத்துக்காட்டாக இம்மூவரையும் தேவன் குறிப்பிடுகிறார்.

- **நோவா** — தொழுகை (Worship)

நோவா = இளைப்பாறுதல் (ஆதி 5:29)
இந்த இளைப்பாறுதல் தொழுகையோடு சம்பந்தப்பட்டது —
எ.கா.) யாத் 20:8-11 ... *ஓய்வுநாள் ... தேவனாகிய கர்த்தர்*
ஏசா 58:13 ... *ஓய்வுநாள் ... கர்த்தருக்குக் கனம்*

நோவா தொழுகையில் சிறந்திருந்தான் —
ஆதி 8:20,21 ... *பலிபீடம் ... காணிக்கை ... சுகந்த வாசனை*
(*''சுகந்த வாசனை''* எனும் சொற்கள் லேவியராகமத்திலும் எண்ணாகமத்திலும் அடிக்கடி வருகின்றன.)

மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனத்தைத் தொழுகையின் ஆவியோடுதான் நோவா அறிவித்தான் —
ஆதி 9:26 ... *சேம் ... கர்த்தருக்கு ஸ்தோத்திரம்*

- **தானியேல்** — தீர்க்கதரிசனக் கண்ணோட்டம் (Prophetic)

தானி 9:1-3 ... தீர்க்கன் எரேமியாவின் வார்த்தைகளிலிருந்து தானியேல் அறிந்துகொண்டதின்படி ...
உபவாசம் ... ஜெபம் ... விண்ணப்பங்கள்

அவ்விதமே, சங்கீதம் 2:1,2இன் தீர்க்கதரிசன வெளிச்சத்தின்படியே ஆதிச்சபை ஜெபித்தது (அப் 4:24-26).

மப்பும் மந்தாரமுமான வேளைகளில் இறைவார்த்தையின் தீர்க்கதரிசனங்களே நமக்கு வெளிச்சம் தருகின்றன —
2 பேது 1:19-21

- **யோபு** — தன்னலமின்மை, பிறர்மீது கரிசனை (Selflessness)

யோபு 42:10...*தனது சிநேகிதருக்காய் வேண்டுதல் செய்தான்.*
31:9,10 ... பிறர்மீது மரியாதை
:13-15 ... வேலைக்காரருக்கும் நியாயம்
:16-20 ... எளியோருக்கு உணவு, உடை
:21,22 ... தகப்பனற்றோருக்கு அன்பு
:24,25 ... பொருளாசையின்மை
:29,30 ... எதிரிகளிடம் பரிவு
:32 ... அந்நியருக்கு உபசரிப்பு

தன்னல ஜெபங்கள் பதிலளிக்கப்படாது (யாக் 4:3).

3. பேதுரு, யாக்கோபு, யோவான்

லூக் 9:28 ... ஜெபம் & மகிமை
மாற் 14:32-35 ... ஜெபம் & வியாகுலம்
மாற் 5:36,37,40 ... யவீருவின் மகள் எழுப்பப்பட்டது.
கலா 2:9 ... ஆதிச் சபையின் *தூண்கள்*

- **பேதுரு** — விழித்திருப்பு (Watchfulness)

துவக்கத்தில் பேதுரு தூங்குவதில் கெட்டி —

லூக் 9:32 ... மலையில்
மத் 26:40,41 ... தோட்டத்தில்
அப் 10:9-11 ... மேல் வீட்டில்
12:6-11 ... சிறையில்

அவரது நிருபங்களோ விழித்திருத்தலை வற்புறுத்துகின்றன —

1 பேது 4:7 ... *தெளிந்த புத்தி ... ஜெபம்*
5:8 ... *தெளிந்த புத்தி ... விழித்திருப்பு*
2 பேது 3:10,14 ... *மிகுந்த ஆவல் ... ஜாக்கிரதை*
(விழித்திருப்பு = கவனம், மனக்கூர்மை, தெளிவு)

- **யாக்கோபு** — உற்சாகம் (Enthusiasm)

இவர் யோவானின் சகோதரர்;
பன்னிருவரில் ஒருவர்;
எருசலேம் சங்கத்தில் ஒரு தலைவராயிருந்த
யாக்கோபு நிருபம் எழுதியவரல்ல.

யாக்கோபுவின் தீவிர மனப்பான்மை —

லூக் 9:51-56 ... *வானத்திலிருந்து அக்கினி ...*
மாற் 3:17 ... *இடிமுழக்கத்தின் குமாரர் ...*
10:35-41 ... *இயேசுவின் வலது, இடது ஆசனங்கள்*
13:3,4 ... கிறிஸ்துவின் வருகை, உலக முடிவுக்கு
அடையாளம் (மத் 24:3)

அவர் எதிலும் தீவிரமாயிருப்பவர்.
அப்போஸ்தலரில் முதல் இரத்த சாட்சியாய் அவர் மரித்தது
ஆச்சரியமில்லையே! (அப் 12:1-3)

நாம் ஜெபத்தில் தீவிரம், உற்சாகம், வைராக்கியம் காட்டவேண்டும்:
ரோ 12:11,12... *ஆவியில் அனல்...ஜெபத்தில் உறுதியான தரிப்பு*

- **யோவான்** — திருவசன அடிப்படை (Scripturalness)

அவர் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர் —
தேவனது இதயத்துடிப்பு அவருக்குத் தெரியும்!
இறைவார்த்தையிலேயே இறைச்சித்தம் வெளிப்பாடு.
எ.கா.) 1 யோ 5:14-17 ... எதற்காக ஜெபிக்கக்கூடாது என்பதற்கு
ஓர் எடுத்துக்காட்டு

யோவானது எழுத்துக்கள் தேவனது வார்த்தை, அவரது கட்டளைகள் ஆகியவற்றை வெகுவாய் வலியுறுத்துகின்றன —

யோ 1:1; 4:34; 5:39; 6:63,67,68; 7:16,17; 10:35;
14:21,23; 15:3,7; 17:17

1 யோ 1:1; 2:5,14; 3:22; 5:3

2 யோ 4,10

3 யோ 4

திருவசனம் மூலம் திருச்சித்தம் அறிவதில் வளருவதே
ஜெப வாழ்வில் முதிர்ச்சி (ரோ 8:26,27)

தொகுப்பு

- ☐ **பாரத்துடன்** ஜெபியுங்கள் — *ஆபிரகாம்*
- ☐ **விசுவாசத்துடன்** ஜெபியுங்கள் — *ஈசாக்கு*
- ☐ **புயபலத்தைச் சமர்ப்பித்து** ஜெபியுங்கள் — *யாக்கோபு*
  - ☐ **தொழுகையின்** ஆவியோடு ஜெபியுங்கள் — *நோவா*
  - ☐ **தீர்க்கதரிசனக் கண்ணோட்டத்தில்** ஜெபியுங்கள் — *தானியேல்*
  - ☐ **தன்னலமின்றி** ஜெபியுங்கள் — *யோபு*
- ☐ **விழிப்புடன்** ஜெபியுங்கள் — *பேதுரு*
- ☐ **உற்சாகமாய்** ஜெபியுங்கள் — *யாக்கோபு*
- ☐ **திருவசனத்தின்படி** ஜெபியுங்கள் — *யோவான்*

தானியேல் போல ஜெபித்திடும்
தாசர் பலர் மறைந்தார்;
திறப்பின் வாசலில் நிற்கும் சிலர்
தூங்கிக் களைத்துப் போனார்!

68

பரிசுத்த வாரம் தரும் ஜெபப் பாடங்கள்

Lessons on Prayer from the Holy Week

முகவுரை

கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதும் மரித்ததும் ஒரு **போராட்டம்** (warfare) ஆகும் —

எபே 2:14-16 ... பிரிவினைச் சுவரைத் தகர்க்க ...
கொலோ 2:14-15 ... அதிகாரங்களை உரிந்துகொள்ள ...
தீத்து 2:14-15 ... அக்கிரமங்களிலிருந்து நம்மை மீட்க ...
எபி 2:14-15 ... பிசாசானவனை அழிக்க ...
(demolish, disarm, deliver, destroy)

போராட்டத்தில் மோதியவை —

- தேவனும் சாத்தானும்
- நல்லதும் தீயதும்
- பெண்ணின் வித்தும் சர்ப்பத்தின் வித்தும்
- பரலோகமும் நரலோகமும்
- ஆவியும் மாம்சமும்
- சத்தியமும் பாரம்பரியமும்
- இறையரசும் இவ்வுலகும்

இயேசுவின் **உடல்தான்** போர்க்களம் —

சங் 129:3 ... *என் முதுகின்மேல் உழுது ...*

குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்திக்கொண்டு
மரியாளிடம் சிமியோன் சொன்னது இதுவே —
''ஒரு பட்டயம் உன் ஆத்துமாவை உருவும்'' (லூக் 2:35)

இப்போராட்டத்தில் இயேசுவின் முக்கிய போராயுதம்: **ஜெபம்**

- கெத்செமனேக்குள் நுழைவதற்கு முன்னர்
  ஒரு நீண்ட ஜெபம் செய்தார் (யோ 17 & 18:1)
- கெத்செமனேக்குள் நுழைந்த பின்னர்
  ஒரு சத்த ஜெபம் செய்தார் (மத் 26:36)

நம்மைப்பற்றி என்ன?

நமக்கும் இப்போராட்டம் உண்டா?

ஆம்! — *பச்சை மரம்* vs. *பட்ட மரம்* (லூக் 23:31)

— *வான மண்டலங்களில்* ... (எபே 6:12)

எபே 6:13-17இலுள்ள போராயுதங்களைப் பயன்படுத்தும் திறனைத் தருவது **ஜெபமே** (வச 18).

ஜெபம் என்பது நமது வாழ்வின் வாடிக்கையாகிவிடவேண்டும் — அவசரத்திற்கு அழைப்பு அல்ல!

உதாரணம்: ஒரு சிறுவன் கூரையில் வழுக்கினான்.
''தேவனே, காப்பாற்றும்'' என்று கதறினான்.
ஒரு சில நிமிடத்தில் ஆணியொன்றில்
மாட்டிக்கொண்டபோது சொன்னான்:
''பரவாயில்லை, பத்திரமாகத்தானிருக்கிறேன்!''

அவசர உதவிக்கே ஆண்டவர் எனும் எண்ணம்.

வெற்றியுள்ள ஜெப வாழ்வுக்கு ஏழு உறுதுணைகள்:

பரிசுத்த வார நிகழ்வுகள் தரும் பாடங்கள் —

1 . விசுவாசம் (Faith)

மாற் 11:20-24 ... அத்தி மரத்தைச் சபித்தது

மரத்துக்கு ஆண்டவர் செய்ததை மலைக்கு நாம் செய்யலாம்!

''விசுவாசிக்கிறவன்... இன்னும் *பெரிய காரியங்கள்''* (யோ 14:12)

மலை = பிரச்னைகள், தடைகள்

நமது மிகப்பெரிய பிரச்னையைவிடத் தேவன் மிகப் பெரியவர்!

கானானுக்குச் சென்ற வேவுகாரர் —
இராட்சதர்கள் ... வெட்டுக்கிளிகள் ... தேவன் (எண் 13:28-33)

வேதத்தின் தேவனை அறிந்துகொள்ள
வேதத்தைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.

ஜெபத்திற்கு விசுவாசம் தேவை ... விசுவாசத்திற்கு ஜெபம் தேவை!

எ.கா.) பேதுருவின் விசுவாசத்திற்காய் இயேசு ஜெபித்தார் (லூக் 22:32)

2. மன்னிப்பு (Forgiveness)

மாற் 11:25,26 (விசுவாசத்தைப்பற்றிப் போதித்தவுடன்)

- கர்த்தருடைய ஜெபத்தில் நிபந்தனையோடுள்ள ஒரே வேண்டல் ''மன்னிப்பைக்'' குறித்தது (மத் 6:12)
- *''குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஜெபம்''* (யாக் 5:16)
- சிலுவையிலிருந்து இயேசு ஏறெடுத்த இரு ஜெபங்களில் முதலாவது — *''பிதாவே, இவர்களை மன்னியும்''*

ஒப்புரவாகவேண்டிய நபர்களைப் பட்டியலிடுங்கள்.
பிறர் பாவங்களை மன்னியாவிடில் நமது பாவங்களும் மன்னிக்கப்படாது.

எவருக்கும் விரோதமாக வைராக்கியத்தையும்
கசப்பையும் பேணிவைப்பது நமக்குத்தான் கேடு.

3. விழித்திருப்பு (Watchfulness)

= கவனம், தெளிவு, கரிசனை
x கவலையீனம், ஏனோதானோ எனும் சிந்தை —
மத் 26:41 ... *விழித்திருங்கள் ... ஜெபியுங்கள் ...*

அதாவது, அவசரப்படாமல்
''ஒரு மணி நேரமாவது'' ஜெபம் (வச 40)
பயிற்சியினாலேயே இது சாத்தியம் (யோ 18:2)

இது சுலபமல்ல (மத் 26:41 ... *உற்சாக ஆவி* x *பலவீன மாம்சம்*)

உங்கள் வாழ்வில் ஜெப மணி நேரம் உண்டா?
அப் 3:1 (9ஆம் மணி = பிற்பகல் 3 மணி) ... *பேதுரு, யோவான்*
ஒரே நாளில் 3000 பேர் சபையில் சேர்ந்தார்களே,
எவ்வளவு வேலை இருந்திருக்கும்!

அ) ஜெபத்தில் **பாவனை** (Posture) —
இதுவும் விழிப்புக்கு முக்கியமானது.
படுத்துக்கொண்டு ஜெபிப்பது x
கால் மேல் கால் போட்டு ஜெபிப்பது x

முழங்காலிடுங்கள்!
''முகங்குப்புற விழுந்து'' ஜெபித்தார் (மத் 26:39)

ஆ) ஜெபத்திற்கு **இடம்** (Place) —

ஜெபமென்றால் தேவனோடு இடைபடுதலாம்.
விழிப்பாயிருக்கவேண்டியதேன்?—
தேவன் உங்களோடு பேசுவார்!
இயேசு *''உன் அறையைப் பூட்டி ...''* (மத் 6:6)
கைபேசியை அணைத்துவிடுங்கள்.

4. *ஒப்புக்கொடுத்தல்/அர்ப்பணித்தல்* (Yieldedness)

மத் 26:39,42,44 ... *உமது சித்தம் செய்யப்படுவதாக ...*
ஒப்புக்கொடுத்த பின்னரே **பலம்** வருகிறது (லூக் 22:42,43)

- முதலாம் ஆதாம் ஒரு தோட்டத்தில் தோற்றான்;
  இரண்டாம் ஆதாம் ஒரு தோட்டத்தில் வென்றார்.

அன்று, அங்கு, சாப்பிடுவதற்குச் சோதனை;
இன்று, இங்கு, குடிக்காமலிருப்பதற்குச் சோதனை.

- கிறிஸ்துவின் இறுதி வார்த்தைகள் அர்ப்பணிக்கவே —
  ''பிதாவே, உமது கைகளில் ...''

தேவனது கரங்களில் விழுவதே மேலானது, பாதுகாப்பானது.
கடினமாயிருந்தாலும் தேவனது சித்தம், தேவனது வழிதான் மேல் —
1 யோ 5:14 ... *நம்பிக்கை ... தேவ சித்தம் ...*

திருவசனமே திருச்சித்தம்.
திருவசனத்தால் நிறைந்திருங்கள்.
எஸ்றா — நெகேமியா — நெகே 9:3
6 மணி நேரம் + 6 மணி நேரம்

- விருப்பு வெறுப்புகளுக்காவே ஜெபம் என்பது தவறு (யாக் 4:3,4)
  உதாரணம்: ஒரு சிறுவனின் ஜெபம் —

''ஆண்டவரே, கல்கத்தாவை மஹாராஷ்டிராவின் தலைநகராக்கும்;
அப்படித்தான் புவியியல் பரீட்சையில் எழுதியிருக்கிறேன்!''

நமது விருப்பத்திற்கேற்ப தேவ சித்தத்தை மாற்ற அல்ல,
அவரது சித்தத்திற்கேற்ப நமது விருப்பங்களை மாற்றவே ஜெபம்!

5. *கண்ணீர்* /நொறுங்கியிருத்தல் (Contriteness)

லூக் 23:26-28 ... *உங்களுக்காக, உங்கள் பிள்ளைகளுக்காக* *[அழுங்கள்*
இயேசுவின் கண்ணீர் ... எபி 5:7
பவுலின் கண்ணீர் ... அப் 20:19,31
தீமோத்தேயுவின் கண்ணீர் ... 2 தீமோ 1:3

பவுல் இதை இயேசுவிடம் கற்றார்; தீமோத்தேயு பவுலிடம் கற்றான்.
நீங்கள் கண்ணீரோடு ஜெபிக்கக் கற்றுவிட்டீர்களா?

கண்ணீர் இல்லாவிடில் கலக்கம்தான்!
தேவனுக்குமுன் விழுந்து கிடப்பவன் மனிதருக்குமுன்
நிமிர்ந்து நிற்பான்!
கண்ணீர் சிந்துவோருக்கே வெற்றி!
(நெகேமியா அழுதான் ... எஸ்றா அழுதான் ... எஸ்தர் அழுதாள்)

தேவனது பார்வையில் கண்ணீர் அருமையானது (சங் 56:8)

புத்தகத்தில் ஜெபங்கள்
புட்டியில் கண்ணீர்

ஊழியத்தில் கனியில்லையே என்று விரக்தியடைந்திருந்த
உடன் ஊழியருக்கு வில்லியம் பூத்: ''அழுது பாருங்கள்!''
"Try tears!"

உங்கள் **பிள்ளைகளுக்காய்க்** கண்ணீருடன் ஜெபியுங்கள் —
''உன் பிள்ளைகளுக்காய்க் கண்ணீர் விடு'' (புல 2:18,19)
நமது பிள்ளைகளின் காலம் நமதைவிடக் கொடியதாயிருக்கும்.

(87ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

6. *தனிமை/இருட்டு* (Loneliness/Darkness)

தனித்திருப்பது ஜெபத்திற்கு இன்றியமையாதது —
70 ... 12 ... 3 ... தனித்து! (மத் 26:36-39)
மாற் 15:33,34 ... *அந்தகாரம் ... என் தேவனே, என் தேவனே ...*
இதுவே சிலுவையிலிருந்து வந்த மத்தியக் கதறல்.

இரகசிய ஜெபமே ஜெபத்தின் இரகசியம்.

இருட்டு வேளைகள் வரத்தான் செய்யும் (ஏசா 50:10)

*7. **தைரியம்*** (Boldness)

மாற் 15:37,38 ... *தேவாலயத் திரைச்சீலை கிழிந்தது*

எபி 4:14-16 |
6:19,20 | *மகா பரிசுத்த தலத்திற்குத் திறந்த வழி*

மரியாளோ, ஊழியரோ, நடுவராய்ச் செயலாற்ற வேண்டியதில்லை.
தந்தையிடம் மகன் கேட்பதுபோல் ஜெபியுங்கள் (மத் 7:7-11)
''அப்பா, பிதாவே'' (ரோ 8:15)
பிதாவை **நோக்கி**, இயேசுவின் **மூலம்!**

இன்று ''கிருபையின்'' ஆசனத்தருகே தரித்திருப்போம்;
நாளை ''மகிமையின்'' ஆசனத்தில் பங்குபெறுவோம்.

''ஜெபமே ஜெயம்'' என்ற சுவர் வாசகம்
அப்பொழுதுதான் முழுமையாகப் புரியும்!
"Prayer brings victory!"

ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்,
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்!

69

மன்றாட்டு ஜெபம்

Ingredients of Intercession

முகவுரை

- மன்றாட்டு என்பது பொதுவான ஜெபத்திற்கு மேலானது —
அது ஒருவரது சார்பில் வாதாடுவது போன்றது.
1 தீமோ 2:1 ...

4. *ஸ்தோத்திரங்கள்* — விசுவாசித்துத் துதித்தல்
3. *வேண்டுதல்கள்* (மன்றாட்டு) — வருந்திக் கெஞ்சுதல்
2. *ஜெபங்கள்* — உதவி நாடுதல், தயவு கேட்டல்
1. *விண்ணப்பங்கள்* — தேவைகளைச் சமர்ப்பித்தல்

விசுவாசத்தோடும் துதியோடும் ஜெபத்திற்குப் பதிலைக் கரம் நீட்டி
வாங்குவதற்கு முந்திய, உயர்ந்த படியே (3) மன்றாட்டு.

மன்றாட்டு ஜெபத்திற்கு உட்கூறுகள் —

*1. **தகவல்கள்*** (Information / Inquisition)

செய்திகள் (நெகே 1:2-4)
மிஷனரிப்பணிச் சுற்றறிக்கைகள்
செய்தித்தாள்கள் (உலகில் நடப்பவை)
சென்று பார்த்துவருதல் (நெகே 2:13-18)
''பார்வையிட்டேன்'' (வச 13,18)
(மத் 9:36-38) ... பார்ப்பதற்கு எதுவும் இணையாகாது!

மிஷனரி கன்வென்ஷன்கள் / மாநாடுகள்.
உலகப் படங்கள் (கேரியின் காலணியகத்தில் உலகப் படம்)
புள்ளி விபரங்கள் (குறிப்பேட்டில் எழுதி வையுங்கள்.)
மன்றாட்டுக்குத் தகவல்கள் நெருப்பிற்கு விறகு போல.

எதற்காய் ஜெபிக்கவேண்டுமெனத் தெரியாவிடில் ஜெப வாழ்வு வாடும்.
''எல்லா மனிதருக்காகவும்'' ஜெபிக்கவேண்டும்.

Patrick Johnstone தயாரித்துள்ள *"Operation World"*
எனும் பெரிய புத்தகம் பெரிதும் உதவும்.

2. வெளிப்பாடுகள் (Illumination)

திருமறையிலிருந்து தேவனது சிந்தையையும் திட்டத்தையும் அறிந்துகொள்வது —

- ☐ தானி 9:2,3 ... சிறையிருப்பிலிருந்து **திரும்பி வருதல்.** *(எரேமியாவின் புத்தகத்திலிருந்து)*
- ☐ அப் 2:16,17 ... கடைசி நாட்களில் **அருள்மாரி.** (பல சபைகள் இந்த அருள்மாரியை இன்னும் அனுபவிக்கவில்லை)
- ☐ 15:13-19 ... புறவினத்தாரின் இரட்சிப்பு (வெளி 7:9,10) ... *''சகல'' ஜாதிகள்:* மக்களினங்கள்
- ☐ 1 தீமோ 4:1-3 / 2 தீமோ 4:3,4 | இறுதிக்காலத்தில் **சோரம்போதல்**
- ☐ மத் 24 ... இறுதிக்கால முன்னறிவிப்புகள்

வேதத்தியானத்தில் போதுமான நேரம் செலவிடாவிடில் மன்றாட்டு வீரர் திசைமாற வாய்ப்புண்டு.

— முழங்காலில் வேதம் வாசிப்பது மன்றாட்டுக்கு நடத்தும்.

3. அகத்தூண்டல் (Inspiration)

Inflammation / Infusion / Impartation / Ignition

- ☐ *கர்த்தரின் பாரம்* —

மன்றாட்டின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் இதயத்தில் நடுவது. (சக 12:10,11 / விளைவு: 13:1,2)

எ.கா.) எரேமியா (எரே 23:9,10); எசேக்கியேல் (எசேக் 37:1,2)

- ☐ தாவீதுக்கு வந்த வெளிப்பாடு அவனை ஜெபத்திற்கு நடத்திற்று —

2 சாமு 7:17,18,27 ... (சாலொமோன்தான் ஆலயம் கட்டுவான் என்று தீர்க்கன் நாத்தான் மூலம் வெளிப்பாடு)

- ☐ ஆவியானவரே மன்றாடுகிறார் —

ரோ 8:26 ... *பலவீனங்கள் ... வேண்டுதல் ... பெருமூச்சுகள் ...*

எ.கா.) சிமியோன் (லூக் 2:25-32)

ஆவியானவரே மிஷனரிப் பணியின் பிரதம இயக்குநர். எனவே திருச்சபையைத் தகுந்தவாறு **பாரப்படுத்துவார்.**

எ.கா.) அந்தியோகியா சபை (அப் 13:1-4)

— முழங்காலில் நிற்கும்போது மன்றாட்டு அலைகள் பாய்ந்தோடும்.

— ஆவியானவர் ஒரு நபர் அல்லது சூழ்நிலைக்காய் ஜெபிக்கப் பாரப்படுத்தினால் அதை அல்லத்தட்டாதீர்.

4. கற்பனை (Imagination / Incubation)

மேன்மையும் மகிமையுமான காரியங்களைக் கற்பனை செய்து தரிசனத்தை விரிவாக்குதல் ...

- ☐ அரசியல் தலைநகராம் ரோம் குறித்துப் பவுல் (ரோ 1:15,9-12; 15:23,24,30,32) (அப் 23:11)
- ☐ ''தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; அவருக்காய்ப் பெரிய காரியங்களை முயற்சியுங்கள்'' — வில்லியம் கேரி, 1761-1834
- ☐ இறையரசைக் குறித்து மனதில் சித்திரங்கள் வரையுங்கள் —

எ.கா.) *''முழங்கால் யாவும் முடங்கும் ...''* (பிலி 2:10)
''நான் உயர்த்தப்படும்போது ...'' (யோ 12:32)
''பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் ...'' (ஆப 2:14)
''என் சபையைக் கட்டுவேன் ...'' (மத் 16:18)

ஒவ்வொரு மக்களினத்திற்கும் ஒரு திருச்சபை!

''இராஜ்யத்தின் சுவிசேஷம் சகல நாட்டினருக்கும் பிரசங்கிக்கப்படும் ...'' (மத் 24:14)

- ☐ எழுப்புதல் சரித்திரங்களை வாசிப்பதும் பயன்தரும் —

சார்லஸ் பின்னி ... தொழிற்சாலைகளும் மூடப்பட்டன.
ஜான் வெஸ்லி...மதுக்கடைகள், திரையரங்குகளில் கூட்டம் குறைவு.
ஈவான் ராபர்ட்ஸ் ... எங்கும் ... ''எழுப்புதல் இங்கே!''
ரீஸ் ஹவல்ஸ் ... மன்றாட்டு வீரர்
வாலிபர் எழுப்புதல் கடிதங்கள் (ஆசீர்வாத இளைஞர் இயக்கம்)

இப்பயிற்சி நமது விசுவாசத்தை வலுப்படுத்தும்.
எழுப்புதல் இல்லாது வாழக் கற்றுக்கொண்டதாலேயே
நமக்கு எழுப்புதல் இல்லை!

எழுப்புதலுக்காய் ஜெபியுங்கள்.
எழுப்புதலைப்பற்றிப் பிரசங்கியுங்கள்.
எழுப்புதலைப்பற்றி எழுதுங்கள்.
எழுப்புதலைக் கனாக் காணுங்கள்.

5. ***அடையாளப்படுத்தல்*** (Incarnation)

(Identification / Incorporation / Infiltration into our being)

நாம் மன்றாடும் காரியம் நம்மை முழுவதும் பாதித்தல் —
(ஒன்றித்துவிடுதல்)

எ.கா.) மோசே (யாத் 32:32) ... *என் பெயரைக் கிறுக்கிவிடும்*
எஸ்றா (9:2-5)... *தாடியைப் பிடுங்கி... ஆடையைக் கிழித்து*
நெகேமியா (1:4/2:1-3) ... *அழுது ... புலம்பி ... துக்க முகம்*
தாவீது (சங் 35:13,14) ... *சிநேகிதன் ... சகோதரன் ... தாய்*
எரேமியா (9:1) ... *தலை தண்ணீரும் கண்கள் நீரூற்றும் ...*
தானியேல் (9:3,19,20) ... *இரட்டுடுத்தி ... ஜெபம்*
பவுல் (ரோ 9:3/10:1) ... *நானே சபிக்கப்பட ...*
தேவன் (ஓசி 11:8,9) ... *என் இருதயம் குழம்புகிறது*

6. ***முயற்சியெடுத்தல்*** (Initiation)

(Invocation / Imploration)

ஜெபத்தைத் தவிர எல்லாவற்றிற்கும் நமக்கு நேரமுண்டு.
ஜெபத்திற்கு முன்னுரிமை கொடுக்க முயற்சிக்கவேண்டும் —
அது தானாக வராது ... அதைத் தக்க வைக்கவேண்டும்.

பிற காரியங்களை ஒதுக்கிவைக்கலாம் —
''பிரதானமாய் ...'' (1 தீமோ 2:1ஆ)

ஜெபத்திலேயே நம்மை ஊற்றிவிடல் — (அப் 6:4).
ஆன்மீகப் பயிற்சிகள் அத்தனைக்கும் அடிப்படை —
எபே 6:18 ... *வேண்டுதல் ... விண்ணப்பம் ... ஜெபம்*

அநேக இடர்பாடுகளும் திசைதிரும்புதல்களும் வரலாம் ...
ஒரு சில பார்ப்பதற்குச் சரியானதுபோல் தோன்றும் ...
அவற்றை மேற்கொள்வது நமது பொறுப்பு.

எ.கா.) உண்ணல், உடலின்பம் போன்ற நியாயமானவை (உபவாசம்)
எ.கா.) நிறைமாதக் கர்ப்பிணிக்கு வேறெதுவும் முக்கியமாய்த் தெரியாது.

7. ***அமுலாக்குதல்*** (Implementation)

மன்றாட்டு என்பது ஜெபம் மட்டுமல்ல;
அது அந்த ஜெபத்திற்கு நாமே பதிலாகுவதாம் —

இயேசு:
லூக் 6:12,13 ... ஓரிரவு ஜெபத்திற்குப் பின்னர்
பன்னிருவரைத் தெரிந்தெடுத்தார்.
மத் 9:36-10:1,5அ ... பன்னிருவரை அனுப்பினார்.
மத் 26:39/யோ 18:11 ... பேதுருவிடம்:
''குடிக்காதிருப்பேனோ?'' ''கூடுமானால்'' ... *பாத்திரம்*

எ.கா.) ஜார்ஜ் முல்லர்: என்னால் இயன்ற அத்தனையையும் நான்
செய்யும்வரை அத்தேவைக்காய் ஜெபிக்க எனக்கு உரிமையில்லை.

செயல்படுவதற்கு ஜெபம் மாற்றாகாது.

எதிர்பாருங்கள்! — எல்லாமே தேவன்மீதே என ஜெபியுங்கள்.
முயற்சியுங்கள்! — எல்லாமே உங்கள்மீதே எனச் செயல்படுங்கள்.

■ ***முடிவுரை***

மன்றாட்டுக் கலையைப் படிக்க வேண்டும்; பார்க்க வேண்டும்.
ஒரு சிலருக்கு அது *''வரமாய்த்''* தரப்படலாம்;
ஆனாலும் எல்லாரும் ஓரளவிலாவது அதில் ஈடுபடவேண்டும்.

வாசியுங்கள்: *E. M. Bounds on Prayer*
Life of David Brainerd

மன்றாட்டு: இதற்குப் போட்டியே கிடையாது; ஏனெனில், இது
சுயத்தை விளம்பரப்படுத்துவதல்ல, அதைச் சாகடிப்பது!

மன்றாட்டு வீரர் பற்றாக்குறை —
ஏசா 59:16
''விண்ணப்பிக்கிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்''
ஆச்சரியம் = துக்கம் (Wonder = Worry)

இன்று தேவனது துக்கம் இதுவே —

அவரது துக்கம் கம்யூனிசமோ, ரோமானிசமோ, உலகின் சமரசமோ
அல்ல, திருச்சபையின் செத்த சடங்காச்சாரமே!

நாம் மன்றாடினால் போதாது,
மன்றாட்டு வீரரை எழுப்ப வேண்டும் —

''அக்கினி அக்கினியைப் பிறப்பிக்கும்!''

ஜெபம் செய்திடுவோம், கண்ணீர் சிந்திடுவோம்,
தேசத்தின் சேமத்திற்காய்
ஜெபிப்போம், ஜெயம் பெறுவோம்.
அதிகாலையில், இராச்சாமத்தில்,
பகலில், இரவில், இடைவிடாமல் எப்பொழுதுமே!

— அண்ணன் எமில் ஜெபசிங், 1941-2013

70

வேறுவிதமாய்ப் பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள்

Prayers Answered Differently

முகவுரை

- ஜெபத்திற்குப் பதிலளிக்கும் தேவனைப் பெற்றிருப்பது அவரது பிள்ளைகளாகிய நமக்குப் பிரதான சிலாக்கியம் —
  உபா 4:7 ... *வேறே பெரிய மக்களினம் எது?*

  அவரது பெயர்களில் ஒன்று —
  ''ஜெபத்தைக் கேட்கிறவர்'' (சங் 65:2)

  எந்த வேளையிலும் *''தைரியமாய்''* அவரை அணுகலாம் —
  எபி 4:16 ... *இரக்கம் ... சகாயம் ... கிருபாசனம் ...*

  ஆனால் ஒரு கேள்வி —
  ''எல்லா ஜெபங்களுக்கும் தேவன் பதிலளிக்கிறாரா?''

  ஆம், திருமறைப்படி அப்படித்தான் —
  மத் 7:7,8 / யோ 14:13,14

  ஆனால், அதுவா நமது அனுபவம்?

  இல்லை என்பதுதான் உண்மை!
  இதற்கு விளக்கம் என்ன?

☐ நமது ஜெபங்களுக்குத் தேவனது பதில் ...
— சிலவேளைகளில், ''ஆம்''
— பல வேளைகளில், ''இல்லை''
— அடிக்கடி, ''காத்திரு''
— இன்னும் அடிக்கடி, அமைதி!

வேறு வார்த்தைகளில் சொன்னால்,
தேவன் **எப்பொழுதும்** நமது ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார்;
ஆனால் **எப்பொழுதும்** நாம் எதிர்பார்க்கிறபடி அல்ல.

இந்த முக்கிய சத்தியத்தை நாம் புரிந்துகொள்ளாவிடில்,
நமது ஜெப வாழ்வில் விரக்தியடைந்து ஏமாற்றமடைவோம்.

- தேவன் நமது ஜெபங்களுக்குப் பதிலளிக்கும்போது,
  அவர் நமது **''தேவைகளைச்''** சந்திக்கிறார்.
  அவர் நமது ஜெபங்களுக்கு வேறுவிதமாய்ப் பதிலளிக்கும்போதோ,
  நமக்குப் பல **''பாடங்களைக்''** கற்பிக்கிறார்.
  நமது **வளர்ச்சிக்காகவே** இவ்விதம் செய்கிறார்.

வேறுவிதமாய்ப் பதிலளிக்கப்பட்ட சில ஜெபங்கள் —

1. ''ஐயா, அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்.''

யோ 4:10,15,16
''உன் கணவனை இங்கு அழைத்துவா''

நாம் கேட்டவுடன் உடனடியாய் நம்மை ஆசீர்வதிப்பதைவிட
நம்மை மாற்றுவதிலேயே தேவன் கரிசனை கொண்டுள்ளார் —
எ.கா.) யாக்கோபு...*''என்னை ஆசீர்வதியும்... உன் பெயரென்ன?''*
(ஆதி 32:26,27)

இகம்	பரம்
''இந்தத் தண்ணீர்'' (யோ 4:15)	*''நித்திய ஜீவ ஊற்று''*
''ஐயா'' (வச 15)	*''இரட்சகர்''* (வச 25)

''உடலுக்கடுத்த பயிற்சி அற்ப பயன்; தேவ பக்திக்குரியதோ ...''
(1 தீமோ 4:8,9)

''இம்மைக்காக மாத்திரம் ...'' (1 கொரி 15:19)
எ.கா.) கர்த்தரது ஜெபத்தில் ஆன்மீகத் தேவைகள்
vs. உடலுக்கடுத்தவை

*''எதை உண்போம் ... குடிப்போம் ... என்ற கவலை வேண்டாம் ...
முதலாவது ... அவரது **நீதி** ...''* (மத் 6:31-33)

*''நமது புறம்பான மனிதன் அழிந்தாலும், உள்ளான மனிதன் நாளுக்கு
நாள் புதிதாக்கப்படவே''* ஆண்டவர் விரும்புகிறார் (2 கொரி 4:16)

2. ''மூன்று கூடாரங்களைப் போடுவோம்.''

மாற் 9:1-8 (லூக் 9)
பக்திப் பரவசம்! (வச 6)

திருத்தப்பட்ட இரு தவறுகள் / கற்பிக்கப்பட்ட இரு பாடங்கள் —
அ) எவரோடும் இயேசுவைச் சமப்படுத்தக்கூடாது!
(வச 7,8)

தரிசனங்கள், சத்தங்கள், விண்ணிலிருந்து வருவோர் ...
(Visions, Voices, Visitors)
கிறிஸ்துவின் முதன்மைத்துவத்திலிருந்து இவை ஒன்றும்
நமது கவனத்தைத் திருப்பக்கூடாது.

கிறிஸ்துவின் முதன்மைத்துவத்தை நீங்கள் மறக்கும்போது,
— எவரையாவது ஆராதிப்பீர் (வெளி 19:10; 22:8,9; லூக் 9:33)
— எவர் பெரியவர் என்று போட்டியிடுவீர் (லூக் 9:46)

ஆ) தேவையுள்ள மக்களிடம் செல்லுங்கள்!
(வச 14,15,17,18)

பக்திப் பரவசங்களில் மூழ்கிவிடாதீர்;
தேவையிலிருப்போருக்கு உதவுங்கள் (எபி 13:15,16)

3. ''எனக்கு உதவும்படி மரியாளுக்குச் சொல்லும்.''

லூக் 10:38-42
மார்த்தாள் இப்படிக் கேட்டது நியாயந்தானே?

இயேசுவோ மார்த்தாள் அவளது வாழ்க்கையின் முன்னுரிமை
வரிசையைச் (priority) சரிசெய்ய விரும்பினார் (வச 41,42)

நமது அன்றாடக வேலைகளையடுத்த சில ஜெபங்கள் பதிலளிக்கப்
படாவிடில், நமது வாழ்வின் காரியங்களை உட்கார்ந்து மாற்றி
வரிசைப்படுத்தவேண்டும். கட்டாயமில்லாத சிலவற்றை ஒதுக்க
வேண்டியதிருக்கலாம்.

''அநேக'' காரியங்கள் — முக்கியம் (வச 41)
தேவையானது ''ஒன்று'' — அவசியம் (வச 42)
(எனக்கு வேண்டிய ஆகாரத்தைவிட ... யோபு 23:12)

நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் அல்ல,
நல்லதுக்கும் சிறந்ததுக்கும் இடையில்தான் தெரிந்தெடுப்பு!

எரிச்சலுக்கு இடம் கொடுக்காதீர் —
குறிப்பாக, சகோதரிகள், தம்பதியர், ...

4. *''பாகம் பிரித்துத் தர என் சகோதரனுக்குக் கட்டளையிடும்.''*

லூக் 12:13,14

பாகப்பிரிவினையின்போது இவனுக்கு ஏதோ அநியாயம் நடந்திருக்கிறது என்று யூகிக்கலாம்.

இயேசுவோ அவனில் காணப்பட்ட **''பொருளாசையைச்''** சுட்டிக்காட்டினார் — (வச 15)
பொது மொழிபெயர்ப்பு: *''எவ்வகைப்'' பொருளாசை ...*

அவனுக்கு ஏற்கனவே *''திரளான ஆஸ்தி''* இருந்தது (வச 15).
எ.கா.) போதுமான பணம் இங்கேயே உங்களுக்கு இருக்கும்போது வெளிநாடு செல்ல விசாவுக்கான ஜெபத்திற்குப் பதில் கிடையாமை!

- நமக்கு வரவேண்டிய நியாயமான பங்கைக்கூட நாம் விட்டுவிட சில வேளைகளில் ஆண்டவர் எதிர்பார்க்கிறார் —
  ''கர்த்தரே என் பங்கு!''
  சங் 16:5,6; 73:25,26
- லோத்தின் காரியத்தில் ஆபிரகாமின் தயாளம் —
  ஆதி 13:7-9
  ''நாம் சகோதரர் ... சண்டை வேண்டாம் ... இடது ... வலது''
- இச்சம்பவத்தில் இன்னொரு படிப்பினை —
  அதிகம் பெறுவதால் அல்ல,
  அதிகம் கொடுப்பதாலேயே செல்வந்தராகிறோம் —
  (வச 21,33,34)
  ''பகிர்வதில்'' பணக்காரராயிருங்கள் (1 தீமோ 6:17-19)

5. *''லாசரு வியாதியாயிருக்கிறான்.''*

யோ 11:3 ... *நீர் சிநேகிக்கிற லாசரு வியாதியாயிருக்கிறான்*
:21,32 ... *நீர் இங்கே இருந்திருந்தால் ...*
வேண்டுமென்றே இயேசு அங்குச் செல்லத் தாமதித்தார் (வச 6)

தாமதங்கள் மறுப்புகளல்ல; நமது விசுவாசத்தை வலுப்படுத்துபவை.

- அவர்கள் விரும்பியது உடல் சுகம்;
  அவர் கொடுத்ததோ உயிர்த்தெழுதல்!

  அற்ப ஆசைகளைத் தூர எறியுங்கள் —
  வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மேல் ... (எபே 3:20,21)
  அவருக்கு *''மகிமை''* உண்டாவதாக (வச 21)

லாசருவின் சுகவீனம் ''தேவனுடைய மகிமைக்கென்றே'' (வச 4)

அப்படியே இயேசுவும் — மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டாரா?
ஆம் — (எபி 5:7-9) ... *''பூரணரானார்''*

- நமது சோதனைகளிலும் பாடுகளிலும் தேவன் ஈடுபடும் விதம் மற்றவர்களுக்குப் படிப்பினையாகும் (வச 15) ... ***''உங்கள்** நிமித்தம்''*
  (வச 41,42) ... ***''ஜனங்கள்** நிமித்தம்''*

  எனவே பாடுகளை வீணாக்காதீர்!
  காயப்பட்டுக் காயங்கட்டுவோரே தேவை! (2 கொரி 1:3-6)
  (Wanted wounded healers!)

6. *''உம்மால் ஓர் அடையாளம் காண விரும்புகிறோம்.''*

மத் 12:38-41 ... *வேறே அடையாளம் கொடுக்கப்படுவதில்லை*

- ஏற்கனவே தேவன் கடந்த காலத்தில் செய்தவை போதும்!
  சங் 19:1 ... *வானங்கள் தேவ மகிமையை வெளிப்படுத்துகின்றன*

பறவைகளையும் பூக்களையும் நாம் பார்க்க இயேசு விரும்புகிறார் —
இது நமது விசுவாசத்தைப் பெருக்காவிடில் எதுதான் ...?
மத் 6:26-30 ... *''அற்ப விசுவாசம்''*

- பைபிளில் எழுதியுள்ள தேவனது முற்காலச் செயல்கள் போதாதா?
  எ.கா.) யோனா (மத் 12:39,40)
  1 கொரி 10:11 ... *திருஷ்டாந்தங்கள்*

விசுவாசித்து நடக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும் —
2 கொரி 5:6 ... *தரிசித்து நடவாமல் ...*

காணப்படுகிறவை அல்ல, காணப்படாதவை —
2 கொரி 4:18 ... *அநித்தியமானவை* vs. *நித்தியமானவை*

இங்கே ... அங்கே ... என்றல்ல ...
இராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது (லூக் 17:20,21)

தேவனது காலடிகள் தண்ணீரில் (சங் 77:19)

''லாசருவை அனுப்பும்! ... முடியாது ... மோசேயும் தீர்க்கரும் போதும்'' (லூக் 16:27-29)

எழுதப்பட்டுள்ள இறைவார்த்தை (யோ 5:46,47)

7. ''இந்த முள்ளை என்னைவிட்டு எடுத்துப்போடும்.''

2 கொரி 12:7-10

கர்த்தரிடம் பவுல் *''மூன்று தரம் வேண்டினார்''*

— சாதாரண ஜெபமல்ல!

தேவன் இந்த ஜெபத்திற்குப் பதில் கொடுக்கத்தான் செய்தார்; ஆனால் வேறுவிதமாக! — ஏன்?

- பவுலைத் தாழ்மையாய் வைத்துக்கொள்ள (வச 7)
  நமது வாழ்நாள் முழுவதும் படித்துக்கொண்டிருக்கவேண்டிய பாடம் இதுவே —
  ''என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் ... மனத்தாழ்மை'' (மத் 11:29)
- தேவனது வல்லமையை வெளிப்படுத்த
  ''என் கிருபை ... என் பலம்'' (வச 9,10)

யாக்கோபை முடிசூட்டுமுன் தேவன் அவனை முடமாக்கினார் (ஆதி 32:25-28)

உங்கள் முள்ளைக் குறித்துப் புலம்பிக்கொண்டே இராதீர் ... அதில் மகிழ்ந்திருக்கப் பழகுங்கள் —

''மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்'' (2 கொரி 12:9)

உங்கள் ''முள்'' உங்களுக்கு ''முடிசூட்டுதல்'' ஆகும்.
உங்கள் ''கிண்ணம்'' உங்களுக்குக் ''கிரீடம்'' ஆகும்.
Thorn → Throne Cup → Crown

- குழந்தைப்பேறின்மை என்பது உங்கள் முள்ளாயிருக்கலாம் — அதற்கான உங்கள் ஜெபத்திற்குப் பதிலாய் தேவன் உங்களுக்கு ஒரு தத்தெடுப்புப் பிள்ளை தரலாமே!
  கூடாதா?
  திக்கற்றோரின் தேவனல்லவா அவர்? (சங் 10:14; 68:5)
  எ.கா.) எஸ்தர் (எஸ்தர் 2:7)

■ ***இப்படி வேறுவிதமாய்ப் பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்கு எடுத்துக்காட்டுகள் பைபிளில் பலவுண்டு.***

கீழ்க்கண்ட பகுதிகளைப் படித்து, தியானித்து, நடைமுறைப் படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் —

☐ *''எலியாபோல் நாங்கள் அக்கினி இறக்கட்டும்''* (லூக் 9:51-56)

— ஊழிய வெற்றி அல்ல, ஆத்துமாக்கள் இரட்சிப்பு (வச 56)

— மேற்கோள் சரி, ஆனால் பொருத்தமற்றது (வச 54) —

எலியா: தேவன் vs. பாகால்
இங்கு: இயேசு vs. சமாரியர்

— தேவன் நமது அடிப்படைக் குணத்தை மாற்ற வாஞ்சிக்கிறார் ...
''இடிமுழக்கத்தின் குமாரர்'' (மாற் 3:17)

☐ *''வலதிடது ஆசனங்களை எனது குமாரருக்குத் தாரும்''*
— திருமதி செபெதேயு (மத் 20:20-23)

— தேவாதீனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் (ரோ 9:13-16)

— தேவனது பரந்த திட்டத்திற்கு உங்கள் ஆசைகளை அர்ப்பணியுங்கள் (லூக் 22:28-30) ... பன்னிருவரும் நியாயாதிபதிகள்

— மேன்மையடைய குறுக்கு வழியில்லை (மாற் 10:42-44)
... தொண்டர் ... பணியாளர் ...

☐ *''எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்''* (லூக் 17:3-6)

சிறிய தவறுதல்களை மன்னியுங்கள் ... *''கடுகு விதை''* பயிற்சியினாலேயே விசுவாசம் வளரும்.

■ ***முடிவுரை***

இப்பாடங்களை நாம் கற்றுக்கொள்ளும்போது,
''என் வார்த்தைகள் உங்களில் ... நீங்கள் கேட்பது எதுவோ ...'' (யோ 15:7)

நேர்த்தியானதொரு கவிதை: மறுபக்கம் —

பலம் கேட்டேன் ...
தேவன் நான் பலப்பட எனக்குக் கடினமானவை தந்தார்!

ஞானம் கேட்டேன் ...
தேவன் நான் தீர்க்கவேண்டிய பிரச்னைகள் தந்தார்!

செழிப்பு கேட்டேன் ...
தேவன் நான் வேலை செய்ய அறிவாற்றல் தந்தார்!

தைரியம் கேட்டேன் ...
தேவன் நான் கடக்க வேண்டிய ஆபத்துகள் தந்தார்!

பொறுமை கேட்டேன் ...
தேவன் நான் கட்டாயமாய்க் காத்திருக்கவேண்டிய சூழ்நிலைகள் தந்தார்!

அன்பு கேட்டேன் ...
தேவன் நான் உதவவேண்டிய சோர்ந்த மக்கள் தந்தார்!

சலுகை கேட்டேன் ...
தேவன் எனக்குச் சந்தர்ப்பங்கள் தந்தார்!

நான் ''விரும்பிய'' எதுவும் கிடைக்கவில்லை;
ஆனால் எனக்குத் ''தேவையான'' யாவும் கிடைத்துவிட்டது!
எனது ஜெபம் கேட்கப்பட்டுவிட்டது!
அல்லேலூயா!

71

இறைவழிபாட்டிற்கு இடர்பாடுகள்

Difficulties in Worship

முகவுரை

ஆராதிக்க ஏற்பட்ட இடர்பாடுகளை மேற்கொண்ட பலரைக் கிறிஸ்து பிறப்பின் சரிதை நம்முன் நிறுத்துகிறது —

- கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் (மத் 2:1-12)
  தூரம் & தடங்கல்கள்
- சகரியா & எலிசபெத் (லூக் 1:5-10,64,67-69)
  குழந்தையின்மை/ஜெபங்களுக்குப் பதில் தாமதம்
- மரியாள் & யோசேப்பு (லூக் 1:46-55; 2:22-24)
  விசுவாசிக்கமுடியாத பாக்கியம்/ஏழ்மை
- தேவ தூதர் (லூக் 2:13,14)
  அவர்கள் ஒருபோதும் பரவசம் இழப்பதில்லை!
- மேய்ப்பர் (லூக் 2:9-20)
  சாமானிய மக்கள்
- சிமியோன் (லூக் 2:25-32)
  இறைவாக்கு நிறைவேறுவதில் தாமதம்
- அன்னாள் (லூக் 2:36-38)
  லவுகீக இன்பங்கள் இல்லை / தனிமை

''தொழுகை'' குறித்த நிறைய பாடங்களை இந்நபர்களிடமிருந்து நாம் கற்கலாம் —

1. ஞானிகள் (மத் 2)

- எருசலேம் அல்ல, பெத்லகேம் (மீகா 5:2)
  பிரமாண்டத்தையே எதிர்பாராதீர்/கவர்ச்சி/ ...

  சடங்காச்சார மார்க்கம் (= எருசலேம்) பொதுவாகச் சுத்தமான ஆராதனைக்குத் தடைதான்.
  இயேசு எருசலேமில் பிறக்கவுமில்லை, இறக்கவுமில்லை!

- ஒரு ''நட்சத்திரம்'' மூலமாகவே தொழுகைக்கு அழைப்பு.
  சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ள சிருஷ்டிப்பிலிருந்து வரும்
  அழைப்புகளை நாம் கவனிப்பதில்லை.

  எனவேதான் நமது ஆராதனை தெய்வீகமயமாயல்ல,
  செயற்கைமயமாய் இருக்கிறது (சங் 19:1-4)

  சிருஷ்டிப்பின் அழைப்புக்குத் தாவீதின் பிரதிபலிப்பு
  ஆராதனையாய் அமைந்தது (சங் 19:14)

- ஏறத்தாழ ஈராண்டுகள் தேடினர் —
  ''பிள்ளை'' (மத் 2:9,16)

- *''பொக்கிஷங்கள்''* — விலையுயர்ந்தவை (மத் 2:11)
  ஏசா 60:6, *''கர்த்தரின் துதிகள்''*
  நாமோ சொற்களில் தாராளம், சொத்துக்களிலோ கஞ்சம்!

2. சகரியா & எலிசபெத் (லூக் 1)

''ஆசாரிய ஊழியம்'' (வச 8)
''பலிபீடத்திற்குமுன் தூபங்காட்டுதல்'' (வச 8-10)

- ஆராதனைக்கேற்ற நடக்கை (வச 6)
  உதடுகள் vs. உள்ளம் (மாற் 7:6,7)
  ''அருவருப்பாகும் தூபங்காட்டுதல்'' (ஏசா 1:13)

- எலிசபெத்து *''ஆவியினால் நிறைந்து''* ... (1:41)
  சகரியா *''ஆவியினால் நிறைந்து''* ... (1:67)

  ஆவியானவரின் வல்லமைக்குப் பல மாற்றுகள்
  இன்று முயற்சிக்கப்படுகின்றன. அவை தேறாது.
  தானே வெளிப்படும் தன்மை அவற்றில் இருக்காது.

- சகரியாவின் கீதம் —
  (லூக் 1:67-79)
  வச 68-75 ... துதி, ஸ்தோத்திரம்
  வச 76-79 ... தீர்க்கதரிசனம்

கருத்து: அ) இறைமக்களுக்குக் கூட்டு ஆசீர்வாதம்
ஆ) வெளியிலிருப்போருக்கு மிஷனரி ஆசிகள் (வச 79)

இன்றோ ''தனிப்பட்டவரது'' ஆசீர்வாதங்களிலேயே அளவுக்கு மீறிய கவனமும், தவனமும் காணப்படுகின்றன.

3. மரியாள் & யோசேப்பு (லூக் 1 & 2)

- ஆழ்ந்த தியானத்தினாலேயே தரமான தொழுகை பிறக்கும் —
  மரியாளின் கீதம் ... லூக் 1:46-55
  மரியாளின் தியானம் ... 2:19/51ஆ

- நம்ப முடியாத அற்புதம்
  லூக் 1:26-38 ... *தேவனால் கூடாதது ஒன்றுமில்லை*

  ஆனால் மரியாளின் அடிபணிதல் —
  அ) கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு (லூக் 1:38,45)
  ஆ) திருவசனத்தின் அதிகாரத்திற்கு (வச 38,45,55)
  இ) ஆவியானவரின் வல்லமைக்கு (வச 35)

- ஏழ்மை ... 2:23,24 / லேவி 12:2,8

4. தேவ தூதர் (லூக் 2:12-15)

- ஒரு தேவ தூதன் இயேசுவின் பிறப்பை மேய்ப்பருக்கு அறிவித்துக்கொண்டிருந்தான் ...
  ''சடுதியில்'' (= அந்நேரமே)
  — விண்ணுலகில் அவ்வளவு பரவசம் அடைந்த தூதர்
  தேவனுக்குத் துதி பாட மண்ணுலகிற்குப் பறந்து வந்தனர்!
  பின்னர் *''பரலோகம்''* திரும்பிவிட்டனர்.
  தொழுதுகொள்ளவே வந்தனர் (லூக் 2:13-15)

- தூதர் ஒருபோதும் ஆராதிப்பதில் பரவசம் இழப்பதில்லை —
  இரகசியம்? அவர்களது நோக்கு: *''தேவனுக்கு மகிமை''* (லூக் 2:14)

  ஒப்பிடுங்கள் ... ஏசா 6:2,3 ... *சேராபீன்கள்*
  வெளி 4:8 ... *ஜீவன்கள்*
  19:1 ... *பரலோகில் திரள்*

தேவ மகிமையே நமது ஆராதனையில் மையமாயிராவிடில்,
நமது வாழ்வில் விக்கிரகங்கள் பெருகிவிடும் —
ரோ 1:20-23 ... *தேவத்துவம் ... ரூபங்கள் ...*

5. மேய்ப்பர் (லூக் 2:8-18)

இவர்கள் மார்க்கவுலகத்தினரோ, அரசப் பரம்பரையினரோ,
உயர்குல மக்களோ அல்ல ...

சாமானிய மக்கள் —

ஞானிகளுக்கு ஒரே நட்சத்திரம்தான்!
மரியாள்-யோசேப்புக்கு, தனித் தனித் தூதர்தான்!
மேய்ப்பருக்கோ, *''பரமசேனையின் திரள்''* (லூக் 2:13)

இக்காட்சியின் மாட்சியை விவரிக்க இயலாது!
லூக் 2:9,14 ... *மகிமை பிரகாசித்தது ...*

பல சமயங்களில் உன்னத வெளிப்பாடுகள்
சாமானிய மக்களுக்கே வரும் (1 கொரி 1:26-29)

ஆராய்ச்சி மூலமல்ல, வெளிப்பாட்டின் மூலமே தேவனை
அறியமுடியும் —
மத் 11:25-27 ... *ஞானிகள் ... பாலகர் ...*

- தூதரைப் பொருத்தவரை, ஆராதனை அவர்களை
ஆத்துமாதாயத்திற்கு நடத்திற்று (லூக் 2:17,18)

ஆத்துமாதாயம் அவர்களது ஆராதனைக்கு வலுவூட்டிற்று
(லூக் 2:20)

ஆத்துமாதயகருக்குத்தான் நிறைய வெளிப்பாடு கிடைக்கும் —
''கொடுங்கள், கொடுக்கப்படும்!''

புதிய ஏற்பாட்டை எழுதியவர் அனைவரும் மிஷனரிகள்.
ஆத்துமாதாயத்தின் மகிழ்ச்சியைப்போல் அவர்களது
ஆராதனையின் ஆவியை எழுப்பிவிடுவது வேறெதுவுமில்லை.

6. சிமியோன் (லூக் 2:25-35)

- அவனது வாழ்க்கை ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டிருந்தது —

அ) ஆவியானவர் *அவன்மீது* இருந்தார் (லூக் 2:25)
ஆ) ஆவியானவர் அவனுக்கு *வெளிப்படுத்தினார்* (வச 26)
இ) ஆவியானவர் அவனை *நடத்தினார்* (வச 27)

*''பரிசுத்த ஆவியினாலேயன்றி ஒருவனும் இயேசுவைக் கர்த்தர்
என்று சொல்ல முடியாது''* (1 கொரி 12:3)

ஆவிக்கேற்றபடி நடத்தல் ஆவியோடு ஆராதிப்பதற்கு
இன்றியமையாதது; இல்லையேல் அது வெறும் மாம்ச உற்சாகம்.

7. அன்னாள் (லூக் 2:36-38)

மணமாகி ஏழே ஆண்டுகளில் கணவனை இழந்தவள்.
அவளுக்கு வயது 84.
வாட்டும் தனிமை.

உலகுக்கடுத்த எத்தனையோ இன்பங்களை இழந்திருக்கலாம்.

பிள்ளைகள் இருந்தார்களா என்பது தெரியவில்லை —
தெய்வமே அவளுக்குத் துணை.
தொழுகையே அவளது வேலை.

- வாழ்க்கையின் கொடுமைகள் நமது தொழுகையின் ஆவியை
நசுக்கிவிட இடம் தரக்கூடாது.

''சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரமும், துதியின் உடையும்''
தருவதாய்த் தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறாரே! (ஏசா 61:3)

*அழுகையின் பள்ளத்தாக்கின் வழியே நடந்து அதை நீரூற்றாக்கிக்
கொள்வோம்;*
*தொழுகையானது நம்மைப் ''பலத்தின்மேல் பலம்'' அடையச்
செய்யும்* (சங் 84:5-7)

அன்னாள் தனது துயரங்களை மறந்து பிறர்க்கு ஆசீர்வாதமானாள்.
அதின் இரகசியம் அவள் ஆராதித்துக்கொண்டிருந்ததே!

72

ஓசன்னா! அல்லேலூயா!

Hosanna to Hallelujah!

குருத்தோலை ஞாயிறு முதல் உயிர்த்தெழுந்த ஞாயிறு வரை நடந்தவை ''தொழுகை'' பற்றி நமக்கு நிறைய கற்பிக்கின்றன.

ஞாயிறு

1. ''உன்னதத்தில் ஓசன்னா!'' (மத் 21:9)

□ எருசலேமிற்குள் வெற்றிப் பவனி செல்லக் காரணமாயிருந்தவர் இயேசுவே (மத் 21:1-3)

ஆராதிக்க நம்மைத் தூண்டுபவர் எப்பொழுதும் தேவனே —
சங் 51:15 ... *என் உதடுகளைத் திறந்தருளும் ... உமது புகழ்*
1 கொரி 12:3 ... *பரிசுத்த ஆவியினாலன்றி இயேசுவே கர்த்தரென்று ...*

ஆனாலும், தொழுவதால் நாம் அவருக்கு ஒன்றும் சேர்ப்பதில்லை (அப் 17:25)
அவரோடு நெருக்கவுறவு கொள்ள தொழுகை ஒரு வாய்ப்பு.

இறைவெளிப்பாடு எதுவும் ஆராதனைக்கு ஓர் அழைப்பு —
சக 9:9 vs. மத் 21:4,5
சங் 138:2 ... *தொழுது கொள்வேன் ... உமது வார்த்தை ...*

□ ஆராதிப்பதில் சிறுவரை அசட்டை செய்யக்கூடாது —

மத் 21:15,16 ; சங் 8:2 ... *பாலகர் ... குழந்தைகள் ... துதி*
சத்தமாய் ஆர்ப்பரிக்க அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.
இது நமது ஆராதனைகளில் சடங்காச்சாரத்தைக் குறைத்து நறுமணத்தைக் கூட்டும்.

□ *''குருத்தோலைகளை''* யோவான் மட்டுமே குறிப்பிடுகிறார் — யோ 12:12,13

வெளி 7:9,10உடன் ஒப்பிடுங்கள்.
கொண்டாட்டமாய்த் தேவனை ஆராதிப்பது பரலோக முன் ருசி தரும்!

திங்கள்

2. ''கோதுமை மணி சாகாவிட்டால் ...'' (யோ 12:24)

□ **ஆராதிக்க** வந்திருந்த கிரேக்கர் (யோ 12:20)

அவர்கள் இயேசுவைப் ''பார்க்க'' விரும்பினர்;
அவரோ அவர்கள் தம்மை ''ஆராதிக்க'' விரும்பினார் —

வச 23 ... *மனுமகன் மகிமைப்படும் வேளை*

மரணத்தின் மூலமாகவே மகிமைப்படுதல் (வச 24).
எனவேதான் பவுல் எழுதியது (1 கொரி 1:22,23),
''கிரேக்கர் ... ஞானம் ... நாங்களோ சிலுவையிலறையப்பட்டவர்''

□ அதைத் தொடர்ந்து இயேசு ''சுயமறுப்பைப்'' பேசுகிறார் (யோ 12:25)

நமது தகுதியின்மையையும் தேவனது மகத்துவத்தையும் உணருவதே உண்மையான தொழுகை.
எக்கிரயமாயினும் அவரைப் பின்பற்றுவதே ஏற்புடைய ஆராதனை.

ஆபிரகாமுக்கு, ''தொழுகை'' என்பது தனது மகனைத் தகனபலியாக்குவதாம் (ஆதி 22:2,5)

□ தன்னல மறுப்பு மற்றும் மரணம் குறித்துப் பேசுகையில், இயேசு தமது ஆத்தும வியாகுலத்தை வெளிப்படுத்தினார் —

யோ 12:27 ... *''என் ஆத்துமா கலங்குகிறது''*

கலக்கத்திலேயே தொய்ந்துபோகாதவாறு
அவர் தொழுகையில் மேலெழுந்தார் —

''பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்'' (வச 28)

வியாகுல வேளைகளில் துதிக்கத் தோன்றாவிடினும் துதித்துக்கொண்டிருங்கள்.

''பேக்கா'' எனும் அழுகையின் பள்ளத்தாக்கு *''பெராக்கா''* எனும் ஆசீர்வாதப் பள்ளத்தாக்காகும் (சங் 84:6; 2 நாளா 20:26)

(80ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் வாசியுங்கள்,)

செவ்வாய்

3. *''தனக்கு இருந்ததையெல்லாம் போட்டுவிட்டாள்''* (மாற் 12:44)

☐ நமது உடைமைகளைக் கர்த்தருக்குக் கொடுத்துவிடுவது தொழுகையின் வெளிப்பாடாகும்.

மக்கள் எப்படிக் காணிக்கை போடுகிறார்கள் என்பதைப் பார்க்கவே இயேசு காணிக்கைப் பெட்டிக்கருகில் உட்கார்ந்திருந்தார் (வச 41).

எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல,
எவ்வளவு வைத்துக்கொள்ளுகிறோம் என்பதே தேவனது கணக்கு.

☐ மக்கெதோனியா விசுவாசிகள்:

2 கொரி 8:2 ... *தரித்திரம் ... உதாரத்துவம்*
''தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தனர்'' (வச 5)
— சுத்தமான ஆராதனை!

இவ்விதம் கொடுப்பது தேவனுக்கு *''ஸ்தோத்திரங்களைப்''* பெருகச் செய்யும் (2 கொரி 9:11,12)

செவ்வாய்

4. *''இந்த வீண் செலவு எதற்கு ?''* (மத் 26:8)

☐ இயேசு மீது ஊற்றப்பட்ட மரியாளின் விலையுயர்ந்த தைலம் (மத் 26:6-13; மாற் 14:3-9; யோ 11:2)

சீமோனின் விருந்தாளிகளால் ''வீண்'' (waste) எனப்பட்ட செயல் பிரதம விருந்தாளியால் ''தொழுகை'' (worship) எனப்பட்டது!

☐ தேவனுக்குக் கொடுக்க விரும்புவதைத் தாமதிக்காதீர்.
இயேசுவின் உடலுக்குத் தைலம் பூச மரியாள் *முந்திக்கொண்டாள்* —
மாற் 14:8
மற்றவர்கள் பிந்திவிட்டனர் (லூக் 24:1 3)

புகழ்பெற்ற அகிலவுலகச் சுவிசேஷகர் பட்டியலில் மரியாளுக்கு இடம் கிடைத்தது (மத் 26:13).

வியாழன்

5. *''என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்!''* (லூக் 22:19)

பார்க்க: மத் 26:26-29; மாற் 14:22-25; 1 கொரி 11:23-34

கர்த்தரது பந்தியில் குறைந்தது மூன்று விதங்களில் தேவனுக்குத் துதி செலுத்திக் கொண்டாடுகிறோம் —

☐ கர்த்தரது பிராயச்சித்த மரணத்திற்காய் அவரைத் துதிக்கிறோம்
1 கொரி 11:24-26

நமது பாவங்கள், ரோகங்களைத் தமது சரீரத்தில் சுமந்தார்.
ஏசா 53:4,5; 1 பேது 2:24

நம்மைத் தேவனிடம் கொண்டுவரத் தமது இரத்தத்தைச் சிந்தினார்.
எபே 2:13; எபி 10:19,20

நம்முடன் புது உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.
எபி 8:10-12 ... *பாவங்கள் இனி நினைக்கப்படுவதில்லை*

☐ கர்த்தரது சரீரமாம் அவரது சபைக்காய் அவரைத் துதிக்கிறோம்.
1 கொரி 11:29

ஒருவரையொருவர் கரிசனையுடன் கவனிக்கவேண்டும் (வச 33,34)
ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தின் முன் ருசியே கர்த்தரின் பந்தியாகும் (வெளி 19:9; மத் 26:29)

☐ சீக்கிரம் வரவிருக்கும் இராஜாவாய்க் கர்த்தரைத் துதிக்கிறோம்.
1 கொரி 11:26ஆ
கர்த்தருடைய பந்தி ... சத்துருக்கள்மீது வெற்றி

இப்படி, கர்த்தருடைய பந்தியில்,
நாம் கிறிஸ்துவை ஆராதிக்கும் கோணங்கள் —

தேவ ஆட்டுக்குட்டியானவராக ...
திருச்சபையின் ஆண்டவராக ...
நாடுகளின் ஆண்டவராக ...

வெள்ளி

6. ***''பிதாவே, உமது கைகளில் ...''*** (லூக் 23:46)

☐ பரலோகம் விட்டுப் பூவுலகம் வரும்போது இயேசு சொன்ன பிரிவு வார்த்தைகளின் நிறைவேறுதல் —
எபி 10:5-7 ... *பலி ... ஒரு சரீரம் ...*

☐ நாம் நமது உடல்களை ஒப்புக்கொடுக்கவேண்டும் —
ரோ 12:1 ... *உயிருள்ள பலி*

கிறிஸ்துவின் மரணம் போதிக்கும் உன்னதப் படிப்பினை (எபே 5:1,2)

பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக நாம் எண்ணியவாறு இருக்கவேண்டும் — ரோ 6:11

அப்படியானால் ஒவ்வொரு நாளும் பெரிய கிழமைதான் —
பெரிய ஞாயிறு ... பெரிய திங்கள் ... பெரிய வெள்ளி ...

ஞாயிறு

7. ***''அல்லேலூயா! அவர் உயிர்த்தெழுந்தார்!''*** (மத் 28:6)

உயிர்த்தெழுதலினாலே இயேசு
''ஆண்டவரும் ... கிறிஸ்துவும்'' ஆக்கப்பட்டார் (அப் 2:36)
தொழுகைக்கு என்னவொரு மகிமையான கருத்து!

— தொழுகையின் வெளிப்பாடுகள் (Adoration)
மத் 28:9 ... *பாதங்களைத் தழுவிப் பணிந்துகொண்டனர்*

— பாசத்தின் வெளிப்பாடுகள் (Affection)
யோ 20:15-17 ... *ரபூனி ... தொட்டுப் பிடிக்க முயன்றாள்*

— பிரமிப்பின் வெளிப்பாடுகள் (Amazement)
யோ 20:27,28 ... தோமா ... *என் ஆண்டவரே, என் தேவனே!*

உயிர்த்தெழுதல் நமது இதயத்தை மகிழச்செய்து உதடுகளைக் கெம்பீரிக்கச் செய்கிறது (அப் 2:24-28)

உயிர்த்தெழுந்தாரே, அல்லேலூயா,
ஜெயித்தெழுந்தாரே!
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே!

73

ஞாயிறு முதல் சனி வரை தொழுகை

Sunday thru Saturday Worship

முகவுரை

ஒரே காரியங்களைச் சொல்லி ஆராதிப்பதற்குப் பதிலாகப் பல கருத்துக்களோடு தொழுகையை அலங்காரப்படுத்த இதோ ஒரு திட்டம்—

தேவனது ஏழு நிகரற்ற குணாதிசயங்கள் இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. நாளுக்கொன்றைத் தெரிந்தெடுத்து அந்த நாளில் அதற்காய்த் துதிக்கலாம்.

1) **S**unday (ஞாயிறு) — **S**anctity of God — தேவனது பரிசுத்தம்
ஏசா 6:3; வெளி 4:8 ... *பரிசுத்தர் ... பரிசுத்தர் ... பரிசுத்தர்*
2 நாளா 20:21 ... *பரிசுத்த அலங்காரம்*
சங் 30:4; 97:12 ... *பரிசுத்த நாமத்தை நினைவுகூர்ந்து ...*

2) **M**onday (திங்கள்) — **M**ercy of God — தேவனது இரக்கம்
சங்118:1 ... *துதியுங்கள் ... அவர் கிருபை என்றுமுள்ளது*
89:1 ... *கர்த்தரின் கிருபைகளைப் பாடுவேன்*
புல 3:22,23 ... *கர்த்தரது இரக்கங்கள் ... கிருபை ... காலைதோறும் புதியவை*
தானி 9:10... *ஆண்டவரிடம் இரக்கங்கள், மன்னிப்புகள் உண்டு*

3) **T**uesday (செவ்வாய்) — **T**ruthfulness of God — தேவனது உண்மை
உபா 32:4 ... *உத்தமம், நியாயம், சத்தியம், செம்மை*
சங் 146:6 ... *என்றும் உண்மை காக்கிறவர்*
யாத் 34:6 ... *மகா சத்தியமுள்ள தேவன்*

4) **W**ednesday (புதன்) — **W**onderfulness of God— தேவனது அதிசயம்
யாத் 15:11 ... *அதிசயங்களில் நிகரானவர் யார்?*
சங். 72:18 ... *அதிசயங்கள் செய்கிறவர்*
136:4 ... *ஒருவராய்ப் பெரிய அதிசயங்கள் செய்கிறவர்*
ஏசா 9:6 ... *அவர் நாமம் அதிசயமானவர்*

5) **T**hursday (வியாழன்) — **T**riumph of God — தேவனது வெற்றி

யாத் 15:1,21 ... *பாடுங்கள் ... வெற்றிசிறந்தார்*
1 நாளா 29:11 ... *ஜெயம் ... இராஜ்யம் ... உம்முடையவை*
1 கொரி 15:24,25 ... *ராஜ்யம் ... ஆளுகை ... அதிகாரம்*

6) **F**riday (வெள்ளி) — **F**riendliness of God — தேவனது சிநேகத்துவம்

யாக் 2:23 ... *ஆபிரகாம் ... தேவனது சிநேகிதன்*
யாத் 33:11 ... *மோசேயிடம் ஆண்டவர் ஒரு சிநேகிதன்போல்*
லூக் 7:34 ... *மனுமகன் ... பாவிகளின் சிநேகிதர்*
யோ 15:15 ... *ஊழியக்காரர் அல்ல, சிநேகிதர்*

7) **S**aturday (சனி) — **S**overeignty of God — தேவனது இறையாண்மை

உபா 4:39 ... *வானிலும் பூவிலும் தேவன் ... வேறில்லை*
சங் 47:2 ... *உன்னதர் ... மகத்துவ ராஜா*
135:6 ... *தமக்குப் பிரியமானதைச் செய்பவர்*
1 தீமோ 6:15 ... *ஏக சக்கராதிபதி, ராஜாதி ராஜா ... கர்த்தாதி கர்த்தா ...*

■ *முடிவுரை*

பரிசுத்தத்தில் நமது தேவனுக்கு நிகரில்லை.
இரக்கத்தில் நமது தேவனுக்கு நிகரில்லை.
நீதியில் நமது தேவனுக்கு நிகரில்லை.
அதிசயத்தில் நமது தேவனுக்கு நிகரில்லை.
வெற்றியில் நமது தேவனுக்கு நிகரில்லை.
சிநேகத்தில் நமது தேவனுக்கு நிகரில்லை.
ஏகாதிபத்தியத்தில் நமது தேவனுக்கு நிகரில்லை.

இந்த 7 குணாதிசயங்களை விளக்கும் கூடுதல் வசனங்களைப் பைபிளில் தேடிச் சேர்த்துத் தொழுகையை வளமாக்குங்கள்.

(யேகோவாவின் கூட்டு நாமங்களடங்கிய பட்டியல் அடுத்த பக்கத்தில்)

யேகோவாவின் கூட்டு நாமங்கள்

''யேகோவா என்பது அவர் நாமம்'' (யாத் 15:3)

1. ***யேகோவா-ஹோசீனு*** (Jehovah-Hoseenu)
   நம்மை உண்டாக்கிய கர்த்தர் (சங் 95:6)
2. ***யேகோவா-யீரே*** (Jehovah-Jireh)
   நமது தேவையைச் சந்திக்கும் கர்த்தர் (ஆதி 22:14)
3. ***யேகோவா-ரப்பா*** (Jehovah-Rapha / Ropheca)
   நம்மைக் குணமாக்குகிற கர்த்தர் (யாத் 15:26)
4. ***யேகோவா-நிசி*** (Jehovah-Nissi)
   நமது வெற்றிக்கொடியாகிய கர்த்தர் (யாத் 17:15)
5. ***யேகோவா-மேக்காடேஷம்*** (Jehovah-Mekkaddesham)
   நம்மைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் (லேவி 20:8)
6. ***யேகோவா-ஏலோஹீனு*** (Jehovah-Eloheenu)
   நமது தேவனாகிய கர்த்தர் (சங் 99:5,8,9)
7. ***யேகோவா-ஏலோஹேக்கா*** (Jehovah-Eloheka)
   உங்கள் தேவனாகிய கர்த்தர் (யாத் 20:2)
8. ***யேகோவா-ஏலோஹே*** (Jehovah-Elohay)
   எனது தேவனாகிய கர்த்தர் (சக 14:5)
9. ***யேகோவா-ஷாலோம்*** (Jehovah-Shalom)
   சமாதானம் அருளும் கர்த்தர் (நியா 6:24)
10. ***யேகோவா-சேபாஹோத்*** (Jehovah-Tsebahoth)
    சேனைகளின் கர்த்தர் (ஏசா 47:4)
11. ***யேகோவா-ரோஹி*** (Jehovah-Rohi / Raah)
    எனது மேய்ப்பராகிய கர்த்தர் (சங் 23:1)
12. ***யேகோவா-ஹேலேயோன்*** (Jehovah-Heleyon)
    உன்னதமான கர்த்தர் (சங் 7:17)
13. ***யேகோவா-சிட்கெனு*** (Jehovah-Tsidkenu)
    நமது நீதியாயிருக்கிற கர்த்தர் (எரே 23:6)
14. ***யேகோவா-மாக்கே*** (Jehovah-Makkeh)
    நம்மைக் கண்டிக்கிற கர்த்தர் (எசேக் 7:9)
15. ***யேகோவா-ஷம்மா*** (Jehovah-Shammah)
    பிரசன்னம் அருளும் கர்த்தர் (எசேக் 48:35)

E

74

எழுப்புதல் பற்றிய பாடங்கள்

Lessons on Revival

முகவுரை

- ''எழுப்புதல்'' எனும் பதத்திற்குப் பொருள்:
  மூன்று நிலைகள் —

  அ) சீர்திருத்தம் (Reformation)
  — ஆரோக்கிய உபதேசத்தைத் திரும்பக் கொணர்தல்

  ஆ) எழுப்புதல் (Revival)
  — உயிர்மீட்சியும் புதுப்பலமும் அடைதல்

  இ) ஆதிநிலையேகுதல் (Restoration)
  — அமைப்பையும் முறையையும் துவக்க நிலைக்குக் கொணர்தல்

  இவை ஒவ்வொன்றும் மற்றவற்றிற்கு உதவுபவை.
  ஆனாலும், மையமான எழுப்புதல் எல்லாவற்றையும் சரிசெய்யும்;
  ஏனெனில் அதுதான் **புத்துயிர், புதுப்பலம்** கொண்டுவரும்.

- எழுப்புதல் சரிதைகள் திருமறையில் ஏராளம் —

  இராஜாக்கள் காலத்து எழுப்புதல்கள் (எ.கா.) எசேக்கியா
  சீர்திருத்தவாதிகள் காலத்து எழுப்புதல்கள் (எ.கா.) எஸ்றா
  பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து எழுப்புதல்

  இவைகளைக் கருத்தூன்றிப் படிப்பதோடு சபைச் சரித்திரத்தின் எழுப்புதல்களையும் படிக்கவேண்டும் —

  ஜான் வெஸ்லி (இங்கிலாந்து) (1703-1791)
  சார்ல்ஸ் பின்னி (அமெரிக்கா) (1792-1875)
  யோனத்தான் கோபோர்த் (சீனா) (1859-1936)
  ஈவான் ராபர்ட்ஸ் (வேல்ஸ்) (1878-1951)

எழுப்புதல் பற்றிய பாடங்கள் —

வேதப்பகுதி: **ஏசாயா 64ஐ அப்போஸ்தலர்** நடபடிகளோடும் **எசேக்கியேல் 36,37**ஆம் அத்தியாயங்களோடும் ஒப்பிட்டுப் படித்தல்.

1. தேவனிடமிருந்துதான் எழுப்புதல் வருகிறது.

ஏசா 64:2 ... *''தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி ...''*

மனித முயற்சிகள் எழுப்புதலை உருவாக்கிவிடாது.
எழுப்புதலை நீங்கள் திட்டமிட்டு நடத்த முடியாது.
— கன்வென்ஷனையோ, நற்செய்தியறிவிப்பையோ திட்டமிடலாம்!

எந்தப் பிரசங்கியாரும் எழுப்புதலைக் கொண்டுவர முடியாது!
— அவரோடு வந்து அவரோடு போய்விடும்!

வேல்ஸ் நாட்டு எழுப்புதல் புத்தகம் ஒன்றின் துவக்க வரி:
— ''வேல்ஸ் நாட்டு எழுப்புதலின் காரணர் ஈவான் ராபர்ட்ஸ் அல்ல, பரிசுத்த ஆவியானவரே!''

ஆவியானவரே எழுப்புதலின் காரணர் —
எசேக் 36:36 ... *நான் சொன்னேன், நான் செய்வேன்*
37:10 ... *ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது*

உடல் பலம் ஈசாக்கை அல்ல, இஸ்மவேலைத்தான் பிறப்பிக்கும்.

எழுப்புதல் பொதுவாகத் திடீரென்று வரும் —
எ.கா.) அப் 2:2 ... *சடுதியாய் ... சத்தம் ... காற்று*
10:44 ... பிரசங்கத்தில் ஆவியானவர் குறுக்கிட்டார்

அது தேவனது ஆவியானவரின் புதியப் பொழிவு —
அப் 2:17 ... *கடைசி நாட்களில் ...*

நாம் இருப்பது கடைசி நாட்கள் அல்ல, கடைசி நிமிடங்கள்!

2. தேவப் பிரசன்னத்தை எழுப்புதல் வெளிப்படையாக்குகிறது.

ஏசா 64:1,2 ... *''தேவரீர் ... இறங்கும் ... **சந்நிதி** ...''*
:1 ... *மக்கள் உமது **சந்நிதிக்குமுன்** தத்தளிப்பு*

வேல்ஸ் நாட்டு எழுப்புதலின்போது —
பாதசாரி ஒருவன் கேட்டது: ''எழுப்புதல் எங்கே நடக்கிறது?''
காவலர் ஒருவரின் பதில்: ''இங்கேயே இருக்கிறதே!''

தேவப் பிரசன்னத்தை ஆவியானவர் வெளிப்படையாக்குகிறார் —
அப் 2:3,4,33 ... *அக்கினி ... நாவுகள் ... காண்பது ... கேட்பது...*

மின்சாரம் போன்ற தேவப் பிரசன்னம் —
2 நாளா 5:13,14 ... *ஆசாரியர் நிற்கக்கூடாமற்போயிற்று*

சில வேளைகளில் வெளிப்படையான அடையாளங்கள் —
அப் 4:31 ... *இடம் அசைந்தது*
எசேக் 37:7 ... *இரைச்சல் ... அசைவு ...*
கல்லறைத் தோட்டத்தில்தான் அசைவே இருக்காது!
மயான அமைதி ... மரண அமைதி!

3. தற்பரிசோதனையையும் பாவ அறிக்கையையும் தொடர்ந்தே பொதுவாக எழுப்புதல் வரும்.

ஏசா 64:5,6,9 ... *பாவம் ... தீட்டு ... அக்கிரமம்*

பிரபலமான எழுப்புதல் வசனம் —
2 நாளா 7:14 ... *என் ஜனங்கள் ... தங்கள் பொல்லாத வழிகள்*

எஸ்றா காலத்து எழுப்புதல் —
எஸ்றா 9:3-6,9 ... *எங்கள் அக்கிரமங்கள் ... குற்றம்*
10:1 ... *அறிக்கையிட்டு ... அழுது ...*

ஈவான் ராபர்ட்ஸின் மன்றாட்டு —
''சபையை வளையும்; சமுதாயத்தை வளமாக்கும்!''
"Bend the Church; Bless the world!"

யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிபந்தனை —
யோவேல் 2:12-14,23 ... *திரும்புங்கள், இதயத்தைக் கிழியுங்கள்*

நொறுங்கிய இதயமுள்ளோரைத் தேவன் உயிர்ப்பிக்கிறார் (ஏசா 57:15)

எ.கா.) நியூ ஹெப்ரைட்ஸ் தீவில் எழுப்புதல், 1949.
அவர்களது ஜெபம்: ''கர்த்தாவே, எருசலேமைப் பூமியில் புகழ்ச்சியாக்கும்வரை உம்மை ஓய்ந்திருக்கவிடோம்!''

மாதக்கணக்கில் ஒன்றும் நடக்கவில்லை;
பின்னர் ஒருவர் சுட்டிக் காட்டிய வசனம் —
சங் 24:3-5 ... *கைகளில் சுத்தம் ... இதயத்தில் மாசின்மை*
பாவ அறிக்கையைத் தொடர்ந்து மாபெரும் எழுப்புதல்.

எசேக் 37:11 ... *''எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று ...*
நம்பிக்கை அற்றுப்போயிற்று.''

4. விடாப்பிடியான ஜெபத்தினால் எழுப்புதல் வருகிறது.

ஏசாயா 64 முழுவதுமே எழுப்புதலுக்கான ஒரு ஜெபம்.

வச 4 — காத்திருந்து ஜெபிப்பதால் மகத்துவச் செயல்கள்
வச 7 — *கூப்பிடு ... பற்றிக்கொள் ... விழித்திரு*
வச 12 — *''கர்த்தாவே, மவுனமாயிருப்பீரோ?''*

பத்து நாட்கள் ஜெபமும் துதியும் எழுப்புதலுக்கு ஆயத்தம் —
லூக் 24:52,53 ... *தேவாலயத்தில் நாள்தோறும் ...*
அப் 1:14 ... *ஒருமனம் ... ஜெபம் ... வேண்டுதல் ...*
2:1 ... *பெந்தெகொஸ்தே நாள் ... ஒருமனம் ...*
மறுபடியும், அப் 4:31 ... *''அவர்கள் ஜெபம்பண்ணினபோது ...''*

கொர்நேலியு இன்னோர் எடுத்துக்காட்டு —
அப் 10:2,4,30,31 ... *எப்பொழுதும் ஜெபம் ...*

எலியா — யாக் 5:17,18 ... *அவன் ''மறுபடியும்'' ஜெபித்தான்!*
சீயோனின் பிரசவ வேதனை! (ஏசா 66:8)

எழுப்புதலுக்கான கிரயம்: ஜெபம், ஜெபம், ஜெபம்.

பில்லி கிரஹாம் : எழுப்புதலுக்கு முதல் இரகசியம் — ஜெபம்.
எழுப்புதலுக்கு இரண்டாம் இரகசியம் — ஜெபம்.
எழுப்புதலுக்கு மூன்றாம் இரகசியம் — ஜெபம்.

எவ்வளவு காலந்தான் ஜெபிக்கவேண்டும்? —
ஓசி 10:12 ... *கர்த்தர் நீதியைப் பொழியும்வரை ...*

திருச்சபையின் நிலை கண்டு நம்பிக்கை இழக்காதீர் —
சாதகச் சிந்தையுடனிருங்கள் — யோவேல் 2:21,25

திருவாக்கை எப்போதும் நம்பியிருங்கள் —
எசேக் 37:5 ... ***''நிச்சயம்** ஆவியை நுழையச் செய்வேன்''*

5. தேவ மக்களிடம் ஆரவார ஆராதனையை எழுப்புதல் கொண்டுவரும்.

ஏசா 64:10,11 ... *பிதாக்கள் துதித்த மகிமையான ஆலயம் ...*

எழுப்புதலுக்காக தாவீதின் ஜெபம் —
சங் 85:6 ... *உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி ...*

எழுப்புதலுக்காக ஆபகூக்கின் ஜெபம் —
ஆப 3:2,17,18 ... *உயிர்ப்பியும் ... கர்த்தருக்குள் மகிழ்ச்சி*

ஆதிச்சபை —
அப் 2:4,11 ... *நவநாவுகள் ... தேவனது மகத்துவங்கள்*
(தாவீதின் தீர்க்கதரிசனம் அப் 2:25-28)
2:47 ... *தேவனைத் துதித்து ... மனிதரிடம் தயவு ...*

சிறைச்சாலையிலும் எழுப்புதல் —
அப் 16:25 ... *நள்ளிரவு ... ஜெபம் ... துதி ... பாடல்*

''புலம்பலை ஆனந்தக் களிப்பாக்குவது'' எழுப்புதல் —
சங் 30:11,12

ஆவியோடு பாடல் ... ஆவியில் நடனம் ... (எபே 5:18,19)
எசேக் 37:12 ... *பிரேதக்குழிகளிலிருந்து நாட்டுக்குள் ...*
வீட்டிலிருந்து கல்லறை ... இழவு (funeral)
கல்லறையிலிருந்து வீடு ... விழா (festival)
(அப் 15:17)
37:26,27 ... *பரிசுத்த ஸ்தலம் ... வாசஸ்தலம்* (அப் 15:17)
36:38 ... *பண்டிகைக் காலங்கள்*
:35 ... *ஏதேன் தோட்டம்*

6. எழுப்புதல் வரும்போது நற்செய்திப்பணி தீவிரமடையும்.

ஏசா 64:1 ... *சத்துருக்கள் ... மக்களினங்கள் ...*
நற்செய்திக் கூட்டத்தில் முன்வர அழைப்பு கொடுப்பது பிரசங்கியார்.
எழுப்புதலில், மக்கள் முன்வந்து கேட்பர்.
அப் 2:37 ... *''நாங்கள்'' என்ன செய்யவேண்டும்?*

திரள் திரளாய்ச் சபையில் சேர்ப்பு: அப் 2:41 — 3000
4:4 — 5000

எழுப்புதல் ... **வல்லமையான** நற்செய்திப்பணி — சங் 51:12,13
அப் 1:8

உலர்ந்த எலும்புகள் *மாபெரும் சேனையாய்* உயிர்த்து எழும் —
எசேக் 37:1-10

நடபடிகள் புத்தகத்தில் எழுப்புதல் —

எல்லாரும் புறப்பட்டுச் சென்றனர்;
எங்கும் புறப்பட்டுச் சென்றனர்;
எவரிடமும் புறப்பட்டுச் சென்றனர்!

அப்போஸ்தலருக்குக் கிடைத்த பட்டப் பெயர் —
''உலகைக் கலக்குகிறவர்கள்'' (அப் 17:6)
(நாமோ உலகைச் சுற்றுகிறவர்கள், அவ்வளவுதான்!)

எழுப்புதலில்தான் மிஷனரி இயக்கங்கள் பிறக்கின்றன —
அப் 13:2-4 ... *ஆராதித்தார்கள் ... அனுப்பினார்கள்*

இதற்குச் சரித்திரச் சான்றுகள் ஏராளம்.

ஜான் வெஸ்லியின் எழுப்புதல் — ''உலகமே எனது சபை!''

சாதாரண நற்செய்திப்பணிக் காலத்தில் 40 **ஆண்டுகளில்**
சாதிக்கக்கூடாதவை எழுப்புதல் காலங்களில் 40 **நாட்களில்**
முடிந்துவிடும்! (ஒப்பிடுக: உபா 11:10-12)

எழுப்புதல் நரகத்தைச் சூறையாடிப் பரலோகை நிரப்புகிறது!

எசேக் 37:10 ... *காலூன்றிப் பெரிய சேனையாய்*
38:23 ... *அநேக மக்களினங்கள்*

7. சபையை முதிர்ச்சிக்கும் முழு அர்ப்பணிப்புக்கும் எழுப்புதல் நடத்திச் செல்லும்.

ஏசா 64:8 | ... *பிதா ... குயவன் ...*
அப் 2:44,45 | ... உலகப் பொருட்கள்மீது பிடிப்புத் தளர்வு
4:32-35
5:29 ... தேவனுக்குக் கீழ்ப்படிந்த வாழ்க்கை
9:31 ... *பக்திவிருத்தி ... தேறுதல்*

வேத அறிவின்மை சபையிலிருந்து விலகும்!
உலகப்பற்று விசுவாசிகளை விட்டகலும்! —

எசேக் 36:38; 37:28; 38:23
''நானே கர்த்தரென்று அறிந்துகொள்வார்கள்!''

பைபிள் படிக்கப் புத்தார்வம் எழும் (எசேக் 36:27).
இனி விக்கிரகங்கள் கிடையாது ... *கர்த்தர் ஒருவரே* (எசேக் 37:23,24)

■ *முடிவுரை*

எழுப்புதலானது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல;
அது நமது அத்தியாவசியத் தேவை;
இப்பொழுதே அது வேண்டும்!

பாடுங்கள்: *அருள் ஏராளமாய்ப் பெய்யும்*
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

அருள் ஏராளம்
அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல
திரளாய்ப் பெய்யட்டுமே

அருள் ஏராளமாய்ப் பெய்யும்
மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்

அருள் ஏராளமாய்ப் பெய்யும்
இயேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமேன்

அருள் ஏராளமாய்ப் பெய்யும்
பொழியும் இக்ஷணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே

— Major Daniel Webster (1840-1901)

75

ஆவியானவரும் ஆதிநிலையடைதலும்

The Holy Spirit & Restoration

முகவுரை

- தியானப் பகுதி: **எசேக்கியேல் 37**
- எழுப்புதலின் முடிவான நோக்கம் ''ஆதிநிலையடைதலே.''

    37:12 ... நாட்டிற்குத் திரும்புதல்
    36:38 ... அழிந்த நகர்களில் கோலாகலம்
    :35 ... பாழான தேசம் ஏதேன்போல் மாறுதல்

  எழுப்புதல் → ஆதிநிலையடைதல் — இல்லையேல் முழுமை பெறவில்லை!

- நடபடிகளிலுள்ள ஆதிச்சபையோடு ஒப்பிடுகையில் சோர்பு. ஆனால், இறைச்சித்தமும் இறைவாக்குகளும் —

    ஆகாய் 2:9 :6-9 | *''பிந்திய ஆலயத்தின் மகிமை ... பெரிது''*
    யோவான் 2:10 ... *அதிக ருசியான ரசம் கடைசியில் ...*
    யோவேல் 2:23-25 ... *முன்மாரி / பின்மாரி —* முழுமையாய் ஆதிநிலையடைய. *''வருஷங்களைத் திரும்பத் தருவேன்''*

- ஆதிநிலையடைதலில் படிகள் (எசேக் 37) —

    (i) *இரைச்சல்* (வச 7)
    (ii) *அசைவு* (வச 7)
    (iii) *எலும்போடு எலும்பு* (வச 7)
    (iv) *சேனை* (வச 10)

  எ.கா.) சபையின் இருண்ட காலத்திலிருந்து —

    மார்ட்டின் லூத்தர் — நீதிமானாக்கப்படுதல்
    ஜான் வெஸ்லி — பரிசுத்தமாக்கப்படுதல்
    சார்லஸ் பின்னி — ஆவியின் அபிஷேகம்
    1904 எழுப்புதல் — ஆவியின் வரங்கள்

  ''எல்லாம்'' ஆதிநிலையேகும் காலம் வரை (அப் 3:19-21)

- ஆதிநிலையடைதல் என்பது முழுச்சபைக்கு மட்டுமல்ல, தனி நபர்களுக்கும் —

    1 சாமு 30:19 ... *தாவீது* ***எல்லாவற்றையும்*** *திருப்பிக்கொண்டான்*
    யோபு 42:10,12,13 / 1:2,3 ... எல்லாம் இருமடங்கு!
    பேதுரு — 3 முறை மறுதலிப்பு — 3000 ஆத்துமாக்கள் (அப் 2:41)

- இவ்விதம் ஆதிநிலையடைதல் **ஆவியானவராலேயே** (எசேக் 37) —

    வச 1 ... *ஆவிக்குள்ளாக்கி ...*
    வச 3,9 ... *ஆவி*
    வச 14 ... *என் ஆவி*

- □ நாமிருப்பது பரிசுத்த ஆவியானவரின் யுகம்.
- □ கிறிஸ்துவின் எழுப்புதல் செய்திகளைக் கொண்டுவருபவர் — *''ஆவியானவர்'' சபைகளுக்குச் சொல்லுகிறதை ...* (வெளி 2:7,11,17,29 ...)

ஆதிநிலையடைதலை ஆவியானவர் சாத்தியமாக்குவது எப்படி?

1. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைக் (Lordship) குறித்த அறிவை ஆவியானவர் திரும்பக் கொண்டுவருகிறார்.

  எசேக் 37:23,24 ... *இனி விக்கிரகங்களல்ல ... ராஜா ...*
  1 கொரி 12:2,3 ... *விக்கிரகங்களை விட்டுக் கர்த்தரிடம் ...*
  கர்த்தத்துவம் = ஒரு புதிய தலைமை, ஆளுகை
  இனி ''வேறே ஆண்டவன்மார்'' கிடையாது (ஏசா 26:13)

- சில விக்கிரகங்கள் —

  அ) அகம்பாவம், சுயம், புய பலம், ...
    ஏசா 2:11,17 ...

  ஆ) நமது சாதனைகள்
    ஓசி 14:3,8 ...

  இ) நமது சம்பத்து
    இரு எஜமானில்லை — ''தேவன் & பணம்''
    எ.கா.) அப் 5:2 — அனனியா & சப்பீராள்
    ''இயேசு எல்லாவற்றின் மேலும் ஆண்டவர்; இல்லையேல் எதற்கும் ஆண்டவரல்ல!''

100 சதவீதம் ஆண்டவருக்காகவே!

எ.கா.) நெப்போலியனின் சிறைக்கைதி — தனது கையில் நெப்போலியனின் அடையாளம் இருந்ததால் கையை வெட்டி எறிந்தான்.

பவுலின் கூற்று: *''இயேசுவின் அச்சடையாளங்கள் என் மீது ... ஒருவனும் என்னை வருத்தாதிருப்பானாக''* (கலா 6:17)

- மதில்மேல் பூனை போன்ற வாழ்க்கை வேண்டாம்.
- எதைச் செய்தாலும் தேவனைப் பிரியப்படுத்தவே (1 கொரி 10:31)
- கர்த்தரின் படை சேர்ந்தவரானதால் இவ்வுலகக் காரியங்களில் சிக்கிக் கொள்ளமாட்டோம் (2 தீமோ 2:4)

2. உண்மையான ஆராதனையை (Worship) ஆவியானவர் திரும்பக் கொண்டுவருகிறார்.

எசேக் 37:26,27 ... *பரிசுத்த ஸ்தலம் ... வாசஸ்தலம்*
A.W. டோசர்: ''கிறிஸ்தவம் இழந்த முத்துதான் ஆராதனை.''
தொழிலையே தொழுவது ✗ (Work is Worship.)
தொழுவதையே தொழிலாக்குவது ✓ (Worship is Work.)

■ எடுத்துக்காட்டுகள் —

அ) மன்னன் எசேக்கியா ஒரு சீர்திருத்தவாதி — ஆராதனையைத் திரும்பக் கொண்டுவந்ததே அவனது முதல் செயல்பாடு — 2 நாளா 29:3,25,29,30

ஆ) மன்னன் யோசபாத் பாடகரைப் படைவீரருக்கு முன்னால் நிறுத்தினான் — 2 நாளா 20:21

இ) பெந்தெகொஸ்தேயும் அதைத் தொடர்ந்தும் —

அப் 2:11 ... *''தேவனது மகத்துவங்கள்''*
:47 ... *''தேவனைத் துதித்து ...''*
3:8 ... *''நடந்து ... குதித்து ... துதித்து ...''*
4:24 ... *''கர்த்தாவே, நீரே வானம், பூமி, கடல், எல்லாம் உண்டாக்கியவர்''*
10:46 ... *''அவர்கள் நவ நாவுகளில் தேவனைப் புகழ்ந்தனர்''*
16:25 ... *''பவுலும் சீலாவும் நள்ளிரவில் துதி பாடல்''*

■ ஆவியினால் நிறைந்தால் உடனடி விளைவு தொழுகையே — எபே 5:18,19

''கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி ...''
நவநாவுகள் — ஒன்பது வரங்களில் தேவனை நோக்கிய ஒன்றே ஒன்று (1 கொரி 14:15-17)

■ தேவன் ஆவியாயிருக்கிறார்;
அவர் *''ஆவியோடும் ... கருத்தோடும்''* ஆராதிக்கப்படவேண்டும்.

பெந்தெகொஸ்தே வகையினரும், பிரதரன் வகையினரும் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவேண்டும்.

சார்ல்ஸ் வெஸ்லியின் பெரும்பாலான பாடல்கள் எழுப்புதலின்போது இயற்றப்பட்டவையே.

3. விசுவாசிகள் நடுவில் ஆவியானவர் ஐக்கியத்தை (Fellowship) ஏற்படுத்துகிறார்.

எசேக் 37:15-22
ஆவியின் நிறைவின் விளைவு —
''ஒருவருக்கொருவர்'' ... எபே 5:18-21

ஒருமுகப்படுத்துவதில் ஆவியானவருக்கு நிகரில்லை.
எ.கா.) யூதர் & புறவினத்தார் ... 1 கொரி 12:13
அனைத்து விசுவாசிகள் ... அப் 4:31,32
(அன்று ஆயிரங்கள் ஒருமனதாயிருந்தன ... இன்று நூறுகள்கூட அப்படியில்லை!)
பெருகுவதற்குப் பதிலாக பிரிவுகள்தான்.
''பேதுருவும் யோவானும்'' ... அப் 3:1

■ ஆவியின் கனி — கலா 5:22,23
(ஏறத்தாழ ஒன்பதுமே சகவுறவுகளைப் பற்றியது.)

ஒருவருக்கொருவர் நாம் தேவை —
தனித்து நிற்பது கூடாது —

''நானும்'' ''என்'' தேவனும்! ✗
எ.கா.) கர்த்தருடைய ஜெபம்: ... *''எங்கள் ... எங்கள் ...''*

■ நாம் எளிதில் இணையக்கூடிய பகுதிகள் —

அ) ஆராதனை — *ஒரே பிதா*
ஒரே கர்த்தர்

ஆராதனை முறைகள் பலவிதமாயிருந்தாலென்ன?
எ.கா.) ஒரு பிள்ளை அப்பா என்று கத்தும்;
அடுத்த பிள்ளை மெதுவாகக் கூப்பிடும்!
இது காரியமா?

ஆ) ஆத்துமாதாயம் — *ஒரே சரீரம்* (திருச்சபையில் சேர்ப்பு)
ஒரே சத்துரு (எல்லாருக்கும் பொது)

நடைமுறை ஆலோசனைகள் —

- உள்ளூரில் கிறிஸ்தவத் தலைவர்கள் மாதமொரு முறை கூடுகை.
- பொது விடுமுறைகளில் கூட்டு ஜெபங்கள்.

4. திருவசனத்தில் படிப்பறிவை (Scholarship) ஆவியானவர் திரும்பக் கொண்டுவருகிறார்.

எழுப்புதலின் பிரதான, முடிவான நோக்கம்:
''தேவனைப் பற்றிய அறிவு''

எசேக்கியேல் 36,37 & 38இன் இறுதி வசனங்கள் —
36:38; 37:28; 38:23
*''நானே **கர்த்தர்** என்று அறிந்துகொள்வார்கள்''*

இதைத் திருவசனம் மூலமே ஆவியானவர் செய்கிறார் (36:27)
பைபிள் படிக்கப் புதிய ஆர்வம் உண்டாகிறது;
பைபிள் தெரியாமை சபையை விட்டு விலகுகிறது.

எழுப்புதல் காலங்களில் வேதாகமப் பிரதிகளுக்குக் கிராக்கியுண்டாகும்.
நெகே 8:2,3,5,6 ... திருவசனத்திற்குப் புதிய மதிப்பு

பரிசுத்த ஆவியானவரே வேதத்தின் —

ஆக்கியோன்:	ஆசிரியர்:
2 பேது 1:20,21	யோ 16:13

நடபடிகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் —
2:42 ... உபதேசம் கற்று நிலைத்திருந்தனர்.
17:11 ... தனித்தும் கூடியும் தினமும் ஆராய்ந்தனர்.

ஆலயத்தில் கேட்கும் பிரசங்கங்களோடு திருப்தியடைவார் பலர்.
வீட்டுப் பாடமே கிடையாது. எனவேதான் தோல்வி.

ஆவியினால் நிறைவு & ஆகமங்களால் நிறைவு
(எபே 5:18,19) (கொலோ 3:16)

எழுப்புதல் காலங்களில் மக்கள் கைக்கடிகாரத்தைப்
பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள்!

எ.கா.) அப் 20:7-11 ... *நள்ளிரவு ... விடியற்காலம்*
இவ்வளவு நேரம்தான் கவனிக்க முடியும் என்ற தாற்பரியத்திற்குத்
திருமறை ஆராய்ச்சியின்போது இடமில்லை.

5. சுவிசேஷத்திற்காய்ப் பாடனுபவிக்க (Hardship) ஆவியானவர் போதுமான உற்சாகம் தருகிறார்.

எசேக் 37:10 ... *காலூன்றி ... மகா பெரிய சேனையாய் ...*
(உலர்ந்த எலும்புகள் → உற்சாக வீரர்)

புதிய இடங்களைக் கைப்பற்றவே சேனை —
38:23 ... *''அநேக ஜாதிகள்''*

எழுப்புதலின் விளைவு மிஷனரி இயக்கங்கள் பிறப்பு —

எ.கா.) ஜான் வெஸ்லி காலத்து எழுப்புதல் வில்லியம் கேரியையும்
வில்லியம் வில்பர்போஸையும் பாதித்தது.

— 1791இல் வெஸ்லி மரித்தபோது இவ்விருவருக்கும் வயது 30
— அடுத்து 40 ஆண்டுகள் இவர்கள் பணியாற்றினர்.

■ பாடனுபவிப்பும் நற்செய்தியறிவிப்பும் பிரிக்க முடியாதவை —
2 தீமோ 4:5 ... *தீங்கனுபவி ... சுவிசேஷகனுடைய வேலை*

ஆதி அப்போஸ்தலர், சுவிசேஷகர் பலர் இரத்தசாட்சிகள் —

- ஸ்தேவான் கல்லெறியப்பட்டு இறந்தார்.
- மத்தேயு எத்தியோப்பியாவில் வாளால் அறுப்புண்டார்.
- மாற்கு தெருக்களில் சாகும்வரை இழுக்கப்பட்டார்.
- லூக்கா தூக்கிலிடப்பட்டார்.
- பேதுருவும் சிமியோனும் சிலுவையிலறையுண்டனர்.
- அந்திரேயா சிலுவையில் கட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.

- யாக்கோபின் தலை வெட்டப்பட்டது.
- பிலிப்பு சிலுவையிலறையப்பட்டு, கல்லெறியப்பட்டார்.
- பர்தொலொமேயு தோலுரிக்கப்பட்டார்.
- தோமா (இந்தியாவில்) நமது அம்புகளுக்கு இரையானார்.
- சின்ன யாக்கோபு கோபுரத்திலிருந்து தள்ளிவிடப்பட்டார்.
- யூதா அம்புகளுக்குப் பலியானார்.
- மத்தியாஸ் கல்லெறியப்பட்டு மரணமடைந்தார்.
- பவுலின் தலை வெட்டப்பட்டது.

''இராயனே ஆண்டவர்'' என்று இவர்கள் சொல்லியிருந்தால் தப்பியிருப்பார்கள்.

தூரத்தில் பார்த்து நின்ற அவர்களது குடும்பங்கள் —
விசுவாசத்தை மறுதலியாதிருக்க அவர்களை ஊக்குவித்தன.
இம்மாமனிதர் சுவிசேஷத்தை முழங்கி நரகத்தை முடக்கினர்!

கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் ஒரு மிஷனரி; ஏனெனில்
கிறிஸ்தவரல்லாதவர் ஒவ்வொருவரும் மிஷனரிக் களம்!

■ *முடிவுரை*

நம்மைப் பரவசப்படுத்த அல்ல, இழந்ததையெல்லாம் திரும்பக் கொண்டுவரவே எழுப்புதல்! *''இந்த எலும்புகள் உயிரடையுமா?''* ஆம், ஒரு *''சேனையாய்''* உயர்ந்தெழும்!

1. கர்த்தத்துவம் — சேனையதிபன்
2. ஆராதனை — வணக்கம்
3. ஐக்கியம் — குழு மனப்பான்மை
4. படிப்பறிவு — ஆயுதப் பயிற்சி
5. பாடனுபவிப்பு — புதிய இடங்கள்

பாடுங்கள்: *''எழுப்புதல் அனுப்பும், எழுப்புதல் அனுப்பும்,*
எங்கள் உள்ளத்திலே ... சீக்கிரத்திலே!''

- திருமறைச் சரித்திரம் மற்றும் திருச்சபைச் சரித்திரத்தின் எழுப்புதல்களுக்காய்த் தேவனுக்குத் துதியுண்டாகட்டும்!

நமக்கிருக்கும் திருவாக்கு:
''இவைகளிலும் பெரிதானவைகளைக் காண்பீர்கள்!''

(74ஆம் அத்தியாயத்தின் குறிப்புகளையும் படியுங்கள்.)

76

உன்னத உதவியாளரின் உதவிகள்

The Helps of the Holy Spirit

முகவுரை

- பரிசுத்த ஆவியானவரை இயேசு அறிமுகப்படுத்திய விதம் —
  யோ 14:16 ... *இன்னொரு தேற்றரவாளன்* (= உதவியாளர்)
  கிரேக்கப் பதம்: Parakletos = ''உடனுதவ அழைக்கப்பட்டவர்''
  வாசியுங்கள்: யோவான் 14 & 16

- ஆவியானவரோடு தொடக்க அனுபவம்
  — பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (1 கொரி 12:13)
  ஆவியானவரோடு தொடரும் அனுபவம்
  — ஆவிக்குள்ளாக நடந்துகொள்ளுதல் (கலா 5:16)

  எ.கா.) திருமண வைபவம் vs. திருமண வாழ்வு

  ஆவியானவரோடு புது வாழ்வில் புகுந்துள்ள நாம் அவரோடு நடந்துகொள்ளவும் வேண்டும் (கலா 5:25).

கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் உதவிகள்:

1. அவர் நமது தொழுகைக்கு உயிரூட்டுகிறார்.

He enlivens our WORSHIP of God.

- சடங்காச்சாரமாய் ஆராதிப்பது அவருக்கு விருப்பம் கிடையாது —
  அப் 17:22-25 ... அத்தேனியரிடம் பவுல்
  யோ 4:20-24 ... சமாரியப் பெண்ணிடம் இயேசு

- ஆசரிப்புக் கூடாரத்தில் 3 பகுதிகள் —
  ஷெகினா மகிமை மகா பரிசுத்த உட்பிரகாரத்தில்.
  அப்படியே உடல், ஆத்துமா, ஆவி.

  வெறும் உடற்பாவனைகளோ, மெய்சிலிர்க்கும் உற்சாகமோ அல்ல, உள்ளான மனிதனில் தேவனோடு இடைபாடு.

  நமது ஆவியில் ஆவியானவர் ஒரு விடுதலை தருகிறார் —
  பிலி 3:3 ... *ஆவியினாலே ஆராதனை ... இயேசுவுக்குள் ...*

- *தேவனைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி* —
  எபே 5:18-20
- நவநாவுகள் — ஆவியோடு, ஆவியில், துதிப்பது
  அப் 10:46 ... கொர்நேலியுவும் குடும்பமும்
- நமது ஜெபங்களில் ஆவியானவரின் உதவி —
  ரோ 8:26,27 ... *வாக்குக்கடங்கா பெருமூச்சுடன் வேண்டுதல்*

2. திருவசனத்தைப் புரிந்துகொள்ள மனதைத் தெளிவிக்கிறார்.
He enlightens us to understand God's WORD.

- ஆவியானவரே வேத வாக்கியங்களின் ஆக்கியோன் —
  2 பேது 1:20,21

  அவரே சத்திய ஆவியானவர் —
  யோ 16:13
- இயல்பாகப் புரிந்துகொள்ளுதல்
  vs. ஆவியானவரால் தெளிவு பெறுதல்

  1 கொரி 2:9-14 ... *தேவனுக்குரியவை ... கண் காணவில்லை ... ஆவியானவர் வெளிப்படுத்தினார்*

பைபிளைத் திறக்கும்போதெல்லாம் ஆவியானவரது உதவி நாடுங்கள்.
எனக்கு வேதத்தில் ஆவியானவர் மூலமே பிடிப்பு கிடைத்தது.

3. ஆன்மீகப் போராட்டத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.
He equips us for spiritual WARFARE.

- ஆவி மண்டலத்தில் இரு சக்திகள் —
  தேவன் x சாத்தான்
  ஒளியின் ராஜ்யம் x இருளின் ராஜ்யம்
- யுத்தம்: (அ) உள்ளே போராட்டம்
  (ஆ) வெளியே போராட்டம்

(அ) உள்ளே போராட்டம்:
கலா 5:17 ... *மாம்சத்திற்கு விரோதமாக ஆவி*
ரோ 7:22-24 ... பவுலுக்கு இருந்த பிரச்னை

ஆவியானவர் உதவும் விதம்: கலா 5:16 ...
ஊனியல்பின் இச்சைகளை மேற்கொள்ள
ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.

அவர் ''பரிசுத்த'' ஆவியானதால் நமக்குப் பாவத்தின்மீது வெறுப்பு ஏற்படுத்துகிறார்.
நமது இதயங்களை ஆராய்ந்து, அழுக்குகளை அகற்றுகிறார் —
''ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்'' (1 பேது 1:2)

(ஆ) வெளியே போராட்டம்:

உலகிலுள்ள தீய சக்திகள் —
யோ 14:17,30 ... *உலகின் அதிபதி*
எபே 6:12 ... *பொல்லாத ஆவிகளின் சேனைகள்*
:17 ... *பட்டயம் ...* தாக்கும் ஒரே படைக்கலன்

மனத்தொய்வுகளை மேற்கொள்ளவேண்டும்.

சத்துரு வெள்ளம்போல் வரும்போது —
ஏசா 59:19 ... *ஆவியானவர்தாமே கொடியேற்றுவார் ...*

4. அவர் மனக்கவலைகளை மேற்கொள்ள நமக்குதவுகிறார்.
He enables us to overcome WORRIES.

அவரது பெயரே *''தேற்றரவாளர்''* (= ஆற்றித் தேற்றுபவர்)

- பரிசுத்த ஆவியானவர் *ஒரு மகிழ்விக்கும் நதி* —
  சங் 46:4 ... *ஒரு நதியுண்டு ... சந்தோஷிப்பிக்கும்*
- இறையரசின் வாழ்வே அதுதான் —
  ரோ 14:17 ... *சமாதானம் ... ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்*
  (புசிப்பதாலும் குடிப்பதாலும் உண்டாகும் சந்தோஷமல்ல.)
- உலகம் தரும் விதமான சந்தோஷமல்ல ...
  பரிசுத்த ஆவியானவர் மூலம் —
  யோ 14:26,27 ... *கிறிஸ்துவின் சமாதானம் ...*
- துன்புறுத்தப்பட்ட சீடர் *ஆவியினாலுண்டாகும் சந்தோஷமடைந்தனர்* —
  அப் 13:50-52
- இயேசு: துயரப்படுவோரைத் தேற்றி ஆனந்தத்தால் நிரப்பவே ஆவியானவர் என்னை அபிஷேகம்பண்ணினார் —
  ஏசா 61:1-3 ...*சிங்காரம் ... ஆனந்த தைலம்*

5. நாம் கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருக்கப் பலப்படுத்துகிறார்.
He empowers us to be WITNESSES for Christ.

- கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருப்பதில் இரு பரிமாணங்கள் —
  — அப் 1:8 ... *''எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்''*
  (அ) வாழ்க்கையால், (ஆ) வார்த்தையால்

(அ) வாழ்க்கையால் சாட்சி (Through life)

இது *ஆவியின் ''கனி''* மூலம் — கலா 5:22,23

— உறவுகளில் மென்மை, இனிமை ...

— அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், நம்பகம், சாந்தம், தன்னடக்கம் ஆகியவற்றை வாழ்க்கையில் காட்டுதல்.

(ஆ) வார்த்தையால் சாட்சி (Through lip)

இது ஆவியின் ''வரங்கள்'' மூலம் (1 கொரி 12:7-10).
அதாவது, ஆவியின் வல்லமை (அப் 1:8)
லூக் 24:47-49 ... *வல்லமையால் தரிப்பிக்கப்பட்டு*
... எல்லா நாட்டினருக்கும் ...

- தைரியமாய் நற்செய்தியறிவிப்பு — அப் 4:31
- விடுதலை ஊழியம் — அப் 10:38 / ஏசா 61:1
  (பிசாசின் பிடி, சுகவீனம், பில்லிசூனியம், மதுபானம், வெறிகள்)
- பயமுறுத்தல், துன்புறுத்தல் எதுவும் அசைக்காது ... அப் 20:22-24

(96ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

6. திறமையாய் வேலை செய்ய நமக்குச் சக்தி தருகிறார்.
He energises us to WORK efficiently.

ஆன்மீகச் செயல்பாடுகளுக்கு மட்டுமல்ல,
தொழில் சார்ந்த காரியங்களுக்கும்.

- எ.கா. பெசலெயேல் — யாத் 31:1-5

ஆவியால் நிறைந்த மருத்துவர் சிறப்பாய்ச் சிகிச்சையளிப்பார்.
ஆவியால் நிறைந்த பொறியாளர் சிறப்பாய்க் கட்டுவார்.
ஆவியால் நிறைந்த பேராசிரியர் சிறப்பாய்க் கற்பிப்பார்.
ஆவியால் நிறைந்த ஓவியர் சிறப்பாய் வரைவார்.
ஆவியால் நிறைந்த மாணவன் சிறப்பாய்ப் படிப்பான்.

- எ.கா.) தானியேலும் குழுவினரும்
  தானி 1:17 / 4:18 ... *ஞானம் ... அறிவு ... சாமர்த்தியம்*

ஆவியானவரின் காரணப் பெயர்கள் (ஏசா 11:2) —
ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி ...
ஆலோசனையையும் அறிவையும் அருளும் ஆவி ...
வேலைக்குச் செல்லுமுன் தினமும் ஆவியால் நிறையுங்கள்.

7. ஆரோக்கிய வாழ்வை அனுபவிக்க விடுதலையளிக்கிறார்.
He emancipates us to enjoy WHOLENESS.

''ஜீவன் ... பரிபூரண ஜீவன்'' (யோ 10:10)

- ஆரோக்கியம் (அ) உடலில்
  (ஆ) உள்ளில்

(அ) உடலில் ஆரோக்கியம் — ரோ 8:11
சாவுக்கேதுவான சரீரங்களை உயிர்ப்பிக்கும் ஆவியானவர்.
கல்வாரியின் புண்ணியங்களை நமதாக்குகிறார்.

— ஆவியானவரால் *''குணமாக்கும் வரங்கள்''* (1 கொரி 12:9,10)

— நமது உடலே ஆவியானவரின் உறைவிடம் (1 கொரி 6:19,20)
ஆரோக்கியமருளும் அவரது வல்லமை நமக்குள் பாயும்.

(ஆ) உள்ளில் ஆரோக்கியம் — 2 தீமோ 1:7
— *''தெளிந்த புத்தியுள்ள'' ஆவி*

மனதில் பாரமல்ல, பரவசம்!

ஆவியானவரே தேவனது *''தென்றல்''* (யோ 3:8)

நம்மீது வீசி நமக்குப் புத்துணர்வளிக்கிறார்.
மன இறுக்கம் அகலுகிறது.

■ *முடிவுரை*

இயேசு: *''நான் போகிறது உங்களுக்கு நல்லது ...*
பரிசுத்த ஆவியானவர் வருவார்'' (யோ 16:7)

எவ்வளவு உண்மை!

77

புதிய பாடல்

A New Song

முகவுரை

கர்த்தருக்குப் *''புதுப்பாட்டைப்''* பாடுங்கள் என்று திருமறை திரும்பத் திரும்ப நம்மை அழைக்கிறது —

சங் 33:3 சங் 144:9
40:3 149:1
96:1 ஏசா 42:10
98:1

பரலோகத்திலும் நாம்
''புதிய பாட்டைப்'' பாடுவோமாம்! (வெளி 5:10; 14:3)

ஆனால் **எது** புதுப்பாடல்?
அது புதிதாய் இயற்றப்பட்டதா அல்லது புதிய இராகமா?
அப்படியிருக்க முடியாது;
புதிதாய் இயற்றப்பட்டதாயினும் புதிய இராகமாயினும்,
சீக்கிரம் அதுவும் பழையதாகிவிடுமே.
புதுப்பாடல் என்பது பாடும் **நபரைக்** குறித்ததே!

— *''அது புதிய இதயம், புதிய ஆவியிலிருந்து''*
வெடித்துக் கிளம்பும் பாடல் (எசேக் 18:31)

— அது கிறிஸ்துவில் *''புதுப்படைப்பாகிய'' ''புதிய மனிதனின்''* பாடல் (எபே 4:24; கொலோ 3:10; 2 கொரி 5:17)

— அது *''புதிய வழியைக்''* கண்டுபிடித்து (எபி 10:19)
அதில் *''புதிய வாழ்வுடன்''* நடக்கும் (ரோ 6:4)
பயணிகளின் பாடல்.

எனவே, புதிய பாடல் என்பது புதிய மனிதனின் அனுபவங்களில் கீழ்க்கண்டவாறு பிறக்கும் தொழுகை —

1. விடுதலைப் பாடல் (Song of Deliverance)

சங் 40:2,3 ... *அவர் என்னைத் தூக்கியெடுத்து ... புதுப்பாட்டை ...*
சங் 32:1,7 ஆ ... *மன்னிக்கப்பட்டது ... இரட்சண்யப் பாடல்கள்*

☐ விடுதலைப் பாடல்

— பாவத்தின் தண்டனையிலிருந்து (யோ 8:34-36; ரோ 6:22)
— பாவத்தின் வல்லமையிலிருந்து (மத் 6:13; கலா 1:4; ரோ 7:24,25)
— பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே (எபி 9:28; வெளி 21:27)

பாடுங்கள்: *என்னுள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே;*
இயேசென்னை இரட்சித்தார், நான் ஆடிப்பாடுவேன்;
எவரும் அறியாரே, என்னுள்ளம் பொங்குதே;
என்னுள்ளம் பொங்கிப் பொங்கிப் பொங்கி வழியுதே!

It's bubbling, it's bubbling;
It's bubbling in my soul.
I'm singing, I'm dancing,
For Jesus made me whole!

2. மகிழ்ச்சிப் பாடல் (Song of Delight)

யாக் 5:13ஆ ... *மகிழ்ச்சியாயிருந்தால் ... சங்கீதம்*
நீதி 29:6ஆ ... *நீதிமான் பாடி மகிழுகிறான்*

— பழைய பாவ வாழ்வு துக்கங்களால் சீர்கெட்டது (சங் 32:10)
இயேசு நமது துக்கங்களைச் சுமந்துவிட்டார் (ஏசா 53:4,5)

— குற்றவுணர்வு பறந்தது; இனி ஆக்கினை இல்லை (ரோ 8:1)
பாவங்கள் மன்னிக்கப்பட்டன; மட்டுமல்ல, மறக்கப்பட்டன!
(ரோ 4:7,8; சங் 32:1)
இறையன்பை உணர்ந்து பாடுதல் (எபே 3:18)

— *மரண பயத்திலிருந்து* விடுதலை (எபி 2:14,15)
பாடுங்கள்: *''மரணமே, உன் கூர் எங்கே?''* (1 கொரி 15:54,55)

— பொருளாதார இழப்பு ஆன்மீக சந்தோஷத்தைப் பாதிக்காது.
ஆப 3:17-19 ... *அத்திமரம் ... இரட்சிப்பின் தேவன்*

3. தியானப் பாடல் (Song of Devotion)

பேச்சுத் தொடர்பு நிறைந்த வாழ்வு —
தமது வசனத்தின்மூலம் தேவன் நம்மோடு பேசுகிறார்;
ஜெபத்தின் வாயிலாக நாம் அவரோடு பேசுகிறோம்.

□ இறைவார்த்தை —

சங் 119:54 ... *உமது பிரமாணங்கள் ... எனக்குக் கீதங்கள்*
சங் 42:8 ... *அவரைப் பாடும் பாட்டு ... என் விண்ணப்பம்*
சங் 1:1,2 ... *அவரது வேதம் ... இரவும் பகலும் பிரியம்*
எரே 15:16,17 ... *உமது வார்த்தைகள் ... எனக்குச் சந்தோஷம்*
சங் 119:14,72,162 ... *பொன், வெள்ளி, பொக்கிஷத்தைவிட மகிழ்ச்சி*
:36,37 ... உலகப் பொருட்கள் மதிப்பற்றவை
:62,147,148 ... தூக்கத்தைவிட முக்கியம்

□ நமது துதியும் ஜெபமும் —

சங் 26:4-7 ... *துதியின் சத்தம்*
எபே 5:18-20 ... *ஆவியினால் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்*

பாடுங்கள்: *''என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்''*
"Sweet hour of prayer"
— இயற்றியவர்: William Walford, 1772-1850, England

4. இறைச்சார்புப் பாடல் (Song of Dependence)

சங் 118:13,14 ... *கர்த்தர் ... என் பலம் ... என் கீதம் ...*
சக 4:6 ... *பலத்தினால் அல்ல ... எனது ஆவியினாலேயே*
:7 ... *''கிருபையுண்டாவதாக''* என்ற ஆர்ப்பரிப்பு

அரசன் யோசபாத் பெரிய கோட்டைகள் கட்டியிருந்தான் (2 நாளா 17:12)
ஆனால் அவனது அறிக்கை: *''எங்கள் கண்கள் உம்மீதே!''* (20:1,12)

படைவீரருக்கு முன்னர் பாடகரை நிறுத்தினான் —
அவர்களது பல்லவி:
''கர்த்தரைத் துதியுங்கள் ... அவர் கிருபை'' (வச 14-21)

பவுலின் இறைச்சார்புப் பாடல் —
''நானல்ல, கிறிஸ்துவே!'' (கலா 2:20)
''மாம்சத்தில் நம்பிக்கையல்ல ... கிறிஸ்துவில் களிப்பு'' (பிலி 3:3)

பாடுங்கள்:

உம்மாலன்றி என்னாலாகும் என்று சொல்ல ஒன்றுமில்லை!
கொடியானது என்றும் தனியே கனி தராது என்று சொன்னீரே!
— V. எசேக்கியா பிரான்சிஸ்

5. ஆளுகைப் பாடல் (Song of Dominion)

சங் 98:1 ... *புதுப்பாட்டு ... வெற்றி*
வெளி 5:9,10 ... *புதுப்பாட்டு ... ராஜாக்களாக்கினார் ... அரசாளுவோம்*
கிறிஸ்து மூலம் முற்றும் ஜெயங்கொள்ளுவோர் (ரோ 8:37,38)

நமது பாடல்: *''தேவன் நம் பக்கம் இருந்தால் ...''* (வச 31)

மோசேயும் மக்களும் சேர்ந்து பாடிய பாடல் —
யாத் 15:1-18 ... *கர்த்தரைப் பாடுவேன் ... வெற்றி சிறந்தார்*
இப்பாடல் மனனம் செய்யத் தகுந்தது.

நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது:
தேவன் யார்?
நீங்கள் கிறிஸ்துவுக்குள் யார்?
அப்பொழுது *அரிய காரியங்கள்* செய்வீர்கள் (தானி 11:32)

சங் 149:1,2,5,6,9 ... *புதுப்பாட்டு... பாடுங்கள்... இராஜா... பட்டயம்*

6. சிட்சைப் பாடல் (Song of Discipline)

பழைய வாழ்க்கை: கீழ்ப்படியாமை (எபே 5:6; கொலோ 3:6)

உபத்திரவம் மற்றும் சிட்சையின் பிரம்பு நம்மைத் திருத்தியது —
எபி 12:7,10

இதைப் பாராட்டி நமது பாடல் —
சங் 119:67,71,75 ... *நான் உபத்திரவப்பட்டது நல்லது ...*
கற்றுக்கொள்ளுகிறேன் ... உமது உண்மை ...

தாவீது தனது பாவத்தை மறைத்தபோது (சங் 32:3)
... கதறல் ... உலர்தல் ...

அறிக்கையிட்டபோதோ —
— களிப்பினால் குதூகலம் (சங் 32:11)
— கம்பீரமாய்க் கீதம் (சங் 51:14)

சிட்சையின் பாடல் கொண்டாடுவது —

தேவனது தந்தைத்துவம்	(Fatherhood)
கிறிஸ்துவின் கர்த்தத்துவம்	(Lordship)
ஆவியானவரின் தோழமை	(Companionship)

திரித்துவ தேவனுக்கடியில்,
திருத்தமோ சிட்சையோ நம்மைச் சரிப்படுத்தும், பயப்படுத்தாது.

துர்ப்பாக்கியமாக, ஒழுங்கு, சீடத்துவம், தன்னல மறுப்பு,
சிலுவை சுமத்தல் ஆகியவை மீது பாடல்கள் இன்று அபூர்வம்.

7. உபதேசப் பாடல் (Song of Doctrine)

சங் 119 ... திருமறையிலுள்ள மிக நீண்ட பாடல்!
அதின் 176 வசனங்களில் ஒவ்வொன்றும் திருவசனம் பற்றியது!
சங் 138:1,2 ... *துதிப்பேன் ... துதிப்பேன் ... உமது வார்த்தை*

திருவசனத்தால் நிறைந்திருக்கும் இதயத்திலிருந்து இயல்பாகவே துதி பொங்கி வரும் (கொலோ 3:16)

இன்றையப் பாடல்களில் பல ...
— உபதேசத்தின்படி ஆரோக்கியமற்றவை
— இறையியலின்படி தவறானவை
— திருவசனத்தின்படிச் சத்தற்றவை

ஆரோக்கிய உபதேசப் பாடலோ எப்பொழுதும் புதுப்பாடல்தான்;
ஏனெனில் திருவசனம் ஒருபோதும் பழமையாகாது —
மாற் 13:31 ... *வானம் ... பூமி ... என் வார்த்தைகள்*
1 பேது 1:24,25 ... *மானிடர் ... புல் ... கர்த்தர் வசனம்*

பாடுங்கள்:
சீர் ஆவியால் இரக்கமாய் உண்டான வேதமே,
ஒப்பற்ற ஞானமுள்ளதாய் நமக்குண்டாயிற்றே.
கர்த்தாவின் அருளால் அதே மகா ஈவாயிற்று;
அதைக் குறித்தென் நெஞ்சமே, சந்தோஷமாயிரு!
(பாமாலை 176)

8. அறிவிப்புப் பாடல் (Song of Declaration)

சங் 96:1-3 ... *புதுப்பாட்டு ... இரட்சிப்பை அறிவியுங்கள்*
40:3 ... *புதுப்பாட்டு ... அநேகர் கண்டு நம்புவார்கள்*
ரோ 15:9 ... *புறவினத்தார் ... அறிக்கை ... சங்கீதம் பாடுவேன்*
லூக் 1:77-79 ... சகரியாவின் பாடல்: *அருணோதயம்*
1 பேது 2:9 ... *இராஜரீக ஆசாரியர் ... புண்ணியங்களை அறிவிக்க*

24 மூப்பர்களின் *''புதுப்பாட்டின்''* கருத்து இதுவே —
வெளி 5:8-10 ... *கோத்திரங்கள் ... இனங்கள் ...*

இரட்சண்ய சேனையினரின் தெருப்பவனிப் பாடல்கள்!
சமுதாயத்திற்குள் *கிறிஸ்துவின் வாசனை வீச* ... (2 கொரி 2:14)

பாடுங்கள்:
சங் 113:3 ... *உதிக்கும் திசை ... அஸ்தமிக்கும் திசை ...*
துதிக்கப்படுவதாக
பிலி 2:10,11 ... *கால்கள் யாவும் முடங்கும்;*
நாவு யாவும் போற்றிடும்

எ.கா.) புதிய ஏற்பாட்டில் மாட்சிமையான கவிதை (1 தீமோ 3:16)

இறைவன் மனுவுடலில் வெளிப்பட்டார்,
ஆவியில் நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்,
தேவதூதர்களால் காணப்பட்டார்,
புறவினத்தாரிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்,
உலகத்தில் விசுவாசிக்கப்பட்டார்,
மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டார்!

9. அர்ப்பணப் பாடல் (Song of Dedication)

சங் 51:15,17 ... *புகழ் ... நருங்குண்ட இருதயம்*
45:1,10,11 ... *என் கவிதை ... இராஜா ... ஆண்டவர் ...*
அவரைப் பணிந்திடு

நாம் தேவனுக்காய்ச் செய்யும் எதுவும் நமது அர்ப்பணத்தின் வெளிப்பாடாகவே இருக்கவேண்டும் —
யோ 21:15-17 ... *நீ என்னிடம் அன்பாயிருக்கிறாயா?* (3)
சங் 100:3,4 ... *நாம் அவரது ஆடுகள் ... ஸ்தோத்திரியுங்கள்*
103:1 ... *என் முழு உள்ளமே, கர்த்தரை ஸ்தோத்திரி*
104:33 ... *நான் உள்ளளவும் கர்த்தரைப் பாடுவேன்*

பாடுங்கள்: *அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்*
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே
அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத் தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

10. துக்கப் பாடல் (Song of Distress)

''புதிய பாடல்'' எப்பொழுதுமே மகிழ்ச்சியும் குதூகலமும் அல்ல. பரவசப் பாடல்களைவிட பாடுகளில் இயற்றப்பட்ட பாடல்களே பிரபலமானவை.

எ.கா.) சங்கீதப் புத்தகம்

— 3,11,12,27,46,59,64,91,121,139,146
கவலை, பயம்

— 16,92,102,130
ஏமாற்றம்

— 12,42,55,86,107,142
சோர்பு

— 7,9,10,17,35,52,56,94,109
அநியாயம்

— 3,13,17,25,27,69,91
தனிமை

— 4,23,62,70,102,138
பலவீனம்

— 22,23,41,116
வியாதி

— 6,31,71,77,94,123
துக்கம், வேதனை

— 10,86,90,94,126,138,142
கலக்கம்

இவை நமது சுயசரிதை போலிருக்கின்றன, அல்லவா?

நாம் கற்கவேண்டியது —

அங்கலாய்ப்பை ஆராதனையாக்க ...(Worries → Worship)
துன்பங்களைத் துதியாக்க ...(Anguish → Adoration)
தொல்லைகளைத் தொழுகையாக்க ...(Trials → Thanksgiving)

ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினால் இது சாத்தியம் (பிலி 4:6,7)
முடிவில், பரமனே நமது பாடலாகிவிடுவார்!
(யாத் 15:2; சங் 118:14; ஏசா 12:2)

78

கர்த்தருக்குள் மகிழ்ச்சி

The Joy of the Lord

முகவுரை

- ''துக்கப்படவேண்டாம்
  ... ***கர்த்தருக்குள்*** *மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பலம்''* (நெகே 8:10)
- ***''கர்த்தருக்குள்*** *மகிழ்ந்திருங்கள்''* (பிலி 3:1/4:4)
  திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட கட்டளை.
  ''உம்மில் *மகிழ்ந்திருக்கும்படி ... உயிர்ப்பியும்''* (சங் 85:6)
  ''தேவனுடைய *ஆலயத்தில் மகிழ்ச்சி ...''* (யோவேல் 1:16)

சந்தோஷமா மகிழ்ச்சியா? (Happiness or Joy?)

சந்தோஷம் —	*மகிழ்ச்சி —*
நிகழ்வுகளைப் பொறுத்தது.	நிகழ்வுகள் காரியமல்ல.
மனப்பான்மை.	மனப்பான்மைக்கு அப்பாற்பட்டது.
உணர்ச்சிகள்.	ஆன்மீகம்.
இகத்துக்கடுத்தது.	பரத்துக்கடுத்தது.

- மகிழ்ச்சிதான் நம்மைப் பலமுள்ளவராக்குகிறது —
  மகிழ்ச்சியான மருத்துவர் பிறரிலும் சிறந்தவர்.
  மகிழ்ச்சியான ஆசிரியர் பிறரிலும் சிறந்தவர்.
  மகிழ்ச்சியான மாணவன் பிறரிலும் சிறந்தவன்.
- இயேசு: *''என்'' மகிழ்ச்சி* (யோ 15:11; 17:13)

கர்த்தருக்குள் மகிழ்ச்சி என்றால் என்ன?

1. இரட்சிப்பின் மகிழ்ச்சி (Joy of Salvation)

அதாவது கர்த்தரது இரட்சிப்பில் மகிழ்வது.

- துவக்க மகிழ்ச்சி (அப் 16:34) — பிலிப்பி சிறையதிகாரி
- ஏசா 12:2,3 ... *ஊற்றுக்கள்* ... (அ) தினமும் மொண்டுகொள்ளல்
  (ஆ) திரளான தண்ணீர்

  கிறிஸ்து முடித்து வைத்ததால் நமக்குக் கிடைத்த இரட்சிப்பைத் தினமும், தொடர்ந்து நினைவுகூருவது.

- ஆப 3:17,18 ... ஆசீர்வாதமோ இல்லையோ!
- *ஆபிரகாம் ... களிகூர்ந்தான்* (யோ 8:56)
- மரியாள்: *''என் ஆவி என் **இரட்சிப்பின்** தேவனில் களிகூருகிறது''* (லூக் 1:46,47)

இரட்சிப்புதான் நமது *''தலைச்சீரா''* (எபே 6:17)
வெளியே செல்லுமுன் கட்டாயம் இதனை அணிந்துகொள்ளுங்கள்.
வழியில் எத்தனையோ வலைகள் ... தலைக்காயம் ஆபத்து.

எ.கா.) இருட்டான, மனத்தொய்வான வேளைகளில்
''இவ்வளவு பெரிய இரட்சிப்பைத்'' தியானியுங்கள் (எபி 2:3,4)

2. அடிபணிதலால் மகிழ்ச்சி (Joy of Submission)

அதாவது, கர்த்தருக்கு அடிபணிந்து வாழ்வதால் மகிழ்ச்சி.
எபி 12:2 ... பிதாவானவரின் சித்தத்திற்கு இயேசு தம்மை
அர்ப்பணித்த ஜெபத்தைத் தொடர்ந்து.
(துக்கம் நிறைந்தவர்!)

தேவதூதரின் உதவி: மத் 4:10,11 (வனாந்திரம்)
லூக் 22:42,43 (தோட்டம்)
அதாவது, துவக்கத்திலும் முடிவிலும்.

- 2 தீமோ 1:12 ... *''நான் அவரிடம் ஒப்புவித்ததை ...''*
''பாடு ... வெட்கப்படுவதில்லை'' = இக்கட்டான சூழலில்!
- Fanny Crosby (1823–1915) —

Perfect submission, all is at rest!
மெய்ச் சமாதானம், ரம்மியமும்,
தூய தேவாவி வல்லமையும்,
புண்ணிய நாதர் தந்துவிட்டார்;
விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்!

இது எவ்விதம் சாத்தியம்?
கீழ்க்கண்டவாறு நிச்சயித்துக்கொள்வதின் மூலம் —

அ) ஒரு மனிதனும் என்னை உயர்த்தவோ இறக்கவோ முடியாது.
ஆ) எனக்கு உசிதமானதையே ஆண்டவர் செய்வார்.

ஆசைகள், விருப்பங்களைத் தேவனிடம் சமர்ப்பியுங்கள் (எரே 45:5)

- ஒருவருக்கொருவரும் இணங்கி வாழுங்கள் (எபே 5:18-21)

3. பரிசுத்தத்தினால் மகிழ்ச்சி (Joy of Saintliness)

அதாவது, கர்த்தருக்குமுன் பரிசுத்த நடக்கையாலுண்டாகும் மகிழ்ச்சி.

- நெகே 8:9-11 ... நியாயப்பிரமாணம் ... பாவ உணர்வு (வச 12)
- சங் 51:12 ... பாவமே மாபெரும் மகிழ்ச்சிக் கொல்லி.
- ஏசா 6:2,3 ... தேவனது பரிசுத்தத்தைக் கொண்டாடுதல்.
அவரது பரிசுத்தத்தின் ''நினைவுகூருதலைக்'' கொண்டாடுங்கள்.
- நீதிமானுக்காய் விதைக்கப்பட்ட மகிழ்ச்சி —
சங் 97:11
எபி 1:9 ... *ஆனந்த தைலம்*
''கிறிஸ்துவுக்குள்ளிருப்போருக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை'' (ரோ 8:1)
- கிறிஸ்துவின் இரத்தத்தால் குற்றவுணர்வு ஒழிந்தது
... எனவே, *நிறைவான சந்தோஷம்* (1 யோ 1:4-7)
உண்மை, உத்தமம், ஒளிவுமறைவின்மை, நேர்மை முதலியன.
- *இதயத்தில் சுத்தமுள்ளோர் பாக்கியவான்கள்* (= மகிழ்ச்சியுடையோர்) (மத் 5:8)
- *''பரிசுத்தராயிருங்கள்''* vs. *''பரிசுத்தமாக்குகிறேன்''* (1 தெச 5:16,23)
எனவே, *''மகிழ்ந்திருங்கள்!''*
பரிசுத்த வாழ்வே பரவச வாழ்வு!

4. திருவசனத்தினால் மகிழ்ச்சி (Joy of the Scriptures)

அதாவது, கர்த்தரது வசனத்தில் மகிழ்வது.

- சங் 119:54 ... *பரதேசி ... பிரமாணங்கள் ... கீதங்கள்*
:92 ... *வசனம் ... மனமகிழ்ச்சி ... என் துக்கம் ...*

மனத்தொய்வுண்டாக்கும் செய்தித்தாள்கள்.
பாதகச் சிந்தையல்ல, *''திருவசனத்தினால் உண்டாகும் மகிழ்ச்சியினால்''* சாதகச் சிந்தை (ரோ 15:4)

- சங் 29:5,6 ... *''கர்த்தரது சத்தம் கன்றுக்குட்டி போல நம்மைத் துள்ளச் செய்கிறது!''*
பரவசம்! பூரிப்பு!

- கொலோ 3:16 ... வழிந்தோடும் அனுபவம் ... *சங்கீதங்கள், கீர்த்தனைகள்*

  திருமறை: நமது நேசர் அனுப்பிய அன்புக் கடிதம்.

  மற்ற குரல்களைக் கேட்குமுன் அவரைக் கேளுங்கள்.

  காலைத் தியானம் நாள் முழுவதும் எண்ணம் —

  சங் 1:2 ... *வேதத்தில் பிரியம்* நம்மைப் பிரியமானவர்களாக்குகிறது.

- கூழாங்கற்களா, முத்துக்களா?
  முத்துக்களுக்கு ஆழ்கடலுக்குள் செல்லவேண்டும் —
  நேரம், சிரத்தை எடுக்கவேண்டும் —
  ''புதையல்களில் களிகூருவதுபோல'' (சங் 119:162)
  ''என்னே இனிமை!'' (சங் 119:103)

5. *பாடுவதில் மகிழ்ச்சி* (Joy of Singing)

அதாவது, கர்த்தரைத் துதித்து ஆராதிப்பதால் மகிழ்ச்சி.

- சங் 122:1,4 ... *கர்த்தருடைய ஆலயம் ... மகிழ்ச்சி*
  (சபை ஆராதனை)
- நீதி 29:6ஆ ... *நீதிமான் பாடி மகிழுகிறான்.*
  (தனித்து ஆராதனை)

  ஒலி/ஒளித்தட்டுகளே எல்லாவற்றையும் பாடிவிடவேண்டாம்!

- *அவரது சமூகத்தில் பரிபூரண ஆனந்தம்* —
  அப் 2:25,26

  பெந்தெகொஸ்தே அருள்மாரிக்கு விளக்கமாக இது சொல்லப்பட்டது.
  ஆவியின் நிறைவு மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது
  (எபே 5:18-20)

- துதி நம்மைப் பலப்படுத்துகிறது *(கண்ணீர் ... மழை ...* சங் 84:4-7)

  தேவனைத் துதித்து ஆராதிக்க நேரம் எடுக்க முடியாத அளவு
  அலுவல்களில் சிக்கிக்கொள்ளாதீர் —

  தொழிலே தொழுகையாகிவிடக்கூடாது (ஓசி 14:3ஆ)

  வேலையில் திருப்தி என்பது மகிழ்ச்சியல்ல;

  அது விரைவில் மறைந்து உங்களை வெறுமையாக்கிவிடும்.

பிரகாசம் என்றாலும் பாடுவோம்; இருட்டு என்றாலும் பாடுவோம்;
எந்நாளும், எங்கேயும், பாடிக்கொண்டே வாழ்ந்திடுவோம்!

6. *ஜெபிப்பதால் மகிழ்ச்சி* (Joy of Supplication)

அதாவது, கர்த்தரிடம் விண்ணப்பிப்பதால் மகிழ்ச்சி.

- 1 சாமு 1:10,15,16,18ஆ — அன்னாள்
  ... கசப்பு ... விண்ணப்பம் ... இனித் துக்க முகமில்லை.
- ஜெபமும் கவலைகளும்
  பிலி 4:4,6,7 ... நாம் விரும்பும் பதில் கிடையாவிடினும்
- சங் 94:17-19 ... *விசாரங்கள் ... உமது ஆறுதல்*
  எ.கா.) மோசேயின் ஜெபம் (சங் 90:13-15)
- யோ 16:24 ... *கேளுங்கள் ... பெற்றுக்கொள்ளுங்கள் ... சந்தோஷம்*

□ ஜெபமென்பது நமது உணர்வுகளைப் பிதாவானவருடன் பகிர்வது;
அது நமது பாரங்களைத் தூக்கிவிடுகிறது.

□ ஜெபமென்பது நமது ஆத்தும நேசரோடு நேரம் செலவிடுவது;
அது நமது இதயத்தின் வெற்றிடங்களை நிரப்புகிறது.

- வேலை கூடினால் ஜெபம் கூடவேண்டும் (மாற் 1:34,35)
  ''அமைதி வேளையின்'' (Quiet Time) முக்கியத்துவம்
  (அத்தியாயம் 65)

7. *இறைமக்களுடன் மகிழ்ச்சி* (Joy with the Saints)

அதாவது, கர்த்தரது பிள்ளைகளோடு ஐக்கியப்படுவதால் மகிழ்ச்சி.

- சங் 133:1-3 ... புத்துணர்வளிக்கும் *பனி* ... மகிழ்விக்கும் *தைலம்*
- இறைப்பிரசன்னத்தில் நிறைவான சந்தோஷம் —
  ''எங்கே இரண்டு மூன்று பேர் ...''
- ரோ 15:32 ... விசுவாசிகளின் ஐக்கியம் நாடிய பவுல்.

  ஐக்கியத்தின் தேவையில்லாத நிலையை
  நாம் அடைவதேயில்லை.

இன்றையச் சமுதாயத்தினர் தனித்திருப்பதையே விரும்புவதால்
அவர்கள் பெரும்பாலும் சோகமாகவே திரிகின்றனர்.

உங்கள் குடும்பம், நண்பர் எனும் சிறு வட்டத்திலிருந்து வெளிவாருங்கள் —

எ.கா.) இயேசு: *''என் தாய் யார்?*
என் சகோதரன், சகோதரி யார்?'' (மத் 12:47-50)

அவர் எப்பொழுதுமே பிறரது ஐக்கியம் நாடினார் (நீதி 8:30,31)

8. ஆத்துமாதாயத்தின் மகிழ்ச்சி (Joy of Soulwinning)

அதாவது, மக்களைக் கர்த்தரிடம் கொண்டுவருவதில் மகிழ்ச்சி

- ஏசா 53:11,12 ... *அவரது ஆத்தும வருத்தத்தின் பலன்* மீது மகிழ்ச்சி
- அறுவடையின் மகிழ்ச்சி — சங் 126:5,6/யோ 4:36
  சமாரியாவிலுள்ள அந்தப் பெண்ணையும்
  கிராமத்தினரையும் ஆதாயப்படுத்திய கட்டம்.
- லூக் 15:5 ... ஒரு மேய்ப்பன்
  :9 ... ஒரு பெண்மணி
  :32 ... ஒரு தந்தை

  மூன்று வட்டங்கள்: (அ) குடும்பம், (ஆ) சுற்றம், (இ) வயல்
  (வச 7 ... *மனந்திரும்பும் ஒரு பாவிக்காய் மகிழ்ச்சி!)*

பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் ஒருவரை மீட்டெடுப்பதைவிட மேலான சேவை எதுவுமில்லை — யாக் 5:20
(வழி விலகியலைவோருக்காய் ஜெபியுங்கள்.)

9. தியாகத்தின் மகிழ்ச்சி (Joy of Sacrifice / Suffering)

அதாவது, கர்த்தரது பெயரால் செய்யப்படும் தியாகத்தொண்டினால் வரும் மகிழ்ச்சி.

- பிலி 2:17,18 ... *வார்க்கப்பட்டு ... மகிழ்ச்சியடைவேன்*
- ''தனிப்பட்ட'' தியாகம்
  (ஜார்ஜ் முல்லர் & அவரது அனாதை இல்லங்கள்)
- எளியோர், துன்புறுவோரோடு அடையாளப்படுத்துதல் —

அ) யோபு (யோபு 30:25) ... *துன்பத்திலிருப்பவனுக்காய் அழுதேன்*
ஆ) தாவீது (சங் 35:12,14) ... அவர்கள் எனது எதிரிகளாயிருந்தாலும்
இ) இயேசு (மத் 25:34-40) ... *பசியாயிருந்தேன், தாகமாயிருந்தேன்*

எளியவரைச் சிரிக்க வையுங்கள்.

நீங்கள் ஒரு மருத்துவப் பட்டதாரியானால், ''மருத்துவரே இல்லாத பகுதியிலேயே பணியாற்றுவேன்'' எனத் தீர்மானியுங்கள்.

- கடினமான சூழ்நிலைகள், ஆனால் மகிழ்ச்சியோடு ஓட்டம் —
  அப் 20:23,24 (பாடுகளில் மகிழ்ச்சி)

10. மறுவருகையின் மகிழ்ச்சி (Joy of Second Coming)

அதாவது, கர்த்தரது மறுவருகை குறித்த நம்பிக்கையால் மகிழ்ச்சி.

- *மகிழ்ந்து ... பூரித்து ... அவர் வருகிறார்* (சங் 96:11-13)
- *மகிழ்ந்திருங்கள் ... கர்த்தர் சமீபம்* (பிலி 4:4,5)

  பாதகச் சிந்தையுள்ள உலகு. (Pessimism)
  சாதகச் சிந்தையுள்ள சபை. (Optimism)

  ஆதிகாலக் கிறிஸ்தவர்களின் வாழ்த்துச் சொல் —
  ''மாரநாதா!'' = கர்த்தர் வருகிறார்! (1 கொரி 16:22)

- நம்மைத் *தேற்றும்* இணையற்ற செய்தி —
  1 தெச 4:16-18
- பைபிளிலுள்ள இறுதி வாக்கு (வெளி 22:20)
- இனித் துக்கம் இல்லை! (வெளி 21:4,5) (சத்திய வசனங்கள்)
  ''எஜமானின் மகிழ்ச்சிக்குள்'' நுழைந்திருப்போம் —
  (மத் 25:21,23)

''அவர் சமூகம்'' → ஆன்மீகம் (இன்று) → ''நம்மோடு கர்த்தர்''
''பூரண ஆனந்தம்'' → எழுத்தின்படி (நாளை) → ''கர்த்தரோடு நாம்''

■ *முடிவுரை*

இந்தப் பத்துக் காரியங்களையும் சமநிலைப்படுத்துங்கள். சிலவற்றை அதிகம் செய்து சிலவற்றை அலட்சியப்படுத்தி னால், மனமடிவும் மனத்தொய்வும் ஏற்படும்.

''கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பலம்!''

79

அன்றையப் பண்டிகை; இன்றையக் கொண்டாட்டம்!

Their Festivals & Our Joy

முகவுரை

கிறிஸ்தவ வாழ்க்கையே கொண்டாட்டமாய்த்தான் இருக்கவேண்டும்.
கிறிஸ்தவ வாழ்வு என்றால் **கிறிஸ்துவுடன்** வாழ்வு.
கிறிஸ்துவுடன் என்றால் தினமும் கொண்டாட்டம்தானே! —

சங் 118:22-24 ...*தள்ளப்பட்ட கல் ... கர்த்தர் உண்டுபண்ணின* ***நாள்***
பண்டிகை நாள்! குதூகலம்!

சுவிசேஷ யுகத்தில் கொண்டாட்டம் (நாகூம் 1:15)

- விருந்துகள் மற்றும் பண்டிகைகளைக் குறித்த விபரங்கள் பழைய ஏற்பாட்டில் நிறையவுண்டு. அவற்றில் ஏழு மிக முக்கியம். அவற்றின் பொருளையும் நமக்கு அவை எவ்விதம் பொருந்தும் என்பதையும் இங்கு படிப்போம்.
- யூதர்களுக்கு இரு நாள்காட்டிகள் (Calendars) உண்டு —

அ) பொது (Civil) நாள்காட்டி (அரசியல், அலுவலகங்கள், கணக்குவழக்கு, ஒப்பந்தங்கள், முதலியவற்றிற்கு)
ஆங்கில வருடம் vs. தமிழ் வருடம் போல.

ஆ) மார்க்க (Sacred) நாள்காட்டி (பண்டிகைகள், மார்க்கச் சடங்குகள் போன்றவற்றிற்கு)

		Civil	*Sacred*			*Civil*	*Sacred*
Tishri	—	1	7	Nisan	—	7	1
Heshvan	—	2	8	Iyar	—	8	2
Chislev	—	3	9	Sivan	—	9	3
Tebeth	—	4	10	Tammuz	—	10	4
Shebat	—	5	11	Ab	—	11	5
Adar	—	6	12	Elul	—	12	6

(எபிரெய மாதங்களுக்கு மாறிமாறி 30, 29 நாட்கள்)

1. பஸ்கா பண்டிகை (Passover) (Nisan 14-21 / மார்ச்-ஏப்ரல்)

எபிரெய நாள்காட்டி: ஆபிப்

யாத் 12:43-13:10
உபா 16:1-8

அது *"பஸ்கா"* என்றழைக்கப்படக் காரணம் —

— எகிப்திலுள்ள தலைப்பிள்ளைகளைத் தேவன் அழித்தபோது, இரத்தம் தெளிக்கப்பட்ட கதவு நிலைகளுள்ள எபிரெய இல்லங்களைக் "கடந்து சென்றார்" (= pass over).

அது *"புளிப்பில்லா அப்பப் பண்டிகை"* என்றும் அழைக்கப்பட்டது.

— ஏனெனில் மாவு புளிப்பதற்குக் காத்திராமல் எபிரெயர் அவசர அவசரமாய் எகிப்தை விட்டார்கள்!

பஸ்கா வாரத்தில்தான் இயேசு சிலுவையிலறையுண்டார் —
மத் 26:17-20

நமக்குப் படிப்பினை: 1 கொரி 5:6-8

கிறிஸ்துவே நமது பஸ்கா!

— நமது பாவங்களைச் சுமந்துவிட்டார், மகிழுங்கள்.
— *துர்க்குணம், பொல்லாப்பு* எனும் புளித்தமாவில்லாது, *துப்புரவு, உண்மை* எனும் புளிப்பில்லா அப்பம்.

எ.கா.) பண்டிகைக் காலங்களில் மக்கள் தேவையற்றவற்றை வெளியே எறிந்து வெள்ளை அடிப்பதுபோல்!

எ.கா.) எஸ்றா 6:21,22 ... மக்கள் தங்களைப் புறவினத்தாரின் அசுத்தங்களிலிருந்து பிரித்துக்கொண்டு "மகிழ்வுடன்" புளிப்பில்லா அப்பப் பண்டிகை!

2. வாரங்களின் பண்டிகை (Pentecost) (Sivan 6 / மே-ஜூன்)

பெந்தெகொஸ்தே பண்டிகை முதலாவது *"வாரங்களின் பண்டிகை"* எனப்பட்டது

(உபா 16:9-11) ... *ஏழு வாரங்கள்*

ஏனெனில் அது பஸ்காவுக்கு அடுத்த 50ஆம் நாள் —
கிரேக்க மொழியில் ''பெந்தெகொஸ்தே'' எனப்பட்டது
(அப் 2:1; 20:16; 1 கொரி 16:8)

இப்பண்டிகைக்கு மறுபெயர்கள் —

''முதற்கனிகளின் பண்டிகை'' (Firstfruits)
''சேர்ப்பின் பண்டிகை'' (யாத் 34:22) (Ingathering)

இது *''அசைவாட்டும் பலி''* செலுத்தும் வேளையாயிற்று
(Wave offering) (லேவி 23:15,16,20)

பிரதானமாக இது விவசாயம் சம்பந்தப்பட்ட பண்டிகை —
அறுப்பின் பண்டிகை — பெரும்பாலும் விவசாயிகளாயிருந்த
எபிரெயருக்கு இது முக்கியம்.

இப்பண்டிகையில் பல கருத்துக்கள் அடங்கியுள்ளன —

- முதற்கனி (முதற்பலன்) = உயிர்த்தெழுதல்
  (சந்தோஷமாய் மாறிய துக்கம் — யோ 16:20,21,22)
- முற்றிய கதிரிலிருந்து தானியங்கள் கொட்டுதல்
  = பரமேறுதலும், ஆவியானவர் ஊற்றப்படுதலும்
- அசைவாட்டும் பலி
  = துதி, ஸ்தோத்திரம், ஆராதனை
  (பெந்தெகொஸ்தே நாளில் இதுதானே!)
- சேர்ப்பு = 3000 பேர் சபையில் சேர்ப்பு (அப் 2:41)

நாமிருப்பது பெந்தெகொஸ்தே யுகம்!
— கிறிஸ்துவானவர் விண்ணுலகில், ஆவியானவர் மண்ணுலகில்.

— யூதர் மட்டுமல்ல, எல்லா இனத்தவரும் மொழியினரும்
கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் (1 கொரி 12:13)

— ஆவியின் கனி *''சந்தோஷம்''* (கலா 5:22)

3. எக்காளப் பண்டிகை (Trumpets) (Tishri 1.2 / செப்-அக்)

லேவி 23:24,25
எண் 29:1-6

இது ஒரு புத்தாண்டைத் துவக்க *''எக்காளம் ஊதும்''* நாள்.
புத்தாண்டுக் கொண்டாட்டம்
''கர்த்தருக்குச் சுகந்த வாசனை''

ஒரு புதிய துவக்கம் —
ஒரு வெற்றிப் பவனி —
2 கொரி 2:14-16

எக்காளம் ஊதுதல் = நமது வெற்றி முழக்கம்

- ஒவ்வொரு புத்தாண்டும் தேவனது ஆசிகளை அனுபவிக்க
  அவரது ஈவு.
- ஒவ்வொரு புத்தாண்டும் தேவனுடைய மகிமைக்காய்
  நாம் கனிகொடுக்க அவர் தரும் வாய்ப்பு.
- ஒவ்வொரு புத்தாண்டும் தேவனுடைய வழிகளையும்
  திட்டங்களையும் நாம் புரிந்துகொள்ள அவர் தரும் சிலாக்கியம்.

இவையெல்லாவற்றையும் சங் 65:11-13இல் தாவீது சுருக்கினான்.
மகிழவும், ஆனந்த சத்தமிடவும் ''மலைகள், பள்ளத்தாக்குகளைச்''
சேர்ந்துகொள்வோம்.

அதாவது, வாழ்க்கையின் ''ஏற்றத் தாழ்வுகள்!''

பாடுங்கள்: *அருள் ஏராளமாய்ப் பெய்யும்;*
மேக மந்தாரமுண்டாம்,
காடான நிலத்திலேயும் செழிப்பும் பூரிப்புமாம்!

4. பாவநிவாரணப் பலிப் பண்டிகை (Atonement) (Tishri 10/செப்-அக்)

லேவி 23:26-32 ... *''ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்த''*
யாத் 30:10 ... *''ஆரோன் பிராயச்சித்தம்பண்ண''*

பிரதான ஆசாரியன் பிராயச்சித்தம்பண்ணவேண்டியதைக் குறித்த
செயல்முறைகள் லேவியராகமம் 16இல் உண்டு —

நோக்கம் — லேவி 16:30
''பிராயச்சித்தம்'' = மூடுதல்

நமது பாவங்களை ''நாம்'' மூடக்கூடாது ...
அவற்றைக் கர்த்தரிடம் அறிக்கை செய்தால் ''அவர்'' அவற்றை
மூடி நம்மைக் கழுவுவார் (சங் 32/நீதி 28:13).

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு இப்பண்டிகையின் விளக்கம் —
எபி 9:7,11-15

— *''அறியாமல் செய்த பாவங்கள்''*

(நமக்குத் தெரிந்த நமது பாவங்களைவிட
தெரியாதவையே ஏராளம்.)

— *''ஆண்டுக்கொருமுறை''* x *''ஒரே தரம்''*

— *''காளைகள், ஆடுகள்''* x *''தம்மையே பலியாக்கினார்''*

— *''நமது மனச்சாட்சி சுத்திகரிப்பு''*

— *செத்த ''கிரியைகள்''* — பாவங்கள் மட்டுமல்ல!

— *''நித்திய மீட்பு''*

இவ்விதச் சுத்திகரிப்பிற்காக நாம் அவ்வப்போது தற்பரிசோதனை
செய்துகொள்ளவேண்டும் —

இது சந்தோஷமான அனுபவம் —
1 யோ 1:4-9 ... *''உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்குபடி
... ஆதிமுதல் கேட்ட செய்தி ...''*

5. *கூடாரப் பண்டிகை* (Tabernacle) (Tishri 15-22 / செப்-அக்)

லேவி 23:39-43 ... *''களிகூருங்கள்''*
உபா 16:13-15 ... *''ஆசரித்துச் சந்தோஷம்''*

இவை “Feast of Booths” என்றும் அழைக்கப்படும்.

இவை மரக்கிளைகளால் செய்யப்பட்ட தற்காலிகக் கூடாரங்கள்.

நிரந்தரமான கட்டிடங்கள் இல்லாத வனாந்திர வாழ்க்கையை
நினைவுபடுத்தவே இப்பண்டிகை.

தேவன் மனிதனை முதலாவது ஒரு தோட்டத்தில்தான் வைத்தார் —
திறந்த வெளி ... சுத்தமான காற்று ...
உயிரினங்கள் (செடிகள் / மிருகங்கள் / பறவைகள்)

புதிய வானம், புதிய பூமியிலும் ஒரு தோட்டம் இருக்கும் —
ஒரு *நதியும்* இருக்கும் — *இரு கரைகளிலும் மரங்கள்* (வெளி 22:2)

நாமோ காற்றோட்டமில்லா கட்டிடங்களுக்குள் அடைத்துக்கொள்ளு
கிறோம். (ஜன்னல் / கொசு வலை / தொங்கு திரை)

— பல்லியும் பாச்சானும்தான் நமக்குக் கூட இருப்பவர்கள்!
உள்ளே வளரும் செடிகள்! பிளாஸ்டிக் பூக்கள்! சுவரில் படங்கள்!

மறக்கப்பட்டதொரு பண்டிகை உயிர்பெற்றது —
நெகே 8:14-17 ... *''மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று''*
:18 ... திருமறை வாசிக்கப்பட்ட சமயம்

ஒரு கூடாரப் பண்டிகையின்போதுதான்
''ஜீவத் தண்ணீருள்ள நதிகளை'' இயேசு வாக்களித்தார் —
யோ 7:2,37-39
:53; 8:1...பண்டிகை முடிந்ததும் யாவரும் வீடு
திரும்பினர்; இயேசுவோ மலைக்குப் போனார்!

நாம் இவ்வுலகில் பயணிகள், அதுவும் தற்காலிகம்தான்,
என நினைப்பது நம்மை ஆனந்தத்தால் நிரப்புகிறது!

பரலோகமே, என் சொந்தமே, என்று காண்பேனோ?
என் இன்ப இயேசுவை என்று காண்பேனோ?
இயேசு என் நம்பிக்கையாம், இந்தப் பூமி என் சொந்தமல்ல;
பரிசுத்த சிந்தையுடன் இயேசுவைப் பின்பற்றுவேன்!
பளிங்கு நதியோரம் சுத்தர் தாகம் தீர்த்திடுவார்;
தூதர்கள் பாடிடத் தூயனைத் தரிசிப்பேன்!
— M. வின்சென்ட் சாமுவேல்

6. *ஆலயப் பிரதிஷ்டைப் பண்டிகை*

(Dedication) (Chrislev 25 / 8 நாட்கள் / நவ-டிச)

இது ''தீபங்கள் பண்டிகை'' என்றும் அழைக்கப்படுகிறது.
கி.மு.167இல் புறவின அரசனால் ஆலயம் தீட்டுப்படுத்தப்பட்டபின்
ஆராதனை திரும்பத் துவங்கப்பட்டதின் கொண்டாட்டம்.

இது மறைக்கப்பட்ட ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது —
(1 Maccabees 4:59)

புதிய ஏற்பாட்டில் இதன் குறிப்பு: யோ 10:22,23

கட்டிடப் பிரதிஷ்டை என்பது மகிழ்ச்சியான வேளை —

எ.கா.) எருசலேமின் மதில்கள் பிரதிஷ்டை
நெகே 12:27,43 ... *பாடல் ... பாடகர்*

இதற்குப் புதிய ஏற்பாட்டு இணை கிறிஸ்துவின் சரீரமாம் —
1 பேது 2:4,5 ... *ஆவிக்குரிய மாளிகை*
எபே 2:19-22 ... *பரிசுத்த ஆலயம் ... தேவனுடைய வீடு*

''இனி அந்நியரல்ல ... பரிசுத்தவான்களோடு உடன் சுதந்திரர்''
இறைமக்களின் ஐக்கியத்தில் மகிழ்ச்சி (சங் 133)

*7. **பூரிம் பண்டிகை*** (Purim) (Adar 14, 15 / பெப்-மார்)
எஸ்தர் 9:20-26

இது ''சீட்டுப் பண்டிகை'' என்றும் அழைக்கப்பட்டது (3:6,7).
(Feast of Lots)

யூதரை எப்பொழுது அழிக்கவேண்டுமென்று ஆமான்
''சீட்டு'' போட்டான்.

சில சமயங்களில் இது ''எஸ்தர் பண்டிகை'' எனவும்
அழைக்கப்பட்டது.

சரித்திரமெங்கும் யூதர்களுக்கு எதிரிகள் ஏராளம் —
சத்துருக்களிடமிருந்து விடுதலை என்று சகரியா பாடினான்
(லூக் 1:73,74)

கிறிஸ்து நம்மை எல்லாச் சத்துருக்களிடமிருந்து விடுவித்துவிட்டார்.

நமக்கெதிரான எந்த ஆயுதமும் வாய்க்காது.

''நாம் மகிழ்ந்து களிகூருவோம்'' —

சங் 126:1-3 ... *நகைப்பு ... ஆனந்த சத்தம் ...*
27:5,6 ... *ஆனந்த பலிகள் ... கீர்த்தனம் ...*

விடுதலையைக் கொண்டாட —
''ஒருவருக்கொருவர் *வெகுமதிகள் அனுப்புவோம்''*
அத்துடன்
''எளியவர்க்குத் தானதர்மம் பண்ணுவோம்''
(எஸ்தர் 9:22)

செல்வந்தருக்கு நண்பர் ஏராளம்;
எளியவர்க்கு எதிரிகள் ஏராளம்!

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 40 சதவீதத்தினரைக் கொண்ட இந்தியாவுக்கு நாம்தான் எஸ்தர்கள்!

■ ***முடிவுரை***

இந்த ஏழு பண்டிகைகளில்
மூன்று மிக முக்கியமானவை —
உபா 16:16
அ) புளிப்பில்லா அப்பப் பண்டிகை
ஆ) வாரங்களின் பண்டிகை (பெந்தெகொஸ்தே)
இ) கூடாரப் பண்டிகை

- கருத்துச் செய்தி:

எப்பொழுதும் மகிழுங்கள் —
அ) சிலுவையில் முடிக்கப்பட்ட செயலுக்காக
ஆ) பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடு
இ) விண்ணகரை எதிர்பார்த்து நம்பிக்கையுடன்

80

''கண்ணீரின் பள்ளத்தாக்கு''

Mourning into Dancing

சங்கீதம் 84 — ஒரு தியானம்

முகவுரை

''அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து,
அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்'' (வச 6)

கண்ணீரும் கஷ்டமும் இல்லாது கடக்க முடியாத முட்புதர் நிறைந்த பள்ளத்தாக்கு (ஒப்பிடுக: 2 சாமு 5:22)

"Baca" என்ற இப்பள்ளத்தாக்கின் எபிரெயப் பெயருக்குப் பொருள் ''அழும் மரம்'' என்பது. அதிலிருந்து பிசின் வடிந்துகொண்டிருந்தது இப்பெயருக்குக் காரணமாயிருக்கலாம்.

''கண்ணீர் வாழ்வு'' → ''நடனக் களிப்பு''

''பேக்கா'' (= அழுகை) என்பது ''பெராக்கா'' (= ஆசீர்வாதம்) ஆகிறது (2 நாளா 20:26)

கண்ணீரைக் களிப்பாக்குவது எங்ஙனம் ? (சங் 84) —

1. தேவனது பிரசன்னத்தை நாடுங்கள் (வச 1-4,10).
(Presence of God)

''உமது வாசஸ்தலங்கள்''
''கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்கள்''
''உம்முடைய பீடங்கள்''
''உம்முடைய வீடு ... என் தேவனின் ஆலயம்''

''தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள்'' (வச 7)

ஆத்துமா ... வாஞ்சை, தவனம் *இருதயம் ... கம்பீர சத்தம்* *மாம்சம் ... கம்பீர சத்தம்*	*''ஜீவனுள்ள தேவனை நோக்கி''* —தேவன் தம்மை மறைக்கிறார்; ஆனால் மரித்துப் போகவில்லை!
''அடைக்கலான் குருவிக்கு வீடு'' *''தகைவிலான் குருவிக்குக் கூடு''*	அடைக்கலான் குருவிகளைவிட நாம் விசேஷித்தவர். தேவனுக்கு அருமையானவர்கள் (மத் 6:26)

2. தேவனது துதியைப் பாடுங்கள். (Praises of God)

''சேனைகளின் கர்த்தர்'' — வச 1,3,8,12
''ஜீவனுள்ள தேவன்'' — வச 2
''என் ராஜாவே, என் தேவனே'' — வச 3
''சீயோனில் தேவன்'' — வச 7
''யாக்கோபின் தேவன்'' — வச 8
'' எங்கள் கேடகமாகிய தேவன்'' — வச 9
''தேவனாகிய கர்த்தர் ... சூரியன், கேடகம்'' — வச 11

3. தேவனது வல்லமையைச் சார்ந்திருங்கள். (Power of God).

''உம்மில் பலங்கொள்ளுகிறவன் பாக்கியவான்'' — வச 5
*''**சேனைகளின்** கர்த்தாவே!''* — வச 3,8,12
''பலத்தின்மேல் பலம்'' — வச 7

4. தேவனது வாக்குகள்மீது நில்லுங்கள். (Promises of God)

''சூரியன், கேடகம் ... கிருபை, மகிமை'' — வச 11
''நன்மை'' — வச 11
''உம்மை நம்பியிருக்கும் மனிதன் பாக்கியவான்'' — வச 12

5. தேவனிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பியுங்கள்.
(Petitions to God)

(உங்கள் ஜெபங்களை ஏறெடுங்கள் — Prayers to God)
''என் விண்ணப்பத்தைக் கேளும்'' — வச 8

6. தேவனது பரிசுத்தத்தோடு ஒட்டிக்கொள்ளுங்கள்.
(Purity of God)
(தேவனுக்குமுன் உங்கள் பாதையைப் பரிசுத்தப்படுத்துங்கள்.)

நாம் தேவனால் ''அபிஷேகம்'' பெற்றவர்கள் — வச 9
''பொல்லாதோரின் கூடாரங்கள்'' வேண்டாம் — வச 10
''உத்தமமாய்'' நடந்திடுங்கள் — வச 11
''இருதயங்களில் செவ்வையான வழிகள் உள்ளவர்கள்''—வச 5
''சீயோனுக்கு'' வந்து சேர்பவர்கள் — வச 7
— பரிசுத்த பாதை!

■ *முடிவுரை*

- கர்த்தர் *''மழையை''* அனுப்புவார் (வச 6)
  (நிரம்பிய குளங்கள் = ஆசீர்வாதங்கள்)
  — இனி வறட்சி, கனியின்மை இல்லை!
- கர்த்தர் *''கிருபை''* அருளுவார் (வச 11)
  — இனிப் பலமின்மை, தோல்வி இல்லை!
- கர்த்தர் *''மகிமை''* அருளுவார் (வச 11)
  — இனி அவமானம் இல்லை!
- கர்த்தர் *''எல்லா நன்மையும்''* அளிப்பார் (வச 11)
  (ரோ 8:32 / 38)
  எல்லாம் **நன்மைக்கே** நடக்கும்!

  — இனிக் குறைவு இல்லை!

மழை (வச 6)	Showers
சூரியப் பிரகாசம் (வச 11)	Sunshine
புகலிடம் / *கேடகம்* (வச 11)	Shelter / Shield

பாடுங்கள்: சங் 30:11,12

அடைக்கலமே உமதடிமை நானே,
ஆர்ப்பரிப்பேனே, அகமகிழ்ந்தே;
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே!

கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ?
கூப்பிட்ட என்னைக் குணமாக்கினீரல்லோ?
குழியில் விழாதபடி காத்துக்கொண்டீரே,
அழுகையைக் களிப்பாக மாற்றிவிட்டீரே!

— சகோதரி சுஜானா ஜெகநாதன், பெங்களூரு (1939-2011)

81

சுத்திகரிக்கும் அக்கினி

The Fire of Sanctification

முகவுரை

■ *''நமது தேவன் பட்சிக்கும் அக்கினியாயிருக்கிறார்!''*
ப.ஏ. — உபா 4:24 ... மோசே சொன்னது
பு.ஏ. — எபி 12:29 ... எபிரெய நிருப ஆக்கியோன் சொன்னது

தேவனது இக்குணாதிசயம் இரு காரியங்களைச் செய்யும் —

- ☐ யாத் 14:24,25 ... இஸ்ரவேலுக்காக / எகிப்தியருக்கெதிராக
- ☐ லேவி 9:23,24; 10:1-3 ... காணிக்கையை ஆசீர்வதிக்க / அந்நிய அக்கினி கொண்டு வந்தவரை அழிக்க
- ☐ ஏசா 31:4,5,9 ... பாதுகாவல் / தண்டனை
- ☐ ஏசா 33:14-16 ... அடைக்கலம் / அழிவு
- ☐ சக 2:5 ... பாதுகாவல் / அழிவு

அதாவது, *தேவனது ''தயவும், கண்டிப்பும்''* (ரோ 11:22)

■ திரித்துவத்தின் 3 நபர்களில்,
பரிசுத்த ஆவியானவரே பெரும்பாலும் அக்கினிக்கு ஒப்புமை —

- ☐ லூக் 12:49,50 — *பூமியில் அக்கினி* (இப்பொழுதே பற்றியெரிய = கல்வாரிக்கும் பெந்தெகொஸ்தேக்கும் முன் ஆவியின் ஆசிகள்)
- ☐ ஏசா 4:3 — *சுட்டெரிப்பின் ஆவி*
- ☐ தானி 7:9,10 — *சிங்காசனத்திலிருந்து அக்கினி நதி*
- ☐ அப் 2:3,4 — *அக்கினிமயமான நாவுகள்*
- ☐ ரோ 12:11 — *ஆவியில் அனல்*
- ☐ 1 தெச 5:19 — *ஆவியை அவித்துப்போடாதிருங்கள்*

அவரது பெயரைப் போலவே, (''பரிசுத்த'' ஆவியானவர்),
அவர் பிரதானமாகச் **''சுத்திகரிக்கும் அக்கினி''** —

மத் 3:11,12 ... *பதரைச் சுட்டெரிப்பார்*
ஏசா 4:3 ... *அழுக்கைக் கழுவி ...*

பதரைச் சுட்டெரித்து நம்மைச் சுத்திகரிக்கிறார் —
ஏசா 5:24 ... *வைக்கோல் ... செத்தை*

இந்த **ஏசாயா 5ஆம் அத்தியாயம்** ஆறு முறை *''ஐயோ''* என்கிறது; ஒவ்வொன்றும் ஒரு பாவத்தைக் கண்டிக்கிறது —

1. ***தன்னலம்*** (ஏசா 5:8)

- ஓசி 10:1 — *தனக்குத்தானே கனி, பயனற்ற இஸ்ரவேல்*
  ஒப்பிடுக: யோசேப்பு, ஆதி 49:22
- லூக் 3:9 — கனியற்ற மரம் அக்கினியில் போடப்படும்!
  அப்படியானால் என்ன செய்யவேண்டும்?
  பதில்: வச 10,11 — ஆடை கொடு, ஆகாரம் கொடு!
- 2 தீமோ 3:1,2 — *கடைசி நாட்களின்* முதல் அடையாளம்
- குடும்ப வாழ்வில் தன்னலம் —
  எபே 5:25-29,1,2

  சபை வாழ்வில் தன்னலம் —
  வரங்கள் ... 1 கொரி 14:12,13
  ஜெபம் ... மத் 6:9-13

  சமுதாய வாழ்வில் தன்னலம் —
  யோபு 31:16-23

2. ***சிற்றின்பக் களியாட்டுகள்*** (ஏசா 5:11-14)

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதற்குப் பதிலாக (வச 11-14)
= அவரது மகிழ்ச்சிக்கு மாற்றுக்கள்

- அமரிக்கையாய் விசுவாச நடை போடுவதற்குப் பதிலாகப் பரவச நாட்டம், சடங்காச்சார மயக்கம்
  யாத் 32:1,6,7,11 — *பொற் கன்றுக்குட்டி*
  ஓசி 8:14 — *உண்டாக்கியவரை மறந்து கோவில்கள் கட்டுவது*
- பரிசுத்தமானவற்றை அசட்டைசெய்யும் பாவ இன்பங்கள்
  தானி 5:23-28 ... *அரசன் பெல்ஷாத்சார்*
  1 சாமு 2:12-14,17,22,25 ... ஏலியின் குமாரர்

- செல்வச் செருக்கு
  யோபு 31:24-28
  ஆலோசனை — கொலோ 3:5-7 ... *தேவ கோபாக்கினை*

3. ***மனப்பூர்வமாய், துணிகரமாய்ப் பாவம்*** (ஏசா 5:18,19)

- எபி 10:26-31 ... *ஜீவனுள்ள தேவனின் கரங்கள் ... பயங்கரம்*
- நீதி 29:1 ... *அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் ... சடுதியில் நாசம்*
- 2 கொரி 7:10,11 ... *தேவனுக்கேற்ற துக்கம் + மெய்யான* மனந்திரும்புதல் (தேவனுக்கேற்ற துக்கத்தின் 7 அம்சங்கள்)

4. ***உண்மையின்மை*** (ஏசா 5:20)

- வெளி 21:8 ... *பொய்யர் அனைவரும் ... அக்கினி*
- நீதி 12:22 ... *பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பு*
- யோ 8:44 ... *பிசாசு ... பொய்க்குப் பிதா*
- மத் 5:33-37 ... இயேசு கண்டிக்கிறார்.
  யாக் 5:12 ... அப்போஸ்தலர் கண்டிக்கின்றனர்.
- ஆதி 18:12-15 ... சொல்வடிவு பெறாத சிந்தனையும் முக்கியம். (சாராள்)
- அப் 5:4 ... மனிதரிடம் பொய் என்பது தேவனிடம் பொய்.
  பொய் என்பது மாய்மாலத்திற்கு நடத்துகிறது.
  மாய்மாலக்காரருக்கு அக்கினி (ஏசா 33:14,15)

5. ***அகந்தையும் அகம்பாவமும்*** (ஏசா 5:21)

- ஏசா 10:12-17 ... அசீரியாவின் பெருமையை எரித்தொழிக்க தேவன் அக்கினியாகிறார்.
  தேவனால் பயன்படுத்தப்பட்ட அதே பாத்திரம்
  இப்பொழுது பெருமையினால் எரிக்கப்படுகிறது.
- ரோ 11:17-22
  தேவன் சிலரை ஒதுக்கி நம்மை ஆசீர்வதிக்கிறார்.
  மேட்டிமைச் சிந்தை வேண்டாம்.

- ஏசா 47:8,10,14
  உடனடித் தண்டனையில்லாததால் கொழுத்த இதயம்
  (பிர 8:11)
  அது அக்கினிக்கு இரையாகும்.

6. அநியாயம் (ஏசா 5:22,23)

- யோபு 15:34
  பரிதானக்காரனின் வீட்டை அக்கினி பட்சிக்கும்.
- 2 பேது 3:7,12,13
  அநியாயம் நிறைந்த இவ்வுலகு அக்கினிக்கு இரையாகும்.
- பாரபட்சம் ஒரு சாபம்.
  யாக் 2 1-4 ... *பொன் மோதிரம் ... கந்தை உடை*
- ஏசா 33:14-16
  நியாயம் செய்பவனுக்குக் கன்மலை, அப்பம், தண்ணீர்.
  அவன் அக்கினியால் பட்சிக்கப்படான்.

■ ***முடிவுரை***

ஏசா 4 — சுத்திகரிக்கும் அக்கினி: வாக்கு (வச 3,4)
ஏசா 5 — பட்சிக்கும் அக்கினி: தண்டனை (வச 24)
ஏசா 6 — சுத்திகரிக்கும் அக்கினி: சுத்திகரிப்பு (வச 5-7)

தேவனது வாஞ்சை: ஏசா 62:1
சீயோன் ... நீதி ... பிரகாசம் ... இரட்சிப்பு ... எரிகிற தீவட்டி

மனந்திரும்பினால், அக்கினியினால் சுத்திகரிப்பு!
மனதைக் கடினப்படுத்தினால், அக்கினியினால் பட்சிப்பு!

82

உள்ளத்தில் உண்மை

How to maintain Inner Piety

முகவுரை

சங்கீதம் 51: தாவீதின் வெளிப்படையான பாவ அறிக்கை.

காலா காலமாக இறைமக்களுக்கு இந்தப் பாவ அறிக்கையின் சங்கீதம் பேராசீர்வாதம் கொண்டுவந்துள்ளது.

அவன் தேவனிடம் சொன்னது:

''உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்;
அப்பொழுது எனது மனதில்
ஞானத்தைத் தெரியப்படுத்துவீர்'' (வச 6)

உண்மையான ''ஞானம்'' பொங்கி வருவது பரிசுத்தத்திலிருந்தே —

நீதி 2:6,7 ... *நீதிமான்களுக்கென்று மெய் ஞானம்*
யாக் 3:13 ... *நல்ல நடக்கை ... ஞானம்*
:17 ... *பரத்திலிருந்து வரும் ஞானம் முதலாவது சுத்தம்*

உள்ளான பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள,
சங்கீதம் 51இல் தாவீது தேவனிடம் கேட்கும் 4 ஏதுக்கள் —

1. நிலைவரமான ஆவி (Steadfast spirit)

வச 10, *''நிலைவரமான ஆவியை என் உள்ளில் புதுப்பியும்''*

பரிசுத்தமாயிருக்க முதலாவது ''நான்'' தீர்மானிக்கவேண்டும் —
தானி 1:8, *''தானியேல் தன் இதயத்தில் தீர்மானித்தான்''*

எனது *''மனது''* தேவனை உறுதியாய்ப் பற்றவேண்டும் (ஏசா 26:3)
நான் *''அசையாது''* ... *''உறுதியாய்''* இருக்க வேண்டும் —

எபி 10:23 ... *அசைவில்லாமல் உறுதியாயிருப்போம்*
:35-39 ... *தைரியம் ... பொறுமை*

2. பரிசுத்த ஆவி (Holy Spirit)

வச 11, *''உமது பரிசுத்த ஆவியை எடுத்துக்கொள்ளாதிரும்''*

பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் ஊழியம் —
அவரது பெயரே ''பரிசுத்த'' ஆவியானவர்.
நமது வாழ்விலுள்ள பதரை அவர் எரித்துப்போடுகிறார் —
லூக் 3:16,17
மேலெழுந்த மனந்திரும்புதல் கண்டனம் (வச 8)

பாவத்தின் மீது முழு வெறுப்பு —

2 தெச 2:10-13 ... *சத்தியத்தின்* (உண்மையின்) *மீது அன்பின்மை ... அநீதியில் பிரியம் ... கொடிய வஞ்சகம்*
எபி 1:8,9 ... *நீதியை விரும்பி ... அக்கிரமத்தை வெறுத்தார்*

தேவனது பரிசுத்தத்திற்கு இசைவாக நடந்துகொள்ளுதல் —
1 பேது 1:2 ... *ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்*
:13-16 ... *நான் பரிசுத்தர் ... உங்கள் நடக்கை எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்*

3. உற்சாக (தயாள) ஆவி (Generous Spirit)

வச 12, *''உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படிச் செய்யும்''*

தேவன் அபரிமிதமாய் நம்மை ஆசீர்வதிப்பதற்குக் காரணமான அவரது தயாளத்தை இது குறிப்பிடலாம் —
யோ 3:34-36 ... *அளவில்லாமல் ஆவி*
ரோ 8:32 ... *சொந்தக் குமாரனையே தந்துவிட்டவர் ...*
எபே 3:14-20 ... *சகல பரிபூரணம் ... மகிமையின் ஐசுவரியம்*

ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் இதை நமக்குரியதாக்கலாம்.
பொது மொழிபெயர்ப்பு: *''தன்னார்வ மனம்''* (Willing spirit)

தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளுமளவு அவரது இராஜ்யத்துக்கடுத்தவைகளில் நமக்குத் *''தன்னார்வம்''* வேண்டும்.

4. நொறுங்குண்ட ஆவி (Broken spirit)

வச 17, *''தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்''*

பாவம் செய்ய நம்மைத் தடுக்கும் பயபக்தி —
நீதி 28:13,14 ... *பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுகிறவன் ... எப்பொழுதும் பயந்திருக்கிறவன்*

ஆதி 39:9 ... *இவ்வளவு பெரிய பொல்லாப்பைத் தேவனுக்கு விரோதமாய்ச் செய்வதெப்படி?*

திருவசனத்திற்குமுன் பரிசுத்த *நடுக்கம்* — ஏசா 66:2
மனத்தாழ்மையுள்ள இயேசுவிடமிருந்து கற்றல் — மத் 11:28-30

■ *முடிவுரை*

நமது வாழ்வில் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள தேவன் தந்துள்ள நிறைவான ஏதுக்களுக்காய் அவரைத் துதிப்போம்.

கவலையீனமும் ஏனோதானோ எனும் மனப்பான்மையும் நம்மை நாசமாக்கும்.

தேவனது *''கிருபைக்காகவும்'' ''மிகுந்த இரக்கங்களுக்காகவும்''* அவரைத் துதித்துக்கொண்டேயிருப்போம் (சங் 51:1,19)

83

தூயாவியானவரும் தூதறிவிப்பும்

Missionary Evangelism & the Holy Spirit

முகவுரை

□ விவிலியத்தின் இறுதிப் பக்கத்தில் ஒரு வசனம் —
வெளி 22:16,17
ஆவியும் — இயக்குநர்
மணவாட்டியும் — செய்தியாளர்
''வா'' என்கிறார்கள் — செய்தி

பரிசுத்த ஆவியானவரே இயக்குநர் என்பதை வலியுறுத்தாததே நமது மிஷனரிப் பணிகளில் மாபெரும் தவறுதல்.

ஆதிச்சபையோ அப்படியில்லை —
அப் 5:32 ... *''நாங்களும் பரிசுத்த ஆவியும் சாட்சிகள்''*

□ பழைய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டுகள் —
தாவீது: சங் 51:11-13 ... *உற்சாகமான ஆவி ... பாவிகள் ...*
செருபாபேல்: சக 4:6,7 ... பிரமாண்ட வேலை ...
என் ஆவியினாலேயே

□ புதிய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டுகள் —
அ) இயேசு கிறிஸ்து — சுவிசேஷங்கள்
ஆ) ஆதிச் சபை — நடபடிகள் & நிருபங்கள்

அ) இயேசு கிறிஸ்து —
அப் 10:38
கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் ...
என்னை அபிஷேகம்பண்ணினார் ... *பிரசங்கிக்க*
(லூக் 4:16-20) *குணமாக்க*
ஆறுதல்படுத்த
திருப்ப

ஆ) ஆதிச்சபை —
மிஷனரிப் பணிக்குத் திட்டம் —
அப் 1:8 ... *பரிசுத்த ஆவி வரும்போது* — 4 வட்டங்கள்

மையமில்லாது வட்டம் வரைய முடியுமா?
பரிசுத்த ஆவியின் வல்லமையே மையம்.

ஆவியினால் பிறவாவிட்டால் — இறையரசில் நுழைவு ...
ஆவியினால் நிரம்பாவிட்டால் — இறையரசில் பிறரைச் சேர்ப்பு ...

- ஆவியின் நிறைவை நாடியவர்கள் —
  அப் 1:13,14
  மரியாள் ... பேதுரு ... யாக்கோபு ... யோவான்
- அவர்களது நற்செய்திப்பணியின் இரகசியம் —
  தன்னார்வக் கிளர்ச்சி — ஒவ்வொருவரும்
  — ஒவ்வொருயிடத்திலும்
  — ஒவ்வொருவரிடமும்

அருள்மாரியின் விளைவே அறுவடைப்பணி.
''நான் ஊற்றுவேன் ... தொழுதுகொள்ளும் எவனும்''
(அப் 2:17,21)

■ அப்போஸ்தலர் நடபடிகளில் எடுத்துக்காட்டுகள்:
= ''ஆவியானவரின் நடபடிகள்'' (Acts of the Holy Spirit)

□ ஆவியின் நிறைவினால் தனிப்பட்டவரது தாக்கம்
பர்னபா ... அப் 11:24
நிரப்பப்பட்ட மனிதனின் ஈர்ப்பு.
ஆவியானவர் மக்களைக் கிறிஸ்துவிடம் ஈர்க்கிறார்

□ முதல் வரிசை மிஷனரிகள்
அப் 13:2-4 ... *ஆவியானவர் பேசினார் ... அனுப்பினார்*

□ மாற்றுக் கலாச்சாரப் பணியில் ஆவியானவரின் நடத்துதல்
பிலிப்பு ... 8:29,30 (எத்தியோப்பியன்)
பேதுரு ... 10:19,20 (செசரியன் / இத்தாலியன்)
பவுல் ... 16:6-9 (மக்கெதோனியன்)

□ உபத்திரவம்
அப் 4:31 ... *இடம் அசைந்தது ... நிரப்பப்பட்டனர் ...* தைரியம்
20:22,23 ... *பரிசுத்த ஆவியானவர் ... சங்கிலிகள்*

□ உபதேசக் குழப்பம் (கலாச்சாரம் கலந்தது)
15:29 ... *பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலம்*

□ திருச்சபைத் தலைமை

மூப்பர்கள் : 20:28 ... *பரிசுத்த ஆவி ... கண்காணிகள்*
உதவிக்காரர் : 6:3 ... *பரிசுத்த ஆவி ... இந்த வேலை*

□ திருச்சபை வளர்ச்சி

9:31 ... ஆவியின் நிறைவை வலியுறுத்தும் சபைகளிலேயே
இன்று சபை வளர்ச்சி அதிகம்.
காலத்தை நிதானித்து நடப்போம்!

■ வரலாற்று நிகழ்வுகள் நமது அனுபவங்களாக வேண்டும் —

— சிலுவையிலறையுதல் ... கிறிஸ்துவுடன் சிலுவையில்
— உயிர்த்தெழுதல் ... புதிய ஜீவன் [அறையப்பட்டோம்
— பரமேறுதல் ... உன்னதங்களில் அமர்வு
— அப்படியே, பெந்தெகொஸ்தே ... தனிவாழ்வில் நிறைவு

கல்வாரிக்கும் பெந்தெகொஸ்தேக்கும் இடையில் எங்கேயோ
திருச்சபை நின்றுவிட்டது!

84

நமது தரிசனத்தை மங்கச் செய்பவை

The Factors which blur our Vision

முகவுரை

நாம் தரிசனமுள்ள ஆடவராய், பெண்டிராய் இருக்கவேண்டும்.
நமது தரிசனத்தை நாம் இழந்தால்,
நமது வாழ்வில் திசையிழப்போம், நோக்கமிழப்போம்.

நாம் நமது தரிசனத்தை அடியோடு இழக்காவிடினும்,
அதை மங்க விட்டுவிடுவது சகஜம்.
அதுவும் ஆபத்தானதே.

நமது தரிசனத்தை மங்கச் செய்பவற்றை வேதம் சுட்டிக்காட்டுகிறது —

1. சகவுறவுகளில் குளறுபடிகள்

□ 1 யோ 2:11 ... *தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளில் ...*
தான் போகுமிடம் அறியான் ...

□ குற்றங்காணும் ஆவி நமது பார்வையை மங்கச் செய்யும் —
மத் 7:3-5 ... *சகோதரன் கண்ணில் துரும்பு ... உன் கண்ணில்*
உத்திரம் ... பின்பு தெளிவாகத் தெரியும்.

2. குணநலன்களில் கவலையீனம்

2 பேது 1:5-9 ... *அதிகக் கவனம் ... கூட்டி வழங்குங்கள் ...*
இவையில்லாதவன் ... கண் சொருகிய குருடன்

3. தேவ வல்லமை மீது அவிசுவாசம்

□ 5000 பேரைப் போஷித்த அற்புதத்தைச் சீடர் மறந்தபோது
இயேசு கேட்டது:
''கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா?'' (மாற் 8:13-21)

□ அவிசுவாசத்தினாலும் கீழ்ப்படியாமையினாலும் இஸ்ரவேலர்
தள்ளப்பட்ட நிலை —
... காணாதிருக்கும் கண்கள் ... அந்தகாரப்பட்ட கண்கள்
(ரோ 11:8-10,20,23)

4. பொருளாசை

- ☐ தீர்க்கன் எலிசாவின் வேலைக்காரன் கேயாசியின் இருதயம்
  ''பணம், ஆடைகள், தோப்புகள், தோட்டங்கள், ஆடுமாடுகள்''
  போன்றவை பின்னால் சென்றது (2 இரா 5:25-27)

  இதற்குத் தண்டனையாக அவன் குஷ்டரோகி ஆனது மட்டுமல்ல,
  தனது ஆன்மீகப் பார்வையில் குருடனானான் ...
  ''கர்த்தாவே, இவன் கண்களைத் திறந்தருளும்'' என எலிசா
  ஜெபிக்கவேண்டியதிருந்தது (6:15-17)

- ☐ அப்படியே, பணத்தின் பின்னால் சென்ற தீர்க்கன் பிலேயாம்
  தனது பார்வையை இழந்தான் (எண் 22:25-32).

  ஒரு கழுதை பார்க்க முடிந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை.

5. அறிவற்ற வைராக்கியம்

''தனது அறிவற்ற வைராக்கியத்தினால்''
பவுல் திருச்சபையை நாசமாக்கிக்கொண்டிருந்தார் (அப் 8:3).
விண்ணொளி தாக்கியதால் பார்வையிழந்தார் (9:1-9).

அது சரீரக் கண்களில் பார்வையிழப்பு மட்டுமல்ல,
''நீதிபரரை அவர் தரிசிக்கும்படி'' அவர் கண்களிலிருந்து
செதிள்கள் விழவேண்டியதிருந்தது (9:17,18; 22:11-15)

இறைச்சித்தத்தைக் கவனியாது வெறும் மாம்ச உற்சாகத்தில்
செயல்படுவதைக் குறித்து எச்சரிக்கை! (9:6; 22:14)

6. மக்களது தேவைகள் மீது கரிசனையின்மை

- ☐ உடலுக்கடுத்த உணவைக் குறித்துச் சீடர் பேசிக்கொண்டி
  ருக்கையில், மக்களுடைய ஆன்மீகத் தேவைகளைப் பார்க்க
  ஆண்டவர் அவர்களது கவனத்தைத் திருப்பினார் —

  ''உங்கள் கண்களை ஏறெடுத்து விளை நிலங்களைப் பாருங்கள்''
  யோ 4:30-35

- ☐ ஆகாரம் தேவைதான்,
  ஆனால் உடலுக்கடுத்தவைகளைக் குறித்தே கவலை கொள்வது
  நமது மிஷனரி தரிசனத்தை மங்கச் செய்யும் (மத் 6:31-33).

7. ஆவியின் அபிஷேகத்தை அசட்டை செய்தல்

ஆவியானவர் நமக்குள் தங்கியிருப்பதில் திருப்தி
கொள்ளக்கூடாது; அவரது அபிஷேகம் நாடவேண்டும் —

அப் 2:16,17 ... *என் ஆவியை ஊற்றுவேன் ... தரிசனங்களைக் காண்பார்கள்*

1 கொரி 2:9,10 ... *கண் காணவில்லை ... ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தினார்*

இயேசுவின் இரண்டாம் தொடுதலினாலேயே
அந்தக் குருடனுக்கு எல்லாம் தெளிவாய்த் தெரிந்தது —
மாற் 8:22-25

■ முடிவுரை

நமது குருட்டுத்தன்மையை அறியாதிருப்பது ஆபத்து.
லவோதிக்கேயா சபையின் நிலை அதுதான் (வெளி 3:17).
ஆண்டவரிடம் நமது கண்களுக்கு மறுபடியும் கலிக்கம் (=மருந்து)
கேட்போம் (வச 18).

(16ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

85

‘‘நரை முடி’’

Gray Hairs

(ஓசியா புத்தகத்திலிருந்து பின்மாற்றம் பற்றிய படிப்பினைகள்)

முகவுரை

இறைமக்களின் பின்மாற்றத்தை **ஓசியாவின்** தீர்க்கதரிசனப் புத்தகம் விவரித்துக் காட்டுகிறது; ஆதிநிலையடையவும் அழைக்கிறது. மக்களது உண்மையின்மையிலும் தேவன்பு அழகாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

பாடம்: ஓசியா 7:9

‘‘நரைமயிரும் அவனில் தெளித்திருக்கிறது,
அவனோ அதை அறியாதிருக்கிறான்’’

வெளிப்படையான பின்மாற்றத்தைவிட வெளியே தெரியாத பின்மாற்றம் எவ்வளவு ஆபத்து என்பது இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

(அ) ‘‘நரை முடி’’ என்பது எவற்றைக் குறிக்கிறது?

1. ஆன்மீக விபசாரம் (Spiritual adultery)

ஓசி 1:2 ... *தேசம் கர்த்தரை விட்டு விலகிச் சோரம்போயிற்று.*
2:2,13 ... *வேசித்தனங்கள் ... என்னை மறந்து ...*
தனது நேசர்கள்
7:8 ... *அந்நிய ஜனங்களோடு கலப்பு*
யாக் 4:4,5 ... *விபசாரரே, விபசாரிகளே ... உலக சிநேகம்*
தேவனுக்கெதிரான பகை

தேவன் பிரதானமாக விரும்புவது (ஓசி 6:6),
‘‘பலியை அல்ல ... இரக்கம் ... தேவனை அறியும் அறிவு’’

எப்பிராயீமின் பக்தி *‘‘விடியற்காலம் தோன்றி ஒழிந்து போகும் பனியைப்போல்’’* இருக்கிறது (6:4)

உத்தமமின்றிப் *‘‘பிரிக்கப்பட்டிருக்கும் இருதயம்’’* (10:2) —
இருமனம்! ஆதி அன்பு இழப்பு!

2. ஊழல் நிறைந்த செயல்பாடுகள் (Corrupt dealings)

4:1,2 ... *தேசத்தில் உண்மை, இரக்கம், இறையறிவு இல்லை ...*
பொய்யாணை, கொலை, திருட்டு, கட்டுப்பாடின்மை

6:8 ... *அக்கிரமம் ... இரத்தக் காலடிகள் ...*

சகவுறவுகளில் குதர்க்கம் —
எ.கா.) 12:2-4 ... *யாக்கோபு ... தாயின் கர்ப்பத்தில்*
தனது சகோதரனின் குதிகாலைப் பிடித்தான்

3. திருவசன அசட்டை (Neglect of God’s Word)

4:6 ... *என் ஜனங்கள் அறிவை வெறுத்தார்கள் ...*
வேதத்தை மறந்தார்கள்

8:12 ... *என் வேதத்தின் மகத்துவங்களை எழுதிக் கொடுத்தேன்*
... அந்நிய காரியமாய் எண்ணினார்கள்

5:11 ... *தகாத கற்பனையை மனதாரப் பின்பற்றினான்*
(தேவனது கற்பனைகளுக்கு மாறானவை)

4. ஆசீர்வாதங்களால் பெருமை (Pride of Blessings)

2:8,9 ... *நான் தானியம், திராட்சரசம், எண்ணெய், வெள்ளி,*
பொன் கொடுத்தேன் ... பிடுங்கிக்கொள்வேன்.

:12 ... *அத்தி மரங்களை ... திராட்சைச் செடிகளைப் பாழாக்குவேன்.*
அவள் சொன்னது: *‘‘எனது நேசர்கள் கொடுத்த கூலி’’*

4:7 ... *எவ்வளவு பெருகினார்களோ, அவ்வளவாய்ப் பாவம் ...*
அவர்களது மகிமையை இகழ்ச்சியாக்குவேன்

5. தேவபக்தியற்ற தலைவர்கள் (Ungodly Leadership)

4:9 ... *ஜனங்கள் எப்படியோ, ஆசாரியனும் அப்படியே*

8:4 ... *இராஜாக்களை ஏற்படுத்தினர் ... என்னால் அல்ல*

9:7-9 ... *தீர்க்கதரிசிகள் மூடர் ... ஆவி பெற்ற மனிதர் பித்தர் ...*
தீர்க்கதரிசி வேடனுடைய கண்ணி ...

13:10 ... *உனக்கு இராஜாவைக் கொடுத்தேன் ...*
என் கோபத்திலே அவனை எடுத்துக்கொண்டேன்

6. விபசாரப் பாவம் (Sin of adultery)

7:4 ... *எல்லாரும் விபசாரக் கள்ளர்*

:9 ... *அன்னியர் அவன் பலத்தைத் தின்றார்கள்;*
அவனோ அதை அறியான்

எ.கா.) தெலீலாளின் மடியில் சிம்சோன்

7. தகர்ந்த ஜெபப் பலிபீடம் (Broken altar of Prayer)

5:6 ... *ஆடுகளோடும் மாடுகளோடும் போவார்கள் ...*
கர்த்தரைக் காணமாட்டார்கள் ... அவர் விலகினார்

7: 7 ... *என்னை நோக்கிக் கூப்பிடுகிறவன் ஒருவனுமில்லை*

:10 ... *கர்த்தரிடம் திரும்பாமலும், அவரைத் தேடாமலும் ...*

:16 ... *திரும்புகிறார்கள் ... உன்னதமானவரிடம் அல்ல ...*
மோசம் போக்குகிற வில் போன்றவர்கள்

8:13 ... *பலிகளின் மாம்சத்தைப் பலியிட்டுப் புசிக்கிறார்கள் ...*
கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயிரார்.

(ஆ) பின்மாற்றத்தின் விளைவுகள்

இறைமக்கள் எப்படி மாறிவிட்டனர், பாருங்கள் —

- *அடங்காத கிடாரி* ... 4:16
- *பேதையான புறா* ... 7:11,12
- *காட்டுக் கழுதை* ... 8:9
- *பழக்கப்பட்ட கிடாரி* ... 10:11
  (சத்துருவின் *நுகத்தடி)*

(இ) மனந்திரும்ப அழைப்பு

6:1 ... *கர்த்தரிடம் திரும்புவோம் வாருங்கள் ...*
குணமாக்குவார் ... உயிர்ப்பிப்பார் ... எழுப்புவார்

10:12 ... *தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள் ...*
கர்த்தர் நீதியைப் பொழியும்வரை அவரைத் தேடுங்கள்

14:1-3 ... *வார்த்தைகளைக் கொண்டு கர்த்தரிடம் திரும்புங்கள் ...*
எங்களைத் தயவாய் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லுங்கள்

(ஈ) ஆதிநிலையடைதலின் ஆசிகள்

2:15 ... *திராட்சத் தோட்டங்கள் ... நம்பிக்கையின் வாசல்*
... இளவயதில் பாடியதுபோல் பாடுவாள்

:19 ... *நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு*
நியமித்துக்கொள்ளுவேன்.

:22 ... *தானியம் ... திராட்சரசம் ... எண்ணெய்*

6:2 ... *நம்மை உயிர்ப்பிப்பார் ... எழுப்புவார்*

14:4-7 ... *சீர்கேட்டைக் குணமாக்குவேன் ... சிநேகிப்பேன் ...*
பனி ... லீலி புஷ்பம் ... வேர்கள் ... கிளைகள் ... வாசனை

(உ) முடிவான அறிக்கை

14:8 ... *"இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று*
எப்பிராயீம் சொல்லுவான் ... நான் பச்சையான
தேவதாரு மரம் போலிருக்கிறேன்... கனியுண்டாயிற்று"

(56 & 186ஆம் அத்தியாயங்களின் குறிப்புகளையும் படியுங்கள்.)

86

மகிமை விலகும்போது ...

When Glory Departs ...

முகவுரை

ஒரு சபை அல்லது ஊழியம் அல்லது ஊழியனை விட்டு
தேவ மகிமை விலகும்போது, நாம் அதையும் இதையும் செய்து
எல்லாம் நன்றாய்த்தானிருக்கிறதென்று காட்ட முயல்வோம்!

1. சமுதாயத்தில், பிறர் முன்பாக, நமக்கு ஏற்கனவே இருக்கும் ''பெயரைக்'' குறித்துப் பெருமையடித்துக்கொண்டிருப்போம் —

    வெளி 3:1 (சர்தை சபை)

    சாகவிருப்பவற்றைத் திடப்படுத்துங்கள் (வச 2).
    கற்றுக்கொண்டவற்றை நினைவுபடுத்துங்கள் (வச 3).
    உயிரோட்டமும், பயபக்தியும் நிறைந்த சிறுகூட்டத்தினரை விட்டுவிடாது, அவர்களோடு சேர்ந்துகொள்ளுங்கள் (வச 4).

2. பொருளாதார ஆசீர்வாதம்தான் தேவனுக்கு நம்மீதுள்ள பிரியத்தின் அடையாளம் என்று பெருமிதம் கொள்வோம் —

    வெளி 3:17 (லவோதிக்கேயா சபை)

    அனலுமல்ல, குளிருமல்ல எனும் நிலை (திருப்தி/தேக்கம்).
    வெதுவெதுப்பையே அனல் என்று நினைத்துக்கொள்ளுகிறோம்.
    அது நெருப்பு அல்ல, புகை!
    உங்கள் தேவையை உணர்ந்து தேவனிடம் திரும்பிச் செல்லுங்கள் —
    ''பொன்னை என்னிடம் வாங்கிக்கொள்'' (வெளி 3:18)
    மங்கிய பார்வையிலிருந்து சுகம் பெற்றுக்கொள்ளுங்கள் —
    ஆன்மீகக் கூர்மை.
    ஆன்மீக நிதானிப்பறிவு.

3. ஆவியானவர் அங்கே இல்லை என்பதை உணராது, நமக்குப் பலமான கட்டமைப்புண்டு என்று தைரியம் கொள்வோம் —

    2 தீமோ 3:5 ... *தோற்றமுண்டு ... வல்லமை இருக்காது*

    நிர்வாகப் பலத்திலேயே காலந்தள்ளுவது.
    சட்டங்கள், விதிகள், செயல்முறைகளையே சார்ந்திருத்தல்.
    செயல்முறையை மட்டும் மேம்படுத்திக்கொண்டிருப்போம்.

4. புள்ளிவிபரங்களிலேயே பெருமிதம் கொள்ளுவோம்.
    வெற்றிகளும் வசதிகளும் நமது கண்களைக் குருடாக்கிவிடும்.
    செயல் திட்டங்களைக் கூட்டி, புதியவற்றைத் திட்டமிடுவோம்.
    ஆலயத்திற்கு எத்தனை பேர் ஜெபிக்க வந்தார்கள் என்பதைவிட எத்தனை புறாக்கள் விற்கப்பட்டன, எவ்வளவு பணம் புழங்கப்பட்டது என்பதே நமது கவலையாயிருக்கும் —
    மத் 21:12,13 ... *ஜெப வீடு ...*
    ஜெபத்திற்குத் திட்டங்கள் பதிலாகிவிடும்.

5. மக்களைக் கவர்ந்து வைத்துக்கொள்ளப் பரவசங்கள் தேடுவோம்.
    வாலிபரைக் கவர இதைத்தான் பல சபைகள் செய்கின்றன.
    வேதம் கொடுக்கும் அழைப்போ —
    ''தாகம் உள்ளவன் வரக்கடவன்!'' (வெளி 22:17)

6. ''பயபக்தியையும் பரிசுத்த நடுக்கத்தையும்'' கொண்டுவர சடங்காச்சாரங்களைப் பெருக்குவோம்.
    மத் 23:17,19 ... *காணிக்கையா பலிபீடமா?*

7. நமது கூடுகைகளில் அசாதாரணமாக எதுவும் எதிர்பார்க்கமாட்டோம்.
    அற்புத வல்லமையின் வெளிப்பாட்டின்மீது விசுவாசம் குன்றும்.
    எல்லாம் நிகழ்ச்சி நிரல்படிதான்.
    ஒழுங்கு என்ற பெயரில் ஆவியானவரின் அசைவாட்டம் கட்டுப்படுத்தப்படும் (யோ 3:8).

■ *முடிவுரை*

நமக்குத் தெரியுமோ, தெரியாதோ, நமது சபைகள், ஊழியங்கள் பலவற்றின்மீது *''இக்கபோத்''* எழுதப்பட்டாயிற்று (1 சாமு 4:21).
ஊழியரும் மக்களுமாய் நாம் *பரிசுத்த உபவாச நாளை* அறிவித்து தேவன் மறுபடி நம்மைச் சந்திக்கும்வரை மன்றாடுவோம்
(யோவேல் 1 & 2)
அப்பொழுது *''பிந்திய மகிமை'' ''முந்தியதிலும்''* பெரிதாயிருக்கும்
(ஆகாய் 2:3,9)

87

புலம்புவோம், வாரீர்!

A Call to Weep!

முகவுரை

- பெரிய வெள்ளி ஆராதனைகள் — மதியம் 12 முதல் பிற்பகல் 3 வரை.
  கிறிஸ்து எவ்விதம் மரித்தாரென்று விவரிக்கப்படுகிறது.
  பிற்பகல் 3 மணிக்கு ஆலயங்களில் சாவு மணி அடிக்கப்படுகிறது.
  மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

முதலாம் பெரிய வெள்ளியன்று இதுபோல் நடந்தது —
லூக் 23:26-31

சிலுவை வசனங்கள் மீது எத்தனையோ பிரசங்கங்கள்;
இயேசுவின் இந்த அழைப்பு சிலுவையிலறையப்படுமுன் கொடுக்கப்பட்டது. சிலுவையிலறையப்பட்ட அன்று வந்த ஒரே கட்டளை இதுதான்.

- *''எனக்காக அழாமல் ... உங்களுக்காக அழுங்கள்!''*
  வழக்கம்போல், செய்ய வேண்டியதை அல்ல,
  செய்யத் தேவையில்லாததையே செய்கிறோம்!
  கிறிஸ்துவின் செய்தி இன்றும் அதேதான்.
- ''சிரிப்பு எழுப்புதல்'' என்று தோன்றியுள்ளது —
  அடக்க முடியாத சிரிப்பாம் அது!
  பெரும் நகர்களில் ''சிரிப்புக் குழுக்கள்'' (Laughing Clubs) —
  இது ''கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சிக்குப்'' பிசாசின் மாற்று.

நாம் அழவேண்டிய நான்கு காரியங்கள் —

1. நமக்காய் அழுவோம்!

நமது தனி வாழ்விற்காய்ப் புலம்புவோம்.

- நமது பாவங்களுக்காய் அழுவோம் — யோவேல் 2:12,13
  உபவாசம் ... அழுகை ... புலம்பல் ... உடையை அல்ல,
  இதயத்தைக் கிழித்து ... (நாம் இரண்டையும் செய்வதில்லை!)

நாம் நமது ''பாவங்களுக்காக'' அல்ல, பிரச்னைகளுக்காகவே அழுகிறோம் —

2 கொரி 7:8-11 ... *மனந்திரும்புதல்... இரட்சிப்பு... தேவனுக்கேற்ற துக்கம் ... உலகிற்கடுத்த துக்கம்*

நமது பாவங்களுக்காகவும் வெதுவெதுப்பான நிலைக்காகவும் புலம்பாவிடில், பிறர் மீதே குற்றம் கண்டுபிடித்துக்கொண்டிருப்போம்—

தற்பரிசோதனையானது மற்றவர்களை அசட்டை அல்லது கண்டனம் செய்யாது நம்மைக் காக்கிறது —

1965 முதல் அச்சுப் பிழை திருத்தும் எனது பிரச்னை!
மக்களைப் பிழை திருத்துவது நமது அழைப்பல்ல.
உன் கண்ணிலுள்ள ''உத்திரத்தை'' முதலாவது எடுத்துப்போடு (மத் 7:3-5)

எ.கா.) பாவியாகிய அப்பெண் பிறரைவிடத் தனது
பாவ வாழ்க்கையை அதிகம் உணர்ந்தாள் (லூக் 7:36-47).
நேர்த்தியான ''விருந்து'' ... தேவன் விரும்புவது தகன பலியல்ல,
நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இதயம் (சங் 51:16,17)

- நமது இருமனதுக்காய்ப் புலம்புவோம் —
  யாக் 4:7-10 ... *துக்கித்து அழுங்கள் ... பரிசுத்தமாக்குங்கள்*
  ''இருமனம்'' என்றால் ஆன்மீக வாழ்வில் மனவுறுதியின்மை,
  வசதிக்கேற்றாற்போல் வளைந்துகொடுப்பது.
  ''இரு நினைவுகள்'' — மதில்மீது பூனை! (1 இரா 18:21)
- நமது பொருளாசைக்காய்ப் புலம்புவோம் —
  யாக் 5:1 ... *அழுங்கள் ... அலறுங்கள் ...*
  பின்னணி: 4:13-17 ... *வியாபாரம் ... அவருக்குச் சித்தமானால் ...*

நாம் இவ்வித அழுகையோடு தேவனிடம் திரும்பினால்
அவர் புத்துணர்வூட்டும் நதியில் நம்மை நீராட்டுவார் —
எரே 31:9 ... *நதியோரத்தில் நடந்து ...*

2. நமது பிள்ளைகளுக்காய் அழுவோம்!

- எரேமியாவின் காலத்திலிருந்தே இந்த அழைப்பு உண்டு —
  புல 2:18,19 ... *கண்ணீர் விடு ... கண்களுக்கு ஓய்வு கொடாதே ... கூப்பிடு ... ஊற்றிவிடு ... பிள்ளைகள் ... தெருக்கள் ...*

எரேமியா ஒரு புலம்பல் தீர்க்கதரிசி;
அவனிலிருந்தவை போன்ற சில இயேசுவில் காணப்பட்டன;
எனவேதான் அவர் *''தீர்க்கதரிசியானவராகிய''* எரேமியாவோ
என்று சிலர் நினைத்தனர் (மத் 16:14)

- சூசன்னா வெஸ்லி — 19 பிள்ளைகள் —
  படுக்கையருகே தினமும் ஜெபம்
  ஜான் வெஸ்லி — 15ஆவது பிள்ளை — எழுப்புதல் வீரர்.
  சார்ல்ஸ் வெஸ்லி — 18ஆவது — 7270 பாடல்கள் இயற்றியவர்.

- எனது தாயார் நள்ளிரவில் கண்ணீரோடு ...
  எனது தாயார் மட்டுமல்ல,
  நாசரேத்தில் எங்கள் தெருவிலுள்ள எத்தனையோ தாய்மார்.

- பிள்ளைகளது ''இரட்சிப்பிற்காய்'' ஜெபியுங்கள்.
  பொல்லாங்கனிடமிருந்து அவர்கள் காக்கப்பட ஜெபியுங்கள்.
  அவர்களது நாட்கள் நமதைவிடக் கொடிதாயிருக்கும் ...
  லூக் 23:29 ... *நாட்கள் வரும் ...*
  அவர்கள்மீது பொறாமை அல்ல, பரிதாபமே வரட்டும்!
  இப்பொழுது அவர்களுக்காய்ப் புலம்பாவிடில்,
  நாளை புலம்ப வேண்டியதிருக்கும்.

  மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காவிடில்தான்
  பிள்ளைகளுக்காய் இப்பொழுதெல்லாம் அழுகிறோம்!
  அப்பப்பா, எவ்வளவு பின்மாற்றம்!

- அவர்களது உடல் நலம், பொருளாதாரம் ஆகியவற்றைவிட
  ஆன்மீக ஆரோக்கியமே உங்கள் பெரிய கரிசனை என்பது
  அவர்களுக்குத் தெரியவேண்டும்.
  இங்கு நீங்கள் நடிக்க முடியாது!

- இரட்சிக்கப்படாத நமது குடும்ப உறுப்பினர்களுக்காகவும்
  ஜெபிக்கவேண்டும் —
  இல்லையேல் பரலோகில் நம்மோடு சேரமாட்டார்கள்;
  நரகம் சென்றுவிடுவர்!

3. திருச்சபைக்காய் அழுவோம்!

- இன்றிருக்கும் சபை அன்றிருந்த சபை போல் அல்ல;
  இன்றிருக்கும் சபை இருக்கவேண்டிய நிலையிலும் இல்லை.

எந்தச் சபைப்பிரிவாயினும், திருச்சபையானது திருமறையின்
தரத்திலிருந்து எவ்வளவோ இறங்கிவிட்டது.

- பின்வாங்கிப்போன இறைமக்களுக்காய்ப் புலம்பும்படி பைபிள்
  அடிக்கடி நம்மை அழைக்கிறது —

— எரே 9:1 ... *ஆ, என் தலை தண்ணீரும் ... கண்கள்*
கண்ணீரூற்றுமானால் ... கொலையுண்ட
என் மக்களுக்காக இரவும் பகலும் அழுவேன்

13:17 ... *(திருச்சபையின் மேட்டிமைக்காக — வச 9,15)*
மறைவிடங்களில் கர்த்தருடைய மந்தைக்காய்
அழுது கண்ணீர் ...
14:17 ... *என் ஜனம் ... வேதனை ... இரவும் பகலும் கண்ணீர்*

— தானியேலின் இதய பாரம்
தானி 7:28 ... *நினைவுகள் ... முகம் ... மனது ...*
8:27 ... *சோர்பு ... நோயுற்று நலிந்து ...*
9:3 ... *உபவாசம் ... இரட்டு ... சாம்பல்*
இவையெல்லாம் கிரேக்கு-லத்தீன் போலிருக்கிறதோ?

— எஸ்றா 10:1 ... *அழுது ... அறிக்கையிட்டு ... மக்கள் அழுதார்கள்*
பாஸ்டர்களும் பிரசங்கிமாரும் அழாவிடில்,
மக்கள் அழமாட்டார்கள்!
எனவேதான், யோவேல் 2:17 ... *ஆசாரியர்கள் ...*

பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல, புதியதிலும் ...

— பவுல்: அப் 20:19 ... *தேவனைக் கண்ணீரோடு சேவித்தேன்*
:31 ... *கண்ணீரோடு புத்திசொல்லி ...*

எ.கா.) நெறி தவறிய ஒருவனைப்பற்றி எழுதுகையில் ...
2 கொரி 2:4 ... *கண்ணீரோடு எழுதினேன்*

எ.கா.) பொருளாசைக்காரப் பிரசங்கிமாரைப்பற்றி எழுதுகையில் —
பிலி 3:17-19 ... *கண்ணீரோடு சொல்லுகிறேன்.*

— தீமோத்தேயு ... பவுலின் உடன் ஊழியனாய் இதே ஆவியைப்
பெற்றான்.
2 தீமோ 1:3 ... *உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி ...*

— இயேசு எருசலேமியரை அடித்துத் துரத்துமுன்
எருசலேமிற்காய்க் கண்ணீர் விட்டார் (லூக் 19:41).
கண்ணீர் குறைந்தால் கலக்கம் கூடும்! (No tears, only fears!)

- லியோனார்டு ரேவன்ஹில் ...
  ''எழுப்புதல் தாமதிப்பதேன்?'' ... என்ற நூலின் ஆசிரியர்
  அமெரிக்காவில் அவர் வீட்டிற்குச் சென்றேன் (1985).
  களைப்பாய்க் காணப்பட்டார்:
  அவர் சொன்னது: ''நேற்றிரவு தூங்கவில்லை,
  அழுதுகொண்டேயிருந்தேன்.''

எனவேதான் அவர் எழுதிய வாசகங்கள் —

+ சபை போகிற போக்கில்தான் சமுதாயம் போகும்.
+ நோயுற்ற சபை செத்துக்கொண்டிருக்கும் உலகை இரட்சிக்க முடியாது.
+ உலகம் இருளில் தூங்குகிறது; சபையோ வெளிச்சத்தில் தூங்குகிறது.
+ சபையானது ஆவியின் அக்கினியை இழந்ததாலேயே, உலகம் நரக அக்கினிக்குள் விரைகிறது.
+ இன்று சபைக்கு இருப்பது மேலறை அக்கினி அல்ல, சாப்பாட்டறை புகை!
+ சராசரியானது மிஞ்சியதாய்த் தெரியுமளவு நாம் சராசரியிலிருந்து சரிந்துவிட்டோம்!

- மங்களூரைச் சேர்ந்த அகஸ்டின் சாலின்ஸ் (1914-1985) அவர்கள்
  இன்னொரு புலம்பல் தீர்க்கதரிசி.
  அவர்தான் Ambassadors For Christஇன் நிறுவனர்.

  கர்த்தாவே, இவ்விதத் தீர்க்கர்களைத் தாரும்!
  கர்த்தாவே, கண்ணீர் தாரும்!

4. உலகிற்காய் அழுவோம்!

அதாவது, இரட்சிக்கப்படாத கோடிக்கணக்கானோருக்காக.

- மிகப் பழமையானதோர் எடுத்துக்காட்டு —
  சங் 119:136 ... *வேதத்தை மனிதர் காத்து நடவாதபடியால் ... நீர்த்தாரைகள்*
- கண்ணீரோடு பிரசங்கம் —
  பவுல்: சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவையே —
  1 கொரி 2:2,3 ... *பலவீனம் ... நடுக்கம் ... பயம்*

  சிலுவையிலறையப்பட்ட மகிபனை
  சிலுவையிலறையப்பட்ட மனிதனே பிரசங்கிக்கமுடியும்.

இஸ்ரவேலருக்காய்ப் பவுலின் இடைவிடா துக்கம் —
ரோ 9:1,2 ... *மிகுந்த துக்கம் ... இடைவிடா மனவேதனை*
10:1 ... *இருதயத்தின் விருப்பம்*

- *கண்ணீரோடே விதைக்க* அழைப்பு ...
  சங் 126:5,6 ... *களிப்போடு அறுப்பு*
- ஊழியத்தில் கனியின்மையால் விரக்தியடைந்திருந்த உடன்
  ஊழியருக்கு வில்லியம் பூத்: ''புலம்பிப் பாருங்கள்!''
- நியாயத்தீர்ப்பு வருகிறது (லூக் 23:29,30)
  ... மலடிகள் ... மலைகள் ... எங்கள் மீது விழுங்கள்
  அதாவது, தேவ கோபம்

  ஊழல் தலைவிரித்தாடுகிறது.
  சத்தியம் வீதிகளில் சிதறிக் கிடக்கிறது.
  நீதி நியாயம் ஒழிந்துபோயிற்று.
  ''அக்கிரமத்தின் பாத்திரம்'' நிரம்பி வழிகிறது!
- நாட்டில் தேர்தல் வரவிருக்கிறது —
  யார் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று ஜெபிப்பதற்குத்
  திருமறையில் நேரடியான போதனை இல்லை.
  ''கர்த்தாவே, எங்களை மாற்றும்'' என்பதே நமது
  கதறலாயிருக்கவேண்டும்.

■ *முடிவுரை*

எங்களைப் புலம்பச் செய்யும் எழுப்புதல் தாரும்!
எங்களுக்குக் கண்ணீர் தாரும்! (Give us tears!)

88

எழுப்புதல் முகாம்களுக்காய் ஜெபிப்பது எப்படி?

How to Pray for Revival Camps

முகவுரை

- கர்த்தருடைய ஜெபத்தில் ஏழு விண்ணப்பங்களில் ஒன்றுதான் உடலுக்கடுத்தது (மத் 6:9-13).

  இதுதான் ஜெபத்தில் நமது விகிதாச்சாரமாயிருக்கவேண்டும் — எழுப்புதல் முகாம்களுக்கான பொருளாதார, பௌதீகத் தேவைகள் யாவை?

  பந்தல் அமைப்பு, அரங்கம்
  உணவுக் காரியங்கள்
  ஒலி-ஒளி அமைப்பு
  பணத் தேவைகள்
  பயணப் பதிவுகள்
  தங்கும் வசதிகள்
  தட்பவெட்ப நிலை முதலியன

''முதலாவது இறையரசையும் அவரது நீதியையும் தேடுங்கள்'' என்று நாம் இயேசுவானவரால் போதிக்கப்பட்டிருக்கிறோம்.

ஜெபத்தையும் உபவாசத்தையும் பற்றிப் போதித்த அதே அத்தியாயத்தில் (மத் 6) இது வருகிறது.

எவைகளுக்காய்ப் பிரதானமாய் ஜெபிக்கவேண்டும்? —

1. பங்கேற்போரின் எதிர்பார்ப்பு (Expectation of the delegates)

மக்களிடம் ஆத்துமப் பசிதாகத்தைவிட உலகச் சிந்தை, பொருளாதாரக் கவலை ஓங்கி நிற்கின்றன.

பங்கேற்போரிடம் பசியில்லையேல், ஒன்றும் நடக்காது —

☐ மத் 5:6 ... *நீதியின்மேல் பசிதாகம்*

☐ ஏசா 44:3 ... *தாகமுள்ளவன்மேல் தண்ணீர் ... ஆவி ... ஆசீர்வாதம்*

☐ வெளி 22:17 ... *தாகமுள்ளோருக்குத்தான்* ''அழைப்பு.''
இவ்வித மக்களையே தேவன் கொண்டுவர ஜெபியுங்கள்.

☐ அப்படியே, இயேசு: *''ஒருவன் தாகமாயிருந்தால் ...''* (யோ 7:37-39)

☐ அப் 10:33 ... கொர்நேலியு குழுவினரின் எதிர்பார்ப்பு

☐ எரே 4:3 ... *தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள் ... முட்கள் ...*
— வருவதற்கு முன்னரே மக்களது இதயங்கள் ஓரளவு ஆயத்தப்பட்டிருக்கவேண்டும்.

☐ இந்த விருப்பத்தைத் தருபவரும் தேவனே (பிலி 2:13)

2. திருவசன வியாக்கியானம் (Exposition of the Word)

☐ எஸ்றா 7:10 ... *ஆராயவும் ... செய்யவும் ... உபதேசிக்கவும்*

☐ 2 தீமோ 2:6 ... *பிரசங்கியார்தான் முதல் பயனாளி*

☐ எரே 31:14 ... *ஆசாரியர்கள் கொழுமை ... மக்கள் நன்மை*
(ஊழியர் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களை ஆசீர்வதிக்கவேண்டும்.)

☐ 1 கொரி 2:12,13 ... *அறிந்து ... பேசி ... ஞான வார்த்தைகள்*

☐ 1 கொரி 2:3; 2 கொரி 7:5 ... ஊழியனின் மனநிலை & உடல்நிலை
''பலவீனம் ... நடுக்கம் ... போராட்டங்கள்''

☐ எபே 6:19 ... *தைரியம் ... வாக்குவன்மை ...*

☐ எண் 24:3,4 ... இறைச்செய்தியாளனின் சித்திரம் (அப்படியே, வச 15,16)

☐ தடையின்றி வசனம் கடந்துவர ஜெபியுங்கள் (2 தெச 3:1)

☐ இசைப்போர், பாடகருக்காகவும் ஜெபியுங்கள்.

3. பங்கேற்போர்க்குக் கண்திறப்பு
(Enlightenment of the delegates)

☐ எபே 1:16-18 ... *ஞானம் ... வெளிப்பாடு ... மனக்கண்கள்*

☐ 1 கொரி 2:14,15 ... *இயல்பான சுபாவம் ... ஆவிக்குரியவன் ...*

☐ அப் 16:13,14 ... *லீதியாள்* — அங்கு கூடிவருகிற பெண்களுக்காய் அப்போஸ்தலர்கள் ஜெபித்திருப்பார்கள் (வச 13)

☐ சங் 119:18 ... *வேத அதிசயங்கள் ... கண்களைத் திறந்தருளும்*

☐ லூக் 24:44,45 ... வேத வாக்கியங்களை அறியும்படி அவர்கள் *கண்களைத் திறந்தார்.*

☐ ஏசா 50:4,5 ... நான் கீழ்ப்படியும்படிக் கர்த்தர் *என் செவிகளைத் திறக்கிறார்* (x முரட்டாட்டம்)

☐ யோ 6:44,45 ... *பிதா இழுத்துக்கொள்ளாவிடில் ... அவரால் போதனை*

4. *பங்கேற்போர்மீது அருள்* (Empowerment of the delegates)

வெறும் வேத அறிவு அல்ல, ஆசீர்வாதமான மழை!

☐ அப் 10:44 ... *பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் ... ஆவியானவர்*

☐ அப் 2:37 ... ஆழ்ந்த பாவ உணர்வு
(எபி 4:12 ... *இருபுறம் கருக்குள்ள பட்டயம்)*

☐ லூக் 24:32 ... இதயம் கொழுந்துவிட்டெரியும் அனுபவம்

☐ உபா 32:1,2 ... *உபதேசம் ... மழைத்துளி ... பனி ...*
— புத்துணர்வூட்டும் அனுபவம்.
அப்படியே, 2 சாமு 23:2,4 ... *சூரிய உதயம் ... மழை*

☐ யோபு 29:21-23 ... நடைமுறை ஆலோசனை
— இனிக் கேள்வியில்லை, குழப்பமில்லை

☐ ஏசா 55:10,11 ... *விதை ... ஆகாரம் ... புசிக்கிறவன்*

☐ ரோ 15:4 ... *திருவசனத்தினால் உண்டாகும் ஆறுதல்*
— நிறையப் பிரச்னைகளோடு மக்கள் வருவர்.

மனத்தொய்விலிருந்து தூக்கியெடுப்பு
சங் 119:92 ... *துக்கம் ... வேதம் ... மனமகிழ்ச்சி*

மொத்தத்தில், திருவசனத்தால் உயிர்மீட்சியடையும் அனுபவம் —
சங் 119:25,107,154

5. *பங்கேற்போர் வாழ்வில் அமுலாக்கம்*
(Enforcement by the delegates)

☐ யாக் 1:21-25 ... *ஏற்றுக்கொள்ளுங்கள் ... செய்கிறவர்கள்*
பிரசங்கங்களை ரசிப்போர்தான் இன்று அதிகம்!
ருசிப்போரோ குறைவு!
அதின்படி நடப்போரோ இன்னும் குறைவு! (ரோ 2:13)

☐ எபி 6:7,8 ... *மழை ... கனிகளா முட்களா?*

☐ யோ 8:30,31 ... விசுவாசிப்பது மட்டுமல்ல, வசனம் *நிலைத்திருப்பது*
= நிலை தவறாத நடக்கை
அப்படியே, கொலோ 3:16,17 ... *வாசம்பண்ணட்டும் ... எதைச் செய்தாலும் ...*

☐ உற்சாகமாய்க் கேட்பர்; ஆனால் அதின்படிச் செய்கிறதில்லை.
எசேக் 33:30-32
— பிறரைக் கூட்டியும் வருவார்கள்! (வச 30)

☐ *மனந்திரும்புதலை ''அருளிச் செய்வதே''* தேவன்தான்
அப் 11:18 (அவிசுவாசிகள்)
2 தீமோ 2:25 (விசுவாசிகள்)

6. *இறையரசின் விரிவாக்கம்* (Expansion of the Kingdom)
(பங்குபெறுவோர் வெளியே பகிர்வதின்மூலம்)

☐ 1 தெச 1:6-8 ... *வசனம் ... மாதிரிகள் ... எங்கும் பிரசித்தம் ...*
முகாமியர் ஒவ்வொருவரும் இப்படியிருக்கவேண்டும்.

☐ எசேக் 34:26,27 ... *மேட்டின் சுற்றுப்புறம் ... மரங்கள் ... கனிகள்*
(ஒப்பிடுக: யோ 7:37-39)

☐ யோ 15:1-8 ... வசனத்தின்மூலம் கனி ... *''மிகுந்த''* கனி

☐ கொலோ 3:16... *வசனம்... நிறைவாய் வாசம்... ஒருவருக்கொருவர்*
அதாவது, விசுவாசிகளின் பக்திவிருத்தி

திருவசனப் போதனையில் நமக்குக் கிடைத்தவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளாவிடில் அவற்றை இழந்துவிடுவோம் —

விதைக்கிறவனின் உவமையைச் சொன்னவுடன்
இயேசு கொடுத்த எச்சரிப்பு —
மத் 13:12 ... *உள்ளவன் ... இல்லாதவன் ...*
(அதாவது பகிர்பவன் ... பகிராதவன்)

கூட்டங்களில் பெற்றுக்கொள்ளும் ஆழ்ந்த சத்தியங்களை மக்கள் வெகு விரைவில் இழந்துவிடுவது இதனாலேயே.

7. ***கர்த்தருக்கு மகிமை*** (Exaltation of the Lord)

ஊழியங்கள் அத்தனையின் முடிவும்
தேவ மகிமையாயிருக்கவேண்டும் —

- ☐ யோ 17:4 ... *மகிமைப்படுத்தினேன் ... வேலையை முடித்தேன்*
- ☐ ரோ 15:9 ... *புறவினத்தார் ... மகிமைப்படுத்துகிறார்கள்*
- ☐ பிலி 2:9-11 ... *எல்லா நாவும் ... முழங்காலும் ... பிதாவின் மகிமை*
- ☐ அப் 12:21-24 ... *ஏரோது ... ஜனங்கள் ... தேவ வசனமோ ...*

■ ***முடிவுரை***

இராஜ்யமும்
வல்லமையும்
மகிமையும்
என்றென்றும்
உம்முடையவைகளே!

அறிக்கைப் பாடல்:

உம்மாலன்றி என்னாலாகும்
என்று சொல்ல ஒன்றுமில்லை

சிறுவன் கை ஐந்தப்பம் இருமீன்கள் உண்டு;
எடுத்தாசீர்வதித்து அளித்திடும் தேவா!

— V. எசேக்கியா பிரான்சிஸ்

89

துவக்க உற்சாகத்தைத் தக்கவைப்பது எப்படி?

How to maintain the Initial Enthusiasm

முகவுரை

எந்த வேலையிலும், நாளாவட்டத்தில், முதலிலிருந்த பரபரப்பையும் உற்சாகத்தையும் இழப்பது சகஜம்.

திருமறையோ அதே அர்ப்பணிப்பையும் உற்சாக ஈடுபாட்டையும் கடைசிவரை காத்துக்கொள்ள நம்மை அழைக்கிறது.

''ஆதி அன்பு'' என்பதற்குக் குறைவான எதுவும் தேவனுக்குத் துக்கம்தான் (வெளி 2:4)

கிறிஸ்தவ வாழ்விலும் பணியிலும் துவக்க உற்சாகத்தைத் தக்கவைப்பது எப்படி என்று பார்ப்போம் —

1. ***நிலையான கீழ்ப்படிதல்*** (Consistent Obedience)

எகிப்தைவிட்டுப் புறப்பட்ட துவக்கக் கட்டங்களில் இஸ்ரவேலர் நன்கு கீழ்ப்படிந்து நடந்தனர். காலம் செல்லச் செல்ல தேவனுக்குக் கீழ்ப்படியாது போயினர் —

எபி 3:14-19 ... *முடிவுவரை உறுதி ... அவர் சத்தம் கேட்டால்*
இதயக் கடினம் வேண்டாம் ... 40 ஆண்டு ...
தேவனது கோபம் ... கீழ்ப்படியாதோர் ...

பிலி 2:12,13 ... *எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே ...*
இப்பொழுது அதிக நடுக்கத்தோடு ...
இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்

ரோ 6:22,23 ... *தேவனுக்கு அடிமை... முடிவு நித்திய ஜீவன்*

''இரத்தப் பரிசோதனைக்குச்'' செல்வதுபோல அவ்வப்போது ''கீழ்ப்படிதல் பரிசோதனை'' செய்துகொள்ளுங்கள்.
கொழுப்பு (திமிர்) அதிகமானால் ஆபத்து —

எ.கா.) யெஷுரன் (உபா 32:15)
கொழுத்துப்போய் உதைத்தான் ... தேவனை விட்டு ...
இரட்சிப்பின் கன்மலையை அசட்டை

கிரமமான வேதத்தியானமும் கற்கும் சத்தியங்களைத் தாமதியாது அப்பியாசிப்பதுமே பாதுகாப்பு.

எ.கா.) C.T. ஸ்டட் ... பார்வை மங்கியபோதும், கீழ்ப்படியாதுவிட்ட வசனப்பகுதி உண்டோ என்று பைபிளில் தேடிக்கொண்டிருந்தார்.

2. தளராத ஜெப வாழ்வு (Steadfast Praying)

எளிதில் சோர்புறக்கூடிய ஆன்மீகப் பயிற்சிகளில் ஜெபம் ஒன்று.

எனவேதான் இயேசு சொன்னது —
லூக் 18:1 ... *''சோர்ந்துபோகாமல்'' எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும்*

பவுலின் போதனையும் இதைப் போன்றதே —
ரோ 12:12 ... *ஜெபத்தில் ''உறுதியாய்த்'' தரித்திருங்கள்*

நமது தேவைகளுக்காகத் திரும்பத் திரும்ப ஜெபிப்பது மட்டுமல்ல, ''ஜெப ஆவியோடு'' வாழ்வது —
கொலோ 4:2 ... *''இடைவிடாமல்'' ஜெபம்பண்ணுங்கள்*
எப்படி? *ஸ்தோத்திரத்துடன் விழித்திருப்பதின்* மூலம்

3. நிறுத்தாது சாட்சி பகர்தல் (Relentless Witnessing)

விசுவாசிகளில் அநேகர் ஆத்தும தாகத்திலும், ஆத்துமாதாயப் பணியின் உற்சாகத்திலும் குளிர்ந்துபோகின்றனர்;
திருமறை தரும் புத்திமதியோ —

பிர 11:6 ... *காலையிலே உன் விதையை விதை,*
மாலையிலே உன் கையைத் தளரவிடாதே

நீங்கள் மனந்திரும்பிய நாட்களில் சாட்சி பகிர்வதில் இருந்த விறுவிறுப்பை நினைவுபடுத்திப் பாருங்கள்.

''மரணம்வரை'' அதில் தீவிரமாய் இருக்க தேவன் அழைக்கிறார்—
வெளி 2:10 ... *பாடுகள் ... காவல் ... சோதிப்பு ... உபத்திரவம் ... மரணம்வரை உண்மையாயிரு*

அப் 1:8இலுள்ள *''சாட்சிகள்''* என்பது *''இரத்தசாட்சிகள்''* எனப் பொருள்படும் —
அதாவது, சாட்சி பகருதல் நம்மை இரத்தசாட்சிகளாக்கினாலும்!

கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரும் வாழ்க்கை நிச்சயமாய் நமக்கு உபத்திரவத்தையும் மதிப்பிழப்பையும் கொண்டுவரும் —
மத் 10:22,23 ... *எல்லாராலும் வெறுப்பு ... கடைசி வரை நிலைநிற்பவன் ... மனுமகன் வருமுன் ...*

4. பிறர்மீது தணியா அன்பு (Undying Love for others)

மக்கள்மீது அன்பு வைத்து நெருங்கிப்பழகும்போது அவர்களது குறைகள், குற்றங்கள் அதிகம் தெரியும்;
இதனால் நமது அன்பு தணிந்து விடுகிறது.

இயேசுவோ —
யோ 13:1 ... *முடிவுவரை சீடரிடம் அன்பு வைத்தார்.*
அவர்கள் அவர் எதிர்பார்த்தபடி இல்லாவிடினும்!

உண்மையான அன்பு *''ஒருபோதும் ஒழியாது''* (1 கொரி 13:8)!
குறிப்பாக, நேசிக்கப்படமுடியாதோரை நேசித்தல் —
எ.கா.) யூதாஸ் (யோ 13:2 முதல்)

யோ 13:1ஐ எபி 13:1 உடன் ஒப்பிடுக —
*''சகோதர சிநேகம் **நிலைத்திருக்கட்டும்**''*

''எதிர்பார்த்தபடி நடந்ததால்'' என்றல்ல,
''எதிர்பார்த்தபடி நடக்காவிட்டாலும்'' மக்களை நேசிக்கவேண்டும்.

இவ்வுலகில் நன்றிக்கடன் கிடைக்காது;
நித்தியத்தின் பரிசுகளையே எதிர்பார்த்து வாழுங்கள்!

5. கொடுத்தலில் பெருகுதல் (Ever-increasing Giving)

உற்சாகமாய்க் கொடுக்கிறவர்கள் தங்களைக் கருமிகளோடு ஒப்பிடுவதால் நாளாவட்டத்தில் கணக்குப் பார்க்கத் துவங்குகின்றனர்.

கொடுப்போம், கொடுப்போம்,
நம்மைப் பாதிக்கும்வரை கொடுப்போம்!

2 கொரி 8:10,11 ... *ஆரம்பம் ... விருப்பம் ... நிறைவேற்றம் ...*

இயேசுவானவர் கொடுப்பதில் கூடிக்கொண்டேயிருந்தார் —

தமது பரலோக மகிமையைத் துறந்தார்;
தமது உரிமைகளை, சிலாக்கியங்களை விட்டார்;
தமது வசதிகளை இழந்தார்;
முடிவாக,
தம்மையே கொடுத்துவிட்டார்!

''செல்வந்தராய் இருந்தார் ... தரித்திரர் ஆனார்'' (2 கொரி 8:8,9)

கிறிஸ்தவ வாழ்வின் துவக்கக் காலத்தில்,
நாம் கொடுப்பதால் ஆசிகள் உடனுக்குடன் கிடைக்கலாம்.
இது குழந்தைப் பருவம்.
எ.கா.) தம்மீதுள்ள விசுவாசத்தைத் துறந்து விக்கிரகங்கள் பின்னால் சென்ற இஸ்ரவேலரைத் தேவன் நயங்காட்டி அழைத்தார்.

நாம் வளரும்போதோ,
கொடுப்பது என்பது தொழுகையாகிவிடவேண்டும்.
தரித்திரமாயினும் கொடுப்பதைக் கூட்டிக்கொண்டிருக்கவேண்டும் —
2 கொரி 8:1,2 ... *கொடிய தரித்திரம் ... மிகுந்த உதாரத்துவம்*

6. சலிக்காத சேவை (Untiring Service)

எபி 6:10-12 ... *முன்பு தொண்டு ... இப்போதும் தொண்டு ... அசதியாயிராமல் ... இறுதிவரை அதே ஆர்வம்*

எளியவர்க்கும் குறைவிலிருப்போர்க்கும் அளவுக்கதிகமாக
நாம் எப்பொழுதும் உதவிட முடியாது.
நாட்டில் எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை —
உபா 15:11

இயேசு: *''தரித்திரர் எப்பொழுது உங்களோடிருக்கின்றனர்''* (மாற் 14:7)
கேள்வி: நாம் எப்பொழுதும் தரித்திரரோடு இருக்கிறோமா?

நமக்கு இவ்வளவு போதும் என்றவுடன் தேவன் நம்மை
ஆசீர்வதிப்பதை நிறுத்திவிட விரும்புகிறோமோ?

அப்படியே, எளியவர்க்கு உதவிக்கொண்டேயிருங்கள்.

ஒரு சில நாணயங்களை நாம் அவன் தட்டில் கூடுதலாய்ப்
போட்டுவிடுவதால் பிச்சைக்காரன் எவனும் செல்வந்தனாகான்!

கேட்காதீர்: ''உலகிலுள்ள எல்லாருக்கும் நான் உதவ முடியுமோ?''
அன்னை தெரசா: ''ஒவ்வொருவருக்காய் உதவுங்கள்!''

7. கிறிஸ்துவின் மறுவருகைமீது குறைந்துபோகாத விருப்பம்
(Undiminishing Love for Christ's Return)

2 தீமோ 4:8 ... *இதுமுதல் ... பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் ...*
காத்திருப்பதில் சோர்ந்துபோகாதீர்.

இறைவாக்குகளைக் கேலி செய்வோரோடு சேராதீர் —
2 பேது 3:9,12-14 ... *தமது வாக்கு குறித்துக் கர்த்தர் தாமதமாயிராமல் ... பொறுமை ... காத்திருக்கிறோம்*

கிறிஸ்துவின் மறுவருகைமீது விருப்பம் என்றால்,
இவ்வுலகில் அவரைவிட நமக்குக் கவர்ச்சியானது எதுவுமில்லை!

இப்பூவுலகு எரிந்து சாம்பலாகும் (வச 12).

பைபிளின் இறுதி ஜெபத்தை ஏறெடுத்துக்கொண்டேயிருங்கள் —
வெளி 22:20 ... *''கர்த்தராகிய இயேசுவே, வாரும்!''*

(''உமது இராஜ்யம் வருவதாக!'' ... மத் 6:10)

■ *முடிவுரை*

ஆதி அர்ப்பணிப்பை நாம் காத்துக்கொள்ள முயன்றால்,
தேவனருளும் வாக்கு —

எசேக் 36:11,
*''பூர்வ நாட்களில் நீங்கள் இருந்த நிலைமையில்
நான் உங்களை நிலைப்படுத்தி, உங்கள் முந்தின சீரைவிட
உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வேன்!''*

90

எழுப்புதல் அணைவது ஏன்?

Why Revival dies

முகவுரை

- எழுப்புதல் என்பது பரத்திலிருந்து விழும் **அக்கினி**.
  — அதை அணைக்கக்கூடாது.
- எழுப்புதல் என்பது உன்னதத்திலிருந்து ஊற்றப்படும் **அருள்மாரி**.
  — அதை வீணாக்கக்கூடாது.
- எழுப்புதல் என்பது தேவனிடமிருந்து புறப்பட்டு வரும் **நதிகள்**.
  — அவற்றைத் தடுக்கக்கூடாது.

பரிசுத்த ஆவியானவரே எழுப்புதலுக்குக் காரணர்;
அவரை எதிர்க்கவோ, துக்கப்படுத்தவோ, அவித்துப்போடவோ கூடாது.

நடபடிகள் & எசேக்கியேல் 36-37இலிருந்து படிப்பினைகள் —

1. மனித வணக்கம் (Idolisation)

தேவன் *''தமது நாமத்திற்காகவே''* எழுப்புதல் அனுப்புகிறார்
(எசேக் 36:21,22)

எழுப்புதலில் அவர் சில மனிதரைப் பயன்படுத்துவார்;
அவர்களுக்குக் கதாநாயக வணக்கம் செலுத்தக் கூடாது.

அப் 3:12,13 ... பேதுரு: *நீங்கள் ''எங்களைப்'' பார்க்கிறதென்ன?*
10:25,26 ... கொர்நேலியுவிடம்: *நானும் மனிதன்தான்!*
14:11-15,18 ... பவுல் & பர்னபா: *ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?*

எழுப்புதல் பிரதானமாக நம்மைப் பரவசப்படுத்த அல்ல;
தேவனது நாமம் பரிசுத்தப்படுவதற்காகவே! (எசேக் 36:21,22)

தேவன் தமது மகிமையை யாரோடும் பங்கிட மாட்டார் —
ஏசா 42:8; 48:11

D.L. மூடி: ''ஆண்டவரே, நான் ஒருபோதும் உமது மகிமையைத் தொடாதிருக்கட்டும்!''

பிரசங்கம் முடிந்ததும்,
சபையார் சொல்லவேண்டியது: ''என்னே இரட்சகர்!''
''என்னே பிரசங்கியார்!'' என்றல்ல

''நானே கர்த்தர்'' (எசேக் 37:6; 36:38)
மார்க்கவுலகப் பந்தா, பகட்டுக்கு எதிர்ப்பு தெரிவியுங்கள்.

வெளிப்படுத்தல் புத்தகத்தில் இரு முறை யோவானின் தவறு —

வெளி 19:10	தூதன் ''தீர்க்கதரிசனம்'' சொன்னான்
22:8,9	என்பதற்காக!

நல்லவேளை 23ஆம் அத்தியாயம் இல்லை!

எசேக்கியேல் புத்தகத்தின் கடைசி வரி —
''யேகோவா-ஷம்மா'' = ''**கர்த்தர்** அங்கே இருக்கிறார்'' (48:35)
வேறே கவர்ச்சிக்கு இடமில்லை!

2. சபைப் பிரிவினைகள் (Denominationalisation)

எலும்புப் பள்ளத்தாக்கின் எழுப்புதலை அடுத்து —
எசேக் 37:22 ... *''அவர்கள் இனி இரு இராஜ்யங்களாய்ப் பிரிவதில்லை''*

தேவன் ஒரே பெயரில் சேர்க்கிறார்; மனிதன் பல பெயர்களில் [பிரிக்கிறான்.
(God nominates; man denominates.)

இது பாவம். இது தேவனுக்குமுன் அருவருப்பு.

எழுப்புதலின்போது ஒவ்வொருவரும் விறுவிறுப்பாகின்றனர்;
தங்கள் பிரியத்தின்படி நபர்களைச் சுற்றிக் கூட்டம் சேருகிறது.

பிரிவினைகளுக்குக் காரணங்கள் —

□ தனி நபர்களைச் சுற்றியது —

1 கொரி 1:11-13 ... *பவுல் ... அப்பொல்லோ ... கேபா*

- பவுலிடம் திருமுழுக்குப் பெயர் பட்டியல் கிடையாது! (வச 14-16)
- யாருக்கும் இயேசு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை! (யோ 4:1,2)
- பிலிப்புவை ஆவியானவர் தூக்கிச் சென்றுவிட்டார்! (அப் 8:38,39)

□ உபதேச வேறுபாடுகளினால் —
(ஓரக்கொள்கை)
உதாரணம்: யானையும் 5 குருடரும்
பாப்திசம் ... பாப்திசம் ... பாப்திசம் → பாப்திஸ்து சபை

பிரதர்ஸ் மட்டும் ... பிரதர்ஸ் மட்டும் → பிரதரன் சபை
மெதட்ஸ் ... மெதட்ஸ் ... மெதட்ஸ் → மெதடிஸ்டு சபை
எதுவும் அளவுக்கு மீறினால் வாந்திதான்!
எ.கா.) *தேன்* (நீதி 25:16,27)

- □ விவாதங்கள், கருத்து வேறுபாடுகளையடுத்து —
  அப் 15:36-39
  இது பிரிவினைகளை நியாயப்படுத்த அல்ல,
  ஓர் எச்சரிப்பாயிருக்கவே எழுதப்பட்டது.

இறைமக்கள் ஒருமித்து வாழும்போதுதான்
எழுப்புதல் அருள்மாரி பெய்தவண்ணமிருக்கும் (சங் 133)
''என்றென்றும் ஜீவன்!''
பெந்தெகொஸ்தேயின் இரகசியம்: **ஒருமனம்** (அப் 2:1; 2:46)

3. *திசை திருப்பம்* (Deviation)

ஆயிரமாயிரமாய் மக்களை எழுப்புதல் கொண்டுவருகிறது —
அப் 6:1-4

ஜெபத்திற்கும் வசனப் போதனைக்குமே முன்னுரிமை!
பிரசங்கிமாரும் பாஸ்டர்களும் இதைத் தியாகம்பண்ணக்கூடாது.

ஜெபத்திலும் பிரசங்க ஆயத்தத்திலும் செலவிடப்பட வேண்டிய
நேரத்தை நிர்வாகப் பொறுப்புகள், கட்டிட வேகைள்
திருடிவிடுகின்றன.

நாம் மக்களை **நம்ப** வேண்டும் —
எ.கா.) பலவீனத்திற்குப் பெயர் பெற்ற பேதுருவிடம்தான் இயேசு
சாவிகளைக் கொடுத்தார்.
திருட்டுக்குப் பெயர் பெற்ற யூதாசிடம்தான்
பணப்பையைக் கொடுத்தார்.

பணத்தைத்தானே திருட முடியும்;
அபிஷேகத்தைத் திருடமுடியாதே!
விழாக்கள், வைபவங்கள் போன்றவற்றிலெல்லாம்
இறைப்பணியாளர் அதிகம் ஈடுபடக்கூடாது —

தனிமையில் போதுமான நேரம் செலவழிக்காவிடில்
செய்தி இருக்காது.

''இருளில் கேட்கிறதை வெளிச்சத்தில் அறிவியுங்கள்'' (மத் 10:27)

- ■ இன்றையச் சுகபோக வாழ்வு உபதேசம் ஆபத்தானது —
  எ.கா.) கர்த்தரது ஜெபம் — உடலுக்கடுத்த தேவை: 1/7
  மலைப் பிரசங்கம் — முதலாவது இறையரசு

சுகமும் செல்வமும் இல்லாது பரலோகம் போய்விடலாம்;
பரிசுத்தம் இல்லாது அங்கு போகமுடியாது.
தொழுநோயாளி சுகம்பெற்று பரலோகில் நுழைந்துவிடலாம்;
இரட்சிக்கப்படாத பாவி அங்கு செல்லமுடியாது!
மையம் vs. சுற்றுவட்டம்
பிலி 3:18,19 ... *தேவனாகும் வயிறு.*
சிலுவைக்குப் பகைவர்.

4. *நிலையிறங்குதல்* (Liberalisation)

இடிமழையைத் தொடர்ந்து லீலியும் முளைக்கும்,
களையும் முளைக்கும்!

(அ) உபதேசக் கலப்படம்

நம்மை **ஆன்மீகத் தன்மையில்** மட்டுமல்ல,
திருவசனச் சார்பிலும் தேறச்செய்வதே ஆவியானவரின்
நோக்கம் —

எசேக் 36:27 ... *எனது ஆவி ... எனது கட்டளைகள் ...*

அப் 2:42 ... *உபதேசத்தில்* ***தரித்திருப்பு*** (முதலாவது)

அப் 15:1,2,22,30,32 ... அந்தியோகியா விசுவாசிகள்
குழப்பப்பட்டதால் எருசலேம் சங்கக் கூடுகை.
விருத்தசேதனம் ஓர் அந்நிய அக்கினி!

அப் 19:8,9 ... எபேசுவில் பவுல் / திறன்னு வித்தியாசாலை ...
அருள்மாரியைத் தொடர்ந்து (வச 6)
ஈராண்டுகள் தினசரி வேதபாடம்!
விளைவு: வச 20 ... *வசனம் விருத்தியடைந்தது*

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போது,
பிசாசானவன் நரகத்தின் ஆவிகளையும் அவிழ்த்துவிடுகிறான்.

எழுப்புதல் காலங்களில் காணப்படும் பரவசத்தைத்
துர்வுபதேசங்கள் சாதகமாக்கிக்கொள்கின்றன.

தரிசனங்கள், சொப்பனங்கள், தீர்க்கதரிசனம்,
ஆவி குடிபோதல், ...
(ஆன்மீகத் தோற்றமா, திருவசனம் சார்ந்ததா?)

- மட்டுமல்ல, இதவாதிகளைக் (liberals) குறித்து எச்சரிக்கை!
  இதவாதிக்கு வாழ்த்துச் சொல்லவும் கூடாது (2 யோ 10,11)

திருமறையின் தவறாத் தன்மை / கன்னிப் பிறப்பு / அவரது பாவமற்ற வாழ்க்கை / உயிர்த்தெழுதலும் பரமேறுதலும் / ஆவியானவரின் ஆள்தத்துவம் / இரண்டாம் வருகை / எழுத்தின்படியான மோட்சம் & நரகம்.

(ஆ) வாழ்வில் கட்டுப்பாடின்மை

அப் 15:28,29 ... *விக்கிரகாராதனை ... வேசித்தனம்*
1 கொரி 5:1,6 ... *விபசாரம் ... புளித்த மாவு*
1 கொரி 6:18,19 ... *வேசித்தனம் ... உடல் ... ஆலயம்*

5. *வியாபாரமயம்* (Commercialisation)

அப் 8:18-21 ... மாயவித்தைக்காரனாகிய சீமோன்

எழுப்புதல் காலங்களில் அற்புத அடையாளங்கள் நிறைய இருக்கும். தங்களது தனிப் பிரியத் திட்டங்களுக்குப் பணம் திரட்ட வரம் பெற்ற ஊழியர் தங்கள் வரங்களை வியாபார நோக்கில் பயன்படுத்துவர். ஊழல் நிறைந்த தங்கள் தொழிலை ஆசீர்வதிக்க, பணம்படைத்தவர்கள் வரம் பெற்ற ஊழியரை வசப்படுத்துவார்கள்.

எ.கா.) சிறப்புக் காணிக்கைகளுக்குச் சிறப்பு ஜெபம்.
(போப்பாண்டவர் பாவ மன்னிப்புச் சீட்டு விற்றதுபோல்)
ஜெப எண்ணெய், ஜெபத்துணி வியாபாரம்.
சுகமளிப்புக்கு விலை பேசக்கூடாதென்று
இயேசு முன்னெச்சரித்தார் (மத் 10:8)

சீமோனைப் பேதுரு கடுமையாய்த் திட்டினார் (அப் 8:20-23).
பொருளாசையே அநேக ஊழியரின் விழுகைக்குக் காரணம்.

''பண ஆசை... நீயோ, தேவ மனிதா'' (1 தீமோ 6:10,11)

எ.கா.) அப் 2 : அப்போஸ்தலர் பாதத்தில் மக்கள் பணம் வைத்தனர்.
அப் 3: பேதுரு: *''வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை!''*

இது எப்படி?
பணம் பாதத்தில்; பாக்கெட்டில் அல்ல!

அதுதான் பணம் இருக்கவேண்டிய இடம் —
எ.கா.) பரலோகில் தங்கம் காலடியில் (வெளி 21:21)
வைரங்களும் முத்துக்களும் தரைக்கடியில் (வெளி 21:19)
இன்று நாம் தங்கத்தைச் சுமக்கிறோம் —
நாளை நம்மைத் தங்கம் சுமக்கும்!

ஊழியத்திற்காய்ப் பணம்; பணத்திற்காய் ஊழியமல்ல.

6. *இயந்திரமயம்* (Mechanisation)

ஏராளம் ஆத்துமாக்களைக் கனிகளாய் எழுப்புதல் கொண்டுவருகிறது.
ஊழியம் விரிவடைகிறது.
எல்லாம் வழக்கம்போல் செய்யப்படுகின்றன.
புத்துணர்வு இருக்காது.
அளவு முக்கியமாகி, தரம் குறைகிறது.

எ.கா.) அச்சடிக்கப்பட்ட கடிதங்கள்
வரைவுக்குட்பட்ட செயல்முறைகள்

கணினிமயமாக்கப்பட்ட மார்க்கம்!
ஊழியப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொடுங்கள் (யாத் 18:13-27)

நவநாவுகள், தீர்க்கதரிசனம், விசுவாசம் ... ஆனால் அன்பு இல்லை
(1 கொரி 13:1-3)

விறுவிறுப்பு, ஆனால் ஆதி அன்பு இழப்பு! (வெளி 2:3-5)
எழுப்புதலில்தான் எபேசு சபை பிறந்தது (அப் 19:1-7)
அதற்கு எழுதப்பட்ட நிருபம் உன்னதங்களைப்பற்றியது!

7. *தேக்கம்* (Stagnation)

எழுப்புதல்: மழை ↓↓↓ நெருப்பு ↑↑↑ ஆறுகள் ⇉
இவையெல்லாம் சலனமானவை.

ஆனால் மக்கள் செல்லும் மூன்று படிகள் —
இரட்சிப்பு → திருப்தி → தேக்கம்
Salvation → Satisfaction → Stagnation

எழுப்புதல் ஆசீர்வாதம் வந்ததும், *''அடைந்தாயிற்று''*
என்றெண்ணுகிறோம்!

(அ) வாழ்க்கை: வெளி 22:11

இன்னும் பரிசுத்தம் ... இன்னும் நீதிசெய்தல்
முன்சென்றுகொண்டேயிருங்கள்.

எழுப்புதல் மாநாட்டிற்கு முன்னர் ஜெபிக்குமளவு பின்னர் ஜெபிப்ப தில்லை. பேதுருவும் யோவானுமோ 3000 பேர் சேர்ந்த பின்னரும்
(அப் 2:41; 3:1)

நாத்தான்வேல் பரவசமடைந்தான்!
— *''நீர் இராஜா!''* (யோ 1:47-51)

ஆனால் இயேசு அவனிடம் ... *''இன்னும் பெரிதானவைகள்''*
அதாவது, *திறந்த வானம்!*
அதை எட்டும்வரை நிறுத்தாதீர்!

முன்மாரியை ருசித்துவிட்டோம்;
பின்மாரிக்காய் கர்த்தரிடம் வேண்டுவோம்!
(யோவேல் 2:23; சக 10:1)

(ஆ) ஊழியம்: அப் 1:8 / 8:1
2:46,47 ... எருசலேமில் தங்கிவிடாதீர்.
உலகம் முழுவதும் நற்செய்திமயமாகவேண்டுமே!

எருசலேமில் துவங்குவோம் (எசேக் 36:38)	இவையெல்லாம்
உலகெங்கும் செல்லுவோம் (,, 37:28)	அந்தந்த அத்தியாயத்
(,, 38:23)	தின் இறுதி வசனங்கள்!

''விண்ணரசைப்பற்றிய இந்நற்செய்தி உலகெங்கும்
அறிவிக்கப்படும். அதன் பின்பு முடிவு வரும்!'' (மத் 24:14)

''தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்!''

ஆராய்ந்து பாரும், தேவனே, என்னை நீர் அறிவீர்;
புதிதும் ஜீவனுமான பாதையில் ஓடச்செய்யும்.

உம் வார்த்தை கேட்டிடாமல்
குற்றங்கள் பல செய்தேன்;
கர்த்தாவே, அவற்றைக் காணத்தக்கதாய்
என்னில் வெளிச்சம் காட்டிடுமே.

மார்த்தாளைப் போலிருந்தேன்,
வீணாக உழைத்திட்டேன் நான்;
தேவை ஒன்றே அதை நான் அறிந்தேன்,
பாதத்தில் இருக்கக் கற்றுக் கொண்டேன்.

வீண்வார்த்தை என் வாயினால்
நினைக்காமல் பேசுகின்றேன்;
என் வாய்க்குக் காவல் இன்றே நீர் வையும்,
என் தூய வாழ்வைக் காத்துக்கொள்ள.

உம் தூய ஆவியாலே
துர் ஆசை நீங்கச் செய்யும்;
உண்மை மனசாட்சி என்னில் உண்டாக
உணர்வுள்ள இதயத்தைத் தந்தருளும்.

சுயம் என்னில் சாகவேண்டும்,
நீர் என்னில் பெருகவேண்டும்;
என் சித்தம் விரும்பேன், என்னையே பலியாய்
தந்தேன் உம் சேவை செய்திடவே.

ஆதி அன்பு என்னில் தாரும்,
உம்மைப் போல் மாறிடவே;
எண்ணில்லா நன்மைகள் இதுவரை செய்ததால்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்.

F

91

ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம்!

Blessed to Bless!

முகவுரை

■ தமது திட்டங்களைப் பூவுலகில் நிறைவேற்ற தேவன் எத்தனையோ நபர்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்;
அவர்களில் ஒருவர் மட்டும் *விசுவாசிகளின் ''தகப்பன்''* என்றழைக்கப்படுகிறார் —

ஆபிரகாம்

ரோ 4:11 ... *விசுவாசிக்கிற யாவருக்கும் தகப்பன்*

:17 ... *அநேக மக்களினங்களுக்குத் தகப்பன்*

இதில் ஒரு மிஷனரி நோக்கமுண்டு.
ஆபிரகாம்தான் முதல் மிஷனரி —

ஆதி 12:1-3 ... *புறப்பட்டுப் போ ...*

இரட்டை வாக்கு:

(அ) *உன்னை ஆசீர்வதிப்பேன்.*

(ஆ) *நீ ஆசீர்வாதமாயிருப்பாய்.*

முதலாம் பகுதி (அ) குறித்து எவ்வளவோ பிரசங்கிக்கப்படுகிறது;
இரண்டாம் பகுதியோ (ஆ) கவனிக்கப்படுவதில்லை.

அதாவது, ஆசீர்வதிக்கப்படுவது எனும் சிலாக்கியம்
vs.
ஆசீர்வாதமாயிருக்கவேண்டும் எனும் பொறுப்பு

■ இயேசு கொடுத்த முதல் அழைப்பே இதுதான் —

மத் 4:19 ... *''நான் உங்களை மனிதரைப் பிடிப்போராக்குவேன்''*

அதாவது, ''உங்களை ஆசீர்வாதமாக்குவேன்''

இயேசுவின் அடிப்படை உபதேசம் —

மத் 5:13 ... *''உப்பு''*

— பூமிக்கு

:14 ... *''வெளிச்சம்''*

— உலகிற்கு

தேவனது மிஷனரித் திட்டம் —

உப்பு: பாட்டிலுக்குள்ளேயே இருப்பதற்காயல்ல
— குலுக்கப்பட்டு, தூவப்படவேண்டும்.
இல்லையேல், உப்பு கைக்கும்!

வெளிச்சம்: கூடை போட்டு மூடிவைப்பதற்காயல்ல
— பிரகாசித்துக்கொண்டிருக்க வேண்டும்.
இல்லையேல், கண் கூசும்!

பாட்டில் ... கூடை — ஆலய வளாகம்,
நமது சொந்த மக்கள் (கிறிஸ்துமஸ் பவனியும் இப்படித்தான்!)

- தேவன் ஏன் யூதரைத் தெரிந்துகொண்டார்?

அவர்களிடம் சிறப்பாய் ஒன்றுமில்லை;
அவர்களை ஆசீர்வாத வாய்க்கால்கள் ஆக்கவே (ஏசா 43:21)

உப்பு தூவப்படவேண்டும் — யூதருக்கு இயேசுவின் பிரசங்கம்

அவர்களது தவறுதல்:

பிரிந்திருத்தல் X ஒதுங்கியிருத்தல் (seclusion)
ஊடுருவல் X தனித்திருத்தல் (isolation)

அவர்கள் தவறியதால்,
தேவன் அவர்களைக் கடந்து யூதரல்லா நம்மைத்
தெரிந்தெடுத்தார் —
1 பேது 2:9,10 ... *தேவ மக்களல்லாதோர் ...*
இப்போது அவருடையவர்கள்
தேவன் நமக்கருளும் யாவும் பிறர்க்கு நம்மை ஆசீர்வாதமாக்கவே —
ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம்!

பிறர்க்கு நம்மை ஆசீர்வாதமாக்கும் தேவ ஆசீர்வாதங்கள் —

1. சமாதானம் (Peace)

☐ யோ 20:21 ... *"சமாதானம் ... பிதா என்னை அனுப்பியதுபோல"*
பயங்கள் / கேள்விகள் / சந்தேகங்கள் / குழம்பிய மன நிலை —
"ஷாலோம்!" (= சமாதானம்) Shalom!

☐ இந்தச் சமாதானம் நமக்கு மட்டுமல்ல —
எபே 2:17 ... *"தூரமாயிருந்த ... சமீபமாயிருந்த ..."*

☐ எனவேதான்,
"ஒரு வீட்டுக்குள் நுழையும்போது, சமாதானம் கூறுங்கள்"
லூக் 10:5

குடும்பத்தில் சமாதானம் — லீதியாள்
கொர்நேலியு
சிறையதிகாரி
சகேயு

☐ *"அழகிய பாதங்கள்"* ... ரோ 10:15
"சமாதானத்தின் சுவிசேஷம்"

☐ *சமாதானம் பண்ணுகிறவர்கள் ... தேவ புத்திரர்* (மத் 5:9)
அதாவது, தேவனோடும் மனிதரோடும் சமாதானமாக உதவுவோர்.

☐ எப்பொழுதும் ஆயத்தம் ... எபே 6:15
காலணிகள் ... சமாதானத்தின் சுவிசேஷம்!

அதாவது, எச்சந்தர்ப்பத்திலும் சுவிசேஷம் அறிவித்திடுங்கள்.
எந்த வாய்ப்பையும் நழுவ விடாதீர்.

2. வல்லமை (Power)

அப் 1:8
— கொடுங்கோலாட்சியிலிருந்து விடுதலை அல்ல.

☐ இயேசுவின் சாட்சி:
"பிரசங்கிக்க அபிஷேகம்" (லூக் 4:18,19)

☐ சாட்சி பகருவதில் ஆவியானவரின் உறுதுணை —
அப் 5:32 (பேதுருவும் அப்போஸ்தலரும்)

☐ அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டதெல்லாம் இன்னும்
கூடுதல் தைரியமாயிருக்கவே —
அப் 4:31

பரவசத்திற்காக அல்ல
"கூடியிருந்த இடம் அசைந்தது ..."

☐ உன்னதத்திலிருந்த ஆவி வரும்வரைதான் காத்திருப்பு —
அடுத்து, புறப்பட்டுச் செல்லுங்கள்!
(லூக் 24:47-49)

வாசியுங்கள்: *''பெந்தெகொஸ்தேயின் நோக்கம்''*
(ஆசிரியரது நூல்: *''ஆனந்த அறுவடை''* — அத்தியாயம் 4)

☐ அபிஷேகம் புதுப்பிக்கப்படுவது எதற்கு?
2 தீமோ 1:6-8 ... *அனல்மூட்டு ... அறிவி*
மின் இணைப்பு கொடுக்கப்பட்டாயிற்று;
ஸ்விட்ச் போடவேண்டியது நீங்கள்தான்!

☐ *அடையாளங்கள் & வரங்கள்* — எதற்கு? (மாற் 16:17-20)
''பிசாசுகளைத் துரத்துங்கள்''
— பிசாசு பிடித்தோர் இருக்குமிடங்களுக்குச் செல்லுங்கள்.
''சாவுக்கேதுவானது ... சர்ப்பங்கள்'' — பின்தங்கிய,
கவனிப்பாரற்ற, வனவாசிப் பகுதிகளுக்குச் செல்லுங்கள்.
அந்நிய பாஷையில் பேசிக்கொண்டேயிருந்தால் போதாது!

3. *பிரசன்னம்* (Presence)

- மத் 28:19,20 ... பேராணை
''போங்கள் ... நான் உங்களுடன் இருக்கிறேன்''
- மாற் 16:19,20 ... *கர்த்தர் அவர்களுடன் செயல்பட்டு ...*

☐ பவுல் (அ) கொரிந்து — எதிர்ப்பு, தூஷணம்
அப் 18:9,10 ... *நான் உன்னோடு இருக்கிறேன்!*
அமைதியாயிராதே!
(ஆ) *எருசலேம் போல ... ரோமாபுரியிலும் ...*
(எருசலேமில் பவுல் அடிக்கப்பட்டார்) ... அப் 23:11

☐ ஸ்தேவானின் முகம் பிரகாசித்தது!
தேவப் பிரசன்னம்.
பிரபலமானதொரு எபிரெய ஜெபத்தின்படி —
சங் 67:1,2 ... *எல்லா மக்களுக்கும் உமது இரட்சிப்பு ...*
உமது முகம் எங்கள் மீது பிரகாசிக்கப்பண்ணும்.

☐ *நாம் இங்கே இருப்பது நல்லது* (மத் 17:4,14,15)
இல்லை, கீழே போவோம், அங்கே தேவையுண்டு!

ஆத்துமாதாயகர் இறைப்பிரசன்னத்தை வெகுவாய் உணருவர் —
2 தீமோ 4:16,17 ... ஒருவரும் கூட நிற்காவிடினும் ...

4. *பரிசுத்தம்* (Purity)

யோ 17:17,18 ... *பரிசுத்தமாக்கும் ... அனுப்புகிறேன்*
ஞாயிறுதோறும் தூசி தட்டி அலமாரியில் வைக்க அல்ல;
பயன்படுத்த (2 தீமோ 2:21)

☐ மோசே : யாத் 3:5,10
காலணிகளைக் கழற்று ... உன்னை அனுப்புகிறேன்

☐ ஏசாயா : ஏசா 6:7.9
உதடுகள் தொடப்பட்டன ... அக்கிரமம் நீங்கியது ... போ!

☐ சாட்சி பகரப் பகர கூடுதல் சுத்திகரிப்பு
யோ 15:2 ... *கனி கொடுக்கும் கொடி ... சுத்தம்பண்ணுகிறார்*

5. *உடலமைப்பு* (Physique)

ஓய்வு நாள் பள்ளிப் பல்லவி —
இரு சிறு கைகள் அவர் வேலை செய்ய;
இரு சிறு கால்கள் அவர் பாதை நடக்க;
ஒரு சிறு நாவு அவருக்காய்ப் பேச!

☐ *''அழகிய பாதங்கள்''*
ஏசா 52:7 / ரோ 10:15
''நற்செய்தி ... சமாதானம் ... இரட்சிப்பு''
எ.கா.) சாது சுந்தர்சிங் (1889-1929?)
''இரத்தப் பாதங்களுள்ள அப்போஸ்தலன்''

☐ உடலின் உறுப்புகளால் தேவனை மகிமைப்படுத்துங்கள்
1 கொரி 6:20 ... *கிரயத்திற்குக் கொள்ளப்பட்டீர்கள் ...*

☐ பவுல்: *''என்னால் ஆன மட்டும்''*
ரோ 1:15 ... *நான் பிரசங்கிக்க ஆயத்தம் ...*
எ.கா.) லூயி பிரெயில் (1809-1852)
3 வயதிலிருந்து பார்வையின்மை.
பார்வையற்றோருக்குப் பிரெயில் எழுத்துக்கள்.

□ பேன்னி கிராஸ்பி (1823-1915); வாழ்நாள் முழுவதும்
பார்வையின்மை — 8000 பாடல்கள் இயற்றினார்.

□ தாமஸ் ஆல்வா எடிசன் (1847-1931)
— பாதி காது கேளாமை ... கிராமபோன் கண்டுபிடித்தவர்

□ மோசேயின் சாக்குப்போக்கு: *''திக்குவாய்''*
யாத் 4:10-12

வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரா தேவனைச் சேவிப்பீர்?
இல்லை, முழு **பலத்தோடு** கர்த்தரை நேசியுங்கள் (+ சேவியுங்கள்.)

6. வளவாழ்வு (Prosperity)

□ 2 இரா 7:8,9
பொன்னையும் திரவியங்களையும் விட்டுவிட்டு சீரியர் ஓடினர்.
... 4 குஷ்டரோகிகள்

□ நெகே 8:10 ... *கொழுப்பானது ... மதுரமானது ...*
ஒன்றுமில்லாதோர்

□ யோவான் (லூக் 3:10,11) ... *ஆடைகள் ... ஆகாரம்*

□ பிலிப்பிய சபை (பிலி 4:15,16)
இச்சபைக்குத்தான் வாக்கு (வச 19)...*உங்கள் குறைவையெல்லாம்*

□ *''பொருட்களைக் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்''*
எபி 10:34

□ செல்வம் படைத்த பெண்களால் இயேசுவின் ஊழியம்
தாங்கப்பட்டது (லூக் 8:2,3) ... *யோவன்னாள் ... சூசன்னா ...*
பெண்களுக்கோர் அழைப்பு!

□ C.T. ஸ்டட் (1862-1931): *சொத்து முழுவதையும் ...*
நிச்சயிக்கப்பட்டவளுக்குரியதையும் கொடுத்துவிட்டார்.

''கிறிஸ்து எனக்காய் மரித்திருப்பாரானால்,
அவருக்காய் நான் செய்யும் எத்தியாகமும் பெரிதல்ல!''

□ நமது உசிதத்தை ஆண்டவருக்குக் கொடுக்கும்போதுதான்,
வீடு (உலகு) முழுவதும் நற்செய்தியின் நறுமணத்தால் நிரம்பும்
— மரியாளின் தைலம் (மத் 26:13)

7. போதனைகள் (Precepts)

□ மத் 10:27 ... *இருள் ... வெளிச்சம் ... வீட்டுக்கூரை*
அடுத்த வசனமே ... *உடலை மட்டும் கொல்லுவோர்* (வச 28)
அதாவது, சுவிசேஷத்திற்காய்த் துன்புறல்

□ மத் 28:20 ... பேராணை
நான் கட்டளையிட்டவற்றை ''உபதேசியுங்கள்''

□ நம்மைப்போல் இவ்வளவு வேத அறிவு பெற்ற சந்ததி வேறில்லை.
ஆனால், தேக்கம்தான்!

கொடுத்துக்கொண்டேயிருங்கள் —
இல்லையேல் சவக்கடலாகிவிடுவீர்கள்!

தானியத்தைப் பதுக்கி வைக்காதீர் —
நீதி 11:24-26
''தானியத்தைப் பதுக்கி வைக்கிறவனை மக்கள் சபிப்பார்கள்;
விற்கிறவனுடைய தலையின் மேல் ஆசீர்வாதம் தங்கும்!''

■ *முடிவுரை*

தேவன் நமக்கருளியுள்ள ஒவ்வொன்றும் ஒரு தாலந்து —

... அதைப் பயன்படுத்தாவிடில், அதை இழப்போம்!
... நல்லது ... உண்மையும் உத்தமுமான ஊழியனே!
(மத் 25:21,23)

ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம்!
Blessed to bless!

92

நற்செய்திப்பணியும் உடலுறுப்புகளும்

The Anatomy of Evangelism

முகவுரை

இந்தியாவில் தேவன் எழுப்பியுள்ள நற்செய்திப்பணிக் குழுக்களுக்காகவும் மிஷனரி இயக்கங்களுக்காகவும் அவரைத் துதிப்போம்.

ஆனாலும் கிறிஸ்தவர்களின் சதவீதம் 3ஐத் தாண்டவில்லையே, ஏன்?
வேலை பெரிது ... செய்வோர் குறைவு ... சாதிப்பது மிகக் குறைவு.

நிவாரணம்: ''ஒவ்வொரு'' கிறிஸ்தவனும் ஈடுபடவேண்டியது ...
— தனித்தாள் ஆத்துமாதாயம் (Personal Soulwinning)
— சுற்றுப்புற சுவிசேஷப்பணி (Neighbourhood Evangelism)
— தொலைவிட மிஷனரி ஊழியம் (Frontier Missions)

''முழுநேர'' ஊழியர் மட்டுமே இதனைச் சாதித்துவிட முடியாது!
கிறிஸ்தற்ற ஒவ்வொருவரும் ஒரு மிஷனரிப் பணித்தளம்;
கிறிஸ்துள்ள ஒவ்வொருவரும் ஒரு மிஷனரிப் பணியாளன்.

இந்த அழைப்பைச் செவ்வனே நிறைவேற்றுவது எப்படி?

வேறு வார்த்தைகளில்,
ஒரு மிஷனரிக் கிறிஸ்தவனாயிருப்பது எங்ஙனம்?

நற்செய்திப்பணியும் உடலுறுப்புகளும்

1. பிரகாசமுள்ள கண்கள் (Bright Eyes) — தரிசனம் (Vision)

யோ 4:31-35 ... *உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்.*

— உடலுக்கடுத்த, பொருளாதார, தேவைகளினின்று கண்களை எடுத்து மக்களது ஆன்மீகத் தேவையைப் பாருங்கள்.

பார்ப்பதற்கு இணையில்லை — மிஷனரிக் களங்களுக்குச் சென்று வாருங்கள்.

இரண்டாம் தொடுதலுக்காய்த் தேவனிடம் கேளுங்கள் —
''மக்களை மரங்களாயல்ல, மக்களாய்ப் பார்க்க!''

தேவைப்பட்டால் மூன்றாம் தொடுதலும்கூட —
''மக்களை மக்களாயல்ல, அழியா ஆன்மாக்களாய்ப் பார்க்க!''

ஒவ்வொரு அவிசுவாசியும் ஒரு **வாய்ப்பு**.
பாதகவாதி — ஒவ்வொரு வாய்ப்பிலும் பிரச்னையைப் பார்ப்பான்.
சாதகவாதி — ஒவ்வொரு பிரச்னையிலும் வாய்ப்பைப் பார்ப்பான்.

தரிசனம் + செயல்பாடு = மிஷனரிப்பணி

கற்பனை செய்துபாருங்கள்: நாடாளுமன்றத்தின்மீது சிலுவைச் சின்னம் / கிராமந்தோறும் ஆலய மணியோசை / *''கிறிஸ்தவன்''* என்றொரு தினசரிச் செய்தித்தாள் / ...

கடைசி நாட்கள் ... *''தரிசனங்கள்''*
''கர்த்தர் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன்'' (அப் 2:17,21)

2. இரத்தம் கசியும் இதயம் (Bleeding Heart) — தாகம் (Passion)

தரிசனம் பிறப்பிப்பது தணியா தாகம்.

மத் 9:36 ... *திரளானோரை இயேசு* ***கண்டபோது,***
அவர்கள்மீது மனதுருகி ...

பவுலின் தாகம் — ரோ 9:1-3; 10:1

மிகுந்த துக்கம், இடைவிடா மனவேதனை, இதய விருப்பம்

இவ்விதத் தாகம் ஏற்படும்போது தன்னலம் மறைந்து தியாகம் மலர்கிறது.

பவுல்: *''நான் சபிக்கப்பட ஆயத்தம்!''* (ரோ 9:3)
மோசே: *''என் பெயரை உம் புத்தகத்திலிருந்து கிறுக்கிவிடும்!''* (யாத் 32:32)

நம்மைப்போல் பிறரை நேசித்தல் —
நாம் பரலோகம் செல்கிறோம்; பிறர்?

சங்கீதக்காரன்: *''என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள்''* (சங் 119:136)

கிறிஸ்து இல்லையேல், விமோசனமே கிடையாது.
ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து (ரோ 3:29; 1 யோ 2:2)

''செத்துக்கொண்டிருப்போருக்குச் செத்துக்கொண்டிருப்பவன்போல் பிரசங்கிப்பேன்!'' — ரிச்சர்ட் பாக்ஸ்டர் (1615-1691)

3. *முடங்கிய முழங்கால்கள்* (Bent Knees)— மன்றாட்டு (Intercession)

மிஷனரிப் பணியில் நமது முதல் கடமை ஜெபமே —
மத் 9:37,38 ... *அறுப்பு மிகுதி ... வேலையாட்கள் கொஞ்சம் ... ஆகையால் வேண்டுங்கள்*

பிரதானமாய் ... எல்லா மனிதருக்காகவும் ஜெபம் (1 தீமோ 2:1,3,4)
உலகப் படங்கள் & ஜெப அட்டவணைகள்

அ) மக்களுக்காய் ஜெபியுங்கள் *(கண் திறக்கப்பட* ... 2 கொரி 4:4)
எ.கா.) *லீதியாளின் இதயம் திறக்கப்பட்டது* (அப் 16:14)

ஆ) பணிக்கள ஊழியருக்குத் தைரியம் —
எபே 6:19,20 ... *தைரியம் அருளப்பட*
கொலோ 4:2-4 ... *வாசல்கள் திறக்கப்பட*

மிஷனரிகள் எல்லாவற்றிலும் நன்றாயிருக்க ஜெபியுங்கள்.
தடுப்பு ஜெபம் (Preventive Prayer) —
பரிசுத்தமிழப்பு, வியாதிகள், மனத்தொய்வு, பிரிவினைகள், ஆபத்துக்கள்
(Defilement / Diseases / Depression / Divisions / Dangers)

குடும்ப ஜெபங்களில் மிஷனரிச் சுற்றறிக்கை பயன்படுத்துங்கள்.
மிஷனரி ஜெபக்குழுக்களோடு சேர்ந்துகொள்ளுங்கள்.

தன்னல ஜெபத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.
— சுகமளிப்பு ஜெபக்கூட்டங்களைவிட
மிஷனரி ஜெபக் கூடுகைகளில் பங்குபெறுங்கள்.
— நமது தலை வலி, இடுப்பு வலியைவிடத்
தேவனது இதய வேதனை

4. *தைரியமான உதடுகள்* (Bold Lips) — தூதறிவிப்பு (Proclamation)

யோ 18:37 ... *பிலாத்துவுக்குமுன் இயேசுவின் தைரிய சாட்சி*
இப்படியே தீமோத்தேயு ஊக்குவிக்கப்பட்டான் — 1 தீமோ 6:12,13

தூதறிவிப்பு என்றால் பிரசங்கம்தான் என்று பொருளல்ல;
அது நற்செய்தியைப் பிறரோடு இயல்பாய்ப் பகிர்வதாம்.

ஆகாரத்திற்காய் ஜெபித்துவிட்டு வேலைக்குப் போவதுபோல்,
தைரியத்திற்காய் ஜெபித்துவிட்டு வாய் திறந்து பேசவேண்டும்—
சங் 51:15

அமைதியைக் குலைக்க ஒரு ''புன்முறுவல்'' போதும் —
இருவருக்கிடையே மிகக் குறுகிய தூரம் புன்முறுவல்தான்!

ஒரு சாட்சி அல்லது கைப்பிரதி மூலம்
கிறிஸ்துவை அறிமுகப்படுத்துங்கள்

நாளுக்கு ஒருவரையாவது!
சாட்சி பகரத் துவங்கினால் இன்னும் சாட்சி பகரத் துடிப்பீர்கள்.

- உங்கள் பழைய வாழ்வை நினைத்து
உங்களை நீங்களே மட்டந்தட்டாதீர்கள் —

எ.கா.) சமாரியப் பெண்
— தன்னைப்பற்றிக் **''கிறிஸ்து''** சொன்னதுதான் அவளது சாட்சி (யோ 4:29)
— பிசாசு பிடித்தவன்
*''**தேவன்**'' உனக்கு இரங்கிச் செய்தவற்றை ...* (மாற் 5:19)

கனிதரும் கொடிதான் இன்னும் சுத்தமாகும் (யோ 15:2)

- மக்களை, அதிலும் குறிப்பாக வாலிபர் நங்கையரை,
சந்திக்கத் தனித்தாள் ஆத்துமாதாயத்திற்கு நிகரில்லை.
வாதாடவேண்டாம்.
சுவிசேஷத்தை எளிமையாய் எடுத்தியம்புங்கள்.
''ஞானிகளுக்கும் மூடருக்கும் சுவிசேஷமே இரட்சிப்புக்கான தேவ பலம்'' (ரோ 1:14-16)

தனித்தாள் ஆத்துமாதாயப்பணியின் அபார விளைவு —

எ.கா.) ஜனவரி மாதம் சபையில் 100 பேர் —

மாதந்தோறும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைக் கிறிஸ்துவிடம் கொண்டு வந்து அன்னாரையும் ஆத்துமாதாயகராய் மாற்றினால், பெப்ருவரியில் எண்ணிக்கை 200.
இது தொடருமானால், மார்ச்சில் 400, ஏப்ரல் 800, ...
டிசம்பரில் 2,04,800!

பாதிப்பேர் பின்வாங்கினாலும்,
ஓராண்டில் இச்சபை 1000 மடங்காய்ப் பெருகிவிடுமே!!!

தேவன் உங்களை அபிஷேகிக்க ஜெபியுங்கள் —
அப் 4:31 ... (பெந்தெகொஸ்தேயின் நோக்கம் —
பல பாஷையில் பேசுவதா, பல பாஷையினரைச் சந்திப்பதா?)

சுவிசேஷப் பொதுக்கூட்டங்களை அரசு தடைசெய்யலாம்;
தனித்தாள் ஆத்துமாதாயப் பணியை யார் தடுக்கமுடியும்?

ஒரு திரள் கூட்டப் பிரசங்கியாரும் 1000 தன்னார்வலரும் சேர்ந்து
1000 பேரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவது கடினம்;
ஆனால் ஒவ்வொரு தன்னார்வலரும் ஒருவரைக்
கொண்டுவந்தால் 1000 பேர்!

5. *ஆசீர்வதிக்கும் கரங்கள்* (Blessing Hands) — சேவை (Ministration)

உடல் ரீதியில் இயேசு இன்று இங்கில்லை —
நமது கரங்கள்தான் அவரது கரங்களின் நீட்டுதல்!
''அவர் இருக்கிறபடியே இவ்வுலகில் இருக்கிறோம்''
(1 யோ 4:17இ)

செத்தவனையே ஒரு வார்த்தையால் எழுப்பியவர்
சுகம் கொடுக்க எவரையும் தொடவேண்டியதில்லை;
ஆனால் மக்களைத் ''தொட்டுச்'' சுகமாக்கினார்!

- *''சேவை பெற அல்ல, சேவை செய்ய''*

பிணியாளிகள்	
சிறையானோர்	இவர்களுக்குச் செய்வது
அந்நியர்	இயேசுவுக்கே செய்வதாம்
உணவல்லாதோர்	(மத் 25:34-40)

தீண்டப்படாத சமாரியனே சாலையில் கிடந்தவனுக்கு
அயலான் ஆனான்!
உங்கள் வேலை, உங்கள் மார்க்கம், இப்படியே இருந்துவிடாதீர்!
லூக் 10 (ஆசாரியன்/பாஸ்டர், அல்லது லேவியன்/தலைவன்)
எங்கும் தேவை நிறைந்த மக்கள்!

- தாராளமாய்க் கொடுங்கள் —

அ) தேவையிலிருப்போருக்கு உதவ
ஆ) கவனிப்பாரற்றோரைச் சந்திக்க

டேவிட் பேரட், மிஷனரிப்பணி ஆராய்ச்சியாளர் —
''காணிக்கைகளில் 95 சதவீதம் கிறிஸ்தவருக்கே
செலவிடப்படுகிறது.''

அப் 2:4 அல்லது 2:44?

+ மிஷனரிகளைத் தாங்குங்கள்.
+ களங்களைத் தத்தெடுங்கள்.
+ ஆலயங்கள் கட்டித் தாருங்கள்.
+ வாகனங்கள் வாங்கிக் கொடுங்கள்.

கிரமமாய்க் கொடுக்கத் தீர்மானம் எடுங்கள் —
கிரமம் + தியாகம் (Systematic + Sacrificial)

6. *அழகிய பாதங்கள் —* (Beautiful Feet) — படையெடுப்பு (Invasion)

எபே 6:15 ... *ஆயத்தம் என்னும் காலணிகள்*
ஏசா 52:7 ... *எவ்வளவு அழகிய பாதங்கள்!*
(தேவனுக்குத் தேவை : Van, Can, Fan அல்ல, Man!)

திறந்த வெளிப் பிரசங்கம் (தெருப் பிரசங்கம்)
கிராமப்புறச் சந்திப்பு
கைப்பிரதி விநியோகம்

மத் 9:35 ... *இயேசு நடந்து திரிந்தார்*

டேவிட் லிவிங்ஸ்டனும் C.T. ஸ்டட்டும் ஆப்பிரிக்கக் காடுகளுக்குள்
நடந்து சென்றனர்.

சிறு குழுக்கள் அமையுங்கள்.
குடும்பக் குழு: கணவன் + மனைவி + பிள்ளைகள்
கிரமமாய்த், தவறாது, செல்லுங்கள்.

''பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?''
(ரோ 10:13-15)

கீழ்ப்படியாத கிறிஸ்தவரிடம் நேரத்தை வீணடிக்காதீர் (வச 20,21)

7. *ஒன்றிணைக்கும் உடல்* (Binding Body)—உட்படுத்துதல் (Induction)

யோ 10:16 ... *வேறே ஆடுகள் ... ஒரே மந்தை*
பிரிந்திருக்கும் இராஜ்யம் ...
பிரிந்திருக்கும் நகரம் ...
பிரிந்திருக்கும் குடும்பம் ... (மத் 12:25)

இதையும் சேர்ப்போம் —
பிரிந்திருக்கும் திருச்சபை ...

விசுவாசிகளை நற்செய்திப்பணி வெகுவாய் ஒன்றிணைக்கும் —
எ.கா.) அமிழ்ந்துகொண்டிருந்தவனைத் தூக்கும் முயற்சியில்
ஒன்றுபட்ட கப்பல் பயணிகள்!

திருச்சபையின் ஒருமைப்பாடு ... திருச்சபையின் பெருக்கம் —
அப் 2:46,47

வலை மட்டும் போதாது;
கூடைகளும் ஆயத்தமாக வேண்டும்.

நற்செய்திப்படை முயற்சிகளின் கனிகள் பாதுகாக்கப்படாதது
திருச்சபையில் ஒற்றுமை இல்லாததாலேயே.
கூட்டத்திற்கு முன்னர் சேருவோம்; பின்னர் பிரிந்துவிடுகிறோம்.

விதைக்கும்போது சேருகிறோம்;
அறுக்கும்போது பிரிந்துவிடுகிறோம்.

அறுவடையெல்லாம் ஒரே எஜமானுக்குத்தானே?
நாம் தேவனுக்கு ''உடன் வேலையாட்கள்'' அன்றோ? (1 கொரி 3:9)
பங்காளிகள்!

■ *முடிவுரை*

இவ்வேழு காரியங்களிலும் சிரத்தையெடுத்துக் கவனமாய்
ஈடுபடுங்கள்.
அப்பொழுது, ஒரு மிஷனரிக் கிறிஸ்தவனாய்த் திகழுவீர்கள்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மிஷனரி!
Head-to-foot Missionary

93

தைரியமற்ற சீடன்
The Courageless Disciple

முகவுரை

வேதப்பகுதி: மத் 26:69-75

I — சாதாரண மறுதலிப்பு (வச 70)
II — சத்தியம்பண்ணி மறுதலிப்பு (வச 72)
III — சபித்து மறுதலிப்பு (வச 74)

சீமோன் (கிரேக்கு) = கேட்பது ← முதல் பெயர்
பேதுரு (கிரேக்கு) = கல் ← துணைப் பெயர்
கேபா (அரேமியம்) = பாறை

பேதுருவின் வாழ்க்கையைப் படிப்பது எவருக்கும் ஊக்குவிப்பு!

ஊசலாடிக்கொண்டிருந்த மீனவர்
உறுதியானதோர் அப்போஸ்தலர் ஆனார்.

மணல் போலிருந்த தைரியமற்ற சீடன்
மலை போன்ற பாறையானார்.

பின்மாறியுள்ள நண்பரே,
பேதுரு திரும்பி வந்ததிலிருந்து நம்பிக்கை பெறுங்கள்.
தைரியமற்ற இச்சீடன்மீது இயேசுவுக்குத் தனிக் கவனம்
(மாற் 16:6,7)

பாடுகளின் வாரத்தில் பேதுரு செய்த யாவும் **பயத்தினாலேயே** —
எ.கா.) ஒருவனது காதை வெட்டியது!
யோ 18:10,11 — பிரதான ஆசாரியனின் வேலைக்காரன் —
பாவப்பட்ட கோயில்குட்டி!

அந்தக் கோயில்குட்டியின் இனத்தான் பேதுருவை
அச்சுறுத்தினான் —
யோ 18:26 ... *உன்னை அவருடன் காணவில்லையா?*

பேதுருவின் வாழ்வில் நிகழ்ந்த விந்தை மாற்றம் அவரது நிருபங்களில்
பிரதிபலிக்கிறது —

தைரியமாயிருக்கவேண்டிய மூன்று பகுதிகள் —

1. கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரத் தைரியம்

1 பேது 2:9 ... ராஜரீகச் செய்தியைப் பறைசாற்ற ராஜரீக ஆசாரியர்.
(On **H**is **M**ajesty's **S**ervice)

ஒரு மீனவர் அரண்மனை வார்த்தைகளைப் பேசுகிறார்!

விசுவாசியே, நீ யார்?

- *தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி* — ஆபிரகாமின் மாம்சீக வழித்தோன்றலல்ல.
- *இராஜரீக ஆசாரியக் கூட்டம்* — பழைய உடன்படிக்கை/ புதிய உடன்படிக்கை
- *எல்லாரும் குருக்கள்!* (= ஆசாரியர்) — குருக்களல்லாதோர் புதிய ஏற்பாட்டில் கிடையாது.
- *பரிசுத்த இனம்* — இஸ்ரவேலர் மட்டுமல்ல
- *அவரது சொந்த ஜனம்* — VIP அல்ல, VVIP!

3:15 ... எப்பொழுது ஆயத்தமுள்ள சாட்சிகள்.
4:10,11 ... ஒவ்வொருவருக்கும் வரம் உண்டு.

தேவனுடைய ''வாக்கியங்களின்படி'' (வாக்கியங்கள் போல்!)
= கெம்பீரமான செய்தி

''வல்லமை'' = ஏகாதிபத்தியம்

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு பேதுரு —

அப் 2:14 ... *தனது சத்தத்தை ''உயர்த்தி'' ...*
3:6 ... *என்னிடம் ''உள்ளதை'' உனக்குத் தருகிறேன்*
(40 வயதுள்ளவனைத் தூக்கிவிட்ட அவரது தைரியம்!)

4:13 ... *பேதுரு, யோவானின் ''தைரியம்''*
''கல்லாதவர் ... பயிற்சியில்லாதவர்''
ஆனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள்!

இன்று நமக்குப் பட்டமளிப்பு உண்டு, பட்டம் உண்டு,
அபிஷேகம் எங்கே!

4:20 ... *நாங்கள் பேசாமல் இருக்கக்கூடாது!*
5:29,30 ... *மனிதருக்கல்ல, தேவனுக்கே கீழ்ப்படிவோம்!*

2. துர்வுபதேசக்காரரை எதிர்க்கத் தைரியம்

சத்தியத்திற்குத் **துணையாக** மட்டுமல்ல,
சத்தியமற்றதற்கு **எதிராகவும்** நிற்கவேண்டும்.

2 பேது 1:19-21 ... *வேதமானது சுய தோற்றமுள்ளது அல்ல*

பைபிளில் தேவனுடைய வார்த்தை அடங்கியிருக்கிறது ×
பைபிளே தேவனுடைய வார்த்தைதான் ✓

2:1-3 ... *கள்ளப் போதகர் ... ''ஆண்டவரை மறுதலித்து''*
— அதாவது, பல வழிகளில் கிறிஸ்துவும் ஒரு வழி என்பர்.
''அநேகர்'' அவர்களைப் பின்பற்றுவர்!

''பொல்லா இவ்வுலகில் சிறுபான்மையினரிடமே சத்தியம் இருக்கும்''
— C.H. ஸ்பர்ஜன்

3:3,4,16

பரியாசக்காரர் — இரண்டாம் வருகையைக் கேள்வி கேட்பர்
வேதப் புரட்டர் — எ.கா.) திருமறையிலுள்ள அற்புதங்களை மறுதலிப்பர்

''நல்ல மனிதர் சும்மா இருந்தால் போதும்; தீமை தலைதூக்கிவிடும்''

''நான் கோழைத்தனமாயிருக்கமாட்டேன்;
எனது தேவனும் இரட்சகருமானவர் பழிக்கப்படுகிறாரே!''
— C.T. ஸ்டட்

''தனது எஜமான் தாக்கப்பட்டால் நாய் குலைக்கும்,
எனது தேவனது சத்தியம் தாக்கப்படும்போது
குரல் கொடுக்காதிருந்தால் நான் ஒரு கோழையன்றோ?''
— ஜான் கால்வின்

3. பாடுகளையும் சோதனைகளையும் எதிர்கொள்ளத் தைரியம்

1 பேது 1:6,7 ... *விசுவாசம் ... பொன் ... சோதிக்கப்படுவது*
பொன்னை விலைகொடுத்து வாங்கிவிடலாம்;
விசுவாசத்தையோ பெற்றுக்கொள்ளத்தான் முடியும்!
''எல்லா மனிதரிடமும் விசுவாசம் இல்லையே!''
(2 தெச 3:2)

2:21 ... *பாடுகள் ... அடிச்சுவடுகள் ... மாதிரி*
காந்தி விட்டுச் சென்றுவிட்டது தொப்பி (caps);
கிறிஸ்து விட்டுச் சென்றது மாதிரி (steps).

3:14 ... பயமுறுத்தல்களுக்கு அஞ்சாதீர்!
எ.கா.) தானியேல் / தரியு / சிங்கம்
இராஜா / மிருகங்களுக்கு இராஜா
''நீதிமான் சிங்கம்போல் தைரியமாயிருக்கிறான்'' (நீதி 28:1)

அனனியா, அசரியா, மீஷாவேல்
அக்கினி — தேவன் மீதுள்ள அன்பு அதைவிடப் பெரிய அக்கினி! (உன் 8:6,7).
4ஆம் வாலிபனோடு கைகோர்த்து நடை!

பேதுருவிடம் இயேசு: *''என்னை நேசிக்கிறாயா?''* (யோ 21:15-17)
1 பேது 4:12,13 ... *சோதிக்கும் அக்கினி ... மகிமை*
5:8-10 ... *சிங்கம்போல் பிசாசு ...*
அவன் போலிதான்!

மார்ட்டின் லூத்தர்: ''இந்நகரின் கூரை ஓடுகள் எல்லாம் பிசாசுகளானாலும், இச்சத்தியத்தில்தான் நிற்பேன்!''

J.C. ரைல்: ''பாடுகள் இல்லையேல் பாடல்கள் இல்லை!''

''பரிசுத்தமற்ற இன்பத்தைவிட பரிசுத்தமான இன்னலையே நாடுவேன்!''

பேதுரு ஒரு ''பாறை'' எனப் பெயரிடப்பட்டார்;
அவரோ பெந்தெகொஸ்தேக்குமுன்
ஒரு தடைக்கல்லாயிருந்தார் — பாடுகள் வேண்டாமென்றார்.

இப்பொழுது அவர் மாறிவிட்டார்!
இயேசுவின் அன்பில் மயங்கிவிட்டார்!
''பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்!'' (1 யோ 4:18)

முடிவாக,
''என்னைத் தலைகீழாய் சிலுவையிலறையுங்கள்'' என்றாராம் பேதுரு.
சீமோன் பேதுருவைக் கிறிஸ்து மாற்றமுடியுமானால்,
என்னையும் மாற்ற முடியும்! ஆமென்!

94

பரிசுத்த வாரம் தரும் நற்செய்திப்பணிப் பாடங்கள்

Lessons on Evangelism from the Holy Week

முகவுரை

- முழுவுலகின் இரட்சிப்புக்காகவே கிறிஸ்து பாடுபட்டார் — 1 யோ 2:2

கிறிஸ்து: *''நான் உயர்த்தப்படும்போது எல்லா மனிதரையும் ...''* யோ 12:32

எ.கா.) ஏசாயா 53இலிருந்து எத்தியோப்பிய மந்திரிக்குப் பிலிப்பு பிரசங்கித்தான் — அப் 8:32,33,35

இதுதான் கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய மிக முக்கிய அத்தியாயம்.

- துவக்கமுதல் முடிவு வரை ஆண்டவர் ஆத்தும பாரம் கொண்டிருந்தார்; இறுதி வாரத்திலோ அது உச்சத்தை எட்டியது.

பாடுகளின் வாரத்தின் ஒவ்வொரு நிகழ்வும் மிஷனரி நற்செய்திப் பணிக்குப் பயனுள்ள பாடங்களைத் தருகிறது.
குருத்தோலை ஞாயிறு முதல் பெரிய வெள்ளி வரை: 7 நிகழ்வுகள்

1. கட்டப்பட்டிருந்த கழுதை (Tethered Donkey)

மத் 21:1-3
இச்சம்பவத்திலிருந்து 6 பாடங்கள் —

அ) கிராம ஊழியம் குறித்த சித்திரம் —
கிராமங்களில் இந்தியா வாழ்கிறது ... 80%
(நகரமயம் இந்நாட்களில் அதிகரித்தாலும் ...)

''கிராமங்கள் செழித்தால் நாடு செழிக்கும்'' — மொரார்ஜி தேசாய்

ஆனால் நமது பணிகளில் 80 சதவீதம் 20 சதவீதத்தினராகிய நகர்வாசிகளிடையே நடக்கிறது.
6,00,000 கிராமங்கள் ... கிறிஸ்தவரே இல்லாதவை ஏராளம்.

ஒரு கிராமத்திலுள்ள பெட்டிக்கடையினரிடம் ஒரு மிஷனரி:

''உங்களுக்கு இயேசுவைத் தெரியுமா?''

பதில்: ''அதை நான் இங்கு விற்பதில்லை!''

வயதானதொரு கிராமத்தாளிடம் ஒரு சுவிசேஷகர்:

''இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

பதில்: ''அவர் இந்த ஊரில் இல்லை!''

அரசுத் திட்டங்கள்: கிராமத்தினரிடம் கணினிகள், கைபேசிகள்

ஆ) அந்தக் கழுதைபோல் மக்கள் மூட நம்பிக்கைகள், வாழ்நாளெல்லாம் பயங்கள், போன்றவற்றால் கட்டப்பட்டுள்ளனர் —

எ.கா.) ஒடிசா — போண்டோ இனப் பெண்கள் ... அரை நிர்வாணம்

ராஜஸ்தான் — குழந்தைத் திருமணங்கள்

கர்நாடகம் — கோவில்களில் விபசாரப் பழக்கங்கள்

ம. பிரதேசம் — காய வைத்த கம்பியால் சூடு போடும் பில்லிசூனிய மருத்துவர்

''உடன்கட்டையேறுதலுக்கு'' எதிராய் எழும்பும் கேரிகள் தேவை!

நாம் நாசரேத்தை விட்டு நப்தலிக்கு இடம் பெயராவிடில்,

மக்கள் மரண இருளிலேயே தவிப்பர் (மத் 4:13-16)

இ) கழுதைக்குட்டியும் கட்டப்பட்டிருந்தது —

''குற்றமில்லாப் பாலகர்''

சிறுவர், சிறுமியரது உற்சாகம்.

''பரலோக இராஜ்யம் அவர்களுடையது!''

எ.கா.) விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS)

பல மிஷனரி இயக்கங்களைப் பிறப்பித்தது.

ஈ) இயேசு இரு சீடரை அனுப்பினார் —

''இரண்டிரண்டு பேராக'' (லூக் 10:1)

பத்து பன்னிரண்டுபேர் வரக் காத்திருக்காதீர்; இருவர் போதும்.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் போல் தம்பதியர் குழு.

உ) இயேசு உட்கார்ந்து பவனி வந்தது ஒரு பெண் கழுதைமேல்!

பெண் ஊழியர் —

பண்டித ராமாபாய் — முக்தி மிஷன் (மகாராஷ்டிரம்)

ஏமி கார்மைக்கல் — டோனாவூர் ஐக்கியம் (தமிழகம்)

மேரி ஸ்லெசர் — நரமாம்சம் தின்போர் (ஆப்பிரிக்கா)

ஊ) *''ஆண்டவருக்கு அவை வேண்டும்!''*

எதிர்ப்புகள், பயமுறுத்தல்கள்

''சகல அதிகாரம் ... ஆகையால் புறப்பட்டுப் போங்கள்''

(மத் 28:18,19)

2. திறந்தவெளிப் பவனி (Open-air Procession)

(மத் 21:7-10)

- மக்கள் கூட்டத்தினரிடையே தாக்கம் —

  ''நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு ...''

  — தெருக்களில் ... ஆலயத்திற்குள்ளேயே அல்ல!

  — ஆலயத்தின் 4 சுவர்களுக்குள் இயேசு அடைபட்டிருக்கிறார்.

  — கிறிஸ்மஸ் பாடல் பவனியும் இப்படித்தான்

  (தூங்கும் கிறிஸ்தோரை எழுப்பும் தூக்கக் கிறிஸ்தோர்)

  — ஆலயக் காம்பவுண்டையே சுற்றுவது ...

  எருசலேமுக்கு வெளியே திருடர் நடுவிலேயே

  இயேசு சிலுவையிலறையப்பட்டார் (எபி 13:12,13).

- தெருக்களில் சுவிசேஷப்பவனி செல்லுங்கள் —

  சிறு குழுக்களாயாவது செல்லலாமே!

  எ.கா.) அன்றைய இரட்சண்ய சேனையினர்.

  ஜெபக்கூட்டம் → சந்தைக் கூட்டம்

  (அப் 17:17) ... கூட்டங்களுக்கும் தனிநபர்களுக்கும்

  மட்டுமல்ல, 20:20 தரிசனம்!

  பொது விடுமுறை நாட்களில், உள்ளூர்ச் சபைகளெல்லாம்

  இவ்விதப் பொது நிகழ்ச்சிகள் நடத்தலாமே.

- யோவான் ஸ்நானகன் —

  ஆலயத்திற்கு வெளியேதான்! (லூக் 3:2,6)

  அவனைப் பின்பற்றுவோம் —

  ''இதுவரை ... பலவந்தம் ... பிடிப்பு'' (மத் 11:12)

  தெருக்கள் ... வீதிகள் ... வழிச் சந்திகள் (மத் 22:9,10; லூக் 14:21)

  இயேசு: *கடலோரங்கள் ... மலைகள் ... கல்லறைகள்*

  தொலைந்தோர், தொய்ந்தோர், தொடப்படாதோர் —

  இவர்களால் விருந்து சாலையை நிரப்புங்கள் (லூக் 14:23)

- வெளிப்பிரசங்க ஊழியம் கடினம்தான் —
  ''உங்கள் ஆடைகள் அழுக்காகும்'' (மத் 21:7,8)

இயேசு தமது ஆடைகளில் இரத்தக்கறையோடு தேவ கோபத்தின்
ஆலையைத் தனியாய் மிதிக்கவில்லையா?(ஏசா 63:3)

- கவரும் அட்டைகள், நல்ல அடையாளங்கள், கிளரும் முழக்கங்கள்
  ... கலைத்திறன் ஆவியானவர் தரும் வரம் (யாத் 31:1-5).

தங்கள் திறமைகளைப் பயன்படுத்த வாலிபருக்கு வாய்ப்பு —
எ.கா.) ஆடைகளைத் தரையில் விரித்தது மக்களாகவே செய்தது!

வாலிபரின் உற்சாகத்தின்மீது குளிர்நீர் கொட்டாதேயுங்கள் —
மத் 21:15,16 — *''அவர்களை அமைதிப்படுத்தும்!''*

எ.கா.) துவக்கக் காலங்களில் என்னை ஊக்குவித்தோர் —
Rev. K.S. ஆபிரகாம் (FMPB)
Rev. P. ஜெபமணி (சாம் அண்ணாச்சியின் அண்ணன்)

தெருச்சந்திகளில் இசைக்கருவிகள் வாசிக்கலாம் —
எ.கா.) எங்கள் கல்லூரி நாட்கள்: தகர மெகாபோன்,
ஜாலர், கொட்டு; தெருக்களில் அமைதி சாட்சி

3. துர்ப்பிரயோகிக்கப்பட்ட ஆலயம் (Misused Temple)

மாற் 11:15-17 ... *எல்லா நாட்டினருக்கும் ஜெபவீடு*

நமது ஆலயங்கள் —
ஊழல் மையங்கள்
வழக்குகள், வேண்டா விவாதங்கள்

நமது ஆலயங்களுக்குப் பல்வேறு பெயர்கள் வைக்கிறோம்;
யேகோவா தேவன் சூட்டியதோ: ***''ஜெப வீடு''***

''எல்லா'' மக்களுக்கும்—கிறிஸ்தவரல்லாதோரைக் கவரும் நிகழ்ச்சிகள்

சாலொமோனின் தேவாலயப் பிரதிஷ்டை ஜெபம் —
1 இரா 8:41-43 ... *வேற்றினத்தார் ...*

ஜெபத்தின் முடிவு (வச 59):
''பூவுலகின் மக்களெல்லாம் அறியும்படி'' ...

மிஷனரி ஜெபக் கூடுகைகளில் பங்குபெறுவோர் குறைவு.

சபை மேய்ப்பர்களே, நான்கு ஞாயிறு ஆராதனைகளில்
ஒன்றை மிஷனரி ஜெபக்கூட்டமாய் மாற்றிவிடுங்கள்!

மக்களை மாற்றமுடியாது என்று சொல்லாதிருங்கள்!
சபையை மாற்றமுடியாவிட்டால்
சமுதாயத்தை மாற்றுவதெப்படி?

ஆஸ்வால்டு ஸ்மித் —

''நற்செய்தி அறிவிக்காத சபை உறைந்துபோகும்!''
(The Church that does not evangelize will fossilize!)

கட்டிடங்கள் நினைவுச் சின்னங்களாகிவிடுகின்றன.

கட்டிடங்களைப் பார்த்து இயேசு அசந்துவிடவில்லை —
(மாற் 13:1,2) ... கி.பி. 70 ... ரோமரால் அழிக்கப்பட்டது.

ஆதிச்சபையின் இரகசியம்: சலனப் பிரசங்க பீடங்கள்.
(Mobile pulpits)

கட்டிடங்களில் அளவிற்கு மீறிச் செலவழிக்கிறோம் —

இருக்கைகளுக்கு மெத்தைகள் ...	(Cushioning)
தரைகளுக்கு விரிப்புகள் ...	(Carpeting)
அறைகளுக்குக் குளிர்சாதனங்கள் ...	(Conditioning)
பீடத்திற்குத் தொங்குதிரை ...	(Curtaining)
சுவர்களுக்கு வர்ணம் ...	(Colouring)

ஆனால் பணிக்களங்களில் எத்தனையோ
ஆலயங்களுக்குக் கூரைகூட கிடையாது! (Covering)

மெகா சபைகள்: 10,000 பேர் கூடக்கூடிய ஒரே அரங்கத்தைவிட
1000 பேர் கூடக்கூடிய 10 அரங்கங்கள் மேல்!

- இன்னொரு படிப்பினை:
  — பலி செலுத்தத்தான் புறாக்கள் விற்கப்பட்டன.
  — ஆலய வரி கட்டத்தான் பணத்தை மாற்ற காசுக்காரர்.

வியாபாரமய மார்க்கம் *(''கள்ளர் குகை'')*

பணக்காரியங்கள் குறித்து அதிகம் பேசாதீர் —

எ.கா.) கடந்த வாரக் காணிக்கையா,
கடந்தவாரம் திருமுழுக்கெடுத்தவர் எண்ணிக்கையா?
எது முக்கியம்?

4. கனியற்ற மரம் (Fruitless Tree)

மத் 21:18,19

கவனிக்கவேண்டிய 3 காரியங்கள்:

அ) கனியற்ற கிறிஸ்தவன் — முரண்பாடு

பிறரை இரட்சிக்கவே இரட்சிக்கப்பட்டோம்.
ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம் (ஆபிரகாம், ஆதி 12:2)
யோ 15:16, *''கனிகொடுக்க உங்களைத் தெரிந்துகொண்டேன்''*
மத் 4:19, *''என் பின்னே வாருங்கள் ... மனிதரைப் பிடிப்போர்''*
கனிகொடுக்கவேண்டியது கட்டாயம்!

கனியின்மை என்பது சோபேறித்தனமல்ல, அது *பொல்லாப்பு* —
மத் 25:26

ஆ) அந்த மரத்தின் பொய்த் தோற்றம்
மொத்த செயல்பாடுகள், அறிக்கைகளினால் ஏமாற்றாதீர்கள் —
''தனிப்பட்டவரது'' பொறுப்பு —
வெளி 22:12 ... *''எவனும் ...''*
5 தாலந்து ... 2 தாலந்து ... *''எவனுக்கு அதிகம் ...''*

இ) அந்த மரம் உடனே சபிக்கப்பட்டது —
இன்னொரு உவமை (லூக் 13:6-9)

3 ஆண்டுகள் & 4ஆம் ஆண்டு (திராட்சைத்தோட்டத்தில் அத்தி)
இது வச 1-5ஐத் தொடர்ந்து... *''நீங்கள் மனந்திரும்பாவிட்டால்''*
2004 சுனாமியில் நாம் காப்பாற்றப்பட்டதேன்?
செலவழியுங்கள்: தருணம் ... தாலந்து ... தனம்

5. தியாகப் பெண்மணிகள் (Sacrificial Women)

செவ்வாய் அன்று இரு நிகழ்வுகள் —
அ) ஏழை விதவை (2 காசு) (மாற் 12:41-44)
ஆ) ஒரு பெண்மணி (நளதம்) (மத் 26:6-13)

படிப்பினைகள் —

i) தங்களது எதிர்காலத்திற்காய்க் கர்த்தரையே நம்பினர்.
அ) விதவை: *அவளுக்கு இருந்ததையெல்லாம் போட்டாள்*
ஆ) பெண்மணி: ஓராண்டு சம்பாத்தியம் ...
மணமகனுக்கு ரொக்கம்?

ii) அகிலவுலக நற்செய்திப்பணியுடன் இணைப்பு: மத் 26:14-16
எ.கா.) C.T. ஸ்டட்... எல்லாவற்றையும் மிஷனரிப்பணிக்கு ...
தனது மணப்பெண்ணுக்காய் வைத்திருந்ததையும்!

உங்கள் சபையின் பட்ஜெட் —
முக்கியச் செலவு எது?

ஜான் வெஸ்லி: ''தனது அங்கத்தினரல்லாதோரின் நலனுக்காய்ப்
பாடுபடும் ஒரே அமைப்பு திருச்சபைதான்!''
''உலகமே எனது சபை!''

- வெறுமனே தசமபாகம் மட்டும் கொடுக்கும் பழைய ஏற்பாட்டு மனப்பான்மையிலிருந்து வெளிவாருங்கள் —

அது கிறிஸ்துவிடம் நம்மை *''நடத்துவதற்காகவே''*
(கலா 3:24,25)
அங்கே துவங்கலாம், அங்கேயே தங்கக்கூடாது!

- அதே நாளில் ... யூதாஸ் உடன்பட்ட திட்டம்

மத் 26:13-13 ... *''அப்பொழுது''* ... (வச 14)
மாற் 14:9-11 ... *''அப்பொழுது''* (வச 10)

அந்தப் பெண்ணுக்கு: ஓராண்டுச் சம்பாத்தியம் கர்த்தரைவிடச் சிறியது.
யூதாசுக்கு: ஒரு மாதச் சம்பாத்தியம் கர்த்தரைவிடப் பெரியது.

6. பயமற்ற சாட்சி (Fearless Witness)

யோ 18:37 ... பிலாத்துவுக்குமுன் ...

அ) ஜெபத்தினால் — *உற்சாக ஆவி ... பலவீன உடல்* (மத் 26:39-41)

பேதுரு மும்முறை மறுதலித்தான் (மத் 26:40)
இயேசுவோ மும்முறை சாட்சியளித்தார் ...
''நான்தான் அவர்'' (யோ 18:4-8)

முழங்காலில் தோல்வி ...
பயமுறுத்தலால் ஒடிந்து போதல் ...
ஆதி அப்போஸ்தலர்... *''ஜெப வேளை''* (Hour of Prayer) (அப் 3:1)
''ஜெப வீடு'' (House of Prayer)

ஆ) ஆவியின் அபிஷேகத்தால் —
சபை கட்டுதலும் போராட்டமும் சேர்ந்தே நடக்கும் (மத் 16:18)
''பலத்தினாலும் அல்ல ... எனது ஆவியினாலேயே'' (சக 4:6)
ஆலயம் கட்டுதல் (வச 9)

ஆன்மீகப் போராட்டங்களுக்கு உதவாதவை ...
— புத்தி சாதுரியம் (Intellectual brilliance)
— பேச்சுத் திறன் (Oratorical skill)
— விஞ்ஞான அறிவு (Technological expertise)
— சமுதாய அந்தஸ்து (Social status)
— பணபலம் (Financial power)
— நிறுவனப் புகழ் (Institutional strength)

தீமோத்தேயுவை உற்சாகப்படுத்த இயேசுவைப் பவுல் சுட்டிக்காட்டினார் —
1 தீமோ 6:12,13 ... *பொந்திய பிலாத்துவுக்குமுன் ...*
எங்கும் துன்புறுத்தல்கள்.
இரத்த சாட்சிகளின் காலம் முடிந்துவிடவில்லை.

7. சிலுவைக் கள்ளன் (Dying Thief)

லூக் 23:39-43

• தனியாள் ஆத்துமாதாயம்
இயேசு ... நிக்கொதேமு
சகேயு
தொலைந்த ஆடு

அவர் எங்கும் தனியாள் ஆத்துமாதாயகராயிருந்தார்.

மனிதரை மனிதராய்ப் பார்க்க நமக்கு இரண்டாம் தொடுதல் தேவை; மனிதரை ஆத்துமாக்களாய்ப் பார்க்க நமக்கு மூன்றாம் தொடுதலும் தேவை (மாற் 8:22-25).

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை! (Each one, reach one!)

பொதுக்கூட்டங்களில் அதிகப்பணம் விரயமாகிறது —
நற்செய்திப் பொதுக்கூட்டங்கள் தடைசெய்யயப்படலாம்;
ஆனால் தனியாள் ஆத்துமாதாயப்பணியை யார் தடுக்கமுடியும்?

T.L. ஆஸ்போர்ன்: தனியாள் ஆத்துமாதாயப்பணியில் மறுமலர்ச்சி உண்டாவதே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைத் திரும்பக் கண்டுபிடிப்பதாகும்.

■ *முடிவுரை*

1. கிராமங்களுக்குச் சென்று மக்களைக் கட்டுகளிலிருந்து விடுவியுங்கள்.
2. திறந்த வெளிப் பிரசங்கங்கள் நடத்துங்கள்.
3. கட்டிடங்களில் அதிகப் பணம் செலவழிக்காதிருங்கள்.
4. உங்கள் வாழ்நாட்களைத் தேவன் கூட்டியுள்ளதேன் எனப் புரிந்துகொள்ளுங்கள்.
5. மிஷனரிப்பணிகளுக்குத் தாராளமாய்க் கொடுங்கள்.
6. பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருங்கள்.
7. தனியாள் ஆத்துமாதாயப்பணிக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

அப்பொழுதுதான்,
சிலுவையிலறையப்பட்ட இரட்சகர் *''தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியடைவார்''* (ஏசா 53:11)

95

அப்போஸ்தலரது நற்செய்திப்பணியின் இரகசியங்கள்

The Secrets of Apostolic Evangelism

முகவுரை

■ ஆதிச்சபையின் அமோக வளர்ச்சி —

அப் 1 — 120 சீடர் (1:15)
2 — 3000 (2:41)
4 — 5000 (4:4)
5 — திரளானோர் (5:14)
6 — மிகவும் பெருக்கம் (6:7)

நமக்கிருக்கும் வசதிகள் எதுவும் அவர்களுக்கில்லை, ஆனாலும் —

- 120 கிறிஸ்தவர்கள் எருசலேமை உபதேசத்தினால் நிரப்பினர்;
இன்றோ, 120 சபைகள் இருந்தாலும்
அவை கண்டுகொள்ளப்படுவதில்லை.
- அவர்கள் உலகைத் தலைகீழாய் மாற்றினார்கள்;
இன்றோ, உலகு நம்மைத் தலைகீழாய் மாற்றுகிறது.

அவர்களது வெற்றிக்கு இரகசியம் யாது?
நமது தோல்விக்குக் காரணம் யாது?
7 இரகசியங்கள்!

1. கிறிஸ்துவின் அதிகாரம்

கிறிஸ்துவின் ''பேராணை'' (மத் 28:18)
பேதுருவும் யோவானும் — *''யாருக்குக் கீழ்ப்படிவது?''* (அப் 4:19)
(அதிகாரிகள், மூப்பர், வேதபாரகர், ஆசாரியர் — 4:5,6)

முடவன் — *''இயேசுவின் நாமத்தில் ...''* (அப் 3:6)
அவர்களது ஜெபம் — அப் 4:24
''கர்த்தாவே, வானம், பூமி, கடல் யாவும் படைத்தவர் நீரே!''

தீமோத்தேயுவுக்குப் பவுல் (2 தீமோ 4:1,2)
''தேவன் ... கர்த்தர் ... இராஜ்யம்''

எ.கா.) ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தின்கீழ் —
சாதகம் — நூற்றுக்கதிபதி — *''நான் அதிகாரத்திற்குக்கீழ் ...''* (லூக் 7:8)

பாதகம் — எபேசுவில் ஸ்கேவாவின் ஏழு குமாரர் —
''இயேசுவின் நாமத்தில் ...'' (அப் 19:13-16)

- தனிப்பட்டவரது அர்ப்பணம்
''கர்த்தராகிய இயேசு (= இரட்சகர்) கிறிஸ்து (= மேசியா)''
(அப் 16:31)

2. ஆவியானவரின் வல்லமை

''பெறும்வரை காத்திருங்கள்'' (லூக் 24:47-49)
''எருசலேமை விட்டுப் போகக்கூடாது'' (அப் 1:4)
இயேசுவின் இறுதி வார்த்தைகள் (அப் 1:8)
ஆவியானவர் மூலம் *தைரியம்* (அப் 4:31)
சாட்சி பகர்வதில் பங்காளித்துவம் (அப் 5:32)
சபையார்மீது வல்லமை (அப் 10:44)
விசுவாசிகளிடம் முதல் கேள்வி (அப் 19:1,2)
ஆவியைப் பெறவே மனந்திரும்புதலும் திருமுழுக்கும் (அப் 2:38)
நடபடிகள் எங்கும் ஜெப ஆவி

நமக்குக் கட்டமைப்புகள் உண்டு, ஆவி இல்லை!
''பலத்தினாலும் அல்ல ... என் ஆவியினாலே ஆகும்'' (சக 4:6)

நிறுவனம் ... நிர்வாகம் ... செல்வாக்கு ... புத்திக்கூர்மை ...
அருள்மாரி → அறுவடை (எசேக் 34:26)

3. ஒருமனப்பாட்டின் பலம்

பெந்தெகொஸ்தே நாள் (120 சீடர்) (அப் 2:1)
ஒரே இருதயம் (5000 விசுவாசிகள்) (அப் 4:32,33)

குழுவாய்ச் செயல்படும் மனப்பான்மை —
எ.கா.) பேதுரு ''அத்துடன்'' யோவான் (3:1) — குணங்கள் வேறு.
பவுல் ''அத்துடன்'' பர்னபா ... பவுல் ''அத்துடன்'' சீலா

''இரண்டிரண்டு பேர்'' எனும் இயேசுவின் தத்துவம் (லூக் 10:1)
உலக அளவில் தாக்கம் ஏற்படுத்த — (யோ 13:35)

ஒரு குதிரை இழுப்பது — 2 டன்; 2 குதிரைகள் — 23 டன்
ஒருவன் → 1000 பேர் ... இருவர் → 10,000 பேர் (உபா 32:30)
5 பேர் → 100 பேர் ... 100 பேர் → 10,000 பேர் (லேவி 26:8)

- *ஒரே கர்த்தர் ...* ''ஒரே எதிரி'' என்பதையும் கூட்டினாலென்ன? (எபே 4:3-6)

4. முழுநேர ஊழியரல்லாதோரின் ஈடுபாடு (தன்னார்வலர்)

அப்போஸ்தலர் vs. உதவிக்காரர் (அப் 6:3-5)
ஸ்தேவான் (6:8) & பிலிப்பு (8:5)
அப்போஸ்தலர் தவிர ... (8:1,4)
அனைத்து விசுவாசிகளும் தீர்க்கதரிசிகள் (2:17,18)
அனைத்து விசுவாசிகளும் ஆசாரியர் (1 பேது 2:9)

எ.கா.) பழைய ஏற்பாட்டுச் சரித்திரம் — நாட்டளவில் தாக்கம் —

- யோசேப்பு — எகிப்து
- தானியேல் — பாபிலோன்
- நெகேமியா — ஆதிநிலையடைதல்

''ஒவ்வொருவரும் இன்னொருவரைச் சந்தியுங்கள்!''
"Each one, Reach one!"

இத்தத்துவம் பின்பற்றப்படுமானால்,

ஜனவரி	— 100 விசுவாசிகள்	ஜூலை	— 6400
பெப்ருவரி	— 200	ஆகஸ்டு	— 12,800
மார்ச்	— 400	செப்டம்பர்	— 25,600
ஏப்ரல்	— 800	அக்டோபர்	— 51,200
மே	— 1600	நவம்பர்	— 1,02,400
ஜூன்	— 3200	டிசம்பர்	— 2,04,800

தாங்குவோராய் மட்டுமல்ல; சேவகர் & ஆத்துமாதாயகராய்!

5. பாடுகளில் மகிழ்ச்சி

ஆத்துமாக்கள் அல்லது கல்லெறி அல்லது இரண்டும்!
ஸ்தேவானின் முகம் (அப் 6:15)
ஸ்தேவானின் தரிசனம் (அப் 7:54-56)
பரிசுத்த ஆவியில் மகிழ்ச்சி (அப் 13:49-52)
''பாடுபடத் தகுதியாய் எண்ணப்பட்டதில் மகிழ்ச்சி''

நாம் பாடுபடத் தகுதியான கர்த்தரைச் சேவிக்கிறோம்!
மனந்திரும்புவோரின் எண்ணிக்கையைத் துன்புறுத்தல் கூட்டும்!
எ.கா.) ஒடிசாவில் இரத்தசாட்சி: கிரஹாம் ஸ்டெயின்ஸ் (1999)
''கோதுமை மணி'' (யோ 12:24)

- பவுல் → தீமோத்தேயு
  ''நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி'' (2 தீமோ 2:3)
- பவுலின் சொந்த சாட்சி: அப் 20:22-24
  நகர்தோறும் சங்கிலிகள் ... ஆனால் சங்கீதம்
  சங்கிலியா? சங்கே முழங்கு!
- துன்புறுத்தல் இருப்பது அல்ல,
  இல்லாதிருப்பதே நம்மை வியக்கச்செய்யவேண்டும்!

6. செய்தியில் தெளிவு

எ.கா.) • பேதுருவின் பிரசங்கம் — அப் 2
சிலுவையிலறையப்படுதல் ... உயிர்த்தெழுதல் ...

- ஸ்தேவானின் பிரசங்கம் — அப் 7
  சிலுவை ... *(நீதிபரரைக் கொலை செய்தோர்)*
- பவுலின் பிரசங்கம் — அப் 17 (அத்தேனே)
  உயிர்த்தெழுதல் ... நியாயத்தீர்ப்பு

''வேறு நாமம் இல்லை'' — (அப் 4:12)
''அறியாமையின் காலங்கள்'' — விக்கிரகாராதனை, நியாயத்தீர்ப்பு ... (அப் 17:29-31)

சுவிசேஷத்தின் ரத்தினச் சுருக்கம் (1 கொரி 15:1-5)
விளங்காத சத்தமிடாதீர்! (1 கொரி 14:8)

கீழ்க்கண்டவை சுவிசேஷம் அல்ல —

புன்முறுவல் பூத்திடு ... இயேசு உன்னை நேசிக்கிறார்! ✕
இயேசுவிடம் வா ... பிரச்னைகள் பறந்துபோம்! ✕

குகைகளில் ஒரு செய்தியோடு கிறிஸ்தவம் துவங்கிற்று;
கத்தீட்ரல்களில் வெறும் பணத்தோடு அது முடிகிறது!

7. சாட்சியுள்ள வாழ்க்கை

இயேசு: *''உங்கள் நற்செயல்களைக் கண்டு ...''* (மத் 5:16)
கிறிஸ்தவரல்லாதோர் பைபிளை அல்ல,
நம்மையே வாசிப்பார்கள்!
அவர்கள் யாவருக்கும் பயமுண்டாயிற்று (அப் 2:42-44)
சுத்த மனச்சாட்சி ... பேலிக்ஸ் பயமடைந்து ... (அப் 24:16,25)

அன்னை தெரசா குறித்து அதிபர் பில் கிளின்ட்டன்:
''இவ்வித உயரிய வாழ்க்கைக்கு எதிராய் என்ன பேசுவது?''

- பரிசுத்த மனிதன் பரமன் கையில் பயங்கர ஆயுதம்!
பேசுவோர் நடப்போராகணும்! (Talkers → Walkers)

நம்முடையவை ''வார்த்தைகள்;'' அவர்களுடையவை ''நடபடிகள்!''

திருச்சபையைத் தேவன் உலகில் வைத்தார்;
உலகைச் சாத்தான் திருச்சபைக்குள் வைத்துவிட்டான்!

நாம்தான் உப்பு ... ஆனால் சாரம் இல்லையே!
நாம்தான் விளக்கு ... ஆனால் வெளிச்சம் இல்லையே!

சர்தை சபைக்குக் கிறிஸ்துவின் செய்தி —
''உயிருள்ளவன் என்று பெயர் ... ஆனால் செத்தவன்''
(வெளி 3:1-3) ... நினைவுகூர்ந்து திரும்பி வா!

■ முடிவுரை

1. Authority of Christ, 4. Involvement of Laity,
2. Power of the Spirit, 5. Joy in Suffering,
3. Strength of Unity, 6. Clarity of the Message,
7. Impact of Lifestyle.

லூக்கா 24 ... ''ஆமென்,'' ஆனால் அப் 28 ... ''ஆமென்'' கிடையாது!
அப்போஸ்தலர் 29 நம்மைப்பற்றி இருக்கட்டும்!

96

பரிசுத்த ஆவியானவரும் நற்செய்திப்பணியும்

The Holy Spirit & Evangelism

முகவுரை

தொலைந்துபோன மனிதனைத் தேவன் தேடுகிறார் —

- தேவன் தாமாகவே ஆதாமிடம் வந்தார் (ஆதி 3:8,9)
- தேவன் நியாயாதிபதிகள், தீர்க்கர், ராஜாக்களை அனுப்பினார்.
- தேவன் தமது குமாரனை அனுப்பினார் —
''இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும்''
- தேவன் தமது **ஆவியை** அனுப்பினார் — கடைசியாக!

ஆவியின் நிறைவை வலியுறுத்தும் சபைகளின் பொதுவான பலம் —
அ) கர்த்தரை உயர்த்துவது — ஆராதனை (Worship)
ஆ) விசுவாசிகளுக்குப் பக்திவிருத்தி — வசனம் (Word)

பொதுவான பலக்குறைவு —
இ) அகிலவுலக நற்செய்திப்பணி — சாட்சி (Witness)

ஆவியானவர் எவ்விதம் நற்செய்திப்பணிக்கு உதவுகிறார்:

1. ''ஜெபிக்க'' அவர் நம்மைப் பாரப்படுத்துகிறார்.

ரோ 9:1,2 / 10:1,2 ... *பரிசுத்த ஆவி ... மன வேதனை*
மத் 9:36-38 ... *ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள்*
எசேக் 36:37,38 ... *அவர்கள் விண்ணப்பம்பண்ணவேண்டும்*

உலகப்படங்கள் / மிஷனரிச் சுற்றறிக்கைகள் / செய்தித்தாள்கள் / மாநாடுகள் / வாழ்க்கை சரிதைகள் / களங்களுக்குச் சென்றுவருதல்

2. ''சாட்சி பகர'' அவர் நம்மைப் பலப்படுத்துகிறார்.

அப் 1:8 ... *வல்லமை ... சாட்சிகள்*
4:31 ... *பரிசுத்த ஆவி ... தைரியம்*
5:32 ... *நாங்களும் ஆவியானவரும் சாட்சிகள்*
10:38 ... *இயேசுவை அபிஷேகம்பண்ணினார் ...*
நன்மை செய்கிறவராய் ...

ஆவியின் வரங்களைப்பற்றிய விளக்கமானது (1 கொரி 12,13 & 14) சுவிசேஷத்தின் வரையறையில் முடிகிறது (15:1-5).

மிஷனரிப் பணிக்களங்களில் வல்லமை வெளிப்பாடு.
(Power encounter in mission fields)
பெந்தெகொஸ்தேக்கு முன்னும் பின்னும் பேதுரு (அப் 4:13)

3. ''புறப்பட்டுச் செல்ல'' அவர் நம்மை நடத்துகிறார்.

அப் 8:29 ... ஒரு தனி நபரிடம் (பிலிப்பு → எத்தியோப்பியன்)
10:19,20 ... ஒரு குடும்பத்திடம் (பேதுரு → கொர்நேலியு)
13:1-4 ... நாடுகளுக்கு (பவுல் & பர்னபா)

இலக்கியப் பணி
திறந்தவெளிப் பிரசங்கம்
கிராமப்புற நற்செய்தியறிவிப்பு
சந்திப்பு ஊழியங்கள்

4. ''கொடுப்பதற்கு'' அவர் நம்மைத் தூண்டுகிறார்.

அப் 2:44,45 4:34,35	ஆவியானவர் தேவனது மகத்துவத்தை நமக்கு வெளிப்படுத்தும்போது நமது உடைமைகளை அவர் பாதத்தில் போட்டுவிடுகிறோம்.

எ.கா.) யாத் 35:21,22 ... *இருதயம் எழுப்பி ... ஆவி உற்சாகம்*
36:4-7 ... தேவைக்கு அதிகமான காணிக்கை!

கொண்டுவருவதிலிருந்து மோசே மக்களை ''நிறுத்த'' வேண்டியிருந்தது!
C.T. ஸ்டட்: ''கிறிஸ்து எனக்காய் மரித்திருந்தால்,
எனது எந்தத் தியாகமும் பெரிதல்ல!''

5. ''அறுவடை செய்ய'' அவர் நமக்கு உதவுகிறார்.

அப் 2:17,18,21 ... *என் ஆவியை ஊற்றுவேன் ...*
கர்த்தர் நாமத்தைத் தொழுதுகொள்ளும் எவனும் ...

10:44,45,48 ... பேதுரு ... கொர்நேலியு

11:24 ... பர்னபா ... *அநேகர் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டனர்.*
ஆவியின் அருள்மாரி
ஆத்தும அறுவடைக்கு நடத்துகிறது!
(Outpouring → Ingathering)

6. ''பாடுபட'' அவர் நம்மைப் பலப்படுத்துகிறார்.

அப் 7:55-60 ... *ஸ்தேவான் ... ஆவியில் நிறைந்து ...*
கல்லெறியப்பட்டான்
13:50-52 ... அவரது பெயரே — *தேற்றரவாளன் —*
பரிசுத்த ஆவியினால் சந்தோஷம்
20:22-24 ... *ஆவியில் கட்டப்பட்டுச் செல்கிறேன் ...*
ஆவியானவர் சொல்லுகிறார் ...

7. சபைகள் ''வளர'' அவர் ஏதுவுண்டாக்குகிறார்.

அப் 9:31 ... *ஆவியின் தேறுதல் ... வளர்ந்து பெருகின*
20:28 ... எபேசு மூப்பர்
ஆவியானவர் கண்காணிகளாய் ஏற்படுத்தினார் ...
மேய்த்திடுங்கள்

■ *முடிவுரை*

வெளி 22:17 ...''*ஆவியும் மணவாட்டியும்*'' பாவிகளை
அழைக்கின்றனர்!

பணி இன்னும் நிறைவடையவில்லை!
அகிலவுலக நற்செய்திப்பணி இமயம் போன்றது;
ஆனால் அது பரிசுத்த ஆவியானவரின் துணையால்
சாத்தியமே— சக 4:6,7

Helps: 1. To Pray, 2. To Witness, 3. To Go, 4. To Give,
5. To Harvest, 6. To Suffer, 7. Churches to Grow

(83ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

97

இறையரசை விரிவாக்குவது எங்ஙனம்?

How to expand God's Kingdom

முகவுரை

- தேவனது பிள்ளைகள் எவரும் சோம்பேறியாய், எதுவும் செய்யாது, இருப்பது அவர் சித்தமல்ல —

 11ஆம் மணிக்குக்கூட ஆளெடுக்கிறார்! (மாலை 5 மணி)

- இறையரசின் விரிவாக்கப்பணியே நமது தலையாய கடமை —

☐ *''முதலாவது தேவ இராஜ்யம்''* ... (மத் 6:33)
''தேவ இராஜ்யத்தையே ...'' (லூக் 12:31)

☐ இயேசுவானவர் கற்றுத் தந்த ஜெபம் —
''உமது இராஜ்யம் வருவதாக!'' (மத் 6:10)

☐ உயிர்த்தெழுந்த இயேசு 40 நாட்கள் தமது சீடரோடு பேசியதெல்லாம் *''இராஜ்யத்தைப்''* பற்றியதே —
அப் 1:3

- ஆயினும், இறைப்பணி இறைப்பாணியில் செய்யப்படவேண்டும்!
 ''என்ன'' செய்கிறோம் என்பதல்ல, ''எப்படிச்'' செய்கிறோம்.
 ''அளவு'' அல்ல, தரம் (1 கொரி 3:11-15)

- இராஜ்யத்துக்கடுத்த ''உவமைகள்'' மூலம் இயேசு நமக்குத் திருப்பணியின் ''தத்துவங்களைத்'' தந்துள்ளார் —

 மத்தேயு 13இல் 7 உவமைகள் உண்டு.
 அவை ஒவ்வொன்றையும் படித்து இறையரசை விரிவாக்குவது எப்படி எனப் புரிந்துகொள்வோம்.
 ஒவ்வொரு உவமையிலிருந்தும் ஒரு சில படிப்பினைகள் —

1. விதைக்கிறவன் உவமை (Sower)

உவமை (மத் 13:3-9)
விளக்கம் (வச 18-23)

அ) நாம் வெளியே புறப்பட்டுச் **செல்லவேண்டும்** (வச 3).
 சுவிசேஷப்பணியின் இரகசியமே இதுதான் —
 "G–O–S–P–E–L" ... ***"G–O***–D"

 விண்ணில் தங்கிக்கொண்டு இயேசு நமக்காய் ஜெபிக்கவில்லை! எருசலேமில் தங்கிக்கொண்டு அப்போஸ்தலர் உலகிற்காய் ஜெபிக்கவில்லை!

 4 வட்டங்கள்:
 அப் 1:8
 எருசலேம் = உங்கள் நண்பரிடம் செல்லுங்கள்
 யூதேயா = தெருக்களுக்குச் செல்லுங்கள்
 சமாரியா = கிராமங்களுக்குச் செல்லுங்கள்
 உலகின் கடையெல்லை = உலகமெங்கும் செல்லுங்கள்

ஆ) விதைகளைத் தாராளமாய் விதையுங்கள்.
 நிலம் எப்படியென்று பார்த்துக்கொண்டேயிராதிருங்கள்.
 வழி நிலம் ... பாறை நிலம் ... முள் நிலம் ... நல்ல நிலம்

☐ *பெருக விதைக்கிறவன்* ... 2 கொரி 9:6

☐ *நாம் அறியோம்* ... பிர 11:1,2,5,6

☐ *அவர்கள் எங்கும் பிரசங்கித்தார்கள்* ... மாற் 16:20

தடைகளை மேற்கொள்ள வழிகள் —

☐ வழி நிலம் (மத் 13:19) ... *''உணராதிருக்கும்போது''*
— நினைப்பூட்டுதல், கூடுதல் விளக்கம் தருதல்

☐ பாறை நிலம் (வச 20,21) ... *''உபத்திரவம்''*
— ஊக்குவிப்பு —
எல்லாப் பிரச்னைகளையும் இயேசு நீக்குகிறார்
எனும் துர்வுபதேசத்தைத் திருத்துங்கள்.

☐ முள் நிலம் (வச 22) ... *''உலகக் கவலை, செல்வம்''*
— செல்வத்தின் மயக்கத்திற்கு எச்சரிக்கை

☐ 30 மடங்கு, 60 மடங்கு ... (வச 23)
— இன்னும் உயரமாய், ஆழமாய்ச் சென்று
100 மடங்கை எட்டுதல்

இ) விதைப்பது ''நல்ல விதையா'' எனப் பார்த்துக்கொள்ளுங்கள் —
 *''இராஜ்யத்தின் **வசனம்**''* (வச 19)

சுத்த சுவிசேஷத்தின் வரையறை: 1 கொரி 15:1-5

- நமது பாவ நிலை ... *''நமது பாவங்கள்''*
- கிறிஸ்துவின் பலி ... *''மரித்தார் ... அடக்கம்பண்ணப்பட்டார்''*
- புது வாழ்வு ... *''உயிர்த்தெழுந்தார்''*
- தனிப்பட்ட அனுபவம் ... *''கேபாவுக்கு ... எனக்கு''*
- திருவார்த்தையில் விசுவாசம் ... *''வேத வாக்கியங்களின்படி''*

கதைகளும் தத்துவங்களுமல்ல —
வயலில் வைரத்தை விதைத்தால் அது முளைக்குமா?

2. *களைகள் உவமை* (Tares)

உவமை மத் 13:24-30
விளக்கம்: வச 36-43

அ) நீங்கள் சந்திக்கும் ஆத்துமாக்களை விழிப்புடன் காத்திடுங்கள்.
அதாவது, முறையான தொடர்பணி —
''மனிதர் நித்திரைபண்ணுகையில்'' (வச 25)

☐ அவர்களுக்காய்த் தவறாது ஜெபியுங்கள்.
பெயர்களைக் குறித்து வைத்து ஜெபியுங்கள்.
பவுல் அப்படிச் செய்தார் (எபே 1:15,16)
(2 தீமோ 1:3)

☐ அவர்களுக்கு உபதேசியுங்கள் (மத் 28:20)
அடிப்படைச் சத்தியங்களைப் போதியுங்கள்.
ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டுங்கள் (அப் 20:31)
ஜெபிக்கக் கற்றுக்கொடுங்கள்.
எ.கா.) யோவான், அடுத்து இயேசு (லூக் 11:1-4)
எல்லாம் அவர்களுக்குத் தெரியுமென்று நினைத்துவிடாதீர்கள்.

ஆ) நற்செய்திப்பணி ஒரு போராட்டம்.
''சத்துரு இதைச் செய்தான்'' (மத் 13:28)
சபை கட்டுதலும் போராட்டமும் (மத் 16:18)

எபேசுவில் ஒரு சிக்கலான நிலையைப் பவுல் கையாண்ட விதம்—
அப் 19:8-10
இந்தியாவில் மற்ற மதங்களிலும் எழுச்சி உண்டு.

3. *கடுகுவிதை உவமை* (Mustard Seed)

மத் 13:31,32

அ) இறையரசு சிறிய துவக்கங்களுக்குப் பெயர் பெற்றது —
சக 4:9,10 ... *அற்பமான ஆரம்பத்தின் நாள்*

தனது தொழில்கள், வியாபாரங்களுக்கு ''பிரமாண்டமான துவக்கம்''
வேண்டுமென்பது உலகின் கருத்து;
தேவனது பணியிலோ,

பிரமாண்டம் பிரமாதமல்ல;
சிறியது சீரற்றதல்ல.

எ.கா.) ஏசா 11:1 ... *அடிமரத்திலிருந்து துளிர்*
மீகா 5:2 ... *ஆயிரங்களில் சிறிய பெத்லகேம்*
ஏசா 41:14,15 ... *''புழு''* போன்ற யாக்கோபு
வலிய *''ஆயுதம்''* ஆகிறான்
லூக் 12:32 ... *சிறு மந்தை ... இராஜ்யம் ...*

ஆ) உங்களிடமிருப்பதைப் பயன்படுத்தத் துவங்குங்கள் —
''அதை நிலத்தில் விதைத்தான்'' (மத் 13:31)

☐ அது ஒரு கோலா ?
எகிப்தியரிடம் தேவ வல்லமையை நிரூபிக்க எறியுங்கள்.

☐ அது ஒரு தாடையெலும்பா?
பெலிஸ்தியரை முறியடிக்க அதைப் பயன்படுத்துங்கள்

☐ அது ஒரு கவணா?
கோலியத்தை வீழ்த்த அதை எடுங்கள்.

☐ அது ஐந்தப்பம் இருமீன்தானா?
திரள்களுக்கு உணவளிக்க அதைக் கொடுத்துவிடுங்கள்.

அந்த ''ஒரு தாலந்து'' நபர் போலிராதீர்கள் (மத் 25:24-30)

சிறியவன் ஆயிரமாவான் (ஏசா 60:22)

4. *புளித்த மாவு உவமை* (Leaven)

மத் 13:33

முழு உவமையை ஒரே வாக்கியத்தில் சொல்லிவிட்டார் இயேசு!
— தன்னிகரற்ற போதகர்!

அ) உண்மையான ஊழியம் பகட்டில்லாது மறைந்து செயல்படும் —
ஏசா 6:1,2 ... *மூடிக்கொண்டு ... மூடிக்கொண்டு ...*

பகட்டொளியை (limelight) இச்சிக்காதிருங்கள்.

எ.கா.) இருதயம், சிறுநீரகங்கள், மூளை, ஈரல் ...
இவையெல்லாம் மறைந்திருப்பவை,
ஆனால் அத்தியாவசியமானவை.

விண்ணகத்தில் பரிசுகள் வழங்கப்படுகையில்,
பல ஆச்சரியங்கள் இருக்கும் —

முந்தினோர் பிந்தினோராயும்,
பிந்தினோர் முந்தினோராயும் இருப்பர்!

ஆ) நட்புத் தொடர்பு (friendship) மூலம் நற்செய்தியைப் பரப்புவது
அமைதியாயிருந்தாலும் அமோக விளைச்சல் தரும் —

''அது முழுவதும் புளித்தது''
அடையாளப்படுத்துதல் ... ஒன்றித்துவிடுதல் ...

இதை ''உப்பு'' போன்ற ஊழியம் எனலாம் —
பாட்டிலில் குலுக்கப்பட்டு தூவப்படவேண்டும்.
நற்செய்தியால் இடங்களை நிரப்பிவிடுவது —

எ.கா.) தெசலோனிக்கேயா விசுவாசிகள்
(1 தெச 1:8)

இ) பலங்குன்றியவர்களையும் தேவன் பயன்படுத்துகிறார் —
''ஒரு பெண்மணி''
1 கொரி 1:26-29 ... *அறிவு குறைந்தவர்*
பலம் குறைந்தவர்
செல்வாக்கு குறைந்தவர்

5. *புதைந்திருந்த பொக்கிஷம் உவமை* (Hidden Treasure)

மத் 13:44

- மறைந்திருக்கிற (மறக்கப்பட்டிருக்கிற) மக்களைத் தேடுங்கள் —
இவர்கள் வெளியுலகில் காணப்படாதவர்கள் —

விரும்பப்படாதோர்	Disliked
குடிகாரர்	Drunkards
போதை அடிமைகள்	Drug addicts
ஊனமுற்றோர்	Disabled
துன்மார்க்கர்	Debaucherers
முதலியோர்	etc.

அதாவது, *''மரண இருளில்'' உட்கார்ந்திருப்போர்* —
மத் 4:12-17 ... *இயேசு நாசரேத்திலிருந்து நப்தலிக்கு ...*

யோவானின் தலை போய்விட்டது —
இப்பொழுது இன்றையத் தலைமுறைக்கு நாம்தான் பொறுப்பு!

இவ்விதப் பணிக்குப் பகட்டு இருக்காது, பரவசம் இருக்கும்.
''சந்தோஷத்தினாலே போய் ...'' (மத் 13:44)

6. *முத்துக்கள் உவமை* (Pearls)

மத் 13:45,46

இறையரசுப் பணிக்குத் தியாகம் இன்றியமையாதது.

முந்திய உவமையிலும் இதிலும் *''எல்லாவற்றையும் விற்று''*
என்றிருக்கிறது (வச 44,46)

இத்தியாகம் இரு காரியங்களைப் போதிக்கிறது —

அ) நம்மை மீட்டெடுக்க இயேசுவின் தியாகம் —
அப் 20:28
கிறிஸ்துவிடம் ஒரு நபரை நாம் நடத்தும்போதெல்லாம்
அதற்குரிய பாராட்டை நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது;
கிறிஸ்துவே தமது இரத்தத்தைக் கிரயமாய்ச் செலுத்தியுள்ளார் —

இவ்வித உணர்வே நமது ஊழியத்தில்
சிலுவையை மையமாய் வைத்துக்கொள்ள உதவும்.

''சிலுவையைக் குறித்தே மேன்மை'' (கலா 6:14)

ஆ) நமது வாழ்விலும் ஊழியத்திலும் தியாகம் நிறைந்திருக்கவேண்டும் —

2 கொரி 12:15 ... *செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும்*

7. மீன் வலை உவமை (Fishnet)

மத் 13:47-50

அ) சுவிசேஷம் இவர்களுக்கெல்லாம் பிரசங்கிக்கப்படும் —

எல்லா நாட்டினருக்கும்,
எல்லா மொழியினருக்கும்,
எல்லா மக்களினங்களுக்கும், ...

''சகலவித மீன்களை வாரிக்கொள்ளும்'' (வச 47)

கம்யூனிச உலகு கீறிவிட்டது.

இந்து & முஸ்லீம் உலகங்கள் அசையாது நிற்கின்றன.

நற்செய்திப்பணியின் இந்த இறுதிக் கட்டத்தில் நமது இதயங்களையும், தலைகளையும், கரங்களையும் இணைப்போம்!

''தண்ணீரினால் கடல் நிறைந்திருப்பதுபோல் பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்'' (ஆப 2:14)

சுவாரஸ்யமாக,
மத்தேயு 13ஐக் ''**கடல்** பிரசங்கம்'' எனலாம் (வச 2)

■ *முடிவுரை*

இந்த 7 உவமைகளையும் சொன்ன பின்பு,
இயேசு தமது சீடரிடம் கேட்டது —
இவைகளையெல்லாம் அறிந்து(புரிந்து)கொண்டீர்களா? (வச 51)

நமது பதிலும் *''ஆம், ஆண்டவரே''* என்றால்,

''பழையதும் புதியதுமான'' *பொக்கிஷங்கள்* (வச 52) போன்ற இச்சத்தியங்களை அப்பியாசித்து இறையரசின் விரிவாக்கத்திற்காய் அயராது உழைப்போம்!

(161ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

98

சுவிசேஷத்தைப் பிரபலமாக்குவது எங்ஙனம்?

How to further the Gospel

(பிலிப்பியர் நிருபத்திலிருந்து படிப்பினைகள்)

முகவுரை

சுவிசேஷப் பிரபல்யமே **பிலிப்பியருக்குப்** பவுல் எழுதிய நிருபத்தின் முக்கிய கருத்துக்களில் ஒன்று —

எ.கா.) முதல் அத்தியாயத்திலேயே —

''சுவிசேஷத்திற்கு உடன்பட்டவர்கள்'' (வச 3)
''சுவிசேஷத்திற்காக உத்தரவு (விளக்கம்)'' (வச 7)
''சுவிசேஷப் பிரபல்யம்'' (வச 12)
''சுவிசேஷத்திற்கு ஏற்ற நடக்கை'' (வச 27)
''சுவிசேஷத்திற்காகப் போராட்டம்'' (வச 27)

சிறையிலிருந்து பவுல் இக்கடிதம் எழுதுகிறார் —
''சுவிசேஷத்திற்காகவே'' அவர் அங்கு அடைபட்டிருக்கிறார்.

சுவிசேஷத்தைப் பிரபலமாக்குவது எங்ஙனம்?

1. சுவிசேஷத்திற்கு ஏற்றபடி நடந்திடுங்கள்.

1:27 ... *நடக்கை*
2:1-8 ... *மனத்தாழ்மை & ஒருமனம்*
:12-16 ... *குற்றமின்மை ... கபடின்மை*
4:8,9 ... பிறரைக் குறித்து நல்லெண்ணம் கொள்ளுதல்

பொன்மொழிகள்:

''ஆயத்தப்படுத்தப்பட்ட பிரசங்கத்தைவிட ஆயத்தப்படுத்தப்பட்ட பிரசங்கியாரே முக்கியம்!'' — ராபர்ட் முங்கர்

''பாவத்தில் வாழ்பவன் குளிர்ந்து போவான்;
அனலற்ற பிரசங்கிமார் அசையாத பாவிகளை உண்டாக்குவர்;
நடக்கையைப்போல் வாயைக் கட்டுவது எதுவுமில்லை!''
— D.L. மூடி

2. கர்த்தரை எப்பொழுதும் மகிழ்ச்சியோடு துதியுங்கள்.

3:1-7 ... மாம்சத்தின்மீது நம்பிக்கையின்மை.
தன்னையே உயர்த்தாது
கிறிஸ்து முடித்த மீட்பின் பணியில் மகிழ்வது.

தன்னைத் தாழ்த்துவதும் ஆண்டவரை ஆராதிப்பதும்
சேர்ந்து செல்லும் —

எ.கா.) ஏசாயா
யோபு

4:4-6 ... இக்கட்டான வேளைகளில் பதறாமை

சாத்தானின் தோல்வியையும், பிசாசின் அந்தகார சக்திகள்
கவிழ்ந்ததையும் ஆராதனை ஒவ்வொரு முறையும் அறிவிக்கிறது.

எ.கா.) போர்க்களத்தில் தேவனைப் போற்றுதல் (2 நாளா 20:5 -22)

படைவீரருக்கு முன்னர் பாடகர்!
இருப்பாயுதங்களுக்கு முன்னர் இசைக்கருவிகள்!

3. நீங்களே சாட்சி பகருவதில் விறுவிறுப்பாயிருங்கள்.

நற்செய்திப்பணி குறித்துப் பேசிக்கொண்டிருந்தால் போதாது.
கூட்டங்கள் நடத்தினாலும் போதாது.

1:14 ... விசுவாசிகளில் அநேகரது *துணிவு*
2:14,15 ... *ஜீவ வசனச் சுடர்கள்*
4:2,3 ... சகோதரிகள் *எயோதியாள், சிந்திகேயாள் ... பிரயாசம்*

நீங்கள் கிறிஸ்தவர் என்பதற்காய்க் கைது செய்யப்பட்டால்.
உங்களைக் குற்றவாளியாய்த் தீர்க்கப் போதுமான
நிரூபணம் இருக்குமா?

4. தன்னலமும் பொருளாசையும் இல்லாது தொண்டாற்றுங்கள்.

2:19-22 ... தீமோத்தேயு
:25-30 ... எப்பாப்பிரோதீத்து
:17 ... பவுல்
3:18,19 ... உலகுக்கடுத்தவைகளையே சிந்திக்கும் ஊழியர்

பொன்மொழி:

''சுவிசேஷமே ஒரு தியாகத்தின் செய்தி;
தன்னலக்காரன் அதை எப்படிப் பிரசங்கிக்க முடியும்?''

கிறிஸ்துவின் பாடசாலையில் முதல் பாடமே தன்னல மறுப்புதான்!
(லூக் 9:23) — மேத்யூ ஹென்றி (1662-1714)

5. உங்களது பொருட்களைத் தாராளமாய்ப் பிறரோடு பகிருங்கள்.

4:10 ... *விசாரிப்பு ... மனமலர்ச்சி*
:14-19 ... *கொடுக்கல் ... வாங்கல் ... என் குறைச்சல் ...*

எ.கா.) ஜார்ஜ் முல்லரே தனது ஊழியத்திற்கு நிறைய கொடுத்தார்.
C.T. ஸ்டட் தனது சொத்து யாவற்றையும் மிஷனரிப்பணிக்குக்
கொடுத்துவிட்டார்.

பிலேயாம் சரியான தீர்க்கதரிசனம் சொன்னாலும் அவனது இதயமோ
அநீதத்தின் கூலியின்மீதே இருந்தது (2 பேது 2:15; யூதா 11)

நமது சபைகளில் பல பிரச்னைகள் பொருளாசையினாலேயே.
நடபடிகளில் தண்டிக்கப்பட்ட முதல் பாவம் பொருளாசையே.
சபைகளின் மிஷனரித் தரிசனத்தைத் திருடியது பொருளாசையே.

பொன்மொழி:

எத்தனையோ பாவ அறிக்கைகள் கேட்டிருக்கிறேன்;
ஒருவர்கூட ''பொருளாசையை'' அறிக்கை பண்ணவில்லை!
— பிரான்சிஸ் சேவியர் (கத்தோலிக்கப் பாதிரி)

6. பிறரது ஊழியங்களிலும் மகிழுங்கள்.

1:15-18 ... *கிறிஸ்து பிரசங்கிக்கப்படுகிறார் ... மகிழுவேன் ...*

உங்கள் சபையில் 5 பேர் சேர்ந்துவிட்டால் குதிக்கிறீர்களே;
அடுத்த சபையில் 50 பேர் சேர்ந்துவிட்டால் முகம் சுளிக்கிறீர்களே!

அடுத்தவர் ஊழியத்தின்மீது பொறாமை கொள்ளாதீர்.
பொறாமையே கிறிஸ்துவைச் சிலுவையிலறைந்தது.
உலகில் முதல் யுத்தம் — மார்க்க யுத்தம் — பொறாமையே
காரணம். காயீன் ... ஆபேல்

''யார் குத்தினாலென்ன, நெல் அரிசியானால் போதாதா?''
— இந்த மனப்பான்மை கொள்ளுங்கள்.

பொன்மொழி:

''அடுத்தவரது அழைப்பின்மீது பொறாமை நமதை அழித்துவிடும்!''
— வாட்ச்மேன் நீ (1903-1972)

7. இன்னலையும் துன்புறுத்தலையும் பொறுமையாய்ச் சகித்திடுங்கள்.

1:12-14 ... *என் கட்டுகள்*
:27-30 ... *எதிர்க்கிறவர்கள் ... பாடு ... போராட்டம்*

பச்சை மரம் vs. *பட்ட மரம்* (லூக் 23:31)
நம்மைச் சுத்தமாக்கச் சோதிப்பின் குகை.

ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணத்தைப் பார்த்துக்கொண்டிருந்த சவுலின் இருதயம் ஆயத்தப்பட்டுவிட்டது!

நிலத்தில் விழுந்த ''கோதுமை மணி.''

பொன்மொழி:
''நாமனைவரும் இரத்தசாட்சிகளாய் மரிக்க அழைக்கப்படாதிருக்கலாம்; ஆனால் பாடுபட மனது ஆயத்தமாயிருக்கவேண்டும்''
— வாட்ச்மேன் நீ (1903-1972)

வாசியுங்கள்: *"Foxe's Book of Martyrs"*

■ *முடிவுரை*

கிறிஸ்துவின் நாள் சமீபம் (1:5,11)
முழங்கால் யாவும் ... நாவுகள் யாவும் ... (2:10,11)

சுவிசேஷப் பிரபல்யத்தில் உண்மையாகவே கரிசனைகொண்டால், கீழ்க்கண்டவற்றிற்கு உங்களை அர்ப்பணியுங்கள் —

1. சாட்சியான நடக்கை
2. மகிழ்ச்சியான தொழுகை
3. தனிப்பட்ட ஈடுபாடு
4. தன்னலமற்ற சேவை
5. தாராளப் பகிர்வு
6. பரஸ்பர பாராட்டு
7. பொறுமையான சகிப்பு

(112ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

1903இல் பேராயர் சாமுவேல் அசரியா, 1874-1945, அவர்கள் நிறுவிய இந்திய மிஷனரிச் சங்கத்தின் (IMS) மாதாந்திரப் பத்திரிகையின் பெயர் *''சுவிசேஷப் பிரபல்ய வர்த்தமானி''* என்பது!

99

தேவனுக்காக எப்படிச் செல்லவேண்டும்?

How should we "GO" for God?

முகவுரை

மாற் 16:15-20
*''அவர்கள் எங்கும் **புறப்பட்டுப்** போனார்கள் ...*
*கர்த்தர் அவர்களுடனேகூடச் **செயல்பட்டு** ...*
*அடையாளங்களால் **வசனத்தை** உறுதிப்படுத்தினார்''*

- *எருசலேமைத் தங்கள் உபதேசத்தால் நிரப்பினர்* (அப் 5:28)
- *உலகைத் தலைகீழாய் மாற்றினர்* (அப் 17:6)

இது அகிலவுலகத் தாக்கம்! (World impact)

நாம் யாவருக்கும் வரும் ஆணை: ''செல்லுங்கள்!''
G–O! G–O–S–P–E–L
G–O–D

எப்படிச் செல்லவேண்டும்?

1. கவர்ச்சிகரமாய்ச் செல்லுங்கள். (Attractively)

''பிரசங்கம் என்பது வெறும் அறிவிப்பு அல்ல;
அதுவே வாழ்க்கையாயிருக்க வேண்டும்!'' — அன்னை தெரசா

கவர்ச்சிகர நபராயிருங்கள் —

- *அன்புள்ளவராய்* இருங்கள்
  நட்பு → ஐக்கியம் (Friendship → Fellowship)
  பிரியமானது நடப்பதால் அல்ல, நடக்காவிட்டாலும்...
- *மகிழ்ச்சியுள்ளவராய்* இருங்கள்.
  புன்முறுவல்
  இறுக்கமின்மை
- *சமாதானம்* விரும்புகிறவராய் இருங்கள்.
  சமாதானம்பண்ணுகிறவர்கள்.
  குழப்பங்களுக்கு நிவாரணம் தாருங்கள்.

- *பொறுமையுள்ளவராய்* இருங்கள்.
  குணநலன்களின் மகுடம்.
  சகிப்பு மட்டுமல்ல, ஏற்பு
- *தயவுள்ளவராய்* இருங்கள்.
  எல்லாரும் புண்பட்டிருக்கின்றனர்.
  பிரதிபலிப்பு இல்லையெனினும் உதவுங்கள்.
- *நற்குணமுள்ளவராய்* இருங்கள்.
  குதர்க்கம் வேண்டாம்.
  கபடற்றவராய்ப் பழகுங்கள்.
- *நம்பகமுள்ளவராய்* இருங்கள்.
  உண்மை, உத்தமம், நேர்மை ...
- *சாந்தமுள்ளவராய்* இருங்கள்.
  கண்டிப்பு, ஆனால் மென்மை.
  நெருங்கிப்பழக எளிதானவர்.
- *தன்னடக்கமுள்ளவராய்* இருங்கள்.

இவ்வித நபர்தான் **கனிநிறை** நபர் (கலா 5:22,23)
வெறும் பூக்கள் அல்ல, பழங்கள்!

2. அனுபவத்தோடு செல்லுங்கள். (Experientially)

இயேசுவோடு நெருங்கிய தியான உறவு.
தேவனோடு உயிர்த்துடிப்புள்ள தொடர்பு —

எ.கா.) நிக்கொதேமுவிடம் இயேசு:
''நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லுறோம்''
(யோ 3:11)

பேதுரு: *''அவரது மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டோம்''*
(2 பேது 1:16)

யோவான்: *''நாங்கள் கண்டதையும் கேட்டதையும்...''*
(1 யோ 1:3)

பவுல் அடிக்கடி சொன்னது: ***''என்''*** *சுவிசேஷம்*
(ரோ 2:16; 2 தீமோ 2:8)

துவக்கத்திலிருந்த பரவசத்தை இழக்காதீர்;
இரட்சிப்பின் மகிமையைத் தியானித்தவண்ணமிருங்கள்.
எ.கா.) வழுக்குத் தலையனா கூந்தல் தைலம் விற்பது?

3. ராஜநடைபோட்டுச் செல்லுங்கள். (Royally)

தாழ்வு மனப்பான்மை வேண்டாம்.
சிறுபான்மை மனப்பான்மையும் வேண்டாம் —
''சிறுமந்தை ... இராஜ்யம்'' (லூக் 12:32)

உங்கள் மனப்பான்மை ராஜரீகமாயிருக்கட்டும்!
ஆத்துமாதாயகன் = அரசுத் தூதுவன் (Ambassador)

''இராஜாதி இராஜாவின்'' பெயரால் சாட்சி பகர
தீமோத்தேயு ஆணை பெற்றான் —
1 தீமோ 6:12-16 ... *பொந்தியு பிலாத்து ... ராஜாதி ராஜா*
2 தீமோ 4:1,2 ... *கட்டளையிடுகிறேன் ... பிரசங்கம்பண்ணு*
தீமோத்தேயு பயந்த சுபாவமுள்ளவன்தான்!

நற்செய்திப் ''பேராணை'' — நாம் ''ஆணையரின்'' அதிகாரிகள்
(Commissioned Officers)

எ.கா.) பவுல் — ஒரு கூடாரத்தொழிலாளியின் மனப்பான்மை:
''நாங்கள் ராஜ தூதுவர்'' (2 கொரி 5:18-6:2)
பேதுரு — ஒரு மீனவனின் மனப்பான்மை:
''ராஜரீக ஆசாரியக் கூட்டம்'' (1 பேது 2:9)

இன்று இயேசுவை எள்ளி நகையாடும் ராஜாக்கள்
நாளை எள்ளி நகையாடப்படுவர் — சங் 2
மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ,
சுவிசேஷத்தை உள்ளபடியே அறிவியுங்கள்.
அது மகாராஜாவிடமிருந்து வந்த செய்தி —
கூட்டாதே ... குறைக்காதே ... மாற்றாதே!

4. அஞ்சாது செல்லுங்கள். (Fearlessly)

இயேசுவிடம்: *உம்மைக் கல்லெறியத் தேடுகிறார்கள் ...*
பகலுக்குப் 12 மணி நேரம் இல்லையா? (யோ 11:7-10)

பவுலிடம்: செசரியாவில்
தீர்க்கன் அகபுவும் 4 தீர்க்கதரிசினிகளும் (அப் 21:8-14)
''கட்டப்படவும் மரிக்கவும் ஆயத்தம்''

கர்த்தர் உங்களுக்கு *முன்னே* இருக்கிறார் (மீகா 2:13) (before)
கர்த்தர் உங்களுக்குப் *பின்னே* இருக்கிறார் (ஏசா 30:21) (behind)
கர்த்தர் உங்களுக்கு *மேலே* இருக்கிறார் (உபா 32:11) (above)
கர்த்தர் உங்களுக்குக் *கீழே* இருக்கிறார் (உபா 32:11) (beneath)
கர்த்தர் உங்களைச் *சுற்றிலும்* இருக்கிறார் (சங் 125:2) (around)
கர்த்தர் உங்கள் *உடன்* இருக்கிறார் (மத் 28:20) (with)
கர்த்தர் உங்களுக்கு *உள்ளே* இருக்கிறார் (கொலோ 1:27) (within)

ஏழு பரிமாணப் பாதுகாப்பு.
வானவில் பாதுகாப்பு.

''பாதுகாப்பை'' தேவன் அகற்றுவாரானால், அது பதவியுயர்வு!
எ.கா.) ஸ்தேவான்

எஸ்தரின் துணிச்சலான செயலால்,
யூதருக்கு *''மகிழ்ச்சி ... களிப்பு ... கனம்''* (எஸ்தர் 8:16,17)

5. *விரைந்து செல்லுங்கள்.* (Quickly)

"Evangelize" (= நற்செய்தியறிவி) ... ஒரு கிரேக்கச் சொல்

யுத்தத்திலிருந்து செய்தியை ஒருவன் கொண்டுவருவான்;
அவன் எப்படி வருகிறானென்று மக்கள் பார்க்க விரும்பி நிற்பர்;
அவன் ''நடந்து வந்தால்,'' நல்ல செய்தி இல்லை;
அவன் ''ஓடி வந்தால்,'' நல்ல செய்தி!

தூள் பறத்திக்கொண்டு வருவான்!
எனவேதான், *''பாதங்கள் எவ்வளவு அழகு!''*
(ஏசா 52:7; ரோ 10:15)

யோ 9:4,5 ... ***இரவு*** *வருகிறது ...*
நான் உலகிலிருக்கும்வரை ...
நான் ***வேலை*** *செய்யவேண்டும்*

உலக நிகழ்வுகளைப் புரிந்துகொள்வது நம்மை
நற்செய்தியைச் சுமந்து ஓடச் செய்யும்.

செய்தித்தாள்களைத் தவறாது வாசியுங்கள்.
ஒரு கையில் பைபிள், மறு கையில் செய்தித்தாள்!
எ.கா.) ரூத் பில்லி கிரஹாம்: ''தினசரி செய்தித்தாள்தான்
எனது ஜெபக் கையேடு!''

எவ்வளவு தூரம் போகமுடியுமோ அவ்வளவு ...
எவ்வளவு முட்டிக்கொண்டு போகமுடியுமோ அவ்வளவு ...
எவ்வளவு வேகமாய்ப் போகமுடியுமோ அவ்வளவு ...
(as far as ... as forcibly as ... as fast as ...)

6. *தியாகமாய்ச் செல்லுங்கள்.* (Sacrificially)

- ஒரு கம்யூனிஸ்ட் கொடுத்த சாட்சி —

  எட்டு மணி நேரம் என் கட்சிக்காய்ச் சம்பாதிக்கிறேன்
  எட்டு மணி நேரம் என் கட்சிக்காய் உழைக்கிறேன்
  எட்டு மணி நேரம் என் கட்சிக்காய்க் கனவு காண்கிறேன்

- யோவான் ஸ்நானகன் —

  ''எரிந்து ... பிரகாசிக்கும்'' ஒளி (யோ 5:35)
  ''நான் சிறுகணும், அவர் பெருகணும்'' (யோ 3:30)
  உங்கள் சொந்த சாம்ராஜ்யம் கட்ட கனவிலும் எண்ணாதீர்!

- *''கேம்பிரிட்ஜ் வாலிபர் எழுவர்''* (Cambridge Seven)

  இந்நூலின் ஆசிரியர்: ஜான் பொள்ளாக்
  அவர் எழுதியுள்ளது —
  இது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து சீனாவுக்கு
  மிஷனரியாகச் சென்று தேவனால் பயன்படுத்தப்பட்ட
  ஏழு வாலிபரின் சரிதை.

கடைசிப் பக்கத்தில் —
இது சாதாரண வாலிபரின் சரித்திரம்;
இப்படி மறுபடியும் நிகழலாமே!

கடினமான வேலைகளைத் தெரிந்தெடுங்கள்.
கடினமான இடங்களுக்குச் செல்லுங்கள்.

அப்படியே, ஜிம் எலியட்:

''இழக்கக்கூடாததைப் பெற்றுக்கொள்வதற்காக,
வைத்திருக்க முடியாததை இழக்கிறவன் முட்டாள் அல்ல.''

தேவன் தரும் சவால்:
''மலைக்குப் போய் மரங்களைக் கொண்டுவந்து
என் ஆலயத்தைக் கட்டுங்கள்!'' (ஆகாய் 1:8)

7. *மகிழ்வுடன் செல்லுங்கள்.* (Joyfully)

ஆத்துமாதாயகருக்கு ஆசீர்வாதங்கள்:

- கிறிஸ்துவோடு நெருக்கமான ஐக்கியம் —
  மத் 28:19,20
- இன்னும் அதிகம் கனி கொடுக்கச் சுத்திகரிப்பு —
  யோ 15:2
  உபா 20:19,20 ... *ஒரு பட்டணத்தைப் பிடிக்கும்போது அதின் கனிமரங்களை வெட்டாதே ... மற்றவைகளை வெட்டு*
- திருமறையைக் கூடுதலாய்ப் புரிதல் —
  வேதத்தை அடிக்கடி பயன்படுத்துவதால்
  ஆத்துமாதாயகருக்கு வேத அறிவு அதிகரிப்பு.
- அவர்கள் சாதகவாதிகளாயிருப்பர்:
  ஹட்சன் டெய்லர் சொன்னது —
  இறைப்பணி எதிலும் மூன்று கட்டங்கள் ...
  கட்டம் 1: இது முடியாதது. (Impossible)
  கட்டம் 2: இது கடினம். (Difficult)
  கட்டம் 3: செய்தாயிற்று! (Done!)
- கிறிஸ்து வரும்போது அரும் பரிசுகள் —
  அ) நம்மூலம் மனந்திரும்பியோர் நமது *கிரீடங்கள்* (1 தெச 2:19)
  ஆ) நாம் *நட்சத்திரங்கள்* ஆவோம் (தானி 12:2,3)

■ *முடிவுரை*

செல்லுங்கள் ... செல்லுங்கள் ... சென்றுகொண்டேயிருங்கள்!
முடிவில் மேலே சென்றுவிடுவீர்கள்!

100

மிஷனரிப்பணி ஏன்?

Why Missionary Work?

முகவுரை

''செய்வதைச் செய்வதேன்'' என்ற அறிவுதான் நாம் மேற்கொண்டுள்ள வேலையை உற்சாகமாய்ச் செய்து நியமிக்கப்பட்ட குறியை எட்டச்செய்யும்.

எ.கா.) 2 பேது 1:8-15
— நமக்கு ஒருவேளை ஏற்கனவே தெரிந்ததை *நினைவு படுத்திக்* கொள்ளாவிடில், நாம் கண் சொருகிய, கனியற்ற கிறிஸ்தவராகிவிடுவோம்!
''முடிவுவரை அதே கவனம்'' (எபி 6:12)

நாம் ஏன் மிஷனரிப்பணியில் ஈடுபட்டுள்ளோம் —

மிஷனரிப்பணி ஏன்?

1. நமக்கு ஒரு மிஷனரி ''தேவன்'' உண்டு.

எல்லாமே தேவனில்தான் துவக்கம்கொள்கிறது.
''ஆதியிலே தேவன் ...''
யோ 3:16 ... *தேவன் இவ்வளவாய்* ***அன்புகூர்ந்தார்***
1 தீமோ 2:3,4 ... *எல்லாரும் இரட்சிக்கப்பட* ***விரும்புகிறார்.***
— இதற்காகவே நான் ஒரு மிஷனரி (வச 7)
யோனா 4:9-11 ... அறியாதோருக்காய்ப் **பரிதபிக்கிறார்**.
யோ 4:23 ... தொழுதுகொள்ளும் குழுக்களை எங்கும் எழுப்ப **விரும்புகிறார்.**
(எனவேதான் அறுவடை நாடி சமாரியாவுக்கு இயேசு சென்றார்!)

தேவனது பிள்ளைகள் என்ற வகையில் **பிதாவானவரின்** கரிசனையும் பாரமும் நமதாகவேண்டும்.
ரோ 15:9-12 ... மிஷனரிப்பணியின் முக்கிய காரணம் தேவன் **மகிமைப்பட**வேண்டுமென்பதே. வேறு நோக்கத்திற்கு இடமில்லை!

2. *நமக்கு ஒரு மிஷனரி ''இரட்சகர்'' உண்டு.*

இயேசு = இரட்சகர் (மத் 1:21)
யோ 1:29 ... *இதோ, உலகின் பாவத்தைச் சுமந்துதீர்க்கும் தேவாட்டுக்குட்டி* ...
10:15-17 ...*''மற்ற ஆடுகளுக்காக''* நல்ல மேய்ப்பனுக்கு அதே தியாகவுணர்வும் பாசமும் உண்டு.
லூக் 4:42,43 ... *''மற்ற ஊர்களுக்கும் ...''*
10:1,2,3 ... அவர் சவாலிடுவார், போவார், அனுப்புவார்.

கிறிஸ்தவராகிய நாம் கிறிஸ்து இவ்வுலகில் துவங்கிய பணியைத் தொடராது இருக்கமுடியாது.

தானி 7:13,14 ... கிறிஸ்துவின் பூவுலகப்பணியின் இறுதி விளைவு

3. *நமக்கு ஒரு மிஷனரித் ''தேற்றரவாளன்'' உண்டு.*

அப் 1:8 ... பெந்தெகொஸ்தேயின் நோக்கங்களில் நோக்கம்.
பழைய ஏற்பாட்டில் ஆவியின் அபிஷேகத்தைக் குறித்த நிழலாட்ட நிகழ்வுகளின் பொருள் —

- மேகத்திலும் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் (1 கொரி 10:1-4)
  — புதிய இடங்களைக் கைப்பற்ற
- எசேக் 47 ... *நதி / கணுக்காலளவு... முழங்கால்... இடுப்பு...*
  — ***கனி*** *தரும் மரங்கள் ...* ***மீன்*** *பிடிப்பு ...* (வச 9,12)
- ஏசாயாவின் தரிசனம் (ஏசா 6)
  — போய்ச் சொல்வதற்காகவே நாவு தொடப்பட்டது. கிறிஸ்துவைப்பற்றிய அவனது பெரிய தீர்க்கதரிசனங்கள்.
- அப் 13:2,4 ... மிஷனரிப்பணிக்காய் மனிதரை அழைக்கிறார்.
  20:22,23 ... *''நகர்தோறும்''* உபத்திரவங்களைச் சந்திக்கும் மிஷனரிகளுடன் இருந்து அவர்கள் *மகிழ்ச்சியோடே* பணியை முடிக்க உதவுகிறார்.

வெளி 22:17 ... *ஆவியும் மணவாட்டியும் ... ''வா!''*
இறுதியான அழைப்பு — நற்செய்தியழைப்பு

4. *நமக்கு ஒரு மிஷனரிப் ''புத்தகம்'' உண்டு.*

மீட்புதான் பைபிளின் மையக் கருத்து.
— லூக் 24:44-48 ... இச்செய்தி எல்லா நாட்டினருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும்.
பைபிளில் எந்தப் புத்தகம் வாசித்தாலும் மிஷனரித் தரிசனம் கிடைக்கும் —
அது சரித்திரமோ, தீர்க்கதரிசனமோ, செய்யுளோ, உபதேசமோ!

எ.கா.) தீர்க்கதரிசனம் — அப் 15:13-18
நவீனப் பிரசங்கிமார் *''கூடாரத்தை''* எழும்பப்பண்ணுவதை எப்படி வியாக்கியானிப்பர் என்று நினைக்கிறீர்களா?

எ.கா.) உபதேசம் — 1 யோ 2:1,2
புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அத்தனையையும் எழுதியது மிஷனரிகள்.
(பெயர் சொல்லப்படாத எபிரெயர் நிருபமும் சேர்த்து!) 10:34

5. *நமக்கு மிஷனரி ''முன்னோடிகள்'' உண்டு.*

விசுவாசிப்போரின் *''தந்தை''* ஆபிரகாம் —
ரோ 4:10-12

ப.ஏ. எக்கோணத்தில் நோக்கினும் ஆபிரகாம் ஒரு மிஷனரி —
ஆதி 12:1-3 / கலா 3:8 (மிஷனரிப் பணியின் துவக்கம்)
ஆபிரகாமுக்குச் சுவிசேஷம் முன்னறிவிக்கப்பட்டது.

பு.ஏ. *''அப்போஸ்தலர் & தீர்க்கதரிசிகளின்''* அடித்தளம்
எபே 2:19,20
— அவர்களுக்குக் கிடைத்த பிரதான வெளிப்பாடு
எபே 3:5-7 ... *''இதற்கு மிஷனரியானேன்''* (வச 7)
— நற்செய்திப்பணியில் அவர்கள் முன்னோடிகள்.
''அப்போஸ்தலர்'' (கிரேக்கு) = ''அனுப்பப்பட்டவர்''
லத்தீன் மொழியாக்கம்: மிஷனரி
ரோ 15:15,16,20,21
''நான் நட்டினேன்''
''நான் அஸ்திபாரம் போட்டேன்''

யோவானைத் தவிர பன்னிருவரும் இரத்தசாட்சிகளாய் மரித்தனர்.
இரத்தசாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து!

6. நமக்கு ஒரு மிஷனரிப் ''பேராணை'' உண்டு.

மத் 28:18-20

முன்னுரை: *''விண்ணிலும் மண்ணிலும் எல்லா* ***அதிகாரமும்*** *...''*

இது சேனைகளில் கேட்கப்படும் வார்த்தை.
இதையே தீமோத்தேயுவுக்குப் பவுல் குறிப்பிடுகிறார் —
2 தீமோ 4:1,2,5

கீழ்ப்படிதல் நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல,
கட்டாயம்;

ஏனெனில் அவர் **ஆண்டவர்** —

- நமது வாழ்க்கைக்கு — தனிப்பட்ட கீழ்ப்படிதல்
  லூக் 6:46 ... *''என்னை ஆண்டவர் என்கிறீர்கள் ...''*
- திருச்சபைக்கு — கூட்டுக் கீழ்ப்படிதல்
- அறுவடைக்கு — உடனடிக் கீழ்ப்படிதல்
- நாடுகளுக்கு — இடையறா கீழ்ப்படிதல்
  (எல்லா நாட்டினரும் சந்திக்கப்படும்வரை!)

இப்பேராணைதான் அப்போஸ்தலரை நிறுத்தாது
சுவிசேஷப்பணிக்குள் உந்தித் தள்ளிக்கொண்டேயிருந்தது —
அப் 4:18-20 ... *''தேவனுக்கா ... உங்களுக்கா ... யாருக்குக் கீழ்ப்படிவது? ... நாங்கள் பேசாதிருக்கமுடியாது!''*

7. நமக்கு ஒரு மிஷனரிச் ''சபை'' உண்டு.

திருச்சபை முழுவதும் ஒரு மிஷனரி இயக்கமாயிருக்கவேண்டும் —

அனைத்து விசுவாசிகளும் தீர்க்கதரிசிகள் —
அப் 2:16-18,21 ... எவரும் விடப்படவில்லை!

அனைத்து விசுவாசிகளும் ஆசாரியர் —
1 பேது 2:9 ... ஆராதனை (வச 5)
... அறிவிப்பு (வச 9)

எல்லா மக்களுக்கும் ஜெப வீடு —
மாற் 11:17
மனிதரைப் பிடிப்போர்: நமது முதல் அழைப்பு
மத் 4:19 ... (விருப்பப்பாடம் போல் அல்ல)

''தனது உறுப்பினரல்லாதோரின் நலனுக்காய்ப் பாடுபடும்
ஒரே சங்கம் திருச்சபையே!'' — ஜான் வெஸ்லி (1703-1791)

8. நமக்கு ஒரு மிஷனரிக் ''களம்'' உண்டு.

''உலகமே நிலம்'' — இயேசு (மத் 13:38)

நிலத்திற்கு விளக்கம்:

- *இருளில் இருக்கும்* ***மக்கள்*** —
  மத் 4:15 ... (நாசரேத்தைவிட்டு நப்தலிக்கு)
- *மேய்ப்பன் இல்லாத* ***ஆடுகள்*** —
  மத் 9:36 (தொலைந்துபோனோர்)
- *அறுவடையாளருக்காய்க் காத்திருக்கும்* ***அறுவடை*** —
  யோ 4:35 (ஏற்கனவே விளைந்துவிட்டது ...
  இன்னும் 4 மாதங்கள் கழித்து அல்ல)

உலகிலுள்ள மக்களின் குழப்பங்கள், போராட்டங்கள், தவிப்புகள்,
ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் போன்றவையெல்லாம் நமக்குத்
தெரியுமானால் மிஷனரிப்பணியில் ஈடுபடாதிருப்போமோ?

வாய்ப்புகள் மிகுந்த காலமிதுவே!
கிறிஸ்துவே பதில்!
குழம்பியிருக்கும் உலகிற்குக் குணமளிக்கும் செய்தி
(The Message for this mess-age!) நம்மிடமுண்டு.

9. நமக்கு ஒரு மிஷனரிச் ''சத்துரு'' உண்டு.

திருச்சபை வளர்ச்சியைச் சாத்தான் முழுமூச்சாய் எதிர்ப்பான் —
மத் 16:18 ... கட்டுதல் + போராட்டம்
(Building + Battling)

பிசாசு விரட்டுதலும் சாத்தானின் விழுகையும் — லூக் 10:17,18

சுவிசேஷ ஒளி நுழையாதபடி மக்களைக் குருடாக்குவது —
2 கொரி 4:3,4 (நமது கண் திறப்புப் பணி, வச 1,5)

சத்துரு ஜீவனைக் கெடுக்கிறான்;
இயேசு ஜீவனைக் கொடுக்கிறார் —
யோ 10:10

— பிசாசின் பொய்களை அம்பலப்படுத்துவது சுவிசேஷம் எனும் சத்தியம்.

— பிசாசின் செயல்களை அழிப்பது சுவிசேஷம் எனும் வல்லமை.

— பிசாசின் சதிகளை அதமாக்குவது சுவிசேஷம் எனும் திட்டம்.

பிசாசை மேற்கொள்ள வேறு வழி கிடையாது.

10. நமக்கு ஒரு மிஷனரி ''நம்பிக்கை'' உண்டு.

நித்திய வாழ்வு vs. நித்திய நரகம் —
மாற் 16:15,16 ... வேறு எதுவும் கிடையாது.

நரகம் அவ்வளவு கொடூரமானதாலேயே மனந்திரும்பும்
ஒரு பாவியால் பரலோகில் அவ்வளவு குதூகலம் —
லூக் 15:7,10

கிறிஸ்து தமது வருகையைத் தாமதிப்பதேன்? —
2 பேது 3:9... *எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று...*
மத் 24:14... *சகலருக்கும் அறிவிப்பு...அப்பொழுது முடிவு...*

ஆத்துமாதாயகருக்குப் பரிசு —
தானி 12:3 ... *நட்சத்திரங்கள்!*

எனவே, மிஷனரிப்பணியின் சிலுவையைச் சுமந்து, அவமானத்தை அசட்டை செய்யாது, நமக்கு முன்னிருக்கும் ஆனந்த பாக்கியம் நோக்கி விரைவோம்!
எபி 12:2

Why Missions?

We have a Missionary (1) God, (2) Saviour, (3) Paraclete, (4) Book, (5) Founders, (6) Commission, (7) Community, (8) Field, (9) Enemy and (10) Hope.

101

மிஷனரிப்பணிக்காய் ஜெபித்தல்

Missionary Praying

முகவுரை

- பிறரைக் கிறிஸ்தவராக்கவே நாம் கிறிஸ்தவராயிருக்கிறோம்.
திருமறையில் முதல் அத்தியாயமே சொல்வது —
''தங்கள் தங்கள் இனத்தின்படி கனிகள்'' (வச 12)

கிறிஸ்து இருக்கும் ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனரி;
கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு இதயமும் ஒரு பணிக்களம்.

- நமது தேவன் ஒரு மிஷனரி தேவன் —

பிதாவாகிய தேவனே மிஷனரிப்பணியின் **மூலகாரணர்** —
''தேவன் இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்''

குமாரனாகிய தேவனே மிஷனரிப்பணிக்கு **மாதிரியானவர்** —
''எங்கும் சென்று ... பிரசங்கித்து ... மரித்தார்''

ஆவியாகிய தேவனே மிஷனரிப்பணிக்கு **வல்லமை தருபவர்** —
''பரிசுத்த ஆவி வரும்போது ... சாட்சிகள் ...''

எனவே, மிஷனரிச் சிந்தையில்லாத கிறிஸ்தவன்
தேவனது சித்தத்திற்குப் புறம்பாய் வாழுகிறான்.

- மிஷனரிப்பணியில் நமது முதல் கடமை ஜெபமே:
மத் 9:35-38

— மக்கள் *தொய்ந்திருக்கின்றனர்;* ஆகையால் ஜெபியுங்கள்.

— மக்கள் *சிதறுண்டலைகின்றனர்;* ஆகையால் ஜெபியுங்கள்.

— *மேய்ப்பனின்றியிருக்கின்றனர்;* ஆகையால் ஜெபியுங்கள்.

— *அறுவடை மிகுதி;* ஆகையால் ஜெபியுங்கள்.

— *அறுவடையாளர் குறைவு;* ஆகையால் ஜெபியுங்கள்.

— தேவனே *அறுவடையின் ஆண்டவர்;* ஆகையால் ஜெபியுங்கள்.

— நாம் வேண்டாது அவர் அனுப்பமாட்டார்; ஆகையால் ஜெபியுங்கள்.

- ஜெப மாநாடுகள் குறித்து எங்கும் கேள்விப்படுகிறோம், ஆனால் ...

வேதத்தில் ஜெபத்திற்கான முக்கிய அழைப்பு
மிஷனரி நற்செய்தியறிவிப்புப் பணிக்காகவே:

— சாலொமோனின் ஆலயப் பிரதிஷ்டை ஜெபம் (2 நாளா 6:32,33)
— சங்கீதப் புத்தகத்தில் முதல் கட்டளை (சங் 2:8)

(இது ஒரு துதி, விண்ணப்பப் புத்தகம்)
(வீடு, வேலை, வசதி ... இப்படியல்ல, *மக்களினங்கள்)*

— கர்த்தருடைய ஜெபம்: ஒரு மிஷனரி ஜெபம்:
(70 மிஷனரிகளில் ஒருவர் கேட்டதால் கற்பிக்கப்பட்டது)

☐ *உமது நாமம் பரிசுத்தப்படுவதாக*
— மிஷனரிப்பணியின் நோக்கம்

☐ *உமது இராஜ்யம் ... உமது சித்தம்*
— மிஷனரிப்பணியின் விளைவு
(மிஷனரிப்பணியின் செய்தி — லூக் 10:9,11)

☐ *அன்றன்றுள்ள ஆகாரம் இன்று தாரும்*
— மிஷனரிப்பணியின் பொருளாதாரத் தேவை
(பயணிக்கும் ஊழியருக்குக் கற்பிக்கப்பட்ட ஜெபம்)

☐ *எங்களுக்கு மன்னியும்*
— மிஷனரிப்பணியில் பிரச்னை
(மக்களின் அறியாமை, துன்புறுத்தப்படுதல் முதலியன)
''துன்புறுத்துவோரை ஆசீர்வதியுங்கள்!''

☐ *சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று இரட்சியும்*
— மிஷனரிப்பணியின் போராட்டம்
எதிர்க்கும் அந்தகார சக்திகள்

☐ *இராஜ்யம், வல்லமை, மகிமை உம்முடையவை*
— மிஷனரிப்பணியின் இறுதிக்கட்டம்

— இயேசுவின் பிரதான ஆசாரிய ஜெபம் (யோ 17)

☐ மகிமைப்படுத்தும் ... நித்திய ஜீவன் (வச 1,2)
☐ பரிசுத்தப்படுத்தும் ... உலகினுள் அனுப்புகிறேன் (வச 17,18)
☐ ஒருமைப்படுத்தும் ... உலகம் விசுவாசிக்கும்படி (வச 20,21)

— தேவனிடம் *''சேருகிறவர்களுக்காகவே''* இயேசுவின் இன்றைய மன்றாட்டு ஊழியம் (எபி 7:25)

— கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரக்கூடிய சரியான மிஷனரியைத் தெரிந்தெடுக்க ஏறெடுக்கப்பட்டதே நடபடிகளில் முதல் ஜெபம் (அப் 1:22,24,25)

இரண்டாம் ஜெபமும் மிஷனரிப் பணியில் சந்தித்த பயமுறுத்தல்களைப் பற்றியதே (அப் 4:29,30,31)

1. மிஷனரி ஜெபம் ''பிரதானமாய்'' இருக்கவேண்டும் (Supreme)

- பவுலின் அறிவுரை (1 தீமோ 2:1-4) ... *பிரதானமாய்ச் சொல்வது...*

எழுப்புதலோ, மிஷனரிப்பணியின் பிறப்போ ஜெபமில்லாது
எ.கா.) FMPB, BYM, GEMS, ... [நிகழாது —

- இன்றோ நாம் சிறியவற்றைப் பிரதானப்படுத்துகிறோம்.

எ.கா.) கர்த்தரது ஜெபம்: அவர் *நாமம்* — உயர்த்துவோம்
அவர் *அரசு* — விரிவாக்குவோம்
அவர் *சித்தம்* — நிறைவேற்றுவோம்

ஏழு வேண்டல்களில் ஒன்றுதான் உடலுக்கடுத்தது!

நமது ஜெபங்களோ பிரதானமாக — சுகம், பலம்
— கவலை, செல்வம்

இது புறவினத்தார் தேடுவது (மத் 6:31-33)

சுகபோக வாழ்வு உபதேசமானது அமெரிக்கரது கனவு, பேராசை ஆகியவற்றின் கண்டுபிடிப்பு.

- யோனா போன்ற தீர்க்கர்தான் இன்று ஏராளம் —

ஆத்துமாக்களைவிட ஆமணக்குச் செடியைப்பற்றித்தான் கவலை (யோனா 4:10,11).

2. மிஷனரி ஜெபம் ''குறிப்பாய்'' இருக்கவேண்டும் (Specific)

மிஷனரிகளுக்காய்ப் பலர் ஜெபிக்காதிருப்பதற்குக் காரணம் எதற்காக ஜெபிக்கவேண்டுமென்று தெரியாததே —
பாரம் இல்லை!

அந்தக் குருடனைப்போல், நாம் ஜெபிப்பதெல்லாம்,

''ஆண்டவரே, எனக்கு இரங்கும்'' — ஆனால் இயேசு கேட்டது:

*''நான் **என்ன** செய்ய விரும்புகிறாய்?''* (மாற் 10:46-52)

- களங்களை நேரில் பார்ப்பதற்கு எதுவும் இணையாகாது —

  இயேசு: மத் 9:36-38 ... *திரள்களை அவர் **கண்டபோது*** ...

  சீடரிடம்: யோ 4:31-35 ... ***கண்களை** ஏறெடுத்துப்பாருங்கள்*

  மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்று வாருங்கள்.

  தரிசனமில்லையேல் தரித்திரம்தான்!

- ஜெபிக்கவேண்டிய குறிப்புகள்:

அ) கூடுதல் பணியாளர் (மத் 9:37,38)

இவ்வுலகில் — வேலையில்லாத் திண்டாட்டம்

இறையரசில் — வேலையாட்கள் பற்றாக்குறை

ஆ) மிஷனரிகளுக்கு ஞானம்

☐ *கொழுத்த கன்று* — மாட்டிறைச்சி சாப்பிடாதோர் (லூக் 15:23)

☐ தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் (அப் 16:3)

இ) மக்களின் அறியாமை (2 கொரி 4:3,4)

— மூட நம்பிக்கைகள்

எ.கா.) எலியை அடிக்கமாட்டார்கள்!

ஈ) எதிர்ப்போர் (2 தெச 3:1,2)

ஆதிச்சபையின் ஜெபம் (அப் 4:27-31)

உ) சந்திக்கப்படாத மக்களினங்கள்

வாசியுங்கள்: *"Operation World"* by Patrick Johnstone

மிஷனரிப்பணிச் சுற்றறிக்கைகள்,

தேசப்படம், உலகப்படம்

ஊ) உலக நிகழ்வுகள்

தனது ஜெபத் தியானத்திற்கு ஜெபக் கையேடு உண்டா

எனக் கேட்கப்பட்டபோது

ரூத் கிரஹாம் அம்மையார்: ''ஆம், தினசரிச் செய்தித்தாள்!''

எ) மிஷனரிகளின் பிரச்னைகள் (அத்தியாயம் 110)

தடுப்பு ஜெபத் தோழர் (Preventive Prayer Partners) —

மிஷனரிகள் காக்கப்படவேண்டிய பகுதிகள் —

☐ பரிசுத்தக் குலைவு (Defilement)

☐ நோய்வாய்ப்படுதல் (Diseases)

☐ மனத்தொய்வு (Depression)

☐ பிரிவினைகள் (Divisions)

☐ ஆபத்துக்கள் (Dangers)

3. மிஷனரி ஜெபம் ''தியாகத்துடன்'' இருக்கவேண்டும்

- பவுல்: ரோ 9:1-3; 10:1 (Sacrificial)

  இவ்விதம் ஜெபிப்பதை அவர் கற்றது —

  மோசேயிடமிருந்து—யாத் 32:32

  எஸ்தரிடமிருந்து—எஸ்தர் 4:16

- ஜார்ஜ் விட்பீல்டு (1574-1770):

  ''ஆண்டவரே, ஆத்துமாக்களைத் தாரும்;

  இல்லையேல் என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்!''

  ஜான் நாக்ஸ் (1514-1572):

  ''தேவனே, ஸ்காட்லாந்தைத் தாரும்;

  இல்லையேல் சாகிறேன்!''

- தியாகத்துடன் ஜெபிக்க வழிமுறைகள் —

☐ உபவாசம்

அப் 13:2,3 (உபவாசம் என்பது நடபடிகளில்

முதலாவது வருவது மிஷனரிப்பணியில்தான்.)

ஜீவனத்துக்கான அப்பத்தைச் சாப்பிடுவதைவிட

ஜீவ அப்பம் கொடுப்பதிலேயே இயேசுவுக்குக் கரிசனை!

யோ 4:31,32

☐ தூக்கத்தைக் குறைத்தல்

இயேசு: லூக் 6:12,13 ... ஊழியரைத் தெரிந்தெடுத்தல்

மரியாளும் சகோதரிகளும்: அப் 12:5,12

— சிறையிலிருந்த மிஷனரியின் விடுதலைக்காய்

□ வேலையில் விடுப்பு (leave) கோருவது —
— சுகவீனமாயிருக்கும்போது ...
— விருந்தினர் வந்திருக்கும்போது ...
— பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ...
ஜெபத்திற்காய் விடுப்பு எடுத்தாலென்ன?

4. மிஷனரி ஜெபம் ''கிரமமாய்'' இருக்கவேண்டும் (Systematic)

- வேலை நேரங்கள் போலவே ஜெப நேரங்களையும் குறியுங்கள்.

எதுவும் ஜெப நேரத்தை நெருக்கிவிடக்கூடாது —
அப் 3:1 ... *''ஜெப வேளை*
''

அப் 2 / 3000 → அப் 3 / ஜெபம் → அப் 4 / 5000

நாளுக்கு 1 மணி நேரம் என்பதைவிட
15 நிமிடம் என்று துவங்குங்கள்.

- மிஷனரி ஜெபச் சுற்றறிக்கைகள் பயன்படுத்துங்கள்
FMPB, BYM, GEMS, IEM, Tribal Mission, ...
ஜெபக் கையேடு: *"Operation World"* by Patrick Johnstone

(சுகமளிப்பு பத்திரிக்கை ஒன்று வாசித்தால் மிஷனரிப் பத்திரிக்கை ஆறாவது வாசிக்கவேண்டும்) 1:6

எ.கா.) கர்த்தர் ஜெபத்தில் ஏழில் ஒன்றுதான் உடல் தேவைக்கு!

சமையலறையிலும் குளியலறையிலும் கதவுகளில்
ஜெபக் குறிப்புகளை எழுதி ஒட்டி வையுங்கள்.

- ஜெபக் குழுக்கள் உருவாக்குங்கள்

எ.கா.) பாபிலோனில் தானியேல் குழுவினர்
—நேரம் தவறாதீர்.
—பாடவோ, படிக்கவோ அல்ல, புலம்ப!

5. மிஷனரி ஜெபம் ''ஆவியின் நிறைவுடன்'' இருக்கவேண்டும் (Spirit-filled)

- நற்செய்திப்பணி மலை போன்றது —
''பலத்தினாலும் அல்ல ... என் ஆவியினாலேயே'' (சக 4:6)

- இரட்சிப்பு கர்த்தருடையது.
''லீதியாளின் இதயத்தைக் கர்த்தர் திறந்தார்'' (அப் 16:14)

இயற்கையின் சீற்றங்களால் வரும் அழிவுகளும் மக்களது
மனதை இளகப்பண்ணுவது கிடையாது;
பெரும்பாலும் அவை கடினப்படுத்தவே செய்யும் —

எ.கா.) பார்வோன்

''தேவ தயவுதான் மனந்திரும்பிக் குணப்பட ஏவும்'' (ரோ 2:4)
சமீபத்திய பூமியதிர்வுகள்:
(கிழக்கு) லாத்தூர், இந்தியா—சிலைவணக்கப் பெருக்கம்
(மேற்கு) கலிபோர்னியா — ஆபாசப்படங்கள் பெருக்கம்
(தூர கிழக்கு) ஜப்பான் — விஞ்ஞான அறிவுப்பெருக்கம்

- மிஷனரிகளுக்காய் ''ஆவியில்'' ஜெபித்தல் (எபே 6:18-20) —
மிஷனரிப்பணி ஒரு போராட்டமாம்.

அது மனுவுடல் கொண்டோரோடு அல்ல (எபே 6:12,18-20)

மக்கள்: பிசாசுக்குப் ''பலியானோர்'' அவ்வளவுதான்.

பட்டயம்: தாக்கும் படைக்கலன் (எபே 6:17) (attack)
காலணி: முன்னே செல்வதற்கு (:15) (advance)

6. மிஷனரி ஜெபம் ''வேதத்தின்படி'' இருக்கவேண்டும் (Scriptural)

- முழு வேதமும் மிஷனரிப் பணிக்கு அடித்தளம்.
ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை: மீட்பின் திட்டம்

□ புதிய ஏற்பாடு முழுவதும் மிஷனரிகளால் எழுதப்பட்டது —

மத்தேயு	—	எத்தியோப்பியாவில் இரத்தசாட்சி மரணம்
மாற்கு	—	பேதுருவால் எகிப்துக்கு அனுப்பப்பட்டார்; அலெக்சந்திரியாவில் சபை கட்டினார்; மன்னன் நீரோவினால் கொல்லப்பட்டார்.
லூக்கா	—	மிஷனரி மருத்துவர்
யோவான்	—	ஆசியாவிலுள்ள எபேசுவைச் சுற்றிப் பணி; பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

பவுல் — மிஷனரிப் பயணங்கள், சிறையடைப்புகளின்போதுதான் நிருபங்கள் எழுதினார்.

எபிரெயர் ஆக்கியோன் — 10:34

யாக்கோபு — எருசலேம் சங்கத்தில் மிஷனரிப் பிரச்னை விவாதம்; 70 வயதில் கொடூர இரத்தசாட்சி மரணம்

பேதுரு — மன்னன் நீரோவினால் தலைகீழாய்ச் சிலுவையிலறையப்பட்டார்.

புதிய ஏற்பாட்டு தேசப் படங்களிலும் மிஷனரிப் பயணங்கள்தான்!

- மிஷனரி வாக்குத்தத்தங்களினால் நிறைந்திருங்கள் —

எ.கா.) ஆதிச்சபை (சங் 2; அப் 4:24-26)
இன்னும் சில திருவாக்குகள் —
பூமி நிறைந்திருக்கும் ... (ஆப 2:14)
விக்கிரகங்கள் ஒழிந்துபோகும் ... (ஏசா 2:17,18)
முழங்கால் யாவும் முடங்கும் ... (பிலி 2:10)
என் சபையைக் கட்டுவேன் ... (மத் 16:18)

7. மிஷனரி ஜெபத்தில் ''தரித்திருக்க'' வேண்டும் (Sustained)

மிஷனரிப்பணி உடனடி அற்புதம் அல்ல.
விதைக்கணும் ... நீரூற்றணும் ... அறுக்கணும் ...

1977 முதல் சீனாவில் சபை வளர்ச்சியானது சரித்திரத்தில் நிகரற்றது; ஆனால் அதற்குமுன் ஆயிரக்கணக்கான மிஷனரிகள் 140 ஆண்டுகள் தியாகத்துடன் விதைக்க வேண்டியிருந்தது!

- சகோதரன் ஆன்ட்ரூ (Brother Andrew / “God’s Smuggler”)

  கம்யூனிச நாடுகளுக்காய்ப் 15 ஆண்டு சங்கிலி ஜெபம் நடத்தினார்; பெர்லின் சுவர் விழுந்தது!

சீனா: தினமும் 28,000 பேர் சபையில் சேருகின்றனர்.
ரஷ்யா: கம்யூனிஸ்டுகளைவிடக் கிறிஸ்தவர் 5 மடங்கு.
கிழக்கு ஐரோப்பா: பெர்லின் சுவர் விழுந்ததே!
இப்பொழுது வளைகுடா நாடுகளுக்காய் ஜெபிப்போம்!

- 21 நாட்கள் விடாப்பிடியாய் தானியேல் ஜெபிக்கவேண்டியதிருந்தது — தானி 10:12,13

  மிகாவேல் இடைபடும்வரை விண்ணகத்திலிருந்து வந்த மகிமையான பதிலைப் பெர்சியா மன்னன் தடுத்துநின்றான்.

அவ்விதமே தான் பிடித்து வைத்திருக்கும் இடங்களைப் பிசாசு எளிதில் விட்டுவிடமாட்டான்.

கானானுக்குள் எளிதில் நுழைந்துவிட்டனர்;
அதைச் சுதந்தரிக்கவோ எத்தனை ஆண்டுகள்!

- ஜார்ஜ் முல்லர் (1805-1898):

  தனது இரு குடிகார நண்பருக்காய் 40 ஆண்டுகள் ஜெபம்.
  அவரது அடக்க ஆராதனையிலேயே அவர்கள் மனந்திரும்பி, மிஷனரிகளாகவும் சென்றுவிட்டனர்.

முழங்கால் யாவும் கர்த்தருக்குமுன் முடங்கும்வரை
நமது முழங்கால்கள் அவருக்குமுன் முடங்கியிருக்கட்டும்.

■ *முடிவுரை*

- மிஷனரி ஜெபத்தின் தன்மைகள் —

பிரதானமானது ... குறிப்பானது ... தியாகமானது ... கிரமமானது ... ஆவியால் நடத்தப்படுவது ... வேதத்தின்படியானது ... தரித்திருப்பது.

பணிக்களங்களுக்கு எல்லாரும் செல்ல முடியாதிருக்கலாம்;
ஆனால் எல்லாரும் அங்கு முழங்காலில் செல்லலாமே!

- மிஷனரிகளின் உள்ளத்திலிருந்து வரும் ஒரு பாடல் —

அடுத்த பக்கம்.

முன்னணி மிஷனரிகளின் சாட்சி —

நீங்கள் ஜெபித்ததால் ...

நீங்கள் ***ஜெபித்ததால் ...***
தேவ வல்லமை களைத்த எங்கள் உடல்களைத் தொட்டது;
சோதனை வேளையில் நிற்கப் பலம் தந்தது;
எங்கள் ஜெபத் தோழரே, நீங்கள் உத்தமமாய் ஜெபித்திராவிடில்
நாங்கள் தடுமாறித் தவித்திருப்போம்.

நீங்கள் ***ஜெபித்ததால் ...***
தேவனது விரல்களால் திறமை பெற்றோம்,
அவர் சித்தம் நிறைவேற்ற உழைத்தோம்,
மருந்து போட்டோம், காயம் கட்டினோம்,
பிணியாளிகள் பெற்றனர் அற்புத சுகம்.

நீங்கள் ***ஜெபித்ததால் ...***
பலிபீட அக்கினியினால் எங்கள் நாவுகள் தொடப்பட்டன,
ஆவியால் நிரப்பினார், அகத்தூண்டல் தந்தார்,
நாங்கள் பேசினோம், அகக்கண்கள் திறந்தன,
கட்டுகள் முறிந்தன, சிறைவாசம் அகன்றது.

நீங்கள் ***ஜெபித்ததால் ...***
இருளில் இருந்தோர் வெளிச்சம் கண்டனர்,
அஞ்ஞான இருளை அகற்றியது மெய்யொளி,
இத்தனைக் காலம் பிந்தி வந்த நற்செய்தி
மக்களை உயிர்ப்பித்தது உங்கள் ஜெபத்தாலேயே.

102

மிஷனரிப்பணிக்குக் கொடுத்தல்

Missionary Giving

முகவுரை

- கிறிஸ்தவப் பண்டிகைகளில் முக்கியமானவை மூன்று —

அ) கிறிஸ்துமஸ் (கிறிஸ்து பிறந்தது)
அதின் செய்தி: லூக் 2:10
***''எல்லா** மக்களுக்கும் நற்செய்தி''*

ஆ) ஈஸ்டர் (கிறிஸ்து உயிர்த்தது)
அதின் செய்தி: லூக் 24:46-48
''மனந்திரும்புதல், பாவமன்னிப்பு ... எல்லா நாட்டினருக்கும்''

இ) பெந்தெகொஸ்தே (ஆவியானவர் இறங்கியது)
அதின் செய்தி: அப் 1:8
எழுதப்பட்டுள்ள கிறிஸ்துவின் இறுதி வார்த்தைகள்
***அகிலவுலகிலும்** சாட்சிகளாயிருப்பதைப் பற்றியது.*

ஆம், கிறிஸ்துதான் மாபெரும் மிஷனரி ...
சுவிசேஷமே ஒரு மிஷனரிச் செய்திதான் ...

அப்போஸ்தலர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தியது இதுவே —
(எ.கா.) 1 யோ 2:2 ... *நமது மட்டுமல்ல ... சர்வலோகம் ...*

அவர்கள் கிறிஸ்தவர்களைச் சந்தித்தபோதெல்லாம், அவர்களுக்கு எழுதியபோதெல்லாம், அவர்களது மிஷனரிக் கடமையை நினைப்பூட்டினர் — எ.கா.) ரோ 10:12-15

மிஷனரிப்பணியில் செயலாற்றும் ஐந்து குழுக்கள் —

1. அனுப்புவோர் (Senders)
2. செல்லுவோர் (பிரசங்கிப்போர்) (Goers)
3. கேட்போர் (Hearers)
4. விசுவாசிப்போர் (Believers)
5. தொழுதுகொள்வோர் (Worshippers)

முதற்குழு செயல்படத் துவங்கும்வரை ஒன்றும் நடப்பதில்லை.

- அப்போஸ்தலன் பவுல்:
  *''சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிடில் எனக்கு **ஐயோ!**''*
  (1 கொரி 9:16)

  ஆனாலும் அவர் அனுப்பப்படவேண்டுமே!

எனவே,
மிஷனரிகளை அனுப்பாவிடில் நமக்கு **ஐயோ!**

எ.கா.) எண் 32:1-7 | *''உங்கள் பாவம்*
:20-23 | *உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்''*

மிஷனரிப்பணி = தேவனுக்காய்ப் புதிய இடங்கள் சுதந்தரிப்பு

மிஷனரிப்பணியைத் தாங்காவிடில் அது பாவம்!

- Rev. Dr. தியோத்திரேப்புவின் விவாதம்:
  ''மிஷனரிப்பணி, மிஷனரிப்பணி என்று பேசுகிறார்களே!
  மிஷனரி என்ற வார்த்தையே பைபிளில் இல்லையே!''

எனது பதில்:
உங்கள் புதிய ஏற்பாடு **கிரேக்கிலிருந்து** மொழியாக்கப்பட்டது.
''அப்போஸ்தலர்'' என்பது ஆங்கிலமுமல்ல, தமிழுமல்ல.
லத்தீனிலிருந்து புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டிருந்தால்
அதில் ''மிஷனரி'' என்ற பதம் இருந்திருக்கும்!

அப்போஸ்தலன் (கிரேக்கு) = மிஷனரி (லத்தீன்)
= இறைச்செய்தியுடன் ''அனுப்பப்பட்டவன்''

- அப்போஸ்தலருக்குத் தேவன் கொடுத்துள்ள இடம் —
  1 கொரி 12:28 ... *தேவனானவர் **முதலாவது** அப்போஸ்தலரையும்*
  அப்படியே, எபே 4:13 ... ஐவர் வரிசையில் முதலாவது

ஏன் அவர்களுக்கு முதலிடம்?
அவர்கள்தான் ''முன்னோடிகள்''
அவர்கள்தான் ''அடித்தளமிடுபவர்கள்''
1 கொரி 3:10 ... *நான் (பவுல்) அஸ்திபாரம் போட்டேன்*
ரோ 15:20,21 ... *பிறரது அஸ்திபாரத்தின்மேல் அல்ல ...*

எ.கா.) டேவிட் லிவிங்ஸ்டன் (1813-1873) — ஆப்பிரிக்காவில்
ஹட்சன் டெய்லர் (1832-1905) — சீனாவில்
அதோனிராம் ஐட்சன் (1788-1850) — பர்மாவில்
வில்லியம் கேரி (1761-1834) — கிழக்கிந்தியாவில்

- ஆனால், மிஷனரிகளைத் திருச்சபை எப்படி நடத்துகிறது?
  1 கொரி 4:9,13 ... *கடைசியானவர்களாய் ... அழுக்குபோல்*
  வேறு மொழியாக்கங்கள் —
  ''அரங்கத்தில் எங்களது ஆட்டத்தைப் பார்க்கவர ஒருவரும்
  டிக்கெட் வாங்க விரும்புவதில்லை!''

  ''கலாச்சார சமையலறையிலிருந்து தூக்கியெறியப்பட்ட
  உருளைக் கிழங்கு தோல் போல நடத்தப்படுகிறோம்!''

  மிஷனரிகளுக்குத் தேவன் முதலிடம் கொடுத்திருப்பாரானால்,
  அவர்களைத் தாங்குவதே நமது முதல் கடமையாயிருக்கவேண்டும்.

■ மிஷனரிப்பணியின் தன்மையைச் சரிவரப் புரியாதிருப்பதே
இப்பகுதியில் நமது தவறுதல்களுக்குக் காரணம் —

1. மிஷனரிப்பணியில் ''தியாகம்'' உண்டு. (Sacrifice)

- முதல் மாற்றுக் கலாச்சார மிஷனரி —
  ஆதி 12:1 ... ஆபிரகாம் ... இவைகளை *''விட்டு'' ...*

இவற்றையெல்லாம் விடுவது அவ்வளவு எளிதா?
லூக் 14:17-20,26 (விருந்துக்கு அழைப்பு)

அழைக்கப்பட்டோரது சாக்குப்போக்குகள் —
மண் ... பூண் ... பெண் (லூக் 14:18-20)

தியாகம்பண்ணுவோரை நாம்தானே தாங்கவேண்டும்?

2. மிஷனரிப்பணியில் ''பாடுகள்'' உண்டு. (Suffering)

அப் 1:8 ... *dunamis* = பலம், வல்லமை
witness = இரத்தசாட்சி

பலம் + பாடு / வல்லமை + வதைப்பு (Power + Pain)

- அப்போஸ்தலர்கள் எவ்விதம் மரித்தார்கள் பாருங்கள் —

அந்திரேயா — "x" வடிவச் சிலுவையில் கட்டி அடிக்கப்பட்டார்.

பர்த்தொலொமேயு (நாத்தான்வேல்) — ஆர்மீனியாவில் தோலுரிக்கப்பட்டார்.

யாக்கோபு (யோவானின் சகோதரன்) — எருசலேமில் தலைவாங்கப்பட்டார்.

யாக்கோபு (கிலெயோப்பா மகன்) — கோபுரத்திலிருந்து தள்ளப்பட்டார்.

யூதா (ததேயு) — ஆர்மீனியாவில் அம்புகளுக்குப் பலி

மத்தேயு — பார்த்தியாவில் வாளால் துண்டிக்கப்பட்டார்.

பேதுரு — ரோம் நகரில் தலைகீழாய்ச் சிலுவையிலறையப்பட்டார்.

பிலிப்பு — ஒரு தூணில் தூக்கிலிடப்பட்டார்.

சீமோன் (செலோத்தே) — 129 வயதில் பாரசீகத்தில் சிலுவையிலறையுண்டார்.

தோமா — இந்தியாவில் ஈட்டியால் கொன்றோம்.

மத்தியா — கல்லெறியப்பட்டுத் தலைவாங்கப்பட்டார்.

யோவான் — நாடு கடத்தப்பட்டு மரித்தார்.

பவுல் — ரோம் நகரில் தலைவாங்கப்பட்டார்.

- இது போன்று இன்னும் பலர் — (ரோ 16:3,4)
  அவர்கள் தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள்;
  நாம் நமது கழுத்தணியைக்கூடக் கொடுக்கமாட்டோம்!
- பல ஆண்டுகளுக்குமுன், நைஜீரியாவிற்குச் சென்ற மிஷனரிகள் தங்கள் சாமான்களை சவப்பெட்டிகளில்தான் அனுப்புவார்களாம். ஏனெனில், அங்குள்ள கிராமங்களில் மலேரியா தாக்கினால் உயிரோடிருப்பது ஈராண்டுகள்தானாம்!
- துன்புறுத்தல்: 1993இல் பாக்கிஸ்தான் சிறையில் தாகீர் இக்பால்: ''தூக்குக் கயிற்றுக்கு முத்தங்கள்; விசுவாசத்தை மறுதலியேன்!''

(175ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

3. மிஷனரிப்பணியில் ''பகட்டு'' இருக்காது. (Not spectacular)

- ஏனெனில்,
  அவர்கள் ''மறைந்து கிடக்கும்'' மக்களிடம் செல்லுகின்றனர் —

சந்திக்கப்படாதோர்	(Unreached)
தொடப்படாதோர்	(Untouched)
சபைக்குள் வராதோர்	(Unchurched)
ஒதுக்கப்பட்டோர்	(Marginalised)
தாழ்த்தப்பட்டோர்	(Downtrodden)
ஏமாற்றப்பட்டோர்	(Exploited)

செல்வந்தரைவிட எளியவரே நற்செய்தியை விரைவாய், நன்றாய், ஏற்றுக்கொள்கின்றனர் —

- ☐ இயேசுவின் ஊழியம் (மத் 11:5)
- ☐ *எளியவரைத் தேவன் தெரிந்துகொள்கிறார் ... செல்வந்தர் அநேகரில்லை* (1 கொரி 1:26-29)

மிஷனரிகள் சந்திக்கும் கிறிஸ்தவரல்லாதோரிடமிருந்து பணவுதவி அதிகம் எதிர்பார்க்கமுடியாது (3 யோ 6,8).

- மிஷனரிகளுக்குப் பகட்டொளியோ விளம்பரமோ இல்லை.
  அற்புதங்கள் அநேகம்; கவர்ச்சியான விளம்பரம் இல்லை. (அற்புத சுகமளிக்கும் பெருங்கூட்டங்களைவிட மிஷனரிப் பணிக்களங்களில் கூடுதல் அற்புதங்கள் பார்த்திருக்கிறேன். ஆனால் அவற்றிற்கு விளம்பரம் இல்லையே!)
- மிஷனரிகளின் பணி அமைதியானது, நீடித்த பயன் தருவது —
  எ.கா.) வேதாகம மொழியாக்கம் (செலவு மிகுந்தது)
  கல்வியறிவு புகட்டுதல் (பொறுமை தேவை)
- மிஷனரிகள் உடனடி விளைவுகளைக் காட்ட முடியாது. ஆண்டாண்டாய் உழைத்தும் கனி காணாதிருக்கும் பணித்தளங்கள் உண்டு.

எ.கா.) சமாரியக் கிராமத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த வேளையில் சீடரிடம் இயேசு சொன்னது ...
யோ 4:35-38 ... *விதைப்பவன் ஒருவன் ... அறுப்பவன் ஒருவன் ...*

■ இந்தப் பின்னணியில்,
மிஷனரிப்பணியை எப்படியெல்லாம் தாங்கலாம் எனப் பார்ப்போம்—

1. எளிய வாழ்க்கை மேற்கொள்ளுங்கள்.

1 தீமோ 6:6-10 ... *போதுமெனும் மனது ... பண ஆசை*

- ராபர்ட் ஆர்த்திங்டன்:

  வாலிபப் பருவத்தில் இவரால் வெளிநாட்டு மிஷனரிப் பணிக்குச் செல்ல இயலவில்லை. ஆனால் இவர் எளிய வாழ்க்கை மேற்கொண்டு 1.5 கோடியை ஊழியங்களுக்குக் கொடுத்தார்.
  வாழ்வின் இறுதியில் அவரது கூற்று —
  மக்கள் இரட்சகரை அறியாது மடிவதைவிட, தரையே எனது படுக்கையாகட்டும், ஒரு பெட்டி எனது நாற்காலி, இன்னொரு பெட்டி மேசை என்று இருந்துகொள்வதையே தெரிந்துகொள்வேன்!

- ஜான் வெஸ்லி:

  முடிந்த அளவு சம்பாதியுங்கள் — கடின உழைப்பு
  முடிந்த அளவு சேமியுங்கள் — எளிய வாழ்க்கை
  முடிந்த அளவு கொடுங்கள் — தயாள உதவி

- இயேசு செல்வந்தராயிருந்தார்.

  நம்மைச் செல்வந்தராக்க அவர் தாமாகவே ஏழ்மையானார்.
  நாமும் அப்படியே செய்வோம்!

''ஆசீர்வதிக்கப்பட'' நமக்கிருக்கும் சிலாக்கியம் குறித்து ஏராளம் பிரசங்கிக்கக் கேட்டுவிட்டோம்;
''ஆசீர்வாதமாயிருக்க'' நமது பொறுப்பு குறித்து இப்பொழுது இச்சவாலை ஏற்றுக்கொள்வோம்!

2. மிஷனரிப்பணியைக் கிரமமாய்த் தாங்க வாக்குப்பண்ணுங்கள்.

- புதிய, எளிமையான சபைகளைத் தாங்கப்
  பழைய, வசதி படைத்த, சபைகளைப் பவுல் ஊக்குவித்தார் —

  1 கொரி 16:1,2 (அந்நாட்களில் *வாராந்திரச்* சம்பளம்)

எவ்வளவு கொடுக்கவேண்டும்?

பழைய ஏற்பாடு — 10 சதவீதம்
யோவான் — 50 சதவீதம் (லூக் 3:10,11)
இயேசு — சகேயு — 50 சதவீதம் (லூக் 19:8)
— விதவை — 100 சதவீதம் (மாற் 12:41-44)

10 சதவீதத்தில் துவங்குங்கள்.
அதிலிருந்து உங்கள் உள்ளூர்ச் சபையைத் தாங்குங்கள்;
அத்துடன், கணிசமான தொகையை மிஷனரிப்பணிக்குக் கொடுங்கள்.

- உங்கள் தேவைகளுக்கே அதிகம் செலவழிக்காதிருங்கள் —
  மிஷனரிப்பணி ஆராய்ச்சியாளர் டேவிட் பேரட் கூறுவது:

  99 சதவீதக் கிறிஸ்தவக் காணிக்கை அதற்கே செலவிடப்படுகிறது.
  95 சதவீதக் கிறிஸ்தவப்பணி கிறிஸ்தவர்க்கே செய்யப்படுகிறது.
  90 சதவீத நற்செய்திப்பணி கிறிஸ்தவரையே குறிவைக்கிறது.

  ''தனக்குத்தானே கனிகொடுக்கும் இஸ்ரவேல்!'' (ஓசி 10:1)

- நீங்கள் தெரிந்தெடுக்கக்கூடிய திட்டங்கள் —

  அ) ஒரு மிஷனரியைத் தாங்குதல்
  ஆ) ஒரு களத்தைப் பொறுப்பெடுத்தல்
  இ) ஒரு குழந்தையின் செலவை ஏற்றுக்கொள்ளுதல்
  ஈ) ஓர் ஆலயம் கட்டித் தருதல்
  உ) ஒரு செயல் திட்டத்திற்குப் பணவுதவி

  இவ்விதம் குறிப்பாய் வாக்குப்பண்ணாவிடில் கிரமம் இருக்காது.

  கொடுப்பதைக் கூட்டிக்கொண்டேயிருங்கள்.

நீங்கள் ஒரு மாணவராயிருப்பினும், கைச்செலவுப் பணத்தில் கொடுக்கலாம். சிறுவனின் ஐந்தப்பம் இருமீன்தானே 5000 பேரைப் போஷித்தது!

3. சிறப்புக் காணிக்கைகள் கொடுங்கள்.

அ) களத் தேவைகளுக்காக (அப் 11:28-30)
பஞ்ச காலத்தில் அந்தியோகியாவிலிருந்து யூதேயாவுக்கு.
ஒரு வேளை உணவுகூட கிடைக்காத ஆதிவாசிகள்.

போதுமான ஆடை கிடையாது.
நல்ல மருத்துவ வசதி கிடையாது.

ஆ) மிஷனரிகளுக்காக

பிலி 4:15,16,19 ... *என் குறைச்சல் ... அனுப்பினீர்கள்*
இச்சபைக்குத்தான்: *"உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்"*

மிஷனரிகளின் பிள்ளைகளது கல்விச் செலவுகள்.
மிஷனரிகளின் பிள்ளைகளது திருமணச் செலவுகள்.

ஒருவர் இரு பணப்பை வைத்திருந்தாராம்.
ஹோட்டலில் குடும்பத்திற்காய் ஒரு சாப்பாடு வாங்கும்போதெல்லாம் அதே அளவு பணத்தை மிஷனரிப் பணப்பையில் போட்டு விடுவாராம். துணிக்கடைக்குச் செல்லும்போது இப்படிச் செய்யுங்கள்.

எலியா — பயணிக்கும் தீர்க்கதரிசி.
சாறிபாத்தின் விதவை.
"முதல் அடை எனக்கு!" (1 இரா 17:13)

எலிசா — பயணிக்கும் தீர்க்கதரிசி.
சூனேமியாள்.
தீர்க்கதரிசிக்கு ஓர் அறை கட்டிக்கொடுக்கத்
தன் கணவனைத் தூண்டினாள் (2 இரா 4:8-10)

மிஷனரிகளை அனுப்பிவைக்கும்போது,
இயேசு: *"சீடன் என்று நீங்கள் கொடுப்பது ..."*

நீங்கள் தேவனுக்குக் கொடுப்பதை
அவர் திரும்பவும் உங்களிடம் கொடுத்துவிடுவார்!

எ.கா.) யோசேப்பின் கல்லறை —
இயேசு அதைப் பயன்படுத்தினார்;
இயேசு அதைப் பரிசுத்தப்படுத்தினார்;
இயேசு அதைக் காலிபண்ணினார்;
இயேசு அதைப் பிரபலமாக்கினார்!

4. மிஷனரி இயக்கங்களுக்கு வைப்பு நிதி கொடுங்கள்.

குடும்பச் சொத்துக்கள், ஓய்வூதியம், முதல் சம்பளம் முதலியன.
பரலோக வங்கியில் சேமிப்பது எங்ஙனம் —
மத் 6:19-21 ... *பொக்கிஷம் ... இருதயம் ...*
19:21 ... *தரித்திரருக்குக் கொடு ... பரலோகில் பொக்கிஷம்*

- C.T. ஸ்டட் (1862-1931):

"கிறிஸ்து எனக்காய் மரித்திருப்பாரானால்,
அவருக்காய் எனது தியாகம் எதுவும் பெரிதல்ல!"

- பிரான்சிஸ் ரிட்லி ஹேவர்கல் (1836-1879)

"எந்தன் ஜீவன், இயேசுவே, சொந்தமாக ஆளுமே ...
எந்தன் ஆஸ்தி, தேவரீர், முற்றும் அங்கீகரிப்பீர் ..."

தனது நகைகளையெல்லாம் ஒரு மிஷனரி இயக்கத்திற்கு
ஒரு பெட்டியில் அனுப்பியபோது இவ்வம்மையார் சொன்னது —
"இதுவரை இவ்வளவு சந்தோஷமாய் எதையும்
பெட்டியில் நான் அடுக்கியதில்லை!"

42 வயதில் அதிக சுகவீனமாயிருக்கையில்,
மருத்துவரிடம்: "பரலோக வாசலருகே வந்திருப்பது
என்னே ஆனந்தம்!"

நாம் வாழ்நாளில் கொடுத்துவிட்டதையே நமது கல்லறைக்கு எடுத்துச் செல்வோம்!

■ *முடிவுரை*

□ அனுப்புவோருக்கும் செல்லுவோருக்கும் ஒரே பங்கு —
1 சாமு 30:24

(50ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

103

மிஷனரிப்பணிக்குச் செல்லுதல்

Missionary Going

முகவுரை

- இவ்வுலகில் மூன்று குழுவினர் —
  - ☐ காரியங்களை நடக்கச் செய்பவர்
  - ☐ நடக்கும் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருப்பவர்
  - ☐ நடப்பது என்னதென்றே தெரியாதவர்

முதல் குழுவில் உங்களைச் சேர்க்கவே இச்செய்தி!

கார்ல் மார்க்ஸ்:

''தத்துவ ஞானிகளும் சரித்திராசிரியர்களும்
உலக நிகழ்வுகளுக்கு விளக்கம் தந்துள்ளனர்.
ஆனால் உலகை மாற்றுவது யாரோ?''

கிறிஸ்துவின் சுவிசேஷம் மட்டுமே அதைச் செய்யமுடியும்!

- உலகில் நடப்பது —

70,000 பேர் தினமும் மறுபிறப்படைகின்றனர்!
3,500 சபைகள் வாரந்தோறும் நிறுவப்படுகின்றன!
38,000 பேர் தினமும் சீனாவில் சபையில் சேருகின்றனர்!
20,000 பேர் தினமும் ஆப்பிரிக்காவில் சபையில் சேருகின்றனர்!

ஆப்பிரிக்காவில்,
1900 — 3 சதவீதமே கிறிஸ்தவர்கள்
1992 — 40 சதவீதம்
2016 — ?

1900இல் கொரியாவில் புராட்டஸ்டன்ட் சபையே கிடையாது.
இந்நாட்டிற்குள் சபை நிறுவுவது முடியாது எனப்பட்டது.
இன்றோ, 30 சதவீதத்திற்குமேல் கிறிஸ்தவர்கள்.
சீயோல் நகரில் மட்டும் 4000க்கும் அதிகமான சபைகள்!

கடந்த 1000 ஆண்டுகளைச் சேர்த்தாலும் அதற்கு அதிகமாக 1980 முதல் ஈரானில் முகமதியர் கிறிஸ்துவிடம் வந்துள்ளனர்.

இஸ்லாமிய இந்தோனேசியாவில்,
25 சதவீதத்திற்குமேல் கிறிஸ்தவர்கள்!
ஆனால் இப்புள்ளி விபரத்தை அரசு பிரசுரிக்காது.

சோவியத் யூனியனில் 70 ஆண்டு கட்டுப்பாட்டிற்குப்பின்,
40 சதவீதத்திற்கு மேல் கிறிஸ்தவர்கள்.
(கம்யூனிஸ்ட் கட்சியினரைவிட 5 மடங்கு!)

சைபீரியா நகர் ஒன்றில் 24 மணி நேரமும் திருமுழுக்குகள்!

ஆசியா 1980 — 6,000 மிஷனரிகள்
1988 — 17,000 மிஷனரிகள்
1990 — 22,000 மிஷனரிகள்
2016 - ?
இவர்களில் பாதிக்குமேல் இந்தியர்!

- இரகசியம் என்ன?

— பல நூற்றாண்டுகளாய்ச் சபை தூங்கிக்கொண்டிருந்தது.
படுத்தே இருந்ததால் முதுகில் புண்கள்!
ஆனால், ஆவியானவர் ஊதிவிட்டார், எழுந்துவிட்டது!

சபை தனது அடிப்படை அழைப்பை உணர்ந்துவிட்டது —
மத் 4:19 ... உன்னை ஆசீர்வதிப்பேன் ✗
உன்னை ஆசீர்வாதமாக்குவேன் ✓

- "**G–O**–S–P–E–L" என்பதை ''G–O'' சொல்லாமல் உச்சரிக்கமுடியுமா?
  "**G–O**–D" என்பதில் மூன்றில் இருபங்கு ''G–O'' தானே?

''போங்கள்'' என்று இயேசு சொன்ன நான்கு இடங்கள் —

1) *மாற்கு 5:18,19 ... அயலகத்தின் அழைப்பு*

(நண்பர் வட்டாரம்)

''உன் இனத்தாரிடம் உன் வீட்டிற்குப் போய் அறிவி''

இங்கு பிரசங்க வரம் தேவையில்லை.
பேராயர் D.T. நைல்ஸ்: ''ஒரு பிச்சைக்காரன் இன்னொரு பிச்சைக்காரனிடம் சோறு எங்கே கிடைக்கிறதென்று சொல்வதே நற்செய்தியறிவிப்பு!''

- இயேசுவே நமக்கு மாதிரி —

ஒரு குஷ்டரோகியின் வீடு (மாற் 14:3)
யவீருவின் வீடு (மாற் 5:22-24)
சகேயுவின் வீடு (லூக் 19:5)
ஓர் எளிய திருமண வீடு (யோ 2:1)

மூன்று நாட்களுக்கு ஓர் இல்லம் சந்தியுங்கள்;
ஆண்டுக்கு 100 இல்லங்கள் சந்தித்துவிடுவீர்கள்!

வியாதிகள், குடும்பப் பிரச்னைகள், ...

- ''நமது'' ஊர், ''நமது'' இனம் என்றே கூடாதீர்கள் —
  மற்ற மொழியினரோடு, கலாச்சாரத்தினரோடு பழகுங்கள் —
  + எகிப்தில் யோசேப்பு (ஆதி 42:23)
  + பாபிலோனில் தானியேல் (தானி 1:4)

  பழைய ஏற்பாடு எபிரெய மொழியில் எழுதப்பட்டது;
  புதியதோ வணிகமொழியாகிய கிரேக்கில் எழுதப்பட்டது.

  ஒரே வகையினருக்குப் பிரசங்கித்துக்கொண்டிராதீர் —
  அப் 11:19-21 ... கிறிஸ்தவரல்லாதோரிடம் செல்லுங்கள்.
  அந்தியோகியா புதிய மையமானது (அப் 13:1)

- சந்தியுங்கள்:
  மருத்துவமனைகள் ... சிறைச்சாலைகள் ...
  அனாதை விடுதிகள் ... மறுவாழ்வு இல்லங்கள்
  முதியோர் இல்லங்கள் ... சீர்திருத்தப் பள்ளிகள்
  ''இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ ...'' (மத் 25:35-40)
  ''ஒருவனும் எனக்கு உதவவில்லை'' (யோ 5:7)

- தனியாள் ஆத்துமாதாயப்பணியின் சாத்தியம் —
  ஒவ்வொருவரும் மாதத்திற்கு ஒருவரைக் கிறிஸ்துவிடம் கொண்டு வந்து அவரையும் ஆத்துமாதாயகராக்கினால் —

ஜனவரி—100	ஜூலை—6400
பெப்—200	ஆகஸ்டு—12,800
மார்ச்—400	செப்—25,600
ஏப்ரல்—800	அக்—51,200
மே—1600	நவ—1,02,400
ஜூன்—3200	டிச —2,04,800

- கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் ஒரு மிஷனரி;
  கிறிஸ்தவரல்லாதவர் ஒவ்வொருவரும் ஒரு மிஷனரிக்களம்.

ஆன்ட்ரு முரே (1828-1917):

''கிறிஸ்தவர்களில் இரு வகையினரே உண்டு;
ஒன்று, ஆத்துமாதாயகர்; அடுத்தது, பின்மாற்றக்காரர்!''

இதைத்தானே இயேசுவும் போதித்தார் —
''என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்'' (லூக் 11:23)

2. *லூக்கா 14:21,23 ... சந்தைவெளியின் அழைப்பு*

(திறந்த வெளிகள், தெருக்கள்)

''தெருக்களிலும் வீதிகளிலும் சென்று கூட்டி வாருங்கள்''

இயேசு → கடலோரங்கள், கல்லறைகள், தெருக்கள்
(மாற் 6:56; லூக் 13:26)
பவுல் → சந்தைவெளிகள் (ஜெபக் கூட்டங்கள் மட்டுமல்ல)
(அப் 17:17)
அப்போஸ்தலர் → தெருக்கள் (அப் 5:15)
மீனைத் தேடி நாம்தானே போகணும்?

திறந்தவெளிப் பிரசங்கம்
இசைத் திறன்
கைப்பிரதி விநியோகம்

மக்களிடம் பொதுவாகத் திறந்த மனதுண்டு.

3. *மத்தேயு 21:2 ... கிராமங்களின் அழைப்பு*

(கிராமப்புறம்)

''உங்களுக்கு எதிரேயிருக்கும் கிராமத்திற்குப் போங்கள்''
''கட்டியிருக்கும் கழுதை'' — மூடப் பழக்கங்களுக்கு அடிமை

மொரார்ஜி தேசாய்: ''கிராமங்கள் செழித்தால், நாடு செழிக்கும்''
80 சதவீதத்தினர் வாழுவது கிராமங்களில்தான்;
80 சதவீதக் கிறிஸ்தவ ஊழியமோ நகர்களில்தான்!
சந்திக்கப்பட்டோரையே சந்தித்துக்கொண்டிருக்றோம் —

- சிறு சிறு குழுக்களாய்ச் செல்லுங்கள்: 12 சீடர் → 6 x 2
  70 சீடர் → 35 x 2
  2 சீடர் (மத் 21:1,2)

ஆதிச்சபை: பேதுருவும் யோவானும்
பவுலும் சீலாவும்
பர்னபாவும் மாற்குவும்
ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் (தம்பதியர் குழு)

அற்புதங்கள் காண்பீர்கள்!
''இருவர் ஒருமனப்பட்டிருந்தால் ...'' (மத் 18:19)

18 ஆண்டுகள் ''கட்டப்பட்டிருந்தவளைக்'' குறித்து
இயேசு பேசினார்! (லூக் 13:16)

பெந்தெகொஸ்தேயின் நோக்கம் —
''கர்த்தருடைய ஆவியானவர் என்மீதிருக்கிறார் ...
பிரசங்கிக்க ... குணமாக்க ... விடுவிக்க'' (லூக் 4:18,19)

மருத்துவர்களே, கிராமங்களில் பணியாற்றுங்கள்.
இன்று தூசி படிந்த தெருக்களில் நடந்தால்
நாளை பொற்தளத்தில் நடப்பீர்கள்!

வெடித்த, வடுபட்ட, பாதங்களே *அழகிய பாதங்கள்!* (ரோ 10:15)
D.L. மூடி: ''நற்செய்தியைச் சுமந்துசெல்லும் இரு கால்களையே
எனது கல்லறையில் செதுக்குங்கள்!''

4) மாற்கு 16:15 ... தொலைவிடங்களின் அழைப்பு

(தொலைவிடங்கள், இருண்ட பிரதேசங்கள்)

''உலகெங்கும் போய்ச் சுவிசேஷம் அறிவியுங்கள்''

உலகில் பாதிப்பேருக்கு இன்னும் நற்செய்தி எட்டவில்லை —
கிறிஸ்து வந்து 2000 ஆண்டுகளுக்குமேல் ஆனபின்பும்!
வேலை எப்பொழுதுமே அதிகம் ...
வேலையாட்களோ எப்பொழுதுமே குறைவு ...
மிஷனரிகள் தேவை!

அ) பெற்றோர்கள் (Parents)

- தமக்கிருந்த ஒரே மகனைத் தேவன் அனுப்பினார்.
- ஹட்சன் டெய்லர் ... பிறக்கும் முன்னரே அர்ப்பணிக்கப்பட்டவர்

- ஏமி கார்மைக்கல் ... பிரதிஷ்டை ஜெபம்
''எனது பெற்றோரின் ஜெபத்தை ஆண்டவர் கேட்டார்!''
- ஜான் வெஸ்லி, சார்ல்ஸ் வெஸ்லி,
சூசன்னா வெஸ்லியின் மற்ற பிள்ளைகள்
- மிஷனரிப் பால் கொடுத்தே மோசேயைத் தாய் வளர்த்தாள் —
''அவனுக்கு 40 வயதானபோது ...'' (எபி 11:23-26)

சில ஆலோசனைகள் —

- மாற்றுக் கலாச்சாரப் பொருட்களால் இல்லத்தை அலங்கரியுங்கள்:
வில், அம்பு, கைவினைப் பொருட்கள்.
தேசப்படம், உலகப்படம் தொங்கவிடுங்கள்.
ஆதிவாசிகள், வனவாசிகள் படங்கள்.
- இந்தி படிக்கப் பிள்ளைகளை ஊக்குவியுங்கள்.
இந்தியாவில் 40 சதவீதத்தினர் பேசுவது இந்திதான்.
- பல்வேறு பதார்த்தங்களைச் சமையுங்கள்.
தென்னிந்தியாவில் வட இந்திய உணவு வகைகள்
- விருந்தோம்புங்கள் — மிஷனரிகள்
— மிஷனரிகளின் குழந்தைகள்
- பிள்ளைகளுக்கு மிஷனரிகளின் பெயர்கள் சூட்டுங்கள்.
விளையாட்டு வீரர் பெயர்களைச் சூட்டுவதில் தவறில்லை;
ஆனால் அவர்களுக்கு இன்று வெற்றி, நாளை தோல்வி!
மிஷனரிகளின் பெயர்களின் நோக்கத்தைப் பிள்ளைகளுக்கு
நினைப்பூட்டுங்கள்.
எ.கா.) நற்செய்திப்பணி மீதுள்ள தாகத்தால் எங்கள் மகளுக்கு
''இவாஞ்சலின்'' (= நற்செய்தியறிவிப்பவள்)
எனப் பெயரிட்டோம்.
- பிற மாநிலங்களில் வேலை தேடப் பிள்ளைகளை ஊக்குவியுங்கள்.
(கூடாரத் தொழில் மிஷனரிகள்)

ஆஸ்தி சேர்க்க வளைகுடா நாடுகளுக்குச் செல்லுகிறார்களே;
ஆத்துமாக்கள் சேர்க்க வட மாநிலங்களுக்குச் சென்றாலென்ன?

நீங்கள் பணப் பித்தரானால்
உங்கள் பிள்ளைகளும் அப்படித்தான் வளருவார்கள்.

அன்னாள்: ''ஒரு மகன் கொடுத்தால், அவன் உமக்கே!''
நாமோ: ''ஒரு பிள்ளை கொடுத்தால், சாட்சி எழுதுவேன்!''
— தாளும் மையும்தான் வீணடிப்பு!

மிஷனரிப்பணிக்காய்ப் பிள்ளைகளை ஊக்குவிப்பது சரியா?
ஏன் கூடாது?
தொழிற்கல்லூரிகளில் சேர்க்க எவ்வளவு முயற்சிக்கிறோம்!

விடுமுறைகளில் பிள்ளைகளைப் பணிக்களங்களுக்குக் கூட்டிச்செல்லுங்கள்.
தாலந்துகள் நிறைந்த பிள்ளையை ஆண்டவருக்குக் கொடுங்கள்.

தனது மூன்று குமாரத்திகளையும் சீனாவில் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலி கொடுத்த ஒரு ஸ்காட்லாந்து தாய் சொன்னது —
''சீனாவுக்கு அனுப்ப இன்னொரு மகள் இல்லையே!''

ஆ) பாஸ்டர்கள் (Pastors)

பாஸ்டர் ஆஸ்வால்ட் J. ஸ்மித்தின் பிறந்த நாள் ஜெபம் —
''மரிக்குமுன் 400 மிஷனரிகள் அனுப்ப எனக்குதவும்!''

மிஷனரித் தலைவர்களை அழைப்பியுங்கள்.
மிஷனரிப்பணிக்களங்களுக்குச் சென்று வாருங்கள்.
ஊழியக்களங்களுக்கு வாலிபர் நங்கையரை அனுப்பிவையுங்கள். மிஷனரி மாநாடுகள் நடத்துங்கள்.

சபையானது சபையாகவே இருக்க வேண்டும்;
அது சங்கிலியாகிவிடக் கூடாது.

*''என் ஜனங்களைப் **போக** விடு!''*

தரிசனமில்லாத பெரிய சபையைவிட
பரந்த தரிசனமுள்ள சிறிய சபையே மேல்!

இ) பிரசங்கிமார் (Preachers)

உள்ளூர் ஊழியங்களில் தேவன் உங்களை வல்லமையாய்ப் பயன்படுத்திக்கொண்டிருந்தாலும், புது இடங்களுக்குச் செல்லுங்கள்!

"Goodbye, Madras!" (சென்னைக்கு டாட்டா!) திரைப்படம், 1991

சென்னையிலுள்ள பாதிச் சபைகளைப் பிற சபைகளோடு இணைத்துவிட்டு, நீங்கள் வட மாநிலங்களுக்குச் செல்லலாம்.
சென்றிருக்கவேண்டிய பலர் தங்கிவிட்டனர்

- பவுலும் பர்னபாவும்

  அப் 11:19-26
  அந்தியோகியாவில் தங்கிவிட்டனர் —
  விறுவிறுப்பான *தீர்க்கதரிசன, போதனை* ஊழியம்
  தேவ கட்டளை: *''அனுப்பிவிடுங்கள்!''*
  (13:1,2)

- பிலிப்புவைப்போல் நகர்ப்புறங்களில் வெற்றிகரமான ஊழியம் செய்துகொண்டிருக்கலாம் (அப் 8:5) ... *திரள் கூட்டம்*

''வனாந்திரத்திற்குப் போ!''

அங்கே ஓடு! வாகன வசதியில்லை!
அங்கே ஓர் எத்தியோப்பியன்!

வில்லியம் பூத்: ''ஆலய மணியோசை கேட்குமிடத்திலேயே வசிக்க விரும்புவோருண்டு; நானோ நரக வாசலுக்கருகில் சாவடி அமைத்து மக்களைக் காப்பாற்றுவேன்!''

ஈ) வாலிபர், நங்கையர் (Youth)

கிறிஸ்துவின் சீடரில் பெரும்பாலானோர் வாலிபரே.
அழைக்கப்படும்போது சவுல் (பவுல்) ஒரு *''வாலிபன்''* (அப் 7:58)

நற்செய்திக் கூட்டங்களில் பெயர் சொல்லி அழைப்பது இன்று பிரபலம்;
ஆனால் எதற்கு?

திருமறைக் காலங்களில் —

ஆபிரகாம்	—	நான் காட்டும் தேசத்திற்குப் போ!
மோசே	—	கானானுக்குப் போ!
எரேமியா	—	நாடுகளுக்குப் போ!
பேதுரு, யோவான்	—	மனிதரைப் பிடிக்கப் போங்கள்!

பவுல் — மக்கெதோனியாவுக்குப் போ!
பேதுரு — செசரியாவுக்குப் போ! (கொர்நேலியு)
பிலிப்பு — காசா வனாந்திரத்திற்குப் போ!
தீமோத்தேயு — மனிதரை ஆதாயப்படுத்த
பண ஆசையை விட்டு ஓடு!
(சுவிசேஷகனின் வேலையைச் செய்)

ஆனாலும் போங்கள் —

அ) போதுமான விபரங்கள் இல்லாவிடினும் — ஆபிரகாம்
ஆ) தாலந்துகள் இல்லாவிடினும் — மோசே
இ) அற்புதங்கள் இல்லாவிடினும் — கிதியோன்
ஈ) அனுபவம் இல்லாவிடினும் — எரேமியா
உ) குடும்பப் பொறுப்புகள் இருந்தாலும் — பிலிப்பு
ஊ) குறைவுகள் இருந்தாலும் — சீடர்
எ) உள்ளூர் ஊழியம் இருந்தாலும் — பவுல், பர்னபா

அழைப்பை அறிந்துகொள்வது எங்ஙனம்?

- உள்ளிருந்து சத்தம்: ஒரு விருப்பம்
ஒரு திருப்தியின்மை
ஒரு சலசலப்பு
- மேலிருந்து சத்தம்: திருமறைத் தியானம்
ஜெபம்
செய்திகள், கூட்டங்கள்
- சுற்றியிருந்து சத்தம்: தேவை
நிலைமை

ஒரு வீட்டில் தீப்பிடித்தால் என்ன செய்வீர்கள்?

ஏன் வந்தாய்? என்று ஆண்டவர் எவரிடமும் கேட்டதில்லை; ஏன் வரவில்லை? என்றுதான் கேட்டவண்ணமிருக்கிறார்.

- கீழிருந்து சத்தம்: ஐசுவரியவானின் கூக்குரல்.
நிமிடத்திற்கு 83 பேர் இறப்பு.

ஏசா 6:1,8,9 ... நீங்கள்தான் *"என்னை அனுப்பும்"* என்று முன்வரவேண்டும்.

(92,104ஆம் அத்தியாயங்களின் குறிப்புகளையும் படியுங்கள்.)

104

மிஷனரி அழைப்பு என்றால் என்ன?

What's a Missionary Call?

முகவுரை

☐ யோவான் தனது தரிசனத்தில் ஏழு சபைகளைக் கண்டான். நான் ஏழுவித சபைகளை இந்தியாவில் காண்கிறேன் —

1. குருட்டுச் சபை (Blind Church)
— அதற்குத் தரிசனம் கிடையாது.
— காம்பவுண்டு சுவருக்கு வெளியே பார்க்கமுடியாது.
2. செவிட்டுச் சபை (Deaf Church)
— தேவையிலிருப்போரின் கதறல் அதற்குக் கேட்காது.
— தனது காரியங்களைக் கவனிப்பதிலேயே சிரத்தை.
3. ஊமைச் சபை (Dumb Church)
— அதற்குக் குரல் கிடையாது.
— சாட்சிபகரப் பயப்படும்.
— உலகை அமைதியாய் வேடிக்கை பார்க்கும்.
4. முடமான சபை (Lame Church)
— பார்க்கும், பேசும், ஆனால் நடக்கமுடியாது.
— வெளியே போகாது. திமிர்வாதம்.
— 40 ஆண்டுகளாய் ஆலய வாசலில்!
5. உணர்ச்சியிழந்த சபை (Numb Church)
— அன்பு, இரக்கம், இவ்வித உணர்வெல்லாம் கிடையாது.
— காயப்பட்டுக் கிடப்பவனை விலகிச் சென்றுவிடும்.
6. பைத்திய சபை (Insane Church)
— என்ன செய்யவென்று தெரியாது.
— என்ன செய்கிறதென்று தெரியாது.
— தெளிவு, திசை, குறி எதுவும் கிடையாது.
— வீடு தீப்பற்றி எரியும்போது, மேசை, நாற்காலிகளை அடுக்கிக்கொண்டிருக்கும்!

7. செத்த சபை (Dead Church)

— உயிருள்ளது என்று பெயர்தான், ஆனால் செத்தது (வெளி 3:2)
— செத்து 4 நாளாயிற்று!
4 ஆண்டாயிற்று!
40 ஆண்டுகளாயிற்று!

இவையெல்லாவற்றிற்கும் வேறுபட்ட இன்னொரு சபை உண்டு —

அதுதான் மிஷனரிச் சபை! (Missionary Church)

☐ ஆசியாவின் 7 சபைகளில் இரண்டுதான் கண்டிக்கப்படவில்லை; அவை மிஷனரிச் சபைகள் —

ஒன்று சிமிர்னா சபை
— *''சிறையிலடைபட்டாலும் சாட்சி பகர்வதில் உண்மை''* (வெளி 2:10)

அடுத்தது பிலதெல்பியா சபை
— *''கொஞ்சந்தான் பலம்* இருந்தும் தைரிய சாட்சி'' (வெளி 3:8) ... *(திறந்த வாசல்)*

☐ எல்லா ஆலயங்களிலும் விளம்பரப் பலகை உண்டு. தவறாமல் அறிவிக்கப்படுவது:
''ஆராதனை'' — இது ''தேவனை நோக்கியது.''

ஆனால் நான் பார்க்காதது:
''சாட்சி'' — இது தேவனுக்காய் ''மனிதனை நோக்கியது.''

ஆராதிக்க சபை உள்ளே வருகிறது;
ஆனால் சாட்சி பகர அது வெளியே போவதில்லை.

☐ ஆராதிப்பதும் சாட்சி பகர்வதும் பிரிக்க முடியாதவை; ஒன்று அடுத்ததற்கு நடத்தவேண்டும் —

- சங் 95 ... ஆராதிக்க வாருங்கள் (வச 1)
  சங் 96 ... சாட்சி பகரச் செல்லுங்கள் (வச 2 ஆ,3)
- சங்கீதக்காரன்: *''என் முழு உள்ளமே, ஸ்தோத்திரி!''*
  பவுல்: *''என்னாலான மட்டும்''* சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பேன்

- இயேசுவின் இரு கட்டளைகள்:
  1. தேவனை நேசியுங்கள் — ஆராதனை (Worship)
  2. மனிதரை நேசியுங்கள் — சாட்சி (Witness)

  துதி ஸ்தோத்திரத்தில் இன்று எங்கும் ஒரு புது உற்சாகம்; ஆனால் சாட்சிபகர்வதில் எழுப்புதலைக் காணோமே!
- பேன்னி கிராஸ்பி — 8000 பாடல்கள்
  (பிறந்து சில வாரங்களில் பார்வையிழப்பு)
  தனது அதிமுக்கிய பாடல் என்று சொன்னது:
  "Rescue the Perishing, Care for the dying!"
  அழிவோரைத் தூக்கிவிடு; மடிவோரைத் தாங்கிடு!
- பேதுரு: (1 பேது 2:5,9)
  பரிசுத்த ஆசாரியக் கூட்டம் — துதி பாட (செங்குத்து)
  ராஜரீக ஆசாரியக் கூட்டம் — தூது அறிவிக்க (சமதளம்)
- துதிப்பதோடு நின்றுவிடக்கூடிய ஆபத்து —
  எபி 13:15,16 ... *நன்மை செய்ய* ***மறவாதிருங்கள்***
- கிறிஸ்தவர்களில் 99 சதவீதத்தினருக்குத் திருப்பணியில் வேலை கிடையாது என்பது சமீபத்திய புள்ளி விபரம்!

  நாள் முழுவதும் சும்மா நின்றுகொண்டிருக்கின்றனர் (மத் 20:1-7)

  கேள்வி: *''ஏன் சும்மா நிற்கிறீர்கள்?''*
  பதில்: *''ஒருவரும் எங்களை வேலைக்கு அமர்த்தவில்லை!''*

3ஆம், 6ஆம், 9ஆம் மணி வேளைகளில் வேலைக்கு ''அமர்த்தப் பட்டனர்;'' 11ஆம் மணி வேளையிலோ ''அதட்டப்பட்டனர்.''

நமது சாக்கு: நாங்கள் அழைக்கப்படவில்லை
ஆனால் உண்மை: நாம் கீழ்ப்படியவில்லை!

கீழ்க்கண்ட 7 அழைப்புகளில் ஒன்றும் உங்களுக்கு இல்லையா?

1. விண்ணகத்திலிருந்து அழைப்பு (Heaven)

ஏசா 6:8 ... *யாரை நான் அனுப்புவேன்?*

அழைப்புக்கும் அடிபணிதலுக்குமிடையே ஒரு வசனங்கூட இல்லை. நமக்கோ பல்லாண்டுகள் பிடிக்கிறது.

ஏசாயா **தாமாகவே** முன்வந்தார்!

ஓர் ஆழமான ஆன்மீக அனுபவத்தைத் தொடர்ந்தே பொதுவாக இவ்வழைப்பு நமக்கு வரும்.

- ஏசாயா — ஒரு ராஜா மரித்தபோது ராஜாதி ராஜாவின் தரிசனம் (ஏசா 6:1)
- பேதுரு — திரளான மீன் பிடிப்பை அடுத்து — *''நான் பாவி; என்னை விட்டுப் போய்விடும்!''* *''பயப்படாதே, இதுமுதல் மனிதரைப் பிடிப்பாய்!''* (லூக் 5:1-10)
- பவுல் — தமஸ்கு சாலையில் — இதனைப் *''பரம தரிசனம்''* என்றழைக்கிறார். (அப் 9:1-20; 26:19)

கடந்த கால ஆவிக்குரிய அனுபவங்களை நினைவுபடுத்திப் பாருங்கள்.

நீங்கள் அழைக்கப்படவில்லையோ?
அவ்வேளையில் தேவனிடம் வாக்குப்பண்ணியது என்ன?

2. நரகத்திலிருந்து அழைப்பு (Hell)

''லாசருவை அனுப்பும்!'' (லூக் 16:28)

நிமிடத்திற்கு 83 பேர் இறப்பு —
பெரும்பாலானோர் செல்வது கிறிஸ்தற்ற நித்தியத்திற்குள்.

கிறிஸ்தற்ற மனிதர் நித்திய வாழ்வு இல்லாதே போவர்.
கிறிஸ்து மூலமே இரட்சிப்பு.

தேவன் சொல்வது: *''பாவம் செய்கிற ஆத்துமா சாகும்!''*
பிசாசு ஆதி முதல் சொல்லிவருவது: *''நீ சாக மாட்டாய்!''*

நாம் சத்தியத்தை அறிவிக்கவேண்டும் —

சத்தியமே மக்களை விடுவிக்கும்!
மனந்திரும்பாதோருக்கு மறுவருகையின்போது நிகழ்வது: 2 தெச 1:7-9

நரகம் நித்தியமானது, நிசமானது.
நமக்குப் பரலோகம் பற்றிய தரிசனம் தேவையில்லை;
நாம்தான் அங்கு போகப்போகிறோமே;
ஏற்கனவே நுழைவுச்சீட்டும் கிடைத்துவிட்டதே!

மட்டுமல்ல, பரலோகக் குடியுரிமையும் உண்டு!
''நமக்குத் தேவை, நரகம் பற்றிய தரிசனமே!''
— வில்லியம் பூத் (1829-1912)

மரணத்திற்கு நியமிக்கப்பட்டோரை விடுவியுங்கள் — நீதி 24:11,12

கிறிஸ்தற்றவன் எவனது இழவும் ஒரு மிஷனரி அழைப்பே!

3. மனுக்குலத்தின் அழைப்பு (Humanity)

எருசலேமுக்கு வெளியே எரிகோ செல்லும் சாலையில் கோடிகள் காயமுற்றுக் கிடக்கின்றன (லூக் 10:30)

மக்களுக்காக இயேசுவோடு *நகருக்கு வெளியே புறப்பட்டுச் செல்வோம்* (எபி 13:12,13)

கீழ்க்கண்டவர்களால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் ...

குருக்கள் (Priests)	— மார்க்கவுலகு
தத்துவ ஞானிகள் (Philosophers)	— ஞானம்
பேராசிரியர்கள் (Professors)	— கல்வியுலகு
அரசியல்வாதிகள் (Politicians)	— ஆட்சி
உடைமைகள் (Possessions)	— பணம்
சிற்றின்பங்கள் (Pleasures)	— மது, மாது

- என்றுமிருந்ததைவிட இன்று உலகில் மக்கள் அதிகம் — ஆனால் கிறிஸ்தவர் **ஒவ்வொருவரும்** ஈடுபட்டால் உலகை நற்செய்திமயமாக்குவது எளிது —

கி.பி.	1430 ...	100 பேருக்கு	1 விசுவாசிதான்
	1790 ...	100 பேருக்கு	2 விசுவாசிகள்
	1940 ...	100 பேருக்கு	3 விசுவாசிகள்
	1960 ...	100 பேருக்கு	4 விசுவாசிகள்
	1970 ...	100 பேருக்கு	5 விசுவாசிகள்
	1980 ...	100 பேருக்கு	6 விசுவாசிகள்
	1983 ...	100 பேருக்கு	7 விசுவாசிகள்
	1986 ...	100 பேருக்கு	8 விசுவாசிகள்
	1989 ...	100 பேருக்கு	9 விசுவாசிகள்
	1993 ...	100 பேருக்கு	10 விசுவாசிகள்

அப்படியானால், இன்று விசுவாசிகள் எவ்வளவு அதிகம்!

ஒவ்வொரு விசுவாசியும் 3 அல்லது 4 அவிசுவாசிகளைத்தான்
சந்திக்க வேண்டும்! என்னே வாய்ப்பு!

தனியாள் ஆத்துமாதாயப்பணிக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

உங்களிடம் ஒரு ''செய்தி'' உண்டு, ''நாவுகள்'' உண்டு	எனவே செல்லுங்கள்!

''சொல்லப்பட்டிராத இடங்களுண்டு;
என்னை அங்கு சொல்ல இங்கு ஆட்களுண்டு!''

- இந்தியாவின் 80 சதவீதத்தினர் வாழுவது கிராமங்களிலேயே — அவர்களது அழைப்பு ...

''வந்து எங்களுக்கு உதவுங்கள்!'' (மக்கெதோனியர்: அப் 16:9)

கிராமப்புற நற்செய்திப்பணிக்குக் குழுக்களாய்ச் செல்லுங்கள்.

குறுகிய கால மிஷனரிகளாகவும் தொலைவிடங்களுக்குச்
செல்லலாம்.

ஆன்மீகப் **''போராட்டம்''** குறித்துப் படித்துவிட்டுப்
''போர்க்களம்'' செல்லாவிடில் பயனென்ன?

எ.கா.) எபேசியர் 6இல் போராட்டம் பற்றிய வசனப்பகுதி
மிஷனரிப்பணியை அடுத்தது, தெரியுமா? (வச 19,20)

4. இதயத்தின் அழைப்பு (Heart)

எ.கா.) மோசே ... அப் 7:22,23
விசுவாசத்தினால் வெளிக்கிளம்பினான்! (எபி 11:24-27)

காணமுடியாததைக் கண்டான் ...	(Invisible)
கேட்கமுடியாததைக் கேட்டான் ...	(Inaudible)
அழிக்கமுடியாததைத் தெரிந்தெடுத்தான் ...	(Imperishable)
செய்யமுடியாததை முயற்சித்தான் ...	(Impossible)

பயப்படாதிருங்கள்! புறப்பட்டுச் செல்லுங்கள்!

- புறப்பட்டுச் செல்வோருக்கே இயேசு சொன்னது:
''உலகம் முடியும்வரை உங்களோடிருப்பேன்'' (மத் 28:19,20)
- சாட்சி பகர்வதில் தைரியங்கொள்ளவே ஆவியானவர் அருளப் பட்டார்; பயத்தின் ஆவி பறந்தது! (அப் 1:8; 2 தீமோ 1:6-8) —

பலமுள்ள ஆவி: செய்தியை அறிவிக்க.
அன்புள்ள ஆவி: மக்களை அணைத்துக்கொள்ள.
தெளிந்த புத்தியுள்ள ஆவி: தகுந்த செயல்முறைகளை
அப்பியாசிக்க.

எதை உண்போம், உடுத்துவோம் என்ற கவலை வேண்டாம் —
*''உங்கள் **விண்தந்தைக்கு** இது தெரியும்!''* (மத் 6:25-32)

உங்களை அழைப்பது யார்?

அப்பா — பிள்ளைகளுக்கு ஆகாரம் தரமாட்டாரோ?
அரசர் — சேவகர்களுக்குத் தளவாடம் தரமாட்டாரோ?
அறுவடை ஆண்டவர் — வேலையாட்களுக்குக்
கூலி தரமாட்டாரோ?

பரிசுத்த விருப்பங்களை நம்மில் உருவாக்குவது தேவனே —
பிலி 2:13

- பெற்றோரே, பிள்ளைகளுடைய ஆன்மீக விருப்பங்களை நசுக்காதீர்கள். அவர்களை ஊக்குவியுங்கள்!
- வாலிபர், நங்கையரே,
உங்கள் இருதயத்தில் ஆவியானவரின் உந்துதலை
அணைத்துவிடாதீர்.
''அவர் எப்பொழுதும் போராடமாட்டார்'' (ஆதி 6:3அ)
இன்று அவர் சத்தம் கேட்டால், **இதயத்தைக்** கடினப்படுத்தாதீர்!

5. கொடூரங்களின் அழைப்பு (Horrors)

- *யுத்தங்கள், பூமியதிர்வுகள், பேரழிவுகள்* போன்றவை நற்செய்தியறிவிப்புக்கு ஆயத்தம் —
லூக் 21:10-13 ... *''சாட்சியாவதற்கு ஏது''*

இழந்த வாய்ப்புகளே நமது மாபெரும் சோகம்.

எ.கா.) இரண்டாம் உலகப் போரையடுத்து, ஆயிரமாயிரம் மிஷனரிகளைத் தோல்வியுற்ற ஜப்பானுக்கு அனுப்ப அமெரிக்கத் தளபதி ஒருவர் அமெரிக்க சபைக்குச் சவால்விட்டார். அது அனுப்பவில்லை. அப்பொழுது, பொருளாதாரம் எனும் தேவதையை ஜப்பான் கண்டு பிடித்தது. இன்று எல்லா நாடுகளும் வணங்குவது "Made in Japan" எனும் பொருட்களையே!

இவ்விதமே, வட இந்தியாவுக்கு இதுவே இரட்சண்ய நாள்.
தொழுகைத் தலங்கள் குறித்து இந்துக்களும் முகமதியரும்
மோதிக்கொண்டிருக்கின்றனர்.

மக்களிடம் சொல்லுவோம்:

''கட்டிடங்களில் கடவுள் குடிகொள்வதில்லை!''

தென்னிந்தியச் சபை சோம்பலாய்க் கரிசனையின்றி இருக்கிறது.
''எபிரெயு'' மொழிக்குப் பதிலாய் ''இந்தி'' படிக்கலாமே!
''கிரேக்கு'' மொழிக்குப் பதிலாய்க் ''குஜராத்தி'' படிக்கலாமே!
Hebrew or Hindi? Greek or Gujarati?

புதிய ஏற்பாட்டை எபிரெய மொழியில் அல்ல,
கிரேக்க மொழியிலேயே தேவன் ஏன் எழுதவைத்தாரென்று
இன்னுமா புரியவில்லை?

- இந்தியா கடந்துசெல்லும் பாதை கொடூரமானது —
தற்கொலைகள் — 1980: 41,663
1990: 73,911
2000: 1,00,000க்கு மேல்
(40 சதவீதம் கூடுதல்)
அதிக பட்சம் தமிழகத்தில்தான்!

உடைந்த குடும்பங்கள் பெருகுகின்றன.
விவாக ரத்துக்கள் அதிகரிக்கின்றன.
பெற்றோர்-பிள்ளைகள் முரண்பாடு கூடுகின்றது.

இல்லங்களைச் சந்தியுங்கள்.
மருத்துவமனைகளைச் சந்தியுங்கள்.

தினசரி செய்தித்தாள்தான் தமது உலகிற்குத் தேவனது அழைப்பு!

6. ***நிகழ்வுகளின் அழைப்பு*** (Happenings)

நமது வாழ்வில் தேவன் அனுமதிக்கும் நிகழ்வுகள் நமக்குச் செய்தி—

எ.கா.) மோசே (யாத் 2:11-15)

— சூழ்நிலைகளினால் எகிப்திலிருந்து மீதியானுக்குத்
துரத்தப்பட்டவன் அங்கு மகிபனைத் தரிசித்தான்;
மனைவியைக் கண்டடைந்தான்!

அதைத் ''தெரிந்துகொள்ளுதல்'' எனலாம் (எபி 11:24-26)
எல்லாமே நமது நன்மைக்காகவே —

எ.கா.) பவுல் (பிலி 1:12,13)

நமது வெற்றிகளல்ல, தோல்விகள் மூலமே தேவன் சத்தமாய்ப் பேசுகிறார். நமது ஏமாற்றங்கள் தேவனருளும் ஏற்றங்கள் ஆகலாம்.

உங்கள் கவலைகளை வீணடிக்காதீர்!

— வேலைத்தலப் பிரச்னை கர்த்தரின் சத்தமாயிருக்கலாம்.
— வியாபாரத்தில் இழப்பு கர்த்தரின் சத்தமாயிருக்கலாம்.
— மூடிய கதவுகள் மூலமாகவும் நடத்துதல் வரலாம் ...

ஆசியா → பித்தினியா → மக்கெதொனியா (அப் 16:6-10)
முன்சென்றுகொண்டேயிருங்கள்!

''இடது புறம் வலது புறம் சாய்ந்தால் ...'' (ஏசா 30:20,21)
போய்க்கொண்டேயிருங்கள்!

7. ***சரித்திரத்தின் அழைப்பு*** (History)

முக்கியப் பணிகளுக்குத் தேவன் இளைஞரைப் பயன்படுத்தி
வருவதைச் சரித்திரத்தில் நெடுகவே காண்கிறோம் —

எ.கா.) கிறிஸ்துவின் சீடர் *(''தங்கள் தகப்பனை விட்டு ...'')*

- மிஷனரிப் பணியின் முதலாம் யுகம்
— வில்லியம் கேரி (1761-1834)
(30 வயதுக்கு முன்)
- மிஷனரிப் பணியின் இரண்டாம் யுகம்
— டேவிட் லிவிங்ஸ்டன் (1813-1873)
— ஹட்சன் டெய்லர் (1832-1905)
— மேரி ஸ்லெசர் (1848-1915)
- மிஷனரிப் பணியின் மூன்றாம் யுகம்
— கேமரான் டவுண்செண்ட் (1896-1982)
— டோனால்டு மெக்காவ்ரன் (1897-1990)

ஏன்?

வேலையை முடித்த பின்னரே இளைஞர் கேள்வி கேட்பர்;
முதியோரோ தங்கள் கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமுன்
வேலையைத் துவங்கவே மாட்டார்கள்.

வளர்ச்சி சதவீதம்: கிறிஸ்தவம் 6.9%, இந்துமதம் 2.2%,
இஸ்லாம் 2.7%, புத்த மதம் 1.7%

ஆம், கிறிஸ்தவமே இன்று உலகில் மிகத் துரிதமாய் வளரும் மார்க்கம்.
மிஷனரிப்பணி ஒரு தொடர் ஓட்டம் (Relay race).

வாலிபனே, நங்கையே, கோலை வாங்கிக்கொண்டு ஓடுவாயா?

நீங்கள் இல்லையேல், எவர்?
இப்பொழுது இல்லையேல், எப்போது?
If not you, who? If not now, when?

யோசேப்பு என்ற வாலிபன் மூலமாகவே எகிப்து முழுவதும் யேகோவாவே உயிருள்ள தேவன் என்று அறிந்தது.

அப்படியே, பாபிலோன் ...
தானியேல், அனனியா, அசரியா, மீஷாவேல் எனும் வாலிபர்!

வாலிபனே, இந்தியாவுக்குத் தேவனது தெரிந்தெடுப்பு நீதான்!

இதுவே இறுதிப் பத்தாண்டாய் இருக்கலாம்!
அப்படியானால் நீ இருப்பது இறுதிக்கட்டம்!
உடனே புறப்பட்டு வா!

- இன்றே நமது; நாளை நமதல்ல!
  — ரோமப் புலவர், ஹோரேஸ், கி.மு. 23

■ *முடிவுரை*

1. **விண்ணுலகு** அழைக்கிறது, புறப்படுங்கள்!
2. **நரகம்** அழைக்கிறது, புறப்படுங்கள்!
3. **மனுக்குலம்** அழைக்கிறது, புறப்படுங்கள்!
4. உங்கள் **இதயம்** அழைக்கிறது, புறப்படுங்கள்!
5. **கொடூரங்கள்** அழைக்கின்றன, புறப்படுங்கள்!
6. **நிகழ்வுகள்** அழைக்கின்றன, புறப்படுங்கள்!
7. **சரித்திரம்** அழைக்கிறது, புறப்படுங்கள்!

இவை யாவற்றின் மூலமாகவும் உங்களை இயேசு அழைக்கிறார்!

(103,108ஆம் அத்தியாயங்களின் குறிப்புகளையும் படியுங்கள்.)

105

மிஷனரிகளை அனுப்புவதென்றால் என்ன?

What's Missionary Sending?

முகவுரை

- மிஷனரிப்பணியை விளக்கும் நேர்த்தியான வசனப் பகுதி —
  ரோ 10:12-15

மிஷனரிப்பணியின் ஐந்து செயல் வீரரை இங்கு சந்திக்கிறோம் —

அனுப்புவோர்	(Senders)
பிரசங்கிப்போர்	(Preachers/Goers)
கேட்போர்	(Hearers)
விசுவாசிப்போர்	(Believers)
ஆராதிப்போர்	(Worshippers)

''அனுப்புவதுதான்'' மிஷனரிப்பணிக்கு அடித்தளம்.

மிஷனரி (லத்தீன்) = அப்போஸ்தலன் (கிரேக்கு) = ''அனுப்பப்பட்டவன்.'' அனுப்புவதென்றால் மிஷனரிப்பணிக்குப் பணம் அனுப்புவது மட்டுமல்ல;
அது ஐந்து செயல்பாடுகளை உள்ளடக்கியது —

1. அது மிஷனரிப்பணிக்காய் ''ஜெபித்தல்.''

- இயேசு: *ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள் ...* (மத் 9:36-38)
  ''ஆகையால் புறப்பட்டுப்போங்கள்'' என்பதற்குமுன் (மத் 28:19)
  பவுல்: *பிரதானமாய் எல்லா மனிதருக்காக ஜெபம்* (1 தீமோ 2:1-4)

■ எவைகளுக்காய் ஜெபிக்கவேண்டும்?

□ ஊழியரின் தைரியத்திற்காய் (எபே 6:19,20)

□ இதயங்கள் திறக்கப்பட
— லீதியாள் (அப் 16:14)
— *கண்களைச் சாத்தான் குருடாக்கியிருக்கிறான்* (2 கொரி 4:3,4)
''ஒளி உண்டாகுக'' என்று தேவன் கட்டளையிட.

□ எதிரிகள் வாயடைக்கப்பட (1 பேது 2:15)
... அற்புதங்கள் ... அடையாளங்கள் ... (அப் 4:29,30)

□ புதிய விசுவாசிகளுக்காக
''இவர்கள் மூலம் வசனம் விசுவாசிப்பவர்'' (யோ 17:20)

□ மிஷனரிகள் நலமாயிருக்க (110ஆம் அத்தியாயம் பாருங்கள்.)
மன நலம், உடல் நலம், ஆன்மீகம், பொருளாதாரம், சமூக வாழ்வு

''வருமுன் காப்பதே மேல்'' (Prevention is better than cure!) —
எனவே ஒரு தடுப்பு ஜெபத் தோழராயிருங்கள்
Preventive Prayer Partners / PPP

மிஷனரிகள் காக்கப்படவேண்டியது —

பரிசுத்தக் குலைவிலிருந்து	(Defilement)
வியாதிகளிலிருந்து	(Diseases)
சோர்பிலிருந்து	(Depression)
பிரிவினைகளிலிருந்து	(Divisions)
அபாயங்களிலிருந்து	(Dangers)

■ **எப்படி** ஜெபிக்கவேண்டும்?

□ அகத்தூண்டுதலின்படி ஜெபியுங்கள் (Inspiration) —
பணிக்களத்திலுள்ள ஏதோவொரு இக்கட்டான நிலை
குறித்து ஆவியானவர் உங்களைப் பாரப்படுத்தலாம்.

□ அறிவிக்கப்பட்டபடி ஜெபியுங்கள் (Information) —
மிஷனரிப்பணிச் சுற்றறிக்கைகள்
"*Operation World*" எனும் புத்தகம், செய்தித்தாள்கள்,
தலைவர்களும் பணியாளர்களும் பகிரும் தகவல்கள்

□ கற்பனை செய்து ஜெபியுங்கள் (Imagination) —
களங்கள் மற்றும் பணியாளரின் தேவைகள், பிரச்னைகள்.
உங்களை ஊற்றி ஜெபியுங்கள் —
ரோ 9:1-3; 10:1,2
அவ்விதமே, மோசே (யாத் 32:32)

(101ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

2. அது மிஷனரிப்பணிக்குக் ''கொடுத்தல்.''

கிறிஸ்தவப்பணியில் இரு வகை —

அ) சபை நிறுவுதல் — *''நான் நட்டேன்''* (1 கொரி 3:6)
மீனவர், பாறை உடைப்போர், ...

ஆ) சபை வளர்த்தல் — *''அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்''*
மேய்ப்பர், செதுக்குவோர்

(Planting of Churches & Perfecting of Churches)

தேவனுக்கென்று நாம் எடுத்துவைக்கும் தொகை
இவ்விரு குழுவினருக்கும் பகிரப்படவேண்டும்.

■ **எப்படிக்** கொடுக்கவேண்டும்?

அ) கிரமமாய்க் கொடுங்கள்.

— மிஷனரி இயக்கங்கள் மிஷனரிமார்களுக்கு மாதாந்தர
உதவித்தொகை கொடுக்க மாதாந்தரக் காணிக்கை.

— தாங்க வாக்குறுதி கொடுப்பது ஓர் ஒழுங்கு.
எ.கா.) பொதுச் சேமிப்பு vs. மாதாந்தரச் சேமிப்பு

பல்வேறு திட்டங்கள் —

□ ஒரு மிஷனரியின் மாதாந்திர உதவித்தொகை
□ ஒரு பணிக்களத்தின் செலவுகள்
□ ஓர் ஆலயம்/குடியிருப்பு கட்டுதல்
□ ஒரு வாகனம் அன்பளித்தல்
□ ஒரு வைப்புத் தொகைக்குப் பணம்

நமது பிள்ளைகளின் படிப்பிற்காய் எவ்வளவோ செலவழிக்கிறோமே!

ஆ) தியாகமாய்க் கொடுங்கள்.

— நியாயமான அனுபோகத்தின் தொகையைக் கொடுத்துவிடல்.
எ.கா.) பிலிப்பிய விசுவாசிகள் (பிலி 4:15,16 / 2 கொரி 8:1-3)

— தியாகக் காணிக்கை மகிபனுக்கும் மனிதருக்கும்
சுகந்த வாசனை

எ.கா.) நளதத் தைலம் (யோ 12:3 / ஏசா 43:24)

• உதவ வேண்டிய இன்னொரு குழு —
''எளியவர்''

திருச்சபைக்கும் திருப்பணிக்கும் கொடுப்பது
தேவனுக்குக் ''கொடுப்பது;''
எளியவர்க்குக் கொடுப்பது தேவனுக்குக் ''கடன் கொடுப்பது!''
(நீதி 19:17)

''தரித்திரர் எப்போதும் நம்மிடம் இருக்கின்றனர்''
நாம் எப்போதும் தரித்திரரோடு இருக்கிறோமா?
''இந்தச் சிறியருக்குச் செய்யப்பட்டது எனக்கே'' (மத் 25:34-40)

(102ஆம் அத்தியாயக் குறிப்புகளைப் படியுங்கள்.)

3. அது மிஷனரிகளுக்குப் ''புத்துணர்வூட்டுதல்.''

மிஷனரிகள் தேவதூதர்கள் அல்ல;
அசாதாரணப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட
சாதாரண மனிதர்!

அவர்களுக்குக் களைப்பு, கவலை, கண்ணீர் எல்லாம் உண்டு.
''ஒரு கலசம் தண்ணீர்'' கொடுத்துப் புத்துணர்வளியுங்கள்
(மத் 10:40,42)
பன்னிருவரைப் பணித்து முடித்ததும் இயேசு சொல்லியது இது.

■ மிஷனரிகளுக்குப் புத்துணர்வூட்ட சில வழிமுறைகள் —
- ☐ மருத்துவ உதவி — எ.கா.) Missionaries Upholders Trust
- ☐ பிள்ளைகளின் செலவுகள் ... மாதாந்திர உதவி, கல்விச் செலவுக்கு உதவி
- ☐ உடைகள், சாதனங்கள், குளிராடைகள் முதலியன.
- ☐ விடுமுறைக் காலங்களில் விருந்தோம்புதல். மிஷனரிகளுக்கு இளைப்பாறும் இல்லங்கள் கட்டுதல்

பவுலின் சாட்சி —

1 கொரி 16:17,18 ... *ஆறுதல் ... புத்துணர்வு ...*
2 தீமோ 1:16-18 ... *ஒநேசிப்போரு ... இளைப்பாற்றுதல்*
பிலே 22 ... விருந்தினர் *தங்கும் அறை*
யோவானின் அறிவுரை —
3 யோ 6-8 ... *''தகுதியானபடி வழிவிட்டனுப்பு ...''*

- மிஷனரிகளோடு இவ்வித உறவு கொள்ளுதல் நம்மைத் தாழ்மையாய், மென்மையாய் வைத்துக்கொள்ளும்.

(110ஆம் அத்தியாயத்தைப் படியுங்கள்.)

4. அது களப்பணியை ''ஊக்குவித்தல்.''

மிஷனரிகளின் பெரும் பிரச்னைகளில் ஒன்று ''தனிமை'' —
ஐக்கியக் குறைவு —

■ பணிக்களங்களுக்குச் சென்றுவாருங்கள் —

அ) பணியையும் புதுச் சபைகளையும் **ஊக்குவிக்க**.
எதிர்ப்புகளைச் சந்திக்கும் புது விசுவாசிகள்,
தாங்கள் ஒரு பெரிய சங்கத்தில் ஒரு பகுதி என அறிவது.

சீடர் சந்தித்த கிராமங்களுக்கு இயேசுவும் சென்றார் (லூக் 10:1)
(பள்ளி விழாக்களில் நாம் பங்கேற்பது பிள்ளைகளுக்கு
ஊக்கமல்லவா?)

ஆ) நாம் திருப்பணியில் **சவால் பெற**.
''பார்ப்பதற்கு எதுவும் ஈடாகாது!''
இயேசு: *''கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்''* (யோ 4:35)
இன்னும் கூடுதல் அர்த்தத்தோடு ஜெபிக்க ஏதுவுண்டாக்கும்.
விடுமுறைகளை (LTC) இதற்குப் பயன்படுத்துங்கள்.

5. அது தனியாள் ஆத்துமாதாயப்பணியில் ''ஈடுபடுதல்.''

அயலக நற்செய்திப்பணியின் நீட்டுதலே தொலைவிட
மிஷனரிப் பணியாகும் —

அப் 1:8 ... *எருசலேம் → யூதேயா → சமாரியா → உலகம்*

இயேசு சென்றார், **அத்துடன்** அனுப்பினார் (மத் 10:5; 11:1; லூக் 10:1)
பவுல் சென்றார், **அத்துடன்** அனுப்பினார்
(1 கொரி 4:17-19; பிலி 2:23,24,28)
தாங்குவோர் ஆத்துமாதாயகராகவும் இருக்கவேண்டும்.
அரங்கமெல்லாம் தூண்களாகவே இருந்தால் எப்படி?

''போ'' **அத்துடன்** ''அனுப்பு!''

■ உங்கள் நேரடி ஈடுபாட்டிற்கு மூன்று பகுதிகள் —

அ) சாட்சி பகருதல்/நண்பர் வட்டாரம்
ஆ) சந்திப்பு ஊழியம்
மருத்துவமனைகள் ... சிறைகள் ... சேரிகள் ...
இல்லங்கள் ... பள்ளிகள், கல்லூரிகள்

இ) கிராமப்புற நற்செய்திப்பணி / தொலைவிடப் பணிகள்
80 சதவீத இந்தியர் வாழ்வது கிராமங்களிலேயே.
வாரயிறுதிகளில் குழுக்களாய்ச் செல்லுங்கள்.

காரைக்குடி கல்லூரி வளாகத்தில் ''நற்செய்திக் குழு'' (Gospel Team) என்று 1963-1970இல் செயல்பட்டதுதான் 1971இல் பூரண சுவிசேஷ வாலிபர் ஐக்கியக் குழுவாய் (FGYMA) வளர்ந்தது. இன்றைய BYM.

- மிஷனரிப்பணிக்கு ஆதரவு திரட்டுங்கள் —
  அ) ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்
  ஆ) காணிக்கை சேகரித்தல்
- கிறிஸ்தவத்தின் சோகங்கள் —
  தரிசனமில்லாத சபைகள் ... (Churches without Vision)
  பாரமில்லாத இதயங்கள் ... (Hearts without Burden)
  கண்ணீரில்லாத கண்கள் ... (Eyes without Tears)
  தியாகமில்லாத கரங்கள் ... (Hands without Sacrifice)
  தைரியமில்லாத உதடுகள் ... (Lips without Boldness)
  விரைவில்லாத பாதங்கள் ... (Feet without Swiftness)
  தேயாத முழங்கால்கள் ... (Knees without Scratches)

இப்போக்கை மாற்றக் களத்தில் இறங்குவோம்!

(92ஆம் அத்தியாயக் குறிப்புகளைப் படியுங்கள்.)

106

நாம் மிஷனரி தரிசனத்தை இழப்பதேன்?

Why we lose the Missionary Vision

முகவுரை

இயேசுவின் பிறப்பு சாத்தானின் ராஜ்யத்திற்கு ஓர் அச்சுறுத்தல்.
தனது சிறைக்கைதிகளை இழந்துவிடுவேனோ எனும் பயம்.
எனவே அவன் முயன்றது —

- குழந்தை இயேசுவைக் கொல்ல ...
- ஆலயக் கோபுரத்திலிருந்து அவரைக் கீழே தள்ள ...
- சிலுவைக்குப் போகாது அவரைத் தடுக்க ...
- அவர் உயிர்த்தெழவில்லையென வதந்தி பரப்ப ...
- துன்புறுத்தல், இரத்தசாட்சி மரணங்கள் மூலம் ஆதிச்சபையின் நற்செய்திப்பணியை நிறுத்த ...
- வழிவிலகிச் சோரம்போகச் சபையைத் திசைதிருப்ப ...
  (எ.கா. வெளி 2 & 3)

ஆனால் அவன் முழு வெற்றியடையவில்லை.
''பாதாளத்தின் வாசல்கள் திருச்சபையைக் கட்டுதலை மேற்கொள்ள முடியவில்லை'' (மத் 16:18)

சாத்தானின் இன்றையத் தந்திரம் —
சில வேதவுபதேசங்களை இறைமக்கள் ஓரக் கொள்கைகளாய் வலியுறுத்தி, நற்செய்திப்பணியைச் சாரமற்றதாக்கி, அவர்களது மிஷனரி தரிசனத்தை மங்கச் செய்வது.

இதை நமது நவீனப் பிரசங்கபீடங்களிலிருந்து செய்கிறான் —
2 கொரி 11:14,15 ... *ஒளியின் தூதன் & நீதியின் ஊழியர்*

இவ்வுபதேசங்கள் முழுவதும் தவறாயிருக்காது;
ஆனால் பாதிதான் சரியாயிருக்கும்!

இவை கவர்ச்சியாயிருந்தாலும் மிஷனரிப் பணியின் முக்கியத்துவத்திலிருந்து நம்மைத் திசைதிருப்பும் —
மாற் 13:10 ... *சுவிசேஷம் ... முந்தி ... பிரசங்கிக்கப்படவேண்டும்*

திசை திருப்பும் உபதேசங்கள் —

1. பூரணப்படுதல் உபதேசம் (Perfection Doctrine)

நாம் தேவனைப்போலப் பரிசுத்தமாகிப் பூரணமடைய
வேண்டுமென்பது அவர் சித்தம்.
ஆனால், தேவ மக்கள் பூரணப்படும்வரை மற்றவர்களுக்குப்
பிரசங்கிக்கக்கூடாதென்று இவ்வுபதேசத்தின் ஓர் ஓரம்
வலியுறுத்துகிறது. தகுதியில்லை என்ற உணர்வையே
இது இரத்த நாளங்களுக்குள் செலுத்திவிடுகிறது.

எ.கா.) 99 ஆடுகள் vs. 1 ஆடு
என்பதைத் தவறாய் வியாக்கியானப்படுத்துதல்.

அதாவது, உள்ளேயிருக்கும் 99 ஆடுகள் பூரணப்படாதிருக்க,
வெளியேயிருக்கும் ஒன்றைப்பற்றிக் கவலையேன்?

ஆனால் இந்தியாவில், ஒன்றுதான் உள்ளே, 99 வெளியே!

■ சத்தியம் — பூரணப்படுதலின் 3 நிலைகள்

(1) குறிப்பிட்ட வேளையில் — நீதிமானாக்கப்படுதல் (குணப்படுதல்).
நடப்பது *நாம் பாவமே செய்யாதவர்போல் ...*

(2) நெடுகவே நடப்பது — பரிசுத்தமாகுதல் (கிறிஸ்தவ வாழ்வு)
நாம் பாவம் செய்யாதபடி ...

(3) குறிப்பிட்ட வேளையில் — மகிமைப்படுதல் (மறுவருகை)
நடப்பது *நாம் பாவம் செய்யமுடியாதபடி ...*

எங்ஙனம்? (1) கல்வாரியில் முடிக்கப்பெற்றது
(2) பெந்தெகொஸ்தே வல்லமை
(3) மறுவருகையின் மகிமை

பூரணப்படுதல்: ''நிலையிலிருந்து நடைக்கு''
(From standing to state) (கொலோ 2:9,10 / மத் 5:48)

■ உடனே சாட்சி பகரத் துவங்கியோர் —

☐ சமாரியப் பெண் (யோ 4:28-30)
☐ பிசாசு பிடித்திருந்தவன் ... *''போய் அறிவி''* (மாற் 5:19)
☐ அவர்களது குறைவுகளோடு சீடர்கள் (மத் 28:16-20)
☐ அப்போஸ்தலன் பவுல் ... *''உடனே''* (அப் 9:19,20)

பேராயர் ஸ்டீபன் நீல்:
''ஒரு பிச்சைக்காரன் இன்னொரு பிச்சைக்காரனிடம் சோறு
எங்கே கிடைக்கிறது என்று சொல்வதே நற்செய்தியறிவிப்பு!''

சேவை செய்யவே இரட்சிக்கப்பட்டோம்!
சேவை செய்யவே பரிசுத்தமாக்கப்பட்டோம்!
Saved to Serve! Sanctified to Serve!

2. வளவாழ்வு உபதேசம் (Prosperity Doctrine)

''ஜீவனைக் கொடுக்கவும் அது பரிபூரணப்படவுமே''
இயேசு வந்தார் என்பது உண்மை (யோ 10:10)
ஆனால் பாடுகளும் தியாகமும் இல்லாத வாழ்வை
அவர் வாக்குப்பண்ணவில்லை.

''ஆரோக்கியம் & ஆஸ்தி'' (Health & Wealth)
''கேட்பதெல்லாம் கிடைக்கும்'' (Name it, Claim it!)

கிறிஸ்தவ வரலாற்றில் பிரபலமான உபதேசம் இதுவே;
ஏனெனில் இது கொஞ்சத்திற்கு நிறைய வாக்களிக்கிறது.

பாடுகளும் தியாகமும் இல்லாது மிஷனரிப்பணியேது? —
1 கொரி 4:9-13

சுகபோக வாழ்வு உபதேசக்காரர் எபிரெயர் 11இன் முதல் பகுதியை
வலியுறுத்திப் பின்பகுதியை விட்டுவிடுகின்றனர் (வச 35-38)

- ப.ஏ. vs. பு. ஏ. (உபா 28:1-14 vs. *ஆன்மீக ஆசிகள்,*
விசுவாசத்தில் செல்வந்தர்)

■ செழிப்பு நிறைவு மிஷனரிப்பணியுடன் இணைக்கப்படவேண்டும்—

☐ கூடாரங்களில் வாழ ஆபிரகாம் கோபுரங்களை விட்டான்.
(அவன் வீட்டிலேயே 318 வேலைக்காரர் பிறந்தனர்
என்றால் கற்பனை செய்துபாருங்கள்! — ஆதி 14:14)
(அமெரிக்காவை விட்டு ஆப்பிரிக்கா செல்வது
இந்தியாவை விட்டு அமெரிக்கா செல்வதிலும் கடினம்!)

☐ *''என் தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்''*
பிலி 4:19 ... மிஷனரிச் சிந்தையுள்ளோர் — வச 15,16)

☐ *''உன் ஆத்துமா வாழ்வதுபோல ...''*
3 யோ 2 ... மிஷனரிகளைத் தாங்குவோர் (வச 5-8)

அதாவது, பிறரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது
நமது வாழ்க்கையை மேம்படுத்தும்!

ஆனால், சுகபோக வாழ்வுப் பிரசங்கிமார் தலைவாங்கிகள் நடுவில் அல்ல, வசதி படைத்தோர் நடுவிலேயே ஊழியம் செய்வர்!

— கோடீஸ்வரனாயிருந்த C.T. ஸ்டட் ஒரு மின் விளக்குகூட இல்லாது ஆப்பிரிக்கக் காடுகளில் எளிய வாழ்க்கை நடத்தினார்.

— அநேக மிஷனரிகளின் உடல் நலம் கெட்டிருக்கிறது ... மலேரியா / வயிற்றுப்புண் / சிறுநீரகக் கல் / மூளைக் காய்ச்சல்...

ஹாலிவுட் பாணியில் வாழும் சுவிசேஷகரைத் தொலைக்காட்சியில் பார்ப்பதைவிட, மிஷனரிகளின் சரிதைகளை வாசியுங்கள்.

3. *வல்லமை உபதேசம்* (Power Doctrine)

ஆவியானவரின் வல்லமையிலும் வரங்களிலும் மக்களுக்குள்ள புத்தார்வத்திற்காய்த் தேவனைத் துதிப்போம்.
அதே வேளையில், பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை மறந்துவிடக் கூடாது —

□ அப் 1:8 ... வசதிப்படி சாட்சி சொல்வதல்ல,
தீவிர நற்செய்திப்பணி,
திட்டமிட்ட மிஷனரி ஊழியம் —
''எருசலேம் முதல் உலகின் முடிவெல்லை வரை''

□ ஆவியின் வரம் —
அப் 2:38,39 ... ***''தூரத்திலுள்ள** யாவருக்கும் ...''*

□ பவுலின் வல்லமை ஊழியம் —
ரோ 15:18-20 ... *''எருசலேம் துவக்கி இல்லிரிக்கம் வரை ... கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில்''*
உங்கள் பைபிளின் கடைசிப் பக்கங்களில் அவரது மிஷனரிப் பயணங்களைப் பாருங்கள்!

□ தீமோத்தேயுவுக்குப் பவுல் —
2 தீமோ 1:7,8,11 ... *பலமுள்ள ஆவி ... கட்டுகள் ... புறவினத்தார்*

தொலைவிடங்களில், நெடுங்காலமாய், உத்தமமாய் உழைத்துவரும் மிஷனரிகளைச் சில ''வல்லமை'' உபதேச ஊழியர் பகடிபண்ணுவர். இம்மிஷனரிகளது பணியில் **அற்புதங்கள்** இல்லையாம்!

- யோவான் — *''எலியாவின் ஆவியும் வல்லமையும்''* —
ஆனால் அற்புத அடையாளங்கள் இல்லை.
யோ 10:41 ... அற்புதங்கள் இல்லை, **செய்தி** இருந்தது!
வனாந்திரத்தில் ஒரு ''குரல்!''

மரித்தோரை எழுப்பவில்லை;
செத்துக் கிடந்த நாட்டையே எழுப்பிவிட்டான்!

- ஏமி கார்மைக்கல் அம்மையார் அற்புதம் செய்யவில்லை; ஆனால் கோவில் விபச்சாரப் பழக்கத்தை எதிர்த்தார்.
- வில்லியம் கேரி உடன்கட்டையேறுதலை நிறுத்தினார்.
- Dr. ஐடா ஸ்கடர் ... மூட நம்பிக்கைகளினால் அவதியுறும் பெண்களுக்கு மருத்துவ உதவி.
- டேவிட் லிவிங்ஸ்டன் அற்புதம் எதுவும் செய்யவில்லை; ஆனால் இருண்ட ஆப்பிரிக்காவிற்குள் நுழைய வழிவகுத்தார்.

இன்று திருச்சபை வளர்ச்சி அதிகம் ஆப்பிரிக்காவில்தான்.
இந்த மிஷனரிகளெல்லாம் அந்தகார சக்திகளுக்கெதிராய்ப் போராடினர்!

ஆனால் புகழ்பெற்ற இந்திய வல்லமை சுவிசேஷகர் ஒருவர் என்னிடம், ஆதிவாசிப் பகுதிகளுக்குள் போவது ஆபத்து, என்றார்!

□ ஆன்மீகப் போராட்டம் —
எபே 6:10-20 ... *காலணிகள் ... பட்டயம் ... கட்டுகள்*

□ பாம்புகள், கரடிகள் நிறைந்துள்ள காடுகளில் வசிக்க விசுவாசம் —
மாற் 16 / அப் 28 (மால்டா தீவினர்)

□ சிரிப்பதற்கும், கீழே விழுவதற்கும், உறுமுவதற்கும், ஊர்வதற்கும், குரைப்பதற்குமா வல்லமை?

4. *துதி விண்ணப்ப உபதேசம்* (Praise & Prayer Doctrine)

திருச்சபை ஆதிநிலையடையும் காலத்தில் வாழ்கிறோம்.
துதிப்பதும், ஜெபிப்பதும் ஆதிநிலைக்கு வரவேண்டிய உபதேசமும் ஆன்மீகப் பயிற்சியுமாகும்.

இதிலும்கூட ஒன்றுக்காய் ஒன்றை விட்டுவிட்டோம்.

''தொழிலே தொழுகை'' என்கின்றனர் அவிசுவாசிகள்!
விசுவாசிகளோ தொழுகையையே தொழத் துவங்கிவிட்டனர்!

கீழ்க்கண்ட வசனங்களைப் பாருங்கள் —

- எபி 13:15,16 ... *ஆனால் நன்மை செய்ய மறவாதிருங்கள்*
- 1 பேது 2:5 ... *பரிசுத்த ஆசாரியர்* ... துதிக்க (Praise)
  :9 ... *ராஜரீக ஆசாரியர்* ... அறிவிக்க (Proclaim)
  பரிசுத்த கரங்கள் உயரட்டும் ... அழகிய பாதங்கள் நடக்கட்டும்!
- நெகே 8:10 ... *கர்த்தருக்குள் மகிழ்ச்சி ... பங்குகளை அனுப்புங்கள்*
- ஆமோஸ் 6:1அ,5,6 ... *சீயோன் ... ஐயோ ... வாத்தியங்கள் ... யோசேப்பு*
- காயப்பட்டுக் கிடந்தவனைக் கவனிக்க முடியாத அளவு ஆசாரியனும் லேவியனும் மார்க்கத்தில் விறுவிறுப்பு (லூக் 10:30-32)
- அப் 2:47 ... *தேவனைத் துதித்து ... மனிதரிடம் தயவு ... கர்த்தர் சேர்த்து வந்தார்.*
- சங் 67:1,2 ... தேவனுக்காய் நாம் பிரகாசிக்கும்படி அவர் முகப்பிரகாசம் நம்மீது.

தொழுகை என்பது நம்மைப் பரவசப்படுத்த அல்ல, நம்மைப் பக்குவப்படுத்திப் பலப்படுத்திப் பாழுலகிற்குள் அனுப்பவே.

அப்படியே **ஜெபமும்** —

ஜெபத்தைத் தொடர்ந்து புறப்பட்டனர் (லூக் 10:2,3).
பரிசுத்த பர்வதம் ... *இங்கேயிருப்பது நமக்கு நல்லது;*
இங்கிருந்து இறங்குவது மக்களுக்கு நல்லது!

5. *தீர்க்கதரிசன உபதேசம்* (Prophecy Doctrine)

தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஆவியானவரின் அழகிய வரம்.
மக்களோ ''தனிப்பட்டதும்'' ''முன்னறிவிப்பதுமான'' தீர்க்கதரிசனங்களிலேயே அளவுக்கு மீறிய ஆர்வம் காட்டுகின்றனர் —

பழைய ஏற்பாடு — பிரதானமாக முன்னறிவிப்பு (foretelling)
புதிய ஏற்பாடு — முக்கியமாக நேரடியறிவிப்பு (forthtelling)

அப் 2:17 ... *மாம்சமான யாவர்மீதும்* ... குறிப்பிட்ட குழுமீது அல்ல.

''வாலிபரும் நங்கையரும்'' தங்கள் முதியோர் எப்பொழுது சாவார்கள் என்றா தீர்க்கதரிசனம் உரைப்பர்?
அவர்களது தீர்க்கதரிசனம் யாது?

''தேவனது மகத்துவங்கள்'' (வச 11)
''இயேசுவைப்பற்றிய சாட்சி'' (வெளி 19:10)

- முதல் மிஷனரிகளே தீர்க்கதரிசிகள்தான்!
  அப் 13:1-4 ... *பவுல் ... பர்னபா ...*
- பவுல் ஒரு தீர்க்கதரிசி — எனவேதான் தீர்க்கதரிசினிகளும் தீர்க்கன் அகபுவும் அவரை நிறுத்த முடியவில்லை —
  ''அழுது என் இதயத்தை உடைக்காதீர்!''
  (உணர்ச்சிவசம்) (அப் 21:8-14)
  பவுல் செய்ததுதான் சரி: அப் 23:11
- இன்று நமக்குத் தேவையான தீர்க்கதரிசனங்கள் —

☐ இந்த மொழியில் பைபிள் இல்லை;
இந்தச் சபை அதின் பொறுப்பை எடுக்கட்டும்!

☐ தேவைக்கு அதிகமாக இவரிடம் பணமிருக்கிறது;
அந்த ஆதிவாசியினருக்காய் இவர் அதை முதலீடு செய்யட்டும்.

☐ இப்பகுதியில் நிறைய சபைகள்;
இந்தச் சபை இவ்விடத்தை விட்டு யாத்திரிகர்கள்,
சாதுக்களைச் சந்திக்க இமயக் காடுகளுக்குச் செல்லட்டும்.

6. *முன்குறித்தல் உபதேசம்* (Predestination Doctrine)

ரோ 8:30 ... *எவர்களை முன்குறித்தாரோ ...*

யாரெல்லாம் தமது அழைப்பை ஏற்பர் என்று தேவனுக்குத் தெரியாமலா இருக்கும்?

''ஆதிமுதல் அந்தத்தை அறிந்த'' அவருக்கு ஆச்சரியங்கள் இருக்கமுடியுமா?

- அவரது அழைப்போ **அனைவருக்கும்** —
  மத் 11:28 ... *பாரம் சுமப்போரே, நீங்கள் எல்லாரும் ...*
  தெரிந்தெடுத்தல் இருப்பதால்தான் நற்செய்திப்பணி!
- **அனைவரும்** இரட்சிக்கப்படவேண்டுமென்பது அவர் விருப்பம் —
  1 தீமோ 2:1,4,6
  (வச 1) நமது ஜெபம், (வச 4) தேவ விருப்பம், (வச 6) கிறிஸ்துவின் பலி
- **எல்லா** மனிதரையும் சந்திக்கவேண்டுமென்பதே அவர் ஆணை —
  மாற் 16:15
  நாம் தெரிந்தெடுக்கக்கூடாது: *''உலகம் எங்கும்'' ''சர்வ சிருஷ்டி''*
  *''அவர்கள் **எங்கும்** புறப்பட்டுச் சென்றனர்.''*
- சுவிசேஷம் கேள்விப்படாது இறப்போரின் நிலை?
  — இது தேவனது வேலை / பொறுப்பு!
  அவர் நீதியுள்ள நியாயாதிபதி ... (ரோ 2:11-16)

பரலோகமும் நரகமும் நித்திய நிசம்.

''எவரையும் நரகத்திற்கு அனுப்பமுடியாத அளவு தேவன் அன்புள்ளவர்'' என்று சொல்லாதீர்.

''எந்தப் பாவியையும் பரலோகத்திற்குள் அனுமதிக்கமுடியாத அளவு அவர் பரிசுத்தர்!''

7. *ஒத்திப்போடுதல் உபதேசம்* (Postponement Doctrine)

இரு சாக்குப்போக்குகள்:

அ) முதலாவது எழுப்புதல் வரட்டும் எனும் வாதம்!
சாதகச் சூழ்நிலைக்காய்க் காத்திராதீர் (பிர 11:4-6)

சுவிசேஷம் என்பது காலப் பயிர் அல்ல —
2 தீமோ 4:1-5 ... நவீன உபதேசங்களுக்கு எச்சரிக்கை!

சுவிசேஷகனுடைய வேலையைச் செய்துகொண்டேயிருங்கள்.

எழுப்புதல், சுவிசேஷமயமாக்குதல் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து உழைக்கவேண்டும் —
எழுப்புதல் = பரிசுத்தவான்களுக்கு
சுவிசேஷமயமாக்குதல் = பாவிகளுக்கு

''இன்றே இரட்சண்ய நாள்'' ... (2 கொரி 6:2)

ஆ) கிறிஸ்து அவ்வளவு சீக்கிரம் திரும்பமாட்டார் எனும் எண்ணம்!
ஆமோஸ் 6:3,6

ஒவ்வொரு பாவியையும் சந்திக்க நமக்குக் காலம் தரவே தாமதம் (2 பேது 3:9)

அவரது வருகையைத் துரிதப்படுத்துவோம் —
மத் 24:14 ... *எல்லா நாட்டினருக்கும் சுவிசேஷம் ... முடிவு*

■ *முடிவுரை*

- எந்தவொரு உபதேசத்தையும் அளவுக்குமீறி வலியுறுத்தாதீர்.
- கலப்பையிலிருந்து கையெடுக்காதீர் —
  அப்பொழுது வேறு எதுவும் உங்களைக் கவர்ந்திழுக்காது!
- எத்தனையோ சக்திகள் உங்களைத் திசை திருப்ப முயலும்.
  நெகேமியாவின் முழக்கமே உங்களுடையதாகட்டும் —
  ''நான் இறங்கிவரக்கூடாது!''

107

மிஷனரிப்பணியில் தோல்விகளுக்குக் காரணம்

Why we fail in Missionary Evangelism

முகவுரை

- கிறிஸ்தவ வட்டாரங்களில் இன்று அடிக்கடி சொல்லப்படும் வார்த்தை: தரிசனம் (Vision)

தரிசனம் மட்டும் இருந்தால் போதாது;
தரிசனம் செயல் வடிவு பெறவேண்டும் (Action).

ஆப 2:2 ... *வாசிக்கிறவன் ஓடும்படி (ஓடுகிறவன் வாசிக்கும்படி) தரிசனத்தைத் தெளிவாக எழுது!*

- தொலைந்த உலகு குறித்த தரிசனத்தை அப்போஸ்தலருக்கு ஆண்டவர் தந்தார் —

அந்தத் தரிசனத்தோடு *அவர்கள் ''எருசலேமைத்'' தங்கள் போதகத்தால் நிரப்பி, ''உலகைத்'' தலைகீழாக்கினர்* (அப் 5:28; 17:6)

ராஜாக்களையும் *''அதிரச்செய்து''* அவர்களைக் *''கொஞ்சங் குறைய கிறிஸ்தவர்கள்''* ஆக்கினர் (அப் 24:25; 26:28,29)

அவ்விதமே அப்போஸ்தலன் பவுலுக்கு ஒரு தரிசனம் இருந்தது —
அதைப் *''பரம தரிசனம்''* என்றழைக்கிறார் —
''நான் என்ன செய்ய நீர் விரும்புகிறீர்?''
என்பதே அவரது முதல் கேள்வி.

பின்னர் அவரது சாட்சி —
''அந்தப் பரம தரிசனத்திற்கு நான் கீழ்படியாதிருக்கவில்லை'' (அப் 26:19)

- ஒரு மனிதனைச் சந்திரனில் கால் மிதிக்க வைத்தோம்;
24 மணி நேரத்திற்குள் முழுவுலகுக்கும் அது தெரிந்துவிட்டது.
இயேசு என்ற மனிதரைத் தேவன் இப்பூமியில் வைத்தார்;
2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் அதே கிரகத்தில்
50 சதவீதத்திற்கு அதிகமானோருக்கு அதைப்பற்றித் தெரியாது!

நமக்குக் கூடுதல் பணவசதி உண்டு;
நமக்குக் கூடுதல் சாதனங்கள் உண்டு;
நமக்குக் கூடுதல் சுதந்திரம் உண்டு;
நமக்கு முதல் நூற்றாண்டைவிடக் கூடுதல் ஐக்கியம் உண்டு!

ஆனாலும் ...
நாம் மிஷனரிப் பணியில் தோல்வியுறுவது ஏன்?
குறை சொல்ல அல்ல, பகுத்துப் பார்ப்போம் —

1. தனி நபரது ஈடுபாடின்மை

மிஷனரிப்பணி ஒரு சிலருக்கு மட்டும் உரியதல்ல.
''கிறிஸ்தற்ற ஒவ்வொருவரும் ஒரு பணித்தளம்;
கிறிஸ்துள்ள ஒவ்வொருவரும் ஒரு மிஷனரி!''

கிறிஸ்தவரல்லாத ஒவ்வொருவரும் நற்செய்தி அறியவேண்டுமென்றால், கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிக்கவேண்டும்.

சீர்திருத்தக்கால சத்தியம் —
''அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்''
1 பேது 2:9,10 (இது இன்று பெயரளவில்தான்.)

முழுநேரப் பணியாளர் மட்டுமே பணியை முடித்துவிட முடியாது!
வேலை மகா பெரியது!
(தளபதிகள் மட்டும் யுத்தம் செய்தால் போதாது.)

அதுதான் *மாம்சமான ''யாவர்'' மீதும்* என்பதின் பொருள் (அப் 2:17,18)
''குமாரர் ... குமாரத்திகள் ... வாலிபர் ... மூப்பர் ... வேலைக்காரர் ... வேலைக்காரிகள் ... தொழுதுகொள்ளும் எவனும்''

எ.கா.) அப்போஸ்தலர் தவிர ஒவ்வொருவரும் எங்கும் புறப்பட்டனர்! (அப் 8:1,4)

விசுவாச சகோதரர்கள் மட்டும் அன்று 5000 பேர்.
ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை! Each one, reach one!

மாதத்திற்கு ஒருவரை ஆதாயப்படுத்தி
அவரை ஆத்துமாதாயகராக்குங்கள் —

ஜ	பெ	மா	ஏ	மே	ஜூ	ஜூ	ஆ	செ	அக்	நவ	டிச
1	2	4	8	16	32	64	128	256	512	1024	2048

எவ்வளவு சாதிக்கலாம், பாருங்கள்!

எழுந்து பிரகாசிக்க ஓர் அழைப்பு —

ஏசா 60:1 / எபே 5:14 ... தூங்கும் அழகி.
அமைதிப் பெரும்பான்மையினர்.

''ஒருவன் ஆயிரமாவான்!'' (ஏசா 60:22)

சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன்: ''நீதான் சபை!''
"You are the CH-**UR**-CH!"

நீதான் கிறிஸ்துவின் உடல் (கரங்கள், கண்கள், வாய், பாதங்கள்)!

(92ஆம் அத்தியாயத்தைப் படியுங்கள்.)

- மாற்றுக்களைத் தெரிந்தெடுக்காதீர்!
ஜெபிப்பதோ, கொடுப்பதோ போவதற்கு மாற்றாகாது —
லூக் 10:1 ... *இரண்டிரண்டு பேராய் அனுப்பினார் ...*
அவரும் சென்றார்
8:1-3 ... தாங்கும் சகோதரிகள் கூடச் **சென்றனர்.**

''போ **அல்லது** அனுப்பு'' என்றல்ல,
''போ **அத்துடன்** அனுப்பு'' என்றிருக்கவேண்டும்.

— முடிந்த இடங்களுக்கெல்லாம் போங்கள் — தெருக்கள்,
சேரிகள், மருத்துவமனைகள், சிறைகள், கிராமங்கள் ...
கைப்பிரதி வினியோகம், திறந்தவெளிப் பிரசங்கம்,
வீடு சந்திப்பு, மருத்துவமனை ஊழியம் ...
— உங்களால் செல்லமுடியாத இடங்களுக்குப்
பிறரை அனுப்புங்கள்.

2. ஊழியங்களில் நெரிசல், போட்டி

ஒவ்வொருவரும் நற்செய்திப்பணியில் ஈடுபடுவதென்றால்,
எல்லாரும் எல்லாவற்றையும் செய்வதல்ல.

- கர்த்தரது படையில் சீடர் — (யோவேல் 2:7,8,11 ...)
இல்லையேல் பயனற்ற போட்டிதான்!
எ.கா.) அதே மைதானம், அதே மக்கள், அதே பெயர் ...

நமது கன்வென்ஷன்களின் பெயர்களைப் பாருங்களேன் —

ஆசீர்வாதக் கூட்டம்
குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் | எல்லாம் ஒன்றுதான்!
அக்கினி ஆசீர்வாதக் கூட்டம்

அப்படியே, எல்லாரும் பத்திரிகை நடத்தவேண்டியதில்லை.
அதே செய்திகள் / அதே நிறம் / அதே அச்சகம்

- இயேசுவின் முன்மாதிரியைப் பாருங்கள் —
யோ 4:1-3 ... யோவான் vs. இயேசு
- பவுலின் முன்மாதிரி —
ரோ 15:20,21 ... வேதத்தைப் பின்பற்றி
நெரிசல் போட்டியைத் தவிர்ப்பது
2 கொரி 10:3,15,16 ... போட்டி, சண்டை, பெருமையடிப்பு
போன்றவற்றைத் தவிர்ப்பது
''மற்றவர்களின் வேலை''
''மற்றவர்களின் எல்லை''

இயேசுவையும் பவுலையும்போல,
மூத்த தலைவர்களும் பெரிய பிரசங்கிமாரும் முன்மாதிரியாய் இருக்கவேண்டும் —
தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலிருந்து
அவர்கள் வட இந்தியாவிற்கு இடம் பெயரவேண்டும் —
இப்பொழுதெல்லாம் வட அமெரிக்காவிற்குத்தான்
இடம் பெயர்கிறார்கள்!
இங்குதான் சம நிலை இழக்கப்படுகிறது —
ஒரு மரத்தைத் தூக்கும்போது 10 பேர் நுனியிலும்
ஒருவர் மட்டுமே அடிமரத்திலும் கைவைத்தால் எப்படி?

பின்தங்கிய மாநிலங்களில் ஊன்றப்பட்டால்தான்
நாம் நற்செய்தியின் தாக்கத்தை ஏற்படுத்தமுடியும் —

எ.கா.) யோசேப்பு — எகிப்து (பார்வோன் சொன்னது —
ஆதி 41:38)
தானியேல் — பாபிலோன் (தரியு மன்னன் —
தானி 6:25,26)

3. கட்டிடங்களில் அளவுக்குமீறிய முதலீடு

''கட்டிடங்கள்'' தேவைதான்,
ஆனால் மிஷனரிப்பணி முன்னேற முடியாதபடி
அவை ''கட்டுகள்'' ஆகலாம்.

பூமிக்கு ''உப்பாயிருக்குபடி'' தேவன் நம்மை அழைத்துள்ளார்.
குப்பியிலிருந்து உப்பு தூவப்படவேண்டுமே!

பாபேலில் மக்கள் இத்தத்துவத்திற்கெதிராய்ச் செயல்பட்டனர்:
ஆதி 9:1 (நோவா) / 11:4,5,8 (பாபேல்)

எருசலேமில் பெரிய தலைமையகக் கட்டிடம் கட்டாதவாறு
ஆதிச்சபையினரை ஆண்டவர் காத்துக்கொண்டார் —

அப் 2:44-47 — விரைவாய் வளர்ந்த சபை
4:34-37 — ஏராளம் பணமிருந்த சபை

இன்று பத்திலொன்றே பொருளாதாரத்தைப் பெருக்கிவிடுகிறது;
அன்று பத்தில் பத்து என்றால் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்!

தேவனோ அவர்களைச் சிதறடித்தார் — அப் 8:1 (X 1:8)

யேகோவா சாட்சிக்காரர் அதிகப் பணத்தைக் கட்டிடங்களில்
முடக்குவதில்லை —
மக்கள் தங்களிடம் ''வருவதை'' எதிர்பார்ப்பதைவிட,
தாங்கள் மக்களிடம் ''போவதையே'' வற்புறுத்துகிறார்கள்.

''நாம் கட்டிடங்கள் கட்டுகிறோம்;
கட்டிடங்கள் நம்மைக் கட்டுகின்றன'' — Sir. வின்ஸ்டன் சர்ச்சில்

கூடுதல் மக்களைச் சந்திக்கும் முயற்சியில், தேவைப்பட்டால்,
இழுத்து மூடக்கூடிய வகையில்தான் கட்டிடங்கள் அமைய
வேண்டும்; மக்கள்தானே முக்கியம்?

2000 பேர் அமரக்கூடிய ஒரே ஆலயத்தைவிட
தலா 200 பேர் அமரக்கூடிய 10 ஆலயங்கள் மேல்!

பிரமாண்ட ஆலயக் கட்டிடங்கள் பொதுவாகச் சொந்த சாம்ராஜ்யங்கள்
கட்ட வழிவகுக்கும்.

4. மிகைப்படுத்தப்பட்ட அறிக்கைகள்

நற்செய்திப்பணியின் விளைவுகளை மிகைப்படுத்துதல்
தேவனை மகிமைப்படுத்தாமல், நம்மைத்தான் ஏமாற்றுகின்றன.

சுவிசேஷங்களைப் பாருங்கள்:

— ஆடவர் மட்டும் 5000 பேர் (மத் 14:21)
(சிலதைச் சொல்லாது விடுகிறார்கள், பாருங்கள்.)
நாமோ 25,000 பேர் என்று அறிக்கை விட்டிருப்போம்!

— நாசரேத்தில் அநேக அற்புதங்கள் இல்லை (மத் 13:58)
(நமது கூட்டங்களைப்பற்றி எப்பொழுதாவது
இப்படி எழுதுவோமா?)

— ''153'' மீன்கள்! (யோ 21:11)

- முடிக்கப்பெறாத பணியைப் பார்க்கமுடியாதபடி நமது கண்களை மிகைப்படுத்திய அறிக்கைகள் குருடாக்குகின்றன.

சில புள்ளி விபரங்கள் —

- இந்தியாவைச் சந்திப்பது உலகிலுள்ள 200 நாடுகளைச் சந்திப்பதற்குச் சமம்.
  நமது பல மாநிலங்கள் உலகின் பல நாடுகளைவிடப் பெரியவை!
  எ.கா.) உத்திரப் பிரதேசம் — 14 கோடி
  அதாவது, அமெரிக்காவைவிட 50 சதவீதம் பெரியது.
- இந்தியாவிலுள்ள மக்களினங்கள் — 3000
  கிறிஸ்தவர்கள் ஏறத்தாழ 300இல்தான்.
- பைபிள் மொழியாக்கம் —
  முழு வேதம் — 74
  புதிய ஏற்பாடு — 75
  பகுதிகள் — 60+
  2000 ஆண்டுகட்குப் பின்னரும் பைபிள் இல்லாத
  100 மொழிகள்.

தேவன் புதிய ஏற்பாட்டை மார்க்கவுலகில் பேசப்பட்ட எபிரெய
மொழியில் அல்ல, வணிக மொழியாகிய கிரேக்கில்
கொடுத்ததேன் என்று சிந்தித்துப்பாருங்கள்!

உலக அளவில் —
மொத்த மொழிகள் — 6000
பைபிளின் ஒரு புத்தகமாவது இருப்பது — 3000

மும்பை நகர் ஆண்டுக்கு 400 திரைப்படங்கள் வெளியிடுகிறது.
அதாவது, நாளொன்றுக்கு ஒன்றுக்குமேல்!

நாம் வேதத்தை எந்த வேகத்தில் மொழியாக்கம் செய்கிறோம்?

5. கிறிஸ்தவர்களுக்கென்றே அதிக பணம், நேரம் செலவழிப்பு

கிறிஸ்துவின் இரத்தம் *நமக்காக மட்டுமல்ல* (1 யோ 2:2);
அவர் *புறவினத்தாருக்கும் தேவனானவர்* (ரோ 3:29).

''*அவர் புறவினத்தாருக்கும் தேவனல்லவா?*'' — ஒரு சவால்!

இந்தியாவில் 80 சதவீதத்தினர் இந்துக்களானால்,
நமது நேரத்தில் 80 சதவீதம் அவர்களுக்காய்ச் செலவழிக்கிறோமா?

இந்தியாவில் 12 சதவீதத்தினர் முகமதியரானால்,
நமது ஊழியத்தில் 12 சதவீதம் அவர்களுக்காய் இருக்கிறதா?

உண்மையென்னவெனில், கிறிஸ்தவர் 4 சதவீதமே எனினும்
நமது நேரத்தில் 90 சதவீதம் இவர்களுக்கே செலவிடப்படுகிறது.

எ.கா.) நமது கூட்டங்கள்—பங்கேற்போர் பெரும்பாலும் கிறிஸ்தவரே!
நற்செய்தியறிவித்தவர்களுக்கே நற்செய்தியறிவித்தல் ...
திரும்பியவர்களையே திருப்புதல் ...
திருமுழுக்கு பெற்றவர்களுக்கே திருமுழுக்கு ...
ஆறுதல் பெற்றவர்களுக்கே ஆறுதல் ...
விடப்பட்டோரையோ இன்னும் விட்டுவிடுதல்!

தனியாள் ஆத்துமாதாயத்திலும் கிராம ஊழியத்திலும்
நாம் செலவழிக்கவேண்டிய நேரம் வெளிநாட்டுச் சுவிசேஷகரால்
திருடப்படுகிறது.

சென்னை, பெங்களூரு, மும்பை விசுவாசிகளே, கவனம்!

- நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் —
''அருமையான தேவனுடைய பிள்ளையே'' என்றுதான்
ஆரம்பிக்கிறது — அதாவது, வேதம் தெரிந்தவர்களுக்கே.

- பிற மதங்களிலிருந்து மனந்திரும்பிய சுவிசேஷகர்கள் —

கீழ்க்கண்ட காரியங்களை விவாதிக்கும் பத்திரிகைகளைப், பிற
மதங்களிலிருந்து வந்தவர்களுக்காகப் பிரசுரித்தாலென்ன?

மாற்றுக்கலாச்சாரத் திருமணங்கள்
பாகப் பிரிவினை
மாணவருக்கு உதவித்தொகை, இட ஒதுக்கீடு
குடும்பக் கொண்டாட்டங்கள், வைபவங்கள்
சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்கள்
இந்துக்கள் மொழி நடையில் சுவிசேஷம்

(ஒரு சிலராவது முகமதியர் நடுவில் பணியாற்றுவது மகிழ்ச்சி!)

எருசலேம் கிறிஸ்தவர்களின் தயக்கம் (அப் 8:1 /11:19-21)

பல்வேறு இனத்தவரிடையே நம்மை அனுப்ப இறைவாக்கு —
(ஏசா 66:18,19) ... இந்தியாவில் 212 வகையினர்

எருசலேமை விட்டுப் புறப்படுங்கள் (எபி 13:12-14) —
இந்தியாவின் 80 சதவீதம் கிராமங்களிலேயே!

கத்தீட்ரலில் அல்ல, கிரிமினல்கள் நடுவிலேயே இயேசு மரித்தார்!

- நேரம் மட்டுமல்ல, பணமும் அப்படியே —
94 சதவீதக் காணிக்கைகள் செலவழிக்கப்படுவது கிறிஸ்தவர்களுக்கே.
5.5 சதவீதம் நற்செய்தியைக் கேட்ட கிறிஸ்தவரல்லாதவருக்கு.
0.5 சதவீதம்தான் நற்செய்தியே அறிவிக்கப்படாத இடங்களுக்கு.
— டேவிட் பேரட், மிஷனரிப்பணி ஆராய்ச்சியாளர்

திருச்சபை பட்ஜெட்.
தனிப்பட்டுக் கொடுப்பது.

6. மிஷனரிச் சங்கங்கள்மீது சபைகளுக்குச் சந்தேகம்

"Para" Church Organisations — "Para" = பக்கபலமான உதவி

- பரிசுத்த ஆவியானவர் ... "Paraclete" —
இன்னொரு உதவியாளர், தேற்றரவாளர்

Para-medicals ... மருத்துவர்களுடன் சிகிச்சைக்கு உதவுபவர்

- Para-Church Organisations ... வெளியுலகப் பணிகளை நிறைவேற்ற உள்ளூர்ச் சபைக்கு உதவிக்கரங்கள்

ஐவகை ஊழியங்கள் (எபே 4:11-13) —

உள்ளூர் ஊழியங்கள் vs. பல்வேறிட ஊழியங்கள்
தங்கல் ஊழியங்கள் vs. சலன ஊழியங்கள்
எ.கா.) அப்போஸ்தலர் (அப் 13:1/14:14)

பதிலானது அல்ல, பக்கபலமானது.
(A supplement, not a substitute!)
உலகிற்குள் உள்ளூர்ச் சபையின் நீட்டுதல்.

சிறப்புப் பணிகள் —

எ.கா.) வேத மொழிபெயர்ப்பாளர் & வேதாகமச் சங்கங்கள்.
எவராவது வேதத்தை மொழியாக்கம் செய்யாவிடில்,
அதற்கு நீங்கள் எப்படி விளக்கம் கொடுப்பீர்?

எ.கா.) முன்னோடி மிஷனரிப்பணிகள்

மருத்துவர் எவரும் இருதய நோயாளிகளுக்குச் சிகிச்சை தரலாம்;
ஆனால் இருதய மருத்துவ நிபுணரிடம் நாம் செல்வதேன்?

- மிஷனரிக் கன்வென்ஷன்கள் நடத்துங்கள்,
- முன்னோடி மிஷனரிகளுக்கு விருந்தோம்புங்கள்.
- வாலிபர், நங்கையரைப் பணிக்களங்களுக்கு அனுப்புங்கள்.
- மிஷனரிகளின் சரிதைகளை அறிமுகம் செய்யுங்கள்.
- மிஷனரிப் பத்திரிகைகளை மக்கள் வாசிக்கச் செய்யுங்கள்.

மக்கள் வேறு எங்கும் போய்விடக்கூடாதென்று எதிர்வினையாக
மிஷனரிப்பணி துவங்காதீர்கள்.
இவ்வித நோக்கங்களைத் தேவன் கனப்படுத்தமாட்டார்.

பெந்தெகொஸ்தே சபைகள் கொடுப்பதில் மற்ற சபைகளை
மிஞ்ச வேண்டாமா?
இது இந்தியாவிலும் கிடையாது, பிற நாடுகளிலும் கிடையாது.

— அதிக பட்சம் மிஷனரிக் காணிக்கை கொடுக்கும் முதல் 20
அமெரிக்க சபைகளில் ஒன்றுகூட பெந்தெகொஸ்தே அல்ல.

7. தாலந்து பெற்ற வாலிபர் உள்ளூர்ச் சபைகளிலேயே தங்கிவிடல்

- உள்ளூரில் மேய்ப்பராயிருப்பதைவிட முன்னோடி மிஷனரிகளாய்ச் செயல்படக் கூடுதல் ஞானமும் வரமும் தேவை.

தைரியம் — எதிர்க்கும் சமூகத்தினர் ... தனிமை ...
ஆபத்தான காடுகள் ... தொலைவிடங்கள்
... இரத்த சாட்சி மரணம்

விசுவாசம் — கனியற்ற நிலங்களில் தாக்குப்பிடிப்பு

கடின உழைப்பு — மொழி கற்றல் ... மாற்றுக் கலாச்சாரம்

தியாகம் — வசதிக் குறைவு ... குறைந்த சம்பளம் ...
கடினப் பயணங்கள் ... பிள்ளைகள் படிப்பு ...
ஏழ்மையிலிருக்கும் சபையார்

ஒருவேளை உங்களுக்கு மேய்ப்பர் அழைப்பு இருக்கலாம்;
அப்படியானாலும் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் தங்கிவிடுவதேன்?

- மிஷனரிப்பணியே மேய்ப்பர் பணிதான் —

மத் 9:35-37 ... *மேய்ப்பனில்லா ஆடுகள்* ... இதைத் தொடர்ந்தே
அப்போஸ்தவர் அனுப்பப்பட்டனர்

லூக் 15:4-7 ... தொலைந்த ஓர் ஆட்டைத் தேடும் மேய்ப்பன்

யோ 10:16 ... மந்தையில் சேரா ஆடுகள்
''நானே நல்ல மேய்ப்பன்''

அப் 13:1 ... பவுலும் சீலாவும் தீர்க்கர், போதகராய் இருந்தனர்.
புதிய சபைகளுக்குப் பவுலின் நிருபங்கள்.

- புதிய ஏற்பாடு முழுவதும் மிஷனரிகளால் எழுதப்பட்டது —

மத்தேயு — எத்தியோப்பியாவில் இரத்தசாட்சி

மாற்கு — எகிப்து சென்றார் ... அலெக்சந்திரியாவில் சபை
நிறுவினார் ... ரோம அரசன் நீரோவினால் கொலை

லூக்கா — மிஷனரி மருத்துவர்

யோவான் — ஆசியாவில் எபேசுவைச் சுற்றி ஊழியம்;
பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

பவுல் — மிஷனரிப்பயணம் அல்லது சிறைவாசத்தின்போதே
பெரும்பாலான நிருபங்கள் எழுதப்பட்டன.

எபிரெயர் — 10:34 ... மிஷனரி பேசும் வார்த்தைகள்!

யாக்கோபு— எருசலேம் சபையில் எழும்பிய மிஷனரிப்பணிப்
பிரச்னையைத் தீர்த்தார் ...
70 வயதில் கொடூரமாய் இரத்தசாட்சி மரணம்

பேதுரு — நீரோவினால் தலைகீழாய்ச்
சிலுவையிலறையுண்டார்.

- கிரேத்தா தீவில் தீத்து விடப்பட்டார் (தீத் 1:5,12) —
எவ்வளவு கடினமான மக்கள்!
வட இந்தியா — மேய்ப்பனில்லாத ஆடுகள்
தென் இந்தியா — ஆடுகளில்லாத மேய்ப்பர்கள்

போட்டியில்லா இடங்களுக்கு நீங்கள் செல்லாவிடில்,
நீங்கள் பிடிப்பது மீன்களாய் இருக்காது;
சபை விட்டுச் சபை தாவும் தவளைகளாய்த்தானிருக்கும்!

108

மிஷனரி அழைப்பிற்கு நாம் கீழ்ப்படியாததேன்?

Why we disobey the Missionary Call

முகவுரை

கல்யாண விருந்து உவமையின் படிப்பினை (மத் 22:14) —
''அழைக்கப்பட்டோர் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டோரோ சிலர்''

அல்லது, ''அழைக்கப்பட்டோர் பலர்; கீழ்ப்படிந்தோரோ சிலர்!''

''கீழ்ப்படிகிறவர்களே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.''
இறையழைப்பிற்கும் அவர் தெரிந்துகொள்ளுதலுக்கும் இடையே
இருக்கும் கீழ்ப்படிதல்தான் பெரிய வித்தியாசம்!

நாம் மிஷனரி அழைப்பிற்குக் கீழ்ப்படியாததேன்?

1. நற்செய்திப் பேராணையின் முக்கியத்துவத்தைச் சரிவரப் புரியாதிருத்தல்

☐ பேராணை ஏதோவோர் ஆலோசனை அல்ல.
அது ''கட்டளையைவிட'' மேலானது.
''சகல ***அதிகாரம்*** *... ஆகையால் புறப்பட்டுப்போங்கள்''* (மத் 28:18,19)

☐ பேராணைக்கு நாம் கீழ்ப்படியவேண்டிய பொறுப்பு
திருமறையெங்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது —

- *''உன் சகோதரன் எங்கே? நான் அவனுக்குக் காவலாளியோ?''*
(ஆதி 4:9)
- *''உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்''*
(எண் 32:5-7,22,23) (முன்னோடிகளுக்கு உதவுதல்)
- *''நற்செய்தியறிவிக்கும் நாள் ... மவுனம் ... சரியல்ல ...''*
(2 இரா 7:9)
4 தொழுநோயாளிகளும் 4 திசைகளுக்கு!
- *''ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகள்''*
கொண்டாட்டத்தில் மறந்துவிடாதீர் — (நெகே 8:10)

- *''மரணத்துக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுவியாவிடில் ...''*
  (நீதி 24:11,12)
- *''என்னைப் பின்பற்றுங்கள் ... மனிதரைப் பிடிப்போராக்குவேன்''*
  (மத் 4:19)
- *''சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ!''*
  (1 கொரி 9:16,17)

மிஷனரி அழைப்பிற்குக் கீழ்ப்படிவது நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல; அது கடமை, கட்டாயம்.

2. இவ்வுலக ஆசீர்வாதங்களிலேயே திளைத்திருத்தல்

- ஆபிரகாம்தான் முதல் மிஷனரி.
  மிஷனரிப் பணியின் துவக்கம் — ஆதி 12:1-3
  ஒரே நிபந்தனை: ***''விட்டுவிடு''***
- உடனே விட்டுவிட்டவர்கள் —
  பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் (மத் 4:18-22)
  ''வலை'' *''படகு''* *''தந்தை''*
  பிழைப்பு சொத்து குடும்பம்

மத்தேயு —
''வரி அலுவலகம்'' *''எல்லாம்''* (லூக் 5:27-29)
வேலை மிஷனரி வழியனுப்பு விருந்து!

- பொதுவான மூன்று சாக்குப்போக்குகள்:
  மண் — பூண் — பெண் (லூக் 14:18-20)
  (Field — Flock — Family)

- விட்டுவிடுவதென்றால் என்ன?
  அ) எதற்கும் நாம் சொந்தக்காரர் அல்ல, பயன்படுத்துவோர்தான்.
  ஆ) நாம் பொருட்களை வைத்திருக்கிறோமா,
  பொருட்கள் நம்மை வைத்திருக்கின்றனவா?

3. குடும்பத்தினர் மற்றும் நண்பரின் தவறான தூண்டுதல்

- பிரசங்கிக்க அழைக்கப்பட்ட பவுல் கலந்தாலோசிக்கவில்லை
  கலா 1:15-17 ... *மாம்சம் ... இரத்தம் ... எருசலேம் ...*
  (தேவனோடு தனித்திருந்து தீர்மானம் எடுத்துவிட்டார்.)

கலந்துரையாடுவதும் ஆலோசனைகளும் நல்லதுதான்;
ஆனால் பல சமயங்களில் இறைக்கட்டளைக்குத் தப்பவே அவை!
கீழ்ப்படிகிறவர்களைவிடக் கீழ்ப்படியாதவர்களே அதிகம் —
கவனம்!

- 12 அப்போஸ்தலரைப் (= மிஷனரிகளை) பணித்து அனுப்பும்போது, குடும்பத்தில் *''பட்டயம்''* என்று இயேசு குறிப்பிட்டார் —
  மத் 10:5,34-39
- பிந்திக் கீழ்ப்படிதல் கீழ்ப்படியாமையே —
  பிரேத அடக்கம் & வழியனுப்பு (லூக் 9:59-62)
  Delayed obedience is Disobedience!

இதைத் தொடர்ந்தே 70 மிஷனரிகள் நியமிக்கப்பட்டனர் (10:1)

திருப்பணியில் முழு நேரமாய் இறங்குவதை எனது விதவைத் தாயிடமும், மாமனார்-மாமியாரிடமும் ''அறிவித்தேன்,'' அவ்வளவுதான்!

- பெற்றோருக்கு ஓர் அழைப்பு!
  ''தலைப்பிள்ளை கர்த்தருக்கு'' (யாத் 22:29)

தேவனுக்கு இருந்தது ஒரே மகன்; அவரையும் அனுப்பிவிட்டார்.
உங்களுக்கு இருப்பது இரு பிள்ளைகளானால், ஒன்று கூடுதல்!

உங்கள் பிள்ளைகளை இறைப்பணிக்கு ஊக்குவியுங்கள் / உற்சாகப்படுத்துங்கள் / தூண்டிவிடுங்கள் / முன் தள்ளுங்கள் —

எ.கா.) பொறியாளர் அல்லது மருத்துவராக்க என்னே முயற்சி!

- பிள்ளையில்லா தம்பதிகள்:
  அன்னாள்: 1 சாமு 1:11 ... *ஆண் பிள்ளை ... கர்த்தருக்கு* ...

நாமோ, ''பத்திரிகையில் சாட்சி எழுதுவேன்!''
(தாளும் மையும்தான் வீண்!)

மற்றவர்கள்: ''ஒப்புக்கொடுத்துவிட்டேன்;
கர்த்தர் அவனோடு பேசட்டும்''
இல்லை, நீங்களே அவனை ஊழியத்தில் கொண்டு சேருங்கள் —
1 சாமு 1:21,22,24

- நண்பர்கள்: *''இந்த வீண்செலவு எதற்கு?''* (மாற் 14:4)

  ''எதைக்'' கொடுக்கிறீர்களென்று கணக்கிடாதிருங்கள்;
  ''எவருக்குக்'' கொடுக்கிறீர்களென்று கவனியுங்கள்!

4. தகுதியின்மை எனும் உணர்வு

- நாடுகளுக்குத் தீர்க்கனாய் எரேமியாவின் அழைப்பு —
  ''நான் சிறு பிள்ளை'' (எரே 1:4-8) — அனுபவம் இல்லை

மோசேயின் அழைப்பு —
''நான் வாக்கு வல்லவன் அல்ல'' (யாத் 4:10-12)
— சொல்வாக்கு இல்லை

கிதியோனின் அழைப்பு —
''குடும்பம் எளியது ... எல்லாரிலும் சிறியவன்'' (நியா 6:14-16)
— செல்வாக்கு இல்லை

மிஷனரிப் பணியில் **''போகும்''** மனிதன் அல்ல,
''அனுப்பும்'' தேவனே முக்கியம் —

''சகல அதிகாரமும் எனக்கு ... ஆகையால் புறப்பட்டுப் போங்கள்''
(மத் 28:18,19)

உங்கள் குறைவு எதுவாயினும்
''அவர் எப்பொழுதும் உங்களுடன்''
— எல்லாம் பார்த்துக்கொள்வார் (வச 20)

இலக்கியம் படித்த பட்டதாரிகள் —
+ வேதாகம மொழியாக்கப்பணி
+ கிறிஸ்தவ எழுத்துப் பணி

இந்தியில் திரைப்படங்கள் பார்க்க இந்தி படிக்கிறார்களே,
இந்தி மக்களை ஆதாயப்படுத்த இந்தி படிக்கக்கூடாதா?

5. எதிர்காலம் குறித்த அச்சம்

மிஷனரி அழைப்பைக் குறித்துச் சிந்திக்கும்போது எழக்கூடிய
கேள்விகள் பல —

- பணத்தேவை?

  மத் 6:31-33 ... *முதலாவது இறையரசு ...*
  அப்பொழுது கூட்டிக் கொடுக்கப்படும்

எவ்விதம் *''கூட்டிக்''* கொடுக்கப்படும்?
மாற் 10:29,30 ... அநேக நண்பர், உதவியாளர், வீடுகள் ...

- பிள்ளைகளைப் பற்றிய காரியங்கள்?
  ஆபிரகாமின் கீழ்ப்படிதலினால் தேவன் ஈசாக்கை ஆசீர்வதித்தார் —
  ஆதி 26:4,5,12

வட மாநிலப் பணிக்களங்களுக்கு நகர நானும் மனைவியும்
தீர்மானித்தபோது எங்கள் ஒரே மகளை விடுதியில் விட்டோம்;
கர்த்தர் அவளைக் குணமாக்கினார்.

சரித்திரச் சான்று — மிஷனரிக் குழந்தைகளுக்கு ஆசீர்வாதம்

- கடைசி வரை தாக்குப்பிடிக்க முடியாவிடில்?

  திரும்பிவிட்டோரைப் பார்க்காதிருங்கள்.
  அவர்கள் ஒரு சிலரே.
  ஏன் யூதாஸ்காரியோத்தைப் பார்க்கவேண்டும்?

சிலர் பரீட்சையில் தோல்வியடைவதால்
நாம் பரீட்சையே எழுதாமலா இருக்கிறோம்?

திருவாக்குகள்:

''நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன் ...
நான் ஒப்புவித்ததை ...'' (2 தீமோ 1:12)

''உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்;
அவர் அப்படியே செய்வார்'' (1 தெச 5:24)

6. உள்ளூரைக் குறித்த கரிசனை

நமது கேள்வி: ''உள்ளூரிலேயே சந்திக்கப்படாதோர்
திரளாயிருக்கையில், தொலைவிடம் செல்லுவானேன்?''

- ''முதலாவது'' எருசலேமிலும் பின்னர் யூதேயாவிலும் என்றல்ல,
  ''எருசலேமிலும் யூதேயாவிலும்'' ஒரே வேளையில் —
  (அப் 1:8)

  கீழ்ப்படியாது ஒரு பெருங்கூட்டம் இருக்கும்;
  அவர்கள் உள்ளூரைப் பார்த்துக்கொள்ளட்டும்!

- நாசரேத்தூரார் அனைவரும் மனந்திரும்பும் முன்னரே இயேசு நப்தலிக்கு நகன்றார் அல்லவா? —

  மத் 4:13-16 ... முழுக்க முழுக்க *''இருள்''*

  ''ஒவ்வொருவரும் ஒருமுறையேனும் நற்செய்தி கேட்குமுன் ஏனொருவர் இருமுறை அதைக் கேட்கவேண்டும்?''

  — Dr. ஆஸ்வால்ட் J. ஸ்மித்

  இடங்களைக் கிறிஸ்தவமயமாக்க அல்ல,
  நற்செய்திமயமாக்கவே அழைக்கப்பட்டுள்ளோம்!

- தங்களது நாடுகள் முழுவதும் நற்செய்திமயமாகுமுன்னரே ஐரோப்பிய, மேலை நாட்டு மிஷனரிகள் இந்தியா வந்தனரே!

  அயலக நற்செய்திப்பணியும் தொலைவிட மிஷனரிப்பணியும் இணைந்தே செல்லவேண்டும்.

- மிஷனரி தோமா கலிலேயாவிலிருந்து இந்தியா வந்து சென்னையில் கொல்லப்பட்டார். இந்தியாவின் மிகப் பெரிய சபை இங்குதான் இருக்கிறது!

  ''இரத்தசாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து!''

7. அழைப்பைத் தெளிவாகப் புரியாமை

பரபரப்பான (dramatic) அழைப்பு பொதுவானதல்ல.

பகட்டான தரிசனமோ முழங்கும் சத்தமோ வருமெனக் காத்திராதீர்.

மிஷனரி அழைப்பிற்கு நான்கு பரிமாணங்கள் உண்டு —

☐ மேலேயிருந்து அழைப்பு (From above)

வேதப் பகுதிகளைத் தியானிக்கையில் உணர்வு.
ஆவியானவரின் உந்துதலால் அகத்தூண்டுதல்.
செய்திகள், பத்திரிகைகள், புத்தகங்கள், முதலியன.

☐ உள்ளேயிருந்து அழைப்பு (From inside)

பரிசுத்த விருப்பங்கள் (பிலி 2:13) — எல்லாருக்கும் வராது.
செய்யும் வேலையில் அதிருப்தி.
இன்னும் தேவனுக்காய் உழைக்கத் தீரா ஆசை.

☐ கீழேயிருந்து அழைப்பு (From below)

மனந்திரும்பாது மரிப்போரின் நிலை.
நரகத்தின் அகோரம் —
பரலோகத்தைவிட நரகம் பற்றியே இயேசு அதிகம் பேசினார்.
செல்வந்தனின் கதறல்: *''லாசருவை அனுப்பும்!''*

☐ சுற்றிலுமிருந்து அழைப்பு (From around)

நற்செய்தி கேள்விப்படாத திரள்களின் அறியாமை.
ஒரு வீடு தீப்பற்றினால் உடனே என்ன செய்வீர்கள்?

எ.கா.) ஐடா ஸ்கடர்: மூட நம்பிக்கைகளினால் மரணங்கள்
ஏமி கார்மைக்கல்: தேவதாசிப் பழக்கம்

இந்த நான்கு பரிமாணங்களில் ஒன்றோ இரண்டோ மற்றதைவிடத் தலையோங்கி நிற்கும்.

முடிவில், இதை ''அழைப்பு'' (Call) என்பதைவிடத் ''தெரிந்தெடுப்பு'' (Choice) எனலாம்.

எ.கா.) ஏசாயா (ஏசா 6:8)

''நீ'' போவாயா என்று ஆண்டவர் கேட்கவில்லை;
''யார்'' போவார் என்றுதான் கேட்டார்.

''நான் போகிறேன்'' என்று ஏசாயா முன்வந்தார்.

இரு கேள்விகள்: 1) யாரை அனுப்புவேன்?
2) யார் போவார்?

அதாவது, அனுப்ப தேவன் ஆயத்தம்;
போக நீங்கள் ஆயத்தமா?

தேவன் யாரையும் திருப்பி அனுப்பியதில்லை;
மக்கள்தான் திரும்பி வந்திருக்கிறார்கள்.

முதலடி எடுத்துவையுங்கள். தண்ணீரில் கால் வைக்கத் தயங்காதேயுங்கள்; அப்பொழுதுதான் தண்ணீர் பிரியும் (யோசு 3:13-17)

(104ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

109

விளைச்சல் குறைவதேன்?

Why poor Harvest?

முகவுரை

- *"அறுப்பு மிகுதி"* என்று இயேசு சொன்னபோது, மாபெரும் அறுவடையின் சாத்தியத்தைக் குறிப்பிட்டார்.

  ஆனால் உண்மையென்னவெனில், அப்போஸ்தலர் காலத்தோடு ஒப்பிடுகையில், பல பணிக்களங்களில் விளைச்சல் குறைவுதான்:

  அப் 1:15 ... 120 சீடர்
  2:41 ... 3000 விசுவாசிகள்
  4:4 ... 5000+ விசுவாசிகள்
  5:14 ... *திரளானோர்*

விளைச்சல் குறைவுக்குக் காரணங்கள் —

1. நேர்த்தியற்ற விதை (Defective Seed)

- *திருவசனத்தைப் பிரசங்கி* — லூக் 8:11 ...
  (கதைகள் அல்ல, 2 தீமோ 4:2,3)
- *சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்* — ரோ 1:16
  (சுவிசேஷத்தின் வரையறை — 1 கொரி 15:1-5,8)
- தைரியமாய்ப் பிரசங்கிக்கப் பவுலின் ஜெப வேண்டுகோள் — எபே 6:18-20

  பயமும், பிரபல நாட்டமும் செய்தியைக் கெடுக்கும் —
  2 கொரி 2:14-17 — *கலப்படச்* செய்தி
  கலா 1:9,10 — *மனிதரைப் பிரியப்படுத்த ... வேறே சுவிசேஷம்*

2. கெட்ட நிலம் (Bad Soil)

- ஆறு வகை நிலங்கள் — மத் 13:3-8
- *குருடாக்கப்பட்ட இதயங்கள்* — 2 கொரி 4:3-6
  லீதியாளின் இதயத்தைக் கர்த்தர் திறந்தார் ...
  ஜெபம் நிறைந்திருந்த சூழல் (அப் 16:13,14)

சிறுவர், சிறுமியரின் ஆர்வம்.
பல்வேறு வகையினர்: மார்க்க பக்தியுள்ளோர்
மார்க்க பக்தியில்லாதோர்
நாத்திகர்

3. குறைவான விதைப்பு (Limited Sowing)

- *பெருக ... சிறுக ... விதைக்கிறவன்* — 2 கொரி 9:6
- மாற் 16:20 ... *"அவர்கள்" எங்கும் சென்று பிரசங்கித்தார்கள் ... கர்த்தர் உறுதிப்படுத்தினார்*
- தெரியாவிட்டாலும் விதைத்துக்கொண்டேயிருப்பது ...
  பிர 11:2,5,6

  காரணங்கள்: • செயலின்மை — உற்சாகமின்மை
  • பாதகச் சிந்தை
  • இனவெறி (எ.கா.) யோனா, பேதுரு

  கிறிஸ்தவரல்லாதோரிடம் தாராளமாய்ச் செல்லுங்கள்.

  எ.கா.) சமாரியர்: அ) ஒரு பெண்மணி (யோ 4)
  ஆ) சுவிசேஷகன் பிலிப்பு (அப் 8:4-8)
  இ) 10 தொழுநோயாளிகள் (லூக் 17:15-18)
  ஈ) நல்ல சமாரியன் (லூக் 10:33)

4. பொருத்தமற்ற செயல்முறைகள் (Improper Methods)

- திருமுழுக்கிற்குமுன் கிராமத்தினரது வளையல்களை உடைக்கச் சொல்வது. ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், பகுத்தறிதல் போன்ற வரங்கள் வெளிப்படவேண்டும்.
  தேவன் போதித்து நடத்துவார் (ஏசா 28:26-29)
- இடத்திற்கேற்றாற்போல் முறைகளைப் பவுல் மாற்றினார்.
  எ.கா.) யூதருக்கு — வேத வாக்கியங்களிலிருந்து விவாதம்
  புறவினத்தாருக்கு— அவர்களது கோயில்கள், புலவர்கள்
  (அப் 17:22,23,28)
- யாக்கோபு: அப் 15:13-20 ... *"புறவினத்தாருக்குச் சிரமம் கூடாது"*
  :28,29 ... ஊக்கம், மகிழ்ச்சி

  தாய் மொழியும் தாய்க் கலாச்சாரமும் மக்களுக்கு முக்கியம்.

5. *பருவ மழை தவறுதல்* (Monsoon Failure)

- ஓசி 10:12 ... *கர்த்தர் ... பொழியுமட்டும் ... தேடக் காலம்*
- 2 நாளா 7:14 ... கிறிஸ்தவரல்லாதோர் ஆசீர்வதிக்கப்பட
  கிறிஸ்தவர்கள் மனந்திரும்ப வேண்டும்.
- ஏசா 32:13அ,15 ... *ஆவி ஊற்றப்படும் வரை ... வனாந்திரம் ...*
  40 ஆண்டு பிடிக்கும் வேலையை எழுப்புதலின்போது
  40 நாட்களில் முடித்துவிடலாம்
  எ.கா.) எகிப்து ... பாலஸ்தீனம் — உபா 11:10-12

6. *போதிய நீர்ப்பாய்ச்சலின்மை* (Insufficient Watering)

- கிரமமான தொடர்பணி அத்தியாவசியம் —
  1 கொரி 3:6 ... *அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்*
  அப் 15:36 ... *எப்படியிருக்கிறார்களெனப் பார்த்துவருவோம்*
- கூடுதல் கிராமங்களைச் சந்திக்க நிர்வாகத்தின் நெருக்குதல்.
- போதிய ஊழியரின்மை.

கிறிஸ்தவ வட்டாரங்களிலேயே, தொடர்பணி எவ்வளவு கடினம்!

7. *களை முளைத்தல்* (Weed Growth)

பிற மதத்தினர், இனத்தினர் நடுவில் அற்புதங்கள், அவர்களது
தத்துவங்கள், மாய வித்தைகள் ...

- விழிப்பாயிருங்கள் — மத் 13:24,25
  ... *மனிதர் நித்திரை செய்தபோது ...*
- போதித்துக்கொண்டேயிருங்கள் — அப் 19:8-10 (எபேசு)
  (மூன்று மாத உழைப்பைக் காக்க ஈராண்டு போதனை!)

பல கிராமங்களை மாதத்திற்கொரு முறைதான் சந்திக்க முடியும்;
இடைப்பட்ட காலத்தில் எதுவெல்லாம் நடக்குமோ?

8. *பூச்சித் தொல்லை* (Insects Invasion)

- யோவேல் 1:4; 2:25,26 ... *“நான்” அனுப்பிய வெட்டுக்கிளிகள்*
  நமது கவனத்தைத் தமது பக்கம் திருப்பவும்,
  நாம் மேட்டிமையடையாதிருக்கவும் “தேவனே” பிரச்னைகளை
  அனுமதிக்கிறார்.

பெருமை, பொறாமை,
மிகைப்படுத்தப்பட்ட அறிக்கைகள்

— ஊழியர் நடுவில் நேர்மை காணப்பட ஜெபியுங்கள்.
— பரிசுத்தமற்ற நோக்கங்களைக் கர்த்தர் தண்டிப்பார்
எ.கா.) நிறுவனத்தை வளர்ப்பதிலேயே குறி
— நாம் தேடுவது ஆத்துமாக்களா, ஆதாயமா?

9. *வேலையாட்கள் பிரச்னைகள்* (Labour Problems)

அ) திறமையின்மை
திறமையானவர்களை உள்ளூரில் நிறுத்திக்கொண்டு
மற்றவர்களைத்தான் களங்களுக்கு அனுப்புகிறோம்.
ஆனால், அப் 13:2 ... பவுல் & பர்னபா
“முதலாவது அப்போஸ்தலரை ...” (1 கொரி 12:28)

ஆ) ஒற்றுமையின்மை — யோ 4:36-38 (பொதுவான பிரச்னை)
அப் 15 — பவுலும் பர்னபாவும்
ஒரு குதிரை இழுப்பது 2 டன்; இரு குதிரைகள், 23 டன்!
குழுப்பணியின் திறன்

இ) சுறுசுறுப்பின்மை — பிர 11:4 (சாக்குப்போக்குகள்)
நீதி 10:5 ... அறுப்புக்காலத்தில் தூக்கம்
14:23 ... வெட்டிப் பேச்சு

ஊழியருக்கு நடுவயதுப் பிரச்னைகள் ...
புத்துணர்விழப்பு ... உற்சாகமிழப்பு

10. *பொறுமையற்ற செயல்கள்* (Impatient Acts)

- பிர 11:1 ... *அநேக நாட்களுக்குப் பின்பு பலன்*
- யாக் 5:7 ... *பயிரிடுகிறவன் காத்திருக்கிறான்*

இல்லையேல் ஈசாக்குக்குப் பதிலாய் இஸ்மவேல்!

பிற ஊழியத் தளங்களோடு ஒப்பீடு ... இலக்கு ...
மனந்திரும்பாதோருக்கும் திருமுழுக்கு.

நேற்று விதைத்தோம்;
இன்று அறுக்க எதிர்பார்க்கிறோம்;
நாளை களஞ்சியத்தில் சேர்க்கத் துடிக்கிறோம்

நேற்றுப் பிரசங்கித்து,
இன்று திருமுழுக்காட்டி,
நாளை சபை கட்டிவிடமுடியுமா?

உடனடி விளைச்சல் என்பது வேதம் போதிக்காதது.

■ *முடிவுரை*

- மிஷனரிப்பணிக்காய் ஜெபிக்கும்போது
இந்தப் பத்துக் காரியங்களை மனதிற்கொண்டால்,
முழங்கால்களிலேயே நீங்கள் களம் செல்லலாம்!
- மிஷனரிப்பணியின் இயக்குனர் பரிசுத்த ஆவியானவராதலால்
களங்களிலுள்ள பிரச்னைகளைக் குறித்துத் தீர்க்கதரிசனமாக
ஜெபங்கள் ஏறெடுக்க உங்களை ஏவுவார்.

*(இவ்வத்தியாயக் குறிப்புகள் ஒரு கட்டுரை வடிவத்தில்
ஆசிரியரது ''நெஞ்சில் நெருப்பு'' எனும் நூலில்
7ஆம் அத்தியாயமாய் வெளியிடப்பட்டுள்ளது.)*

110

மிஷனரிகளின் பிரச்னைகள்

The Problems of Missionaries

முகவுரை

□ ரோ 10:14,15

1	2	3	4	5
அனுப்புவோர் →	போவோர் →	கேட்போர் →	விசுவாசிப்போர் →	தொழுவோர்

அனுப்புவோரின் முதல் பொறுப்பு ''போவோரைப்'' பற்றியே
இருக்கவேண்டும் —

ஆனால் நாம் 3,4,5ஆம் குழுக்களையே அதிகம் நினைக்கிறோம்.

ஊழியத்தைவிட ஊழியனே முக்கியம்.

எனவேதான்,
''மேய்ப்பனை வெட்டு ... ஆடுகள் சிதறடிக்கப்படும்'' (மத் 26:31)

□ மிஷனரியாய் இருந்தது மட்டுமல்ல,
பவுல் ஒரு மிஷனரிப் பயிற்சியாளர் & மிஷனரிகளை அனுப்புபவர் -
எ.கா.) தீமோத்தேயுவைப் பவுல் அன்புடன் கவனித்தார் (1 தீமோ 5:23)
(உடல் நலத் தேவை)
பிற ஊழியரது தேவைகள்மீது அவ்விதம் கரிசனை கொண்டார் —
வச 17,18 ... *''இரட்டிப்பான கனம்''*
... மாடு ... வாய் கட்டாதே ... கூலி ...

□ பவுல் ஒரு தைரியமான மிஷனரி —
ஆனாலும் தைரியத்திற்காய் ஜெபிக்கச் சொன்னார் (எபே 6:19,20)
மிஷனரிகளின் *''சுகசெய்திகளை''* விசாரித்தறிய எபேசு
விசுவாசிகளை ஊக்குவித்தார் — வச 21,22

□ மிஷனரிகளுக்காய்ப் பொதுவாய் ஜெபித்தால் போதாது —
அவர்களுக்காய் நமது ஜெபங்கள் குறிப்பாயிருக்க
அவர்களது பிரச்னைகள் நமக்குப் புரியவேண்டும்.

நமது ஆராய்ச்சிக்காக **ஆபிரகாமை** எடுத்துக்கொள்வோம் —
அவர்தான் முதல் மிஷனரி (கலா 3:8)

ஆதி 12 — மிஷனரிப் பணியின் துவக்கம்.
மிஷனரி = அப்போஸ்தலன் = அனுப்பப்பட்டவன்
ஆதி 12:1,3இ
ஆபிரகாமின் சரிதை: ஆதியாகமம் 12 முதல் 25 வரை

ஆபிரகாம் சந்தித்த பிரச்னைகள்
இன்றைய மிஷனரிகளின் பிரச்னைகளும் இவையே.

1. பொருளாதாரப் பிரச்னை (Economic Problem)

ஆதி 12:9,10 ... நாட்டின் பஞ்சம் அவனை எகிப்திற்குத் துரத்தியது.
உலக அலுவலை விட்டு மிஷனரிப் பணியில் சேர்ந்ததும்
மாதாந்தர வருவாயில் திடீர் சரிவு —

எ.கா.) எடுபிடி வேலையாட்களுக்கே இன்று மிஷனரிகளைவிடச் சம்பளம் அதிகம்.
மிஷனரிகளின் வருவாயையல்ல, எண்ணிக்கையை உயர்த்து வதிலேயே பல இந்திய இயக்கங்கள் கரிசனை கொண்டுள்ளன.

தென்னிந்தியாவைவிட வட இந்தியாவில் விலைவாசி அதிகம்.
சில அடிப்படைப் பொருட்கள்கூட கிடையாமை.

மிஷனரிப் பிள்ளைகளுக்கு மிஷனரிப்பணி பிடிப்பதில்லை ...
உடன் வயதினரோடு ஒப்புமை (எ.கா., விலையுயர்ந்த காலணிகள்)

பாடனுபவிக்கப் பெற்றோர் ''தெரிந்துகொள்கின்றனர்;''
தியாகமோ பிள்ளைகள்மீது ''திணிக்கப்படுகிறது.''

கூடுதல் செலவுகள் —
மருத்துவச் செலவுகள்
பிள்ளைகளின் கல்விச் செலவுகள்
குடும்பங்களில் திருமணங்கள் / வைபவங்கள்

பணம்தான் எல்லாமே என்றில்லாவிடினும் பணம் வேண்டுமே!

2. கலாச்சாரப் பிரச்னைகள் (Cultural Problems)

ஆதி 12:11-20 ... *சாராய் ... அழகு ... எகிப்தியர் ... என்னைக் கொன்று ...*
20:10-13 ... *கேரார் ... அபிமெலேக்கு ராஜா ...*

- ☐ கலாச்சார அதிர்ச்சிகள் — பல மிஷனரிகள் திரும்பிவிட்டனர்.
- ☐ கிராமங்களில் மாட்டிறைச்சி சாப்பிடுவோர் ஏற்கப்படுவதில்லை —
  (ஆட்டிறைச்சி ரூ. 500/-; மாட்டிறைச்சி ரூ. 200/-)
  எ.கா.) கெட்ட குமாரன் கதை *(கொழுத்த கன்று!)*
- ☐ ஒவ்வொரு மொழியினருக்கும் தனிக் கலாச்சாரமுண்டு —
  இந்தியா — நாடுகளடங்கிய நாடு.
  நம்மாட்களோடேயே சேருவது இயல்பு —
  தமிழர் தமிழரோடு ...
  மலையாளிகள் மலையாளிகளோடு ...
  ஆனால், மிஷனரிகள் என்ன செய்வார்கள்?
- ☐ மற்ற கலாச்சாரங்களை மிஷனரிகள் அற்பமாய் எண்ணினால் அவர்களது பணி சிறக்காது —
  எ.கா.) அபிமெலேக்கிடம் ஆபிரகாம் —
  ''தேவ பயம் இங்கில்லை என்றெண்ணினேன்'' (20:11)

3. சகவுறவுப் பிரச்னைகள் (Relationship Problems)

ஆதி 13:5-11 ... ஆபிரகாமின் வேலைக்காரரும் லோத்தின் வேலைக்காரரும்
ஒரே நிறுவன ஊழியரிடையேயும் பிற நிறுவனத்தாரோடும்
பிரச்னைகள் சகஜம் —
மிஷனரிகள் தேவதூதர்களா?

- ☐ மூன்றாண்டுகள் இயேசுவோடிருந்த சீடரிடையேயும் பிரச்னைகள் —
  ''நம்மில் பெரியவன் யார்?'' (லூக் 22:24)
  ''இவன் காரியம் என்ன?'' (யோ 21:21,22)
- ☐ அப்போஸ்தலரிடையே மோதல்கள்
  (போர்க்களங்களாகும் பணிக்களங்கள்!)
  — பர்னபா பிரிகிறார்!
  (அப் 15:36-40)
  (உடன் ஊழியன் சம்பந்தப்பட்டது: மாற்கு)
  — பவுலுக்கும் பேதுருவுக்கும் உபதேசக் கருத்து வேறுபாடு
  (கலா 2:11,12)

ஊழியரது சபைப்பிரிவுப் பின்னணி
— புராதனச் சபைகள் vs. பெந்தெகொஸ்தே சபைகள்
— வரங்களை அப்பியாசிப்போர் vs. மற்றவர்கள்

ஊழிய முறைகள் —
''திட்டமிட்டுச் செல்லுதல்'' vs. ''ஆவியின் நடத்துதல்''

□ மிஷனரிகளின் மனைவிமாரிடையே சண்டைகள் —
ஒரு பழமொழி:
''100 வேஷ்டிகள் சேர்ந்திருந்துவிடும்;
2 சேலைகள் கூடியிருக்க முடியாது!''

□ தலைமைத்துவத்தில் கோளாறுகள் —
எ.கா.) பாரபட்சம் (1 தீமோ 5:21)

□ நிறுவனங்களுக்கிடையே களப்பகுதிகள் குறித்த பிரச்னைகள்.

4. *அரசியல் பிரச்னைகள்* (Political Problems)

ஆதி 14:8-16 ... ஐந்து அரசர்களுக்கெதிராய் நால்வர் ...
லோத்தும் உடைமைகளும் கைப்பற்றப்பட்டன ...
ஆபிரகாம் போர் தொடுத்தான் ...

15:1 ... *பயப்படாதே ...*
''கேடகம்'' ... ''பலன்'' (Shield & Reward)
பாதுகாப்பு வாக்களிக்கப்பட்டது.

□ பல இந்திய மாநிலங்களில் நிலையற்ற ஆட்சிகள்
கலவரங்கள் ... மோதல்கள் ... தீவிரவாதம் ...

□ பவுலின் அறிவுறுத்தல்: 1 தீமோ 2:1-4
வசனச் சூழமைவு: மிஷனரி நற்செய்திப்பணி

□ பணிக்களங்களில் *துர்க்குணராகிய பொல்லாத மனிதர்*
ரவுடித்தனத்திற்கும் அடியாட்களுக்கும்
பெயர் பெற்ற அரசியல்வாதிகள் உண்டு.

— தங்கள் மகன்களும் மகள்களும் பணியாற்றும் பகுதிகளில்
துப்பாக்கிச் சூடு, கொலை என்றெல்லாம் கேள்விப்படும்
பெற்றோர் எப்படித் துடிப்பர்!

5. *கனியின்மைப் பிரச்னை* (Barrenness Problem)

ஆதி 15:2 ... *பிள்ளையில்லையே ... என்ன தருவீர்?*
16:1,2 ... *சாராய் ... மனைவி ... ஆகார் ... அடிமைப் பெண்*

□ பணியில் கனிகளைக் காட்ட மாம்சீக முறைகள்
எ.கா.) எத்தனை பேர் காலையுணவு சாப்பிட்டீர்கள்?
— உயரும் கரங்கள் — உடனே புகைப்படம்!

தாங்குவோருக்கு அறிக்கை அனுப்புவதைக் குறித்த கவலை.
மனந்திரும்பும் முன்னரே நபர்களுக்குத் திருமுழுக்கு ...
''சபையில் *துஷ்ட மனிதர்''* (16:12)

□ கனிநிறை களங்களோடு ஒப்புமை.
எல்லா நிலங்களும் ஒன்றுபோலிராது —
எ.கா.) இயேசு: கப்பர்நகூம் vs. நாசரேத்
(லூக் 4:16,23; மாற் 5 vs. 6)
கடின நிலங்கள் (மத் 13:18-22)
அல்லது, விதைக்கும் காலம்!
அல்லது, உழும் காலம் (யோ 4:37,38)

□ எப்படியோ சாதித்துவிடவேண்டுமென்று
ஆபிரகாம் மாம்சீக முறைகளைக் கையாடியபோது,
தேவன் சொன்னது, *''எனக்குமுன் நடந்து உத்தமனாயிரு''* (17:1)

16:16 ... இஸ்மவேல் பிறக்கும்போது ஆபிரகாமின் வயது 86.
அடுத்த வசனமே —
17:1 ... 99 வயது ... *''நான் சர்வ வல்லவர்... **நடந்து** ...
உத்தமனாயிரு''*
பிரதிபலிப்பு: *''ஆபிரகாம் முகங்குப்புற விழுந்தான்!''* (17:3)

"Worker" என்பவர் "Walker" ஆகவும் இருக்கவேண்டும்!
— திருநெல்வேலியில் மிஷனரியாயிருந்த
தாமஸ் ''வாக்கர்'' (1859-1912)

6. *சமுதாயத்தின் பிரச்னைகள்* (Societal Problems)

ஆதி 18:20-33 ... சோதோம் & கொமோரா
அவர்களது பாவம் மிகவும் கொடியது ...
50 - 45 - 40 - 30 - 20 - 10

□ பணிக்களங்கள் ...
பல மணம் / குடிபோதை / . . .
மக்களை வெறுப்பதற்குப் பதிலாக,
ஆபிரகாம் அவர்களுக்காய் **மன்றாடினான்**.

எ.கா.) கிரேத்தா தீவில் தீத்து விடப்பட்டதற்குக் காரணம் —
தீத் 1:5,12 ... *பொய்யர் ... சோம்பேறிகள் ...*

□ மக்களை நேசிக்காமல் அவர்களை ஆதாயப்படுத்த முடியாது —
''தேவன் ... இவ்வளவாய் அன்புகூர்ந்து ... தந்தருளி''
(யோ 3:16)

அன்பில்லாது இரத்த சாட்சியாய் எரிக்கப்படவும்
முடியுமே (1 கொரி 13:3)

□ தனது மக்களுக்காய்ச் சபிக்கப்படவும் பவுல் ஆயத்தமாயிருந்தார் —
ரோ 9:1-3 / 10:1

எ.கா.) ஒரு மிஷனரியின் கல்லறை வாசகம் —
''இவர் இங்கு வந்தபோது கிறிஸ்தவர் எவருமில்லை;
இவர் இறந்தபோது கிறிஸ்தவரல்லாதவர் எவருமில்லை!''

உள்ளூர் வாசிகளோடு அடையாளப்படுத்திக்கொள்வது சுலபமல்ல.

7. குடும்பப் பிரச்னைகள் (Family Problems)

ஆதி 22:1-3 ... *''உனது புத்திரனை ... பலியிடு''*
துவக்கத்தில், இதன் வேதனையை நினைத்தும் பார்க்கமுடியாது;
முடிவிலோ, *''யேகோவா-யீரே''* என்பவரைத் தரிசிப்போம்
(வச 14)

□ பிள்ளைகளின் பிரிவு
கல்வி வசதிக்காக ...
பெற்றோருக்கு (தாய்மாருக்கு) மன உளைச்சல்

□ ஆபிரகாமின் மனைவி மரணம் —
ஆதி 23:1-4
இவ்விதமே ஆப்பிரிக்க மண்ணில் டேவிட் லிவிங்ஸ்டன்
தனது மனைவியின் சடலத்தைப் புதைத்தார்.

□ ஈசாக்கின் திருமணம்
ஆதி 24:1-4
பிள்ளைகளின் எதிர்காலம்.
சேமிப்பு அதிகம் கிடையாது.

நடு வயதைக் கடக்கும் மிஷனரிகளை
இந்த நினைவுகளெல்லாம் வாட்டும்.

■ *முடிவுரை*

இவ்விதப் பிரச்னைகளினால்,
அ) முன்னணி மிஷனரிகளில் பலர் திரும்புகின்றனர்
ஆ) அநேகர் மிஷனரிகளாய்ச் செல்லாமல்,
உள்ளூர்ச் சபைகளில் மேய்ப்பராகின்றனர்
அல்லது வேறு வேலைகளில் அமருகின்றனர்.

மிஷனரிகளை ஆசீர்வதிக்க முடிந்ததையெல்லாம் செய்யுங்கள்,
''தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்பும்
கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக!'' (சங் 35:27)

(தமிழல்லா மாநிலங்களிலுள்ள பல்வேறு பணிக்களங்களில் மிஷனரிகளோடு எனது மனைவியும் நானும் 10 ஆண்டுகள் தங்கிப் பணியாற்றியதால் மேற்கூறிய பிரச்னைகளை நேரில் கண்டிருக்கிறோம், அனுபவித்திருக்கிறோம்.)

(101ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

111

சுற்றுப்புற சுவிசேஷப்பணி

Neighbourhood Evangelism

முகவுரை

எத்தனையோ மிஷனரிகள், மிஷனரி இயக்கங்கள்!
எத்தனையோ புதிய இடங்கள் சந்திக்கப்படுகின்றன!
ஆனால் நமது **''அயலகம்''** கவனிக்கப்படாது போயிற்று.

சுற்றுப்புற சுவிசேஷப்பணி எங்கே போயிற்று?

■ இயேசுவின் மாதிரியோடு துவங்குவோம்:

தொலைவிட மிஷனரியாய் மாறுமுன்
அவர் அயலக சுவிசேஷகராயிருந்தார் —
லூக் 4:13-16 ... *நாசரேத் ...*

பின்னர்தான் செபுலோன், நப்தலி நாடுகளில் பிரசங்கிக்க
தமது மையத்தை கப்பர்நகூமுக்கு மாற்றினார் (மத் 4:13)

அயலக நற்செய்திப்பணியின் நீட்டுதலாயிருக்கும்போதுதான்
தொலைவிட மிஷனரிப்பணி பலமும் ஆரோக்கியமுமாயிருக்கும்.

□ அவர் ''மனிதரைப் பிடிப்போரைச்'' சேர்த்தது முக்கியமாக
அயலக நற்செய்திப்பணிக்காகவே (மத் 4:19) (வச 22,25)

பின்னர் தொலைவிடங்களுக்குத் தேவைப்படும் ஊழியருக்காய்
வேண்டிக்கொள்ளும்படி அவர்களுக்குச் சவாலிட்டார் (9:37,38)

□ இயேசுவின் ''போங்கள்'' என்ற 4 கட்டளைகள் —

அ) *வீட்டிற்கு உன் இனத்தாரிடம்* ... (மாற் 5:19)
ஆ) *தெருக்களுக்கும் வீதிகளுக்கும்* ... (மத் 22:9)
இ) *எதிரேயிருக்கும் கிராமத்திற்கு* ... (லூக் 19:30)
ஈ) *உலகமெங்கும்* ... (மாற் 16:15)

இந்த நான்கில் மூன்று அயலக நற்செய்திப்பணிக்குரியது!

அப்படியானால், நமது சுற்றுப்புறம் முழுவதும் நற்செய்திமயமாகும்
வரை நாம் காத்திருக்கவேண்டுமென்பதல்ல.

மேலை நாட்டு மிஷனரிகள் அவ்விதம் காத்திருக்கவில்லை ...

அதே வேளையில், எங்கெல்லாம் அயலகப்பணி விடப்பட்டதோ
அப்பகுதிகளெல்லாம் அஞ்ஞானத்திற்குத் திரும்பின —

எ.கா.) இங்கிலாந்தில் ஆலயங்கள் — மசூதிகள்/அங்காடிகள்
டேவிட் பாசன்: ''இங்கிலாந்து சீக்கிரம் ஒரு
முகமதிய நாடாக மாறலாம்!''

அப் 1:8இலுள்ள 4 பகுதிகளும் ஒன்றன்பின் ஒன்றல்ல,
ஒரே வேளையில் சந்திக்கப்படவேண்டும்.

■ கிறிஸ்துமஸ் சரிதையில்,
மேய்ப்பர்தான் முதலாம் அயலகச் சுவிசேஷகர்கள் —
லூக் 2:17,18
பொதுவாக, முழுநேரப் பணியாளர்தான் தொலைவிடங்கள்
செல்லமுடியும்; அயலகப்பணியோ எல்லாருக்குமுரியது!

மன்னார்குடியிலும் மயிலாடுதுறையிலும் உள்ள ஆத்துமாக்கள்
மகாராஷ்டிராவிலும் மத்தியப் பிரதேசத்திலும் இருப்போரைவிட
முக்கியமற்றவர்களல்ல —

''எல்லா'' ஆத்துமாக்களும் என்னுடையவை (எசேக் 18:4)
''ஒருவரும்'' கெட்டுப்போகக்கூடாது (யோ 3:16)
''எல்லா'' மனிதரும் இரட்சிக்கப்படவேண்டும் (1 தீமோ 2:3,4)

திருச்சபையின் ''அமைதிப் பெரும்பான்மையினரை''
ஈடுபடுத்தக்கூடிய ஒரே வேலை சுற்றுப்புற சுவிசேஷப்பணியே.

■ நற்செய்திப்பணிக்கு வரைபடம் —
அப் 1:8 ... எருசலேம் & யூதேயா: அயலகம்
சமாரியா & உலகம் : தொலைவிடம்

அவர்கள் **எருசலேமை** *''நிரப்பினார்கள்''* (அப் 5:28)
அதாவது, ஒருவர் விடாது சந்தித்துவிட்டனர்.

சபை மேய்ப்பர்களில் எல்லாருக்கும் இத்தரிசனம் கிடையாது.

தங்கள் தங்களது உள்ளூர்ச் சபையினருக்கு ஆத்தும தாகத்தைக் கடத்தி வருவது மிஷனரி ஊழியத் தலைவர்கள், பிரதிநிதிகளின் பொறுப்பு.

□ விறுவிறுப்பான விசுவாசிகளிடமிருந்தே மிஷனரிகள் எழுகின்றனர் —
மத் 9:37-10:4

T.L. ஆஸ்போர்ன்: ''முழுநேர ஊழியரல்லாதோரே சபைச் சரித்திரத்தின் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிப்பர்!''

''தனியாள் ஆத்துமாதாயப் பணியைத் திரும்பக் கொண்டுவருவதே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் திரும்ப மலர வழிவகுக்கும்!''

□ தொலைவிட மிஷனரிப்பணிக்கு நேர்முகத் தேர்வில் ஒரு வாலிபனிடம் கேட்கப்பட்டது:
''நீ இருக்குமிடத்தில் என்ன செய்கிறாய்?''
பதில் : ''அதிகம் ஒன்றுமில்லை!''
கேள்வி: ''இதையே செய்யவா பணிக்களம் செல்லப்போகிறாய்?''

உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன்
அசலூரில் ஆனை பிடிப்பானோ?

• ''அனைத்து'' விசுவாசிகளின் ஆசாரியத்துவம் —
1 பேது 2:5,9 ... இதெல்லாம் இன்று ஏட்டுச்சுரைக்காய்தான்.

தொலைவிட மிஷனரிப்பணி போல அயலக நற்செய்திப் பணியும் வலியுறுத்தப்படாவிடில், குருக்கள்-குருக்களல்லாதோர் என்ற பிளவு விரிந்துகொண்டேதான் போகும்.

ஆன்ட்ரூ முரே: ''கிறிஸ்தவர்களில் இரு வகுப்பினரே: ஆத்துமாதாயகர் & பின்மாற்றக்காரர்.''

ஊழியத்தைத் தாங்குவோர் ஏராளம்;
ஊழியம் செய்வோர் குறைவு.
ஓர் அரங்கம் முழுவதும் தூண்களாகவே இருந்தால் எப்படி?

தங்களது முன்னேற்றப்பணிகளில் ஈடுபடமுடியாத அளவு ஊழியத் தாங்கிகள் தங்கள் பலத்தையும் பணத்தையும் அயலகப் பணியில் வார்த்துவிடுவார்களோ என்ற பயமோ இயக்கங்களுக்கு?

எ.கா.) தனியாள் ஆத்துமாதாயப்பணி குறித்து மிஷனரி கன்வென்ஷன்களில் ஒரு முழுப் பிரசங்கம் கிடையாது!

எல்லாம் ஜெபிக்க வைக்க / பணம் திரட்ட / முழுநேரப் பணிக்கு ஆள் சேர்க்க / இவற்றிற்காகத்தான்.
மிஷனரிப் பத்திரிகைகளும் இப்படித்தான்.

சங்கங்களும் நிறுவனங்களும் வளரலாம்;
ஆனால் கிறிஸ்துவின் உடலாம் திருச்சபைக்கு இது நன்றன்று.

ஐவகை ஊழியம் ஏன்? (எபே 4:11-13) விசுவாசிகள் *பக்குவப்பட*

■ சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் களப்பணியாளருக்கும் இடையே மன இறுக்கங்கள் —

''எங்கள் பிரச்னைகள் அவர்களுக்குப் புரிவதில்லை.''
இதற்குப் பரிகாரம் அயலக நற்செய்திப்பணியே.

தனியாள் ஆத்துமாதாயகராயில்லாத எவரும் மிஷனரிகளை நடத்தத் தகுதியில்லாதவர் —

□ இயேசு ''அனுப்பினார்,'' **அத்துடன்** ''சென்றார்'' (லூக் 10:1)

□ பவுலும் அப்படியே ... (மிஷனரிப் பயணங்கள்)

□ காரைக்குடியில் இயங்கிய ''நற்செய்திக்குழு'' (1963-1970): FGYMA / BYMக்கு வித்திட்டது.

□ எனது மனைவியும் நானும் இயக்கத் தலைமையகத்தில் 18 ஆண்டுகள் இருந்தபின்னர், 10 ஆண்டுகளைப் பணிக்களங்களில் செலவிட்டோம். எங்கள் எழுத்துக்கும் பிரசங்கத்திற்கும் இது கூடுதல் அர்த்தமும் அழுத்தமும் தந்தது.

தொலைவிடப் பணியைப் பிறப்பிப்பது அயலகப் பணியே!

■ போ **''அல்லது''** அனுப்பு — Dr. ஆஸ்வால்டு J. ஸ்மித்
இது குறிப்பாக வெளிநாட்டு மிஷனரிப்பணிக்கானது.
இது இந்தியாவிற்குப் பொருந்தாத சொகுசு.
''போ **அத்துடன்** அனுப்பு!'' என்பதுதான் இந்தியாவிற்கு.

மக்களோ எளிதானதைத் தெரிந்துகொள்கின்றனர் —
அதாவது, அனுப்புவது = ஜெபிப்பதும் கொடுப்பதும்.
அயலக நற்செய்திப்பணி கிடையாது.
தெசலோனிக்கேயரோ (1 தெச 1:8)
''மக்கெதோனியா & அகாயா'' — அவர்களுக்கு அயலகம்.
உண்மையாகவே ''மாதிரிச்'' சபைதான் அது (வச 7)

■ எழுப்புதலின் உடனடி விளைவு —
எசேக் 34:26 ... *அவர்களையும் ... சுற்றுப்புறங்களையும் ...*

எழுப்புதல் ஆசீர்வாதத்தின் வெளிப்பாடு —
மத் 5:14 ... *மலைமீது இருக்கும் பட்டணம்*
:15 ... *கொளுத்தப்பட்ட விளக்கு*
:16 ... (அயலக) *மனிதர் கண்டு ...*

■ மனந்திரும்பியவுடன் பவுல் —
அப் 9:19-22 ... திருமுழுக்கு பெற்ற இடமாகிய தமஸ்குவில் நற்செய்தியறிவித்தார்.

தமஸ்குவிலுள்ள யூதர் அவரைக் கொல்ல முயன்றபடியால்தான் 200 கி.மீ. தொலைவிலுள்ள எருசலேம் சென்றார் (வச 23-26)

அப் 1:8 இல் இயேசு தந்த வரைபடத்தைப் பின்பற்றினார் (அப் 26:20)

சுற்றுப்புற சுவிசேஷப்பணியில் தீவிரமாயிருப்போர் பொதுவாகத் தொலைவிடப் பணியில் நேர்த்தியாய்ச் செயல்படுவர்.

எ.கா.) இந்திய இயக்கங்களின் முன்னாள் மிஷனரிகள் பலர் விறு விறுப்பான சுவிசேஷக் குழுக்களிலிருந்துதான் வந்தனர் —

(அதாவது, தனியாள் ஆத்துமாதாயம், தெருப் பிரசங்கம், சந்திப்பு ஊழியம், கிராமப்புறப்பணி)
அவ்வித மிஷனரிகளின் தரமே தனிதான்!

■ முழுக் குடும்பங்களும் ஈடுபட வேண்டும் —
அப் 2:17,18
''குமாரர் ... குமாரத்திகள் ... வாலிபர் ... முதியோர் ... வேலைக்காரர் ... வேலைக்காரிகள்''

இது பிரதானமாக அயலகப் பணியையே குறிக்கும் —
இல்லையேல், முதியோர் தொலைவிடங்களுக்குச் செல்வதெப்படி?
இல்லையேல், வேலைக்காரர் வீட்டுவேலையை விட்டுவிட்டால்?

ஆதிச்சபை இப்படி இருந்தது —
கிறிஸ்தவ ''இல்லங்களே'' நற்செய்தி மையங்களாயின —

''எல்லா மக்களிடமும் தயவு ... ''
சபையில் தினசரி சேர்ப்பு (அப் 2:46,47)

''ஆண்டவரே, அதைத் திரும்பச் செய்யும்'' என்று ஜெபியாதீர்;
''நாம் அதைத் திரும்பச் செய்வோம்'' என்பீர்.

■ பவுலின் ஊழியத் திட்டம்: அப் 20:20 ... இல்லந்தோறும்
''கிரேக்கரைக்'' குறிவைக்கையில் ''யூதரை'' மறந்துவிடவில்லை.

கிரேக்கர் — கிறிஸ்தவரல்லாதோர்
யூதர் — பெயர்க் கிறிஸ்தவர்

பெயர்க் கிறிஸ்தவர்களை மறுபடியும் பிறந்தோர் இரட்சிப்பிற்குள் வழிநடத்தாததாலேயே அவர்கள் அப்படியே இருக்கின்றனர் —
எனது வேதியல் பேராசிரியரே என்னைக் கிறிஸ்துவிடம் நடத்தினார்.

பன்னிருவரை மாற்றுக்கலாச்சாரப்பணிக்கு அனுப்புமுன்,
இயேசு முதலாவது சொன்னது (மத் 10:5,6) —
''காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேலரிடமே போங்கள்''

உங்களது பெயர்க் கிறிஸ்தவ நண்பர்களுக்காய் ஜெபித்து
அவர்களைச் சந்தித்துப் பேசுங்கள் —

கனிகொடுப்பது நமது விருப்பு வெறுப்பைப் பொருத்ததல்ல —
கனிகொடா கொடி ''எதுவும்'' அறுத்துப்போடப்படும் (யோ 15:2)

■ பண வசூலா ஆத்தும ஆதாயமா?
பவுல் வீடுவீடாகச் சென்றது
தனது மிஷனரிப்பணிக்குப் பணம் சேகரிக்க அல்ல —
அப் 20:33 ... *வெள்ளி ... பொன் ... ஆடை ...*

சொந்தக் கையால் வேலை செய்தார் (வச 34)
மக்களைச் சந்தித்தது *''வாங்க''* அல்ல, *''கொடுக்கவே''* (வச 35)

மிஷனரிப்பணிக்குப் பணம் சேகரிப்பதற்கு நான் எதிரியல்ல;
ஆனால் வீடு சந்திப்பின் முக்கிய நோக்கம் எது?

அன்று: தோள் பையில் சுவிசேஷப்பிரதிகள்
இன்று: தோல் பையில் ரசீது புத்தகம்

ஆலய வாசலிலேயே பணம் வசூலிக்கிறார்களென்று
சில மிஷனரி இயக்கங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனியாள் ஆத்துமாதயத்தில் நேரம் செலவழிக்க முடியாத அளவு
இயக்கங்கள் குறிகளை நியமித்துள்ளன.

இது சரியா?
இயக்கங்கள் அளவுக்குமீறிப் பெரிதாகிவிட்டனவா?

- அஞ்ஞான மார்க்கத்தைப் பார்க்க ஆதிவாசிப் பகுதிகளுக்குச் செல்லவேண்டியதில்லை — இங்கேயே இருக்கிறது —

சில பகுதிகளில்,
வட இந்தியாவைவிடத்
தென்னிந்தியாவிலேயே வட இந்தியா அதிகம்!

தங்கள் தேவதைகளுக்காகத் தங்களை வதைத்துக் கொள்ளும்
பக்தகோடிகள் நமது நகர்களிலேயே ஏராளம்.

பொருளாதாரப் பின்னடைவா, நற்செய்தி அறியாமையா?

எவ்வளவோ படித்த மேல் மட்டத்தினரும் அர்த்தமற்ற
மூடப் பழக்கங்களுக்கு அடிமைகளாயிருக்கின்றனர்.

குழுக்கள் செல்லட்டும் — கைப்பிரதி விநியோகம்
— தெருப்பிரசங்கம்
— வீடு சந்திப்பு
— மருத்துவமனை, சிறை, புனர்வாழ்வு மையம் போன்றவற்றில் ஊழியம்
— கிராமப்புற சுவிசேஷப்பணி
— சுவிசேஷக் கூட்டங்கள்

உள்ளூர்ச் சபைக்கும், சங்கங்களுக்கும் கொடுத்த பின்னர் இவ்வித
ஊழியச் செலவினங்களுக்காய்க் கொஞ்சம் வைத்துக்கொள்ளுங்கள்.

- தொலைந்த ஆடு கிடைத்ததும் அந்த மேய்ப்பன் அழைத்தது
  ... *சிநேகிதர், அயலகத்தார்* (லூக் 15:6)

தொலைந்த காசு கிடைத்ததும் அப்பெண்மணி அழைத்தது
... *சிநேகிதிகள், அயலகத்தார்* (வச 9)

*''நீதிமான்களின் கூடாரத்தில் இரட்சிப்பின்
கம்பீர சத்தம் உண்டு''* (சங் 118:15)
முதலாவது அயலகத்தார் அதைக் கேட்கட்டும்!

புளித்த மாவின் உவமை ... சுற்றுப்புற சுவிசேஷப்பணியின் படம்.
அது ஒரு ''பெண்மணியின்'' வேலை ...
''வீடுவீடாய்த் திரிதல்... அலப்பல்... வீணலுவல்'' (1 தீமோ 5:13)
நற்செய்தியே உங்கள் பேச்சாகட்டும்!
Gossip the Gospel!

பாடுங்கள்: (கீர்த்தனை 270)
*ஜீவ வசனம் கூறுவோம் — சகோதரரே,
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்!*
*பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி யேசு சிந்தை மகிழ்ந்திடவே!*

- இரண்டாவதும் இணையானதுமான கட்டளை —
  ''உன்னைப்போல் உன் அயலானை நேசி''
  நமக்கு மகிழ்ச்சி, சமாதானம் உண்டு; வழியும் தெரியும் ...
  நமது அயலகத்தாருக்கோ ...

நமக்கு அயலான் யார்?
நல்ல சமாரியன் சம்பவம் இதனை விளக்குகிறது.

அதாவது, தேவையிலிருப்போருக்கு உதவும்போது
அன்னாருக்கு அயலான் ஆகிறோம்!

தொலைவிடங்களிலுள்ள எளியவர்க்கு உதவி அனுப்புவது நன்று;
ஆனால் நமது வாசற்படியிலேயே கிடக்கும் லாசரு?
நடைபாதைவாசிகள், குப்பைகளில் பொறுக்குவோர், ...

எ.கா.) பெந்தெகொஸ்தே —
''அவர்களில்'' ஒருவனுக்கும்
ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (அப் 4:34,35)

கண்ட மனிதனை நேசிக்கமுடியாவிடில்,
காணாத மகிபனை நாம் நேசிக்கமுடியுமோ?

இயேசு: *தரித்திரர் எப்பொழுதும்* ***''உங்களோடு''*** (மாற் 14:7)
தூரத்திலல்ல!

- சுற்றுப்புற சுவிசேஷப்பணியின் பலன்கள் நமக்குப் புரிந்துவிட்டால்
  நாம் சும்மா இருக்க நேரமிருக்காது.
  எங்கிருந்தாலும் வேலைதான்!

எ.கா.) பவுல்: விக்கிரகங்கள் நிறைந்த அத்தேனே நகர் (அப் 17).
சீலாவும் தீமோத்தேயுவும் வரக் காத்திருந்த நேரம்.
அப்பொழுது அவர் செய்தது ... (வச 16,17)

எ.கா.) பவுலைச் சிறையிலடையுங்கள் —
அங்கு என்ன நடக்கும் தெரியுமா? (பிலி 1:12,13)

எ.கா.) தெரியாத தீவொன்றில் அவர் போய்ச் சேரட்டும் —
அங்கு 3 நாள் விடுதலையின் நற்செய்திக் கூட்டம் நடத்துவார்
(அப் 28:7-9)

- நமது பல சபைகள் மிஷனரிகளைத் ''தத்தெடுக்கின்றன;''
  ''பெற்றெடுக்கவில்லை'' —

1000 பேருள்ள சபை 10 மிஷனரிகளை அனுப்பித் தாங்கினாலும்,
நேரடிப் பணியில் ஈடுபடுவோர் ஒரு சதவீதம்தான்.
ஆனால் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு
ஒரு நபரையாவது ஆதாயம்பண்ணச் சவால் பெற்றால்
ஓராண்டில் அது இரு–மடங்கு பெரிதாகிவிடும்!

புரியவே கடினமாயிருக்கிறதா?
இப்படித்தான் ஆதிச்சபை வளர்ந்தது!
''ஒவ்வொருவரும் ஒருவரைச் சந்தியுங்கள்!''
Each one, reach one!

இப்படி நடக்கும்போதுதான்,
''முழுச் சபையும்
முழுச் சுவிசேஷத்தை
முழுவுலகிற்கு எடுத்துச் செல்லுகிறது''
என்று நாம் சொல்லக்கூடும்.

The Whole Church carrying the Whole Gospel to the Whole World!

(92ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

112

நற்செய்திப்பணியை விரைவுபடுத்துவது எங்ஙனம்?

How to accelerate Evangelism

முகவுரை

- பல நூற்றாண்டுகளாய்த் திருச்சபை தூங்கிக்கொண்டிருந்தது —
  2010 ஆண்டுகளுக்கு மேலாகியும்,
  உலகம் இன்னும் நற்செய்திமயமாக்கப்படவில்லை.

  கடந்த 50 ஆண்டுகளாய் நடப்பவற்றிற்காய்த்
  தேவனைத் துதிப்போம் —
  எப்போதையுவிடக் கூடுதல் விசுவாசிகள் சேருகின்றனர்,
  கூடுதல் சபைகள் நிறுவப்படுகின்றன.

  ஆனாலும், இன்னும் செய்யப்படவேண்டியதோடு
  ஒப்பிடுகையில் செய்யப்பட்டது மிக மிகக் குறைவு.

- மிஷனரி நற்செய்திப்பணியைப் பவுல் ஓர் ஓட்டப் பந்தயத்திற்கு
  ஒப்பிடுகிறார் —
  அப் 20:24 ... எபேசு மூப்பருக்கு எழுதியது
  1 கொரி 9:22-24 ... கொரிந்து விசுவாசிகளுக்கு எழுதியது
  2 தீமோ 4:5-7 ... பயிற்சியன் மிஷனரி தீமோத்தேயுவுக்கு

  ''ஓட்டப் பந்தயம்'' என்றால் ''போட்டியைக்'' குறிக்காது;
  ''அது வேகத்தையும்'' ''முடித்துவிடுதலையும்'' குறிக்கும்.

நீங்கள் செய்யும் இறைப்பணி எத்தகையதாயினும், அதைத் துரிதப்படுத்த
இதோ ஏழு வழிகள் —

1. அர்ப்பணிப்பை ஆழப்படுத்துங்கள் (Deepen your Consecration)

பணியாளனின் வாழ்க்கை பணியைப் பாதிக்கும்.

கனி கொடுப்பதில் அதிகரிக்கவேண்டுமென்பதே
ஒவ்வொருவரையும் குறித்த தேவ சித்தம் —
யோ 15:2,5,8 ... *''அதிகக்'' கனிகள் ...''மிகுந்த'' கனிகள்*

இது சாத்தியமாவது எங்ஙனம்?

''கிறிஸ்துவில் நிலைத்திருப்பதின் மூலம்''
— அதின் பொருளென்ன? (யோ 15 வாசியுங்கள்)

அ) தனிப்பட்ட சுத்திகரிப்பு (வச 2)

வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தம்.

அடிக்கடி தற்பரிசோதனை.

இதற்கு நேரமில்லை எனக்கூடாது.

''களை எடுத்து'' ... ''கிளை நறுக்கி''

உள்ளும் புறம்பும் பரிசுத்தம்.

ஆ) தவறாது திருவசனத் தியானம் (வச 3)

வசனம்தான் நீரும் உரமும்.

சங் 1 ... *''இரவும் பகலும் ... நீர்க்கால்கள் ...*

அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்''

இ) வேதத் தியானத்துடன் ஜெபம் (வச 7)

அதிக ஜெபம், அதிக வல்லமை. (More prayer, more power!)

ஈ) தேவனைச் சார்ந்திருத்தல்(வச 5);

ஆவியானவரது உதவி (வச 26,27)

தன்னம்பிக்கை / திறமைகள் / ...

''கர்த்தருக்குள் மகிழ்ச்சி ... உங்கள் பலம்'' (வச 11)

2. ***ஆத்தும பாரத்தை அதிகரியுங்கள்*** (Heighten your Passion.)

☐ மக்களையல்ல, திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் மையமாய்க் கொள்ளும்போது நமது ஆத்தும பாரம் குறைகிறது.

பவுலின் இதய பாரம் —

ரோ 9:1,2 / 10:1 ... *இடைவிடாத துக்கம்*

அவர் இயேசுவிடம் அதைப் பெற்றார் —

மத் 9:36 ... *திரளான மக்கள் ... மனதுருக்கம்*

அவர் ஆத்துமாக்களுக்காய்த் தன்னையே *''செலவழித்தார்''* —

2 கொரி 12:15 ... *செலவுபண்ணவும்*

செலவுபண்ணப்படவும் ...

அவர் மக்களுக்காய்த் தன்னையே *''வார்த்தார்''* —

பிலி 2:17 ... *பானபலி*

கூடுதல் மக்களை இரட்சிக்க எந்த அளவுக்கும் இறங்கினார் —

1 கொரி 9:19,22 / 10:33 ... *கிரேக்கருக்குக்*

கிரேக்கராகவும் ...

☐ உங்கள் ஆத்தும பாரம் குறையாமலிருக்க மிஷனரிகள், இரத்தசாட்சிகளின் சரிதைகளை அடிக்கடி வாசியுங்கள்.

இவ்வித பாரமும் தாகமும் இல்லையேல்,

நமது ஊழியம் எதுவும் பயனற்றது —

1 கொரி 13:2,3 ... பிரசங்கித்தல் / அற்புதம் செய்தல் /

நிவாரணப்பணி / இரத்தசாட்சி ...

அது நம்மைப் பரவசப்படுத்தும், அவ்வளவுதான்!

3. ***தரிசனத்தைக் கூர்மையாக்குங்கள்*** (Sharpen your Vision.)

☐ தரிசனம்: பொதுவானது — விசுவாசிகள் அனைவருக்கும்.

குறிப்பானது — நபருக்கு நபர்,

நிறுவனத்துக்கு நிறுவனம் மாறும்.

தரிசனம் = எதை நிறைவேற்ற நினைக்கிறீர்கள் என்பது.

- பொதுவான தரிசனம்: முப்பரிமாணமுள்ளது —

அ) மேல் நோக்கியது — தேவன்பால் — அவரை உயர்த்துவது

தீர்க்கதரிசிகளின் கனவு —

எ.கா.) ஏசா 2:11,17 ... *கர்த்தர் ஒருவரே ...*

அதாவது, தேவ மகிமை — இயேசுவின் பிரதான ஊழியம் (யோ 17:4)

அதாவது, பிதாவை மகிமைப்படுத்துவதே ஊழியத்தை முடிப்பதாம்.

ஆ) உள் நோக்கியது — திருச்சபையின்பால் — பக்திவிருத்தி

எபே 4:11-13 ... **எல்லா** ஊழியங்களும் இதற்காகவே.

இ) வெளி நோக்கியது — உலகத்தின்பால் — நற்செய்தியறிவிப்பு

பிலி 2:10,11 ... *முழங்கால் யாவும் ... நாவு யாவும்*

ஏசாயாவின் தரிசனம் இவ்வித முப்பரிமாணமுள்ளது —

அ) *ஆண்டவரைக் கண்டேன்* (ஏசா 6:1)

ஆ) *அவர் தொங்கலாடை ஆலயத்தை நிரப்பிற்று* (வச 1)

இ) *பூவுலகு முழுவதும் அவரது மகிமை* (வச 3)

இன்னும் நிறைவேறவில்லை, ஆனாலும் (வச 9-11)

- குறிப்பான தரிசனம் பொதுவான தரிசனத் திரையில் வரையப்படவேண்டும்.

எ.கா.) பால் அடிப்படையானது; அதிலிருந்து வருபவை:

தயிர், வெண்ணெய், நெய் முதலியன.

4. *எல்லையை விரிவாக்குங்கள்* (Widen your Horizon.)

☐ ஏசா 54:2,3 ... *விசாலமாக்கு ... நீட்டு ... விரிவாக்கு ...*
தடை செய்யாதே!

தேவ சித்தம் எப்பொழுதும் இதுதான் (1 கொரி 15:58)
''உறுதிப்படுத்த'' மறந்துவிடக்கூடாது.

☐ அசமந்தமாயிருக்க இடமேயில்லை —

எ.கா.) ஆபிரகாமை நகர்ந்துகொண்டேயிருக்கச் சொன்னார் —
அ) *கண்களை ஏறெடு* (ஆதி 13:14) ... N–E–W–S
ஆ) *எழுந்து நடந்து திரி* (வச 17) ... நீளம் & அகலம்

தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆபிரகாம் **நகர்ந்தான்** (வச 18).

அப்படியே யோசுவாவிடம் தேவன் (யோசு 1:2,3) —
''எழுந்து போங்கள்! ... காலடி ... எவ்விடத்தையும் ...''

அந்நாட்களில் மோட்டார் வாகனங்கள் கிடையாது.
கரடுமுரடான பாதைகளில் நடந்து செல்வதும் சுலபமல்ல.

- நாசரேத்தில் தங்கிவிடாதீர் —
நப்தலிக்கு நகருங்கள்!
- எருசலேமில் உட்கார்ந்துவிடாதீர் —
யூதேயா, சமாரியாவுக்குப் புறப்படுங்கள்!
- அந்தியோகியாவில் நின்றுவிடாதீர் —
உலகின் கடையெல்லைவரை செல்லுங்கள்!

பிராந்தியங்கள், மொழிகள், கலாச்சாரங்களைக் கடந்து
செல்லுங்கள். உங்கள் ஆட்களோடேயே ஒட்டி நிற்காதிருங்கள்.

பேராணை: *''உலகம் **எங்கும்** ...''* (மத் 28:19; மாற் 16:15)
ஆவியானவரின் நடத்துதலுக்குக் கீழ்ப்படியுங்கள் (அப் 16:6-10)

- *சிறுக அல்ல, பெருக விதையுங்கள்* (2 கொரி 9:6)

5. *ஐக்கியத்தைப் பலப்படுத்துங்கள்* (Strengthen your Union.)

☐ எல்லாரும் நற்செய்திப்பணியில் ஈடுபட வேண்டும்;
ஆனால் எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முயலக்கூடாது.

பிறர் செய்ததையே செய்யாதிருங்கள்.
ஒத்துழைப்பைப் பெருக்குங்கள்.

''இருவராயிருப்பது மேல் ... நல்ல பலன்'' (பிர 4:9)
இரண்டிரண்டுபேராய் இயேசு அனுப்பியதில் ஆச்சரியமில்லையே.
ஒரு குதிரை 2 டன் இழுத்தால், இரு குதிரைகள் 23 டன் இழுக்கும்!

☐ ஒருங்கிணைந்து செயல்பட முயற்சியுங்கள்.
அதாவது, பிற ஊழியங்களோடு பங்கேற்பு.
ஒருவரது பலம் அடுத்தவரது பலக்குறைவில் உதவும்.

- சபைகளோடு மிஷனரி இயக்கங்கள் செயல்பட வேண்டும் —
சபை கட்டுதல் vs. சபை வளர்த்தல்
- சிறப்பு ஊழியங்கள்: வாலிபர் ... போதையடிமைகள் ...
தொண்டு நிறுவனங்கள் ... AIDS நோயாளிகள் ...
பாலியல் தொழிலாளிகள் ... வேத மொழிபெயர்ப்பு

நீங்களே இறைப்பணியில் யாவற்றையும் செய்வது போன்ற
தோற்றம் கொடுக்காதீர்கள்
அது கிறிஸ்துவின் சரீரத்தைக் கூறு போட்டுவிடும்.

☐ *''ஒருவருக்காயொருவர் ஜெபியுங்கள்''* — அப்படியானால்?
எ.கா.) அடுத்த நிறுவனத்தின் ஜெபக் குறிப்புகளை,
அதுவும் இக்கட்டான வேளைகளில்,
சேர்த்துக்கொள்ளத் தயங்கக்கூடாது.

முடிந்தவகையிலெல்லாம் ''ஒரே சரீரம்'' எனும் எண்ணத்தைக்
காக்கவேண்டும்.
நமது உடலில் பிற அவயவங்களோடு ஒருங்கிணையாது
செயல்படும் அவயவங்களைக் கற்பனை செய்து பாருங்களேன்!

6. *செலவினங்களைக் குறைத்துக்கொள்ளுங்கள்*
(Lessen your Consumption.)

☐ தேவையும் பஞ்சமும் நிறைந்த உலகில் வாழ்கிறோம்.
இருப்பவர்களைவிட இல்லாதவர்கள்தான் அதிகம்.
நமது தேவன் ஏழைகளின் தேவனானவர்!

நமது வாழ்க்கைச் செலவினங்களைக் குறைக்காவிடில்
பிறரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது.

- ☐ தியாகமாய்க் கொடுக்காவிடில் —
  அகிலவுலக நற்செய்திப்பணி தடைபடும்.
  வயிறுகளும் தட்டுகளும் வெறுமையாய்த்தானிருக்கும்.

  நமது தேவைக்குமேல் நம்மிடம் இருந்தால்
  அது தேவையுள்ளோருக்குக் கொடுக்கவே —

  யோவானின் செய்தி இன்றைக்கும் பொருந்தும் (லூக் 3:10,11).
  எலியாவின் ஆவியோடு பலத்தோடு வந்தவன் இவன்தான் —
  (லூக் 1:17)

  கிறிஸ்துவின் மறுவருகைக்குமுன் எலியாவின் ஆவியோடு,
  பலத்தோடு செயலாற்றவே சபையைத் தேவன் எழுப்பியுள்ளார்.

7. செயல்பாடுகளைத் துரிதப்படுத்துங்கள் (Hasten your Operation.)

- ☐ இந்தக் கடைசி நாட்களில் ஆவியானவரின் காற்றைச்
  சாதகமாக்கிக் கொள்ளுங்கள் —
  அப் 2:16,17 ... *''நாமத்தைத் தொழுகிறவன் எவனோ''* (வச 21)

  ஆதி 1:2,ல் சொல்லப்பட்டதுபோல, இருளிலிருக்கும்
  மக்கள்மீது இன்று ஆவியானவர் அசைவாடுகிறார்!

  எ.கா.) சாதகக் காற்று இருந்தால்
  விமானப் பயண நேரம் குறையும்!

- ☐ அவசரவுணர்வு உங்களைக் கவ்விப் பிடிக்கட்டும் —
  ''நான் வேலை செய்ய வேண்டும்'' ... இரவு வருகிறது.
  ''நான் அறுவடை செய்யவேண்டும்'' ... விளைந்துவிட்டது.
  ''மற்ற ஆடுகளைக் கொண்டுவரவேண்டும்'' ...
  ஓநாய்கள் பீறிவிடும்.

  - தள்ளிப்போடாதீர்!
  - சோம்பேறியாயிராதீர்!
  - வேகத்தைக் குறைக்காதீர்! உட்கார்ந்து விடாதீர்!

  முன்சென்றுகொண்டேயிருங்கள் ...
  முடிவில் மேலே சென்றுவிடுவீர்கள்!

■ *முடிவுரை*

நற்செய்திப்பணியைத் துரிதமாக்க முழக்கங்கள்: *ஆழப்படுத்துங்கள்! அதிகரியுங்கள்! கூர்மையாக்குங்கள்! விரிவாக்குங்கள்! பலப்படுத்துங்கள்! குறைத்திடுங்கள்! துரிதப்படுத்துங்கள்!*

(98ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

113

கிறிஸ்தவமே தானதர்மம்தான்!

Christianity is Charity!

- ■ சுத்தமான பக்தி என்பதின் வரையறை —
  யாக் 1::27 ... *திக்கற்றோர் ... விதவைகள் ...*

கிறிஸ்தவ வாழ்விலும் பணியிலும் தானதர்மத்துடன்
பின்னிப்பிணைந்துள்ள ஏழு அடிப்படை அனுபவங்கள் —

1. மனந்திரும்புதலும் தானதர்மமும்

- கிறிஸ்தவ வாழ்வின் துவக்கம்.
  லூக் 3:8-11 ... *மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள்*

  இன்றையப் பிரசங்கங்கள்: செய்யத் தவறியவை என்பதைவிட
  செய்யத் தகாதவை எனும் பாவங்களே கண்டிக்கப்படுகின்றன.

  ஆங்கிலிக்கன் சபையின் ஜெபப் புத்தகம்: பாவ அறிக்கை —
  செய்யத்தக்கவைகளைச் செய்யாமல்
  செய்யத்தகாதவைகளையே செய்து வந்தோம்.
  எது முதலில் வருகிறது பாருங்கள்!

- எடுத்துக்காட்டுகள் —
  யோபு 1:8 ... யோபுவைக் குறித்த தேவனது சாட்சி.
  அவனது வழக்கம்: 29:12-17

  தானி 4:27 ... நேபுகாத்நேச்சாரிடம் தானியேல் கூறியது
  லூக் 18:18-22 ... செல்வந்தனான இளம் தலைவன்
  (ஒட்டகம் ... ஊசி ... நுழைவு ... வச 24,25)
  மத் 19:16-24 ... செல்வந்தனான ஒரு வாலிபன்
  லூக் 19:8,9 ... சகேயு ... *இரட்சிப்பு*

2. ஜெபமும் தானதர்மமும்

- ஏசா 1:15 ... ஜெபங்கள் பதிலளிக்கப்படாதது ஏன்?
  :18 ... *உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் ...*
  இந்தப் பாவங்கள் எவை? — வச 16,17

- மலைப் பிரசங்கம் —
  முதலாவது தானதர்மம் (மத் 6:1-4)
  அடுத்துதான் ஜெபம் (:5-8)

அதாவது, கண்கண்ட மனிதனை நேசியாதவன்
கண்காணா மகிபனை நேசிப்பதெப்படி?

இன்று ஜெபமும் தானதர்மமும் என்றில்லாது
ஜெபமும் பொருளாசையும் என்றுதானிருக்கிறது —

மத் 23:14 ... *விதவைகளைக் கொள்ளையடிக்கப் பிரசங்கிமாரின் நீண்ட ஜெபங்கள்*

- அப் 10:44 ... கொர்நேலியு (வச 2,4) ... *ஜெபங்கள் ... தானதர்மம்*
  தேவன் எவ்வளவாய் அவனில் பிரியமாயிருந்தார்!
  ஜெபத்தில் கரம் உயர்த்துங்கள்; தர்மம் செய்ய கரம் நீட்டுங்கள்!

நீங்கள் ஒரு பிரச்னை அல்லது இக்கட்டில் இருந்தால், பிரசங்கிமார் ஒவ்வொருவரிடமாய்ச் செல்வதற்குப் பதிலாக, ஓர் எளியவன், விதவை, நாதியற்றவனுக்கு உதவுங்கள் ...
உங்கள் ஜெபங்கள் கேட்கப்படலாம்!

3. துதியும் தானதர்மமும்

மண்ணகத்திற்குப் பயன்பட முடியாத அளவு
விண்ணகச் சிந்தை வந்துவிட்டதோ?

- எபி 13:15,16 ... *துதிகளின் பலி ... தானதர்மம் எனும் பலி (மறவாதிருங்கள்!)*
  பக்திப் பரவசத்தில் நாம் தேவையிலிருப்போரை
  மறந்துவிடுகிறோம் —
  அதாவது, மக்களது பாடுகள்!
  (ஆசாரியன் & லேவியன் — காயப்பட்டவன்)

  தேவனது ஆசனம் வானத்திலிருந்தாலும்
  அவரது பாதங்கள் பூமியில்தான்! (ஏசா 66:1)

- துதித்து மகிழ்வதிலோ, இன்னொரு இசைக்கருவி வாங்குவதிலோ தவறில்லை; ஆனால் நாம் விதவைகளின் இதயங்களைப் பாடச் செய்யவேண்டும் (யோபு 29:13)

- 2 கொரி 9:11-13 ... துதிக்குத் தானதர்மம் மெருகேற்றுகிறது —
  ''ஸ்தோத்திரம்'' (வச 11,12) | *''மகிமைப்படுத்துதல்''* (வச 13)

தேவனருளிய சொல்லி முடியா ஈவுக்கு முன்னர்
நமது தானதர்மம் எம்மாத்திரம்? (வச 15)

- அப் 2:4 vs. 2:44
  2:4ஐ உலகம் பாராமுகமாயிருக்கலாம்; ஆனால் 2:44ஐ ...!

4. காணிக்கைகளும் தானதர்மமும்

- நீதி 19:17 ... தேவனுக்குக் ''கொடுப்பது'' ... ''கடன் கொடுப்பது''

- மத் 23:23 ... தானதர்மம் இல்லாத தசமபாகம்.
  இயேசுவின் கண்டனம்!
  இன்றையப் பரிசேயத்துவம்.

- இயேசுவின் பணப்பை!
  யோ 13:27-29 ... மிஷனரிப் பணிச் செலவு,
  அத்துடன் எளியவர்க்கு உதவி
  இந்தப் பையிலிருந்துதான் யூதாஸ் திருடிவந்தான் — 12:5,6

- எவ்வளவு கொடுக்கவேண்டும்?
  யோவான் & சகேயு — 50% (லூக் 3:11; 19:8)
  ''உற்சாகமாய்'' (2 கொரி 9:7)
  இதன் சூழமைவு: தானதர்மம் (வச 1,12)

- அனனியா & சப்பீராள் —
  பணமெல்லாம் எளியவர்க்குப் போய்விடுமென்று தெரியும்.
  அப்படியானால் அவர்களது அந்தஸ்து?
  ''வேரருகிலிருந்த கோடரி'' அவர்களைச் சாய்த்தது —
  (லூக் 3:9; அப் 5:1-10; 1 தீமோ 6:10)

5. உபவாசமும் தானதர்மமும்

- ஏசா 58:5-7 ... தேவனுக்கு உகந்த உபவாசம்: 7 கூறுகள் —
  எத்தனையோ உபவாச ஜெபங்கள் நடத்துகிறோமே?
  இந்த வசனப்பகுதியை விளக்குவது யாரோ?

எல்லா மதங்களிலும் உபவாசம் உண்டு; ஆனால் நமதில் வேறுபாடு! கிரஹாம் ஸ்டெயின்ஸ் போல தொழுநோயாளியை எந்தப் பூசாரி கழுவுவான்? அல்லது அன்னை தெரசா போலக் குப்பைத்தொட்டிக் குழந்தைகளைப் பராமரிப்பான்?

- சுகவாழ்வுக்கு வழி (ஏசா 58:8)
- சுகம் பெற ஆண்டவர் தரும் மருந்து — சங் 41:1,3
  செயல்படும் விசுவாசத்திற்குத் திரும்புவோம்!
  ஆதிநிலையடைதல் (Restoration) என்றால் இதுதான்!

6. பிரசங்கிப்பதும் தானதர்மமும்

- லூக் 4:18 ... மேசியாவின் அபிஷேகம் (நாசரேத் ஜெபாலயம்)
  7:22 ... மேசியாவின் ஊழியம் (யோவானிடம் சொல்ல)
- யாக் 2:5 ... *எளியவர், ஆனால் விசுவாசத்தில் செல்வந்தர்*
  1 கொரி 1:27,28 ... *செல்வந்தர் அநேகர் அழைக்கப்படவில்லை*
  மத் 19:23,24 ... *ஒட்டகம் ... ஊசி ...*
- சுகமளிக்கும் கூட்டங்களுக்குச் சுவரொட்டிகள் — லூக் 7:22
  ''மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்'' என்பதை விடுகிறோம், சரி!
  ''தரித்திரர்க்குச் சுவிசேஷம்'' என்பதை விடுவதேனோ?
  கூட்டங்களில் முன்வரிசையில் முடவர், பிச்சைக்காரர்,
  குஷ்டரோகிகள் போன்றோரை அமர்த்துங்கள் —
  அப்பொழுதுதான் அற்புதங்கள் நடக்கும் —
  இப்போதோ செல்வந்தர்தான் முன்வரிசைகளில்!
  இயேசுவின் முதல் சுகமளிப்பு அற்புதம் —
  தெருவில் தொழுநோயாளி
  சபையின் முதல் சுகமளிப்பு அற்புதம் — வாசலில் பிச்சைக்காரன்
  சுகமளிப்புக் கூட்டங்களின் அழைப்புப் பிரதிகளைச்
  செவிட்டுமைப் பள்ளிகள், தொழுநோய் விடுதிகள்,
  முடவர் இல்லங்களில் விநியோயுங்கள்.
- ஊழியக்காரரை நியமிக்குமுன் இவ்வுபதேசம்
  அவர்களுக்குப் போதிக்கப்படவேண்டும் —
  கலா 2:9,10 ... *தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்,*

  முதலாளிகளின் ஆதிக்கம் மற்றும் ஏமாற்றுக்களிலிருந்து
  பின்தங்கிய மக்களை மிஷனரிகள் விடுவிக்கவேண்டும்.
  — *குருடரின் கண்களைத் திறக்கவும்* ... (அறியா மக்கள்)
  — *நுகத்தடிகளை முறிக்கவும்* ... (கொத்தடிமை) — ஏசா 58:6,7
  ''அபிஷேகத்தினால் நுகம் முறியும்'' ... ஏசா 10:27

- அப்படியானால் நாம் ''சமூக சீர்திருத்த'' சுவிசேஷமா
  (Social Gospel) பிரசங்கிக்கிறோம்?
  Dr. ஸ்டான்லி ஜோன்ஸ் (1884-1973):
  ''சமூக நலக் கண்ணோட்டமற்ற ஆன்மீகச் செய்தி உடலற்ற உயிர்;
  ஆன்மீகச் சத்தற்ற சமூக நலச் செய்தி உயிரற்ற உடல்!''

7. இரண்டாம் வருகையும் தானதர்மமும்

- இடதுசாரிகள் & வலதுசாரிகள் (மத் 25:31-46)
- *செல்வந்தருக்குக் **கட்டளை** ... நல்ல அடித்தளம் ... நித்திய ஜீவன்*
  (1 தீமோ 6:17-19)
- அச்செல்வந்தன் நரகம் சென்றதேன்? (லூக் 16:25)
- செல்வந்தருக்கு யாக்கோபு : *பொன் ... வெள்ளி ... கடைசி நாட்கள் ... அக்கினி ...* (யாக் 5:1,3)

■ *முடிவுரை*

ஆம், கிறிஸ்தவமே தானதர்மம்தான்!
(தானதர்மமே கிறிஸ்தவம் என்று நாம் சொல்லவில்லை.)

செயல்படும் விசுவாசத்திற்குத் திரும்புவோம்!

— ஆசாரியனுக்கும் லேவியனுக்கும் விசுவாசம் இருந்தது;
அதற்குரிய செயல்பாடு இல்லை!
— ஒரு நல்ல சமாரியனாயிருங்கள்.

(இவ்வத்தியாயக் குறிப்புகள் முழுக் கட்டுரையாய்
ஆசிரியரது ''நெஞ்சில் நெருப்பு'' எனும் நூலில்
10ஆம் அத்தியாயமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளது.)

■

இத்தலைமுறையை நற்செய்திமயமாக்குவதற்கு
நடைமுறைப் பாடங்கள் ஆசிரியரது ''ஆனந்த அறுவடை''
எனும் நூலில் தரப்பட்டுள்ளன.

G

114

மகிமையுள்ள சபை

A Glorious Church

முகவுரை

ஆதிநிலையேகும் நாட்களில் நாம் வாழ்கிறோம் —
அப் 3:19-21 ... *புத்துயிர்க் காலம்... மனந்திரும்பிக் குணப்படுங்கள்*
15:15-17 ... *விழுந்த கூடாரத்தைச் சீர்ப்படுத்தி ... புறவினத்தார்*
அதாவது, எழுப்புதலும் நற்செய்தியறிவிப்பும்

ஆதிநிலையடைதல் படிப்படியாய் நடந்து வருகிறது —
லூத்தர் — நீதிமானாக்கப்படுதல்
வெஸ்லி — பரிசுத்தமாக்கப்படுதல்
இப்பொழுது — மகிமைப்படுத்தப்படுதல்

''தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்கள்'' (அப் 3:18; 15:15)

அ) நேரடியான தீர்க்கதரிசனம் மூலம்
ஆப 3:2,3 ... *உயிர்ப்பியும் ... கோபம் ... மகிமை*
ஆகாய் 2:7,9 ... *ஆலயம் ... மகிமை ... பிந்திய மகிமை*

ஆ) சரித்திர நிகழ்வுகள் மூலம்
2 நாளா 5:12-14 ... சாலொமோனின் ஆலயம்
120 ஆசாரியர் ... நிற்க முடியவில்லை —
பிரதிநிதித்துவ எண் —
(12 கோத்திரங்கள் / 12 அப்போஸ்தலர் / 120 சீடர்)
2 நாளா 7:1 ... *அக்கினி ... மகிமை ...*

இ) தரிசனங்கள் மூலம்
எசேக் 43:4,5 ... *மகிமை ... ஆலயம்*
44:4 ... *ஆலயம் ... மகிமை ...*
பழைய ஏற்பாடு: தேவாலயம்
புதிய ஏற்பாடு: திருச்சபை

தேவனது முதலும் முடிவுமான தீர்மானம் — எபே 5:27
''மகிமையுள்ள சபை''

''மகிமை'' என்றால் என்ன?

பழைய ஏற்பாட்டில் — மேகம், அக்கினி முதலியன.
அது கற்களினாலான கட்டிடங்கள் மேல்;
இப்பொழுதோ **ஜீவனுள்ள** கற்களான மக்கள்மீது.
பேதுரு — 1 பேது 2:5 ... *ஜீவனுள்ள கற்கள் ... ஆசாரியக் கூட்டம்*
பவுல் — எபே 2:19-22 ... *பரிசுத்த ஆலயம் ... அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் அடித்தளம்*

அதாவது, தீர்க்கதரிசிகள் ''கண்டது.''
அப்போஸ்தலர் ''எழுதியது'' —

அ) ஏசாயா — பழைய ஏற்பாட்டின் பவுல்
ஆ) பவுல் — புதிய ஏற்பாட்டின் ஏசாயா

ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் பவுலுக்கு அலாதிப் பிரியம் —

எ.கா.) ரோ 9:27 ... *மீதியாயிருப்பவர் ...*
:29 ... *மீதியான சந்ததி ...*
:33 ... *சீயோனில் இடறல் கல்*
10:15 ... *அழகிய பாதங்கள்*
:16 ... *நாங்கள் சொன்னதை விசுவாசித்தது யார்?*
:20,21 ... *என்னைத் தேடாதவர்களால் கண்டறியப்பட்டேன்*

நாம் ஒப்பிட்டுப் படிப்பதற்காக
ஏசாயா 60 vs. ***எபேசியர் 1-6***
ஏசாயாவின் புத்தகத்தைக் குட்டி பைபிள் எனலாம்.
எபேசியர் — புதிய ஏற்பாட்டின் எவரெஸ்டு.
(தீர்க்கதரிசனச் சித்திரம் vs. அப்போஸ்தலக் கட்டிடக் கலை)

மகிமையுள்ள சபை எது?

1. நீதியுள்ள சபை (A Righteous Church)

ஏசா 60:14 ... *இஸ்ரவேலின் பரிசுத்தர்* (தேவன்)
:17 ... *கண்காணிகள் நீதியுள்ளவர்கள்* (தலைவர்கள்)
:21 ... *ஜனங்கள் நீதிமான்கள் (''எல்லாரும்'')*
எபே 5:26,27 ... *பரிசுத்தம் ... கறைதிரையின்மை ... மகிமை*
4:19-24 ... *உள்ளத்தில் நீதி (புத்தி, மனது,* வச 18)

அ) அசுத்தம் (வச 19,22; 5:3)
ஆ) பேராசை (வச 19; 5:3)

4:25-32 ... வெளியுலகில் நீதி
அதாவது, சக மனிதரோடு *(பிறர்* ... வச 25)
அ) பொய் (வச 25)
ஆ) கோபம் (வச 26)
இ) திருட்டு (வச 28)
ஈ) கெட்ட வார்த்தை (வச 29)

இதுதான் *''மெய்யான பரிசுத்தம்''* (வச 24)

''நீதியில்'' எழுப்புதலே மாபெரும் எழுப்புதல் (ஓசி 10:12)

எ.கா.) வெஸ்லி / பின்னி ... நாடுகளின் சன்மார்க்க நிலை

பிரசங்கியுங்கள்: *''இறையரசு உங்களிடம் வந்திருக்கிறது!''*
அது முதலாவது *''நீதி''* தான்! (ரோ 14:17)
முதலாவது இறையரசையும் அவரது *''நீதியையும்'' ...* (மத் 6:33)

2. மகிழ்ந்திருக்கும் சபை (A Rejoicing Church)

ஏசா 60:5 ... *இருதயம் பூரிக்கும் ...*
:6 ... *கர்த்தரின் துதிகள்*
:15 ... *தலைமுறை தலைமுறையாய் மகிழ்ச்சி*
:18 ... *துதியின் வாசல்கள்*
:20 ... *துக்க நாட்கள் முடிந்துபோகும்.*
எபே 5:18-20 ... *ஆவியின் நிறைவு... சங்கீதம்... கீர்த்தனை...*

நமக்கு ஏன் எழுப்புதல் வேண்டும்? —

சங் 85:6 ... *உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்க ...*
யோவேல் 1:16 ... *சந்தோஷமும் மகிழ்ச்சியும் போய்விட்டன.*

எழுப்புதல்தான் மகிழ்ச்சியைத் திரும்பக் கொண்டுவரும் —

யோவேல் 2:23 ... *களிகூருங்கள் ... முன்மாரி ... பின்மாரி*
ஆப 3:2,17-19 ... தீர்க்கனின் மனப்பான்மையில் மாற்றம் ...
''கேள்விகள்'' எல்லாம் ''தொழுகையாய்'' மாறின (1:3,13,14)

இதுதான் ''உண்மையான'' மகிழ்ச்சி!

பரவசப்படுத்தப்பட்டதால் அல்ல, தானாக உருவெடுப்பது!

ஆனந்தம் ... கொண்டாட்டம் ...

தேவனுடைய ராஜ்யம் மகிழ்ச்சி (ரோ 14:17)

3. *இளைப்பாறுதலான சபை* (A Restful Church)

ஏசா 60:8 ... *புறாக்கள்*

:17 ... *கண்காணிகள் சமாதானமுள்ளவர்.*

:18 ... *கொடுமை, அழிவு, நாசம் இல்லை*

எபே 1:2 / 6:23 ... *உங்களுக்குச் சமாதானம் ...*

2:14-17 ... *அவரே நமது சமாதான காரணராகி ...*

4:3 ... *சமாதானத்தின் கட்டு*

(ஆவியின் ஒருமை, வச 3 vs. விசுவாச ஒருமைப்பாடு, வச 11)

6:15 ... *சமாதானத்தின் சுவிசேஷம்*

தெய்வீக **ஒழுங்கு** வருமானால் அமைதியும் அமரிக்கையும் —

- ஒருவருக்கொருவர் ... எபே 5:21
- தம்பதியருக்கிடையே ... 5:22,23
- பெற்றோர், பிள்ளைகள் ... 6:1-4
- எஜமான்கள், வேலைக்காரர் ... 6:5-9

எழுப்புதலும் ஆதிநிலையேகுதலும் —

எலியாவின் ஊழியம் (திருப்பிக் கொண்டுவருதல்) —

மல் 4:5,6 ... *பிதாக்கள், பிள்ளைகள்*

மத் 17:10-13 ... யோவான் ... **எல்லாவற்றையும்** *சீர்ப்படுத்துவான்.*

சீர்திருத்தமும் ஆதிநிலையேகுதலும் எதிர்க்கப்படும் — மத் 17:12

திருமுழுக்கினன் யோவான் . . . முதலாம் வருகைக்கு

பரிசுத்த ஆவியானவர் ... இரண்டாம் வருகைக்கு

இன்றைய உலகு ...

குழப்பங்கள், கலவரங்கள், ...

தீவிரவாதம், போராட்டம், ...

மகிமையான சபைதான் நல்ல மாதிரியாயிருக்கும் —

- *''எல்லாரும்* ***அறியும்படி****... ஒருவரிலொருவர் அன்பு''* (யோ 13:35)
- *''உலகம்* ***விசுவாசிக்கும்படி*** *... அவர்கள் ஒன்றாயிருக்கவும்''* (யோ 17:21)

இதுதான் உண்மையான *''மகிமை''* (வச 22)

இதற்கு முன்ருசியாய்ப் பெந்தெகொஸ்தே அமைந்தது —

அப் 2:43,44 ... *பயம்*

4:32,33 ... *மிகுந்த வல்லமை*

தேவனுடைய ராஜ்யம் ... ''சமாதானம்'' (ரோ 14:17)

4. *அரசாளும் சபை* (A Reigning Church)

ஏசா 60:12 ... கீழ்ப்படியாத நாடுகள் *பாழாகும்.*

:14 ... *குனிந்து ... பணிந்து ...*

:22 ... *பலத்த ஜாதி*

எபே 1:3 ... *உன்னதங்களில் உட்கார்ந்து ...*

:20-22 ... கிறிஸ்துவும் சபையும் சேர்ந்து ஆளுகை

4:7,8 ... பரமேறுதலையடுத்து *வரங்கள்*

6:10-12 ... ஆன்மீகப் போராட்டம்

விண்ணகத்தின் அதிகாரத்தை மண்ணுலகில் சபை காட்ட வேண்டும்—

மத் 18:15-18 ... மண்ணுலகில் கிறிஸ்துவின் அதிகாரத்தைக் காட்டுவது திருச்சபையே *(இரண்டு மூன்று பேர்)*

திருச்சபையின் செய்தி —

''உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார்'' (ஏசா 52:7)

யோவான், இயேசு, பவுல்: *இறையரசைப்* பிரசங்கித்தனர்.

திருச்சபையானது உலகத்தில் தாக்கம் ஏற்படுத்தவேண்டும்.

நாட்டின் காரியங்களுக்குச் சபை கலந்தாலோசிக்கப்படவேண்டும்:

எ.கா.) எதற்கெல்லாம் தண்டனைத் தீர்ப்பு (கட்டு),

எதற்கெல்லாம் மன்னிப்பு (அவிழ்ப்பு)

எ.கா.) யோசேப்பு (ஆதி 41:14-16)
— பார்வோனின் சொப்பனம்

தானியேல் (தானி 4:18)
— நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

இந்தியத் தலைவர்களோ ஜோசியர்களிடமும், சாமியார்களிடமும் செல்கின்றனர்.

5. *கனி கொடுக்கும் சபை* (Reproducing Church)

ஏசா 60:4 ... *தூரத்திலிருந்து குமாரர், குமாரத்திகள் ...*
:11 ... *வாசல் இரவும் பகலும் திறந்திருக்கும்*
:18 ... *இரட்சிப்பின் மதில்கள்*
:22 ... *சிறியவன் ஆயிரமாவான்!*

வர்த்திக்கச் செய்வதே இறைத்திட்டம் —
எபே 2:17 ... *தூரத்திலுள்ளவருக்குப் பிரசங்கிக்கப்பட்டது*
பெந்தெகொஸ்தேயன்று பேதுரு பேசியதுபோல.
3:8 ... *புறவினத்தாருக்குச் சுவிசேஷம் அறிவிக்க ...*
6:19,20 ... *தைரியமாய்ப் பேச ...*

''நெருக்கமான வாசல்'' vs. ''குறுகிய மனது!''

விசுவாசிகளுக்கெல்லாம் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு இறைவாக்கு —

நட்சத்திரங்கள்	(ஆதி 15:5)
கடற்கரை மணல்	(22:17)
பூமியின் தூள்	(13:16)

இறையரசு: *கடுகுவிதை* | மத் 13:31-33
புளித்த மாவு

எளிய *துவக்கம்*, ஆனால் மகத்தான ***வளர்ச்சி!***
பெந்தெகொஸ்தே எழுப்புதல்: 3000 ... 5000 ... திரளானோர்

நற்செய்தியறிவியாவிடில் உறைந்து போவோம்!
Evangelize or Fossilize!
உலர்ந்த எலும்புகள் ... எழும்பிய சேனை (எசேக் 37:1-10)

6. *வளமான சபை* (A Resourceful Church)

ஏசா 60:6 ... *ஒட்டகங்கள், பொன், தூபவர்க்கம்*
:9 ... *கப்பல்கள், வெள்ளி ...*
:13 ... *விருட்சங்கள் ... மரங்கள் ...*
:17 ... *வெண்கலத்துக்குப் பதிலாகப் பொன் ...*
இரும்புக்குப் பதிலாக வெள்ளி ...
எபே 1:3 ... *ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்*
:18 ... *மகிமையின் ஐசுவரியம்*
:23 ... *நிரப்புகிறவரின் நிறைவு*
3:8 ... *அளவற்ற செல்வம்*
:19,20 ... *தேவனுடைய பரிபூரணம் >> நமது அறிவு*
4:7,8 ... *மனிதருக்கு வரங்கள்*

எழுப்புதல் செய்வது ...

தீர்க்கதரிசனச் சித்திரம் —
யோவேல் 3:18 ... *திராட்சரசம் ... பால் ... ஆறுகள் ...*

இன்றையச் சபையோ —

வெளி 3:17,18 (லவோதிக்கேயர்)
— பொருளாதாரச் செழிப்பு, ஆனால் ஆன்மீகத் தரித்திரம்
(நிறைவு) (நொடிப்பு)

திருவசனம் இல்லாத பஞ்சம்!
சத்தற்ற பாடல்கள் ... சத்தற்ற பிரசங்கங்கள் ...

7. *பிரகாசிக்கும் சபை* (A Radiant Church)

ஏசா 60:1 ... *எழும்பு ... உன் ஒளி வந்தது!*
:3 ... *உன் ஒளியிடம் புறவினத்தார் ... ராஜாக்கள்*
:5 ... *அதைக் கண்டு ஓடிவருவாய் ...*
:15 ... *நித்திய மாட்சிமை*
:19,20 ... *கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சம்*
எபே 5:14 ... *விழித்து எழுந்திரு ... பிரகாசிப்பிப்பார்*

அனல்மூட்ட ஓர் அழைப்பு!
தாம் செய்ய வேண்டியதைத் தேவன் செய்வார்;
நமது பங்கை நாம் நிறைவேற்றுவோமா?
எ.கா.) *எழுந்து நட!* (அப் 3)

40 ஆண்டுகள் வனாந்திரத்தில் கிடந்தது போதும்! (அப் 4:22)

■ ***முடிவுரை***

□ மகிமையின் இந்த 7 அம்சங்களும் வானவில்லின் 7 நிறங்களுக்கு ஒப்புமை —

சிவப்பு	— நீதி	(Righteousness)
ஆரஞ்சு	— கனி நிறைவு	(Reproduction)
மஞ்சள்	— பிரகாசம்	(Radiance)
பச்சை	— வளம்	(Resourcefulness)
நீலம்	— மகிழ்ச்சி (உன்னதம்)	(Rejoicing)
கருநீலம்	— இளைப்பாறுதல் (இரவு)	(Restfulness)
ஊதா	— ஆளுகை	(Royal / Reigning)

□ இவையெல்லாவற்றிற்கும் எதிராய்ப் பிசாசு செயல்படுகிறான் — வெளி 2 & 3

1. நீதி	x	யேசபேல் (வெளி 2:20)
2. மகிழ்ச்சி	x	சிறை (2:10)
3. இளைப்பாறுதல்	x	சாத்தானின் கூட்டம் (2:9; 3:9)
4. ஆளுகை	x	சாத்தானின் சிங்காசனம் (2:13)
5. வளம்	x	திறந்த வாசலை மூட முயற்சி (3:7,8,9)
6. கனி நிறைவு	x	பிலேயாமின் வழி (2:14)
7. பிரகாசம்	x	குருட்டுத்தனம் (3:17,18)

— முதலாம் கடிதம் எபேசு சபைக்குத்தான் (வெளி 2:1-7)
— எபேசியர் நிருபம் போராட்டம் பற்றிப் பேசி முடிகிறது.

திருச்சபை முன்நிறுத்தப்படப்போகும் மாபெரும் நாள் —
யூதா 24,25 ... *மாசற்றவர்களாய் ...*
வெளி 19:7 ... *மகிமை ... ஆயத்தம் ... மகிமை*

முடிவில், தேவனே திருச்சபையின் மகிமையாகிவிடுகிறார்! (ஏசா 60:19)

115

மிஷனரிச் சபையின் சிறப்பம்சங்கள்

The Hallmarks of a Missionary Church

(சபை மேய்ப்பர்களுக்கும், வேதாகமக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்ட செய்தி)

முகவுரை

சில மிஷனரிகளைத் தாங்குவது, வருடாந்திர மிஷனரிக் கன்வென்ஷன் நடத்துவது ஒரு சபையை மிஷனரிச் சபையாக்கிவிடாது.

மிஷனரிச் சபைக்கு இருக்கவேண்டிய சிறப்பம்சங்களை அந்தியோகியா சபையை விளக்கும் அப் 13இல் காணலாம்.

வேதப்பகுதி: **அப்போஸ்தலர் 13:1-4**

1. வேத அறிவு (Scripture Knowledge)

''... *போதகர்கள் ...*'' (வச 1)

இதுவே மிஷனரிச் சிந்தைக்கு அடித்தளம்.

எழுதப்பட்டிருப்பதிலிருந்துதான் யுகங்களைக் குறித்த இறைத்திட்டத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

மிஷனரி இயல் (Missiology)
அ) இறையியல் — தேவன் ஒரு மிஷனரியை அனுப்பினார்.
ஆ) கிறிஸ்தியல் — கிறிஸ்து ஒரு மிஷனரியாய் வந்தார்.
இ) ஆவியியல் — ஆவியானவர் மிஷனரிகளை அனுப்புகிறார்.

இறையியல் — ''தேவனை அறிவது''
மிஷனரி இயல் — ''தேவனை அறிவிப்பது''

முதல் இயலின் வெளிப்பாடே இரண்டாம் இயல்.
உங்கள் மாணவரையும் விசுவாசிகளையும் ''தேவனோடு நடக்கப்'' பழக்குங்கள்.
எனவேதான் நமக்கு ஓர் எழுப்புதல் தேவை (சங் 51:12,13)

''பைபிளைப்'' படிப்பதைவிட ''பைபிளைப்பற்றிப்'' படிப்பதிலேயே வேதாகமக் கல்லூரிகளில் அதிக நேரம் செலவிடப்படுகிறது.

புதிய ஏற்பாடு முழுவதும் மிஷனரிகளாலேயே எழுதப்பட்டது.

- இறையியல் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் மாணவர் சிலரது கேள்விகள்:
  — நரகம் என்று ஒன்று இருக்கிறதா?
  — கிறிஸ்தற்று மரிப்போருக்கு நித்திய இழப்புதானா?

பட்டம் பெறும் மாணவருக்கு வில்லியம் பூத் சொன்னது —
''நரகத்தைக் குறித்த தரிசனம் உங்களுக்கு இருக்கவேண்டும்!''

2. *தீர்க்கதரிசனப் பார்வை* (Prophetic Insight)

''... *தீர்க்கதரிசிகள்* ...'' (வச 1)

திருமறையிலிருந்து வரும் ஆலோசனைகளும் புள்ளி விபரத் தகவல்களும் ஆவியானவரின் நிறைவோடு தரப்படவேண்டும்.

காலத்தைத் தேவனது கண்ணோட்டத்தில் பார்த்து, சரியான திசையில் நகரத் தீர்க்கதரிசன ஊழியம் இன்றியமையாதது (அப் 15:32)

மேய்ப்பர்களுக்கும் பேராசிரியர்களுக்கும்
தங்கள் ஊழியத்தில் தீர்க்கதரிசனக் கூர்மை இருக்கவேண்டும்;
இல்லையேல் தரித்திரம்தான்.
இந்த வரத்தை விரும்பி ஜெபத்தில் நாடவேண்டும்.
''*விரும்புங்கள்*'' என்று பெயரிடப்பட்ட ஒரே வரம் —
1 கொரி 14:1

இவ்விதத் தீர்க்கதரிசனச் சத்தம் உள்ளூர்ச் சபையிலும் வேதக் கல்லூரியிலுமேயிருந்து எப்பொழுதும் வந்துவிடாது.

திருச்சபைக்குப் பேசும் இவ்வித வரமுள்ளோரைத் தேடுங்கள் —

''*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறது* ...'' (வெளி 2:3)
பிரசங்கிமார் கொடுப்பது மருந்து;
தீர்க்கதரிசிகள் செய்வது அறுவை சிகிச்சை!

ஓர் எழுப்புதலுக்காய் மன்றாடுங்கள் —

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போதுதான் தீர்க்கதரிசன வார்த்தைகள் வெளிவரும் —

அப் 2:17 ... *நான் ஊற்றுவேன் ... தீர்க்கதரிசனம் சொல்லுவர்...*

பல மிஷனரி இயக்கங்கள் எழுப்புதலில் பிறந்தன /
அதாவது, தேவனிடமிருந்து புதிய சந்திப்பு ... ''*புத்துயிர்க் காலங்கள்*''

எ.கா.) FMPB (VBS எழுப்புதல்)
BYM (கல்லூரி மாணவரிடையே எழுப்புதல்)

3. *துதியுடையணிந்த தலைவர்கள்* (Worshipful Leadership)

''*கர்த்தருக்கு ஆராதனை செய்துகொண்டிருக்கையில்*'' (வச 2).
திட்டங்களையல்ல, தேவனையே மையப்படுத்தும் ஊழியம்.
பணியை முக்கியப்படுத்தினாலும்,
தேவனைத்தான் மையப்படுத்தவேண்டும்.

தலைவர்களாகிய நாம் மக்களை ஆராதிக்கச் சொல்லிவிட்டு,
நாம் வேலை செய்யப் போய்விடுகிறோம்.
வேலையைத்தான் கும்பிடுகிறோம்.

''***ஆதி** அன்பு*'' போயிற்று —
எபேசு — ''**செயல்கள்** நிறைந்த சபை'' (வெளி 2:2-4)

ஆராதனையின் ஆவியைப் பவுல் மிஷனரிப் பணிக்குள் எடுத்துச் சென்றார் —

ரோ 15:9-11

''*அவர்கள் உபவாசித்து* ...'' — ஒரு தேவைக்காகவோ பிரச்னைக் காகவோ அல்ல, ''*கர்த்தருக்கு*'' *ஆராதனை செய்ய!*

ஊழியர்கள், தலைவர்கள் மீது துதியின் வாசைன வீசவேண்டும்.
இல்லையேல், உங்கள் கல்லூரி கல்விப் பாலைவனமாகிவிடும்!

4. *கீழ்ப்படிதலின் ஆவி* (Obedient Spirit)

- கவனமாய்க் கேட்டார்கள் — ''*ஆவியானவர் சொன்னார்*'' (வச 2)
- கிரயம் மிகுந்த கீழ்ப்படிதல் — ''*பர்னபா & சவுல்*'' (வச 2)
  அந்த ஐவர் குழுவில் இவ்விருவர் இரு கண்கள் போன்றவர்கள்.
- உடனடிக் கீழ்ப்படிதல் — ''*அப்பொழுது* ...'' (வச 2,3)

கீழ்ப்படிதலானது கேட்டும் பார்த்தும் கற்கவேண்டியது.
சபைகளிலும் வேதக் கல்லூரிகளிலும் மிஷனரிக் கீழ்ப்படிதல் அபூர்வமாகி வருகிறது;
ஏனெனில் நமது மக்களுக்கு நல்ல முன்மாதிரிகள் இல்லையே —

பாஸ்டர்களும் பேராசிரியர்களும் முன்மாதிரிகளாக வேண்டும்.

- பணிக்கள அனுபவமே இல்லாது மிஷனரி இயலில் அறிவர் பட்டம் (Ph.D.) பெற்றுள்ள பேராசிரியர் உண்டு.

  அவர்களது போதனையில் என்னதான் சவால் இருக்கும்?

  ஒவ்வொரு மேய்ப்பரும், பேராசிரியரும் முன்னோடி மிஷனரிப் பணிக்களமொன்றில் ஒரு சில ஆண்டுகளாவது செலவிடவேண்டும் —

  அவர்களுக்கு விடுப்பு கொடுத்து வட அமெரிக்காவிற்கு அனுப்புவதைவிட வட இந்தியாவுக்கு அனுப்புங்கள்.

  நான் கட்டிடப் பொறியியல் தெரிந்தெடுத்தது ஏன்? — PWDஇல் பொறியியலராயிருந்த ஒரு பேராசிரியர் ''கட்டிடப் பொருட்கள்'' என்ற பாடத்தை அவ்வளவு அழகாய் நடத்தினார்!

  ''முன்னால் சென்று'' நடத்தும் தலைவர்கள் தேவை — *''ஆடுகள் அவர்களுக்குப் பின்செல்லும்''* (யோ 10:4)

- மிஷனரிச் சரிதைகளைக் கட்டாயப் பாடமாக்குங்கள்.
- நேர்த்தியான மாற்றுக் கலாச்சார மிஷனரிகளை அழைத்து ஓரிரு மாதங்கள் கல்லூரி வளாகத்தில் மாணவர்களோடு பழகவிடுங்கள்.
- எளிய, தியாக வாழ்க்கை முறையைக் கற்பியுங்கள் —

  புத்தகங்கள் — *"Freedom of Simplicity"* *"Celebration of Discipline"* by Richard Foster

அடிக்கடி அமெரிக்கா பயணிப்பது, அங்கேயே ஒருவரை மணப்பது, ''அகிலவுலக'' ஊழியம் என்று அங்கேயே தங்கிவிடுவதும்தான் நமது மாணவர்க்கு நாம் காட்டும் மாதிரியா?
இதற்குத் தாய்லாந்துக்கோ இந்தோனேசியாவுக்கோ போகலாமே!

- பொருளாதார நோக்கு: மிஷனரிக் கீழ்ப்படிதலுக்கு முதல் எதிரி.

  சாக்குப்போக்குகள்: மண் / பூண் / பெண் (லூக் 14:18,19,20)

ஒரு காலத்தில் இந்திய மிஷனரிப் பணியில் கேரளம் முதலிடம் வகித்தது. இன்றோ செல்வப் பெருக்கினால் எவ்வளவோ பின்னால் போயிற்று. இவற்றையெல்லாம் குறிப்பிட்டுப் பேசுங்கள்.

- மிஷனரி இயக்கங்களின் நிர்வாகிகளே, பணிக்களம் செல்லுங்கள். இயேசு அனுப்பினார் — அத்துடன் — சென்றார் (மத் 10:5; 11:1; லூக் 10:1)

  உங்கள் மீது *''வயலின் வாசனை''* வீசட்டும் (ஆதி 27:27)

5. தேவன்மீது சார்பு (Dependence on God)

''உபவாசித்து ஜெபித்து ...'' (வச 3)

நமது இயலாமையையும் தேவனது சர்வ வல்லமையையும் அறிக்கையிடுவதே ஜெபம்.

''உபவாசம்'' (வச 2,3) — எவ்வளவு கடுமை பாருங்கள்!

உபவாசம் தேவையா என்ற விவாதம் தேவையில்லை.
கிறிஸ்து உபவாசித்தார்; ஆதிச் சபை உபவாசித்தது;
நாமும் உபவாசிப்போம்.

சபையில் சிறப்பு ஜெபங்களையும் உபவாச ஜெபங்களையும் வார நாட்களில் நடத்துவானேன்?
இவற்றை ஞாயிறு காலையில் நடத்தினாலென்ன?

பாஸ்டர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஜெப வாழ்க்கைக்குமேல் மக்களது, மாணவர்களது, ஜெப வாழ்க்கை உயராது.

- எந்த வேதக் கல்லூரியில் ''ஜெபம்'' கற்பிக்கப்படுகிறது?
  இயேசுவிடம் சீடர்: *''எங்களுக்கு ஜெபிக்கக் கற்பியும்''* (லூக் 11:1)
  ஆனால் பிரசங்கிக்க (homiletics) கற்பிக்கிறோம்.
  எந்தப் பயிற்சிக்கும் கிரேக்கச் சொல் இல்லையேல் அதை மதிக்கமாட்டோம்!

☐ *''ஆகையால் செல்லுங்கள்''* என்பதற்குமுன் *''ஆகையால் ஜெபியுங்கள்''* (மத் 9:38; 28:19)

☐ *''பிரதானமாய் ஜெபம்''* (1 தீமோ 2:1-4)

6. *சபையின் பொறுப்பு* (Church Responsibility)

''அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்'' (வச 3)

ஏற்கனவே அவர்கள் ஊழியர்தான் —
இப்பொழுது அவர்களை அனுப்பிவைத்துப் பொறுப்பேற்றார்கள்.

மிஷனரிப் ''பிரதிஷ்டை'' ஆராதனை —

இன்று பெரும்பாலும் ''பொறுப்பேற்பு'' ஆராதனைதான்!
பெற்றெடுக்கவில்லை, தத்தெடுக்கிறார்கள்.

இதுவே இன்றைய வழக்கமாகிவிட்டது வருந்துதற்குரியது —
தலைவர்களின் பிரதான கரிசனை பணம் திரட்டுவதாகிவிட்டதே!

விளைவு: பணம் மிகுதி; ஆள் குறைவு!

மிஷனரிகளை உருவாக்க, பெற்றெடுக்க,
சபைகளுக்குச் சவால் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

- தனியாள் ஆத்துமாதாயப்பணியைப் பாஸ்டர்களும் பேராசிரியர்களும் சொல்லிக் கொடுக்கவேண்டும் —
  தனியாள் ஆத்துமாதாயம் → அயலக நற்செய்திப்பணி → தொலைவிட மிஷனரிப்பணி

(அப் 1:8) ... அனைத்து விசுவாசிகளும் தீர்க்கதரிசிகளே!
சுவிசேஷங்களில் ''போங்கள்'' என்ற கட்டளை 4 முறை வருகிறது—
மாற் 5:18,19; லூக் 14:21,23; மத் 21:2; மாற் 16:15

நான் ஒரு பெந்தெகொஸ்தே சபைக்குத் தவறாது ஈராண்டுகள் சென்றேன்; ஆத்துமாதாயம்பற்றிய பிரசங்கம் ஒன்றுகூடக் கேட்கவில்லை!

மாதத்திற்கு ஒரு முறையாவது ஆத்துமாதாயம்பற்றிப் பிரசங்கியுங்கள். ''கிறிஸ்தவரல்லாதவரைக் கிறிஸ்துவிடம் நடத்துவதெப்படி?'' எனப் போதியுங்கள். ஒவ்வொருவரும் ஒரு நபரையாவது கொண்டு வரவேண்டுமென்று ஆலயக் கதவை ஒரு மாதம் பூட்டுங்கள்.

கிறிஸ்தவரல்லாத ஒருவரையாவது கர்த்தரிடம் கொண்டுவர மாணவருக்கு நடைமுறை வேலை கொடுங்கள்.

எபிரெயு, கிரேக்கு (Hebrew, Greek) மொழிகளைப் படிப்பதற்குப் பதிலாக இந்தி, குஜராத்தி (Hindi, Gujarati) பயின்றாலென்ன?

- பாஸ்டர்மாரும் மிஷனரிகளாய்ப் போக ஊக்குவிக்க வேண்டும் —

எ.கா.) பர்னபா & சவுல் ... போதகர்கள் → மிஷனரிகள்
ஏற்கனவே *''அழைப்பு''* இருந்திருக்கிறது (வச 2)

அழைக்கப்பட்டோர் அநேகர்;
கீழ்ப்படிந்து போகத் தெரிந்துகொண்டோர் சிலர்!
மேய்ப்பர் அழைப்பு — *மேய்ப்பனில்லா ஆடுகள்* (மத் 9:36)
தொலைந்த ஓர் ஆடு (லூக் 15:4-7)
மிஷனரி தரிசனம் — *வேறே ஆடுகளும் எனக்குண்டு* (யோ 10:16)

7. *ஆவியானவருடன் கூட்டுறவு* (Spirit of Partnership)

''அவர்கள் அனுப்பினார்கள்'' (வச 3)
''பரிசுத்த ஆவியானவரால் அனுப்பப்பட்டனர்'' (வச 4)

வேலை இமயம் போன்றது; ஆனால் கர்த்தர் வார்த்தை:
''பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் அல்ல, என் ஆவியினாலேயே'' (சக 4:6)

அதே 13ஆம் அத்தியாயத்தில்,
ஆவியானவர் இரு முறை சொல்லப்பட்டுள்ளார் —
வச 9 — பிசாசின் வல்லமையை எதிர்கொள்ள
வச 52 — சீடர்களை மகிழ்ச்சியோடு எழுப்பிவிட

அப் 1:8 ... இயேசுவின் எழுதப்பட்ட கடைசி வார்த்தைகள்

- கிறிஸ்தவத்தில் ஆவியானவர் சம்பந்தப்பட்ட இரு வகுப்பினர் —

அ) ''பெற்றுக்கொள்வதை'' வலியுறுத்தி,
''புறப்பட்டுச் செல்வதை'' விட்டுவிடுவோர்.

ஆ) ''புறப்பட்டுச் செல்வதை'' வலியுறுத்தி,
''பெற்றுக்கொள்வதை'' விட்டுவிடுவோர்.

(Receiving vs. Reaching)

முதற் குழு : பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை மறந்தது.
அடுத்த குழு: இறைத்திட்டத்தில் பெந்தெகொஸ்தேயை மறந்தது.

116

எது ‘மெகா’ சபை?

What is a Mega Church?

முகவுரை

- இவ்வுலகில் எல்லாமே ‘‘மெகாவாக’’ (பிரமாண்டமாக) இருக்கவே இன்றையச் சமுதாயம் விரும்புகிறது —
  பிரமாண்ட நிகழ்ச்சி
  பிரமாண்ட கதைத் தொடர்
  மெகா-பைட் (கணினி)

திருச்சபையோ ‘மினி’’ அல்லது ‘மிடி’ என்பதிலேயே திருப்தியடைந்துவிடுகிறது.
‘‘சிறுமந்தை’’ எனும் மனப்பான்மை.
‘‘இரண்டு மூன்று பேர்’’ எனும் சிந்தை.
சிறுபான்மையினர் எனும் மனது. (Minority mentality)

ஆனால் ஆதிநிலையடைதல் (எழுப்புதல்) குறித்துத் திருவாக்கு ‘‘பெரிய’’ (= மெகா) காரியங்களுக்கே —
யோவேல் 2:21 ... *கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.*
இது *‘‘பின்மாரியைத்’’* தொடர்ந்து வரும் (வச 23)

எல்லாமே திரும்பப் பெறுவோமாம் —
வச 25 ... *வெட்டுக்கிளி பட்சித்ததைத் திரும்பத் தருவேன்*

இந்தப் பின்மாரிதான் பெந்தெகொஸ்தே அருள்மாரி (வச 28)
‘‘நான் என் ஆவியை ஊற்றுவேன்’’

இதைத்தான் பெந்தெகொஸ்தேயன்று பேதுரு மேற்கோள் காட்டினார்.

பெந்தெகொஸ்தேயை அடுத்துச் சபை எங்கோ நின்று விட்டது —
சில சபைகள் கல்வாரியோடு நின்றுவிட்டன ...
சில சபைகள் ஈஸ்டரோடு நின்றுவிட்டன ...
சில சபைகள் பெந்தெகொஸ்தேயோடு நின்றுவிட்டன ...

இன்றிருக்கும் சபை அன்றிருந்த சபையுமல்ல;
இருக்கவேண்டிய சபையுமல்ல!

- ஆதிச்சபை ஒரு ‘‘மெகா’’ சபை —
  ‘‘மெகா’’ என்றால் அது அளவை மட்டும் குறிக்காது;
  அது 10 காரியங்களை உள்ளடக்கியது

  ஒவ்வொன்றும் பிரமாண்டமானது (= mega).

அவற்றை நடபடிகள் புத்தகத்தில் பார்ப்போம்:

1. மிகுந்த பலம் (Mega Power)

4:38 ... உயிர்த்தெழுதல் குறித்து மிகுந்த பலமாய்ச் சாட்சி.
சிலுவையிலறையப்பட்டது வரை உலகம் நம்புகிறது;
அதற்கு அடுத்ததை நம்பாது.
ஆனால் கிறிஸ்து உயிர்த்திராவிடில் நமது *‘‘பிரசங்கம்’’ வீண்* (1 கொரி 15:14)

4:31 ... *வசனத்தைத் தைரியமாய்ப் பிரசங்கித்தனர்.*
கதைகளையும் நகைச்சுவையாகவும் பேசத் திறமைதான் வேண்டும். (திரைப்படங்கள்) ... திருவசனம் பேசவோ ஆவியானவர் வேண்டும்!

கிறிஸ்துவின் பாணியிலேயே சீடர் செயல்பட்டனர் (அப் 10:38)
பரிசுத்த ஆவி ... வல்லமை ... (உள்வாசம் போதாது.)

அவரது இறுதி வார்த்தைகள் — அப் 1:8 ... *பரிசுத்த ஆவி ... பலம்*

எ.கா.) பேதுரு (மறுதலித்தவன்) |
யோவான் (ஓடியவன்) | அப் 4:13 ... *தைரியம்*

2. பரிபூரண கிருபை (Mega Grace)

4:33 ... *அவர்களெல்லார் மீதும் மிகுந்த கிருபை இருந்தது*

இதற்குக் காரணம் ஒருமனம் (வச 32).
நாமோ நிறம், இனம், இடம், செல்வம் என்ற அடிப்படைகளில் பிரிந்திருக்கிறோம்; எனவே ‘‘கிருபை’’ இல்லை!
(face ... race ... place ... lace ... no grace)

திருச்சபையில் ‘‘யுத்தங்களையும் சண்டைகளையும்’’ கண்டித்தபின், ‘‘அதிக’’ (mega) கிருபை பெறுவதெங்ஙனம் என்று யாக்கோபு எழுதுகிறார் — யாக் 4:1,6 ... *தாழ்த்துங்கள் ...*

(நமக்குள் வெளிப்படையாய்ச் சண்டையில்லாதிருக்கலாம்;
ஆனால் கசப்பு!)

நமக்குக் கிருபை வேண்டுமானால் உலகம் மற்றும் பொருட்கள் மீது பைத்தியம் இருக்கக்கூடாது (யாக் 4:4).
பரிசுத்த ஆவியானவர் அதைச் சகிக்கமாட்டார் (வச 5).
மக்களுக்குச் சொத்துக்கள் மீதிருந்த பிடிப்பை எவ்வளவாய்த் தளர்த்திவிட்டார் —
அப் 4:32 ... *தன்னுடையதென்று சொல்லவில்லை.*

எதையும்விட நமக்குக் கிருபைதான் அதிகம் தேவை —

+ அப்போஸ்தல ஆசீர்வாதம் (benediction)
முதலாவது, *கிருபை;* அடுத்து, *அன்பு;* அடுத்து, *ஐக்கியம்*
(2 கொரி 13:14)

+ தீமோத்தேயுவுக்குப் பவுல்:
''கிருபையில் பலப்படு!'' (2 தீமோ 2:1)

கிருபை மட்டும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் —
எ.கா.) செருபாபேல் (சக 4:7)
தலைக்கல் ... கிருபையுண்டாவதாக ...
ஆர்ப்பரிப்பு ... பெரிய பர்வதம் ... சம நிலம்

3. *மிகுந்த பயம்* (Mega Fear)

5:5 ... *கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயம்*
:11 ... *சபையாருக்கும் யாவருக்கும் மிகுந்த பயம்*

இன்று — பயப்படுவது யார்? — சபையா சமுதாயமா?
''நமது தேவன் பட்சிக்கும் அக்கினி!'' (எபி 12:29)
(பாசமுள்ள பிதாவானவரின் மறுபக்கம்)
மேய்ப்பனின் கோலோடுதான் இயேசுவின் படங்கள்,
சாட்டையோடு அல்ல!

நமது சத்தற்ற செய்தி —
"Smile ... Jesus loves you!" ✗
"Repent ... Jesus loves you!" ✓
''நான் நேசிக்கிறவர்களைக் கடிந்துகொள்கிறேன்'' (வெளி 3:19)

மாய்மாலத்தை நாம் எவ்வளவாய்ச் சகிக்கிறோம் —
ஐயோ ... ஐயோ ... ஐயோ ... மத் 23

எ.கா.) அனனியா & சப்பீராள் —
செல்வாக்கை விரும்பியவர்கள்.
எளியவர் உயர்வதை விரும்பாதவர்கள்.

4. *பெரிய அற்புதங்கள்* (Mega Wonders)

6:8 ... *பெரிய அற்புதங்கள் ...*

அற்புதங்களைச் செய்கிறதில் யேகோவாவுக்கு நிகரில்லை —
யாத் 15:11 ... மோசேயின் பாடல்

நமது சுகமளிப்புக் கூட்டங்களில் நடப்பவை —
குருடர் பேசுகிறார்கள்!
செவிடர் காண்கிறார்கள்!
ஊமையர் நடக்கிறார்கள்! அவ்வளவுதான்!

பெரிய அற்புதங்கள் இல்லையே, ஏன் ?
நமது ஆலய வாசல்களில் பிச்சையெடுக்கும் எத்தனை முடவர்கள்!
பேருந்து, புகைவண்டி நிலையங்கள் ...

அ) குழு மனப்பான்மை கிடையாது
*''**எங்களை** நோக்கிப்பார்!''* (பேதுரு & யோவான்) ... அப் 3:4

ஆ) சுய மகிமை
*''**எங்கள்** பலத்தினால் அல்ல ...''* (அப் 3:12)
சுகம் கிடைத்துவிட்டால், பிரசங்கியாருக்குப் பாராட்டு;
சுகம் கிடைக்காவிட்டால், மக்கள்மீது குற்றச்சாட்டு!

அன்று பெரிய அற்புதங்களுக்குக் காரணம் **ஸ்தேவானின்** விசுவாசம்தானே! (அப் 6:8)

இ) சுய சாம்ராஜ்யம் கட்டுதல் — சுகம் பெற்றோரின் சாட்சிகள்
அதற்குப் பயன்பாடு ... விளம்பரம்

ஈ) எளியோர் புறக்கணிக்கப்படுகின்றனர் ...
நடபடிகளில் முதல் அற்புதம் முடமான ஒரு பிச்சைக்காரனுக்கே!

உ) இருக்கும் நிலையிலேயே திருப்தி
''தேவன் எங்களோடிருந்தால் எங்கள் பிதாக்கள் சொன்ன அற்புதங்கள் எங்கே?'' — கிதியோன் (நியா 6:13)

தேவனது வாக்குகள் மீது நிற்கிறோம் எனப் பாடுகிறோம்;
ஆனால் அவரது வளாகத்தில் சும்மா உட்கார்ந்திருக்கிறோம்!
(Song: *Standing on the promises of God.)*
But: Sitting on the premises of God!

5. *பெரிய அடையாளங்கள்* (Mega Signs)

சுகமளிப்பு மற்றும் அதுபோன்ற அற்புதங்களுக்கு அப்பால் இயற்கை விதிகளையும் தாண்டுவதே அடையாளங்கள்.

16:26 ... *பூமி மிகவும் அதிர்ந்தது*
22:6 ... *வானத்திலிருந்து பேரொளி*

இரண்டையும் தொடர்ந்து திடமான மனந்திரும்புதல் —

- ☐ சிறையதிகாரி இரட்சிக்கப்பட்டான்.
- ☐ அகம்பாவம் பிடித்த சவுல் மனந்திரும்பினான்.

விக்கிரகங்களல்ல, யேகோவாவே, இயற்கையை ஆளுகிறவர் என்பதை நிரூபிக்க —

தீர்க்கன் எலியா மூலம்
கர்மேல் மலையில் நடந்தது போல!

ஆதிச் சபை ஜெபித்தது; இடம் அசைந்தது!

அப்போஸ்தலன் சகோதரன் பக்த்சிங் (1903-2000) இறந்தபோது, அடக்க ஊர்வலத்தில் ஒரு வெண்மேகம் கூடச் சென்றது —

செய்தித்தாள்கள் அதை அறிக்கையிட்டன.
ஹைதராபாத் இதுவரை கண்டிராத கூட்டம்.

இவ்வித அடையாளங்களெல்லாம் எப்பொழுதும் நடப்பதல்ல; ஆனால் கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் ஏளனம் செய்யும் இவ்வுலகிற்கு அவை தேவைதானே?

6. *பெரிய கலக்கம்* (Mega Stir)

19:23 ... *இந்த மார்க்கம் குறித்துப் பெரிய கலகம்*
(எபேசுவில் விக்கிரகத் தொழில் பாதிப்பு)
23:10 ... *மிகுந்த கலகம்*
(எருசலேம் முழுவதும் கலக்கம், 21:31)
23:14 ... *பவுலைக் கொல்ல உறுதியான சபதம்* (40 பேர்)
24:7 ... *மிகுந்த பலாத்காரம்* ... (கூட்டத்திலிருந்து பறித்து ...)
28:29 ... *மிகவும் தர்க்கம்* ...
ரோம் நகரில் பவுலின் பிரசங்கத்தை அடுத்து.

இவையெல்லாம் மிகைப்படுத்தலா?

இல்லை, லூக்கா *''துல்லியமான சரித்திராசிரியன்''* (லூக் 1:1-4)

இருக்கவேண்டியபடி சபை இருந்தால் யாரும் பாராமுகமாயிருக்க முடியாது —

எ.கா.) எழுப்புதல் சரித்திரங்கள் —
ஜான் வெஸ்லி (மதுக்கடைகள் அடைப்பு)
சார்லஸ் பின்னி (சூதாட்ட மையங்கள் அடைப்பு)
யோனத்தான் கோபோர்த் (ஏமாற்றுதல், சபித்தல் ... ஒழிந்தன)

''உலகைத் தலைகீழாக்குகிறவர்கள்'' (அப் 17:6)
''எருசலேமைத் தங்கள் போதகத்தால் நிரப்பிவிட்டனர்'' (அப் 5:28)

நம்மில் தீவிரம் இல்லை! —
''இராஜ்யம் ... பலவந்தம்'' (மத் 11:12)
''வருந்தியழைத்து வாருங்கள்!'' (லூக் 14:23)

7. *அதிகச் சேர்க்கை* (Great Additions)

2:41 ... 3000 பேருக்குத் திருமுழுக்கு
4:4 ... 5000 பேர் விசுவாசித்தார்கள்.
6:7 ... *தொகை மிகவும் பெருகிற்று ... ஆசாரியர் அநேகரும் ...*
11:21 ... *அநேக ஜனங்கள் விசுவாசிகளாயினர்*
:24 ... *பர்னபா மூலம் அநேக ஜனங்கள்*
:26 ... *அநேக ஜனங்கள் ... முதலாவது, ''கிறிஸ்தவர்''*
14:1 ... *திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்க பிரசங்கம்*
17:4 ... *திரளான கிரேக்கர்* = கிறிஸ்தவரல்லாதோர்

இந்தியாவில் இந்துக்கள் 80 சதவீதம்.

உயர்குலத்தோர்?— *''கனம் பொருந்திய பெண்கள்''* (17:4)

ஆதிச்சபைக்கு ஆயிரங்கள் என்றால், நமக்கு இலட்சங்களும் கோடிகளும் சேரவேண்டுமே! திருப்திதான் நமது சாபமா?

8. *மிகுந்த உபத்திரவம்* (Mega Persecution)

8:1 ... *சபைக்கு மிகுந்த துன்பம்*
ஆத்துமாக்கள் அல்லது கற்கள் அல்லது இரண்டும்!
பூங்கொத்து அல்லது ஈட்டிக்குத்து அல்லது இரண்டும்!
எழுப்புதல் அல்லது கலவரம் அல்லது இரண்டும்!

''சாட்சிகள்'' என்றால் *''இரத்த சாட்சிகள்''* என்று பொருள் (அப் 1:8)

தாக்க முன்செல்லாது தற்காப்பு மட்டும் செய்துகொண்டிருக்கும்
சபைக்கு உபத்திரவம் வரவே வராது.

முன்செல்லாத சேவகருக்குக் ***''காலணிகள்''*** எதற்கு?
எதிரியைத் தாக்காதோருக்கு ***''வாள்''*** எதற்கு? (எபே 6:15,17)

பழைய ஏற்பாட்டில் யேகோவா தேவனுக்குப்
பிரபலமான பெயர்: *''சேனைகளின் கர்த்தர்.''*

ஜெப ஊர்வலங்களைவிட
சுவிசேஷப் பவனிகள் செல்லுங்கள்.

ராஜாஜி: கிறிஸ்தவர்களை நசுக்காதீர்;
அவர்கள் மூட்டைப்பூச்சிபோல் பெருகுவர்!

கம்யூனிச நாடுகளாகிய சீனா, ரஷ்யா போன்றவற்றில்தான்
சபை வளர்ச்சி அதிகம், வேகம்!

9. மிகவும் துக்கம் (Mega Lamentation)

8:2 ... ஸ்தேவான் கொல்லப்பட்டான் ... *மிகுந்த துக்கம்*

இவ்விதத் தலைவர்கள் எழும்ப ஜெபியுங்கள்!

திருவசன ஊழியத்திற்காய் ஸ்தேவான் நிர்வாகத்தை விட்டான்;
நாமோ நிர்வாகத்திற்காய் வசன ஊழியத்தை விடுகிறோம்!

ஆற்றல் மிகுந்த, துடிதுடிப்பான, தலைவர்கள் பற்றாக்குறை.

நமது தேவை —

மோசே: *''எனது ஜனங்களைப் போகவிடு!''*
பவுல்: *''தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா?''*
யோவான்: *''விரியன் பாம்புக்குட்டிகளே!''*
இயேசு: *''அந்த நரியிடம் போய்ச் சொல்லுங்கள்!''*
மார்ட்டின் லூத்தர்: ''இங்குதான், இதில்தான், நிற்பேன்!''
ஏமி கார்மைக்கல்: ''அவர்கள் கடவுளின் குழந்தைகள்;
தவறாய்ப் பயன்படுத்தப்பட அவர்களைத் தரமாட்டேன்!''

வேறொன்றுக்குமல்ல, தேவனுக்குமட்டும் பயப்படும் மனிதர்!
ஏற்கனவே செத்துவிட்டதால் கொல்லப்படமுடியாத மனிதர்!
சுயலாப நோக்கு எதுவும் இல்லாத மனிதர்!
''ஒன்று செய்கிறேன்'' என முழங்கும் மனிதர்!

கேளுங்கள்: ''தேவனது எலியாக்கள் எங்கே?''

10. மிகுந்த சந்தோஷம் (Mega Joy)

8:8 ... *பட்டணத்தில்* (பிலிப்புவின் ஊழியம்)
15:3 ... சபையில் (பவுல் & பர்னபா ஊழியம்)

இதுதான் எழுப்புதலின் முடிவான விளைவு —

''உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி
நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?'' (சங் 85:6)

■ *முடிவுரை*

வில்லியம் கேரி:

தேவனிடமிருந்து பெரிய (மெகா) காரியங்கள் எதிர்பாருங்கள்;
அவருக்காய்ப் பெரிய (மெகா) காரியங்கள் முயற்சியுங்கள்.

இறைவாக்கு:

''இவைகளிலும் பெரிதானவைகளைக் காண்பாய்!''
அதாவது, நடபடிகளில் நடந்தவற்றைவிட ...

பிந்திய ரசம், முந்தியதைவிட ருசி!
பிந்திய ஆலயம் முந்தியதைவிட மகிமை!

அப் 28க்கு ஆமென் கிடையாது.
அப் 29 நம்மைப்பற்றியதாய் இருக்கும்!

பாடுங்கள்:

ஆச்சரியமே, அதிசயமே,
ஆண்டவர் செயல்கள் ஆதி பக்தரிடம்!
நம் பிதாக்கள் நம்பின தேவன் நேற்றும் இன்றும்
என்றும் மாறிடாரே!

(சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014)

117

சபைகளில் ஜெபக் குறைவு ஏன்?

Why are Churches prayerless?

முகவுரை

பாடம்: மத் 21:12-16

*''என் வீடு **ஜெபவீடு** எனப்படும்!''*

அதாவது, சபையின் செயல்பாடுகளில் அதிமுக்கியமானது **ஜெபம்** என்றிருக்கவேண்டும்.

இன்றையச் சபையிலோ,

ஜெபமானது ஓரத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது!
அது நடுவில் இல்லை — வெளி வட்டத்திலிருக்கிறது.
மற்ற காரியங்கள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன —

எ.கா.) காசுக்காரர் = காணிக்கை செலுத்துவதற்காகத்தான் நாணயம் மாற்றிக் கொடுப்போர்
புறா விற்பனை = பலி கொடுக்கத்தான் புறாக்கள்
அதாவது, கடவுள் பெயரால் வியாபாரம்.

ஜெபமற்ற இவ்விதச் செயல்பாடுகள் புனிதமற்றவை *(''கள்ளர்'').*
எனவேதான் நமது சபைகளில் இத்தனை நீதிமன்ற வழக்குகள்.

அமைப்பாளர்	vs.	அழுது புலம்புவோர்
தாலந்து	vs.	கண்ணீர்
வெளியே	vs.	தனிமையில்
பாராட்டு	vs.	பார்க்கப்படாதது
பலம் காட்டுதல்	vs.	சுயத்திற்கு மரித்தல்

ஒரு சபையின் பலம் எது தெரியுமா? —
''வார நாட்களின் ஜெபக்கூட்டத்திற்கு வருவோர் எத்தனை?''

சபைகளில் ஜெபக் குறைவு ஏன்?

1. ஏனெனில், ''தனி நபர்கள்'' ஜெபிப்பதில்லை!

கட்டிடம்	— கற்களால் ஆனது
உடல்	— உறுப்புகளால் ஆனது
குடும்பம்	— அங்கத்தினர்களால் ஆனது
சேனை	— சேவகர்களால் ஆனது
நாடு	— குடிமக்களால் ஆனது

திருச்சபையோ, ''நீங்கள்'' ஈடுபடாவிடில் என்னவாகும்?
"CH – **UR** – CH" ... If "you are" not active!

தனி நபர்களிடம் இயேசுவின் கேள்வி —
மத் 26:40 ... பேதுருவிடம் ... *ஒரு மணி நேரமாவது ...*

ஒரு மணி நேர ஜெபம் = நாளில் 24இல் ஒரு பங்கு (< 5%)
ஒரு நாளில் பத்திலொன்றுகூட கிடையாது

வேலை, வேலை என்று ஓடுகிறோமா?
அப் 10:1,2 ... கொர்நேலியு ... ஓர் இராணுவ அதிகாரி
தானி 6:10 ... தானியேல் ... பிரதமக் காரியதரிசி

தேவனுக்குக் கொடுக்க நேரமில்லையோ?
உனக்கு உடல் நலம் தந்தது யார்? வேலை தந்தது யார்? (உபா 8:17,18)

ஆகாய விமானத்தில்கூட முகமதியர் முழங்காலிட்டு வேண்டுகின்றனர்!

2. ஏனெனில், ''குடும்பங்கள்'' ஜெபிப்பதில்லை!

குடும்பங்களடங்கிய குடும்பமே திருச்சபை.

எலியாவின் 12 கற்கள் (ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு கல்)
1 இரா 18:31,32,38

TV, செய்தித்தாள், பொழுதுபோக்கு ... இவற்றிற்கெல்லாம் நேரமுண்டு!

பிரச்னைகளும் மன இறுக்கங்களும் ஏராளமானதால் ஜெபிக்க முடியவில்லை என்கிறோம்!

ஒப்பிடுங்கள் —	கிறிஸ்து vs.	சீடர்
	லூக் 22:44	வச 45
	''வியாகுலம்''	*''துக்கம்''*

குடும்ப ஜெபம் —

கூடி ஜெபிக்கும் குடும்பம் கூடி வாழும்.
குடும்ப ஜெபமில்லாதது கூரையில்லா வீடு போன்றது.

சூசன்னா வெஸ்லி — 19 பிள்ளைகள்!
ஒவ்வொரு பிள்ளையின் படுக்கையருகிலும் தினமும்
ஜெபிப்பார்களாம்.

3. ஏனெனில்,
''தலைவர்கள்'' ஜெபிப்பதில்லை!

திருமுழுக்கினன் யோவானும் கிறிஸ்து இயேசுவும் (லூக் 11:1)

ஜெபிக்கும் தலைவர்கள் ஜெபிக்கும் சபைகளை எழுப்புவர்.

ஜெபியாத பாஸ்டர் விளையாடத்தான் செய்கிறார்;
அவரது சபையும் சீர்கெட்டுத்தான் போகும்.
(A Pastor who is not praying is playing!)

இயேசுவைப்போல வேலைப்பளு வேறு யாருக்கு? —
3½ ஆண்டுகளில் எவ்வளவு முடிக்கவேண்டியதிருந்தது!

ஆனாலும், ஜெபத்திற்கே அவரது வாழ்க்கையில் முதலிடம் —

திருமுழுக்கு பெற்றபோது (லூக் 3:21)
வனாந்திரத்தில் (ஊழியப் பயிற்சிக் காலத்தில்— லூக் 4:1,2—
ஜெபிக்கக் கற்பிக்கும் வேதக் கலாசாலைகள்?)
மறுரூப மலையில் (லூக் 9:29)
கெத்செமனேயில் (லூக் 22:41) (அவருக்கு இரத்த வேர்வை
... சீடருக்கோ குறட்டைத் தூக்கம்)
சிலுவையில் (லூக் 23:46)
பரலோகில் — இப்போது!
''எப்பொழுதும் வேண்டுதல் செய்கிறவர்'' (எபி 7:25)

லியோனார்டு ரேவன்ஹில்: நான் பார்க்க விரும்புவது —

தாவீது சுரமண்டலம் வாசிப்பது ... பேய்கள் பறக்கும்!
பவுல் பிரசங்கிப்பது ... அரசர்கள் அதிர்வர்!
இயேசு ஜெபிப்பது ... நரகமே நடுங்கும்!

4. ஏனெனில்,
''அங்கத்தினர்'' புதிதாய் எதுவும் எதிர்பார்ப்பதில்லை!

வழக்கம்போல் யாவும் நடப்பதில் நமக்குப் பரம திருப்தி.
வழக்கம் மாறிவிட்டால்தான் குமுறுவோம்.

ஞாயிறுதோறும் இருக்கைகளை வெதுவெதுப்பாக்குகிறோம்;
தூண்கள் நமக்குத் தலையணைகளாகிவிட்டன.

ஆகாரத்தில் மாற்றம் விரும்புகிறோம்;
ஆடையில் மாற்றம் விரும்புகிறோம்;
ஆராதனையிலோ மாற்றம் வந்துவிடக்கூடாது!

தேவன் சொல்வதோ ...

''இதோ ஒரு புதிய காரியம் செய்கிறேன்'' (ஏசா 42:9; 43:13; 48:6)

புது வாழ்வு ... புதுப் பெயர் ... புது இதயம் ...
புதிய கிருபை ... புதுப் பாடல் ... புது ரசம் ...
புதுத் துருத்தி ... புதிய ஏற்பாடு ...
புதிய ஆவி ... புதுக் கனி ... புதிய நாவுகள் ...
புதிய கட்டளை ... புதுச் சிருஷ்டி ...
புதிய மனிதன் ... புதிய மார்க்கம் ... புதிய வானம் ...
புதிய பூமி ... புதிய எருசலேம் ...

- திடீரென ஆவியின் மழை (அப் 2) —
  பெந்தெகொஸ்தே நாள்
  — சீடர்கள் *''உட்கார்ந்துதான்''* இருந்தனர்!
  — மக்கள் கேட்டது: *''இது என்ன?''*
- கொர்நேலியுவின் இல்லம் (அப் 10) —
  — வீட்டு ஜெபக் கூட்டம்
  — பிரசங்கம் முடியுமுன்! (வச 44)

5. ஏனெனில்,
''ஆவியானவரின்'' அபிஷேகம் இல்லாமலே எதையும் செய்யப் பழகிவிட்டோம்!

நிரப்பப்படுவதுமில்லை, கிளர்ச்சியடைவதுமில்லை,
உறைந்துதான் போகிறோம்!
மேலறை அக்கினி இல்லை; மேள அறை புகைதான்!

ஜெபத்தில் ஆதிச்சபை —

லூக் 24:52, 53
அப் 1:14 ... பெந்தெகொஸ்தே ஆயத்தம்
2:42 ... பெந்தெகொஸ்தேக்குப் பிறகு ... *உறுதியாய்* ...
3:1 ... பேதுரு & யோவான் ... *ஜெப வேளை*
4:31 ... உபத்திரவம் ... *இடம் அசைந்தது*
6:4 ... *ஜெபம் பண்ணுவதில் தரித்திருப்போம்*
7:60 ... முதல் இரத்தசாட்சி முழங்காலில் மரித்தான்!
(முழங்கால் தோல்வி, முயற்சிகளில் தோல்வி!)
12:5 ... சிறையிலிருந்த பேதுருவுக்காக ஊக்க ஜெபம்
(இரும்புத் திரை, மூங்கில் திரை நாடுகளில்
எத்தனையோ கிறிஸ்தவரும் ஊழியரும் சிறையில்)
13:2,3 ... மிஷனரிப்பணிக்குத் தரிசனம்

ஒப்பிடுங்கள்: அன்று 120 உறுப்பினர் கொண்ட ஒரு சபை
vs.
இன்று தலா 120 பேர் கொண்ட 120 சபைகள்!

- திருச்சபை ஒரு ''ஜெப வீடாய்'' மாறும்போது அங்கு நடைபெறுவது —

1. **வெளிப்பாடு** (Revelation)
   மத் 21:14 ... *''குருடருக்குப் பார்வை''*
   எ.கா.) ஏசா 6:1-3 ... *கர்த்தர் ... பரிசுத்தமுள்ளவர் ... மகிமையுள்ளவர்*
2. **புதுப் பலம்** (Rejuvenation)
   மத் 21:14 ... *''முடவருக்குச் சுகம்''*
   எ.கா.) அலங்கார வாசலில் 40 ஆண்டுகள் (அப் 3:1,2)
3. **திரும்பப் பெறுதல்** — மகிழ்ச்சியும் துதியும் (Restoration)
   மத் 21:15,16 / லூக் 19:39,40

பரிசுத்தர்கள் அமைதியாயிருந்தால் கற்கள் துதிக்கத் துவங்கும் (லூக் 19:40)

தேவன் உங்களைக் கடந்துசென்றுவிடுவார், கவனம்!

118

திருச்சபையில் தீயவை

The Evils in the Church

முகவுரை

பழைய ஏற்பாட்டில் சோகமான ஒரு வசனப்பகுதி —
சக 13:6 ... *''சிநேகிதர் வீட்டில் பட்ட காயங்கள்''*
— இது கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனம் (வச 1,7)
கிறிஸ்து தமது நண்பர் வீட்டில் (சபையில்) காயப்பட்டுள்ளார்!

மகிமைப்படுவதற்குப் பதிலாக அவமகிமையடைகிறார்.
ஆராதிக்கப்படுவதற்குப் பதிலாக அடிக்கப்படுகிறார்.

பிதாவாகிய தேவனை இஸ்ரவேலர் காயப்படுத்தினர்.
குமாரனாகிய தேவனை யூதர் காயப்படுத்தினர்.
ஆவியானவராகிய தேவனைக் கிறிஸ்தவர் காயப்படுத்துகின்றனர்.

''திருச்சபையிலுள்ள தீயவைகளால்''
தேவன் காயப்படுத்தப்படுகிறார்.

இதற்குப் பிற பெயர்கள்:

''பரிசுத்தமானவைகளின் தோஷம்'' (யாத் 28:38)
''நீதி ஸ்தலத்தில் அநீதி'' (பிர 3:16)
''பரிமள தைலத்தில் செத்த ஈக்கள்'' (பிர 10:1)
''புதிய மாவில் பழைய புளித்த மாவு'' (1 கொரி 5:6,7)

இத்தீயவைகளில் ஐந்தை இங்கு கவனிப்போம் —

1. ஆழமற்ற அர்ப்பணிப்பு (Shallow Commitment)

அ) பெயரளவில் மார்க்கம்:

ஏசா 48:1,2 ... சொந்த அனுபவமில்லாத பரம்பரை.
இதற்காகவே பரிசேயர், சதுசேயரை யோவான் கண்டித்தான் —

ஆபிரகாமின் பிள்ளைகள் ✗
விரியன் பாம்புக்குட்டிகள் ✓ (மத் 3:7-9)

எரே 7:1-4, 9-11 ... *பொய் வார்த்தைகளில் நம்பிக்கை*
இதய அனுபவமில்லாத வெறும் தலையறிவு.
இவையெல்லாம் கதிர்கள் போலவே தெரியும் களைகள் —
மத் 13:25-36

ஆ) மேலெழுந்த மனந்திரும்புதல்:
பாவத்தை மறைத்தல் ... யோசு 7:19
நமது பாவத்தன்மையை நாம் அறிக்கையிடும்போது
தேவனது பரிசுத்தத்தை *''மகிமைப்படுத்துகிறோம்.''*
தேவனுக்கேற்ற துக்கம் ... 2 கொரி 7:10,11
x உலகுக்கடுத்த துக்கம் (வியாதி, இழப்பு, ...)
பாவத்தை விட்டுவிடாமல் வெறும் அறிக்கை ... நீதி 28:13

இ) வெற்று அறிக்கை
யோனா 1:9 — *''தேவனுக்குப் பயப்படுகிறேன்''* —
இல்லையே!
தேவனுக்குக் கீழ்ப்படிந்தவை — *காற்று* ... 1:4
மீன் ... 1:17 / 2:10
நினிவே மக்கள் ... 3:5
செடி ... 4:6
பூச்சி ... 4:7
அனல் காற்று ... 4:8

தேவனுக்குக் கீழ்ப்படியாதது — யோனா ஒருவன்தான்!

- 1 யோ 2:9 / 4:20
  — *''தேவனிடம் அன்புகூருகிறேன் ...''*
  ''ஒளியில் நடக்கிறேன் ...''
  என்று சொல்லியும் பிறரை நேசியாதவன்.
  ஒப்புரவாகுங்கள் ... காரியங்களைச் சரிசெய்யுங்கள்.

2. *ஏற்புடையதற்ற ஆராதனை* (Unacceptable Worship)

- இதயத்திலிருந்து வராத ஆராதனை
  மாற் 7:6 ... மந்திரம் சொல்வதுபோல்!
- சடங்காச்சார ஆராதனை x ஆன்மீகத் தொழுகை
  யோ 4:21-24

- தெய்வத்தை ஓரிடத்தில் இருத்த முயலாதீர் —
  அப் 7:47-49

ஆலயத்திரை மேலிருந்து கீழாய்க் கிழிந்தது (மத் 27:51).
ஒரு இடமும் மற்றதைவிடப் புனிதமானதல்ல.
புதிய ஏற்பாட்டில் ''இடம்'' அல்ல, ''மக்கள்''
(''எங்கே'' இரண்டு மூன்றுபேர் ... மத் 18:20)

திருமறைக்குப் புறம்பான பாரம்பரியங்கள் —
சிலுவை, சொரூபம், மெழுகுவர்த்தி, தூபவர்க்கம் ...
வீணாய் ஆராதனை — மாற் 7:7 ... *பாரம்பரியங்கள்*

எ.கா.) நிகுஸ்தான் (2 இரா 18:4)
கிதியோனின் ஏபோத் (நியா 8:27)
பிரதான ஆசாரியனது பரிசுத்த ஆடையாயிருந்தது
தேவ மனிதனாகிய **கிதியோனால்** விக்கிரகமாயிற்று.

தேவனது நாமத்தை நாம் மகிமைப்படுத்தும்படி
எல்லா விக்கிரகாராதனையையும் அப்புறப்படுத்த வேண்டும் —

ரோ 1:21-23 ... *படைத்தவரையல்ல,*
படைப்பைத் தொழுதனர்.
யாத் 20:4-6 ... கிறிஸ்தவ விக்கிரகங்களுக்கு எச்சரிக்கை!
''சத்தம் இருந்தது, ரூபம் இல்லை'' (உபா 4:12,15,16)

- எந்த மனிதனையும் மகிமைப்படுத்தக்கூடாது —
  சங் 115:1 ... *''எங்களுக்கு **அல்ல** ... எங்களுக்கு **அல்ல** ...''*

கதாநாயக வணக்கம் வேண்டாம் —
1 கொரி 3:21, 22 ... *பவுல் ... அப்பொல்லோ ... கேபா ...*
1:29 ... *எவரும் மேன்மைபாராட்டாதபடி ...*

பாபேல் ... *''நமக்குப்'' பெயர்*
பெந்தெகொஸ்தே நாளில் தேவன் இதைத் திருப்பிப் போட்டார்
(அப் 2:6-8); அது ''அவரது'' புகழ்பாட (வச 11)

குருப்பட்டங்களைக் குறித்தும் கவனமாயிருங்கள் —

மத் 23:5-10 ... இன்றையப் போக்கு?

''கிறிஸ்து ஒருவரே'' *''பிதா ஒருவரே''*
(வச 8,10) (வச 9)

''உமது'' நாமம் பரிசுத்தப்படுவதாக ... (மத் 6:9)
''நமது'' நாமம் அல்ல

Holy and Reverend is "His" Name (Psa 111:9)

நமது வெற்றிகளும் அவர் பாதத்தில் படைக்கப்படவேண்டும் —

தேவ மகிமையைத் திருடாதீர் (யோசு 6:19)
இருபத்து நான்கு மூப்பர் (வெளி 4:8-11)

- பயபக்தியினால் தொழுகை நிறைந்திருக்கவேண்டும் —
  மல் 1:6 ... *என் கனம் ... எனக்குப் பயப்படும் பயம்*
  எபி 12:28,29 ... *பயத்தோடும் பக்தியோடும் ...*
  எரே 5:22 ... நமது பயபக்தியின்மைக்குத் தேவனது சவால்

ஆராதனையில் விடுதலை உண்டு, விளையாட்டு கூடாது!

3. அர்த்தமற்ற ஜெபம் (Meaningless Prayer)

ஜெபமானது தேவனை மகிமைப்படுத்தும் தூபவர்க்கம் —
வெளி 5:8 ... *ஜெபங்களாகிய தூபவர்க்கம் ... பொற்கலசங்கள்...*
8:3,4 ... *ஜெபங்களோடு தூபவர்க்கப் புகை...*

ஜெபம் அர்த்தமிழப்பது எப்போது?

- அறிக்கையிடப்படா பாவம் —
  யோசு 7:8-11 ... *உமது பரிசுத்த நாமத்திற்கு என்னவாகும்?*
  ஏன் இவ்விதம் பொய் சொன்னாய்?
- முறிந்த உறவுகள் —
  யாக் 5:16 ... *ஒருவருக்கொருவர் குற்றங்களை அறிக்கை*

வேறெதையும்விடத் திருச்சபையில் தேவனுக்கு அபகீர்த்தி கொண்டுவந்தது பிரிவினையே —

யோ 17:22 ... திருச்சபையில் மகிமைக்கு ஒரே நோக்கம்.

இந்தியச் சபையில் பிரிவினைகளுக்கு ஒரு முக்கிய காரணம் —
''இன வெறி'' (Communalism)

இடதுசாரித் தத்துவங்கள் (Communism) அல்ல,
இனவெறியே திருச்சபை வளர்ச்சிக்குப் பெரிய எதிரி.

நாம் ஏன் ஒருமனமாயிருக்கவேண்டும் —

மல் 2:10 ... ஒரே பிதாவானவர்.
ரோ 10:12 ... ஒரே கர்த்தரானவர்.
சுத்த இரத்த எபிரெயனாகிய பவுல் மாறிவிட்டார்!
அப் 15:8,9 ... ஒரே ஆவியானவர்.
இனவெறியாளராகிய பேதுரு மாறிவிட்டார்!

— பெற்றோரின் பொறுப்பு:
''நம்மாட்கள்'' என்ற பதத்தையெல்லாம் பயன்படுத்தாதீர்!

— நமது வாழ்வில் சிலுவை ஆழமாய்ச் செயல்படட்டும்:
எபே 2:14-16 ... *பிரிவினைச் சுவர் தகர்ப்பு.*
அதைத் திரும்பக் கட்டியெழுப்பாதீர்.

கரங்களில் இரத்தக் கறையிருந்தால் ஜெபம் அருவருப்பு
(ஏசா 1:15-17)

அதாவது, சகவுறவுகளில் சச்சரவு (1 யோ 3:15)

4. மாய்மாலப் பிரசங்கம் (Hypocritical Preaching)

- *புறவினத்தாரிடையே தேவ நாமம் தூற்றப்படுகிறது —*
  பிரசங்கம் x நடக்கை
  ரோ 2:21-24

''நான் செய்வதை அல்ல, சொல்வதையே செய்'' எனும் பிரசங்கிமாரது தத்துவம் தேவனுக்கு அவமகிமை.

- திருடரோடும், விபசாரக்காரரோடும் சமரசம் —
  சங் 50:16-21

குளிர்ந்துபோன பிரசங்கிமார் துணிந்த பாவிகளைப் பெற்றெடுப்பர்!

- இறைவார்த்தைக்குமுன் பரிசுத்த நடுக்கமின்மை —
  ஏசா 66:1,2

பைபிளே தேவனுடைய வார்த்தைதான்
என்று பல ஊழியர் நம்புவதில்லை.

தலைவர்கள் இறைவார்த்தையைச் சரியாய் விசுவாசியாதபோது,
அது தேவ நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறது —

மோசே & ஆரோன் (எண் 20:12)

- தொழிலாகும் திருப்பணி, வறட்டுக் கவுரவம் ...
  யோனா 3:4,10
  4:1-3

மக்கள் மீது கனிவின்மை —
யோனா 4:10,11

5. *உற்சாகமற்ற காணிக்கை* (Defective Giving)

மல் 1:6,7 ... *"எதினால் உமது நாமத்தை அசட்டைபண்ணினோம்?"*

- உசிதமானதைத் தேவனுக்குக் கொடாதிருத்தல் (வச 8).
  மேன்மையானதையல்ல, மீந்ததையே கொடுக்கிறோம்!

மந்தையில் கடா ... ஊனமானது ... சபிக்கப்பட்டவன் (வச 14)
லேவி 22:22

உங்கள் பிள்ளைகளில் முதன்மையானது கர்த்தருக்கு (எண் 3:13).
அதுதான் *"புனிதமான காணிக்கை"* (மல் 1:11).

தசமபாகம் கொடாதவன் திருடன் (மல் 3:8)
தரமானதைக் கொடாதவன் எத்தன் (மல் 1:14)

- இலாப நோக்கு (மல் 1:10)
  — **"எனக்கு"** என்ன கிடைக்கும்?
  மக்களது இந்தப் பலவீனத்தைப்
  பிரசங்கிமார் சாதகமாக்கிக்கொள்கின்றனர்.

அப்படியானால் அது ஆராதனையே அல்ல!
மரியாளின் செயல் ஒரு தொழுகை (யோ 12:3)
விதவையின் செயல் ஒரு தொழுகை (லூக் 21:1-4)

- வெறும் கடமை, களிப்பு இல்லை (மல் 1:13)
  "வருத்தம் ... பாரம்"

  2 கொரி 9:7 ... *கட்டாயமாயல்ல ... உற்சாகமாய் ...*
  பிலி 4:18 ... *தாராள காணிக்கை ... சுகந்த வாசனை*

- தவறாய்க் கிடைத்த பணம் (மல் 1:11-13)
  பெற்றோரிடம் திருடியது (மாற் 7:10-13)
  அரசிடம் திருடியது (மாற் 12:17/ரோ 13:7)
  மக்களிடம் திருடியது (மத் 23:14/லூக் 3:12-14)

  எ.கா.) சவுலரசனின் பலி ஏற்றுக்கொள்ளப்படவில்லை —
  1 சாமு 15:19-22 ... *தேவனுக்கு கீழ்ப்படியாமை*

■ *முடிவுரை*

- திருச்சபையில் இப்படியெல்லாம் கர்த்தர் நாமம்
  அவமதிக்கப்படுவதால்.
  "இக்கபோத்" என்று எழுதப்பட்டாயிற்று!
  1 சாமு 4:21 ... *மகிமை விலகிற்று!*

- தேவனோ இழந்த மகிமையைத் தமது நாமத்தின் பொருட்டு
  திரும்பத்தர வாக்குப்பண்ணியுள்ளார் —
  எசேக் 36:20-25

- பிந்திய மகிமை முந்தியதைவிடப் பெரிதாயிருக்கும் —
  ஆகாய் 2:3,4,9

(அடுத்த அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

119

திருச்சபை எவ்விதம் ஆவியானவரைப் புண்படுத்துகிறது?

How the Church hurts the Holy Spirit

முகவுரை

மனிதனோடு பூரண உறவு கொள்ளுவதே தேவனது நித்திய திட்டம்.

எனவேதான் மனிதனைத் தமது சாயலாகவே படைத்தார்.
இந்த ''உறவுக்கு'' மறுபெயர் கல்யாணம்.

திருமறை முழுவதுமே ஒரு கல்யாண நாடகம் —

ப.ஏ. — முகவுரை — கல்யாணம் வாக்குப்பண்ணப்பட்டது.
சுவிசேஷங்கள் — அங்கம் I —
மணமகன் முன்நிறுத்தப்படுகிறார்.
நிருபங்கள் — அங்கம் II — மணமகள் ஆயத்தப்படுகிறாள்.
வெளிப்படுத்தல் — முடிவுரை — கல்யாணம் நடக்கிறது.

''ஆபிரகாம் — ஈசாக்கு — வேலைக்காரன் — ரெபேக்காள்'' — நிழல்.
இச்சரிதையில் முக்கிய பங்கு வகிப்பது — ''வேலைக்காரன்'' —
பரிசுத்த ஆவியானவர்

- இச்சரிதையில் ஆவியானவரின் பங்கு —

  ''சிருஷ்டிப்பு முதல் சிங்காசனம் வரை''
  (யோபு 33:4/ஆதி 2:7) ... முதல் ... (வெளி 3:21,22) வரை.
  இந்தக் காரியத்தில் அடிக்கடி ஆவியானவரைப்
  புண்படுத்துகிறோம்.

- ஆவியானவரின் மென்மையான சுபாவம் —

  ஆதி 1:2 ... கூட்டின்மீது அசைவாடும் பறவை போல.
  சங் 23:5 ... *எண்ணெய்* — மெதுவாய் இறங்கும்.
  மத் 3:16 ... புறா — பறவைகளிலெல்லாம் மென்மை

காற்று, நெருப்பு போன்றவையெல்லாம் குறிப்பிடுவது அவரது
வல்லமையை — சுபாவத்தை அல்ல —
மென்மையாய் இடைபடுவதே அவரது சுபாவம் (ஆதி 6:3).
அவரது சுபாவமே அவரது கனியாய் வெளிப்படுகிறது (கலா 5:22,23)

அதைத் திருச்சபை சாதகமாக்கிக்கொண்டு
திரும்பத் திரும்ப ஆவியானவரைப் புண்படுத்துகிறது.

ஆவியானவரைச் சபை புண்படுத்தும் விதங்கள் —

1. ஆவியானவரை அசட்டைபண்ணுதல் (Rejecting)

☐ 1 தெச 4:1-8

''தேவனுக்குப் பிரியமாய்'' (வச 1)
பரிசுத்தத்திற்கான அழைப்பையும் கட்டளையையும்
அவமதித்தல் ... *''பரிசுத்தம் ... தேவ சித்தம்''* (வச 3)
''பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்'' (வச 7)

பரிசுத்தத்தை **இதய பூர்வமாய்** வாஞ்சிக்கிறோமா?

☐ ஆவியானவரின் பெயரே — ''பரிசுத்த'' ஆவியானவர்.

ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் முதலாக வருவது —
லூக் 1:35 ... *''பரிசுத்த ஆவி''* மூலம் *''பரிசுத்தமுள்ளது''*

மக்களுக்கு ஆவியானவர் முதலாவது அறிமுகப்படுத்தப்பட்டது —
மத் 3:11,12 ... *''பிரித்தெடுப்பு ... சுட்டெரிப்பு''*

ஆவியானவரால் *பரிசுத்தமாக்கப்படுவதிலேயே தெரிந்தெடுப்பு*
1 பேது 1:2

☐ நாம் ஆவியால் நிறைந்திருந்தாலும், பரிசுத்தத்தைத் தீவிரமாய் வாஞ்சியாவிடில், அவரை அசட்டைபண்ணுகிறோம், வேண்டாம் என்கிறோம்.

நீங்கள் பரிசுத்தத்தை ''வாஞ்சிக்கிறீர்களா?'' (மல் 2:11)

2. ஆவியானவரின் ஆலயத்தைக் கறைப்படுத்துதல் (Defiling)

☐ 1 கொரி 6:17-20 ... *உங்கள் உடல் ... ஆவியானவரின் ஆலயம்*
3:16,17 ... *தேவனுடைய ஆலயம் ... பரிசுத்தம்*

தூயாவியானவர் நமக்குள் தங்கியிருப்பதால்,
கர்த்தரோடு ''ஒரே ஆவியாய்'' இசைந்திருக்கிறோம்.

பாலியல் பாவங்கள் ஆவியானவர் தங்குமிடத்தையே அசுசிப் படுத்துவதால் இந்த இசைவுக்குப் பாதகம் ஏற்படுத்துகிறது.

☐ பரிசுத்தமாகுதலைக் குறித்த பகுதியில்
முதலாவது சொல்லப்பட்டிருக்கும் கொடிய பாவம் —
1 தெச 4:3-6 ... *வேசி மார்க்கம்*

☐ தாவீதின் கதறல் (சங் 51:11) ... *பரிசுத்த ஆவியை எடுக்காதிரும்*

☐ *''ஆவியின் கனிக்கு''* எதிரான *''ஊனியல்புச் செயல்கள்''*
கலா 5:17, 19-21 (முதல் நான்கு)

பாருங்கள்: வெளி 2:21 ... *வேசி மார்க்கம் ... மனந்திரும்ப தவணை*

மனந்திரும்ப கடவுள் கொடுத்த ''நேரத்தை''
அசட்டை செய்கிறீர்களா?

மனந்திரும்ப ''மனது'' உண்டா?

விடுதலை நிச்சயம்! பிறந்ததே அப்படியென்று எண்ணாதீர்.

ஆவியானவரது அபிஷேகத்தால் *''நுகம்''* முறியும்.

3. *ஆவியானவருக்குக் கோபமூட்டுதல்* (Provoking the Spirit)

☐ யாக் 4:4,5 ... ஆவியானவரின் வைராக்கிய வாஞ்சை
''உலக சிநேகம்'' — ஆன்மீக விபசாரம்.

பரலோக மணவாளனைத் தவிர எவரும் எதுவும்
மணவாட்டியைக் கவர ஆவியானவர் சகியார்!

— இப்பாவத்தைத் தேவன் இஸ்ரவேலில் கண்டித்தார் (எரே 3:20)
— தமது மணவாட்டி தனித்திருக்கவே விரும்புகிறார் (மீகா 7:14)
— சங்கீதப் புத்தகத்தின் துவக்க வசனங்கள்! (சங் 1:1)

☐ சங் 45:10-12 ... *உன் ஜனம் ... தகப்பன் வீடு ... மறந்துவிடு*
மணமகள்மீது மணமகன் பிரியமாயிருக்க நிபந்தனை!
உலக சிநேகத்தை விட்டு அவரையே *''பணிந்து''* வாழும்போது,
உலகத்தாரும் பொருளாதார ஆசிகளும் நம்மை *''நாடி வரும்.''*
நாம் உலகை வெல்லுவோம்!

☐ சிற்றின்பங்களுக்கு மாற்றாக ஆவியின் நிறைவு —
எபே 5:18 ... *மதுபான வெறி ... ஆவியினால் நிறைந்து ...*

☐ எரே 2:2 ... *இளவயதின் பக்தி ... நேசம்* —
உங்களது *''ஆதி அன்பை''* இழந்துவிட்டீர்களா?
சபைக்கெதிராக ஆவியானவரின் முதல் குற்றச்சாட்டு —
வெளி 2:4-7 ... *ஆதி அன்பு ... உன் மீது குறைவு*

அன்பில்லையேல் *''சபிக்கப்பட்டவன்!''* (1 கொரி 16:22)

4. *ஆவியானவரைத் துக்கப்படுத்துதல்* (Grieving the Spirit)

☐ எபே 4:25-32

சகவுறவுகளில் சச்சரவுகள் —

1. பொய் (வச 25)	5. பக்திவிருத்தியற்ற பேச்சு (வச 29)
2. கோபம் (வச 26,27)	6. கசப்பு (வச 31)
3. திருட்டு (வச 28)	7. புறங்கூறுதல் (வச 31)
4. உதவாதிருத்தல் (வச 28)	8. மன்னியாமை (வச 32)

☐ சங் 133:1,2 ... *சகோதரர் ஒருமித்து ... நன்மை ... இன்பம்*
கிறிஸ்துவின் **தலையிலிருந்து** அவரது **உடலின் மீது**
இறங்கிவரும் **ஆவியானவரின்** அழகான சித்திரம்!

ஆவியானவரை ஆனந்தப்படுத்த ஆசிக்கிறீர்களா?
அல்லது,
ஆவியானவரது ஐக்கியத்தின் நோக்கமே மறந்துவிட்டதா?
பிலி 2:1-3 ... *ஆவியின் ஐக்கியம் ... ஏக சிந்தை ... அன்பு*

5. *ஆவியானவரை அவித்துப்போடுதல்* (Quenching the Spirit)

☐ 1 தெச 5:16-22

தினசரித் தியான வாழ்வில் முனைப்பின்மையும் விழிப்பாயிருக்கத் தவறுதலும் ஆவியானவரைத் துக்கப்படுத்தும் —

1. சந்தோஷம் (வச 16) — தேவனது மன்னிப்பு, மீட்பு, **கிருபையைத்** தினமும் நினைவுகூருதல்.
''இது கர்த்தர் உண்டுபண்ணின நாள் ... மகிழ்ந்து ...''

2. ஜெபம் (வச 17) — ஜெபப் பழக்கங்கள் — அமைதி வேளை — அவசர ஜெபம் —

3. ஸ்தோத்திரம் (வச 18) — தேவன் தந்துள்ளவற்றில் திருப்தி — முறுமுறுப்பின்மை — பேராசை — ஆசிகளை எண்ணிப்பார்க்கத் தவறுதல்

4. தீர்க்கதரிசனம் (வச 20,21) — எழுதப்பட்ட வார்த்தை & சொல்லப்படும் செய்திகள்
தியானம் — ஆவியானவர் மூலம்
தேவ மனிதரின் எச்சரிப்புகள் —

ஆவியானவருக்குக் கீழ்ப்படியாமை
(அப் 7:51,53/அப் 5:32)

5. *சோதனைகள்* — (வச 22) — கேள்விக்குரியதை அகற்றுதல் —
மடியில் நெருப்பு.

இவற்றில் தவறினால் ஆவியானவரின் அழகொளியை இழப்போம்;
ஆன்மீகக் கூர்மை பறந்துபோகும்.

உங்கள் பலிபீடத்தில் **நெருப்பு** அணைந்துவிட்டதோ? (லேவி 6:12,13)
மங்கியெரியும் திரியைத் **தீண்டும்** ஆண்டவரிடம் திரும்புங்கள்.

6. ஆவியானவரை நிந்தித்தல் (Insulting the Spirit)

☐ எபி 10:26-29

முழுமையான பின்வாங்கல் — துணிந்து பாவம் —
காரணம்: நெருக்கங்கள், பிரச்னைகளினால் உற்சாகமிழப்பு,
மனத்தொய்வு.
(பாருங்கள்: வச 32,33,35,36)

பின்வாங்குவதற்குப் பிரச்னைகள் சாக்குப்போக்காகாது;
ஏனெனில் எச்சூழலுக்கும் **போதுமான கிருபை** தருகிறாரே —
''கிருபையின் ஆவி'' (வச 29)

நமக்குள் இருக்கும் அவரது ஆவியானவர்: *''தேற்றுகிறவர்''*

தேவனோடு கோபமா? (வச 31 — *பயங்கரம்!)*
மனந்திரும்புங்கள்;
பிரச்னைகளைவிடத் தண்டனை கொடூரம் (வச 29)

■ *முடிவுரை*

☐ வெளி 2:7,11,17,29 3:6,13,22 | *''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுவதைக் காதுள்ளவன் கேட்கட்டும்!''*

☐ சங் 139:7 :23,24 | *''உமது ஆவிக்கு மறைவாக எங்கே ஓடுவேன்?*
தேவனே, என்னை ஆராய்ந்து ''பாரும்!''

☐ எபி 3:7,8 — *''ஆவியானவர் சொல்லுகிறார் ...*
உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்!''

120

சபைகளில் பரிதாபங்கள்

The Tragedies in the Churches

முகவுரை

மிஷனரி எழுப்புதல் காலம் இது.
மிஷனரி கன்வென்ஷன்கள், புத்தகங்கள் ...
மிஷனரி இயலில் புத்தார்வம்.
ஆனாலும் கிறிஸ்தவரது சதவீதம்
இந்தியாவில் 3ஐத் தாண்டவில்லை.

பல பரிதாபங்கள் ...
மாற்றுக்கள் நிறைந்துள்ள இக்காலத்தில்
எளிதானவை தெரிந்தெடுப்பு.

1. அமைப்பாளர் பலர், அழுவோரோ சிலர்!
(Organizers vs. Agonizers)

அமைப்பது	vs.	அழுது புலம்புவது
தாலந்துகள்	vs.	கண்ணீர்
அம்பலம்	vs.	அந்தரங்கம்
பாராட்டு	vs.	கவனிப்பாரற்றது
பலத்தைக் காட்டுவது	vs.	சுயத்திற்கு மரிப்பது

- எப்பாப்பிரா (கொலோ 4:12,13)
— தூர தரிசனம் ...
அதே வேளையில் போராட்ட ஜெபம்
- பவுல் (ரோ 15:30-32) ... யூதேயா, எருசலேம், ரோமாபுரி ...
— திட்டமிட்டான், புலம்பி ஜெபித்தான்.

ஜெபம் ஒரு போட்டியில்லாத களம்!

ஜெபிக்கவேண்டியது: (அ) ஆத்துமாக்கள் (1 தீமோ 2:1,3,4)
(ஆ) அறுவடையாளர்கள் (மத் 9:36-38)

ஜெப வீரரது சரிதைகள் வாசியுங்கள் ...

ஜான் நாக்ஸ் — ஸ்காட்லாந்து
டேவிட் பிரெய்னர்டு — செவ்விந்தியர்
ரீஸ் ஹவல்ஸ் — ஆப்பிரிக்கா
ஜான் ஹைடு — இந்தியா

- கனியற்ற களங்கள் — செருபாபேல் — *பெரிய பர்வதம்*
- கற்கக் கடினமான மொழிகள்
- எதிர்க்கும் அதிகாரிகள்
- குடும்பத்தில் உடல்நலக் கேடுகள்

சபையின் வருடாந்திர விருந்து vs. மாதாந்திர உபவாச ஜெபம் — எத்தனை பேர் பங்குபெறுகின்றனர்?

2. *அனுப்புவோர் பலர், ஆத்துமாதாயகரோ சிலர்!*

(Supporters vs. Soulwinners)

அரங்கம் முழுவதும் தூண்களானால் எப்படி?
இயேசு அனுப்பினார் (மத் 10:5,16);
அத்துடன் சென்றார் (மத் 11:1)

யோவான் சுவிசேஷத்தில் ஆத்துமாதாயகராய் இயேசு —

அத் 1 — பிலிப்பு
2 — கானாவூரில் வேலைக்காரர்
3 — நிக்கொதேமு
4 — சமாரியப் பெண்
5 — 38 வருடத் திமிர்வாதக்காரன்

நமது பிரதான அழைப்பு: மத் 4:19 ... *மனிதரைப் பிடிப்பவர்*

சபையானது ஆளெடுத்துப் பயிற்சி கொடுக்கும் மையமாக வேண்டும்:
இந்துக்களுக்குச் சாட்சி பகருவது எப்படி?
முகமதியருக்குச் சாட்சி பகருவது எப்படி?
போதை அடிமைகளை விடுவிப்பது எப்படி?

ஆன்ட்ரூ முரே: கிறிஸ்தவர்களில் இரண்டே வகையினர் —
ஆத்துமாதாயகர்
பின்மாற்றக்காரர்
நடுநிலைக்கு இடமில்லை (லூக் 11:23ஆ)

ஒவ்வொருவரும் இன்னொருவரைச் சந்திக்கவேண்டும்!
வில்லியம் கேரி: ‘‘காலணிகளைச் செப்பனிடுவதோடு நான் ஆத்துமாக்களையும் இரட்சிக்கவேண்டும்’’ (Soles & Souls)

(92ஆம் அத்தியாயக் குறிப்புகளைப் படியுங்கள்.

3. *செலுத்துவோர் பலர், செல்லுவோரோ சிலர்!*

(Givers vs. Goers)

பிரதான தேவை: ‘மனி’ (money) அல்ல, மனிதர்!
முதல் அழைப்பே ‘‘போவோருக்குத்தான்’’ (ஏசா 6:8)

மிஷனரி விண்ணப்பதாரர்கள் குறைந்து வருகின்றனர்.

- ☐ போங்கள் — *வீட்டிற்கு நண்பரிடம்* (மாற் 5:18,19)
- ☐ போங்கள் — *வீதிகளுக்கு* (லூக் 14:21-23)
- ☐ போங்கள் — *கிராமங்களுக்கு* (லூக் 19:29-31)
  (இந்தியா வாழ்வது கிராமங்களில்!)
- ☐ போங்கள் — *உலகமெங்கும்* (மாற் 16:15)

இங்கேயே இருந்துவிட உங்களுக்கு அழைப்பு உண்டோ?

மிஷனரி அழைப்பு என்றால் என்ன? —

- மேலிருந்து அழைப்பு (ஜெபம், வேதத் தியானம்)
- சுற்றிலுமிருந்து அழைப்பு (தேவை நிறைந்த உலகு)
- கீழிருந்து அழைப்பு (செல்வந்தன் / லாசரு)
- உள்ளிருந்து அழைப்பு (செய்வதில் திருப்தியின்மை)

சாக்குப்போக்குகள் —

- ‘‘ஓய்வு பெற்றபின் கடவுளைச் சேவிப்பேன்!’’
- ‘‘எனது குடும்பமும் பிள்ளைகளும் என்னவாகும்?’’
- ‘‘எனக்கு இறையியல் கல்வி இல்லையே!’’
- ‘‘உள்ளூரிலேயே இரட்சிக்கப்படாதோர் ஏராளமுண்டே!’’
- ‘‘நான் இப்பொழுது மாணவன்தானே!’’
- ‘‘எத்தனையோ பேர் திரும்பிவிட்டார்களே!’’
- ‘‘எனக்கு வேறு மொழி தெரியாதே!’’

நீங்கள் மருத்துவராய், பொறியாளராய்,
ஆசிரியராய் ஆனது எப்படியோ?

(104ஆம் அத்தியாயக் குறிப்புகளைப் படியுங்கள்.)

4. *தத்தெடுப்போர் பலர், பெற்றெடுப்போரோ சிலர்!*

(Sponsors vs. Parents)

அந்தியோகியா சபை (அப் 13:1-3)
People’s Church — கனடா — 400 மிஷனரிகள்
பாஸ்டர் ஆஸ்வால்ட் ஸ்மித்: ‘‘போ அல்லது அனுப்பு!’’

இது எவ்விதம் சாத்தியம்?

ஆயர்களே, மிஷனரிச் செய்திகள் பிரசங்கியுங்கள்.
ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர்கள் — மிஷனரிச் சரிதைகள்,
மிஷனரி மாநாடுகள் நடத்துங்கள்.
மிஷனரிகள் & மிஷனரித் தலைவர்களை அழைப்பியுங்கள்.
வாலிபர், நங்கையரைப் பணிக்களங்களுக்கு அனுப்பிவையுங்கள்.
மிஷனரிகளை எழுப்ப குறிகள் நியமியுங்கள்.
மிஷனரிப் பணிக்காய்க் கிரமமான கூடுகைகள்.

■ *முடிவுரை*

இது குறைகூறல் அல்ல, கரிசனை கொள்ளல்.
திருத்திக்கொள்வதற்கானது.

— ஆத்துமாக்களுக்காய் அழுது புலம்புங்கள்.
— ஆத்துமாக்களைக் கர்த்தருக்காய் ஆதாயம்பண்ணுங்கள்.
— ஆத்துமாக்களைத் தேடிச் செல்லுங்கள்.
— ஆத்துமாதாய மிஷனரிகளைப் பெற்றெடுங்கள்.

அப்பொழுது பரிதாபங்கள் பரவசங்களாய் மாறும்
(The tragedies will become triumphs.)

121

ஆலயக் கட்டிடங்கள் யாருக்கு?

What a Church Building should be

முகவுரை

- தேவன் கட்டிடங்களைப் புனிதப்படுத்துவதுமில்லை;
  அவைகளில் தங்கியிருப்பதுமில்லை —
  அப் 7:47-49 ... ஸ்தேவான் ...
  அவனது இரத்தசாட்சிப் பிரசங்கத்தில்கூட!

ஏனெனில் அவர்கள் ஆலயத்தின் தேவனையல்ல,
தேவனது ஆலயத்தையே கும்பிட்டுக்கொண்டிருந்தனர்!
(கடவுள் பிள்ளைகள் vs. கோயில் பிள்ளைகள்)

புதிய ஏற்பாட்டில் —
ஆலயம் = "உடல்" — *"இந்த ஆலயத்தை இடியுங்கள்"*
(யோ 2:19-21)
கிறிஸ்துவின் உடல் மட்டுமல்ல ...
"நீங்கள் தேவனுடைய ஆலயம் என்று அறியீர்களா?"
(1 கொரி 3:16; 6:19)

சபை = "மக்கள்" — *"ஜீவனுள்ள கற்கள்"*
(1 பேது 2:4,5)

எனவே, நமது ஆலயக் "கட்டிடங்கள்"
மக்களின் தேவைகளைச் சந்திப்பவையாயிருக்கவேண்டும்:
ஏழுவித மக்களுக்கு அது பயன்படவேண்டும் —

1. ஜெபிப்பவர்களுக்கு ஒரு வீடு (A House for Supplicators)

- *"ஜெப வீடு"* — மாற் 11:15-17
  அங்கு முக்கிய நிகழ்வு: ஜெபம்
  பங்குபெறுவோர்?
  ஞாயிறு ஆராதனை vs. வார நாட்கள் ஜெபம்
  பேதுருவும் யோவானும் ... *"ஜெப வேளை"* (அப் 3:1)
  தேவனுக்குத் தூபவர்க்கம் — (வெளி 8:3,4)

மக்களாலேயே இடம் முக்கியத்துவம் பெறவேண்டும்;
இடத்தினால் மக்களல்ல!
(மத் 18:19,20) ... *2 அல்லது 3 ... அவர்கள் நடுவில் ...*

2. *பாடுவோர்க்கு ஒரு வீடு* (A House for Singers)

- ஆனந்த ஆராதனை (ஏசா 56:7)

  பெந்தெகொஸ்தேக்குமுன்: லூக் 24:52,53
  பெந்தெகொஸ்தேக்குப்பின்: அப் 2:46,47

  ''ஆனந்த சத்தமிடுங்கள்!'' (சங் 89:15; 95:1; 98:6)
  சங்கீதங்களைச் சத்தமாய் மாறி மாறி வாசியுங்கள்.

  சமதளப் பரிமாணம் எங்கே? (எபே 5:18-20)

3. *மாணவர்க்கு ஒரு வீடு* (A House for Students)

- திருமறையைக் கற்பிக்கவும் கற்கவும் ஒரு வீடு —
  லூக் 19:46-48
- *''வானம் ... சிங்காசனம் ... வசனம்''* (ஏசா 66:1,2)
- பரிதாப நிலை (1 சாமு 3:1-3)

  குகைகளில் ''செய்தியோடு'' (message) ஆரம்பித்த
  திருச்சபை கத்தீட்ரல்களில் ''பணத்தோடு'' (money)
  முடிவடைந்துவிட்டதோ?
  20 நிமிடப் பிரசங்கம் போதுமான உணவா?

  போதனை நேரம் குறைந்துவிட்டது: (பிர 5:1)
  அன்னா ... காய்பா ... யோவான் (லூக் 3:2)

4. *பரிசுத்தவான்களுக்கு ஒரு வீடு* (A House for Saints)

- பரிசுத்தப்படவும் சுத்திகரிக்கப்படவும் ஒரு வீடு —
  எரே 7:4-11

  நியாயத்தீர்ப்பு துவங்குவது தேவனது வீட்டில் —
  1 பேது 4:17

  எ.கா.) முதல் நியாயத்தீர்ப்பு (அப் 5:1-11)
  எங்கு? *சாலொமோனின் மண்டபம்* (வச 12)
  நுழைவு வாயிலிலேயே!

- *நியாயத்தீர்ப்பின் சிங்காசனங்கள்* (சங் 122:1,5)
  கூடின இடங்களிலெல்லாம் ஆதிச்சபை அப்பம் பிட்டது
  ... தற்பரிசோதனைக்கு ஏற்ற வேளை

5. *துன்புறுவோர்க்கு ஒரு வீடு* (A House for Sufferers)

- சுகம் பெறவும் இளைப்பாறுதலடையவும் ஒரு வீடு —
  மத் 21:12-14

  அலங்கோலக் காட்சி: *''அலங்கார வாசல்''* (அப் 3:1,2)

  தேவ வல்லமை பாய்வதற்குத் தடை —
  ''அங்கே ஒரு நதியுண்டு'' (சங் 46:4)

  நாம் கூடும்போது இருக்கும் தேவப் பிரசன்னம்
  அற்புதங்களைச் செய்கிறது (லூக் 5:17)

- ஒருவருக்கொருவர் ஊழியம் —
  யாக் 5:16 ... *ஒருவருக்கொருவர் அறிக்கை ... சுகம்!*

6. *தொண்டர்களுக்கு ஒரு வீடு* (A House for Servants)

- ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுமிடம் —
  எபி 10:19-21,24,25

  அ) நல்ல சொற்கள் — புத்திசொல்லுதல்
  ஆ) நல்ல செயல்கள் — ஊக்குவித்தல்

  ''சேவை பெற அல்ல, சேவை செய்ய'' (மாற் 10:45)
  எ.கா.) கூடிவந்தபோது கால் கழுவிவிட்ட இயேசு (யோ 13:1-5)

  எனக்கு என்ன **''கிடைக்கும்''** என்பதல்ல,
  என்ன **''கொடுப்பேன்?''**

  அப் 20:35 ... *''பெறுவதைவிடக் கொடுப்பதே பாக்கியம்''*

7. *அந்நியருக்கு ஒரு வீடு* (A House for Strangers)

ஏசா 56:3,6,7 ... *அந்நியர் ... அண்ணகர்*

- சாலமோனின் ஆலயப் பிரதிஷ்டை ஜெபம் —
  1 இரா 8:41-43 ...
- இயேசு சொன்ன உவமை ... லூக் 14:21-23
  என் வீடு ... ஏழைகள் ... சப்பாணிகள் ... குருடர்

  உள்ளே வந்ததும் நாம் *அந்நியரல்ல* —
  எபே 2:19-22 ... *இனி தேவனுடைய வீட்டார்*

- ‘‘தனது அங்கத்தினரல்லாதோரின் நலனுக்காய் இயங்கும் ஒரே அமைப்பு திருச்சபைதான்’’ — ஜான் வெஸ்லி
  ‘‘வேறே ஆடுகள் ... மந்தைக்குள்’’ (யோ 10:16)
- சபை: பயிற்சிக்களம், போர்க்களமல்ல!

  மிஷனரிகளைப் பயிற்றுவிக்காத சபை இருந்தெதற்கு?
  மிஷனரிகளைத் தாங்காத பணம் இருந்தெதற்கு?
- ஓரங்கட்டப்பட்டோரைத் தேடிச் செல்லுங்கள் —
  மத் 25:34-36,40 ... *நான் பசியாயிருந்தேன் ...*
- தந்தையின் வீட்டில் நடனக் களிப்பு (லூக் 15:25)
  99 பாவிகள் vs. ஒரு பாவி ... ஓர் ஆடு
- தினமும் ஆத்துமாக்கள் சேர்க்கப்பட ஜெபியுங்கள், உழையுங்கள் —
  நடபடிகளில் சபை எனும் பதம் முதலாவது வருவது:
  ‘‘இரட்சிக்கப்பட்டோர் சபையில் சேர்க்கப்பட்டனர்’’ (2:47)
  நகர்ந்துகொண்டேயிருங்கள்!

■ *முடிவுரை*

எந்த ஆலயக் கட்டிடமும் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காகவே பயன்படுகிறதா என்று சோதித்துப் பார்க்கவேண்டும் —

1. ஜெபம்	Supplication
2. தொழுகை	Singing
3. வேத பாடம்	Study of Scripture
4. சுத்திகரிப்பு	Sanctification
5. துன்புறுவோர்	Sufferers
6. தொண்டு	Service
7. அந்நியர்	Strangers / Sinners

இல்லையேல் அது அருங்காட்சியகமாய் (நினைவுச் சின்னமாய்) மாறிவிடும்!

122

திருவிருந்துக்குமுன் தற்பரிசோதனை

Self-examination before the Lord’s Supper

முகவுரை

- திருச்சபையில் ஆவிக்குரிய அர்த்தத்தை இழக்கும் நியமனங்கள் நாளாவட்டத்தில் விக்கிரகங்களாகிவிடுகின்றன —
  எ.கா.) வெண்கல சர்ப்பம் (2 இரா 18:4)
- **கடைசி விருந்தைச்** (Last Supper) சுவிசேஷங்களின் ஆக்கியோன்கள் சரித்திரமாய் எழுதியுள்ளனர் —

  அப்போஸ்தலன் பவுல் அதைக் **கர்த்தருடைய பந்தி** (Lord’s Supper) என்றழைத்து ஆவிக்குரிய அர்த்தம் கொடுத்துள்ளார்.

  இதன் முழுப் பொருளையும் விளங்கிக்கொள்ள
  ஒன்றை ஒன்றின்மேல் வைத்துப் பார்க்கவேண்டும்.
- கர்த்தரது பந்தியில் பங்குபெறுவதற்குப் பிரதானமான ஆயத்தம்: **தற்பரிசோதனை** —
  1 கொரி 11:28

எதைப் பரிசோதிக்கவேண்டும்? —

1. உங்கள் சகவுறவுகளைப் பரிசோதியுங்கள்.

1 கொரி 11:17-21

- பிறரை அவமதித்தல் (வச 22,23)
  கிறிஸ்துவின் உடலாம் சபையில்
  ஒவ்வொருவரும் அருமையான உறுப்பினர்.
  ‘‘கையைப் பார்த்துக் கண் சொல்லமுடியாது’’
  (1 கொரி 12:20,21)
- ஒருவருக்கொருவர் போட்டா போட்டி
  லூக் 22:20-26
- பதிலுக்குப் பதில் செய்தல்
  யோ 18:10,11
  ஒருவரோடொருவர் ஒப்புரவாகுங்கள்.
  ஒரே அப்பம், எனவே ஒரே சரீரம்.

2. கர்த்தரோடுள்ள உங்கள் உறவைப் பரிசோதியுங்கள்.

1 கொரி 11:23 ... *''அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே''*

- உங்கள் ஜெப வாழ்வு எப்படியிருக்கிறது?
  கெத்செமனேயில் இயேசுவுக்குச் சீடர் ஏமாற்றமளித்தனர்.
- திருமறைத் தியானத்தில் கிரமமாயிருக்கிறீர்களா?
  திருமறையே திருவார்த்தை.
  வச 23 ... *''நான் கர்த்தரிடம் பெற்றது ...''*
- உங்கள் வழிகளிலெல்லாம் கர்த்தரை நினைக்கிறீர்களா?
  வச 24,25 ... *''என்னை நினைவுகூரும்படி ...''*
  உணர்வுள்ள உறவுடன் தேவனோடு நடைபோடுதல்.

3. உலகத்தோடுள்ள உங்கள் உறவைப் பரிசோதியுங்கள்.

1 கொரி 11:32

- உலகின் அசுத்தங்களிலிருந்து விலகி வாழ்கிறீர்களா?
  1 கொரி 10:21,22
  அந்தகாரத்தின் செயல்பாடுகள்
- உலகிற்குமுன் வெட்கமின்றிக் கர்த்தரை அறிக்கையிடுகிறீர்களா?
  — பேதுருவின் தோல்வி (மத் 26:69-75)
  — இவ்வுலகிற்குமுன் நாம் வெட்கப்பட்டால் ... (மாற் 8:38)

■ *முடிவுரை*

இவ்விதத் தற்பரிசோதனை விளையாட்டல்ல —
1 கொரி 11:28-31 ... *வியாதி ... மரணம் ...*

■

கர்த்தரின் பந்தியில் வா — சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா!

தேவ அன்பைப் பாரு — கிறிஸ்துவின் சீஷர் குறை தீரு;
பாவக் கேட்டைக் கூறு — ராப்போசன பந்திதனில் சேரு;
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே!
(கீர்த்தனை 306)

123

ஒருமனம், ஒற்றுமை

The Steps to Christian Unity

முகவுரை

- வெளியிலிருக்கும் எதிரிகளைவிட உள்ளேயே இருக்கும் சத்துருக்களே நம்மைப் பலமிழக்கச் செய்கின்றனர் — மத் 12:25
- திருச்சபையின் அனைத்துப் பிரச்னைகளிலும் அதிமோசமானது ஒருமனமின்மை, பிரிவினை —

எ.கா.) பிரச்னை நிறைந்த கொரிந்து சபைக்கு முதலும் முடிவுமாய்ப் பவுல் எழுதியது —
1 கொரி 1:10,11
2 கொரி 13:11

ஒற்றுமை ஏன்? — பாடம் (Theory)
ஒற்றுமை எப்படி? — செயல் (Practice)

புகைப்பவனின் கதறல்: ''ஏனென்று சொல்லாதீர்;
எப்படியென்று காட்டுவீர்!''

நடைமுறையில் ஒற்றுமை கொண்டுவருவது எப்படி?

1. தலைவர்களிடம் துவங்குங்கள்.

- சங் 133 ... *ஆரோனின் சிரசு ...*
  எர்மோன் மலை ...
- பேதுருவும் யோவானும் (அப் 3:1-4) ... ***''எங்களைப்''*** *பார்!*

2. சாத்தானே நமக்குப் பொதுவான எதிரி என்றறியுங்கள்.

- ஏழு ஒருமனப்பாட்டுக் கூறுகள் (எபே 4:4-6)
  இவை சிலவற்றில் நமக்கு வேறுபட்ட கருத்துக்கள் உண்டு —
  எ.கா.) *ஒரே ஞானஸ்நானம் ... ஒரே ஆவியானவர்*
  ''ஒரே எதிரி'' எனவும் சேர்க்கலாமே!
- *''நமக்கு விரோதியாயிராதவன் நம்மோடுதான்''* (லூக் 9:49,50)
- சத்துரு பிரிந்திருக்கவில்லை — மத் 12:26

எ.கா.) — *''இன்னும் 7 ஆவிகளைக் கூட்டிவருவேன்''*
(மத் 12:43-45)
— *''எங்களைப் பன்றிகளுக்குள் அனுப்பும்''* —
''லேகியோன்'' = குறைந்தது 2000 பிசாசுகள்
(ஆடுகளுக்குள் போகலாமா, கழுதைகளுக்குள்
போகலாமா என்று விவாதமில்லையே!) மாற் 5:9-13

3. காலத்தின் நிலையை மக்கள் புரியச் செய்யுங்கள்.

- 3 குழுவினர் — காரியங்களை நடப்பிப்போர்
  நடப்பதைப் பார்த்துக்கொண்டிருப்போர்
  நடப்பதையே அறியாதோர்

  ''அமைதிப் பெருபான்மையினர்'' (Silent majority)

  மக்களுக்குப் போதுமான அளவு சொல்லப்படாததினாலேயே
  போதுமான அளவு செயல்படாமலும் இருக்கின்றனர்.

- நெகேமியா

  நெகே 2:17,18 ... *எழுந்து கட்டுவோம், வாருங்கள்*
  4:6 ... *வேலை செய்ய மக்களுக்கு மனது*
  8:1 ... *மக்கள் ஒரே மனிதன்போல் நின்றனர்.*

தினசரிச் செய்திகளை திருவசனத்தின் அடிப்படையில் பாருங்கள்.
பிரசங்க பீடத்தில் பொருத்தமாய், அர்த்தமாய்ப் பேசுங்கள்.

4. நற்செய்திப்பணியைப் பொதுமேடையாய்க் கொள்ளுங்கள்.

- ''சாட்சி பகர ஒற்றுமை'' என்று சில அமைப்புகள் சேர்ந்துள்ளன.
  (United to witness) ஒற்றுமை வந்தது, சாட்சி போனது!
- யோ 17:20,21 ... இவ்வுலகில் நாம் ஒருமனப்படுவது ...
  13:35 ... *நீங்கள் என் சீடரென்று எல்லாரும் அறிவர்*
- *"Rescue the perishing"* (அழிவோரைத் தூக்கியெடுப்போம்!)
  — பேன்னி கிராஸ்பி அம்மையாரின் 8000 பாடல்களில்
  உன்னதமானது.
  — கப்பலில் சண்டையிட்டுக் கொண்டிருந்த கப்பலோட்டிகள்
  கடலில் தவறி விழுந்த பயணியைத் தூக்க ஒன்று சேர்ந்தனர்.

5. பிறரது பலத்தை மதியுங்கள்.

(நாம் பொதுவாகப் பிறரது குறைகளையே சுட்டிக் காட்டுவோம்.)

- புறவினத்தாருக்கு நற்செய்தியறிவிப்பதில் பவுல் தேறினவர்.
  யூதருக்கு நற்செய்தியறிவிப்பதில் பேதுரு தேறினவர்.
  (கலா 2:8)
- யோவாப் — அபிசாய் / சீரியர் — அம்மோனியர்
  (2 சாமு 10:9-12)
- *''இரும்பை இரும்பு கூர்மையாக்கும்.''*
  (நீதி 27:17)
- *வார்த்தை ... அடையாளங்கள் ... செய்கைகள்* (ரோ 15:18,19)
  (விசுவாசிகள் சபை) (பெந்தெகொஸ்தே சபை) (புராதன சபை)
- பவுலின் ஞானத்தை மெச்சும் பேதுரு —
  (2 பேது 3:15,16)

6. ஊழியச் சங்கங்களோடு நட்புடனிருங்கள்.

(Para-Church Organisations)

- "Para" = உதவ அருகிலிருப்பவர்
  எ.கா.) "Paraclete" — உதவியாளர் — பரிசுத்த ஆவியானவர்
  பிதா — குமாரன் — பரிசுத்த ஆவி
  செயல்களில் வேறுபாடு, செயல்படுவதில் ஒன்றிப்பு
  (யோ 17:21 / 1 கொரி 12:4-6)
- எபே 4:13 ... உள்ளூர் ஊழியம் vs. சுற்று ஊழியம்
  (Local ministry/Translocal ministry)
  பவுல் vs. அப்பொல்லோ
  மீனவர் vs. மேய்ப்பர்
  பாறை உடைப்போர் vs. சிலை செதுக்குவோர்
- சபைகளுக்குச் சங்கங்கள் பதிலானவையல்ல, பக்கபலமானவை.
  சங்கத்தினரின் விறுவிறுப்பான செயல்பாடுகளால்
  போட்டி என அஞ்சிவிடாதீர்.
- சபைகளுக்கிடையே சங்கங்கள் ஒரு பாலம்.

7. சிறு குழுக்களில் ஒருமனத்தை அப்பியாசியுங்கள்.

- 2 அல்லது 3 → 120 → 3000 → 5000
  அப் 1:14,15   2:41,44   4:4,32
- சிறு குழுக்களின் தன்மையே பெரிய குழுக்களிலும்
  கூடுகைகளிலும் பிரதிபலிக்கும்.
- எ.கா.) வீட்டு ஜெபக் குழுக்கள்.
  உள்ளூர் மேய்ப்பர்கள்/தலைவர்கள் ஐக்கியம்

8. ஆன்மீக நீதியிலேயே ஒருமனம் நாடுங்கள்.

- ஐக்கிய சங்கம் (union) அல்ல, ஐக்கியம் (unity).
  சபையென்பது ஒரு ''கிளப்'' (club) அல்ல, உடல்.
  ஒன்றுபோலிருத்தல் (sameness) அல்ல, ஒருமனம் (oneness).
  ஒரே விதம் (uniformity) அல்ல, பல்வகை (diversity).
  வேற்றுமையில் ஒற்றுமை! (Unity in diversity!)
- ஈசாக்கு x இஸ்மவேல் (ஆதி 21:10 / கலா 4:30 / ரோ 9:8)
  மாடு x கழுதை (உபா 22:10)
- *ஆவியின் ஒருமைப்பாடு* → *விசுவாசத்தின் ஒருமைப்பாடு*
  (எபே 4:3)   (4:11)
  ''காத்துக்கொள்ளவேண்டியது''   *''அடையவேண்டியது''*

  இங்கு துவங்காவிடில் எங்கும் செல்லமுடியாது!

9. சிலுவையை மையமாய்க் கொள்ளுங்கள்.

யூதர் — புறவினத்தார்

✝

(எபே 2:14,16)

- *''பவுலா உங்களுக்காய்ச் சிலுவையிலறையப்பட்டான்?''*
  1 கொரி 1:13
- தச்சுப்பட்டறையில் ஆயுதங்களிடையே வாக்குவாதம்.
  எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்தித் தச்சன் ஒரு
  சிலுவை செய்து அதின்மேல் மரித்தார்!

10. பரிசுத்த ஆவியின் எழுப்புதலுக்காய் ஜெபியுங்கள்.

- எசேக் 37 ... எலும்புப் பள்ளத்தாக்கு
  வச 15-17, 22,24
  யூதாவும் யோசேப்பும் — இரு கோல்கள்
  ஒரே கோலாயின!
- பெந்தெகொஸ்தேயின் விளைவு —
  அப் 2:44 ... *விசுவாசித்தவர்கள் யாவரும் ஒருமனம்*
  3:1 ... *பேதுருவும் யோவானும் சேர்ந்து ...*
  4:24 ... *ஒருமனதாய்ச் சத்தமிட்டு ஜெபம்.*
  4:32 ... *திரளானோர் ... ஒரே இதயம் ... ஒரே மனது*
- தனித்தனி வேலிகளுக்குள்ளிருந்த வாத்துக்கள் நீர் மட்டம்
  உயர்ந்ததும் கூடி நீந்தத் துவங்கின!

— ஒருமனம் கொண்டுவருவது சுலபமல்ல ...
''பலத்தினாலும் அல்ல ... என் ஆவியினாலே ஆகும்''

— நடக்க முடியாத ஒன்றிற்காகவா இயேசு ஜெபித்தார்? (யோ 17:21)

— தேவனின்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது;
நம்மை விட்டுவிட்டு அவர் ஒன்றும் செய்யமாட்டார்!

■ *முடிவுரை*

ஒருமனம், ஒற்றுமையின் ஆசீர்வாதம் —
ஒருவன் துரத்துவது 1000 பேர்;
இருவர் துரத்துவது 10,000 பேர் (உபா 32:30)

ஒரு குதிரை இழுப்பது 2 டன்;
இரு குதிரைகள் இழுப்பது 23 டன்!

(பல சபைகளின் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் கூடுகையொன்றில் 2000இல் ஆசிரியர் கொடுத்த இச்செய்தி அவரது ''ஊழியரும் மக்களும்'' என்ற நூலில் 11ஆம் அத்தியாயமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளது.)

124

மணமகளை ஆயத்தப்படுத்தும் தூயாவியானவர்

How the Holy Spirit prepares the Bride

முகவுரை

- ☐ கிறிஸ்துவின் முதல் வருகைக்கு *''மக்களை''* ஆயத்தப்படுத்த யோவான் ஸ்நானகன் வந்தார்.
- ☐ கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு *''மணமகளை''* ஆயத்தப்படுத்த பரிசுத்த ஆவியானவர் வந்துள்ளார்.
- ☐ கிறிஸ்துவின் இறுதிப் பிரசங்கம் ஆவியானவரைப் பற்றியதே (யோ 16)
- ☐ பிதாவாகிய தேவன் மனிதனோடு நித்திய உறவை வாஞ்சிக்கிறார்; மணமகனாகிய கிறிஸ்து அவ்வுறவுக்கு ஓரிடம் ஆயத்தம் பண்ணுகிறார்; பரிசுத்த ஆவியானவர் அவ்வுறவுக்கு மணமகளை ஆயத்தம்பண்ணுகிறார்.

இவ்வுறவுக்கு ஆவியானவர் மணமகளை ஆயத்தபண்ணும் விதம் —

1. விடுதலை (Liberty)

☐ ரோ 7:1-6

நியாயப்பிரமாணம் எனும் ஒரு கணவனிடமிருந்து விடுவிக்கப்பட்டு கிறிஸ்து எனும் வேறொருவருடன் இணைப்பு.

''ஆளுகை , கட்டு'' — ''விடுதலை''
''மரணத்துக்கேதுவான கனிகள்''—''தேவனுக்கென்று கனி''
''பழமையான எழுத்து'' — ''புதுமையான ஆவி''

☐ 2 கொரி 3:3,14-17

''கற்பலகைகள்'' — ''சதையான பலகைகள்''
''இருதயம்மீது முக்காடு'' — ''எடுபட்டுவிட்ட முக்காடு''

(ரெபெக்காளின் முக்காடு — ஆதி 24:65)

***ஆவியாயிருக்கிற** கர்த்தரிடம் திரும்புகையில், முக்காடு எடுபட்டுப்போகிறது.*

வேறு வார்த்தைகளில் —

☐ சக 4:6 — (சுய)*பலத்தினால் அல்ல ...*
என் ஆவியினால் ஆகும் ...

ரோ 8:2,3 — *கிறிஸ்துவின் **ஆவி** என்னை விடுதலையாக்கிற்று*

☐ எனவே, பிரமாணக் கொள்கைக்கு விலகியோடுங்கள்!

☐ பவுலின் புலம்பல் —

2 கொரி 11:2-4 — ஒரே கணவராம் கிறிஸ்துவின் உண்மை/எளிமை

:13-15 ... *ஒளியின் தூதன்* மற்றும் கள்ள ஊழியக்காரர்... வஞ்சகம்

கொலோ 2:16-23 — *மாயமான தாழ்மை,*
காணாதவைகளில் துணிவான நுழைவு,
சுயவிருப்ப ஆராதனை,
சரீர ஒடுக்கம், முதலியன.

கலா 3:3 — *ஆவியில் துவங்கி, மாம்சத்தில் முடிவு*

மறுபடி *நுகம் அல்ல, சுயாதீன நிலை!* (கலா 5:1)

(20ஆம் அத்தியாயக் குறிப்புகளைப் படியுங்கள்.)

2. அச்சாரம்/உத்தரவாதம் (Guarantee)

☐ பல வசனப் பகுதிகள் —

2 கொரி 1:21,22 ... *ஆவியென்னும் ''அச்சாரம்''* (Seal)
5:5 ... *ஆவியென்னும் ''அச்சாரம்''* (Guarantee)

எபே 1:13,14 ... *ஆவியால் ''முத்திரை''* (Guarantee)
4:30 ... *ஆவியாகிய ''முத்திரை''* (Seal)

☐ இதன் பொருளென்ன?

— தேவனுடைய பிள்ளைகள் எனும் நிச்சயம்
ரோ 8:15,16 / மத் 3:16,17

— தேவ மகிமையின் ஐசுவரியத்தைச் சுதந்தரிக்க நிச்சயம்
எபே 1:13,14,15,18

(மரண சாசனத்தில் எழுதியுள்ளவைகளை ஆவியானவர் வெளிப்படுத்தி, அவ்வப்போது நிச்சயப்படுத்துகிறார்.)

— சாவாமையைத் தரித்துக் கிறிஸ்துவோடு வாழப்போகிறோம்
எனும் நிச்சயம் (2 கொரி 5:1-7)

கண்டவுடன் காதலித்து, வாக்குகளை அள்ளிவீசி,
திடீரென்று கைவிடும் நவீன வாலிபன் போன்றவரல்ல கிறிஸ்து!

நிச்சயதார்த்தத்திற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில்
ஆவியானவர் **பொறுமையும், மனவுறுதியும்** தருகிறார்.

3. *அன்பு* (Love)

- ரோ 5:5 — இறையன்பு எழுத்தின்படி *''ஊற்றப்பட்டுள்ளது.''*
  எபே 3:16-19 — *அன்பில் வேரூன்றி* ... ஆவியானவரால்
  அந்த அன்பை உணர்ந்துகொள்வது

  நமது இதயங்களில் கிறிஸ்து குடிகொண்டுள்ளதை ஆவியானவர்
  நமக்கு உணர்த்தியவண்ணமிருக்கிறார்.
  (விண்ணில் அல்லவோ கிறிஸ்து அமர்ந்திருக்கிறார்!)
  எபே 3:17

- பரலோக மணமகனைப் பற்றிய மேன்மைகளை ஆவியானவர்
  நமக்கு வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்;
  எனவே அவர்மீதுள்ள அன்பு வளர்ந்துகொண்டேயிருக்கிறது —

  யோ 16:14,15 — இயேசு எவ்வளவு ''செல்வந்தர்'' ...
  1 கொரி 12:3 — இயேசு எவ்வளவு ''பெரியவர்'' ...
  1 கொரி 2:9-12 — இயேசு எவ்வளவு ''மகிமையானவர்'' ...
  என்றும் அவரை ''நேசிக்கும்'' நமக்காய்
  ஆயத்தபண்ணப்படுவதையும்
  வெளிப்படுத்துகிறார் (யோ 14:2,3)

  ஆபிரகாமையும் ஈசாக்கையும் குறித்து லாபானிடம்
  வேலைக்காரன் எடுத்துச் சொல்லி ரெபெக்காளைக் கவர்ந்தான் —

ஆதி 24:22,23	மணமகனைப் பார்க்கும் முன்னரே
:28-32	பொன்னும் வெகுமதிகளும் கொடுக்கப்பட்டன.
:35,36	வீட்டிற்குப் போனபின்
:50,51,53	மணமகளுக்கு என்னவெல்லாம்
:55-58	கிடைத்திருக்குமோ!

4. *பேச்சு வார்த்தை* (Communicaton)

இதய அன்பு வாயின் ஜெபத்தினாலும்
துதியினாலும் வெளிப்படும்.

அ) ஜெபம்

- ரோ 8:26,27 — (i) ஆவியானவர் உதவுகிறார்!
  ஆவியானவரோடு ஜெபம்
  (ii) ஆவியானவரே ஜெபிக்கிறார்!
  ஆவியானவரால் ஜெபம்

  நம்மை அதிகமதிகமாய் ஆவியின் கட்டுப்பாட்டிற்கு ஒப்புக்
  கொடுத்து அவர் சித்தம் செய்வதால் இது சாத்தியமாகிறது.

பரவச அனுபவங்கள் நடுவில் இந்த ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர்.

- எபே 6:18
  யூதா 20 | — (iii) ஆவியானவருக்குள் ஜெபம்

  இதற்குத் தேவனளித்துள்ள ஏதுக்களில் ஒன்று நவநாவுகள் —
  (1 கொரி 14:2,14)

  உன் 7:9 — *உறங்குவோரையும் பேசப்பண்ணும் நல்ல திராட்சரசம்*
  மணமகன்-மணமகள் பேசும் நேச வார்த்தைகள் (1 கொரி 14:2)

  ஜெப வாஞ்சையையும் ஊக்கத்தையும் அதிகரிப்பது ஆவியானவரே.

ஆ) துதி

- எபே 5:18-20 ... *பாடித் துதித்துக் கீர்த்தனம்பண்ணி ...*
  (பிராமண மணப்பெண்கள் பாடணும், ஆடணும்!)

  அப் 2:4,11 ... நவநாவுகளால் *தேவனுடைய மகத்துவங்கள்*
  (துதி, விண்ணப்பத்தின் தரத்தை ஆவியானவர் உயர்த்துகிறார்.)

5. *நடத்துதல்* (Guidance)

மூன்று பகுதிகளில் —

அ) அனுதினக் காரியங்கள் (ரோ 8:14)

அக்கினித் தூணும் மேகத் தூணும் நம்மை
நடத்தும் ஆவியானவருக்கு முன்னடையாளங்கள்.

இன்று எவ்விதம் நடத்துகிறார்?

(i) நாம் முழுவதும் விட்டுக்கொடுக்கும்போது இதயத்தில் குரல்—

நீதி 3:5,6 ... *சுய புத்தி அல்ல ... கர்த்தரில் நம்பிக்கை*
சங் 37:5,23,24 ... *கர்த்தருக்கு ஒப்புவி ... கர்த்தரால் உறுதி*

(ii) விசுவாசத்தில் அடியெடுத்து வைக்கையில், தவறினால், அவர் பின்னிருந்து நம்மைத் திருத்துவார் —

ஏசா 30:21 ... வலது புறம் ... இடது புறம் ... சத்தம்

ஆ) திருவசனத் தியானம்

யோ 14:26 | வசனத்தைப் புரிவதிலும்
16:13 | அப்பியாசிப்பதிலும் உதவி

அப் 15:28 — சூழலுக்கேற்ப வசனத்தை விளக்கித் தருவார்.
''பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் ...''
(ஆவியும் மணவாட்டியும்)

1 யோ 2:26,27 — வஞ்சகத்தை அடையாளங்காணல்

இ) திருப்பணி

அப் 13:2,3 — பணியின் துவக்கம்
8:29 — பணியில் நடத்துதல்
16:6,7 — பணியில் திருப்பம்
11:12,15,16 — பணியை உறுதிப்படுத்துதல்
(நடத்துதல், நினைவூட்டுதல் மூலம்)

இதனை ஆவியானவர் தமது வரங்கள் மூலம் செய்கிறார் —

ஞான வசனம் | எ.கா.) யோவேலிலிருந்து பேதுரு
அறிவு வசனம் | மேற்கோள் காட்டியது (அப் 2:16,17)
| ஆமோஸிலிருந்தும் பேதுரு சொன்னதையும்
| யாக்கோபு மேற்கோள் காட்டியது (அப் 15:13-17)

தீர்க்கதரிசனம் உரைத்தல்,
ஆவிகளைப் பகுத்தறிதல், முதலியன.

6. ஆற்றுதல்/தேற்றுதல் (Comfort)

☐ மணமகளின் பூவுலக வாழ்வு வேதனையற்றது அல்ல. எனவேதான் பரலோகத் தேற்றரவாளனை இயேசு அனுப்பினார் —
யோ 14:16,18; அப் 9:17

☐ ஏசா 59:19 ... சத்துருவின் **வெள்ளத்தை** ஆவியானவர் தடுக்கிறார்.
1 பேது 4:14 ... **நிந்தைக்கெதிராய்** அவர் மகிமையின் ஆவியானவர்.
அப் 20:22,23 ... **பாடுகள்** வருமுன்னரே ஆவியானவர் நம்மை ஆயத்தப்படுத்திவிடுகிறார்.

☐ ஏசா 63:9,10,14 — மணவாட்டியின் **பாடுகளில்** ஆவியானவர் பங்குகொள்கிறார்.
ரோ 8:18,23,26 — நமது **பலவீனங்களிலும்** துன்பங்களிலும் ஆவியானவர் உதவுகிறார்.
சோர்புறும் மணவாட்டிக்கு மணவாளனின் நித்திய இரக்கத்தை ஆவியானவர் நினைப்பூட்டுகிறார் (ஏசா 54:5-8)

7. மறுரூபமடைதல் (Transformation)

☐ 2 கொரி 3:18 — ஆவியினாலே மறுரூபமாக்கப்படுறோம்.
4:4 — பிதாவின் சாயலானவரே மணமகன்.
3:18 — மணமகனின் சாயலாக மணமகள் மாறுகிறாள்.

☐ ஆவியானவர் இதை எவ்விதம் செய்கிறார்? —

அ) சோதனையில் வெற்றி (லூக் 4:1,2,13,14)
ஆ) நற்குணங்களை உருவாக்குதல் (எபே 5:8,9)
இ) வரங்கள் மூலம் பக்திவிருத்தி (1 கொரி 12:7)
ஈ) ஊழியங்கள் மூலம் வளர்ச்சி (அப் 20:28 / எபே 4:11-13)

எல்லாவற்றின் முடிவான உச்சக்கட்டம்

☐ ரோ 8:28-30 ... *சகலமும் நன்மைக்கென்றே ...*

— நமது வாழ்வில் தேவன் அனுமதிக்கும் சகல காரியங்களின் முடிவான நோக்கு ...

அதாவது, **''மணமகள் மணமகனைப் போலாகிறாள்!''**

H

125

திருவசனத்தை வல்லமையாய்ப் பிரசங்கிப்பதெப்படி?

How to Preach God's Word effectively

முகவுரை

- சபை மேய்ப்பரின் பிரதான பணி —
  மந்தையை மேய்த்திடுங்கள் (1 பேது 5:1,2; சங் 23:1,2)
  தேவனது அதிருப்தி (எசேக் 34:1-3)
- பிரசங்கிப்பது இரு ஆயத்தங்களை உள்ளடக்கியது —
  அ) பிரசங்கியார் ஆயத்தம்
  ஆ) பிரசங்கம் ஆயத்தம்

(அ) பிரசங்கியார் ஆயத்தம்

i) திருமறையைக் குறித்த சரியான மனப்பான்மை

- பைபிள்தான் தேவனுடைய வார்த்தை.
  பிழையின்மை, அகத்தூண்டுதல், தவறாமை.
  இதுதான் *''முந்தி'' அறியவேண்டியது* — 2 பேது 1:20,21
- பைபிள்தான் பிரதானமானது (Supreme)
  சங் 138:2 ... *வார்த்தையை மகிமைப்படுத்தியிருக்கிறீர்.*
  ''ஆதியிலே வார்த்தை இருந்தது''
  சபையிலிருந்து பைபிளுக்கு அல்ல,
  பைபிளிலிருந்துதான் சபைக்கு அதிகாரம் கிடைக்கிறது.
  பாரம்பரியங்களெல்லாம் அதற்கடுத்தவையே —
  மத் 15:3-6 ... *பாரம்பரியங்கள் ... தேவ வசனம்*
- பைபிளே போதுமானது (Sufficient)
  கூட்டாதே, குறைக்காதே, மாற்றாதே!
- சொப்பனங்கள், தரிசனங்கள், அனுபவங்களைவிட
  முக்கியமானது — எரே 23:28,29 ... *கோதுமைக்குமுன் பதர் ...*
  2 பேது 1:16-21 ... பேதுருவின் அனுபவம்
- திருமறைச் சார்புதான் ஊழியத்தை நிர்ணயிக்கும் —
  ☐ *புத்தியுள்ள மனிதன்* (மத் 7:24,25)
  ☐ *புத்தியுள்ள சிற்பாசாரி ... அக்கினி* (1 கொரி 3:9-15)

- தனது பிரசங்கங்களில் பில்லி கிரஹாம் அடிக்கடி சொல்வது —
  "The Bible says ... " ... ''பைபிள் சொல்லுகிறதாவது ...''

ii) திருவசனத்தின்படியான வாழ்க்கை

- உனக்கு என்ன உரிமை உண்டு?
  சங் 50:16-20
- உனக்கு நீயே போதியாமலிருக்கலாமா?
  ரோ 2:17-24
- பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன்
  2 தீமோ 2:6 (அவன் பயனடையாது
  மக்கள் பயனடைவது எங்ஙனம்?)
- வேதபாரகரைப்போல் இயேசு உபதேசிக்கவில்லை
  மத் 7:28,29 ... *அதிகாரம்*
  ஏனெனில் — மத் 23:1-4 (ஊருக்குத்தான் உபதேசம்!)
- *நான் ஆகாதவனாய்ப் போகாதபடி ...*
  1 கொரி 9:27 ... *என்னை ஒடுக்கி ...*
- சோதனைகளை மேற்கொள்ளத் திருவசனத்தை
  இயேசு தமது வாழ்விலேயே பயன்படுத்தினார் (மத் 4:4,7,10)

iii) பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

- இயேசு: *ஆவியானவர் என்மீதிருக்கிறார்* — லூக் 4:16-19
- *எருசலேமில் காத்திருங்கள்* — லூக் 24:46 49
  திருவசனத்தைத் தைரியமாய்ப் பிரசங்கித்தனர் — அப் 4:31
- ஆவியின் வரங்கள் — 1 கொரி 12:7-9
  ஞானம், அறிவு, தீர்க்கதரிசனம், ஆவிகளைப் பகுத்தறிதல்
- பரிசுத்த ஆவியானவரே வேதத்தின் ஆக்கியோன்
  வெறும் எழுத்து கொல்லும் ... 2 கொரி 3:6
  என் வார்த்தைகள் ... ஜீவனும் ஆவியும் ... யோ 6:63

இப்பொழுது அடுத்த பகுதிக்குள் செல்வோம் —

(ஆ) பிரசங்கம் ஆயத்தம்

i) கிரமமான வேதத் தியானம்

- தியானச் செறிவுக்காய்ப் படித்தல் (devotional)
- பகுப்பாய்வு செய்து படித்தல் (analytical)

அனுதினமும் நமது ஆத்துமாவைப் போஷிக்க வேண்டும் —
''மனிதன் பிழைக்க அப்பம் போதாது''

தினசரி அமைதி வேளை. (Daily Quiet Time)
வேத ஆராய்ச்சிக்கு வாரந்தோறும் நேரம் ஒதுக்குங்கள்.
நிர்வாகக் காரியங்களில் சிக்கிக்கொள்ளாதிருங்கள் —
(அப் 6:1-4)

வேத ஆராய்ச்சிக்கு உபகரணங்கள் —

- ☐ நல்ல மொழிபெயர்ப்பில் வேதம் (NKJV, ESV, NIV)
- ☐ ஆராய்ச்சி வேதங்கள் (Study Bibles)
- ☐ வேதாகமப் பொருளகராதி (Bible Dictionary)
- ☐ வேதாகமச் சொல்லகராதி (Concordance)

ii) உங்கள் சபையாருக்காய் ஜெபம்

எரே 9:1 ... *என் மக்களுக்காய் ... அழுவேன்*

உபவாசம் உதவியாயிருக்கும்.
இயேசு ஜெபித்தார், பிரசங்கித்தார் ... ஜெபித்தார், பிரசங்கித்தார் —
லூக் 21:37,38
5:15,16
6:12,20

கர்த்தருக்குக் காத்திருக்கையில் நமக்குக் கிடைப்பது —

- கர்த்தரின் **பாரம்** (Burden)
  ஏசா 13:1 / 15:1 / 17:1 / 19:1 / 21:1 / 22:1 / 23:1
  நிறை கர்ப்பிணியின் உணர்வுகள்
- கர்த்தரின் **வார்த்தை** (Word)
  எரே 2:1 / 7:1 / 11:1 / 14:1 / 16:1
  எலும்பில் அடைபட்ட நெருப்பு — எரே 20:9

இதயம் இதயங்களைத் தொடும்; தலை தலைகளைத்தான் தொடும்!

Logos vs. rhema: பொது வார்த்தை vs. குறிப்பான வார்த்தை
நமது பிரசங்கத்தில் தீர்க்கதரிசனக் கூர்மை வேண்டும்.

- ஆவியானவர் சொல்லுகிறவை
  வெளி 2:7,11,17,29
  3:6,13,22

iii) அடுத்து வருவது பிரசங்க வடிவமைப்பு.

பிரசங்கத்தை வடிவமைத்தல்.
முகவுரை — நடுப்பகுதி — முடிவுரை
எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் முதலியன.

பிரசங்கக் குறிப்புகள் தெளிவாக இருக்கவேண்டும்.

☐ பொருள் விளக்கப் பிரசங்கங்கள் (Topical Sermons):
மனந்திரும்புதல், சகவுறவுகள், பரிசுத்தமாகுதல்,
ஜெபம், திருமறைத் தியானம், சாட்சிபகர்தல்,
கொடுத்தல், பாடுகள், இரண்டாம் வருகை முதலியன.

☐ வசன வியாக்கியானப் பிரசங்கங்கள் (Expository Sermons)
வசனங்கள் / பகுதிகள் / அத்தியாயங்கள்.

இவற்றிற்கு நிறைய நேரம் செலவழிக்கவேண்டும்.
இங்கு ஏனோதானோ என்றிருந்தால், நாம் சபையாருக்கும்
தேவனுக்கும் முன்பாக உத்தமமாயில்லை.

(இ) பிரசங்கம் செய்தல்

- சபையாருக்குமுன் எழும்பும்போது தேவையானவை —
  ☐ நொறுங்கியிருத்தல் (1 கொரி 2:3) (Brokenness)
  ☐ தைரியம் (1 கொரி 2:4) (Boldness)
  (2 தீமோ 4:17)

- வசனங்கள் சொல்லும்போது சபையாரை எடுக்கச் சொல்லுங்கள்.
  ☐ ஆராதனைக்கு வரும்போது பைபிள் கொண்டுவர
  மக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
  (பைபிள் இல்லாத எத்தனை மொழிகள்!)

☐ வசனங்களைப் பைபிளில் எடுத்துப் பார்க்கும்போதுதான்
அவர்களது கவனம் சிதறாமலிருக்கும்.
அப் 17:10-12 ... பெரோயர்

- தீர்மானம் எடுக்க ஊக்குவியுங்கள்!
  குறி வைக்காவிடில் குறி இல்லாதுதான் போகும்!
  ஏதாவது நடக்க எதிர்பாருங்கள்!
  (தீர்க்கன் எசேக்கியேல் ... உலர் எலும்புகள் அசைந்தன!)

மக்கள் குத்தப்பட்டால் கவலைப்படாதீர் —
யோ 6:66-69 ... *அநேகர் இயேசுவை விட்டனர்.*

முன்வர அழைப்பு (Altar Call) —
திருமுழுக்கினன் யோவான் ...
''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' லூக் 3:10-14
பெந்தெகொஸ்தேயன்று பேதுரு ...
''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' அப் 2:37
இது கடலில் வீசிய வலையை இழுப்பதற்குச் சமம்.

- சபையாரது நிலையைப் புரிந்துகொள்ளுங்கள்.
  அவர்களது பிரச்னை —

☐ குறைவான போஷாக்கு (Underfeeding)
தேவனது ''முழு'' ஆலோசனையைப் போதியுங்கள் —
அப் 20:26-28
வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' ... பிரசங்கிக்கப்படவேண்டும்
வேதம் அறியாமை (Biblical illiteracy) (2 தீமோ 3:14-4:2அ)

☐ தவறான போஷாக்கு (Wrong feeding)
— இறுதிக்கால அடையாளம் ... 2 தீமோ 4:2-5
— சொகுசு வாழ்வு உபதேசம் ... பிலி 3:17-19
— வஞ்சகத் தத்துவங்கள் ... அப் 19:8-10

☐ பொருத்தமற்ற போஷாக்கு (Inappropriate feeding)
சபையாரில் பல்வகையினருக்குப் பொருத்தமான
செய்திகள் வரவேண்டும்
எ.கா.) யோவான் — 1 யோ 2:12-14
தீமோத்தேயு — 1 தீமோ 5:1-3

126

நீங்கள் பிரசங்கிக்கும்போது நினைவிற்கொள்ள ...

What to Remember when you Preach

முகவுரை

■ ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இரட்டை அழைப்பு —

அ) தேவனை ஆராதிப்பது (1 பேது 2:5) — தொழுதல்
ஆ) தேவனை அறிவிப்பது (:9) — சாட்சி பகர்தல்

ஆராதிப்பதைப்பற்றி நிறைய பேசுகிறோம்;
அறிவிப்பதோ முக்கியம் பெறுவதில்லை.

அறிவிப்பது தனி நபருக்காய் இருக்கலாம்,
அல்லது ஒரு கூடுகைக்கு இருக்கலாம்.

தமது பிள்ளைகள் **யாவரும்** அவருக்காய்ப் பேச வேண்டுமென
(= தீர்க்கதரிசனம்) தேவன் விரும்புகிறார் —
அப் 2:17,18

நீங்கள் ''ஆர்வமுள்ள'' விசுவாசியாயிருந்தால்,
பிரசங்கிப்பதற்கான **அழைப்பு**
எப்பொழுதாவது உங்களுக்கு வரும்.

நீங்கள் பிரசங்கிக்கும்போது நினைவிற்கொள்ளவேண்டியது —

வேதபாடம்: **2 கொரி 2:12-17**

1. *தேவனால் மட்டுமே உங்கள் ''தகுதி.''* (Worthiness)

- தேவனே உங்களை அங்கு நிறுத்தியவர் —
  ''கர்த்தரால்'' ஒரு திறந்த வாசல் (வச 12)

  பிரசங்கபீடத்தில் இவ்வுணர்வு உங்களுக்குக் கட்டாயம் தேவை—
  எனது சாட்சி: அழைப்புகளை நான் ஏற்பது / மறுப்பது

- *''இவைகளை நடப்பிக்க எவன் தகுதியானவன்?''* (வச 16ஆ)
  இதற்குப் பதில்: ''ஒருவருமில்லை!''

''நமது தகுதி தேவனாலேயே'' (2 கொரி 3:5)
நீங்கள் முயன்று அடைந்ததால் அல்ல, இலவசமாய்ப் பெற்றதால்!
1 கொரி 15:9,10 ... *நான் இருப்பது தேவ கிருபையாலேயே!*

- *மண்பாண்டங்களில் பொக்கிஷம்* —
  2 கொரி 4:7
  உள்ளேயிருக்கும் பொக்கிஷம்தான் காரியம்!

- ''நீ பிரசங்கிப்பதைச் செய்'' என்பதின் பொருள் —

  □ நமது அனுபவங்களையல்ல, தேவனது வார்த்தையையே
  பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள்ளோம் —
  நாம் எப்படி என்பதல்ல, அவர் யார் என்பது?

  □ நீங்கள் விசுவாசிப்பதைப் பிரசங்கியுங்கள் (2 கொரி 4:13)
  பிரசங்கிக்கிறபடியே நடந்திட முழு முயற்சியெடுங்கள்.

  உங்களிலுள்ள குறைபாடு எதையாவது சுட்டிக்காட்டிப் பிசாசு
  உங்களை உற்சாகமிழக்கச் செய்ய விடாதீர்.
  அதிலிருந்து மனந்திரும்பிக் கழுவப்படுங்கள் (2 தீமோ 2:21).

- பிரசங்கிப்பதற்கு நீங்கள் பெற்ற ''அதிகாரத்தை'' மறந்துவிடாதீர்:
  மத் 28:18,19
  2 தீமோ 4:1,2
  இதுதான் பிரசங்கிக்க உங்களுக்குத் ''தைரியம்'' தரும்!

2. *நீங்கள் பிரசங்கிக்கவேண்டியது தேவ ''வார்த்தை.''* (Word)

''நாங்கள் தேவ வார்த்தையைக் கலப்படம் செய்வதில்லை'' (வச 17அ)

- இன்றையப் போக்கு —
  ''அநேகர்'' — பிரசங்கிமாரில் பெரும்பாலானோர்
  ''கலப்படம்'' — இலாபத்திற்காய்ச் சத்தற்றதாக்குவது
  (அதாவது, மக்களது தேவைக்கேற்ப அல்ல,
  விருப்பத்திற்கேற்பப் பிரசங்கம்)

  இது வாடிக்கையாளரைக் கவரும் தத்துவம். (consumerism)

  பிரசங்கம் ஒரு தொழிலாகி(மேடை நடிப்பாகி)விட்டது.

- திருவசனத்தை உண்மையாய்ப் பிரசங்கிக்கத் தீர்மானியுங்கள் —
  எரே 23:28,29 ... *சொப்பனம் ... பதர் ... நெருப்பு*
- நீங்கள் திருவசனத்தைப் பிரசங்கிக்குமுன்
  திருவசனத்தால் நிறைந்திருக்கவேண்டும்.
- *''கர்த்தரிடமிருந்து நான் பெற்றுக்கொண்டது ...''*
  (1 கொரி 11:23அ; 15:3)
  வசனத்தை அசைபோடுங்கள் → தியானம்
  ஆராய்ச்சி
  ஒப்பிட்டுப் படித்தல்

  ஒரு கர்ப்பிணியின் அனுபவம் போன்றது.
  கருவுற்றல் ... அடுத்து கருவளர்தல் —
  இல்லையேல் கருச்சிதைவு / அகாலப் பிறப்பு!
- இறைப்பணியை அசட்டையாய்ச் செய்பவன் சபிக்கப்பட்டவன் —
  எரே 48:10 — *''ஆவியின் பட்டயம்''* இங்கு குறிப்பு.
  போதுமான நேரமும் முயற்சியும் எடுக்காமை (வச 11)

  உங்கள் பிரசங்கத்தில் வரும் வசனங்களை முடிந்த அளவு
  ''மனனம்'' செய்யுங்கள்.

  தெளிவாய் ஆயத்தம்பண்ணிய குறிப்புகளோடு பிரசங்கியுங்கள்.

3. நீங்கள் அறிவிக்கவேண்டியது தேவ ''ஞானம்.'' (Wisdom)

*''எங்கும் அவரை **அறியும்** வாசனை''* (வச 14ஆ)

- உலகு முழுவதையும் தம்மை அறிகிற அறிவினால் நிரப்புவதே
  தேவனது நித்திய திட்டம் —

  இதை இரு கட்டங்களாய்ச் செய்கிறார்;

  I - திருச்சபையைத் தமது ஞானத்தினால் நிரப்புகிறார்
  (கொலொ 1:9,10)

  II - திருச்சபை மூலமாய் உலகைத் தமது ஞானத்தினால்
  நிரப்புகிறார்
  (எபே 3:10)

முதற்கட்டம் இல்லாது இரண்டாம் கட்டம் சாத்தியமில்லை —
I — கிறிஸ்தவர்களுக்கு உயிர்மீட்சி
II — கிறிஸ்தவரல்லாதோருக்கு நற்செய்தியறிவிப்பு

- பிரசங்க ஆயத்தத்தின்போது,
  தேவ ஞானம் உங்களுக்கு வெளிப்பட ஜெபியுங்கள் —
  1 கொரி 2:7-10

  கீழ்க்கண்ட வரங்கள் வெளிப்படக் குறிப்பாய் வேண்டுங்கள் —

  அ) *ஞானத்தைப் போதிக்கும் வசனம்*
  ஆ) *அறிவை உணர்த்தும் வசனம்* (1 கொரி 12:8)

  இங்குதான் மனதில் ''புத்துணர்வு'' தேவை.
  பிரசங்க ஆயத்தத்தின்போது கவனச் சிதறல்களைத் தவிர்த்திடுங்கள்.
  இது **முதலாவது** உங்கள் ஆவியில் பெறவேண்டிய ஊழியம் —
  1 கொரி 2:10-12

4. நீங்கள் ஈடுபட்டிருப்பது ஒரு ''போராட்டம்.'' (Warfare)

''எங்களை எப்பொழுதும் வெற்றிசிறக்கப்பண்ணி ...'' (வச 14)
''மரண வாசனை ... ஜீவ வாசனை'' (வச 16)
இது யுத்தத்தை அடுத்து நடக்கும் வெற்றிப் பவனி!

- பிரசங்கமே ஒரு போராட்டம்தான்!
  — மக்களைக் குருடாக்கும் இருட்டுச் சக்திகளுக்கெதிராக
  (2 கொரி 4:3-6)
- *திறந்த வாசல்* ''அத்துடன்'' *எதிர்க்கிறவர்கள்* (1 கொரி 16:9)
  ''கர்த்தர் என்னோடு நின்று ... பிரசங்கம் ... சிங்கம்'' (2 தீமோ 4:17)

  சரியான பிரசங்கம் பிசாசுக்குக் கோபமூட்டும், ஏனெனில் —

  அ) சத்தியம் விளக்கப்படும்போது அவனது பொய்கள் அப்பட்டம்
  ஆ) அவனது கட்டிலிருந்து சிறைக் கைதிகள் அவிழ்ப்பு
  (கண் திறப்பு ... கட்டவிழ்ப்பு)
- ''திருவசனத்திற்கு'' விளக்கப் படங்கள் —
  சம்மட்டி — உடைக்க (எரே 23:29)
  பட்டயம் — உருவக்குத்த (எபே 6:17)
  நெருப்பு — உருக்கிட (எரே 23:29)

எனவேதான் ஆன்மீகப் போராட்டம் குறித்துப் பேசியதையடுத்து,
''தைரியத்திற்காய்ப்'' பவுல் ஜெபிக்கக் கேட்டார் —
எபே 6:19,20

- *கர்த்தரின் பட்டயம் ... கிதியோனின் பட்டயம்*
நியா 7:18

5. நீங்கள் ''கவலைகளை'' மேற்கொள்ளவேண்டும். (Worries & Weaknesses)

''என் ஆவியில் அமைதலில்லை'' (2 கொரி 2:13அ)
''எங்கள் உடல்களில் இளைப்பாறுதலில்லை'' (2 கொரி 7:5)

காரியங்கள் ''எப்படியிருந்தாலும்'' தைரியம் —
வெளியே போராட்டங்கள் ...
உள்ளே பயங்கள் (2 கொரி 7:4,5)

- முக்கியமான கூடுகைகளில் பிரசங்கிக்கும்போது, அல்லது ஆயத்தப்படும்போது, என்னிதயத்தில் ஏதோ பாரம் —

எ.கா.) மிஷனரிகள் பயிற்சித் திட்டம் —
புற்றுநோயால் அம்மாவுக்கு அவதி.
''சேனைகளின் கர்த்தர்'' எனும் கருப்பொருள் கொண்ட
ஆசீர்வாத முகாம் —
மூளைக் கட்டியால் மகளுக்கு அவதி.
மத்தியப் பிரதேசத்தில் முக்கிய கூட்டங்கள் —
சிறுநீரகக் கல்லினால் எனக்கு அவதி.

இவையெல்லாம் ஏனோ?

மூன்று காரணங்கள் —

அ) மிகுதியான வெளிப்பாடுகளால் பெருமை (2 கொரி 12:7)
ஆ) நடைமுறைப் பிரச்னைகளோடு தொடர்பின்மை.
இ) நசுக்கிப் பிழியப்பட்டால்தானே மணமும் சாறும் கிடைக்கும்! (2 கொரி 4:8-12)

இவற்றால் பிசாசு நம்மை உற்சாகமிழக்கச்செய்ய முயலுவான்;
ஆனாலும் இதயம் துவள வேண்டாம்!
— *தேவனுடைய **இரக்கம்*** உண்டே! (2 கொரி 4:1)

- மாள்வு நம்மிலும்
வாழ்வு மக்களிடமும் செயல்படுகிறது (2 கொரி 4:12,13)
விசுவாசத்தோடு பிரசங்கியுங்கள்.

6. நீங்கள் ''விழிப்புடன்'' இருக்கவேண்டும். (Watchfulness)

''தேவ சந்நிதியில் பேசுகிறோம்'' (வச 17ஆ)

- பழம் தீர்க்கர்கள் அடிக்கடி சொன்னது —
''கர்த்தருக்குமுன் நிற்கிற நான் அவரது ஜீவனைக்கொண்டு''
எலியா—1 இரா 17:1; 18:15
எலிசா—2 இரா 3:14; 5:16

பிரசங்கித்தல் பூவுலகில் செய்யப்படும் விண்ணுலகப் பணி (ஏசா 66:1,2)

இங்கு விளக்கம்: *வானம் எனது சிங்காசனம் ...*
பூமி எனது பாதபடி ...
*என் **வசனத்துக்கு** நடுங்குகிறவனையே நோக்குவேன்*

- பிரசங்கிமாருக்கு நியாயத்தீர்ப்பு கூடுதல் கடுமை —
யாக் 3:1,2 (நாம் பேசும் ''வார்த்தைகளைப்'' பற்றியது)
(1 தவறு = 1 x கேட்போர் எண்ணிக்கை)

- பிரசங்கபீடத்திலேயே வரும் அகத்தூண்டல்களை விட்டுவிடாதீர் —
எனக்கு அப்படி நிறைய வரும்;
ஏனெனில், *''உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்!''*
(5 தாலந்து, 2 தாலந்து பெற்றவர் உழைத்தனர்.)

- பிரசங்கிக்கும்போது கவனச் சிதறல்களைத் தவிர்த்திடுங்கள் —
உங்களைத் திசை திருப்பப் பிசாசுக்குத் தெரியும்!

உங்கள் குறியை விட்டுவிடாதிருங்கள்!
எனவேதான் இயேசு சொன்னது —

☐ *எவருக்கும் வழியில் வாழ்த்து சொல்லவேண்டாம்* (லூக் 10:4)
☐ *வீட்டுக்கு வீடு செல்லாதீர்* (வீண் பேச்சு) (லூக் 10:7இ)

எ.கா.) மான் வேட்டைக்குப் போய் முயல் சுடக்கூடாது!

7. பிரசங்கிப்பதே ''ஆராதிப்பது'' போன்றது. (Worship)

''நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நறுமணம்'' (வச 15)

இதுவே பிரசங்கித்தலில் மேல் நோக்கிய பரிமாணம்:
அதாவது தேவனை உயர்த்தி மகிமைப்படுத்துவது —
சங் 138:2 ... *''வார்த்தை''* ... *''தொழுகை''*

- பிரசங்கபீடத்தில் ஏறுமுன் ஏறெடுக்கவேண்டிய சுருக்க ஜெபங்கள் —

''தேவா, என்னை மறைத்து, உம்மை வெளிப்படுத்தும்!''
''நீர் பெருகணும், நான் சிறுகணும்!''
''வார்த்தையானவராகிய இயேசுவை அறிவிக்க
யோவான் போன்ற ஒரு சத்தமாகவே நானிருக்கட்டும்!''
''என்னைக் கேட்போர் எனது பக்தகோடிகளாயல்ல,
உமது சீடர்களாய் மாறட்டும்!''

- கவனித்துப் படிக்கவேண்டிய பிரசங்கங்கள் —

பேதுரு (அப் 3)
ஸ்தேவான் (அப் 7)
பவுல் (அப் 17)
இவர்களெல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினர்!

ஓர் ஊழியத்திட்டத்திற்குப் பணம் திரட்டுவது அல்ல,
கேட்போரது உள்ளங்களில் கர்த்தரை உயர்த்துவதே
இவர்களது நோக்கமாயிருந்தது —
''வசனக் கலப்படம்'' (வச 17) = ஆதாயத்திற்காய்!

பிரசங்கம் முடிந்ததும் பிரசங்கியாரின் ஜெபம்
இப்படியிருக்க வேண்டும் — யோ 17:4-8,14அ

''பிதாவே, உம்மை மகிமைப்படுத்தினேன் ...
உமது வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்!''

127

நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?

How to Excel in Preaching

முகவுரை

பிரசங்கித்தல் ஒரு வரம், ஒரு கலை!
பிரசங்கிப்பதில் ஏனோதானோ என்றிருப்பது தேவனுக்கு
அவமகிமை, மக்களுக்கு அவமரியாதை.
பிரசங்கிப்பதில் நேர்த்தியாயிருக்க 10 எளிய வழிகள் —

1. கருத்துச் செறிவைக் கூட்டுங்கள் (Enrich the content.)
லூக் 3:18 ... *யோவான் ... அநேக புத்திமதிகள் ...*
அப் 2:40 ... *பேதுரு ... அநேக வார்த்தைகள் ... புத்தி*

2. மனதைத் தெளிவாக்குங்கள் (Enlighten the mind.)
2 கொரி 4:4-6 ... *மனதைக் குருடாக்கி ... சுவிசேஷ ஒளி*
அப் 17:17 ... *பவுல் ... யூதரோடும் புறவினத்தாரோடும் தர்க்கம்*

3. குறிப்புகளை விளக்குங்கள் (Elucidate the points.)
மத் 13:13 ... *உவமைகளால் அவர்களோடு பேசுகிறேன்*
(ஆழ்ந்த சத்தியங்களுக்கு எளிய கதைகள் மூலம் விளக்கம்)
லூக் 24:27,45 ... *வேத வாக்கியங்கள் ... புரிந்துகொள்ள ...*

4. கேட்போருக்கு ஆர்வமூட்டுங்கள் (Enthuse the audience.)
லூக் 3:10 ... *யோவானிடம் மக்கள் வினவினர்*
19:47,48 ... *அவரைக் கேட்க மக்கள் ஆவல்*
21:37,38 ... *அதிகாலையில் ... மக்கள் வந்தனர்*
அப் 2:37 ... மக்கள்: *நாங்கள் என்ன செய்யவேண்டும்?*

5. கீழ்ப்படிதலை வலியுறுத்துங்கள் (Emphasize obedience.)
ரோ 6:17 ... *மனப்பூர்வக் கீழ்ப்படிதல்*
16:19 ... *உங்கள் கீழ்ப்படிதல் தெரிய வந்திருக்கிறது*
பிலி 2:12 ... *கீழ்ப்படிதல் ... பயம் ... நடுக்கம்*

6. மனந்தளர்ந்தோரை ஊக்குவியுங்கள்

(Encourage the downhearted.)

1 பேது 1:6-9 ... *பல்வேறு சோதனைகள் ... சந்தோஷப்படுங்கள்*

4:12,13 ... *பாடுகள் ... அக்கினி ... சந்தோஷப்படுங்கள்*

7. சர்வ வல்லவரை உயர்த்துங்கள் (Exalt the Almighty.)

ரோ 15:9-11 ... *துதியுங்கள் ... புகழுங்கள் ...*

2 கொரி 4:5 ... *கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவைப் பிரசங்கிக்கிறோம்*

8. பிரசங்கிப்பதில் மகிழுங்கள் (Enjoy your preaching.)

1 கொரி 9:16,17 ... *உற்சாகமாய்ப் பிரசங்கித்தல்*

ரோ 1:14,15 ... *பிரசங்கிக்க விரும்புகிறேன்*

9. அசாதாரணத்தை எதிர்பாருங்கள் (Expect the unusual.)

அப் 8:4-8 ... *பிரசங்கித்தனர் ... அதிசயங்கள் ... சுகமளிப்பு*

10:44 ... *பேசிக்கொண்டிருக்கையில் ஆவியானவர் இறங்கினார்*

10. உங்கள் வாழ்வைப் பரிசோதியுங்கள் (Examine your life.)

1 கொரி 9:27 ... *என் உடலைக் கட்டுப்படுத்துகிறேன்*

யோ 17:17,19 ... *என்னைப் பரிசுத்தமாக்குகிறேன்*

1 தீமோ 4:16 ... *உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு*

■ பிரசங்கப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றில் ஆசிரியர் கொடுத்த செய்திகளின் தொகுப்பு —

□ *How to Preach Better*
இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?

ஆங்கிலத்திலிருந்து தமிழ் (2007)
10 ஒளித்தட்டுகள் தொகுப்பு

ஆங்கிலத்திலிருந்து இந்தி (2008)
9 ஒளித்தட்டுகள் தொகுப்பு

□ *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*
புத்தகம், 196 பக்கங்கள்
தமிழில் மட்டும் உண்டு.

128

தேவன் கனம்பண்ணிய பிரசங்கம்

A Sermon that God honoured

முகவுரை

விண்ணரசின் ''சாவிகளை'' அப்போஸ்தலன் பேதுருவிடம் இயேசு கொடுத்தார் (மத் 16:19)

சபையின் பிறந்த நாளன்று 3000 ''யூதரை'' உள்ளே கொண்டுவந்தது அவரது பிரசங்கம்தான் (அப் 2:14-41).

அவரது பிரசங்கத்தையே ''புறவினத்தார்'' சபைக்குள் வரக் கதவுகளைத் திறந்துவிட தேவன் பயன்படுத்தினார் (அப் 10:34-45)

அவர் *''பேசிக்கொண்டிருக்கையிலேயே''* ஆவியானவர் கூடியிருந்தோர்மீது இறங்கினாரென்றால், தேவன் எவ்வளவாய் அப்பிரசங்கத்தைக் கனம்பண்ணினார் பாருங்கள்!

அப்பிரசங்கம் தேவனைக் கனப்படுத்தியது;
அவர் அதைக் கனம்பண்ணினார்!

வாசியுங்கள்: **அப் 10:34-44**
தேவனது மகத்துவத்தைப் பேதுரு அறிவித்த விதத்தைக் கவனியுங்கள் —

1. தேவன் பாரபட்சமற்றவர் (வச 34).

ரோ 2:10,11 ... *யூதன் ... கிரேக்கன் ... தேவனிடம் பாரபட்சமில்லை*

2. தேவன் நீதியுள்ளவர் (வச 35,43).

1 யோ 2:29 ... *அவர் நீதியுள்ளவர் ... நீதி செய்கிறவன் ...*

3:7 ... *அவர் நீதியுள்ளவர்*

3. தேவன் சமாதான காரணர் (வச 36).

பிலி 4:9 ... *சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்*

4. தேவன் ஏகாதிபத்தியர் (எல்லாருக்கும் ஆண்டவர்) (வச 36).

பிலி 2:9-11 ... *எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி ... மகிமை*

5. *தேவன் கொடுத்துக்கொண்டிருப்பவர்.*

அவர் கிறிஸ்துவைக் கொடுத்தார் (வச 36)
அவர் ஆவியானவரைக் கொடுத்தார் (வச 38)
அவர் கிறிஸ்துவுக்கு உயிரைக் கொடுத்தார் (வச 40)
யாக் 1:17 ... *பிதாவிடமிருந்து நன்மையான, பூரணமான ஈவு*

6. *தேவன் நல்லவர்* (வச 38).

லூக் 18:19 ... *தேவனைத் தவிர நல்லவர் ஒருவருமில்லை*

7. *தேவன் குணமாக்குகிறவர்* (வச 38).

மத் 8:16,17 ... *கிறிஸ்து நமது நோய்களைச் சுமந்தார்*

8. *தேவன் பிசாசைவிடப் பெரியவர்* (வச 38).

1 யோ 4:4 ... *உலகத்திலிருக்கிறவனிலும் பெரியவர்*

9. *தேவனே தளபதி.*

''தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகள்'' (வச 41)
''பிரசங்கிக்க எங்களுக்குக் கட்டளையிட்டார்'' (வச 42)
மத் 9:38 ... *அறுவடையின் ஆண்டவர்*

10. *தேவனே நீதியரசர்* (வச 42).

எபி 12:23 ... *எல்லாருக்கும் நியாயாதிபதியாகிய தேவன்*

விளைவு

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார் (வச 44).
பலர் திருமுழுக்கு பெற்றனர் (வச 48).
எல்லாவற்றிற்கும் மேலாக,
''தேவன் மகிமைப்பட்டார்!'' (வச 46).

பிரசங்கங்கள் இவ்விதம் —

தேவனை மகிமைப்படுத்த வேண்டும்,
கிறிஸ்துவை மையப்படுத்தவேண்டும்,
ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டிருக்கவேண்டும்.

129

எப்படிப் பிரசங்கிப்பது ?

How to Preach (F - F)

1) Preach without **F**ear or **F**avour.
2) Preach in **F**air weather or **F**oul.
3) Preach the **F**acts, not **F**ables.
4) Preach to stir up **F**aith, not **F**eelings.
5) Preach **F**ervently, not **F**rivolously.
6) Preach **F**riendly, but **F**rankly.
7) Preach **F**reely, but **F**aithfully.
8) Preach **F**raternally, but **F**irmly.
9) Preach **F**arsightedly and **F**oresightedly.
10) Preach **F**orcefully but **F**orbearingly.
11) Preach with **F**orm and **F**ocus.
12) Preach without **F**ancy or **F**renzy.
13) Preach **F**orthrightly, but not **F**rightfully.
14) Preach **F**elicitously and with **F**eeling.
15) Preach **F**iguratively, but not **F**abulously.
16) Preach with **F**ieriness and **F**inesse.
17) Preach to **F**orewarn and **F**orearm.
18) Preach **F**orgiveness and **F**ruitfulness.
19) Preach with **F**reshness, not **F**ormalism.
20) Preach to bring **F**olks into the **F**ellowship.
21) Preach without **F**uss or **F**umbling.
22) Preach the **F**undamentals and **F**ullness.
23) Preach without **F**lattery or **F**ury.
24) Preach in **F**estivals and **F**unerals.
25) Preach like (Charles) **F**inney and (George) **F**ox.

130

பிரசங்கிமார் எடுக்கவேண்டிய தீர்மானங்கள்

Decisions of a Preacher

முகவுரை

இயேசுவுக்கு அடுத்து, நாம் பின்பற்றக்கூடிய இறைப்பணியாளரில் அப்போஸ்தலன் பவுல்தான் முதன்மையானவர் —

''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல் என்னைப் பின்பற்றுங்கள்''
(1 கொரி 11:1)

அவரது சாட்சி வாசகங்களிலிருந்து
பிரசங்கிமார் எடுக்கவேண்டிய 15 தீர்மானங்கள் இதோ —

1. எவருடைய வெள்ளிக்கும் பொன்னுக்கும் ஆசைப்பட ***மாட்டேன்.***
   அப் 20:33-35
2. எவருக்கும் நான் இடையூறாய் இருக்க ***மாட்டேன்.***
   1 கொரி 8:13; ரோ 14:14,15
3. இறைமக்களது விசுவாசத்தின்மீது அதிகாரம் செலுத்த ***மாட்டேன்.***
   2 கொரி 1:24
4. அடுத்தவரது அடித்தளத்தின்மீது கட்ட ***மாட்டேன்.***
   ரோ 15:21
   2 கொரி 10:13-16
5. நிச்சயமில்லாதவனாய் ஓட ***மாட்டேன்.***
   1 கொரி 9:26,27 (தன்னடக்கம்)
6. என்னைப்பற்றி எனது கணிப்பிலேயே திருப்தியடைய ***மாட்டேன்.*** தேவனே அதைச் செய்யவிடுவேன்.
   1 கொரி 4:1-5
7. திருவசனத்தைச் சத்தற்றதாக்கவோ கலப்படமாக்கவோ ***மாட்டேன்.***
   2 கொரி 2:17
8. மனிதரைப் பிரியப்படுத்த தேவனைத் துக்கப்படுத்த ***மாட்டேன்.***
   கலா 1:10

9. யாருக்கும் பாரமாயிருக்க ***மாட்டேன்.***
   செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் ஆயத்தமாயிருப்பேன்.
   2 கொரி 12:15; அப் 20:34,35
10. மக்களுக்கு நன்மையளிக்கும் எதையும் மறைத்துவைக்க ***மாட்டேன்.***
    அப் 20:20,27
11. எனக்கு நியமிக்கப்பட்ட எல்லையைத் தாண்ட ***மாட்டேன்.***
    2 கொரி 10:13,14
12. எனது செய்தியறிக்கைகளை மிகைப்படுத்த ***மாட்டேன்.***
    ரோ 15:17-19
13. துர்வுபதேசக்காரரை ஆதரிக்க ***மாட்டேன்.***
    கலா 2:4-6
14. எனது உயிரைப் பெரிதாய் எண்ண ***மாட்டேன்.***
    அப் 20:22-24
15. பூரணமடைந்துவிட்டேன் எனத் திருப்தியடைய ***மாட்டேன்.***
    பிலி 3:13,14

இறைப்பணியிலுள்ள ஒவ்வொரு சகோதரனும் சகோதரியும் இத்தீர் மானங்களைத் தங்களுடையதாக்கி விட்டால், திருச்சபையைத் தேவ மகிமையாலும் உலகைக் கிறிஸ்து வின் நற்செய்தியினாலும் நிரப்பி விடும் நெடுங்காலக் கனவாகிய எழுப்புதல் நனவாகிவிடும்.

131

''என் ஆடுகளை மேய்ப்பாயாக!''

"Feed My sheep!"

(பாஸ்டர்மாருக்கு ஓர் அழைப்பு)

முகவுரை

சபை மேய்ப்பர்களின் பிரதான ஊழியமும் பொறுப்பும் மந்தைக்கு *மேய்ச்சல்* காட்டுவதுதான் —

சங் 23:1,2 ... *''கர்த்தர் என் மேய்ப்பர் ... புல்லுள்ள இடங்கள்''*
யோ 21:15,17 ... பேதுருவிடம் இயேசு: *''மேய்ப்பாயாக!''*
1 பேது 5:1,2அ ... ஆயர்களுக்குப் பேதுரு: *''மேய்த்திடுங்கள்''*

- மேய்ப்பர்களுக்குக் கடவுளின் பிரதான கட்டளை —
  எசேக் 34:1-16 ... *மேய்த்திடுங்கள் ... மேய்த்திடுங்கள் ...*

  அவர்களோ ஆடுகளை மேய்க்காமல் ஆடுகளை மேய்ந்தனர்!
  (வச 2,3,8இ,10இ)

  மந்தையின் பாலை மேய்ப்பன் குடிக்கக் கூடாதோ?
  குடிக்கலாம், ஆனால் கறந்துகொண்டேயிருந்தால்,
  பால் அல்ல, இரத்தம்தான் வரும்!

  நாம் மந்தையை மேய்க்காவிடில்,
  தேவன் நம்மை அகற்றித் தாமே தமது மந்தையை மேய்ப்பார் —
  (வச 14,15,16)

- ஆடுகளை மேய்ப்பதென்றால் திருவசனத்தைப் பிரசங்கிப்பதே —
  (2 தீமோ 4:2)

  ''மேய்ப்பர்'' என்பவர் ''போதகராகவும்'' இருக்க வேண்டும் —
  எபே 4:13 ... *''மேய்ப்பராகவும் போதகராகவும்''*
  (''சிலரை'' எனும் பதம் ''போதகருக்குத்'' தனியே கிடையாது.)

  இன்று வசனம் தவிர எதுவெல்லாமோ பிரசங்கப் பீடங்களிலிருந்து வருகின்றன —

  ☐ கதைகள் & கற்பனைகள் (2 தீமோ 4:2-4)
  ☐ சொந்த அனுபவங்கள் (2 பேது 1:16-21)
  ☐ சொப்பனங்கள் & தரிசனங்கள் (எரே 23:25-29)

- இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் சபை மேய்ப்பர் பலருக்குக் கிரமமான வேத ஆராய்ச்சிப் பழக்கமில்லை ...

வழிமுறைகள்:

அ) தரமான வேத ஆராய்ச்சி நூல்கள் வாங்குங்கள் —

☐ நல்ல மொழியாக்கத்தில் பைபிள்

☐ ஓர் ஆராய்ச்சி வேதம் (Study Bibles)
NKJV, ESV, NIV, Scofield, Thompson, Dake, etc.
நிறைவாழ்வு, வாழ்வியல் விளக்கம், ஆய்வுரை, ...

☐ வேதாகமச் சொல்லகராதி (Concordance)

☐ வேதாகமப் பொருளகராதி (Bible Dictionary)
Zondervan, Holman, Unger, etc.

☐ வேதாகம வியாக்கியானம்
Matthew Henry
Jamieson – Fausset – Brown
IVP Bible Background Commentary

☐ இறையியல் பாடப் புத்தகம் (Systematic Theology)
எ.கா.) Wayne Grudem

கூடுதல் விபரங்கட்கு, "*Unless someone guides me ...*" என்ற எனது ஆங்கிலக் குறுநூலை வாசியுங்கள்.

ஆ) ஆராய்ச்சிக்கென்று கிரமமாக நேரம் ஒதுக்குங்கள் —

☐ நிர்வாகப் பொறுப்புகள் (அப் 6:1-7)

☐ அழைப்புக்களை அளவுக்கு மீறி ஏற்றல் —
கேள்வி: ''நான் அங்கு போகத் தேவன் விரும்புகிறாரா?''
''அக்கூட்டம் எனது அழைப்புக்கேற்றதா?''

☐ சந்திப்புகள், விருந்தாளிகள் (Visits & Visitors)

☐ காலை வேளை: வேதத் தியானம்
பிற்பகல் & இரவு: வேத ஆராய்ச்சி
எதிலும் கிரமமாக இருங்கள்.

■ பிரசங்க ஆயத்தத்தில் உள்ளார்ந்த அக்கறை வேண்டும்.

□ கர்த்தருடைய வார்த்தையைப் பெற அவர்முன் காத்திருங்கள் —
ப.ஏ. தீர்க்கர்கள்: *''எரேமியாவுக்கு உண்டான
கர்த்தருடைய வார்த்தை''*
''தமஸ்குவைக் குறித்த கர்த்தரின் பாரம்''

''செய்திகளுக்கும்'' ''பிரசங்கங்களுக்கும்'' உள்ள வேறுபாடு.

□ பிரசங்க பீடத்தில் வரும் அகவுணர்வுகள் போதாது!
மத் 10:20 ... பிரசங்க பீடத்திற்கல்ல, சிறைக்கு (வச 18,19).
பிரசங்க பீடத்திற்கு ஆயத்தம் கட்டாயம் (வச 27)

□ அவசர அவசரமாய்க் கடைசி நேரப் பிரசங்க ஆயத்தம் சபையாரை அவமதிப்பதாகும்; அது உத்தமமின்மை —

எ.கா.) விருந்தினரை அழைத்தால் சமையலுக்காய்
எவ்வளவு திட்டமிடுகிறோம், ஆயத்தப்படுகிறோம்!

எவ்வளவோ எதிர்பார்ப்புடன் சபையார் வருகின்றனர்;
மேய்ப்பர்களோ ஆயத்தக் குறைவுக்கு வருந்துவதில்லை.

□ சில பிரசங்கங்களில் சத்தம் உண்டு; சத்து இல்லை!
கத்துவது கருத்துச் செறிவுக்கு மாற்றாகாது!

□ ஞாயிறு காலை ஆராதனையைச் சுவிசேஷக் கூட்டமாக்காதீர் —
அது அவிசுவாசிகளுக்கல்ல, விசுவாசிகளின் பக்திவிருத்திக்கு.

□ உங்கள் செய்திகள் பொருத்தமாயிருக்கட்டும்.
செய்தித்தாள்கள், பத்திரிகைகள் வாசியுங்கள்.
எ.கா.) லூக் 13:1-5 ... *கோபுரம் விழுந்து 18 பேர் பலி!*

□ *தேவனது ''முழு''* ஆலோசனை பிரசங்கிக்கப்படவேண்டும்.
அப் 20:27 ... *ஒன்றையும் மறைத்துவைக்காமல் ...*
2 தீமோ 3:16,,17 ... முதலாவது பயன் ஊழியனுக்கு!
4:1,2அ ... அடுத்து, சபையாருக்கு!

இல்லையேல் சபையினர் சமநிலையிழப்பர், சரிவர்!

இதைச் செய்ய, ஓராண்டு அல்லது ஈராண்டுக்கு
ஒரு முறை நீங்கள் பைபிள் முழுவதும் வாசிக்கவேண்டும்.

■ ***உங்கள் சபையாருக்கு நீங்கள் போதிக்கவேண்டியவை —***

அ) மீட்பின் திட்டம் (Plan of Redemption)
லூக் 24:27

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை ஒரு நாடகம் போல்
அரங்கேறியுள்ள மீட்பின் சரித்திரம்.

ஆ) கோத்திரப் பிதாக்கள் & தீர்க்கர்களின் வாழ்க்கை
எ.கா.) எபி 11
ஆபிரகாம் ... ஈசாக்கு ... யாக்கோபு ... யோபு ... தானியேல் ...

இ) இஸ்ரவேலரின் சரித்திரம் — நடைமுறை எச்சரிப்புகள்
1 கொரி 10:1,11

ஈ) ஞானப் புத்தகங்களிலிருந்து தியானக் கருத்துக்கள் —
சங்கீதங்கள், நீதிமொழிகள், பிரசங்கி, ...

உ) கிறிஸ்துவின் வாழ்க்கை — சுவிசேஷங்கள்
(அவரது வாழ்க்கைமுறையைவிட அவரது
அற்புத வல்லமையிலேயே நமக்கு ஆர்வம்.)

ஊ) ஆதிச்சபையின் பிறப்பும் வளர்ச்சியும்
நடபடிகள் & நிருபங்கள்

எ) திருமறையின் தீர்க்கதரிசன நாள்காட்டி
ப.ஏ., பு.ஏ. தீர்க்கதரிசனம் & வெளிப்படுத்தல்

■ ***கிறிஸ்தவ வாழ்வுக்கு நடைமுறைப் போதனைகள் —***

அநேகப் பிரசங்கங்கள்: ''என்ன?'' ''ஏன்?'' —
ஆனால் ''எப்படி?'' என்றில்லை.
புகைப்பவன் கதறல்: ''ஏனென்று சொல்லாதீர்;
எப்படியென்று சொல்லிக்கொடுங்கள்!''
— சோதனைகளை மேற்கொள்ளுவது எப்படி?
— ஜெபிப்பது எப்படி?
— திருமறையைத் தியானிப்பது எப்படி?
(ஆராய்ச்சி நூல்கள் அறிமுகம்)
— ஆவிக்குள்ளாய் நடந்துகொள்வது எப்படி?
— ஒருவரையொருவர் நேசிப்பது எப்படி?
— சிட்சைகள், பாடுகளைக் கையாளுவது எப்படி?

— ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவது எப்படி?
— பின்மாற்றக்காரரைத் திருப்பிக்கொண்டுவருவது எப்படி?

☐ திருத்துதல் உபதேசமும் கொடுங்கள் —
எப்படி ஜெபிக்கக்கூடாது? (How NOT to Pray)
எப்படித் தியானிக்கக்கூடாது? (How NOT to Meditate)
போன்றவை.
(*''பைபிள் புதையல்கள்''* என்ற எனது
832-பக்க நூலைப் படியுங்கள்.)

☐ தலைப்புகள் மீதும் பிரசங்கியுங்கள் —
அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், பரிசுத்தம்,
தெய்வீக சுகம், பாடுகள், உக்கிராணத்துவம்,
மறுவருகை, நியாயத்தீர்ப்பு, பரலோகம், நரகம்

☐ பலவகையினருக்குச் சிறப்பாய்ப் பணியாற்றுங்கள் —
— ஓய்வு நாள் பள்ளியின் முக்கியத்துவம்
— ஆண்கள் கூட்டம் (பெண்கள் கூட்டம்தான் நடக்கிறதே!)
(பொறுப்புள்ள தந்தையராய், கணவராய், பணியாளராய்,
குடிமக்களாய் இருப்பது எங்ஙனம்?)
— வாலிபர், நங்கையருக்குச் செய்திகள் கொடுங்கள்.

பவுல்: *''உன் இளமை அசட்டைபண்ணப்படக்கூடாது''*
(1 தீமோ 4:12)

பேதுரு: *''இளைஞரே ...''* (1 பேது 5:5)

யோவான்: *''வாலிபரே, உங்களுக்கு எழுதுகிறேன்''*
(1 யோ 2:12-14)

☐ திருவசனப் பகுதிகளை **மனனம்** செய்யச் சபையாரை
ஊக்குவியுங்கள்:
— இயேசு கல்லாதவராயிருந்தும் (யோ 7:14,15),
எத்தனையோ வசனங்களை மனனம் செய்திருந்தார்.
— பேதுரு படிப்பறியாதவராயிருந்தும் (அப் 4:13),
எத்தனையோ வசனங்களை மனனம் செய்திருந்தார்.
எ.கா.) அப் 2:16-21 ... யோவேலின் தீர்க்கதரிசனம் மேற்கோள்

☐ சபை கூடுகைகளில் வேத பாடம் சத்தமாய்
எல்லாருக்கும் முன் வாசிக்கப்படப் போதுமான நேரம் ஒதுக்குங்கள்—

நெகே 8:3,18 ... *தினம் தினம் வாசிப்பு*
லூக் 4:16,17 ... ஓர் யூத மார்க்க வழக்கம்
1 தீமோ 4:13 ... ஒரு புதிய ஏற்பாட்டுப் பழக்கம்

எ.கா.) மூன்று பாடங்கள்:
ஒன்று, ப.ஏ. சரித்திரம் / தீர்க்கதரிசனப் புத்தகங்களிலிருந்து.
அடுத்தது, ப.ஏ. செய்யுள் நூல்களிலிருந்து.
மூன்றாவது, புதிய ஏற்பாட்டிலிருந்து.

இது நல்லதோர் ஆங்கிலிக்கன் பாரம்பரியம்:
மற்ற சபைகள் தண்ணீரோடு பிள்ளையையும் கொட்டிவிட்டன!

கெம்பீரமாய்த் தெளிவோடும், அர்த்தத்தோடும் வாசிக்கும்படி
வாசிக்கவேண்டிய பகுதிகள் முன்னதாகவே கொடுக்கப்படவேண்டும்

இப்படி முழு வேதமும் திரும்பத் திரும்ப வாசிக்கப்படவேண்டும்!
யோசு 8:34,35

இப்படித்தான் வேதாகம அறிவின்மையை ஒழிக்கமுடியும்.

■ இவ்விதத் திடமான, தெளிவான, முழுமையான உபதேசமில்லையேல்
மக்கள் வஞ்சிக்கப்பட்டுப்போவர் —
அப் 20:27-30

''நான் சென்ற பின்பு'' — இவ்விதப் போதனை இல்லாது ...
வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் வஞ்சகம் (வச 29,30)

- மந்தையை நீங்கள் இவ்விதம் மேய்க்காவிடில்,
நீங்கள் உத்தமமான மேய்ப்பரல்ல —
ஏசா 56:10,11

— *''குருடர்''* ... தரிசனமின்மை, குறியின்மை ...
''குருடருக்கு வழிகாட்டும் குருடர்''
— *''அறியாதவர்''* ... காலத்தை நிதானிக்கத் தெரியாதவர்
— *''ஊமையர்''* ... எச்சரிக்கவோ, நிதானிக்கவோ மாட்டார்.
— *''சோம்பேறிகள்''* ... உற்சாகமிழப்பு, மந்தம், சொகுசு,
கடின உழைப்பின்மை
— *''பேராசை''* ... பணத்திற்கு வாய் திறக்கும் பிணம்
— *''தன்னலம்''* ... சுயலாபம் ... ''எனக்கு'' என்ன கிடைக்கும்?

- *சிறிய காரியங்களில் உண்மையாயிருங்கள்!*

132

தேவனது ஊழியமும் அவரது இரக்கமும்

God's Ministry & His Mercy

முகவுரை

பாடம்: **2 கொரிந்தியர் 4**

☐ 2 கொரிந்தியர்தான் பவுலின் சொந்தவுணர்வுகள் நிறைந்தது.
அதை அவரது சுயசரிதை என்றும் அழைக்கலாம்.
வேறெந்த நிருபத்தைவிட இதில்தான் அதிகம் மனம் திறக்கிறார்.

☐ டேவிட் பாசன்:

— 1 கொரிந்தியர்: சபையின் உறுப்பினர்களுக்கு
2 கொரிந்தியர்: சபைத் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும்

— 1 கொரி: விசுவாசிகளைக் குறித்துப் பவுலின் எண்ணம்
2 கொரி: பவுலைக் குறித்து விசுவாசிகளின் எண்ணம்

☐ இந்நிருபத்தில் வரும் முக்கிய வார்த்தைகளில் ஒன்று:
''ஆற்றுதல்'' அல்லது *''தேற்றுதல்''*
வினைச்சொல் அல்லது பெயர்ச்சொல்லாக 29 முறை வருகிறது!
பவுலின் தலைமையும் ஊழியமும் சவாலிடப்பட்டன.
சில நிர்ணயங்களால் அவர் தம்மைத் தேற்றிக்கொண்டார்;
அவை இங்கு எழுதப்பட்டுள்ளன.

அவரது பிரதான நிர்ணயம் / நிச்சயம் —
அவர் இவ்வூழியத்தைப் பெற்றுக்கொண்டது
தேவனது ''இரக்கத்தினால்,'' தனது ''தகுதியினால்'' அல்ல!
எனவே எதுவும் அதனை அழிக்கமுடியாது.

இப்பின்னணியுடன் 2 கொரி 4ஐப் படிப்போம் —
(வச 1) ... *இரக்கத்தினால் ஊழியம்*

பவுலின் இவ்வித உறுதிப்பாடு அவரது பணி, எழுத்து எங்குமுண்டு —

☐ அப் 20:24 ... *ஊழியம் ... **கிருபையின்** சுவிசேஷம்*

☐ எபே 3:7,8 ... ***கிருபையினால்** சுவிசேஷத்திற்கு ஊழியன்*

☐ 1 தீமோ 1:12-14,16 ... ***இரக்கம்** பெற்றேன்*

இது தலைவர்களுக்கும் பிரசங்கிமாருக்கும் மட்டுமல்ல,
ஒவ்வொரு விசுவாசிக்கும் பொருந்தும் —
பேதுரு எழுதியது: 1 பேது 2:9,10
... ஆசாரியர் ... இரக்கம் பெற்றீர்கள்

■ ஊழியத்தைத் தேவ இரக்கத்தினால் நாம் பெற்றிருப்பதால்,
எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது —

2 கொரிந்தியர் 4இலிருந்து ஆலோசனைகள் —

1. எல்லாவிதத் தந்திரங்களையும் விட்டொழியுங்கள்.

''வெட்கம் ... தந்திரம் ... சத்தியம் ... மனச்சாட்சி ... தேவனுக்குமுன்'' (வச 2)

— உண்மைக்கும் எளிமைக்கும் ஓர் அழைப்பு
2 கொரி 1:12
''தேவனுடைய கிருபையினால்''

''மாம்சீக ஞானத்திற்கு'' எதிராக ...
அதாவது, நரித் தந்திரம்
விறுவிறுப்பு, விழிப்பு என்ற பெயரில்
தந்திரம், திருட்டுத்தனம் ...

அரசியல் பண்ணக்கூடாது.
அகம்பாவம் கூடாது (யாக் 3:13-15)
... *பேய்த்தனம்*

— ''குற்றமற்ற மனச்சாட்சியைக்'' காத்துக்கொள்ள அழைப்பு.
மனச்சாட்சி என்பதற்குச் சுவாரஸ்யமான வரையறை —
லூக் 12:57 ... *நியாயம் இன்னதென்று நீங்களே ...*

திருவசனத்தின்படி நாம் மனச்சாட்சியைப் பயிற்றுவிக்காவிடில்,
அது திருக்குள்ளதாகிவிடும் —
யோ 16:2 ... *உங்களைக் கொலை... தேவனுக்குத் தொண்டு*

வேண்டுமென்றே தேவனது வழிகளை மனதிலிருந்து
தூக்கியெறிதல் —
அது சாத்தியம்தானா? ஆம்! யோபு 21:14

தீபமாகிய மனச்சாட்சியை அணைக்கமுடியுமே —
நீதி 20:27 ... *மனிதனின் ஆவி ... கர்த்தர் தந்த தீபம்*

மனச்சாட்சியைச் ''சுத்தமாய்'' வைத்துக்கொள்ளப் பிரயாசம் —
அப் 23:1 ... நல்மனச்சாட்சியோடு தேவனுக்குமுன் ...
24:16 ... *குற்றமற்ற மனச்சாட்சி ... பிரயாசம் ...*

நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய 3 கேள்விகள் —

அ) இது தேவனைப் பிரியப்படுத்துமா? (அப் 23:1)
ஆ) இது எனக்குப் பக்திவிருத்தியுண்டாக்குமா? (1 கொரி 2:11அ)
இ) இது பிறரை ஆசீர்வதிக்குமா? (1 கொரி 10:29)

2. திருவசனத்தை உத்தமமாய்க் கையாளுங்கள்.

''தேவ வசனத்தைப் புரட்டாமல்'' (வச 2)

பல யுத்தங்களையும் போராட்டங்களையும் குறித்துப் பேசுகிறோம்;
திருவசனத்தை உத்தமமாய்க் கையாளுவோருக்கும்
அதைப் புரட்டுவோருக்கும் இடையில் நடப்பதே மகா யுத்தம் —

எ.கா.) மத் 4:4-7,10 ... பிசாசு vs. இயேசு:
''எழுதியிருக்கிறதே'' என்பதில்!
எ.கா.) கலா 2:11,14 ... பவுல் vs. பேதுரு:
''சுவிசேஷத்தின் சத்தியம்'' என்பதில்!
(ஆள் சார்ந்ததல்ல, பொருள் சார்ந்தது.)

மிகப் பெரிய சவால் —
அநேகர் vs. சிலர் (2 கொரி 2:17)
குவிப்பு vs. கையளவு (2 தீமோ 4:3 / தீத் 2:1)

இது இப்படியானது ஏன்? —

அ) மக்களுக்குத் ''தேவையானதை'' அல்ல,
அவர்கள் ''விரும்புவதைப்'' பிரசங்கித்தல்.
வாடிக்கையாளர் விருப்பம் (2 தீமோ 4:3) (Consumerism)

ஆ) பிரபலம் நாட்டம் (கலா 1:9-11)

இ) உடனடி விளைவு காணத் துடிப்பது —
யோ 4:37,38 ... *விதைப்பவன் ... அறுப்பவன் ...*
பிர 11:1 ... *அநேக நாட்களுக்குப்பின் ...*

ஈ) இறைவார்த்தையின் எதிர்பார்ப்பைத் தளர்த்துவது —
2 பேது 3:15,16 ... *அரிதாயிருக்கிறது ... புரட்டுகிறார்கள்*

உ) பண ஆசை (யூதா 11 ... *பிலேயாமின் வஞ்சகம்)*

தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இன்றும் இனிவரும்
நாட்களிலும் இவையே ஆபத்தான வலைகள்.

நமது மக்களுக்கு ஒரு சில வசனங்கள் தெரிந்தால் போதாது;
வேதம் தெரியவேண்டும்

''கிருபையின் வசனத்திற்குள்'' மூப்பரைப் பவுல் ஒப்புவித்தார் —
(அப் 20:32)

3. உங்களையே முன் நிறுத்தாதீர்கள்.

''எங்களையல்ல, கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறோம்!'' (வச 5)

நான்கு நல்ல எடுத்துக்காட்டுகள் —

☐ ஒரு கோத்திரப் பிதா (Patriarch)
யாக்கோபு (ஆதி 32:10) ... *''நான் எவ்வளவும் பாத்திரனல்ல''*

☐ ஓர் அரசன் (Prince)
சவுல் (1 சாமு 9:21; 15:17) ... *''என் குடும்பம் அற்பம்''*

☐ ஒரு தீர்க்கன் (Prophet)
யோவான் (மத் 3:11) — தண்ணீர்/ஆவி, அக்கினி
(யோ 3:29) — மணவாளன்/தோழன்
(யோ 3:30,31) — பூமிக்கடுத்தவை/பரலோகத்துக்கடுத்தவை

தனது பார்வையில் சிறியவனாய்த் தெரிந்ததே
திருமுழுக்கினன் யோவானின் பெருமை!

☐ சங்கீதக்காரன் (Psalmist)
தாவீது (சங் 22:6) ... *நான் ஒரு புழு ... மனுஷனல்ல ...*
''தாவீதுக்கருளிய நித்திய கிருபைகள்'' (ஏசா 55:3)
(அப் 13:34)

ஆம், தாழ்மையுள்ளோருக்கே *''அதிகக்'' கிருபை!*
நாமெல்லாரும் கிருபை பெற்றிருக்கிறோம்;
''அதிகக்'' கிருபை வேண்டாமா?
(யாக் 4:6)

■ மூன்று முக்கிய பாடங்கள் —

அ) கட்சி மனப்பான்மை உருவாகுமானால், மக்களது கவனத்தைக் கிறிஸ்துவின் பக்கம் திருப்புவது தலைவர்கள் கடமை —
1 கொரி 1:11-13

மக்களை உங்கள்பால் ஈர்க்கும் எதையும் தவிர்த்திடுங்கள்
(வச 14-16)

இதனால்தான் இயேசு திருமுழுக்கு கொடுக்கவில்லையோ?
(யோ 4:1,2)

ஆ) மற்றவர்களை வசப்படுத்தி ஆதிக்கம் செலுத்த விரும்பும்போதுதான் நம்மை முன் நிறுத்துகிறோம் —
2 கொரி 1:24 ... *அதிகாரிகளல்ல ... சகாயர்*

நாம் ஸ்தானாபதிகள்தான்; ஆனாலும் நாம் அதிகார தோரணை யிலல்ல, *''புத்தி சொல்கிறோம்... வேண்டிக்கொள்ளுகிறோம்''* —
2 கொரி 5:20

இந்தப் பாவனையில்தான் நாம் மக்களுக்குத்
''தேவ கிருபையோடு'' பணியாற்ற முடியும் (6:1)

இ) பணிபுரியும் தலைமைத்துவமே இன்றையத் தேவை —
(Servant leadership)
2 கொரி 4:5 ... *''ஊழியக்காரர்''* (= வேலைக்காரர்)
''உங்கள்'' ஊழியக்காரர்

ஒரு முக்கியமான தத்துவம் — 1 கொரி 3:21-23

மக்கள் தலைவர்களுக்குச் சொந்தமல்ல;
தலைவர்கள்தான் மக்களுக்குச் சொந்தம் —

பிழையானது: விசுவாசிகள் → ஊழியர் → தேவன்
சரியானது: ஊழியர் → விசுவாசிகள் → கிறிஸ்து → தேவன்

அதாவது, விசுவாசிகளை ஊழியர் சேவிக்கின்றனர்.
கிறிஸ்துவை விசுவாசிகள் சேவிக்கின்றனர்.
தேவனைக் கிறிஸ்து சேவிக்கிறார் — *''இதோ என் தாசன்!''*

தலைமைத்துவத்தில் பிரியங்கொள்ளாதிருப்பதே
தலைமைத்துவத்திற்கு முதல் தகுதி!

எ.கா.) மோசே (யாத் 3:11)
எரேமியா (எரே 1:6)

4. முழுக்க முழுக்கத் தேவ பலத்தையே சார்ந்திருங்கள்.

''மண்பாண்டங்கள்'' (வச 7)

— இதன் பொருள்? எளிதில் உடையக்கூடியவை.
இது ஒரு கூடாரம் (5:1), அவ்வளவுதான் — கோபுரம் அல்ல!

இரு அழகிய சித்திரங்கள் —

☐ ஒரு சப்பாத்தி ஒரு சேனையைக் காலிபண்ணியது!
நியா 7:13,14 ... கிதியோன் / மீதியானியர்
தனது பார்வையில் கிதியோனின் கணிப்பு —
நியா 6:14,15 ... *எளிய குடும்பம் ... சிறியவன்*

☐ ஒரு பூச்சி ஓர் இயந்திரமாகிறது! (ஏசா 41:14,15)
(வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்!)

தேவன் விடும் சவால்: யோபு 4:18,19
நாம் ''ஸ்பைடர்மேன்'' என்று நினைத்துக்கொள்ளுகிறோம்!
உண்மை: நாம் வெறும் களிமண்!

பாடுங்கள்: *உம் சித்தம், தேவா, ஆகட்டுமே!*
நான் ஓர் மண்பாண்டம் உம் கரத்தில்;
உம் பாதத்தண்டை காத்திருக்கும்
என்னை உம் சித்தப்படி மாற்றும்!

— தேவனது தெரிவு: 1 கொரி 1:27-31 ... *பலவீனமானவை ... இழிவானவை*

விளைவுகள் யாவும் தேவனை மகிமைப்படுத்த —
அவர் கண்டிப்பானவர் (நியா 7:2) ... கிதியோன்
''விரும்புகிறவன்... ஓடுகிறவன்... இரங்குகிறவர்'' (ரோ 9:16)

— துன்பம் நம்மை நொறுங்கியவர்களாய்க் காத்துக்கொள்ளும்.
7ஆம் வசனத்தைத் தொடர்ந்து 8-10ஆம் வசனங்கள்
(2 கொரி 4)

''நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை'' (வச 1,16)

துன்பத்தைப்போல் நம்மைப் பலப்படுத்துவது எதுவுமில்லை (வச 16)

5. நித்திய நோக்குடனேயே செயல்படுங்கள்.

காணப்படுபவை அல்ல, காணப்படாதவை ... (வச 18)
உடனடி விளைவுகளையே உலகம் நோக்குகிறது;
இறைப்பணியிலோ, நாம் **முடிவான** கனிகளை எதிர்நோக்குகிறோம்.

— உலகிலுள்ள யாவும் அசைக்கப்படுகின்றன (எபி 12:26,27).
நமது ஊழியம் *''கிருபையைப்''* பற்றி நிற்கிறது (வச 28)

— முதலாவது தேவனுடைய **ஊழியத்தைத்** தேடுங்கள் என்றல்ல,
முதலாவது தேவனுடைய **இராஜ்யத்தைத்** தேடுங்கள்!

இறையரசை மனதிற்கொண்டிருப்பதே
நமது தெரிவுகளைப் பாதிக்கும் — மோசே (எபி 11:24-27)

தேவனையே அனைத்திலும் பிரியப்படுத்தத்
தெரிந்துகொள்ளுங்கள் —
1 யோ 2:17 ... *உலகம் ... தேவ சித்தம்*

— வயதாக வயதாக
அதிகமதிகமாய் இறையரசே நமது நினைவாயிருக்க வேண்டும்.

- பண ஆசையை அறவே ஒழித்திடுங்கள் (மத் 6:19-21)
- உங்கள் வாழ்வை அதிகமதிகமாய் மக்கள்மீது முதலிடுங்கள்
  1 தெச 2:19 ... *எங்கள் கிரீடம் நீங்களல்லவா?*
  மக்கள் உங்களுக்கு என்ன செய்வார்கள் என்பதல்ல,
  நீங்கள் மக்களை ஆசீர்வதிப்பதிலேயே
  கரிசனையாயிருங்கள்.
- மனிதரைப் பிரியப்படுத்தாது,
  எல்லாவற்றையும் கர்த்தருக்கென்றே செய்யுங்கள்
  (கொலோ 3:23,24)

— 2 தீமோத்தேயுதான் பவுல் எழுதிய கடைசிப் புத்தகமாயிருக்கலாம்
(2 தீமோ 4:6,7)

ஊழியர் ஒவ்வொருவருக்கும் உன்னதம் தொடும் வாக்கு:
வச 18,
''கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து,
தமது பரம இராஜ்யத்தை அடையும்படிக் காப்பாற்றுவார்;
அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்!''

133

கர்த்தர் பணியில் கனி நிறைவு

How to be Bountiful in God's Work

முகவுரை

■ அற்புத மீன் பிடிப்பு: *''வலையை வலப்பக்கம் போடுங்கள்''*
(யோ 21:6)

இது திபேரியா கடலில் (வச 1 ... 6:1 ... கலிலேயா)
இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் நடந்தது.

இதேவித அற்புதம் அவரது ஊழியத் துவக்கத்தில் —
அது கெனேசரேத்துக் கடலருகே நடந்தது.
லூக் 5:4 ... *''வலைகளை ஆழத்தில் போடுங்கள்!''*

வாசியுங்கள்: லூக் 5:1-11
யோ 21:4-14

யோவானில், அவர்கள் வலையை இழுக்கமுடியவில்லை!
லூக்காவில், படகுகள் அமிழத் துவங்கின!
''ஏராளம்'' மீன் பிடிப்பு!

இரு சம்பவங்களிலும்,
கனியற்ற முயற்சியின் நடுவில் அற்புதம் செய்யப்பட்டது —
(*''ஒன்றும்''* கிடைக்கவில்லை — எதுவும் கிடைக்கவில்லை)

லூக் 5:5 ... *இரவு முழுவதும் பிரயாசம்... ஒன்றும் கிடைக்கவில்லை*
யோ 21:5 ... *புசிக்க ஏதுமுண்டா? ஒன்றுமில்லை!*

லூக்கா 5 இல் ... 3 சீடர் (வச 9,10) ... பன்னிருவரில் மூவர்
யோவான் 21 இல் ... 7 சீடர் (வச 2)

■ மீன் கிடையாததற்குக் காரணம் —
(அ) மேலோட்டத் தண்ணீரில் வலை போட்டதல்ல (லூக் 5)
(ஆ) இடது பக்கமே வலை போட்டுக்கொண்டிருந்ததல்ல (யோ 21)

இயேசுவானவர் இந்நிகழ்வுகள் நடக்கச் செய்தது சீடர்களுக்குக்
கனிநிறைப் பணிக்குப் பாடங்களைப் போதிக்கவே —

"கர்த்தர் பணியில் கனி "நிறைவாயிருப்பது எப்படி?" (லூக் 5 & யோ 21)

வெற்றிகளிலிருந்து அல்ல, தோல்விகளிலிருந்தே அதிகம் கற்கிறோம்,

ஏழு இரகசியங்கள்:

1. ***தேவனுடைய வார்த்தை*** (Word of God)

லூக் 5:4,5 ... *"ஆகிலும் உமது வார்த்தையின்படியே ..."*

தேவனுடைய வார்த்தையை நாம் எப்படி மதிக்கிறோம்?
அதனுடன் தினமும் எவ்வளவு நேரம் செலவிடுகிறோம்?
வேதம் அதிகம் வாங்கப்படுவதுதான்... அதிகம் வாசிக்கப்படுகிறதா?

தேவனது கண்டிப்பு —

ஓசி 4:6 ... *அவர்கள் பிள்ளைகளை மறந்துவிடுவேன்*

8:12 ... *அந்நிய காரியமாய்* — சொந்தமாக்கப்படவில்லை.

- பேதுருவிடம் பல குறைபாடுகள் இருந்தன;
  ஆனால் தேவ **வார்த்தைக்கு** அவரது வாழ்வில் தனியிடம் இருந்தது —

எ.கா.) மத் 26:75 ... ***வார்த்தையை*** *நினைத்து... மனங்கசந்து...*

யோ 6:68 ... *யாரிடம் போவோம்?*

ஜீவ ***வார்த்தைகள்*** *உம்மிடமுண்டே!*

அப் 11:16 ... பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது ...

"நான் ***வார்த்தையை*** *நினைவுகூர்ந்தேன்"*

அவரது நிருபங்கள் — (வார்த்தையின் முக்கியத்துவம்)

மறுபிறப்பு	: 1 பேது 1:23
வளர்ச்சி	: 1 பேது 2:3
ஊழியம்	: 1 பேது 4:11அ
அனுபவங்கள்	: 2 பேது 1:18,19
மறுவருகை	: 2 பேது 3:9

- நமது புள்ளி விபரங்கள் தேவனை அசத்திவிடாது!
  நமது சாதனைகள் அவரைக் கவர்ந்துவிடாது;
  "வசனத்துக்குமுன் நடுங்குவதோ" அதைச் செய்யும் (ஏசா 66:1,2)

☐ திருவசனத்தைப் படிக்குமளவு, அதைப் பிறரோடு
பகிரவும் துடிப்பீர்கள்!
எ.கா.) எரேமியா: *"என் எலும்புகளில் அடைபட்ட நெருப்பு"*
(எரே 20:9)

2. ***தற்பரிசோதனை*** (Self-examination)

லூக் 5:8 ... *"என்னை விட்டுப் போய்விடும் ... நான் பாவி"*

தோல்விகள் மட்டுமல்ல, ஒவ்வொரு வெற்றியும், ஒவ்வொரு
அற்புதமும், ஜெபத்திற்குக் கிடைக்கும் ஒவ்வொரு பதிலும்
நம்மை நாமே ஆராய்ந்துபார்க்க ஒரு வாய்ப்பு —

எ.கா.) யோபு (யோபு 42:5,6)
ஏசாயா (ஏசா 6:5)

இன்றைய மார்க்கத்திலோ —
தரிசனங்கள், வெளிப்பாடுகள் கிடைத்துவிட்டால்
என்னே அகந்தை, அகம்பாவம், அலட்டல்!

☐ தற்பரிசோதனை தினசரிக் கடமையாகட்டும் —
ஊழியத்திலிருப்போருக்கு இது கட்டாயமாகட்டும் —

(உன் 1:6 ஆ) ... *"மற்ற திராட்சத்தோட்டங்கள் ...*
என்னுடையதையோ!"
— சூலமித்தியாள்

அனுதின நடக்கை ... **பாதங்களில்** தூசி ...

பேதுருவிடம் இயேசு: "நான் உன் உடல் முழுவதையுமல்ல,
பாதங்களைக் கழுவட்டும்!" (யோ 13:5-10)
இல்லையேல் ஐக்கியமில்லை!

"நாம் ஒளியில் நடந்தால் ... ஐக்கியம் ... இரத்தம்" (1 யோ 1:7)
"பாவங்களை (பொதுவாக அல்ல, குறிப்பாக) *அறிக்கையிட்டால்"*

எ.கா.) ஏசாயா — குறிப்பாய் *"உதடுகள்"*
நம்மெல்லாருக்கும் தேவையான "வாய் கழுவல்"

ஏசாயா மூலம் திருவார்த்தை: *"உங்கள் கைகளில் இரத்தம்"* (ஏசா 1:15)
அதாவது, சகவுறவுகள்

பாடல்: *"தூய்மை பெற நாடு"* (*"Take time to be holy!"*)

3. *தேவன்மீது அன்பு* (Love for God)

யோ 21:15,16,17 ... *''என்னிடம் அன்பாயிருக்கிறாயா?''*
இது தனிப்பட்ட நேரடியான கேள்வி —
''யோனாவின் குமாரன் சீமோனே ... சீமோனே ... சீமோனே''

ஒப்புயர்வற்ற அன்பு:

''இவர்களிலும் (இவைகளிலும்) *அதிகமாய் ...''* (21:15)
அதாவது, அவர்கள் தொழில் (வச 3) *(மீன் பிடிக்கப் போகிறேன்)*
ஆசிகள் (வச 11) — 153 மீன்கள்
அற்புதம் (லூக் 5:11) — படகு நிறைய மீன்
வவ்வால் மீனோ, வஞ்சிரம் மீனோ?!

ஆசீர்வாதங்களிலேயே திளைத்துவிடக்கூடாது!
இதுதான் எபேசு சபையின் தோல்வி —

வெளி 2:1-5 ... *உபதேசம் ... செயல்பாடுகள் ...*
ஆனால், *ஆதியன்பில் இறக்கம்!*

☐ தேவன்பாலுள்ள அன்பினால் பிறக்காத எவ்வூழியமும்,
அது மக்கள்மீது அன்பு நிறைந்ததாயிருந்தாலும்,
சோதனை, சோர்பு நிறையும்போது தாக்குப்பிடிக்காது.
*''**என்னை** நேசிக்கிறாயா? ... ஆடுகள் ... குட்டிகள் ... மேய்த்திடு''*
வேறு எந்த உந்துதலும் நீடிக்காது.

நற்செய்திப் பேராணை கிறிஸ்துவின் மாபெரும் கட்டளை —
அன்பு → கீழ்ப்படிதல் (1 யோ 5:3)

☐ தேவன்மீதுள்ள நேசத்திற்குப் போட்டி —
''உலக சிநேகம்''
தேவனது வைராக்கிய நேசம் (யாக் 4:4,5)
எ.கா.) தம்பதியர் அன்பு

சமரசம் / உலகப்போக்கு / பிரபலம் நாட்டம் / மனிதரைப்
பிரியப்படுத்துதல் / முதலியன.

சங்கீதம் 1 இதனைத் தெளிவாய்ச் சித்தரிக்கிறது.
*''ஒருவன் உலகிலும் உலகப் பொருட்களிலும் பற்று வைத்திருந்தால்,
பிதாவானவரின் அன்பு அவனிடம் இல்லை''* (1 யோ 2:15)

4. *கர்த்தரது நடத்துதல்* (Guidance of the Lord)

லூக் 5:4 ... *''ஆழத்தில் வலையைப் போடுங்கள்''*
யோ 21 :6 ... *''வலையை வலப்பக்கத்தில் போடுங்கள்''*

மீனவன் பேதுரு vs. தச்சன் இயேசு!
எவ்வளவுதான் தொழில்நுட்ப அறிவிருந்தாலும்,
அது ஆவியானவரின் நடத்துதலுக்கு மாற்றாகாது —

இன்னோர் எ.கா.) அப்போஸ்தலன் பவுல் vs. கப்பல் மாலுமி
அப் 27:9-11,21,22

ஆவியானவரின் பிரதான வெளிப்பாடுகள் —

ஏசா 11:2 ... *ஞானம், அறிவு, ஆலோசனை, உணர்வு ...*
(இப்பட்டியலிலுள்ள ஆறில் நான்கு!)

☐ செயல்முறைகள் — உலகப் பாங்கா, பைபிள் முறையா?

எ.கா.) நிர்வாகத் தத்துவங்கள் —
மத் 20:25,26 ... *புறவின அதிகாரிகள் ... உங்களுக்குள்ளே*

குழு விவாதம் vs. இறை நடத்துதல் (செங்குத்துப் பரிமாணம்).
செயற்குழுக் கூடுகைகளுக்குக் குறைவில்லை; ஜெபக்கூடுகைகள்?

தொண்டா தொழிலா? (Ministry or Business?)

காரியங்களைச் சரியாய்ச் செய்வது (திறமை)
vs. சரியான காரியங்களைச் செய்வது (நடத்துதல்)

ஜெபம்: *''நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?''* (அப் 9:6)

*''சுயபுத்தியைச் சாயாதே ... அவர்மீது நம்பிக்கையாயிரு ...
அவரை நினைத்துக்கொள் ... உன் வழிகள் ...''* (நீதி 3:5,6)
— ஞானி சாலொமோன் சொன்னது!

நால்வகையினருக்குப் புத்திமதிகள் (நீதி 1:4,5):

''பேதை'' — ஒன்றுமறியாதவன்
''வாலிபன்'' — கொஞ்சம் அறிந்தவன்
''புத்திமான்'' — அதிகம் அறிந்தவன்
''விவேகி'' — பிறரைவிடக் கூடுதல் அறிந்தவன்

அப்படியானால், திட்டமிடக்கூடாதா?
திட்டமிடுங்கள்;
அதைக் கர்த்தரிடம் சமர்ப்பியுங்கள் — சங் 37:5

5. *தேவனே தருபவை* (Provisions of God)

யோ 21:9 ... ஓர் அற்புத மீன் பிடிப்பு —

ஆனாலும், காலைச் சிற்றுண்டி அன்று கிடைத்த
மீன்களினால் அல்ல, கர்த்தரே படைத்தவை
(வச 9-12)

அப்பம், மீன், கரி நெருப்பு யாவும் படைத்தது இயேசுவே (வச 9)!

கிறிஸ்தவ ஊழியம் எதுவும் அற்புதங்களை எதிர்பார்க்கத்
தவறிவிடக்கூடாது — அசாதாரணம் நிகழவேண்டும்!

எல்லாம் விளக்க முடியுமானால், அதில் விண்ணவர் எங்கே?

☐ ''தேவனே பார்த்துக்கொள்பவர்!'' — *யேகோவா-யீரே*

இச்சத்தியம் முதலாவது வெளிப்பட்டது
ஆபிரகாமின் சரிதையில் —
அவன் **நம்பிக் கீழ்ப்படிந்தபோதே** அவ்வெளிப்பாடு!
நாமோ பலிக்கு ஆட்டுக்காய் ஜெபிப்பதிலேயே
அதிக நேரம் செலவழிக்கிறோம்! (ஆதி 22:6-8)
நம்புவோம், கீழ்ப்படிவோம், இவையே நமது பங்கு!

☐ நமது பணி மிகவும் பெரிது, கடினமானது —

ஆனால், *''பலத்தினால் அல்ல ... என் ஆவியினால்''* (சக 4:6)
(புத்திக்கூர்மை / நிறுவனப் பலம் / மக்கள் ஆதரவு / முதலியன)

6. *பணியுயர்வு* (Promotion)

லூக் 5:10 ... மீன் பிடிப்பவன் → மனிதரைப் பிடிப்பவன்
யோ 21:15-17 ... மீன் பிடிப்பவன் → ஆடு மேய்ப்பவன்

சிறிய காரியங்களிலும் உண்மையாயிருங்கள் ...
தனியாள் ஆத்துமாதாயப்பணி ஒதுக்கப்படக்கூடாது —
எ.கா.) ஜார்ஜ் வெர்வர் (OM) இன்றும் கைப்பிரதி விநியோகிக்கிறார்.

— ஆடு, வெள்ளிக் காசு, மகன் ... இவை மூன்றிலும்
கண்டுபிடித்தவரும் தொலைந்ததும் ஒற்றைகளே (singles)

☐ பணியுயர்வுக்கு எடுத்துக்காட்டுகள்:

உதவிக்காரர் → மூப்பர் (1 தீமோ 3:13)
தீர்க்கர்-போதகர் → அப்போஸ்தலர் (அப் 13:1,2/14:14)
பேதுரு: உத்தம ''மேய்ப்பர்'' *முடிசூட்டப்படுவர்* (1 பேது 5:2-4)

☐ இரு எச்சரிப்புகள் —

அ) உங்களையே உயர்த்திக்கொள்ளும் குறுக்கு வழிகள் வேண்டாம்.

எரே 45:5அ ... *''உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ?''*

யாக்கோபின் தந்திரம் ... முடமாதல் ... முடிசூடல் (ஆதி 32:27-32)

தன்னையே உயர்த்துவதற்கு ஓர் எடுத்துக்காட்டு —
லூக் 14:8-11 ... *விருந்து ... முதன்மையான இடம்*
தன்னை உயர்த்துகிறவன் எவனும் ...

அரசியல் ... காக்கா பிடித்தல் ... வேண்டாம்.

இதே காரியத்தை இயேசு இன்னொரு வேளையிலும் போதித்தார்:
அது அடுத்த எச்சரிப்பைத் தருகிறது —

ஆ) உங்களை உயர்த்த மற்றவரை மட்டந்தட்டாதீர்!

லூக் 18:10-14 ... பரிசேயன் vs. ஆயக்காரன்

யோவானோ: *''அவர் பெருகணும் ...''* (மூத்த நிலை?) Seniority
அவன் உயர்த்தப்பட்டான் — *''யோவானிலும் பெரியவனில்லை''*

7. *பாடு சகிப்பு* (Endurance of Suffering)

யோ 21:18,19 ... *''நீ விரும்பாதது ... விரும்பாத இடம்''*
இதுதான் ''சிலுவை'' என்பது!

பேதுருவின் முதல் நிருபம் — ஒவ்வொரு அத்தியாயத்திலும் —

1:6,7 ... *பலவித உபத்திரவங்கள் ... பொன் ... அக்கினி*
2:21 ... *கிறிஸ்து பாடுபட்டார் ... நமக்கு முன்மாதிரி ...*
3:17 ... *தீமை செய்தல்ல, நன்மை செய்து பாடு ...*

4:12,13 ... *பற்றியெரியும் அக்கினி ... புதுமையன்று ... சந்தோஷம்*
5:9,10 ... *எங்குமுள்ள சகோதரருக்கு அதே பாடுகள் ...*

இன்றையத் துர்வுபதேசம் —
இயேசு பாடுபட்டதால் நாம் பாடுபடவேண்டியதில்லை!
ஆனால், லூக் 9:22,23
சிலுவை சுமத்தல்: சீடத்துவத்தின் பிரதான நிபந்தனை

கிறிஸ்துவின் *''சிலுவைக்கு''* அநேகப் பகைவர் (பிலி 3:18,19)

இன்றையப் போக்கு:
கடினப் பாதைகளுக்குத் தப்புதல்;
வசதி, சொகுசு தேடுதல்; முதலியன.

திருமறைப் போதனை
தீங்கனுபவி ... 2 தீமோ 2:3
பாடனுபவி ... 4:5,6

— ''சொகுசு தேடும் கிறிஸ்தவர் பஞ்சு மிட்டாய்க் கிறிஸ்தவர்''
— C.T. ஸ்டட்

— வில்லியம் பூத் கொடுத்த சவால்:
''கண்ணீர் ... வியர்வை ... இரத்தம்''

— வாட்ச்மேன் நீ:
''பாடுபட ஆயத்த மனது எல்லாருக்கும் வேண்டும்.''

■ *முடிவுரை*

இதுவரையில்லாத அளவு உங்கள் ஊழியத்தில்
பெரிய காரியங்கள் காண விரும்பினால் —

1. உங்கள் வாழ்வில் திருவசனத்திற்கு உரிய இடம் கொடுங்கள்.
2. அடிக்கடி தற்பரிசோதனை செய்யுங்கள்.
3. வேறெதையும், வேறெவரையும்விடத் தேவனை நேசியுங்கள்.
4 உங்களை வழிநடத்த தேவனிடம் வேண்டுங்கள்.
5. உங்கள் தேவைகளுக்குத் தேவனை நம்புங்கள்
6. உங்களை உயர்த்த தேவனுக்குமுன் காத்திருங்கள்.
7. பாடுகளைப் பொறுமையாய்ச் சகித்திடுங்கள்.

*(கிதியோனியர் தேசிய முகாம் 2008இல்
ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட இச்செய்தி ஒளித்தட்டில் உண்டு.)*

134

கர்த்தரை எப்படிச் சேவிக்கவேண்டும்?

How to Serve the Lord

முகவுரை

பாடம்: ***அப் 20:19,20 — அப்போஸ்தலன் பவுலின் சாட்சி***

வச 19
1. *மனத்தாழ்மையோடு* (Tenderness)
— தேவனுக்கு முன்பாக
2. *கண்ணீரோடு* (Tears)
— ஆத்துமாக்களுக்காகப் பாரம்
3. *சோதனைகளோடு* (Tenaciousness)
— சோதனை, வேதனை, பிரச்னை, ...

வச 20
4. முழுமையாக (Thoroughness)
— ஊழிய முறை

1. மனத்தாழ்மையோடு (மீகா 6:8) (Tenderness)

ஏசா 38:15 — *''வாழ்நாளெல்லாம் மெண்மையாய் நடப்பேன்''*
(அரசன் எசேக்கியா)
நித்திய *மரணத்திலிருந்து* நம்மை இரட்சித்ததற்காய்
நன்றியுணர்வுடன் (வச 16,17)

நீதி 28:14 — *''எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்''*
நமது *பாவ நிலையை* உணர்ந்து (1 தீமோ 1:15)

ஏசா 66:2 — *''திருவசனத்துக்குமுன் பயந்து நடுங்கி ...''*
வேத வாக்கியங்கள் மீது கண்ணியம்
என்னை ''வளமாக்கும்'' என்றல்ல;
என்னை ''வளையும்'' என்று ஜெபியுங்கள்.

1 தீமோ 1:12,13 — *''என்னை உண்மையுள்ளவன் என்றெண்ணி''*
நாம் தகுதியானவர்களல்ல; தேவனது கிருபையே
நம்மை அவர் பணிக்காய்த் தெரிந்தெடுத்தது.

பிலி 2:1-3 — *''உருக்கம் ... இரக்கங்கள் ... மனத்தாழ்மை''*

2. *கண்ணீரோடு* (Tears)

இயேசு (எபி 5:7)
பவுல் (அப் 20:19)
தீமோத்தேயு (2 தீமோ 1:4)

இவர்களெல்லாம் கண்ணீர் ததும்பிய மனிதர்!
கண்ணீர் என்பது உணர்ச்சிப் பெருக்கின் வெளிப்பாடு.
அப்படித்தான் தேவன் நம்மைப் படைத்துள்ளார்.
கண்ணீர் என்றால் உணர்வு.

நமக்குக் கண்ணீர் தேவைப்படும் பகுதிகள் —
அ) விண்ணப்பிக்கும்போது (எபி 5:7)
ஆ) விதைக்கும்போது (சங் 126:5,6)

அ) எபி 5:7இல்,
அறியாதவர்களுக்காகவும் நெறிதவறியவர்களுக்காகவும் (வச 2),
அவர்களை இரட்சிக்க (வச 9),
இரக்கத்துடன் (வச 2),
இயேசுவானவரது விண்ணப்பம், வேண்டுதல்.
ஏசா 53:12 ... *அக்கிரமக்காரருக்காய் வேண்டினார்.*

ஆ) ''கண்ணீரோடு விதைப்பதென்றால்,''
மக்களுக்குத் திருவசனத்தைப் பகிரும்போது இருக்கவேண்டிய
நொறுங்குதல், கருணை, புரிதல் நிறைந்த உள்ளம்.

லூக் 4:22 ... *கிருபை பொருந்திய வார்த்தைகள்* (வச 18)
அப் 20:31 ... *கண்ணீரோடு பவுல் புத்தி சொன்னார்.*
2 தீமோ 2:24-26 ... கர்த்தருடைய ஊழியரில்
காணப்படவேண்டிய *சாந்தம், பொறுமை, தயவு.*

3. *சோதனைகளோடு* (Tenaciousness)

அப் 20:19,22,23,24

திருப்பணிக்குச் சிறந்த கொள்கை வாசகங்கள்
(கிருபையின் சுவிசேஷப் பிரசங்கம், வச 24) —

- *''இவை ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன்''* (வச 24)
- *''நான் செய்வதையே இன்னும் செய்வேன்''* (2 கொரி 11:12)

- *''நான் கீழே இறங்கிவரக்கூடாது''* (நெகே 6:3)
  பவுலுக்கிருந்த ஆபத்துக்கள் (2 கொரி 11:23-28)
- *''ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும்*
  செலவுபண்ணப்படவும் சந்தோஷமாய் விரும்புவேன்''
  (2 கொரி 12:15)
  வசனம் 10ஐயும் பாருங்கள்.

(கடின உழைப்பு: 1 தெச 2:9; 2 தெச 3:7-9; 1 கொரி 4:12)

4. *முழுமையாய்* (Thoroughness)

அ) செய்தியில்

அப் 20:20 ... *பயனுள்ள எதையும் மறைக்காமல் ...*
:21 ... *மனந்திரும்புதல் அத்துடன் விசுவாசம்*

ஆ) செயல்முறையில்

அப் 20:20ஆ ... *வீடுவீடாய் ... வெளியிடங்களில் ...*
:21அ ... *யூதருக்கு அத்துடன் கிரேக்கருக்கு*

அ) செய்தியை அறிவியுங்கள் —
i) தெளிவாக (1 கொரி 2:13; 2 கொரி 2:17; அப் 1:3)
ii) திட்டமாக (1 தெச 1:5; 1 கொரி 2:5; மத் 7:28,29)

ஆ) செயல்முறைகளைக் கிரமமாக்குங்கள் —
ரோ 15:19 ... தெளிவான திட்டம்
தீத் 1:4,5 ... கரிசனையுடன் தொடர்பணி
அப் 15:36 ... *எப்படியிருக்கிறார்களெனப் போய்ப் பார்ப்போம்*
2 தீமோ 2: 2... அடுத்த வரிசைத் தலைவர்களை உருவாக்குதல்

135

ஊழியரும் மக்களும்

Preachers & People

பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய நிருபத்தில்
இருவகையான ஊழியரையும் மக்களையும் சந்திக்கிறோம்.

இந்த ஒப்புமைப் பாடம் உண்மையாகவே சவால் நிறைந்தது.

1. *தேவனுடைய மாசற்ற பிள்ளைகள்*
   vs.
   கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததி (பிலி 2:15,16)

2. சுயநலம் நிறைந்த மக்கள்
   vs.
   பிறர்மீது கரிசனை கொள்வோர் (2:20,21)

3. போட்டி போடும் பிரசங்கிமார்
   vs.
   அன்புநிறை ஆத்துமாதாயகர் (1:12-17)

4. பூவுலகிற்கடுத்தவற்றையே சிந்திக்கும் ஊழியர்
   vs.
   விண்ணகச் சிந்தையுள்ள அப்போஸ்தலர் (3:17-21)

5. மிஷனரிப் பாரம் கொண்ட சபைகள்
   vs.
   அக்கறையற்ற சபைகள் (4:15-18)

சபைக்கு உள்ளேயும் வெளியேயும்
எப்பொழுதுமே இருவகை மக்கள் இருப்பர்.
பொதுவாக, பெரும்பான்மையினர் சரியானவரல்ல.

தேவனுடைய சிறுபான்மையினர்,
பிசாசின் பெரும்பான்மையினர் —
இவர்களில் யாரோடு நிற்க விரும்புகிறீர்கள்?

136

தொண்டா, தொழிலா?

Ministry or Business?

முகவுரை

- இலாபம் மிகுந்த துறை —

  ஒரு காலத்தில் திரைப்படத் துறை.
  அடுத்து, அரசியலாயிருந்தது.
  இன்று, மார்க்கம்தான்.

  மட்டுமல்ல, முற்காலங்களில் பிற மதக் குருக்களே ஏராளம் பணம் சேர்த்தனர்;
  இப்பொழுதோ அது *''கிறிஸ்தவப் பிரசங்கிமார்தான்!''*

- திருப்பணியை வணிகமயமாக்குதல். (commercialisation)
- அபிஷேகத்தை ஆதாயத் தொழிலாக்குதல். (merchandizing)

  பல நூற்றாண்டுகட்கு முன்னரே பவுல் இதை முன்னறிவித்தார்—
  1 தீமோ 6:5 ... *தேவ பக்தியை ஆதாயத்தொழிலாய் ...*

  தன்னைக் குறித்த பவுலின் சாட்சி —
  1 தெச 2:5 ... *இச்சகம் ... பொருளாசை ... மாயை*

  நமக்குக் கட்டளை: *''இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு!''*
  1 தீமோ 6:5இ

தொண்டுக்கும் தொழிலுக்குமுள்ள வேறுபாடுகள் —

(1)	**தொண்டு**	**தொழில்**
	தேவ மகிமையே பிரதான நோக்கு.	பணி விரிவாக்கமே முக்கிய குறிக்கோள்.

- அப்போஸ்தலரது நற்செய்திப்பணியின் உள்நோக்கு —

  ரோ 15:8,9 ... இதுதான் இயேசுவின் நோக்காக இருந்தது.
  அதை அப்போஸ்தலர் பின்பற்றினர்.

  பிலி 2:9-11 ... *முழங்கால் ... நாவு ... மகிமை*

- மாறாக, அது தொழிலானால், நீங்கள் பெருமித உணர்வடையும் படிப் பணியை விரிவாக்கிக்கொண்டேயிருப்பீர்கள் —

  ''உங்கள் தற்பெருமை பெருகும்''
  ''உங்களுக்கு அந்தஸ்து கூடும்''

□ **போட்டி** மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள்.

□ போதுமான அளவு *''பலப்படுத்தாமல்''*
''நீட்டிக்கொண்டே'' போவீர்கள் (ஏசா 54:2)
அதாவது, அளவுக்காகப் பலியாகும் தரம்.

□ 2 கொரி 10:12-17 ... அருமையான சாட்சி ...
''அளவுக்கு மிஞ்ச மாட்டோம் ... கர்த்தரில் மேன்மை''

(2) **தொண்டு** | **தொழில்**

தொண்டு	தொழில்
மக்களை ஆசீர்வதிக்க அர்ப்பணிப்பு.	மக்களைப் பயன்படுத்துவதிலேயே ஆர்வம்.

□ அப் 20:20 ... *''பயனுள்ள எதையும் மறைத்துவைக்காமல் ...''*
:27 ... *''தேவனது முழு ஆலோசனையை அறிவித்தேன்''*
:33 ... *''ஒருவரது பொன், வெள்ளியை இச்சிக்கவில்லை''*

□ 2 கொரி 12:14 ... *''உங்களுடையதையல்ல, உங்களையே ...*
பிள்ளைகளுக்கே பெற்றோர் ...
செலவுபண்ண ... செலவுபண்ணப்பட''

□ பால் கறக்கும் பசுக்களல்ல, மேய்க்கப்படவேண்டிய ஆடுகள்!
இயேசுவை உண்மையாய் நேசியாவிடில்
இது சாத்தியமன்று (யோ 21:15-17)

சுவாரஸ்யமாக,
விசுவாசிகள் ஒருபோதும் ''பசுக்கள்'' (அ) ''மாடுகளுக்கு'' ஒப்பிடப்படவில்லை;
அவர்கள் எப்பொழுதுமே ''ஆடுகள்'' எனப்படுகின்றனர்.
வேண்டுமானால், பிரசங்கிமாரை *''மாடுகளுக்கு''* ஒப்பிடலாம்—
1 தீமோ 5:18

இயேசு தம்மை மாடு மேய்ப்பவர் என்று அறிமுகப்படுத்தவில்லை;
அவர் எப்பொழுதும் ஆடு மேய்ப்பவர்தான்!

- மக்களது கண்களைத் திறப்பதா, அறியாமையைச் சாதகமாக்குவதா?
  பவுலின் பாரமும் ஜெபமும் —
  எபே 1:16,17,18 ... *இராப்பகல் ஜெபம்*

இருண்ட காலம்: பைபிள் இல்லை → குருட்டுத்தனம்
இக்காலம் : நிறைய பைபிள்கள், ஆனால் கண்களைக் குத்தியாயிற்று.

விசுவாசிகளுக்குப் போதிக்கிறோம்;
ஆனால் அவர்களே ஆராய்வதற்குப் பயிற்றுவிப்பதில்லை!

விசுவாசி எவராவது வரங்கள், தாலந்துகளால் மிளிரத் துவங்கினால்,
நாம் (மேய்ப்பரும், பிரசங்கிமாரும்) பயந்து சாகிறோம்!

(3) **தொண்டு**	**தொழில்**
ஊழியத்திலிருப்போர் பிரசங்கங்களில் தேவனையே மகிழ்விக்க நினைப்பர்.	தொழில் நோக்குடையவராயின் கேட்போரின் விருப்பத்திற்காகவே பிரசங்கிப்பர்.

□ 2 கொரி 2:14,15,17 ... *''தேவனுக்கு ... தேவனுக்கு ... தேவனால்''*
வேறுபட்டவர்: *''அநேகர் ஆதாயத்திற்காய்க் கலப்படம்''* (வச 17)

□ 2 தீமோ 4:3,4 ... *''தங்கள் சொந்த விருப்பத்திற்கேற்ப ...''*
மக்களுக்குத் ''தேவையானதை'' அல்ல, *''விருப்பமானதை!''*
''திரளாய்'' இப்படிப்பட்ட பிரசங்கங்கள்தான்!

பக்திவிருத்தி / பயிற்சி / பக்குவம் / எதுவும் கிடையாது;
பகட்டு / பரவசம் / இவைதான்!

பேச்சு அதிகம்; அச்சு அதிகம்;
நீளம் அதிகம்; அகலம் அதிகம் ... மைல் கணக்கில்!
ஆழமோ ஓர் அங்குலம்கூட கிடையாது.

□ தீர்க்கதரிசன வார்த்தை. இங்கு பிரசங்கியாரது நினைவெல்லாம் தேவனே!	vs.	திருட்டுத் தந்திரப் பேச்சு. இங்கு முன்னால் இருப்போரே பிரசங்கியாரது கவனம்!

ப.ஏ. தீர்க்கர்கள்: *''கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்!''*
(1 இரா 17:1; 2 இரா 3:14)

□ *''நான் இருளில் சொல்லுகிறதை கூரை மேலிருந்து அறிவியுங்கள்!''* (மத் 10:27)

ஜெப அறையில் நேரம் செலவழிக்காமலே வீட்டுக்கூரைமீது ஏறிவிடுகிறோம்.
நினைவிற்கொள்க: நாம் தபால்காரர்; தபால் அனுப்புபவரல்ல!

(4) **தொண்டு** — **தொழில்**

தொண்டு	தொழில்
அறிக்கைகள் பிரசுரிப்பது துதி விண்ணப்பத்திற்கே.	அறிக்கைகள் வாசகரைக் கவர்ந்து பணம் திரட்டுவதற்கே,

□ ரோ 15:16-19 ... புறவினத்தார் ... தேவனுக்குப் பலி ... கிறிஸ்து என் மூலம் செய்யாத எதையும் சொல்லத் துணியேன் ...

''வார்த்தை'' — நான் பிரசங்கித்தது
''செய்கை'' — நான் செய்தது
''அடையாளங்கள்'' — தேவன் செய்தது

இல்லையேல் நாம் சொல்லுவது பொய், மிகைப்படுத்துதல்.

□ மக்கள்முன் சமர்ப்பிக்கவோ அச்சில் வெளியிடவோ அறிக்கைகளை ஆயத்தப்படுத்தும்போது கேட்கவேண்டிய கேள்விகள் —

- இது உண்மையா?
- இது தேவனை மகிமைப்படுத்துமா?
- இது வாசகருக்கு, கேட்போருக்கு, பயனளிக்குமா? (உற்சாகம், உணர்த்துதல், ...)
- தகவல்களைவிட அவர்கள் மனதில் என்ன அபிப்பிராயம் உண்டாகும்?
- இது மற்ற ஊழியரை, ஊழியங்களை, பாதிக்குமா?

முறைப்படுத்துகிறோம் (editing) என்று மசாலா சேர்க்காதீர்!

□ ஊழியத்திற்குப் பணம் திரட்டுவதிலும் மக்கள்மீது அழுத்தம் கொண்டுவரக்கூடாது —

அப் 20:33,34 ... தனது மற்றும் குழுவினரது தேவைகளுக்காய்க்கூட!

பிலி 4:11-19இன் கருத்துச் சுருக்கம் —

- குறைவிலும் என்னால் சமாளிக்க முடியும்.

- உங்களை வசப்படுத்த நான் முயலவில்லை.
- உங்களது நலனையே நாடுகிறேன்.

நீங்கள் வருந்திக் கேட்கலாம் — வருத்தக்கூடாது.
நீங்கள் உற்சாகப்படுத்தலாம் — மயக்கக்கூடாது.

வங்கிகளும் வியாபார நிறுவனங்களும் தங்களது இலாபத்தையே மனதில் கொண்டுள்ளன.

திருப்பணியாளரோ மக்களுக்குச் ''சேவையாளர்!'' —
''சேவை பெற அல்ல, சேவை செய்ய'' (மாற் 10:45)

□ ஜெபிப்பதைவிடக் கொடுத்துவிடுவது மக்களுக்கு எளிது.

நமது அறிக்கைகள் முடிவாக மக்களது ஜெபங்களையா, காணிக்கைகளையா, எதைக் கூட்டுகின்றன?

பவுல் அடிக்கடி கேட்டது ஜெபம்தான்;
பணம் கேட்டது மிக மிக அபூர்வம் —
ரோ 15:30; எபே 6:19; 2 தெச 3:1

(5) **தொண்டு** — **தொழில்**

தொண்டு	தொழில்
கிறிஸ்துவின் சபையையும் இறையரசையும் கட்டுகிறது.	கட்டிடங்களைப் பெருக்குவதும் சுய சாம்ராஜ்யம் கட்டுவதுமே கரிசனை.

□ மனதிலிருத்த வேண்டிய இரு வசனங்கள் —

தேவன் இவ்வளவாய் ''உலகில்'' அன்புகூர்ந்து தமது ஒரே மகனைத் தந்தார் (யோ 3:16)

கிறிஸ்து இவ்வளவாய்ச் ''சபையில்'' அன்புகூர்ந்து தம்மையே கொடுத்துவிட்டார் (எபே 5:27)

அதாவது, எதைச் செய்தாலும் நமது குறி —

- மந்தைக்கு வெளியிருப்போருக்கு நற்செய்தி
- மந்தைக்கு உள்ளிருப்போருக்கு பக்திவிருத்தி

வேறு வார்த்தைகளில்,

''ஜீவனுள்ள கற்களாகிய'' மக்களை ஆசீர்வதிக்கவே நம்மையும் நமதையும் செலவழிக்கவேண்டும் (1 பேது 2:5)

சுட்ட செங்கலிலும் செத்த கற்களிலும் செலவழிக்கும்
நேரமும் பணமும் பலமும் குறைவாயிருக்கவேண்டும்.

☐ ஆலயக் கட்டிடங்களும் ஜெபக் கோபுரங்களும்
அந்தஸ்துக்கு அடையாளங்களாய் இன்று கருதப்படுகின்றன —
பாபேலின் ஆவி கிறிஸ்தவத்தில் பரவி வருகிறதோ?

☐ சபைகளுக்கிடையே கோபுர உயரத்திற்குப் போட்டி!
எத்தனையோ சபையினருக்கு ஓர் எளிய கட்டிடம் கிடையாது;
நூற்றுக்கணக்கான ஆலயங்களுக்குக் கூரைகூட கிடையாது!
''நாம் செய்கிறது நியாயமல்ல!''

☐ நமக்குப் புரியவில்லை — ஏனோ பெரிய கட்டிடங்களைக்
குறித்த கடவுளின் எண்ணம் சாதகமாயில்லை —

- பாபேல் கோபுரம்
- சீலோவாம் கோபுரம் (18 பேர் பலி) லூக் 13:4
- சிறந்த கற்கள், காணிக்கைகளால் கட்டப்பட்ட ஆலயம் (லூக் 21:5,6)

☐ பன்னிரு அப்போஸ்தலரும் ஆயிரக்கணக்காய்ப் பெருகிக்
கொண்டிருந்த விசுவாசிகள் கூடி ஆராதிக்க, ஜெபிக்க, பிரமாண்ட
கட்டிடம் கட்டியிருந்தால், முதல் நூற்றாண்டில் உலகம் சுவிசேஷ
மயமாகியிராது —

இந்தியாவுக்குத் தோமா வந்திருக்கமாட்டார்.
அப்போஸ்தலர் பாதங்களில் வந்து குவிந்த
பணம் கொஞ்ச நஞ்சமா?

(6) **தொண்டு**	**தொழில்**
எளியவர், தாழ்ந்தவர் இவர்களே இலக்கு.	செல்வாக்கு, சொல்வாக்குள்ளோர் பின்னால் அலைதல்.

☐ எபேசு மூப்பர்களுக்குப் பவுலின் பிரிவுரையில்
இறைப்பணியாளர் எவருக்கும் காலம் போற்றும் செய்தி —
அப் 20:17-35

நமது தரிசனமும் தாகமும் திசை மாறாதிருக்க
இப்பகுதியை அடிக்கடி தியானிக்கவேண்டும்.

முடிவு வார்த்தைகள் —
(வச 35) *''பலவீனரைத் தாங்குங்கள்''*
''தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்''

☐ மேசியாவின் கொள்கை விளக்க அறிக்கையைப் படியுங்கள் —
லூக் 4:18,19 ... *பிரசங்கிக்க ... பிரசங்கிக்க ...பிரசங்கிக்க*

மூன்று அம்சங்கள் — (அ) ஆன்மீக நீதி (சுவிசேஷம்)
(ஆ) உடல் நீதி (விடுவிப்பு)
(இ) பொருளாதார/சமூக நீதி

*''கர்த்தரின் **அனுக்கிரக** ஆண்டு''*
இதன் பொருள்? (லேவி 25)
அதாவது, யூபிலி (வச 9,10,35, ...)

இதைத்தான் ஜெனரல் வில்லிய பூத் வலியுறுத்தினார்:
Soap — Soup — Salvation
உடை — உணவு — இரட்சிப்பு

☐ இன்றோ, அனாதை இல்லங்கள், சிறுவர் இல்லங்கள் என்ற
பெயரில் எத்தனையோ ஊழியர் கோடீஸ்வரராகிவிட்டனர்!
2004 சுனாமியில் மக்கள் அனைத்தும் இழந்த வேளையில்
சொத்து குவித்த ஊழியர் எத்தனை தெரியுமா?

சுனாமி, பூமியதிர்வு, வெள்ளம் இவையெல்லாம்
பிரசங்கிமாருக்கு ஆசீர்வாதமாகிவிட்டனவோ?

☐ செல்வந்தர் செல்வந்தரையே வலம் வருவர்.
இயேசுவோ வாழ்நாளில் எளியவரோடு இருந்தார்;
மரித்தபோதுதான் ஐசுவரியவானோடு இருந்தார் (ஏசா 53:9)

எளியவரோடு, தாழ்மையானவரோடு உறவுகொள்ளுங்கள்
(ரோ 12:16)

அப்பொழுது *''ஆவியில் எளிமையாயிருப்பது''* எளிதாகும்'' —
முதலாம் பாக்கிய வசனம்!

(7) **தொண்டு**	**தொழில்**
தூயாவியானவரால் நடத்தப்படுவது.	மக்கள் கருத்தும் நவீனப் போக்குமே வழிகாட்டி.

□ ஆதி அப்போஸ்தரின் ''நடைகளும்'' ''தடைகளும்'' (steps & stops) ஆவியானவராலேயே ஆளப்பட்டன —

அப் 13:2 ... *ஆவியானவர் சொன்னார் ...* (ஊழியர் தெரிந்தெடுப்பு)

15:29 ... *எங்களுக்கும் ஆவியானவருக்கும் நலமாய்க் கண்டது* (உபதேசத்துக்கடுத்தவை)

16:6,7 ... *ஆவியானவர் தடைபண்ணினார்* (மிஷனரிப் பயணங்கள்)

20:23 ... *ஆவியானவர் சொல்லுகிறார் ... கட்டுகள் ...* (உபத்திரவம்)

ஊழியத் துவக்கக் காலத்தில் இப்படித்தானிருக்கும்;
நாளாவட்டத்தில் யாவும் மாறிப்போகும்.
''ஆவியில் துவங்கி மாம்சத்தில் முடியும்'' கதை!

□ அன்று, தேவ நடத்துதல், அடுத்து நமது கலந்துரையாடல்.
இன்று, கமிட்டி விவாதம், அடுத்து ஆசீர்வாத ஜெபம்!
பெரும்பாலும் கமிட்டி கூடுகைகள் முடிவது அரசியலில்தான்.

தீர்க்கதரிசனக் கூர்மையுள்ள தலைமைத்துவம் இராது.

நிர்வாகிகளும், அதிகாரிகளும் இருப்பர்;
ஆனால் தலைவர்கள் எங்கே?

அரசியல்வாதிகள் மக்களது கருத்தின்படிச் செல்வர்;
தீர்க்கதரிசிகளோ காலத்தை நிதானிப்பர்!

■ ***முடிவுரை***

நாம் இவ்வேறுபாடுகளைப் படித்ததேன்?

அ) வழிவிலகாது நெடுகவே காக்கப்பட.
ஆ) வழிவிலகலின் அறிகுறிகள் தெரிந்தால் தடுத்து நிறுத்த.
இ) தேவனது பூர்வ பாதைகளுக்குத் திரும்ப.

தேவனது பணியைத் தேவ மனிதர் தேவனது பாணியில்
தேவனது நேரத்தில் செய்தால், அதற்குத் தேவனது ஆதரவு
இல்லாது போகாது!

(137ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

137

தேவன் அங்கீகரிக்கும் ஊழியம்

God-approved Ministry

முகவுரை

• கிறிஸ்தவப் பணியாளன் எவனும் தேவனது ஊழியன்!
அப்படியானால் தேவனைப் பிரியப்படுத்துவதும் தனது
செயல்பாடுகளுக்கெல்லாம் அவரது அங்கீகாரம் பெறுவதுமே
அவனது பிரதான நோக்கமாயிருக்க வேண்டும் —

கலா 1:10 ... *இன்னும் மனிதரைப் பிரியப்படுத்தினால் ... கிறிஸ்துவின் ஊழியனல்ல*
(மனிதரின் பாராட்டு vs. தேவனது அங்கீகாரம்)

2 தீமோ 2:4 ... *சேவகமெழுதிக்கொண்டவனுக்குப் பிரியமாய்*

நமது ஊழியங்களில் தேவனது அங்கீகாரம் வேண்டுமாயின்,
ஒவ்வொரு கட்டத்திலும் சில தீர்மானங்கள் எடுக்கவேண்டும் —

1. தேவ மகிமையா, சுய திருப்தியா?

□ சங் 115:1 ... *எங்களுக்கல்ல ... எங்களுக்கல்ல ... உமக்கே ...*
(வலியுறுத்துவதற்காய் இருமுறை)

□ சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தேவனை ''மகிமைப்படுத்தவே''
ரோ 15:9-12 ... *இதினிமித்தம் ... மேலும் ... மேலும் ... மேலும் ...*

□ நமது சாதனைகள் குறித்துப் பெருமையடிக்கலாகாது —
2 கொரி 10:16-18 ... *தன்னைத்தான் புகழக்கூடாது*

□ நமது ஊழியப்பாணியானது மக்கள் இயல்பாகவே
தேவனை *மகிமைப்படுத்தச்* செய்யவேண்டும் —

எ.கா.) இயேசுவின் ஊழியம் (மத் 9:8)
பவுலின் ஊழியம் (கலா 1:23,24)

□ மக்கள் நமக்கு மலர் தூவினால் அவர்களைத் திருத்தவேண்டும்—

அப் 14:11-15 ... லீஸ்திராவில் பவுலும் பர்னபாவும்
1 கொரி 1:12,13 ... *பவுலா சிலுவையிலறையுண்டான்?*

மகிமையைத் தேவன் பக்கமாய்த் திருப்பாததால்,
கிறிஸ்தவனல்லாதவனே தண்டிக்கப்பட்டதைப் பாருங்கள் —
அப் 12:21-23 ... ஏரோது

2. மக்கள் நலனா, திட்டம் வெற்றியா?

- ☐ மக்களை நமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்துவதல்ல —
2 கொரி 12:17-19 ... *எங்கள் பொழிவு ... உங்கள் பக்திவிருத்தி*
- ☐ மூன்று நாள் வேத போதனை முகாம் முடிந்தது —
சீடர்: *''அவர்களை அனுப்பிவிடும்''* (மத் 14:15)
இயேசு: *''அவர்களுக்குச் சாப்பிடக்கொடுங்கள்''* (வச 16)
- ☐ ஒன்றும் எதிர்பாராது *செலவழியுங்கள், செலவழிக்கப்படுங்கள்* —
2 கொரி 12:15
- ☐ மக்களது சேவையில் நம்மை வார்ப்பது —
பிலி 2:17-20 ... *பான பலி* ...
தீமோத்தேயு போன்று எவருமில்லை ...
பிறர் தங்களுடையதையே நாடுகிறார்கள் (வச 20,21)
- ☐ சேவை பெற அல்ல, சேவை செய்ய —
மாற் 10:45

3. சபையின் பக்திவிருத்தியா, நமது ஊழிய விரிவாக்கமா?

- ☐ 1 கொரி 10:32,33 ... *சுய நன்மை ... அநேகருக்கு நன்மை*
... யூதர் ... கிரேக்கர் ... சபையார்
- ☐ ரோ 15:29 ... *சம்பூரண ஆசீர்வாத நிறைவு* ...
- ☐ 1 கொரி 14:12 ... வரங்கள் *சபையின் பக்திவிருத்திக்காகவே*
- ☐ 2 கொரி 10:8 ... *அதிகாரத்* துர்ப்பிரயோகம் கூடாது ...
நிர்மூலமாக்க அல்ல, ஊன்றக் கட்ட ...
- ☐ 2 கொரி 11:28 ... *சபைகளைக் குறித்து நெருக்கும் பாரம்*
- ☐ சபைதான் கட்டிடம்; ஊழிய நிறுவனங்கள் சாரம்தான்.

எனது கட்டுரை: *சபைகளுக்காய்ச் சங்கங்களா,*
சங்கங்களுக்காய்ச் சபைகளா?
(*''ஊழியரும் மக்களும்''* எனும் நூல் — அத்தியாயம் 21)

4. ஆவியானவரது வல்லமையா, உடல் பலமா?

- ☐ நடபடிகள் புத்தகம் — வல்லமை, நடத்துதல், விளக்கம் ...
யாவும் தூயாவியானவர் மூலம்
- ☐ காத்திருப்பு வேளைகள் — *''கர்த்தருக்கு ஆராதனை''*
(அப் 13:2) — நிகழ்ச்சி நிரல் கிடையாது.
கழுகுகள் போலப் பலம் புதுப்பிப்பு (ஏசா 40:31)
- ☐ 1 கொரி 2:4,5 ... *பேச்சு ... பிரசங்கம் ... ஆவியினாலும்*
வல்லமையினாலும் உறுதிப்பாடு
- ☐ 1 கொரி 2:10-13 ... பிரசங்க ஆயத்தத்தின்போது
ஆவியானவர் தரும் வெளிச்சம்
- ☐ 1 கொரி 15:10 ... கடின உழைப்பு, *கிருபையில்* சார்பு
- ☐ யோ 15:5 ... *''என்னாலன்றி உங்களால் எதுவும் ஆகாது''*

5. திருவசனப் பாணியா, உலகப்போக்கா?

- ☐ நிர்வாகத் தத்துவங்கள், மேலாண்மைச் செயல்பாடுகள்,
தொழில் நுட்பங்கள் பற்றி ஏராளம் நூல்கள், கருத்தரங்குகள்.

  நவீனப் போக்கு —
  மக்களைக் கவரும் எதையும் செய்யலாம்.
  எப்படியாவது சரக்கு விற்பனையாக வேண்டும்.
  வியாபாரம் பெருகினால் போதும்.

  நமது பாடப் புத்தகமோ **பைபிள்** —
  1 கொரி 4:6... *எழுதப்பட்டிருப்பதற்கு மிஞ்சி*
  எண்ணாமல் —
  2 கொரி 13:8 ... சத்தியத்திற்கு எதிராயல்ல, இசைவாய்!
- ☐ இயேசுவின் முதல் அழைப்பு: (மத் 4:19)
''என்னைப் பின்பற்றுங்கள் ...
நான் உங்களை ... ஆக்குவேன்''
அதாவது, என்னைக் காப்பியடியுங்கள் ...
என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்
- ☐ பவுலின் தரம்:
''நாங்கள் இவ்விதம் கிறிஸ்துவைக் கற்கவில்லை''
(எபே 4:20,21)

6. *நீதியா, நிதியா?*

- ☐ இறையரசின் நீதியும் இவ்வுலகச் செல்வமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரிடையானவை —

  மத் 6:24,33 ... *தேவன் ... உலகப் பொருள் ... முதலாவது ...*
  1 தீமோ 6:10,11 ... *பண ஆசை ... நீயோ, தேவ மனிதனே, நீதியை அடைய நாடு ...*
- ☐ ஞான நன்மைகளை விதைத்துப் பொருளாதார ஆசிகளை எதிர்பார்ப்பதில் தவறில்லை (1 கொரி 9:9,11)
- ☐ பவுல்: *''உங்களுடையதல்ல, உங்களை''* (2 கொரி 12:14,15)
- ☐ மக்கெதோனியா கிறிஸ்தவர்:
  2 கொரி 8:5 ... *''முதலாவது தேவனுக்கும் பின்பு எங்களுக்கும்''*
- ☐ திருப்பணியை ஒருபோதும் வியாபாரமாக்காதீர் —
  மத் 10:8 ... இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்
- ☐ அந்தச் **சிந்தையே** வரக்கூடாது —
  அப் 8:18-23 ... *பணம் ... இருதயம் ... துர்க்குணம் ...*
  வாங்க முயன்றவனுக்கே இப்படித் தீர்ப்பு என்றால், விற்க நினைக்கிறவனின் கதி?

எனது ஒளித்தட்டுகள் —

''கனி நிறை ஊழியம்'' (10 DVDs)	ஆங்கிலத்திலிருந்து
''நல்ல பாஸ்டர்'' (6 DVDs)	தெலுங்கு

7. *நடக்கையா, நம்பிக்கையா?* (செயல் vs. செய்தி)

- ☐ திருவசனத்தின் நான்கு பயன்பாடுகளால் நன்மை பெறவேண்டிய முதல் நபர் *''தேவ மனிதன்தான்''* — அவன் *''நீதியாய்''* நடக்கப் படிப்பினை, பயிற்சி (2 தீமோ 3:16,17)
- ☐ 2 தீமோ 2:6 — விளைச்சலில் முதல் பலன் விவசாயிக்குத்தான்!
- ☐ *எதிலும் இடறலின்றி* ... (2 கொரி 6:3-10)
  தற்பரிசோதனைக்கு ஒரு நீண்ட பட்டியல் (வச 4-10)
- ☐ 1 தீமோ 4:12,16 ... *விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு ... உன்னையும் கேட்போரையும் இரட்சிப்பாய்!*

(136ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

138

ஆடும் அடித்தளம்

Shaken Foundations

(1996 ஜூன் 30 அன்று ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் பொதுக்குழுக் கூடுகையில் கொடுக்கப்பட்ட செய்தி)

முகவுரை

மேற்கட்டிடத்தைத்தான் மக்கள் பார்க்கவும் பயன்படுத்தவும் முடியும்; ஆனால் அடித்தளம்தான் கட்டிடத்தின் பலத்தை நிர்ணயிக்கும். அடித்தளத்தில் கோளாறு இருந்தால் அது மேற்கட்டிடத்தில் காட்டிவிடும். மேற்கட்டிடத்தின் கீறல்களைப் பூசினாலும் அது தற்காலிகம்தான்; வேறிடங்களில் கீறல்கள் ஏற்படும்.

- இருவகை அடித்தளங்கள்:
  - அ) தேவனது அஸ்திபாரம் — இது அசையாதது.
    2 தீமோ 2:19 ... *தேவனது உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது.*
  - ஆ) பூமியின் அஸ்திபாரம் — இது அசையக்கூடியது.
    சங் 82:5 ... *தேசத்தின் அஸ்திபாரங்கள் அசைகின்றன.*
- அடித்தளங்கள் குறித்துத் தாவீதின் சவால் —
  சங் 11:3 ... *அஸ்திபாரங்களும் நிர்மூலமாகின்றனவே, நீதிமான் என்ன செய்வான்?*

  இச்சவாலை *''நீதியைக்''* கொண்டே சந்திக்க முடியும் —
  வச 5 ... *கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்.*
  வச 7 ... *கர்த்தர் நீதியுள்ளவர் ... நீதியில் பிரியப்படுவார்*

  இன்று கிறிஸ்தவ வாழ்விலும் பணியிலும் ஆடிப்போய், அரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சில அடித்தளங்கள் இதோ —

இந்த அடித்தளங்கள் ஒவ்வொன்றும் பைபிளில் ஒரு **கேள்வியின்** அடிப்படையில் தரப்பட்டுள்ளது —

1. *பாலியல் வாழ்வில் பரிசுத்தம்* (Sexual Purity)

1 கொரி 6:15-20
''அறியீர்களா? ... அறியீர்களா? ... அறியீர்களா?''

இப்பகுதியில் கவலையீனம் கர்த்தரோடுள்ள உங்கள் ஐக்கியத்தையே பாதிக்கும் —

வச 17 ... *கர்த்தரோடிசைந்திருப்பவன் அவருடன் ஒரே ஆவி*
வச 15 ... *உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள்*
வச 19 ... *உங்கள் உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம்*

பாலியல் பாவங்கள் அவற்றைச் செய்பவனுக்கே விரோதமானவை (வச 18); இப்பாவத்தோடு நாம் விளையாடக்கூடாது —

வேசித்தனத்திற்கு ''விலகி ஓடுங்கள்'' (வச 18)

எவ்வளவு சீக்கிரம் இந்த அடித்தளத்தைப் பலப்படுத்துகிறோமோ,
அவ்வளவு நாம் கீறல்களைக் குறைக்கலாம்.

2. *பணக்காரியங்களில் உண்மை* (Financial Honesty)

லூக் 16:10-12
யார் உங்களை நம்பி ஒப்புவிப்பார்? யார் கொடுப்பார்?

மண்ணுலகச் செல்வம் vs. விண்ணுலகச் செல்வம்
பிறரது பொருட்கள் vs. நமது பொருட்கள்

பணக்காரியங்களில் உண்மையாயிருப்பவர்களுக்கே
தேவன் தமது இரகசியங்கள், சிந்தையை வெளிப்படுத்துகிறார்.

நாளாவட்டத்தில் பிரசங்கிமார் பலரிடம் செய்திகள் இல்லாது
போவதற்கு இது ஒரு காரணம்.

செல்வம் இல்லாது செய்தி இருப்பது
செய்தி இல்லாது செல்வம் இருப்பதற்கு மேல்!

அப்போஸ்தலர்கள் பேச எழுந்தபோது, எழுத உட்கார்ந்தபோது,
இறைவார்த்தைகள் தடையின்றி வந்தன;
பண ஆசைக்கு அவர்கள் விலகியிருந்ததே அதற்குக் காரணம்.

இந்தப் பாவத்தோடு நாம் விளையாடக்கூடாது —

''பண ஆசைக்கு விலகி ஓடு''
(1 தீமோ 6:10,11)

3. *சகவுறவுகளில் சுமூகம்* (Relationship Cordiality)

1 யோ 4:20,21
கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தாதவன்
காணாத தேவனிடம் அன்பு செலுத்துவது எப்படி?

- அன்பின் அடித்தளமற்ற குடும்பம் நிலையானது அல்ல.
- அன்பின் அடித்தளமற்ற சபை கவர்ச்சியானது அல்ல.
- அன்பின் அடித்தளமற்ற ஊழியம் கனியுள்ளது அல்ல.
- அன்பின் அடித்தளமற்ற சமூகம் பாதுகாப்பானது அல்ல.

கீழ்க்கண்ட பிரச்னைகளுக்குப் பரிகாரமாக
நவீன விஞ்ஞானம் எதையும் தர முடிவதில்லை —

குடும்பங்களில் பிளவுகள்
சபைகளில் பிரிவினைகள்
ஊழியங்களில் முறிவுகள்
சமுதாயத்தில் சச்சரவுகள்
தேவ அன்பு ஒன்றே நிவாரணம் (ரோ 5:5)

இதனைத் தியானியுங்கள்; சகவுறவுகளில் பயிற்சியுங்கள் —
யோ 13:34; 15:12

சரியான சகவுறவுகளின்றி
தேவனோடு தியான வாழ்வு சரியாயிருக்காது.

4. *குடும்பத்தில் ஒற்றுமை* (Family Unity)

1 தீமோ 3:4,5
சொந்தக் குடும்பத்தை நடத்தத் தெரியாதவன்
தேவனுடைய சபையை எப்படிக் கவனிப்பான்?

சபைக்கும் சமுதாயத்திற்கும் அடிப்படையானது குடும்பமே.
வாழ்வின் போர்க்களத்திற்கு ஆயத்தம் குடும்பமெனும்
பயிற்சிக்களத்திலேயே. அதுவே அடித்தளமானது.

திரித்துவ தெய்வத்துவமே ஒரு குடும்பம்தான் —
தந்தையானவர்
குமாரனானவர்
ஆவியானவர்

அவர்களது ஒருமைப்பாடுதான் குடும்ப ஒற்றுமைக்கு மாதிரி —
எபே 5:22-33; 1 கொரி 11:3

5. *திருமறையின் அதிகாரம்* (Biblical Authority)

மத் 21:42 ... *நீங்கள் வேதத்தில் ஒருபோதும் வாசிக்கவில்லையா?*
ரோ 4:3; 11:2; கலா 4:30 ... *வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?*
யாக் 4:5 ... *வேத வாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதோ?*

மனிதரது பாரம்பரியங்களும் இவ்வுலகக் கருத்துக்களும்
திருவசனத் தத்துவங்களை ஓரங்கட்டும் கொடிய காலமிது.

ஆதிமுதலே பிசாசின் தந்திரம் இதுதானே? —
''தேவன் சொன்னதுண்டோ?'' (ஆதி 3:1)

திருவசனமே அசையாத, உறுதியான, அடித்தளம் —
மத் 7: 24-27 ... *கற்பாறைமீது வீடு ... விழவில்லை*
கெட்டியான பாறை vs. கீழிறங்கும் மணல்
மேற்கட்டிடம் ஒன்றுபோல் தெரியும், ஆனால் ...!

பைபிளோடு எதையும் கூட்டாதீர்; (Do not add.)
பைபிளிலிருந்து எதையும் நீக்காதீர்; (Do not avoid.)
பைபிளில் எதையும் மாற்றாதீர்! (Do not alter.)

புதிய கற்பனைகளும் வேண்டாம்!
''எழுதியிருக்கிறது'' என்ற வரம்பிற்குள்ளேயே
நின்றுவிடப் பழகுங்கள் (1 கொரி 4:6)

ஊழியம் விரிவடையும்போது, திருமறைத் தியானத்திற்கும்
வேதப்போதகத்திற்கும் முன்னுரிமை கிடையாது போகலாம்;
இது நிகழுமானால் நமது கட்டிடப் பொருட்கள்
''மரம், புல், வைக்கோல்'' தான் (1 கொரி 3:10-15)

6. *ஆவியானவர்மீது சார்பு* (Spirit Dependency)

கலா 3:3,4
ஆவியில் ஆரம்பம்பண்ணின நீங்கள்
மாம்சத்தில் முடிக்கப்போகிறீர்களோ?

ஆவியானவர்மீது சார்ந்திருக்கும் அளவே தனி நபரது அல்லது
ஊழியத்தின் ஆன்மீகத் தரத்தை நிர்ணயிக்கும் (சக 4:6)

சில ஆண்டுகளின் வெற்றிக்கும் சாதனைக்கும் பின்னர்
தொடர்ந்து தேவாவியானவர் மீது சார்ந்திருப்பது சுலபமல்ல;
இதுதான் பெரும் சவால்!

நாளாவட்டத்தில்,

தேவ நடத்துதலைவிட
நமது ஞானத்தில் சார்ந்துவிடுகிறோம்;
தேவ வல்லமையைவிட
நமது திறமைகளில் சார்ந்துவிடுகிறோம்;
தேவனோடுள்ள ஐக்கியத்தைவிட
மக்களது ஆதரவில் சார்ந்துவிடுகிறோம்.

பொன்மொழி:
சுய நிறைவுள்ளவன் ஜெபிக்க விரும்பான்;
சுய திருப்திக்காரன் ஜெபிக்க மாட்டான்;
சுய நீதிக்காரன் ஜெபிக்க முடியாது!
— லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994)

7. *அறிக்கைகளில் உண்மை* (Reporting Accuracy)

2 கொரி 11:23
அவர்கள் கிறிஸ்துவின் ஊழியரா? நான் அதிகம்.
... அதிகமாய் ... அதிகமாய் ... அநேகந்தரம் ...

எண்ணிக்கையில் பவுல் எவ்வளவு துல்லியம், பாருங்கள் —

வச 24 ... *5 தரம் ... ஒன்று குறைய 40 அடிகள்*
வச 25 ... *3 தரம் மிலாறுகளால் அடிபட்டேன்*
... *ஒருதரம் கல்லெறியுண்டேன்*
... *3 தரம் கப்பல் சேதத்தில் இருந்தேன்*

அவரது சாட்சி: ரோ 15:18,19

கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவற்றை
அல்லாது வேறொன்றையும் சொல்லத் துணியேன்.

அப்பப்பா, எத்தனை முறை ஊழியக்காரியங்களை மிகைப்படுத்தி விட்டு, எல்லாம் தேவ மகிமைக்கே என்கிறோம்! — வஞ்சகம்!

பொய்சொல்லும்போதும், மிகைப்படுத்தும்போதும்
''பொய்க்குப் பிதாவானவனுக்கே'' ஓட்டு போடுகிறோம் (யோ 8:44)

■ *முடிவுரை*

இக்குறிப்புகளை வைத்துக்கொண்டு அடிக்கடி
உங்கள் ஊழியத்தைப் பரிசோதியுங்கள்;
அடித்தளக் கீறல்களை உடனுக்குடன் சரி செய்யுங்கள்;
இல்லையேல் பிந்திப்போகும்.

(139ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

139

ஊழியங்கள் உருக்குலைவு

Downfall of Ministries

(1993 ஆகஸ்டில் ஆசீர்வாத இளைஞர் இயக்க முக்கிய நபர் கூடுகையில் கொடுக்கப்பட்ட செய்தி)

முகவுரை

- ஊழியங்களின் வீழ்ச்சிக்குப் பொதுவான காரணங்கள் —
  நீதி 9:1 — *ஏழு தூண்களின்* சரிவு

ஏழும் ஒரே நேரத்தில் சரியாதிருக்கலாம்;
ஒன்றன்பின் ஒன்றாகவும் விழலாம் — துவக்கம் கீறல்களில்தான்!

1. ***தரிசனத்தில் தடுமாற்றம்*** (Deviation in Vision)

1 கொரி 7:20,24 ... *அழைக்கப்பட்ட அழைப்பில் **நிலைத்திருங்கள்.***
2 பேது 1:10 ... ஆதி அழைப்பிற்குத் திரும்பிவர அர்ப்பணிப்பைப் **புதுப்பியுங்கள்**

எ.கா.) ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் தரிசனம் என்ன?
''பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதலும்
புதிய ஏற்பாட்டுப்பாணி நற்செய்திப்பணியும்''
அதின் சின்னத்திலேயே (logo) இது சித்தரிக்கப்பட்டுள்ளது.

தரிசன வசனங்கள்: ப.ஏ. — எசேக் 34:26
பு.ஏ — அப் 1:8

''வாலிபர்'' என்பதே வலியுறுத்தப்படவேண்டும்.

இது இந்தியாவிலுள்ள எத்தனையோ மிஷனரி இயக்கங்கள், ஊழிய நிறுவனங்களைவிட வித்தியாசமானது.

(அ) விசுவாசிகளின் பக்திவிருத்தி (Edification)
(ஆ) அவிசுவாசிகளுக்கு நற்செய்தியறிவிப்பு (Evangelisation)

இரண்டாவதில் (ஆ) துவங்கி முதலாவதற்கு (அ) செல்வதல்ல;
மாறாக, முதலாவது (அ), அடுத்து (ஆ).
எழுப்புதலின் (அ) விளைவாகவே நற்செய்திப்பணி (ஆ)
(சங் 51:12,13)

2. ***உடல் பலத்தில் சார்பு*** (Dependence on flesh)

கலா 3:3 ... *ஆவியில் ஆரம்பம், மாம்சத்தில் முடிவு*

ஆதியிலிருந்த அக்கினியும் ஆர்வமும் காக்கப்படவேண்டும்.

ஜெபத்தில் குறைவுபடுவோமானால் நாம் புய பலத்தில்
சார்ந்துவிடத் துவங்கிவிட்டோம் எனப் பொருள்.

ஜெபிக்க ஜெபிக்க ஆண்டவர் மீது அதிகம் சாருவோம்.

நமக்கு முன்னிருக்கும் பணி மலைபோன்றது;
நமக்கு வரும் இறைச்செய்தி: சக 4:6,7

கீழ்க்கண்டவற்றில் சார்ந்துவிடாதீர்! எச்சரிக்கை! —

- ஆள் பலம் / புய பலம் (men / muscle)
  அங்கத்தினர்கள், ஆதரவாளர்கள், வாசகர்கள்,
  பங்கேற்போர், செய்தியாளர்கள், முதலியன.
- பண பலம் / பொருள் நிறைவு (money / materials)
  நாம் செய்வதையெல்லாம் ஆண்டவர் அங்கீகரிக்கிறார்
  என்பதற்குப் பொருளாதார ஆசி நிரூபணம் அல்ல.
  (அப்போஸ்தலர் எவ்வளவு குறைவிலிருந்தனர் !!!)
- செயல்முறைகள் / அறிவுத்திறன் (methods / mind)
  அறிவு சார்ந்த ஆலோசனைகள்
  கவர்ச்சிகரக் கோஷங்கள்
  கவர்ந்திழுக்கும் திட்டங்கள்
  வசப்படுத்தும் அறிக்கைகள்
  முதலியன.

3. ***பரிசுத்தத்தில் இறக்கம்*** (Descent in Holiness)

லூக் 1:71 ... *ஜீவ காலமெல்லாம் பரிசுத்தத்தோடு ஊழியம்*

தேவனால் பயன்படுத்தப்பட இது இன்றியமையாதது —
2 தீமோ 2:19-22 ... *அஸ்திபாரம் ... சுத்திகரிப்பு ... உபயோகம்*

மதிப்பான பாத்திரங்களல்ல; சுத்தமான பாத்திரங்கள்

''கர்த்தருக்குப் பரிசுத்தம்'' —
இதுவே நமது மேற்கோள் வாசகமாயிருக்கவேண்டும்.

கவலையீனமாயிருந்தால் களைகள் முளைத்துவிடும்.
அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ளவேண்டும்.

தேவ பக்தியோடு வாழ ''முயற்சிபண்ணு'' —
1 தீமோ 4:7-9
அடிக்கடி தற்பரிசோதனை அவசியம்.

4. ***சகோதரருக்குள் பிரிவினை*** (Division among brothers)

மத் 12:25 ... *இராஜ்யம் ... பட்டணம் ... குடும்பம் ...*
அளவு காரியமல்ல.

பெந்தெகொஸ்தேயினர் அல்லாதவரைவிடப் பெந்தெகொஸ்தேயினர்
நடுவிலேயே பிரிவினைகள், பிளவுகள் அதிகம் —
இங்கு எல்லாரும் ''இராஜாக்கள்,'' எல்லாரும் ''ஆசாரியர்கள்!''

கொரிந்து சபையைப் பெந்தெகொஸ்தே சபை எனலாம் —
வரங்களில் பூரணம்; அன்பில் பூஜ்யம் (1 கொரி 1:7)
''நான் பவுலைச் சேர்ந்தவன் ...'' (1 கொரி 3:4)

எனவேதான் ''ஒரே'' ''அதே'' என்ற சொற்கள் திரும்பத் திரும்ப —
1 கொரி 12:4,5,6,8,9,11 ... *ஒரே ... அதே ...*
:12,13 ... *ஒரே ... ஒரே ...*

வரங்களை விளக்கும் 12ஆம், 14ஆம் அத்தியாயங்களுக்கு
நடுவில் அன்பை வலியுறுத்தும் 13ஆம் அத்தியாயம்!

☐ கருத்து வேறுபாடுகள் கட்சிகளை உருவாக்கக்கூடாது.
இந்தியா போன்ற நாட்டில் — இது போன்ற நாட்களில் —
நாம் இன்னும் பிரிந்துகொண்டே போகலாமா?

☐ பிரபலமாக விரும்புவது ஒருமனத்தைக் குலைக்கும் —
மத் 20:20,21,24-28 ... *ஆசனங்கள் ... இராஜ்யம் ...*
கிறிஸ்துவின் சிந்தை (பிலி 2:5)

— ஒருமனத்திற்காய் விடாது ஜெபயுங்கள்.
இயேசு அதற்காய் ஜெபித்தார் (யோ 17:20,21)

— பிரிவினையைத் தடுக்க உங்களால் முடிந்ததெல்லாம் செய்யுங்கள்.

5. *உபதேசத்தில் கலப்படம்* (Dilution in Doctrine)

மணல்மீது கட்டப்பட்ட வீடு நமக்குத் தெரியும் —
மத் 7:24-27

நமது ஊழியம் திடமான வேத போதனை மீது நிற்கவேண்டும்.

அடித்தளத்தைப் பலப்படுத்திக்கொண்டேயிருக்கவேண்டும் —
1 தீமோ 4:13 ... *வாசிக்கிறதில் ... போதிக்கிறதில் ...*
2 தீமோ 4:2-4 ... *பிரசங்கம் ... கடிந்துகொள்ளுதல் ... உபதேசம்*

வாசிப்பதையும் படிப்பதையும் நிறுத்தக்கூடாது —
எ.கா.) பவுல் தனது இறுதிக் காலத்திலுங்கூட
2 தீமோ 4:13 ... *புத்தகங்கள் கொண்டுவா*

திருமறைத் தத்துவங்களில் சமரசம் கூடாது, எச்சரிக்கை!

அப்போஸ்தலரது அஸ்திபாரம் (அவர்களது உபதேசம்)
தீர்க்கதரிசிகளது அஸ்திபாரம் (அவர்களது முன்னறிவிப்பு)

உபதேசம்: எப்படிச் செய்யவேண்டும்?
முன்னறிவிப்பு: என்ன செய்ய வேண்டும்?

6. *தலைமைத்துவத்தில் குறைபாடுகள்* (Defects in Leadership)

தலைவர்கள்தான் தூண்கள் (கலா 2:9)

இஸ்ரவேலர் வழிவிலகிப் போனதற்கு ஒரு காரணம்
தலைவர்கள் சீர்கெட்டுப்போயினர் —
எசேக் 22:24-29 (Prophets, Priests, Princes, People)
(தீர்க்கர்கள் — ஆசாரியர்கள் — பிரபுக்கள் — மக்கள்)

தலைவர்களுக்கிருக்கும் மூன்று ஆபத்துக்கள் நமக்குத் தெரியும் —

பாலியல் — பெண் (Girls)
பணம் — பொன் (Gold)
பதவி — புகழ் (Glory)

நம்மை நாமே காத்துக்கொள்ள முயலுவதோடு பிறருக்காகவும் ஜெபித்து அவர்களுக்கு இப்பகுதிகளில் உதவவேண்டும்.

ஒருவரையொருவர் **தாங்க**வேண்டும்
ஒருவருக்கொருவர் **ஆலோசனை** கொடுக்கவேண்டும்
ஒருவருக்கொருவர் **பொறுப்பாய்** இருக்கவேண்டும்
அப்பொழுதுதான் இக்கண்ணிகளுக்குத் தப்பலாம்.

நமது ஊழியங்களுக்காய் எரே 33:17,18ஐ உரிமைபாராட்டுவோம்.
தேவபக்தியுள்ள ஊழியர் எழும்பிக்கொண்டேயிருக்கவேண்டும் —
வச 16 ... *நீதி*

எல்லாவற்றிற்கும் மேலாக, தலைவர்கள் தேவனை அறிந்தவர்களாகவும், தேவ சத்தம் கேட்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். இது இல்லையேல், தாலந்துகள், திறமைகள் எல்லாம் வீண்.

7. *பிரமாண்டத்தில் பிரியம்* (Desire for Bigness)

இன்றைய ஊழியர், ஊழியங்கள்
நடுவில் எலிப்பந்தயம்!

போட்டி மனப்பான்மையிலேயே பணி விரிவாக்கம்.

நமது அழைப்புக்கு உள்ளே நிற்பதோடு,
நமது வரம்புக்கு உள்ளே செயல்படவேண்டும் —
2 கொரி 10:12-16

எல்லா ஊழியங்களுக்கும், ஊழியருக்கும், தேவன் ஒரே அளவு கிருபையும் வரங்களும் அருளுவதில்லை —

- ரோ 12:3 ... *கிருபை ... விசுவாச அளவு*
- தாலந்துகள்: 5 ... 2 ... 1 (மத் 25:15) —

அருளப்பட்ட அளவின்படியே
ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

எனவே, உங்களை அறியாது, அவசியமில்லாது,
ஒப்புமைகளினால் அழுத்தப்படாதீர்.

அடித்தளம் உறுதியாயிருந்தாலும்
அளவுக்குமீறி பளு ஏற்றுவது தூண்களில் கீறல் ஏற்படுத்தும்.

அளவுக்கு மீறி நீட்டியிழுத்தால் அறுந்துபோவோம்!

அப்படியானால், ஏசா 54:2இன் பொருளென்ன?
வளர்ச்சி = நீட்டுதல் ''அத்துடன்'' உறுதிப்படுத்துதல்
Lengthening “and” Strengthening

நீட்டுகிற அளவுக்குப்
பலப்படுத்த வேண்டும்.
அதுவே **வேகத்தை** நிர்ணயிக்கும்.

இறைப்பணியில் எப்பொழுதும் பெருகுகிறவர்களாயிருக்க வேண்டியது அவசியம்தான்; ஆனாலும் நமக்காய் நியமிக்கப்பட்டதற்கு மிஞ்சிப்போகாது பார்த்துக்கொள்ள நுண்ணிய மனது தேவை.

■ ***முடிவுரை***

இந்த ஏழு தூண்களும் சம முக்கியத்துவமானவை.
எல்லாவற்றிற்கும் சமமான கவனம் செலுத்துங்கள் ...

தரிசனம் — ஆவியானவர் — பரிசுத்தம் —
ஒருமனம் — உபதேசம் — தலைமை — அளவு

(138ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

140

இன்றைய இழுபறிகள்

Tensions of Today

முகவுரை

மோதலில் இரு அரசுகள் ... அப் 26:18 / எபே 5:8-10

சாத்தான் நம்மை ''நிறுத்த'' முடியாவிடில்,
நம்மைத் ''திசைதிருப்புவான்!''
அவன் நம்மை ''அழிக்க'' முடியாவிடில், ''வழிவிலகச்'' செய்வான்!

- எபே 4:20,21 ... *கிறிஸ்துவை அவ்விதம் கற்கவில்லை.*
- 1 கொரி 11:16 ... *எங்களுக்கு அவ்விதம் வழக்கமில்லை.*
- பிலி 3:17,18 ... அப்போஸ்தல முறைமை vs. பெருபான்மையினரது
''அநேகர்'' என்போர் பொதுவாகத் தவறாகவே இருப்பர்.
- நமது தெரிந்தெடுப்புகளே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும்.
தேவனது அழைப்பு + மனிதனது தெரிந்தெடுப்பு

சிக்கலான பன்னிரு தெரிந்தெடுப்புகள் —

1. இன்றைய இலாபமா, இறுதியான இலக்கா?
(Immediate or Ultimate? / Today or Tomorrow?)

கலப்பின தென்னை மரங்கள் — சீக்கிரம் காய்ப்பு, சீக்கிரம் ஓய்வு.

ஆதி 25:26-34 ... ஏசா / யாக்கோபு ... முதற்பேறுரிமை ... பசி
சங் 37:1,2,10,11,37,38 ... *சீக்கிரம் ... கொஞ்ச நேரம் ... முடிவு*
எபி 12:11-13 ... சிட்சை (வெளியே குதித்துவிடாதீர்கள்!)

2. திரளா, தரமா? (Quantity or Quality? / Size or Sort?)

அப் 9:31 ... *பெருக்கம்* ''அத்துடன்'' *தேவபயம்*
லூக் 2:52 ... முதலாவது *''ஞானம்,''* அடுத்து *''வளர்த்தி''*
ஆதி 11:3 ... *மாற்றுக்கள் (கல்லுக்குப் பதில் செங்கல் ...
சாந்துக்குப் பதில் நிலக்கீல்)*
உபா 22:11 ... *ஆட்டுமயிர்* (ஆபேல்) ... *பஞ்சுநூல்* (காயீன்)
1 கொரி 3:10-17 ... எது என்பதா, எப்படி என்பதா?
முடிவை வைத்து முறை சரியாகாது!

3. ஆன்மீகத் தோற்றமா, வசன அடிப்படையா?

(Spiritual or Scriptural? Subjective or Objective? Feelings or Facts?)

லூக் 17:20-25 ... *இதோ இங்கே ... இதோ அங்கே ...*

இயற்கைக்கப்பாற்பட்ட, உணர்ச்சிததும்பும்
யாவும் தேவனிடமிருந்துதான் எனக் கூறமுடியாது.

1 நாளா 13:7-10; 15:11-15

புதிய வண்டி: பெலிஸ்தியர் முறை — (1 சாமு 6:2,7)
தோள்களில் சுமப்பது: தேவனது முறை — (யாத் 25:14)

2 தீமோ 2:5 ... தூக்கு நூலோ ரசமட்டமோ இல்லாது
கட்டிடம் கட்டினால் எப்படி?

மேலெழுந்தவாறு ஒரு சில வசனங்களைக் குறிப்பிடுவதல்ல,
திருமறையிலுள்ள தேவனது சிந்தையைப் புரிந்துகொள்ளுதல் —
அப் 15:1,13-19 ... எருசலேம் சங்கம்

கேள்விக்குரியவைகளையும், திருமறைக்கு
அப்பாற்பட்டவைகளையும் ஒதுக்குங்கள்.

4. பலமா, பரிசுத்தமா?

(Power or Purity? Gifts or Fruits? Charisma or Character?)

2 கொரி 12:12 ... அப்போஸ்தலனின் அடையாளங்கள் ...
''பொறுமை''
பொறுமையே பூரணத்தின் அடையாளம்.

1 கொரி 13:1-3 ... *நவ நாவுகள் ... தீர்க்கதரிசனம்* vs. *அன்பு*

உற்சாகமா, நன்னெறியா? Enthusiasm or Ethics?
உண்மை / நேர்மை பாலியல், பணம், பதவி.
பெண், பொன், புகழ்.

5. லவுகீகமா, நித்திய நோக்கா?

(Earthly or Eternal? Physical/material or Spiritual?)

1 கொரி 15:19 ... *இம்மைக்காக மாத்திரம் ...*
எபி 11:8-10 ... *கோபுரங்களிலிருந்து ஆபிரகாம் கூடாரங்களுக்குச் சென்றான் ... ஒரு நகரத்திற்காய்க் காத்திருந்தான்*

ஆரோக்கியமும் ஆனந்தமுமா, பரிசுத்தமா? (Health or Holiness?)
3 யோ 2 (ஆத்துமச் செழிப்பு)

— குஷ்டரோகி பரலோகம் போய்விடுவான்; பாவியால் முடியாது!
— *பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனைத் தரிசிக்கமுடியாது.*

6. இறைப்பணியா, இறைச்சித்தமா? (God's Work or God's Will?)

வேலையில் நமக்குத் திருப்தியா, இயேசுவுக்குப் புகழ்ச்சியா?
மத் 7:21-24 ... *அற்புதங்கள்... தீர்க்கதரிசனம் ... தேவ சித்தம்*

''தேவ சித்தப்படித் தாவீது தனது தலைமுறையைச் சேவித்தான்''
(அப் 13:36)

இறைச்சித்தம் முதலாவது; இறைப்பணி அடுத்தது —
எ.கா.) பவுல் (அப் 22:13-15)

தேவன் உங்களிடம் எதிர்பார்ப்பதையே செய்யுங்கள்.

7. ஊழியமா, குடும்பமா? (Fellowship or Family?)

தேவனுடைய சபை vs. சொந்தக் குடும்பம்

1 தீமோ 3:4,5 ... *சொந்த வீடு ... தேவனது சபை*

- வீட்டிலே பிரசங்கியாயிராதீர்.
- தீர்க்கன் சாமுவேல் (1 சாமு 7:15-8:3)
- குடும்ப ஜெபம்
- குடும்பம்தான் இறைப்பணிக்காய்ப் பயிலவும் பயிற்சிபெறவும் பாடசாலை (எபே 5:21-32)

(அ) கீழ்ப்படிந்திருத்தல்

(ஆ) தலைமைத்துவம்

(இ) போஷித்தல்

8. மனிதரது பாராட்டா, தேவனது அங்கீகாரமா?

(Applause of men or Approval of God?)

யோ 5:44 ... *தேவனால் வரும் மகிமை... எப்படி விசுவாசிப்பீர்கள்?*
12:42,43 ... *தேவனால் வரும் மகிமையைவிட மனிதரால் வரும்*
எபே 6:5-8 ... *பார்வைக்கு ஊழியம் ... மனப்பூர்வமாய் ...*

மனிதரது பாராட்டுக்காக வேட்டை.
சந்தைவெளிகளில் வந்தனங்கள்.
கூடுகைகளில் முக்கிய இடங்கள்.
இயேசு: எ.கா.) *''நல்ல போதகரே ... என்னை நல்லவரென்று அழைப்பானேன்?''*
தம்மைப் புகழ்ந்த நிக்கொதேமுக்கு இயேசுவின் பதில்: (யோ 3:1-5)
பவுல் (அப் 16:16-18) — பொல்லாத ஆவியின் அறிக்கை!

9. போட்டியா, ஒத்துழைப்பா?
(Competition or Cooperation? Comparison or Complementation?)

1 சாமு 18:6-9 ... *சவுலின் 1000 ... தாவீதின் 10000*
யோ 4:1-5 ... இயேசு vs. யோவான்
1 கொரி 3:3-9 ... *ஜென்ம சுபாவம் ... பவுல் ... அப்பொல்லோ ...*
2 கொரி 10:12-15 ... *ஒப்பிடமாட்டோம் ... எங்கள் அளவு ...*

10. *புறத் தோற்றமா, அக நிலையா?*
(External or Internal ? Outside or Inside?)

மத் 23:25-28 ... *பாத்திரங்கள் ... கல்லறைகள் ...*
2 கொரி 5:11,12 ... *தோற்றம் ... இருதயத்திலல்ல ...* (மாய்மாலம்)

இதில் எப்பொழுதும் கவனம் காட்டுங்கள்.
ஒருவருக்கொருவர் பொறுப்பாயிருங்கள் (பிர 4:9-12)
ஐக்கியத்தில் பாதுகாப்பு; தனிமையாய் இருக்காதீர்.
சுயாதீனம் vs. சகச்சார்பு (Independent vs. Interdependent)

11. ஊழிய நெருக்கமா, தனித் தியானமா?
(Ministerial pressure or Private devotions?)

மாற் 1:32-36 ... *சுகமாக்கினார் ... அதிகாலை ... ஜெபம்*

தனித்திருப்பதை இயேசு எவ்வளவாய் வாஞ்சித்தார்! —
மத் 14:12-14 ... யோவானின் மரணம்
:21-23 ... 5000 பேருக்கு உணவளித்தபின் ...
லூக் 6:10-13 ... சுகமாக்கினார் ... பன்னிருவர் தெரிந்தெடுப்பு
பில்லி கிரஹாம்: ''எனக்கு இன்னொரு வாழ்க்கை தரப்பட்டால், பிரசங்கிப்பதைக் குறைத்து வேதத் தியானத்தைக் கூட்டுவேன்!''

12. ஊழியக் கிராக்கியா, சொந்த அழைப்பா?
(Popular demand or Personal calling?)

2 கொரி 10:12-18 ... *அளவு ... மிஞ்சி வராமல் ... மேன்மை பாராட்டாமல்*
ரோ 12:3-8 ... *எண்ணவேண்டியதற்கு மிஞ்சி ... விசுவாச அளவு*
1 கொரி 7:20,24 ... பிற ஊழியங்களைக் காப்பியடிக்காதீர் ... *உங்கள் அழைப்பில் நிலைத்திருங்கள்*

எ.கா.) சபை மேய்ப்பராகும் சுவிசேஷகர்.
சுவிசேஷகராகும் தீர்க்கதரிசிகள்.

■ *முடிவுரை*

- சரியான தெரிந்தெடுப்புகள் சுலபமல்ல — *நெருக்கமான வாசல்*
- திருத்தம் + தவறாய்க் கற்றதைக் களைதல் + மாற்றம்

(2002 மே மாதம் இந்திய அருட்பணி இயக்கத்தின், IEM, தேசிய ஊழியர் முகாமில் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட இச்செய்தி ஒளித்தட்டில் உண்டு.)

141

தீர்க்கதரிசிகள், ஆசாரியர், இராஜாக்கள்

Prophets, Priests & Kings

முகவுரை

☐ பழைய ஏற்பாட்டில் அபிஷேகிக்கப்பட்ட மூன்று ஊழியங்கள் —

எண்ணெய் ஊற்றி —

அ) தீர்க்கதரிசிகள் எ.கா.) எலியா — எலிசா (1 இரா 19:16)
ஆ) ஆசாரியர் எ.கா.) மோசே — ஆரோன் (யாத் 28:41)
இ) இராஜாக்கள் எ.கா.) சாமுவேல் — சவுல் (1 சாமு 10:1)
சவுல் **அபிஷேகிக்கப்பட்டவன்** என்பதற்காகவே
அவனைக் கொல்லத் தாவீது மறுத்தான் (1 சாமு 26:11)

☐ இவர்கள்தான் அனைத்து இறைமக்களின் பிரதிநிதித்துவத் தலைவர்கள் —

எ.கா.) பாராட்டு: எரே 18:18
கடிந்துகொள்ளல்: எரே 2:26
எசேக் 7:26
மீகா 3:11
செப் 3:3,4

தீர்க்கதரிசிகள் — நீதிநெறித் தலைவர்கள் (moral)
ஆசாரியர் — மார்க்கத் தலைவர்கள் (religious)
இராஜாக்கள் — அரசியல் தலைவர்கள் (political)

☐ இம்மூன்றில் **இரண்டு** இணைந்திருந்த தலைவர்களிருந்தனர் —

மெல்கி — இராஜா & ஆசாரியன் (ஆதி 14:18)
ஆரோன் — தீர்க்கன் & ஆசாரியன் (யாத் 7:1/28:1)
சவுல் — இராஜா & தீர்க்கன் (1 சாமு 10:1,11)
தாவீது — இராஜா & தீர்க்கன் (அப் 2:29,30)
எசேக்கியேல் — ஆசாரியன் & தீர்க்கன் (எசேக் 1:3/2:5)
காய்பா — ஆசாரியன் & தீர்க்கன் (யோ 11:47-51)

☐ இயேசுவில்தான் இம்முப்பெரும் பணிகளும் ஒருங்கிணைந்தன —
''ஒன்றில் மூன்று!'' (Three in One!)

எ.கா.) புதிய ஏற்பாட்டின் 3 முக்கிய புத்தகங்களில் முதல் அத்தியாயம் —

அ) யோ 1:36 ... *தேவாட்டுக்குட்டி* ... யோவான் ஸ்நானகன் (ஆசாரியர்)
:38 ... *ரபீ, போதகர்* ... யோவானின் இரு சீடர் (தீர்க்கதரிசி)
:49 ... *இஸ்ரவேலின் இராஜா* ... நாத்தான்வேல்

ஆ) எபி 1:1,2 ... தீர்க்கதரிசி
:3 ... ஆசாரியர்
:8 ... இராஜா

இ) வெளி 1:5 ... *உண்மையுள்ள சாட்சி* — தீர்க்கர்
... *மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்* — ஆசாரியர்
... *இராஜாக்களுக்கு அதிபதி* — இராஜா

☐ இது எப்படிச் சாத்தியமாயிற்று?

யோ 3:34 ... *அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருக்கிறார்*
எபி 1:9 ... *தோழரைவிட ஆனந்த தைல அபிஷேகம்*
(அதாவது,எல்லா முன்னடையாளமானவர்களையும்விட)

அபிஷேகம் = மேசியா (எபிரெயு) = கிறிஸ்து (கிரேக்கு)
''மேசியாவானார்!'' ''கிறிஸ்துவானார்!''

தீர்க்கதரிசனம்: தானி 9:24-26 ... *மகா பரிசுத்தமுள்ளவர்*
மேசியாவாக அபிஷேகம்பண்ணப்பட்டார்

☐ மேசியாவை மக்கள் ஏற்ற விதங்கள் —

எ.கா.) யோ 4:25,26 ... சமாரியப் பெண் — தீர்க்கதரிசி
மாற் 14:57-63 ... பிரதான ஆசாரியன் — ஆசாரியன்
யோ 7:41,42/மீகா 5: 2 ... பண்டிகைக் கூட்டம் — இராஜா

☐ எனவேதான், **இயேசுவே ''கிறிஸ்து!''**
இதுவே அதிமுக்கிய செய்தி —

எ.கா.) ஆதிச்சபையின் முப்பெரும் தலைவர்கள் (1 கொரி 1:12)
பவுல் ... அப் 9:22/17:3/18:5
பேதுரு ... அப் 2:36/மத் 16:16
அப்பொல்லோ ... அப் 18:28

□ இயேசு — பூவுலகப் பெயர்
கிறிஸ்து — பரலோகப் பட்டம்

நாம் ''இயேசவர்'' (Jesus-ians) என்றல்ல,
''கிறிஸ்தவர்'' (Christ-ians) என்றே அழைக்கப்படுகிறோம்.

□ *''இயேசுவே கிறிஸ்து''* என்ற செய்தியின் முக்கியத்துவத்திற்கு இன்னும் சில காரணங்கள் —

யோவான் சுவிசேஷத்தின் நோக்கம்: யோ 20:31
(அனைத்து வேதவாக்கியங்களின் நோக்கமுமே இதுதான்!)
மறுபிறப்பிற்குப் பொருள் : 1 யோ 5:1
அந்திக்கிறிஸ்துவின் மறுதலிப்பு: 1 யோ 2:22

இயேசு நேசிக்கிறார் ...
இயேசு சுகமளிக்கிறார் ...
இயேசு இரட்சிக்கிறார் ...

இவையெல்லாவற்றிற்கும் மேல், ''இயேசுவே ஆண்டவர்;
இயேசுவே கிறிஸ்து!''

□ ***கிறிஸ்தவர்களின் பணி***

கிறிஸ்து = அபிஷேகம்பண்ணப்பட்டவர்
கிறிஸ்தவர் = அபிஷேகம்பண்ணப்பட்டவரைச் சேர்ந்தவர்

யோ 1:16 ... *''அவரது **பரிபூரணத்தால்** ... நாம் எல்லாரும் பெற்றோம்''*
அவரது எல்லாம் நம்மெல்லாருக்கும்!

அப் 2:33 ... *அவர் ஆவியைப் பெற்றுப் பொழிந்தருளினார்*

நமக்கும் *''அளவில்லாமல்''* தரப்பட்டுள்ளது —

யோ 4:14 ... *நீரூற்று*	
7:38 ... *நதிகள்*	இவற்றில்
ஏசா 12:3 ... *ஊற்றுகள்*	எதையும்
44:3 ... *ஆறுகள்*	அளவிட முடியாதல்லவா?
எசேக் 34:26 ... *மழை*	

இவை முழுவதும் ஒட்டுமொத்தமாக யோவேல் தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டுள்ளன —

அப் 2:16,17

''கடைசி நாட்கள்''	*... யாவர் மேலும்*	*... ஊற்றுவேன்*
புதிய ஏற்பாட்டுக் காலம் (எபி 1:1)	... பாகுபாடின்றி	... அளவில்லாமல்

''அனைத்து'' விசுவாசிகள்மீதும்!
பழைய ஏற்பாட்டிலோ முக்கிய தலைவர்கள்மீது மட்டும்.

□ அபிஷேகிக்கப்பட்ட சபையின் சித்திரம் —

சங் 133:1 ... *சகோதரர்* — திருச்சபை
:2 ... *''சிரசிலிருந்து அங்கிகள்மேல் தைலம்''*
= தலையானவரிடமிருந்து உடலுக்கு அபிஷேகம்

அ) ***ஆரோனின்*** *தாடி* — திருச்சபையின் ''ஆசாரிய'' ஊழியம்

ஆ) ***எர்மோன்*** *பனி* — திருச்சபையின் ''தீர்க்கதரிசன'' ஊழியம்
(உபா 32:1,2) பனி போலிறங்கும் வசனம்

இ) ***சீயோனில்*** *கட்டளை* — திருச்சபையின் ''இராஜரீக'' ஊழியம்
(சீயோனில் இராஜா)

□ ***கிறிஸ்துவும் கிறிஸ்தவர்களும்***

அ) நாமெல்லாரும் தீர்க்கதரிசிகள்— கிறிஸ்து தீர்க்கதரிசியானவர்.
ஆ) நாமெல்லாரும் ஆசாரியர் — கிறிஸ்து பிரதான ஆசாரியர்
இ) நாமெல்லாரும் இராஜாக்கள் — கிறிஸ்து இராஜாதி இராஜா

1 யோ 4:17 ... *''அவர் இருக்கிறபடியே நாமும் இவ்வுலகில் [இருக்கிறோம்''*
அல்லேலூயா!

■ கிறிஸ்தவர்களாக நாம் தீர்க்கதரிசிகளாகவும், ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும் எப்படிச் செயல்படவேண்டுமென்று அடுத்த மூன்று அத்தியாயங்களில் படிப்போம்.

(இச்செய்தியும் அடுத்துள்ள மூன்றும் கருப்பொருள் செய்திகளாய் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் Blesso '88இல், டேனிஷ்பேட்டையில், மே மாதம் கொடுக்கப்பட்டன.)

142

(அ) கிறிஸ்தவர்களின் தீர்க்கதரிசனப் பணி

Christians as Prophets

முகவுரை

''தீர்க்கதரிசி-ஆசாரியர்-இராஜா'' என்ற மேசியாவாகிய இயேசுவின் மூவகைப் பணியில் முதலில் வருவது **''தீர்க்கதரிசி.''**

உபா 18:15,18 ... இப்பணி குறித்த முதல் தீர்க்கதரிசனம் ... *''மோசே போன்ற தீர்க்கதரிசி''*

எடுத்தாண்டவர்கள் —

பேதுரு ... அப் 3:19-23 ... வியந்து நின்றோர் முன்னர்
ஸ்தேவான் ... 7:37 ... வெறுப்புடன் எதிர்த்தோர் முன்னர்

☐ சுவிசேஷப் புத்தகங்களில் —

அ) இயேசுவின் ஊழியத் துவக்கத்தில்
மாற் 6:14,15 ... *தீர்க்கதரிசியானவர்*
லூக் 7:14-16 ... *தீர்க்கதரிசியானவர் தோன்றியுள்ளார்*
யோ 6:13,14 ... *மெய்யாகவே ... வருகிற தீர்க்கதரிசி*

ஆ) குருத்தோலை ஞாயிறு
மத் 21:10,11 ... *நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசி*

இ) சிலுவைக்குப் பின்னர்
லூக் 24:18,19 ... *செய்கையிலும் வாக்கிலும் வல்ல தீர்க்கதரிசி*

☐ இயேசு ஒரு தீர்க்கதரிசி என அழைக்கப்பட்டதேன்?

இதற்கு விடையளிக்க,
''தீர்க்கதரிசி'' என்ற பதத்தின் பொருளை விளங்கிக்கொள்வோம் —

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளுக்கு 4 பெயர்கள் —

அ) பேசுகிறவர்கள் (எபிரெயு: *நபி)*
யாத் 4:14-16 (ஆரோன்)

ஆ) ஞானதிஷ்டிக்காரன் (எபிரெயு: *ரோயே)* — Seers
1 சாமு 9:9
(செய்தியைக் கூறுமுன் அதைப் ''பார்க்கிறார்கள்'')

இ) காவலாளர் (எபிரெயு: *சோபிம்)*
எரே 6:17 (பாதுகாப்போர் / மேய்ப்பர்கள்)

ஈ) தேவனுடைய மனிதர்
1 இரா 13:1
2 பேது 1:21

இப்படி,
தேவனது வாயாக மக்களுக்குப் பணியாற்றுவோரே தீர்க்கதரிசிகள்.

எனவே, எபி 1:1,2இன்படி,
இயேசுவே தீர்க்கதரிசியானவர் (THE Prophet)

☐ அனைத்து விசுவாசிகளும் தீர்க்கதரிசிகளாய் அழைக்கப் பட்டுள்ளனர் (Prophethood of all believers) —

அப் 2:17,18 ... யோவேலின் தீர்க்கதரிசனம்

1 கொரி 14:31 ... *எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லலாம்*

எண் 11:25-29 ... மோசே: *''இறைமக்கள் யாவரும் தீர்க்கர்களானால் நலமாயிருக்குமே!''*

மோசேயின் தீர்க்கதரிசனமான எதிர்பார்ப்பு!

ஆமோஸ் 3:8 ... *கர்த்தர் பேசுகிறார்; எவன் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?*

ஆனால்,
1 கொரி 12:29 ... *எல்லாரும் தீர்க்கதரிசிகளா?*

பதில்: இல்லை!

எ.கா.) நாமெல்லாரும் பேசுகிறோம்; ஆனால் பேச்சாளர்களல்ல!
நாமெல்லாரும் எழுதலாம்; ஆனால் எழுத்தாளர்களல்ல!
நாமெல்லாரும் ஓடலாம்; ஆனால் ஓட்டக்காரர்களல்ல!

அதாவது,
தேவன் நமக்கு நியமிக்கும் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு நமது *''விசுவாச அளவு''* வேறுபடும் — ரோ 12:6

■ *தீர்க்கதரிசிகளின் முக்கிய குணாதிசயங்கள்*

நாமும் இப்படித்தானிருக்கவேண்டும் —

1. பரிசுத்த மனிதர் (Men of Holiness)

லூக் 1:70 எபே 3:5 2 பேது 1:21 2 பேது 3:2 வெளி 22:6	*''பரிசுத்த'' தீர்க்கதரிசிகள்*

அவர்களுக்குச் சுத்திகரிப்பின் அனுபவம் இருந்தது —

எ.கா.) தீர்க்கன் மோசே — யாத் 3:4,5,10 — பாதங்கள்

தீர்க்கன் ஏசாயா — ஏசா 6:5-7 — உதடுகள்

(இவர்களிருவரும் மிக முக்கியமான தீர்க்கர்கள்.)

புறப்பட்டுப் போகப் பாதங்கள்!
எடுத்துச் சொல்ல நாவு!
இருவரும் அக்கினியினால் சுத்திகரிக்கப்பட்டு
அனுப்பப்பட்டனர்!

தேவனது பரிசுத்தத்தின் காட்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
Get a glimpse of God's holiness.

2. தரிசனமுள்ள மனிதர் (வெளிப்பாடு) (Men of Vision)

ஏசா 29:10 ... தீர்க்கதரிசிகள்தான் *''கண்கள்''*
புல 2:9 ... தீர்க்கதரிசிகளும் தரிசனமும்
1 கொரி 14:29,30 ... தேவனது சிந்தையின் வெளிப்பாடு
ஆமோஸ் 3:7 ... *தீர்க்கர்களாகிய ஊழியக்காரருக்கு வெளிப்படுத்தாமல் ...*

எ.கா.) தேவனுக்கு இன்று முக்கியமானது எது? திருச்சபையின் இன்றைய நிலை? நிதானிப்பு / விழித்திருப்பு	தீர்க்கதரிசிகள் இவற்றைத் தெளிவாய்ப் புரிந்துகொள்வர்.

3. பாரங்கொண்ட மனிதர் (Men of Burden)

ஏசா 13:1; 15:1; 17:1; 19:1; 21:1; முதலியன
சக 9:1
மல் 1:1

தீர்க்கதரிசியாகிய (அப் 13:1) பவுலின் ஐவகை பாரம் —

அ) சபைகளுக்காய்	2 கொரி 11:28,29
ஆ) பின்மாற்றக்காரருக்காய்	கலா 4:9-11,19; புல 2:11
இ) பெயர்க் கிறிஸ்தவர்களுக்காய்	ரோ 9:1-3; 10:1-3
ஈ) பொருளாசையுடைய ஊழியருக்காய்	பிலி 3:18,19

மீகா 3:11 ... தீர்க்கர், ஆசாரியர், அரசர் யாவரும்
பணத்திற்காகவே ஊழியம் ...
எல்லாம் கர்த்தருடைய நாமத்தில்!

அன்று ஜான் நாக்ஸ் (1514-1572) ஜெபித்தது —
''ஸ்காட்லாந்தைத் தாரும்; இல்லையேல் சாகிறேன்!''

இன்றைய ஜெபங்களோ ...?
2 பேது 2:1-3 ... இறைமக்களின் அறியாமை சாதகம்

உ) சந்திக்கப்படாதோருக்காய் ... ரோ 10:13,14; 15:20-22

4. ஜெப மனிதர் (Men of Prayer)

ஆதி 20:7 ... ஆபிரகாம் / அபிமெலேக்கு
(''தீர்க்கதரிசி'' என்ற சொல் முதலாவது வருவது!)

எரே 27:18 ... *தீர்க்கர்களாயிருந்தால் மன்றாடட்டுமே*

எ.கா.) தீர்க்கன் சாமுவேல்	—	1 சாமு 12:23
தீர்க்கன் எலியா	—	யாக் 5:17
தீர்க்கன் யோவான்	—	லூக் 11:1

5. தைரிய மனிதர் (Men of Boldness)

☐ தனி வாழ்வில் தலையீடு —

நாத்தான் / தாவீது	2 சாமு 12:7
யோவான் / ஏரோது	மாற் 6:17,18

துணிந்து பாவம் செய்பவர்கள் தீர்க்கதரிசிகளோடு
சுமூகமாயிருக்க முடியாது.

□ பொதுவிட ஊழியம் —
எலியா 1 இரா 18:21 ... *இரு நினைவுகள்?*
எரேமியா எரே 1:17-19

□ துன்புறுத்தப்படுதல் —
மிகாயா 2 நாளா 18:6-8,13,23,25,26
எரேமியா எரே 26:11-13
ஆபேல் முதல் சகரியா வரை (லூக் 11:47-51)
(**A**bel to **Z**echariah)

பழைய ஏற்பாட்டில் முதல் இரத்தசாட்சியாகிய ஆபேலும்,
புதிய ஏற்பாட்டில் முதல் இரத்த சாட்சியாகிய யோவானும் தீர்க்கர்கள்!
யாக் 5:10 ... *துன்பப்படுதலுக்குத் திருஷ்டாந்தங்கள்*

தீர்க்கதரிசிகளுடைய செய்தி —

1. தேவனது மகத்துவம் (The Greatness of God)

□ ஆபிரகாம் ... ஆதி 14:23 ... *உன்னதமான தேவனாகிய கர்த்தர்*
21:33 ... *சதாகாலமுமுள்ள தேவன்*
18:27 ... *நான் தூளும் சாம்பலுமானவன்*

□ மோசே ... உபா 31:30/32:3,4 ... *தேவனுக்கு மகத்துவம்*
33:26 ... *மாட்சிமையுள்ளவர்*

□ ஏசாயா ... ஏசா 2:11,17 ... *கர்த்தர் ஒருவரே உயர்ந்திருப்பார்!*

□ தானியேல் ... தானி 4:25 ... *உன்னதமானவர் ... ஆளுகை ...*

□ திருமுழுக்கினன் யோவான் ... மாற் 1:7 ... *காலணிகளின் வார்*
யோ 3:30 ... *நான் சிறுகணும்*

இவர்களெல்லாரும் தங்களை மறைத்துத் தேவனை உயர்த்து
கிறார்கள். தங்களை முன்னிறுத்திக்கொள்வதேயில்லை.

ஆதி விசுவாசிகளின் தீர்க்கதரிசனம் தேவனையே உயர்த்தியது —
அப் 2:17,11 ... அன்று தரிசனங்கள், சொப்பனங்கள்,
இருண்ட சூரியன், இரத்த நிறம், சந்திரன்
இப்படி ஒன்றுமில்லை.
அவர்கள் *''தேவனுடைய மகத்துவங்களையே''*
தீர்க்கதரிசனமாய் அறிவித்தனர்.

அப் 10:45 ... *தேவனைப் புகழ்ந்தனர்*
19:6 ... *நவநாவுகள் ... தீர்க்கதரிசனம்*
1 கொரி 14:24,25 ... *தாழ விழுந்து பணிந்துகொள்ளச்* செய்ய
அவிசுவாசிமீது தாக்கம்

2. தேவனது நீதி (The Righteousness of God)

□ நீதி (Righteousness)
பழைய ஏற்பாட்டில் இரத்தசாட்சியாய் மரித்த முதல்
தீர்க்கன் — (ஆபேல்) எபி 11:4
புதிய ஏற்பாட்டில் இரத்தசாட்சியாய் மரித்த முதல் தீர்க்கன் —
(யோவான்) லூக் 7:29 (ஞானஸ்நானம்)
3:8 -14 (திருப்பிக் கொடுத்துச் சரிசெய்தல், முதலியன)

□ மனந்திரும்புதல் (Repentance)
சக 1:4 ... அன்றைய‌த் தீர்க்கர்களின் முக்கிய செய்தி

□ சீர்திருத்தம் (Reformation)
எரே 1:4,5,9,10 ... *அழிக்கவும் ... கட்டவும் ...*

இவ்வித ஊழியம் எளிதல்ல —
எசேக் 2:5,6 ... *நெரிஞ்சில் ... முள் ... தேள்கள் ...*

பின்மாற்றமடைந்த தீர்க்கர்கள் —
புல 2:14 ... மனந்திரும்புதலின் செய்தி கிடையாது
எசேக் 13:3,10,11,18 ... *சமாதானம் ... சாரமற்ற சாந்து ...*
தலையணைகள்
எரே 23:14,17 ... தீங்கு வராது, செழிப்பு வரும்!

இவ்விதத் தீர்க்கர்கள் பிரபலமாயிருப்பர் —
லூக் 6:26 (கள்ளத் தீர்க்கருக்குப் புகழாரம்தான்!)

3. தேவனது இரட்சிப்பு (The Salvation of God)

கிறிஸ்துவின் மூலம் கிருபையினால் இரட்சிப்பு என்பதே பழைய
தீர்க்கர்களது முக்கிய கருத்து —
லூக் 24:27 ... *எல்லாத் தீர்க்கதரிசிகளும் ... தம்மைக் குறித்து*
அப் 3:24 ... *சகல தீர்க்கர்கள் ... இந்த நாட்கள்*
7:52 ... *தீர்க்கர்கள் ... நீதிபரருடைய வருகை*

அப் 10:43 ... *சகல தீர்க்கதரிசிகள் ... அவரது நாமம்*
1 பேது 1:10 ... *இரட்சிப்பு ... தீர்க்கர்கள் ஆராய்ந்தனர்*
லூக் 1:67-69,78 ... சகரியாவின் தீர்க்கதரிசனம்
யோ 11:49-51 ... காய்பாவும் உரைத்தது!
யூதா 14 ... *ஏனோக்கு ... இரண்டாம் வருகை*
வெளி 19:10 ... *இயேசுவைப்பற்றிய சாட்சி ...*
தீர்க்கதரிசனத்தின் ஆவி

தீர்க்கதரிசனத்தின் இம்முப்பரிமாணச் செய்தியை
அப்போஸ்தலன் பவுல் 1 கொரி 14:3இல் உள்ளடக்கினார் —

அ) பக்திவிருத்தி = தேவனது ''மகத்துவத்தை'' அறிந்து பக்தியில் கூடுதல்.

ஆ) புத்தி = தேவனது ''நீதியை'' அறிவித்து மக்களைப் பரிசுத்தமும் நீதியுமுள்ள வாழ்வுக்கு அழைத்து, ஆலோசனை கூறுதல்.

இ) ஆறுதல் = தேவனது ''இரட்சிப்பில்'' தேற்றரவாளனாகிய கிறிஸ்து மூலம் கிருபையும் சமாதானமும்.

எ.கா.) அப் 15:32 ... யூதாவும் சீலாவும்
(பன்னிருவர் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படாதவர்) 15:22/1:23
அவர்களது ஆறுதலான செய்தி —
எ.கா.) விருத்தசேதனம் தேவையில்லை —
இயேசு போதுமே!

■ ***ஒரு கேள்வி***

எதிர்காலத்தை முன்னறிவிக்கும் (predictive) தீர்க்கதரிசனம் பற்றி?

புதிய ஏற்பாட்டில், முன்னறிவித்தலைவிட நேரடியாய்ச் சொல்லுதலே — (forthtelling ... foretelling)
அதாவது, ஆவியானவரது உந்துதல், ஏவுதல், நடத்துதல் போன்றவற்றால் அறிவித்தல்!

எ.கா.) அப் 4:31 ... *நிரப்பப்பட்டார்கள் ... தைரியமாய்ச் சொன்னார்கள்*
அப் 6:9,10 ... *அவன் பேசின ஆவியை எதிர்க்க ...*
1 கொரி 2:4,5,12,13 ... *பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார்*
எபே 6:18-20 ... *வாக்கு அருளப்படும்படி ...*

மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டில் முன்னறிவிப்புகள் **பெரும்பாலும்** மிஷனரி நற்செய்திப்பணியை அடுத்தவையே —

எ.கா.) எபே 3:3,6 ... *புறவினத்தாரும் உடன் சுதந்திரர்*
1 தீமோ 4:14/2 தீமோ 4:5 ... தீமோத்தேயு
அப் 11:28-30 ... நிவாரணப் பணி
அப் 21:10-14 ... துன்புறுத்தப்படுதல்

தனிப்பட்டவருக்குத் தேவையான நடத்துதல் —
ரோ 8:14 ... ஆவியானவர் நடத்துதல்
2 தீமோ 2:7 ... தலைவர்களது ஆலோசனை

■ புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனப் பணியின் முக்கிய அம்சம் —

தீர்க்கதரிசிகள் எப்பொழுதும் பன்மையில் —

அப் 11:27,28 ... *எருசலேம் தீர்க்கதரிசிகள்*
13:1 ... *அந்தியோகியாவில் 5 தீர்க்கதரிசிகள்*
15:32 ... *யூதாவும் சீலாவும் தீர்க்கதரிசிகள்*
1 கொரி 14:29 ... *தீர்க்கதரிசிகள் இரண்டு மூன்று பேர்*

அதாவது, ஒருவருக்கொருவர் பொறுப்பு — சும்மா சுற்றக்கூடாது!

1 கொரி 14:32 ... *தீர்க்கதரிசிகளின் ஆவிகள்* தங்களுக்கும் மற்ற தீர்க்கதரிசிகளுக்கும் அடங்கியிருக்கவேண்டும்.

கேள்வி கேட்கப்படுவதற்கும் திருத்துதலுக்கும் உட்படுத்திக் கொள்ளாத தீர்க்கதரிசியைப் பின்பற்றுவது பேராபத்து —

திருவசனமே முடிவான பரிசோதனை: 1 கொரி 14:36-38

முடிவாக,

தீர்க்கதரிசனப் பணி கவர்ச்சிகரமானது;
எனவே தீர்க்கன் எவருக்கும் கதாநாயக வணக்கம் கூடாது —
வெளி 22:8,9
''தேவனைத் தொழுதுகொள்!''
— முதலாம் கட்டளைக்குத் திரும்புவோம்!

■ அடுத்த அத்தியாயம்: *''கிறிஸ்தவர்களின் ஆசாரியப் பணி''*

143

(ஆ) கிறிஸ்தவர்களின் ஆசாரியப் பணி

Christians as Priests

முகவுரை

சடங்காச்சார மார்க்கப் பணிகளுக்காய் லேவி கோத்திரத்தைத் தேவன் தெரிந்துகொண்டார் —
எண் 8:5,6,15

இந்தக் கோத்திரத்திற்குள் ஆசாரியத்துவம் ''ஆரோன்'' குடும்பத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்டது —
யாத் 28:1 / 4:14

கிறிஸ்துவானவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்;
அது இராஜரீகக் கோத்திரம், ஆசாரியத்துவக் கோத்திரமல்ல.

அப்படியானால் அவர் ஆசாரியரானது எங்ஙனம்?

பதில்: எபி 7:11-17
மெல்கிசேதேக்கின் முறைமை.
லேவியைவிடப் பெரியவர் (வச 9,10)

- எபிரெயர் நிருபத்தின் கருப்பொருள் —
''இயேசுவின் பிரதான ஆசாரியத்துவம்'' (8:1)

இந்நிருபம் ஐந்தாம் சுவிசேஷம் என்றும் அழைக்கப்படும்!
மத், மாற், லூக், யோ — பூவுலகில் கிறிஸ்து செய்தது
எபி — விண்ணுலகில் கிறிஸ்து செய்வது

- நமது பிரதான ஆசாரியர் *''தம்மையே''* பலி கொடுத்தார் (எபி 7:27)

பழைய ஏற்பாட்டில் 5 முக்கிய பலிகள்/காணிக்கைகள் —

லேவியராகமம்	1 ... தகன பலி 2 ... போஜன பலி 3 ... சமாதான பலி	தேவனோடுள்ள ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள.
	4 ... பாவ நிவாரண பலி 5 ... குற்ற நிவாரண பலி	தேவனோடுள்ள ஐக்கி யத்தைப் ''புதுப்பிக்க.''

பலிகளின் பொருள்:

1. தகனபலி — நெருப்பு (லேவி 1:9)
   = கிறிஸ்துவின் பிராயச்சித்த பலி சுகந்த வாசனை (எபே 5:2)

2. போஜன பலி — எண்ணெய் (லேவி 2:1,3)
   = ஆவியானவரின் (எண்ணெய்) அபிஷேகத்தினால் கிறிஸ்துவின் பூரண, மாசற்ற தன்மை (மெல்லிய மாவு) (எபி 9:14)

3. சமாதான பலி — கொழுப்பு (லேவி 3:3-5)
   = கிறிஸ்து நமக்குச் சமாதானம் உண்டுபண்ணி, சமாதான காரணராகி, ஆன்மீக இளைப்பாறுதல் தருகிறார்.

4. பாவ நிவாரண பலி — இரத்தம் (லேவி 4:1-5)
   = கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோ 1: 7,9)

5. குற்ற நிவாரண பலி — அபராதம் (லேவி 5:15,16)
   தகனபலி போன்றது;
   காரியங்களைச் சரிசெய்வது உள்ளடக்கம்.
   = கிறிஸ்துவின் மன்னிக்கும் அன்பும் கிருபையும்.

இவ்விதம் கிறிஸ்துவின் மரணம் பரிசுத்த தேவனது நிபந்தனைகள் அத்தனையையும் நிறைவேற்றியது.

அவர் மரித்தது மட்டுமல்ல, நமக்காய் உயிர்த்தார் —
அதனால் *''சிங்காசனத்தின்மீது ஆசாரியரானார்''* (சக 6:12,13)

- எபிரெயர் நிருபம் **பூரணத்தைப்** பற்றியது.

நாம் வாசிப்பது —

பூரணராகும்படிக் கடந்துபோதல் (6:2)
பூரணப்படுத்தப்பட்ட நீதிமான்களின் ஆவிகள் (12:23)
சகல நற்செயலிலும் சீர்பொருந்துதல் (13:21)

எபிரெயர் நிருபம் கிறிஸ்துவை 10 கோணங்களில் **பூரணமான பிரதான ஆசாரியராய்** முன் நிறுத்துகிறது —

1. இரக்கமுள்ள பிரதான ஆசாரியர் (Merciful)

எபி 2:17,18
நமது சோதனைகளில் நமக்குதவ.
பூரணமான **உதவியாளர்** (Helper).
சோதனையை எதிர்க்கும்போதுதான் அதின் பலம்.
நமக்குப் புரியும்! இப்போராட்டத்தில் நாம் தனியாக இல்லை.

2. உண்மையுள்ள பிரதான ஆசாரியர் (Faithful)

எபி 3:1,2
நாம் பின்பற்றக்கூடிய முன்மாதிரியை நமக்குக் காட்ட.
பூரணமான **முன்மாதிரி** (Model) —
சிறு பிராயம் — பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல்
வாலிபப் பருவம் — சீடர், சிநேகிதர், ...
குடும்ப வாழ்வு — தாயார் ... திருச்சபை
நடைமுறை வாழ்விற்கு அவர் தப்பியோடவில்லை.

3. மகா பிரதான ஆசாரியர் (Great)

எபி 4:14-16
நமக்குக் கிருபை, இரக்கம், வெற்றி அருள.
பூரணமான **தலைவர்**/வெற்றி வேந்தர்/தளபதி (Leader) —
வெறும் பூரணவாதியல்ல — நமக்கு உதவுவார்,
நம்மை நடத்துவார்; இரக்கமுள்ளவர்; ஊக்குவிப்பவர்.

4. கனம்பொருந்திய பிரதான ஆசாரியர் (Honourable)

எபி 5:4,5
நித்திய இரட்சிப்பை நமக்கு அருளிச்செய்ய (வச 9).
பூரணமான **சுதந்தரவாளி**/அதிபதி (Inheritor / Author).
மிக முக்கியமானவரிடமிருந்து (VIP) பரிசு பெறுதல்.

5. நித்திய பிரதான ஆசாரியர் (Eternal)

எபி 6:19,20
நம்மை ஆசீர்வதிக்க (வச 13,14,20).
ஆபிரகாமை மெல்கி ஆசீர்வதித்தார் (ஆதி 14:18-20)

சோதோமின் ராஜாவின் வெகுமதிகளை வேண்டாம் என்ற அளவுக்கு சாலேமின் ராஜா மூலம் ஆபிரகாம் பெற்ற தேவாசீர்வாதங்களில் அவன் திருப்தியடைந்திருந்தான் (ஆதி 14:21-23).

பூரணமான **வாக்குப்பண்ணுபவர்** (Promisor).
இகபர நன்மைகள்.

6. மாறாத பிரதான ஆசாரியர் (Unchanging)

எபி 7:24-26
நமக்காய் மன்றாட.
பூரணமான **மன்றாட்டு வீரர்** (Intercessor) —
கிறிஸ்து மூலம் தேவனை நோக்கி.
இயேசுவின் நாமத்தினால் பிதாவிடம்.
நாமெல்லாரும் வேண்டிக்கொள்வதில் பலவீனர்.

7. முக்கியமான (மகிமையான) பிரதான ஆசாரியர் (Majestic)

எபி 8:1,6,7
நமக்காய் நடுவராய் ஊழியம் செய்ய.
பூரணமான **நடுவர்** (Mediator).
எச்சரிக்கை: ரோமன் கத்தோலிக்க மார்க்கம்
எச்சரிக்கை: ''எப்பிரச்னையாயினும் எனக்கு எழுதுங்கள்!''
இல்லை, முதலாவது ''நீங்கள்'' ஜெபிக்கவேண்டும்;
இதயத்தை ஆராய்ந்துபார்க்கவேண்டும்;
காரியங்களைச் சரிசெய்யவேண்டும் (யாக் 5:13,14)

அவசரத் தொடர்புக்கு: எரேமியா 33:3
மத்தேயு 7:7

8. நன்மைகளுக்குரிய (பரிசுத்த) பிரதான ஆசாரியர் (Good)

எபி 9:11-14
ஏற்ற வகையில் தேவனைச் சேவிக்க நமக்குதவ.
நமது காணிக்கைகளும் சேவைகளும் கிறிஸ்து மூலமாகவே தேவனிடம் அங்கீகாரம் பெறும்.
அப் 17:25
பூரணமான **பலியானவர்** (Offering / Offerer)

9. அதிகாரியான பிரதான ஆசாரியர் (Presiding)

எபி 10:21-23,37
நம்மை இறுதிவரை காக்க (வச 37,39).
பூரணமான **ஆளுநர்** (Administrator).
தான் துவங்கியதை வெற்றியாய் முடிப்பவனே தலைவன்.
12:2 ... *துவக்குகிறவர் ... முடிக்கிறவர்*

10. புறம்பாக்கப்பட்ட பிரதான ஆசாரியர் (Rejected)

எபி 13:11-14
நம்மை உலகிலிருந்து பிரித்தெடுக்க.
பூரணமான **பாடனுபவிப்பவர்** (Sufferer).
பாடுகள் இல்லாதது யார்?
நம்மெல்லாரையும்விட அவர் பாடுபட்டது என்னே ஆறுதல்!

இயேசு பூரணமானவர், போதுமானவர், அல்லவா?
Jesus: Perfect & Sufficient

■ கிறிஸ்து தம்மைத்தாமே பலியாக்கி நமது பிரதான ஆசாரியரானது மட்டுமல்ல, நம்மையும் ''ஆசாரியர்கள்'' ஆக்கியிருக்கிறார்!

அ) நம்மைக் கழுவி இரட்சித்ததால் (தமது இரத்தத்தால்)

வெளி 1:5,6; 5:9,10

சங் 132:9,10 ... நீதியினாலும் இரட்சிப்பினாலும் உடுத்தி ...
எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் உரியது.
எனவே, ஆனந்த முழக்கமிடுங்கள்!

ஆ) நம்மை அபிஷேகித்ததால் (தமது தூயாவியால்)

2 நாளா 5:1,12-14
ஒப்பிடுக: அப் 1:5; 2:2-4
120 ஆசாரியர் / 120 சீடர்

■ அவர் நம்மை ஏன் ஆசாரியர்களாக்கினார்?

வெளி 1:5,6 ... அவர் ''தீர்க்கர்-ஆசாரியர்-இராஜா''
நம்மைத் தேவனுக்கு ராஜரீக ஆசாரியக் கூட்டமாக்கினார்.

இரு நோக்கங்கள் —

அ) *''ஆவிக்கேற்ற மாளிகையாக ... ஆவிக்கேற்ற பலிகள் செலுத்த''* (1 பேது 2:5)

ஆ) *''பரிசுத்த இனமாக ... அவரது புண்ணியங்கள் அறிவிக்க''* (1 பேது 2:9)

அ) மேல் நோக்கியது — திருச்சபையில் (Praise)
ஆ) வெளி நோக்கியது — உலகிற்கு (Proclaim)

''துதித்தலும் ஆராதித்தலும்'' (Praise & Worship)
''துதித்தலும் சாட்சி பகர்தலும்'' (Praise & Witness)

(அ) ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்த (1 பேது 2:5)

ப.ஏ. — சடங்குகள் நிறைந்த பலிகள்
பு.ஏ. — ஆவிக்குரிய பலிகள்

1. நீதியின் பலி

சங் 4:5 ... *நீதியின் பலிகள் ... கர்த்தர்மேல் நம்பிக்கை*
51:19 ... *நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்*

அதாவது — எபி 10:5,10 ... *உடலாகிய பலி*
ரோ 12:1 ... *உடல்கள் ... பரிசுத்த ... ஜீவ பலி*

2. நொறுங்கிய இருதய பலி

சங் 51:17 ... *தேவனுக்கேற்ற பலிகள் ... நொறுங்குண்ட ... நருங்குண்ட ...*
பாக்கிய வசனங்கள் நொறுங்கியிருத்தலைப் பற்றியவையே (மத் 5:3-10)
அகம்பாவம்/அகங்காரம்/அகந்தை/ஆணவம் ... வேண்டாம்.

3. துதியின் பலி

சங் 50:12-14 ... *ஸ்தோத்திர பலி ... பொருத்தனைகள் ...*
27:6 ... *ஆனந்த பலிகள் ... பாடிக் கீர்த்தனம் ...*
116:17 ... *ஸ்தோத்திர பலி ... தொழுது ...*
எரே 33;11 ... *களிப்பின் சத்தம் ... கர்த்தரைத் துதியுங்கள்.*
எபி 13:15 ... *உதடுகளின் கனி ... ஸ்தோத்திர பலி*

இது தேவனுக்குப் பலி; மனிதருக்குமுன் ஆட்டமல்ல!

4. ஜெபப் பலி

சங் 141:2 ... *என் விண்ணப்பம் ... உமக்கு முன் தூபம் ...*
வெளி 5:8 ... *ஜெபங்களாகிய தூபவர்க்கம்* [*அந்திப் பலி*

மன்றாட்டு ஜெபமென்பது முக்கியமான ஆசாரியப் பணி —
சங் 99:6 ... *ஆசாரியர், மோசே, ஆரோன் ... கூப்பிடுவோர்*

எழுப்புதலுக்காகவும் ஆதிநிலையேகுதலுக்காகவும் ஆசாரியர் ஜெபிக்கவேண்டும் —
யோவேல் 1:13 ... *ஆசாரியரே ... புலம்புங்கள் ... அலறுங்கள்*
2:17 ... *ஆசாரியர்கள் ... அழுது ... உமது மக்கள்*

ஏன் எழுப்புதல்?
— சபையில் ஆகாரக் குறைவு (யோவேல் 1:16; 2:19)
— சபையில் ஆனந்தம்/ஆரவாரம் இல்லை (வச 16)
— சபையில் அருள்மாரி/அபிஷேகம் இல்லை (வச 20)
— சபையில் ஆற்றல் இல்லை (2:17ஆ)

எழுப்புதலின் விளைவுகள்:
— தானியத்தால் திருப்தி (யோவேல் 2:19)
— வீணான வருடங்களின் விளைவு திரும்பப் பெறுதல் (வச 25)
— அருள்மாரி (வச 23,28 ... *முன்மாரி ... பின்மாரி)*
— திரளானோர் இரட்சிப்பு (வச 32)

□ பொருளாதார ஆசிகளையே மையப்படுத்தும் ஜெபங்கள் வேண்டாம் —
எ.கா.) கர்த்தர் ஜெபம் — 7 வேண்டல்களில் ஒன்றுதான் பொருளாதாரத் தேவை
பிரதான ஆசாரிய ஜெபம் — யோவான் 17

□ மக்களது இன்னல்களை உங்களுக்கு இலாபமாக்காதீர்!
லூக் 20:46,47 ... *விதவைகள்* — மக்கள் துன்புறும்போது ஊழியர் துட்டு சேர்த்தல்

5. ஆசீர்வாதங்களின் பலி

எபி 11:17 ... ஆபிரகாம்/ஈசாக்கு
''தொழுதுகொண்டு'' (ஆதி 22:5) ...
"Worship" முதலாவது வருமிடம்.
2 சாமு 23:15,16 ... தாவீது/பெத்லகேமின் தண்ணீர்

6. தானதர்மப் பலி

எபி 13:16 ... *நன்மை ... தானதர்மம் ... இவ்விதப் பலிகள்*
நீதி 19:17 ... *ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் ...*
இறைப்பணியாளர்க்குக் கொடுப்பது —
பிலி 4:18 ... (பவுல்) ... *தேவனுக்குப் பிரியமான உகந்த பலி*

7. உயிர்ப் பலி

பிலி 2:17	பிறரது நன்மைக்காக
2 தீமோ 4:5-7	நம்மையே வார்த்துவிடுதல்.

2 கொரி 12:15 ... *செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும்*
இரத்தசாட்சிகளாய் மரிக்க தேவன் நம்மையழைக்கலாம்.
இது மறக்கப்பட்ட சத்தியமாயிற்று.
பன்னிருவரில் பதினொருவர் இரத்தசாட்சிகள்.
மிஷனரிப்பணியில் இரத்தசாட்சிகளின் சரிதைகளை வாசியுங்கள்.

(ஆ) அவரது புண்ணியங்களை அறிவிக்க (1 பேது 2:9)

ஏசா 43:21 ... *அவரது துதியைச் சொல்லும் மக்கள்*

இது தேவனது கிருபை, மகிமை, மகத்துவம் ஆகியவற்றைப் ''பிரசங்கிக்கும், போதிக்கும்'' ஊழியம்.

அனைத்துலகையும் ஆசீர்வதிக்கவே நாம் ஆசாரியர்கள் —
யாத் 19:5,6 ... *பூவுலகு என்னுடையது ... நீங்கள் ஆசாரியர்* (இஸ்ரவேலருக்கு வெளியான தேவனது முதன்மையான திட்டம் புதிய ஏற்பாட்டில் நிறைவேறிற்று.)

ஏசா 61:6 ... *கர்த்தரின் ஆசாரியர் ... இனங்களின் செல்வம்*

தேவனுக்கும் மனிதருக்கும் இடையே ''ஆசாரியர்'' போல, தேவனுக்கும் மனிதருக்கும் இடையே நாம் ''தூதுவர்கள்!'' —
2 கொரி 5:20 ... *ஒப்புரவாகுதலின் ஊழியம்*

போதித்தலும் ஆலோசனை கூறுதலும் —
மல் 2:7 ... *ஆசாரியனது உதடுகள் ... அறிவு*
எசேக் 44:23 ... *பரிசுத்தம் ... தீட்டு ... வித்தியாசம்*

எ.கா.) மோசேக்கு ஆசாரியன் — எத்திரோ (யாத் 3:1; 18:17,19,21)
யோவாசுக்கு ஆசாரியன் — யோய்தா (2 இரா 12:2)

பின்வாங்கிய இஸ்ரவேலர் —
2 நாளா 15:3 ... *உபதேசிக்கும் ஆசாரியன் இல்லை*

நாம் திருவசனத்தைப் படித்து அதனால் நிறைந்திருக்கவேண்டும்.
ஆராய்ச்சி வேதங்கள் பயன்படுத்துங்கள்.

இருதயம் நிறைந்திருந்தால்தான் வாயில் வரும்!

■ ***அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்***
(Priesthood of all believers)

சீர்திருத்தக் காலச் சத்தியம்!

குடும்ப ஆசாரியத்துவம் → கோத்திர ஆசாரியத்துவம் → திருச்சபை ஆசாரியத்துவம்
(ஆரோன்) (லேவி) (அனைத்து விசுவாசிகள்)

மேலிருந்து கீழாகக் கிழிந்த தேவாலயத் திரைச்சீலையை
அன்றிருந்த பிரதான ஆசாரியன் திரும்பத் தைத்திருப்பான்! —

விசுவாசிகளைப் பிரமாணத்திற்குள் மறுபடி கொண்டுவருதல்!
லூக் 23:1,2,5-10

இப்பொழுது, குருக்களல்லாதோர் கிடையாது; எல்லாரும் குருக்கள்!

1. பிரத்தியேக உடைகள் கிடையாது.

ஆசாரியனது வஸ்திரங்கள்

அங்கிகள், கயிறுகள், தொங்கல்கள், முதலியன.
இயேசு வித்தியாசமான உடை அணியவில்லை;
எனவேதான் யூதாஸ் காட்டிக்கொடுக்க வேண்டியதிருந்தது.

நமது இன்றைய ஆடைகள், அணிகலன்கள் —

துதியின் உடை (ஏசா 61:3)
இரட்சிப்பின் வஸ்திரங்கள் (ஏசா 61:10)
நீதியின் சால்வை (ஏசா 61:10)
ஆனந்த தைலம் (எபி 1:9)
தேவனது அனைத்துப் படைக்கலன்கள் (எபே 6:13)

2. பிரத்தியேக இடங்கள் கிடையாது.

தெய்வத்தை ஓரிடத்தில் வைக்க முடியாது.

யோ 4:20-24 ... சமாரியப் பெண் ... சடங்கு/ஆவியோடு
அப் 7:47-49 ; 17:24 ... சாலொமோன்
எங்கே இரண்டு மூன்று பேர் ... கூடுகிறீர்களோ ...

பலிபீடம் (altar) கிடையாது!

மெழுகுவர்த்தி கொளுத்துதல், சிலுவைக்குமுன் பணிதல் ...
இவையெல்லாம் கத்தோலிக்க விக்கிரகாராதனை.

3. பிரத்தியேகப் பட்டங்கள் கிடையாது.

அருட்தந்தை, அருள்திரு, அருட்பெருந்திரு ... (மத் 23:8-10)
Holy and Reverend is "His" Name (Psa 111:9)

புதிய ஏற்பாட்டுச் சபையில் தலைவர்கள்?

அ) மூப்பர் (= கண்காணிகள், மேய்ப்பர்கள்) ...
ஆன்மீகக் காரியங்கள்
ஆ) உதவிக்காரர் ... நிர்வாகம் ... பந்தி விசாரணை போன்றவை

■ எல்லாச் சபைப்பிரிவுகளிலும் அருள்மாரி பொழியப்படவில்லையா?

மக்கள் மீதுதான், இடங்கள் மீது அல்ல.
நபர்கள் மீதுதான், கட்டிடங்கள் மீது அல்ல.

ஆனால், *புதிய ரசம் ... பழைய துருத்தி*
மத் 9:14-17

துருத்தியைத் துரிதமாய் மாற்றாவிடில், இரட்டை இழப்பு!

கிறிஸ்துவிடம் வரும்போது, *பழையவை ஒழிந்தன;*
யாவும் புதிதாயின (2 கொரி 5:16,17).

''மாம்சத்தின்படிக் கிறிஸ்துவை அறியமாட்டோம்''

■ அடுத்த அத்தியாயம்: *''கிறிஸ்தவர்களின் இராஜரீகப் பணி''*

144

(இ) கிறிஸ்தவர்களின் இராஜரீகப் பணி

Christians as Kings

- இயேசுவின் ''தீர்க்கர்-ஆசாரியர்-இராஜா'' எனும் முப்பணி திருமறையெங்கும் மிளிர்கிறது —

  - ஆபிரகாமின் தேவன் — தீர்க்கதரிசி (ஆதி 20:7)
    ஈசாக்கின் தேவன் — ஆசாரியர் (பலி)
    யாக்கோபின் தேவன் — இராஜா (இளவரசன் / ஆதி 32:28)

  - புதிய ஏற்பாடு —

    சுவிசேஷங்கள் — தீர்க்கர் — மக்களுக்குப் போதிக்கிறவர்.
    நடபடிகள் + நிருபங்கள் — ஆசாரியர் — மக்களுக்காய் மன்றாடுகிறவர்.
    வெளிப்படுத்தல் — இராஜா — மக்களை ஆளுகிறவர்.

  - எபி 13:8 ... *மாறாதவர்* ... *நேற்றும்* — தீர்க்கர்
    இன்றும் — ஆசாரியர்
    என்றும் — இராஜா

  - வெளி 1:8 ... *இருந்தவர்* ... தீர்க்கராய் வந்தார்
    இருப்பவர் ... ஆசாரியராய்ச் சென்றார்
    இனி வருபவர் ... இராஜாவாய் வருகிறார்

  இயேசுவே பழைய ஏற்பாட்டின் *''ஒமெகா''* (ரோ 10:4),
  அவரே புதிய ஏற்பாட்டின் *''அல்பா''* (கலா 4:4,5).

  - சங் 133 ... சிரசிலிருந்து அங்கிகளுக்குத் தைலம்
    ''ஆரோன்'' (ஆசாரியர்) ... *''பனி''* (தீர்க்கதரிசன வார்த்தை) ... *''கட்டளை''* (இராஜா)

  - இயேசுவானவர் பூரணமான/முழுமையான ஊழியர் —

    தீர்க்கர் — நமக்கு *''யாவும்''* சொல்பவர்
    யோ 4:25 / 15:15
    ஆசாரியர்— நமது பாவங்கள் *''யாவையும்''* மன்னிப்பவர்
    1 யோ 1:7,9

இராஜா — சத்துருக்கள் *''யாவரையும்''* முறியடிப்பவர்
1 கொரி 15:24,25

  - தீர்க்கராக, அறியாமையிலிருந்து நம்மை விடுவிக்கிறார்.
    ஆசாரியராக, அக்கிரமங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறார்.
    இராஜாவாக, அச்சுறுத்தலிலிருந்து நம்மை விடுவிக்கிறார்.

இயேசு போதுமே!

முந்திய இரு அத்தியாயங்களில் (142 & 143)
முதலிரண்டு பணிகளையும் படித்தோம்;
இப்பொழுது மூன்றாவது —

- ***இயேசுவே இராஜா!***

  தீர்க்கதரிசனத்தில் —

ஆதி 17:6	ஏசா 9:6,7
49:10	எரே 23:5
எண் 24:17,19	எசேக் 21: 27
1 சாமு 2:10	தானி 9:25
2 சாமு 7:16	மீகா 5:2
சங் 2:6,7	சக 9:9
45:1,6,7	

  - அவர் ''நம்மை'' இராஜாக்களாக்கியிருக்கிறார்!

    வெளி 1:6 / 5:10
    (ராஜரீக ஆசாரியர்கள் — 1 பேது 2:9)

    1 சாமு 2:8 ... *புழுதியிலிருந்து சிங்காசனத்திற்கு*
    (பிச்சைக்காரரைப் பிரபுக்களாக்கினார்.)
    சங் 47:1-3 ... *கைகொட்டுங்கள் ... ஆர்ப்பரியுங்கள் ... ராஜா*

    எபே 2:4-6 ... உன்னதங்களில் அவருடன் அமர்வு!
    இன்று விசுவாசம் — நாளை நிசம் (வெளி 3:21).
    லவோதிக்கேயருக்கும் திருவாக்கு (வச 20)

இறையரசு/விண்ணரசு
(இரு அம்சங்கள்)

- நிகழ்காலம் (ஆவிக்குரியது) லூக் 17:21, ரோ 14:17
- வருங்காலம் (எழுத்தின்படியானது)
  - ஆயிரமாண்டு — கொரி 15:25,26 (கிறிஸ்துவினால்)
  - நித்தியம் — வச 24,27,28 (பிதாவினால்)

■ ***இன்று இறையரசில் வாழ்வு —***

1. கீழ்ப்படிதலின் வாழ்வு (Obedience)

ஆதி 49:10 ... *சமாதான கர்த்தர் ... செங்கோல் ... கீழ்ப்படிவர்*
கீழ்ப்படியாமையினால் இஸ்ரவேலின் முதலரசன் தள்ளப்பட்டான்
— 1 சாமு 15:22,23

அரசனுக்குக் கீழ்ப்படியாது அரசில் வாழ முடியாது —

லூக் 6:46 ... *ஆண்டவரே ... ஆண்டவரே ... கீழ்ப்படியாமல்?*
மல் 1:6 ... *நான் எஜமானானால் ... பயம் எங்கே?*

இவ்வித பயபக்தியே இறையரசிற்குச் சிறப்புக் குணமாகிய நடைமுறை நீதி வாழ்வுக்கு நடத்துகிறது —
எ.கா.) இயேசு திருமுழுக்கில் கீழ்ப்படிந்தார் (மத் 3:15; லூக் 7:30)

2. வெற்றி வாழ்வு (Victory)

சங் 44:4,5 ... *நீர் என் இராஜா ... சத்துருக்களை மிதிப்போம்*

எந்த அரசனுக்கும் எதிரிகள் இருப்பர் —
தேவனுக்கும் அவரது மக்களுக்கும் பரம எதிரி சாத்தான்.

இயேசு மும்முறை அவனை ''உலகின் அதிபதி'' என்றழைக்கிறார்; ஒவ்வொரு இடத்திலும் வெற்றிக்கான வழியைச் சொல்கிறார் —

அ) யோ 12:31,32 ... **கிறிஸ்துவின்** இரத்தத்தால் வெற்றி
(வெளி 12:10,11)

ஆ) யோ 14:30,31 ... **பிதாவின்** அன்பினால் வெற்றி
(1 யோ 2:15,16)

பிதாவின் அன்பினால் நிறைந்த உள்ளத்தில் பிசாசுக்கு இடமில்லை — ''*அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை*''

இ) யோ 16:11 ... **ஆவியானவரின்** பலத்தால் வெற்றி (வச 7)

ஆஹா, **திரியேக** தேவனது ஒத்தாசை!

3. மகிழ்ச்சி வாழ்வு (Joy)

எபி 1:8,9 ... *உமது சிங்காசனம் ... இராஜ்யம் ... ஆனந்த தைலம்*
ரோ 14:17 ... *இராஜ்யம் ... பரிசுத்த ஆவியினால் சந்தோஷம்*
(வச 6 — பிரமாணமில்லை, விடுதலை)
எ.கா.) உணவு, உடை, உற்சவம் — ஜாக்கிரதை!

சங் 149:2,3 ... *இராஜாவில் களிகூருதல் ... நடனம், துதி, கீர்த்தனம்*
ஆரவார ஆராதனை திரும்பி வருதல்!

கடற்கரை, ஆற்றோரம், மலையடிவாரம் ... இங்கெல்லாம்
சென்று சத்தத்தை உயர்த்தி இராஜாவைத் துதியுங்கள்!

4. சாந்தமான வாழ்வு (Meekness)

மத் 21:4,5 ... *இராஜா ... சாந்த குணம் ... கழுதையின்மேல்*

சங் 45:2,4 ... *அருள் ... நீதி ... சாந்தம் ... ஜெயம்*

மத் 5:3 ... *ஆவியில் எளிமை* (மலைப் பிரசங்கத்தில் முதல் வரி)
''*இராஜ்யம் அவர்களுடையது*''

18:1-4 ... *சிறுவன் போல் தாழ்மை ... இராஜ்யத்தில் பெரியவன்*

லூக் 12:32 ... *சிறுமந்தையே ... இராஜ்யம் உனக்கு ...*
எளிய மனது, குதர்க்கமின்மை.
ஏழைகள்மீது கரிசனை (வச 33)

யாக் 2:5 ... *உலகில் தரித்திரர் ... இராஜ்யத்தைச் சுதந்தரிப்போர்*

இறைப்பணிக்குத் தசமபாகம் — கடவுளுக்குக் ''கொடுத்தல்''
எளியவர்க்கு இன்னொரு தசமபாகம் — கடவுளுக்குக் ''கடன்''
எளியவரோடு உறவுகொள்ளும்போது நமது ஆவியிலும் தாழ்மையும் எளிமையும் உருவாகும்.

5. *பறைசாற்றும் வாழ்வு* (Proclamation)

ஏசா 52:7 ... *அழகிய பாதங்கள் ... தேவன் ராஜரீகம்பண்ணுகிறார்!*

வெளி 10:7 / 11:15 ... *7ஆம் தூதன் ... கிறிஸ்து அரசாட்சி செய்வார்*

உறக்கம் தெளிவோம், உற்சாகம் கொள்வோம், ஏனெனில் ...
நமக்கிருப்பது —

அ) இராஜரீக அதிகாரம் (Royal Authority)

ஏசா 6:1,5,8,9 ... *ராஜா ... அனுப்புவேன் ... போவார் ...*

மத் 28:18,19 ... *சகல அதிகாரம் ... புறப்பட்டுப் போங்கள்*

2 தீமோ 4:1,2 ... *அவரது இராஜ்யம் ... பிரசங்கம்பண்ணு*

ஆ) இராஜரீகச் செய்தி (Royal Message)

மாற் 1:14,15 அப் 1:3	— இயேசுவின் செய்தி
மத் 10:7	— சீடர் பிரசங்கிக்கவேண்டியது
அப் 8:12	— பிலிப்பு
20:25 28:31	— பவுல்
சங் 145:10-12	— சகல பரிசுத்தவான்கள்
அப் 17:6,7	— *''இயேசுவே இராஜா!''*

இ) இராஜரீக வல்லமை/பலம் (Royal Power)

மத் 12:28 ... *தேவ ஆவி ... பிசாசுகள் ... இராஜ்யம்*

லூக் 10:8,9 மத் 4:23 9:35	... *பிணியாளிகள் ...இராஜ்யம்*

அப் 10:38 ... *இயேசு அபிஷேகம் ... குணமாக்குகிறவர்*

நீங்கள் முதலாவது புறப்பட்டுச் செல்லுங்கள்;
அப்பொழுதுதான் வல்லமை வெளிப்படுவதைக் காண்பீர்கள்!

விருந்தினர் அறையில் வைக்கப்படும் பொம்மைகளல்ல வரங்கள்!
தேவையிலிருப்போரிடம் சென்று அவர்களை ஆசீர்வதியுங்கள்!

6. *பாடுகளின் வாழ்வு* (Suffering)

யுத்தமில்லாது வெற்றியா? காயமில்லாது யுத்தமா?

லூக் 22:28,29 ... *எனது சோதனைகள்...உங்களுக்கு இராஜ்யம்*

அப் 14:22 ... *அநேக உபத்திரவங்கள்... தேவ இராஜ்யம்*

2 தெச 1:4,5 ... *பாடனுபவிப்பு... இராஜ்யத்திற்குப் பாத்திரர்*

2 தீமோ 2:3,12 ... *சேவகன்... தீங்கு... பாடுபட்டால் அரசாளுவோம்*

எபி 12:2 ... *சிலுவை ... சிங்காசனம்*

வெளி 1:9 ... *உபத்திரவத்திற்கும் இராஜ்யத்திற்கும் உடனாளி*

■ ***முடிவான வெற்றி***

''உமது சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்குமட்டும் ...''

— திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட வாசகம்

சங் 110:1	— தீர்க்கதரிசனப் புத்தகம்
மத் 22:44 அப் 2:34	— சரித்திரப் புத்தகங்கள்
எபி 1:13	— உபதேசப் புத்தகம்

1 கொரி 15:25-28 ...

***''பிதாவாகிய** தேவனே சகலத்திலும் சகலமுமாயிருக்க...''*



145

உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுவது எப்படி?

How to Fulfil your Ministry

முகவுரை

- ஏதாவதொரு வகையில் தேவனைச் சேவிக்க அவரது பிள்ளைகள் யாவரும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.
  ''சிறந்த ஊழியனாய்ச் செயல்படுவது எப்படி?''
  என்ற தலைப்பில் நிறைய கேட்டிருக்கிறோம்.

  இந்தச் செய்தியோ —

  உங்கள் ஊழியத்தை **''நிறைவேற்றுவது''** எப்படி?

  - ☐ தீமோத்தேயுவுக்குப் பவுல்: 2 தீமோ 4:5
  - ☐ அர்க்கிப்புக்குப் பவுல்: கொலோ 4:17
  - ☐ பவுலின் சொந்த சாட்சி: அப் 20:24

- ஊழியத்தை ''நிறைவேற்றுதல்'' என்றால் ஊழியத்தில் ''வெற்றி'' எனப் பொருள்படாது —

  அது இறைச்சித்தத்தை நிறைவேற்றுவதே —

  அப் 13:36 ... *தாவீது ... தேவ சித்தம் ... ஊழியம் ... நித்திரை*

1. உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துங்கள்.

2 பேது 1:10,11 ... *இடற மாட்டீர்கள்*
... ''முடிவு கட்டம்'' (பிரவேசம்)

- எல்லாவற்றையும் செய்ய நினைத்து ஆழம் இழக்காதிருங்கள் —
  ரோ 12:3-5 ... *மிஞ்சி எண்ணாமல் ... விசுவாச அளவு*

- உங்கள் வரம்பை மீறாதிருங்கள் —
  2 கொரி 10:13,14 ... *மிஞ்சிப் போகாமல்... பகிர்ந்த அளவு*

  உங்களது பிரதான/முதன்மையான அழைப்பு எதுவெனக் கண்டுபிடியுங்கள்.

- ''நான் காணும் தேவையே எனது அழைப்பு''
  — இக்கூற்றிற்கு வரம்பு உண்டு.

எ.கா.) தீப்பற்றியெரியும் ஒரு வீடு
— தீயணைப்பதில் நீங்கள் உதவிவிட்டதால்,
உங்கள் தொழிலே தீயணைப்பதாகிவிடாது.

- எனது பிரதான அழைப்பு —

  ஒரு மிஷனரி இயக்கத் தலைவனாக அல்ல,
  அப்போஸ்தலத் தரிசனத்தோடும் தீர்க்கதரிசனத் தெளிவோடும்
  பணியாற்றும் திருமறைப் போதகனாயிருப்பதே.

  இதற்கே நான் முன்னுரிமை கொடுத்தேன்;
  வேறெதற்காகவும் இதனைத் தியாகம் செய்யவில்லை.

  நாமே இப்படிச் செய்யாவிடில்,
  அதற்குள் நம்மைத் துரத்த தேவன் காரியங்களை நடத்துவார் —

  எ.கா.) மோசே ... *பயந்து* ... ஓடினான் (யாத் 2:15)
  விசுவாசித்து ... விட்டான் (எபி 11:24 25)

- நமது அழைப்பில் மாற்றம் இருக்கக்கூடாதா?
  இருக்கலாம்! எ.கா.) பவுலும் சீலாவும் (அப் 13:1-3)
  உள்ளூர் ஊழியம் → சுற்று ஊழியம்

  ஆனாலும் ''தீர்க்கதரிசி'' எனும் தனது அடிப்படை
  அழைப்பைப் பவுல் நிறைவேற்றிவந்தார் (அப் 15:32)

- ''கவர்ச்சிகர'' ஊழியங்களைத் தொடர்வதில் ஜாக்கிரதை!
  எ.கா.) சுவிசேஷகரராய் மாறும் வேத போதகர்.
  மேய்ப்பராய் மாறும் சுவிசேஷகர்.

2. உங்கள் வளர்ச்சி யாவருக்கும் தெரியட்டும்.

1 தீமோ 4:14,15

- வளர்ச்சி நின்றுபோவதே கிடையாது;
  குறிப்பாகத் திருவசன ஆராய்ச்சியில் —
  2 தீமோ 4:6,7,13 ... வயதான காலத்திலும் பவுல்

  நீங்கள் வளருவதை நிறுத்தினால்,
  பின்மாற்றமடையத் துவங்குவீர்கள்.
  (இரட்சிப்பு ... திருப்தி ... தேக்கம்)
  (Salvation ... Satisfaction ... Stagnation)

தேவனை அதிகமதிகமாய் அறிந்துகொண்டேயிருங்கள் —
1 யோ 2:13அ,14அ
''பிதாக்களே ... நீங்கள் பிதாவை அறிந்திருப்பதால் ...''

- *அடைந்தாயிற்று* என்றல்ல ...தொடர்வது ... *தேறினவர்கள்*
  பிலி 3:12-16
- எதையாவது அறிந்திருக்கிறேனென்று ஒருவன் எண்ணினால் ...
  1 கொரி 8 :2
- புத்தக வாசிப்புப் பழக்கம் —
  பாலூட்டும் புத்தகங்கள் வாசித்தது போதும்;
  புலால் தரும் புத்தகங்களை வாசியுங்கள் (எபி 5:12-14)

3. பிரச்சனைகளை வெற்றியாய்க் கையாளுங்கள்.

நமது ஊழியத்தின் இறுதி நாட்களுக்குள் வர வர
ஏமாற்றமடைதலும் விரக்தியடைதலும் கூடத்தான் செய்யும்.

அவற்றைக் கையாளும் விதம்தான் முக்கியம்.

- தனிமை — 2 தீமோ 4:16 ... *''எல்லாரும் என்னைக் கைவிட்டனர்''*
- தன்னலம் — பிலி 2:19-21 ... *''தீமோத்தேயு போல ஒருவருமில்லை''*
  (உண்மையுள்ள மற்றவரெல்லாம் எங்கே?)
- நன்றியின்மை — எ.கா.) நெகேமியா (நெகே 5:19; 13:14,22,31)
- *உள்ளே பயங்கள், வெளியே போராட்டங்கள்* (2 கொரி 7:5)
- பலவீனங்கள், வியாதிகள், முட்கள்
  (முள் குத்தக் குத்தக் கிருபாசன அனுபவம் கூடும்!)
- உடன் ஊழியரது பார்வையிலும் செயல்பாட்டிலும் வித்தியாசம் —
  இயேசு ... பாடுகள் ... சீடர் ... போட்டி (மாற் 9:31-34)
- சீடர்கள் (பயிற்சியர்கள்) நடுவில் குறைபாடுகள் —
  ''இவன் காரியம் என்ன?'' (யோ 21:19-22)

இவையெல்லாம் ''எதிர்பார்க்கப்பட'' வேண்டும்;
அப்பொழுதுதான் ''அதிர்ச்சி/வியப்பு'' இருக்காது.

சங்கீதங்களைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.
இப்பிரச்னைகளெல்லாம் தாவீதுக்கு இருந்தபடியால்தான்
தனது உணர்வுகளைச் சங்கீதங்களாய் வடித்தான்!

4. புத்துணர்வையும் தாகத்தையும் தக்கவைத்துக்கொள்ளுங்கள்.

தேவ ஊழியன் பேசும், செய்யும், காரியங்களில் புத்துணர்வும்
நறுமணமும் இல்லையேல், மக்கள் அவனைத் தேடமாட்டார்.
இதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் —

- இறைப் பிரசன்னம் — அதைப் பயிற்சியுங்கள் —
  சங் 46:4,5 ... *நதி ... தேவன் ... அதின் நடுவில் ...*
  சந்தோஷிப்பிக்கும் ...
  அப் 2:25,26 ... *சமூகம் ... பேரானந்தம் ...* நாவு
- இளமை — தேவனுக்குமுன் காத்திருப்பதால்
  ஏசா 40:29-31 ... *இளைஞர் ... வாலிபர் ... கழுகுகள்*
- காலத்திற்குப் பொருத்தம் — வாலிபரோடு தொடர்பு.
  அவர்களோடு விளையாடுங்கள்.
  அவர்களோடு விவாதியுங்கள்.
- வைராக்கியம், வாஞ்சை
  அடிமட்டத்தினரோடு தொடர்புகள்.
  O.M. நிறுவனர் ஜார்ஜ் வெர்வர் — கைப்பிரதி விநியோகம்.
  இயேசு அனுப்பினார், ''அத்துடன்'' சென்றார்!
- தியாகவுணர்வு
  பண ஆசை — எல்லாத் தீமைக்கும் வேர்! (1 தீமோ 6:10,11)
  செய்துவிட்ட தியாகத்தில் திருப்தி வேண்டாம்.

5. கிறிஸ்துவின் உடலாகிய சபையோடு நல்லுறவுடனிருங்கள்.

நாம் எவ்வித ஊழியம் செய்தாலும், கிறிஸ்துவின் சபைக்கு எவ்விதம்
உதவுகிறோமெனக் கணித்துக்கொள்ளவேண்டும் —
எபே 4:16 ... *ஒவ்வோர் உறுப்பு ... உடல் வளர்ச்சி*

- சபை சாரா ஊழியச் சங்கங்கள், தனிநபரதோ, கூட்டு முயற்சியோ,
  தங்களைத் தாங்கவே சபைகள் என்றிராது
  சபைகளைச் சேவிக்கவே தாங்கள் என்று செயல்படவேண்டும்.

☐ பதிலானது அல்ல, பக்கபலமானது.
☐ கட்டிடம் அல்ல, சாரம்.
☐ திருச்சபைக்குக் குரல் அல்ல, திருச்சபையின் குரல்.
☐ சபைகள் மிஷனரிகளைத் தத்தெடுப்பவையாயல்ல,
பெற்றெடுக்கவேண்டும்.

"Paraclete" — பரிசுத்த ஆவியானவர் — (Parachurch ministries)
அவர் தம்மை மகிமைப்படுத்தமாட்டார்;
மக்களைத் தம் பக்கம் இழுக்கமாட்டார் (யோ 16:13-15)

- ஏழு சபைகளில் ஒன்றும் கிறிஸ்துவால் கைவிடப்படவில்லை.
- ''அனைத்துச் சபைப்பிரிவுகள்'' என்பதை வலியுறுத்துவதுபோல், ''அனைத்துச் சங்கங்கள்'' என்றும் செயலாற்றவேண்டும். இல்லையேல் நமக்கே தெரியாமல் குழு வெறிக்குப் பலியாகிடுவோம்.
- ஒரு நிறுவனம் விட்டு அடுத்ததைச் சேரலாமா?
சேரலாம், மூச்சு முட்டுதலும் நடத்துதலும் இருந்தால்!
எங்கிருந்தாலும் இலாபம் இறையரசிற்குத்தானே?

எங்கள் ஐக்கியக்குழுவை (FGYMA/BYM) எவராது விட்டுவிலகினால் அவரைப் பெரிய பாவியாய் நான் நினைத்ததுண்டு. என்னே மடமை!
நிரந்தர அர்ப்பணிப்பு நிறுவனத்திற்கல்ல, நிர்மலனுக்கே!

6. உலகிற்கான முழு இறைத்திட்டத்திற்குள் அமைந்துகொள்ளுங்கள்.

- தேவப் பிள்ளைகளில் எவரும் அவருக்குச் செல்லப் பிள்ளை அல்ல. தகுதியற்ற நாம் அவரது இரக்கத்தைப் பெற்றதுதான் விசேஷம். நமது தகுதியின்மையே நமது தகுதி.
உபா 7:6-8 ... *உங்களில் அன்புகூர்ந்ததாலேயே ...*

உலகை ஆசீர்வதிக்கும் வாய்க்காலாயிருக்கவே தெரிந்துகொள்ளப்பட்டோம் —
ஆதி 12:3ஆ — *''உனக்குள் இனங்களெல்லாம் ...''*
எ.கா.) நாம் ஒரு புல்லாங்குழல் —
உலகெனும் கூட்டத்தை மகிழ்விக்க தேவன் அதை ஊதுகிறார்!

- செய்தித்தாள்களையும் பத்திரிக்கைகளையும் வாசியுங்கள். உலகில் நடப்பவற்றிற்கு நாம் அந்நியராயில்லாதிருந்தால்தான் தீர்க்கதரிசன வார்த்தைகள் நம்மிலிருந்து புறப்படும் —

எ.கா.) ஏசாயா (ஏசா 1:1) — நான்கு ராஜாக்கள்

இவர்களில் முதல் ராஜாவின் மரணத்தையடுத்தே தரிசனம் (6:1).
அப்படியே நெகேமியா (நெகே 1:1,2; 2:1), அர்தசஷ்டா ராஜா.
தானியேல் (தானி 1:1; 2:1), நேபுகாத்நேச்சார் ராஜா.

- தேசியவாதம் அல்ல, நாட்டுப்பற்று —
(Not nationalism but patriotism)
எ.கா.) தனது ரோமக் குடியுரிமை குறித்துப் பவுல் பெருமிதம்
அப் 22:27,28 / 16:37,38
- அகிலவுலக நற்செய்திப்பணிக்கான வரைபடம்
ஆதிச் சபையிடமிருந்தது —

அப் 1:8 — மார்க்கத் தலைநகரிலிருந்து அரசியல் தலைநகருக்கு!
உலகம் குறித்த தரிசனம் (World Vision):
''தேவன் இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்''

7. உங்களைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்.

உங்கள் ஊழியத்தை நீங்கள் மகிமையாய் நிறைவேற்ற வேண்டுமானால் தொடர்ந்து கவனிக்கவேண்டியவை —

ஆ) எப்படி வாழ்கிறீர்கள் — ''ஊழியன்'' (The man)
1 கொரி 9:24-27
= ''கண்டபடி'' வாழ்வதல்ல (வச 26);
கட்டுப்பாட்டுடன் வாழ்தல் (வச 27).

ஆ) என்ன பிரசங்கிக்கிறீர்கள் — ''செய்தி'' (The message)
1 தீமோ 4:16

உபதேசத்தில் வழிவிலகாதீர்கள்! மக்கள் விரும்புவதையல்ல, அவர்களுக்குத் தேவையானதைப் பிரசங்கியுங்கள்.

இ) எப்படிக் கட்டுகிறீர்கள் — கட்டிடப் பொருட்கள் (The materials)
1 கொரி 3:10-15

வசனச் சூழமைவு: ஊனியல்புச் சிந்தை / பிறவிக்குணம் (வச 3)
ஆள் சுற்றிக் கூட்டம் (வச 4-6).
இறையரசா சொந்த சாம்ராஜ்யமா?

■ *முடிவுரை*

- நான் சொல்லியவைகளை நினைத்துக்கொள்ளுங்கள்;
  தேவன் உங்களுக்குப் புத்தியைத் தந்தருளுவார் (2 தீமோ 2:7)
- உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்;
  அவர் அப்படியே செய்வார் (1 தெச 5:24)
- உங்களிலும் உங்கள் மூலமாகவும் தேவன் துவங்கியதைக்
  கிறிஸ்துவின் நாள் மட்டும் முடித்துத் தீருவார் (பிலி 1:5)
- கடைசி நாளில்,
  நித்திய வீட்டிற்குள் உங்களை வரவேற்கும் வார்த்தைகள் —

  "நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியனே,
  கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய்;
  அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன்;
  உன் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசி!"
  (மத் 25:21,23)

பிரசங்கிமாருக்கு ஒரு ஜெபப் பாடல்

A Prayer Song for Preachers

("ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்"
என்ற பல்லவியின் மெட்டு)

Spirit *of the living God, pray Thy mind through me;*
Nothing less than Spirit-power do I ask of Thee.
Purge me, urge me, guide me, hide me—
Spirit of the living God, pray Thy mind through me.

Power *of the eternal God, flow Thy power through me;*
Holy, Pentecostal power do I ask of Thee.
Lowly, holy, for Thy glory—
Power of the eternal God, flow Thy power through me.

Mercy *of the living God, channel love through me;*
Nothing less than Calvary love meets the need for me.
Love that's burning, love that's yearning—
Mercy of the living God, channel love through me.

Grace *of God, eternal grace, reach the lost through me;*
Tenderness for every race do I ask of Thee.
Love them, lift them, reach them, teach them—
Grace of God, eternal grace, reach the lost through me.

Life *of God, eternal life, pour Thyself through me;*
Nothing less than Thine own life do I ask of Thee.
Life compelling, life that's telling—
Life of God, eternal life, pour Thyself through me.

—Leonard Ravenhill, 1907-1994

I

146

தேவன் உங்களை அங்கே வைத்திருப்பதேன்?

Why has God kept you there?

முகவுரை

- பணி அல்லது வேலை என்பது தேவாசீர்வாதம்.
  — வீழ்ச்சிக்கு **முன்னர்** மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது (ஆதி 2:8,15).
  — பரலோகில் ‘‘இளைப்பாறுதல்’’ என்றால் சும்மாயிருப்பதல்ல, இறுக்கங்கள் இல்லாது ‘‘சேவை’’ ...
  ‘‘இரவும் பகலும் அவரைச் சேவிப்போம்’’ (வெளி 7:15; 22:3,4)

  30 வயது வரை இயேசு ஒரு தச்சர்;
  3 ஆண்டுகள்தான் அவர் ஒரு டீச்சர்!

- நான் வேலை செய்வதேன்?
  இரு கண்ணோட்டங்கள் —

  (அ) கிறிஸ்தவரல்லாதோர் : வயிற்றுப் பிழைப்பு
  (ஆ) கிறிஸ்தவர் : தேவனது மகிமை

  1 கொரி 10:31 ... *புசித்தாலும் குடித்தாலும் தேவ மகிமைக்காய் ...*
  கொலோ 3:17 ... *வார்த்தை... செய்கை... இயேசுவின் நாமத்தில் ...*
  :23 ... *எதைச் செய்தாலும் ... கர்த்தருக்கென்றே ...*

  கிறிஸ்தவரல்லாதோர் : உடனடித் தேவைகள்
  கிறிஸ்தவர் : முடிவான நோக்கம்

  எ.கா) Dr. ஐடா ஸ்கடர் (1870-1959), நிறுவனர், CMC, வேலூர்
  ‘‘நாம் கட்டிக்கொண்டிருப்பது மருத்துவமனையல்ல;
  தேவனுடைய இராஜ்யம்!’’

  எங்கு பணியாற்றினாலும், உங்களை அங்கு வைத்தவர் தேவனே—

  அந்தச் சூழலை அகமகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுங்கள் —

= *அழைக்கப்பட்ட அழைப்பில்* ***நிலைத்திருங்கள்*** (1 கொரி 7:20-24)
(திரும்பச் சொல்லப்பட்டுள்ளது ... வச 20,24) ... *‘‘கர்த்தருக்குள்’’*

☐ மேலதிகாரி கருணையுள்ளவரோ கடினமானவரோ ...

☐ பணிச்சூழல் வசதியானதோ வசதியற்றதோ ...

☐ ஊதியம் அதிகமோ குறைவோ ...

கொடுக்கப்பட்ட வேலையில் மனப்பூர்வமே
ஆக்கப்பூர்வமான எதையும் சாதிக்கும்.
தேவன் உங்களை அங்கே வைத்துள்ளதற்கு ஏழு காரணங்கள் —

1. பொல்லாத இவ்வுலகில் ''பரிசுத்த வாழ்வு'' (Holiness) சாத்தியம் என்று நீங்கள் காட்டிட

- மதங்கள் ஏராளம், சுவிசேஷம் ஒன்றே.
  உபதேசிகள் ஏராளம், இரட்சகர் ஒருவரே.

எல்லா மதங்களும் நம்மைத் தூய்மைக்கு அழைக்கின்றன;
கிறிஸ்தவத்தில் மட்டுமே நம்மைத் தூய்மையாக்கும் தேவனுண்டு.

அவரது ஆகமங்களுக்குப் பெயர் ''பரிசுத்த'' வேதாகமம்.
அவரது ஆவியானவருக்குப் பெயர் ''பரிசுத்த'' ஆவியானவர்.

பரிசுத்தமென்பது ஆலயம் அல்லது இல்லத்திற்குள் மட்டுமல்ல;
நமது வேலைத்தலத்திலும் காணப்படவேண்டும் (சக 14:20,21)

- இரு குறிப்பான பகுதிகள் — மிக மிக முக்கியமானவை

அ) சொற்கள் (யாக் 3:2 ... *பூரண மனிதன் ... முழுவுடல்)*

பிலி 2:14,15 ... *கோணலும் மாறுபாடுமுள்ள தலைமுறை*
பொய், புரட்டு, கெட்ட வார்த்தை, இரட்டை அர்த்தம் ...

லூக் 4:22 ... *தச்சன் ... கிருபையுள்ள வார்த்தைகள்*

காலை ஜெபம் — சங் 19:14

முதலாவது, *''வார்த்தைகள் ...''*
''பிழைகள், குற்றங்கள்'' ஆகியவற்றிற்கு அடுத்து
(வச 12,13)

எ.கா.) வெஸ்லி காலத்து எழுப்புதல் — சுரங்கத் தொழிலாளிகள்
சபித்தல், சத்தியம்பண்ணுதல் போன்றவற்றை நிறுத்தினர்.

ஆ) பாலியல் (1 கொரி 6:18 ... *வேறெந்தப் பாவமும் ...)*
வேலைத்தலத்தில் யோசேப்பு ... ஆதி 39:11,12
போராட்டம் அல்ல, ஓட்டம் ... 2 தீமோ 2:22
விக்கிரகாராதனை போன்று வெறுக்கப்படவேண்டியது ...
1 கொரி 10:14

2. ஊழல் நிறைந்த இவ்வுலகில் ''நேர்மை'' (Honesty) சாத்தியம் என்று நீங்கள் காட்டிட

- வேலையில் நமது தவறுதல்களை மறைக்கப் பொய்கள்.
  பிறர்மீது பழி சுமத்துதல் ...
  ஆண்மையென்றால்: ''வருந்துகிறேன்'' ... ''நான்தான் தவறு.''

முதலாம் அரசன் (First King) vs. முதன்மையான அரசன் (Best King)

சவுலரசனுக்கும் தாவீதரசனுக்கும் வேறுபாடு —
முதலாம் அரசன் சவுல்:
''பிரதான ஆடுமாடுகளை ***மக்கள்*** *கொண்டுவந்தனர்''*
(1 சாமு 15:9,20,21)

முதன்மையான அரசன் தாவீது :
*''**நான்** பாவம் செய்தேன் ... இந்த ஆடுகள் என்ன செய்தது?''*
(2 சாமு 24:17)

- லஞ்சம்
  வரிக்காரருக்கும் சேவகருக்கும் திருமுழுக்கினன் யோவான் —
  லூக் 3:12-14

  தீர்க்கன் சாமுவேலின் சவால்நிறை சாட்சி —
  1 சாமு 12:3,4,5

  (தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாக நல்மனச்சாட்சி)

- கள்ளக் கணக்கு / வரி ஏய்ப்பு / கருப்புப் பணம்
  ரோ 13:1,2,6,7 ... *யாவருக்கும் செலுத்தவேண்டியவை ...*

- பண ஆசை ... 1 தீமோ 6:6-11
  ''எவ்வளவுதான் போதும்?'' — *போதுமெனும் மனது*

நாம் செய்வது எவ்வேலையாயினும்,
நாம் தேவனையே சேவிக்கிறோம் —
தேவனையும் பணத்தையும் சேவிக்க முடியாது (லூக் 16:13).
அதாவது, பணத்திற்கு அடிமையாகாதிருங்கள்.
நன்மையும் கிருபையும் ***''என்னைத் தொடரும்''*** (சங் 23:6)

3. சோம்பலான இவ்வுலகில் ''கடின உழைப்பு'' (Hard Work) சாத்தியம் என்று நீங்கள் காட்டிட

அதிகச் சோம்பலான நாடுகளில் இந்தியாவும் ஒன்று.
எனவேதான் மேட்னி காட்சிகளில் கூட்டம் அதிகம்,
மேட்னி கதாநாயகர்கள் அரசியல் தலைவர்களாகின்றனர்!

கிரேத்தா தீவு போன்றது இந்தியா (தீத் 1:12);
எனவேதான் தேவன் நம்மை இங்கு வைத்திருக்கிறார் (வச 5)

- நீதி 12:24 ... *ஊக்கமுடைய கைகள் ... சோம்பேறியோ ...*
  14:23 ... *வெட்டிப் பேச்சு* vs. *நல்ல பிரயாசம்*

  (நெருக்கடி காலத்து வாசகம்/Emergency):
  ''பேச்சைக் குறைப்பீர்; வேலையைப் பெருக்குவீர்!''
  நீதிமொழிகள் புத்தகத்தை அடிக்கடி வாசியுங்கள்.

- தாலந்துகளின் உவமை (மத் 25:14-30)
  தாலந்துகள் = திறமைகள், வரங்கள், நுட்பங்கள்

  அவைகளை நாம் புதைக்காது பயன்படுத்திப் பெருக்கிடத் தேவன் விரும்புகிறார்.

  இவ்வுவமைக்கு ஆன்மீக அர்த்தமே கொடுத்துவிடாதீர்கள்.
  மேலதிகாரியைக் குறைகூறி வேலையில் தளராதீர்கள் (வச 24,25)

- கடின உழைப்பு ஓர் ''அப்போஸ்தலப்'' பாரம்பரியம் —
  2 தெச 3:6-12

  மண்ணகத்திற்குப் பயன்படமுடியாத அளவு விண்ணகச் சிந்தையா?!

  தேவன் எப்பொழுதும் வேலைசெய்துகொண்டிருப்பவர் (யோ 5:17).

  சாக்குப்போக்குச் சொல்லிச் சும்மாயிருப்போரை அவர் சகியார் —
  ''நீங்கள் பகல் முழுவதும் சும்மா நிற்கிறதென்ன?'' (மத் 20:6)

  நினைவிலிருத்த: எவ்வேலையும் அடுத்ததைவிட உயர்ந்ததுமல்ல, தாழ்ந்ததுமல்ல.

- வேலை நேரத்தில் இடைவேளை.
  நேரம் தவறாமை (பிந்தி வந்து சீக்கிரம் செல்வோர்!)
  வேலையில் நேர்த்தி ... இன்னும் நன்றாய் ... மேன்மையாய் ...

4. பெருமைக்கார இவ்வுலகில் ''தாழ்மை'' (Humility) சாத்தியம் என்று நீங்கள் காட்டிட

தாழ்மை மறைந்துகொண்டேயிருக்கிறது.
கொடிய நாட்களின் ஓர் அடையாளம் — 2 தீமோ 3:1-4

''வீம்பு ... அகந்தை ... இணக்கமின்மை ... இறுமாப்பு''

நமது கோஷம்: *''சேவை பெற அல்ல, சேவை செய்ய!''*

தாழ்மையாயிருக்கவேண்டுமானால் —

அ) அதிகாரத்தை மதியுங்கள்.

எபே 6:5 ... *கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல் ...*
முரட்டுத் தலைவர்களுக்கும் —
1 பேது 2:18-20 ... *கீழ்ப்படிதல் ... மனச்சாட்சி ...*

சரியான நேரத்தில், சரியான இடத்தில்,
சரியான நபரிடம், சரியான மனதுடன் பிராது கொடுக்கலாம்.

(ஆ) ஆத்திரப்பட்டு எவரையும் நியாயந்தீர்க்காதிருங்கள்.

அவர்களது கலாச்சாரங்கள், மன நிர்ணயங்களை மதியுங்கள்.
ரோ 14:3,4,13 ... *தடுக்கல் ... இடறல் ...*
எக்கலாச்சாரமும் அடுத்ததைவிட உயர்ந்ததல்ல, தாழ்ந்ததல்ல.

(இ) எவரையும் அற்பமாய் எண்ணாதிருங்கள்.

ஒவ்வொருவரும் இறைவனுக்கு அருமையானவர்.
''முட்டாள், அறிவு கெட்டவன்'' என்பதெல்லாம் கூடாது (மத் 5:22)
யாக் 3:8-13 ... *தித்திப்பான நீர் ... கசப்பான நீர் ... நன்னடக்கை ... ஞானத்திற்கேற்ற சாந்தம்*

(ஈ) சாமியார் வேடம் வேண்டாம்!

எ.கா.) *நீங்கள் ஜெபம்பண்ணும்போது* ... (மத் 6:5)
நீங்கள் உபவாசிக்கும்போது ... (:16)

எளியவரோடு பழகுங்கள் (ரோ 12:16).
பாவிகளுக்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் நண்பராகுங்கள்.

5. பிரிந்து கிடக்கும் இவ்வுலகில் ''ஒற்றுமை'' (Harmony) சாத்தியம் என்று நீங்கள் காட்டிட

தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் தொழிற்சங்கங்கள் (Unions) உண்டு, ஒருமனம் (Unity) கிடையாது!

ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் குறைவுபடுவதாலேயே நமது நாட்டின் முன்னேற்றத்தில் வேகமில்லை —

ஒரு குதிரை இழுப்பது 2 டன்கள்;
இரு குதிரைகள் இழுப்பது 23 டன்கள்!

- ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துப் பணியாற்றுதல் —

  ஏசா 41:5-7 ... *சித்திர வேலையாள் ... தட்டான் ...*

  திருச்சபையில் ஒரே உடலின் தத்துவங்களைப் பயிலும் கிறிஸ்தவரே ஒத்துழைப்பை உலகிற்குக் காட்ட முடியும் —
  1 கொரி 12:12-27

  கடினமான நபர்களை ஒதுக்கிவிடாதீர் —

  நீதி 27:17 ... இரும்பை இரும்பு கூர்மையாக்கும்.

  பிரிந்திருத்தல் vs. ஒதுங்கியிருத்தல் (Separation vs.Seclusion)

  சாப்பிடுதல், விளையாடுதல், கடைக்குச் செல்லுதல் ...

  நட்பு vs. ஐக்கியம் (Friendship vs. Fellowship)
  வெளியிலுள்ளோர் vs. உள்ளிருப்போர் (1 கொரி 5:9-13)

  அவிசுவாசியோடு நீங்கள் உடன்பணியாளராயிருந்தாலும் சபை எடுத்துக்கொள்ளப்படும்போது போய்விடுவீர்!
  அச்சம் தவிர்ப்பீர் —
  எ.கா.) வயலில் இருவர்
  திருகலில் இருவர் (லூக் 17:35,36)

- இயேசு: ஓர் இல்லத்தில் நுழைகையில் சமாதானம் கூறுங்கள்.
  அதேபோல்: ஒரு தொழிற்சாலையில் நுழைகையிலும் சமாதானம் கூறுங்கள்!

6. தன்னலமான இவ்வுலகில் ''பிறர்க்குதவுதல்'' (Help) சாத்தியம் என்று நீங்கள் காட்டிட

- இந்தியாவில் வேலையில்லாதோர் வேலையிருப்போரைவிட அதிகம். அநேகருக்குப் போதுமான உணவு வசதி கிடையாது. நமது பொறுப்பு: எபே 4:28 ...*கொடுப்பதற்காக வேலைசெய்து ...*

- கிறிஸ்தவமே தானதர்மம்தான்! — (அத்தியாயம் 113)

  எ.கா.) மனந்திரும்புதல் ... முழுக்கினன் யோவான் (லூக் 3:8-11)

இரட்சிப்பு	... சகேயு (லூக் 19:8,9)
உபவாசம்	... *இதுவா உபவாசம்?* (ஏசா 58:6,7)
ஊழியம்	... *தரித்திரர்க்குச் சுவிசேஷம்* (மத் 11:5)
நியாயத்தீர்ப்பு	... *செம்மறியாடு & வெள்ளாடு* (மத் 25:31-46)

  தானதர்மமே கிறிஸ்தவம் என்றல்ல;
  கிறிஸ்தவமே தானதர்மம்!

- வேலைத்தலத்தில் பலவீனர், திறமை குன்றியோருக்கு உதவுங்கள்.
  இன்றையப் போக்கு: ''வல்லவனே வெல்லுவான்!''

  கரிசனை, கருணை நிறைந்த செயல்கள் தேவனுக்குப் பிரியம்.
  அழகிய தோற்றமில்லாதோரை நண்பராக்குங்கள்.

- நல்ல சமாரியனாயிருங்கள்.

7. பாதகச் சிந்தையுள்ள இவ்வுலகில் ''நம்பிக்கை'' (Hope) சாத்தியம் என்று நீங்கள் அறிவித்திட

- முதல் ஆறு காரணங்களும் ''காட்டிட'' (demonstration);
  இந்த ஏழாவது காரணம் ''அறிவித்திட'' (declaration)!
  1 முதல் 6: வாழ்க்கை
  7: வார்த்தை

  சொல்வதைச் செய்யுங்கள்; செய்வதைச் சொல்லுங்கள்!

  எங்ஙனம்?

  (அ) நாளைக்காய் மக்கள் கவலைப்படுகின்றனர்.
  மத்தேயு 6:25-34ஐ அவர்களுக்குப் போதியுங்கள்.

  (ஆ) அநேகக் காரியங்கள் குறித்து மக்களுக்குக் கலக்கம்.
  ஜெபத்தின் வல்லமையை அவர்களுக்குப் போதியுங்கள் —
  பிலி 4:6,7

  (இ) கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகருங்கள்.
  இயல்பாக, உரையாடலிலேயே, சுவிசேஷத்தைக் கடத்துங்கள்.
  எளிய மொழிநடையில் பேசுங்கள்.

நற்செய்தியைப் பகிரும்போது கூடாதவை —

(அ) பகட்டு வேண்டாம்! Don't brag!

— பிரகாசிக்கவேண்டும், கண்களுக்குக் கூசக்கூடாது.
விளக்கையல்ல, வெளிச்சத்தையே மக்கள்
பார்க்கவேண்டும் (மத் 5:16)

(ஆ) பலவந்தம் வேண்டாம்! Don't nag!

கொலோ 4:5,6 ... உப்பு
— அளவுக்கு மீறாதீர், அருவருக்கப்படுவீர்.

(இ) பின்தங்கல் வேண்டாம்! Don't lag!

— வேலையில் விறுவிறுப்பு, சுறுசுறுப்பு.
கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிராதீர்.

(ஈ) பரிதாபமாயிருக்க வேண்டாம்! Don't sag!

— மகிழ்வுடனிருங்கள்! இது பிறரையும் தொற்றும்.

■ *முடிவுரை*

பொல்லாத உலகு	(Wicked world)
ஊழல் நிறைந்த உலகு	(Corrupt world)
சோம்பலான உலகு	(Lazy world)
பெருமைக்கார உலகு	(Egocentric world)
பிரிந்து கிடக்கும் உலகு	(Divided world)
தன்னல உலகு	(Selfish world)
பாதகச் சிந்தையுள்ள உலகு	(Pessimistic world)

பாபிலோன் நகர் இப்படித்தான் — வெளி 18:2,4,5
பல நூற்றாண்டுகட்கு முன்னர் நான்கு வாலிபரைத்
தேவன் இந்நகரில் அமர்த்தினார்;
தானியேல் புத்தகத்தில் அவர்களது சரிதை நமது ஏழு பாடங்களுக்கு எடுத்துக்காட்டு —

1. பரிசுத்தம் — *தீட்டுப்படுத்தக்கூடாதென்று தீர்மானித்தான்* (1:8)
2. நேர்மை — தானியேலிடம் *குற்றம் ஒன்றுமில்லை* (6:4).
   அரசனது வெகுமதியில் ஆர்வமில்லை (5:17).
3. கடின உழைப்பு — இந்நால்வர் பிறரைவிடப் 10 மடங்குமேல் (1:20)

4. தாழ்மை — மன்னன் நேபுகாத்நேச்சார்:
   ''அகந்தையுள்ளோரைத் தாழ்த்த தேவனால் கூடும்'' (4:37)
5. ஒற்றுமை—தானியேல், நண்பர் & அதிகாரிகள் (2:17,18)
6. உதவி—*''ராஜாவே, சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களை அகற்றிவிடும்''* (4:27)
7. நம்பிக்கை—*மனுஷ குமாரன் ... சகல அதிகாரமும் அவருக்கு ... அழியாத ராஜ்யம்* (7:13,14)

''முடிவென்ன?'' (12:8-10)
அநேகர் சுத்திகரிக்கப்படுவர்!

இதற்காகத்தான் தேவன் உங்களை அங்கே வைத்திருக்கிறார்!
நீங்களே வெளிச்சம் ... நீங்களே உப்பு!

(147 & 148 ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

147

தொழிலகத்தில் தொழுகை

Worship in Workshop

முகவுரை

□ கடந்த கால எழுப்புதல்கள் —

ஜான் வெஸ்லி (1703-1791) சார்லஸ் பின்னி (1792-1875) D.L. மூடி (1837-1899)	ஆயிரமாயிரமாய்த் தொழிலாளர்கள் மனந்திரும்பினர்.

□ வேலையின் கண்ணியம் —

- தேவன் ஒரு தோட்டத்தை ***உண்டாக்கினார்*** (ஆதி 2:8)
- பாவம் நுழையுமுன்பே மனிதனுக்கு வேலை நியமிப்பு (ஆதி 2:15)
- வேதத்தில் பெரிய மனிதரெல்லாம் முழுநேர ஊழியரல்ல —

மோசே	— மேய்ப்பன் + போர்வீரன்
தாவீது	— மேய்ப்பன் + அரசியல் மேதை
தானியேல்	— அரசியல் மேதை
நெகேமியா	— பானபாத்திரக்காரன்
இயேசு	— தச்சர்
பேதுரு, யோவான்	— மீனவர்
பவுல்	— கூடாரத் தொழிலாளி

- அப்போஸ்தலரின் நெருங்கிய நண்பரும் தொழிலாளர்களே —

  தோல் பதனிடும் சீமோனோடு பேதுரு (அப் 9:43).
  கூடாரத் தொழில் செய்துவந்த
  ஆக்கில்லா-பிரிஸ்கில்லாளுடன் பவுல் (அப் 18:3).

  அப்போஸ்தலரது பாரம்பரியம்: *''வேலை செய்யாதவன் சாப்பிடக்கூடாது''* (2 தெச 3:7-10)

□ உலகத் தத்துவம்: ''தொழிலே தொழுகை''
வேதத் தத்துவம்: ''தொழுகையே தொழில்''
தொழிலைத் தொழுகையாக்கணும் (1 கொரி 10:31).
எந்த இடமாயினும் (யோ 4:21).

தொழிலைத் தொழுகையாக்குவது எங்ஙனம்? (Work → Worship)

தானியேலின் வாழ்விலிருந்து படிப்பினைகள் —

1. தேவ திட்டப்படியே அங்கிருக்கிறீர்களென விசுவாசியுங்கள்.

- பன்னாட்டு மிஷனரிப்பணிக்கு அழைப்பு பெற்றா தானியேல் பாபிலோன் சென்றான்?
  இல்லை, சூழ்நிலைகள் அவனை அங்கு எடுத்துச்சென்றன —
  தானி 1:3,4,6 ... *முற்றுகை ... அரண்மனை ...*
- முழுநேரப் பணியாளர், பகுதிநேர உழைப்பாளி என்றெல்லாம் பிரிக்காதீர் —
  தானி 6:20 ... *தேவனுடைய தாசன்!*

  நாமெல்லாரும் தொழிலகங்கள், அலுவலகங்கள், பள்ளிகளில் பணியாற்றும் தேவ தாசர்கள் (= ஊழியர்)
  வெளி 1:6 ... *இராஜாக்கள், ஆசாரியர்கள்*

  வாசியுங்கள்: *"Secular Work is Fulltime Work"* by Larry Peabody

2. தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தூய வாழ்வு நடத்துங்கள்.

- தொழிற்சாலைகளில் பரிசுத்தமாய் இருப்பது கூடாத காரியம் என்று சொல்லாதிருங்கள்.

  தானியேல் இருந்த சூழல் —
  அ) ஜோசியர், சூனியக்காரர் (தானி 2:2 / உபா 18:10-12)
  ஆ) குடிப்பழக்கம், சிலைவணக்கம் (தானி 5:1-4)
  இ) பொறாமையுள்ள உடன்பணியாளர் (தானி 6:4,5)
- தானியேலின் தீர்மானம் —
  தானி 1:8 ... *தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடாதென்று ...*
  அப்படியே, வேலைத்தலத்தில் யோசேப்பு —
  ஆதி 39:11,12,9

  இவ்விதம் தேவனுக்கு உங்களை அர்ப்பணித்திருக்கிறீர்களா?
- உங்கள் நண்பர், உடன்பணியாளர் மீது பழிசுமத்தாதீர் —
  1 கொரி 5:9-12 ... உலகை விட்டு ஓடமுடியுமோ?
  யோ 17:15 ... *உலகை விட்டு அல்ல, உலகில் ...*
  இயேசுவின் ஜெபம்.

1 யோ 5:4,5 ... *விசுவாசத்தினால் வெற்றி*
4:4 ... *உலகத்திலிருப்பவனிலும் உங்களிலிருப்பவர் ...*

3. *உங்கள் வேலையை நேர்மையாய்த் திறன்படச் செய்யுங்கள்.*

- தானியேல் மற்றவர்களைவிடச் சமர்த்தனாயிருந்தான் —
  தானி 1:19,20 ... *பத்து மடங்கு மேல் ...*

பெசலெயேலது நுண்ணிய வேலைக்கு ஞானத்தின் ஆவி —
யாத் 31:1-5
35:30-35

ஞானத்திற்காய்த் தேவனைக் கேளுங்கள் — யாக் 1:5

- சோம்பேறித்தனம் கண்டிக்கப்பட்டுள்ளது —
  நீதி 18:9 ... *அசதி ... அழிப்பவனுக்குச் சகோதரன்*
  மத் 25:26,30 ... *பொல்லாதவன் ... சோம்பேறி ...*
- செய்வினைத் திறன்களில் கிறிஸ்தவர்கள் மேம்படவேண்டும் —
  எதிர்மறை எடுத்துக்காட்டு: 1 சாமு 13:19-21
- வேலை நேரத்தில் அரட்டை —
  நீதி 14:23 ... *வெட்டிப் பேச்சு ... பிரயாசம் ...*
  பிர 9:10 ... குழிக்குள் போன பிறகுதான் வேலை செய்வதை நிறுத்தலாம்!

சத்தியம் பண்ணுதல், கெட்ட வார்த்தை, இவையெல்லாம் வேண்டாம். உங்கள் நாவைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள்.

4. *எல்லா அதிகாரத்திற்கும் கீழ்ப்படியுங்கள்.*

- தானியேலின் சாட்சி —
  தானி 6:22 ... *ராஜாவே, உமக்குமுன் நீதிகேடு செய்யவில்லை*
- புதிய ஏற்பாட்டின் தெளிவான உபதேசம் —
  ரோ 13:1,2,4 ... *தேவனாலன்றி அதிகாரமில்லை*
  எபே 6:5,6 ... *பார்வைக்கு ஊழியம் செய்யாமல் ...*
  1 தீமோ 6:1,2 ... *விசுவாசிகளாகிய அதிகாரிகள்*
  தீத் 2:9,10 ... *எதிர்த்துப் பேசாமல் ...*

- உங்களுக்கிழைக்கப்பட்ட அநீதியைச் சகியுங்கள் —
  1 பேது 2:18-24 ... *அநியாயமாய்ப் பாடுபட்டால் ...*

  எ.கா.) யோசேப்பு — உத்தமப் பணியாளன்

முதல் அடி — சகோதரரைப் பார்க்கத் தந்தை அனுப்பினார் — எகிப்தியரிடம் விற்கப்பட்டான்
இரண்டாம் அடி — போத்திப்பார் — சிறையடைப்பு
மூன்றாம் அடி — பானபாத்திரக்காரன் ஈராண்டுகள் மறந்தான்.

கர்த்தரிடமிருந்தே உயர்வு வரும் —
சங் 75:6,7 ... *கிழக்கிலும் மேற்கிலுமிருந்து ... வராது*
நீதி 22:29 ... *வேலையில் கவனம் ... ராஜாக்களுக்குமுன் ...*
கொலோ 3:22-24 ... *பலனைக் கர்த்தரால் பெறுவீர்கள்*

- உங்கள் மேலதிகாரிகளுக்காய் ஜெபியுங்கள் —
  1 தீமோ 2:1,2 ... *ராஜாக்கள் ... அதிகாரிகள் ... விண்ணப்பங்கள்*

5. *தியான வாழ்வுப் பயிற்சிகளில் தவறாதிருங்கள்.*

- ஜெபம்
  தானி 6:10 ... *மும்முறை:* வேலையைத் துவங்குமுன் ...
  மதிய இடைவேளையின்போது ...
  நாளின் முடிவில் ...
- திருமறைத் தியானம்
  தானி 9:2 — வேத வாசிப்பு அட்டவணை பயன்படுத்துங்கள்.
  ஓய்வு நேரங்களில் வாசிக்கப் புதிய ஏற்பாடு எடுத்துச்செல்லுங்கள்.
- உபவாசமும் தற்பரிசோதனையும்
  தானி 9:3-5,20 ... *உபவாசம் ... ஜெபம் ... பாவ அறிக்கை*
- போதுமெனும் மனதுடனுள்ள தேவபக்தியே மிகுந்த ஆதாயம் —
  தானி 5:17 ... *ராஜாவின் வெகுமானங்கள் ... பரிசுகள்*
  லூக் 3:14 ... *சம்பளமே போதுமென்றிருங்கள் ...*
  1 தீமோ 6:6-11 ... தேவன் கொடுத்துள்ளவற்றில் திருப்திகொள்ளுங்கள்

எதைப் பார்த்தாலும் வாங்க விரும்பும் சோதனைக்குத் தப்புங்கள்!

6. நற்செய்திக்கு நல்ல சாட்சியாய் விளங்குங்கள்.

- தானியேலின் ஜெயம் —

  தானி 6:25-28 ... *தானியேலின் தேவன்*

- நமது பணிகள்தான் விளக்குத்தண்டுகள் —

  மத் 5:14,15 ... *யாவருக்கும் வெளிச்சம் ...*
  பிலி 2:14,15 ... *மாறுபாடுள்ள தலைமுறை ... சுடர்கள் ...*

- இரு ஓரங்கள் தவிர்க்கப்பட வேண்டும்:

  — எவரையும் எந்நேரமாயினும் விட்டுவைப்பதில்லை. இது அவர்களுக்கு வெறுப்புணர்வை உண்டாக்கும்.

  — சாட்சி சொல்ல வாயே திறவாதிருத்தல்.

- சாட்சி வாழ்வை மேம்படுத்துவது எப்படி?

அ) உடன் பணியாளருக்காய்த் தவறாது ஜெபிக்க விசுவாசிகளோடு கூடிவாருங்கள்.

தானி 1:17,18 (பணித்தல ஜெபக் குழுக்கள்)
1 தீமோ 2:1,3,4 ... *எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட ...*
உங்கள் ஜெபங்கள் குறிப்பாயிருக்கட்டும்.

ஆ) உரையாடல் பாணியிலேயே நற்செய்தியைப் பகிருங்கள். பிரசங்கம்பண்ணாதிருங்கள்.

எ.கா.) இயேசு — சமாரியப்பெண் (யோ 4)
பவுல் — சந்தைவெளி (அப் 17:17)

பதற்றம் ஏற்படுத்தாதீர்கள் —

எ.கா.) முகச்சவரம் பண்ணுபவர், கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு, *''நீங்கள் மரிக்க ஆயத்தமா?''* என்று கேட்கலாமா?

மருத்துவமனையிலுள்ள காசநோயாளியிடம், *''நீ சாகவே சாவாய்!''* என்று ஒரு கைப்பிரதி கொடுக்கலாமா?

இ) பிறரிடம், குறிப்பாக எதிர்ப்பவரிடம், மென்மையாயிருங்கள் —

கொலோ 4:5,6 ... *உப்பால் சாரமேற்றப்பட்ட பேச்சு*
1 பேது 3:15 ... *சாந்தத்தோடு பதில் ...*

ஒருபோதும் பொறுமையிழக்காதீர். உங்கள்மீது தேவன் காட்டிய பொறுமையை நினைவுபடுத்துங்கள்.

ஈ) உங்கள் சாட்சியின் வார்த்தைகளுக்கு நிரூபணமாய் வாழ்ந்து காட்டுங்கள் —

தானி 6:4 ... *உண்மை ... குற்றமின்மை ...*
1 பேது 2:11,12 ... *நன்னடக்கை ... நற்செயல் ...*

உ) பணியில் கவனம் குறையாது பார்த்துக்கொள்ளுங்கள் —

தானி 8:26,27 ... *வியாதி ... ராஜாவின் வேலை ...*
1 தெச 4:10-12 ... (இந்நிருபத்தின் எல்லா அத்தியாயங்களும் இரண்டாம் வருகையில் நிறைவு)
2 தெச 3:10-12 ... *வீண் தலையீடு ... ஒழுங்கின்மை ...*

■ *முடிவுரை*

சபை எடுத்துக்கொள்ளப்படும்போது நீங்கள் ஆலய ஆராதனையிலோ ஜெபக் கூட்டத்திலோ இருக்கவேண்டிய அவசியமில்லை!

மத் 24:40,41 ... *வயல் ... சமையலறை ...*

(146 & 148ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்)

148

மண்ணுலகில் விண்ணுலகப்பணி

Heavenly Work on Earth

முகவுரை

நமது வேலைகளைப் பொறுத்தமட்டில், உலகப்பணி, ஆன்மீகப்பணி
என அளவுக்குமீறி வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது —

1 கொரி 10:31 ... *எதைச் செய்தாலும் ... தேவ மகிமை* ...

கிறிஸ்தவ ''ஊழியத்தின்'' (ministry) தத்துவங்கள்
உலக ''வேலைகளுக்கும்'' (works) பொருந்தும்.

ஏசாயா 6இல் ஏசாயாவின் விண்ணகத் தரிசனம் நமது வேலைகளுக்கு நிறைய படிப்பினைகள் தருகிறது.

1. *மேன்மையான வேலை* (Honourable Work)

''சிங்காசனம் ... உயர்ந்தது ... தேவாலயம்'' (ஏசா 6:1)

நான்கு மன்னர் காலத்தில் ஏசாயாவின் பணி (ஏசா 1:1).
இப்பொழுது அவன் இராஜாதி இராஜாவைப் பார்க்கிறான் (6:5).

மீனவன் பேதுரு: *''நாம் இராஜரீக ஆசாரியக்கூட்டம்''* (1 பேது 2:9)

தாழ்வு மனப்பான்மைக்கு இடம் தராதீர்.
ஒரு வேலையும் அடுத்ததைவிட உயர்ந்ததோ குறைந்ததோ அல்ல.
எ.கா.) *கண் → கை:* 1 கொரி 12:20-25

பவுலுக்கு எவ்வளவோ பிரச்னைகள், போராட்டங்கள் இருந்தன;
ஆனாலும் அவர் ''இராஜ தோரணையை'' விடவில்லை —

''நாங்கள் அரசுத் தூதுவர்'' (2 கொரி 5:20)

வேலூர் CMC நிறுவனர், Dr. ஐடா ஸ்கடர் (1870-1959):
''நாங்கள் கட்டிக் கொண்டிருப்பது மருத்துவமனையல்ல,
இறையரசு!''

2. *மறைந்திருக்கும் வேலை* (Hidden Work)

''செட்டைகள் ... முகம் ... பாதங்கள் ... மூடி ...'' (ஏசா 6:2)

இக்காலத்து ஊழியங்களில் பகட்டு, பந்தா, பிரபலம்
இவைதான் அதிகம்.

தேவனோ மறைந்து, அமரிக்கையாய்ப் பணியாற்றுவதை
விரும்புகிறார் —
எ.கா.) மத் 6:1,5,16 ... *தானதர்மம் ... ஜெபம் ... உபவாசம்*

பார்வைக்கு ஊழியம் செய்யாமல் ... (எபே 6:5,6)
எ.கா.) உள்ளுடலுறுப்புகள் மறைந்தே செயல்படுகின்றன!

அமரிக்கையான பணிக்கு ''இங்கு'' பாராட்டு இல்லாதிருக்கலாம்;
ஆனால் ''அங்கு'' பரிசுகள் காத்திருக்கும் (பிர 9:14-17).

3. *துரிதமான வேலை* (Hurried Work)

''பறந்து ... பறந்து ...'' (ஏசா 6:2,6)

துரிதவுணர்வு இன்றி இறைச்சித்தம் செய்வது சாத்தியமன்று —
எபே 5:16,17 ... *காலத்தைப் பயன்படுத்தி ... திருச்சித்தம்* ...

விரைவுடன் உண்மையும் சேர்ந்திருக்கவேண்டும்.
வேகத்துடன் நேர்மையும் காணப்படவேண்டும்.
எந்த வேலையாயினும்!
எ.கா.) 2 நாளா 24:4,5
யோவாஸ் ... 7 வயது அரசன் — என்னே உத்வேகம்!

இயேசு: நான் *சீக்கிரம் முடிக்கவேண்டும்;* இரவு வருகிறது (யோ 9:4)
நான் *சீக்கிரம் வருகிறேன்* (வெளி 22:20)

தள்ளித் தள்ளிப் போடுதலின் தீங்குகளைப் புரிந்துகொள்ளுங்கள்.
துரிதமாய்ச் சிந்திக்கவும் செயல்படவும் மனதையும் உடலையும்
பழக்குவியுங்கள்.
சாத்தானின் முதல் சித்திரம்: விரைவுக்குப் பெயர்பெற்ற *''சர்ப்பம்!''*
சோம்பல், சும்மாயிருத்தல், இவையெல்லாம் ஒழியட்டும்.
துயிலெழுவோர் பொதுவாக நாள் முழுவதும் துரிதமாயிருப்பர்.

4. *ஒற்றுமையான வேலை* (Harmonious Work)

''ஒருவரையொருவர் கூப்பிட்டுச் சொன்னார்கள்'' (ஏசா 6:3)
ஒருங்கிணைந்த செயல்பாடு!
''சேராபீன்கள்'' என்று ஒரு குழுவாய்ப் பணியாற்றினர்.

= நெருப்பானவர்கள் (பரலோக வாசிகள்)

— இவர்கள் அக்கினிக் கொழுந்து போன்ற தேவ தூதர்கள்.
— விரைந்து செல்பவர்கள்.

''கேருபீன்கள்'' — சிங்காசனத்தைச் **சுற்றி** (சங் 99:1; வெளி 4:6)
''சேராபீன்கள்'' — சிங்காசனத்திற்கு **மேல்** (ஏசா 6:2)

எபி 1:7

தேவனது ''ஊழியராக'' நாம் தீக்கதிராய் இருக்கவேண்டும்.
அக்கினியோடு அக்கினி அப்படியே கலந்துவிடும்!
எண்ணெயும் நீரும் போல் உடன் ஊழியர் இருத்தலாகாது.

குழு மனப்பான்மை —

ஏசா 41:6,7 ... ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு
எரே 3:17,18 ... *தன்னிச்சையல்ல, ஏகமாய் ...*
''யூதா வம்சத்தார் இஸ்ரவேல் வம்சத்தாரோடு சேர்ந்து ...''

- ☐ கடினமான நபர்களைத் தேவன் ஒரேயிடத்தில் வைப்பதேன்?
''இரும்பை இரும்பு கூர்மையாக்கும்'' (நீதி 27:17)
எனவேதான் இயேசு ''இரண்டிரண்டு பேராய்'' அனுப்பினார் (லூக் 10:1)
- ☐ யாருக்குப் பாராட்டு கிடைத்தாலென்ன என நினைத்துவிட்டால், அப்பப்பா, எவ்வளவு சாதிக்கலாம்!
- ☐ யார் குத்தினாலென்ன, நெல் அரிசியானால் போதாதா?

5. *பரிசுத்தமான வேலை* (Holy Work)

''பரிசுத்தர் ... பரிசுத்தர் ... பரிசுத்தர்'' (ஏசா 6:3)
''அசுத்த உதடுகள்'' (வச 5)
''அக்கிரமம் நீங்கியது ... பாவம் நிவிர்த்தியானது'' (வச 7)

உண்மை / நேர்மை / ஒளிவுமறைவின்மை
ஊழல்: விளையாட்டுத்துறை / கல்வி நிறுவனங்கள் / மதச் சங்கங்கள் / வியாபாரம் / அரசியல் / ...

''இராஜரீக'' ஆசாரியக் கூட்டம் *''பரிசுத்த'' ஜனம்* (1 பேது 2:9)
எரே 23:5,6 ... *இராஜா ... நீதி ...*

சாத்தானின் பெரும்பான்மையினர்: நீரோட்டம்போல்.
தேவனின் சிறுபான்மையினர்: எதிர் நீச்சல்.

தரம் இழப்பது விரிவாக்கத்தின் ஓர் ஆபத்து —
ஓசி 4:7 ... *பெருக்கம் ... பாவம் ...*

எப்பொழுதும் மனதிற்கொள்ளவேண்டியது —
தேவனுக்கடியில் பணியாற்றுகிறேன்.
''அவர்'' என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

வேலைத்தலங்களில் சோதனைகள் அதிகம் —
எ.கா.) யோசேப்பு (ஆதி 39:11)

6. *மகிழ்ச்சியான வேலை* (Happy/Hilarious Work)

''ஒருவரையொருவர் நோக்கி ... மகிமை!'' (ஏசா 6:3)
''பூவுலகில்'' விண்ணக மகிழ்ச்சி.
பூவுலகில் தீயது நிறைந்திருந்தாலும் —
(அசுத்த உதடுகள் ... கடின இதயம் — வச 10)
நாம் தேவனை ஆனந்தமாய்ச் சேவிக்க விரும்புகிறார்.

பிரச்னைகள் உங்களைப் பிய்த்துவிட இடமளிக்காதீர் —
பாடுகள் வேளையிலும் மகிழ்ந்திருக்கக் கற்றிடுங்கள்.

அப் 20:22-24 ... *கட்டுகள் ... சந்தோஷம் ...*

குடும்பப் பிரச்னைகள் / உடல்நலக் கேடு / பணச் சிக்கல் / முதலியன.
சொல்லுங்கள்: *இது கர்த்தர் உண்டுபண்ணிய நாள் ...* (சங் 118:24)
பிறரது பிரச்னைகள் நமதைவிடப் பெரியவை.

நமது ஆவி தொய்வுறும்போது நமது ஆற்றலும் குறையும் —
நெகே 8:10 ... *மகிழ்ச்சி ... பலம் ...*

7. *ஆவியானவரின் பலத்தில் வேலை* (Holy Spirit Work)

''தேவாலயம் அசைந்தது ... நிறைந்தது'' (ஏசா 6:4)
''தொங்கலாடையால் தேவாலயம் நிறைந்தது'' (வச 1)

(*''புகை''* — நெருப்பு; *''தொங்கல்''* — சால்வை)
தூயாவியானவரின் பலத்தில் அதிகமதிகமாய்ச் சார்ந்திருக்கப் பழகுவோம் —

லூக் 24:46-49 — *''அதுவரை''* என்பது புதுப்பித்தலுக்குமுரியது.

- ☐ உங்கள் படிப்பு / பயிற்சி / திறமை / அனுபவம் — இவற்றிற்குமேல் தேவன்மீது சார்பு (நீதி 3:5,6)
- ☐ வேலைப்பளு அதிகரிக்கும்போது, தேவனிடம் திரும்புங்கள் — இல்லையேல், எரிச்சல்தான்!
- ☐ அனுதின அமைதி வேளையின் முக்கியத்துவம் —
  இயேசுவின் முன்மாதிரி (லூக் 4:14,15; அப் 10:38)
  பெட்ரோல் போடாமல் கார் ஓட்டுவதா?

வேலை கூடினால் ஜெபமும் கூடட்டும் (லூக் 5:15,16)

8. தாழ்மையான வேலை (Humble Work)

''எனக்கு ஐயோ ... நான் அழிந்தேன்'' (ஏசா 6:5)
(5ஆம் அத்தியாயத்தில் பிறர் மீது 5 *''ஐயோக்கள்''* போட்டவர்!)

நிறைவும் வெற்றிகளும் உசியாவைப் பெருமையடையச் செய்தன —
(2 நாளா 26:7,10,14-16)
(லூசிபர் போல — எசேக் 28:17)
உசியா மனம் வேண்டாம்; ஏசாயா மனம் வரட்டும்!

வில்லியம் கேரி: ''நான் செருப்பு செய்பவனல்ல, செப்பனிடுபவன்!''

பணியாளனின் மனத்தாழ்மையே பணியின் மகத்துவத்தை அளக்கும் (ஏசா 66:1,2)

வேலையில் திருப்தி வேறு, மனதில் மேட்டிமை வேறு!
தாழ்மையுள்ளோருக்கே தேவனது *''அதிகக் கிருபை''* (யாக் 4:6)
எதிர்மறையானவை: அகந்தை/அலட்சியம்/அவமரியாதை

9. மனப்பூர்வமான வேலை (Hearty Work)

''இதோ இருக்கிறேன், என்னை அனுப்பும்'' (ஏசா 6:8)

எவ்வேளையிலும் எவ்வேலையிலும்
தன்னார்வம் தளர்ந்துவிடக்கூடாது.

எவ்வேலையும் உங்கள்மீது திணிக்கப்படக் காத்திராதீர்.
(தயார் X தயக்கம்)

''எனக்கு'' என்ன கிடைக்கும் என்று கேட்டு நிற்காதீர்.

உற்சாகத்திற்காய்த் தாவீதுபோல் ஜெபியுங்கள் (சங் 51:12,13)
மன்னன் எசேக்கியாபோல் உழையுங்கள் (2 நாளா 31:21)

ஆண்டவர் இயேசுவே மாபெரும் தன்னார்வலர் (சங் 40:7-10)
பிதாவானவர் குமாரன்மீது எதையும் திணிக்கவில்லை;
எல்லாம் அவர் ''தாமே'' செய்தது (பிலி 2:8)

10. கடினமான வேலை (Hard Work)

கடினமான மக்கள் (ஏசா 6:9-11)
கறையான உதடுகளுள்ளோர் (வச 5)

எ.கா.) தீமோத்தேயுவைப் பவுல் பயிற்றுவித்தது (2 தீமோ 2:3-6)

- ☐ போர்ச் சேவகன் — இரத்தம்
- ☐ விளையாட்டு வீரன் — வியர்வை
- ☐ பயிரிடுபவன் — உழைப்பு

கடின வேலைகளிலிருந்து கழன்றுவிட முயலாதீர்.

நடுவயதில் வரும் தளர்வுகளுக்கு எச்சரிக்கை!
காலேபின் ஆவி உங்களைத் தொற்றட்டும் (யோசு 14:6-12)

உங்களுக்கு வயது நாற்பதாகிவிட்டதா, அல்லது நாற்பதுதானா?

■ *முடிவுரை*

பத்துப் பரிமாணத் திருவாக்கு —
எரே 51:20-23
சர்வ வல்லவர் கையில் சம்மட்டியாவீர்கள்!
''உன்னைக் கொண்டு நொறுக்குவேன்''
அதாவது, தேவனது செயல் & நமது ஒத்துழைப்பு.

ஏசாயாவில் படித்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படுமானால்,
எரேமியாவில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குகள் நிறைவேறும்!

(146 & 147ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

149

பயன் நிறைந்த ஆசிரியர்

Why are Teachers ineffective?

முகவுரை

தலைசிறந்த ஆசிரியருக்குக் குடியரசுத் தலைவரது **விருது**:
(Award) (ஆசிரியர் தினம்: செப் 5)
— ''திறன்'' (Efficiency) அடிப்படையில் கொடுக்கப்படுவது
— வெகு சிலரே அதைப் பெற முடியும்.

தேவனது *வெகுமதி:* (Reward)
— ''பயன்'' (Effectiveness) அடிப்படையில் கொடுக்கப்படுவது
— எவரும் பெற முடியும்.

□ ''திறன்'' ... உற்பத்தியினால் அளக்கப்படுவது — நிறைவேற்றம்
''பயன்'' ... விளைவினால் அளக்கப்படுவது — பெருக்கம்

□ திறமையுள்ளோர் காரியங்களைச் சரியாய்ச் செய்வர்;
பயனுள்ளோர் சரியான காரியங்களைச் செய்வர்.

□ திறமையான ஆசிரியர் மாணவனது அறிவைப் பெருக்குகிறார்;
பயனுள்ள ஆசிரியர் மாணவனது வாழ்வை மாற்றுகிறார்.

□ திறமையான ஆசிரியர் ... பரீட்சை முடிவுகள் முக்கியம்
பயனுள்ள ஆசிரியர் ... சமூகத்தில் தாக்கம் முக்கியம்.

உடனடிப் பயன் (Immediate benefit)
முடிவான ஆசீர்வாதம் (Ultimate blessing)

□ திறமையான ஆசிரியர் சிறந்த மாணவரை உருவாக்குகிறார்;
பயனுள்ள ஆசிரியர் சிறந்த குடிமகன்களை உருவாக்குகிறார்.

□ திறமை என்பது பலத்தைச் சார்ந்தது;
பயன் என்பது குணத்தைச் சாந்தது.

- மருத்துவத் தொழில் — மிகவும் உயர்ந்த பணி!
ஆசிரியர் தொழில் — மிகவும் உருக்கும் பணி!
(யாக் 3:1,2)

டாக்டர் (லத்தீன் மொழி) = ஆசிரியர், போதகர்
= செப்பனிடுபவர்
(உடலை அல்லது உள்ளத்தை)
''டாக்ட்ரின்'' = "doctrine" = போதகம், உபதேசம்

- மாணவர் — கரடுமுரடாய் இருப்பர்;
அல்லது திருக்குமுறுக்காய் இருப்பர்!

''கரடுமுரடு'' — கட்டத் துவங்கலாம்
— கற்றலே அவசியம்.

''திருக்குமுறுக்கு'' — இடித்துத்தான் கட்டணும்
— களைதலும் கற்றலும் தேவை.

- ஆசிரியர் எப்படி ''இருக்கிறார்'' என்பது
அவர் என்ன ''சொல்லுகிறார்'' என்பதிலும் முக்கியம்.

ஒவ்வொரு ஆசிரியரைக் குறித்தும் தேவனது கரிசனை இதுவே
(ரோ 2:21)

பயனுள்ளோராக விரும்பும் ஆசிரியர் களையவேண்டியது —

1. ஏனோதானோ எனும் மனப்பான்மை (Casualness)

கருத்தூன்றல் குறைந்துவரும் காலமிது.
எ.கா.) சுற்றுலா ஆடைகள் அலுவலக ஆடைகளைவிட விலை
எப்படியிருந்தாலென்ன எனும் போக்கு. [அதிகம்.

வீட்டிலும் கடைத்தெருவிலும் அப்படியிருக்கலாம்;
வேலைத்தலத்தில் அது சரியல்ல.

அன்றைய ஆசிரியர்: சூட் (suit).
வேட்டி கட்டினாலும் ஷர்ட்க்கு மேல்தான்!

உடையெல்லாம் அவ்வளவு முக்கியமா?
நடை-உடை-பாவனையில் நடுவில் வருவதென்ன?

கவனக் குறைவு.
முழு மனதின்மை.

பணியில் நம்மை ஊற்றிவிடவேண்டும் —
ப.ஏ. — பிர 9:10 — *''முழு* ***பலத்தோடு*** *செய்!''*
பு.ஏ. — கொலோ 3:24 — *''முழு* ***மனதோடு*** *செய்யுங்கள்!''*

எடுத்துக்காட்டு: கவனம் & ஒழுங்கு — லூக்கா (லூக் 1:1-4)
(இருவரும் எழுத்தாளர்) — யூதா (யூதா 3)

உங்கள் பணியை விரும்பிச் செய்யுங்கள்;
அதுவே உங்களுக்கு இறையழைப்பு என நினைவிற்கொள்ளுங்கள்.

எதையும் ''விருப்பத்தோடு'' செய்தால்தான்,
அதை ''விசையோடு'' செய்யமுடியும்.

வெறும் ''கடமை'' என்று நினைத்தால்,
அது ''கடினம்'' என்றே தோன்றும்.

2. *உள்ளுணர்வின்மை* (Callousness)

லத்தீன் மொழியில், ''தடித்த தோல்!''

கரிசனை, கருணை இல்லாத நிலை.
உணர்ச்சியே இல்லாது, ஆனால் விறுவிறுப்பாய் உழைத்தல்.
வாலிபர், நங்கையர் இதனை எளிதில் கண்டுகொள்வர் —

எ.கா.) எனது பள்ளியாசிரியர்கள் — என்னிடம் நெருக்கமா
யிருந்தனர்; என்னை நேசித்தனர் என்பது எனக்குத் தெரியும்.

(எனது தலைமையாசிரியர் மற்றும் தமிழாசிரியரின் நினைவுக்கே
இந்நூல் அர்ப்பணம்)

அதிமுக்கியமான உணர்வு — *''அன்பு''* (1 கொரி 13:1-3)

எ.கா.) எதையும் செய்யுமுன் தேவனது உணர்வு —
அ) தமது மகனைக் கொடுக்குமுன் — யோ 3:16
ஆ) கிறிஸ்து அற்புதங்கள் செய்யுமுன் — லூக் 7:13,14
இ) மிஷனரி அழைப்பு கொடுக்குமுன் — மத் 9:36,37

அறிவு குறைந்த மாணவருக்குக் கூடுதல் கவனம்
செலுத்துங்கள்; அதுவே தேவனது குணம் (1 கொரி 1:27)

3. *வசதி நாட்டம்* (Convenience)

வசதியாயிருந்தால் மட்டும் எதையும் செய்வது —

தியாகம், கடின உழைப்பு, முன்முயற்சி கிடையாது.

''செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் வேண்டும்''

(2 கொரி 12:15)

— மாணவரிடம் நன்றியுணர்வு இல்லாவிடினும்
நாம் உற்சாகமிழக்கக் கூடாது.

டியூஷன் எடுப்பவர்களைப் பாருங்கள் —
அவர்கள் தியாகம் செய்பவை: ஓய்வு நேரம், குடும்ப நேரம் ...
இவையெல்லாம் கூடுதல் சம்பாத்தியத்திற்காக!

இவ்விதக் கரிசனையை ஆசிரியர் தங்கள் வகுப்புகளிலேயே
காட்டினால் ... !

- வசதியும் சொகுசும் நாடுவோர் எளிதில் புண்படுவர்;
  பிறர் மீது சீறியெழுவர் —

  நமது மாணவ மாணவியரோடு நாம் பொறுமையாய்
  இராவிடில் அவர்களை ஆசீர்வதிக்கவே முடியாது.

- கற்றுக்கொடுப்பதால் மாணவருக்கு ஏதோ தயவு
  பண்ணுகிறீர்களென நினைத்துவிடாதீர் —

  அது உங்கள் பொறுப்பு — (அ) அழைப்பு பெற்றுள்ளீர்கள்.
  (ஆ) சம்பளம் பெறுகிறீர்கள்.

- சோம்பலை ஒழியுங்கள்.
  விறுவிறுப்பாயிருங்கள்.

  (எனது பள்ளி ஆசிரியர்கள் விரைவாய் நடப்பர்;
  நானும் இன்று அப்படித்தான்!)

  காலையில் எழுதலிலிருந்து சுறுசுறுப்பு துவங்கவேண்டும்.

- கடின உழைப்பு உங்களை மேம்படுத்திக்கொண்டேயிருக்கும் —
  உங்கள் திறமைகள் கூர்மையாகும்
  உங்கள் தாலந்துகள் பெருக்கமடையும்.
  — இதுதானே தாலந்துகளின் உவமையின் படிப்பினை?
  (மத் 25:29)

4. *திருப்தியடைந்து விடுதல்* (Complacency)

சுய திருப்தி ... முயற்சியிழப்பு ...
இதுதான் தேக்கத்திற்கு நடத்திவிடும்.

துவக்க உற்சாகத்தைத் தக்கவைத்துக்கொள்ளல் சுலபமல்ல;
ஆனால் அதுதான் பயன் தரும் (எபி 6:11,12)

செய்ததையே செய்வது போரடிக்கத்தான் செய்யும்.
கிரமமான ஜெப தியான வாழ்வு புத்துணர்வுடன் காத்துக்கொள்ளும்.

தினமும் பாடுங்கள்: *''இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்''*
(சங் 118:24)
நினைவிற்கு: *''கர்த்தருக்குக் காத்திருப்போர் ...''* (ஏசா 40:31)

இனிமை, பொறுமை ... இவையெல்லாம் கர்த்தரிடம் வேண்டுங்கள்.

- உற்சாகமுள்ள ஆசிரியர்தான் மாணவருக்கு உயிரூட்டுவர் —
  புன்முறுவல் ... புரிந்துகொள்ளல் ... பாராட்டுதல் ...

☐ இயேசுவானவர் ஓர் உற்சாகமான போதகர்:
இறையரசை விளக்க எத்தனை கதைகள்! —

எ.கா.) மத் 13 & 25

கோதுமை & களை	—	விவசாயம்
புளித்தமாவு & பெண்	—	சமையலறை
நிலத்தில் பொக்கிஷம்	—	காலிமனை விற்பனை
முத்து வியாபாரி	—	வணிகம்
மீன்பிடி வலை	—	மீன்பிடிப்புத் தொழில்
பத்து கன்னியர்	—	திருமணம்
தாலந்துகள்	—	உக்கிராணத்துவம்

☐ நான் கட்டிடப் பொறியியலைத் தெரிந்தெடுத்தது ஏன்?
— கல், செங்கல், மரம், இரும்பு போன்ற கட்டிடப் பொருட்கள்
பாடத்தைப் பேராசிரியர் அவ்வளவு அழகாய்க் கற்பித்தார்!

☐ பிரசங்கமொன்றைத் திரும்பவும் பிரசங்கிக்கும்போதெல்லாம்,
எனது குறிப்புகளை இன்னும் மேம்படுத்துகிறேன்.

பாடக் குறிப்புகளை ஆண்டுதோறும் மேம்படுத்துங்கள்.
செய்தித்தாள்கள் வாசித்து தகவல்கள் சேகரியுங்கள்.
எனது மொழிநயத்தை Dictionary & Thesaurus மூலம்
மேம்படுத்துகிறேன்.

படிப்பதை நிறுத்தும் ஆசிரியர் அதற்குப்பின் ஆசிரியரல்ல!

5. குதர்க்கம் (Crookedness)

இது நமது குணத்தையடுத்தது — ஆன்மீகம் சார்ந்தது.
உலகம் தேடுவது பட்டம் (qualification);
தேவன் நாடுவது குணம் (quality)!

நேர்மையின்மை ... மாய்மாலம் ... பாரபட்சம்

வேலையைத் திறம்படச் செய்கிறோமே,
இவையெல்லாம் இருந்தாலென்ன என்று நினைக்கிறீர்களோ?
கூடவே கூடாது!

நமது விரிவுரையைக் ''கேட்பதைவிட''
நமது வாழ்க்கையை ''வாசித்தே'' மாணவர் அதிகம் கற்கின்றனர் —
(2 கொரி 3:2,3)

உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள் —
(வச 4,5)

ஆசிரியப்பணிக்கு உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்;
உங்களைக் குறித்த எல்லாவற்றையும் நிறைவாக்குவார்
(1 தெச 5:24)

■ *முடிவுரை*

ஏனோதானோ என்றல்ல, கவனம்.	(diligence)
உள்ளுணர்வின்மை அல்ல, அன்பு.	(love)
வசதி நாட்டம் அல்ல, தியாகம்.	(sacrifice)
திருப்தியடைந்துவிடுதல் அல்ல, உற்சாகம்.	(enthusiasm)
குதர்க்கம் அல்ல, உத்தமம்.	(integrity)

150

எடுத்த வேலையை முடிப்பதெப்படி?

How to Finish a Work

முகவுரை

கிறிஸ்தவப்பணியில் நம்மை அதிகமாய் உற்சாகப்படுத்தியுள்ள
விவிலியக் கதாபாத்திரங்களில் ஒருவன் **நெகேமியா**.

நெகேமியா புத்தகம் முழுவதையும் வாசியுங்கள்.
நெகேமியாவைப் பற்றிய குறிப்புகளில் சுவாரஸ்யமானது அவன்
முழுநேர ஊழியனல்ல. (அரசனுக்குப் பானபாத்திரக்காரன்).
— மிகவும் நம்பத்தகு உதவியாளன்

அவன் செய்த **7 திடமான தீர்மானங்கள் —**

1. நான் தேவன் தந்த ''பாரத்தை'' இழக்கமாட்டேன்.

2:1- 3 ... நான் துக்கமாயிராதிருப்பது எப்படி?

பாரம் இல்லையேல் **ஜெபம்** ஏது?

1:4 ... *அழுது ... உபவாசித்து ... மன்றாடி ...*
மத் 9:36-38 ... *மனதுருகி ... வேண்டிக்கொள்ளுங்கள் ...*
ஏசா 53:11 ... *ஆத்தும வருத்தத்தின் பலன்*

2. நான் ''தன்னலமாய்'' இருக்கமாட்டேன்.

1:1,2 ... *அரண்மனை ... எருசலேமின் செய்தியை விசாரித்தேன்*
5:14-18 ... *அதிபதிகள் வாங்கும் படியை வாங்கவில்லை*

தியாகமின்றி முன்னேற்றம் சாத்தியமன்று.
தன்னலமின்மை இன்று அபூர்வமாகிவிட்டது.
— கிறிஸ்தவர்கள் மற்றும் தலைவர்கள் நடுவில்

பிலி 2:20,21 ... *தங்களுக்குரியவற்றையே தேடுகின்றனர்*
3:17-19 ... *அவர்கள் தேவன் வயிறு ...*

பொருளாசையிருக்கும் 3 பகுதிகள் (அப் 20:33)
எ.கா.) யோசு 7:21 ... *சால்வை, வெள்ளி, பொன்*

3. நான் ''வேலையை'' நிறுத்தமாட்டேன்.

4:22,23 ... *ஆயுதங்களைக் களையவில்லை*
3:5 ... *பிரபுக்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை*

அறுவடையின்போது சோம்பல் / தூக்கம் —
நீதி 10:5 ... *அறுவடைக்காலத்தில் தூக்கம் இகழ்ச்சி*

திருப்தியானது தேக்கத்திற்குத்தான் நடத்தும்.
பிதாவும் குமாரனும் வேலைசெய்துகொண்டேயிருக்கின்றனர் —
யோ 5:16,17 ... *என் பிதா இதுவரை ... நானும் ...*

4. நான் ''சமரசம்'' பண்ணமாட்டேன்.

6:3 ... *''நான் இறங்கி வரக்கூடாது.''*

திசைதிருப்ப வரும் சோதனைகளை மேற்கொள்ளுங்கள்.
வழிவிலகல் இன்று ஊழியர் நடுவில் சகஜம்.

அநேகக் கிறிஸ்தவர்கள் தேவையற்ற
அநேகக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றனர்.

அல்லது, எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முயலுகின்றனர்!
அப் 6:2 ... *பந்தி விசாரணை எங்களுக்குரியதல்ல*

மக்களது கற்பனைகளுக்குப் பலியாகாதீர்கள் —
நெகே 6:8 ... *அது உங்கள் மனோ ராஜ்யம்!*
அவர்கள் எதை வேண்டுமானாலும் நினைக்கட்டும்!

5. நான் ''பயப்பட'' மாட்டேன்.

6:11-14 ... *ஓடிப்போவேனோ? பதுங்குவேனோ?*

அபாயமேயில்லாத பாதுகாப்பான ஊழியங்களையே
இன்றையக் கிறிஸ்தவம் நாடுகிறது.
''தேவாலயம் ... தீர்க்கதரிசியானவள் ... தீர்க்கதரிசிகள்''

6. நான் ''பரிசுத்தத்தை'' இழக்கமாட்டேன்.

1:6,7 ... புத்தகத்தின் துவக்கத்தில்
13:23-30 ... புத்தகத்தின் இறுதியில்

பரிசுத்தம் இழந்தால் நாம் பட்டுப்போன மரங்களாகிவிடுவோம்.
இருதயத்தில் தூய்மையைக் கருத்தாய்க் காத்துக்கொள்ளவேண்டும்.

கல்லறைகள் மீது பூ தூவலாம், மெழுகுவர்த்தி கொளுத்தலாம்;
ஆனாலும் அது உள்ளே நாற்றம்தானே?

7. நான் ''பிசினித்தனம்'' பண்ணமாட்டேன்.

10:39 ... *ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லை*
13:10-12 ... *தலைவர்கள் ... யூதர் ...தானியம், திராட்சரசம், எண்ணெய்*

ஊழியராகிய நாம் தாராளமாய்க் கொடுக்கும்வரை
மக்களுக்குச் சவாலிட்டுத் திருப்பணிக்குப்
பணம் சேகரிப்பதில் வெற்றி காண முடியாது —

1 நாளா 29:2-6 ... *தாவீது ... எனக்குச் சொந்தமான பொன், வெள்ளி கொடுக்கிறேன் ... இப்போதும் ... உங்களில் மனப்பூர்வமானவர் யார்?*

இதுவே ஜார்ஜ் முல்லர் (1805-1898) என்ற விசுவாச வீரனின்
ஊழியத் தத்துவமாயிருந்தது.

■ *முடிவுரை*

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஊழியனும் இத்தீர்மானங்களைச் செய்து
அவற்றின்படி நடக்காவிடில் திருச்சபை ஆதிநிலையடைதலோ,
உலகம் நற்செய்திமயமாதலோ வெறும் கனவாகத்தானிருக்கும்.

■

பாடுங்கள்:

ஆவியின் எழுப்புதல் மண் மீதிலே
வாலிபரின் மூலம் இந்நாளிலே
பரவியெங்கும் கனிதரவே
நெகேமியாக்கள் எழுகின்றனர்

இயேசு ராஜன் கட்டளைப்படியே
மாபெரும் பணியைச் செய்கின்றோம்
பெரிய இவ்வேலை விட்டிறங்கமாட்டோம்

ஓனோ பள்ளத்தாக்கினிலே
வீணே பேசி நாள் கழியோம்
இணைந்திடுவோம் நம் இயேசுவிலே
உழைத்திடுவோம் நம் பரமனுக்காய்

— *K. பொன்ராஜ் ஐசக்*

151

தேவ இரக்கமும் மனித உறவுகளும்

Divine Mercy & Human Relationships

முகவுரை

- திருமறையில் அடிக்கடி சொல்லப்படும் தேவனது குணம் —
  ''அவர் கிருபை (இரக்கம்) என்றுமுள்ளது''
  சங்கீதம் 136இல் 26 முறை (**A** முதல் **Z** வரை!)
  வேதத்தின் மற்ற இடங்களில் ... 11 முறை.
  ஆக மொத்தம் 37 முறை!
- தேவ இரக்கம் பெற **ஒரே** நிபந்தனை —
  மத் 5:7 ... *இரக்கமுடையோர் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.*

இந்நிபந்தனை எவ்வளவு கண்டிப்பானது பாருங்கள் —

2 சாமு 22:26 ... *தயையுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராய்த் தோன்றுவீர் ...*
மாறுபாடானவனுக்கு மாறுபடுகிறவராய் ...
(சங் 18:25,26ஐயும் பாருங்கள்.)

தீர்க்கன் மீகா விடும் சவால் —

மீகா 6:8 ... *இரக்கத்தைச் சிநேகிப்பதை அல்லாமல் வேறே எதைக் கர்த்தர் உன்னிடம் கேட்கிறார்?*

ஒருவருக்கொருவர் இரக்கமாயிருப்பது எப்படி?

1. எல்லாக் கசப்பையும் களைந்துவிடுங்கள்.

□ எபி 12:14,15 ... *சமாதானம் ... கசப்பான வேர் ...*
இல்லையேல் *தேவனது ''கிருபையை''* இழப்போம்.

நாம் *''கிருபா பாத்திரங்களாய்''* இருக்கவே
தேவன் நம்மை அழைத்திருக்கிறார் (ரோ 9:23,24)
— பிறரை நாம் ஆசீர்வதிக்கவே (சங் 67:1,2)

□ இதயத்தில் கோபம் தங்குமானால், அது கசப்பாகும் —
எபே 4:26,27 ... *அஸ்தமனத்திற்குமுன் ...*

கோபத்தை அடக்குவது எப்படி?

படுக்கையில் நிதானமாய்ச் சிந்தியுங்கள் — (சங் 4:4)

அந்த நபரும் ஒரு மனிதர்தானே என்றெண்ணுங்கள்!

எ.கா.) *''என் ஆவி என்றும் போராடுவதில்லை ... மாம்சம்தானே!''*

தேவனது கோபம் கொஞ்சக்காலம்தான் (ஆதி 6:3; சங் 30:5)

கோபம் → கசப்பு → பழிவாங்குதல்

ரோ 12:16-21

□ எவ்வளவாய்த் தேவன் நம்மை மன்னித்திருக்கிறார் —

மத் 18:23-35 ... *இலட்சங்கள் ... நூறுகள் ...*

(இரக்கமுள்ள பிரதான ஆசாரியர் — எபி 2:17,18; 4:15,16)

நாம் இரக்கம் காட்டாவிடில், இரக்கம் பெறமாட்டோம் —

யாக் 2:12,13 ... *நீதித் தீர்ப்புக்குமுன் இரக்கம் பெருமிதம்*

□ அடுத்தவர் மீது எத்தனையோ தவறுகள் இருக்கலாம் —

இருந்தாலென்ன?

கொலோ 3:12,13 ... *குறைபாடு உண்டானால் ...*

இனியவரிடம் இனிமையாயிருப்பது பெரிய காரியமா? —

லூக் 6:32-36 ... *தீயோரும் அப்படியிருப்பாரே!*

உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருப்பதுபோல் ...

இதை நடைமுறைப்படுத்துவது எங்ஙனம்?

— தேவனிடம் உதவி நாடுங்கள்.

அவரது அன்பு உங்களில் ஊற்றப்பட வேண்டுங்கள்.

— குற்றங்களை மறந்துவிட முயலுங்கள்.

அதையே நினைத்துக்கொண்டிராதிருங்கள்.

— நல்லது எதையாவது செய்துவிடுங்கள்.

2. தன்னலத்தை முற்றிலும் துறந்துவிடுங்கள்.

□ யாக் 3:16 ... *தன்னலம் ... பொறாமை ...*

அதாவது, எனக்கு வேண்டும் — அடுத்தவருக்கு வேண்டாம்!

இரட்டைத் தீங்கு!

எல்லாவிதக் *''கலகத்திற்கும்''* காரணம் —

நிவாரணம்: வச 17,18 ... *''நிறைவான **இரக்கம்**''*

நீங்கள் ''கெட்டிக்காரர்'' என மார்தட்டவேண்டாம் —

அது *''பேய்த்தன ஞானமாய்''* இருக்கலாம் (வச 15)

இருவகை ஞானம்: மேலிருந்து வருவது.

கீழிருந்து தோன்றுவது.

லூசிபருக்கு இல்லாத ஞானமா? — கவனம்!

— தேவ இரக்கத்தின் அடிப்படையிலேயே பவுல்

தன்னலமின்மையை ஊக்குவிக்கிறார்

பிலி 2:1 ... *தேவ இரக்கங்கள்*

:3,4 ... *தனக்கானவை ... பிறருக்கானவை ...*

பிறர்க்கு முன்னுரிமை தாருங்கள் —

ரோ 12:10 ... *கனம்பண்ணுவதில் முந்துங்கள்*

— ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்திடுங்கள் ...

கலா 6:5 ... அன்றாடக வேலைகள், கடமைகள்

:2 ... அசாதாரணப் பளு

திடனற்றவரைத் தேற்றுங்கள் — 1 தெச 5:14

— சுய பரிதாபத்தில் அமிழ்ந்துவிடாதீர்

2 கொரி 1:3,4 ... *இரக்கங்களின் பிதா ...*

நமக்கு ஆறுதல் ... பிறர்க்கு ஆறுதல் ...

அன்புடன் விசாரியுங்கள்.

— பிறரது பிரச்னைகளைக் கதை பேசாதீர்கள் —

நமது குடும்பம் மற்றும் பிள்ளைகள் பிரச்னைகளை

மூடி மறைக்கிறோமே!

''இரகசியம்'' காக்காவிடில்,

எவருக்கும் ஆலோசனையோ ஆதரவோ தரமுடியாது.

— பிறர் உங்களை ஊக்குவிக்கவில்லை என்பதால் நீங்கள்

மற்றவர்களை ஊக்குவிப்பதை நிறுத்தக்கூடாது:

பிறர் உங்களுக்குச் செய்ய விரும்புவதை

அவர்களுக்குச் செய்யுங்கள்.

''பக்திவிருத்தி'' என்று பிரசங்கிக்காதீர்; ஊக்குவியுங்கள்

(1 தெச 5:11)

''மரணம்'' போன்ற பிரச்னைகளுக்கு நிவாரணம் கிடையாது'' —
மறுவருகை மற்றும் எதிர்காலம் குறித்த
''வார்த்தைகளால் தேற்றுங்கள்'' (1 தெச 4:18)

3. பணியாற்றவே தலைவராயிருங்கள்.

— மத் 20:25-28 ... *புறவினத்தார் போலல்ல ... ''பணிவிடை''*
வசனச் சூழமைவு: பதவி நாட்டம் (வச 20,21,24)
— தொண்டாற்றும் தலைமைத்துவம் ஒருவருக்கொருவர் அடிபணியும்
பவுல்: எபே 5:21 ... *''தேவ பயத்தோடு''*
பேதுரு: 1 பேது 5:5 ... மூப்பர் & இளைஞர்

— தேவ **இரக்கத்தைப்** புரிதலே நல்ல தலைவனை உருவாக்கும்
நீதி 20:28 ... *ராஜா ... தயவு ... சிங்காசனம்*
ஏசா 16:5 ... *கிருபையினால் சிங்காசனம்*

இது சமரசம் அல்ல: *''கிருபை''* அத்துடன் *''சத்தியம்.''*
ஆனால் முதலாவது, கிருபை/இரக்கம் ...
சங் 85:10; 89:14
நீதி 16:6

சட்டம் பேசாமல்
கண்டிப்பாயிருப்பது சாத்தியமா?

அதிகாரத் தோரணையில்லாமல்
ஆன்மீகத் தலைமைத்துவம் சாத்தியமா?

இதற்கு விடை: ''தேவனது இரக்கம்''
யாத் 25:21 ... உடன்படிக்கைப் பெட்டிக்கு ''உள்ளே'' பிரமாணம்
உடன்படிக்கைப் பெட்டிக்கு ''மேலே'' கிருபாசனம்
இதைப் பிரித்துவிட்டால் மக்களுக்குச் சாவுதான்!

பழைய ஏற்பாட்டிலேயே இப்படியென்றால்,
புதிய ஏற்பாட்டில்?
எபி 8:10,12 ... *எனது பிரமாணங்கள் ... இரக்கமாயிருப்பேன்*
— அறிவுறுத்தலும் ''ஒருவருக்கொருவர்'' என்றிருக்கவேண்டும் ...
ரோ 15:14 ... *ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்*
கொலோ 3:16 ... *ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு*

ஒருவன் ஒழுங்கீனமாய் நடந்தாலும்,
அவனைச் ''சத்துருவாய்'' அல்ல, ''சகோதரனாய்''
நடத்தவேண்டும் ...
2 தெச 3:14,15

— எவரையும் அவசரப்பட்டுக் கழித்துக்கட்டிவிடாதீர்கள்.
எ.கா.) இரக்கமுள்ள கப்பலோட்டிகள் ...
யோனாமீது சீட்டு விழுந்த பின்பும் (யோனா 1:7-13)

நம்மில் சிறந்தவரிடமும் கேடுண்டு;
கேடானவரிடமும் சிறப்புண்டு;
எனவே அவசரப்பட்டுத் தீர்த்துக்கட்டாதீர்.

4. ஒருமனமின்மையை ஒழித்திடுங்கள்.

□ தேவனது *''இரக்கங்களின்''* அடிப்படையிலேயே
பவுல் ஒருமனம் நாடினார் — பிலி 2:1,2

அதாவது, தேவனைப்போல் இரக்கம், கருணை
நிறைந்திருக்கும்போது நாம் கூடி வாழ்வது சாத்தியமாகிறது.

□ உண்மையான எழுப்புதலை
ஆன்மீக ஒருமனப்பாட்டிலிருந்து பிரிக்கமுடியாது —
எ.கா.) எசேக் 37 ... *உலர்ந்த எலும்புகள்*
முதல் விளைவே ஒன்று சேர்தல்தான்.
யூதாவும் யோசேப்பும் இணைக்கப்படுகின்றனர் (வச 16-22)

□ இரு கிறிஸ்தவ ஊழியர்கூட இணைந்தியங்குவது இன்று
குதிரைக் கொம்பாகிவிட்டது.

ஆன்மீகக் கண்ணோட்டமுள்ளோரே மோதிக்கொள்ளும்
ஊழியருக்கு உதவ முடியும் —
எ.கா.) பிலி 4:2-5 ... *இச்சகோதரிகளுக்கு உதவு.*
இங்கு *''சாந்தகுணம்''* வலியுறுத்தப்படுகிறது.
சாந்தகுணம் = கனிவு, சகிப்பு
= இரக்கம்

இரக்கமும் (கிருபை) *''சமாதானமும்''* இணைந்து செல்லும் —
கலா 6:16 ... *''சமாதானமும் இரக்கமும்''*
யாக் 3:17,18 ... *சமாதானம் விதைப்போர்*

நிருபங்களின் துவக்க வாழ்த்துவரிகளில் காணப்படுவது —
''கிருபையும் சமாதானமும்''

5. ஒருவரையொருவர் மனமார வாழ்த்துங்கள்.

□ ஒருவரையொருவர் வாழ்த்துவதின் முக்கியத்துவம் —
ரோ 16:3-16 ... *''வாழ்த்துங்கள்''* ... 17 முறை !

எலிசபெத்தை மரியாள் வாழ்த்தியபோது, கருவாயிருந்த யோவான் களிப்பாய்த் துள்ளினான்! —
(லூக் 1:39-44)

— ஆசாபாசமான கைகுலுக்கல்
— முகமலர்ந்த புன்னகை
— அன்பொழுகும் பார்வை
— நேச அரவணைப்பு
— பரிசுத்த முத்தம்

தங்கள் நிருபங்களை வாசித்தோரை வாழ்த்தியதோடு,
அவர்கள் பிறரையும் வாழ்த்த அப்போஸ்தலர் ஊக்குவித்தனர் —
2 கொரி 13:12 / 1 பேது 5:14

□ காலை வந்தனம் — Good morning!
புல 3:22,23 ... *இரக்கங்கள் ... காலைதோறும் புதியவை*

□ மக்களை வார்த்தைகளால் ஆசீர்வதியுங்கள் —
பாராட்டு
மெச்சுதல்
ஊக்குவிப்பு
நம்பிக்கையூட்டுதல்

மரியாளைத் தூதன் *வாழ்த்தினான்* (லூக் 1:28) ... *''வாழ்க!''*
சீடரை இயேசு *வாழ்த்தினார்* (மத் 28:9) ... *''வாழ்க!''*

□ பிறரை ஆசீர்வதிக்கும்போது உங்களுக்கு நல்ல நாட்கள்!
1 பேது 3:8-10
மன இறுக்கம், இரத்த அழுத்தம் குறையும்!

152

சொற்களும் சகவுறவுகளும்
Words & Relationships

முகவுரை

செயல்களைவிடச் சொற்களே சகவுறவுகளில் முக்கிய இடம் வகிக்கின்றன.

— பழிக்கும் சொற்கள் கூடாதென்றார் இயேசு (மத் 5:22)
— நாவைச் சரியாய்ப் பயன்படுத்தப் பேதுரு அழைக்கிறார் (1 பேது 3:10)
— பக்திவிருத்தியான சொற்களைப் பவுல் ஊக்குவிக்கிறார் (எபே 4:29,31)
— சொல் தவறாதிருக்க யாக்கோபு அறிவுறுத்துகிறார் (யாக் 1:19; 3:1-12)

- Readers Digestஇன் 1988 மார்ச் மாத வெளியீட்டில் David Weiss என்பவர் சகவுறவுகளைச் சொற்களால் மேம்படுத்த 7 வழிமுறைகளைத் தந்துள்ளார்.

அவற்றைத் திருமறையின் வெளிச்சத்தில் பார்ப்போம் —

1. அதிமுக்கியமான ''ஆறு'' சொற்கள்:

"I – admit – I – made – a – mistake."

''நான்-செய்தது-தவறு-என்று-நான்-ஒத்துக்கொள்கிறேன்''
கதைவிடுவதைவிட உண்மை பேசுவதே எளிது!
தவற்றை ஒத்துக்கொள்வதுதான் ஆண்மை!

- சங்கீதக்காரனின் சவால் —
  சங் 19:12 ... *தன் பிழைகளை உணருகிறவன் யார்?*
- மறந்துவிட்டதை ஒத்துக்கொண்ட ஒருவன் —
  ஆதி 41:19 ... *என் குற்றம் இன்றுதான் நினைவில் வந்தது* (40:13,14,23)
- நாம் தவறவே மாட்டோம் என்றெண்ணுவது அகம்பாவம் —
  யாக் 3:2...*நாமெல்லாரும் அநேகக் காரியங்களில் தவறுகிறோம்*
- இக்கட்டான சூழலுக்குள் வரும் ஆரோக்கியம் —
  யாக் 5:16 ... *குற்றங்களை அறிக்கையிட்டு ... ஜெபியுங்கள்*

2. அதிமுக்கியமான ''ஐந்து'' சொற்கள்:

"You – did – a – good – job"
''நீங்கள்-இந்த-வேலையை-நன்றாய்ச்-செய்திருக்கிறீர்கள்.''
பிறரைப் பாராட்ட நம்மைத் தடுப்பது பெருமை.

- பிறரிடம் எதிர்பார்ப்பதை அவர்களுக்குச் செய்யுங்கள் (லூக் 6:31)
- லூக் 16:8 ... தனது உக்கிராணக்காரனைப் பாராட்டிய செல்வந்தன்
- மத் 25:21,23 ... *நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியனே!* இப்படித்தான் நாம் ஒருவரையொருவர் தட்டிக்கொடுக்கவேண்டும்.

3. அதிமுக்கியமான ''நான்கு'' சொற்கள்:

"What – is – your – opinion?"
''இதில்-உங்கள்-கருத்து-என்ன?''

- எல்லாம் தெரியும் என்ற எண்ணம் ஆபத்து (1 கொரி 8:2)
- கலந்துரையாடி ஆலோசனை பெறுவதின் நலன்கள் —

நீதி 11:14 ... *சுகம் ... பாதுகாப்பு*
15:22 ... *திட்டங்களில் வெற்றி*
24:6 ... *போராட்டங்களில் வெற்றி*

இயேசுவானவரே தமது சீடரிடம் கலந்தாலோசித்தார் —
மத் 17:25 ... *சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது?*

4. அதிமுக்கியமான ''மூன்று'' சொற்கள்:

"If – you – please ... " ''உங்களுக்கு-இது-விருப்பமானால் ...''
முரட்டுத்தனம் வேண்டாம்; இனிமையாயிருங்கள்.

- உங்கள் கருத்துக்களைப் பிறர்மீது திணிக்காதிருங்கள் —
  ரோ 15:2 ... *பிறர்க்குப் பிரியமாய் நடந்துகொள்ளுங்கள்*
  1 கொரி 10:33 ... *எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறேன்*

5. அதிமுக்கியமான ''இரண்டு'' சொற்கள்:

"Thank – you" ''மிக்க-நன்றி''

இதைத் தேவனே எதிர்பார்க்கிறாரே!

கண்ட மனிதருக்கு நன்றி கூறாதவன்,
காணாத தேவனுக்கு எப்படி நன்றி கூறுவான்?

மனதில் நன்றியுணர்வு இருந்தால் போதாது;
அதை வெளிச் சொல்லவேண்டும் (லூக் 6:45) —

கொலோ 3:15 ... *நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள்*
2 தீமோ 3:1,2 ... *கொடிய காலம் ... நன்றியறியாதவர்*

6. அதிமுக்கியமான ''ஒரு'' சொல்:

"We" ''நாம்''

- 1 கொரி 3:6-9 ... *நாம் தேவனது உடன் வேலையாட்கள் ... செடி நடுபவர் ... நீர் ஊற்றுபவர்*
- அதிவுன்னத எடுத்துக்காட்டு —
  யோ 14:23 ... *என் பிதாவும் நானும் ... நாங்கள் ...*

7. படு மோசமான சொல்:

"I" ''நான்''

- திருமுழுக்கினன் யோவானின் விருப்பம்:
  யோ 3:30,31 ... *நான் சிறுகணும்*
- யோவானைப் பற்றிய இயேசுவின் சாட்சி:
  மத் 11:11 ... *அவனைவிடப் பெரியவனில்லை*
- ''நான் என்ன சொல்லுகிறேன் என்றால் ...'' என்று அடிக்கடி சொல்வதைக் குழுவுரையாடல்களில் தவிர்த்திடுங்கள்.
- *''தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்''*
  இது இயேசுவானவர் அடிக்கடி சொன்னது —
  மத் 23:12; லூக் 14:11; 18:14

153

குழுவுரையாடல்களுக்கு ஆலோசனைகள்

Guidelines for Group Discussions

1. பூர்வ பாதைகளை நினைவுபடுத்துங்கள்.

(Remember the old ways.)

பூர்வ பாதைகள் ... விசாரியுங்கள் ... எரே 6:16
நாம் நேற்றுதான் உண்டானவர்கள் ... யோபு 8:8,9
யோசேப்பை அறியா பார்வோன் ... யாத் 1:8/அப் 7:18/நியா 2:10

2. ஆன்மீகக் கண்ணோட்டம் கொள்ளுங்கள்.

(Retain spiritual perception.)

இயல்பான மனித சிந்தனை ... 1 கொரி 2:14
வெறும் *எழுத்து கொல்லும்* ... 2 கொரி 3:6
நிருபங்கள் மையினால் அல்ல ... 2 கொரி 3:3
மோசேயின் ஆகமங்கள் வாசிக்கும்போது ... 2 கொரி 3:15-17

3. தீர்க்கதரிசனப் பார்வையை மதியுங்கள்.

(Respect the prophetic.)

எருசலேம் சங்கம் ... அப் 15:13-22
ஞான வசனம், அறிவுணர்த்தும் வசனம், தீர்க்கதரிசனம்,
ஆவிகளைப் பகுத்தறிதல் ஆகிய வரங்கள் (1 கொரி 12:7-10) —
''விரும்புங்கள் ... நாடுங்கள்'' (14:1)
தூயாவியானவரின் நடத்துதல்.

4. எல்லாரையும் சமமாய் நடத்துங்கள்.

(Regard everyone equally.)

சிலரிடம் கனிவு ... சிலரிடம் கண்டிப்பு ... இப்படி வேண்டாம்
1 தீமோ 5:21,22 ... *பாரபட்சம்* ... பாகுபாடு

தீர்த்துக்கட்டாமல் கட்டியெழுப்பும் நோக்கோடு
சீர்திருத்துங்கள் ... கலா 6:1-5 *(பாரம் ... சுமை)*

எ.கா.) பாதம் கழுவுதல் — தண்ணீர் அதிகச் சூடு, அதிகக் குளிர் கூடாது.
பாதங்களைத் துடைக்க மறவாதீர்.
''ஒருவருக்கொருவர்'' பாதம் கழுவுங்கள் (யோ 13:14,15) —
நம்மைத் திருத்திக்கொள்ள ஆயத்தமில்லையென்றால்,
பிறரைத் திருத்த நமக்கு உரிமை கிடையாது.

5. மாற்றங்களை எதிர்க்காதிருங்கள்.

(Resist not change.)

புதிய ரசம், புதிய துருத்தி ... மத் 9:17
இதோ, புதிய காரியம் செய்கிறேன் ... ஏசா 43:19
பழைய கருத்துக்களில் மாற்றம் ... *''திராட்சைக் காய்கள்''*
யாத் 20:5,6; எசேக் 18:1-3

6. உணர்ச்சிவசப்பட்டுக் கொதிக்காதிருங்கள்.

(Restrain emotional outbursts.)

கேட்கத் தீவிரம் ... பேசத் தாமதம் ...
மனிதனின் கோபம் ... தேவ நீதி ... யாக் 1:19-20
கலந்துரையாடலில் கூடுதல் வெப்பம் அல்ல,
வெளிச்சம் உண்டாகட்டும்!

7. தேவைப்பட்டால் ஒத்திப்போடுங்கள்.

(Relax to postpone if necessary.)

இன்னும் வேளை வரவில்லை ... யோ 7:2-9
இப்பொழுது ஏற்கும் திறனில்லை ... யோ 16:12

154

பாபேல் தரும் பாடங்கள்

Lessons from Babel

ஆதியாகமம் 11இலுள்ள பாபேல் சம்பவம்
கிறிஸ்தவ ஊழியருக்குச் சிறப்பான படிப்பினைகள் தருகிறது —

1. மாற்றுக்களை நாடாதீர். (Substitutes)

வச 3, ... *''கல்லுக்குப் பதில் செங்கல் ...*
சாந்துக்குப் பதில் நிலக்கீல்''

எதற்கெடுத்தாலும் மாற்றுக்கள் உள்ள காலமிது —

சர்க்கரைக்குப் பதில் சாக்கரின்.
பழ ரசத்திற்குப் பதில் பழ வாசனை.
மரத்திற்குப் பதில் பிளாஸ்டிக்.

கிறிஸ்தவ உலகில், *திருவசனத்திற்குப் பதில் பாரம்பரியங்கள்* (மாற் 7:8,9)

இன்றையப் போக்கு: குறைந்த முயற்சி, நிறைய இலாபம்;
அதிசீக்கிர விளைவுகள்

தேவனோ அவ்விதம் செயல்படுவதில்லை.

''மரம், புல், வைக்கோல்'' வைத்துக் கட்டுவது
''பொன், வெள்ளி, விலையுயர் கற்கள்'' வைத்துக் கட்டுவதைவிட
வேகமாயிருக்கலாம்; ஆனால் *அக்கினிப் பரிசோதனை* உண்டே —
1 கொரி 3:12,13

2. பேரும் புகழும் தேடாதீர். (Name or fame)

வச 4, *''நமக்குப் பெயருண்டாக்க ஒரு நகரம்''*

அடுத்த அத்தியாயத்திலேயே ஆபிரகாமுக்குத் தேவன்
கொடுத்த வாக்குடன் ஒப்பிடுங்கள் —
''நான்'' உன் பெயரைப் பெருமைப்படுத்துவேன் (ஆதி 12:2)

தேவனது கண்டிப்பு:
எரே 45:5 ... *''உனக்குப்'' பெரிய காரியங்கள் தேடுகிறாயோ?*
தேடாதே!

''தேவனுக்காய்ப்'' பெரிய காரியங்களை முயற்சியுங்கள்!

இன்றையப் போக்கு: பட்டங்கள், படங்கள், பெயர்கள், ...

இயேசுவின் எச்சரிப்பு:
லூக் 11:43 ... *ஆசனங்கள் ... வந்தனங்கள் ... ஐயோ*
14:11 ... *தன்னையே உயர்த்துபவன் தாழ்த்தப்படுவான்*

இயேசுவின் மாதிரி:
பிலி 2:5-9 ... *தம்மைத்தாமே வெறுமையாக்கி ...*
தாழ்த்தி ... அடிமையின் ரூபம் ...

கதாநாயக வணக்கம் வேண்டாம் —
1 கொரி 3:3-5 ... *பவுலின் ஆள் ... அப்பொல்லோவின் ஆள்*

3. பிரமாண்டத்தைக் குறியாக்காதீர். (Bigness)

வச 4, *''வானத்தை அளாவும் சிகரமுள்ள கோபுரம்''*

பிரமாண்டத்தைப் புகழுக்குரியது என்று சொல்லமுடியாது.
பிரமாண்டமே நமது குறியாயிருந்தால்,
''சிறு காரியங்களில்'' உண்மையாயிருக்கத் தவறிவிடுவோம் —
(மத் 25:21,23)
லஞ்சம், கள்ளக் கணக்கு, மிகைப்படுத்துதல், முதலியன.

லூக் 12:32 ... *சிறு மந்தையே ... இராஜ்யம் உங்களுக்கு ...*
மத் 18:4 ... *சிறு பிள்ளை ... விண்ணரசில் பெரியவன்*

முடிவை வைத்து முறை சரியெனச் சொல்லமுடியாது.
''எவ்வளவு'' என்பதல்ல, எவ்விதம் என்பதே முக்கியம்.
''அளவுக்காய்'' ''தரத்தை'' விரயமாக்காதீர்.
மார்க்கவுலகின் எலிப் பந்தயத்தில் சேராதீர்!
புகழ்ச்சிக்காய் அல்ல, வளர்ச்சிக்காய் உழைப்பீர்.

4. சொந்த பலத்தைச் சாராதீர். (Human strength)

வச 6, *''தாங்கள் செய்ய நினைத்தது தடைபடாது ...''*
10:8-10 ... *நிம்ரோத் ... பலத்த வேடன் ... பாபேல் ...*

தேவ பக்தியுள்ள மனிதர்கூட சில வேளைகளில்
தேவனைத் தேடாது தங்கள் பலத்தில் சார்ந்துவிடுகின்றனர் —

ஆபிரகாம் ... இஸ்மவேல்
யாக்கோபு ... தந்திரம்
மோசே ... எகிப்தியனைக் கொன்றது
பேதுரு ... *எல்லாரும் கைவிட்டாலும் நான் ...*

திருப்பணியாளர் ஒவ்வொருவரும் தங்களுக்கு அடிக்கடி நினைவூட்டிக்கொள்ளவேண்டிய சத்தியம் —

*''ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல;
எனது ஆவியாலேயே என்கிறார் ... சேனைகளின் கர்த்தர்''* (சக 4:6)

5. *தேவனது பரந்த திட்டத்திற்கு எதிராகாதீர்.* (Overall plan)

இறைக் கட்டளை: ஆதி 9:1
''பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்''

பாபேலைக் கட்டியோரின் எண்ணமோ: ஆதி 11:4
''நாம் பூமியெங்கும் சிதறிப்போகாதபடி ...''

கர்த்தரோ அவர்களைச் *''சிதறப்பண்ணினார்''* (வச 8,9)

நாம் செய்யும் எதுவும் பூவுலகைத் திருவார்த்தையால் நிரப்புவதையே குறியாய்க் கொள்ளவேண்டும் —
அப் 1:8; மாற் 16:20; ஆப 2:14

■ ***முடிவுரை***

பாபிலோன் விழும்! (வெளி 18:1-5)
''மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது!''

புதிய எருசலேம் எழும்! (வெளி 21:2)
''தேவனிடமிருந்து புதிய எருசலேம் ...''

உங்கள் ஊழியத்தின் குணாதிசயம் யாது?
ஆன்மீகமானதா, மாம்சீகமானதா?
வேத அடிப்படையா, பாரம்பரியமா?
நீதி மார்க்கமா, அவபக்தியா?
விண்ணகச் சிந்தையா, பூவுலக எண்ணமா?
தியாகவுணர்வா, தன்னலமா?
தேவனை மையப்படுத்தியதா, மனிதரைத் தூக்குவதா?

அனைவரது வேலைக்கும் *''அக்கினிப் பரீட்சை''* (1 கொரி 3:12,13)

155

''நிகரே இல்லாத தலைவா!''

Jesus the Ideal Leader

முகவுரை

- கிறிஸ்தவத் தலைமைத்துவம் vs. உலகப்பாணி நிர்வாகம்
  லூக் 22:24-26 ... கற்றலுக்குமுன் ''களைதல்'' அவசியம்.

தம்மை வெறுமையாக்கி இயேசு ஆண்டவரானார்;
நாமோ நம்மை உயர்த்தித் தலைவர்களாக முயலுகிறோம்.

நாம் பின்பற்றக்கூடிய நிகரில்லா தலைவர் இயேசுவே!

இயேசு போன்ற தலைவராயிருப்பது எங்ஙனம்?

1. *மக்களுக்காய் மன்றாடுங்கள்.* (PLEAD for the people.)

- இயேசுவின் பிரதான ஆசாரிய ஜெபம் (யோ 17) —
  அ) பாதுகாப்பிற்காய் ... *''அவர்களைக் காத்தருளும்''* (வச 11,12,15)
  ஆ) பரிசுத்தப்படுவதற்காய் — வச 17
  இ) ஒருமனப்பாட்டிற்காய் — வச 20-22
  ஈ) ஊழியத்திற்காய் — வச 18,23

- பேதுருவுக்காய் ஜெபம் —
  லூக் 22:31,32 ... *உனக்காய் வேண்டியிருக்கிறேன் ...*
  சோதனைகள் ... விசுவாசம் ...

- பிதாவின் வலப்பக்கத்தில் இயேசுவின் பணி —
  எபி 7:25 ... *எப்பொழுதும் வேண்ட உயிரோடு ...*

☐ தனது மார்பில் பிரதான ஆசாரியன்
12 கோத்திரங்களின் பெயர்களைச் சுமந்தான் (யாத் 28:9-12)

☐ விசுவாசிகளின் முதிர்ச்சிக்காய்ப் பவுல் தவறாது ஜெபித்தார்
எபே 1:15-20 ... *ஞானம் ... அறிவு ...*
கொலோ 1:9-12 ... *கர்த்தர் சித்தம் அறியும் அறிவு*

2. ***மக்களைப் போஷியுங்கள்.*** (FEED the people.)

மேய்ப்பனின் முதல் வேலை —
சங் 23:1,2 ... *புல்லுள்ள இடங்கள் ... அமர்ந்த தண்ணீர்கள்*

இயேசுவை மக்கள் அடிக்கடி அழைத்த விதம் —
''போதகரே!'' - ரபி, ரபூனி — யோ 3:2; 20:16
''மேய்ப்பர்-போதகர்'' ஓர் இணைந்த பணி — எபே 4:13

சிலரை மேய்ப்பராகவும் சிலரை போதகராகவும் என்றல்ல;
''சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும்!''

- நாம் சிரத்தையெடுத்து பைபிள் படிக்காவிடில்,
மக்களுக்கு எதைப் பகிர முடியும்?
கிரமமான வேத ஆராய்ச்சி இன்றியமையாதது.
அவசரப் பிரசங்க ஆயத்தம் மக்களை அவமதிப்பதாம்.

எ.கா.) அழைத்துள்ள விருந்தினருக்கு அவசர அவசரமாய்க்
கடைசி நேரத்தில் உணவு சமைப்பது நியாயமா?

நிறைய வாசியுங்கள், படியுங்கள்.

பில்லி கிரஹாமிடம் கேட்கப்பட்ட கேள்வி:
''இன்னொரு வாழ்வு கிடைத்தால் என்ன செய்வீர்கள்?''
பதில்: ''படிப்பதைக் கூட்டுவேன்;
பிரசங்கிப்பதைக் குறைப்பேன்!''

- மக்களை மேய்க்கவில்லை என்பதே பழைய ஏற்பாட்டு
மேய்ப்பர்மீது தேவனது பிரதான குற்றச்சாட்டு — எசேக் 34:1-3
- வசன ஊழியமா நிர்வாகப் பொறுப்பா?
தெரிந்தெடுங்கள் — அப் 6
- பாலா, புலாலா? (Milk or Meat?)
பகுத்துணர்வில் விசுவாசிகளை வளர்ப்பது —
எபி 5:14
- வாலிபருக்குச் செய்தியளியுங்கள் — 1 யோ 2:12-14
உங்கள் பிரசங்கங்களில் காலப் பொருத்தம் இருக்கட்டும்.
- எழுத்துப்பணி: இதற்குத்தான் தேவன் பவுலை அடிக்கடி
சிறையிலடைத்தாரோ?

3. ***மக்களை நடத்துங்கள்.*** (LEAD the people.)

ஆடுகளுக்கு *முன்னால்* மேய்ப்பன் செல்லுகிறான் —
யோ 10:4

அதாவது, முன்மாதிரியினால் நடத்துதல் —
யோ 13:12-15 ... *ஆண்டவர் ... போதகர் ... மாதிரி ...*

பவுலின் முன்மாதிரியான தலைமைத்துவம் —
பிலி 4:9 ... *என்னிடம் கேட்பது ... கண்டது ... செய்யுங்கள்*

- தலைவனானவன் பின்னாலிருந்து கத்தமாட்டான்;
அவன் முன்னால் நடந்து மக்களை அழைப்பான்.
- எல்லாவற்றிலும் நாம் மக்களது தரத்திற்கு மேலிருக்கவேண்டும்.
நமது செயல்பாடுகளில் சவால் நிறைந்திருக்கவேண்டும்.

சவாலற்ற தலைவனைப் பின்பற்றுவதில்
மக்கள் நாளடைவில் உற்சாகமிழப்பர்.

☐ பிரசங்கியார்:
''களைப்பாயிருக்கிறது; உட்கார்ந்து பிரசங்கிக்கட்டுமா?''

சபையார்:
''பரவாயில்லை; படுத்துக்கொண்டு கேட்கிறோம்!''

நமக்கு மேல் மக்களை உயர்த்த முடியாது.
''சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்ல''
(மத் 10:24; லூக் 6:40)

- வாழ்க்கை மற்றும் செயல்பாட்டின் மூலம் பயிற்சி —
அ) நற்செய்தியறிவிப்பு
— இயேசு *''சென்றார்''* அத்துடன் *''அனுப்பினார்''*
(லூக் 10:1)

ஆ) ஜெபம்
— *''அவர் ஜெபித்து முடித்த பின்னர் ...''*
(லூக் 11:1) ... *''எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும்''*

இ) பரிசுத்த வாழ்வு
— *''என்னை நானே பரிசுத்தமாக்குகிறேன்''* (யோ 17:19)

புகைப்பவன்: ''ஏன் என்று சொல்லாதீர்; **எப்படி** என்று காட்டுங்கள்!''

4. மக்களுக்காய்த் தியாகம்பண்ணுங்கள். (BLEED for the people.)

''நல்ல மேய்ப்பன் தனது உயிரைக் கொடுக்கிறான்''
யோ 10:11

- பாடுபடவும் தியாகம்பண்ணவும் மனதில்லாது
  நாம் தலைமையில் வெற்றியாயிருக்க முடியாது.

''பான பலியாய் வார்க்கப்படுவது''
பிலி 2:17

- நாம் தயங்காது சுமக்கவேண்டிய சிலுவைகள் —
  - ☐ தவறாய்ப் புரியப்படல் எனும் சிலுவை (லூக் 7:33,34)
  - ☐ நன்றி மறத்தல் எனும் சிலுவை (2 கொரி 12:15)
  - ☐ பொய்க் குற்றம் சாட்டப்படல்,
    காட்டிக்கொடுக்கப்படல் எனும் சிலுவை
    (நண்பரிடம் பட்ட காயங்கள் ... சக 13:6)
  - ☐ தனிமைப்படுத்தப்படல் எனும் சிலுவை (2 தீமோ 4:16,17)
    (இது நாமே ஒதுங்கியிருத்தலைக் குறிக்காது.)
  - ☐ கடின உழைப்பால் களைப்பு எனும் சிலுவை.
    சாப்பிடக்கூட இயேசுவுக்கு நேரமில்லை (மாற் 6:31)
  - ☐ தன்னல மறுப்பு எனும் சிலுவை.
    பேராசைகள் — சொந்த சாம்ராஜ்யம் கட்டுதல்.
    ''தாவீது இறைச் சித்தம் நிறைவேற்றினான்'' (அப் 13:36)

■ *முடிவுரை*

- *''ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் பிதாவானவர் அவனைக் கனம்பண்ணுவார்''* (யோ 12:26)
- *''நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரனே!''*
  (மத் 25:21,23)

156

ஊழியருக்கு உபதேசம்

Lessons for God's Servants

பேதுருவின் முதல் நிருபத்திலிருந்து ...

முகவுரை

- எதிர்மறையைக் கூறி நேர்மறைச் சத்தியத்தை
  விளக்குவது (வலியுறுத்துவது) விவிலியத்தின் ஒரு தத்துவம் —

  எ.கா.) சங் 1:1,2
  ரோ 13:13,14
  கலா 2:20

- இத்தத்துவத்தைப் பயன்படுத்திப் பேதுரு தனது நிருபத்தில்
  ஐந்து சத்தியங்களை வலியுறுத்துகிறார்.

  அவை அனைத்தும் கர்த்தரின் ஊழியத்திலிருக்கும்
  எவருக்கும் நடைமுறைப் பயனளிப்பவை.

- பேதுரு — ஒரு ***''மேய்ப்பனது''*** பொறுப்பு கொடுக்கப்படுமுன்
  இயேசுவுடன் உரையாடல் (யோ 21:15-17)

  — தனது நிருபத்தில் கிறிஸ்துவைப் பேதுரு
  பிரதான ***''மேய்ப்பர்''*** என்கிறார் (1 பேது 5:4)

  இன்று இறைமக்களது மேய்ப்பர்களுக்குப்
  படிப்பினைகளாய் இவற்றை எடுத்துக்கொள்வோம் —

ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு பிரதானப் படிப்பினை உண்டு.

1. பாவ வாழ்க்கை அல்ல, பரிசுத்த நடக்கை

1 பேது 1:14,15

ஏன்?

i) இரட்சிப்பைக் குறித்து முற்காலத்துத் தீர்க்கருக்குக் கிடைக்காத
கிருபைநிறை வெளிப்பாடு —

வச 10-12 ... *(ஆகையால் ...* வச 13)

என்னே சிலாக்கியம்!

ஏசாயாவும் எரேமியாவும்கூட விளங்கிக்கொள்ளாதவை!
எவனுக்கு அதிகம் ... அவனிடம் அதிகம் ...

ii) நம்மை அழைத்த **கர்த்தர்** பரிசுத்தர் —

வச 15,16

அ) பிதாவானவர் (வச 17)
பாரபட்சமில்லை.
''பயத்துடன்'' (வச 17)
''கீழ்ப்படிதல்'' (வச 14)

ஆ) குமாரனானவர் (வச 18,19)
ஆட்டுக்குட்டியின் இரத்தம் — *குற்றமற்ற, மாசற்ற ...*
எ.கா.) 1 யோ 1:7; 2:1

இ) **பரிசுத்த** ஆவியானவர் (வச 12)
பாவமில்லாத *''பரலோகிலிருந்து''* அனுப்பப்பட்டவர்.
தேவ செய்தியைச் சுமந்து வந்தவர்.

இவை மூன்றும் 2ஆம் வசனத்தில் தொகுப்பு —

பிதாவின் முன்னறிவு
கிறிஸ்துவின் இரத்தம்
ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்

iii) திருவசனத்தின் தன்மை — நமது விசுவாசத்தின் அடித்தளம்
வச 23,24 — *அழியாதது*
2:3 — *''களங்கமில்லா''* ஞானப்பால்
:2 — சகவுறவுகள்

2. கர்த்தரில் இடறுதல் அல்ல, அவரை மகிமைப்படுத்துதல்

1 பேது 2:7-10

எப்படி?

i) எளிய விசுவாசம், நம்பிக்கை மூலம்
வச 6,7
விசுவாசத்தைப்போல் தேவனைக் கனப்படுத்துவது எதுவுமில்லை!

எ.கா.) ரோ 4:20,21 — ஏனெனில், தேவனது வல்லமையை
விசுவாசம் அறிக்கையிடுகிறது.
எண் 20:11-13 — மோசேயின் தவறுதல்
யோ 11:9,10,15,40 — லாசரு —
இடறல் vs. விசுவாசம் / மகிமைப்படுத்தல்
விசுவாசம் தேவனைப் பிரியப்படுத்துகிறது.

ii) அவிசுவாசிகள்முன் கண்ணிய நடக்கை மூலம் —

வச 11,12

அ) பாவக் காரியங்களை அகற்றுங்கள் (வச 11,12)

ஆ) அரசின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியுங்கள் (வச 13-15)
(கெட்ட தலைவர்களுக்கும் ... வச 18-24)

இ) சக மனிதரை நேசியுங்கள், மதியுங்கள் (வச 17)

iii) துதித்தலாலும், பறைசாற்றுதலாலும் —
வச 5 — *தேவனுக்குப் பலி* (துதி)
வச 9 — *மக்களுக்கு அறிவிப்பு* (தூது)

3. வெளியலங்காரமல்ல, உள்ளழகு

1 பேது 3:3,4

அதாவது, பிறரது பாராட்டைப் பெற அல்ல,
தேவனுக்குமுன் பரிசுத்தமாய் நடப்பதே குறியாயிருக்கவேண்டும்.
''தேவனுடைய பார்வையில்'' (வச 4)
மாய்மாலத்தை ஒழித்திடுங்கள்.

எந்தெந்த பகுதிகளில்?

i) குடும்ப வாழ்வில் (வச 1-7)

அ) கணவனுக்கு மனைவியின் கடமை

கற்புள்ள, கனிவான நடக்கை (வச 1)
சாந்தம், அமைதலான ஆவி (வச 4)
அடிபணிதல், கீழ்ப்படிதல் (வச 5,6)

ஆ) மனைவிக்குக் கணவனின் கடமை
அவர்களது பிரச்னைகள், பலவீனங்களைப் புரிதல் (வச 7)
கனப்படுத்துங்கள் (அவர்களது குறைகளைச்
சுட்டிக்காட்டிக்கொண்டே இராதீர்கள்.)

ஆன்மீக ஆசிகளைப் பகிருங்கள் —
ஜெபத் தோழராயிருங்கள் (வச 7)

குடும்ப வாழ்வில் இந்த உள்ளான குணநலன்கள் இல்லாது வெளியே நடிப்பது சாத்தியம்.

ii) திருச்சபை வாழ்வில் (வச 8-12)

ஒருமனம் (வச 8)
இரக்கம், சிநேகம் (வச 8)
தீமைக்கு நன்மை (வச 9-11)

நமது ஜெபங்களுக்குக் கர்த்தரது செவிகள் திறக்குமுன்
அவரது **கண்கள்** நம்மைப் பார்க்கின்றன (வச 12)

கர்த்தரது சோதித்தறியும் கண்கள் ...
உத்தம இருதயம் ... சுற்றித் திரிகின்றன (2 நாளா 16:9)

மேலெழுந்த உறவுகள் சுய வஞ்சகமானவை.
நமது வீட்டிலும் தேவனது வீட்டிலும் நமது நடக்கை
நமது *''ஜெபங்களைப்''* பாதிக்கும் (வச 17,12)

iii) சமூக வாழ்வில் (வச 13-18)

பயமுறுத்தல்களுக்குப் பயப்படாதிருத்தல் (வச 14)
சாந்தத்தோடும் வணக்கத்தோடும் சத்திய விளக்கம் (வச 15)
நல்மனச்சாட்சி (வச 16). (இதில் கீறல் ஏற்பட்டால் நாம் வெட்கப்படவேண்டியதிருக்கும்.)

இருதயத்தில் தியானவுணர்வைத் தக்க வைத்தல் (வச 15)
''தேவனை இருதயங்களில் பரிசுத்தப்படுத்துங்கள்''
''ஆவியில் உயிர்ப்பிப்பு'' (வச 18)

— இதன் பொருளென்ன?
= நமது இதயங்களில் குடிகொண்டிருக்கும் இறைப் பிரசன்னத்திற்குப் போட்டியாய் எதையும் அனுமதியாதிருத்தல்.

முடிவாக, *''பொறுமை''* (வச 20), *''நல்மனச்சாட்சி''* (வச 21)
இது நோவாவின் சரிதையில் சாட்சி.

4. திகைப்பு அல்ல, திளைப்பு

1 பேது 4:12,13

எந்தப் பாடும், பிரச்சனையும், ஏமாற்றமும் நமக்கு வியப்பை உண்டுபண்ணாது, விறுவிறுப்பைக் கூட்டவேண்டும்!

எடுத்துக்காட்டுகள் —

i) நமக்கு விரோதமான பேச்சுக்கள்
வச 4

நமது எதிர்வினை —
அ) தேவனது கரத்தில் தீர்ப்பை விட்டுவிடுங்கள்
வச 5-7, 17-19

ஆ) ஜெபத்தைக் கூட்டுங்கள்
வச 7ஆ

இ) அன்பையும் விருந்தோம்பலையும் அதிகரியுங்கள்
வச 8,9

ஈ) தூய்மையைக் காத்துக்கொள்ளுங்கள்
வச 15

உ) உங்களுக்கு வெட்கம் என்று நினைக்காது
தேவனை மகிமைப்படுத்த வாய்ப்பெனக் கருதுங்கள்
வச 14,16

ii) சோதனைகளும் பாடுகளும்

அ) கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு (வச 12,13)
பிலி 1:29,30 — தப்பிக்க முயலக்கூடாது.

கிறிஸ்துவின் மாம்சவுடல் vs. மகிமையுடல்
கொலோ 1:24 — பவுல் ... *சரீரத்தில் குறைவாயிருப்பவை*

ஆ) அடிக்கடி ஆழமாய் அர்ப்பணியுங்கள்
1 பேது 5:6
எல்லாப் பாரங்களையும் அவர்மீது வைத்துவிடுங்கள்
5:7
(மனிதரைச் சார்ந்திருப்பது நிரந்தர பயன் தராது)
கர்த்தரிலேயே மகிழ்ந்திருங்கள் (1:6-8)

இ) விசுவாசத்துடன் பிசாசை எதிர்த்திடுங்கள்

5:8,9 ... *கெர்ஜிக்கிற சிங்கம்போல் ...*

மற்ற பரிசுத்தவான்களுக்கும் வெற்றியுண்டாகட்டும் (வச 9)

5. சேவை பெற அல்ல, சேவை செய்ய

1 பேது 5:3 / 2:16

எப்படி?

i) கட்டாயமான சேவை அல்ல, மன விருப்பமான சேவை

வச 2

உற்சாகம், மனப்பூர்வம்.
இதை ஒரு பாரமாய்க் கருதக்கூடாது.
மகிழ்ச்சியோடு தேவனுக்கு ஆராதனை (சங் 100:2).
மல்கியா 3:13,14இன் மக்கள்போல் இருக்காதீர்கள்.
மூத்த மகனது மனப்பான்மை (லூக் 15:28-31).
இறைப்பணி சுமையல்ல, சுகம்!

ii) இழிவான ஆதாயத்திற்காயல்ல, உற்சாக சேவை

வச 2

சுய லாபம் அல்ல, தேவ மகிமையே நாட்டம்.
(இங்கு பிரதானமானது வேலையில் திருப்தியல்ல.)
மக்களது பாராட்டுக்காய் அலையாதீர்.
இங்கு கைதட்டல் அல்ல, அங்கே கை குலுக்கல்!
அறிக்கைகளிலில் நேர்மை — தலைவர்களது தயவுக்காய்
அவர்களைப் பிரியப்படுத்துவது குறியாயிருக்கக்கூடாது.
தற்புகழுக்கு நாட்டமில்லையேல் குழுவிற்குள்
போட்டாபோட்டி இராது.
தவறுகளை ஒப்புக்கொள்ள நேர்மை, மனது.
பணக்காரியங்களிலும் பொருட்களைக் கையாளுவதிலும்
உத்தமம், உக்கிராணத்துவம்.

iii) அதிகாரத் தோரணையல்ல, மந்தைக்கு மாதிரி

(வச 3)

நாம் தலைவர்கள்தான், அதிபர்களல்ல!
நாம் நடத்துபவர்கள்தான், கட்டியிழுப்பவர்களல்ல!

நாமே செய்ய முடியாததை
மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது நியாயமா?

குருக்கள் VS. குருக்களல்லாதோர் — தவறான கருத்து.
(விசுவாசிகளனைவரும் ராஜாக்கள், ஆசாரியர் — 1 பேது 2:5,9)

மக்களுக்குத் தேவை ''உதவி'' என்பதை மறக்காதீர்.
(மத் 9:35-38) ... *தொய்ந்துபோனவர்கள்*

தலைவன் என்பவன் உதவியாளனாயிருக்கவேண்டும்.

■ *முடிவுரை*

இவையெல்லாம் *''தேவனது மெய்யான கிருபையின்''*
புத்திமதிகள், அறிவுரைகள், உபதேசங்கள் (1 பேது 5:12)

1:10,13 ... *கிருபை*
2:1,10 ... *கர்த்தர் தயையுள்ளவர் ... இரக்கம்*
3:7 ... *நித்திய ஜீவனாகிய கிருபை*
4:10 ... *பற்பல கிருபையுள்ள ஈவுகள்*
5:5,10 ... *தாழ்மையுள்ளோருக்குக் கிருபை ...*
சகல கிருபையின் தேவன்

இந்தக் ''கிருபையில்'' நிலைகொண்டிருங்கள் (5:12)

(165 & 190ஆம் அத்தியாயங்களின் குறிப்புகளையும் படியுங்கள்.)

157

தலைவர்களது சிலாக்கியங்களும் பொறுப்புகளும்

Privileges & Responsibilities of Leaders

தீமோத்தேயுவைப் பவுல் எதிர்காலத் தலைமைக்குப் பயிற்றுவித்தார். இந்த இளைஞனுக்கு அவர் எழுதிய இரு கடிதங்கள் தலைவர் எவருக்கும் பொருந்தும் —

1 & 2 தீமோத்தேயுவிலிருந்து படிப்பினைகள் —

அ) சிலாக்கியங்கள்

1) தேவனது தெரிந்தெடுப்பு

''தேவனது கட்டளையின்படி'' (1 தீமோ 1:1)
''தேவனது சித்தத்தினால்'' (2 தீமோ 1:1)
''உண்மையுள்ளவன் என்றெண்ணி'' (1 தீமோ 1:12)
''ஊழியத்திற்கு ஏற்படுத்தினார்'' (1 தீமோ 1:12)
''நான் இரக்கம் பெற்றேன்'' (1 தீமோ 1:13)
தேவனது, அவரது இராஜ்யத்தின் அதிகாரம் (2 தீமோ 4:1)

2) ''நல்ல'' வேலை

''கண்காணிப்பு ... நல்ல வேலை'' (1 தீமோ 3:1)
மகாராஜாவின் காரியம் (1 தீமோ 6:15; 2 தீமோ 4:1)

3) பெரும் பலாபலன்

''நல்ல நிலை, விசுவாசத்தில் மிகுந்த தைரியம்'' (1 தீமோ 3:13)
''இறைமக்களிடமிருந்து *கனம்''* (1 தீமோ 5:17)
''விளைச்சலில் முதல் பங்கு'' (2 தீமோ 2:6)
''நீதியின் கிரீடம்'' (2 தீமோ 4:7,8)
''எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பு'' (2 தீமோ 4:17,18)

ஆ) பொறுப்புகள்

1) முன்மாதிரியாய் வாழுதல்

''நல்மனச்சாட்சி'' (1 தீமோ 1:5)
''குற்றம் சாட்டப்படாத, நல்ல சாட்சி'' (1 தீமோ 3:2-4,7)

''விசுவாசிகளுக்கு மாதிரி'' (1 தீமோ 4:12)
உனக்கே முதலாவது உபதேசி (1 தீமோ 4:15,16; 2 தீமோ 3:16,17)
உடலைப் பேணு (1 தீமோ 5:23; 4:8)
பணம் அல்ல, குணம் நாடு (1 தீமோ 6:10,11)
அசுத்தம், இச்சை விட்டோடு (2 தீமோ 2:19-22)

2) ஆரோக்கிய உபதேசத்தைப் பிரசங்கித்தல்

பக்திவிருத்தியே குறி (1 தீமோ 1:3-5)
கடைசி நாட்களின் அடையாளம் (1 தீமோ 4:1)
வாசிப்பது, போதிப்பது (1 தீமோ 4:13)
''வசனத்தை நிதானமாய்ப் பகுப்பது'' (2 தீமோ 2:15)
எதிர்ப்புகள் நடுவில் தைரியம் (2 தீமோ 1:7,8)
எதிர்ப்போரிடம் பொறுமை, தாழ்மை (2 தீமோ 2:24-26)
''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிடினும் பிரசங்கி'' (2 தீமோ 4:2-5)

3) எதிர்காலத் தலைவர்களை உருவாக்குதல்

அகிலவுலகத் தரிசனம் கொள்ளுங்கள் (1 தீமோ 2:1)
ஜெபத்தில் பிறரை ஊக்குவியுங்கள் (1 தீமோ 4:5)
நல்ல வேலையைப் பாராட்டுங்கள் (1 தீமோ 5:17,25)
உண்மையுள்ளோரைக் கண்டுபிடியுங்கள் (2 தீமோ 2:2)
பாரபட்சம் கூடாது (1 தீமோ 5:21)

158

உண்மையும் உத்தமமுமான பவுல்

Paul & Faithfulness

- வெளி 19:11 ... *''உண்மையும் சத்தியமுமுள்ளவர்''* எனும் கிறிஸ்து

☐ ''உத்தமம்'' என்பது வேதாகமத்தில் நிறைந்துள்ள கருத்து.
ஆனால் உத்தமம் இன்று கிடைக்காத பொருளாகிவிட்டது.

சங் 12:1 ... தாவீதின் கதறல்: *''உண்மையுள்ளோர் குறைவு''*

எரேமியாவின் புலம்பல் —

''சத்தியம் அழிந்துபோகிறது'' (எரே 7:28)
வேறே மொழியாக்கம்: சத்தியம் செத்துவிட்டது!

☐ ''உண்மையாயிருப்பதே'' நமது அடிப்படை அழைப்பு —
எபே 1:1 / கொலோ 1:2 / வெளி 17:14

எ.கா.) லீதியாளின் அழைப்பு: (அப் 16:15) இதுதான் அடிப்படை!

☐ ''விசுவாசம்'' குறித்து ஏராளம் பேச்சு, போதனை;
ஆனால் நம்பகம் (உண்மை, உத்தமம்) என்னவானது?

விசுவாசம் (faith) ... ஓர் ஈவு (1 கொரி 12:9) ... பெறுவது
உத்தமம் (faithfulness) ... ஒரு கனி (கலா 5 22) ... வளர்ப்பது

☐ பூரணத்தை எட்ட முடியவில்லையென்று நாம் உத்தமமாய்
வாழ எடுக்கும் முயற்சிகளை இடையில் விட்டுவிடுகிறோம்.
அப்படி விடக்கூடாது;
உலகின் கீழ்த்தரத்திற்கு இறங்கிவிடக்கூடாது —
நெகே 7:2 ... *அநேகரைவிட உண்மையுள்ளவன்*

வேறு எடுத்துக்காட்டுகள் —

நோவா ... ஆதி 6:9 / 7:1
''அவனது தலைமுறையில் ...''

யோபு ... யோபு 2:3
''பூவுலகில்'' அதாவது, அன்று

தானியேல் ... தானி 6:3,4 ... *''மேற்பட்டவன் ...*
உண்மை ... குற்றமின்மை ...''

எனவேதான் இம்மூவரையும் சேர்த்துத் தேவன் எடுத்துக்காட்டு
களாய்க் குறிப்பிடுகிறார் —

எசேக் 14:13,14 ... *நோவா ... யோபு ... தானியேல்*

☐ அவ்விதமே பவுலுக்குப் பல உடனாளிகளிருந்தனர்;
அவர்களில் சிலரையே உத்தமர் என்று சாட்சியிடுகிறார் —

தீகிக்கு	(எபே 6:21,22)
தீமோத்தேயு	(பிலி 2:19-23)
எப்பாப்பிரா	(கொலோ 1:7,8)
ஒநேசிமு	(கொலோ 4:9)

தேவனது சிறுபான்மையினர் vs. பிசாசின் பெரும்பான்மையினர்

மட்டுமல்ல,
நமது உண்மை **நெடுகவே** காணப்படவேண்டும் —
தேவனது சத்தியம் (= உண்மை) ... சங் 36:5
''மேகங்கள் வரை'' (உயரம்)
நமது உண்மையோ ... ஓசி 6:4
''மேகங்களைப் போல'' (மறைவு)

☐ ''உண்மை/உத்தமம்'' குறித்துப் படிக்க அப்போஸ்தலன்
பவுலின் மாதிரியைத் தெரிந்தெடுத்துள்ளேன்.

ஏன்? *''உண்மையுள்ளவன் என்றெண்ணி''* (1 தீமோ 1:12)
''உண்மையுள்ளவனாய் இருக்கிறேன்'' (1 கொரி 7:25)
எங்கே துவங்கி எங்கே பயணிக்கிறது பாருங்கள்!

வேதாகம ஆசிரியர்களில்,
''உண்மையுள்ளது'' எனும் பதத்தைப் பிறரைவிட
அதிகம் பயன்படுத்தியுள்ளது பவுல்தான்.

எ.கா.) *''உண்மையுள்ள'' வார்த்தை* (1 தீமோ 1:15)

☐ உத்தமம் (faithfulness) = உண்மை, நேர்மை, வாய்மை ...

நடைமுறையில் எளிதாய்ப் புரிந்துகொள்ள
''உண்மை'' (honesty) எனும் சொல்லைப் பயன்படுத்துவோம்.

உண்மை x மாய்மாலம், நடிப்பு (hypocrisy)
மத் 23இல் எத்தனை ஐயோக்கள்!

பவுலின் உண்மை —

1. அவரது போராட்டங்கள், பலக்குறைவுகள் பற்றி உண்மை

அ) போராட்டங்கள் (Struggles)

ரோ 7:13-24

— *நான் செய்வது எனக்கே சம்மதமில்லை* (வச 15அ)
— *நான் செய்வது எனக்கே விருப்பமில்லை* (வச 15ஆ)
— *நல்லது செய்ய எனக்குத் தெரியவில்லை* (வச 18)

அவரது ''தகுதி'' அல்ல,
அவரது ''தரக்குறைவே'' அவரது உணர்வாயிருந்தது.

உண்மையுள்ள மனிதன்
தனது நற்குணத்தைப் பிரசித்தப்படுத்தமாட்டான் —
நீதி 20:6

அவரது ''ஆன்மீகப்'' பிரச்னைகள் மட்டுமல்ல, மன உளைச்சல்கள் மற்றும் போராட்டங்களையும் வெளிப்படையாய்ப் பகிர்ந்து கொண்டார் —

''துக்கத்தின்மேல் துக்கம்'' (பிலி 2:27)

''எங்கள் பலத்திற்கு மிஞ்சின வருத்தம் ... மரணம் வருமென்று ...''
(2 கொரி 1:8-10)

ஆ) பலக் குறைவுகள் (Weaknesses)

''முள் ... பலவீனங்கள் ...'' (2 கொரி 12:7-10)
''பலவீனத்தோடு உங்களிடம் இருந்தேன்'' (1 கொரி 2:3)

இவ்வித அறிக்கைதான் உண்மையான வீரம் —
எ.கா.) விசுவாச வீரர்கள்
எபி 11:34 ... *பலக்குறைவில் பலம் கொண்டார்கள்*

நம்முடன் தொடர்பு கொள்வோர் நாமும் சாதா மனிதர்தான் என்ற எண்ணம்தான் கொள்ளவேண்டும்.

தேவன் எப்படிப்பட்டவர்களைத் தெரிந்துகொள்கிறார்
என்பதை மறைக்கத் தேவையில்லை —

1 கொரி 1:25-29 ... *பைத்தியமானவை ... பலவீனமானவை*

கிறிஸ்து: *''தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்க
அவர் என்னை அபிஷேகம்பண்ணினார்''* — எதிலும் தரித்திரம்!

முடிசூட்டுமுன் தேவன் நம்மை முடமாக்குகிறார்.
நமது பலத்திலேயே கை வைக்கிறார் — *தொடை* (ஆதி 32:24-32)

தேவன் தேடுவது கழுதைகள், குதிரைகளல்ல (சங் 147:10,11)

நமது போராட்டங்கள், பலவீனங்கள் குறித்து
உண்மை பேசுவது மக்களை நம்மிடம் நெருங்கச் செய்யும்.

2. அவரது சவால்கள், சாட்சிகள் பற்றி உண்மை

- பவுலின் சவாலான சில கூற்றுக்கள் அவர் தம்பட்டம் அடிக்கிறாரோ என்று நம்மை எண்ணச்செய்யும்.

அவர் விட்ட சவால்கள் அவரைப்பற்றிய உண்மையான
சாட்சிகள் என்றே காண்கிறோம் —

அ) ஜெப வாழ்வு ... ரோ 9:1-3
10:1,2

''உண்மை ... மனச்சாட்சி ... ஆவியானவர் சாட்சி''

ஜெபத்தில் உருக்கம், வாஞ்சை ... பிலி 1:3,4,8
''தேவனே சாட்சி ...''

அப்படியே, ரோ 1:9 ... *ஜெபங்கள் ... தேவனே சாட்சி*

மக்களிடம் ''உங்களுக்காய்த் தவறாது ஜெபிக்கிறோம்''
என்று சொல்வதிலெல்லாம் உண்மையுண்டோ?

நமது ஜெப வாழ்வைக் குறித்து நமது கணிப்பிலேயே
உண்மையில்லையெனில் அது சுய வஞ்சகம்!

ஆ) கடிதத் தொடர்பு

தனது நண்பர்களோடும் சபைகளோடும் பவுல்
கிரமமான கடிதத் தொடர்பு வைத்திருந்தார் —
நிருபங்கள் அல்லது நபர்கள் மூலம்.

அவர் எழுதியது உண்மை என்று அழுத்திக் கூறினார் —
2 கொரி 10:9-11 ... *வார்த்தை ... செய்கை ...*

அவர் ராஜதந்திரத்துடன் நடக்கவில்லை —
சில வேளைகளில் சபைகளைச் சந்திக்க வராமல்
கடிதமெழுதியதேன் என்றும் விளக்கினார் —

2 கொரி 13:10 ... நேருக்கு நேர் கண்டிப்பதைத் தவிர்க்க ...

இதற்கும் தேவனே சாட்சி என்றார் —
2 கொரி 1:23

இ) பயணத் திட்டங்கள்

அவர் பயணித்துக்கொண்டேயிருந்ததொரு மிஷனரி.

தனது விருப்பு வெறுப்பு அல்லது மறைமுக
நோக்குகளின்படியல்ல, தேவ சித்தத்தின்படி —

ரோ 1:10 ... நிருபத்தின் துவக்கத்தில்
15:32 ... நிருபத்தின் முடிவில்

(எந்த இடத்திற்கும் இறைச்சித்தத்தின்படிச் சென்றால்தான்
அங்குள்ளோருக்கு ஆசீர்வாதமாயிருக்க முடியும் ... 15:29)

அவரது பயணத் திட்டங்கள் மாறிவிட்ட
வேளைகளிலும் உண்மையைச் சொன்னார் —

அப் 16:6-10 ... பரிசுத்த ஆவியானவரே இயக்குநர்
என்ற அறிவில் பதறாதிருந்தார்.

ஈ) இடர்பாடுகள், உபத்திரவங்கள், பாடுகள்

2 கொரி 11:22-33 (இதை முழுவதும் வாசியுங்கள்)
மிகைப்படுத்தலே கிடையாது: பட்ட அடிகளின் எண்ணிக்கை!
''நான் சொல்வது பொய்யல்ல எனத் தேவனறிவார்!''

மிஷனரிகளும் மாற்றுக்கலாச்சார நற்செய்திப்பணியாளர்களும்
இங்கு கவனமாயிருக்கவேண்டும் —

பரிதாபப்படுவோரை அல்ல, படைவீரரை நாம் எழுப்பணும்.

எ.கா.) எனது இனத்தான் ஒருவர் ராஜஸ்தானில் மிஷனரியாய்
இருந்தார். அங்குள்ள மிஷனரிகளின் பிரச்னைகளை
அவரது மாமனாரோடு நான் பகிர்கையில் அவர் சொன்னது:
''எத்தனையோ துணி வியாபாரிகள் தென்னகத்திலிருந்து
மாதக்கணக்காய் இப்பாலைவன மாநிலத்திற்குச்
செல்கிறார்களே!'' ஒரு மிஷனரித் தலைவனாக நான்
வெட்கித் தலைகுனிந்தேன்!

உ) சோர்பின்றி உழைப்பு

1 கொரி 15:10 ... *மிகவும் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்*
அவரது தாழ்மையினால் *''அதிகக்'' கிருபை* பெற்றார் —
(யாக் 4:6)

3. அவரது சகவுறவுகளில் உண்மை/உத்தமம்

ஓர் அசாதாரண சாட்சி —
2 கொரி 6:11 ... *எங்கள் வாய் ... இருதயம் ... திறந்திருக்கிறது*
7:2,3 ... *ஒருவனையும் கெடுக்கவில்லை ...*
வஞ்சிக்கவில்லை.

அவர் எழுதியது: *''உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக''*
(ரோ 12:9)
''மாயமற்ற'' அன்பு (2 கொரி 6:6/1 தீமோ 1:5)

அநேக சகவுறவுப் பிரச்னைகளுக்குக் காரணம்
மாய்மாலமும் ஒளிவுமறைவுமே (யாக் 3:16,17)

இரட்டை நாவு அதற்கு முதற்காரணம் —
சங் 12:1,2 ... *இச்சக உதடுகள், இருமனப் பேச்சு*
5:9 ... *வாயில் உண்மையின்மை ... உள்ளம் கேடுபாடு*

- புதிய ஏற்பாட்டின் வேறெந்த ஆசிரியரையும்விட
சகவுறவுகள் குறித்துப் பவுல் அதிகம் எழுதியுள்ளார் —

Í

எ.கா.) *''ஒருவருக்கொருவர்''* எனும் பகுதிகள்:

— ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள் (ரோ 15:7)

— ஒருவரையொருவர் வாழ்த்துங்கள் (ரோ 16 ... 14 முறை)

— *''பரிசுத்த'' முத்தம்* ... அதாவது, மாய்மாலமின்மை

வஞ்சக முத்தங்கள் vs. *உண்மை அடிகள்* (நீதி 27:6)

— ஒருவரையொருவர் சேவியுங்கள் (கலா 5:13)

— ஒருவரையொருவர் தாங்குங்கள் (சகியுங்கள்) (எபே 4:2)

— ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்திடுங்கள் (கலா 6:2)

— ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் (1 தெச 5:11)

— ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள் (ரோ 15:14)

— ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபே 5:21)

— ஒருவரோடொருவர் அடையாளப்படுத்துங்கள் (1 கொரி 9:19-23)

எ.கா.) ரோ 12:15 ... *அழுவோரோடு அழுங்கள் ...*

— ஒருவரையொருவர் கடிக்காதிருங்கள் (கலா 5:15)

நாய்கள் ஜாக்கிரதையா, விசுவாசிகள் ஜாக்கிரதையா?

- எங்கு பார்த்தாலும் உறவுப் பிரச்னைகள்தான்.

  உண்மையையும் உத்தமத்தையும் பெருக்குவதே சகவுறவுகளை மேம்படுத்த ஒரே வழி.

எப்படி?

எடுத்துக்காட்டுகள் —

☐ புறங்கூறாதிருங்கள்.
புறங்கூறப்படும்போது அமைதி காத்திடுங்கள் .
எண் 12:7 ... மோசே ...
''உண்மையுள்ளவன்'' என்ற பதம் முதலாவது வருவது.

☐ இரகசியங்களை வெளிப்படுத்தாதிருங்கள்.
நீதி 11:12,13 (மாறாக, *''ஆவியில் உண்மை''*)

☐ பட்டயத்தை உறையிலிருந்து எடுக்காதிருங்கள்.
1 சாமு 26:23 ... தாவீது ... சவுல் ...
(சவுல் உறங்கிக்கொண்டிருந்த வேளையில்கூட ...)

☐ நன்றிக்கடன் எதிர்பார்க்காதிருங்கள்.
2 கொரி 12:15 ... *எவ்வளவுக்கதிகமாய் அன்புகூருகிறேனோ*

உண்மையுள்ள, நம்பகமான நபர்களே பிறரது உறவுப் பிரச்னைகளையும் தீர்த்துவைக்க உதவ முடியும் —
பிலி 4:2,3 ... இச்சகோதரிகளுக்கு *உதவுங்கள்*

4. பணக்காரியங்களில் அவரது உண்மை/நம்பகம்

- 2 கொரி 8:18-23

  ''கர்த்தருக்கு மகிமை ... ஜாக்கிரதை ... கர்த்தருக்குமுன்''

  வச 19,23 வச 22 வச 21

- பவுலுக்குப் பண ஆசை அறவே கிடையாது —

  அப் 20:30-35 ... *எவரது பொன், வெள்ளி, ஆடை ...*

  பழைய தீர்க்கன் ஒருவனது இதுபோன்ற சாட்சி —

  சாமுவேல் — 1 சாமு 12:1-5

  பழைய ஏற்பாட்டைப் பவுல் நன்கு படித்திருந்தார்.
  நவீனக் கிறிஸ்தவத்தை நாம் பின்பற்றக்கூடாது —
  மாறாக, உண்மைக்கும் நம்பகத்திற்கும் சான்றான
  அப்போஸ்தலர், தீர்க்கர்கள்போல் நடக்கவேண்டும்.

- பவுல் மேற்கொண்ட ஒரே பணம் திரட்டும் திட்டம் *''எளியவர்களுக்காகவே!''* —

  அப் 21:17 / 24:17 / ரோ 15:25,26

- பல வேளைகளில் பணக் காரியங்களில் தனது நியாயமான உரிமைகளைக்கூட அவர் தியாகம்பண்ணினார் —

  1 கொரி 9:11,12 ... *ஞான நன்மை ... சரீர நன்மை ...*
  ... இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை

  வேதத்தைப் போதிப்பவர்களுக்குத் தாராளமாய்க் *(''இரட்டிப்பான கனம்'')* கொடுக்கச் சொன்ன பவுல் தனது தேவைகளை முன் நிறுத்தவில்லை.
  தனக்குப் பணம் திரட்டுவதில் அவர் திறமைசாலியல்ல (பிலி 4:12-16)

எனவேதான் தேவன் பவுலுக்கு நிறைய வெளிப்பாடுகள்
கொடுத்தார் (2 கொரி 12:7) —

லூக் 16:11-14 ... *உலகப் பொருளில்*
உண்மையாயிராவிடில் ...?

நமது பிரசங்க பீடங்களில் ''பிரசங்கங்கள்'' ஏராளமிருந்தும்
''செய்திகள்'' இல்லாதிருப்பதற்கு இதுவே காரணம்!

குகைகளில் ஒரு செய்தியோடு மட்டும் துவங்கிய சபை,
பேராலயங்களில் நிறையப் பணத்தோடு மட்டும் முடிந்துள்ளது!

- வரி செலுத்துதல் குறித்துப் பேசுகையில்
மனச்சாட்சியைப் பவுல் குறிப்பிடுகிறார் —

ரோ 13:5-7
:8 ... *ஒருவருக்கும் கடன்படாதீர்கள்*
கடனைத் திரும்பக் கொடுப்பதில் உண்மையாயிருக்கிறோமா?

எ.கா.) ''முதலாவது'' கடனைத் தீர்த்துவிடு —
2 இரா 4:1,7 ... எலிசா ... தீர்க்கனின் விதவை ...

ஒருவர் இப்படிக் கேட்டார்:
கடனைத் திருப்பிக் கொடுப்பதிலேயே நம்மை நம்பமுடியாவிடில்,
ஒரு நாட்டை இரட்சிக்க தேவன் நம்மை நம்பமுடியுமோ?

5. பிரசங்கத்திலும் அறிக்கைகளிலும் உண்மை/உத்தமம்

- பிரசங்கித்தல் என்பது நித்தியத்தைப் பாதிக்கும் —
நித்தியத்தை நினைவிற்கொண்டே பவுல் பிரசங்கித்தார் —

2 கொரி 2:17 ... *''அநேகரைப்போல் இல்லாது ... துப்புரவாய்*
... தேவ சந்நிதியில் ...''

அதாவது, சபையாருக்காயல்ல, சர்வ வல்லவருக்காய்!

இப்படிப்பினையைப் பவுல் எங்கே கற்றார்?

தீர்க்கர்களிடமிருந்து ...
எலியா (1 இரா 17:1) ... *''கர்த்தருக்கு முன்பாக''*
எலிசா (2 இரா 3:14) ... *''கர்த்தருக்கு முன்பாக''*

ஆசாரியர்கள் அன்று தேவனது பிரமாணத்தைப் போதித்தனர் —
அவர்களது செய்தி: ''தேவனது இதயம், தேவனது மனம்''

1 சாமு 2:35 ... ஏலியை அகற்றும்போது அவனிடம்
ஒரு தேவமனிதன் சொன்னது.

''தேவன் என்னிடம் சொன்னார்'' என்று எரேமியா காலத்தில்
ஏமாற்றி வந்த தீர்க்கர்களுக்குத் தேவனது கண்டனம் —

எரே 23:34,36 ... *இறைவார்த்தையைப் புரட்டுவோர்*
:26 ... *தங்கள் இருதயத்தின் வஞ்சகம்*
ஆனால் :28 ... *என் வார்த்தையை உண்மையாய் ...*

- வேதாகமம் எழுதிய ஆசிரியர்கள் உண்மையாயிருந்தனர் —
இல்லையேல் இந்த வேதாகமம் நமக்குக் கிடைத்திருக்காது!

ஏசா 8:1,2 ... ஓர் ஆசாரியன் & ஒரு தீர்க்கன்
''உண்மையுள்ள'' சாட்சிக்காரர்

2 பேது 1:20,21 ... *சுய தோற்றமான பொருள்* கிடையாது
(அதாவது, சொந்த விருப்பு, வெறுப்பு கிடையாது)

- அடுத்த வரிசை வேதப் போதகர்களுக்காய்
''உண்மையுள்ள மனிதரைத்'' தேடும்படித் தீமோத்தேயுவைப்
பவுல் பணித்தார் —

2 தீமோ 2:2 ... *''உண்மை'' ... ''திறன்'' ...*

முதலாவது, உண்மை (உத்தமம்)
அடுத்துதான், திறமை (சத்துவம்)

எனவேதான் அதிகம் படித்த இறையியலர் பலர் இருப்பினும்
தரமான திருமறைப் போதகர் அதிகமில்லை.

முதலாவது, **இருதயம்;** அடுத்துதான் **தலை/கரங்கள்** —
சங் 78:70-72 ... *உண்மை ... திறமை ...*

''உள்ளத்தில்'' தேவன் ''உண்மையைக்'' கண்டால்,
தமது ஞானத்தைத் தெரியப்படுத்துவார் —
சங் 51:6

திருவசனத்தைப் பிரசங்கிக்கையில் இருக்கவேண்டிய
முப்பரிமாண அர்ப்பணிப்பு —

1. ஒன்றையும் கூட்டமாட்டேன் (add)
2. ஒன்றையும் மாற்றமாட்டேன் (alter)
3. ஒன்றையும் அகற்றமாட்டேன் (avoid)

பின்பற்றக்கூடிய மாதிரிகளாய்த் தன்னையும் உடன் ஊழியன் அப்பொல்லோவையும் பவுல் நிறுத்துகிறார் (1 கொரி 4:6)

- பிரசங்கிப்பதில் மட்டுமல்ல, அறிக்கைகளிலும் பவுல் உண்மையுள்ளவராயிருந்தார் —

ரோ 15:17-19 ... *வேறொன்றையும் அறிவிக்கத் துணியேன்*

விளைவுகளை மிகைப்படுத்துவது தேவனை மகிமைப்படுத்தாது.
சுவிசேஷங்களிலுள்ள அறிக்கைகளைப் பாருங்கள் —

— ஆண்கள் மட்டும் 5000 பேர் (மத் 14:21).
நாம் அதை 25000 என்றிருப்போம்.
(5000 ஆண்கள் + 5000 பெண்கள் + 15000 பிள்ளைகள்)

— இயேசு நாசரேத்தில் *''அநேக'' அற்புதங்கள் செய்ய முடியவில்லை* (மாற் 6:5)

— இரண்டாம் தொடுதலுக்குப் பின்னர்தான் பூரண சுகம் (மாற் 8:22-25)

— ''153'' மீன்கள் (யோ 21:11)

— *எழுதப்பட்டிராத வேறு அற்புதங்கள்* (யோ 20:30)

சுய முன்னேற்றத்திற்காயல்ல, தேவ மகிமைக்காகவும்
மக்களது நன்மைக்காகவுமே எழுதுங்கள் (வச 31)

''மிகவும் ... அநேக ... பெரிய'' — இவ்வித வார்த்தைகள் குறித்துக் கவனம்!

6. அவருக்குத் தெரியாதவை குறித்து உண்மை

நமக்குத் தெரியாது என்று ஒத்துக்கொள்வதைவிட
தெரிந்தவற்றிற்காய்ப் பெருமையடிப்பது எளிது.

உண்மையுள்ள மனிதனே தெரியவில்லை என ஒத்துக்கொள்வான்.

எ.கா.) 1 கொரி 13:9 ... *நமது அறிவு குறைவுள்ளது*
ஞானப் போதனை வசனம், **அறிவுணர்த்தும்** வசனம்
வரங்கள் குறித்து எழுதும்போதுகூட!

2 கொரி 12:1-4 ... *மூன்றாம் வானம் ... நானறியேன்*

— கிறிஸ்தவ அனுபவத்தில் பவுலைவிடப் பேதுரு மூத்தவர்.
ஆனால் பேதுரு எழுதியது: 2 பேது 3:15,16
பவுல் எழுதியவை ... புரிவதற்கு அரிது ...

— யோவானுக்குக் கிடைக்காத வெளிப்பாடா? அவன் எழுதியது —
1 யோ 3:2 ... *இன்னும் வெளிப்படவில்லை*

''எனக்கெல்லாம் தெரியும்'' என்ற பித்தலாட்டம் வேண்டாம்!

தேவனால் போதிக்கப்பட சிறு பிள்ளை மனது அவசியம் —
லூக் 10:21 ... *ஞானிகள் ... கல்விமான்கள் ... பாலகர்*

கடைசியாக —

7. அவரது கடந்த காலம் குறித்து உண்மை

- 1 தீமோ 1:12-16 ... *முன்பு தூஷிக்கிறவனாயிருந்தேன் ... ஆனால் ''கிருபை''* (வச 14)

1 கொரி 15:7-9 ... அப்போஸ்தலன் எனப்படத் தகுதியற்றவன்;
ஆனால் கிருபை'' (வச 10)

ஏற்கனவே நாம் நல்லவர்கள்தான்;
கடவுள் நம்மை இன்னும் நல்லவர்களாக்கிவிட்டார் என்று
சொல்லாமல் சொல்லக்கூடாது!

நாம் உண்மையாயிருக்கும்போதுதான்,
மக்களுக்கு நாம் *''திருஷ்டாந்தங்கள்''* (உதாரணங்கள்)
ஆவோம் — 1 தீமோ 1:16

- இச்சத்தியம் பழைய ஏற்பாட்டில் பரந்துகிடக்கிறது:

— மக்களிடம் மோசே
''நீங்கள் அடிமைகளாயிருந்ததை மறக்காதிருங்கள்'' (உபா 15:15)
''நீங்கள் தேவனுக்கு கோபமூட்டியதை மறக்காதிருங்கள்'' (உபா 9:7)

— தேவனுக்குமுன் தாவீது (2 சாமு 7:18)
''நான் எம்மாத்திரம்? என் குடும்பம் எம்மாத்திரம்?''
சங் 136:23 ... *நமது தாழ்வில் நம்மை நினைத்தவர் ... அவர் கிருபை* (= உண்மை) *என்றுமுள்ளது*

— சாலொமோன் (பிர 11:7,8)
''இருளின் நாட்களை நினைக்கவேண்டும்''

— மன்னன் எசேக்கியா (ஏசா 38:15,16)
''கசப்பை நினைத்து மென்மையாய் நடப்பேன்''

■ *முடிவுரை*

- இவ்வித வாழ்வு கடினமா?
  இல்லை, உண்மையற்ற வாழ்வுதான் கடினம் —
  நீதி 13:15 ... *''துரோகிகள் வழி கரடுமுரடு''*
- நமது உண்மையும் உத்தமமுமே முடிவான வெற்றியை நிர்ணயிக்கும் —
  வெளி 17:14 ... *ஜெயிப்பார் ... அவரோடிருப்பவர்கள் ... உண்மையுள்ளவர்கள்*

  இது இல்லாது போராயுதங்கள் வீண்.

  இயேசுவின் படைக்கலன்கள் —
  ஏசா 11:5 ... *நீதி ... சத்தியம் ... அரைக்கட்டு ... இடைக்கச்சை*

  அப்போஸ்தலரின் படைக்கலன்கள் —
  2 கொரி 6:7 ... *சத்திய வசனம் ... நீதி ...*
- ''உண்மையும் உத்தமமுமாய் நடப்பேன்'' என்று தீர்மானியுங்கள் —
  சங் 101:2 ... *உத்தமமான வழியில் விவேகமாய் நடப்பேன்.*
  வசனங்கள் 3,4,6ஐயும் முழங்காலில் நின்று வாசியுங்கள்.

159

ஆன்மீக அதிகாரம்

How to have Spiritual Authority

முகவுரை

- அதிகாரம் vs. வல்லமை (பலம்)
  எ.கா.) மெலிந்த போலீஸ் வேகமான காரை நிறுத்துகிறார்!
- சக 4:6 ... *''பலமுமல்ல, பராக்கிரமுமல்ல, என் ஆவியினால்''*
  ஓர் அரசுத் தலைவனுக்குக் கூறப்பட்டது (ஆகாய் 1:1);
  மார்க்கத் தலைவன் யோசுவாவுக்கு அல்ல!

சபை மேய்ப்பர் பலருக்கு ஆன்மீக அதிகாரமில்லை —
அவர்கள் நிறுவன பலத்தையும், பதவியையும்,
சபைப்பிரிவின் அந்தஸ்தையுமே சார்ந்திருக்கின்றனர்.

ஆன்மீக அதிகாரம் கிடைப்பது எப்படி ?

1. தேவனது ஆளுகையின்கீழ் வாழ்க்கை

எ.கா.) இயேசு

- நூற்றுக்கதிபதி: *''நீர் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்''* லூக் 7:7-9
- பிதாவானவர்: *''இவரில் பிரியம் ... இவருக்குச் செவிகொடுங்கள்''*
  திருமுழுக்கின்போது ... மத் 3:17
  மறுரூபமானபோது ... 17:5

கீழ்ப்படிதலும் அடிபணிதலும் நெடுகவே இருக்கவேண்டும் —
அவர் சிலுவையின் மரணம்வரை கீழ்ப்படிந்தார்;
ஆகையால் தேவன் அவரை உயர்த்தினார் (பிலி 2:8,9)

கீழ்ப்படியத் தவறியபோது மன்னன் சவுல் மகுடம் இழந்தான்.

2. முன்மாதிரியான வாழ்க்கை

- எ.கா.) யோசுவா
  சக 3:4,5 ... *சுத்தமான பாகை*
  6:11 ... *பொற் கிரீடம்*

- ஏசா 55:3,4 ... தாவீது
  (I) *சாட்சி* (II) *தலைவர்* (III) *அதிபதி*
- 1 பேது 5:3-5 ... *மந்தைக்கு முன்மாதிரி*

எ.கா.) அன்னை தெரசா —
‘‘கருச்சிதைப்பைச் சட்டபூர்வமாக்கியுள்ள நாடு
தனது மனச்சாட்சியைக் கொன்றுவிட்டது!’’

அதிபர் கிளின்டனின் பதில் —
இவ்வித நேர்த்தியான வாழ்க்கைக்கு எதிராய் என்ன பேசுவது?

எ.கா.) பில்லி கிரஹாமைப் பற்றி வின்ஸ்டன் சர்ச்சில் —
‘‘இதோ, ஓர் உண்மையுள்ள மனிதர்!’’

மகன் பிராங்ளின் கிரஹாமின் சாட்சி —
பிரசங்க பீடத்திலும் வீட்டிலும் அப்பா ஒரேபோல்தான்!

3. *திருமறையில் அறிவு*

- *மேய்ப்பர் — போதகர்* (எபே 4:13)
  நன்றாய் மேய்ப்பவர்களுக்கு மக்கள் கீழ்ப்படிவர்.
  ஓசி 4:6 / மல் 2:7-9
- *‘‘எங்கே போவோம்? ... நித்திய ஜீவ வசனங்கள் உண்டே!’’*
  யோ 6:68
- யோசு 1:8,5 ... *இப்புத்தகம் ... ஒருவனும் எதிர்க்க முடியாது*
- 1 தீமோ 5:17 ... *திருவசனத்தில் உழைப்பு ... இரட்டிப்பான கனம்*

4. *உண்மையான சேவை மனப்பான்மை*

- *முதன்மையாயிருக்க விரும்புகிறவன் ... பணிவிடை ...*
  (மத் 20:25-28)
  பணிவிடைத் தலைவன் (Servant leader)

உங்களது பிரதான நோக்கமே மக்களைக் கட்டியெழுப்புவதென
அவர்கள் அறிந்தால் உங்களுக்கு மனப்பூர்வமாய் அடிபணிவர் —
யோ 10:15,16 ... *‘‘அவை என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும்’’*

எ.கா.) அதிகாரமா தொண்டாற்றலா? (அதிகாரப் பித்தர்கள்)
ஒரு நகருக்கு அரசன் தேவைப்பட்டது ...
நான்கு முக்கிய குடிமக்கள் அழைக்கப்பட்டனர்.

மேசையில் ஒரு தங்கச் சாவி வைக்கப்பட்டது ...

‘‘அரசனாக விரும்புகிறவர் இச்சாவியை எடுக்கும் கையை
இழக்கவேண்டும் ...’’

— ஒரு போர்வீரன்: வலது கையால் சாவியை எடுத்தான்;
அவன் கையை வெட்டி அவனைத் தள்ளினர்.

— ஒரு தத்துவ ஞானி: அவன் இடது கைப் பழக்கமுள்ளவன்;
எனவே இடது கையால் எடுத்தான்;
இடது கையை இழந்தான்.

— ஒரு பணக்கார வியாபாரி: இரண்டு கைகளால் எடுத்தான் ...
இரண்டு கைகளையும் வெட்டி அவனை அகற்றினர்.

— ஒரு விவசாயி: எனது கைகள்தான் மனுக்குலத்திற்குச் **சேவை**
செய்பவை; **அதிகாரம்** வேண்டுமென்று
எந்தக் கையையும் இழக்க நான் ஆயத்தமில்லை.

எல்லாரும் அவன் கால்களில் விழுந்து, ‘‘அதிகாரம் நாடாதவனே
அதற்குத் தகுதியானவன்’’ என்றனர்!

- உள்நோக்கு ஒன்று வைத்துக்கொண்டே மக்களுக்கு உதவாதீர்.
  தியாகவுணர்வுடன் செயல்படுங்கள்.
  இக்கட்டுகளில் மக்களுக்கு உதவுங்கள்.
  (யோ 10:12) ... கூலியாள் x நல்ல மேய்ப்பன் (வச 11)
- தீமோத்தேயுமீது பவுலுக்கிருந்த கரிசனை (1 தீமோ 5:23)
- எப்பாப்பிரோதீத்து (பிலி 2:29,30) ... *‘‘கனம்பண்ணுங்கள்’’*

5. *தூயாவியானவரின் நடத்துதல்*

எத்திசை எனும் தெளிவு.

தேவ ஆவியால் நடத்தப்படுபவனைப் பின்பற்ற
மக்கள் தயங்கமாட்டார்கள்.

எ.கா.) பவுல்: 1 கொரி 7:40 / 14:37,38
எ. கா.) மிஷனரிகளுக்குப் பணியிட மாற்றங்கள்

இதற்காய்ச் சபைத் தலைவர்கள் போதுமான நேரம்
தேவனுக்குமுன் காத்திருக்கவேண்டும் —
யாத் 18:19,20 (மோசே)
''தேவ சந்நிதியில் மக்களுக்காய் இரும்''
எ.கா.) காபிரியேல் (லூக் 1:19) ...
தேவ சந்நிதியில் நிற்பவன் ... அனுப்பப்பட்டேன்

6. செயல்பாடுகளில் பாரபட்சமின்மை

1 தீமோ 5:21 (தீமோத்தேயுவுக்குப் பவுல்)
2 நாளா 19:4-9 (நியாயாதிபதிகளுக்கு யோசபாத்)

பாரபட்சமுள்ள தலைவனின் தீர்மானங்களை மக்கள் மதியார்.

இக்காலத்து மக்கள் விபரமானவர்கள் —
அவர்களுக்கு நிறைய தெரியும் — TV தொடர் கதைகள்

7. அதிகாரத் தோரணையின்மை

கட்டாயப்படுத்திக் கீழ்ப்படியச் செய்ய முடியாது (1 பேது 5:3,5)

உறவுகளை மேம்படுத்தவேண்டும் —
1 தீமோ 5:1,2 ..., *தகப்பன் ... தாய் ... சகோதர சகோதரிகள்*
ரெகொபெயாம் (1 இரா 12:6,7) ... தவறுதல்

எ.கா.) ராணுவப் பயிற்சி:
பெரிய அதிகாரி தனது உயர் நிலையைச் சொல்லக்கூடாது;
அடுத்த வரிசையினர் அதை மறக்கக்கூடாது.

மந்தை நமக்குச் சொந்தமல்ல: *''தேவனுடைய பண்ணை''*
(1 கொரி 3:9,21-23)

பிரசங்கிமார் மக்களுக்குச் சொந்தம்;
மக்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தம்;
கிறிஸ்து தேவனுக்குச் சொந்தம்!

சபை மேய்ப்பர்களின் அளவுக்கு மீறிய கட்டுப்பாடு —
விசுவாசிகளுக்கு விடுதலை வேண்டும் —
1 கொரி 7:23 — அடிமைகள் அல்ல.
2 கொரி 1:24 — சர்வாதிகாரம் கூடாது.

■ முடிவுரை

ஆன்மீக அதிகாரம் இன்று;
மகிமையின் கிரீடம் நாளை (1 பேது 5:4)

160

அப்போஸ்தலனின் அடையாளங்கள்

Marks of an Apostle

முகவுரை

இன்று அப்போஸ்தலர் உண்டா? ஆம் ... இல்லை!
''பன்னிருவர்'' என்பது பிரத்தியேகமானதொரு குழு;
அதற்கு வாரிசுகளோ அடுத்த வரிசையினரோ கிடையாது —
மத் 26:20; யோ 20:24; 1 கொரி 15:5

''பன்னிருவரோடு'' எண்ணப்படாத வேறு சிலரையும்
அப்போஸ்தலராகப் புதிய ஏற்பாட்டில் சந்திக்கிறோம் —
அப் 14:14; கலா 1:18,19; அப் 15; ரோ 16:7; 1 கொரி 15:7

- பரமேறிய கிறிஸ்து திருச்சபைக்கருளிய ஐந்து ஊழிய வரங்களில் *''அப்போஸ்தலர்''* முதலாவது வருகின்றனர்.
  நாம் *''கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு''* வரும்வரை
  அவர்கள் இருப்பார்கள், செயல்படுவார்கள் —
  எபே 4:10-13; 1 கொரி 12:28

- அப்போஸ்தலன் பவுலையே வைத்து ஒவ்வொருவரையும் அளந்து கொண்டிருந்தால் ஒருவரும் அப்போஸ்தலனாய் நமக்குத் தோன்றமாட்டார். சில நபர்களைத் தவறவிட நேரிடும்.

அப்போஸ்தலரது அடையாளங்களின் பட்டியல் ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது.
ஒரே நபரில் அத்தனையும் காணப்படும் என்று சொல்வதற்கில்லை.

1. சபைகள் நிறுவுவதில் முன்னோடி

ரோ 9:1-3 ... *எனது இனத்தாருக்காய் மிகுந்த மன வேதனை*
10:1 ... *விருப்பம் ... ஜெபம் ... அவர்கள் இரட்சிப்பு*
15:16-20 ... *வார்த்தை ... செய்கை ... புறவினத்தார் ...*
மற்றவரது அஸ்திபாரம் மீதல்ல ...
1 கொரி 3:9-13 ... *புத்தியுள்ள சிற்பாசாரி ... அஸ்திபாரம்*
2 கொரி 10:13-16 ... *பிறரது எல்லைக்குள் அல்ல ...*
தொலைவிடங்கள் ...

மிஷனரிச் சிந்தை, புதிய பணிகள், கன்னி நிலங்கள், நடைமுறை ஞானம், முதலியன.

2. *தேவ ஊழியர்களுக்கு மேய்ப்பன்*

கொலோ 4:7-17 ... *தீகிக்கு, ஒநேசிமு, மாற்கு, யுஸ்து, எப்பாப்பிரா, லூக்கா, தேமா, நிம்பா, அர்க்கிப்பு*

2 தீமோ 2:2 ... *என்னிடமிருந்து நீ ... உண்மையுள்ளோர் ...*

தலைவர்களுக்குத் தொண்டாற்றும் தலைவன், வழிகாட்டி, கண்காணி.

3. *ஏமாற்றங்களினால் சோர்புறாத தலைவன்*

1 கொரி 4:8-20 ... *அப்போஸ்தலர் கடைசி ... பைத்தியக்காரர் ... வையப்படுகிறோம் ... உலகின் குப்பை*

பிறர் நலனுக்காய் எதையும் தியாகம் செய்ய ஆயத்தமானவன் (1 கொரி 9:19-23)

4. *தெய்வீக அதிகாரத்தோடும் கண்டிப்போடும் திருத்தும் தகப்பன்*

1 கொரி 4:14 ... *எனக்குப் பிள்ளைகளென்று புத்தி சொல்கிறேன்*

4:21 ... *பிரம்பு ... சாந்தமுள்ள ஆவி ...*

5:1-5 ... *பாலியல் நடத்தைக் கேடு*

1 தீமோ 1:20 ... *அவர்களைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன்*

5. *பிரசங்கிப்பதும் போதிப்பதும் இணைந்த அருட்செய்தியாளன்*

1 தீமோ 2:7 ... *பிரசங்கி ... அப்போஸ்தலன் ... போதகன்*

2 தீமோ 1:11 ... *பிரசங்கி ... அப்போஸ்தலன் ... போதகன்*

2 கொரி 12:11-13 ... *அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் ... பொறுமை ... பலத்த செய்கைகள்*

எபேசியர் 4:13இன் மற்ற ஊழியங்களாகிய தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் ஆகிய நான்கையும் ஓரளவு நிறைவேற்றுவான்.

6. *இறைமக்களுக்குச் சவாலிட்டுத் தூண்டுபவன்*

1 தீமோ 4:14 ... *மூப்பர் ... வரம் ...*

2 தீமோ 1:6-8 ... *வரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடு*

ரோ 10:14,15 ... *அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?* (4 கேள்விகள்)

7. *மற்றவர்களை அகத்தூண்டும் மாதிரியானவன்*

1 கொரி 4:16; 11:1,2; பிலி 3:17

என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்!

பிலி 4:9 ... *என்னிடம் கற்றவை ... கண்டவை ...*

குறிப்பு:

அப்போஸ்தலர் பொதுவாகச் சலன ஊழியரே;
அவர்களை உள்ளூர்ச் சபையில் அடைத்துவைக்க முடியாது.
''அப்போஸ்தலன்'' எனும் கிரேக்கச் சொல்லிற்குப் பொருள், ''அனுப்பப்பட்டவன்'' என்பதாகும்.
நவீன மொழியாக்கம் ஒன்றில் ''திருத்தூதுவர்'' என்ற சொல் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Marks of an Apostle

1. A Pioneer in Church-planting
2. A shepherd for servants of God
3. A leader not discouraged at disappointments
4. A father: Strict disciplinary measures with divine authority
5. A communicator with the combined gift of preaching & teaching
6. A motivator to challenge God's people
7. An example to inspire others

Ma

161

இறைப்பாணியில் இறைப்பணி

God's Work God's Way

(நெகேமியா புத்தகத்திலிருந்து படிப்பினைகள்)

முகவுரை

தேவனது பணியைத் தேவனது பாணியில் எப்படிச் செய்வதென்று விளக்குவதில் **நெகேமியா** புத்தகம் முன்நிற்கிறது.

எருசலேமின் தகர்ந்த மதில்களைத் திரும்பக் கட்டுவதே இங்கு பணி (1:2,3). கட்டுவதைவிட திரும்பக் கட்டுவது கடினம்.

13 அத்தியாயங்களுள்ள இப்புத்தகத்தில் 10 முக்கிய வாசகங்கள் **வெற்றியுள்ள ஊழியத்தின்** இரகசியங்களை வரிசைப்படுத்துன்றன.

இக்குறிப்புகளைப் படிக்குமுன் ஒரு தடவையாவது நெகேமியா புத்தகத்தை முழுவதும் வாசித்துவிடுங்கள்.

1) ''பிறவினத்தவரையெல்லாம் நீக்கிச் சுத்திகரித்தேன்.''

(13:30)

தேவ பக்தி, பரிசுத்தம், நன்னடக்கை

1:6,7 ... *உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்தோம் ...*
9:1,2 ... *உபவாசம் ... விட்டுப் பிரிதல் ... பாவ அறிக்கை*
13:3,4,8,9 ... *அறைகளைச் சுத்தம்பண்ணினேன்*
:17,21 ... *பரிசுத்தக் குலைச்சல் ... கடிந்துகொண்டேன்*
:23-30 ... *புறவினப் பெண்களால் சாலொமோனின் பாவம் ...*
பெரிய பொல்லாப்பு ... ஆசாரியப் பணிக்குத் தீட்டு

2) ''தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்.''

(4:20)

தேவனைச் சார்ந்திருத்தல், ஜெபத்தில் தரித்திருத்தல்

1:4 ... *அழுது ... உபவாசித்து ... மன்றாடி ...*
2:4 ... *பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்*
4:9 ... *எங்கள் தேவனை நோக்கி ஜெபம்*
:16-18 ... *ஒரு கையால் வேலை ... மறு கையில் ஆயுதம்*

5:19; 13:14,22,31 ... *என் தேவனே, என்னை நினைத்தருளும் ...*
6:9 ... *தேவனே, என் கைகளைத் திடப்படுத்தும்*

3) ''வேலை செய்ய மக்கள் ஆவலாயிருந்தார்கள்.''

(4:6)

மனவிருப்பம், தன்னார்வம்

2:17,18 ... *கட்டுவோம், வாருங்கள், என்றேன் ...*
எழுந்து கட்டுவோம் என்றனர்
3:1 ... *பிரதான ஆசாரியன் ... ஆசாரியர்கள் ... கட்டினார்கள்*

4:10,23 ... *மண்மேடு மிச்சமாயிருக்கிறது ...*
நாங்கள் துணி மாற்றாதிருந்தோம்

4) ''ஆலயத்தைப் பராமரியாமல் விடமாட்டோம்.''

(10:39)

உண்மை, உத்தமம், கடமையுணர்வு

3:20 ... *மிகக் கவனமாய்ப் பழுதுபார்த்தான்*
7:2 ... *உண்மையுள்ளவன், தேவனுக்குப் பயந்தவன்*
13:13 ... *பொக்கிஷ அறைகள் ... விசாரிப்பு ... உண்மையுள்ளோர்*

5) ''ஒரு வயலையாவது நாங்கள் வாங்கவில்லை.''

(5:16)

தன்னலமின்மை

5:14,15 ... *பன்னிரு ஆண்டுகள் ... தேவனுக்குப் பயந்ததால்*
அதிபதிகள் வாங்கும் படியைச் சாப்பிடவில்லை ...

6) ''கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பலம்.''

(8:10)

மகிழ்ச்சி, களிப்பு

8:17 ... *மிகுந்த சந்தோஷம்*
12:27 ... *துதி ... பாடல் ... வாத்தியங்கள் ... மகிழ்ச்சி ...*
கொண்டாட்டம்
:40-43 ... *துதிக்கும் கூட்டத்தார் ... மிகுதியான பலிகள் ...*
சத்தமாய்ப் பாட்டு ... களிப்பு ...

7) ''உள்ளே போய்ப் பதுங்கமாட்டேன்.''

(6:11)

அச்சமின்மை, தைரியம்

4:14 ... *பயப்படாதிருங்கள் ... மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினையுங்கள் ... யுத்தம் பண்ணுங்கள்*
6:12-14 ... *கள்ளத் தீர்க்கதரிசிகளின் அச்சுறுத்தல்*

8) ''எங்கள் தேவன் சாபத்தை ஆசீர்வாதமாய்த் திருப்பினார்.''

(13:2)

சாதகச் சிந்தை

2:19,20 ... *பரலோகத்தின் தேவன் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்*

9) ''நான் இறங்கி வரக்கூடாது.''

(6:3)

மனவுறுதி, நிலைத்திருப்பு

6:1-5 ... *திசை திருப்ப ஐந்து முறை முயற்சி*

10) ''ஆமென், ஆமென்!''

(8:6)

துதியின் ஆவி, திருவசன நிறைவு

8:6 ... *கைகளைக் குவித்து ... குனிந்து ... முகங்குப்புற விழுந்து கர்த்தரைப் பணிந்தனர்*
:18 ... *தினம் தினம் தேவனது புத்தகம் வாசிக்கப்பட்டது*
9:3 ... *ஆறு மணி நேரம் வாசிப்பு, ஆறு மணி நேரம் துதி*
13:1,2,26 ... வேத எடுத்துக்காட்டுகள் மூலம் எச்சரிப்பு: *பிலேயாம், சாலொமோன்*

■ ***முடிவுரை***

தேவன் நமக்குக் கடினமான வேலைகள் தருகிறார்.
இல்லையேல் அதில் சவால் இருக்காதே!
அவரைக் கனப்படுத்தும் இத்தத்துவங்களை மட்டும்
நாம் கைக்கொண்டால் பணியை முடித்துவிட உதவுவார்.

(97ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

162

சீடரிடமிருந்த சீரற்றவை

Defects in the Disciples

முகவுரை

இயேசுவின் சீடரை உயர் ரகத்தினர் என்று சொல்லமுடியாது.
அவர்கள் எந்நிலையிலும் பூரணத்தை எட்டாதவர்களே.
அவரோ அவர்களோடு பொறுமையாய்ச் செயல்பட்டார்.
அவர்களது குறைகளைச் சுவிசேஷங்கள் மூடிமறைக்கவில்லை.
அவர்களது தோல்விகளிலிருந்து நாம் கற்றுக்கொண்டு,
சீரற்றவற்றை நமது வாழ்வில் ஒதுக்கவேண்டுமென்பதே நோக்கம்.

■ சீடர்களிடமிருந்த சீரற்ற காரியங்கள் —

1. விசுவாசக் குறைவு (Faithlessness)

- மாற் 8:13-21
  தேவனது முந்திய செயல்களை அவர்கள் மறந்ததே காரணம்.
  இயேசு 9 கேள்விகள் கேட்டு அவர்களைக் கடிந்துகொண்டார் —
  வச 17-21 ... ? ... ? ... ? ... ? ... ? ... ? ... ? ... ? ... ?
- மாற் 4:35-40
  தேவனது வாக்கை அவர்கள் மறந்ததே காரணம்.
  ''அக்கரைக்குப் போவோம்'' என்றால்
  கடலில் மூழ்கிவிடமாட்டோம் என்றுதானே பொருள்?

  தேவன் நமக்குத் தரும் நடத்துதலே
  அவர் முற்றுமுடியப் பொறுப்பெடுப்பார் என்பதின் நிச்சயம்.

2. ஜெபக் குறைவு (Prayerlessness)

- மத் 26:36-45 ... *விழித்திருந்து ஜெபம் ... சோதனை ...*
  தூக்கமயக்கத்தின் விளைவு.
  மாற் 14:41 ... *''இன்னுமா தூங்குகிறீர்கள்?''*
  போதும்!
- நமக்கு ஓய்வு தேவைதான்;
  அதிகத் தூக்கமோ ஆன்மீகத் தரித்திரத்திற்குத்தான் நடத்தும்.

நீதி 20:13 ... *''தூக்கத்தை விரும்பாதே; விரும்பினால் தரித்திரனாவாய்; கண் விழித்திரு, அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்''*

துயிலெழுவோர் பொதுவாக ஆன்மீகப் பயிற்சிகளில் ஓங்கியிருப்பர்.

3. *தொழுகைக் குறைவு* (Worshiplessness)

- மத் 26:6-10
  விலையுயர்ந்த தைலத்தைத் தொழுகையின் (worship) வெளிப்பாடாக இயேசுவின்மீது ஊற்றிய அப்பெண்ணை மெச்சமுடியவில்லை; அதை வீண் செலவு (waste) என்றனர்.
- தங்களது ஆண்டவருக்காய்ப் பயபக்தியையும் தியாகத்தையும் கூட்டுவதற்குப் பதிலாக, *''**எங்களுக்கு** என்ன கிடைக்கும்?''* என்றனர் (மத் 19:27)
- நமது தனிப்பட்ட பயபக்தி குறையும்போது, தொழுகையில் திளைப்போரை ஊக்குவிப்பதற்குப் பதிலாக அவர்களைத் *''தொந்தரவு''* செய்வோம் (மத் 26:10)
- ''தேவனுக்கு மகிமையுண்டாக'' என்பதே நமது வாழ்வின் குறிக்கோளாய், முழக்கமாய் இருக்கவேண்டும் (பிலி 2:11; 1 கொரி 10:31)

4. *மன்னியாமை* (Unforgiveness)

- மத் 18:21,22,35 ... *''எத்தனை முறை மன்னிப்பது?''*
  அடிக்கடி தவறிழைக்கும் சகோதரனை மன்னிப்பதில் தனக்கிருந்த சிரமத்தை இங்கு பேதுரு வெளிப்படுத்துகிறார்.

  இவ்விதச் சூழலில்,
  திரும்பத் திரும்ப மன்னிக்கமுடியாததைச் சீடர் ஒப்புக்கொண்டு, *''எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்''* என்று வேண்டினர் (லூக் 17:3-6)

  அவர்களிடமிருந்த *''கடுகு விதையளவு''* விசுவாசத்தை முதலாவது அப்பியாசிக்கச் சொன்னதே இயேசுவின் பதில் —

  அதாவது, சிறிய குற்றங்களை மன்னித்துப் பழகுங்கள்;
  பெரிய காரியங்களில் தடுமாற மாட்டீர்கள்.
- இயேசுவின் சீடருக்கு அடையாளமே அன்புதான் (யோ 13:35)

5. *போட்டி மனப்பான்மை* (Competitiveness)

- மாற் 9:30-37 ... *வாக்குவாதம் ... நம்மில் யார் பெரியவர்?*

  அடுத்த அத்தியாயத்திலேயே —
  10:35-45 ... *வலதிடது பக்க ஆசனங்கள்*

  முந்திய அத்தியாயத்தில் போதித்ததையே
  இயேசு திரும்பச் சொல்ல வேண்டியதாயிற்று —
  9:35ஐயும் 10:43ஐயும் ஒப்பிடுக.

  தங்களது ஆண்டவரின் பாரம் அவர்களுக்குப் புரியவில்லை —
  மாற் 9:31,32; லூக் 22:14-27
- இறைமக்களிடையே, அதிலும் இறைப்பணியாளரிடையே, போட்டியானது எல்லாத் தீங்குக்கும் வழிவகுத்துள்ளது.

  ஒரு முக்கிய படிப்பினை —

  எனக்கென்று தேவன் நியமிக்காத இடத்திற்கு எவரும்
  என்னைத் தூக்க முடியாது (மாற் 9:40);
  என்னைத் தேவன் வைத்திருக்கும் இடத்திலிருந்து எவரும்
  என்னை இறக்க முடியாது!

6. *தேவையற்ற தலையீடு/ஆர்வம்* (Inquisitiveness)

- யோ 21:20-22 ... *''ஆண்டவரே, இவன் காரியம் என்ன?''*

  இதனால் சீடருக்குள் தேவையற்ற மனவேறுபாடுகளும் யூகங்களும் உருவாயின (வச 23).

  பிறர் மீது ''கவலை'' அல்லது ''கரிசனை'' என்ற போர்வையில் நாம் பிறரது விவகாரங்களில் தேவையின்றித் தலையிடுகிறோம். இது வீண் பேச்சுக்குத்தான் வழி வகுக்கும்.
- *''வீணலுவற்காரராய்''* இருக்கக்கூடாதென வேதம் எச்சரிக்கிறது —
  2 தெச 3:11; 1 தீமோ 5:13; 1 பேது 4:15

7. *இரக்கமின்மை* (Compassionlessness)

- காலை முதல் மாலை வரை வனாந்திரமான பகுதியில் மக்கள் இயேசுவோடு தங்கியிருந்தபோது, *''ஜனங்களை அனுப்பிவிடும்''* என்று சீடர்கள் தந்திரசாலிகளாய் இயேசுவுக்கு ஆலோசனை கூறினர்.

  ஆனால் அவர்களைப் பசியோடு அனுப்பிவிட இயேசுவின் ''இரக்க மனது'' இடம் தராது (மத் 14:13-16)

- சமாரியரின் கிராமத்தில் மக்கள் இயேசுவை ஏற்க மறுத்தபோது, உடனே வானத்திலிருந்து அக்கினி வந்து அவர்களை அழிக்க வேண்டுமெனச் சீடர் துடித்தனர். அவர்களது *''ஆவியை''* இயேசு கடிந்துகொண்டார் (லூக் 9:51-56)

- உலகை இவ்வளவாய் நேசித்துத் தேவன் தமது குமாரனைத் தந்தார் ...
  சபையை இவ்வளவாய் நேசித்து இயேசு தம்மையே தந்தார் ...
  அன்பில்லையேல் எல்லாம் வீண் (1 கொரி 13:1-3)

8. *தைரியமின்மை* (Couragelessness)

- மத் 26:69-75
  சீமோன் பேதுரு மறுதலித்தான் ... சத்தியம் பண்ணினான் ... சபித்தான்

நமது தைரியம் ஆட்டங்காணும் வேளைகள் வரலாம் —

☐ ஒருவரையொருவர் ஜெபத்தில் தாங்கவேண்டும்
எபே 6:19; அப் 4:29

☐ திருவாக்குகளை நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் — யோசு 8:1; ஏசா 35:3,4; 41:10; ஆகாய் 2:5

☐ *தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைத் தரவில்லை*
2 தீமோ 1:7 ... *அனல் மூட்டி எழுப்பிவிடுங்கள்*

9. *குறுகிய மனப்பான்மை* (Narrowmindedness)

- மாற் 9:38-40 ... *நம்மைப் பின்பற்றாதவன் ... தடுத்தோம்*
  குழுவெறிக்கு (groupism) இயேசு எதிரானவர்.

இறைத்திட்டத்தின் பரந்த நோக்கைச் சீடர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

- பவுலின் பெருந்தன்மை —
  பிலி 1:15-18 ... *எப்படியாவது கிறிஸ்து பிரசங்கிக்கப்படுகிறார்*

  நெடுகவே நமது மனப்பான்மை இப்படியே இருக்கவேண்டும் —
  வச 18 ... *''சந்தோஷப்படுகிறேன் ... சந்தோஷப்படுவேன்''*

10. *பூவுலகச் சிந்தை* (Earthlimindedness)

- மத் 16:21-24 ... *தேவனுக்குரியவை ... மனிதருக்குரியவை*
  ''சிலுவையில்லாத'' மார்க்கம் சாத்தானின் மார்க்கம்
  (பிலி 3:17-21)

- *''பரலோகக்'' குடிகளாய் நமக்குத்* தற்காலத் தங்கல்தான் இங்கு!
  மனிதப் பாரம்பரிய வழக்கங்களை இறைப்பணியில் புகுத்தாதிருங்கள் — *''மனிதருக்குரியவை''*

■ *முடிவுரை*

இப்படியிருந்த சீடரை இயேசு மாற்றிவிட்டார் —

பேதுரு: 2 பேது 1:3,4 ... *தெய்வீக சுபாவத்தில் பங்கு*
யோவான்: 1 யோ 2:15-17 ... *பிதாவின் அன்பு ... தேவ சித்தம்*

நம்மையும் இவ்விதமே மாற்றிவிட அவரால் முடியும்!

163

தள்ளப்பட்ட தலைவன்

A Rejected Leader

முகவுரை

இஸ்ரவேலில் முதல் அரசன் சவுல்.

அவனது சரிதை: 1 சாமு 9-31

நாற்பது ஆண்டுகள் இஸ்ரவேலரை ஆண்டான் (அப் 13:21)

சவுலை ராஜாவாக்கினதற்காய்த் தேவன் *''மனத் துயரம்''* கொண்டார் —
1 சாமு 15:11,35

முடிவில் தேவன் அவனைத் தள்ளினார் —
1 சாமு 15:23

1 சாமுவேல் 13,14,15இல் காணப்படும் அவனது தீயகுணங்கள் —

1. தோற்றத்தில் கம்பீரம்,
ஆனால் ஆன்மீகத்தில் குள்ளன்

10:23,24 ... *எல்லாரையும்விட உயரமானவன் ...*
அவனைப்போல் யாருமில்லை

14:35 ... *கர்த்தருக்குப் பலிபீடம் கட்டினான்*

15:15 ... சாமுவேலிடம்: *உமது தேவனாகிய கர்த்தருக்கு ...*

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பழகவில்லை —

15:22 ... *கர்த்தருடைய சத்தத்திற்கு ...*

:23 ... *கர்த்தருடைய வார்த்தையை ...*

2. பிறர்மீது கண்டிப்பு,
ஆனால் தன்மீது கனிவு

14:24 ... *ஆணை ... சபிக்கப்பட்டவன் ...*

:43,44 ... *நீ சாகத்தான் வேண்டும்*

15:9 ... *நலமானதை அழித்துப்போட மனதில்லாமல்*

3. சொந்த மதிப்பைக் குறித்துக் கவலை,
ஆனால் தேவ மகிமை குறித்து அசட்டை

15:12 ... *தனக்கு ஒரு ஜெயக் கோபுரம் கட்டி ...*

:30 ... *பாவம் செய்தேன் ... என்னைக் கனம்பண்ணும்*

:11 ... *என்னை விட்டுத் திரும்பினான் ...*
என் வார்த்தைகளை நிறைவேற்றவில்லை

:22 ... *கீழ்ப்படிதலே உத்தமம்*

4. தேவைக்கு ஆள் சேர்ப்பது,
ஆனால் இக்கட்டில் அவர்களைக் கைவிடுவது

14:52 ... *பராக்கிரமசாலி ... பலசாலி ... தன்னிடம்*

15:4 ... *2,00,000 காலாட்கள் ... 10,000 யூதா மக்கள்*

:15,21 ... *மக்கள்மீது பழி சுமத்தினான்.*

13:22,23 ... மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கவில்லை ...
தனக்கும் மகனுக்கும் மட்டும் பட்டயம், ஈட்டி

5. பிரச்னையின்போது ஊழியரைத் தேடுவது,
ஆனால் பின்னர் அவர்களை நினையாதது

15:27 ... *சாமுவேலின் சால்வையைச் சவுல் பிடித்தான்*

:30 ... சாமுவேலிடம்: *என்னோடு திரும்பி வாரும்*

13:8-13 ... சாமுவேல் வரும்வரை காத்திருக்கவில்லை (10:8)

■ ***முடிவுரை***

தலைமை ஒரு சிலாக்கியம்;
அதில் நிறைய பொறுப்பு உண்டு.

திருச்சபையிலும் திருப்பணிகளிலும்
தலைமை சாதாரணமானதல்ல.

தேவன் கிருபையினால் தலைவனைத் தேர்ந்தெடுக்கிறார்.
அவன் தாழ்மை, நேர்மை, திருவசனத்திற்குக் கீழ்ப்படிதல்,
சேவை மனப்பான்மை ஆகியவற்றைத் தக்கவைக்காவிடில்
தள்ளப்படுவான்.
தேவனுக்கு இன்றியமையாதவர் எவருமில்லை.

164

''ஐயோ!''

Ten "Woes"

வேதபாரகர், பரிசேயர், மாயக்காரர் மீது கிறிஸ்து பொழிந்த ''ஐயோ'' எனும் சொல் மத்தேயு 23 மற்றும் லூக்கா 11இல் 10 முறை வருகிறது. திருச்சபையின் தலைவர்களிடம் இயேசுவின் கண்டிப்பை இது காட்டுகிறது. சங்கீதம் 23ஐ நேசிப்பது நல்லது; மத்தேயு 23ஐயும் வாசிப்பது அவசியம்.

1. *ஐயோ!* உன்னதமான காரியங்களைப் பிரசங்கித்து,
இவ்விதம் மக்களை அதிகம் செய்யச் சொல்லி, ஆனால்
ஒரு சொட்டுகூட அப்பியாசியாத பிரசங்கிமாருக்கு ...
(மத் 23:1-5 / லூக் 11:46)

2. *ஐயோ!* மேன்மையான ஆசனங்கள், பட்டங்கள், வந்தனங்கள்
போன்றவற்றிற்காய் அலைவோருக்கு ...
(மத் 23:6-12 / லூக் 11:43)

3. *ஐயோ!* தங்களுக்கு அவை நன்றாய்த் தெரிந்திருந்தும்
இறையரசின் ஆசிகளையும் சிலாக்கியங்களையும்
மக்களை அனுபவிக்க விடாது தடுப்போருக்கு ...
மக்களது உரிமைகளை மறைப்போருக்கு ...
(மத் 23:13 / லூக் 11:52)

4. *ஐயோ!* நீண்ட ஜெபங்கள் பண்ணி எளியோரையும்
விதவைகளையும் ஏமாற்றுவோருக்கு ...
நாதியற்றோர், உதவியற்றோரை வசப்படுத்துவோருக்கு ...
(மத் 23:14)

5. *ஐயோ!* விறுவிறுப்பாய்த் தங்கள் குழுக்களுக்கும் சபைகளுக்கும்
நிறைய ஆள் சேர்த்து, ஆனால் அவர்களைக்
கட்டியெழுப்பத் தங்களை வார்க்காதோருக்கு ...
சேருகிறவர்கள் நமது தீய வழிகளைத்தான் கற்கின்றனர்.
(மத் 23:15)

6. *ஐயோ!* அர்த்தமற்ற, மதியீனச் சடங்காச்சாரங்களை
மக்களுக்குப் போதித்து அடிமைகளாக்குவோருக்கு ...
(மத் 23:16-22)

7. *ஐயோ!* நியாயப்பிரமாணத்தின் எழுத்தைப் பிடித்துக்கொண்டு
அதின் கருத்தை விட்டுவிடுவோருக்கு ...
(மத் 23:23,24 / லூக் 11:41,42)
எளியோரைப் பராமரிக்காதோருக்கு ... (லூக் 11:41)

8. *ஐயோ!* உள்ளில் பரிசுத்தம் இல்லாது வெளியில் பக்திப்
பூனைகளாய் நடிப்போருக்கு ...
(மத் 23:25,26 / லூக் 11:39,40)

9. *ஐயோ!* பொது வாழ்வில் அலங்காரம்,
ஆனால் தனி வாழ்வில் அலங்கோலமாயிருப்போருக்கு ...
(மத் 23:27,28 / லூக் 11:44)
பெயருக்கு உயிர், ஆனால் மூளைச் சாவு!

10. *ஐயோ!* உண்மை நிலையைக் கூறி வெளிப்படுத்தும்
உண்மையான தீர்க்கர்களை வெறுத்துத் தள்ளி
அவர்களைக் கொல்லுவோருக்கு ...
(மத் 23:29-39 / லூக் 11:47-51)

இவைகளிலிருந்து மனந்திரும்பினால் ஆண்டவர் நம்மைப் பார்த்து *''ஐயோ''* என்று சொல்லாமல் *''நல்லது''* என்று பாராட்டுவார்.
(Not "Woe" but "Welldone!")

165

தேவ ஊழியருக்குத் தற்பரிசோதனை

Questions for the Servants of God

1. பின்பற்றத் தகுதியான ***''தலைவனாய்''*** இருக்கிறேனா?
2. கேட்கத் தகுதியான ***''பிரசங்கியாய்''*** இருக்கிறேனா?
3. கீழ்ப்படியத் தகுதியான ***''கணவனாய்''*** இருக்கிறேனா?
4. மதிக்கப்படத் தகுதியான ***''தந்தையாய்''*** இருக்கிறேனா?
5. நம்புவதற்குத் தகுதியான ***''உக்கிராணனாய்''*** இருக்கிறேனா?
6. ஒப்புவிக்கத் தகுதியான ***''மேய்ப்பனாய்''*** இருக்கிறேனா?
7. ஒத்துழைக்கத் தகுதியான ***''பணியாளனாய்''*** இருக்கிறேனா?
8. நம்பத் தகுதியான ***''நண்பனாய்''*** இருக்கிறேனா?
9. மெச்சப்படத் தகுதியான ***''சீமானாய்''*** இருக்கிறேனா?
10. வாழத் தகுதியான ***''மனிதனாய்''*** இருக்கிறேனா?

இக்கேள்விகளை ஓர் அட்டையில் எழுதி
வேதப்புத்தகத்திற்குள் வைத்துக்கொண்டு
அடிக்கடி உங்களை ஆராய்ந்து பாருங்கள்.

தேவ ஊழியர் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளாவிடில்
தேவ மக்கள் பரிசுத்தமாக மாட்டார்கள் (யோ 17:19)

நான் என்னைப்பற்றி என்ன நினைக்கிறேன்,
மக்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்,
இவையெல்லாவற்றையுவிடத்
தேவன் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதே காரியம்!

166

இயேசுபோல் நன்றாய் முடிப்பது எப்படி?

How to Finish Well like Jesus

முகவுரை

இயேசு: *''நீர் நியமித்த வேலையை முடித்தேன்''* (யோ 17:4)
''முடிந்தது'' (யோ 19:30)

நன்றாய் முடிப்பது எப்படி?

இயேசுவின் வாழ்விலிருந்து படிப்பினைகள் —

1. ஒப்புக்கொடுத்தல் (தேவனுக்கு) (Consecration)

எபி 10:5-7 ... *ஓர் உடல் ... இதோ உம் சித்தம் செய்ய வருகிறேன்*
யோ 17:19 ... *என்னை நானே பரிசுத்தமாக்குகிறேன்*
யோ 8:28,29 ... *நானாக எதையும் செய்வதில்லை ...*
அனுப்பினவரையே பிரியப்படுத்துகிறேன்
உதவி: அடிக்கடி தற்பரிசோதனை

2. அர்ப்பணிப்பு (வேலைக்கு) (Commitment)

யோ 4:34 ... *அவரது வேலையை முடிப்பதே எனக்குணவு*
9:4 ... *நான் பணியாற்றவேண்டும் ... இரவு வருகிறது*
17:4 ... *உம்மை மகிமைப்படுத்தினேன் ...*
நீர் நியமித்த வேலையை முடித்தேன்
நடுவயதில் ஏற்படும் தளர்வுக்கு எச்சரிக்கை!

3. தெளிவு (விசுவாசத்திலும் செயல்பாட்டிலும்) (Clarity)

யோ 4:22 ... *நாங்கள் அறிந்திருக்கிறதைத்*
தொழுதுகொள்ளுகிறோம்.
லூக் 4:42,43 ... *மற்ற பட்டணங்களிலும் பிரசங்கிக்கவேண்டும்*
... இதற்காகவே அனுப்பப்பட்டேன்
யோ 18:37 ... *இதற்காகவே பிறந்தேன்*

தரிசனம் மங்குதல்.
தரிசனம் விட்டுத் தரிசனம் தாவுதல்.
அழைப்பும் வரங்களும்.

4. ***மன நிச்சயம்*** *(மெய்யாகவே மெய்யாகவே)* (Conviction)

லூக் 4:24 ... *சொந்தவூரில் தீர்க்கதரிசிக்கு மதிப்பில்லை*
யோ 12:24 ... *கோதுமை மணி சாகாவிட்டால் ...*
மத் 26:51-54 ... *நான் ஜெபிக்க முடியாதா? அப்படியானால் வேத வாக்கியம் நிறைவேறுவதெப்படி?*

5. ***தைரியம்*** (Courage)

மத் 22:16 ... *சத்தியமாய், ஆள் பாராது உபதேசம்*
லூக் 13:31-33 ... *அந்த நரிக்குச் சொல்லுங்கள் ...*
9:51-53 ... *எருசலேமுக்குப் போக முகத்தைத் திருப்பி ...*
யோ 4:12 / 8:53 ... *யாக்கோபு, ஆபிரகாமைவிடப் பெரியவரோ?*
(முன்னேற்றத்திற்காய் எதையும் மாற்றத் துணிந்தார்.)

6. ***கவனம்/எச்சரிக்கை/விழிப்பு*** (Carefulness / Cautiousness)

யோ 2:24,25 ... *மனிதரது உள்ளில் இருப்பதை அறிந்திருந்தார்... அவர்களுக்கு இணங்கவில்லை*
மத் 22:16-18 ... *என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?*
22:18 ... *அவர்களது துர்க்குணத்தை அறிந்து ...*
மாற் 12:15 ... *அவர்களது மாயத்தை அறிந்து ...*
லூக் 20:23 ... *அவர்களது தந்திரத்தை அறிந்து ...*

மத் 4 — மூன்று சோதனைகள் — திருவசனம்
(விழித்திருந்து ஜெபம் ... பலக்குறைவான உடல்)

எல்லாரையும், எல்லாவற்றையும், இயேசு சந்தேகித்தார் என்பது இங்கு பொருளல்ல.

7. ***தோழமை/நட்பு*** (Comradeship)

"அவர்கள் அவரோடு இருக்கும்படி ..." (மாற் 3:14)

ஊழியத் துவக்கத்திலேயே உடன் ஊழியரைச் சேர்த்தார் —
மத் 4:17-19 ... *பேதுரு ... அந்திரேயா ...*

முக்கியமானவைகளை அவர்களோடு பகிர்ந்துகொண்டார் —
யோ 15:15 ... *வேலைக்காரரல்ல, சிநேகிதர்*

தமது வேதனைகளை அவர்களோடு பகிர்ந்துகொண்டார் —
மத் 26:36-38 ... *என்னோடு விழித்திருங்கள்*

தமது ஊழியத்தை அவர்களோடு பகிர்ந்துகொண்டார் —
லூக் 10:1 / மத் 28:19,20 / மாற் 16:20

8. ***திருப்தி/மனநிறைவு*** (Contentment)

பதட்டம், பேராசை போன்றவற்றிலிருந்து விடுதலை.
மத் 15:13,14 ... *என் பிதா நடாத நாற்றெல்லாம் ...*
யோ 6:66-68 ... *நீங்களும் போய்விட மனதோ?*
திருமுழுக்கினன் யோவானது மனதும் இப்படியே (யோ 3:25-27)

9. ***தடுமாற்றமின்மை*** (Consistency)

தமது பிரதானப் பணியிலிருந்து இயேசு வழிவிலகவில்லை.
மாற்றிக்கொண்டேயிருத்தல், ஆட்டங்காணுதல் கிடையாது.
யோ 13:1 ... *முடிவுவரை சீடரைக் குறையாது நேசித்தார்.*
துவக்கம் முதல் முடிவு வரை ஆத்துமாதாயகராய்த் திகழ்ந்தார் — சிலுவையில்கூட!

அன்றும் இன்றும் மன்றாடுகிறார் (ஏசா 53:12 / எபி 7:24,25)
"நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்" (எபி 13:8)

10. ***பற்றுறுதி*** (Confidence)

யோ 13:3 ... *பிதாவானவர் எல்லாவற்றையும் தம்மிடம் ஒப்புவித்திருக்கிறார் என்றறிந்து ...*

அ) வேலையாள் போல் குனிந்தார் (யோ 13:4,5)
ஆ) பிசாசுக்குமுன் குனிய மறுத்தார் (லூக் 4:5-8)

யோ 19:10,11 ... *உன்னதத்திலிருந்து கொடுக்கப்படாவிடில்* பிலாத்துவுக்கோ பிராதுபண்ணுவோருக்கோ அதிகாரமில்லை

லூக் 23:46 ... *"பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ..."*

பதட்டமில்லை, ஏனெனில் ரோ 8:28-30!

முடிவாக, *யாவும் நன்மைக்கே!*

J

167

கிறிஸ்துமஸ் சிலுவைகள்

Christmas Crosses

முகவுரை

கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்ட நாட்களில் பிரபலமானவை —

Christmas Cards	கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள்
Christmas Carols	கிறிஸ்துமஸ் பாடல் பவனிகள்
Christmas Candles	கிறிஸ்துமஸ் மெழுகுவர்த்திகள்
Christmas Cakes	கிறிஸ்துமஸ் கேக்

Christmas Celebrations, Carnivals, Concerts, Competitions
விற்பனைகள், பாடல்கள், போட்டிகள், முதலியன.

ஆனால் எனது சமீபத்திய வேதத் தியானம் ஒன்றில்
''கிறிஸ்துமஸ் சிலுவைகளைக்'' கண்டேன்.

இது விகற்பமாய்த் தோன்றலாம்;
ஆனால் இதுதான் கிறிஸ்துமஸின் மறுபக்கம்;
இது இல்லையேல் ஒட்டுமொத்த விளக்கம் நமக்குக் கிடைக்காது.

கிறிஸ்துமஸ் சரிதை விளக்கப்பட்டுள்ள வேத பகுதிகள் —
மத்தேயு 1 & 2
லூக்கா 1 & 2

ஐந்து சிலுவைகள் —

1. ***இன்பம் இல்லாத கர்ப்பம்*** (Pregnancy without Pleasure)

— இளம் பெண்ணுக்குக் கர்ப்பம் ஒரு பெருமிதம்.

— புகைப்படங்கள், பாராட்டுக்கள், விழாக்கள் நிறைந்திருக்கும்

— மரியாளின் கர்ப்பமோ வினோதம், கேள்விக்குரியது.

— சமூகத்தில் அவமானம் (மத் 1:18,19) —
இதுபோல் நடந்ததில்லை. (சாராளின் காரியம் வேறு.)

— மரியாளின் கணவருக்கும் திருப்தியடையாத நிலை —
10 மாதங்கள் அவளைத் தொடவில்லை (மத் 1:24,25)

— அவளது இனத்தாள் எலிசபெத்துக்கும் இதுபோன்ற நிலை:
கணவர் 10 மாதங்கள் பேச முடியவில்லை.

பெயரிடும் வைபவம் வரை, முதல் எட்டு நாட்களும், அதே நிலை!

- தேவன் நமக்குப் பல ஆசிகளைத் தந்திருந்தும் அவற்றைப் பல சமயங்களில் இயல்பாய் அனுபவிக்க முடியாதிருக்கிறோம்.

பெரும்பான்மையினர் அனுபவிக்கும்
நியாயமான இன்பங்கள்கூட நமக்கு எட்டுவதில்லை.

ஆனாலும் இவ்விதச் சூழலைக் கர்த்தரிடம் ஒப்படைத்தால்,
முடிவில் விளைவாய் வருவது விளங்க முடியா ஆசியாயிருக்கும் —

எ.கா.) பாலகன் யோவான் — ''தேவனது சத்தம்'' (Voice)
பாலகன் இயேசு — ''தேவனது வார்த்தை'' (Word)

உலகிற்கு நாம் ஆசீர்வாத வாய்க்கால்களாய் இருக்கவேண்டுமாயின், நசுக்கும் அனுபவங்களைத் தவிர்க்க முடியாது.

எனது சொந்த சாட்சி: பிரசவத்தில் பிரச்னையால் வலது கை சேதமாகிப் பிறந்த மகள். மனைவி: குழந்தைநல மருத்துவர்!

2. *வசதிகள் இல்லாத பிரசவம்* (Confinement without Comforts)

- நாசரேத்திலிருந்து (கலிலேயா) பெத்லகேமுக்கு (யூதேயா) பயணம்
லூக் 2:1-5 ... 50 மைல்களுக்குக் கூடுதல் தூரம்

— 400 ஆண்டுகள் அமைதியாயிருந்த தேவன்
மரியாள் கருத்தரிப்பதை ஒரு சில மாதங்கள்
தள்ளிப்போடச் செய்திருக்கமுடியாதா?

— முழுக் கர்ப்பிணி — துவக்க மாதங்களென்றாலும்
(லூக் 2:6) பரவாயில்லாமல் இருந்திருக்கும்.

- குமாரன் உருவாக ஒரு ''கருவறையைத்'' தேவன் ஆயத்தம்பண்ணினார் —

அவர் பிறக்க ஒரு ''பிரசவ அறையை'' ஆயத்தபண்ண
முடியாதா? *''சத்திரத்தில் இடமில்லை''* (லூக் 2:7)

- பாதகங்களின் சாதகம்! (Advantage of disadvantages)

— கிறிஸ்துவின் கடினமான வாழ்க்கைக்கு ஓர் ஆயத்தம்!
''இளம் பிராயத்தில் நுகம் சுமப்பது நல்லது'' (புல 3:27)
... *தேவனே அதைத் தன்மீது வைத்தார்!* (வச 28)
(33 வயதில் சிலுவை சுமந்தார்.)

— எளியவரோடு தம்மை அடையாளப்படுத்துவது
இயேசுவுக்கு எளிதாயிற்று.

எனது சொந்த அனுபவம்:
கல்லூரி நாட்களில் மிகக் குறைந்த ஆடைகள்.
பள்ளிச் சுற்றுலாக்கள் செல்லப் பணமின்மை.
வீட்டில் ஒழுகும் மச்சு, கதவுகளில்லா ஜன்னல்கள்,
மின்சாரம் கிடையாது ...
இன்று எளியவர்க்கு நான் செய்பவை!

அப்போஸ்தலர்: *''அநேகரைச் செல்வந்தராக்கும் தரித்திரர்''*
(2 கொரி 6:10)

— வசதிகள் உங்களை வசதியாயிருக்கச் செய்துவிடாது!
(காலே இல்லாத ஒருவனைப் பார்க்கும்வரை
எனக்குப் புது காலணிகள் இல்லையே என முறுமுறுத்தேன்!)

— ''எளிய வாழ்க்கை முறை, உயரிய சிந்தனை!''

— Dr. அப்துல் கலாம்:
ராமேஸ்வரம் பள்ளி → ராஷ்டிரபதி பவன்

3. *கீர்த்தி இல்லாத வம்சம்* (Lineage without Prestige)

- யூத வம்ச வரலாறுகளில் பெண்கள் பெயர்கள் இடம் பெறுவதில்லை; ஆனால் மத்தேயு 4 பெண்களைக் குறிப்பிடுகிறார் — அதில் இருவர் நடத்தைக் கேடுள்ளோர்!

அ) ராகாப் (மத் 1:5) — வேசி
ஆ) பத்சேபாள் (மத் 1:6) — அரசனது அழுத்தத்திற்கு
இணங்கியவள்

அவளது பெயர்கூட சொல்லப்படவில்லை —
''உரியாவின் மனைவியிடம் பிறந்த சாலொமோன்''

- பெத்லகேமில் பிறந்தார்
  — யூதேயாவின் 1000 பட்டணங்களில் சிறியது
  (மீகா 5:2 / மத் 2:6)

நாசரேத்தில் வளர்ந்தார் (மத் 2:23)
— *''நாசரேத்திலிருந்து நன்மையா?''*

தங்கள் இடம், இனம் குறித்து மார் தட்டுவோருண்டு.

உங்கள் எளிய பின்னணியைக் குறித்துக் கலக்கமா?

நினைவில் வைக்க —
''தேவன் தாழ்மையானவர்களை உயர்த்தினார்''
(மரியாளின் கீதம், லூக் 1:48,52)

அந்தஸ்து, அருகதை இல்லாதோரை தேவன் அழைக்கிறார் (1 கொரி 1:26-29); இயேசு அவர்களுக்கு எல்லாமுமாகிவிடுகிறார் (வச 30). *''எல்லாம் இயேசுவே!''*

- இயேசுவின் பொருளாதார நிலை —
  மரியாள் (ஆட்டுக் குட்டியல்ல, புறாக் குஞ்சுகள்) (லேவி 12:8)
  யோசேப்பு (தச்சன்).
  இயேசு (தச்சன் என்றழைக்கப்பட்டவர்)

- *இயேசு தம்மைத்தாமே தாழ்த்தினார் ... தேவன் உயர்த்தினார்!*
  கிறிஸ்துவிலிருந்த இச்சிந்தையே நம்மிலுமிருக்கட்டும்!
  பிலி 2:5-9

4. அற்புதங்கள் இல்லாத தேவதூதர் (Angels without Miracles)

- கிறிஸ்துமஸ் சரிதையில் தூதர் பங்கு முக்கியம். தமது மக்களுக்குத் தேவன் ஆற்றும் பணிகளே தேவதூதர்களின் சந்திப்புகள்.

தூதர் = *''இரட்சிப்பைச் சுதந்தரிப்போருக்குப் பணிவிடை ஆவிகள்''*
(எபி 1:14)

இரட்சிப்பையே அருளுபவரல்லவா இங்கு?
''இயேசு'' = ''தேவனே எனது இரட்சிப்பு''

தூதன் சொன்னது: *அவருக்கு* ***இயேசு*** *என்று பெயரிடு* (மத் 1:21)

இது தீர்க்கன் சொன்னபடியானது:
இம்மானுவேல் ... *''தேவன் நம்மோடு''* (வச 23)

- தேவன் நம்மோடு இருந்தால்,
  எகிப்திற்கும் கலிலேயாவுக்கும் யோசேப்பு ஓடுவானேன்?
  மத் 2:13 (ஏரோது)   2:22 (ஏரோதின் மகன்)

  ஆணுதவியின்றிக் கன்னி வயிற்றில் கருவைத் தேவனால் விதைக்க முடியுமானால், ராஜாவின் கைகளுக்கு அந்த சிசுவைத் தப்புவிக்கமுடியாதா, என்ன?
  இளம் பிள்ளையோடு அங்குமிங்கும் ஓடுவது சுலபமா?

சத்தியம்: தேவன் ''எப்பொழுதுமே'' அற்புதங்கள் செய்துவிடுவதில்லை; தமது ஆதீனத் திட்டத்தின்படியே செய்வார்.

அற்புதம் இல்லாது தேவன் நம்மை நடத்துவாரெனில்,
அதுதான் பெரிய அற்புதம்!

தேவச் செயல்கள் எப்பொழுதுமே கவர்ச்சியாயிருக்க அவசியமில்லை.
நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் தேவன் நம்மோடுதான்!
தேவன் தந்த நிகரற்ற அற்புதம் இயேசுவே!
நமக்கு இயேசு இருந்தால், தேவனது யாவும் நமதே —
''சொந்தக் குமாரனையே ஒப்புக்கொடுத்தவர்'' (ரோ 8:32)

ஜான் வெஸ்லி: தேவன் நம்மோடு; அதுதான் பெரிய காரியம்!

5. குதூகலம் இல்லாத சந்தோஷம் (Joy without Jubilance)

- *''மிகுந்த சந்தோஷம் உண்டாக்கும் நற்செய்தி''* என்றே கிறிஸ்துமஸ் செய்தி மேய்ப்பருக்கு அறிவிக்கப்பட்டது.

  ஆனால் அவர் பிறந்து 8ஆம் நாளில் —
  கூறப்பட்ட ஆசீர்வாத வார்த்தைகளில்
  மரியாளின் நெஞ்சைப் பிளக்கும் ஒரு கூற்று:
  ''ஒரு பட்டயம் உன் ஆத்துமாவை உருவிப்போகும்''
  (லூக் 2:34,35)
  ''விழுவார்கள் ... பட்டயம் ... விரோதமாய்ப் பேசப்படும் அடையாளம்''

  ஆசாரியனிடமிருந்து வந்த இவ்வார்த்தைகள் ஒரு தாய்க்கு எப்படியிருந்திருக்கும்?

- ஆயிரமாயிரமான குற்றமில்லாப் பாலகர் மரணம் —
  மத் 2:16-18 ... *''புலம்பல்* ... அழுகை ... கூக்குரல்''

மரியாளைப்பற்றி அந்தத் தாய்மார் என்ன பேசியிருப்பார்கள்?
''ஆணின்றிக் கருத்தரித்தவள்; இப்பொழுது நியாயமாய்ப் பிறந்த
எங்கள் பிள்ளைகள் போய்விட்டார்களே!''

— இயேசுவின் வயதில் அவருடன் விளையாட யார்?
— அபசகுனம் என்று பழிக்கப்பட்டிருப்பார்.
— இதைப் பின்னர் இயேசுவுக்கு மரியாள் சொல்லியிருப்பாள்.
ஒருவேளை இதனாலேயே அவர் சொன்னது —

''சிறு பிள்ளைகள் என்னிடம் வரட்டும் ...''
''இராஜ்யத்தின் அடையாளம்: ஒரு சிறு பிள்ளை''
''இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்கினால் ...''
''பாலகர் வாயினால் தேவன் துதி உண்டுபண்ணினார்''
''உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்''
''இதோ, உன் மகன்!''

பிள்ளையை இழப்பதென்றாலென்ன என இயேசுவுக்குத் தெரியும்!
தமது தாய்க்கு முன்னால்தானே துடிதுடித்து மரித்தார்!

அவர் பாடுபட்டதினால்,

பாடுபடுவோர்க்கு உதவ வல்லவராயிருக்கிறார்.
அவர் பெயரே *''தேற்றரவாளன்''* என்பதுதான்.
அவரது ஆவியானவரின் பெயர், *''இன்னொரு தேற்றரவாளன்''*

■ ***முடிவுரை***

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் குறித்துப் பேசும் இவ்வேளையில்,
உங்களைக் குத்திக்கொண்டிருக்கும் முட்கள் யாவை?
உங்களை நசுக்கிக்கொண்டிருக்கும் சிலுவைகள் யாவை?
இயேசு புரிந்துகொள்கிறார்!

1. நியாயமான இன்பங்களும் கிடைக்கவில்லையா?
2. வாழ்வில் பாதகங்கள் நிறைந்துள்ளனவா?
3. எளிமையான சமுதாய அந்தஸ்தா?
4. ஆன்மீக மாறுபாடுகளா? *(தூதர் சூழப் பாளையம்,* ஆனால் ...)
5. பாடுகளோடுதான் பாடல்களா?

இயேசுவை உங்கள் வாழ்வில் அரசராய் முடிசூட்டுவீர்களானால்,
இச்சிலுவைகள் சிம்மாசனங்களாகும்.

கிறிஸ்து இல்லையேல்,
வாழ்வின் இன்பங்கள் அனைத்தும் அர்த்தமற்றவை
(மலரைச் சுற்றி முட்கள்)
கிறிஸ்து இருந்தால்,
வாழ்வின் இன்னல்கள் அனைத்தும் அர்த்தமுள்ளவை
(முட்கள் நடுவில் மலர்கள்)
உங்கள் தெரிந்தெடுப்பு?

168

அனுதின வாழ்வில் சிலுவை

The Cross in Daily Life

முகவுரை

லூக் 9:23 ... *தன் சிலுவையைத் தினமும் எடுத்து ... பின்பற்றட்டும்*

- சிலுவை சுமந்து இயேசு சிலுவையிலறையப்பட்டார் ;
  நாம் சிலுவையிலறையப்பட்டுச் சிலுவை சுமக்கவேண்டும்.

- ''சிலுவை'' என்பது தேவனது பிந்திய திட்டமல்ல.
  ''உலகத்தோற்றத்திற்கு முன்னரே''
  அது அவரது ஞானத்திலிருந்தது (வெளி 13:8)

  துவக்கமில்லா நித்தியத்திலிருந்து முடிவில்லா நித்தியத்திற்கு அது செல்கிறது.

- விண்ணுலகில் சிலுவை சுமத்தல் இராது எனினும்,
  அங்கு கிறிஸ்துவின் பெயர் *''ஆட்டுக்குட்டியானவர்''* என்பது —

  1. ஆட்டுக்குட்டியானவருக்குத் தொழுகை (வெளி 5:12)
  2. ஆட்டுக்குட்டியானவரின் கோபம் (6:16)
  3. மேய்க்கும் ஆட்டுக்குட்டியானவர் (7:17)
  4. ஆட்டுக்குட்டியானவரின் பாட்டு (15:3)
  5. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் (19:7)
     — ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து (19:9)
     — ஆட்டுக்குட்டியானவரின் மனைவி (21:9)
  6. ஆட்டுக்குட்டியானவரின் அப்போஸ்தலர் (21:14)
  7. ஆட்டுக்குட்டியானவரே ஆலயம் (21:22)
  8. ஆட்டுக்குட்டியானவரே வெளிச்சம் (21:23)
  9. ஆட்டுக்குட்டியானவரின் புத்தகம் (21:27)
  10. ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனம் (22:1,3)

  சிலுவைக்காய் அல்லேலூயா!

- ''**அனுதினச்** சிலுவையை'' ''**அனுதின** ஆசியாய்க்'' கருதுங்கள்
  நமது அடிப்படையான ஐந்து ஆன்மீகப் பயிற்சிகளில்
  சிலுவையின் செயல்பாட்டை இங்கு படிப்போம் —

1. அனுதின ஆராதனை — Daily Worship
2. அனுதின திருவசனத் தியானம் — Daily Wordstudy
3. அனுதின வேலைகள் — Daily Works
4. அனுதின சாட்சி — Daily Witnessing
5. அனுதினக் கவலைகள் — Daily Worries

1. அனுதின ஆராதனையும் சிலுவையும்

- *''தமது மாம்சத்தின் நாட்களில்''* ஜெபத்தில் கிறிஸ்து (எபி 5:7,8)
  ''பலத்த சத்தம்'' ... ''கண்ணீர்'' ... ''பயபக்தி''

இன்று ஜெபத்தைக் குறித்து வேறுவிதமான உபதேசம் நடமாடுகிறது —

அதில் ''பயபக்தி'' இல்லை.
தேவனுக்குக் ''கட்டளை'' எனும் அளவிற்குச் செல்லுகிறது.

— அவர் நமது ''அப்பாதானே'' என்ற வாதம்!
ஆனால் உண்மை என்னவெனில் (வச 8) ... *''குமாரனாயிருந்தும்''*

- தேவனை அல்ல, நம்மை மாற்றத்தான் ஜெபம்!

பதிலளிக்கப்பட்ட ஜெபம் பற்றிய ஒரு சாட்சி —

பலத்தைக் கேட்டேன்,
என்னைப் பலப்படுத்தும் இன்னல்களைத் தேவன் தந்தார்.
ஞானத்தைக் கேட்டேன்,
தீர்க்கக் கற்றுக்கொள்ள தேவன் பிரச்னைகள் தந்தார்.
வளவாழ்வைக் கேட்டேன்,
உழைக்கப் புத்தியும் சக்தியும் தேவன் தந்தார்.
தைரியத்தைக் கேட்டேன்,
மேற்கொள்ள ஆபத்துக்களைத் தேவன் தந்தார்.
அன்பைக் கேட்டேன்,
உதவி தேவைப்படும் மக்களைத் தேவன் தந்தார்.
சலுகைகள் கேட்டேன்,
வாய்ப்புகளைத் தேவன் தந்தார்.

நான் கேட்டது ஒன்றும் கிடைக்கவில்லை;
எனக்குத் தேவையானது அனைத்தும் கிடைத்துவிட்டது;
எனது ஜெபம் பதிலளிக்கப்பட்டுவிட்டது!

- வேதத்தில் வேறுவிதமாய்ப் பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் —
  - ☐ *நமக்கு மூன்று கூடாரங்கள் போடுவோம்* (மத் 17:4)
  - ☐ *எலியா போல நாங்கள் அக்கினி இறக்கட்டும்* (லூக் 9:54)
  - ☐ *''ஆண்டவரே, பட்டயத்தால் வெட்டட்டுமா?''* (லூக் 22:49)
    அவர் பதிலளிக்கவில்லை; அவர்கள் செய்துவிட்டனர்.
  - ☐ *எனக்கும் சகோதரனுக்குமுள்ள பிரச்சனையைத் தீர்த்துவையும்* (லூக் 12:13)
  - ☐ *என் மகன்களுக்கு வலதிடது ஆசனங்கள் தாரும்* (மத் 20:21)
  - ☐ *வந்து லாசருவைக் குணமாக்கும்* (யோ 11:3)
  - ☐ *எனக்கு உதவ மரியாளுக்குச் சொல்லும்* (லூக் 10:40)
  - ☐ *திரள் கூட்டத்தை அனுப்பிவிடும்* (மத் 14:15)
  - ☐ *இந்தத் தண்ணீரை எனக்குத் தாரும்* (யோ 4:15)
  - ☐ *உம்மிடம் ஓர் அடையாளம் காண விரும்புகிறோம்* (மத் 12:38)
  - ☐ *இந்த முள்ளை எடுத்துப்போடும்* (2 கொரி 12:8)
  - ☐ ''மரணத்தினின்று என்னை விடுவியும்''
    (மத் 26:53; யோ 12:27; எபி 5:7)

ஆத்துமாவின் மரணத்தினின்று
பிதாவானவர் அவரை விடுவித்தார் (அப் 2:27)

(70ஆம் அத்தியாயக் குறிப்புகளைப் படியுங்கள்.)

2. அனுதினத் திருவசனத் தியானமும் சிலுவையும்

- திருவசனத் தியானம் நமது இதயத்தை மகிழ்வித்தாலும்,
  அதன் பிரதான நோக்கம் நம்மை மாற்றித்
  தேவனது திட்டத்திற்குள் பொருந்தச் செய்வதே —

எபி 10:5-7, *''உம் சித்தம் செய்ய இதோ வருகிறேன்;*
புத்தகச் சுருளில் என்னைப்பற்றி எழுதியிருக்கிறது''

எம்மாவூர் சாலையில் சீடர்களுக்கு இயேசு
வலியுறுத்திய செய்தி இதுவே —
லூக் 24:25-27 ... *ஆகமங்கள், சங்கீதங்கள், தீர்க்கதரிசனங்கள்*

- திருவசனம் ஒரு ***''பட்டயம்''*** —
  அது வெண்ணெய் தடவும் கத்தி அல்ல!

பட்டயத்தின் வேலை —
எபி 4:11-13 ... ''அறுவை சிகிச்சை கத்திபோல் கூர்மை.''
வலிக்கத்தான் செய்யும்.

நாமோ பைபிளில் கவர்ச்சியான வாக்குகளை மட்டும்
எடுத்துக்கொண்டு அதின் கட்டளைகளை ஒதுக்கிவிடுகிறோம்.

தேவனது வாக்குகளில் ''நிற்கிறோம்'' எனப் பாடுகிறோம்;
ஆனால் அவரது வாசல்களில் ''உட்கார்ந்திருக்கிறோம்;''
பைபிளைத் தலையணையாய் வைத்துத் ''தூங்குகிறோம்;''
அவ்வளவுதான்! —

நம்மை **ஆராய்ந்துபார்க்கவே** திருவசனம் —
அது ஒரு விளக்கு. (Lamp)
அது முகம் பார்க்கும் கண்ணாடி. (Mirror)
அது ஒரு தூக்குநூல். (Plumbline)
அது அக்கினி! (Fire)

''சிறு பிள்ளைகள்'' போல் மாறிட அது நம்மை நறுக்குகிறது.
அது கடினம்தான்.

எ.கா.) சூனேமியாளின் குழந்தைமீது
தீர்க்கன் எலிசா படுத்தது (2 இரா 4:32-35)

- திரும்பத் திரும்ப — ''மூன்று முறை படுத்தார்!''
- படிப்படியாக — ''ஏழு முறை தும்மி எழுந்தான்!''

3. அனுதின வேலைகளும் சிலுவையும்

- வேலை என்பது தேவன் தந்த ஆசீர்வாதம் (ஆதி 2:15)
  ஆனால் வீழ்ச்சியையடுத்து அதில் சாபத்தைச் சேர்த்தார் —
  (ஆதி 3:17-19)

சாபமானது ஆணுக்கு அவனது வேலையில் (work);
பெண்ணுக்கு அது அவளது கருப்பையில் (womb).

இன்னும் அது நீக்கப்படவில்லை! (பிரசவ வேதனை)

எனவே நமது வேலையிலும் வேலைத்தலத்திலும் நமக்கு
நேரிடும் பிரச்னைகள், போராட்டங்கள் குறித்து
நாம் ஆச்சரியப்படக்கூடாது.

- கீழ்க்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள் —

அ) வேலை அல்லது வேலைத்தலம் குறித்து முறுமுறுக்காதீர்.
1 கொரி 7:24 ... *அழைக்கப்பட்ட நிலைமை*
சிம்மாசனமோ சிறையோ யோசேப்பு யோசேப்புதான்!

ஆ) அதிகாரிகள், உடன் ஊழியரோடு சுமூகமாய்ப் பழகுவீர்.
1 பேது 2:13-22 ... *கீழ்ப்படிதல் ... நன்மை செய்தல்*

அநியாயத்தைச் சகிப்பீர் —
சிலுவை = *அவரது நியாயம்*
அவரை விட்டு எடுபட்டுப் போயிற்று
(ஏசா 53:8; 1 பேது 2:23)

இ) வேலையில் கவனமாய், நேர்த்தியாயிருப்பீர்.
நமக்குத் தரப்பட்ட வேலைகளில் பல செய்யப்படவில்லை;
பாதிதான் செய்யப்பட்டுள்ளன;
சரியாய்ச் செய்யப்படவில்லை.

சிலுவையில் இயேசுவின் வெற்றி முழக்கம் —
''முடிந்தது!''

இங்கு ''நன்றாய்ச்'' செய்தால்தான்,
அங்கு *''நல்லது''* என்று வரவேற்பு கிடைக்கும்!

4. அனுதின சாட்சியும் சிலுவையும்

பொல்லாத உலகில் சாட்சி பகருவது தன்னல மறுப்பும்
சிலுவை சுமத்தலும்தான் —

''இன்று இயேசுவைக் குறித்து நீங்கள் வெட்கப்பட்டால்,
நாளை உங்களைக் குறித்து அவர் வெட்கப்படுவார்!''

மாற் 8:34 -38
ஏளனம் ...
கேலி ...
எதிர்ப்பு ...
தள்ளப்படுதல்,
முதலியன

இயேசு வேண்டாம்! ... பவுல் வேண்டாம்! ...
''வாசலுக்குப் புறம்பே போவோம்!'' (எபி 13:13)

- *நாள்தோறும் சாகிறேன் ...*
நாழிகைதோறும் நாசமோசம் ... (1 கொரி 15:30-32)

எபேசுவில் ''மிருகங்களோடு'' போராட்டம் —
அதாவது, தியானாளை வணங்குவோர்.
அப் 19:24-35 ... தியானாளின் சிலை
வானத்திலிருந்து விழுந்ததாம்!
(வச 35)

இந்தியாவில் இப்படிச் சொல்லப்படும் ஏராளமுண்டு!

- நமது அர்ப்பணிப்பு —

''என்னால் ஆன மட்டும்
சுவிசேஷம் பிரசங்கிக்க ஆயத்தம்'' (ரோ 1:15)
''செலவழிக்கவும் செலவழிக்கப்படவும் ...'' (2 கொரி 12:15)

அவர் நமக்காய்த் தமது முதுகைத் தந்தார் (சங் 129:3);
நாம் அவருக்காய் நமது கழுத்தைக் கொடுப்போம் (ரோ 16:4)

5. அனுதினக் கவலைகளும் சிலுவையும்

- கவலையே இல்லாத நபர் இவ்வுலகிலில்லை.
''நமது கண்ணீர் யாவையும் தேவன் துடைக்கும்'' மறுவுலகிற்குச்
செல்லும்வரை கவலைகள் தொடரும்.

இன்றோ *''எந்நேரமும் கொல்லப்படுகிறோம்''* (ரோ 8:35,36)

ஆனாலும் நமக்கு இரு உதவியாளர்கள் —

அ) இங்கு நமக்குள் ஆவியானவர் (வச 26)
ஆ) அங்கு நமக்காக ஆண்டவர் (வச 34)

நமது கவலைகளல்ல,
மக்களின் இரட்சிப்பே நமது பெரும் கவலை —
(ரோ 9:1,2)

அணுவை இரண்டாய்ப் பிளக்கும்போதுதான்
கற்பனைக்கு மிஞ்சிய சக்தி அதில் வெளிப்படுகிறது!

பவுலின் முள் அவரை உருக்குலைக்கவில்லை,
உந்தித் தள்ளிற்று!

- தீமோத்தேயுவுக்குப் பவுலின் ஊக்கமூட்டும் வார்த்தைகளோடு இத்தியானத்தை முடிப்போம் —

2 தீமோ 2:11,12

சிலுவை சுமப்போம்,
சிம்மாசனம் அமர்வோம்!

''இது உண்மையுள்ள வார்த்தை!''



169

உலகம் சிலுவையில்; நானும் சிலுவையில்!

"Crucified to the World"

முகவுரை

- ''உலகம்'' என்ற பதம் புதிய ஏற்பாட்டில் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

''உலகம்'' — கிரேக்க மொழியில் "kosmos"
= பூமி (புவி)
= மனுக்குலம்
= புறவினத்தார் (யூதரல்லாதோர்)
= தற்காலிக உடைமைகள்
= தேவனுக்கு எதிரான இன்றைய மனுக்குலப்போக்கு

இக்கடைசி அர்த்தத்தையே ''உலகச் சிந்தை'' எனக் குறிப்பிடுகிறோம்.

- வசனப்பகுதி: பவுலின் சாட்சி (கலா 6:14)

அ) *உலகம் எனக்குச் சிலுவையிலறையப்பட்டிருக்கிறது.*
= உலகம் என்னை வஞ்சிக்க முடியாது.

ஆ) *உலகிற்கு நான் சிலுவையிலறையப்பட்டிருக்கிறேன்.*
= உலகுக்குப் பின்னால் நான் போகமாட்டேன்.

- கிறிஸ்தவர்க்கு இது விருப்பு-வெறுப்புப் பாடமல்ல; அடிப்படையான கட்டாயப் பாடம் —

☐ திருச்சபை பிறந்த நாளன்று துவக்கச் செய்தி
அப் 2:40 ... *இந்தப் பொல்லாத சந்ததி*

☐ கிறிஸ்தவத்தின் வரையறை
யாக் 1:27 ... *உலகத்தால் கறைபடாது காத்துக்கொள்ளல்*

☐ படைப்பில் முதல் செயல்
ஆதி 1:3,4 ... *இருளிலிருந்து ஒளியைப் பிரித்தார்*

☐ வேதத்தின் மிக நீண்ட புத்தகத்தின் முதல் வசனம்
சங் 1:1 ... *துன்மார்க்கர் ... பரிகசிப்போர் ...*

உலகச் சிந்தையின் வெளிப்பாடுகள்

1. தீயவரோடு சகவாசம் (Fellowship with the wicked)

2 கொரி 6:14-18 ... *ஐக்கியமேது? ... ? ... ? ... ? ... ?*

இயேசு *''பாவிகளின் சிநேகிதர்''* அல்லவா?
ஆனாலும் அவர் *''பாவிகளுக்கு விலகினவர்''* தெரியுமா?—
எபி 7:26

அவர்களிடமிருந்து அவர் கற்கவில்லை;
அவரிடமிருந்து அவர்கள் கற்றனர்!
சங் 1:1

எ.கா.) அவர்களது அசுத்த நகைச்சுவை உங்களுக்குப் பிடிக்காது.
''ஆகாத உரையாடல் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்''
(1 கொரி 15:33)

2. உலகின் தீய விருப்பங்கள் (Lust of the world)

கலா 5:24 (வச 19-21 இல் ஒரு பட்டியலுண்டு.)
இப்பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கையிடுங்கள்.
அவற்றை மேற்கொள்ள முடிந்ததெல்லாம் செய்யுங்கள்.
விட்டுக்கொடுக்கும்போதெல்லாம் உங்கள் பலம் குறைகிறது;
''மாட்டேன்'' என்பதோ ஆன்மீகத் தசைகளுக்கு வலுவூட்டும்.

அப்போஸ்தலன் பவுலின் அறிக்கை:
மனதுக்கும் உடலுக்கும் போராட்டம் (ரோ 7:21-25)

90 வயது பிரசங்கியாரிடம் ''இவ்விதச் சோதனைகள்
எப்பொழுது நிற்கும்?'' என்று வினவிய இளைஞனுக்குப் பதில்:
''அந்த வயது எனக்கு வரும்போது சொல்கிறேன்!''

இறைவாக்குகளை உரிமை பாராட்டுங்கள் —
2 பேது 1:4 ... *உலகக் கேடு ... திவ்விய சுபாவம்*

3. உலகப் பொருட்கள் (Things of the world)

1 யோ 2:15 ... இது பொருள் மோகம் பிடித்த சமூகம்.

உங்கள் **''மனதை''** உன்னதக் காரியங்களில் பதியுங்கள் —
கொலோ 3:1-3 ... *கிறிஸ்துவுடன் மரித்தீர்கள் ... எழுந்தீர்கள்*

''மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவனுக்கு வாழ்வு வந்துவிடாது'' —
லூக் 12:15

இதைத் தொடர்ந்து வரும் உவமை —
''வயல் ... விளைச்சல் ... களஞ்சியம் ... அநேக ஆண்டுகள்''
''மதிகேடனே! தேவனிடம் செல்வந்தனாயிராதவன்!''
(வச 21)
அதாவது, இறையரசில் கரிசனையின்மை (வச 31)

அளவுக்குமீறிப் பிள்ளைகளுக்குப் பொருள் விட்டுச் செல்லாதீர் —
''விற்று ... தரித்திரருக்குக் கொடுத்து ... பரலோகில் பொக்கிஷம் ...
உங்கள் பொக்கிஷம் எங்கேயோ'' ... (வச 33,34)

விரித்த கரங்கள், திறந்த விரல்கள் — இதுதானே கல்வாரி?
தேமாவாயிராதிருங்கள் (2 தீமோ 4:10)

4. உலக நாகரிகம்/போக்கு (Trends of the world)

எபே 2:1,2,3 ... *இவ்வுலக வழக்கம் ...*
ரோ 12:2 ... *இவ்வுலகப் போக்கு ... மறுரூபம் ...*

எ.கா.) உடை — இன்றையப் போக்கு யாது?
முடிந்த அளவு வெளிக்காட்டுங்கள்.
கவர்ச்சி மட்டுமல்ல, உணர்ச்சிகளைத் தூண்ட.

எவ்வளவு குட்டையாய், நீளமாய், இறுக்கமாய், திறப்பாய்
இருக்கலாமென்றெல்லாம் கேட்காதீர்.

ஆடவர் : உங்கள் உடையில் ஆண்மைத் தோற்றம் வேண்டும்.
பெண்டிர் : உங்கள் உடையில் பெண்மைத் தோற்றம் வேண்டும்.

மதிப்பான பண்புகளை விற்றுப்போடாதீர்.
சமரசம்பண்ண மறுத்தால் பகைக்கப்படுவீர் (யோ 7:7)

கண்ணியம், ஒழுக்கம் ஆகிய இரண்டிலும் இன்று சரிவுதான்.
— பிசாசு இதைப் படிப்படியாய்ச் செய்வான்:
எ.கா.) நீரில் தவளை; கொஞ்சம் கொஞ்சமாய்ச் சூடேற்றல்
— விவாதம்: எல்லாருந்தான் செய்கிறார்களே!
பதில்: ''மற்றவர் செய்யலாம்; நான் செய்யக்கூடாது!''

5. ***உலகச் சிற்றின்பங்கள்*** (Pleasures of this world)

நாம் மகிழ்ந்திருப்பது தேவ சித்தம் —
அதற்குச் சூத்திரம்: பாக்கிய வசனங்கள் (மத் 5:2-11)
1 கொரி 7:29-31 ... எதுவும் அளவுக்கு மீறக்கூடாது.

அளவுக்கு மீறுவது இயல்பைத் தகர்க்கும்.

நோவா காலத்தில் நடந்தது அதுதான் (மத் 24:37,38).
இன்றும் அதுவே நடக்கும்.

6. ***பிரபலம் நாட்டம்*** (Popularly in this world)

யோ 17 — பிரதான ஆசாரிய ஜெபம் ...
உலகத்தால் பகைக்கப்படுவீர் (வச 14,15,16)

பிரபலம் நாடுவோர் விரைவில் விசுவாசம் இழப்பர் —
யோ 5:44 ... *எப்படி விசுவாசிப்பீர்கள்?*

''உனக்குப் பெரிய காரியங்களைத் தேடாதே'' (எரே 45:5)
பேர்ப்புகழ் நாட்டம் நமக்கு நாமே விரிக்கும் வலை!

இவ்வுலகிற்கு நண்பன் vs. இறைவனுக்குப் பகைவன்

யாக் 4:4 ... *தேவனுக்குப் பகைவன்*
:5 ... *ஆவியானவரின் வைராக்கிய வாஞ்சை*
:6 ... *தாழ்மை ... கிருபை ... பெருமை*

இனப் பெருமை	(Race)
நிறப் பெருமை	(Face)
உடைப் பெருமை	(Lace)
இடப் பெருமை	(Place)
சொத்துப் பெருமை	(Space)

■ ***முடிவுரை***

சிலுவையிலறையப்படுவதற்குச் சற்று முன்னர்,
இயேசு சொன்னது: யோ 14:30, *இவ்வுலகின் அதிபதி வருகிறான்;*
அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை!

நம்மால் இப்படிச் சொல்லமுடியுமா?

170

சிட்சை ஏன்?
Why Chastisement?

முகவுரை

- பிரபல முழக்கங்கள்: — இயேசு இரட்சிக்கிறார்!
இயேசு நேசிக்கிறார்!
இயேசு விடுவிக்கிறார்!
இயேசு அழைக்கிறார்!
இயேசு ஆசீர்வதிக்கிறார்! முதலியன.

''இயேசு **திருத்துகிறார்**'' என்று முழங்குவதில்லையே, ஏன்?
சுவிசேஷங்களில் இதை அதிகமாய் அவர் செய்தார் —
சுகமளித்தல் + திருத்துதல்

எனவேதான் யூதர் அவரைச் சிலுவையிலறைந்தனர்!

திருச்சபைக்கு அவரது கடைசிச் செய்தி —
''நான் நேசிப்பவர்களைக் கடிந்து சிட்சிக்கிறேன்'' (வெளி 3:19)

- அவ்விதமே, ஆராதிக்கையில் பிரபலத் திருநாமங்கள் —
யேகோவா-யீரே
யேகோவா-ஷம்மா
யேகோவா-ஷாலோம்
யேகோவா-ரோகி
யேகோவா-ரப்பா

''யேகோவா-மாக்கே'' என்று துதித்தாலென்ன? (எசேக் 7:9)
= அடிக்கிறவராகிய கர்த்தர் நான்!

- எழுப்புதல் பற்றிப் பேசுகிறோம்; ஆனால் எழுப்புதல் தாமதிப்பதேன்?
பதில்: ஓசி 6:1,2

''கர்த்தரிடம் திரும்புவோம், வாருங்கள்;
நம்மைப் பீறினார் ... நம்மை அடித்தார் ...
நம்மை உயிர்ப்பிப்பார் ... நம்மை எழுப்புவார்!''

இப்படியில்லையேல், எழுப்புதல் இராது; இரைச்சல்தான் இருக்கும்!

- தேவனது ''சிட்சை'' என்பதைப் படிக்க
எபிரெயர் நிருபத்தைத் தெரிந்தெடுத்துள்ளேன் —

    சிட்சையின் நோக்கத்தை வேறு எப்புத்தகமும்
    இவ்வளவு தெளிவாக விளக்கவில்லை.

  இந்நிருபத்தில்கூட,
    விசுவாசம் பற்றிய 11ஆம் அத்தியாயத்திலேயே
    கூடுதல் நேரம் செலவிடுகிறோம்!

    அடுத்ததாகிய 12ஆம் அத்தியாயத்தை
    விட்டுவிட்டோம், ***மறந்துவிட்டோம்*** (வச 5)

- இச்செய்தியின் நோக்கம் உங்களை **உயிர்ப்பிப்பதே** (வச 12,13).

சிட்சை ஏன்?

வேதப்பகுதி: **எபிரெயர் 12:5-11**

1. தேவனது ''தந்தைத்துவத்தை'' நமக்கு நினைப்பூட்ட
(வச 7,8)

பிறரது பிள்ளையை எவ்வளவுதான் நேசித்தாலும்
நாம் அடிக்க முடியுமா?

- முக்கியமானதொரு பழைய ஏற்பாட்டுச் சத்தியம் —
மோசே — உபா 8:5 ... *ஒருவன் தன் மகனைச் சிட்சிப்பதுபோல் ...*
சாலொமோன் — நீதி 3:11,12 ... *மகனைத் தகப்பன் சிட்சிப்பதுபோல் ...*
மோசே → சாலொமோன் → எபிரெயர் நிருப ஆக்கியோன்

- தேவனது தந்தைத்துவம் ...

குமாரனது இரட்சிப்பு	இவையிரண்டைத்தான்
ஆவியானவரது உறுதுணை	அதிகம் பேசுகிறோம்.

  ஆனால் மத்தியமானது எது?
    2 கொரி 13:14 ... ஆசீர்வாதம் (Benediction)
      குமாரனது கிருபை, ஆவியானவரின் உறுதுணை,
      இவற்றின் மூலமே *பிதாவின் அன்பை* உணருகிறோம்.

  மூவர் (✓) ... ஒருவர் (x) ... இருவர் (x)
  Trinitarian (✓) ... Unitarian (x) ... Binitarian (x)

- பிதா என்ற வகையில் நாம் அவருக்குச் சொந்தம்
என்பதையே ஒவ்வொரு சிட்சையும் நினைப்பூட்டுகிறது —
  எ.கா.) லூக் 9:30,31,35 ... மறுரூபம்
    மோசே, எலியா ... கல்வாரி ... *இதோ, நேச மகன்*

- எவரும் சிட்சைக்குத் தப்பமுடியாது —
  ''எந்த மகனையும் ...'' (வச 6)

  எனவேதான் குமாரனாகிய இயேசுவும் சிட்சிக்கப்பட்டார் —
    ஏசா 53:10 ... *''கர்த்தர் அவரை **நொறுக்கச்** சித்தமாகி, பாடுகளுக்குட்படுத்தினார்''*

- தமது பிரியத்திற்காய்ப் பிதா நம்மைச் சிட்சிப்பதில்லை —
  புல 3:31-33 ... *மனப்பூர்வமாய்ச் சஞ்சலப்படுத்துவதில்லை*
  எ.கா.) எப்பிராயீம்: எரே 31:20 ... *என் உள்ளம் கொதிக்கிறது*
    ஓசி 11:3,4 7,8 ... *என் இதயம் குழம்புகிறது*

- *இரக்கங்களின் பிதா, ஆறுதலின் தேவன்*
  2 கொரி 1:3

2. ''திருத்தப்பட'' நமது கவனத்தை ஈர்க்க
(வச 9)

எவ்வளவுதான் சொன்னாலும் கேட்காத பிள்ளைக்குப்
பிரம்பு ஒரு மந்திரக்கோல்! —
  ''பிரம்பைக் கையாடாதவன் மகனைப் பகைக்கிறான்'' (நீதி 13:24)
  (அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான்!)
  ''தண்டனையின் பிரம்பு மதியீனத்தை அகற்றும்'' (நீதி 22:15)

- பிதாவாகிய தேவன் பிரம்பைக் கையாடும் விதம் —
  2 சாமு 7:14 ... (சாலொமோனைக் குறித்துத் தாவீதிடம் பேசுகிறார்)
    ''மனிதருடைய மிலாறு'' — மனிதர் மூலம்
    ''மனிதருடைய அடிகள்'' — வார்த்தைகள் / கைகள்

- சஞ்சலங்கள் நம்மைத் தேவனுக்குமுன் தாழ்மைப்படுத்துகின்றன —
  எ.கா.) மன்னன் மனாசே
  அவனது தந்தை எசேக்கியா இடித்துப்போட்ட
  பலிபீடங்களைத் திரும்பக் கட்டினான் ... 2 நாளா 33:10,12,13

சங்கீதக்காரன்
சங் 119:67,71 ... *கற்றுக்கொள்ளுகிறேன்*

- மேலே பார்க்கும்படி நம்மைத் தேவன் படுக்கையில் கிடத்துகிறார்!
  எ.கா.) சகவுறவுகளில் குறைபாடுகள் ...

  கொரிந்து சபையில் கர்த்தரது பந்தி —
  1 கொரி 11:18,28-33 ... *வியாதி ... மரணம் ...*

  பரிசுத்தம் x மனக்கசப்பு (எபி 12:14,15)

- பிறருடன் ஒப்புரவாக வியாதி நேரம் நல்ல வாய்ப்பு (யாக் 5:14-16)
  மக்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கிறோம்!
  எ.கா.) இருதய அறுவை சிகிச்சையின்போது நான் புரிந்துகொண்டேன் (1996)
- தற்பரிசோதனை (புல 3:39-42)

3. நம்மை ''இயேசுவைப் போல்'' மாற்ற

(வச 10)

- எபி 2:10,11 ... *அதிபதி ... பாடுகள் ... ''அநேகம்''* பிள்ளைகளை ***மகிமையில்*** *கொண்டுவந்து சேர்க்க*
  அப்படியே, ரோ 8:28,29,30 ...
  சகலமும் நன்மைக்கே ... அவர் சாயல் ... மகிமை!

  ''நீதிமானாக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல்''
  இவையிரண்டிற்கும் இடையில் நின்றுவிடாதீர்.

  நீதிமானாக்கப்படுதல்: நம்மைப் பரலோகிற்கு எடுத்துச்செல்ல
  மகிமைப்படுத்தப்படுதல்: பரலோகை நமக்குக் கொண்டுவர

- பிதாவோடு தமக்கிருந்த நிலையையே நாமும் பெறவேண்டுமென்ற **இயேசுவின்** விருப்பம் —
  எ.கா.) பிலதெல்பியா சபைக்குச் செய்தி —
  வெளி 3:10 ... *சோதனைக் காலம்*
  :12 ... *எனது ... எனது ... எனது* (5 முறை)

  எ.கா.) உயிர்த்தெழுதல்: *என் பிதா, உங்கள் பிதா*
  யோ 20:17 *என் தேவன், உங்கள் தேவன்*

யோ 14:1-3
... உங்கள் இருதயம் கலங்கவேண்டாம்.
... நானிருக்குமிடத்தில் நீங்களுமிருக்க.
... உங்களுக்காக ஓரிடம் ஆயத்தம்பண்ணப்போகிறேன்.

யோ 17:24 (பிரதான ஆசாரிய ஜெபம்)
''பிதாவே, நானிருக்குமிடத்தில் அவர்களுமிருக்க ... மகிமை ...''

4. நாம் இன்னும் அதிகம் ''கனிகொடுக்க''

(வச 11)

- யோ 15:1,2 ... *பிதாவானவர் கிளை நறுக்கிச் சுத்தம்பண்ணுகிறார்*
  கிளை நறுக்குவது வலிக்கத்தான் செய்யும் ...
  அது வெளிப் பகட்டையெல்லாம் அகற்றுகிறது.
  எ.கா.) கிளை நறுக்கப்பட்ட திராட்சைச் செடிகள்

- நமது வாழ்க்கையை மேம்படுத்துவதே
  சிட்சையின் பிரதான நோக்கம் —
  சங் 66:10-12 ... *புடமிடுதல் ... செழிப்பான இடம்*

- பகட்டான பாத்திரமல்ல, பரிசுத்தமான பாத்திரம் —
  2 தீமோ 2:20,21 ... *ஒருவன் தன்னைச் சுத்தம்பண்ணினால் ... ''பெரிய வீடு!''*
  — கழுவப்படாவிட்டால் வெள்ளிப் பாத்திரமும் பயன்படாது.
  — கழுவப்பட்டால் மண்பாத்திரமும் பயன்படும்.

  பொன்-வெள்ளிப் பாத்திரங்கள் பளிச்சிடலாம்;
  அவை அசுத்தமாயிருந்தாலோ பயனற்றவை.

  திருப்பணியில் தீவிரமாயிருப்போருக்கு ஒரு முக்கிய கேள்வி —
  மக்கள் என்னைப் பயன்படுத்துகிறார்களா, நான் பயனுள்ளவனா?

- சிட்சையின்போது திருவசனத் தியானத்தை அதிகரியுங்கள் —
  எ.கா.) யோசேப்பு (சங் 105:17-22) ... *வசனம் புடமிட்டது*
  அவன் *''கனி தரும் செடி''* ஆனான்!
  அவனது தந்தையின் தீர்க்கதரிசனம் அதுதானே? (ஆதி 49:22-26)

5. தேவன்மீது நாம் கூடுதல் ''சார்ந்திருக்க''

அதாவது, விசுவாசம்

(வச 2,12,13)

- யோபு 23:8-10 ... *நானறியேன் ... அவரறிவார் ... சுத்தப் பொன்*
- இருட்டில் பயிற்சி

  ஏசா 50:10,11 ... *சொல் கேட்டு ... இருட்டு ... நம்பி ...*

  எ.கா.) வெளிப்பிரகாரம் → உட்பிரகாரம் → மகா பரிசுத்த இடம்

  *''மகா பரிசுத்த **தலம்**'' ... ''மகா பரிசுத்த **விசுவாசம்**''*

  (ப. ஏ) (பு. ஏ.)

  யூதா 20 ... *''உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு ...''*

  எப்படி? அ) ஆவியானவருக்குள் ஜெபம்பண்ணி ...

  ஆ) பிதாவானவரின் அன்பை ருசித்துக்கொண்டு ...

  இ) இயேசுவானவரின் மறுவருகையை எதிர்நோக்கி ...

  இங்குகூட, தேவனது தந்தைத்துவமே மையமானது.

- நாம் தேவனையே சார்ந்திருக்கும்படி
  நம்மைத் தாங்கும் மனிதத் தூண்களையும் அவர் அகற்றுகிறார் —

  மீகா 7:5-9 ... *சிநேகிதன் ... மகன் ... மகள் ...*

  ''கர்த்தருடைய கோபம்'' (வச 9)

  ''மனிதனது கரங்களைவிடத் தேவனது கரங்கள்!''

  (2 சாமு 24:13,14)

- இவர் உதவவில்லையேயென எவர்மீதும் கோபப்படாதீர் ...
  அவர்கள் உதவமுடியாதபடி தேவன் தடுத்துவிட்டார்;
  அதுதான் உண்மை!

- *''சோர்ந்துபோகாதிருங்கள்''*

  எபி 12:5

  தந்தை என்ற முறையில் நமது உருவம் அவருக்குத் தெரியும் —

  சங் 103:13,14

  அவர் இரங்குகிறார் ...

  அவர் நமது உருவத்தை அறிந்திருக்கிறார் ...

  நாம் மண்தானென்று அவர் நினைவுகூருகிறார் ...

■ *முடிவுரை*

குமாரனானவர்மீது பிதாவானவரது சிட்சை
அவரது சிலுவை மரணத்தோடு முடிந்தது —

ஆனால், கிறிஸ்தவனின் வாழ்க்கை பெரிய வெள்ளியோடு
முடியாது; ஈஸ்டர் ஞாயிறு வருகிறது!

''கர்த்தரிடம் திரும்புவோம் வாருங்கள்;
நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார் ...
இரு நாட்களுக்குப்பின் நம்மை உயிர்ப்பிப்பார்;
மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்;
அப்பொழுது அவர் சமூகத்தில் பிழைத்திருப்போம்!''

(ஓசி 6:1,2)

Why Chatisement?

1. To remind us of God's FATHERHOOD
2. To get our attention for CORRECTION
3. To make us like JESUS
4. To increase our FRUITFULNESS
5. To increase our GOD-DEPENDENCE

171

கவலையை மேற்கொள்ளும் சிலுவை

Overcoming Worries thro' the Cross

முகவுரை

இயேசு தமது ஆவியை விட்டபோது பல காரியங்கள் நிகழ்ந்தன —

மத் 27:50-53 மாற் 15:38	உடனடி நிகழ்வுகளை இவ்விரண்டு சுவிசேஷகர்கள் மட்டும் எழுதியுள்ளனர். அவர்கள் **முதலாவது** குறிப்பிடுவது, *''திரைச்சீலை கிழிந்தது!''*

இங்குதான் புதிய ஏற்பாடு துவங்குகிறது!
மகா பரிசுத்தத் தலத்திற்கு வழி திறக்கப்பட்டாயிற்று!
எனவே *கிருபாசனத்தருகே தைரியமாய் வாருங்கள்* —
எபி 4:16

நமது கவலைகளுக்குச் சிலுவை மூலம் பரிகாரம்:

1. பாவத்தைக் குறித்த கவலை

*''பிதாவே, **இவர்களை** மன்னியும்''* என்று இயேசு ஜெபித்தார் (லூக் 23:34)

- நாம் பாவிகள், எனவே பாவம் செய்கிறோம்;
  எனவேதான், *''**இவர்களை**'' மன்னியும் என்றார்!*
- நமது எல்லாப் பாவங்களையும் இயேசு சுமந்துவிட்டார் —
  கடந்த கால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள்.
  அது *''ஒரே தரம்''* கொடுக்கப்பட்ட பலி.
- இப்போது நமது பாவங்கள் எங்கே?
  கடல் — ஆழம் கிழக்கு-மேற்கு — அகலம்
  வானம் — உயரம் முதுகு — நீளம்
  (மீகா 7:19; ஏசா 44:22; சங் 103:12; ஏசா 38:17)
- இனிக் குற்றவுணர்வு இல்லை — தண்டனைத் தீர்ப்பு இல்லை —
- இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படமுடியாத
  எப்பாவத்தையும் உங்களால் செய்யமுடியாது!
  கருஞ்சிவப்பு ... பஞ்சு, பனி போல் வெண்மை
  ''வழக்காடுவோம், வாருங்கள்!'' (ஏசா 1:18)

- உங்கள் கடந்த காலத்தைப் பிசாசு உங்களுக்கு நினைப்பூட்டினால்,
  அவனது எதிர்காலத்தை அவனுக்கு நினைப்பூட்டுங்கள்!
  ஆ, பாவத்தைப்பற்றிய கவலை சிலுவையால் ஒழிந்தது!

2. எதிர்காலத்தைக் குறித்த பயம்

தனது எதிர்காலத்திற்காய் அந்தக் கள்ளன் வேண்டினான்.
இயேசுவின் பதில்: ***''மெய்யாகவே, மெய்யாகவே, ...''*** (லூக் 23:43)

- எதிர்காலம் நமக்கு வைத்திருப்பது ''யாது'' என்றறிய தேவையில்லை; எதிர்காலத்தை வைத்திருப்பவர் ''யார்'' என்றறிந்தால் போதும் ...
  அவரே அல்பா, அவரே ஓமெகா.
  அவரே துவக்குபவர், அவரே முடிப்பவர்.
  துவக்க முதல் முடிவை அறிந்தவர் (ஏசா 46:10)
- நம்மில் நற்செயலைத் துவங்கியவர் ...
  இதை *''நம்பி''* வாழ வேண்டும் (பிலி 1:5,6)
- நீங்களும் தேவனும் சேர்ந்து சந்திக்க முடியாத பிரச்னை எதுவும் வராது —
  1 கொரி 10:13 ... எச்சோதனையும் அதற்குப் பெரிதல்ல!
- மரணத்திற்குப் பயப்படாதிருங்கள்!
  எபி 2:14,15 ... *''வாழ்நாளெல்லாம்'' ... மரண பயம் ... அடிமைத்தனம்*
  தேவன் குறித்த காலத்திற்குமுன் சாகமாட்டீர்கள்.
  உங்கள் தலையின் மயிர்கள் எண்ணப்பட்டுள்ளன.
  நீங்கள் கடவுளின் கண்மணி.

ஆம், எதிர்காலம் பற்றிய கவலை சிலுவையால் ஒழிந்தது!

Fanny Crosby:	*யேசுவைப் பாடிப் போற்றுகிறேன்,*
	நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்;
(Blessed	*மீட்பரை நம்பி நேசிக்கிறேன்,*
assurance ...)	*நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்!*

3. குடும்பத்தைப்பற்றிய கவலை

''இதோ உன் மகன், உன் தாய்'' என்ற இயேசுவின் கூற்று குடும்பங்கள்மீது தேவனது கரிசனையின் வெளிப்பாடு (யோ 19:26,27)

- உங்களைவிட உங்கள் குடும்பம் மீது தேவனுக்குக் கரிசனை.
  எ.கா.) நோவாவும் குடும்பமும் — பெருவெள்ளம்
  ராகாபும் குடும்பமும் — எரிகோ
  சகேயுவும் குடும்பமும் — *''இவ்வீட்டுக்கு இரட்சிப்பு!''*
  சிறையதிகாரியும் குடும்பமும் — *''நீயும் வீட்டாரும்''*

- உங்கள் கவலை யாது?
  இரட்சிக்கப்படாத கணவனா?
  ஒத்துழைக்காத மனைவியா?
  கீழ்ப்படியாத பிள்ளைகளா?
  தொந்தரவு தரும் உறவினரா?

  நிவாரணம் : அவர்களுக்காய் **ஜெபியுங்கள்!**
  இயேசு : *''உங்கள் பிள்ளைகளுக்காய் அழுங்கள்''* (லூக் 23:28)

- கடைசிக்காலம்: குடும்பங்களில் பிசாசின் விளையாடல்.
  பரிசுத்த ஆவியானவரின் எதிர்ப்பு —
  மல் 4:5,6 ... *பிதாக்கள்... பிள்ளைகள்...*

4. குழப்பங்கள் பற்றிய கவலை

இயேசுவின் கதறல்: *''என் தேவனே ... என் தேவனே?''* (மத் 27:46)
எதையும் தாங்கியவர் இந்தப் பிரிவைத் தாங்கமுடியவில்லை!

இதுதான் சிலுவையிலிருந்து வந்த மையக் கதறல்.
மற்றவையெல்லாம் கூற்றுக்கள்; இது ஒன்றுதான் கேள்வி!

இக்கேள்விக்குத் தேவன் பதில் தரவில்லை,
மாறாக, இச்சூழலில் கடந்து செல்ல
அவருக்குப் பலமும் கிருபையும் அருளினார்.

- வாழ்வின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடையாது
  போகலாம் —

ஏன்? — கூடாதா?	(Why not?)
ஏன் நான்? — வேறு யார்?	(Who then?)
ஏன் இப்பொழுது? — வேறு எப்போது?	(When then?)
ஏன் இது? — வேறு எது?	(What then?)

- நமது கேள்விகளுக்குப் பதில்தர தேவன் கடமைப்பட்டவரல்ல;
  ஆனால் போதுமான கிருபையளிக்கிறார் —
  இருட்டில் பயிற்சி (ஏசா 50:10)

  தேவன் விளக்கினாலும் நமது குருவி மூளைக்குப் புரியுமோ?
  ''நானறியேன்; அவரறிவார்!'' (யோபு 23:8-10)
  ஜான் வெஸ்லி: தேவன் நம்மோடிருப்பதே காரியம்!

5. உடல்நலக் குறைவு, பணமின்மை பற்றிய கவலை

''தாகமாயிருக்கிறேன்'' — உடலில் வேதனை / தேவை
(யோ 19:28)

ஏசா 53:4 ... *பாடுகள்* = வியாதிகள்
துக்கங்கள் = வேதனைகள் (மத் 8:16,17)

- உடலுக்கும் கிறிஸ்துவே இரட்சகரென விசுவாசியுங்கள்.
  பொதுவாக,
  ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் சுகமாக்குவார்;
  எப்பொழுதும் அவ்விதம் நடக்காது போகலாம்!
  எ.கா.) *பவுலின் முள் ... என் கிருபை ... என் பலம்*

- நமது உடல் இன்னும் *சாவுக்குரியதுதான்* —
  இப்பொழுது *''முதற்கனிகள்''* மட்டுமே (ரோ 8:23)
  லாசரு மறுபடியும் மரித்தான்! இருமுறை அடக்கம்!

  நவீன காலச் சுவிசேஷச் செய்திகளால் ஏமாந்துபோகாதீர் —
  ''வியாதிகளே இருக்காதா?''

  நமக்குப் ''பாவம்'' இல்லையென்றால், நம்மையே வஞ்சிக்கிறோம்.
  நமக்கு ''வியாதி'' இல்லையென்றால் நம்மையும் பிறரையும் வஞ்சிக்கிறோம்.

  புதிய வானம் புதிய பூமி: *வியாதி, மரணம் இல்லை* (வெளி 21:1-4)

  சிலுவையினாலும் உயிர்த்தெழுதலினாலும், நாம்
  ஒரு நாள் முற்றிலும் மகிமையான உடலைப் பெறுவோம்.

- பணத் தேவை குறித்த கவலை — பல தற்கொலைகள்.
  இயேசு: *எதை உண்போம் ... கவலைப்படாதீர்* (மத் 6:25-34)
  உங்கள் பரம பிதா அறிவார் ...

6. *வேலை/தொழில் பற்றிய கவலை*

''முடிந்தது'' என்றார் இயேசு — நமது வேலைகளையும்
முடிக்க உதவுவாரென்பதற்கு நிச்சயம் (யோ 19:30)

உங்கள் திறமையின்மை, பலமின்மை, குறைபாடுகள் குறித்துக்
கவலைப்படாதீர்.

மாணவர்கள்: படிப்பைக் குறித்த கவலை

நாம் விசுவாசிக்கவேண்டியவை —

- ☐ நமது திறனுக்கேற்பத்தான் தேவன் பொறுப்பு தருகிறார்.
  5 தாலந்துகள், 2 தாலந்துகள், 1 தாலந்து (மத் 25:14-30)
- ☐ நாம் உண்மையாயிருப்பதே தேவனது விருப்பம் —
  ''நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியனே''
- ☐ நாம் எல்லாவற்றையும் செய்துவிட அவர் விரும்புவதில்லை;
  நமக்குக் கொடுக்கப்பட்டதையே செய்யவேண்டும் —
  இந்தியாவுக்கு இயேசு வரவில்லை, ஆப்பிரிக்காவிற்குச்
  செல்லவில்லை!
- ☐ நம்மால் முடிந்ததையே செய்ய அவர் எதிர்பார்க்கிறார் —
  ''தன்னால் இயன்றதைச் செய்தாள்'' (மாற் 14:8)
  இரு தாலந்துள்ளவன் ஐந்து கொண்டுவரவேண்டியதில்லை.

■ *முடிவுரை*

இக்கவலைகளையும் மற்ற கவலைகளையும் மேற்கொள்ள
ஒரே வழி அர்ப்பணிப்பே —

''பிதாவே, உமது கரங்களில் ...'' (லூக் 23:46)

முதலாவது, *''பிதாவே''* என்றார்	அதாவது,
நடுவில், *''என் தேவனே''* என்றார்	தேவன்
முடிவில் *''பிதாவே''* என்றார்	நமது அப்பா!

பிதாவானவரின் **தந்தைத்துவத்தை** விசுவாசித்துப்
போற்றுவதே கவலைகளை மேற்கொள்ளும் வழி.

பவுல் : *நான் விசுவாசித்திருக்கிறவரை அறிவேன்* (2 தீமோ 1:12)
யூதா : *வழுவாதபடி உங்களைக் காக்க தேவன் வல்லவர்* (யூதா 24)
இயேசு: *நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் ...*
நீங்கள் என் பிதாவின் கையில் இருக்கிறீர்கள் ...
உங்களை ஒருவரும் பறிக்கமுடியாது (யோ 10:28,29)

கவலை உங்களைத் தொந்தரவுபடுத்த விடாதீர்;
கவலை உங்களைத் தொந்தரவுபடுத்தாதவரை
கவலையைத் தொந்தரவுபடுத்துங்கள்!

(2 & 172ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

அந்தோ, கல்வாரியில் அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்கினார்

அதிசயம் இது இயேசுவின் நாமம்
அதிலும் இன்பம் அன்பரின் தியானம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014

172

சிலுவையிலிருந்து ஏழு வார்த்தைகள்

Seven Sayings from the Cross

சிலுவையிலிருந்து கிறிஸ்து மொழிந்த ஏழு வார்த்தைகளின்மீது ஏராளம் பிரசங்கங்கள் உண்டு. இதோ இன்னொன்று —

1. *பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமலிருக்கிறார்களே!* (லூக் 23:34)

சிலுவையானது ஒப்புரவாகுதலின் சின்னம்.
தேவன் ↔ மனிதன் / மனிதன் ↔ மனிதன்

மன்னிப்பு இன்றி ஒப்புரவாகுதல் இல்லை.

கர்த்தரது ஜெபத்திற்கு அடுத்த முதல் போதனை —
மத் 6:14,15 ... *மன்னியுங்கள் ...*

காணிக்கை செலுத்துமுன் செய்யவேண்டிய முதல் காரியம் —
மத் 5:23,24 ... *முதலாவது ஒப்புரவாகி, பின்பு ...*

உங்கள் சகோதரன்/சகோதரியை மன்னியுங்கள்.
உங்கள் கணவர்/மனைவியை மன்னியுங்கள்.
உங்கள் இனத்தார்/அயலகத்தாரை மன்னியுங்கள்.
உங்கள் நண்பர்/உடன் ஊழியரை மன்னியுங்கள்.

நேசிக்கப்பட முடியாதோரை நேசிக்க உணரவேண்டியவை —

- நேசிக்கப்படமுடியாத உங்களைத் தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார்!
- அடுத்த நபரைத் தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார்!
- வாழ்வு குறுகியது— வைராக்கியத்தை வைத்திருந்து பயனென்ன?

2. *இன்று என்னுடன் பரதீசில் இருப்பாயென்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்!* (லூக் 23:43)

''இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்'' என்று சொல்லமுடியுமா? **ஆம்!**
அப் 2:47 ... இரட்சிக்கப்படுவோர் *சபையில் சேர்க்கப்பட்டனர்.*
அப் 16:30,34 ... சிறையதிகாரி *இரட்சிக்கப்பட்டு மகிழ்ந்தான்.*
லூக் 19:9,10 ... சகேயு ... *இன்றைக்கு இரட்சிப்பு*

முக்கால இரட்சிப்பு —

அ) கடந்த காலம் ... பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை
ஆ) நிகழ்காலம் ... பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை
இ) எதிர்காலம் ... பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* விடுதலை

இரட்சிக்கப்படுவது எப்படி —

நீங்கள் ஒரு பாவி என்று உணருங்கள்.
பிதாவாகிய தேவனிடம் மனந்திரும்பி வாருங்கள்.
கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள்.
இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளையென அகமகிழுங்கள்.

காலம் தாழ்த்தாதீர்! சிலுவைக் கள்ளனை மேற்கோள் காட்டாதீர்!

இன்றே இரட்சிப்பின் நாள் (2 கொரி 6:2)
அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் ... (நீதி 29:1)

3. *அம்மா, இதோ உன் மகன் ... இதோ உன் தாய்!* (யோ 19:26,27)

பிள்ளைகளுக்கு இதோவொரு செய்தி!
கடைசிக் காலத்தின் அடையாளம் —

மல் 4:5,6 ... *பிதாக்கள் ... பிள்ளைகள் ...*
2 தீமோ 3:1,2 ... *பெற்றோருக்குக் கீழ்ப்படியாதோர்*

- நீங்கள் சொல்லுவதெல்லாம் பெற்றோருக்குப் புரியாவிடினும் அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் —

  லூக் 2:48-51 ... பெற்றோருக்கு இயேசு கீழ்ப்படிந்திருந்தார்.

- முடிந்த வகையிலெல்லாம் பெற்றோருக்கு உதவுங்கள் —

  மாற் 6:3 ... மரியாளுக்குக் குறைந்தது 7 பிள்ளைகள்.
  தச்சுப் பட்டறையில் இயேசு உதவினார்.

- வயதான காலத்தில் பெற்றோரைத் தாங்குங்கள் —

  எ.கா.) 1 தீமோ 5:16
  ஒரு நாள் நீங்களும் அவர்களைப் போலாவீர்கள்!

- வாக்குடன் தரப்பட்ட ஒரே கட்டளை —
  தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு (எபே 6:1-3)
- பத்துக் கட்டளைகளின் இரண்டாம் பகுதியில் முதல் கட்டளை —
  தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு (யாத் 20:12)

4. என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? (மத் 24:46)

— சிலுவையிலிருந்து வந்த மையக் கதறல்!
— முழுவுலகின் பாவம் அவர்மீது வந்தபோது இவ்விதம் கதறினார்.

அவர் நமக்காகப் பாவமானார் (2 கொரி 5:21).
தமது முகத்தை மகனிடமிருந்து நொடிப்பொழுது பிதா மறைத்தார்.

இதையே *''இருட்டின் பயிற்சி''* என்கிறோம் —
ஏசா 50:10 ... *சொல் கேட்டு ... இருட்டு ... நம்பி ...*

ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து எடுத்துக்காட்டு —

வெளிப்பிரகாரம்	:	சூரியவொளி
உட்பிரகாரம்	:	விளக்கொளி
மகா பரிசுத்த தலம்	:	ஒளியே கிடையாது.

இங்குதான் நாம்
''தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டும்''
(2 கொரி 5:6)

தமது தந்தையை *''என் தேவனே''* என்றழைத்து
இயேசு இக்கேள்வி கேட்டார் — பின்னர் அவருக்கு அர்ப்பணித்தார்.

இது வேதனையின் குரல், கோபத்தின் குரல் அல்ல!

இங்கு ''தேவ'' குமாரனின் ''மானிடப்'' பக்கத்தைப் பார்க்கிறோம் —

இவ்வித வியாகுலம் மற்றும் தனிமையை அவர் அனுபவித்ததால்,
நமது இன்னல்களை அவர் நன்றாய்ப் புரிந்து,
தகுந்தாற்போல் நமக்கு உதவுகிறார் (எபி 2:17,18; 4:14-16)

கைவிடப்பட்டதுபோல் ''உணருகிறீர்களா?'' கைவிடப்படவில்லை!
''நான் விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை'' (எபி 13:5)

தேவன் தம்மை மறைக்கலாம்; ஆனால் மறையமாட்டார்!

5. தாகமாயிருக்கிறேன்! (யோ 19:28)

பாடங்களைக் கற்பிக்கவே தேவன் பாடுகளை அனுமதிக்கிறார் —

- ஒரு முக்கிய பாடம்: ''தனித்து அல்ல,
  சார்ந்து வாழவேண்டும்.''

பிறரிடமிருந்து உதவி நாடத் தற்பெருமை மறுக்கிறது!
பாடுகளின்போது தேவன் அதை உடைக்கிறார்.
திருச்சபை என்பது திருவுடல்.
எந்த உறுப்பும் தனித்தே இயங்கமுடியாது.

- இன்னொரு பாடம்:
  பாவியின் இடத்தைச் சிலுவையில் இயேசு எடுத்தார்.
  ஒவ்வொரு மனிதனின் தாகத்தையே இயேசுவின் தாகம்
  சுட்டிக்காட்டுகிறது —
  அத்தாகத்தைப் பணம் தீர்க்காது —
  எ.கா.) கடல் நீர்
  அத்தாகத்தைச் சிற்றின்பங்கள் தீர்க்காது —
  எ.கா.) சாலொமோன் (பிர 2:1-11,17)

மனிதனிலுள்ள வெற்றிடத்தைக் கிறிஸ்துவின் **சுவிசேஷம்**
மட்டுமே நிரப்ப முடியும் (இறுதியழைப்பு — வெளி 22:17)

எனவே, துரிதமாய்த் தூதறிவிப்போம்.
பசி தாகமுள்ள மனிதர்க்கு நாம் செய்வது கிறிஸ்துவுக்கே:
''தாகமாயிருந்தேன்; தாகத்தைத் தீர்த்தீர்கள்!''

6. முடிந்தது! (யோ 19:30)

— இது வெற்றி முழக்கம்!
— மனுக்குல இரட்சிப்பிற்குப் பரிசுத்த தேவனது அத்தனை
நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டாயிற்று.
— இரட்சிப்புக்குச் சிலுவையோடு எதையும் கூட்டாதீர்,
அதிலிருந்து எதையும் குறைக்காதீர்.
நாம் எதையும் கூட்டிவிட முடியாது.
இரட்சிப்புக்கு விலைகொடுக்கவும் முடியாது;
அது ஓர் ஈவு (எபே 2:8,9)

''இதைச் செய்தேன், அதைச் செய்தேன்'' என்ற
பெருமைக்கிடமில்லை.
கிறிஸ்தவத்திற்கும் பிற மார்க்கங்களுக்குமுள்ள வேறுபாடு —
''செய்தாயிற்று!'' (Done!) vs. ''செய்யுங்கள்!'' (Do!)

கிறிஸ்தவம்: இரட்சிப்பிலிருந்து சுத்திகரிப்பு
பிற மார்க்கங்கள்: சுத்திகரிப்பின் மூலம் இரட்சிப்பு

மார்க்கச் சடங்குகள் நம்மை இரட்சிக்க முடியாது —

சபையில் அங்கம் வகிப்பது நம்மை இரட்சிக்காது.
ஞானஸ்நானம்/திடப்படுத்தல் நம்மை இரட்சிக்காது.
திருவிருந்து நம்மை இரட்சிக்காது.
காணிக்கை கொடுப்பது நம்மை இரட்சிக்காது.

கிறிஸ்து முடித்ததை விசுவாசிப்பதே நம்மை இரட்சிக்கும்!
இந்த **ஈவை** இன்றே பெற்றுக்கொள்ளமாட்டீர்களா?

7. பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்!

(லூக் 23:46)

முற்றும் ஒப்புக்கொடுத்தார்!
முற்றும் அர்ப்பணித்தார்!

சிலுவையில் முதலாம் வார்த்தை: ... *''பிதாவே ...''*
நான்காம், மைய வார்த்தை: ... *''என் தேவனே ...''*
ஏழாம், இறுதி வார்த்தை: ... *''பிதாவே ...''*

தேவனை மையப்படுத்திய வாழ்வு ... அல்பா, ஓமெகா.
தேவனையே சார்ந்திருக்கும் வாழ்வு.

பாதுகாப்பற்ற உலகில் வாழ்கிறோம்.
ஆனால் கீழ்க்கண்ட திருவசனங்களைப் பாருங்கள் —

''நீங்கள் என் கையில் ... ஒருவனும் பறிக்க இயலாது''
''உங்கள் தலை மயிரையெல்லாம் எண்ணியிருக்கிறேன்''
''என் உள்ளங்கையில் உங்களை வரைந்திருக்கிறேன்''
''உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கிறது''
''நான் விசுவாசித்திருக்கிறவர் ... அவரிடம் ஒப்படைத்ததை ...''

இயேசுவின் கரங்களில் பத்திரம்! (Safe in the arms of Jesus!)
இதுவெறும் கல்லறை வாசகமன்று!

''கருவறை முதல் கல்லறை வரை'' நம்மையறிந்து பாதுகாப்பவர்!

(2 & 171ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

173

தடங்கல் ஓட்டம்

Hurdles Race

முகவுரை

- தேவனுக்காய் முழுக்க முழுக்க வாழ, உழைக்க, விரும்பும்போது,
நாம் தாண்டவேண்டிய தடங்கல்கள் ஏராளம்!

செங்கடலைக் ''கடப்பதைவிட'' (Passover) யோர்தானைத்
''தாண்டுவது'' (Crossover) சிரமமே!

ஏழு முக்கிய தடங்கல்களைக் கவனிப்போம் —

1. ஆன்மீகத் தோல்விகள் (Spiritual Failures)

இதற்கு முழு நிவாரணம் ரோமர் 8இல்தான் உண்டு.

- கிறிஸ்துவிலுள்ள நமது நிலையைச் சந்தேகித்தல் (வச 15)
நிலை vs. நடை Standing vs. State
- பலவீனங்கள், குறிப்பாக ஜெப வாழ்வில் (வச 26)
- குற்றச்சாட்டுகளும் குற்றவுணர்வுகளும் (வச 31-34)
- தேறிவிடுவோமா? (வச 35-39) ... *முற்றிலும் ஜெயங்கொள்வோர்*

வேகத்தைக் குறைக்காதீர் — செயல்பட்டுக்கொண்டேயிருங்கள் —
''கனிதரும் கொடிக்குக் கிளை நறுக்குதல்'' (யோ 15:2)

ஆன்மீகப் பயிற்சிகளைக் கிரமப்படுத்துங்கள்.

ஜெபத்திலும் வேதத் தியானத்திலும் தளர்வு தோன்றினால் —
ஏசா 50:10 ... நம்பி முன்செல்லுங்கள்!
51:2 ... ஆபிரகாம்-சாராளைப் பாருங்கள் ...
எத்தனை காலம் காத்திருந்தனர்!

2. பொருளாதாரத் தேவைகள் (Financial Difficulties)

இதற்கு முழு நிவாரணம் ஆபகூக் 3தான் —

மாற்று மருந்து —

- தொழுவோம் (வச 18) —
கருத்து: *இரட்சிப்பு* (எ.கா. லூக் 1:46,47)
வேறெதுவும் உற்சாகமூட்டாது (1 பேது 1:6-9)

- பணியாற்றுவோம் (வச 19) —
  குறிப்பாக, திருப்பணி —
  ''அநேகரைச் செல்வந்தராக்குகிறோம்'' (2 கொரி 6:10)

அ) சிந்தனையில் திருத்தம் —

வாழ்வோ தாழ்வோ, நிறைவோ குறைவோ,
இதை வைத்துத் தேவனது பிரியத்தை நிர்ணயிக்கமுடியாது.

ஆ) செயல்களில் திருத்தம் —

தேவனுக்குக் கொடுப்பது.
கடின உழைப்பு.
செலவில் சிக்கனம் / கண்டதெல்லாம் வாங்குதல்.
எதற்கெடுத்தாலும் கடன் (ஓர் அடிமைத்தனம்).

3. *சமூகவுறவில் சச்சரவுகள்* (Social Conflicts)

- திருச்சபையில் / திருப்பணியில்
- வேலைத்தலத்தில்
- அயலகத்தில்
- குடும்பத்தில் / பிள்ளைகளோடு

எ.கா.) இறையுள்ளத்திற்கு இணைந்த தாவீதுக்கு
வாழ்நாளெல்லாம் இப்பிரச்னைகள்தான் —
அவனது சங்கீதங்களைப் பாருங்கள் (பக்கம் 449)

- *''உங்களால் ஆனமட்டும் யாவரோடும் சமாதானம்''*
  (ரோ 12:18)

''ஒருவனது வழிகள் தேவனுக்குப் பிரியமானால்,
அவன் சத்துருக்களும் ...''
இது உத்திரவாதமா?

சத்தியம்: நாம் தேவனோடு சமாதானமாய் வாழும்போது,
மனிதரோடு சமாதானமாயிருப்பது எளிதாகிறது.

- நண்பர் அல்லது குடும்பத்தினர்
  மீகா 7:5-7

100 சதவீதம் தீர்வு காணக் காத்திராதீர்! —
முன்சென்றுகொண்டேயிருங்கள் — எ.கா) 1 கொரி 7:29-31

4. *வேலையில் பிரச்னைகள்* (Vocational Problems)

- வேலை அதிகம், சம்பளம் (லாபம்) குறைவு
- வேலையில்/தொழிலில் திருப்தியின்மை
- பாராட்டுதலே கிடையாது.
- பாரபட்சம்
- பொறாமை — எ.கா.) யோசேப்பு, தானியேல்
- புரிந்துகொள்ள மறுக்கும் அதிகாரிகள் (1 பேது 2:18,19)

☐ இயேசு: 18 ஆண்டுகள் அலமாரி போன்றவை செய்தார்;
அற்புதம் செய்தது 3 ஆண்டுகள்தான்!

☐ நெகேமியா: திருப்பணியில் தீவிரங்காட்டிய முழுநேரப்
பணியாளனல்லாதவன் (நெகே 4:1,7,8 ; 6:2,3,10-12, ...)

☐ நாம் சேவிப்பது ''தேவனையே'' என்ற உணர்வு —
எபே 6:5-8 ... திருப்பணியோ பிற பணிகளோ!
''புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும்'' (1 கொரி 10:31)

☐ பதவியுயர்வு தேவனிடமிருந்தே (சங் 75:6,7) —
எவரும் நம்மை உயர்த்தவோ இறக்கவோ முடியாது.

5. *மனக் கவலைகள்* (Mental Worries)

- கடந்த கால நிகழ்வுகள், எதிர்காலம் குறித்த அச்சம்
- மனத்தொய்வு
- குழப்பம்
- முழுக்கவனத்துடன் வேலை செய்ய முடியாமை
- அலைக்கழிக்கும் சொப்பனங்கள்
- ஏமாற்றங்கள்
- நிச்சயமற்றவை
- கேள்விகள் ... எப்படி? ... ஏன்?
- துக்கத்தின் மேல் துக்கம்

☐ சோம்பலை அகற்றுங்கள்
— விரும்பியதை விறுவிறுப்பாய்ச் செய்யுங்கள்.
''உன் கைக்கு நேரிடுவது எதுவோ அதை ...'' (பிர 9:10)

☐ சாப்பிடுதல், உடுத்தல், பொழுதுபோக்குகள், குடும்ப நேரம்
(பிர 9:7-9)

மனநெருக்கத்தை அகற்றுபவைகளில் ஈடுபடுங்கள்.
''கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியை'' இழக்காதீர் (நெகே 8:10)

□ பிலி 4:7,8,9 ... *தேவ சமாதானம் ... சமாதானத்தின் தேவன்*
திருமறை ஒன்றில்தான் இவையனைத்தும் உண்டு.
வேறு எதையும் வாசிக்கவோ, பார்க்கவோ கூடாதா?
பாவச் சிந்தனைகளைத் தூண்டாத எதுவும் சரியே!

6. *திருப்பணியில் போராட்டங்கள்* (Ministerial Struggles)

- துவக்க உற்சாகம் குறைதல் ... *''ஆதி அன்பு''* (வெளி 2:4)
- அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகள்
- தலைவர்கள் & சக ஊழியர்
- கனியின்மை
- நாளாவட்டத்தில் பாதகச் சிந்தை

□ தேவன் எதிர்பார்ப்பது உத்தமமும், நிலைத்திருப்பதுமே.

□ உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.

□ *விதைப்பவன் ஒருவன், அறுப்பவன் ஒருவன்* (யோ 4:37)

□ நமது சாதனைகளில் 25 சதவீதம்தான் தேவன் காட்டுவார்.

□ ஒப்புமைகளால் அழுத்தம் —
''அவர் சித்தம்,'' ''நமது திறன்'' இவற்றின்
அடிப்படையிலேயே வரங்கள்.
தாலந்துகள் 5 ... 2 ... 1
''உன்னைச் சிறக்கச் செய்பவர் யார்?'' (1 கொரி 4:7)

□ எரிந்து சாம்பலாகிவிடாதபடி விடுப்பு எடுங்கள் —
புத்துணர்வு, புத்துயிர் ... *''தனித்துப் போவோம் வாருங்கள்''*
(மாற் 6:31)

எ.கா.) ஒரு சில நாட்கள் வாசிப்பதிலும், இசைத்தட்டுகள்
கேட்பதிலும், இப்படிப்பட்டவைகளில் செலவிடுங்கள்.

சரியான விகிதம் — வேலை:ஓய்வு = 6:1 (யாத் 20:8-11)
பயிர் நிலத்திற்கே அப்படித்தான்! (லேவி 25:1-4)

ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும் வேலைதானே.
எனவே வருடாந்திர விடுமுறை கட்டாயம்.

7. *உடல்நலக் கேடு* (Physical Sufferings)

- நமக்கோ, குடும்பத்தினருக்கோ

□ சுகத்துக்கான இறைவாக்குகளை உரிமைபாராட்டுங்கள்.

□ விரும்புமளவு உங்களால் செயலாற்ற முடியாவிடில்
குற்றவுணர்வு அடையாதீர்கள்.

□ அது சிட்சையானால் பாடம் கற்றிடுங்கள் (அத்தியாயம் 170)

□ நமது பலக்குறைவில் தேவனது அசாதாரண வல்லமை —
''பவுலின் முள்'' (2 கொரி 12:7-10)

■ *முடிவுரை*

பலவிதப் பிரச்னைகளோடுதான் கடந்த 50 ஆண்டுகளுக்குமேல்
நெடுகவே நான் ஊழியம் செய்துவந்திருக்கிறேன்;
ஆனால் யேகோவாவே போதுமானவராயிருந்திருக்கிறார்:

1. ஆன்மீகத் தோல்விகள்
— *யேகோவா-சிட்கெனு* (சுத்திகரிப்பவர்)
2. பொருளாதாரத் தேவைகள்
— *யேகோவா-யீரே* (கவனித்துக்கொள்ளுபவர்)
3. சமூகவுறவில் சச்சரவுகள்
— *யேகோவா-ரா* (மேய்ப்பர்)
4. வேலையில் பிரச்னைகள்
— *யேகோவா-ஷம்மா* (இறைப்பிரசன்னம்)
5. மனக் கவலைகள்
— *யேகோவா-ஷாலோம்* (சமாதானம் தருபவர்)
6. திருப்பணியில் போராட்டங்கள்
— *யேகோவா-நிசி* (வெற்றி வேந்தர்)
7. உடல்நலக் கேடு
— *யேகோவா-ரப்பா* (சுகமளிப்பவர்)

(யேகோவாவின் இன்னும் சில காரணப்பெயர்கள்: பக்கம் 422)

174

அவதிகளில் அன்பரது அடிச்சுவடுகள்

Jesus' Footsteps of Pain

முகவுரை

- விவிலியத்தில் பல இடங்களில் இயேசுவைப் பின்பற்ற அழைக்கப் படுகிறோம்; ஒரே இடத்தில்தான் அவரது *''அடிச்சுவடுகள்''* —
  1 பேது 2:21-23

  இங்கு பேசப்படுவது பாடுகள், வேதனைகள், துக்கங்கள், முதலியன. துவக்கம் முதல் முடிவு வரை அவரது வாழ்க்கை பாடுகளாலும் வேதனைகளாலும் நிறைந்திருந்தது —

வேதனைப் பாதையில் அவரது அடிச்சுவடுகள் ...

□ வீட்டிலோ மருத்துவமனையிலோ அல்ல, மாட்டுத் தொழுவத் திலேயே பிறந்தார் — விடுதியறைகூட கிடைக்கவில்லை!
லூக் 2:7

□ வீட்டில் வசதியாய் வாழ்வது அவருக்கு அடிக்கடி கிடைக்க வில்லை—
மத் 8:19,20 ... *நரிகள் ... பறவைகள் ...*
நாடோடி வாழ்க்கைதான்!

முன்னோடி மிஷனரிகள் பலருக்கு இப்படித்தான்.

நாம் வசதியாய் வீட்டிலிருந்தாலும் அசவுகரியங்கள் குறித்து எவ்வளவாய் முறுமுறுக்கிறோம்!

எ.கா.) மின்வெட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு, கழிவுநீர் அடைப்பு, கொசுத் தொல்லை, குரங்குகள் அட்டகாசம், போன்றவை.

எரிச்சலின் ஆவியும், குறைசொல்லும் மனதும்
கிறிஸ்தவனின் நறுமணத்தைக் கெடுக்கும்.

□ சில இல்லங்களில் இயேசுவுக்கு அடிப்படையான ஆசாபாசங்கள்கூட கிடைக்கவில்லை —
லூக் 7:36 ... ஒரு பரிசேயனின் வீடு
:40 ... இயேசு போதகரென்பது அவனுக்குத் தெரியும்.
:44-46 ... *தண்ணீர் ... முத்தம் ... எண்ணெய்*

திருமண வைபவங்களிலும் இவை போன்ற நிகழ்ச்சிகளிலும் நன்றாய்க் கவனிக்கப்படாவிடில் எவ்வளவு கசந்துகொள்கிறோம்!

இவ்விதம் புண்பட்டதை இயேசு எவ்விதம் மேற்கொண்டார்?
தமது பிரதான பணியிலேயே கவனம் செலுத்தினார் —
வச 48,50 ... பாவிகளுக்கு மன்னிப்பு , இரட்சிப்பு

□ பயணிக்கும் பிரசங்கியாராய், நேரத்துக்கு நேரம் சாப்பிடமுடியாது, அவருக்கு அடிக்கடி பசியுண்டாயிற்று —

பழமேதும் இருக்கிறதாவென மரத்தைப் பார்ப்பார்!
வைபவங்களில் நன்றாகவே சாப்பிட்டிருப்பார் —

குற்றச்சாட்டு: *சாப்பாட்டுப் பிரியன்! ...*
மத் 11:19 ... *போஜனப் பிரியன் ... மதுபானப் பிரியன்*
(சாப்பாட்டு ராமன் ... குடிகாரன்)

அவர் குறிப்பிட்டது: *''பசியாயிருந்தேன் ...''* (மத் 25:42,43)

□ கடனுக்கு வாங்கிய கல்லறையிலேயே அடக்கம் —
மத் 27:57-60 ... யோசேப்பின் கல்லறை
அடக்கத்திற்கு இடம் முன்பதிவு செய்வோர் எத்தனை!

1. அவதூறு/குற்றச்சாட்டு எனும் வேதனை

□ அவரது கன்னிப்பிறப்பு மறைமுகமாய்த் தாக்கப்பட்டது —
யோ 8:41
மணமாகாதவளுக்கு அவர் பிறந்தது பல ஆண்டுகள் அவ்வூரில் பேச்சாயிருந்திருக்கும்.

□ *''நீ ஒரு சமாரியன்; உனக்குப் பிசாசு பிடித்திருக்கிறது''*
யோ 8:48

''சமாரியன்'' — உங்கள் பிதாவாகிய ஆபிரகாமின் செயல்களைச் செய்யவில்லை (வச 39)

''பிசாசு பிடித்தவன்'' — பொய்க்குப் பிதாவாம் பிசாசினால் உண்டானவர்கள் (வச 44)

இயேசுவைச் ''சமாரியன்'' என்றழைத்தது, அவர் யூதப் பாரம்பரியத்தின்படி நடக்கவில்லை என்பதற்கான குற்றச்சாட்டு!

□ *''உனக்கு ஐம்பது வயதுகூட ஆகவில்லை''* (யோ 8:57)

அதாவது, நீ அனுபவமற்றவன், நூதன்.
பொதுப்பணி எதற்கும் 50 வயதுதான் தகுதியானதாய்க்
கருதப்பட்ட காலமது.

□ *''அவர் மதிமயங்கியிருக்கிறார்''* (மாற் 3:21)

அவருக்குப் பிடித்திருப்பது சாதா பிசாசு அல்ல;
பிசாசுகளின் தலைவன் பெயெல்செபூல் (வச 22).

நமக்கு இதைவிட மோசமான பெயர் கிடைக்கும் —
மத் 10:25

நம்மைப் பிறர் நன்றாய் நடத்துவாரென எதிர்பார்க்கக்கூடாது —
வச 24,25 ... *''சீடன் / குரு''* ... *''வேலைக்காரன் / எஜமான்''*

□ குற்றச்சாட்டுடன் **கேலியும்** வருகிறது —

— *தீர்க்கதரிசனம் சொல்லு* (மாற் 14:65) — வரம்
— *இராஜாவே, வாழ்க!* (மாற் 15:18-20) — தலைமை
— *உன்னை இரட்சித்துக்கொள்!* (மாற் 15:29-31) — ஊழியம்

2. தள்ளப்படுதல் எனும் வேதனை

மாற் 6:3,4 ... சொந்த ஊரார், இனத்தாரால் புறக்கணிப்பு.
லூக் 20:17 ... *தலைக்கல்* ஆன *தள்ளப்பட்ட கல்.*

இது திடீரென நிகழ்வதல்ல —
மூன்று நாட்கள் கல்லறையிலிருக்க வேண்டியதாயிற்று
(அப் 2:26)

இது ஏசா 53:3இல் முன்னறிவிப்பு.

அவர்கள் இயேசுவுக்குப் பதிலாக விரும்பியது —
லூக் 23:18,19 ... *பரபாஸ்* — அவப்பெயர் பெற்ற கொலையாளி!
பரபாசின் முழுப்பெயர் — *''இயேசு பரபாஸ்''* (பர்-அப்பா)

இதைப் பேதுரு சுட்டிக்காட்டுகிறார் —
அப் 3:14,15 ... *பரிசுத்தர் ... நீதியுள்ளவர் ...* கொலைகாரன்

நம்மைவிடச் சிறந்தவர் வேண்டுமென்றல்ல,
நாம் வேண்டாமென்றே உலகம் நம்மைப் புறக்கணிக்கிறது!

இவ்விதச் சூழலை மேற்கொள்வதெப்படி —
''நம்மைப் பகைக்குமுன் அவரைப் பகைத்தது'' எனும் அறிவு
(யோ 15:18)

அறவே ஒதுக்கப்படும்வரை முழுமையாய் எவனும் ஏற்கப்படான்.
உலகம் ஏன்தான் நம்மைப் பகைக்கிறது? —
''முகாந்தரம் (காரணம்) *இல்லாமல் ...''* (வச 25)

''ஆனால்'' தேற்றரவாளன் வரும்போது ... (வச 26)
இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் அனுப்பப்பட்டார்.

3. தனிமை எனும் வேதனை

தேவனது பிள்ளைகளில், அதிலும் கிறிஸ்தவத் தலைவர்களில்,
எவரும் இவ்வேதனைக்குத் தப்பமுடியாது.

பன்னிருவரை இயேசு தெரிந்தெடுத்ததின் பிரதான நோக்கம் —
மாற் 3:14 ... *அவர்கள் அவரோடிருக்க ...*

பிதாவானவரோடு நேரம் செலவழிக்க விரும்பியது தவிர்த்து,
எப்பொழுதும் சீடரைத் தம்மோடு கூட்டிச் சென்றார் —

அவர்களோடு உரையாடினார்.
அவர்களோடு உழைத்தார்.
அவர்களோடு உணவருந்தினார்.
அவர்களோடு உறங்கினார்.

அவர்கள் அவருக்கு அதிகமாய்த் தேவைப்பட்டபோதோ,
தவறினர் —
மத் 26:38 ... *''என்னோடு விழித்திருங்கள்''*
:40 ... *''என்னோடு விழித்திருங்கள்''*

ஏற்கனவே முன்னுரைக்கப்பட்டது: ஏசா 59:16 / 63:5
''துணை செய்வார் ... தாங்குவார் ... இல்லை ... ஆச்சரியம்!''

□ நம்மோடு ஜெபிக்கக்கூட ஒருவருமில்லை எனும் நேரம் வரலாம்.
மக்களுக்குத் தங்கள் பிரச்னைகளே அதிகமோ, நமது வேதனையில்
பங்குபெறத் தயக்கமோ காரணமாயிருக்கலாம் (லூக் 22:44,45)

இதுவே மறுரூப மலையிலும் நடந்தது (லூக் 9:30-32)
(பேதுருவும் மற்றவர்களும் ... *நித்திரை மயக்கம்)*

இவ்வித வேளைகளில் நமக்குதவ தேவன் பணிவிடைத் தூதரை அனுப்பிவைப்பார் —

லூக் 22:43 ... விடுவிக்க அல்ல, *பலப்படுத்த* (வச 44)

- ☐ தங்களது முன்னேற்றத்திலேயே மக்கள் கரிசனை கொள்வது அவர்கள் நமக்குதவாததற்குக் காரணமாயிருக்கலாம் —

  லூக் 22:24 ... காட்டிக்கொடுத்தலைப்பற்றி அவர் பேசுகையில் (வச 21), அவர்களுக்குள் போட்டா போட்டி!

  இதுதான் கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது!

  ''சிநேகிதர் வீட்டில் பட்ட காயங்கள்'' (சக 13:6)

- தனிமையெனும் வேதனை சாதாரணமானதல்ல —

  தூங்க முடியாது சிரமப்படலாம் (சங் 102:7)

  தேவனே நம்மைக் கைவிட்டதுபோல் தோன்றும்போது தனிமை உச்சத்தை எட்டும் —

  மாற் 15:33,34 ... *இருள்* ... மதியம் 12 முதல் பிற்பகல் 3 வரை.
  ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?''

  தேவன் நிசமாகவே இயேசுவைக் *''கைவிட்டாரா?''*
  நாம் திட்டமாய் எதையும் சொல்லமுடியாது!

  ஆனால் மானிடத்தில் இயேசு அவ்வாறே உணர்ந்தார்.
  ''என் பிதாவே'' என்றல்ல, *''என் தேவனே''* எனக் கதறினார்!

  இவ்வித வேளைகளில் சங்கீதம் 77ஐ வாசியுங்கள்.

  இது தாவீதின் சங்கீதமல்ல; இசைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கும் தாவீது நியமித்திருந்த மூன்று குடும்பங்களில் ஒருவர்தான் ஆசாப். இக்குடும்பத்தின் 12 சங்கீதங்கள் வேதத்திலுண்டு —

  1 நாளா 25:1,2; சங் 77:7,8,9 ?????? (6 கேள்விகள்)
  சேலா! (வச 9) — போதும், நிறுத்து!
  ''இது எனது பலவீனம்!'' (வச 10)

  தேவனது ''வழி'' எங்கே?

  அ) *பரிசுத்த ஸ்தலத்தில்* (வச 13) ... இருள்
  ஆ) *கடலில்* (வச 19) ... *''காலடிகள் தெரியவில்லை!''*
  இ) *புயலில்* (நாகூம் 1:3) ... குழப்பம்

இயேசுவின் காலடிகளைப் பின்பற்றிச் செல்லுவது ''தெரியாத உலகிற்குள் பயணம்'' போலிருக்கும் —

ஆனாலும், அவர் **நடத்துவார்** (சங் 77:20)

அவரது காலடிகள் தெரியும்வரை அவரைப் பின்பற்றுங்கள்;
காலடிகள் தெரியாதபோது, அவர் கைகளைப் பிடித்துக்கொள்ளுங்கள்;
அவர் உங்களை நடத்துவார்!

- **சங்கீதப்** புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.
  கிறிஸ்துவின் பாடுகளுக்கு நிறைய குறிப்புகள் —

  - ☐ *ஒரு புழு* (22:6)
  - ☐ *சிறுமையும் எளிமையுமானவன்* (40:17)
  - ☐ *என் சகோதரர்க்கு வேற்று மனிதன்* (69:8)
  - ☐ *இதயத்தைப் பிளக்கும் நிந்தை* (69:20)
  - ☐ *சிறுமையும் துயரமுமுள்ளவன்* (69:29)
  - ☐ *வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவி* (102:7)
  - ☐ *புல்லைப்போல் உலர்ந்துபோகிறவன்* (102:11)

■ தேவையானதொரு திருத்துதல் உபதேசம்:

இன்றையப் பிரபலப் போதனை:
கிறிஸ்து பாடனுபவித்ததால் நாம் பாடுபடத் தேவையில்லை.

திருமறையின் போதனையோ வேறு —

- ☐ கொலோ 1:24... *பாடுகள் ... குறைவாயிருப்பதை நிறைவாக்க ...*
  ''ஆசீர்வாதப்'' பாத்திரம் என்பது
  ''பாடுகளின்'' பாத்திரம்தான் (பாடுகளில் ஸ்நானம்)
- ☐ 2 கொரி 4:8-10 ... *மரணத்தை எப்பொழுதும் சுமந்து திரிகிறோம்*
- ☐ ரோ 8:35 ... *எந்நேரமும் கொல்லப்படுகிறோம் ...*
  — எதனால்? (வச 36)...
  உபத்திரவம்... வியாகுலம்... துன்பம் ...

இது பாவத்திற்கான சிட்சையல்ல (சங் 44:20-22).
வேதனையின்றிச் சாதனையில்லை!

□ வியாதிகளும் உள்ளடக்கம்
எ.கா.) *மாம்சத்தில்* (உடலில்) *முள்* (2 கொரி 12:7)
எல்லாம் கிறிஸ்துவினிமித்தம் (வச 10)

சில வேளைகளில் சுகம்;
பல வேளைகளில் சகிப்புக்குப் பலம்.

□ லூக் 23:31 ... *பச்சை மரம்* vs. *பட்ட மரம்*

■ *முடிவுரை*

□ சங் 17:14 ... இவ்வுலக ஆசிகளில் திருப்தியில்லை.
:15 ... *நானோ ... உமது சாயலால் திருப்தியாவேன்!*

1 யோ 3:2 ... *அவர் இருக்கிறவண்ணமே அவரைத் தரிசிப்போம்;*
அவருக்கு ஒப்பாயிருப்போம்!

அவரது அடிச்சுவடுகளில்!

175

துன்புறுத்தப்படுதலும் இரத்தசாட்சிகளும்

Persecution & Martyrdom

முகவுரை

- ''இரத்தசாட்சி'' எனும் பொருளில் பிரசங்கங்களும் பிரசுரங்களும் அபூர்வமானதால், இரத்தசாட்சிகளின் காலம் கடந்துவிட்டது என்றெண்ணுகிறோம்.

  ஆனால் International Bulletin of Missionary Researchஇன்படி, ஆண்டுதோறும் 1,60,000 கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சிகளாய் மரிக்கின்றனர்.

- இது பெரும்பாலும் 10/40 எனும் பகுதிக்குள் நடக்கிறது — அதாவது, பூகோளத்தில் 10 மற்றும் 40 ரேகைகளுக்குள் உள்ள நாடுகள் — சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாதோரில் 90% இங்குதான் — இங்குள்ள நாடுகளில் பல சுவிசேஷத்திற்குக் கதவடைத்துள்ளன —

எ.கா.)	ஆப்கானிஸ்தான்	வடகொரியா
	பங்களாதேஷ்	பாகிஸ்தான்
	சீனா	சவுதி அரேபியா
	ஈராக்	துருக்கி
	லாவோஸ்	ஐக்கிய அரபு நாடுகள்
	மொரோக்கோ	வியட்நாம்

■ *துன்புறுத்தப்படுதலுக்குப் பொதுவான காரணங்கள் —*

- மத சம்பந்த காரணங்கள் — *விசுவாசத்திற்காய்ப் போராட்டம்* (யூதா 3)

  எ.கா.) காயீன் / ஆபேல் — முதலாம் போர் (1 யோ 3:12,13)
  ரோமன் கத்தோலிக்கரால் சீர்திருத்தவாதிகள்.
  ஈசாக்கு / இஸ்மவேல் — கலா 4:28-30

- அரசியல் காரணங்கள் — கிறிஸ்தவச் செயல்பாடுகளைத் தேசத் துரோகமெனக் கணிப்பு.

  எ.கா.) இராயன் vs. இயேசு (லூக் 23:1,2; அப் 17:7)

- இனவெறிக் காரணங்கள்

  எ.கா.) ஹிட்லர் கையில் யூதர்.

  இந்தியாவில் கிறிஸ்தவம் வெளிநாட்டு மதமென எண்ணப்படுதல்.

- தத்துவங்களையடுத்த காரணங்கள் — சர்வாதிகாரிகள் தங்கள் தத்துவங்களுக்குக் கிறிஸ்தவ விசுவாசத்தை முரண்பாடாய்க் கண்டனர்.
  எ.கா.) கம்யூனிசம்

□ துன்புறுத்தப்படல் கடவுளுக்கு ஆச்சரியமல்ல; நமக்கும் ஆச்சரியமாயிருக்கக்கூடாது —

- இயேசு: *''எருசலேம் குமாரத்திகளே ... பச்சை மரம் ...''* (லூக் 23:28-31)

  அவ்விதமே, வேலைக்காரன் vs. எஜமான்

- அப்போஸ்தலர்: பவுல் தனது பாடுகளை வரிசைப்படுத்திய பின்னர் —
  (2 தீமோ 3:11,12,13) — இன்னும் கொடூரமாகுமென முன்னறிவிப்பு

  நாம் துன்புறுத்தப்படாவிட்டால்தான் ஆச்சரியப்படவேண்டும்.
  புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் அனைவரும் துன்புறுத்தப்பட்டனர்.

■ ***துன்புறுத்தப்படுதலைத் தேவன் அனுமதிப்பதேன் —***

1. திருச்சபை பரிசுத்தப்பட (Purification of the Church)

துவக்கத்தில், இரட்சிக்கப்படுவோர் மட்டுமே
சபையில் சேர்க்கப்பட்டனர் (அப் 2:47).
இன்றோ, இரட்சிக்கப்பட்டோரைவிட
இரட்சிக்கப்படாதோரே சபையில் அதிகம்.

ஈசாக்கு vs. இஸ்மவேல்

இது எப்படி நடந்தது?

திருச்சபையைத் தாக்க சாத்தானின் இரு வழிகள் —

அ) வெளியேயிருந்து — ஓர் எதிரியாக

ஆ) உள்ளேயிருந்து — ஒரு நண்பனாக

தனது தந்திரத்தை மாற்றிக்கொண்டேயிருப்பான்.
இரண்டாம் யுக்தி முதலாவதைவிட மோசம்!

சபையைத் தேசத்தோடு இணைத்தான் மன்னன் கான்ஸ்டன்டைன்.
கிறிஸ்தவம் அதிகாரப்பூர்வமான மார்க்கமாயிற்று.
விசுவாசத்தின் அடிப்படையில் அல்ல,
வசதிக்காய் மக்கள் கிறிஸ்தவராயினர்.

எ.கா.) துப்பாக்கியுடன் ஒரு தீவிரவாதி ஆலய ஆராதனைக்குள் நுழைந்து, ''கிறிஸ்து ஒருவரே வழி'' என்று சொல்லுவோரையெல்லாம் சுடப்போவதாக அறிவித்தால், நம்மில் எத்தனைபேர் இரட்சகருக்காய் நிற்போம்?

இருநினைவுகளால் குந்திக் குந்தி நடக்கிறோம் (1 இரா 18:20,21)

எல்லாச் சாலைகளும் ரோம் நகர் செல்லலாம்;
ஆனால் எல்லா மார்க்கங்களும் மெய்த்தேவனிடம் நடத்தாது!

''கிறிஸ்தவராகிய நாம் மதில் மீதுள்ள பூனைகளா?''

கதிரிலிருந்து பதரையும், நெல்லிலிருந்து களையையும்
பிரித்தெடுக்க துன்புறுத்தல் எனும் அக்கினி உதவும்.

எலியாவாய் வந்த யோவான் — அவனது செய்தி (மத் 3:9-12)

2. திருவசனம் பரப்பப்பட (Propagation of the Gospel)

அப் 1:8 — *''சாட்சிகள்''* = இரத்தசாட்சிகள் (கிரேக்கு)
தைரிய சாட்சி = துணிந்த சாட்சி
எருசலேம் → யூதேயா → சமாரியா → உலகம்

எ.கா.) அவர்களது தவறுதலும் தேவனது செயல்பாடும் —
அப் 8:1,4 ... துன்புறுத்தல் ... சிதறப்படல்

எ.கா.) பவுல் சிறையிலடைப்பு —
''சுவிசேஷம் பிரபலமாக ...'' (பிலி 1:12-14)

ராஜாஜி: ''கிறிஸ்தவர்கள் மூட்டைப்பூச்சிகள்; நசுக்கினால் பெருகுவர்!''
அவ்விதமே, எகிப்தில் எபிரெயர் (யாத் 1:12).

''இரத்தசாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து!''

எ.கா.) தமிழகத்திலும் கேரளத்திலுமுள்ள திருச்சபையே இந்தியாவில் வலுவானது —
இரகசியம்?
அப்போஸ்தலன் தோமா கேரளத்தில் பணியாற்றித்
தமிழகத்தில் இரத்தசாட்சியானார்.

எ.கா.) 1999 இல் ஒரிசா மாநிலத்தில் கிரஹாம் ஸ்டெயின்ஸும் இரு மகன்களும் இரத்தசாட்சிகளாயினர்.

இம்மாநிலத்தில் சபை வளர்ச்சி அதிவேகம்.

துன்புறுத்தலானது இன்னும் இந்தியாவில், குறிப்பாய்த்
தென்னிந்தியாவில், பெருமளவில் வரவில்லை;
ஆனால் *ஒருவரும் செயல்படமுடியா இரவு வருகிறது!*

திருச்சபை தனது பொறுப்புகளை முக்கியத்துவ வரிசைப்படுத்த வேண்டும். துன்புறுத்தப்படுவோருக்கு நமது பொறுப்புகள் —

1. *ஜெபம்* (Prayer)

(அ) துன்புறுவோருக்காய்

பேதுருவுக்காய் இயேசு ... *அவன் விசுவாசம் ஒழியாதிருக்க* (லூக் 22:32)

சிறையில் பேதுரு ... திருச்சபை ஜெபித்துக்கொண்டிருந்தது (அப் 12:5)

தைரியத்திற்காய் ஜெபிக்கப் பவுலின் வேண்டல் (எபே 6:19,20)

□ இரத்த சாட்சிகளின் தைரியத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள் —

- போலிகார்ப்: 86 ஆண்டுகள் கிறிஸ்துவைச் சேவித்துள்ளேன்;
  அவர் எப்பாதகமும் எனக்குச் செய்யவில்லை.
  என் இராஜாவை, இரட்சகரை, எப்படித் தூஷிப்பேன்?
- ஹென்றி வாஸ்: எனக்கு இரு தலைகள் இருந்தால்,
  இரண்டுமே கிறிஸ்துவுக்காய்ப் போகட்டும்!
- தாகிர் இக்பால், பாகிஸ்தான் சிறையில் தனது கிறிஸ்தவ விசுவாசத்திற்காய் மரித்த ஒரு முகமதியர் (1993) —

  ''தூக்குக்கயிற்றை வேண்டுமானால் முத்தமிடுவேன்;
  என் விசுவாசத்தையோ ஒருபோதும் மறுதலியேன்!''

சமூகத்திலிருந்து பழங்குடி விசுவாசிகள் தள்ளப்படுகின்றனர் ...
பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர்கூட இறைக்க முடியாது.
மதத் தீவிரவாதிகள் மறுமதமாற்றம் செய்கின்றனர்.

(ஆ) துன்புறுத்துவோருக்காய்

- பொதுவுடைமை நாடுகளுக்காய்ப் பக்தன் ஆன்ட்ரூ
  15 ஆண்டுகள் சங்கிலி ஜெபம் ... பெர்லின் சுவர் விழுந்தது!

  இப்பொழுது நாம் இஸ்லாமிய நாடுகளுக்காய் ஜெபிப்போம்.
  அவர்கள் பணத்தைச் சம்பாதிக்க அரபு நாடுகளுக்குச்
  செல்லுகிறோமே, அவர்கள் ஆன்மாக்களை இரட்சிப்பது யாரோ?
- ஸ்தேவான் ஜெபித்தான்: சவுல் மாறினான் (அப் 7:60; 8:1; 9:1-5)
  தீவிரமாய் எதிர்ப்போர்தான் பெரும்பாலும்
  முதலாவது மனந்திரும்புவோராயிருப்பர்!
  மிஷனரிக் களங்களில் இது சகஜம்.
  வசனத்தை எதிர்த்தவன் அதை எடுத்தியம்புகிறான் (அப் 9:20-22)
- இரத்தசாட்சியாய் மரிக்கையில் வேத மொழிபெயர்ப்பாளர்
  வில்லியம் டின்டேல் ஏறெடுத்த ஜெபம் —

  ''கர்த்தாவே, இங்கிலாந்து மன்னனின் கண்களைத் திறந்தருளும்!''

  Foxe's Book of Martyrs எனும் நூலை வாசியுங்கள்.

இயேசு: *துன்புறுத்துவோருக்காய் ஜெபியுங்கள்* —
அவர்கள் மன்னிக்கப்பட வேண்டுங்கள் ...
அவர்கள் இரட்சிக்கப்பட ஆசீர்வதியுங்கள் (மத் 5:44)

நமது இரண்டாம் பொறுப்பு —

2. *பங்கேற்பு* (Participation)

எபி 13:3 ... துன்புறுவோருடன் அடையாளப்படுத்திக்கொள்ளல்
''அழுவோரோடு அழுங்கள்'' (ரோ 12:14,15)

துன்புறும் சகோதர சகோதரிகளைக் கவனியாதிருப்பது
தேவனது பார்வையில் பெரும் பாதகம் —
ஆமோஸ் 6:6 ... *யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்து*
ஒபதியா 10-12 ... *யாக்கோபின் சிறையிருப்பு*

இயேசு: *சிறையிலிருந்தேன் ... பார்க்க வந்தீர்கள் ...*
இச்சிறியரில் ஒருவருக்கு (மத் 25:36,40)

□ மிஷனரி இயக்கங்களோடு தொடர்புகொண்டு,
துன்புறுத்தல் நிறைந்துள்ள பகுதிகளுக்குச் சென்று,
புது விசுவாசிளை உற்சாகப்படுத்துங்கள் —
அவர்கள் தனியாக இல்லை என உணரட்டும் (1 பேது 4:12; 5:8,9)

□ எதிர்ப்புகள் நிறைந்த கடினமான பகுதிகளில் பணியாற்றும்
மிஷனரி நிறுவனங்களைத் தாங்குங்கள்.
மிஷனரிப் பத்திரிகைகளிலிருந்து விபரங்கள் சேகரியுங்கள்.

□ எப்பொழுதும் பயமுறுத்தலின் நடுவிலேயே உழைக்கும்
மிஷனரிகளுக்குக் கடிதமெழுதுங்கள்.

■ ***துன்புறுத்தப்படுவோர்க்குப் பலாபலன்கள் —***

அ) மகுடப் பரிசுகள் —

2 தீமோ 2:9-12 ... *கிறிஸ்துவோடு அரசாளுவோம்*
வெளி 2:10 — *சிமிர்னா சபை ... ஜீவ கிரீடம்*
எபி 11:35 ... *மேலான உயிர்த்தெழுதல்*

துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள் ... பரலோகம் (மத் 5:12)
கல்லெறியப்பட ஸ்தேவான் விடப்பட்டான் —
இயேசு எழுந்து நின்றார்!

ஆ) துன்புறுத்துவோருக்குத் தண்டனை —
வெளி 18:20,24 ... *தேவன் நியாயந்தீர்த்தார் ...*
19:2 ... *தேவன் பழிவாங்கினார் ...*

■ ***முடிவுரை***

எல்லாரும் இரத்தசாட்சிகளாய் மடியவேண்டுமென்பதல்ல;
ஆனால் எல்லாரது மனதும் அதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்!
— வாட்ச்மேன் நீ

*''கிறிஸ்துவை விசுவாசிக்க மட்டுமல்ல;
அவருக்காய்ப் பாடுபடவும் அழைக்கப்பட்டுள்ளோம்''*
(பிலி 1:29,30) — அப்போஸ்தலன் பவுல்

''எனக்காய்க் கிறிஸ்து மரித்திருக்க,
நான் என்னதான் தியாகம் செய்திட முடியும்?''
— C.T. ஸ்டட்

(176ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

176

''உயிருள்ளவரை உண்மையாயிரு!''

"Be faithful until death!"

முகவுரை

- வெளி 2:10 ... *''**சாகும்வரை** உண்மையாயிரு,
ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்!''*

கண்டிக்கப்படாத இரு சபைகளில் ஒன்றாகிய சிமிர்னா சபைக்கு
எழுதப்பட்டது இது.

அடுத்த சபை பிலதெல்பியாவிலுள்ளது.
இரண்டும் மிஷனரிச் சிந்தையுள்ளவை.

- மரணம்வரை உண்மையாய் **''வாழ''** வேண்டும் என்றே
இவ்வசனம் பொதுவாக அர்த்தப்படுத்தப்படுகிறது;
ஆனால், மரணத்தைச் சந்திக்கவேண்டியதிருந்தாலும்
கிறிஸ்துவுக்குச் **''சாட்சி'' பகர**வேண்டுமென்பதே இங்கு பொருள்.

வேறு வார்த்தைகளில்,
இரத்த சாட்சி மரணத்திற்கோர் அழைப்பு இது!

வாட்ச்மேன் நீ:
''எல்லாரும் இரத்தசாட்சிகளாய் மரிக்கத் தேவைப்படாது
இருக்கலாம்; ஆனால் ஆயத்தமாயிருக்கவேண்டும்!''

பெர்கமு சபைக்கான அடுத்த கடிதம் குறிப்பிடுவது —
''எனக்கு உண்மையுள்ள (இரத்த)சாட்சியான அந்திப்பா''
(வெளி 2:12,13)

- பிரபலமற்ற, பிரியமற்ற, இச்சத்தியத்தைப் பற்றிய பல்வேறு
வேத வசனங்களைத் தொகுத்துப் பார்ப்போம் —

தமது பரமேறுதலுக்குச் சற்று முன்னர் இயேசு சொன்ன
வார்த்தைகளில் துவங்குவோம் —

அப் 1:8 ... *''சாட்சிகள்''* = கிரேக்கு: இரத்த சாட்சிகள்

''சாட்சிகள்'' என்பதற்குப் பதிலாக *''இரத்த சாட்சிகள்''* என்று
இவ்வசனத்தை வாசித்துப் பாருங்கள்.

''வல்லமை'' = *dunamis / dynamite* (வெடிமருந்து)
''வல்லமை'' (power) என்பதைத் திரும்பத் திரும்பக் கூறிவிட்டு,
''சாட்சிகள்'' (pain) என்பதின் மூலப்பொருளைக்
கவனியாது விட்டோம்.

வேதனையைச் சகிக்கவே **வல்லமை!**
Power to endure pain!

மற்றப்படி, சீடர்கள் ஏற்கனவே பிரசங்கித்துக்கொண்டும்,
பிசாசு விரட்டிக்கொண்டும் இருந்தனரே (மாற் 3:14,15)!

- தீமோத்தேயுவுக்குப் பவுல் இதனைத் தெளிவாக்குகிறார் —
  2 தீமோ 1:6-8 ... *''பயம் ... பலம் ... கட்டு ... தீங்கு''*

  பிலாத்துவுக்குமுன் நின்ற இயேசுவைச் சுட்டிக்காட்டி
  இவ்விளைஞனுக்குச் சவாலிடுகிறார் —
  1 தீமோ 6:12,13 ... *நல்ல அறிக்கை ...*
  யோ 18:37 ... *சாட்சி ... இதற்காகவே வந்தேன் ...*

  வெளிப்படுத்தலில் இயேசுவைப்பற்றிய முதல் அறிமுகம் —
  வெளி 1:5 ... (அ) ***உண்மையுள்ள** சாட்சி*
  (ஆ) *மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்*
  (இ) *இராஜாக்களுக்கு அதிபதி*

  (ஆ), (இ) பற்றி அதிகம் பேசுவோம்; (அ) விடப்படுகிறது.

- உண்மையுள்ள சாட்சியானவராகிய கிறிஸ்து நம்மை அவருக்கு
  உண்மையுள்ள சாட்சிகளாயிருக்க அழைக்கிறார் —
  2 தீமோ 2:8-13
  பாடனுபவிக்கிறேன் (வச 9) ... *கட்டுகள்*
  சகிக்கிறேன் (வச 10)

''உண்மையுள்ள'' வார்த்தை —
மரித்தால் ... பிழைத்திருப்போம் ...
சகித்தால் ... அரசாளுவோம் ...
மறுதலித்தால் (வெட்கினால்) ... மறுதலிப்பார் ...
உண்மையில்லாதவர்கள் ... உண்மையுள்ளவர் ...

''தம்மைத்தாமே மறுதலியார்!''

அதாவது, தாம் யாரென்றும் என்ன செய்வாரென்றும்,
பிலாத்துவின்முன் அறிக்கையிட்டதுபோல்,
சொல்லிக்கொண்டேயிருப்பார்!

- ''இன்னல்'' (hardship) சகிக்கத்தான் அழைப்பு;
  ''இன்பம்'' (happiness) அனுபவிக்க அல்ல (வச 3)
  வேறு வழியில்லை — *தீங்கனுபவிக்க ''வேண்டும்!''*

- இரத்த சாட்சிகளாய் மரிக்க ஆயத்தமாயிருக்க தமது ஊழியக்காலம்
  முழுவதும் இயேசு சீடரை ஆயத்தப்படுத்தினார் —
  மத் 5:11-13,14 ...*உப்பு ... வெளிச்சம் ... நிந்தனை ... துன்பம்*
  உப்பு — கரைய வேண்டும்.
  வெளிச்சம் — எரிந்து உருகவேண்டும்.
  ''எரிந்து பிரகாசிக்கும்'' விளக்கு!

தனது தலையைப் பறிகொடுத்த சாட்சியுடன் புதிய ஏற்பாடு
துவங்குகிறது (யோ 1:6-8)

- பன்னிருவரைப் பணிக்கும்போது இயேசு சொன்னவை —
  மத் 10:5-42
  இந்த 38 வசனங்களில் 24 துன்புறுத்தலைப் பற்றியது:
  (வச 16-39)
  இன்று சுவிசேஷப்பணியின் **முறைகள்தான்** பேச்சு;
  சாட்சியாயிருப்பதற்கான **கிரயம்**பற்றிப் பேசுவது யாரோ?

இப்பகுதியை விபரமாய்ப் பார்ப்போம் —

☐ *''ஜெபாலயங்களில் வாரினால் அடி''* (வச 17)
— பின்வாங்கிய சபையின் வேலை

☐ *''அதிபதிகள் & அரசர்கள்''* (வச 18) ... *''புறவினத்தார்''*
— கிறிஸ்தவரல்லாத அதிகாரிகள்

☐ *''ஒப்புவிப்பர் ... எதைப் பேசுவோம் ... ஆவியானவர்''* (வச 19,20)
இது பிரசங்கபீடத்திற்கான ஆயத்தம் பற்றியல்ல,
தூக்குமேடைக்கான ஆயத்தம் பற்றியது (மாற் 13:9-11)

எதையும் நமது வசதிக்கேற்ப மாற்றிக்கொள்கிறோம் —
போதுமான பிரசங்க ஆயத்தமின்மைக்குப் போர்வையாக
இவ்வசனங்களைப் பயன்படுத்துகிறோம்!

ஆலோசனைச் சங்கத்தாருக்குமுன் கொண்டுவரப்பட்ட பேதுரு,
யோவானுக்குத் தேவனருளிய ஞானம் —

அப் 4:13 ... *தைரியம்*

அப்படியே ஸ்தேவான்: 6:10 ... *ஞானம் ... ஆவி ...*

□ *சகோதரன் ... சகோதரன் ... தகப்பன் ... பிள்ளைகள்*
மத் 10:21,22

குடும்பத்தில் எதிர்ப்புகள், போராட்டங்கள் —
எ.கா.) வச 34-36 ... *பட்டயம் ...* விரோதிகளாகும் இனத்தார்

இது கிறிஸ்தவரல்லாத குடும்பங்களுக்கு மட்டுமுரியதல்ல.
''தீவிரமான சீடத்துவத்தையே''
இப்பகுதி குறிப்பிடுகிறது (வச 37)

''இறுதிவரை உறுதியாயிருப்பவனே இரட்சிக்கப்படுவான்'' (வச 22)
பக்தியுள்ள வாழ்வு வாழ்வது மட்டுமல்ல,
சாகவேண்டியதிருந்தாலும் தீவிரமாய்ச் சாட்சிபகர்தல்.

□ *''என்னைப் பெயல்செபூல் என்றழைத்தால் ...''* (வச 24,25)
அப்படியே, *''பச்சை மரம் ... பட்ட மரம்''* (லூக் 23:31)

அதாவது, நமது பாடுகள் இயேசுவின் பாடுகளைவிட
அதிகமாயிருக்கலாம் —

ஒரே வித்தியாசம்:

அவர் நமது பாவங்களுக்காய் மரித்தார்;
நாம் அவருக்காய்ப் பாடனுபவிக்கணும்!

பின்வரும் வசனங்கள் குறிப்பிடுவது இதைத்தான் —

- *அவரது பாடுகளின் ஐக்கியம்* (பிலி 3:10)
- *கிறிஸ்துவின் பாடுகளை நிறைவேற்றுதல்* (கொலோ 1:24,25)
(பாவங்களுக்காய் அல்ல,
திருச்சபை பூரணப்படுதலுக்காய்ப் பாடுபடுதல்)

- *பாளையத்திற்கு வெளியே அவரிடம்* (எபி 12:12,13)
''பாளயம்'' = குடும்பத்தினர், நண்பர், ஐக்கியத்தினரின்
வசதியான வட்டம்

□ *''ஆன்மாவை அல்ல, உடலைக் கொல்வோர் ... தலைமுடி''*
(மத் 10:28-31)

''உடல் பாதுகாப்பு'' அல்ல,
''ஆன்ம இரட்சிப்பே'' இங்கு உத்திரவாதம்.

வாசியுங்கள்: லூக் 12:4-7 ; 21:17-19

பொறுமையுடன் ''ஆத்துமாக்களைக்'' காத்துக்கொள்ளுங்கள் .

பேதுருவைச் சிறையிலிருந்து ஆண்டவர் விடுவித்தார்;
யாக்கோபையோ வெட்டப்படவும்,
ஸ்தேவானையோ கல்லெறியப்படவும் விட்டுவிட்டார்.
பின்னர், பேதுருவும் கொல்லப்பட்டார்!

அப்போஸ்தலர் மடிந்த விதங்களைப் பாருங்கள் ...

— அந்திரேயா: “X” வடிவ சிலுவையில் கட்டப்பட்டார்
— பர்த்தொலொமேயு (நாத்தான்வேல்): தோலுரிக்கப்பட்டார்
— யோவானின் சகோதரன் யாக்கோபு: எருசலேமில்
தலைவாங்கப்பட்டார்
— கிலெயோப்பாவின் மகன் யாக்கோபு: கோபுரத்திலிருந்து
தள்ளப்பட்டார்
— ததேயு எனும் யூதா: அம்பெறியப்பட்டு கொல்லப்பட்டார்
— மத்தேயு: வாளால் வெட்டப்பட்டார்
— பேதுரு: தலைகீழாய்ச் சிலுவையிலறையப்பட்டார்
— பிலிப்பு: தூக்கிலிடப்பட்டார்
— செலோத்தே எனும் சீமோன்: 129 வயதில்
சிலுவையிலறையப்பட்டார்
— தோமா: சென்னையில் ஈட்டியால் நாம் கொன்றோம்
— மத்தியா: கல்லெறிப்பட்டுத் தலை வாங்கப்பட்டார்
— யோவான்: நாடு கடத்தப்பட்டு இயற்கை மரணமடைந்தார்
— பவுல்: தலைவாங்கப்பட்டார்

இவர்களெல்லாரும் அவிசுவாசத்தோடும் நிச்சயமின்மையோடுமா
மரித்தார்கள்? இல்லை —
*''இவர்களெல்லாரும் **விசுவாசத்தினால்** மரித்தனர்''* (எபி 11:13)

விசுவாசத்தினால் நீதிமான் ''பிழைப்பான், மரிப்பான்!''

அவர்களது முழக்கம்: *''வாழ்வு கிறிஸ்து; மாள்வு லாபம்!''*
(பிலி 1:20,21) — சிறையிலிருந்து, துன்புறுத்தல் பற்றி.

மத்தேயு 10ஐத் தொடர்ந்து கவனிப்போம் —

□ **பலாபலன்களைச்** சுட்டிக்காட்டி,
இயேசு இந்தப் பணிப்புரையை முடிக்கிறார் (வச 40-42) —
பாடுபடுவோருக்குரிய பலாபலன்கள் அல்ல,
அவர்களோடு நின்று, அவர்களைத் தாங்கி,
அவர்களோடு அடையாளப்படுத்திக்கொள்வோருக்குரியவை.

அழுத்திக் கூறுவதைக் கவனியுங்கள் — (வச 42)
''பலனடையாது போவதில்லையென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்!''

துன்புறுத்தப்படுவோரோடு அடையாளப்படுத்திக்கொள்ளுதல்
என்பது முக்கியமான திருமறைப் போதனை —
பிலி 1:7 ... *என் கட்டுகளில் பங்குள்ளவர்கள்*
அது நம்மையும் தைரியப்படுத்திவிடும் (வச 12-14)

ஆனால், துன்புறுத்தப்படுவோரோடு சேர்ந்து நிற்போர் குறைவு —
எ.கா.) 2 தீமோ 4:16 ... *ஒருவரும் என்னோடு நிற்கவில்லை*
அப்படியே, 2 தீமோ 1:15 ... *யாவரும் விலகினர்*
(ஒப்பிடுங்கள்: ஆமோஸ் 6:6 & ஒபதியா 10-12)

அதற்கு முக்கிய காரணம் பயம் —
எனவேதான் தீமோத்தேயுவுக்குப் பவுல் அனல் மூட்டினார்
2 தீமோ 1:7,8 ... *பயம் ... பலம்*

இப்பொழுது நமக்கு நாமே அனல்மூட்டுவோம் — எப்படி?
''நினைப்பூட்டுதல்'' மூலம் (வச 6)

துன்புறும் சபையோடு சேர்ந்து நிற்க எழும்பிடுவீர்!

□ பலாபலன்கள் குறித்துப் பேசுகையில் மூன்றுவித சாட்சிகளை
இயேசு குறிப்பிடுகிறார் (மத் 10:41,42)

1. *தீர்க்கதரிசி*
2. *நீதிமான்*
3. *சீடன்*

''தீர்க்கதரிசிகள்'' முதலாவது வருகின்றனர் —

ஏன்?

உபத்திரவப்படுதலுக்கும் துன்புறுத்தப்படுதலுக்கும் தலைசிறந்த
எடுத்துக்காட்டுகள் அவர்கள்தான் —
யாக் 5:10 ... *தீர்க்கதரிசிகளைத் திருஷ்டாந்தங்களாய் ...*
மத் 5:12 ... *மிகுந்த பலன் ... தீர்க்கதரிசிகளை அப்படித்தானே*
துன்புறுத்தினார்கள்
அப் 7:52 ... *தீர்க்கதரிசிகளில் யாரைத் துன்புறுத்தாது ...*
லூக் 11:49-51 ... ஆபேல் (**A**bel) முதல்
சகரியா (**Z**echariah) வரை

அப்படியானால், நவீனத் தீர்க்கர்கள் பிரபலமாயிருப்பதெப்படி?
பெரும்பாலானோர் மக்களுக்கு ''வேண்டியதை'' அல்ல,
அவர்கள் ''விரும்புவதையே'' தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்.

எ.கா.) உண்மையாய்த் தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியாவுக்கு
உதை — எரே 20:1,2

அவன் ஏன் பிரபலமடையவில்லை?
எரே 26:1,2,8,11

இஸ்ரவேலரில் அந்நாட்களில் தலையணைத் தீர்க்கர்கள்தான்
ஏராளம் — எரே 8:811,22

எரேமியா சிறையிலடைக்கப்பட்டான் —
சோறு கிடையாது, வெறும் சேறு!
எரே 38:6

ஆனாலும் அவனால் பேசாதிருக்க முடியவில்லை —
''எலும்புகளில் எரிநெருப்பு'' (எரே 20:7-11)

லியோனார்டு ரேவன்ஹில்லின் தீர்க்கதரிசனச் செய்திகள் கேளுங்கள்.

வாசியுங்கள்: *எழுப்புதல் தாமதிப்பது ஏன்?* | லியோனார்டு
Revival God's Way | ரேவன்ஹில்
Meat for Men | எழுதியது

- திருச்சபையையும் திருச்செய்தியையும் பிரபலப்படுத்தப் பிசாசின் தந்திரமே சிலுவையற்ற கிறிஸ்தவம் —

  எனவேதான் — மத் 16:21-25
  ''அப்பாலே போ, சாத்தானே!''
  சூழமைவு: பிரச்னைகளில்லாது சாட்சிபகருதல்

— இயேசுவின் பாடுகளை அருகிலிருந்து கவனித்த பேதுரு அவற்றை நன்கு புரிந்துகொண்டார்.

அவரது முதலாம் நிருபத்தில் இதுவே முக்கிய கருத்து —

1 பேது 1:11 ... *பாடுகள் ... மகிமை ...*
2:21 ... *பாடுபட்டார் ... முன்மாதிரி ...*
3:16,18 ... *வையப்படும்போது ... பாடுபட்டால் ...*
4:1,13 ... *பாடுகளில் பங்கேற்பு ...*
5:8,9 ... *எதிராளி ... பாடுகள் ...*

நாம் ''இரத்தம்'' சிந்தினால் பிறர் ''ஆசீர்வாதம்'' பெறுவர்.

நாம் அடிக்கடி சொல்வது —

இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து.
இந்த வித்துக்கு ஊற்றவேண்டிய நீர் நமது இரத்தமே!

- ஆன்மீகப் போராட்டம் குறித்து எவ்வளவோ பேசப்படுகிறது; ஆனால், பாடுகள், இரத்தசாட்சி மரணம், இவையெல்லாம் வசதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன —

☐ வெளி 12:11 ... *ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் வெற்றி.*
''மரணமென்றாலும் உயிரை நேசிக்கவில்லை'' என்பது எங்கே?

☐ ரோ 8:35-37
... எந்நேரமும் கொல்லப்படுகிறோம் ... முற்றும் ஜெயம்

''ஜெயம்'' என்றால் நாம் கொல்லப்படமாட்டோமா?

இல்லை, *''மரணம்''* என்றாலும் இறையன்பைவிட்டு
நம்மைப் பிரிக்கமுடியாது — வச 38,39

''மரணமானாலும் ஜீவனானாலும்'' ... முதலில் வருவது மரணம்!

ஜெயங்கொள்ளுதல் என்றால் விடுதலை என்பதல்ல;
மறுதலிக்க மறுத்து நிமிர்ந்து நிற்பதே அது ...

எ.கா.) தானி 3:17,18 ... *விடுவிப்பார் ... விடுவிக்காவிடினும் ...*
எபி 11:35-38 ... *மேலான உயிர்த்தெழுதலடைய விடுதலை பெறச் சம்மதியாமல் ...*

உயிர்விடுதலின்றி உயிர்த்தெழுதல் ஏது?

எ.கா.) வெளி 2:10 ... சிறையடைப்பு முன்னறிவிப்பு;
விடுதலை வாக்குப்பண்ணப்படவில்லை.
ஆனால், ***''மரணம்** வரை'' உண்மை!*

இங்கு *''10 நாட்கள்''* எதைக் குறிப்பிடுகின்றன?

10 நாட்கள் என்பது பொதுவாகக் குறுகிய காலத்தைக் குறிக்கும் —

எ.கா.) ரெபெக்காள் ... *இன்னும் 10 நாட்கள்* ... (ஆதி 24:55)

எ.கா.) தானியேல் ... *10 நாட்கள் பாரும்* (தானி 1:12)

அதாவது, இன்றைய உபத்திரவத்தின் கால அளவை
நித்தியத்தோடு ஒப்பிட்டால் அது ஒன்றுமேயில்லை!

- எனவேதான் பவுல் சொன்னது —
  ''கொஞ்சக்காலம் ... இலகுவான உபத்திரவம்!''
  (2 கொரி 4:17-5:1)

- எனவேதான்,
  துன்புறுத்தலை நிறுத்த அப்போஸ்தலர் ஜெபிக்கவில்லை;
  தைரியத்தையே வேண்டினர், பெற்றனர் —
  அப் 4:29-31 — இந்த ஜெபம் மனனம் செய்யத் தகுந்தது.

இன்றைய ஜெபங்கள் பல திருமறைக்கு எதிரானவை —
எ.கா.) நாம் பிசாசைக் கட்டவே முடியாது;

சாத்தான்தான் நம்மைச் சிறையிலடைக்க முடியும்! (வெளி 2:10).
நாம் அவனை ஆசனமிறக்க முடியாது (வச 13).

இறுதியான வெற்றி கர்த்தாதி கர்த்தா, இராஜாதி இராஜாவினுடையது!

நாம் உண்மையாயிருந்தால் அவரது வெற்றியில்
பங்குபெறுவோம் —
வெளி 17:14

— *துர்க்குணமுள்ள, பொல்லாத மனிதரிடமிருந்து விடுவிக்கப்பட*
நாம் ஜெபிக்கலாம் —
2 தெச 3:1-4

இது *திருவசனம்* தடையின்றிப் *பரவவே* (வச 1).
''நமது'' பாதுகாப்புக்கு உத்திரவாதம் தரப்படவில்லை —

பிற வசனப் பகுதிகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.

— தியாகத்துடன் நாம் செய்யும் நற்செய்திப்பணிக்கான
பலன்களும் *''துன்பங்களோடு''* சேர்ந்தே வரும்!

மாற் 10:28-30 ... *சகோதரர் ... சகோதரிகள் ...*
வீடுகள் ... துன்பங்களோடு ...

— பவுலைத் தேவன் தெரிந்தெடுத்ததின் முதற் காரணம்
அப் 9:15,16 ... *என் நாமத்திற்காய் எவ்வளவாய்ப்*
***பாடு**படவேண்டுமென்று காண்பிக்க ...*

இந்த ஆழ்ந்த உணர்வே பவுலைப் பற்றிப் பிடித்திருந்தது —

அப் 19:22 ... *ஆவியில் கட்டுண்டவனாய் ...*
20:22-24 ... *பட்டணங்கள்தோறும் சங்கிலிகள் ...*
ஆவியானவரின் சாட்சி ...
21:13 ... *கட்டப்பட மட்டுமல்ல, கருக்கப்படவும் ஆயத்தம்!*

முதலாம் இரத்தசாட்சி மரித்த விதத்தைப் பவுல் பார்த்ததின் மூலம்
இவ்வித தைரியத்திற்குத் தேவன் அவரை ஆயத்தம்பண்ணினார் —

அப் 22:19-21 ... *ஸ்தேவான் இரத்தம் ... அருகே நின்றேன் ...*

எருசலேமின் திரளைப் பார்த்து:
''உமது இரத்தசாட்சியாகிய ஸ்தேவான்!''

எனவேதான் நாமும் இரத்தசாட்சிகளின் சரிதைகளை
வாசிக்கவேண்டும் —

எ.கா.) *Christian Martyrs of the World* by John Foxe

ஓர் அழைப்பு

இவ்வித ஆயத்தத்திற்கு அர்ப்பணிக்க
நம்மில் எத்தனைபேர் ஆயத்தம்?

இரத்தசாட்சிகளின் எண்ணிக்கை முற்றுப்பெறவில்லை —
வெளி 6:9-11

■

பாடுங்கள்:

இரத்த சாட்சிக் கூட்டம் சத்திய பாதையில்
நித்தம் தம்மைத் தத்தம் செய்து வீர சேவையில்
ஜீவன் சுகம் பெலன் யாவையும் ஈந்ததால்
சுத்த சுவிசேஷம் ஓங்குதே!

போர் வீரரே பூமி மாளுதே — பாய்ந்து
செல்லுவீர் நம் இயேசுவின் பின்னே;
தேவ ராஜ்யம் ஓங்கவே,
பாவ மக்கள் மீளவே — தியாகப்
பரிசுத்தராய்ச் சேவை செய்குவோம்!

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014

(175ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

K

177

இன்ப இல்லம்

Happy Home

முகவுரை

- இன்றையச் சமுதாயத்தின் முதல் பிரச்னை:
  கணவன்-மனைவி மனவேறுபாடுகள்.
  பெற்றோர்-பிள்ளைகள் முரண்பாடுகள்.
- இயேசுவானவரது முதல் அற்புதம் மணவீட்டொன்றில்
  ஒரு குடும்பத்திற்கே செய்யப்பட்டது (யோ 2:11)

இன்ப இல்லம் எப்படிச் சாத்தியமாகும்?

வேதப் பகுதி: **யோவான் 2:1-12**

1. ***இயேசுவின் பிரசன்னம்*** (Presence of Jesus)

இயேசு *"அழைக்கப்பட்டிருந்தார்"* (வச 2).
சும்மாவே அவரது பிரசன்னம் கிடைத்துவிடாது.
அவரது பெயரால் நாம் "கூடிவர" வேண்டும் (மத் 18:20)

குடும்ப ஜெபம் — எப்படி?
தந்தை — தலைமையெடுத்து நடத்தவேண்டும்.
நேரம் — இரவுணவுக்கு முன் (+ காலை)
முறைமை — பாடல், வசன வாசிப்பு (கேள்விகள் கேட்கலாம்),
பகிர்வு, ஒப்புரவாதல், ஜெபம், ...

சாராயப் பாட்டில்கள், சிகரெட் பாக்கெட்டுகள், ஆபாசப் படங்கள்,
மட்டரகக் கதைப் புத்தகங்கள், மந்திர சூனியப் பொருட்கள் ...
தூக்கியெறியுங்கள் —
(உபா 23:14)

2. ***கீழ்ப்படிதலின் பாதை*** (Pathway of Obedience)

"அவர் சொல்லுவதையெல்லாம் செய்யுங்கள்" (வச 5-8)
உலகத் தத்துவங்கள் X திருமறைப் போதனைகள் —
(1 யோ 2:16,17)
பிள்ளைகளுக்குப் பெற்றோர் கல்வியறிவையே திணிக்கின்றனர்.

— ஆனால் ஆபிரகாம் (ஆதி 18:19)
— பவுலின் பெற்றோர் (அப் 22:3; 26:4,5)
— தீமோத்தேயுவின் அம்மாவும் பாட்டியும் (2 தீமோ 1:5; 3:15)
— எனது தாயார்: வசனங்கள் மனனம் செய்வதில் கண்டிப்பு

வீட்டில் உரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள் (உபா 6:6-9)

3. மூத்தோரின் பண்பாடுகள் (Philisophy of Elders)

''இயேசுவின் தாயார்'' (வச 1)
(அவர்களுக்கு ஏறத்தாழ 50 வயதிருந்திருக்கும்)

மூத்தோரிடம் கேட்டறியுங்கள் (யோபு 8:8-10).
வேலைக்காரரை மரியாள் வழிநடத்தினாள் (வச 5).
''ஸ்திரீயே!'' ← அன்று அன்பும் மதிப்புமுள்ள சொல்.

சகரியா & எலிசபெத் எனும் வயதான தம்பதியரிடமிருந்து
மரியாள் கற்றுக்கொண்டது ஏராளம் (லூக் 1:56,18)

மரியாள் & யோசேப்பிடமிருந்து இயேசு எவ்வளவோ கற்றார்
(பின்னர் *சபையில் அன்புகூர்ந்தார்!)*

தக்க வைக்கவேண்டிய நல்ல பாரம்பரியங்கள் உண்டு.

4. இறைமக்களுடன் உறவு (Party of God's People)

இயேசுவின் சீடரும் அங்கிருந்தனர் (வச 2).

குடும்பங்களாலான குடும்பமே திருச்சபை (கலா 6:10/எபே 2:19).
வீட்டு ஜெபக்குழுக்கள், முதலியன.

''என் பிரச்னை அபூர்வம்'' என்று எண்ணி உங்களுக்குள்ளேயே
அதை வைத்துக்கொள்ளாதீர்.

மூத்தோர், பக்தர், ஆலோசகர் ஆகியோரோடு கலந்துரையாடுங்கள்.
நல்ல ஆலோசனைப் புத்தகங்கள் வாசியுங்கள்.

ஒரே பகுதியிலுள்ள இரண்டு மூன்று குடும்பங்கள் கூடிவந்து, செய்தி
களைப் பகிர்ந்துகொண்டு, ஜெபித்து வாழ்வை மேம்படுத்தலாம் —
எபி 10:24 ... *''நற்செயல்கள் செய்யத் தூண்டிட ...''*

5. தீர்வுகாணப் பொறுமை (Patience for Solution)

இயேசு ''நிறைவான'' பதிலானவர், ''உடனடிப்'' பதிலானவரல்ல.

''என் வேளை இன்னும் வரவில்லை'' (வச 4).
போதிக்கவும் பயிற்றுவிக்கவுமே நமக்குப் பாடுகள், பிரச்னைகள்!

ஆபிரகாமின் அவசரம் எவ்வளவு குழப்பம் ஏற்படுத்தியது! —
(ஆதி 16:1,2 / 21:9-11)

தேவனது தாமதங்கள் மறுப்பல்ல; அவை நம்மை மேம்படுத்தவே!

கேட்டவுடன் அந்தச் சமாரியப் பெண்ணுக்கு
ஜீவத் தண்ணீரை இயேசு கொடுத்துவிடவில்லை (யோ 4:15,16)

விவாகரத்துக்கள் பெரும்பாலும் பொறுமையின்மையினாலேயே.
திரும்பக் கட்டுதலும் ஆதிநிலையேகுதலும் நேரம் பிடிக்கும்.

6. எதிர்பார்ப்பில் சாதகம் (Positiveness of Expectation)

பிந்திய ரசம் அதிக ருசி (வச 10)

கானாவூர் = நாணல் நிறைந்த இடம் ... எளிதில் ஒடியும்.
கலிலேயா — அசட்டைபண்ணப்பட்ட இடம் (யோ 7:52)

ஆனால் இங்குதான் இயேசுவின் முதல் அற்புதம்!
குடும்பங்களை ஆசீர்வதிப்பதே இறை விருப்பம் (ஆதி 1:27,28)

''மூன்றாம் நாள்'' (வச 1) — உயிர்த்தெழுதலின் நாள்.

லூக் 24:21	நம்பிக்கையின்மை நிறைந்த
ஓசி 6:1,2	இரு நாட்களுக்குப் பின்னர்

கானாவூரானாகிய நாத்தான்வேலுக்கு வாக்கு (யோ 21:2)
யோ 1:50
இதிலும் பெரிதானவை!
கடந்த காலத்தை மறப்பீர்!

7. தேவப்புகழ் பரவுதல் (Promotion of God's Cause)

''அவரது மகிமை'' — அற்புதத்தின் நோக்கம் (வச 11)

சீடரின் விசுவாசம் பலப்பட்டது.

இயேசுவின் இரண்டாம் அற்புதமும் ஒரு குடும்பத்திற்குத்தான் —
(யோ 4:53,54 — அதன் விளைவும் அதுவே)

தேவனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான
இயக்கங்கள்தான் குடும்பங்கள் (ஆதி 12:3)

கிறிஸ்தவக் குடும்பங்கள் மற்ற குடும்பங்களுக்கு
ஆசீர்வாதமாயிருக்கவேண்டும் (லூக் 10:5)

■ ***முடிவுரை***

ஆறு கற்சாடிகள் (வச 6)

விவிலிய எண்ணியலின்படி ''6'' என்ற எண் மனிதனின்
இலக்கமாகும் (ஆதி 1:27,31)

அதாவது, மகிபனின் தொடுதலின்றி
மனித முயற்சிகள் யாவும் வீண்தான்!

178

குடும்பமும் கர்த்தருடைய ஜெபமும்
Family & the Lord's Prayer

முகவுரை

- கர்த்தருடைய ஜெபம் ஒரு குடும்ப ஜெபமாம்!

அதிலுள்ள 7 வேண்டல்களும் மணவாழ்வுக்குப்
பொருத்தமானவை.

''எங்கள்'' பிதாவே ...
''என்'' பிதாவே என்றல்ல ...
அத்தனையும் பன்மையில்தான் ...
எங்கள் ... நாங்கள் ... எங்களுக்கு ...

அ) அந்நிய (பொருந்தாத) நுகம்.
விசுவாசியாகிய நீங்கள் அவிசுவாசியை மணந்தால்
உங்கள் மாமனார் பிசாசுதானே?

அந்நிய நுகம் கண்டிக்கப்பட்டுள்ளது —
''வெளிவாருங்கள் ... உங்கள் பிதாவாயிருப்பேன்''
(2 கொரி 6:17,18)

இது இன வெறியல்ல — யூதர்/கிரேக்கர்
''கிறிஸ்துவுக்குள்'' அல்லது
''கிறிஸ்துவுக்குள் அல்லாத'' (கலா 3:28)

ஆ) சகோதரன் & சகோதரி
அதாவது, அந்நியரல்ல
''என் சகோதரரிடம் சொல்லு ... உங்கள் பிதா'' (யோ 20:17)
இயேசு: நமது சகோதரன், நமது மணவாளன்
''அப்போஸ்தலர் ... மனைவியாகிய ஒரு சகோதரி''
(1 கொரி 9:5)

□ ***''பரலோகத்திலிருக்கிற ...''***
திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது பரலோகில் —
இதை மனதில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.
பொறுப்பு: பூலோகில் அவை நிலைப்படுத்தப்படவேண்டும்.

கர்த்தருடைய ஜெபத்திலுள்ள 7 வேண்டல்கள் —

1. உமது நாமம் பரிசுத்தப்படுவதாக!

அதாவது, இதுதான் மணவாழ்வின் பிரதான நோக்கம் —
திருநாமம் மகிமைப்படணும்!

''உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் ... தேவ மகிமை''
(1 கொரி 10:31)
(சமையலறை!)

அதாவது, சபையிலும் சமுதாயத்திலும் செய்யப்படுபவை
... சமையலறையும் விதிவிலக்கல்ல!

இப்பிரதான நோக்கத்தில் ஒருமனம் —
இதுவே மணவாழ்வின் வெற்றிக்கு இரகசியம்.
தேவ நாம மகிமையே குறியாயிருந்தால்
மற்ற வேறுபாடுகள் தலைதூக்காது.

2. உமது இராஜ்யம் வருவதாக!

கிறிஸ்துவின் இராஜரீகம் / கர்த்தத்துவம் / ஆளுகை —

அ) கணவன் — தலை
மனைவி — உடல்
தலையில்லாது உடலா?
உடலில்லாது தலையா?
இரண்டும் அர்த்தமற்றவை.

தலையா உடலா? —
இது முக்கியமானது, முக்கியமற்றது என்பதல்ல;
தேவனது நியமன வரிசை! *''ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல்''*
(எபே 5:21)

ஆ) இறையரசின் காரியங்கள்

இறையரசின் விரிவாக்கம் —

இரு நபர் குழு — ஒருவருக்கொருவர் ஆதரவு.
ஒருவருக்காயொருவர் படைப்பு அல்ல;
ஒருவரோடொருவர் தேவனுக்காய் இணைப்பு!

3. உம் சித்தம் பரலோகில் செய்யப்படுவதுபோல் பூவுலகிலும் ...

- கானாவூர்க் கலியாணம் —
''அவர் சொல்லுவதையெல்லாம் செய்யுங்கள்'' (யோ 2:5)

தவறான தாற்பரியம் —
சட்டம் 1: தலைவர் சொல்லுவதுதான் சரி.
சட்டம் 2: தலைவர் தவறானால், சட்டம் 1ஐக் கவனிக்கவும்!

- பரஸ்பரக் கலந்துரையாடல் — இல்லையேல் இருவர் எதற்கு?
தீர்மானங்கள் எடுக்க அடுத்தவரை அனுமதியுங்கள்;
தவறுகள் இழைக்க விடுதலை கொடுங்கள்.

இப்படித்தான் கற்றுக்கொள்ளமுடியும்.
தவறு செய்யாது படிக்கமுடியாது; இல்லையேல் தாறுமாறுதான்!
எப்படிச் செய்யக் **''கூடாது''** என்று கற்க வாய்ப்புதானே?

- ஆபிரகாமை ''ஆண்டவன்'' என்றழைத்தாள் சாராள்;
ஆனால் ஒரு சமயம் அவள் சொல்வதைக் கேட்க தேவன்
அவனிடம் சொல்லவில்லையா? (1 பேது 3:6; ஆதி 21:12)

4. அனுதின ஆகாரம் இன்று தாரும்.

— கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால்
பணக் காரியங்களில் பல சிக்கல்கள்.

அதிகம் சம்பாதிப்பது யார்?
யார் சொல்வதைக் கேட்கவேண்டும்?

நிவாரணம்: அனுதின ஆகாரம் தருவது **தேவனே** (உபா 8:17,18)
ஊற்றா, வாய்க்காலா?

அளவுக்கு மீறிய கவலை —
''அனுதின'' அப்பம் (அனுதின அல்வா அல்ல!)

அளவுக்குமீறி வேலைகளை இழுத்துப்போடாதீர் —
தேவனோடு செலவழிக்க நேரமில்லாது போகும்.
பணத்திற்காய்க் குடும்பத்தைப் பலியாக்காதீர்.

5. நாங்கள் பிறரை மன்னிப்பதுபோல் எங்களை மன்னியும்.

மன்னிப்பு: இதுவே மங்கள மணவாழ்வின் இரகசியம்.
சகோதரனையே 70 X 7 முறை மன்னிக்கணுமே! (மத் 18:21,22)

உங்கள் வாழ்க்கைத் ''துணையை'' மன்னிக்க முடியாவிடில்,
நண்பர்களையோ உடன் ஊழியரையோ எப்படி மன்னிப்பீர்?

நமது வாழ்க்கைத் துணையை மன்னிப்பதைப் பொறுத்தே
நமது பாவங்களும் மன்னிக்கப்படும் —
''நாங்கள் மன்னிப்பதுபோல் ...''

தயங்காது மன்னிப்பு கோருங்கள்.
அடுத்தவர்தான் தவறு என்று முடிவு கட்டாதிருங்கள்.
ஒருவரோடொருவர் கனிவுடனிருங்கள்.

6. எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதிரும்.

சோதனைகள் பலவிதம் — பாலியல் சோதனைகள் அதிகம்.
ஒருவருக்காயொருவர் ஜெபியுங்கள்; ஒருவருக்கொருவர் உதவுங்கள்.

— *இருவராய்ப் படுத்துக்கொண்டால்:* ஆன்மீக அனல் (பிர 4:11)

— எதிரி — போராட வந்தால்: வெற்றி (வச 12)

ஒருவருக்கொருவர் ஆதரவு.
சோதனையில் உதவ ஆதாமுக்கு ஏவாள்
கொடுக்கப்பட்டாள்: (ஆதி 2:18)

7. தீயவனிடமிருந்து எங்களை விடுவியும்.

''தீயவன்'' ... *''தீமை''* ... சாத்தான்

நமது மணவாழ்வை நாசமாக்க நமக்கெதிராய்ப் போராடும் சக்திகள் ஏராளம்.

நமது பிள்ளைகளுக்கெதிராகவும் பல சக்திகள்.

''சிவப்பு நூலே'' நமக்குப் பாதுகாப்பு (யோசு 2:17,18)
பொல்லாதவனின் பொல்லாத் திட்டங்கள்.

■ *முடிவுரை*

கர்த்தருடைய ஜெபத்தின் முடிவு தொழுகை —

''இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றும் உம்முடையவைகளே. ஆமென்!''

சர்வ வல்லவரைத் தொழுவதற்காகவே
உங்கள் மணவாழ்வும் குடும்பமும் அர்ப்பணிக்கப்படட்டும்!

179

சிறந்த தந்தையாயிருப்பது எப்படி?

How to be a Good Daddy

முகவுரை

- பூரண மாதிரியாகிய தேவனது தந்தைத்துவக் குணாதிசயங்களைப் படிக்க தந்தையர் ஒவ்வொருவரையும் அழைக்கிறேன்.
- தாய்மார் கூட்டங்களுக்குப் பஞ்சமில்லை;
தகப்பன்மார் கூட்டங்கள் எங்கே?

தந்தையின் மூன்று முக்கிய கடமைகள் —

1. தனது குடும்பத்திற்கு ''ஆசாரியனாய்'' இருக்கவேண்டும்.

ஆதி 18:17,19

எல்லாக் குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாகும் முன்னர்
ஆபிரகாமைக் குறித்துத் தேவனது சாட்சி — 12:3

வீட்டில் கற்பிக்கப்படுவதற்கு ஓய்வு நாள் பள்ளி மாற்றாகாது.
உபா 6:6,7 ... வீட்டுச் சூழலில் பிள்ளைகளுக்குப் போதிக்கக் [கட்டளை.
வச 4,9 — தனி வாழ்வு
வச 6-9 — குடும்ப வாழ்வு

அ) *''நீ உட்கார்ந்திருக்கும்போது''* — வரவேற்பு அறை/ சாப்பாட்டு அறை

ஆ) *''நீ நடக்கும்போது'' — வெளியே செல்லும்போது*

இ) *''நீ படுக்கும்போதும் எழும்போதும்''*— இரவு & காலை ஜெபம்

வீட்டிலுள்ள ஆசிகளுக்கெல்லாம் காரணர் யாரென்பது
பிள்ளைகளுக்குத் தெரியவேண்டும் (வச 10-12)

- தகப்பன்தான் குடும்ப ஜெபம் நடத்தவேண்டும்.
- பெற்றோரது தியான ஒழுங்குகளைப் பிள்ளைகள் கவனிப்பர்.
எ.கா.) எனது தந்தையின் பிரசங்க ஆயத்தம் என்னைக் கவர்ந்தது.

2. தந்தை தனது பிள்ளைகளுக்கு ''நண்பனாய்'' இருக்கவேண்டும்.

- இன்றையப் பிள்ளைகளின் கூக்குரல்:
  ''அப்பா எங்கே?''
  தந்தை உயிரோடிருந்தாலும் பிள்ளைகளுக்கு
  அவர் உடன் இல்லை!
- உங்கள் அன்பை வெளிக்காட்டுங்கள் —
  அ) பிள்ளைகளைத் தூக்குங்கள்
  (உபா 1:31)

  ஆ) அவசரப்படாது அவர்களோடு நேரம் செலவிட்டு விளையாடுங்கள்.
  பிதாவானவருடன் இயேசு (நீதி 8:22,23,30,31)

  இ) வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறைப் பாடங்களைக் கற்பியுங்கள் — (நீதி 1:8; 4:1-4)

எ.கா.) இராணுவ அதிகாரியாயிருந்த எங்கள் தந்தை கற்பித்தவை —

- ☐ காலுறையைக் கழற்றிப் புதைமிதியடிக்குக்குள் வைக்காதே.
- ☐ எழுதும்போது பக்கங்களுக்கு இலக்கமிடு.
- ☐ படுக்கைக்குச் செல்லுமுன் கால்களைக் கழுவு.

பண்பாடுகள் / நல்ல பாரம்பரியங்கள் ... இன்று நாசம்.

எ.கா.) முதியோர் வந்தால் எழுந்து நிற்பது (லேவி 19:32)

ஈ) பிள்ளைகள் சொல்லும் செய்திகள், கதைகள் போன்றவற்றை ஆர்வமாய்க் கேளுங்கள்.

தொடர்பு கம்பி (communication) அறுபட்டுவிட்டால்,
ஆலோசனைக்கு அந்நியரிடம் ஓடுவர்.

- குடும்பத்தோடு தரமான நேரம் செலவழிக்க முடியாத அளவு வேலை வேண்டாம்: நீங்கள் காக்கவேண்டிய சமநிலை —



3. தனது பிள்ளைகளைத் ''திருத்துவதில்'' தந்தை முக்கிய பங்கேற்கவேண்டும்.

எபி 12:9; 2 சாமு 7:17

- சுதந்திரம் கொடுங்கள்;
  ஆனால் பறக்கும் பட்டத்தின் நூல் உங்கள் கையில்தான்!
  எ.கா.) தொலைக்காட்சி
- கனிவாயிருங்கள்; ஆனால் கண்டிப்பாயிருங்கள்.
  அவர்களைப் பிரியப்படுத்த ''ஆம்'' ''இல்லை'' என்பதை மாற்றாதீர்.
  கீழ்ப்படிதல் தானாக வராது. ஏலியின் தவறுதல் (1 சாமு 3:13)
- திருத்தலுக்கும் குறைகூறுதலுக்கும் வேறுபாடுண்டு.
  என் மகள் ஒரு நாள் சொன்னது: ''அப்பா, இன்றைக்குப் போதும்!''

  திருத்துகிறோமென்று கோபப்படுத்தக்கூடாது (எபே 6:4).
  திருத்துதலைவிடப் பாராட்டுதல் கூடுதலாயிருக்கவேண்டும்.
- மற்றவர்முன், அதிலும் பிள்ளைகளது நண்பர்கள்முன், அவர்களைக் கத்தித் திட்டாதீர்கள்.
- 12 வயதுவரை பிரம்பு பயனளிக்கும் (நீதி 13:24);
  அதற்குப் பின்னர் அவர்களே அடிபட்டுப் படிக்க உங்கள் பிடிப்பைத் தளர்த்த வேண்டும்.
  எ.கா.) கெட்ட குமாரன் கிளம்ப தந்தை அனுமதித்தார்.
- பிள்ளைகளுக்கு முன்மாதிரியாயிருங்கள் —
  உங்கள் மனைவியை நடத்தும் விதத்தைக் கவனிக்கின்றனர்.

■ பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை —

- எபே 6:1-3 ... *உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள்.*
  உங்களை அவர்களால் முழுவதும் புரியமுடியாவிட்டாலும் —
  எ.கா.) இயேசு ... லூக் 2:48-52
- பெற்றோருக்கு மதிப்பு தேடித்தர முயலுங்கள்.

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல் எனும்சொல்.
— திருவள்ளுவர்

- பெற்றோருக்கு வயதாகும்போது அன்புடன் தாங்குங்கள்.
  சிலுவையிலும் இயேசு தமது தாயைக் கவனித்தார்.

  எ.கா.) இந்தியாவின் பிற மாநிலத்தவரைவிட மலையாளிகள் வயதான பெற்றோரை அதிக மதிப்புடன் நடத்துகின்றனர். அவர்களுக்கு வாழ்நாள் நீடித்திருப்பது யாவருமறிந்தது (யாத் 20:12; எபே 6:2,3)

■ ***முடிவுரை***

இச்செய்தியின் முக்கியத்துவம் (மல் 4:5,6)

''... சாபம் ...''

யுகத்தின் இறுதிக் காலமாகிய இன்று இது ஆவியானவரின் ஊழியங்களில் ஒன்று (லூக் 1:16,17)

(189ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

■ Dr. Mrs. லில்லியன் ஸ்டான்லி எழுதிய *''குடும்பமே குடும்பம்''* எனும் நூலை வாசியுங்கள்.

குடும்பப் பொன்மொழிகள்

☐ மகிழ்ச்சியான குடும்பம் முந்திக் கிடைக்கும் பரலோகம்.
— John Bowring

☐ குடும்பம்தான் எல்லா நிறுவனங்களிலும் சிறந்த வேதக் கலாசாலை.
— E.M. Chapin

☐ உங்கள் இல்லத்தில் கிறிஸ்து இருந்தால், உங்கள் அயலகத்தாருக்குச் சீக்கிரம் தெரிந்துவிடும். *— D.L. Moody*

☐ நமது வெகுமதிகளைவிட நமது நேரம்தான் நமது பிள்ளைகளுக்கு அதிகம் தேவை.

☐ தகப்பன் தனது பிள்ளைகளுக்குச் செய்யும் மிக முக்கிய காரியம் அவர்களது தாயை நேசிப்பதே. *—Theodore M. Hesburgh*

☐ மெழுகு சூடாய் இளகி இருக்கும்போதே முத்திரையை அதன்மீது பதிக்கவேண்டுமென்பது பொது அறிவு. *— Arthur Jackson*

☐ தொட்டில் கம்பால் தலையில் அடிப்பதே பிசாசை மேற்கொள்ள சிறந்த வழி. *— Billy Sunday*

☐ இங்கிலாந்தின் அனைத்து இறையியலரிடமிருந்தும் கற்றதைவிட எனது தாயிடமிருந்தே கிறிஸ்தவத்தைக் குறித்து அதிகம் தெரிந்துகொண்டேன். *— John Wesley*

☐ தனது பேசும் கிளியைச் சந்தியில் அரட்டையடிப்போர் நடுவில் தயங்காமல் விடுமளவிற்குக் கிறிஸ்தவன் வாழவேண்டும்.

☐ குடும்பத்தாரிடம் அவனைப்பற்றிக் கேட்பதே பரிசுத்தவானுக்கு அக்கினிப் பரீட்சை. *— C.T. Studd*

☐ மண வாழ்வு என்றால் சரியான நபரைத் தெரிந்தெடுப்பதல்ல; சரியான நபராய் இருப்பது.

☐ எவ்விதப் பொறுப்பும் கொடுக்கப்படுமுன் ஒரு கணவனாயிருக்கவே மனிதன் அழைக்கப்பட்டான். *— Henry Smith*

☐ வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிக்க அங்குமிங்கும் சுற்றிப் பார்க்காதேயுங்கள்; மேலே நோக்கிப் பாருங்கள். திருமணத்திற்குப் பொருந்தாதது திருமணமாகாது.

L

180

பிசாசின் முப்பெரும் பொய்கள்

Three great Lies of the Devil

முகவுரை

பிசாசின் பெயர் (யோ 8:44) ...

... பொய்யன் ... பொய்யப்பன் ...

விவிலியத்தில் அவனது முதல் பொய் (ஆதி 3:1-4).

அவனது பொய்யை நம்புவோரின் முடிவு (வெளி 21:27 / 22:15)

வாலிபர், நங்கையர்க்கு அவன் கூறும் மூன்று முக்கிய பொய்கள் முக்காலத்தைச் சார்ந்தவை —

(அ) கடந்த காலம்
(ஆ) நிகழ் காலம்
(இ) எதிர் காலம்

(அ) கடந்த காலம்

''நீ இரட்சிக்கப்படமுடியாத பெரிய பாவி!''

You are too sinful to be saved!

- நற்செய்திக் கூட்டம் ஒன்றுவிடாது பிசாசு பங்குபெறுகிறான்
  யோபு 1:6 ... *தேவ புத்திரர் ... சாத்தானும் ...*
- யூதாஸ்காரியோத்திடம் இப்பொய்யைச் சொன்னான்
  மத் 27:3-5 ... *குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேனே*
  பேதுருவுடன் ஒப்பிடுங்கள் ... மத் 26:75
- பவுல்: *பாவிகளில் பிரதானமானவன்*
  1 தீமோ 1:15 ... *''திருஷ்டாந்தம்''* (வச 16)
  பவுலின் கடந்தகால வாழ்க்கை (வச 13)
  எ.கா.) அப் 8:3
- *கருஞ்சிவப்பான பாவங்கள்*
  ஏசா 1:18 ... *பனிக்கட்டி ... பஞ்சு ...*
  1 யோ 1:7,9 ... *எல்லா அநியாயம் ... சுத்திகரிப்பு ...*
- *பயங்கரமான குழி, உளையான சேறு*
  சங் 40:2,3 ... *தூக்கியெடுத்து ... கன்மலை மீது ...*

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படமுடியாத பாவம் எதையும் உங்களால் செய்யமுடியாது!

- *''நான் பாவிதான், ஆனாலும் நீர் ...''*
- கெட்ட குமாரன் ... அவனது பாவ அறிக்கைப் பட்டியல் முடியுமுன் மன்னிக்கப்பட்டான்!
- பாவியா பாவங்களா?

  தேவன் முதலாவது ''பாவியை'' மன்னிக்கிறார்;
  அதினால் ''பாவங்கள்'' மன்னிக்கப்பட்டுவிடுகின்றன!

(ஆ) நிகழ்காலம்

''நீ பரிசுத்தமாக வாழமுடியாத அளவு பலவீனன்!''

You are too weak to live holy!

- கிறிஸ்துவின் நுகம் இலகுவானது
  மத் 11:28-30 ... ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளுதல்
- *அவரது கட்டளைகள் பாரமானவையல்ல*
  1 யோ 5:3-5 ... அன்பு கலந்த விசுவாச வாழ்வு
- எந்தத் தடங்கலையும் மேற்கொள்ளமுடியும்
  எ.கா.) மத் 19:23-26 ... செல்வம் ... தேவனால் கூடும்
- கிறிஸ்தின்றி/கிறிஸ்துவுடன் — ஒன்றுமில்லை/எல்லாமுண்டு
  யோ 15:5 / பிலி 4:13
- *கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் பாவம் மேற்கொள்ளாது*
  ரோ 6:14
- இயேசு அவனிலும் வல்லவர் (1 யோ 4:4) *''உங்களிலிருப்பவர்''*
  நானல்ல, கிறிஸ்துவே! ... கலா 2:20

(இ) எதிர்காலம்

''நீ வெற்றியாய் முடிக்கமுடியாத அளவு நிலையற்றவன்!''

You are too unsteady to make it!

(அதாவது, முடிவுவரை தாக்குப்பிடிக்கமாட்டாய்.)

- *இயேசுதான் நமது விசுவாசத்தை முடிக்கிறவர்* (எபி 12:2)
  (திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட சத்தியம்: வெளி 1:8,11,17)

- *உங்களில் தொடங்கியவர் முடிப்பார் ...*
  பிலி 1:5
- பவுலின் சாட்சி
  2 தீமோ 1:12
  நான் அவரிடம் ஒப்புவித்ததைக் காக்க வல்லவர்
- *நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்*
  1 தெச 5:23,24 ... *அவர் அப்படியே செய்வார்!*
- *நீதிமான் ஏழுமுறை விழுந்தாலும் ...* நீதி 24:16
  இறைமக்களுக்கு எந்த விழுகையும் முடிவானதல்ல.
- *வழுவாதபடி நம்மைக் காக்க தேவன் வல்லவர்*
  யூதா 24
  அவரைப் போற்றுவோம்! (வச 25)

■ ***முடிவுரை***

(அ) பொய்: நீ இரட்சிக்கப்படமுடியாத பெரிய பாவி.
சத்தியம்: என்னைத் தள்ளமுடியாத அளவு தேவன் இரக்கமுள்ளவர்.

(ஆ) பொய்: நீ பரிசுத்தமாய் வாழமுடியாத அளவு பலவீனன்.
சத்தியம்: என்னை விடமுடியாத அளவு தேவன் பலமுள்ளவர்.

(இ) பொய்: நீ வெற்றியாய் முடிக்கமுடியாத அளவு நிலையற்றவன்.
சத்தியம்: என்னை மறக்கமுடியாத அளவு தேவன் மாறாதவர்.

இறைவாக்குகள்:

- *என் கையிலிருந்து உங்களைப் பறிக்கமுடியாது* (யோ 10:29)
- *என் உள்ளங்கையில் உங்களை வரைந்திருக்கிறேன்* (ஏசா 49:16)
- *''என் கண்மணி''* (உபா 32:10; சக 2:8)
- *''அக்கரைக்குப் போவோம் வாருங்கள்''* (மாற் 4:35-41)

  பயணம் (passage) அலசடியாயிருக்கலாம்;
  தரையிறக்கமோ (landing) பாதுகாப்பாயிருக்கும்!
- *இயேசு கிறிஸ்து மாறாதவர்* (எபி 13:8)

  நேற்றும் ... *இன்றும் ...* *என்றும் ...*
  (கடந்த காலம்) (நிகழ் காலம்) (எதிர் காலம்)

181

எதிர்பாராததை எதிர்பார்!

Saved but Surprised!

முகவுரை

- இன்றையப் பிரசங்கபீடங்களின் பிரபலச் செய்தி —
  இயேசுவிடம் வந்தால் ...
  எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும்.
  எல்லா வேதனைகளும் போய்விடும்.
  எல்லாப் புதிர்களும் மறைந்துவிடும்.
  எல்லாம் வளமாகும்.

இப்படிப் பிரசங்கிப்பவரின் கையில் பைபிள் இருக்கும்;
ஆனால் பைபிளில் இப்படி இல்லை —

இது பைபிள் அல்ல, பலூன்! (Bible — bubble)

- ஏமாற்றமடைந்த முதியவர்கள் பிறரோடு பேசிவிட்டு ''எல்லாருக்கும் இப்படித்தான்'' என்று அமர்ந்துவிடுவர்!

இளைஞருக்கோ மாய்மாலம் பிடிக்கவே பிடிக்காது.
எதுதான் உண்மையென அவர்கள் அறிய விரும்புவர்.

எதிர்பாராததை எதிர்பாருங்கள்!
கிறிஸ்தவ வாழ்க்கை மலர்ப் படுக்கை அல்ல!

இரட்சிக்கப்பட்டவுடன் உனக்குக் காத்திருப்பவை —

1. உலகத்தால் வெறுக்கப்படுவாய்.

இயேசு: *''உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதீர்''*
யோ 15:18,19

அவரது ஜெபம் —
யோ 17:14 ... உலகிலிருந்து எடுக்க அல்ல, காப்பாற்ற

கிறிஸ்து பிரபலமாகவில்லை; கிறிஸ்தவர்களும் அப்படியே.
கிறிஸ்துவின் காலத்தைவிட உலகு இன்னும் மோசமடைந்துள்ளது.

ஆபேலைக் காயீன் விரும்பமாட்டான் (1 யோ 3:10-13)
பிசாசின் பெரும்பான்மையினர் vs. தேவனின் சிறுபான்மையினர்

பாவம் செய்ய நீ விரும்பமுடியாது ... *தேவனது வித்து உனக்குள்*
(1 யோ 3:8,9)

எ.கா.) பரீட்சைகளில் காப்பியடித்தல் ... நேர்மையின்மை ...
உலகின் போக்கு ...

ஆனால் உன்னுள்ளில் இயேசு —
''உயிர்த் தோழர்'' *What a friend we have in Jesus !*

2. சமரசம்பண்ண நெருக்கப்படுவாய்.

- உலகு உன்னைப் பகைக்கும்; ஆனால் காணாது விடாது;
  தன்னிடம் திரும்ப உன்னை வசீகரிக்கும்!

  எ.கா.) சிலுவையில் மரிக்க இயேசுவுக்கு எத்தனை தடைகள்! —
  அ) பேதுரு (மத் 16:21-23)
  ஆ) வழிப்போக்கர் & ஆசாரியர் (மத் 27:39-42)

- ''பல வழிகளில் இயேசுவும் ஒரு வழி'' என்று நீ சொன்னால் ஒரு பிரச்னையும் வராது!
  (இந்து மார்க்கம் எதையும் சேர்த்துக்கொள்ளும்.)

  ஆனால், *''வேறே நாமத்தில் இரட்சிப்பில்லை''* (அப் 4:12).
  எல்லா மதமும் ஒன்றுதான்; கிறிஸ்தவமோ மதமன்று.
  ''நானே வழி'' என்றவர் இயேசு ஒருவரே! (யோ 14:6)

- அனனியா, அசரியா, மீஷாவேல் ...
  தானி 3 — நெருப்பு ... நாலாம் வாலிபர்

  பயமுறுத்தல்களைக் கவனியாதே —
  ''உடலை மட்டும் ... ஆன்மாவை அல்ல'' (மத் 10:27-33)

  சொந்தக் குடும்பத்தினரும் நெருங்கிய நண்பரும்
  உனக்கு எதிராகலாம் (வச 34-36)

3. அநியாயமாய்த் தண்டிக்கப்படுவாய்.

- ''பலசாலியே சரியானவன்'' எனும் உலகமிது!
  ஆனாலும் *தீயவர்மீது எரிச்சலடையாதே* (சங் 37:1,7).

- கிறிஸ்தவன் என்பதால் நீ பாடுபட்டால் ...

  1 பேது 4:16 ... *வெட்கப்படாமல் ... பரமனுக்குப் புகழ்சாற்று*

  விசுவாசிக்க மட்டுமல்ல, பாடனுபவிக்கவும் அழைப்பு (பிலி 1:29)

  இயேசுபோல் நடந்திடு ... அவர் பதிற்செய்யவில்லை ...
  பிதாவானவருக்கு ஒப்புக்கொடுத்தார் (1 பேது 2:21-23)

- யோசேப்பு —

  பொய்க் குற்றச்சாட்டு (ஆதி 39-41).

  தேவனுடைய வார்த்தையே அவனுக்குத் துணையாயிருந்தது (சங் 105:16-22)

- உனது மனச்சாட்சி சுத்தமாயிருந்தால் போதும்; சோர்ந்துபோகாதே.
  தேவன் உனக்கு நீதியைச் சரிக்கட்டுவார்.
  புதிய வானம் புதிய பூமி வரத்தானிருக்கிறது (2 பேது 3:13)

4. ஏமாற்றங்களினால் வியப்படையவாய்.

- இயேசுவிடம் வருவது பிரச்னைகளுக்கு ‘‘முடிவு’’ அல்ல;
  அவற்றிற்குத் ‘‘துவக்கமாய்’’ இருக்கலாம்!

  ஆனால், நமது போராட்டங்களில் திரித்துவ தேவன் நம்முடன் —

  பிதாவானவர் ... அவரது அன்பு ... பூரணமாக
  குமாரனானவர் ... அவரது கிருபை ... போதுமானதாக
  ஆவியானவர் ... அவரது உறுதுணை ... பக்கபலமாக

  அநேக உபத்திரவங்களின் வழியாய் ... (அப் 14:22)

- வாழ்வில் ஏற்றங்கள், இறக்கங்கள் — இதுதான் நிச வாழ்வு —
  பிர 7:14 ... வாழ்வு & தாழ்வு
  சங் 74:16 ... பகல் & இரவு (இரண்டும் *‘‘நல்லது!’’*)
  புல 3:38-40 ... நன்மை & தீமை

  எ.கா.) யோனா — தவறு — யோனா 4:5-9 (செடி)
  யோபு — சரி — யோபு 1:21,22 (செல்வம்)

5. பெருமையடித்துக்கொள்ள உந்தப்படுவாய்

- அழகு, அறிவு, இவற்றின் பெருமையினாலேயே லூசிபர் விழுந்தான் — (எசேக் 28:11-19)

  இச்சோதனைக்கு எவரும் விதிவிலக்கல்ல;
  பெருமைக்கான சோதனைக்குக் காரணம் —

  ஞானம்
  பலம் | எரே 9:23,24
  செல்வம்

  குறிப்பாக, வாலிபர், நங்கையர் (1 பேது 5:5,6)

- அறிவோ அழகோ குறைந்தோரை அலட்சியப்படுத்தாதே.
  உனக்கு எதுவும் கூடுதல் இருந்தால், பிறர்க்குதவவே.

  நிறம், இனம், இடம், உடை, கிருபை பற்றிப் பெருமை.
  (Pride of face, race, place, lace & grace)

  இந்த ஆசிகளுக்காய்த் தேவனுக்கு நன்றி செலுத்து —
  எதுவுமே நமக்குச் சொந்தமல்ல (1 கொரி 4:7)

- இறுதிக்கால அடையாளம்
  2 தீமோ 3:1-5 ...

- பெருமையினால் அன்றைய அரசர்கள் வீழ்ந்தனர்
  (2 நாளா 26:15,16)
  ஆசீர்வாதங்களில் திளைத்து ஆசீர்வதிக்கிறவரை மறத்தல்.
  எ.கா.) மன்னன் எசேக்கியாவின் அனுபவம் (ஏசா 38:15-17)

6. நிச்சயமற்றவைகளால் குழப்பமடைவாய்.

- கிறிஸ்தவ வாழ்வு முழுக்க முழுக்க விசுவாசத்தினால்தான் ...
  புலனறிவினால் அல்ல (2 கொரி 5:6)

  நவீன விஞ்ஞான யுகம் —
  பகுப்பாய்வு ... நிரூபணம் ... (1 தீமோ 6:20,21)

  நாம் ‘‘விசுவாசிகள்’’ என்றழைக்கப்படுகிறோம்!
  ‘‘பார்க்காவிடினும் விசுவாசிப்போர் பேறுபெற்றோர்’’ (யோ 20:29)

- கிறிஸ்தவ வாழ்வு — நிச்சயங்கள் இல்லாவிடினும் நடை.

  திருச்சித்தம் அறிய 4 உதவிகள் —

திருவசனம் (Scriptures)	...	போதனை
தூயாவியானவர் (Spirit)	...	குரல்
பரிசுத்தவான்கள் (Saints)	...	ஆலோசனை
சூழ்நிலை (Situation)	...	பொருத்தம்

  இடதுபுறம், வலதுபுறம் சாய்ந்தால் ... (ஏசா 30:21)

- *கடலினூடே ... திரளான தண்ணீர்கள் ...*

  அடிச்சுவடுகள் தெரியவில்லை (சங் 77:19)

  ஆபிரகாம் — *''போகிற இடம் தெரியாது புறப்பட்டான்''* (எபி 11:8)

  நம்புங்கள், முன்செல்லுங்கள் —

  துவக்குகிறவர் & முடிக்கிறவர் (எபி 12:1,2)

7. தியாகம் செய்ய அழைக்கப்படுவாய்.

- செல்வந்தனான அந்த வாலிபன் —

  ''நித்திய வாழ்வு ... கட்டளைகள் ... என் இளவயது முதல் ...''
  ''என்னிடம் இன்னும் என்ன குறைவுண்டு?''

  மத் 19:16-22 ... *விற்றுத் தரித்திரர்க்குக் கொடு*

  இவ்விதப் பரீட்சைக்கு நீயே அடுத்த நபராயிருக்கலாம்!

- இயேசு: *ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் ...*
  தன்னைத்தான் வெறுத்து ... சிலுவை ... (லூக் 9:23,24)

- உலகம் : பிடித்துக்கொள்! வைத்துக்கொள்! (Grab!)
  இறையரசு : கொடுத்துவிடு! விட்டுவிடு! (Give up!)

■ *முடிவுரை*

நமது முற்பிதாக்களுக்கு
கிறிஸ்தவ விசுவாசம் ஓர் அனுபவமாயிருந்தது (experience)

நமது பெற்றோருக்கு,
அது ஒரு சுதந்தரிப்பாயிற்று (inheritance)

நமது தலைமுறைக்கு,
அது வசதியானதாயிருக்கிறது (convenience)

இப்போக்கு தொடருமானால்,
நமது பிள்ளைகளுக்கு,
அது வெறும் தொந்தரவாகிவிடும் (nuisance)

திருமறையின் வாழ்க்கை முறையையே நாம் தெரிந்துகொண்டால், இங்கு மனமடிவாக்கும் வியப்புகள் பரலோகில் மகிழ்ச்சியளிக்கும் விருதுகளாகும்!

(இக்குறிப்புகளை வைத்து எழுதிய முழுக்கட்டுரை ஆசிரியரது *''எதிர்நீச்சல் வாலிபர்''* எனும் நூலில் 3ஆம் அத்தியாயமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளது.)

182

கிறிஸ்துவில் புது வாழ்வு

New Life in Christ

முகவுரை

நமக்காய் உயிர்கொடுத்த கிறிஸ்துவுக்காய் உயிர்வாழ வேண்டும்!
2 கொரி 5:15,17

''கிறிஸ்துவில் புதுவாழ்வு'' என்றால் இதுதான்.

இப்புதுவாழ்வின் ஐந்து முக்கிய ஆசிகள் —

1. ஒரு புதிய குடும்பம் (A New Family)

☐ யோ 1:12,13 ... *தேவனது பிள்ளைகளாகும் உரிமை*
மனித வித்து vs. இறை வித்து

☐ ரோ 8:15,16 ... *புத்திர சுவிகார ஆவி ... ''அப்பா பிதாவே''*

''அப்பா'' என்பது ''பப்பா'' என்பதற்கு அரேமியச் சொல். இது நெருக்கவுறவையும் பாசத்தையும் குறிக்கும். பிறந்த குழந்தை உச்சரிக்கும் முதல் வார்த்தை இது. இவ்வளவு நெருக்கவுறவை இது குறிப்பதால் யூதர்கள் தேவனைப் ''பிதாவானவர்'' என்றழைத்தாலும் ''அப்பா'' என்றழையார்.

இப்பொழுதோ, *''இனிப் பயப்படத் தேவையில்லை!''*

☐ திரித்துவம் — தேவன் நமது தந்தை.
இயேசு முதற்பேறானவராய் நமது அண்ணன் (எபி 2:11,12)
ஆவியானவர் நமக்கு உதவியாளர் (யோ 14:16,17)

திரித்துவ ஆசீர்வாதக் கூற்று (Benediction) (2 கொரி 13:14) —

அ) *தேவனது அன்பு*
— அவரது பிள்ளைகளென்று அழைக்கப்படுவதால் (1 யோ 3:1)

ஆ) *கிறிஸ்துவின் கிருபை*
— அவரது சகோதரரென்று அழைக்கப்படுவதால் (எபி 2:11 ... *வெட்கப்படாமல்)*

இ) *ஆவியானவரின் ஐக்கியம்*
— அவர் நமக்குள் வாசம்பண்ணுவதால் (யோ 14:17)

2. ஒரு புதிய சகவாசம் (A New Company)

அப் 2:41,42,44

— பொல்லாத சந்ததியினின்று விசுவாசிகளின் சகவாசத்திற்குள்

பழைய பிணைப்புகளை உடைத்து புதியவை உருவாக்குதலே புதிய வாழ்வு. (Breaking of old bonds and making of new)

சங்கீதம் 1இல் இது சித்தரிக்கப்பட்டுள்ளது.
நீதிநெறிகள், பண்பாடுகள், உயரிய சிந்தனைகள், ...

பவுலின் அறிவுரை —

எபே 5:7,8 ... *''முன்பு ... இப்பொழுதோ ...''*

அ) விழியுங்கள் (வச 14) — கவனமாயிருங்கள்!
ஆ) எழும்புங்கள் (வச 14) — எழும்பி நில்லுங்கள்!
இ) தவிர்த்திடுங்கள் (வச 11)— விலகியிருங்கள்!

அப்படியானால் விளையாட்டுகள், பந்தயங்கள், வைபவங்கள், நகைச்சுவை, இவை போன்றவை கூடாது என்பதல்ல.

புதிய உறவுகள் —

2 தீமோ 2:22 ... *ஓடிடு ... நாடிடு ... புனித மனது*

அதாவது, கீழ்க்கண்டவற்றிற்குச் சாதகமான கூட்டு —

''பரிசுத்தம்'' வளரவேண்டும்	
''விசுவாசம்'' பலப்படவேண்டும்	*புனித*
''அன்பு'' ஆழப்படவேண்டும்	*மனதுள்ளோரிடமே*
''சமாதானம்'' பெருகவேண்டும்	இது சாத்தியம்!

3. ஒரு புதிய பாடல் (A New Melody)

சங் 40:1-3

புதிய வாழ்வு ஆனந்தமும் ஆரவாரமும் நிறைந்தது (பரவச வாழ்வு)

— கவனம் என்றால் சோகம் அல்ல.
— ஒழுங்கு என்றால் கட்டு அல்ல.
— கிரமம் என்றால் பாரம்பரியம் அல்ல.
— விழிப்பு என்றால் ஒதுங்கியிருப்பு அல்ல.

''புதிய பாடலின்'' பொருள் —

மகிழ்ச்சியின் காரணத்தில் மாற்றம்.
இது *''கர்த்தருக்குள்''* மகிழ்ந்திருப்பது (பிலி 4:4).
அதாவது, கவலைகளிலிருந்தாலும் களிப்பு (வச 5-7)

சாதகச் சிந்தை — *''கர்த்தர் சமீபமாயிருக்கிறார்''* (வச 5)
''நம்பிக்கையில்'' சந்தோஷம் (ரோ 12:12)

''நாட்கள் தீயவைதான் ... ஆனாலும் உங்கள் இதயத்தில் மகிழ்வுடன் கர்த்தரைப் பாடுங்கள்'' — எபே 5:16,19

4. ஒரு புதிய ஆகாரம் (A New Savoury)

☐ மேலான மகிழ்ச்சிக்காய்ப் பாவச் சிற்றின்பங்களை விடுதல்
சங் 1:1,2 ... *கர்த்தருடைய வேதத்தில் இன்பம்*

☐ இதை நான் "bread–butter–jam" என்கிறேன்
மத் 4:4 1 பேது 2:1 சங் 19:7,10

☐ யோபு: *''எனக்கு வேண்டிய ஆகாரத்தைவிட ...''*
யோபு 23:12

விவிலியத்தை வாசித்து ஞானமடையுங்கள்.
அதை விசுவாசித்துப் பாதுகாப்படையுங்கள்.
அதைப் பயிற்சித்துப் பரிசுத்தமடையுங்கள்.
அதைப் பரப்பி பயனுள்ளவர்களாயிருங்கள்.

ஓராண்டிற்குள் அல்லது ஈராண்டிற்குள் பைபிளை வாசித்து முடிக்க அட்டவணையொன்றைப் பயன்படுத்துங்கள்.

5. ஒரு புதிய பொலிவு (A New Beauty)

அழகிகள், அழகர்கள் போட்டிகள் நிறைந்த காலம்.
Dr. லில்லியன் ஸ்டான்லியின் *''மண்ணிலே வெண்ணிலா''* என்ற நூலில் அவர்கள் தாயார் Mrs. எப்சி பாண்டியன் எழுதியுள்ள ''மிஸ் பைபிள்'' எனும் அத்தியாயத்தை வாசியுங்கள்.

☐ பிரகாசமான கண்கள் (நீதி 4:25)
முன்னர் கோணலான பார்வை

☐ இனிய உதடுகள் (உன் 4:11)
முன்னர் தீய பேச்சு.
எ.கா.) தச்சர் இயேசு: *''கிருபைநிறை வார்த்தைகள்''* (லூக் 4:22)

☐ உதவும் கரங்கள் (நீதி 31:20)
☐ வளைந்துகொடுக்கும் இடுப்பு (நீதி 31:27) ... கடின உழைப்பு
☐ அழகிய பாதங்கள் (ஏசா 52:7)

■ *முடிவுரை*

இப்புதிய ஆசிகள் நாளாவட்டத்தில் பழைமையாகிப் போகுமோ?
இல்லவே இல்லை!

1. அப்பாவின் அன்பு, அண்ணனின் அருள், ஆவியானவரின் ஆறுதல் ஆகியவற்றில் புதிய புதிய பரிமாணங்கள் கண்டுகொண்டேயிருப்போம்.
2. கிறிஸ்துவின் உடலின் பிற உறுப்பினர்களோடுள்ள நமது உறவு நாளுக்கு நாள் புதிய அர்த்தம் பெறும்.
3. புதிய புதிய பிரச்னைகளையும் கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சி மேற்கொண்டுவிடும்.
4. இறைவார்த்தையின் தியானத்தின்போது மறைவான புதிய பொக்கிஷங்கள் கிடைக்கும்.
5. மனிதருக்குப் பிரியமும் தேவனுக்கு வாசனையுமாக நமது வாழ்வில் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் ஓங்கும்.

புதிய வானம் புதிய பூமியிலும்
இப்புதிய வாழ்வு புதுமையாய்த் தொடரும்!

183

வெற்றியுள்ள கிறிஸ்தவன்

How to be a Victorious Christian

முகவுரை

கிறிஸ்து மீதுள்ள தனிப்பட்ட விசுவாசமே கிறிஸ்தவ வாழ்வின் துவக்கம். அதைத்தான் ''இரட்சிப்பு'' என்றழைக்கிறோம் —
அப் 16:30,31 ... *விசுவாசி ... இரட்சிக்கப்படுவீர்கள்*

இந்த இரட்சிப்பு நாளுக்கு நாள் *சமீபமாய் வருகிறது* —
ரோ 13:11 ... *விசுவாசிகளானபோது இருந்ததைவிட* ...

நாம் நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும் —
பிலி 2:12 ... *பயத்தோடும் நடுக்கத்தோடும்* ...

மறு பக்கம் —
''அது தேவனுடைய ஈவு, நம்மால் உண்டானதல்ல''
எபே 2:8

அது ஓர் ஓட்டப் பந்தயம் போன்றது —
நாம் முயன்றால்தான் வெற்றிபெற முடியும் —
1 கொரி 9:24

நாம் முயலவேண்டிய ஐந்து காரியங்கள் —

1. கிறிஸ்துவில் உங்கள் நிலையை நினைவிற்கொள்ள முயலுங்கள்.

இதுதான் மிகப் பெரிய போராட்டமாயிருக்கும்!

- இரட்சிப்பின் நிச்சயம் (ரோ 8:15,16)
- தேவனது பிள்ளைகளாயிருக்கும் *உரிமை* (தகுதியல்ல) (யோ 1:12)
- உணர்வுகள் — 2 கொரி 5:7 / 1 பேது 1:8,9
  எ.கா.) பரீட்சை முடிவுகள் — துவக்கக் குதூகலம்
- *என் கையிலிருந்து ஒருவரும் பறிக்க இயலாது* (யோ 10:28,29)
- *இயேசுவின் இரத்தத்தால்* மேற்கொள்ளுதல் (வெளி 12:10,11)
  அதாவது, இரத்தத்தால் கழுவப்பட்டதை மறவாதிருத்தல் (2 பேது 1:9)

2. எல்லாச் சோதனைகளையும் எதிர்க்க முயலுங்கள்.

ஏனோதானோ என்றிருக்கும் கிறிஸ்தவன் தோல்வியடைவான்.
தானாகவே வெற்றி கிட்டிவிடாது —
எபி 12:4 ... *பாவத்திற்கு விரோதமான போராட்டம்*

- தேவன் செய்வது, நாம் செய்வது (1 யோ 5:18) ... *தன்னைக் காக்கிறான்*
  எ.கா.) தானியேல் (தானி 1:8) ... *தீர்மானம் பண்ணிக்கொண்டான்*
- உதவிகள் —
  அ) திருவசனம் (சங் 119:9,11)
  எ.கா.) இயேசு (மத் 4:3-10)
  ஆ) ஜெபம் (மத் 26:40,41)
  (எபி 4:15,16) ... *பலவீனம் ... இரக்கம் ... சகாயம்*
  இ) ஓட்டம் + ஐக்கியம் (2 தீமோ 2:22)
  (ஓடு) (ஓட்டு)
- சோதிக்கப்படுவது பாவமல்ல
  (இயேசு சோதிக்கப்பட்டார் — எபி 4:15)
  எ.கா.) தலைக்குமேல் கழுகு பறப்பதைத் தடுக்க முடியாது; தலையில் கூடு கட்டுவதைத் தடுக்கலாமே!

3. அனைவரோடும் சமாதானமாயிருக்க முயலுங்கள்.

- அப் 24:16 ... *நல்மனசாட்சி ... பிரயாசப்படுகிறேன்*
- *''உங்களால் கூடியமட்டும் யாவரோடும் சமாதானம்''* (ரோ 12:18)
- ஒப்புரவாகுதல் (மத் 5:23,24)
  காரியங்களைச் சரிசெய்தல் (லூக் 19:8; எசேக் 33:15)

உதவிகள் —

அ) பதிலுக்குப் பதில் செய்யவேண்டாம் (ரோ 12:17-21)
ஆ) தேவன் உங்களை மன்னித்ததை நினையுங்கள் (எபே 4:32)
இ) எளிய காரியங்களில் முயற்சிக்கத் துவங்குங்கள் (லூக் 17:3-6)
ஈ) நமது ஜெபங்கள் கேட்கப்படத் தவிர்க்கமுடியாத நிபந்தனை இது என்றறியுங்கள் (மத் 6:14,15)

4. *தேவனது சிறுபான்மையினரோடு செயல்பட முயலுங்கள்.*

லூக் 13:23,24 ... *சிலரே ... இரட்சிக்கப்படுபவர் ...* நெருக்க வாசல்

- உலகத்தால் பகைக்கப்படுதல் (யோ 15:18-21)
- பிரபலம் நாடுதல் (யோ 12:42,43)
- மன நிர்ணயம் vs. வசதிக்கேற்ப மாற்றம் (எபே 4:17-24)
- உலகின் போக்கு, நாகரீகச் சரிவு (ரோ 12:2)

கண்ணியம்/அடக்கம்/பொருத்தம்

5. *நற்செய்தியைக் கேளாதோரைச் சந்திக்க முயலுங்கள்.*

ரோ 15:21 ... *கிறிஸ்து சொல்லப்படாத இடங்கள் ...* நாடுகிறேன்

- பிறரை இரட்சிக்கவே இரட்சிக்கப்பட்டோம்!

நாம் கடனாளிகள் (ரோ 1:14-16)
அ) *கிரேக்கர்* — அறிவாளிகள்
ஆ) *அந்நியர்* — கல்லாதோர்
இ) *ரோமர்* — நாகரீகம், அரசியல்
ஈ) *யூதர்* — மார்க்க பக்தியுள்ளோர்

தேவன் உங்களுக்குச் செய்ததை நண்பர்களோடு பகிருங்கள் — மாற் 5:19

சாட்சி பகரும்போதுதான் இறையறிவில் வளருவீர்கள் —

எ.கா.) பிறவிக் குருடன் (யோ 9:25)
இயேசுவைப்பற்றிப் படிப்படியான தெளிவு, வெளிப்பாடு ...

படி 1 — *''அவர் ஒரு தீர்க்கதரிசி''* (வச 17)
படி 2 — *''தேவனிடமிருந்து வந்தவர்''* (வச 31-33)
படி 3 — *''தேவ குமாரன்''* (வச 35-37)
''ஆண்டவர்!'' (வச 38)

தொகுப்பு

1. Strive to REMEMBER your position in Christ.
2. Strive to RESIST all temptations.
3. Strive to RELATE peacefully with all men.
4. Strive to RALLY with God's minority.
5. Strive to REACH the unreached.

184

பாவத்தை வெல்ல ஏழு படிகள்

Seven Steps to Victory over sin

போராட்டம்

உள்ளே (ரோ 7:22-25) — வெளியே (எபே 6:12,13)

- தேவனது *''சர்வ'' ஆயுத வர்க்கத்திற்கு* ஒரு பொதுவான பெயர் — ***''நீதியின்** ஆயுதங்கள்''* (2 கொரி 6:7)

வெற்றிக்கு ஏழு படிகள்

1. *தீர்மானியுங்கள்.* (Decide)

''நான் (அப்பாவத்தைச்) செய்யக்கூடாது''
தானி 1:8,9 ... நாம் தீர்மானிக்காவிடில் **தேவன்** உதவமுடியாது.
1 யோ 5:18 ... நாம் தீர்மானித்தால் **சாத்தான்** தொடமுடியாது.

இவ்விதத் தீர்மானம் எப்பொழுதாவது எடுத்ததுண்டா?
தோல்வியடைந்தாலும், எழுந்து திரும்பவும் தீர்மானியுங்கள்.

''தீர்மானங்களைக் கடைப்பிடிக்காவிடில் தீர்மானமெடுத்துப் பயனென்ன?'' எனும் பொய்யை நம்பாதீர்.

நீங்கள் ஏழு முறை விழுந்தாலும் ... (நீதி 24:16)

2. *சார்ந்திருங்கள்.* (Depend)

அ) கிறிஸ்து முடித்துள்ள செயலில் ...

— அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் நம்மை அடையாளப்படுத்திக்கொள்ளுதல்.
ரோ 6:3-5 ... *''அறியீர்களா?''*

கிறிஸ்துவின் வெற்றி நமது வெற்றி.
கிறிஸ்துவே நமது நீதியாகிவிட்டார் (1 கொரி 1:31)

ஆ) நம்மில் குடியிருக்கும் ஆவியானவரின் வல்லமையில் ...

ரோ 8:10-13 ... *பாவம் ... ஆவியானவர் ... நீதி ...*
கடவுளே உங்களில் குடிகொண்டுள்ளார் !
எல்லாச் சக்திகளுக்கும் பெரியவர் அவர் (1 யோ 4:4)

3. *அறிக்கையிடுங்கள்.* (Declare)

''எழுதியிருக்கிறதே'' — திருவாக்குகள்
— திருக்கட்டளைகள்

அ) உங்களுக்கே சொல்லிக்கொள்ளுங்கள்.
எ.கா.) பொருளாசைக்குச் சோதிக்கப்படுகையில் (எபி 13:5,6)

ஆ) தேவனிடம் சொல்லுங்கள்
எ.கா.) பிதாவிடம் இயேசு சொன்னது (எபி 10:7)

இ) பிசாசிடம் சொல்லுங்கள்.
எ.கா.) வனாந்திரத்தில் இயேசு (மத் 4:4,7,10)

கிரமமாய்த் தவறாது வேதத்தைத் தியானிப்பதும், வசனங்களை மனனம் செய்வதும் இவ்விதம் அறிக்கையிடப் பயிற்சியாகும்.

4. *விட்டகலுங்கள்.* (Desert)

அ) சோதனையான **இடங்கள்** (places)

*''பாவிகளின் **வழி** ...*
பகடிபண்ணுவோரின் இருக்கை ...'' (சங் 1:1)

நீதி 4:14,15 ... *தீயோருடைய **வழி***
5:8 ... *அவளுடைய வீட்டின் **வாசல்***

ஆ) சோதிக்கும் **நபர்கள்** (persons)

1 கொரி 15:33,34 ... *ஆகாத சகவாசம் ...*
யோசேப்பு சிறந்த எடுத்துக்காட்டு (ஆதி 39:7-12)

எதையும் அனுமதிக்கும் கலாச்சாரவுலகில் வாழும் நமக்கு இச்செயல் மிக முக்கியம் —

2 பேது 2:5 ... நோவா
:6-8 ... லோத்து | லூக் 17:26-29

பேழைக்குள் நோவா நுழைந்தான்;
சோதோமைவிட்டு லோத்து வெளியேறினான்.

5. *மறுத்திடுங்கள்.* (Deny)

தீத்து 2:11-13 ... *அவபக்தியை வெறுத்து ...*
உலகின் பாவ இச்சைகளுக்கு ''மறுப்பு;''
தேவனது சித்தத்தின்மீது ''விருப்பு!'' (1 யோ 2:15-17)

வாழ்வின் நியாயமான இன்பங்களில்கூட அளவுக்கு மீறுதல் ஆபத்தானது, கவனம்! —

1 கொரி 7:29-31 ... வரம்புகள் நியமியுங்கள்; அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படுவதில் திருப்தியடையுங்கள்.

6. *மகிழ்ந்திருங்கள்.* (Delight)

இறைமக்களோடு ஐக்கியம் (2 தீமோ 2:22)
இறைமக்களோடு தொழுகை (சங் 122:1,4)

இவ்விரண்டிலும் நமக்கு ஆர்வம் குறையுமானால், நம்மில் ஏதோ தவறிருக்கிறதென அறிந்துகொள்ளலாம்.

சில பாவங்களை மேற்கொண்டு வாழ உடன் விசுவாசிகளின் ஐக்கியமும் உதவியும் இன்றியமையாதது —

கிறிஸ்துவின் உடல் உறுப்புகள்
(பலங்குன்றியவை, பலமானவை)

எ.கா.) ஓரினச் சேர்க்கையாளர், போதைக்கு அடிமைகள், ... இவர்களுக்கெல்லாம் பிற விசுவாசிகளது உதவி அவசியம்.

7. *விடுவியுங்கள்.* (Deliver)

கட்டப்பட்டிருப்போரை விடுவிக்கச் செல்லுங்கள் (லூக் 4:18,19)
பிரச்னைகளிலிருப்போருக்கு உதவுங்கள் (ஏசா 61:3)
ஆத்துமாதாயத்தில் தீவிரமாயிருங்கள் (யோ 10:16)

அ) இப்பயிற்சியினால் கூடுதல் பலம் பெறுவீர்கள்.
ஆ) கீழ்த்தர இன்பங்களில் நாட்டம் மறையும்.
இ) உங்களிடமிருப்பதைப் பிறருடன் பகிரும்போது, தேவனிடமிருந்து கூடுதல் கிருபை பெறுவீர்கள் (நீதி 11:25,30)

■ ***முடிவுரை***

இயேசு திரும்ப வரும்வரை, நடைமுறைப் பரிசுத்தம் காத்திட, எதிர்நீச்சல் போட்டுக்கொண்டேயிருங்கள் (வெளி 22:11,12)

185

''என்னைத் தீட்டுப்படுத்தமாட்டேன்!''

"I will not defile myself!"

முகவுரை

- நற்செய்தியழைப்பிற்குச் செவிமடுத்து முன்வருபவர்களில் முதியோரைவிட இளைஞரே அதிகம்.
  அதே வேளையில், இளைஞர் நடுவில்
  பின்வாங்குவோரின் எண்ணிக்கையும் அதிகம்.
  பரிசுத்தமான, தேவனுக்குப் பிரியமான, வாழ்க்கை வாழுவதற்கான போராட்டத்திலிருந்து சீக்கிரம் விலகிவிடுகின்றனர்.
- இதில் அதிமுக்கிய இரகசியம் என்னவென்றால்
  தனிப்பட்டவரது தீர்மானமும் மனவுறுதியும்தான் —
  எ.கா.) வாலிபன் தானியேல் (தானி 1:4)
  வச 8 ... *தன்னைத் தீட்டுப்படுத்துவதில்லையென்று தீர்மானம்பண்ணிக்கொண்டான்*
  வச 9 ... *பிரதானிகளின் தலைவனிடம் தானியேலுக்குத் தேவன் தயவு கிடைக்கச் செய்தார்.*
  அதாவது, தன்னைப் பொறுத்தவரை தானியேல் திடமான
  தீர்மானமெடுத்தபோதுதான் தேவன் அவனுக்குதவினார்.
  உபதேசம்: 1 யோ 5:18
  அ) *தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்.*
  ஆ) *தீயவன் அவனைத் தொடான்.*
  அதாவது, நமது தீர்மானம் vs. பிசாசின் இயலாமை

ஒவ்வொரு இளைஞனும் எடுக்கவேண்டிய 5 தீர்மானங்கள் —

1. தவறான பாலுறவினால் என் ''உடலைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.

பாலியல் உணர்ச்சிகள் தேவன் தந்தவை;
அவற்றை முறைப்படிக் கட்டுப்படுத்துவது நமது பொறுப்பு.

1 கொரி 6:18 ... *வேசித்தனத்திற்கு ''விலகியோடுங்கள்''*

இது தேவனுக்கு விரோதமான பாவம் மட்டுமல்ல,
நமது சொந்தவுடலுக்கு எதிரான பாவம்.
நம்மை நாமே அழிப்பது எத்தனை மடமை!

2 தீமோ 2:22 ... *பாலிய இச்சைகளுக்கு ''விலகியோடு''*

பாலியல் சோதனைகளைப் பொறுத்தவரை
''போராடுவதால்'' அல்ல, ''ஓடுவதாலேயே'' வெற்றி!
(Not fight but flight!)

ஓரினச் சேர்க்கையானது திருமறையில்
முழுக்க முழுக்கக் கண்டிக்கப்பட்டுள்ளது (ரோ 1:24-27)

தூயாவியானவரின் ஆளுகைக்குள் நமது மனப்பாங்கு
கொண்டுவரப்படவேண்டும் (ரோ 8:13; கலா 5:24,25)

- இயேசுவோடு இணைந்தே வாழுங்கள் (1 கொரி 6:15-17)
  ... கர்த்தரோடிசைந்திருப்பவன் அவரோடு ஒரே ஆவி ...

பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள் (வச 19)
... உங்கள் உடல் ... பரிசுத்த ஆவியின் ஆலயம் ...

2. அசுத்த எண்ணங்களால் என் ''மனதைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.

அசுத்த எண்ணங்கள் யாவை?
பிலி 4:8 ... உண்மையற்றவை, ஒழுக்கமற்றவை,
நீதியற்றவை, கற்பற்றவை, அன்பற்றவை,
நற்கீர்த்தியற்றவை, புகழற்றவை, புண்ணியமற்றவை

- சோம்பேறியின் மனது பிசாசின் தொழிற்கூடம்.
  இணையதளத்தில் பாவவுணர்வுகளைத் தூண்டும் பகுதிகளுக்குச் செல்லாதீர்.

திருமறையை அவசரப்படாது தியானிக்க நேரமெடுங்கள் —

சங் 119:11 ... *பாவம் செய்யாதபடி என்னுள்ளில் உம் வசனம் ...*
:15 ... *தியானிக்கிறேன் ... கண்ணோக்குகிறேன் ...*
:16 ... *மனமகிழ்கிறேன் ... மறவேன்*

திருவசனப் பகுதிகளை மனனம் செய்ய
இளமைப்பருவம்தான் சிறந்தது (2 தீமோ 3:15);
வாழ்நாள் முழுவதும் அது பசுமரத்தாணிதான்!

3. கெட்ட வார்த்தைகளால் எனது ''வாழ்வைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.

நமது வாழ்வின் தரம் நமது வாயின் வார்த்தைகளைப் பொறுத்ததே—

சங் 34:12,13 ... *வாழ்வை விரும்பி ... நல்ல, நீடித்த நாட்களை விரும்புபவன் ... தனது நாவைக் காக்கட்டும்*

இதைப் பேதுரு தனது நிருபத்தில் விரிவாக்குகிறார் — 1 பேது 3:8-12

நாவடக்கம் பூரணத்தின் ஓர் அடையாளம் —

யாக் 3:2 ... *சொல் தவறாதவன் ... பூரண மனிதன் ...*
அதாவது, உங்கள் நாவை நீங்கள் அடக்க முடிந்தால்,
வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் சுயக்கட்டுப்பாடு சாத்தியம் —
''தன் உடல் முழுவதையும் அடக்க ...''

- கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகருங்கள்.
  சுவிசேஷமே உங்கள் அரட்டையாகட்டும் (அப் 17:17)
- நீங்கள் பேசுவதெல்லாம் பிறரைக் கட்டியெழுப்பவேண்டும் —
  எபே 4:29 ... *கெட்ட வார்த்தை வேண்டாம் ... பக்திவிருத்தி ...*
- அரசியல் சாக்கடை நாற்றப் பத்திரிகைகள் வேண்டாம்;
  ஆபாசப் பத்திரிகைகள் வேண்டாம்.

உங்கள் மனதை எதினால் நிரப்புகிறீர்களோ
அதின்படிதான் உங்கள் வார்த்தைகள் வெளிவரும் —
லூக் 6:45 ... *இதயமாகிய நல்ல கருவூலம் ...*
இதயத்தின் நிறைவு ... வாய் பேசும்

4. கெட்ட தோழமையினால் எனது ''பண்பாட்டைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.

கிறிஸ்துவிடம் மனந்திரும்பி வருதல் என்றால், பழைய கட்டுகளை உடைத்துப் புதிய பிணைப்புகளை உருவாக்குதல்.

கெட்ட தோழமை நம்மைப் பாதிக்காது என்றெண்ணுவது வஞ்சகம் —

1 கொரி 15:33 ... *மோசம் போகாதிருங்கள் ...*
ஆகாத உறவுகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.
:34 ... (மயக்கத்திலிருந்து) விழித்தெழுங்கள் ...
பாவம் செய்யாதிருங்கள்.

நமது வயதுள்ளோரிடமிருந்து அழுத்தங்கள் இருக்கும்;
ஆனால் சமரசம் வேண்டாம், உயரிய பண்புகளைக் காத்திடுங்கள்.

- இறைமக்களோடு தவறாது ஐக்கியப்படுங்கள்.
  பாபிலோனில் குடிவெறி, வேசித்தனம், சிலைவணக்கம் நிறைந்திருந்தன; ஆனால் தானியேலும் மூன்று வாலிபரும் ஒருவரையொருவர் தாங்கிப் பரிசுத்தத்தில் உறுதியாயிருந்தனர் —
  தானி 2:17,18 ... *தானியேல், அனனியா, அசரியா, மீஷாவேல், ... தோழர்*

5. அவிசுவாசத்தினால் என் ''இதயத்தைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.

சிலுவையில் கிறிஸ்து முடித்தவற்றின் மீதுள்ள எளிய விசுவாசம் உங்கள் இதயத்திலிருப்பது அருமையானது —

1 பேது 1:7 ... *பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவாசம்*

- உங்கள் விசுவாசத்திற்கு எதிராகச் செயல்படும் சக்திகள் ஏராளம் —
  ஜாக்கிரதை! (எபி 3:12)... *அவிசுவாசமுள்ள பொல்லா இதயம்*

  ''விசுவாசக் கேடகம்'' கொண்டுதான் சத்துருவின்
  ''அக்கினி அம்புகளை'' அணைத்துப்போட முடியும் —
  எபே 6:16

விவிலியம் ஒரு விஞ்ஞானப் புத்தகமல்ல;
ஆனால் சரியான விஞ்ஞானம் அதற்கு ஒத்தது.

விஞ்ஞானம் மனிதனது கண்டுபிடிப்பு;
விவிலியம் தேவனது வெளிப்பாடு.

இளம் தீமோத்தேயுவுக்குப் பவுலின் எச்சரிப்பு —

''தீமோத்தேயுவே, ஞானமென்று பொய்யாய்ப் பெயர் பெற்றிருப்பதற்கு எதிராய் உன்னைக் காத்துக்கொள்'' (1 தீமோ 6:20 21)

எல்லாக் கேள்விகளுக்கும் திருமறையில் பதில்கள் கிடையாது;
ஆனால் கேள்விகளுக்கெல்லாம் கேள்விக்குப் பதிலுண்டு —

''இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?'' (அப் 16:30,31)

■ *முடிவுரை*

இத்தீர்மானங்களைத் தேவனிடம் சமர்ப்பித்து அவரை நம்புங்கள்;
இவற்றின்படி நடக்க அவர் உதவுவார் (சங் 37:5; நீதி 16:3).
''நான் அவரிடம் ஒப்புவித்ததை அந்நாள்வரை காத்துக்கொள்ள அவர் வல்லவர்'' என்று முழங்குங்கள் (2 தீமோ 1:12)

186

பின்மாற்றம்
Backsliding

முகவுரை

- முன்செல்லும் கிறிஸ்தவரைவிடப் பின்மாறுவோரே அதிகம். இச்செய்தி கீழ்க்கண்ட மூன்று வகையினருக்கு —
  - அ) பின்மாற்றக்காரர் திரும்பிவர
  - ஆ) ஊக்கமுள்ள விசுவாசிகள் பிறர் பின்மாறாது தடுக்க
  - இ) பின்மாற்றக்காரரை ஆத்துமாதாயகர் திருப்பிக் கொண்டுவர

(அ) பின்மாற்றத்திற்குக் காரணங்கள்

1. மேலெழுந்த மனந்திரும்புதல்
மத் 13 :20,21 ... *வேர் இல்லாததால் ...*
கிறிஸ்தவ வாழ்க்கை மலர்ப் படுக்கையல்ல
அப் 14:22 ... *அநேக இன்னல்கள் வழியாய் ...*

2. கெட்ட தோழமை
எண் 11:4,5 ... *அந்நிய இனத்தவர் ... இச்சித்தனர்*
1 கொரி 15:33 ... *ஆகாத உறவுகள் நல்லொழுக்கம் கெடுக்கும்*
மூத்தோர், பெற்றோரது ஆலோசனைகள் தேவை.

3. திருமணத்தில் பரிசுத்தமற்ற சம்பந்தம்
1 இரா 11:1-4... *சாலொமோன்... மனைவிகள்... தெய்வங்கள்*
2 கொரி 6:14 ... *அந்நிய நுகம் ... அவிசுவாசிகள் ...*
(கண்மூடிக் காதல்கள்)

4. பொருளாசை
2 தீமோ 4:10 ... *தேமா ... இவ்வுலகு ...*
1 தீமோ 6:10 ... *பண ஆசை ... எல்லாத் தீங்குக்கும் வேர்*
மத் 13:22 ... *முள் நிலம் ... உலகக் கவலை ... செல்வம்*
வேலை/தொழில் தெரிந்தெடுப்பு —
''நான் என்ன செய்ய நீர் சித்தம்?''

5. சுத்த மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளத் தவறுதல்
1 தீமோ 1:19 ... *கப்பல் சேதம் ...*

மனிதரோடு ஒப்புரவாகுதல், காரியங்களைச் சரிசெய்தல் —
அப் 24:16 ... *பிரயாசப்படுகிறேன்*

6. அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை
நீதி 14:14 ... *தன் வழிகளில் திருப்தி ...*
லூக் 22:31-33 ... மத் 26:33 ... பேதுரு
''எல்லாரும் விட்டாலும் ... சிறை செல்லவும் ஆயத்தம்''
நிற்கிறேன் என்பவன் விழாதபடிக் கவனமாயிருக்கட்டும்!
(1 கொரி 10:12)

7. பொறுமையின்மை
வாக்குகள் — நிறைவேறத் தாமதம் ... எபி 10:35-39
ஜெபங்கள் — பதில் கிடைக்கத் தாமதம்
(அ) விதவை & நீதிபதி (லூக் 18:1-8)
(ஆ) நள்ளிரவில் நண்பன் (லூக் 11:5-13)

வருமுன் காப்பது மேல் —

(ஆ) பின்மாற்றத்திற்கு மாற்று மருந்து

1. விழிப்புள்ள ஜெபம்
மத் 26:40 ,41 ... *சோதனை ...*
கிரமம் —
எ.கா.) தாவீது (சங் 55:17) ... தினம் மூன்று வேளை
தானியேல் (தானி 6:10) ... தினம் மூன்று வேளை
ஜெப ஆவியைத் தக்கவைத்தல் — விழித்திருப்பு

2. திருமறைத் தியானம்
லூக் 11:24-26 ... *வீடு காலி ... பொல்லாத ஆவிகள்*
சங் 119:11 ... *பாவம் செய்யாதபடி ...*

3. தூயாவியானவரின் நிறைவு
நம்மையின்றித் தேவன் எதையும் செய்ய **மாட்டார்;**
தேவனின்றி நாம் எதையும் செய்ய **முடியாது!**

எ.கா.) *தன்னைக் காத்துக்கொள்ளுதல்* (1 யோ 5:18)
தேவ வல்லமையால் காக்கப்படுதல் (1 பேது 1:5)

எ.கா.) யூதா 20,21 ... உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்

24 ... தேவ வல்லமையால் காக்கப்படுதல்

(1 பேது 1:5)

4. இறைமக்களோடு சகவாசம்

எபி 3:12,13 (ஐக்கியக் குழுக்கள்) ... *நாள்தோறும் புத்தி சொல்லுதல்*

10:24,25 (திருச்சபை) ... *நற்செயல்களுக்கு ஊக்குவிப்பு*

ஜெபத் தோழர் ஒருவரைத் தெரிந்துகொள்ளுங்கள் —

பிர 4:9-12 ... *அனல் ... போராட்டம் ...*

5. விசுவாசத்தை அறிக்கையிட்டுப் பகிர்தல்

மத் 5:14-16 ... *விளக்கு ... வெளிச்சம் ... உலகு*

2 தீமோ 1:6-8 ... *பயமில்லை ... பலம் ...*

6. துவக்கங்கள் குறித்துக் கவனம்

சங் 19:12 ... *''பிழைகள்''* (errors)

:12 ... *''மறைவான குற்றங்கள்''* (secret faults)

:13 ... *''துணிகரமான பாவங்கள்''* (presumptuous sins)

:13 ... *''பெரும் பாதகம்''* (great transgression)

7. பிரச்னைகளையல்ல, கிறிஸ்துவையே பார்த்தல்

எபி 12:1,2 ... *இயேசு ... துவக்குபவர் ... முடிப்பவர் ...*

மத் 14:27-31 ... *பேதுரு ... அலைகள் ... விசுவாசம்*

வாழ்வின் பல பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்காது.
அவற்றினால் விழுங்கப்படாது,
அவற்றை மேற்கொள்ளப் படிக்கவேண்டும்.

(இ) பின்மாற்றத்திலிருந்து திரும்புதல்

நீங்கள் பின்மாற்றமடைந்திருந்தால் ...

அ) பின்மாற்றத்தின் அறிகுறிகள்

1. பாவம் செய்வது பழகிப்போகும்.
2. ஜெப தியான வாழ்வில் ஆர்வம் குறையும்.
3. திருப்தியும் தேக்கமும் உண்டாகும்.

ஆ) குணமடைவது எங்ஙனம் —

1. வேறு திசை செல்லாது கிறிஸ்துவிடமே வாருங்கள் —

யூதாஸ் vs. பேதுரு

மத் 26:75; யோ 2:15 / மத் 27:3-5

2. திருவாக்குகளை நம்புங்கள் —

''என்னிடம் வருபவனைத் தள்ளுவதில்லை'' (யோ 6:37)

''உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாயிருந்தாலும்'' (ஏசா 1:18)

''கிருபையும் மன்னிப்பும் நிறைந்தவர்'' (சங் 86:5)

கெட்ட குமாரனைத் தந்தை எப்படி ஏற்றுக்கொண்டார் என்பதைப் பாருங்கள்! (லூக் 15:20)

■

''பின்மாற்றம் வேண்டாம்!''
என்ற தலைப்பில் ஆசிரியரது 90 நிமிடச் செய்தியடங்கிய
ஒலித்தட்டைக் கேளுங்கள்.
இச்செய்தி தமிழிலும் ஆங்கிலத்திலும்
12-பக்கப் பிரதியாகவும் வெளிவந்துள்ளது.

■

வாலிபருக்குத் தேவையான நடைமுறை ஆலோசனைக்குக்
கீழ்க்கண்ட நூல்களை வாசியுங்கள் —

சகோதரன் R. ஸ்டான்லி எழுதியது

☐ *மாணவ மணிகளுக்கு ...*
☐ *எதிர்நீச்சல் வாலிபர்*

சகோதரி லில்லியன் ஸ்டான்லி எழுதியது

☐ *வயது பதினாறிருக்கும்*
☐ *வாலிபர் உலகம்*
☐ *பசங்க, பொண்ணுங்க*

M

187

‘‘என் தாசன்’’ (என் ஊழியன்)

“My Servant”

முகவுரை

- இறைமக்கள் யாவரும் அவருக்குப் பணியாற்றும் தாசரே;
  ஒரு சிலர் மட்டுமல்ல —
  மல் 3:16-18
  — ஒவ்வொரு கிறிஸ்தவனின் இரட்டை ஊழியம் (1 பேது 2:4,5,9)

  இப்பெரும் பாக்கியம் நம்மீது பிரமாண்ட பொறுப்பையும் வைத்துள்ளது.
  அவரது தாசருக்கேற்ற வழியில் நாம் நடந்துகொள்ளவேண்டும்.

- தம்மைப் பிரியப்படுத்தியவர்களைத் தேவன்
  ‘‘என் தாசர்’’ என்றழைத்தார் —

  பழைய ஏற்பாட்டில் 7 பேருக்கு இச்சான்று கிடைத்தது.
  அவர்களில் ஒவ்வொருவரிலும் குறிப்பட்டதொரு பண்பு இருந்தது.

1. ஆபிரகாம்

ஆதி 26:24 ... *‘‘என் ஊழியக்காரன்’’*
(முதலாவது இங்குதான் வருகிறது.)
‘‘விசுவாசம் & கீழ்ப்படிதல்’’ — எபி 11:8

எளிய விசுவாசம் — தன் சொந்தவூரை விட்டுவிட
— தன் மகனைப் பலியிட

கீழ்ப்படிதல் — கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமுன்
‘‘எங்கே என்று தெரியாது புறப்பட்டான்’’
— கிரயம் மிகுந்தது / தியாகமானது

(C.T. ஸ்டட்: ‘‘கிறிஸ்து எனக்காய் மரித்திருந்தால்
எனது தியாகம் எதுவும் பெரிதல்ல!’’)

- ஒருவன் கர்த்தரை நம்பிக் கீழ்ப்படியும்போது, மனிதன் தனக்கு என்ன செய்வானென்று அஞ்சவேண்டியதில்லை —
  ஆதி 26:19-24 ... ஈசாக்கின் நான்காம் கிணறு

• தேவனுக்குத் தெரியாது, அவர் அனுமதியாது, யாதும் நடக்காது.

• இக்கட்டு வேளைகளில் — 2 கொரி 1:8-10

மரித்தவரையும் ''எழுப்ப'' வல்லவர்
எனும் ஆபிரகாமின் விசுவாசம் (எபி 11:17-19)

2. மோசே

எண் 12:7 ... *''என் தாசனாகிய'' மோசே*
''உண்மை, நெருக்கவுறவு'' (வச 7,8)
— *அவரது வீட்டிலெங்கும் உண்மை* (எபி 3:2,5)

மோசே தனது நிதானத்தை இழந்த வேளைகளுண்டு;
ஆனால் அவன் உண்மையும் உத்தமமுமானவன் —
''சாந்தம்'' (எண் 12:3)

• தனது முகம் பிரகாசித்தது அவனுக்கே தெரியாது! யாத் 34:28-30

• மோசேக்கு விரோதமாய் மிரியாமும் ஆரோனும் பேசியபோது,
அவன் முதலாவது வாய் திறந்தது
அவர்களுக்காய் ஜெபிக்கவே — எண் 12:13

தேவன் பார்த்துக்கொள்வாரென்று அமர்ந்திருந்தான் —
''கர்த்தர்'' அதைக் கேட்டார் (எண் 12:2)

• அப்படியே, சீமேயின் காரியத்தில் தாவீது
(2 சாமு 16:5,6,9,12,13; 19:18,19)

இறைவாக்கு: ஏசா 54:15 ... *எவர்கள் உனக்கு விரோதமாய்க்*
கூட்டம் கூடுகிறார்களோ ...

3. காலேப்

எண் 14:24 ... *''என் தாசனாகிய'' காலேப்*
''வேறே ஆவி ... முழுமனதாய்ப் பின்பற்றுதல்''
வேறே ஆவி = பெரும்பான்மையினரைச் சேராமை (வச 22-24)

சூழ்நிலைகளைவிடத் தேவனை நம்பினான் —
வெட்டுக்கிளிகள் / இராட்சதர்கள்
தேவனுடைய **வார்த்தை** (யோசு 14:10)

— *தேவன் ஒரு மனிதன் அல்ல* (எண் 23:19).
முடிவில் நிறைவேற்றம் (எபி 11:13,39)

கடினமான இடங்களுக்குள் துணிந்து சென்று
அவற்றைத் தேவனுக்காய் சுதந்தரித்தல் (யோசு 14:10,11,12)

எ.கா.) ஹட்சன் டெய்லர் (1832-1905),
சீன உள்நாட்டு மிஷனின் நிறுவனர் சொன்னது:

இறைப்பணியில் மூன்று கட்டங்கள் —
கூடாதது. (Impossible)
கடினமானது. (Difficult)
முடிந்துவிட்டது! (Done!)

4. யோபு

யோபு 1:8 ... *''என் தாசனாகிய'' யோபு*
''நீதிமான்'' — தேவனுக்குப் பயப்படுதல்
— தீயவற்றிற்கு விலகுதல்
எபி 1:9உடன் இதை ஒப்பிடுக.

தேவனது நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவதில் கண்ணும்
கருத்துமாயிருந்தான் —

எ.கா.) அவனது மகன்களின் காரியம் (யோபு 1:4,5).
அவனது மனைவியைக் கடிந்துகொண்டான் (யோபு 2:9,10)

வேதனையான நிலைகளிலும் தேவனைப்பற்றிய சரியான
வார்த்தைகள் — யோபு 2:10; 42:7

— பொறுமையே நமது உதடுகளைக் காக்கும்
யாக் 1:4 (பொறுமை); 3:2 (வார்த்தைகள்); 5:11 (பொறுமை)

5. ஏசாயா

ஏசா 20:2,3 ... *''என் ஊழியக்காரனாகிய'' ஏசாயா*
''விளங்கிக்கொள்ள முடியாதவற்றையும் செய்ய ஆயத்தம்.''
தனது செய்தியோடு ஏசாயா தன்னை ஒன்றித்துக்கொண்டான்.

— சிலுவையிலறையுண்டவனே சிலுவையிலறையுண்டவரைப்
பிரசங்கிக்க முடியும்!
(சில ஊழியருக்குத் தங்கள் பிரசங்கங்கள்மீது நல்ல பிடிப்பு;
மற்றவர்கள் தங்கள் பிரசங்கங்களால் பிடிப்பு.)

— பிரசங்க ஆயத்தத்திற்குப் போதுமான நேரம்.
கர்த்தருக்குள் உண்மையான செய்தியாளர்கள்,
தனி நபர்களுக்கு ஊழியமோ, பிரசங்கப்பீடப் பணியோ.

— பிரசங்கபீடங்களில் ''செய்திகளுக்குப்'' பற்றாக்குறை.
செய்தியைச் செய்தியாளனிடமிருந்து பிரிக்கக்கூடாது.

பைபிள் சொல்வதைப் பிரசங்கியுங்கள்;
பிரசங்கிப்பதைப் பயிற்சியுங்கள்.

— முதலாவது, ஆசாரியர்; அடுத்து, மக்கள் (எரே 31:14)
— *பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன்* (2 தீமோ 2:6)

6. செருபாபேல்

ஆகாய் 2:23 ... *செருபாபேல் எனும் ''என் ஊழியக்காரன்''*

செருபாபேல் — 1. *தூக்கு நூல்* (சக 4:10)
— நீதி, நேர்மை (கை)

2. *முத்திரை மோதிரம்* (ஆகாய் 2:23)
— அதிகாரம் (விரல்)

3. *தலைக்கல்* (சக 4:7)
— வல்லமை/ஆவி (தோள்)

''நிலைத்திருந்து பணியாற்றல்''
''அடித்தளமிடுதல் ... கட்டி முடித்தல்'' (சக 4:9)

— மாற்றிக்கொண்டேயிராதீர் — வேகம் கூடலாம், தடம் புரளக்கூடாது.
— முன்செல்வது சிரமமானால், சிரமத்தோடு முன்செல்லுங்கள்.

7. இயேசு

அ) ஏசா 42:1-4 ... *இதோ, ''என் தாசன்!''*
சுய விளம்பரம் அல்ல — ''தேவன்'' அவரை உயர்த்தினார்!

மத் 12:16-21இன் நிறைவேற்றம்
''ஒருவரிடமும் சொல்லாதே ...''

எடுத்துக்காட்டுகள்: மத் 8:4 ... குஷ்டரோகி
9:30 ... இரு குருடர்
16:20 ... சீடர்
17:9 ... மறுரூபம்

ஆ) ஏசா 52:13 ... *இதோ, ''என் தாசன்!''*
''ஞானமாய்'' நடப்பார்!

— தீர்க்கதரிசனத்தில் இயேசு (ஏசா 11:2).
ஞானம், உணர்வு, ஆலோசனை ... அருளும் ஆவி

— இயேசுவானவரின் வளர்ச்சி முதலில் *ஞானத்தில்* (லூக் 2:52)

— ஞானமே முக்கியம்

நீதி 4:7 ... *என்னத்தைப் பெற்றுக்கொண்டாலும் ...*
யாக் 1:5 ... ஞானத்திற்கான ஜெபம் தேவனுக்குப் பிரியம்.
ஞானத்திற்கான சாலொமோனின் ஜெபம்
உடனே பதிலளிக்கப்பட்டது (1 இரா 3:5-12)

— ஆவியின் வரங்கள் பட்டியலில் முதலாவது ஞானம்
1 கொரி 12:8 ... *ஞானப் போதனை வசனம் ...*

■ *முடிவுரை*

தேவதாசர் (தேவ ஊழியர்) என்றழைக்கப்படுவோரிடம்
காணப்படவேண்டிய சீரிய குணநலன்கள் —

1. விசுவாசமும் கீழ்ப்படிதலும் (ஆபிரகாம்)
   Faith & Obedience (Abraham)
2. உண்மையும் தேவனோடு நெருக்கவுறவும் (மோசே)
   Faithfulness & Intimacy with God (Moses)
3. வேறே ஆவியும் முழுமனதாய்ப் பின்பற்றலும் (காலேப்)
   Different spirit & Wholehearted following (Caleb)
4. உத்தமமும் பொறுமையும் (யோபு)
   Uprightness & Patience (Job)
5. அருட்செய்தியோடு இரண்டறக் கலத்தல் (ஏசாயா)
   Identification with the message (Isaiah)
6. நிலையாய் நின்று வேலையை முடித்தல் (செருபாபேல்)
   Consistence & Persistence (Zerubbabel)
7. தாழ்மையும் ஞானமும் (இயேசு)
   Humility & Wisdom (Jesus)

188

தாவீதின் இதயம்

The Heart of David

முகவுரை

தாவீதரசனைப் பற்றிய தேவனது சாட்சி —

''தாவீது என் இதயத்திற்கு ஏற்றவன்;
எனக்குச் சித்தமானவையெல்லாம் செய்வான்'' (அப் 13:22)

தனது வாழ்வையும் பணியையும் முடித்த பின்னர் —
''தாவீது தன் காலத்தில் தேவ சித்தப்படி அவருக்கு
ஊழியம் செய்தபின் நித்திரையடைந்தான்'' (வச 36)

இதயத்தைச் செம்மையாய்க் காத்துக்கொள்வது அதிமுக்கியம் —
நீதி 4:23 ... *எல்லாக் காவலோடும் உன் இதயத்தை ...*
அதினின்று ஜீவ ஊற்றுக்கள் புறப்படும்

இதயம் = மனப்பான்மை.
மனப்பான்மைதான் வேர்;
செயல்பாடுகள் கனி.

ரோ 11:16 ... *வேர் பரிசுத்தமானால் கிளைகளும் பரிசுத்தம்*

மன்னன் ரெகொபெயாம் —
''அவன் கர்த்தரைத் தேடத் தன் இதயத்தை நேராக்காமல்
தீயதைச் செய்தான்'' (2 நாளா 12:14)

தாவீதின் மனப்பான்மை எப்படியிருந்தது —

1. பாவத்தைப்பற்றி ...

தீர்க்கன் நாத்தானிடம் அவனது அறிக்கை:
''கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேன்'' (2 சாமு 12:13)

அவனது பாவ அறிக்கையிலுள்ள மனம் நொறுங்குதல்,
திறந்த மனது, முழுக்க வெளிப்படுத்துதல் (சங் 51)

அவனது பாவ அறிக்கையின் சங்கீதம்தான் இறைமக்களுக்குக்
காலாகாலமாய்ப் பிரியமானதாயிற்று.

2. தேவனையும் அவரது நாமத்தையும்பற்றி ...

- கர்த்தரை ஆராதித்தல்
  2 சாமு 6:14-23

  அவன் மன்னனாயிருந்தாலும் மன்னாதி மன்னருக்குமுன்
  தன்னை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை —

  தனது *''முழு பலத்தோடும்''* தேவனுக்குமுன்
  நடனமாடி அவரைத் துதிக்க வெட்கப்படவில்லை.

- ஆலயம் கட்டுதல்
  2 சாமு 7:1-3
  ஆலயம் கட்ட கட்டுக்கடங்கா ஆசை.

- கர்த்தரது நாமம்
  கோலியாத்திற்குமுன் (1 சாமு 17:45) —
  ''கர்த்தரின் நாமத்தில் வருகிறேன்''

- ''விருத்தசேதனமில்லாதோர்'' மகிழாதபடிச்,
  சவுலின் மரணத்தைப் பிரசுரிக்கத் தாவீது விரும்பவில்லை —
  2 சாமு 1:20 ... தேவ நாமமென்றால் அவனுக்கு உயிர்!

3. தேவனது ஊழியக்காரரைப்பற்றி ...

- சவுல் *''அபிஷேகிக்கப்பட்ட''* இராஜா என்ற ஒரே காரணத்தால்
  அவனுக்கு எதிராய்க் கை நீட்ட மறுத்தான் —

  1 சாமு 24:6,7; 26:7-11; 2 சாமு 1:14-16

- சவுலரசனை அடக்கம்பண்ணியவர்களை ஆசீர்வதித்தான் —
  2 சாமு 2:4-6

  சவுலரசன் பின்மாற்றக்காரனாயிருந்தும்,
  அவனைப்பற்றிய தாவீதின் மனப்பான்மையைப் பாருங்கள்.

4. அவனது நண்பர் மற்றும் உடனாளிகளைப்பற்றி ...

- போரில் கிடைத்த கொள்ளைப் பொருட்களிலிருந்து, யுத்தத்
  திற்கு முன்சென்றோருக்கும் தளவாடங்கள் அனுப்பும் வரிசையில்
  தங்கிச் செயல்பட்டோருக்கும் சமமாய்க் கொடுத்தான் —

  1 சாமு 30:21-24

- தனது ஆருயிர் நண்பன் யோனத்தானை நினைத்து மேவிபோசேத்தை மனரம்மியமாய் ஆசீர்வதித்தான் —
  2 சாமு 9
- தனக்குத் தயை காட்டிய அம்மோன் ராஜாவின் மகனைத் தாவீது ஆசீர்வதித்தான் —
  2 சாமு 10:1,2

மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதில் தாவீது சிறந்தவன்.

5. அவனது சத்துருக்களைப்பற்றி ...

- 1 சாமு 24:5
  சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதால் தாவீதின் இதயம் படபடத்தது!
- 2 சாமு 4:8-12
  சவுலின் குமாரரில் ஒருவனாகிய இஸ்போசேத்தைக் கொன்றவர்களைத் தாவீது கொன்றுபோட்டான்.

6. பாடுகளைப்பற்றி ...

- சிக்லாக் தீக்கிரையாக்கப்பட்டதால் தாவீதைக் கல்லெறிய மக்கள் பேசிக்கொண்டபோது, அவன் தன்னைக் கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொண்டான் (1 சாமு 30:1-6)
- தாவீதின்மேல் சீமேயி கல்லெறிந்து அவனைச் சபித்தபோது, தாவீதின் பிரதிபலிப்பைப் பாருங்கள் —

  ''கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து ...
  எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார்'' (2 சாமு 16:5-14)

7. தன்னைப்பற்றி ...

சங் 131 :1,2 ... *''கர்த்தாவே, என் இதயம் இறுமாப்புள்ளதல்ல ... குழந்தையைப்போல் என் ஆன்மாவை அமரப்பண்ணினேன்''*

சங் 22:6 *''நான் ஒரு புழு; மனிதனல்ல!''*

■ *முடிவுரை*

''தாவீதின் குமாரன்'' என்று இயேசு அழைக்கப்பட்டதில் ஆச்சரியமில்லையே —

சுவிசேஷங்களில் மட்டுமல்ல: மத் 1:1; 9:27; 12:23; 21:9
வெளிப்படுத்தலிலும்: வெளி 5:5; 22:16

189

யோசேப்பு: நடைமுறைக் கிறிஸ்தவன்

Joseph, a Practical Christian

முகவுரை

மரியாளைப்பற்றி ஏராளம் பிரசங்கம்;
யோசேப்பைப்பற்றி அவ்வளவு பேசப்படுவதில்லை.

மரியாளைத் தெரிந்தெடுக்கத் தேவனுக்குக் காரணம் இருந்த தென்றால், யோசேப்பைப் பொறுத்த அளவிலும் அப்படியே.

எக்கோணத்தில் பார்த்தாலும் அவர் ஒரு நடைமுறைக் கிறிஸ்தவர்.
அவரைக் குறித்த முதல் அறிமுகம் —
''நீதிமான்'' (மத் 1:19)

யோசேப்பின் பாராட்டப்படக்கூடிய குணநலன்கள் —

1. சட்டதிட்டங்களைத் தாண்டிய கருணை, இரக்கம்

பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின்படி,
மரியாளைத் தள்ளி அனுப்பிவிடலாம் —
உபா 24:1

யோசேப்போ அவளை *''அவமானப்படுத்த''* மனதில்லாமல், *''இரகசியமாய்த்''* தள்ளிவிட யோசித்தார் (மத் 1:19)

2. தீர்மானிக்குமுன் பொறுமை, நிதானம்

மத் 1:20 ... *அவர் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது ...*
அவசரப்பட்டுத்தான் நாம் எதையும் குழப்பிவிடுகிறோம்.

3. வேத வாக்கியங்களுக்கு இசைந்து செல்லுதல்

லூக் 2:22 ... *மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ...*
:41,42 ... *பஸ்கா பண்டிகை ...*
முறைமையின்படி (உபா 16:1,16)

4. குழந்தை இயேசுவின் பாதுகாப்பிற்கு முன்னெச்சரிக்கை

மத் 2:19 -22 ... *தேவ தூதன் ... சொப்பனம் ... யோசேப்பு ...*
ஆனால் கேள்விப்பட்டு ... இன்னொரு சொப்பனம் ...

கர்த்தரிடமிருந்து பெறும் பொதுவான நடத்துதல் தவிர்த்து,
சூழ்நிலைக்கேற்ப தீர்மானமெடுக்க
ஆவியானவரின் குரலுக்குச் செவிசாய்க்கவேண்டும்.

5. அரசின் சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்

மரியாள் நிறை கர்ப்பிணியாயிருந்தாலும்,
எத்தனையோ அசவுகரியங்களிலிருந்தும், *''ராயனுடைய கட்டளையின்படி''* பெயர்ப் பதிவுசெய்ய நாசரேத் சென்றார் —
லூக் 2:1-6

6. தன்னடக்கம்

இயேசு ஒரு *''கன்னியிடம்''* பிறப்பாரெனும் இறைத்திட்டத்திற்கேற்ப, *''அவள் தனது முதல் குமாரனைப் பெறுமளவும்''*
யோசேப்பு அவளோடு பாலுறவு கொள்ளவில்லை —
மத் 1:22-25

7. வேலையில் கவனம்

அவர் ஒரு தச்சர் (மத் 13:55).
அவரது குடும்பமும் பெரிது —
4 மகன்கள், குறைந்தது 2 மகள்கள்
அதாவது, 7 பிள்ளைகள் (மத் 13:55,56; மாற் 6:3,4)

இயேசுவின் 12 வயதிற்குப் பிறகு சுவிசேஷங்களில் யோசேப்பின் பெயர் சொல்லப்படாததால், அவர் குறைந்த வயதிலேயே மரித்திருப்பார் என யூகிக்கலாம். அவ்வளவு சீக்கிரம் விதவையான மரியாள் இவ்வளவு பிள்ளைகளையும் எப்படி வளர்த்திருப்பாள் என்பது வியப்பு!

ஜெபியுங்கள்:

தேவனே, யோசேப்பைப் போன்ற நடைமுறைக்
கிறிஸ்தவர்களான தந்தையர்களை எங்கள்
குடும்பங்களுக்குத் தந்து ஆசீர்வதியும்! ஆமென்!

(179ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)

190

பவுலும் இயேசுவும்

The lives of Paul & Jesus

முகவுரை

தனது உடன் ஊழியருக்குமுன் தனது இதயத்தைப் பவுல் திறந்த திருவசனப் பகுதிகளில் ஒன்று **அப்போஸ்தலர்** 20:17-38

எபேசு சபையின் மூப்பர்களுக்கு அவர் கொடுத்த பிரிவுரை இது.

தனது வாழ்க்கைக்கும் பணிக்கும் இயேசுவையே
பவுல் மாதிரியாய்க் கொண்டிருந்தார் —
1 கொரி 11:1 ... *நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல் என்னைப் பின்பற்றுங்கள்*

பவுலையும் இயேசுவையும் இரு பக்கங்களில் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் படிக்கவேண்டிய 12 குறிப்புகள் இதோ —

1. பிரகாசமான வாழ்வு (A shining life)

<u>**பவுல்**</u>	<u>**இயேசு**</u>
அப் 20:17,18	யோ 8:46
''அறிந்திருக்கிறீர்கள்''	*''என்னிடம் பாவம் உண்டென்று யார் குற்றப்படுத்த முடியும்?''*

— மற்ற வசனங்கள் —

மத் 5:14-16 ... வீட்டிற்குள்ளும் வெளியேயும் வெளிச்சம்

தானி 6:4 ... எந்தக் குற்றமும் இல்லை.

1 தீமோ 4:12 ... விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

2. வழி பிசகாத வாழ்வு (A consistent life)

<u>**பவுல்**</u>	<u>**இயேசு**</u>
அப் 20:18	யோ 8:29
''முதல் நாள் தொடங்கி ...''	*''எப்பொழுதும் பிதாவைப் பிரியப்படுத்துகிறேன்''*

— மற்ற வசனங்கள் —

அப் 24:16 ... *எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சி*
பிலி 2:12 ... *எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே ...*
சங் 16:8 ... *கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன் ...*

3. சமர்ப்பண வாழ்வு (A submitted life)

பவுல்	**இயேசு**
அப் 20:19	பிலி 2:5-7
''கர்த்தரைச் சேவித்தேன்''	*''அடிமையின் ரூபமெடுத்து''*

— மற்ற வசனங்கள் —

மத் 20:25-28 ... *சேவை பெற அல்ல, சேவை செய்ய*
1 கொரி 9:19 ... *எல்லாரையும் இரட்சிக்க அடிமையானேன்*
லூக் 17:7-10 ... *அப்பிரயோஜனமான ஊழியர்*

4. நொறுங்கிய இதய வாழ்வு (A broken-hearted life)

பவுல்	**இயேசு**
அப் 20:19,31	ஏசா 53:3
''தாழ்மை...கண்ணீர்...சோதனைகள்''	*''பாடுகள் நிறைந்தவர்''*

— மற்ற வசனங்கள் —

சங் 51:17 ... சொந்த நிலை குறித்து
ரோ 9:1-3 ... பிறரது இரட்சிப்பிற்காக
2 கொரி 2:4 ... உடன் பரிசுத்தவான்களுக்காக

5. தயாள வாழ்வு (A generous life)

பவுல்	**இயேசு**
அப் 20:20,21,26	யோ 10:10-13
''ஒன்றையும் மறைத்து வைக்காமல் ...''	*''நல்ல மேய்ப்பன் ... கூலிக்காரன்''*

— மற்ற வசனங்கள் —

நீதி 11:24-26 ... *தயாள குணம் ... விற்கிறவன் ...*
2 கொரி 9:6,12-15 ... *பெருக விதைக்கிறவன் ... உதாரத்துவம்*

6. விசுவாச வாழ்வு (A faith life)

பவுல்	**இயேசு**
அப் 20:22	மத் 26:52-54
''கட்டுண்டவனாய்ப் போகிறேன் ... அறியேன்''	*''12 லேகியோன் தூதர் ... வேத வாக்கியங்கள்''*

— மற்ற வசனங்கள் —

எபி 11:8 ... *விசுவாசத்தினால் ஆபிரகாம் ... எங்கென்று தெரியாமல்*

2 தீமோ 1:12 ... *நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்*

(எதிர்காலம் ''எதை'' வைத்திருக்கிறது vs.
எதிர்காலத்தை ''எவர்'' வைத்திருக்கிறார்?)

7. வழிநடத்தப்பட்ட வாழ்வு (A guided life)

பவுல்	**இயேசு**
அப் 20:23	லூக் 4:1
''ஆவியானவர் சொல்லுகிறபடி''	*''ஆவியானவரால் கொண்டுபோகப்பட்டார்''*

— மற்ற வசனங்கள் —

மாற் 3:35 ... இயேசுவுடன் நெருக்கவுறவு (ரோ 8:14)
அப் 13:36 ... தாவீது ... *தேவனது இதயத்திற்கேற்றவன்*
யோ 7:17 ... *தேவ சித்தம்* செய்ய *''விருப்பம்''*

8. தைரியமான வாழ்வு (A bold life)

பவுல்	**இயேசு**
அப் 20:23,24	யோ 18:3-6
''கட்டுகள் ... உபத்திரவங்கள்''	*''நான்தான் அவர்!''*

— மற்ற வசனங்கள் —

மத் 10:27,28,32 ... *பயப்படாதிருங்கள் ... அறிவியுங்கள்*
2 தீமோ 1:7,8 ... *பயமுள்ள ஆவியல்ல, பலமுள்ள ஆவி*
அப் 1:8 ... இரத்தசாட்சிகளாய் மரிக்கவும் பலம், துணிவு

9. தீர்மானமுள்ள வாழ்வு (A determined life)

பவுல்	இயேசு
அப் 20:24	யோ 17:4
''ஊழியத்தை நிறைவேற்ற''	*''வேலையை முடித்தேன்''*

— மற்ற வசனங்கள் —

2 தீமோ 4:6,7 ... *பானபலி ... ஓட்டத்தை முடித்தேன்*

அப் 21:8-14; 23:11 ... முன்செல்லுவதிலிருந்து எதுவும் பவுலைத் திருப்ப முடியவில்லை.

10. மகிழ்ச்சியுள்ள வாழ்வு (A joyful life)

பவுல்	இயேசு
அப் 20:24	சங் 40:7,8
''... மகிழ்ச்சியோடே ...''	*''உம் சித்தம் செய்ய விரும்புகிறேன்''*

— மற்ற வசனங்கள் —

யோ 15:11 ... *என் சந்தோஷம் ... உங்கள் சந்தோஷம்*

சங் 100:2 ... *மகிழ்ச்சியோடு கர்த்தரைச் சேவியுங்கள்*

1 யோ 5:3 ... *அவரது கற்பனைகள் பாரமானவையல்ல*

11. தன்னலமற்ற வாழ்வு (A selfless life)

பவுல்	இயேசு
அப் 20:33-35	2 கொரி 8:9
''வெள்ளி ... பொன் ...''	*''நம்மைச் செல்வந்தராக்கத் தரித்திரரானார்''*

— மற்ற வசனங்கள் —

1 தீமோ 6:9-11 ... *''பண ஆசைக்கு விலகியோடு''*

2 தீமோ 4:10 ... *''தேமா போய்விட்டான்''*

2 இரா 5:15,16,20,26 ... தீர்க்கன் எலிசா

தானி 5:16,17 ... தீர்க்கன் தானியேல்

12. நட்புள்ள வாழ்வு (A friendly life)

பவுல்	இயேசு
அப் 20:36,37,38	யோ 15:5; மத் 11:19
'' ... ஜெபித்து ... முத்தமிட்டு ...''	*''பாவிகளின்/பரிசுத்தவான்களின் நண்பன்''*

— நமது நிலை —

நாம் ஐக்கியத்தைக் (fellowship) குறித்துப் பேசுகிறோம்; ஆனால் நட்புறவில் (friendship) தோல்வியடைகிறோம். இறைப்பணியாளர் பிறர்க்கு நண்பராயிருந்தால்தானே நன்மை பயக்க முடியும்?

(156 & 165ஆம் அத்தியாயக் குறிப்புகளையும் படியுங்கள்.)



எபேசு மூப்பருடன் பவுல்

191

அரிமத்தியா யோசேப்பு

Joseph of Arimathea

முகவுரை

- இவன் நான்கு சுவிசேஷங்களிலும் அறிமுகம் —
  மத் 27:57-60
  மாற் 15:42-46
  லூக் 23:50-53
  யோ 19:38-42
- இயேசுவின் உடலை வாங்கி அடக்கம்பண்ணியது
  பன்னிருவரில் ஒருவரல்ல!

அரிமத்தியா யோசேப்பின் வாழ்க்கை —

1. இரகசியச் சீடன் தைரியங்கொண்டான்.

யோ 19:38 / மாற் 15:43

''இரவில் இயேசுவிடம் வந்த'' நிக்கொதேமுவுடன் —
வச 39 (3:2 / 7:50)

கிறிஸ்து மரித்ததைப் பார்த்தது அவனை மாற்றிற்று.
இதுதான் சிலுவையின் வல்லமை!
அவ்விதமே நூற்றுக்கதிபதி (லூக் 23:47)

உங்களைப்பற்றி என்ன?

கொஞ்சங்குறையவா முழுக்க முழுக்கவா? (அப் 26:27-29)
இரு நினைவுகளா? (1 இரா 18:21)
நீங்கள் யாருக்கு நண்பர்? (யாக் 4:4)
இயேசுவைப்பற்றி வெட்கமா? (மாற் 8:38)

2. அவன் பெரும்பான்மையினரைச் சேர மறுத்தான்.

லூக் 23:50,51
செத்த மீன் / உயிருள்ள மீன் ... எதிர்நீச்சல்
விசாலமான வழி / நெருக்கமான வாசல்

நீதி 1:10-15 ... *பாவிகள் உனக்கு நயங்காட்டினால் ...*
சங் 1:1 ... பிரிந்து வாழ்தலின் பாக்கியம்

உங்கள் வயதினரின் அழுத்தத்திற்குக் (peer pressure) கவனம்!
சாக்குப்போக்கு: எல்லாருந்தான் செய்கிறார்களே!

3. அவன் இறையரசிற்காய்க் காத்திருந்தான்.

லூக் 23:51

வாலிபர், நங்கையர் தங்கள் எதிர்காலத்திற்காய்க்
கவலைப்படுகின்றனர் —

மத் 6:31-33 ... *உணவு ... உடை ... உடல்*

இறையரசு அத்துடன் அவரது நீதி
(ஆட்சி) (நீதி)

ரோ 14:17 ... *சமாதானமும் சந்தோஷமும்*

- ஜெபம்
- திருமறைத் தியானம்
- சாட்சி பகர்தல்
- இறைமக்களுறவு

4. அவன் தேவனுக்குத் தாராளமாய்க் கொடுத்தான்.

மத் 27:60 / ஏசா 53:9

விளைவு?

அ) தேவ தூதர் அக்கல்லறைக்கு விஜயம் செய்தனர்!
ஆ) அகிலவுலகிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்துபோகின்றனர்!
இ) ஏராளம் போட்டோக்கள்!

அவ்விதமே, மாற் 14:3-9 ... மரியாளும் நளதமும்.
விளைவு?

அ) இயேசுவின் உடலுக்கு வாசனைத் திரவியங்கள் போட மற்றவர்கள் வருமுன் அவர் உயிர்த்தார்!
மாற் 14:8 / 16:1

ஆ) உலகெங்கிலும் நினைவாகச் சொல்லப்படுகிறாள்.

எ.கா.) C.T. ஸ்டட் — கிரிக்கெட் வீரர்
டேவிட் லிவிங்ஸ்டன் — புவியியல் ஆராய்ச்சியாளர்

வாழ்க்கை ஒன்றே,
கடந்துபோகும் சீக்கிரமே;
இயேசுவுக்காய்ச் செய்ததே
நிலைக்கும் என்றுமே!

இயேசுவுக்கு நீங்கள் கொடுப்பது திரும்ப உங்களுக்குக் கிடைத்துவிடும் —

மூன்று நாட்களில் கல்லறையை இயேசு காலிபண்ணினார்.
அவ்விதமே, ஆபிரகாம் மூன்று நாட்களில் ஈசாக்கைத் திரும்பப்பெற்றான் (ஆதி 22:4)

192

ஸ்தேவான் ஒரு வல்லவன்!

Stephen the Strong

முகவுரை

நமது வாழ்வுக்கும் பணிக்கும் சவாலான எடுத்துக்காட்டுகளாய்ப் பொதுவாகப் பவுலையும் பேதுருவையுமே குறிப்பிடுவோம்.

ஆனால் இவ்வளவு பிரபலமாகாத எளிய சரிதைகளிலிருந்தும் நாம் எவ்வளவோ கற்கலாம்.

அவர்களில் ஸ்தேவான் ஒருவன்.

அவன் அப்போஸ்தலனுமல்ல, மூப்பனுமல்ல,
ஆதிச்சபையில் ஓர் உதவிக்காரன் (= deacon) அவ்வளவுதான்.
அவனது வாழ்க்கை நமக்குப் பெரும் சவால்!

ஸ்தேவான் வல்லவனாயிருந்த பகுதிகள் —

1. ஆவியில் வல்லவன் (Spirit)

அப் 6:5 ... *விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாய்*
:10 ... *அவன் பேசின ஆவியை ...*
7:55 ... *பரிசுத்த ஆவியினால் நிறைந்து ...*

அவனைத் துன்புறுத்தியோரை நோக்கி அவன் சொன்னது —
''எப்பொழுதும் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கிறீர்கள்'' (அப் 7:51)

2. திருவசனத்தில் வல்லவன் (Scriptures)

குற்றச்சாட்டுக்கு அவன் கொடுத்த விளக்கம் (அப் 7:1-50).

அவன் குறிப்புகள் எடுத்த புத்தகங்கள் —
ஆதியாகமம், யாத்திராகமம், உபாகமம், யோசுவா, 2 சாமுவேல், 2 இராஜாக்கள், 1 நாளாகமம், சங்கீதங்கள், எரேமியா, தானியேல், ஆமோஸ்.

3. பாடுபடும்போது வல்லவன் (Suffering)

அப் 6:15 ... *அவனது முகம் தேவதூதன் முகம் போல் ...*
7:54-60 ... *வானத்தை அண்ணாந்து பார்த்து ... தொழுது ... முழங்காற்படியிட்டு ...*

பாடு பாடுதான்;
ஆனால் பாடுகளை எப்படிச் சகிக்கிறோம் என்பது நமது ஆன்மீக பலத்தையும் முதிர்ச்சியையும் அளவிடுகிறது.

4. ஜெபத்தில் வல்லவனான் (Supplications)

அப் 7:47-49 ... சடங்காச்சார ஆலய ஆராதனை அல்ல.
:59 ... கல்லெறியப்படும்போது *தேவனைத் தொழுது ...*
:60 ... *முழங்காற்படியிட்டு* ஜெபித்தான்

''ஒருவன் பாடுபட்டால் அவன் ஜெபம்பண்ணட்டும்'' (யாக் 5:13)
ஜெப வாழ்வில் நாம் ஒழுங்கும் கிரமமுமாயிருந்தால்தான் இக்கட்டு வேளைகளில் மனவுறுதியோடு ஜெபிக்க முடியும்.

5. சேவையில் வல்லவன் (Service / Servanthood)

விதவைகளுக்கு உணவு பரிமாறும் பணிக்கு உதவியாளனாகவே ஸ்தேவான் தெரிந்தெடுக்கப்பட்டான் (அப் 6:1-6)

சேவை ''பெற'' அல்ல, சேவை ''செய்யவே'' நமக்கழைப்பு (மத் 20:28)

மக்களுக்குத் தங்களைப் *''பணிவிடைக்காரராகவே''* அப்போஸ்தலர் கருதினர் (ரோ 1:1; பிலி 1:1)

1 தீமோ 3:13 ஸ்தேவானில் அப்படியே நிறைவேறியது—
''உதவிக்காரர் பணியை நன்றாய்ச் செய்வோருக்கு நல்ல நிலை ... விசுவாசத்தில் மிகுந்த தைரியம்''

6. ஆத்துமாதாயப்பணியில் வல்லவன் (Soulwinning / Sharing)

அப் 6:8 ... *விசுவாசமும் வல்லமையும் நிறைந்து பெரிய அற்புதங்கள் ... அடையாளங்கள்*
:13 ... அவனுக்கு விரோதமான குற்றச்சாட்டு:
சத்தியத்தை *''ஓயாமல் பேசுகிறான்''*
:14 ... அநேகரைத் தனது செய்தியால் கவர்ந்தான்.

7. சமுதாயச் சாட்சியில் வல்லவன் (Society / Standing)

உதவிக்காரராய்த் தெரிந்தெடுக்கப்பட்ட *''நற்சாட்சியுள்ள''* எழுவரில் ஸ்தேவான் முதலாமவன் (அப் 6:3)

நம்மைப்பற்றிய தேவனது எண்ணம்தான் முக்கியம்;
நம்மைப்பற்றிய மனிதரது எண்ணமும் கவனத்துக்குரியது —

மத் 5:16 ... *மனிதர்முன் உங்கள் வெளிச்சம் ...*
அப் 24:16 ... *தேவனுக்கும் மனிதருக்கும் முன் நல் மனச்சாட்சி*
1 தீமோ 3:7 ... *வெளியிலிருப்போரால் நற்சாட்சி*

■ *முடிவுரை*

- ☐ ஸ்தேவான் துன்புறுத்தப்பட்டதைத் தொடர்ந்து சுவிசேஷம் வேகமாய்ப் பரவியது (அப் 11:19)
- ☐ தேவனை நோக்கிய தனது ஜெபத்தில் ஸ்தேவானைப் பவுல் *''உமது (இரத்த)சாட்சியாகிய ஸ்தேவான்''* என்றார் (அப் 22:20)
- ☐ ஸ்தேவான் தனது பெயருக்கேற்ப வாழ்ந்தான்:
ஸ்தேவான் — கிரேக்கச் சொல்: *Stephenos* = கிரீடம்.
அவன் ஒரு முத்து!
- ☐ பரலோகில் ''அமர்ந்திருந்த'' இயேசு ''எழுந்து நின்று'' ஸ்தேவானை ''வருக'' என்று வரவேற்றார் (அப் 7:56).

193

கூடவே கூடாது!

God forbid!

முகவுரை

கூடவே கூடாது! *"God forbid!"*

சுருக்கமான இவ்வாக்கியம், ஒரே அர்த்தத்தில் ஆனால் பல்வேறு வார்த்தைகளில், அடிக்கடி திருமறையில் வருகிறது.

இப்படிச் செய்ய நினைத்தும் பார்க்கக்கூடாது என்பதே பொருள்.

புதிய மொழியாக்கங்கள் —

''ஒருபோதும் கூடாது''
''அப்படிச் செய்வது எனக்குத் தூரமாயிருக்கட்டும்!''

இத்தத்துவத்தை முக்கியமாக ஏழு பகுதிகளில் நாம் அப்பியாசிக்கவேண்டும் —

1. கூடவே கூடாது —

நாம் பாவத்தில் நிலைத்திருக்க ...

ரோ 6:2 ... *பாவத்திற்கு மரித்த நாம் அதில் எப்படிப் பிழைத்திருப்போம்?*
:15 ... *கிருபை பெருகும்படிப் பாவத்தில் நிலைத்திருக்கலாமோ?*
1 கொரி 6:15 ... *கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயங்களாக்கலாமா?*
கலா 2:17 ... *கிறிஸ்து பாவத்திற்குக் காரணரா?*

2. கூடவே கூடாது —

நாம் ஜெபிப்பதை நிறுத்த ...

1 சாமு 12:23 ... *விண்ணப்பம் செய்யாதிருப்பது ... தூரமாயிருப்பதாக*

3. கூடவே கூடாது —

நாம் கனியற்றவர்களாயிருக்க ...

லூக் 20:16 ... *அப்படியாகாதிருப்பதாக ...*

4. கூடவே கூடாது —

தேவனது நீதியையும் உண்மையையும் சந்தேகிக்க ...

ரோ 3:4 ... *தேவனே சத்தியபரர் ... எவனும் பொய்யன்*
:6 ... *தேவன் உலகை நியாயந்தீர்ப்பதெப்படி?*
9:14 ... *தேவனிடம் அநீதி உண்டென்று சொல்லலாமா?*

5. கூடவே கூடாது —

நாம் தேவனது ஊழியரைத் தொட ...

1 சாமு 26:11 ... *கர்த்தர் அபிஷேகித்தவர்மீது என் கை ...*

6. கூடவே கூடாது —

சிலுவையேயன்றி எதையும் குறித்து மேன்மைபாராட்ட ...

கலா 6:14 ... வேறெதையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக.

7. கூடவே கூடாது —

நாம் பின்வாங்க ...

யோசு 22:29 ... *கர்த்தரை விட்டு விலகுவது தூரமாயிருப்பதாக*
24:16 ... *வேறே தேவர்களைச் சேவிப்பது ... தூரமாயிருப்பதாக*

■ *முடிவுரை*

இக்காரியங்களில் சமரசம்பண்ணுவது கூடவே கூடாது.
இவையெல்லாம் கிறிஸ்தவ வாழ்வின் அச்சாணிகள்.
இவற்றை அலட்சியப்படுத்துவது நமக்குத் தூரமாயிருப்பதாக!

N

194

பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி?

How to Survive these Evil Days

முகவுரை

- இவை *"பொல்லாத நாட்கள்"* —

  எபே 5:16 ... *நாட்கள் பொல்லாதவை, ஆகையால் ...*

  6:13 ... *தீங்கு நாள்*

- மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்துவின் இறுதி வார்த்தைகள் நமக்கு இன்று மிகவும் பொருத்தமானவை —

  மத் 7:24-27

மழை	...	*வெள்ளம்*	...	*காற்று*
(பெருமழை)		(பெருவெள்ளம்)		(பெருங்காற்று)

"நான் சொல்லிய இந்த வார்த்தைகள்"

அசையா *அடித்தளம்*

இப்பிரசங்கத்தின் போதனைகளை 5 தலைப்புகளில் பகுக்கலாம் —

மத்தேயு 5,6 & 7

1. ***நொறுங்கியே இருங்கள்.*** (Stay broken.)

எட்டு பாக்கிய வசனங்கள் ... மத் 5:3-10

வெளிப்பாடு: ஆவியில் எளிமை (வச 3)
துயரப்படுதல் (வச 4)
சாந்தகுணம் (வச 5)
பசி, தாகம் (தேக்கமின்மை) (வச 6)
இரக்கம் (வச 7)
இதயப் பரிசுத்தம் (வச 8)
சமாதானம்பண்ணுதல் (வச 9)
துன்புறுத்தப்படல் (வச 10)

எதிர்மறை: அகம்பாவம்
கர்வம்
மனமேட்டிமை
பிறரை அவமதித்தல்
அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை
பழி சுமத்துதல்

இயேசுவிடம் கற்றுக்கொள்ளவேண்டிய அதிமுக்கிய பாடம்:
''என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் ... சாந்தம் ... மனத்தாழ்மை''
(மத் 11:29)

அவர் இராஜாவானாலும் சாந்தமாய், தாழ்மையாய், கழுதைமீது ...
(மத் 21:4)

பாக்கிய வசனங்கள் = வளவாழ்வுக் கலை

ஆசீர்வாதம் vs. பாக்கியம் (Blessing vs. Blessedness)
அதாவது, நீங்கள் பெறுவது vs. நீங்கள் இருப்பது

2. *பரிசுத்தத்தில் வளருங்கள்.* (Grow in holiness.)

மத் 5:13 -20
:27-32

- *உப்பு & வெளிச்சம்* (வச 13-16)
நாமோ, உப்பு கரிக்கிறோம்,
கண் கூசச் செய்கிறோம்!

நாம் இருப்பதால் நம்மைச் சுற்றியுள்ள சமுதாயம்
மேம்படவேண்டும்.

இரு முக்கிய கேள்விகளைக் கேட்டுப் பார்க்கவேண்டும் —
இச்செயல் மகிபனுக்குப் பிரியமாயிருக்குமா?
இச்செயல் மக்களுக்குப் பயனளிக்குமா?

இவையிரண்டும் நிவிர்த்தியாக வேண்டும் —
இரட்டைக் கட்டளை (மத் 22:37-39)

- தேவனது நியாயப்பிரமாணம் (திருச்சட்டம்)

மத் 5:17-19
நியாயப்பிரமாணம் = தேவனது பரிசுத்தத்தின் தராதரம்

பரிசேயரின் நீதி — (வச 20)
பூரணமடைந்துவிட்டோம் என்ற எண்ணம் ஆபத்து!

பிறருடன் உங்களை ஒப்பிட்டுப் பெருமிதம் அடையாதீர் —
இயேசுவின் நாட்களிலிருந்த பரிசேயரின் குறைபாடு இதுதான்.
அவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்லமுடியாது.
தங்களைப் பெரிதாக எண்ணி மற்றவர்களை அவமதித்ததே
அவர்களது தீயகுணம் —
எ.கா.) பரிசேயன் & ஆயக்காரன் (லூக் 18:9)

இதனால்தான் இயேசுவின் கடினக்கூற்று —
''உங்களுக்குமுன் இறையரசுக்குள் வேசிகள் சென்றுவிடுவர்!''
(மத் 21:31)

பரிசேயன் ஒருவனது விருந்தின்போதுதான்
இயேசுவுக்கு ஒரு வேசி பரிமள தைலம் பூசினாள் (லூக் 7)

நித்தியத்தில் ஆச்சரியங்கள் நிறைந்திருக்கும் —
திரளான பாவிகளுக்குக் கொண்டாட்டம்
திரளான பரிசுத்தவான்களுக்குத் திண்டாட்டம்

தேவனை நெருங்க நெருங்க,
நமது அசுத்தத்தை அதிகமதிகமாய் உணருவோம் —

ஏசா 6:5 ... *கர்த்தரைக் கண்டேன் ... அசுத்த உதடுகள்*
64:1 ... *உமது பிரசன்னம்*
:6 ... *நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் ...*
எங்கள் நீதி எல்லாம் அழுக்கான கந்தை

3. *அன்பில் பெருகுங்கள்.* (Abound in love.)

சகவுறவுகளைப்பற்றி மலைப்பிரசங்கத்தில் நிறையை போதனை உண்டு —

5:21-26 ... *பகை ... கொலை ... முன்பு ஒப்புரவாகு ...*

இதன் முக்கியத்துவத்தைக் கவனிக்கத் தவறுகிறோம் —
ஆனால், யாக் 2:10-13 ... கொலை (பகை) விபசாரம் போன்றது.

பரிசுத்தத்தின் மேல் நோக்கிய பரிமாணம் போலவே
சமதளப் பரிமாணமும் முக்கியமானது.

''கண்ட சகோதரன் ... காணாத தேவன்?'' (1 யோ 4:20)

மத் 5:38-48 ... பதிலுக்குப் பதில்.
சரிசெய்கிறோமென்று புண்படுத்துதல்.
அவனுக்குக் கற்பித்தேயாகவேண்டும்!
தேவன்: *''பழிவாங்குதல் எனக்கு உரியது!''*
(சங் 94:1; ரோ 12:19; எபி 10:30)

மத் 6:14,15 ... *மன்னியுங்கள் ...* கர்த்தருடைய ஜெபத்தின் ஏழு வேண்டல்களில் விளக்கப்பட்டது இது ஒன்றுதான்.

மத் 7:1 -5 ... *பிறரை நியாயந்தீர்க்காதிருங்கள்* —
100 சதவீதம் கெட்டவரோ 100 சதவீதம் நல்லவரோ ஒருவருமில்லை!

4. ஆன்மீகப் பயிற்சிகளில் வேதப்பாணியிலிருங்கள்.

(Be Biblical in spiritual disciplines.)

மத் 6:1-4	... தானதர்மம்	... விளம்பரம் வேண்டாம்
:5-9	... ஜெபம்	... வெளிக்காட்டுதல் வேண்டாம்
:16-18	... உபவாசம்	... பிரகடனப்படுத்தல் வேண்டாம்
7:15-23	... ஊழியம்	

கனிகளில்லா வரங்கள்.
திருச்சித்தம் vs. திருப்பணி

இப்பயிற்சிகளில் திருமறைத் தத்துவங்களை அப்பியாசிக்காவிடில், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வோம்.

ஆன்மீகத் தோற்றம் இருக்கும், திருவசன அடித்தளம் இருக்காது.

சுய வஞ்சகம் புகுந்து விளையாடும்.

நல்மனது போதாது — நல்மனதுள்ளோரும் வஞ்சிக்கப்படலாம்!

5. எதிர்காலத்திற்குத் தேவனை நம்புங்கள்.

(Trust God for your future.)

மத் 6:19-21 ... *உங்கள் பொக்கிஷம் எங்கேயோ ...*
அதாவது, உங்கள் பிள்ளைகளுக்கென்று
அளவுக்கு மீறிய சேமிப்பு வேண்டாம்.
மாரிக்காலத்திற்கென்று கொஞ்சமிருந்தால் போதும்.

பொருட்கள் மீதுள்ள ஆசி, பற்று —
''**கண்களின் இச்சை**''
வச 22,23 (வசனச் சூழமைவு)

மத் 6:24-34 ... தேவன் vs. உலகப்பொருள்
(God vs. Gad = fortune, ஆதி 30:11)
இரு எஜமான்கள்

முக்கியத்துவ வரிசையைச் சீர்ப்படுத்துங்கள் ... மத் 6:33

■ *முடிவுரை*

அடிக்கடி மலைப்பிரசங்கத்தைத் தியானியுங்கள்.
இது வழிவிலகலைத் தடுத்து நம்மை நேர்ப்பாதையில் நடத்தும்.

பொல்லாத நாட்களின் ஆபத்துகளுக்குத் தப்புவது மட்டுமின்றி
மனுமகனுக்குமுன் தைரியமாய் நிற்கவும்
நம்மை ஆயத்தப்படுத்தும் (லூக் 21:36)

195

இரண்டாம் வருகையும் நடைமுறை வாழ்வும்

Second Coming & Practical Life

முகவுரை

வெளிப்படுத்தல் புத்தகத்திற்கான
வியாக்கியானங்களுக்குப் பஞ்சமில்லை.
கிறிஸ்துவின் மறுவருகையோடு சம்பந்தப்பட்டுள்ள நிகழ்வுகளின் கால வரிசையைக் குறித்துக் கிறிஸ்தவர்களுக்குள் முரண்பட்ட பல கருத்துகள் நிலவுகின்றன.

இந்த வேறுபாடுகளின்மீது வாக்குவாதம் பண்ணுகிறதைவிட, சரித்திரத்தின் அதிமுக்கியமான இந்த அடுத்த நிகழ்வுக்காய் ''ஆயத்தப்படுவோம்!''

நிகழ்வுகளின் தன்மையும் வரிசையும் (nature & order)
கடவுள் கரத்திலிருக்கின்றன (அப் 1:6-8).

கீழ்க்கண்ட 12 பகுதிகளில் நாம் ஆயத்தப்படவேண்டும் —

1. திருமறையும் இரண்டாம் வருகையும்

2 பேது 1:19 ... *வசனம் ... ஒளி ... இருள் ... விடிவெள்ளி*
எபே 5:25-27 ... *கழுவி ... மகிமையுள்ளவர்களாய் நிறுத்த ...*
கிரமமான தியானம் / முதலிடம் / ஆரோக்கிய உபதேசம் / ...

2. மனந்திரும்புதலும் இரண்டாம் வருகையும்

அப் 3:19-21 ...*மனந்திரும்புங்கள்...புத்துயிர்...இயேசுவை அனுப்ப*
17:30,31 ... *அறியாமையின் காலங்கள் ... நியாயாதிபதி*
மார்க்கப் பரம்பரை குறித்துப் பெருமையடையாதீர்;
மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள் (மத் 3:8,9)

3. பரிசுத்தமும் இரண்டாம் வருகையும்

1 யோ 3:2,3 ... *இவ்வித நம்பிக்கையுள்ளவன் சுத்திகரிக்கிறான்*
2 பேது 3:11,12 ... *நடக்கையிலெல்லாம் எவ்வளவு பரிசுத்தம்!*

அப் 24:15,16 ... *குற்றமற்ற மனச்சாட்சி ... பிரயாசப்படுகிறோம்*
தீத் 2:11-13 ... *அவபக்தியை வெறுத்து ... அனந்த நம்பிக்கை*
எபி 12:14 ... *பரிசுத்தமில்லாமல் கர்த்தரைத் தரிசிக்க இயலாது*
வெளி 22:11,12 ... *பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தம்*
1 தெச 5:23 ... *தேவன் உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக.*

அடிக்கடி தற்பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

4. ஜெபமும் இரண்டாம் வருகையும்

லூக் 21:36 ... *விழித்திருந்து ஜெபம் ... பாத்திரவான்களாய் ...*
மாற் 13:35-37 ... *காலையிலோ, மாலையிலோ ...* (திருடன்)
லூக் 18:1,8 ... ஜெபத்தில் விசுவாசம் குறைதல்
(விசுவாசம் காண்பாரோ?)

விழித்திருங்கள் = நேரமெடுத்துக் கர்த்தர்முன் காத்திருத்தல்.
அவரது சிந்தையைப் புரிந்துகொள்ளுதல்.

5. சகவுறவுகளும் இரண்டாம் வருகையும்

பிலி 4:5 ... *உங்கள் சாந்தகுணம் ... கர்த்தர் சமீபம் ...*
எபே 4:29,30 ... *கெட்ட வார்த்தை ...*
மீட்கப்படும் நாளுக்கான முத்திரை ... பரிசுத்த ஆவி
1 கொரி 4:5 ... *காலத்திற்குமுன் தீர்ப்புச்செய்யாதிருங்கள்*

6. திருச்சபை ஐக்கியமும் இரண்டாம் வருகையும்

எபி 10:25 ... *கூடிவருவதை விடாமல் ... நாளானது சமீபம்*
(ஆராதிக்க மட்டுமல்ல, ஐக்கியப்படவும் — வச 24)
வெளி 19:7 ... *ஆட்டுக்குட்டியானவரின் மனைவி ஆயத்தம்*
(அதாவது, திருச்சபை)

நிறுவனம் அல்ல, திருச்சபை —
எதுவும் கிறிஸ்துவின் திருவுடலின் நலனுக்காகவே
செய்யப்படவேண்டும்.

7. உக்கிராணத்துவமும் இரண்டாம் வருகையும்

மத் 24:45-51 ... *உண்மையும் ஞானமுமுள்ள வேலைக்காரன்*
25:21,23 ... *5 தாலந்துகள், 2 தாலந்துகள், உண்மை, உத்தமம்*

24:40-42 ... *வயல் ... சமையலறை ... எவ்வேலையாயினும்*

உத்தமம் / கடின உழைப்பு / கவனம் /
நாம் பயன்படுத்துவோர்தான், சொந்தக்காரரல்ல!

8. கிறிஸ்தவப்பணியும் இரண்டாம் வருகையும்

2 தீமோ 4:1,2 ... *அவரது பிரசன்னமாகுதல் ... வசனப் பிரசங்கம்*
எபி 12:28,29 ... *கிருபை ... பயபக்தி ... பட்சிக்கும் அக்கினி*
மத் 24:14 ... *எல்லா நாட்டினருக்கும் ... அப்பொழுது முடிவு*
அப் 1:7,8 ... *தமது ஆதீனம் ... ஆனால் ... சாட்சிகள்*
தளராமை / அவசரவுணர்வு / தியாகச் சேவை

9. தானதர்மமும் இரண்டாம் வருகையும்

மத் 25:34-40 ... *இடது ... வலது புறம் ... ஆடுகள், செம்மறி*
லூக் 14:12-14 ... *விருந்து ... எளியோர் ...*
நீதிமான்கள் உயிர்த்தெழுதல்
— *‘‘எப்படி உதவக்கூடாது?’’* எனும் எனது 5-மணிநேர ஒளித்தட்டு.
— *“Stewardship Study Bible”* (NIV)

10. பாடுகளும் இரண்டாம் வருகையும்

2 கொரி 4:16 -18 ... *புறம்பான மனிதன் அழிந்தாலும் ...*
2 தீமோ 2:11,12 ... *சகித்தால் அரசாளுவோம்*
ரோ 8:18 ... *இக்காலத்துப் பாடுகள் ... இனிவரும் மகிமை*
:23 ... *சரீர மீட்பு*
யோ 14:1 -4 ... *கலங்கவேண்டாம் ... உங்களுக்கு ஓரிடம்*

வாழ்வின் ‘‘ஏன்’’ என்ற கேள்விகளுக்கு மறுவருகையில் பதில்.

11. இறந்தோருக்கான துக்கமும் இரண்டாம் வருகையும்

1 தெச 4:13-18 ... *நம்பிக்கையற்றோர் ... தேற்றுங்கள்*

12. இறுதியான இரட்சிப்பும் இரண்டாம் வருகையும்

ரோ 13:11 ... *இரட்சிப்பு சமீபம்*
1 தெச 5:2,9 ... *இரவில் திருடன் ... கோபாக்கினை ... இரட்சிப்பு*
எபி 9:26-28 ... *இரட்சிப்பருள இரண்டாம் முறை ...*
1 பேது 1:5 ... *வல்லமை ... இரட்சிப்பு ... கடைசிக் காலம்*

கடந்தகால இரட்சிப்பு: பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை
நிகழ்கால இரட்சிப்பு: பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை
வருங்கால இரட்சிப்பு: பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* விடுதலை

■

(இவ்வத்தியாயத்தை ஆசிரியர் ஒரு கட்டுரையாய் எழுதி
‘‘உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?’’
என்ற தலைப்பில் 20-பக்கக் கைப்பிரதியாய்,
அகிலவுலகெங்கும் கிறிஸ்தவர்க்கு வினியோகிக்க,
12 மொழிகளில் வெளியிட்டுள்ளார்.
முழுச் செய்தியும் ஒலித்தட்டிலும் உண்டு.
விபரங்களுக்கு எழுதுங்கள்.)

■

திருமறையின் தீர்க்கதரிசன விளக்கங்களுக்கு —

- ☐ *Prophecy Study Bible by John C. Hagee*
  NKJV (1997)
- ☐ *Tim Lahaye Prophecy Study Bible* by Tim Lahaye
  NKJV (2001)

196

உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள்
The Blessings of Resurrection

முகவுரை

1 கொரிந்தியர் 15 — உயிர்த்தெழுதலைப் பற்றிய அத்தியாயம்.
புதிய ஏற்பாட்டில் 40 முறை உயிர்த்தெழுதல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று உயிர்த்தெழுதல்கள் —

i) முதற்பலனானவராகிய கிறிஸ்து (வச 23)

ii) கிறிஸ்துவினுடையவர்கள் (வச 23)
நமது படுக்கையிலிருந்து எழுந்திருப்பதைவிடக்
கல்லறையிலிருந்து எழுந்திருப்பதே அதிக நிச்சயம்!

iii) மரித்த அவிசுவாசிகள் (வெளி 20:12,13)

கிறிஸ்துவின் உயிர்ப்பினாலேயே இரட்சிப்பு பூரணப்படுகிறது.

இவ்வத்தியாயத்திலுள்ள **''நான்கு கடைசிக் காரியங்களோடு''**
உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன —

1) *கடைசித் தரிசனம்* / வெளிப்பாடு (வச 8)
2) *கடைசிச் சத்துரு* (வச 26)
3) *கடைசி ஆதாம்* (வச 45)
4) *கடைசி எக்காளம்* (வச 52)

1. கடைசித் தரிசனம் (வச 8) (Last Appearance)

- எனது தகுதியின்மை, ஆனால் தேவ கிருபை (வச 9,10)
- அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்திருந்தோம்;
  ஆனால் கிருபை, இரக்கத்தினால் ஆசிபெற **எழுப்பப்பட்டோம்** —
  எபே 2:4-6
  1:2,3

எ.கா.) தெருக்களில் காவலர்களால் இழுத்துச் செல்லப்பட்ட
குடிகாரனைச் சுட்டிக்காட்டி, ஜான் வெஸ்லி சொன்னது:
''தேவ கிருபை இல்லாதிருந்தால் அதுதான் ஜான் வெஸ்லி!''

2. கடைசிச் சத்துரு (வச 26) (Last Enemy)

மரணம்: விசுவாசியின் இறுதி நாள்தான் அழியாத இன்ப நாள்!
இனி மரிக்காதபடி மரிக்கிறோம்!

கிறிஸ்துவில் புது வாழ்வு நெடுகவே சத்துருவின் கீழ்க்கண்ட
தாக்குதல்களுக்கு உள்ளாகிறது —

அ) நமது சொந்த ஊனியல்பு (வச 31 ... *''தினமும் சாகிறேன்''*)
கலா 5:17 ... மாம்சம் ↔ ஆவி
ரோ 6:10-14 ... *பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.*

கிறிஸ்துவின் இறப்பு மூலம் — பாவத்தின்
தண்டனையிலிருந்து இரட்சிப்பு (1 கொரி 15:3)
கிறிஸ்துவின் உயிர்ப்பு மூலம் — பாவத்தின்
வல்லமையிலிருந்து இரட்சிப்பு (1 கொரி 15:17)

ஆ) *கெட்ட தோழமை* (வச 33), *காட்டு மிருகங்கள்* (வச 32)
அதாவது, பாழுலகின் இழுப்பு (வச 12,19)

இ) குற்றஞ்சாட்டும் தீய ஆன்மீகச் சக்திகள்
ரோ 8:31,34-37

''எல்லாச்'' சத்துருக்கள்மீதும் வெற்றி (வச 25)

3. கடைசி ஆதாம் (வச 45) (Last Adam)

கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு நம்மைக் கொண்டு செல்வதே
தேவனது முடிவான நோக்கம் —
(வச 45-49) (எபே 4:11)

இதற்கான சாதனங்கள் —

அ) எபே 4:7,8 ... *ஒவ்வொருவருக்கும் வரங்கள்*
ரோ 12:6-8 ... *கிருபா வரங்கள்*
1 கொரி 12:7-10 ... *ஆவியின் அனுக்கிரகம்* (வெளிப்பாடு)

ஆ) திருச்சபையில் ஊழிய வரங்கள்
எபே 4:11-13

4. கடைசி எக்காளம் (வச 52) (Last Trumpet)

- உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கிருந்த அதேவித மகிமையின் உடல் நமக்குக் கொடுக்கப்படும்!
  (வச 50-53)

  வாழ்வை நாம் கவனித்துக்கொண்டால்
  மாள்வை அவர் பார்த்துக்கொள்வார்!
  2 கொரி 3:17,18 ... *மகிமையின்மேல் மகிமை!*

- அங்கும் நாம் ஒருவரையொருவர் அடையாளம் காணலாம் —
  எ.கா.) செல்வந்தனும் லாசருவும்
  (அங்கு லாசரு பரிதாபப்படமாட்டான்)

  எ.கா.) அந்த மனைவியும் 7 சகோதரர்களும்
  (மத் 22:23-30)

  எ.கா.) தேவதூதரையும் அடையாளம் காணலாம்!
  (மிகாவேல், காபிரியேல், ...)

■ ***முடிவுரை***

1. கடைசித் தரிசனம்	— நீதிமானாக்கப்படுதல்		
2. கடைசிச் சத்துரு	— பரிசுத்தமாக்கப்படுதல்		
3. கடைசி ஆதாம்	— வளர்ச்சியடைதல்		ரோ 8:28-30
4. கடைசி எக்காளம்	— மகிமைப்படுதல்		

இதுதான் பூரண சுவிசேஷம்!

எனவே ... (வச 58)

''உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் ... கர்த்தரது பணியில் பெருகுங்கள்!''

197

இரண்டாம் வருகையின் ஆசிகள்

The Blessings of Second Coming

முகவுரை

- கிறிஸ்தவ விசுவாசிகள் சாதகவாதிகள் (Optimists):
  - ☐ சிறுவனொருவன் வெளிப்படுத்தல் புத்தகத்திற்குத் தந்த சுருக்கம் — ''இயேசு ஜெயிக்கிறார்!''
  - ☐ உலகத்தார் போலல்லாது நாம் நம்பிக்கை கொண்டவர்கள் — எ.கா.) இறந்தோருக்காய்ப் புலம்பல் (1 தெச 4:13)
  - ☐ அகிரிப்பா மன்னன் முன்னர் பவுல்: ''*வாக்குத்தத்தத்தின்* ***நம்பிக்கைக்காய்*** *இங்கு நிற்கிறேன்*'' (அப் 26:6)
  - ☐ திருமறை தரும் உறுதிப்பாடு: *''நம்பிக்கை நம்மை ஏமாற்றாது''* (ரோ 5:5)

- அதிவுன்னத எதிர்பார்ப்பு —
  ப.ஏ. பரிசுத்தவான்களுக்கு: கிறிஸ்துவின் முதல் வருகை
  பு.ஏ. பரிசுத்தவான்களுக்கு: கிறிஸ்துவின் மறு வருகை
  எ.கா.) வாழ்த்துச் சொல் — *''மாரநாதா!''* (1 கொரி 16:22)

  புதிய ஏற்பாட்டின் இறுதி வாக்கு —
  ''மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்'' (வெளி 22:20)
  ''மெய்யாகவே'' — நிச்சயம் (Certainty)
  ''சீக்கிரமாய்'' — காலம் (Imminency)

இரண்டாம் வருகையில் நாம் என்ன எதிர்பார்க்கலாம்?

1. தூயோர் பூரணப்படுதல் (Perfection of Saints)

- சிலுவையில் கிறிஸ்து நமது பாவங்களைச் சுமந்துவிட்டார் — ஆனாலும் இன்னும் நம்மில் பாவமிருக்கிறது —
  ''நமக்குப் பாவம் இல்லையென்போமானால்'' (1 யோ 1:8)
  தமது குமாரனைப்போல் நம்மை மாற்றுவதே பிதாவின் உன்னத நோக்கம்— *''பூரணம்''* (ரோ 8:28,29; எபே 4:11)

''பூரணப்படுதலே'' நம்மைக் குறித்த இறைச்சித்தம்.

3 படிகள் — 1) குறிப்பட்ட வேளையில் நடப்பது (crisis)
2) நெடுகவே நடந்துகொண்டிருப்பது (process)
3) குறிப்பிட்ட வேளையில் நடப்பது (crisis)

படி — 1 — ''நீதிமானாக்கப்படுதல்'' (Justification) —
''பாவமே செய்யதவர்கள் போல''
''பஞ்சையும் பனியையும் போல் வெண்மை'' (ஏசா 1:18)

இது நிலையின்படியான பரிசுத்தம் (positional sanctification) —
அதாவது, தேவனுக்குமுன் நமது ''நிலை'' (standing).
கந்தைக்குப் பதிலாகப் பட்டு (ஏசா 64:6; 61:10)

படி — 2 — ''நடைமுறையான'' சுத்திகரிப்பு (practical sanctification)
பரிசுத்தவான்கள் பரிசுத்தமாய் நடக்கவேண்டும் (எபே 5:3,4)
பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தம் (வெளி 22:11)

இது பரிசுத்தத்தில் ''வளருவதாம்'' —
எ.கா.) உதய சூரியன் ... நடுப்பகல் வெயில் (நீதி 4:18)
அதாவது, தேவனுக்குமுன் நமது ''நடை'' (state)

படி — 3 — முடிவான சுத்திகரிப்பு — ''மகிமைப்படுதல்''
நீதியின் சூரியன் உச்சி வானில்! (Glorification)

எ.கா.) 1 தெச 5
வச 22 — *''தீயதாய்த் தோன்றுவதையே விட்டுவிலகுங்கள்''*
வச 23 — கர்த்தரது வருகையில் *''தேவன் உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவார்''*
வச 24 — *அழைத்தவர் உண்மையுள்ளவர், அப்படியே செய்வார்!*

அவர் உங்களில் துவங்கிய நற்செயல் முற்றுப்பெறும் (பிலி 1:5)
எபி 9:28 ... இரட்சிப்பு நிறைவடைகிறது.

முக்காலங்களில் பெறும் அனுபவம் —

கடந்த காலம் : பாவத்தின் ''தண்டனையிலிருந்து'' விடுதலை
நிகழ் காலம் : பாவத்தின் ''வல்லமையிலிருந்து'' விடுதலை
எதிர் காலம் : பாவத்தின் ''பிரசன்னத்திலிருந்தே'' விடுதலை

எத்தனையோ சக்திகள் நமக்கெதிராய்ச் செயல்படலாம் —
ஆனால், தேவன் நமது பக்கமிருந்தால்,

நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?
நமக்கு **விரோதமாய்** இருப்பவன் யார்?
நமக்கு விரோதமாய் **இருப்பவன்** யார்?
நமக்கு விரோதமாய் இருப்பவன் **யார்?** (ரோ 8:31)

''எவர்களை முன்னறிந்தாரோ'' ... (ரோ 8:29-31)
''இந்த நன்மைக்கென்றே சகலமும்'' ... (வச 28)

''இப்பொழுது தேவப் பிள்ளைகள் ... அவரைக் காண்கையில்'' (1 யோ 3:2)

''கறை திறையற்று ... நம்மை நிறுத்துவார்'' (எபே 5:26,27)

''முதலில் விசுவாசித்ததைவிட இப்பொழுது இரட்சிப்பு சமீபம்'' (ரோ 13:11)

இதை அப்படியே நம்புங்கள்!

2. நமது உடல் மீட்கப்படுதல் (Redemption of our bodies)

சிலுவையில் கிறிஸ்து நமது நோய்களையும் சுமந்தார்.
அவரது தழும்புகளால் குணமாகிறோம் (ஏசா 53:5; 1 பேது 2:24)
அப்படியானால் நமக்கு இன்னும் வியாதிகள் இருப்பதேன்?

பவுல்தான் இதற்குத் திருப்திகரமான விடை தந்துள்ளார் —
ரோ 8:22,23 ... *இன்னும் தவிக்கிறோம் ...*
இப்பொழுது *முதற்பலன்கள்* மட்டுமே

நமது உடல் மண்ணுக்கடுத்தது ... *சாவுக்கேற்றது* (1 கொரி 15:44-48)
வாழ்வு = பிறப்பிலிருந்து இறப்பு நோக்கிப் பயணம்!

மறுவருகையில்தான் நமக்கு மகிமையின் உடல் —
மறுரூபமாக்கப்படுவோம் ... சாவாமை (1 கொரி 15:51-53)

2 கொரி 5:1-5 ... *பூமிக்குரிய கூடாரம் ... ஆவியெனும் அச்சாரம்*
(கர்த்தரிடம் குடியிராதிருக்கிறோம் — வச 6-8)

வெளி 21:4 - *மரணம், வியாதி, அங்கவீனம் ... இல்லை*

இன்று ... *''உடலில்''* பவுலுக்கு முள் இருக்கும்.
வயிற்றில் தீமோத்தேயுவுக்குப் பலவீனம் இருக்கும்.
எப்பாப்பிரோதீத்து மரணத்திற்குச் சமீபமாகலாம் —
லாசரு மறுபடியும் மரிப்பான்! [பிலி 2:25-30

ஆவியானவர் சாவுக்கேதுவான உடல்களை ''உயிர்ப்பிக்கிறவர்''
(ரோ 8:11)

குணமாக்கும் வரங்கள் — அற்புதம்
குணமாக்கும் மருத்துவம் — அறிவியல்
எ.கா.) மன்னன் எசேக்கியா (2 இரா 20:5-7)

3. அகிலவுலகு நற்செய்திமயமாதல் (Evangelisation of the world)

''ஒலிவ மலை ... உமது வருகைக்கும் உலக முடிவுக்கும் அடையாளம் என்ன?''

மத் 24:3,14 ... *''எல்லா நாட்டினருக்கும் சுவிசேஷம்''*

பெந்தெகொஸ்தே அருள்மாரி —

''கடைசி நாட்களில் ... அந்த நாளுக்குமுன், வானில் அற்புத அடையாளங்கள்... கர்த்தரைத் தொழும் எவனும்'' ...
(அப் 2:17-21)

எப்போதையும்விடப் பிசாசின் சீற்றம் அதிகம் (வெளி 12:12)
— மிஷனரிகள் துன்புறுத்தப்படல் கூடியிருக்கிறது (மத் 24:9,10)
''... பகைக்கப்படுவீர் ... கொல்லப்படுவீர் ...''

ஆனால் சிமிர்னா, பிலதெல்பியா சபைகளுக்குச் செய்தி —
''பயப்படாதே ... திறந்த வாசல் ... சீக்கிரம் வருகிறேன்''
(வெளி 2:10; 3:8,11)

சரித்திரம் காணா சபை வளர்ச்சி —

- ☐ பீஹார் ... அன்று மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம்;
  இன்று மிஷன்களின் திராட்சைத் தோட்டம்.
- ☐ உலகில் தினமும் 75,000 பேர் சபையில் சேர்ப்பு
- ☐ சீனாவில் தினமும் 30,000 பேர் சபையில் சேர்ப்பு.
- ☐ ஆப்பிரிக்காவில் — 1900 — 3% கிறிஸ்தவர்
  2000 — 45% கிறிஸ்தவர்
- ☐ கி.பி. 100 — கிறிஸ்தவர் vs. மற்றவர் ... 1:360
  கி.பி. 2000 — கிறிஸ்தவர் vs. மற்றவர் ... 1:6

மாலை 5 மணிக்குக்கூடக் கிறிஸ்து பணியமர்த்துகிறார் (மத் 20:6)

பெந்தெகொஸ்தேயை *''முன்மாரி''* எனலாம் —
இரண்டாம் வருகைக்கு முன்னர் *''பின்மாரி!''*

இது முடியுமாவென்று நற்செய்திப்பணியில் நின்றுவிடாதீர் —
எ.கா.) தீமோத்தேயு: திகில், திகைப்பு, திடமின்மை!

இவனுக்குப் பேராணையைப் பவுல் நினைப்பூட்டியபோதெல்லாம், இரண்டாம் வருகையைக் குறிப்பிட்டார் —

1 தீமோ 6:12-15; 2 தீமோ 4:1,2 ... *''இராஜ்யம்''*

கடந்தகால மகிமை குறித்து நாடுகள் பெருமிதமடைகின்றன;
எதிர்கால மகிமை குறித்துத் திருச்சபை பெருமிதமடையும்.

தண்ணீரால் கடல் நிறைந்திருப்பதுபோல்
கர்த்தரை அறிகிற அறிவினால் பூவுலகு நிறைந்திருக்கும்! (ஆப 2:14)

முழங்கால்கள் யாவும் ... நாவுகள் யாவும் (பிலி 2:10,11)

உலகின் முடிவெல்லைவரை செல்லுங்கள் ...
யுகம் முடியும்வரை உங்களோடிருப்பேன்! (மத் 28:19,20)

4. தீயது வேரறுக்கப்படுதல் (Eradication of evil)

— பதரை எரிப்பவராய் இயேசுவை யோவான் அறிமுகப்படுத்தினான்
மத் 3:12

— இயேசு நல்லதை விரும்பி தீயதை வெறுத்தார்
எபி 1:9

ஆனாலும், அவர் தீயதை வேரறுக்கவில்லை —
எ.கா.) இப்பொழுதும் சாத்தான்: *''இவ்வுலகின் அதிபதி''*
யோ 12:31; 14:30; 16:11

சிலுவை மரணத்திற்குப் பின்னரும் —
''உலகம் பொல்லாங்கனுக்குள்'' (1 யோ 5:19)

இரண்டாம் வருகையே தீமைக்குச் சாவுமணி —

2 தெச 2:8 ... *தமது சுவாசத்தால் அந்திக்கிறிஸ்து நாசம்*
1:7-9 ... *தீப்பிழம்பு ...*
கீழ்ப்படியாதோருக்குத் தண்டனை

சங் 2:12 ... *அவரது கோபம் பற்றியெரியும் ... முத்தமிடுங்கள்!*

வெளி 20:1-3 ... சாத்தான் 1000 ஆண்டு கட்டப்படுவான்.
முடிவில், *அக்கினிக் கடல்* (20:10)

இன்று அவனைக் கட்டவோ, எரிக்கவோ முயலாதீர்!

புதிய வானம், புதிய பூமியில் அவன் இருக்கமாட்டான்!
ஏதேனில்கூட இருந்தான்!

பாபிலோன் விழும் — வெளி 18:2

புதிய வானம் புதிய பூமியில் பாவம் இராது —
எ.கா.) பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படும்போது
பெருமையோ பொறாமையோ வராது!

இன்றையப் பூவுலகு அழியும் ... *புதிய வானம் புதிய பூமி வரும் ...*
அங்குதான் ''நீதி'' வாசமாயிருக்கும் (2 பேது 3:12)

5. பரலோகில் கொண்டாட்டம் (Celebration in Heaven)

கொண்டாட ஓர் அழைப்பு —
வெளி 19:6,7 ... *சர்வ வல்ல கர்த்தர் அரசாளுகிறார் ...*
ஆட்டுக்குட்டியானவரின் மணவிருந்து

இது பழைய ஏற்பாட்டிலேயே எதிர்பார்க்கப்பட்டது —
ஏசா 25:6-9 ... *மாலையில் விருந்து ...*
மரணத்தை என்றென்றுமாய் விழுங்குவார்
இவரே நம் தேவன் ... ***காத்திருந்தோம்!***

இன்று ஆன்மீக ரீதியில் ... தேவன் நம்மோடு.
நாளை எழுத்தின்படி ... நாம் தேவனோடு.

''கண் காணவில்லை, காது கேட்டதில்லை ...
நமக்கோ ஆவியானவரது வெளிப்பாடு'' (1 கொரி 2:9,10)

இன்றைய வெளிப்பாடு ஒரு பகுதிதான்
எ.கா.) சேபா ராணி: *''பாதிகூடச் சொல்லப்படவில்லை!''*

வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய்ச் செய்ய
வல்லவருக்கு சதாகாலமும் மகிமையுண்டாவதாக!
(எபே 3:20,21)

இறுதி வாக்கை அடுத்து இறுதி ஜெபம் —
''கர்த்தராகிய இயேசுவே, வாரும்!'' (வெளி 22:20)

198

இறப்பின் இலாபங்கள்

Gains of Death

முகவுரை

- அடிக்கடி சொல்லப்படும் திருவசனம் —
  பிலி 1:21 ... *''கிறிஸ்து எனக்கு வாழ்வு;*
  இறப்பு எனக்கு இலாபம்!''
  (வச 21-24ஐ வாசியுங்கள்)
  இறப்பை ஏன் ''இலாபம்'' என்கிறோம்?

இறப்பை உலகம்போல் திருமறை பார்ப்பதில்லை.
உணர்வுகள் ஒன்றுதான் — ''கண்ணீர், கவலை''
ஆனால் ஒரு வேறுபாடு: 1 தெச 4:13 ... *''நம்பிக்கை''*

இறப்பின் இலாபங்கள்/மரணத்தின் மகிமை —

1. விடுதலை (Release)

அ) பாவத்திலிருந்து (ரோ 6:7) — Sin
பாவத்தின் *தண்டனையிலும் வல்லமையிலுமிருந்து* மட்டுமல்ல,
பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* விடுதலை!

ஆ) வலி, வேதனையிலிருந்து (ரோ 8:22 ,23) — Pain
எவருமே ஆன்மாவிலோ உடலிலோ 100% சுகமுள்ளவரல்ல.
மகிமையின் நாடு ... *வேதனை, கவலை, மரணம் ... இல்லை.*
(வெளி 21:1-4)

இ) களைப்பிலிருந்து (வெளி 14:13) — Strain
நிலம் சபிக்கப்பட்டதால் *வியர்வை* (ஆதி 3:17-19).
அமர்ந்து இளைப்பாறுதல் (Rest In Peace! RIP)
(சங் 16:9; ஏசா 57:2)

2. மறுபடி இணைப்பு (Reunion)

அ) நமக்கு நெருக்கமானவர்களோடு
— பரலோகிலிருந்த லாசருவை நரலோகிலிருந்தே
செல்வந்தன் அடையாளம் காண முடிந்தது (லூக் 16:23)
— தாவீது: *பிள்ளை என்னிடம் வராது ...* (2 சாமு 12:23)

1 தெச 4:17 ... *''அவர்களோடு''*
நடுவானில் கர்த்தரைச் சந்திப்போம்!

ஆ) நம் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களோடு

லூக் 16:9 ... *நித்தியமான வீடுகளில் ஏற்றுக்கொள்வார் ...*
''பரலோகில் பொக்கிஷம்'' (மத் 6:19-21; லூக் 18:22)
— நமது முதலீட்டினால் விண்ணில் கனிகள்

இ) பழம்பரிசுத்தரோடு (வேதாகம ஆடவர், பெண்டிர்)

—பரலோகில் ஆபிரகாமை அடையாளங்காண முடிந்தது (லூக் 16:23)

மறுரூப மலையில் மோசேயும், எலியாவும் (மத் 17:3,4)

— ஓட்ட முடிவில் நம்மைக் கைதட்டி வரவேற்க நிற்கும் மேகம் போன்ற சாட்சிகள் (எபி 12:1)

— எபி 12:22-24 ... *சீயோன் மலையினிடத்திற்கு, முதற்பேறானவர் சங்கத்திற்கு வந்து சேர்ந்தீர்கள்*

3 பலாபலன்கள் / பரிசுகள் (Rewards)

கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் ''பாக்கியவான்கள்'' (வெளி 14:13)

அ) இயேசு போலவே உடல் உயிர்த்தெழுதல்

1 தெச 4:14 — *இயேசுவானவர் மரித்தோரிலிருந்து எழுந்ததுபோல்*
1 கொரி 15:14-20 — *விசுவாசம் ... பிரசங்கம் ... வீண்*

முகப்பரு போன்ற சிறிய குறைபாடுகூட இல்லாது
நாசரேத்தின் 33 வயது தச்சன்போல் அழகு!

ஆ) செயல்களுக்குப் பரிசுகள்

தானி 12:2,3 ... ஆத்துமாதாய நட்சத்திரங்கள்
கிரீடங்கள் — முடிசூட்டப்படும் நாள்!
முழுநேர ஊழியருக்கு மட்டுமல்ல,
உண்மையாயிருந்த அனைவருக்கும் (2 தீமோ 4:8)

இ) உயிரோடிருப்போருக்கு ஊழியம்

எபி 11:4 ... *ஆபேல் மரித்தும் பேசுகிறான்*
(அவன் பிரசங்கியாராயில்லாவிடினும்!)

பிர 7:2,3 ... *உயிரோடிருப்பவன் சிந்திப்பான் ...*
இருதயம் சீர்ப்படும்!

உயிரோடிருப்பவன் எதைக் கற்பான்?

— வாழ்வு குறுகியது!
— சாவு நிச்சயம்!
— எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கணும்!

■ *முடிவுரை*

நாம் இப்பொழுது செய்யவேண்டியது —

அ) இன்றுதான் இவ்வுலகில் உங்களது கடைசி நாளென்று நினைத்து வாழுங்கள்!
நாமெல்லாரும் கிருபையின் 4ஆம் ஆண்டிலிருக்கிறோம்! (லூக் 13:7-9)

ஆ) முடிந்த அளவு கொடுத்துவிடுங்கள் —
கொடுத்துவிட்டதைத்தான் பிடித்துக்கொண்டு
மரித்தோர் கல்லறை செல்கின்றனர்.

ஜிம் எலியட்: ''இழக்க முடியாததைப் பெற்றுக்கொள்வதற்காக, வைத்துக்கொள்ள முடியாததை விட்டுவிடுகிறவன் முட்டாளல்ல!''
எளிய வாழ்க்கைமுறை மேற்கொள்ளுங்கள் —

1 தீமோ 6:6-8 ... *கொடுப்பதில் செல்வந்தர் ...*
நித்தியத்திற்கு அடித்தளம்

இ) இறந்துகொண்டிருப்போருக்கு இறந்துகொண்டிருப்பவன்போல் பிரசங்கியுங்கள்!

அவசரவுணர்வு பிடிக்கட்டும்.
ஒத்திப்போடுதல் வேண்டாம்.
நாளை நமதல்லவே.

வாழ்வு ஒன்றே;
மறையும் சீக்கிரமே;
கிறிஸ்துவுக்காய்ச் செய்ததே
நிலைக்கும் என்றுமே! — C.T. ஸ்டட்

வாழ்வுக்கு ஆண்டுகளைக் கூட்ட முயல்வர் அவிசுவாசிகள்;
நாமோ நமது ஆண்டுகளுக்கு வாழ்வைக் கூட்ட முயலுவோம்!

199

பரலோகமே, பரவசமே!

Joy in Heaven

முகவுரை

இவ்வுலகில்
நம்மை மகிழ்விக்கும் காரியங்களைவிட
மனமடிவாக்கும் காரியங்களே அதிகம்.

இது மனிதனின் வீழ்ச்சியின் விளைவு —
கீழ்க்கண்டவற்றின்மீது தேவனது சாபம் வந்தது —

அ) சர்ப்பம் — உயிரினங்கள்
ஆ) ஆணும் பெண்ணும் — மனுக்குலம்
இ) நிலம் — புவியியல் உலகு
(ஆதி 3:14-18)

தேவனது சாபத்தின் முடிவான கூற்று —
''வியர்வை ... மண்'' (ஆதி 3:19)

ஆனால், கிறிஸ்து நம்மை மன்னித்து, மீட்டுவிட்டதால், மகிழ்ந்து களிகூரவேண்டுமென்று திரும்பத் திரும்ப அழைக்கப்படுகிறோம் —

''மகிழ்ந்திருப்பது'' ஒரு நிலையாகும் (state);
''களிகூருவது'' ஒரு செயலாகும் (act).

அதாவது, களிகூர்ந்திருக்க நாமே நம்மை உந்தவேண்டும்.

''மகிழ்ந்து ... களிகூருங்கள்'' —
இவ்விதம் இரண்டும் சேர்ந்து திருமறையில் வருவது பலமுறை!

சங் 9:2	உன் 1:4
31:7	ஏசா 25:9
32:11	65:18
40:16	66:10
68:3	யோவேல் 2:21,23
70:4	செப் 3:14
90:14	மத் 5:12
118:24	வெளி 19:7

நம்மைப் பொருத்தவரை நெடுகவே இவ்விதம் முயலவேண்டும் —

2 கொரி 6:10 ... *''துக்கம் ... ஆனால் ...* ***எப்பொழுதும்*** *சந்தோஷம்''*
(பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும்;
ஆனாலும் களிகூருங்கள்!)

பிலி 4:4 ... ***எப்பொழுதும்*** *சந்தோஷமாயிருங்கள்*

1 தெச 5:16 ... ***எப்பொழுதும்*** *சந்தோஷமாயிருங்கள்*

இது தானாகவே வந்துவிடுமானால்,
இதற்கான கட்டளை தேவையிருந்திருக்காதே!

எல்லாப் பிரச்னைகள் நடுவிலும் மகிழ்ந்திருக்க ஊக்குவிப்பது *''இப்பாடுகள் கொஞ்சக்காலம்தான்''* எனும் எண்ணமே (2 கொரி 4:17)

- சங்கீதக்காரன் தாவீதின் அறிவு —
  சங் 30:4,5,9,10 ... *அவர் கோபம் ஒரு நிமிடமே*
- தீர்க்கன் ஏசாயாவின் விளக்கம் —
  ஏசா 54:7,8 ... *அற்ப காலக் கோபம் ... இமைப்பொழுது*
- அப்போஸ்தலன் பேதுருவின் எதிர்பார்ப்பு —
  1 பேது 1:5-10 ... *கடைசிக்காலம் ... கொஞ்சக்காலம் ...*

நம்மைப் பெரிதும் துக்கப்படுத்துபவை மூன்று —
1. பாவம் (Sin), 2. வியாதி (Sickness), 3. கவலை (Sorrow)

இவை மூன்றையும் குறித்துப் பரலோகம் எதை வாக்குப்பண்ணுகிறதெனப் பார்ப்போம் —

1. பாவம் (Sin)

கிறிஸ்துவின் முதல் வருகையில் வாக்களிக்கப்பட்ட பிரதான ஆசீர்வாதம் பாவத்திலிருந்து இரட்சிப்பே —

யோசேப்பிடம் தூதன்:
''இயேசு ... பாவங்களை நீக்கி இரட்சிப்பார்'' (மத் 1:21)

நமது பாவங்களை இயேசு சுமந்தார் — *''எல்லாப் பாவங்களையும்''*

- இறந்துவிட்டோரின் பாவங்கள்.
  உயிரோடிருப்போரின் பாவங்கள்.
  பிறக்கப்போவோரின் பாவங்கள்.

- நேற்று செய்யப்பட்ட பாவங்கள்.
  இன்று செய்யப்படும் பாவங்கள்.
  நாளை செய்யப்படக்கூடிய பாவங்கள்.

எனவேதான் திருமுழுக்கினன் யோவான் கூறியது —
''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி!'' (யோ 1:29)

சிலுவையில் கிறிஸ்து மீட்பின் வேலையை ''முடித்து'' நமது இரட்சிப்பிற்குத் தேவையானதையெல்லாம் செய்துவிட்டார். நாம் **இப்போது** அதின் முதற்கனிகளை மட்டும் அனுபவிக்கிறோம் —

இரட்சிப்பு:
(அ) கடந்த காலம்: பாவத்தின் தண்டனையிலிருந்து (penalty) விடுதலை (ரோ 6:23)
அதாவது, *மரணம்* = தேவனிடமிருந்து பிரிக்கப்படல்
(ஆ) நிகழ்காலம்: பாவத்தின் ''வல்லமையிலிருந்து'' (power) (அடிமைத்தனம்) விடுதலை (ரோ 6:14,22)
(இ) எதிர்காலம்: பாவத்தின் ''பிரசன்னத்திலிருந்தே'' (presence) விடுதலை (வெளி 20:10)

ஏதேன் தோட்டத்தில் நுழைந்ததுபோல புதிய வானம் புதிய பூமிக்குள் பிசாசு நுழையமுடியாது(வெளி 21:27).
சோதனையே இல்லாத இடத்தைக் கற்பனை செய்யுங்களேன்!

இரட்சிப்பு:
(அ) நீதிமானாக்கப்படுதல் — ''பாவமே செய்யாததுபோல்''
(ஆ) பரிசுத்தமாக்கப்படுதல் — ''பாவத்திலிருந்து நம்மைக் கழுவி, பாவம் செய்யாதவாறு பலப்படுத்துதல்''
(இ) மகிமைப்படுதல் — ''பாவம் செய்ய முடியாத மறுரூபம்''

(அ) நீதிமானாக்கப்படுதல் — கிறிஸ்துவின் முதல் வருகை (சிலுவை) ... *''தீர்க்கதரிசியாய்''* வந்தார்.
(ஆ) பரிசுத்தமாக்கப்படுதல் — ஆவியானவரின் வருகை ... *''ஆசாரியராய்''* இயேசு திரும்பியபோது
(இ) மகிமைப்படுதல் — கிறிஸ்துவின் மறுவருகை ... *''இராஜாவாய்''* வரும்போது.

இது தொடர்ச்சியான அனுபவம் —
இரட்சிக்கப்பட்டோம் — குறிப்பிட்ட வேளையில் நடந்தது.
இரட்சிக்கப்படுகிறோம் — நெடுகவே நடப்பது.
இரட்சிக்கப்படுவோம் — குறிப்பிட்ட வேளையில் நடக்கவிருப்பது.

எ.கா.) *ஜீவத் தண்ணீர் — ஜீவ நதிகள் — ஜீவ விருட்சம்*
(யோ 4:13,14) (யோ 7:37,38) (வெளி 2:7; 22:1,2)

தேவன் *''மிகுந்த மகிழ்ச்சியோடு''* கிறிஸ்துவின் மறுவருகையில் நம்மைக் *''குற்றமற்றவர்களாய்''* நிறுத்துவார் (யூதா 24)

அதாவது, பரமனே பரவசமடைவார்!
மணமகள் ஆயத்தம்! மகிழுங்கள்! (வெளி 19:7,8)

2. *வியாதி* (Sickness)

ஒவ்வொரு வியாதியும் பாவத்தின் நேரடி விளைவு என்றில்லா விடினும், பாவத்திற்குப் பிறகுதான் உலகில் வியாதி நுழைந்தது.

எனவே , பொதுவாக, வியாதியைப் பாவத்தின் விளைவு எனலாம். எனவேதான் பல சமயங்களில் வியாதியைச் சுகமாக்குமுன் ஆண்டவர் பாவத்தை மன்னித்தார் —

எ.கா.) மத் 9:2,6 (திமிர்வாதக்காரன்)

இதற்கு விதிவிலக்குகளும் உண்டு —
யோ 9:1-3 *(யார் செய்த பாவம்?)*

எனவே, உலகில் பாவம் இருக்கும்வரை
வியாதியில்லா வாழ்வு சாத்தியமே கிடையாது.

நமது வியாதிகளைச் சிலுவையில் கிறிஸ்து சுமக்கவில்லையா?
சுமந்தார் — மத் 8:16,17

ஆத்தும இரட்சிப்பு எவ்விதம் கிறிஸ்துவின் மறுவருகையில்தான் பூரணமடையுமோ, அப்படியே, அவரது வருகையிலேயே வியாதியானது முற்றிலும் ஒழிக்கப்படும் —

அதுதான் *''சரீர மீட்பு''* என்பது (ரோ 8:22,23)

இன்று, ''முதற்கனிகள்'' மட்டுமே;
நாளைக்குத்தான், ''முற்றுமுள்ள கனிகள்'' — 12 கனிகள்
வெளி 22:2,3 ... *''இனிச் சாபமில்லை! வேதனையில்லை!''* (21:4)

3. கவலை / துக்கம் (Sorrow)

தவறான தெரிந்தெடுப்புகள், தேவபக்தியற்ற செயல்பாடுகள், ஏமாற்றங்கள் போன்றவை நிறைந்துள்ள பொல்லாத உலகமே கவலைக்குக் காரணம்.

நமது *பாவங்கள், வியாதிகள்* மட்டுமல்ல,
நமது *துக்கங்களையும்* இயேசு சுமந்தார் —

ஏசா 53:4 ... *''பாடுகள் ... துக்கங்கள் ... சுமந்தார்''*
:3 ... *''துக்கம் நிறைந்தவர்''*
''பாடு அனுபவித்தவர்'' = நமது துக்கங்களில் நம்மோடு அடையாளப்படுத்திக்கொள்பவர்

ஆம், கிறிஸ்தவ வாழ்வு என்பது சஞ்சலங்கள், பிரச்னைகள், துக்கங்கள் இல்லாத வாழ்வு அல்ல; இவற்றை மேற்கொள்ள நம்மோடு கிறிஸ்து இருக்கும் வாழ்வு அது —

ரோ 8:35-39 ... *முற்றிலும் ஜெயங்கொள்ளுவோர்*

நாம் மனிதர்தானே?
எனவே, பாடுகளும் பிரச்னைகளும் நமக்கு உடனே உண்டாக்குவது பயமும் துக்கமும்தான். ஆனால் நமக்கு ஒரு *''நம்பிக்கை''* உண்டு.

பாடுங்கள்:

பரலோகமே என் சொந்தமே, என்று காண்பேனோ?
என் இன்ப இயேசுவை நான் என்று காண்பேனோ?
வருத்தம், பசி தாகம், மனத்துயரம் அங்கே இல்லை;
விண்கிரீடம் வாஞ்சிப்பேன், விண்ணவர் பாதம் சேர்வேன்!

எனவே, மற்றவர்களைப்போல் நாம் துக்கிக்கக்கூடாது —
எ.கா.) 1 தெச 4:13,14,18

தசையும் இரத்தமும் கொண்டவராய் வந்த இயேசுவே துக்கங்களைக் கையாளுவதில் தலைசிறந்த மாதிரி —

எபி 12:1-3 ... *''தமக்கு முன்னிருந்த மகிழ்ச்சி''*

வாழ்வில் மட்டுமல்ல, **ஊழியத்திலும்** பிரச்னைகள் —

இதற்குப் பவுல் சிறந்ததோர் எடுத்துக்காட்டு —
அப் 20:22-24 ... *கட்டுகள் ... உபத்திரவங்கள் ...*

திருப்பணியில் நெடுகவே உண்மையாயிருந்தால்,
முடிவில் *''எஜமானது சந்தோஷத்தில் நுழைவோம்''* (மத் 25:21,23)

மக்களால் துன்புறுத்தப்படும் வேளையை மட்டுமே
குறித்து *''ஆடிப்பாடிக் களிகூருங்கள்''* (KJV) என்றார் இயேசு —
லூக் 6:22,23 ... *பகைத்து ... நிந்தித்து ...*

நமது விசுவாசத்தின் காரணமாக நமது சொத்துக்கள், உடைமைகள், சட்டத்திற்கு விரோதமாய் நம்மிடமிருந்து பிடுங்கப்படும் காலங்கள் வருகின்றன (எபி 10:34)

கிறிஸ்தவத்திற்கெதிரான தீவிரவாத சக்திகள் நிறைந்த நாடுகளில் இது ஏற்கனவே நடக்கிறது.

இதை *''வேதனைகளுக்கு ஆரம்பம்''* என்றழைக்கிறார் இயேசு —
மத் 24:8
அதாவது, இனிதான் இன்னும் கொடூரம்!

மலைப்பிரசங்கத்திலேயே இயேசு இதைச் சொல்லிவிட்டார் —

எட்டு பாக்கிய வசனங்களில் பல
பரலோக வாழ்வைச் சுட்டிக்காட்டுகின்றன (மத் 5:3-10)

- *ஆவியில் எளிமை ... **பரலோக** இராஜ்யம்*
- *இதயத்தில் சுத்தம் ...* தேவனைத் ***தரிசிப்பர்***
- *நீதிக்காய்த் துன்புறல் ... **பரலோக** இராஜ்யம்*

அழுகிறவர்கள் ஆறுதலடைவர் (வச 4)
''கண்ணீர்'' யாவையும் துடைப்பார் (வெளி 21:4)

— பாவத்திலிருந்து மனந்திரும்புதல் கண்ணீர் கிடையாது.
— வியாதியினால் வேதனையின் கண்ணீர் கிடையாது.
— துக்கத்தினால் கண்ணீர் கிடையாது.

இப்பரலோகப் பரவச வாழ்வு ஆயிரமாண்டு ஆளுகையில் துவக்கம்
(ஏசா 35:1-10)

200

தேவாட்டுக்குட்டியானவரின் கலியாணம்

The Marriage of the Lamb of God

முகவுரை

- திருமணங்கள் நிறைந்த புத்தகம் திருமறை!

  ப.ஏ.: ஒரு திருமணத்தோடு துவங்குகிறது ... ஆதி 2:22
  ஒரு திருமணத்தோடு முடிகிறது ... மல் 2:15,16

  பு.ஏ.: ஒரு திருமணத்தோடு துவங்குகிறது ... மத் 1:18
  ஒரு திருமணத்தில்தான் முதல் அற்புதம் ... யோ 2:1
  ஒரு திருமணத்தோடு முடிகிறது ... வெளி 21:2

- தேவாட்டுக்குட்டியானவரின் கலியாணத்தை விவரிக்கும் திருவசனப் பகுதிகள் —
  வெளி 19:6-9
  21:1-27
  22:1-5,7

இந்தக் கலியாணத்தின் முக்கிய காரியங்கள் —

1. ''ஆட்டுக்குட்டியானவர்'' என மணமகன் அழைக்கப்படுகிறார்.

வெளிப்படுத்தலில் *''ஆட்டுக்குட்டியானவருக்கு''* முக்கிய இடம் —

வெளி 5:8	17:14
6:1	19:7
:16	21:9
7:14	:14
:17	:22,23
13:8	:27
14:4	22:1
15:3	

அதாவது, மனிதனோடு தேவன் இணைவதற்கு அடிப்படை ''கல்வாரியே!''

மணமகனின் **இரத்தக்** கிரயத்தினாலேயே
மணமகள் வாங்கப்பட்டாள் (அப் 20:28)

இந்த இரத்தத்தை வேண்டாமென்று தள்ளி, பரிசுத்தவான்களின் இரத்தத்தைச் சிந்தியவர்களே ***''வேசி''*** (வெளி 19:2) —

அ) அவிசுவாச உலகம் (யோ 15:18,19)
''உலகம் உங்களைப் பகைக்கும்''

ஆ) பெயர்க் கிறிஸ்தவ சபை (யோ 16:2,3)
''ஜெபாலயங்களுக்குப் *புறம்பாக்குவார்கள்.''*

2. மணமகளின் ஆடை

வெளி 19:8 ... *சுத்தமும், பிரகாசமுமான, மெல்லிய ஆடை*

- திருமறையில் மூன்றுவித ''ஆடைத்துணி'' சொல்லப்பட்டுள்ளது —

அ) சணல் நூலாடை

லேவி 6:10,11	துக்கம், பாவம்,
16:4	நியாயத்தீர்ப்பு

ஆ) பஞ்சு நூலாடை

யாத் 26:1	நம்மை ஏற்றுக்கொள்ளும்
39:27-29	தேவ கிருபை

இ) பட்டாடை
(முக்கியமான கொண்டாட்டங்களில் அணியப்பட்டது)

1 நாளா 15:27— தாவீது/உடன்படிக்கை பெட்டி	
2 நாளா 5:12 — ஆசாரியர்/ஆலயம்	வெற்றி,
எஸ்தர் 8:15 - மொர்தெகாய்	மகிமை,
மாற் 9:3 - கிறிஸ்து/மறுரூபம்	மகிழ்ச்சி!

(நமது தமிழ் அல்லது ஆங்கில வேதாகமங்களில் இம்மூன்று வகை ஆடைகளுக்கும் அதிக வித்தியாசம் தெரியாவிடினும், எபிரெயு & கிரேக்கு மொழிகளில் வித்தியாசம் தெளிவு.)

இம்மூவகை ஆடைகள் குறிப்பது —

அ) பாவத்திற்காகத் தண்டனைத் தீர்ப்பு — கடந்த காலம்
ஆ) கிறிஸ்துவை மனதிலிருத்துதல் — நிகழ்காலம்
இ) மகிமையால் முடிசூட்டப்படல் — எதிர்காலம்

- மறுரூப மலையில் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட அதே ஆடை சபையாகிய மணமகளுக்கும் கிடைக்கும் (மாற் 9:3) —

  எபே 5:25-27 ... *கிறிஸ்து நேசித்தார், கழுவினார்,*
  பழுதின்றி நிறுத்துவார்
  பிலி 3:21 — *அவரது மகிமையின் சரீரம்போல் மறுரூபம்*

  நமது இன்றைய ஒத்துழைப்பு —

  வெளி 19:7 — *அவள் ''தன்னை'' ஆயத்தம்பண்ணினாள்*
  :8 ... *அவளுக்குக் ''கொடுக்கப்பட்டது!''*
  1 யோ 3:2 ... *அவரைப் போலிருப்போம்.*
  :3 ... *''தன்னைச்'' சுத்திகரித்துக்கொள்கிறான்''*

3. கலியாண விருந்து

வெளி 19:9

- கலியாண விருந்து ஆரவாரமும் கொண்டாட்டமும் நிறைந்தது!

  நீதி 15:15 — *மனரம்மியமோ நித்திய விருந்து.*
  பிர 10:19 — *விருந்து சந்தோஷத்திற்கென்று!*
  ஏசா 25:6-9 — திருச்சபை காத்துக்கொண்டிருக்கும் மலை விருந்து!

- மணமகள்மீது மணமகனுக்குப் பேரானந்தம்!

  உன் 2:4,8 — *விருந்துசாலை ... நேசம் ...*
  யூதா 24 — *மிகுந்த மகிழ்ச்சி*
  மத் 9:14,15 — தமது சீடரோடு விருந்துண்கையில் இயேசு ''மணவிருந்தை'' முன்ருசித்தார்!

  மத் 26:29 — இவ்விருந்துக்காய்க் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு.

  கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும்போதெல்லாம்
  இந்த மணவிருந்தை நாம் எதிர்நோக்குகிறோம்.
  அவர் இன்னும் அதைக் குடியாதிருக்கிறார்
  (லூக் 22:17,18)

- கிறிஸ்தவத்தில் நிலவும் கருத்து வேறுபாடு —

  மணமகள் vs. *விருந்தாளிகள்* ... வெளி 19:9

தேவனது உத்தமமான பிள்ளைகள் ''**யாவரும்**'' மணமகள்தான்.

1 கொரி 12:27 / எபே 5:30,32 ... அப் 2:47 உடன் ஒப்பிடுக.
— அவரது உடலின் உறுப்புகள்
15:51 — **எல்லாரும்** மறுரூபமாக்கப்படுவோம்.
கலா 3:26-28 — **எல்லாரும்** கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்.

விருந்தாளிகளென்றால் நண்பர் மட்டுமல்ல, அவர்கள்தான் மணமகள்! எ.கா.) சீடர்கள் ''சிநேகிதர்'' என்றழைக்கப்பட்டனரே (மத் 9:14,15)

4. கலியாண ஊர்வலம்

வெளி 19:11-16

எருசலேம் பவனியைவிட வித்தியாசம்

கழுதை / குதிரை
சாந்தகுண ராஜா / அக்கினிக் கண்கள், பல கிரீடங்கள்
பாதசாரிகள் / குதிரை வீரர்கள்
நாசரேத் தீர்க்கதரிசி, யூதர்களின் இராஜா, தாவீதின் குமாரன் / இராஜாதி இராஜா
கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் / கர்த்தாதி கர்த்தா
ஓசன்னா (விண்ணப்பம்) / அல்லேலூயா (ஸ்தோத்திரம்)

- *''இரத்தத்தில் தோய்த்த ஆடை ... தேவனது கோபமுள்ள மது ஆலையை மிதிக்கிறவர்''* (வெளி 19:13,15)

  இது கிறிஸ்துவின் பாடுகளைக் குறிக்கிறது —
  (ஏசா 63:2-5)

  இறைமக்களின் பாடுகளையும் குறிக்கிறது —
  (வெளி 7:9,13,14)

  இன்று சிலுவையெடுத்து அவர்பின் சென்றால்,
  நாளை குதிரைகள்மீது அவர்பின் சவாரி செய்வோம்.

5. எதிராளி அழிக்கப்படுதல்

வெளி 19:17-21
20:1,2,10,14

காதல் கதை எதிலும் ஒரு வில்லன் இருப்பான்!

- இது ''*மகா தேவனின் விருந்து*'' (வெளி 19:18)
  (ஆட்டுக்குட்டியானவரின் விருந்தல்ல!)

  எஸ்தர் சரிதையில் வாசிப்பது போன்றது —
  8ஆம் அத்தியாயத்தில் மொர்தெகாய், யூதர் மகிழ்ந்தனர்.
  9ஆம் அத்தியாயத்தில் யூதரின் எதிரிகள் அழிக்கப்பட்டனர்.

- தேவனது திட்டத்தைத் தகர்க்கத் துவக்கமுதல் பிசாசின் முயற்சி —
  ஏதேன் — வஞ்சித்தான் — ''*தேவர்கள் போலிருப்பீர்கள்*'' (ஆதி 3:5)
  வனாந்திரம் — இயேசுவிடம்: ''*என்னைப் பணிந்துகொள்ளும்*''
  (லூக் 4:6,7)

  இயேசுவிடம் பேதுரு — சிலுவை வேண்டாம் (மாற் 8:31-33)
  திருச்சபை — துன்புறுத்தல் அல்லது சமரசம்பண்ணுதல்
  எ.கா.) சிமிர்னா (வெளி 2:10) (திருச்சபைக்கெதிராய் உலகு) பெர்கமு (2:13) (திருச்சபைக்குள் உலகு)

  பரிசுத்த ஆவியானவரோ சபைகளோடு பேசிக்கொண்டேயிருந்து,
  ஜெயங்கொள்வோரைத் தாங்குகிறார் (வெளி 2:7,11,17, ...)

- கடைசிச் சத்துரு மரணம்!
  1 கொரி 15:26 — *கடைசிச் சத்துரு*
  எபி 2:14,15 — *பயத்திலிருந்து மணமகள் விடுதலை!*
  1 கொரி 15:54,55 — மரணத்திற்கெதிரான மாபெரும் சவாலின் நிறைவேறுதல்!

இந்த விசுவாசமே எல்லா உபத்திரவங்களிலும் நம்மை
''*முற்றும் ஜெயங்கொள்வோராய்க்*'' காக்கிறது ...
நம்மிடம் ''*அன்புகூருபவராலேயே*'' இது வாய்க்கிறது
(ரோ 8:35-39)
மணமகள் / மணமகன்

6. மணமகளாகிய நகரம்

வெளி 21:1-27

- அந்த நகரம்தான் மணமகள் (21:2,9,10).
  அதாவது, பழைய, புதிய ஏற்பாடுகளின்
  அனைத்துப் பரிசுத்தவான்கள்.

21:12— 12 வாசல்கள் — 12 கோத்திரங்கள் — *இரட்சிப்பு யூதர் வழியாக.*
— 12 தூதர் — தூதர் மூலமாகவே நியாயப்பிரமாணம்
கொடுக்கப்பட்டுக் காக்கப்பட்டது (எபி 11:10,16)
:14— 12 — அடிக்கற்கள் — 12 அப்போஸ்தலர் — எபே 2:19-22

- இனிக் கண்ணீர் இல்லை!
  மணமகனின் நித்திய மகிழ்ச்சிக்குள் மணமகள் நுழைகிறாள்
  21:4 ... (ஏசா 54:11,12 ; 61:10)
  ரோ 14:17 ... இறையரசு ... *பரிசுத்த ஆவியினாலுண்டாகும் மகிழ்ச்சி*

  அந்நகரின் மேன்மை —
  கிறிஸ்துவின் செல்வத்திரள் திருச்சபைக்கு.
  வெளி 21:11,18-21 — மானிட மொழியில் இவ்வளவுதான் வர்ணிக்க முடியும்!
  எபே 1:3 — அனைத்து **ஆன்மீக** ஆசிகள் — இப்பொழுது!
  பிலி 4:19 — அனைத்து **பௌதீக** ஆசிகள் — அப்பொழுது!

- மணமகனைத் தவிர வேறு கவர்ச்சியில்லை!
  21:22 — நமது கவனத்தைத் திருப்ப ஆசாரியன்
  எவனுமில்லை! (1 கொரி 3:4,9,16,17)

  அந்நகரமே ஆலயம்.
  குடிகள் யாவரும் ஆசாரியர் (வெளி 1:6).

  நிரந்தரக் குடியிருப்பு நமக்கு இப்பூவுலகில் இல்லை;
  நமது குடியிருப்பு பரலோகில் இருக்கிறது (பிலி 3:20).

7. தேன் நிலவும் மணவாழ்வும்

வெளி 22:1-5

- தெளிவான ஜீவ நதி (வச 1)
  அப்படியே, எசேக் 47:1,9,12
  சங் 46:4,5
  இதுதான் தூயாவியானவர் (யோ 7:37-39)

  மணமகள் தனக்கு தூயாவியானவரின் நதியிலும்
  பழத்தோட்டத்திலும் இன்பமூட்டிக்கொள்ளுகிறாள் (வச 2)

- மணமகனின் முகத்தையே மணமகள் பார்த்துக்கொண்டிருப்பாள் (வச 4)
- திருச்சபையே இராஜாதி இராஜாவுடன் சேர்ந்து அரசாளுவாள் (வச 5)

ஆதியாகமத்திலுள்ள தோட்டத்தின் சோகச் சம்பவம் வெளிப்படுத்தலிலுள்ள நகரத்தின் வெற்றியால் விழுங்கப்படும்.

■ *முடிவுரை*

ஆவியும் மணவாட்டியும், ''வா'' என்கின்றனர்— கூட்டு அழைப்பு
கேட்கிறவனும் ''வா'' என்பானாக — தனி அழைப்பு

''மெய்யாகவே நான் சீக்கிரம் வருகிறேன்'' என்கிறார் அவர்!
''ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' என்போம் நாம்!
(வெளி 22:17,20)

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம்மனைவரோடும் இருப்பதாக! ஆமென்! (வச 21)

பிரசங்க ஊழியத்தில் எனது சாட்சி

1963 முதல் 2016 வரை, கடந்த ஆண்டுகளிலெல்லாம், நூற்றுக் கணக்கான பிரசங்கங்கள் செய்ய யேகோவா தேவன் எனக்குதவியுள்ளார். அவரது மீட்பின் நாமங்களின் அடிப்படையில் இதோ எனது சாட்சி —

1. *யேகோவா-ரா* (சங் 23)
   பிரசங்க ஆயத்தவேளையில் அவர் எனக்குப் போதித்து என்னை அபிஷேகிக்கிறார்.
2. *யேகோவா-சிட்கெனு* (எரே 23:5,6)
   அவர் பயன்படுத்த சுத்தமான பாத்திரமாய் இருக்கும் படித் தமது வசனத்தால் என்னைச் சுத்திகரிக்கிறார்.
3. *யேகோவா-ஷாலோம்* (நியா 6:23,24)
   பிரச்னைகள், இறுக்கங்கள், கவலைகள் எவ்வளவோ இருப்பினும் பிரசங்க ஆயத்த வேளையில் எனக்குச் சமாதானமும் இளைப்பாறுதலும் தருகிறார்.
4. *யேகோவா-ரப்பா* (யாத் 15:26)
   பிரசங்கிக்கும்போது உடல் களைப்பைத் தாங்கிக்கொள்ள பலம் தருகிறார்.
   சத்தமாய், தெளிவாய், பேச எனது நாவைத் தொடுகிறார்.
5. *யேகோவா-யீரே* (ஆதி 22:14)
   பணம் பற்றிய எண்ணத்திலிருந்து என்னை விடுவிக்கிறார். எனது தேவைகளைச் சந்திக்கிறார்.
6. *யேகோவா-ஷம்மா* (எசேக் 48:10,35)
   நான் பிரசங்கிக்கும்போது என்னுடன் நின்று, தமது வார்த்தையை மக்களில் மனமாற்றம் மற்றும் அவர்களுக்குப் பக்திவிருத்தி போன்ற அடையாளங்களினால் உறுதிப்படுத்துகிறார்.
7. *யேகோவா-நிசி* (யாத் 17:14-16)
   பிரசங்கம் முடிந்தது! அல்லேலூயா!
   கர்த்தருக்கு ஜே! பிசாசுக்கு மறுபடியும் தோல்வி!

அ

ண்ண

1. வசன அட்டவணை (பக்கங்கள் 1108-1142)

2. பொருள் அட்டவணை (பக்கங்கள் 1143-1160)

3. நபர்கள் அட்டவணை (பக்கங்கள் 1161-1164)

4. மேற்கோள் அட்டவணை (பக்கங்கள் 1165-1166)

வசன அட்டவணை Scripture Index

எந்தவொரு பொருளையும் குறித்து பைபிள் என்ன சொல்லுகிறது என்பதே மனிதன் என்ன நினைக்கிறான் என்பதைவிட முக்கியம். இறைவார்த்தையே முடிவானது. இந்நூலிலுள்ள 200 பிரசங்கக் குறிப்புகளைத் தயாரிக்கையில், நூலாசிரியர் வேதத்தினூடே பலமுறை வலம்வந்துள்ளார். முடிவில் பார்க்கும் போது, ஏறத்தாழ 3400 வசனங்கள் கையாளப்பட்டிருக்கின்றன. பைபிளிலுள்ள 66 புத்தகங்கள் ஒவ்வொன்றிலுமிருந்தும் வசனங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பழைய ஏற்பாட்டிலிருந்து 1580 வசனக் குறிப்புகளும், புதியதிலிருந்து 1820 வசனக் குறிப்புகளும் இருக்கின்றன. அப்படியானால், இந்நூல் முழுமையான சரிவிகித உணவைப் பரிமாறியிருக்கிறதென்று பொருள்.

ஆதியாகமம்

1:2,3—119,153,667,709, [953
1:4—106,954
1:5—256
1:12—570
1:26—307
1:27—1008,1009
1:28—307,1008
1:29—307,383
1:31—1009
2:7—709
2:8,15—383,846,855
2:9—259
2:15—950
2:15-19—282,284,307,1013
2:22—307,1099
3:1—166,795
3:1-5—188,323,329,1020, [1103
3:8—379,544
3:8-13—231
3:9—307,544
3:14-19—1093
3:15—32,307
3:17-19—950,1090
3:21—307
3:22—329
4:3-5—133
4:3-10—316
4:5,7,13—317
4:8—153,317
4:9—44,317,364
4:10—44
5:29—386
6:3—604,709,877
6:9—903
6:22—63
7:1—903
8:20,21—352,386
9:1—627,889
9:4—197
9:26—386
10:8-10—888
அத். 11—887
11:1-9—213,252
11:3—804
11:4—627,888,889
11:5—627
11:6—888
11:8—627,889
11:9—889
அத். 12—647
12:1—238,582
12:1-3—512,566,635
12:2—47,238,535,887
12:3—47,841,1009,1014
12:14—44
அத். 12-25—647
13:1—44
13:5-11—648
13:7-9—405
13:7-11—293
13:14—293,665
13:15—293
13:16—679
13:17,18—665
14:8-16—649
14:14—616
14:18—809
14:18-20—823
14:18-23—123
14:21-23—824
14:22—817
15:1—649
15:2—650
15:3,4—259
15:5—679
16:1,2—650,1008
16:1-4—259
16:8-10—252
16:12—650
16:13—215
17:6—832
17:15-19—259
18:12-15—470
18:17—238,337,1014
18:17-19—109
18:18—238
18:19—27,1007,1014
18:20-23—339,385,650
18:27—817

19:15-17—41
20:1-6—252,320
20:7—816,831
20:10-13—282,647
20:11—282,648
21:9-11—727,1008
21:10-12—252,1020
21:33—147,817
22:1-3—651
22:2—293,354,416
22:5—146,416,827
22:6-8—32,773
22:9-14—253,254,309,
22:14—254,422,651,1106
22:15-17—354,679
23:1-4—651
24:1-4—652
24:22,23,28-32,35,36,
50-53—731
24:55-58—731,1002
24:61-65—338,385,729
25:21—385
25:23—308
25:26-34—134,308,804
26:1,2—254
26:4,5—638
26:6—254
26:12—254,638
26:12-25—385
26:19-24—1048
27:27—686
30:2,22-24,31—255
31:22-24,29,42—256
32:10—764
32:24-27—34
32:24-32—386,403,407,
774,831,906
39:7-12—37,1037
39:9—282,320,474,856
39:11,12—320,848,856,
அத். 39-41—1025 [864
40:13—882
40:14,23—254,882
41:9—882
41:14-16—679
41:38—90,626
42:23—591
45:4-8—170,378
49:10—832
49:22—37,469
49:22-26—926

யாத்திராகமம்

1:8—885
1:12—990
2:11-15—275,605,838
3:1—829
3:4—815
3:5—516,815
3:6—385
3:10—516,816
3:11—766
3:15,16—385
4:5—385
4:10-12—212,517,637
4:14-16—813,821
4:22—42
அத். 7—327
7:1—809
12:12,13—197
12:43-47—198
12:43-13:10—458
13:1—148
13:2—148,354
13:3—48
14:24,25—468
15:1—421
15:1-18—446
15:2—449
15:3—422
15:11—420,692
15:21—641
15:22-26—32,198,422,
16:17-21—367,383 [1106
16:32,33—383
17:11,12—325
17:14-16—422,1106
18:13-27—508,829,919
19:5,6—828
அத். 20—92
20:2—282,422
20:4-6—704,886
20:8-11—386,979
20:12—218,973,1017
22:29—354,636
25:14—344,805
25:21—879
26:1—1100
28:1—809,829
28:9-12—890
28:38—702
28:41—809
29:18—352
30:10—460
31:1-5—441,553,857
32:1,6,7,11—469
32:30-32—353,399,520,
33:11—421 [574,609
34:1-3—338
34:6—420
34:22—459
34:28-30—1049
35:21,22—545
35:30-35—857
36:4-7—545
39:27-29—1100
39:42,43—63

லேவியாராகமம்

1:9—352,822
2:1,3—822
3:3-5—822
4:1-5—822
5:15,16—822
6:10,11—1100
6:12,13—713
9:23,24—468
10:1-5—468
12:2—412
12:6—193
12:8—193,412,943
16:4—1100
16:13—460
19:2—300
19:10,14,16,18—283
19:32—1015
20:8—300,422
22:22—707
23:15,16,20,24,25—459
23:26-32—460
23:39-43—73,461
அத். 25—786
25:1-4—979
26:8—541

எண்ணாகமம்

3:13—707
8:5,6,15—821
11:4—1043
11:5—224,1043
11:25-29—814
அத். 12—212
12:1-3—275,1049
12:7—909,1049
12:8,13—1049
Ch. 13—50
13:28-33—391
அத். 14—50
14:22-24—49,1049
15:3—352
15:37-40—361
அத். 20—333
20:11-13—707,896
அத். 21—333
22:15,18—134
22:22,24—256
22:25-32—135,256,479
23:9,10—90,336
23:19—1050
23:21-23—333
23:21-23—90,256,326
23:24—90,333
24:2—134
24:3,4—494
24:14-19—134,494,832
29:1-6—459
32:1-7—581,634
32:22,23—316,581,634

உபாகமம்

1:21—329
1:31—1015
4:7—83,173,402
4:8-10—63,91,217,361
4:12,15,16—704
4:23—361
4:24—468
4:39—421
6:4-12—50,204,235,363,
6:13,16—204 [1007,1014
7:6,7—841
7:17-19—362
8:2-5—204,362,959
8:11,12—363
8:17,18—363,698,1012
9:7—362,914
9:8,22,24—362
10:13—310
11:10-12—429,643
11:13-21—213,235
13:1-4—327
15:11—501
15:12-15—360,914
16:1-11—458,1056
16:10-12—360
16:13-15—461
16:16—464,1056
18:8,15—813
18:10-12—856
20:19,20—563
22:9,10—238,727
22:11—804
23:5—170
23:14—1006
24:1—1056
24:9—363
24:17-22—360
25:17,18—362
அத். 28—168
28:1-14—287,616
29:29—327,330
31:30—817
32:1-3—154,161,162,495,
32:3,4—420,817 [812
32:5-7—307
32:7,10—3
32:10,11—1022
32:11,15—561
32:15,18—307,363,498
32:30—541,728
32:39—193
32:51—310
33:3—338
33:25—380
33:26—817

யோசுவா

1:2,3—665
1:5—917
1:8—213,917
1:9—329
2:15-18—197,201,1031
3:13-17—640
6:19—705
அத். 7—318
7:1,6—317
7:8-11—317,705
7:16-21—146,317,703
7:21—317,873
8:1—929
8:34,35—760
14:6—50
14:6-12—866
14:8—49
14:10—50,1049,1050
14:11,12—1050
21:45—50
22:29—1070
24:16—1070

நியாயாதிபதிகள்

2:10—885
6:13—172,692
6:14—637,766
6:15—766
6:16—637
6:23—172,1106
6:24—172,422,1106
7:2,13,14—766
7:17,18—224,745
8:27—704
12:5,6—211
13:3,8,12—354

ரூத்

3:18—171

1 சாமுவேல்

1:10,18—325,454
1:11—354,636
1:15,17—454
1:21,22—636
1:24—354,636
1:24-28—148
1:27,28—354
2:2,3—211
2:8,10—832
2:11—354
2:12-14—469
2:17,22—100,469
2:18,19—354
2:25—469
2:29,30—309
2:35—912
3:1-3—100,719
3:9,10—346
3:13—1016
4:21—486,708
6:2—805
6:7—344,805
7:15-17—384
7:15-8:3—806
8:1,3—384
9:9—813
9:21—764
10:1—809
10:8—932
10:11—809
10:23,24—93
12:1-5—910
12:3,4,5—848
12:23—816,1069
13:9-21—857
15:9—319,848
15:13-23—319
15:16—338
15:17—349,764
15:19-22—147,708,848
15:22—52,352,833
15:23—833
17:34-37—202,362
17:45—202,1054
18:6-9—196,807
24:5—1055
24:6,7—1054
26:7-11—809,1054,1070
26:23—909
30:1-6—1055
30:19—432
30:21-24—588,1054

2 சாமுவேல்

1:14-16,20—1054
2:4-6—1054
4:8-12—1055
5:22—465
6:1-7,13—344
6:14-23—1054
7:1-3—1054
7:1-6—349
7:14—960,1016
7:16—832
7:17—397
7:18—360,397,914
7:27—397
அத். 9—1055
10:1,2—1055
10:9-12—102,726
11:9-11—320
12:7-14—319,816
12:11-14—320,1053
12:23—1090
16:5,6,9,13—1049
16:5-14—1055
19:18,19—1049
22:26—876
23:2,4—495
23:15,16—827

24:13,14—963
24:17—848
24:25—353

1 இராஜாக்கள்

3:5-12—186,301,1052
8:12,13—171
8:41-43—533,720
8:54—346
8:60—533
11:1-4—1043
12:6,7—919
அத். 13—259
13:1—814
17:1—746,782,911
17:13—587
18:15—746
18:20,21—488,817,990,
18:31,32,38—698 [1063
19:16—809

2 இராஜாக்கள்

3:14—746,782,911
4:1,7—911
4:8-10—587
4:32-35—950
5:9-14—34,344
5:15—1061
5:16—746,1061
5:20,26—1061
5:23-26—318
5:25-27—479
6:15-17—328,479
6:24-29—355
7:8—517
7:9—517,634
12:2—829
18:4—704,722
20:5-7—1087
அத். 22—58
22:1,2,13—58
22:8—58,65
22:11—60
அத். 23—58
23:21—62,65
23:22—65
அத். 24—58

1 நாளாகமம்

11:16-19—353
13:7-11—69,805
15:11-15—69,805
15:27—1100
25:1,2—985
28:20—329
29:2-6—875
29:11—421

2 நாளாகமம்

5:1—825
5:12—1100
5:12-14—674,825
5:13,14—426
6:13—346
6:32,33—571
7:1—674
7:14—426,643
12:14—1053
15:3—69,829
15:4—69
16:9—897
17:12—445
18:6-8,13,23,25,26—817
19:4-9—919
20:1—445
20:5-22—555
20:12,14-21—445
20:15—322
20:21—420,433
20:26—416,465
24:4,5—862
26:7,10,14-16—865
26:15,16—1026
29:3,25,29,30—433
31:21—866
33:10,12,13—960
அத். 34—58
அத். 35—58
35:17,18—62

எஸ்றா

6:21,22—458
7:6—137
7:10—137,494
அத். 9—374
9:2-5—399
9:3-6—426
9:5—346
9:9—426
10:1—341,346,426,490

நெகேமியா

அதி. 1—374
1:1,2—842,873
1:2-4—396,923
1:4—341,399,873
2:1-3—399,842,873
2:4—923
2:13-18—396
2:17,18—725,924
2:19,20—925
3:1—924
3:5—873
3:20—924
4:1—978
4:6—725,924
4:7,8—978
4:9—923
4:10—924
4:14—925
4:16-18—923
4:20—923
4:22—873

4:23—873,924
5:14-16—924
5:14-18—873
5:19—839,924
6:1-5—925
6:2—978
6:3—874,978
6:8—874
6:9—924
6:10-12—978
6:11-14—874,925
7:2—903,923
அத். 8—70
8:1—725
8:2—435
8:3—435,760
8:5—71,435
8:6—71,435,925
8:7,8—71
8:9-12—72,452
8:10—73,86,177,450, 517,619,634,864,924,979
8:12-17—73
8:14-17—462
8:15—174
8:17—924
8:18—74,462,760,925
8:23—72
9:1,2—923
9:3—65,81,189,393,925
10:39—875,924
12:27—463,924
12:42—924
12:43—463,924
13:1—135
13:2—135,925
13:3,4—923
13:6—925
13:8,9—923
13:10-12—875
13:13—924
13:14—839,924
13:17,21—923
13:22,31—839,924
13:23-30—874,923
13:26—925

எஸ்தர்

2:7—407
3:6,7—463
4:15—353
4:16—353,574
8:15—1100
8:16,17—561
9:20-26—463

யோபு

1:1—136,211
1:2,3—432
1:4,5—1050
1:6—1020
1:8—136,668,1050
1:12—254
1:21,22—1025
2:3—904
2:6—254
2:9—113,1050
2:10—193,211,331,1050
4:18,19—766
7:17,18,20,21—378
8:8-10—885,1007
9:30,31—221
11:7-9—330
14:4—206,216
15:34—471
20:4,5—210
22:12-14—316,762
23:1-3—330
23:8-10—171,330,963,968
23:12—59,217,404,1031
24:15—320
25:5,6—348
29:12-17—456,668,669
29:21-23—495
30:25—455
31:1,4—320
31:9-20—37,387
31:16-23—273,469
31:21,22—387
31:24-28—34,277,470
31:24,25,29,30,32—387
33:4—709
33:8,9—136
34:21,22—215,316
35:14—171
38:8,10—254
38:11—254,305
42:5,6—101,136,770
42:7—211,1050
42:10—271,373,387,432
42:12,13—432
42:13-16—331

சங்கீதம்

1:1—106,115,209,238,954, 955,1037,1064
1:1,2—79,224,338,445, 894,1031
1:2—59,76,234,368,453
1:3—234,238
1:4—238
1:6—115,209
அத். 2—560,577
2:1—347,386,
2:2—386
2:6,7—832
2:8—571
2:12—1088
4:4—379,877
4:5—379,826
5:2—309
5:3—309,376
5:9—908
7:17—422
8:2—415
8:4—378
9:2—1093
10:14—407
11:3,5—792
11:7—206,792
12:1—903,908
12:2—908
19:14—208,214
32:3—37,446
32:3-5—37,320
32:7—443
32:8,9—258,284
32:10—444
32:11—446,1093
33:1-4—71,443
34:12,13—1041
34:18—173
35:13,14—399,455
35:27—652
36:5—904
36:9—339
37:1—804,1024
37:2—804
37:4—187
37:5—187,733,773,1042
37:7—332,1024
37:8—338
37:10,11—332,804
37:16—383
37:23—251,733
37:24—733
37:25—383
37:37—332,804
37:38—804
39:1—183
40:1-3—443,447,1020, [1030
40:6-8—310
40:7-10—115,866,1061
40:16—1093
40:17—986
41:1-3—108,671
42:8—445
44:4,5—833
44:20-22—986
அத். 45—206
45:1—448,832
45:2—207,208,211,834
45:4—208,834
45:6—210,832
45:7—207,210,832
45:13—210
45:14—209
46:4—440,720
46:4,5—840,1104
46:5—204
46:10—342
47:1—342,832
47:2—421,832
47:3—832
அத். 48—40
48:1-7—41
50:12-14—826
50:16-21—212,317,706, [737
அத். 51—472,1054
51:1—474
51:6—216,912
51:7,9—210
51:8—210,473
51:10—320
51:11-13—473,475,711, 798,866
51:12—320,452,473
51:12,13—309,429,682
51:14—446
51:15—415,448,521
51:16,17—352,488
51:17—448,474,826,1059
51:19—474,826
55:17—1044
56:8—394
62:2—402
62:10—27,358
62:11—77
65:11-13—460
66:10-12—193,962
66:18—372
67:1,2—515,619,876
68:3—1093
68:5—407
68:11-13—381
68:17,18—154,381
68:18,19—121,380,381
68:20—121
69:8,20,29—986
70:4—1093
72:18—420
73:11,12—317
73:13-17—330
73:25,26—405
74:3—344
74:16—193,1025
75:6,7—858
77:7-11—632,985
77:13—330,985
77:19—259,330,407,985, [1027
77:20—259,330,986
78:17-22—138
78:41-43—362
78:70-72—97,912
80:3,7,8,14-19—233
81:13,14—204
82:5—792
அத். 84—465,466
84:2,4—380
84:4-7—325,380,453

84:5-7—177,414
84:6—172,416,467
84:11—467
85:6—428,450,676,696
85:10—377,879
86:5—1046
87:3,5-7—42
88:13—366,376
89:1—420
89:14—879
89:15—719
90:14—1093
92:12—237
92:13—237,304
92:14—304
94:1—1075
94:17-19—85,454
95:1—599,719
95:6—347,422
95:7,8—283
96:1-3—443,447,599
96:11-13—456
97:10—207
97:11—452
97:12—420
98:1—443,446
98:6—719
99:1—863
99:5—422
99:6—827
99:8,9—422
100:2—370,899,1061
100:3—448
100:4—370,448
101:2-4—207,915
101:6—915
101:8—207
101:6-8—41
102:7—985,986
102:11—986
103:1,2—360,371,448
103:8,9—317
103:12—25,107,965
103:13,14—963
104:33—448
105:14,15—255
105:16-22—332,362,1025
107:20—59
110:1—836
112:1—108
112:4—171
113:3—448
115:1—704,788
116:12-14—364
116:17—826
118:1-4—377,420
118:13—445
118:14—445,449
118:15—660
118:22-26—376,457
118:24—864,871,1093
118:29—377
அத். 119—447
119:1,2—108
119:9—60,67,79,1034
119:11—79,204,1034,
1040,1044
119:14—72,309,445
119:15—1040
119:16—361,1040
119:18,19—72,163,495
119:18-20—366
119:25—64,75,495
119:34—283
119:36,37—445
119:54—445,452
119:61—361
119:62—445,453
119:66—165
119:67,71—286,446,961
119:72—80,445
119:73—283
119:75—446
119:83—361
119:92—325,452,495
119:93—361
119:96—77,108
119:97—76,108
119:99,100—59
119:103—96,453
119:104—60
119:107—64,75,495
119:109—361
119:113—203
119:125—283
119:130—163,345
119:136—491,520,
119:141—361
119:147,148—108,445
119:153—361
119:154—64,75,495
119:162—445,453
119:176—361
120:7—172
122:1—453,719,1038
122:4—453,1038
122:5—719
125:2—561
126:1-3—463
126:5,6—455,492,777
127:2—376
127:3-5—331
128:1-4—109
129:3—390,952
131:1,2—347,1055
132:9,10—825
அத்.133—463,505,724,831
133:1,2—712,812
133:1-3—44,70,454
135:6—421

அத். 136—377,876
136:4—420
136:23—360,914
138:1—81,447
138:2—63,65,71,75,81,
189,265,338,415,447,736,
138:8—338 [747
139:1-4—97
139:1-12—171,316
139:7—713
139:23,24—97,321,339,
371,713
141:3—183,208,214
144:1—205
144:3—378
144:9—443
145:10-12—835
145:18—173
146:6—420
147:10,11—906
149:1—443,446
149:2—446,834
149:3—834
149:5,9—446
149:8—71,446
**அத். 3-13,16,17,22,23,25,
27,31,35,41,42,46,49,
52,55,56,59,62,64,69,70,
71,77,86,90,91,92,94,102,
109,116,121,123,126,130,
138,139,142,146**—449

<u>நீதிமொழிகள்</u>

1:4,5—772
1:7—285
1:8—27,285,1015
1:10-15—1064
2:6,7—472
2:23,24—412
3:5,6—382,733,772,865
3:7—282
3:9—311
3:11,12—959
4:1-2—1015
4:7—372,1052
4:14,15—1037
4:18—105,1085
4:23,24—211,225,232,
4:25—1031 [1053
5:8—1037
8:22,23—1015
8:30,31—93,309,455,1015
9:1—359,798
10:5—644,784
10:19—211
11:12,13—909
11:14—246,883
11:24-26—73,358,518,
11:25—294,1038 [1059
11:28—39,277
11:30—1038
12:12—39
12:22—470
12:24—849
13:15—915
13:24—960,1016
14:12—209
14:13—86,209
14:14—209,1044
14:23—644,849,857
14:34—207
15:4—37
15:8—372
15:11—215,316
15:15—1101
15:22—883
16:3—1042
16:6—879
16:7—172,316
16:27—212
16:28—212,273
16:32—93
17:4,9—212
18:9—857
18:10—202
18:20.21—37
18:24—272
19:17—279,610,670,828
20:6—905
20:13—927
20:19—348
20:21—305
20:27—244,762
20:28—879
22:15—960
22:29—52,858
23:4,5—278
23:7—176
24:6—883
24:11.12—602,635
24:16—1022,1036
25:16,27—505
25:28—93
26:2—170
27:1—52,248
27:6—909
27:17—275,726,851,863
28:1—528
28:9—62
28:13—43,460,474,703
28:14—474,776
28:23—348
29:1—470,972
29:5—348
29:6—444,453
29:18—100
29:23—221

30:7-9—223,358
31:20,27—1032
31:30—173

பிரசங்கி

2:1-11,17—29,974
7:8—230
9:7-10—978
9:10—52,295,857,868
9:14-17—862
10:1—210,702
10:19—1101
11:1—548,644,763
11:1-6—295
11:2—548,642
11:4—248,644
11:4-6—621
11:5—548,642
11:6—248,499,548,642
11:7,8—98,363,915
12:1,6-8—29,34
12:13,14—280

உன்னதப்பாட்டு

1:2—236
1:4—1093
1:6b—770
2:3—236
2:4,8—1101
2:15—39
3:6—236
4:11—1031
4:12-14—236
5:1—236
5:8-16—90
6:2,3—236
7:9—732
7:11-13—236,337
8:5—236
8:6—236,529
8:7—529

ஏசாயா

1:1—842,861
1:2—307
1:13-17—149,411,**770**
1:15-18—139,668,706
1:18—25,107,965,1020,
1046,1085
2:11,17—432,664,817
2:17,18—577
4:3—471
4:4—468,471
5:1,2—39,233,237
5:7—233
5:8—39,237,469
5:11-14—102,469
5:18-21—470
5:22-24—469,471
அத். 6—565
6:1-3—551,597,661,664,
701,835,842,861,864
6:1-15—100
6:2—452,551,861-863
6:3—103,105,342,412,
420,452,664,862-864
6:4—864
6:5—212,770,835,861,
863,865,866,1074
6:5-7—212,471,815,862,
6:6-9—516 [863
6:8—103,597,600,640,
716,835,865
6:9-11—597,664,835,864,
8:1,2—912 [866
8:14—33
8:19—260,326
8:20—244,260,326
9:6—264,420,832
9:7—832
10:12-17—470
10:27—671
11:1—343,,550
11:2—275,442,772,1052
11:5—915
11:6-9—275,297
12:2—449,450
12:3—450,811
13:1—738,816
15:1—738,816
16:5—879
16:6,9-11—36
17:1—738,816
19:1—738,816
20:2,3—1050
21:1—738,816
22:1—738
22:22—251
23:1—738
24:3-5—426
25:6-9—325,1089,1093,
26:3—85,472 [1101
26:13—432
28:9—167
28:16—248
28:26-29—642
29:10—815
29:15—316
29:19—209
30:1,2—259
30:15-18—264
30:20—606
30:21—196,561,606,733,
31:4,5,9—468 [1027
32:2—379
32:13—643
32:15—36,643
33:14-16—40,468,470,471
34:16—77,168
35:1-10—344,929,1098
38:15—250,915
38:15-17—25,107,250,
363,776,915,965,1026
40:13,14—330
40:21—336
40:28-31—97,203,380,
790,840,871
40:28-41:1—336
41:5-7—851,863
41:8,9—238
41:10—929
41:14,15—550,766
42:1-4—274,343,1051
42:3—274,343
42:4—329
42:8—503
42:9—700
42:10—443
43:19—700,886
43:21—513,828
43:24—610
44:3—70,493,811
44:22—25,107,965
45:7—193
46:10—966
47:4—422
47:8,10,14—471
48:1—702
48:2—48,702
48:6—700
48:11—41,503
49:16—1022
50:4,5—381,382,495
50:6—382
50:10—394,963,968,973,
50:11—963 [976
51:2—976
52:7—516,524,561,678,
52:13—1052 [835,1032
அத். 53—530
53:2—173,343
53:3—305,444,983,1059,
1097
53:4—418,444,968,1097
53:5—198,418,1086
53:8—951
53:9—786,1064
53:10—960
53:11—455,538
53:12—455,777,873,938
54:2—665,803
54:3—665
54:5-8—734,1094
54:11,12—1104
54:15—1049
54:26—781
55:1,2—216
55:3,4—764,917
55:7-9—34,259
55:10—81,260,495
55:11—81,495
56:3,6—720
56:7—93,719,720
56:10,11—760
57:2—1090
57:15—83,101,426
57:19—213
58:5-7—139,670,671,852
58:8—671
58:10—171
58:13—386
59:2—27
59:16—401,984
59:19—61,163,203,326,
440,734
59:19-21—61,163,166
அத். 60—333,675
60:1—625,680
60:3—680
60:4,11,22—679
60:5—676,680
60:6,9,13,15—680
60:6—411,676
60:8—677
60:12,14—678
60:15,18,20—676
60:17—677,680
60:18—677,679
60:19,20—680,681
60:22—550,625,678
61:1—440,441
61:3—209,235,414,440,
61:6—828 [829,1038
61:10—829,1085,1104
63:2-5—533,984,1102
63:9,10,14—734
அத். 64—424,427
64:1—425,1074
64:2—425,428
64:5—426
64:6—22,30,136,206,221,
231,426,1074,1085
64:8—312,429
64:9—312,426
64:10,11—428
65:2—258
65:18—1093
66:1—669
66:1,2—71,76,83,350,474,
706,719,746,769,776,865
66:8—427
66:10—1093
66:18,19—630

எரேமியா

1:4-10—224,637,766,818
1:17-19—817
2:1—738
2:2—711
2:13—29,216
2:22—221

2:26—809
2:32—363
3:17,18—863
3:20—711
4:3—494
5:22—705
6:13,14—135
6:16—885
6:17—814
7:1-5—350,703,738
7:4-11—703,719
7:28—903
8:11,12—1000
9:1—399,490,738
9:1,2—339
9:23,24—34,37,221,382,
10:23—382 [1026
11:1—738
13:9,15,17—490
14:1—738
14:7—490
15:16,17—79,324,338,445
16:1—738
17:7,8—238
17:9,10—315
18:13-15—216,363
18:18—809
20:1,2—1000
20:7-11—738,770,1000
23:5—832
23:5,6—235,422,863,1106
23:9,10—397
23:14,17—818
23:24—316
23:25-29—744,755,912
23:34,36—912
26:1,2,8,11—1000
26:11-13—817
27:18—816
29:13—374
31:9—42,488
31:14—494
31:20—960
31:28—193
31:29-31—27
31:34—83
32:27—330
33:3—824
33:11—826
33:15-18—236,802
38:6—1000
44:5—451,774,887,957
48:10,11—743
50:20—83
51:20-23—866

புலம்பல்

1:1,2,3,5,6,9,10,11,15—
2:2,4,6—313 [313
2:7—313,314
2:9—100
2:11—314,816
2:12—341
2:14—818
2:18,19—394,488
3:22-24—79,314,367,376,
3:27,28—942 [420,881
3:28,40—339
3:31-33—960
3:38-40—193,1025
3:39-42—314,961
3:48-51—341
4:1,3—314
5:15,16—207,314
5:18—40

எசேக்கியேல்

1:3—809
2:2—65
2:5—809,818
2:6—818
7:9—422,958
7:26—809
13:3,10,11,18—818
14:4,5—258
14:13—904
14:14—386,904
14:20—386
16:49—1106
18:1-4—654,886
18:31—36,443
18:32—36
19:10-12—36
21:27—832
22:24-29—801
28:11-19—865,1026
31:14—1051
33:15—1034
33:30-32—496
34:1-3—736,891
34:1-16—755
34:26—540,798,811
34:26,27—240,496
36:11—502
36:20-25—503,708
36:27—506
36:27,28—430,435
36:35,38—428,431
36:36—425
36:37,38—504,509,544
37:1-10—397,426,427,
429,432,504,679
37:10—65,425,436
37:11—427
37:12—428
37:14—432
37:15-22—434,504
37:23,24—430,432
37:26,27—428,433
37:28—430,435,509
38:23—429,430,435,436,

43:4,5—674
[509
44:4—674
44:23—828
அத். 47—565
47:1,9—1104
47:12—240,1104
48:35—422,504

தானியேல்

1:1—842
1:3—856
1:4—591,856,1039
1:6—856
1:8—472,853,856,1034,
1036,1039
1:9—1036,1039
1:12—1002
1:17—442,859
1:18—859
1:19—857
1:20—853,857
2:1—842
2:2—856
2:17,18—854,1042
2:21—301
அத். 3—1024
3:17,18—1002
3:28—285
3:29—90
4:18—442,679
4:25—817
4:27—139,668,854
4:37—854
5:1-4—856
5:16—1061
5:17—853,858,1061
5:23-28—469
6:3,4—97,853,856,860,
6:5—856 [904,1058
6:10—332,346,366,698,
6:20—856 [858,1044
6:22—857
6:25-28—626,859
7:9,10—468
7:13,14—565,854
7:18—205
7:28—490
7:26—860
8:26,27—490
அத். 9—374
9:1-3—62,386,397,490
9:2-5—858
9:9—420
9:19—399
9:20—399,858
9:24-26—810,832
10:12,13—62,578
11:32—446
12:2,3—563,569,1091
12:8-10—854

ஓசியா

1:2—481
2:2—481
2:8,9,12,13,—481,482
2:15,19,22—484
4:1,2—482
4:6—102,108,217,301,
361, 482,769,917
4:7—482,864
4:9—482
4:16—483
5:6—483
5:11—482
6:1—483
6:1,2—484,958,964,1008
6:4—481,483,904
6:6—352,481
6:7—483
6:8—482
7:8—145,188,481
7:9—481
7:9-12,16—483
8:4—482
8:9—483
8:12—75,108,217,482,769
8:13—483
8:14—469
9:7-9—482
10:1—233,353,469,586
10:2—481
10:11—483
10:12—235,427,483,643,
11:3,4,7—960 [676
11:8—399,960
11:9—399
12:2-4—482
13:10—482
14:1—36,483
14:2—38,483
14:3—432,453,483
14:4-7—36,38,484
14:8—432,484

யோவேல்

அத். 1—486
1:4—643
1:11-13—240
1:13—827
1:16—450,676,827
1:20—827
அத். 2—486
2:7,8,11—625
2:12-14—426,487
2:17—490,827
2:19—827
2:21—427,689,1093
2:23-25—240,426,431,
509,676,689,827,1093

2:25—427,643,689,827
2:26—643
2:28—689,827
2:32—827
3:18—680

ஆமோஸ்

6:6—991,999

ஒபதியா

10-12—991,999

யோனா

1:4—703
1:7-13—41,703,880
1:17—703
2:10—703
3:4,10—707
3:5—703
4:1-3—707
4:5-9—193,703,707,1025
4:9-11—564,572,707

மீகா

2:13—561
3:11—809,816
5:2—410,550,810,832,
6:8—776,876 [943
7:1,2—237
7:5-9—171,963,977
7:14—336,711
7:19—25,107,965

நாகூம்

1:3—985
1:15—457

ஆபகூக்

1:1-3—86,238,676
1:13,14—86,207,238,
2:2—86,623 [676
2:4—30,86
2:14—335,398,553,577,
அத். 3—976 [889,1088
3:1-3—86,428,674,676
3:17-19—86,238,428,
444,451,676

செப்பனியா

1:15,16—88
2:3—209
3:3,4—377,809
3:5—377
3:14—1093

ஆகாய்

1:1—916
1:8—562
2:3—431,486,708
2:4—708
2:5—929
2:6-9—94,431,674
2:9—486,674,708
2:23—1051

சகரியா

1:4—818
2:5—468
2:8—1022
3:4,5—916
4:6—240,537,540,575,
688,730,773,796,889,916
4:6,7—386,445,475,546,
799
4:7-9—178,299,537,691
4:9,10—550,1051
4:11-14—240
6:11—916
6:12,13—822
8:12,13,16—38
8:17—38,317
9:1—816
9:9—209,415,832
10:1—409
12:10,11—397
13:1—29,397,702
13:2—397
13:6—702,893,985
13:7—29,702
14:5—422
14:20,21—847

மல்கியா

1:1—816
1:1-3—134,308
1:6—283,307,308,705,707,
1:7,8—308,707 [833
1:10—309,707
1:11—707
1:13—309,708
1:14—309,707
2:5-9—310,828,917
2:10—310,706
2:11—311,710
2:13-16—311,1099
2:17—310
3:1-3—88,134
3:8-10—140,145,311,707
3:13,14—312,899
3:15—312
3:16-18—1048
4:2—235
4:5,6—109,218,331,677,
967,972,1017

மத்தேயு

அத். 1—940
1:1—1055
1:5,6—942
1:18—1099
1:19,20—1056
1:21—33,94,565,943, 1094
1:22-25—1057

1:23—112,943
அத். 2—401,940
2:1-12—410
2:6—643
2:9—411
2:13—944
2:16—411
2:16-18—944
2:19-22—1056
2:22—944
2:23—943
3:7—136
3:7-9—702
3:8—36,1077
3:9—22,36,1077
3:9-12—990
3:10—36,990
3:11,12—203,468,710,764,
3:15—206,833 [1088
3:16—274,709,730
3:17—173,730,916
அத். 4—166,937
4:1—51
4:1-10—266
4:3-10—1034
4:4—56,59,60,96,189,738,
1031,1037
4:5-10—188,201,763
4:7—60,737,1037
4:10—60,451,737,1037
4:11—451
4:12-17—531,552,568,639,
4:18-22—635 [653,665
4:19—512,535,568,590,
653,715,790
4:23—653,835
4:25—653
அத். 5—1072
5:2-11—343,957
5:3—101,343,834
5:3-10—826,1098
5:4—101,237,343
5:5—343
5:6—206,373,493
5:7—786,1037
5:8—452
5:9—293,514
5:10—1037
5:11-14—512,993,996,
1000,1093
5:13-20—99,273,657,859,
1045,1073
5:15—224
5:16—150,225,241,263,
657,853,1045,1068
5:18—273
5:20—1074
5:**21-26**—38,40,190,216,
280,1074
5:22—190,280,850,882
5:27-32—190,204,280,
5:28—190,204,280 [1073
5:32-37—348,470
5:38-48—99,170,217,263,
312,615,992,1075
அத். 6—493,1072
6:1-3—113,134,263,862
6:1-4—1075
6:1-8—669
6:5—850,862
6:6—118,263,240,393
6:7—346
6:8—263,346
6:9-13—173,218,263,469,
705
6:14,15—263,372,971,
1034,1075
6:16-21—341,850,862,
1075
6:19-21—588,767,1091
6:19-34—276,,278,356,
791,1076
6:25-34—604,852,968
6:26-30—263,406,465
6:31-34—29,187,216,223,
263,379,403,479,547,572,
637,676, 791,1034
அத். 7—1072
7:1-5—38,217,478,488,
1075
7:7-11—346,395,402,824
7:11—263
7:13,14—133
7:15-23—114,169,194,
244, 806,1075
7:24-27—61,69,287,736,
7:28—737,778 [795,801
8:4—1051
8:8,9—59,201
8:13-21—926
8:15—217
8:16,17—59,198,326,751,
8:19,20—981 [968,1096
9:2—1096
9:8—788
9:14-17—830,1101,1102
9:17—886
9:27—1055
9:30—1051
9:35-38—396,520,524,
544,568,573,608,632,663,
688,714,835,869,873
9:36-10:15—400
9:37—521,653,869
9:37-10:14—655
9:38—521,,653,686,751
அத். 10—999

10:1—592
10:5—612,636,658,686,
10:5-42—996 [715
10:6—658,999
10:7—135,167,194,835
10:8—135,167,194,507,
10:16—242,715 [791
10:18-20—757
10:21—997
10:22—500,997
10:23—500
10:24,25—892,983,997
10:27-36—168,169,338,
506,518,757,782,998,
1024,1060
10:34-39—169,636,994
10:40-42—587,611
11:1—612,686,715
11:5—108,347,584,852
11:11—884
11:12—532,694
11:19—982,1062
11:25-27—84,343,367,413
11:28-30—23,92,209,274,
275,280,407,474,621,1021,
12:16-21—1051 [1073
12:23—1055
12:25—524,724,800
12:26—724
12:28—949
12:33-37—38,136,211,214,
12:38—949 [237
12:39,40—406
12:41-45—586,725
12:47-50—455
அத். 13—871
13:2—553
13:3-9—76,547,641
13:12—496
13:18-23—39,72,76,79,
547,548,650,1043
13:24-30—357,549,643
13:25-36—550,551,679,
703,748
13:36-43—23,406,549
13:44-52—41,77,190,552,
13:55,56—1057 [553
13:58—628
14:12-14—337,807,929
14:15,16—789,949
14:21-31—283,339,628,
807,913,1045
15:3-6,9—61,68,736
15:11—214
15:13,14—938
15:16-20—214
16:8-10—362
16:13-18—91,297,339,
489,811
16:18—88,103,204,335,
398,549,568,577,614
16:19—750
16:20—1051
16:21-25—201,297,930,
17:3—1091 [1001,1024
17:4—515,949,1091
17:5—173,916
17:9—1051
17:10-13—677
17:14,15—515
17:19-21—97,201,326,883
18:1-4—834,888
18:7-10—41
18:15-18—243,294,678
18:19—340,953,715
18:20—340,454,704,715,
1006
18:21,22—927,1012
18:23-35—273,877,927
19:16-24—190,293,668,
1027
19:16-26—34,330,355,
357,588,671,1021
19:27-30—172,358,927
20:1-7—47,547,600,849,
20:16—172 [1087
20:20-23—408,800,879,
949
20:24-28—772,800,879,
917,1059,1067
21:1-3—415,530,592,687
21:4—209,266,343,834,
1073
21:5—266,415,834
21:7-11—375,415,532,
533, 813,1055
21:12-16—146,266,415,
486,533,697,701,720
21:18,19—535
21:31—1074
21:33,34—233
21:42—266,375,795
21:43—233
அத். 22—634
22:9,10—532,634,653
22:15—137,634
22:16-18—634,937
22:21—140,634
22:23-33—61,137,167,385,
634,1083
22:29—68,138,532,634
22:35-39—147,217,634
22:35-40—50,92,191,269,
272,368,634,1073
22:44—836
அத். 23—691,905,933,934

23:1-4—737,829
23:5-10—705,829
23:12—884
23:13,14—136,137,215,
320,669,708
23:15—215
23:17,19—486
23:23—145,191,215,311,
23:24—215 [320,670
23:25-29—137,210,215,
23:33—136 [320,807
அத். 24—397
24:1,2—350
24:3—388,1087
24:4,5—62
24:8-10—1098
24:11—62
24:14—335,398,509,622,
24:15—71 [1079,1087
24:37,38—957
24:40-42—860,1079
அத். 25—871
25:14-30—80,802,849,969
25:21,23—274,297,456,
518,843,883,888,893,
1078, 1098
25:24-30—381,535,550,
857,870
25:31-46—99,149,273,
347,455,523,591,611,672,
721,852,992,1074
25:40-46—38,185,194,982
26:6-13—355,417,517,535,
26:11-16—536 [927
26:17-21—75,458,920
26:26-29—418,1101
26:31—646
26:33—1044
26:36-45—394,536,926,
938,984
26:39—244,374,392,393,
400
26:40—387,392,698,984,
1034,1044
26:41—201,373,387,392,
1034,1044
26:42—244,374,393
26:47—348
26:51-54—275,937,949,
1060
26:69,75—526,769,929,
1020,1046
27:3-5—1020,1046
27:35—266
27:39-42—1024
27:46—27,207,218,270,
967,973
27:50-53—123,704,965
27:57-60—982,1063,1064
28:6,9—419,881
28:16-20—126,532,539,
615,634
28:18-20—266,359,381,
567
28:19—126,515,532,563,
603,608,634,637,665,686,
742,835,938,1088
28:20—515,518,549,561,
637,938,1088

மாற்கு

1:7—817
1:14,15—835
1:32-36—97,218,337,380,
2:18-22—125 [454,807
3:14—51,270,337,937,984,
3:15—995 [984, 995
3:17—388,408
3:21,22—983
3:31-35—192,1060
4:24,25—51,79
4:35-41—926,1022
அத். 5—650
5:9-13—725
5:18—590,687,716
5:19—522,590,615,653,
687,716,1035
5:20-24—590
5:36,37,40—387
அத். 6—650
6:3—181,972,983,1057
6:4—983,1057
6:5—76,913
6:11—97
6:14,15—813
6:17,18—816
6:31—893,979
6:56—592
7:5-13—137,309,411,703,
8:1-5—273 [704,708,887
8:13-21—478
8:22-25—104,480,537,913
8:31-33—1103
8:34-38—23,173,723,951,
1063
9:1-8—296,306,403,404,
1100,1101
9:14,15,17,18—404
9:30-37—839,928
9:38-40—928,929
10:28-30—638,1003
10:35-45—388,408,928,
720,789
10:46-52—372,573
11:15-17—533,568,718
11:20-24—391

11:25,26—392
12:15—937
12:17—309,708
12:18—137
12:24—189
12:26—385
12:37—344
12:41-44—171,417,535
13:1,2—534
13:3,4—218,388
13:9-11—169,218,614,996
13:31—63,75,92,447
13:35-37—1078
14:3-9—355,417,590,637,
501,660,969,1064
14:9-11—536
14:22-25—418
14:32-35—387
14:32-42—118,347,926
14:57-63—810
14:65—983
15:10—316
15:18-20—983
15:21—347
15:27,28—266
15:29-31—983
15:33-35—394,985
15:37,38—395,965
16:1—1064
16:6,7—526
16:15—569,621,653,665,
687,716
16:15-20—266,326,515,
558,569,618
16:20—66,126,381,515,
548,642,889,938

லூக்கா

அத். 1—411,940
1:4—694,869
1:5-10—410
1:14—354
1:16—1017
1:17—152,667,1017
1:18—1007
1:19—919
1:26-28—346,412,881
1:35—710
1:38—66,281,346
1:39-44—881
1:45-55—410,412,451,976
1:46-59—346,451,943,
1:64—410 [976,1007
1:67-69—33,410,819
1:70—815
1:71—799
1:73—463
1:74—463
1:75—799
1:76—354
1:77-79—33,412,447,819
1:80—336,354
அத். 2—940
2:1-7—941,981,1057
2:8,9—346,413
2:9-20—168,191,338,410,
412,413,580,
2:19—76,368
2:22-24—193,1056
2:22-32—94,113,397,410,
2:34—33,944 [413,414
2:35—390,944
2:36-38—410,414
2:41,42—1056
2:46,47—51,301
2:48-52—76,192,368,412,
972,1016
2:52—59,168,191,301,373,
373, 804,1052
3:2,6—532,719
3:8-14—39,108,185,469,
517,586,667,668,670,748,
818,852,
3:10-16—78,108,139,276,
357,740
3:12-14—708,848,858
3:16,17—296,473
3:18—357,748
3:21—218,699
3:22—191
3:34—134
4:1,2—203,218,336,699,
734,1060
4:5-8—938,1103
4:13-16—203,650,653,
734, 760,865
4:16-20—291,475,514,
593,671,737,760,777,786,
1038
4:22—208,777,847,1031
4:23—650
4:24—937
4:42—565,936
4:43—93,226,291,565,936
அத். 5—769
5:1-11—66,101,281,353,
601,768,770-772,773
5:15,16—337,366,738,865
5:17,18,26—66,720
5:27-29—635
6:10-13—807
6:12,13,20—400,574,738
6:22,23—1098
6:26—818
6:31—883
6:32-36—877
6:40—235,892
6:45—884,1041
6:46—283,567,833

அத். 7—1074
7:7-9—540,916
7:13,14—869
7:14-16—813
7:22—971
7:28—296
7:29,30—135,818,833
7:31-34—191,272,421,893
7:36-48,50—148,221,355,
360, 488,981,982
8:1-3—517,625
8:11—234,641
8:14—370
8:18—75
9:10—340
9:22-26—226,268,271,
292,352,556,775,949, 1027
9:28-36—340,387,403,
404,699,960,984
9:46—404
9:49,50—724
9:51-56—274,388,408,
9:57,58—358 [929,949
9:59-62—636
அத். 10—523
10:1-3—531,540,565,571,
592,612,619,625,636,656,
10:4—746 [686
10:5,6—27,109,218,264,
10:7—746 [514,1009
10:8—835
10:9,11—571,835
10:17-24—154,346,568,
914
10:25-29—139,157,191
10:29-37—138,191,602,
619,642
10:38-42—90,404,949
அத். 11—933,934
11:1-4—114,263,571,686,
699,816,892
11:5-13—373,1044
11:23—592,715
11:24-26—1044
11:43—888
11:47-51—817,1000
12:1-3—137,320
12:4-7—998
12:8,9—41
12:13-15—405,949,956
12:15-21—34,216
12:20-22—356,405,956
12:29,30—356
12:31-34—355,357,405,
547,834, 956
12:32—88,550,560,834,
12:45-48—80,260 [888
12:49,50—468
12:57—762
13:1-9—36,535,757,785,
13:16—593 [1092
13:23,24—1035
13:26—592
13:31-33—937
14:8-11—774,884,888
14:12-14—1079
14:17-20—582,635,685
14:21-23—532,687,694,
14:27-33—358 [716,720
15:4-7—270,632,688
15:5—455
15:6—659
15:7,10—45,455,569
15:9—455,659
15:20—1046
15:23—576
15:25—721
15:28-31—83,899
15:32—455
16:8—883
16:9—1091
16:10-14—79,139,356,
793,848,911
16:19-31—216,279,407,
601,672,1090,1091
17:3-6—217,273,408,927,
17:7-10—1059 [1034
17:15-18—642,654
17:20-25—406,805,833
17:26-29—1037
17:35,36—274,851
அத். 18—30
18:1-8—50,147,218,499,
1044,1078
18:9-14—22,33,36,42,135,
136,221,774,884,1074
18:18-22—279,355,668,
18:24,25—668 [751,1091
19:5—590
19:8-10—108,139,217,
279,355,586,668,670,852,
971,1034
19:29-31—653,716
19:39,40—701
19:41-44—385,491
19:46-48—719,748
20:16—1069
20:17—983
20:23—937
20:27—137
20:37—385
20:46,47—827
21:1-4—707
21:5,6—785
21:10-13—604

21:17-19—998
21:36—1076,1078
21:37,38—338,738,748
22:14-18—928,1101
22:19—418
22:20-26—648,722,890, 985
22:28-30—268,290,408, 836
22:31-33—330,391,890, 991,1044
22:36,38—275
22:39,40—340
22:41—340,346,699
22:42,43—114,252,393, 451,985
22:44,45—698,984,985
22:49—949
23:1—938
23:2—988
23:12—273
23:18,19—983
23:24—965
23:26-31—394,487,489, 492,967,989
23:31—271,305,391,557, 987,997
23:34—24,217,218,971
23:39-43—25,537,966,971
23:46—31,218,419,699, 938,969,975
23:47—206,1063
23:51-53—1063,1064
24:1-3—417
24:6-8—361
24:18,19—813
24:21—172,1008
24:25-27—32,65,81,91, 265,266,748,758,818,949
24:32—68,495
24:36—263
24:44-48—65,163,172,265, 495,566,580,748,
24:47-49—23,266,441,514, 540,737,865
24:51-53—65,427,701, 719

யோவான்

1:1—75,388
1:6-8—215,996
1:9—84
1:12,13—21,26,27,117, 234,263,308,396,1029,
1:14—82,112,291 [1033
1:16—299,811
1:17—190,280,299,377
1:18—82
1:29—215,274,565,1095
1:36,38—274,810
1:40-42—46,219
1:47-51—241,509,810, 1008
2:1-12—431,590,1006-1009, 1011,1099
2:19-21—718
2:24,25—937
அத். 3—136
3:1-3—21,45,540,807, 891,1063
3:4-6—33,45,807
3:8—442,486
3:9,10—33
3:11—5589
3:12—21
3:14—32
3:16—312,564,651,654,
3:19-21—21 [784,869
3:25-27—938
3:29—764
3:30,31—374,562,764,
3:34—473,810 [817,884
3:35,36—473
அத். 4—642,859
4:1-5—504,626,765,807
4:10—403
4:12—937
4:13—1096
4:14—29,811,1096
4:15,16—403,949,1008
4:20,21—123,438,703, 830, 855
4:22,23—62,123,438,564, 703,830,936
4:25—403,810,831
4:26—810
4:28—615
4:29—522,615
4:30-34—103,289,291, 388,479,519,568,573,574, 584, 612,615,936
4:35—568
4:36-38—455,577,584, 644,650, 763,979
4:53,54—1009
5:7—591
5:14—190
5:16,17—749,784
5:35—207,562
5:39,40—81,388
5:44—806,957
5:46,47—407
6:1—768
6:13,14—813
6:23-27—309,1046
6:44,45—195
6:53-55—199

6:58-62—123
6:63—65,92,123,388,737
6:64-71—92,123,388,740, 769,917,938
7:2-4—259,462,886
7:5-9—181,259,886,956
7:14,15—759
7:16—388
7:17—167,261,388,1060
7:37-39—91,117,130,462, 494,496,811,1096,1104
7:41,42—810
7:50—1063
7:52—1008
7:53—462
8:1-11—273,462
8:16,28,29—337,936,1508
8:30-32—60,102,163,496
8:33-36—60,116,444
8:39,41—982
8:42—21,263
8:44—21,136,263,470,797,
8:46—1058 [982,1020
8:48—982
8:53—937
8:56—451
8:57—983
9:1-3—1096
9:4,5—561,862,936
9:17,25,31-38—1035
10:4—685,892
10:10—325,442,569,616, 1059
10:11-13—270,893,918,
10:15—565,917 [1059
10:16,17—226,270,524, 565,632,688,721,917,1038
10:22,23—46
10:28,29—31,970,1022,
10:35—388 [1033
10:41,42—67,152,618
11:2—355
11:3—405,949
11:4,41,42—406
11:6—405
11:7-15—406,560,896
11:21,32—405
11:25,26—129,172
11:40—896
11:49-51—809,819
12:2—417
12:3—355,610,707
12:5,6—139,670
12:12,13—415
12:14-16—361
12:20-25—34,416,542,937
12:26—893
12:27,28—416,949
12:31,32—398,530,833, 1088
12:42,43—806,1035
13:1-5—500,720,770,938
13:5-10—770
13:12-15—885,892
13:27-29—670
13:34—794
13:35—540,678,725,927
அத். 14—438
14:1-4—128,731,962,1079
14:5,6—330,1024
14:12—391
14:13,14—103,402
14:16—112,117,438,734,
14:17—440,1029 [1029
14:21—388,734
14:23—82,173,388,884
14:26—266,361,364,440,
14:27—263,440, [733
14:30,31—322,440,833, 957,1088
அத். 15—36,662
15:1—233,234,496,962
15:2—219,234,496,516, 522,563,658,663,962,976
15:3,4—59,67,233,234, 388,496,663
15:5—221,233,496,663, 790,1021,1062
15:6—233,496
15:7—62,233,234,239, 240,250,388,408,496,663
15:8—219,233,235,240, 496
15:9-11—233,234,236, 237, 450,663,1061
15:12-15—233,234,237, 272,421,794,937
15:16-29—45,102,106, 233, 234,238,239,272,308, 535,663,984,989,1023, 1035,1100
அத். 16—438,729
16:2,3—762,1100
16:7—125,442,834
16:8-10—89
16:11,12—834,866,1088
16:13—112,435,439,733, 841
16:14,15—53,731,741
16:16—650
16:20-22—172,459
16:23,24—130,239,250
16:32—173,337
16:33—85,202,237,263, 264

அத்.17—374,390,571,827,
17:1-3—84,650 [890,957
17:4—228,497,664,747,
17:4-5—747 [936,1061
17:10—83
17:12—140
17:13—450
17:14—1023
17:15—856
17:17,18—59,67,72,79,
300,388,516,749
17:19—300,749,892,935,
936
17:20,21—290,609,678,
725,726,801
17:22—678,705
17:23—302
17:24—962
17:26—303
18:1—390
18:2—392,
18:3-9—536,1060
18:10,11,26—400,526,722
18:37—521,936,995
19:10,11—938
19:26,27—26,192,966,972
19:28—29,266,968,974
19:30—30,936,969,974
19:36—266
19:38-42—1063
20:15,16—419,891
20:17—131,234,263,419,
961,1010
20:19—127,263
20:20-23—65,127,266,513
20:24—920
20:26—263
20:27-29—264,419,1026
20:30,31—91,811,913
அத். 21—769
21:1—768
21:2—1008
21:3—771
21:4-14—269,628,768,
771,772,773,913
21:15-17—51,236,267,
269,448,529,755,771,773,
781,894,1046
21:18-23—268,269,270,
271,292,648,774,839,928

அப்போஸ்தலர்

1:3—547,778,835
1:4—540
1:5—825
1:6-8—94,1077,1079
1:8—94,103,113,117,155,
203,239,266,369,373,429,
441,475,500,509,514,540,
544,548,565,580,582,603,
612,617,627,638,654,657,
665,687,688,690,695,798,
842,889,990,994,1060,1079
1:9-11—128,239
1:13—476
1:14—427,476,701,727
1:15—539,641,727
1:22-25—572
அத். 2—507,542,575,700
2:1-4—212,425-428,459,
468,505,524,540,670,724,
2:6-8—704 [732,825
2:11—428,433,704,732,
2:14-41—527,750 [817
2:16-21—68,397,480,567,
667,733,759,812
2:17—397,425,476,480,
520, 541,545,620,624,657,
667,683,741,812, 814,817
2:17-21—1087
2:18—541,545,624,657,
2:19,20—617 [741,814
2:21—476,520,545,567,
667
2:22-28—172,229,419,
428,453,840,983,949
2:32,33—125,130,426,811
2:34—836
2:36—359,419,811
2:37—428,495,740,748
2:38—540
2:40—106,748,954
2:41—356,428,432,459,
509,539,641,694,727,1030
2:42-44—158,162,166,
189,288,435,506,543,
701,1030
2:44,45—108,185,241,
277,356,429,524,545,
670,678,727,728,1030
2:44-47—149,348,350,
627,505,509,525,658,719
2:47—26,191,428,433,
509,525,619,658,719,
721,971, 989,1102
அத். 3—507,575,681,747
3:1-4—366,392,434,509,
537,575,692,701,718,720,
3:6—527,539 [724, 728
3:8—433
3:12—503,692
3:13—385,503
3:14,15—131,983
3:19-23—145,431,674,
3:24—818 [813,1077
அத். 4—575
4:1,2—137,575
4:4-6—428,539,641,694,
4:10—125 [727

4:12—542,1024
4:13—125,527,545,690,
759,997
4:18-20—284,527,539,567
4:22—681
4:24-26—386,433,539,
577,728
4:27-31—381,572,573,
608,929,1002
4:31—203,373,426,427,
434,441,476,514,523,544,
701,737,819
4:31-35—131,429,434,
678,690,691,727
4:33-37—130,185,266,
274,356,545,627,660,678
5:1-12—277,320,328,432,
470,670,691,719
5:14-18—138,539,592,641
5:28—558,623,654,694
5:29,30—429,527
5:32—203,239,475,514,
540,544,713
அத். 6—891
6:1-7—399,477,505,539,
541,694,701,738,756,
874,1066-1068
6:8—541,698,1067
6:9,10—819,997,1066
6:12—151
6:13-15—151,541,1067
அத். 7—542,747,1066
7:18—885
7:23,23—603
7:32—385
7:37—813
7:47-50—123,350,704,
718,749,830,1067
7:51,53—713
7:52—818,1000
7:54-60—151,541,546,
596,1066-1068
7:60—346,701,992,1067
8:1—509,541,624,627,630,
8:2—695 [694,990,992
8:3—479,1020
8:4-8—541,596,624,642,
8:12—835 [696,749,990
8:18-23—507,674,791
8:25—56
8:29-40—46,476,504,530,
545,733
9:1-20—992,479,601
9:6—244,772
9:9,11—336
9:15,16—1003
9:17,18—479,734
9:19-22—615,657,811,992
9:23-26—657
9:31—47,429,477,546,804
9:40—346
9:43—855
அத். 10—700
10:1,2,4—22,139,427,669,
10:9-11—387 [698
10:19,20—77,476,545
10:25,26—503
10:30,31—427
10:33,34—70,494
10:34-45—545,750,751,
819
10:38—274,441,475,544,
960,751,835,865
10:44—65,425,495,540,
545,669,749
10:45—818
10:46—433,439,751
10:48—545,751
11:12—733
11:15,16—361,733,769
11:18—496
11:19-26—147,274,591,
596,630,964,1068
11:24—241,476,545,694
11:27-30—586,820
12:1-3—388
12:5—574,701,991
12:6-11—102,387
12:21-24—497,789
13:1—591,631,632,683,
816,820
13:1-4—174,195,398,545,
620,665,682,838
13:2-4—340,429,476,565,
574,644,684,686,688,701,
733,774,787,790
13:9—688
13:21—931
13:22—1053
13:26—56
13:34—764
13:36—806,837,893,1053,
13:38,39—83 [1060
13:43—143
13:49-52—237,440,541,
546,688
14:1-15—503,631,694,
774,788,920
14:22—836,1025,1043
அத். 15—644,920
15:1,2—246,506,805
15:3—696
15:6—164
15:7—56
15:8,9—706
15:13-22—63,68,70,397,
428, 566,642,674,733,805,
15:22—506,819 [885

15:28,29—164,476,507,
642,733,787
15:30,31—164,506
15:32—506,683,820,838
15:36-40—505,643,648,
16:3—573 [778
16:6,7—733,787
16:6-10—255,260,476,
606,665,907
16:6-40—226
16:9—603
16:13—340,494,641
16:14—494,521,576,608,
16:15—903 [641
16:16-18—807
16:25—428,433
16:26—693
16:30,31—23,27,90,971,
1033,1042
16:34—450,971
16:37,38—842
அத். 17—542,661,747
17:1-4—296,694,811
17:6—429,558,623,694,
17:7—835,988 [835
17:10-12—71,77,296,301,
382,435,740
17:17—532,592,748,859,
1041
17:22-25—146,415,438,
642,824,830,
17:26,28—28,184,642
17:30,31—1077
18:3—855
18:5,28—811
18:9,10—515
18:24-28—563
19:1-7—113,508,540,818
19:8-10—506,549,643,740
19:10-12—67
19:13-16—540
19:19—327
19:20—506
19:22—1003
19:23—693
19:24-35—952
20:7-11—189,439
20:16—459
20:17-38—785,1058
20:19—342,394,490,776,
777,1059
20:20,21—80,658,754,
776,778,781,1059
20:22—476,565,734
20:22-24—171,227,441,
542,546,754,777,864,
1003,1060,1098
20:23—456,476,565,734,
787
20:24—456,662,754,761,
20:25—835 [837,1061
20:26-28—42,80,740,781
20:27-30—42,80,168,754,
757,760,781,1059
20:28—133,477,546,552,
734,1099
20:30-35—57,79,394,490,
549,764,777,910,1059
20:33—318,658,781,783,
873
20:33-35—333,658,720,
753,754,783,786,1061
20:36-38—346,658,1062
21:3—46,129,1006
21:6—693
21:8-14—1061
21:11-15—479,806
21:19-21—1003,1068
21:27,28—842
23:1—763
23:6—129
23:7,8—123,138
23:10,14—693
23:11—398,515,620,1061
24:7—693
24:15—267,1078
24:16—191,244,543,763,
1034,1044,1059,1068,1078
24:17—910
24:25—267,543,623
26:4,5—129,1006
26:6-8—129,229,1084
26:16-19—103,601,623,
26:20—103,657 [804
26:27-29—49,623,1063
27:9-11,21,22—259,772
அத். 28—543,618,696
27:7-9—661
27:29—693
28:31—835

ரோமர்

1:1—1067
1:4-5—130
1:7—84,377
1:8—174,252
1:9-11—244,340,398,906,
907
1:14-16—152,303,398,
516,522,641,749,952,1035
1:17—30,264,299
1:20-23—413,704
1:24-27—1040
2:4—576
2:10-16—316,495,559,
621,750

2:17-24—706,737, 868
2:46,46—252
3:1,2—91,217
3:3-9—158,207,1070
3:13,14—248
3:23-27—133,207
3:29—520,629
4:3—68,795
4:7,8—444
4:10-12—512,566
4:17-25—129,512,896
5:5—731,794,1084
5:7,8—302,308
5:10—129
5:14,15—21
5:18—21
5:19—285,319
5:20,21—142,190
அத். 6—116
6:1—190
6:2—142,1069
6:3-14—93,115, 121,122,
130,143,172,198,202,212,
245,419,443,1021,1036,
1082,1090,1095
6:15—1069
6:17,18—163,167,748
6:19—212,245
6:22,23—84,122,444,498,
7:1-6—236,729,1095
7:13-25—92,93,203,329,
439,444,905,955,1036
7:25-8:2—329
அத். 8—976
8:1—158,252,444,452
8:2,3—203,730
8:9,10—112,117,203,328,
1037
8:11—130,442,1037,1087
8:12-14—258,359,1037,
1040,1060
8:14-17—26,96,118,234,
246,251,263,354,395,730,
732,820,1029,1033
8:18—104,734,1079
8:19—977
8:22-24—131,173,194,734
968,1079,1086,1090,1096
8:26-31—43,45,87,93,112,
117,157,208,247,261,374,
388,397,439,621,732,734,
938,952,961,1082,1083,
1084,1086
8:31-35—158,239,446,467
8:32—83,91,364,354,473,
8:33—301 [944
8:34—113,130,131,201,
301,324,952
8:35-39—43,112,131,200,
204,268,301,302,324,446,
467,952,986,1001,1002,
1082,1097,1103
9:1-3—244,290,353,385,
399,492,520,544,574,609,
651,663,816,906,920,952,
9:6-8—22,42,727 [1059
9:13-16—134,386,408,
9:23,24—876 [766,1070
9:25,26—42
9:27,29—675
9:30-32—22,42
9:33—675
10:1-3—221,290,340,385,
399, 492,590,544,574,609,
651,663,906,920
10:3-6—22,124,136,831
10:6-8—57,173,265,300
10:9,10—129,133
10:12-15—524,580,593,
608,646,706,816,922
10:15,16—514,516,561,
675
10:16,17—50,281,300
10:20,21—258,524,675
11:2—795
11:3-5—334
11:8-10—479
11:16—39,323,1053
11:17-23—167,237,252,
468,470,479
11:33-36—113,145
12:1,2—34,122,146,212,
244,245,258,284,352,419,
826,956,1035
12:3-8—126,143,802,808
12:9—908 [814,837,1082
12:10—878
12:11,12—237,388,468,
499,1031
12:14,15—103,909,992
12:16-21—217,275,294,
347,786,850,877,977,
1034,1075
13:7—140,309
13:1,2—848,857
13:4,-8—848,857,911
13:11—1033,1079,1086
13:14—894
14:1-10—118,124,125,
131,158,168,190,850,1064
14:13—850
14:14,15—753
14:17—168,440,676,677,
678,1104
14:19,21,22—295
15:1-4—163,294,452,495,
15:5,6—53 [883

15:7—909
15:8-12—53,447,497,564,
684,749,780,788
15:13—86
15:14—879,909
15:30—114
15:32—114
15:15-20—143,289,
566,617,726,754,778,783,
796,913,920
15:20-22—566,581,626,
753,816,1035
15:23,24-29,30-32—114,
598,454,714,784,789,907,
அத். 16—909 [910
16:3-16—583,881,920,952
16:17-20—161,172,242,
748

1 கொரிந்தியர்

அத். 1—35
1:1-13—84,127,158,162,
174,377,504,724,727,765,
788,800,811
1:18-31—24,32-35,37152,
172,184,222,236,343,344,
413,416,551,584,671,704,
766,869,906,919,943,1036
2:2-4—24,61,171,491,494,
2:3,4—739 [790,905
2:4,5—819
2:7-10—744,1089
2:9-15—33,244,330,
439,480,494,731,744,763,
778,790,819,885
2:16—330
3:1-3—293,298
3:3-9—47,234,386,581,
609,643,800,807,842,884,
888,1104
3:9—94,525,919
3:9-15—52,63,169,547,
581,736,795,920
3:10-17—804,842,887,889
3:16,17—203,710,718,
1104
3:21-23—158,704,765,901
4:1,2,5—80,753
4:5—1078
4:6—63,68,790,795,913
4:7—36,296,979,1026
4:8-21—921
4:9-13—80,172,290,582,
4:12—778 [616
4:16—230,922
4:17-19—612
5:1-5—507,921
5:6-8—137,458,507,702
5:9-13—318,856,851
6:3—290
6:14—152
6:15-20—83,146,516,792,
793,848,1039,1040,1069
6:18-20—112,203,212,228,
377,382,442,507,718,793
7:14—331
7:20-24—173,798,808,
846,919,951,1033
7:25—904
7:29-31—957,977,1038
7:40—918
8:1—242
8:2—839,883
8:7-13—242
8:13—753
9:1-15—288,292,791,910,
1010
9:16,17—581,635,749
9:1-23—303
9:19-23—173,663,909,
921,1059
9:22-24—662,1033
9:24-27—245,737,749,
753,842
10:1-4—32,229,565,758
10:5,6—229
10:6,8,10—330
10:11-13—190,229,254,
330,406,758,966,1044
10:14—848
10:16,17—198
10:21,22—723
10:23,24—173
10:29—763
10:31—52,150,433,846,
855,861,927,978,1011
10:32,33—663,789,883
11:1—230,249,753
11:1,2—922,1058
11:3—795
11:5-10—41
11:16—804
11:17-23—722
11:20-34—124,158,197,
198,214,363,418,722,723,
743,961
அத். 12—102,800
12:2,3—414,415,423,731
12:4-6—105,117,726
12:8—66,382,1052
12:7-11—105,117,441,442,
734,744,885,903,1082
12:12-27—434,438,459,
12:15—117 [851
12:20,21—722
12:22-24,26,27,30,39—
103,1102
12:28—581,644,920

12:20-25—814,861
12:38—172
அத். 13—800
13:1-3—508,651,664,
13:3—243 [805,869,929
13:8—500
13:0—913
13:11—294,298
அத். 14—800
14:1—167,683,885
14:2—732
14:3—66,819
14:8—542
14:12,13—469,789
14:14—732
14:15-17—434
14:17,18—340
14:18-20—49,294,295,298
14:24,25—818
14:29,30—815,820
14:31,32—814,820
14:36-38—66,153,167,
14:40—52 [820,918
அத்.15—1081,1082,1083
15:1-5—122,266,267,
542,545,549,641,665,743,
920
15:7-10—49,143,172,299,
641,742,790,908,914,920
15:14-20—122,130,202,
15:19,20—123 [264,690
15:19,28,32—138,216,
229, 232,309,403, 805,123
15:21,22—172
15:23-28—205,390,325,
421,832,836,1103
15:30-38—33,209,232,
292,952,955,1037,1041,
1043
15:42-50,53-55 —131,
444, 1086
15:33-58—123,158,200,
665, 1102,1103
16:1,2—585
16:8—459
16:9—335,744
16:17,18—611
16:22—104,711,1084
16:23—377

2 கொரிந்தியர்

1:3-7—174,305,407,960,
878
1:8-10—131,905,1049
1:12—142,762
1:21,22—703
1:23—907
1:24—753,765
2:4—490,1059
2:7-11—324
2:12-17—135,200,262,
277,448, 460,641,741-747,
753,763,778,782,911
3:2-5—153,225,729,872,
885
3:5-8—159,737,742,885
3:14-18—111,159,306,729,
734,885,1083
அத். 4—761,766
4:1-4—568,573,608,641,
734,744,745,762,763,766
4:4-7—131,154,521,568,
641,742,744,748,749,764,
765,766
4:7-13—265,290,304,745,
746,766,986
4:16-18—104,380,403,
406,766,727,1079,1094
4:17-5:1—1002
5:1-7—380,731,766,1086
5:5-8—83,245,259,265,
406,730,973,1026,1033,
5:9—245,259 [1086
5:10-12—89,807
5:14,15—353
5:15-17—443,830,1029
5:18-6:2—560
5:18-23—56,206,765,828,
861,910,973
6:1,2—79,142,622,765,
972
6:3-11—47,57,153,154,
170,171,791,908,915,942,
6:7—57 [977,1036, 1094
6:14-18—106,112,209,
311,337,955,1010,1043
7:1—210
7:2,3—903
7:4,5—237,494,745,839
7:8-11—43,210,341,470,
488,703
7:12,15,16—304
8:1-7—143,171,228,330,
311,355,417,501,610,791
8:8,9—501,585,1061
8:10,11—500
8:14,15—194,383
8:18-23—910
8:20,21—139
9:6-10—39,195,235,311,
358,548,642,665,670,708,
1059
9:11-15—417,669,670,
1059
9:13-15—83,228,355
10:4-7—41,153,203,626
10:8—789

10:9-11—907
10:12-18—626,753,754, 781,788,802,807,808,837, 920
11:2-4—62,159,236,730
11:12—777
11:13-16—62,131,159, 201,323,614,730
11:22-33—129,907
11:23-28,31—379,778, 789,796,816
11:28,29—290
12:1-4—913
12:6,7—36
12:7-10—130,143,155, 171,252,377,407,745,778, 905,911,949,980,987
12:11-13—289,305,921
12:15—754
12:14,15—295,303,304, 358,553,663,778,781,789, 791,805,828,869,893,910,
12:17-19—789 [952
13:1—246
13:4—131,171
13:8—790
13:10—907
13:11—178,724
13:12—881
13:14—155,619,959,1029

கலாத்தியர்

1:3—84,377
1:4—114,444
1:6-10—53,154,174,146, 246,641,753,788
1:9-11—763
1:15-18—259,336,635
1:18,19—920
1:23,24—788
2:1,2—245
2:4-6—115,125,754
2:8—726
2:9,10—181,185,194,273, 378,671,801
2:11,12,14—648,763
2:17—1069
2:18—142
2:20,21—115,142,172, 288,374,445,894,1021
3:2,3,4—117,159,730,795,
3:8—566,646 [799
3:11—30,264
3:13—32,117,125
3:14,16,22—117
3:24,25—536
3:26-28—1010,1102
அத். 4—118
4:3-5,7—118,298,831
4:9-11—816
4:16—164
4:19—30,816
4:28-30—68,727,795,988
5:1—119,120,246,730
5:4—30,142,159
5:9—137
5:13-18,22-25— 88,119, 120,246,272,275,304,434, 438,439,441,452,559,709, 711,903,909,955,1040,
5:15—88 [1082
5:19-23—21,37,38,203
5:24—199
6:1-5—120,271,274,878,
6:10—1007 [885,909
6:14-16—122,197,199, 349, 553,881,954,1070
6:17—433
6:18—377

எபேசியர்

அத். 1-6—675
1:1—903
1:2—677
1:3-6—45,83,121,168,174, 508,678,680,1081,1104
1:5,9—114
1:7—179
1:15-23—101,130,157, 202,301,340,374,494,549, 678,680,730,781, 890
2:1-3—101,130,198,280, 319,322,956
2:4-6—101,121,130,377, 832,1081
2:7-10—22,30,31,33,45, 84,99,102,133,144,160,265, 308,377,974,1033
2:11-16—28,33,126,198, 360,418
2:14-17—390,513,677, 706,727,679
2:19-22—28,288,463,566, 675,720,1007,1104
3:5-7—155,566,815,820
3:7,8—49,679,680,761
3:10—743
3:14-21—340,374,473,731
3:17-19,20—25,45,87, 88,202,205,296,301,444,
3:20,21—406,1089 [680
4:1-6—294,310,541,677, 724,727, 909
4:7,8—91,121,380,678, 680,1082
4:7-13—78,126,130,164, 380, 581,677,726,917,920, 921,1082,1084

4:11-16—47,117,159,164, 168,195,292,294,295,298, 299,301,302,304,306,359, 656,664,677,727,734,755, 840, 891,1082
4:17-24—675,676,790, 804,1035
4:24-27—211,213,317,443
4:25—38
4:25-32—96,157,213,676, 712,730,851,876,1034, 1041,1078
4:31-5:2—147
5:1,2—303,419,352,469, 822
5:3,4—37,38,213,318,
5:5—223,276 [676,1085
5:6—446
5:7,8—1030
5:8-13—21,37,142,734, 804
5:11,14—333,381,625, 680,1030
5:16-19—247,260,862, 1031,1072
5:18-21—97,342,428,434, 436,439,445,452,453,676, 711,719,732,878,909,1011
5:21-23—48,97,109,195, 382,677
5:21-6:9—327,795,806
5:25-29—48,59,67,88, 192,236,297,333,469, 674, 675,784,1077,1086,1101
5:30,32—1102
அத். 6—603
6:1-4—109,218,677,973, 1016,1017
6:5-9—53,677,806,850, 857,862,978
6:10-20—163,166,177197, 200,203,266,322,327,328,335, 391,440,451,514,524,576, 608,618,641,677,678,695,732, 744,829,991,1036,1042,1072
6:18-24—103,289,327, 399,494,521,608,646,677, 679,745,784,819,904,929

பிலிப்பியர்

1:1—226,1067
1:3,4—340,906
1:5—223,225,554,1085
1:6—174,228,230,557, 843,966,1022
1:7—220,225,232,554,999
1:8—906
1:9—302
1:10,11—228,229,557
1:12-18—222,225,232, 554,555-557,606,661,779, 930,990,999
1:20-26—227,228,999, 1090
1:27—224,225,289,554
1:28-30—227,557,898, 993,1025
2:1-4— 117,222,229,271, 273,554,712,776,878,880
2:5-11—35,53,171,226, 275,285,291,347,359,398, 448,497,554,557,664,750, 780,800,866,888,916,927, 943,1059,1088
2:16—222
2:12-16—554
2:12,13—225,230,244, 285,494,498,604,639, 748,1033,1059
2:14,15—222,847,859
2:15-17—57,225,228, 555,663,779,847,849,893
2:17-19—226,303,353,455
2:17-21—230,789,828, 839,873
2:19-30—220,223,225, 226,248,304,305,555,612, 779,904,905,918,1086
அத். 3—231,232
3:1-7—304,450,555
3:3-9—22,33,36,46,49,91, 96,101,125,129,136,157,117, 221,229,300,301,438,445
3:10-11—229,301,997
3:12-16—82,90,178,220, 221,224,227,229,754,839
3:15-17—230,232
3:17-21—24,104,123,223, 228,229,277,334,490,506, 740,775,779,804,816,873, 922,930,1101,1104
4:2-5—222,223,225,555, 880,910
4:4-9—59,84,86,98,172, 176,177,225,228,229, 232,237,248,249,264,293, 375,385,449,450,454,456, 554,555,750,852,892,922, 979,1031,1040,1078,1094
4:10—556
4:11-20—193,223,225, 228,278,357,517,556, 587,610,616, 708,779,783, 828,910,1021,1104

கொலோசெயர்

1:2—903
1:4—174
1:9-12—114,162,249,261, 305,374,743,890,904

1:13,14—197
1:24,25—898,986,997
1:26-29—82,101,102,112,
2:8—159 [351,561
2:9,10—102,615
2:11,12—152
2:12,13—130
2:14,15—125,390
2:16-23—159,168,302,730
3:1-4—123,126,216,228,
276,955
3:5-8—22,223,276,286,
318,446,470
3:7-15—126,221,223,293,
443,877,884
3:16-24—52,53,56,65,
80,81,97,150,189,213,
342,436,447,453,496,879,
767,846, 858,868
4:2-4—499,521
4:5,6—853,860
4:7-17—351,714,837,904,
921

1 தெசலோனிக்கேயர்

1:2-4—174,290
1:5—778
1:6-8—80,496,551,656
1:10—113
2:5—780
2:9—778
2:19,20—290,563,676
3:3-5—85,159
4:1-8—247,320,710
4:10-12—860
4:13-18—456,879,1079,
1084,1090,1091,1097
2:9—1079
5:11,14—878
5:16-24—289,452,468,
638,712,713,843,872,909,
1022,1078,1085,1094

2 தெசலோனிக்கேயர்

1:3-6—174,836
1:7-9—601,1088
2:1-3—159
2:7—253
2:8—1088
2:9-13—117,159,473
2:15—288
2:16,17—144
3:1-4—127,494,528,573,
3:6—288 [649,784,1003
3:6-12—778,849,855,860,
3:14,15—880 [928

1 தீமோத்தேயு

1:1—901
1:3-5—158,164,167,175,
902
1:5-7—168,244,901,908
1:4,9—160
1:12-16—48,49,93,96,
360,761,776,901,904,914,
1:19—1040 [1020
1:20—921
2:1-7—28,98,311,396,
399,521,564,572,602,621,
649,654,686,687,714,
858,859,902,921
2:8—146,191,222,
2:9,10—349
3:1—97,901
3:3,8—140
3:2-5,7—48,97,192,218,
794,806,901,1068
3:11—212
3:13—774,1067
3:16—448
4:1-3—62,133,160,323,
4:4—922 [397,902
4:5—902
4:6—164
4:7-9—96,223,295,403,
800,902
4:12-15—169,211,223,
295,759,760,791,801,820,
838,902,1058
4:16—749,791,842,902
5:1-3—740,919
5:4—97
5:8—359
5:13—660
5:16—972
5:17,18—646,781,901,
902,917
5:21,22—649,885,902,919
5:23—325,646,918,928
5:25—902
6:1—97,857
6:2—857
6:3-5—160,163,324,780
6:6-11—29,39,140,216,
223,276,277,318,383,507,
585,670,791,793,840,848,
858,902,1043,1061,1092
6:12-16—265,322,521,
537,560,901,995,1088
6:15—322,421
6:16—82,113,171
6:17-19—34,354,405,672
6:20,21—50,1028,1042

2 தீமோத்தேயு

1:1—901
1:3-8—46,155,165,175,

217,245,295,340,342,383,
394,442,490,515,549,603,
617,777,902,922,929,995,
999,1007,1045,1060
1:11—617,921
1:12—31,329,451,638,
970,1022,1042
1:15—999
1:16-18—611
2:1—200,299,691
2:2—78,169,778,902,912,
921
2:3-6—200,433,542,562,
775,788,836,866,996
2:5—52,63,805
2:6—76,494,737,791,1051
2:7—820,843
2:8-13—98,132,165,268,
559,836,953,993,995,1079
2:15—78,902
2:16-18—160
2:19-22—163,167,204,
208,239,516,742,792,799,
848,902,962,1030,1034,
1038,1040
2:24-26—496,777,902
3:1-5—141,152,212,222,
331,356,469,485,850,884,
3:7—72 [972,1026
3:11-13—989
3:14-17—42,77,158,162,
166,190,217,266,296,301,
359,757,791,902,1007,1040
3:14-4:2—740
4:1-5—69,158,164,166,
324,397,539,560,567,621,
641,740,742,755,757,763,
781,801,835,837,901,
1079,1088
4:4-7—226,230,290,322,
436,567,662,775,767,820,
828,838,901,1061
4:8—502,901,1091
4:10—956,1043,1061
4:13—339,838
4:16,17—173,516,739,
744,839,893,999
4:17,18—767,901

தீத்து

1:4,5—778
1:5,12—175,562,633,651,
1:7—140 [849
1:9—164
2:1—164,763
2:9,10—857
2:11-13—72,142,1038,
2:14,15—390 [1078
2:8—99
3:9-11—160
3:14—99,237

பிலேமோன்

வச 7—175
வச 22—611

எபிரெயர்

1:1-3—175,281,810,814
1:7—863
1:8,9—210,235,452,473,
810,829,831,1050,1088
1:13,14—41,338,836,943
2:1—281
2:2,3—89,282,451
2:4—89,264,451
2:6—144,378
2:8—173
2:10—43,117,121,961
2:11-13—234,263,303,
961,1029
2:14,15—197,390,444,
966,1103
2:17,18—291,823,877,973
2:18—253
3:1,2—274,285,288,291,
823,1049
3:5-8—283,713,1049
3:12-15—50,204,281,284,
304,379,1042,1045
3:14-19—281,498
4:2—76,281
4:7-11—201,287
4:11-13—60,67,72,78,215,
216,282,284,315,495,950
4:14-16—84,130,143,173,
181,200,202,239,253,372,
395,402,823,877,965,973,
5:1,2—777 [1034
5:4,5,9—823
5:7-9—218,291,394,406,
948,949
5:8,9—117,286,777
5:11-14—57,161,295,298,
6:1,2—295,822 [839,891
6:5—57
6:7,8—496
6:10-12—501,564,870
6:12,14—823
6:19,20—395,521,823
7:2,15-17—264
7:9,10—311,821
7:11-17—821
7:24-27—87,106,127,130,
186,209, 218,291,379,572,
699,821,824,890,938,955
8:1,2—160,190,821,824

8:6,7—28,824
8:8-13—43,142,190,418,
9:7—961 [891
9:12—199
9:14—41,124,133,199, 201,308,822
9:11-15—43,461,824
9:22—133
9:26-28—122,444,1079, 1085
10:5-7—51,75,122,201, 291,419,826,936,949
10:7-9—258,1037
10:10—291,826
10:15-18—83
10:19-22—28,84,198,418, 443,720,825
10:23—42,472,825
10:24,25—42,51,720, 1007,1045,1078
10:26-31—42,470,713, 1075
10:32-35—356,362,517, 566,577,633,713,1098
10:35-39—30,42,242,260, 264,472,825,1044
அத். 11-12:1—356,362,758
13:1—959
11:3—67
11:4—133,818,1091
11:5—171
11:6—374
11:7,8—281,282,285, 1027,1048,1060
11:8-11—259,284,805, 1104
11:13-16—42,998,1050, 1104
11:17-19—827,1049
11:22-27—104,285,594, 603,605,767,838
11:28,31—197
11:33,36-38—285
11:34—171,905
11:35-38—132,260,616, 993,1002
11:39—1050
அத். 12—959
12:1—285,1027,1045,
12:1-3—569,1097 [1091
12:2—45,237,265,451,825, 836,963,1021,1027,1045
12:3—324
12:4—1034
12:5—362
12:5-10—43,119,286,362, 446,961,960
12:11-13—98,238, 804,962,963,998,1016
12:12-15—38,143,876, 961,1078
12:16,17—42,134
12:22-25—40,44,87,198, 751,822,1091
12:22,27—204
12:26-28—767
12:28,29—143,468,691,
13:1—500 [795,1079
13:3—992
13:4-6—318,319,357,973, 1037
13:8,9—142,163,362,831,
13:11-14—825,952
[938
13:12-16—38,43,139,149, 213,404,532,602,600,603, 619,669,826,828
13:20,21—199,822

யாக்கோபு

1:1—1180
1:2—175,181
1:4—305,1050
1:5-8—186,301,372,852,
1:9-11—171,186 [1052
1:12-16—182,252
1:16,17,19—181,751
1:19-21—183,209,345, 882,886
1:21-25—60,67,76,78,180, 368,370,495
1:26—37,182,208,211
1:27—106,108,180,181, 182,668,954
2:1-4—181,471
2:1-13—184
2:5—181,671,834,193,255
2:10-13—877,1074
2:14-17—99,139,160,181, 185,194
2:17-20—180,181,242
2:21-26—241
2:23—238,337,421
3:1,2—37,208,211,746, 847,867,1041,1050
3:1-12—181,182,183,211, 213,882
3:8-13—38,148,850
3:13-18—183,209,222, 237,317,382,472,762, 877, 878,881,908
4:1-3—183,586,690
4:3,4—387,393
4:4-6—106,115,143, 181,182,203,221,238,253, 481,690,691,711,764,771, 795,865,908,957,1063
4:7-10—182,201,488

4:11,12—181,183
4:13-17—114,115,187, 249,250,258,488
4:17—186,250
5:1-3—488,672
5:7-10—180,181,183,644, 817,1000
5:11—1050
5:12,19—181,183,208,470
5:13-18—187,392,427, 444,705,720,816,824,882, 961,1067
5:16,19,20—184,455

1 பேதுரு

1:2—198,440,473,710
1:3-5—157,175,1044,1079
1:5-10—1094
1:6-9—86,172,237,264, 1033,1042,265,528,749, 774,898,976,
1:10-12—84,111,819,1001
1:10-19—894,895,900
1:13-17—22,117,310,311, 473
1:17-19—35,110,197
1:20-22—110
1:23-25—69,79,110,234, 447,769
2:1-3—47,60,79,80,96, 110,167,211,345,367,769, 895,900,1031
2:3-5—463,675,718,784, 900,1048
2:5,9—47,110,124,447, 527,567,600,619,655,714, 826,896,900,1048
2:7-10—513,541,560,567, 624,726,828,832,861,863, 895,900
2:11-20—110,114,332,860,
2:13-23—951 [896,978
2:15,16—114,608,899
2:18-22—378,774,850,858
2:20-24—211,242,378, 418,599,858,896,981,1011, 1025,1086
3:1-7—48,896
3:3,4—173,349
3:6—1012
3:7—48,900
3:8-18—176,881,897,1041
3:10-12—177,208,211,882
3:14—529
3:15—527,860
3:16-18—774,1001
3:20-22—110,122,130,897
4:1-4—114,122,1001
4:4-9—387,898
4:10,11—66,110,527,769, 900
4:12-14—111,529,734,749, 775,898,993,1001
4:14-16—150,170,290, 928,1025
4:14-19—89,110,280,719
5:1-3—736,755,899
5:4,6—110,171,894
5:3-5—143,900,917,919
5:5-7—898,1026
5:7-9—85,324,375,387,899
5:8-10—529,993,1011
5:10,12—900

2 பேதுரு

1:3,4—87,93,175,241,323, 930,955
1:5-9—38,50,237,241,304, 360,478,1033
1:8-15—564
1:10,11—798,837
1:16-21—56,68167,217, 304,387,435,439,528, 559,736,755,769,814, 815, 912,1077
2:1-3—160,528,816
2:5-9—377,1037
2:14-16—135,556
3:1-4—160,528,815
3:7—471
3:9—502,569,622,769
3:10-12—88,387,1077,
3:12-14—387,502 [1089
3:13—89,104,378,471, 1025
3:15,16—160,296,528, 726,736,914
3:18—296,301
3:13—89,104,378,471, 1025

1 யோவான்

1:1—175,388
1:3—559
1:4-9—107,452,461
1:7—197,198,201,232, 770,895
1:7-10—21,43,107,372, 822,831,1020,1084
2:1—25,43,113,117,239, 252,330,566,895
2:2—520,530,566,580,629
2:5—388
2:9—703
2:11—478
2:12-14—297,388,740, 759,839,891

2:14-17—60,107,115,204,
216,245,251,258,311,930,
955,1038,767,771,833,1006
2:22—811
2:26,27—169,733
2:29—750
3:1,2—93,231,234,914,
987,1029,1077,1086,1101
3:3—228,1077,1101
3:7—206,300,236,750
3:8,9—22
3:8-13—1024
3:9-11—237,310,317
3:12,13—133,153,317,988
3:14—23,26,310
3:15—706,317
3:19-21—321
3:22—388
3:23—237
4:1-3—160,323
4:4—157,202,322,751,
857, 1021,1037
4:6—326
4:12—302
4:16-19—236,267,302,
523,529,812
4:20,21—139,148,191,
237,242,272,302,703,794,
1075
5:1-3—22,23,51,91,267,
280,310,319,388,771,
5:3-5—1021 [811,1061
5:4,5—265,857
5:7—26
5:8-11—198
5:10-13—26
5:14-17—91,250,388,393
5:18—1034,1036,1039,
5:19—1088 [1044
5:20,21—91

2 யோவான்
வச 1-4—175,388
வச 9—133
வச 10,11—242,388,507

3 யோவான்
வச 2—175,223,616,806
வச 4—388
வச 5-8—584,611,616

யூதா
வச 3,4—143,160,175,869,
வச 8,12—39 [988
வச 11—135,556,764
வச 14—819
வச 20—732,963,1045
வச 24,25—681,970,1022,
1045, 1095,1101

வெளிப்படுத்தல்
1:5,6—197,810,825,832,
1:6—1104 [856,995
1:8—831,1021
1:9—273,836
1:11—1021
1:17-19—127,262,1021
1:20—249
அத். 2—75,102,297,614,
681,683
2:1-5—315,508,684,771
2:4—51,498,711,979
2:6—140,141
2:7—234,322,432,711,
713,739,1096,1103
2:8-11—132,133,315,713,
739
2:10—499,599,993,994,
1002,1003,1087,1103
2:11—75,322,432,1103

2:12,13—61,315,994,1003,
2:14,15—140,161 [1103
2:17,29—75,432,713,739,
2:19—315 [1103
2:20—161
2:21,22—320,711
2:23—315
2:26,27—234
அத். 3—75,102,297,614,
681,683
3:1-4—315,485,543
3:2—141,599
3:6—75,713,739
3:7-9—251,681
3:8—315,599,1037,1087
3:10-12—961,1087
3:12—234
3:13—75,713,739
3:15-20—141,315,332,
480,485,680,681,691,958
3:20-22—75,205,234,262,
290,709,713,832,939
4:6—863
4:8-11—412,420,705
5:5—1055
5:6—316
5:8-13—199,443,446,448,
705,825,827,832,947,1099
6:1—1099
6:9-11—43,1044
6:16—947,1099
7:9-15—87,88,151,197,
397,415,846,1099,1102
7:17—943,1099
8:3,4—705,713
10:7—835
11:8—199
11:15—835

12:10—25,201,212,297,
833,1033
12:11—199,201,324,833,
12:12—200,1087 [1001
12:15—65
13:8—32,45,947,1099
13:10—306
14:1,4—42,1099
14:3—443
14:12—306
14:13—1090,1091
15:3—947,1099
16:13—65
17:14—903,915,1003,1099
18:1-5—889
18:2—853,1089
18:4,5—853
18:20,24—993
19:1—412
19:2—993,1100
19:6-9—1089,1093,1099,
1101

19:7,8—333,681,947,
1078,1096,1100
19:9—418,947
19:10—327,404,504,620,
819
19:11-21—205,903,1102,
19:13—65 [1103
19:16—291
20:1-3—1089,1102
20:10—1089,1095,1102
20:12,13—1081
20:14—23,1102
21:1-4—968,1090,
21:1-27—1099,1103
21:2—889
21:4,5—456,1086,1096,
21:8—23,470 [1098,1104
21:9—947
21:11—1085,1104
21:12—1104
21:14—42,947,1104

21:18-21—508,1104
21:22,23—947,1104
21:27—205,444,1020,1095
22:1-5—947,1096,1099,
22:6—815 [1104,1105
22:2—169,461
22:3—846
22:7—113,1099
22:8,9—327,404,504, 820
22:11—169,300,509,1038,
1078
22:12—113,219,535,1038,
22:15—1020 [1078
22:16—475,1055
22:17—29,89,240,475,
486,494,546,566,974,1105
22:19—42
22:20,21—94,113,144,
178,377,456,502,862,1084
1089,1105

(கவனிக்கத்தக்கது: மிக அதிகமாய்க் கையாளப்பட்டுள்ள
வசனம்: **அப்போஸ்தலர் 1:8**)



பொருள் அட்டவணை Subject Index

இந்நூலிலுள்ள 200 பிரசங்கக் குறிப்புகளை (Outlines) ஆயத்தப்படுத்திய போது 550 கருப்பொருள்கள் (Subjects) இடம்பெற்றுள்ளன. அவை இங்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வட்டவணை முழுமையானது என்று சொல்வதற்கில்லை. விடப்பட்டவை இருக்கலாம். மட்டுமல்ல, இவ்வட்ட வணையில் சில குறிப்புகள் திரும்பத் திரும்ப வருவது தவிர்க்க முடியாதது.

அகத்தூண்டல்: 397, 398,415,545,639,746,757, 819,871,922

அகற்றல்: 324,327,850

அக்கிரமம்: 27,426,492, 702,831

அசட்டை: 297,308,309, 415,569,850,865,1073

அசல்: 551,781

அசௌகரியங்கள்:286, 942,945

அடித்தளம்: 61,224,248, 288,289,291,297,308,359, 363,581,792-797,799,801, 802,895,920,947,1051,1092, 1104

அடிபணிதல்: 41,44, 201,252,324,412,448,451, 452,466,773,806,879,916, 919,1011,1059

அடையாளப்படுத்துதல்: 112,198,289,291,347,399, 455,551,942,992,1036,1050

அதிகாரம்: 56,201,239, 280,307,320,326,332,359, 412,421,532,539,540,567, 678,742,753,765,789,795, 823,825,835,850,857,858, 875,901,916-919,921

அதிகாரத் தோரணை: 879,919

அதிசயங்கள்: 351,362, 363,507,692,1067

அநியாயம்: 378,449, 471,858

அபிஷேகம்: 480,780, 812,822,1106

அப்போஸ்தலத்துவம்: 130,288-291,539-543,708, 849,855

அப்போஸ்தலர்: 33, 159,288-291,327,347,349, 377,436,507,541,566,567, 581,583,644,647,648,674, 675,774,776,779,801,805, 920-922,947,1002,1010, 1067,1104

அமைதி: 676

அயலகம்: 455,639, 653-661,687

அரசர்: 283,288,291,322, 800,819-812,831-836, 1011,1095

அரசியல்: 649,762,780, 787,809,988

அரசு: 288,297,439,496, 502,506,531,539,560,767, 800,833,834,841,842,1011, 1013,1074,1098

அருள்மாரி: 397,827

அர்ப்பணிப்பு: 289,359, 451,461,498,524,540,557, 638,702,798,856,857,859, 872,898,912,915,936,941, 952,969,975,1021,1022,1042

அவசரம்: 667,725,862, 1092

அவிசுவாசம்: 127,281, 310,478,998,1042

அவிசுவாசிகள்: 280,311, 312,496,798

அழகு: 173,337,349,835, 896,897,1031,1032

அழித்தல்: 289,316,323-327,390,468

அழுகை: 341,394,426, 487-492

அழைப்பு: 220,227-230, 281,283,285,286,289,290, 292,318,327,352-358,364, 411,415,443,481,483,486-492,512,596-607,634-636, 639,640,681,688,740,741, 755-760,762,798,802,804, 808,837,838,846,847,869, 870,903,936,994,996,1024, 1027,1033,1089

அறிக்கை: 783,796,797, 911- 913

அறிக்கையிடல்: 41,44, 107,108,118,146,201,212, 312,314,318-320,323,347, 379,392,416,426,446,447, 460,472,474,484,490,770, 882,905,923,955,995,1053

அறியாமை: 260,461, 531, 573,582,640,659, 760,781,832,913,914

அறிவி: 303,304,447, 852,1037

அறிவித்தல் (Declaration): 447,448,486,555,852,853

அறிவித்தல் (Proclamation): 213, 303,304,381,441,447,460, 521-523,527,619,741,819, 820,825,824,829,835,896

அறிவியல்: 313,332, 406,507,515,693,772,787, 1026,1067,1087

அறிவு: 183,229,242, 259,296,301,335,435,442, 479,482,743,744,772, 885,890,913,917,1035, 1049,1052,1088

அறுவடை: 521,545, 568,570,641-645

அற்புதம்: 66,67,153, 194,362,507,600,618,628, 664,671,692,749,768,770, 771,869,943,944,1008

அனுதினம்: 376-380, 770,947-953

அனுபவம்: 67,68,167, 338,402,443,495,736,741, 755,769,805,815,865,914, 941,1095

அனுப்புவோர்: 580, 608-613,637,646,656

அன்பு: 44,50,51,53,92, 118,120,147,148,175,183, 191,206,207,216,233,236, 243,252,267-275,302, 308,310,311,324,332,333, 337,354,368,409,444,481, 484,498,500,502,508,529, 557,558,560,564,603, 660,669,678,684,691,711, 731,732,758,771,775,779, 794,800,822,833,834, 840,842,869,896-898, 908,910,927,929,948, 959,963,971,1001,1015, 1024,1029,1030,1032,1043, 1061,1074,1075,1080

ஆக்கினைத் தீர்ப்பு: 297,301,324,329,333,352, 571,600,608,1082,1100

ஆசாரியன்: 69,124,130, 411,426,447,490,494,527, 541,560,624,655,687,761, 762,800,801,809-812,821-830,831,832,861,911,912, 924,1014,1051,1095, 1104

ஆசீர்வாதங்கள்: 106-109,117, 170,174,197-199, 229,232,251,255,257,294, 301,305,331,353,363,374, 376,378,384,386,403,412, 414,451,460,464,467,468, 472,482,484,493,501,512, 513,563,616,680,767,784, 786,789, 791,824,827,846, 883,897,925,933,941,947, 950,987,1014,1026,1081-1092,1104

ஆடுகள்: 283,568,755-760,781

ஆணை: 94,266,289, 515,518,539,560,567,634, 640,665,771,996,999,1088

ஆதிநிலையேகுதல்: 58,70,73,145,153,189,233, 295,333,341,352,397,424, 428,431-437,463,481,484, 526,536,541,619,655,671, 674,676,677,689,701,821, 827,834,885,1039

ஆத்துமாதாயம்: 219, 303,413,455,499,516,519, 522,537,538,560,563,569, 591,612,635,644,655,656, 657,659,687,715,759,773, 774,779,938,1038,1067

ஆபத்துகள்: 506,521, 574,609

ஆயத்தம்: 427,736,740, 744,757,1057

ஆயர் (Pastors)**:** 69,334, 419,505,595,654,683,685-688,699,717,736,755-760, 786,808,838,891,916,918, 919,921

ஆராதனை: 34,35,47,65, 71,110,113,139,145-151, 189,191,213,217,218,222,271, 298,302,308,318,319,325, 340,344,347,351,360,363, 364,366,370,371,386,389, 395,396,404,410-423,428, 433-435,438,439,443,445, 447,448,453,459,463,466, 474,501,544,555,557,599, 600,604,619,669,670,676, 684,703-705,707,719,732, 741,747,783,820,826-829, 834,855-860,896,925, 927,947-949,958,976, 1013,1022,1038,1054, 1067,1101,1103

ஆராய்தல்: 321,372,749, 775
ஆலயக் கட்டிடங்கள்: (Buildings) 718-721,785
ஆலயம் (Temple): 30, 58,83,112,123,134,146, 192,349,350,395,442,462, 463,532,533,537,614,674, 675,710,718,829,864,947, 1054,1067,1104
ஆலோசனை: 305,326, 327,381,470,636,757,772, 775,802,820,828,878, 1007,1027
ஆவியின் கனி: 434, 441,711
ஆறுதல்படுத்துதல்: 66, 174,285,305,429,452,456, 475,495,501,546,734,761, 775,819,825,870,878,941, 942,981
ஆனந்தம்: 786,944,945
ஆன்மா: 175,290,377, 508,530,545,663,771,1091
ஆன்மீகத் தேவை: 193,245,292,298,303,344, 348,373,377,399,403,404, 485,488,494,499,506,507, 519,703,704,727,786,790, 796,805,809,826-828,830, 832,850,885,897,916-919, 926,931,976,1001,1013,1067, 1075,1082,1090,1104
ஆன்மீகமற்றது: 790, 795,855,861
இக்கட்டு: 47,101,331, 367,406,555,769,864,918, 932,1049,1067
இசைவு: 851,854,862, 863
இச்சை: 39,42,44,60, 122,245,280,311,330,349, 551,859,894,895,902,933, 1038,1040,1076
இயற்கைக்கப்பாற் பட்டது: 138,411,486,773,1087
இயேசுவின் இரத்தம்: 28,35,41,43,67,124,197-199,201,324,379,418,452, 552,567,629,770,775,822, 833,895,965,1033,1099
இரகசியங்கள்: 316,317, 327,330,341,414,539-543,769-775,909
இரக்கம்: 239,305,314, 376,377,384,386,420, 474,573,745,761-767,823, 848,876-881,901,914, 1022,1072,1081
இரட்சகர்: 21,23,91,131, 267,403,491,540,565,847, 952,968,972,978,1050,1051
இரட்சிப்பு: 21-23,26-28, 30-35,40-44,45-48,56,84, 89,90,96,99,121,142,152, 215,280,315,328,337,360, 364,377,397,408,444,450, 451,488,489,508,516,522, 530,544,559,578,621,658, 660,663,769,776,818,894, 943,952,971-976,982, 1020,1024,1033,1035,1059, 1079,1080,1082,1085, 1094-1096,1104
இரண்டாம் வருகை: 88,89,94,95,104,113, 144,159,180,181,205,228, 290,418,455,456,502,528, 563,569,615,622,667,672, 677,729,769,843,878,963, 1077,1080,1084-1089
இரத்தசாட்சி: 43,388, 436,500,537,557,567,828, 988-994,1001,1060
இருதயம்: 50,211,225, 232,235,269,270,298,312, 315,316,333,334,335,342, 348,358,371,376,378,380, 426,440,443,471,481,487, 490,494,499,520,521,545, 553,557,603,604,608,624, 641,731,738,745,747,748, 865,866,897,912,962,1041, 1042,1053-1055
இருள்: 197,260,316,394, 439,451,478,518,552,639, 915,963,968,973
இலக்கு: 229,231
இளைஞர்: 285,297,299, 303,338,522,533,596,597, 624,632,637,759,772,840, 942,1027,1039
இளைப்பாறுதல்: 114, 119,264,287,677,678,846, 873,874,1106
இறக்கம்: 318,780,799
இறுதிக்காலம்: 158,159, 166,222,323,331,332,356, 397,469,740,843,902,1026, 1087
இறைச்சித்தம்: 114,115, 120,186,208,244-250,258-261,349,373,388,393,451, 479,488,572,615,665,767, 806,837,856,862,901,907, 930,949,950,979,1027,1038, 1053,1056,1060,1061,1075, 1078

இறைப்பணியாளர்: 475,485,505,523,554,759, 765,779,802,816,837,863, 1051,1069
இறைப்பிரசன்னம்: 28, 82,83,93,336,370,381,425, 426,453,456,465,515,516, 619,720,731,840,897,919, 1006,1049,1059,1074,1097
இறையரசு: 23,297,357, 390,398,421,440,473,476, 493,547-553,571,573,676-678,694,750,767,784,791, 833,846,945,1104
இறைவனது குணங்கள்: 110-113, 315,371
இனம்: 322,662,1033
இன்பங்கள்: 294,400, 414,469,470,473,529,782, 940-942,957,974,1038
உடல்: 130,145,146,159, 175,228,245,283,294,302, 304,377,382,390,419,442, 516,862,968,1039,1040, 1086,1087,1091
உடல் சார்ந்தது: 134, 223,372,373
உடனடி: 283,767,790, 804,846,867
உடன்படிக்கை: 301,385
உணர்ச்சிவசம்: 469, 506
உணர்வின்மை: 869, 1045
உணவளித்தல்: 755-760,806,891,1106
உண்மையாயிருத்தல்: 320,452,805,863,905, 912,932
உண்மையின்மை: 311, 481,739,743,760,767,888, 915
உதவி: 438-442,545,565, 756,851,852,854,900,918, 952
உதவிக்காரர்: 541,830
உத்தரவாதம்: 730,731
உபசரிப்பு: 387,898
உபதேசம்: 62,68,106, 108,133,140,142,158-161, 162-169,175,188,189,288, 310,324,357,367,447,476, 504,505,558,614-622, 671,740,771,775,801,842, 868,902
உயர்த்து: 372,497,544, 664, 748-750,943,1051
உயிர்த்தெழுதல்: 33, 121,123,125,129-132,152, 158,175,199,202,229,260, 262,265,266,267,361,406, 419,459,477,542,547,549, 580,614,768,961,968, 1002,1008,1036,1079, 1081-1083,1091
உரிமைகள்: 285,501, 768,1029
உருமாற்றம்: 112,245, 734,1095,1101
உருவெடுத்தல்: 112, 121,399,551
உலகச் சிந்தை: 79,245, 430,772,954-957
உலகு: 115,122,199,232, 238,252,299,312,322,334, 335,337,359,367,390,433, 440,456,481,491,492,509, 512,543,548,568,573,723, 771,784,826,841,842,846-854,954-957,1006,1023, 1024,1035,1082,1087,1088, 1097,1100,1103
உறவுகள்: 38,39,44,51, 80,97,113,118,143,147,183, 187,189,216,217,222, 223,263,269,307,310,316, 331,337,344,347-349,441, 478,482,648,705,712,722, 723,770,776,794,876-881, 882-884,895,897,908-910, 919,961,1032,1078
உற்சாகப்படுத்து: 388, 389,479,496,498-502,533, 748,784,805,866,870,871
ஊக்கம்: 241,478,564, 849,951,1053,1057,1079
ஊக்குவிப்பு: 297,305, 307,334,440,526,548,612, 642,720,749,759,761,878, 879,881,883,902
ஊழல்: 282,307,310,323, 332,335,377,482,507,533, 801,848,853,863,933,1078, 1082,1097
ஊழியம்: 47,52,63,69,93, 94,98,99,103,130,165,192, 200,222,290,291,297,303, 305,309,318,327,328,330, 333,336,344,345,348,363, 380,441,473,477,485,486, 492,501,505,508,509,545, 551,552,556,584,614,625, 631,636,664,666,671,684, 733,736,755,761-769, 771-773,777,780-792,794,798-803,806,807,811, 812,820, 828,837-843,852,861,862,

889,890,891,899,900,920, 938,962,979,993,1003,1051, 1058,1075,1079,1082,1091, 1098

எச்சரிப்பு: 307,367,374

எடுத்துக்காட்டு: 285, 300,303,367,529,624,791, 860,899,916,917,922, 1000,1001,1058,1097,1098

எதிரி: 123,325,357,387, 418,568,569,724,744,775, 833,834,987,989,1055,1081, 1082

எதிர்காலம்: 173,187, 287,536,637,966,1075,1076

எதிர்த்து நில்: 284,303, 358,886,899,1033

எதிர்பார்ப்பு: 493, 494, 749,1008

எதிர்ப்போர்: 528,532, 573,608,860

எழுப்புதல்: 58,64,65,75, 101,189,244,336,341,399, 424-431,435,450,483,484, 492-497,503-509,515,549, 621,622,643,657,674,676, 677,680,682-684,689,694, 714,728,743,798,827,847, 855,865,880,958

எளிமை: 167,334,343-351,585,617,685,730,762, 772,850,942,1091,1092

எளியவர்: 343,347,357, 387,410,456,496,501,785, 786,834,852,906,910,933, 942,945,1061,1072,1079,1098

எளிய மனது: 407,413, 441,474,834,1072

ஏகாதிபத்தியம்: 408, 421,527,750

ஏமாற்றம்: 331,332,363, 449,606,839,921,978,1025, 1084,1097

ஏற்பு: 847,984,1100

ஐக்கியம்: 27,28,31,51, 85,125,158,162,198,204, 225, 231,232,236,237,272, 284,285,300,301,304,311, 325,337,342,345,351,364, 415,434,435,437,445,454, 455,463,514,554,558,563, 612,624,691,723,727,770, 793,796,806,807,821,851, 897,955,997,998,1029, 1030,1032,1034,1038,1042, 1045,1062,1078

ஒதுங்கியிருத்தல்: 188, 191,513,851

ஒத்திவைப்பு: 621,886, 862,1092

ஒத்துழைப்பு: 807,851

ஒப்புதல்: 788-791,806, 807

ஒப்புமை: 404,644,807

ஒப்புரவாதல்: 44,56, 107,109,129,148,191,216, 273,372,392,722,822,828, 961,971,1034,1044,1074

ஒருங்கிணைப்பு: 302, 851,862

ஒருமனமின்மை: 644, 880,881

ஒற்றுமை: 294,302,505, 525,540,541,571,665-667, 690,706,709,724,729, 794, 800,801,880,890, 897

ஓரக்கொள்கை: 188, 504,505,666,690,841

கசப்பு: 32,183,325,392, 691,876,877,915

கஷ்டம்: 375,410,414, 436,437,557,562,563,839, 840,864,889

கடின உழைப்பு: 632, 778,849,853,866,908,977

கடின வேளை: 193,449, 766

கட்டளைகள்: 50,92,94, 95,165,233,236,237,272, 280-284,310,354,367,388, 450,487,634,660,751,771, 820,901,932,973,1021, 1027,1037,1061

கட்டளையிடுதல்: 540, 780,1014,1094

கட்டிடங்கள்: 349-351, 534,537,538

கட்டுப்பாடு: 154,190, 245,260,336,339,399,403, 446,447,499,749,756,921, 963,968,973,976,1030,1075

கணக்கொப்புவிப்பு: 802,820

கர்த்தத்துவம்: 288,359, 412,432,437,446

கர்த்தர் பந்தி: 158,198, 344,363,418,722,723,961

கலந்துரையாடு: 636, 787,883,1007,1012

கலப்படம்: 747,782

கலாச்சாரம்: 476,647, 648,850

கவர்ச்சி: 301,305,332, 558,559,794,838,896,897

கவலை: 85,98, 43,229, 248,264,356,376,385,401, 416,440,449,454,548,572, 745,746,852,932,937,952, 953,965-970,978,979, 1012,1031,1106

கவனமின்மை: 295, 474,478,868,869

கவனம்: 300,357,388, 389,474,479,496,498-502, 533,748,784, 805,866,870, 871,928,

கவனித்துக் கேட்டல்: 70-81,296,366, 782,1015

கவனியாமை: 479,799

கற்பனை: 398,399

கனி நிறைவு: 36-39,79, 233-235,237,240-243,370, 492,522,535,559,563,658, 662,668,679,752,768,794, 859,860,889,962

கனியின்மை: 233,237, 238,241-243,289,370,394, 467,469,564,768,1069

காணிக்கை: 135,148, 293,308,309,311,352,353, 386,459,461,468,488,507, 545,586,670,707,821,822, 824

காத்திருத்தல்: 203,254, 292,380,382,384,427,486, 502,644,757,775,840,871, 919,1078,1089

கிரமம்: 382,524,555, 575,610,756,858,870

கிரீடம்: 290,291,305,310, 774,901,906,946,953,994, 1016,1100

கிருபை: 22,30,57,79, 124,130,142-144,174,178, 190,208,239, 246,264,280, 299,342,351,367,372,376, 377,395,407,466,467,690, 691,761,762,764,767,776, 777,790,802,818,822,823, 828,834,865,876,880,881, 894,900,908,914,932,959, 965,968,969,1029,1032, 1038,1041,1069,1079,1081, 1082, 1092,1100

கிறிஸ்தவம்: 264,334, 538, 607,616,623,655,668-672,780,847,852,910, 911, 954,974,975,989,1001,1024

கிறிஸ்தவன்: 49,85,90, 93,150,180-196,215-220, 231,232,288-292,297,299, 300,349,350,352,430,437, 498,519,524,525,535,564, 568,570,589,623,630,636, 643,654,655,657,658,664, 668,724-728,741,780,788, 811-836,846,857,859,880, 887-889,914,954,981,988, 990,997,1023,1025,1026, 1033-1035,1048,1056, 1057,1079, 1084

கிறிஸ்துமஸ்: 32,191, 262,410-414,580,654, 940-946

கீழ்ப்படிதல்: 22,44,51-53,78,79,92,114,146,147,153, 167,198,225,236,255,258, 267,280-287,293,310,311, 318,429,498,499,527,539, 567,600,634-636,638,665, 684,685,703,748,771,773, 823,833,857,858,895,896, 916,931,932,972,1006,1016, 1027,1048,1052,1057,1059

கீழ்ப்படியாமை: 22,41, 198,280-282,286,310,318, 319,446,478,498,524,632, 634,636,638,678,703,833

குடும்பம்: 26,27,31,47, 48,87,97,99,109,120,150, 192,193, 200,218,224,235, 259,312,327,328,331,332, 335,359,373,455,469,488, 489,514,545,651,652,657, 685,698,699,794,795,806, 851,864,896,897,966,967, 997,1007,1008,1009,1010-1013,1014,1018,1029

குரல்: 319,368,404,452, 639,931,941,1027

குழந்தைப் பருவம்: 292, 298,299,367

குழுவெறி: 296,772,841

குறுகிய மனது: 929,930

குறைபாடுகள்: 641, 707,801,802,926-930

குற்றஞ்சாட்டுதல்: 297, 982,983,1073

குற்றமின்மை: 554,650, 779,853

கூட்டு முயற்சி: 364, 525,540,666,688,897

கெட்ட தோழமை: 79, 1041-1043,1082

கேட்டல்: 372,373,396

கேட்போர்: 495,496,580, 608, 646,738,747,748,750

கேள்விகள்: 307,367, 368,783,935,967,978,1042

கொடுத்தல்: 228,279, 294,295,309,311,357,405, 417,500,501,517,545,550, 580-588,609,625,707, 708,716,751,775,784,834, 851,869,875,910,1092

கொலை: 21,280,316, 317,1074

கோணல்: 779,871,872
கோபம்: 191,676,870, 876,877
சகிப்பு (Tolerance)**:** 141,297,691,316,559
சகோதர பாசம்: 176, 234,242,243,271,347, 500
சடங்காச்சாரம் (Ceremonial)**:** 190, 438,469,486,703,830
சடங்காச்சாரம் (Ritual)**:** 28, 123,124,129,159,438,486
சட்டபூர்வம்: 288,400, 405,941,945,1038
சண்டைகள்: 177,180, 302,322,323,332,404,880, 1040
சத்தியம்: 57,175,188, 256,280,295,296,299,305, 315,328,329,350,377,390, 420,434,439,452,458,470, 482,492,499,528,569,601, 615,624,758,762,766,790, 829,879,882,889,894,903, 906,959,977,1023,1040
சந்திப்பு: 378,379,384, 545
சபையார்: 546,738,779
சமரசம்: 141,182,706, 707,771,801,874,879,956, 1024,1041,1070,1103
சமர்ப்பணம்: 448,462, 463,687,781,1004
சமாதானம்: 44,84,85, 172,176,183,185,218,237, 248,263,264,273,293,294, 320,332,385,427-440,441, 513,514,516,558,660,677, 750,821,822,851,881,977, 979,1030,1034,1072,1090,1106
சமூகவுறவு: 373,469, 505,537,650,651,672,786, 897,945,977
சமூகம்/சமுதாயம்: 302,335,552,568,794,1068
சரித்திரம்: 606,607,758
சவால்: 612,766,882
சாட்சி: 244,286,522,604, 611,776,780,787,796,857, 901,906,908,1001,1022,1106
சாட்சிகள்: 26,47,155, 156,198,234,239,240,246, 266,285,309,344,373,413, 435,441,475,499,500,514, 527,530,533,536,537,540, 544,555,557,560,582,599, 600,615,695,725,741,810, 826,852,859,860,906,917, 951,952,990,994,996,999, 1041,1079
சாதகச் சிந்தை: 563, 1031,1084
சாதனை: 29,847
சாத்தான்: 159,166,182, 199,201,242,253,255,283, 295,297,320,322-329,335, 390,543,555,568,569,614, 744,804,833,862,864,938, 989,1002,1003,1036,1089
சாபம்: 32,117,125,170, 183,257,312,471,520,526, 535,743,925,931,950,1017, 1045,1046,1055,1090
சாமர்த்தியம்: 441,837, 857,867
சார்ந்திருத்தல்: 289, 445,486,686,765,766,790, 795,796,865,888,923,963, 975,1036,1037
சாவாமை: 140,319,330, 507,576,1039,1040
சிட்சை: 47,238,286,330, 362,446,958-964,
சிந்தனைகள்: 153,176, 225,248,315,349
சிம்மாசனம்: 202,234, 290,372,395,719,834,947, 965
சிருஷ்டிகர்: 183,283,371, 411
சிலாக்கியம்: 91,95,300, 402,460,501,512,895,901, 902,932,933,1048
சிலுவை: 24,27,29,32, 98,122,123,125,126,148, 152,191,197,199,262-268, 270,290,305,343,349,392, 394,447,464,487,506,552, 553,569,614,706,727,774, 775,830,836,893,916,930, 939,940-957,965-975, 1024,1070,1084,1086, 1095,1102, 1103
சிலுவையிலறைதல்: 32,115,121,122,131,202,207, 316,411,416,458,477,487, 491,538,542,556,633,727, 830,947,954-957,958,1050
சீடன்/சீடத்துவம்: 153, 154,233,235,263,281 283, 290,294,330,338,345,348, 352,358,361,440,447,526-529,584,606,648,666,674, 768,775,839,883,926-930,996,1000,1008,1016,1102,
சீர்திருத்தம்: 333,424, 624,818,829

சுகமளிப்பு: 153,198,314, 372,378,475,484,485,507, 671,749,751,882,958,968, 980,987,1008,1087,1096
சுகவீனம்: 47,198,418, 449,961,968,980,1086, 1094,1096-1098
சுதந்திரம்: 258,807
சுத்திகரிப்பு: 460,563, 800,1033,1095,1100,1106
சுய நீதி: 135,136,221, 231,796
சுயம்: 258,294,296,368, 370,373,374,507,535,555, 774,796,817,870,878,897, 906,913,932,1040,1044, 1051,1075
செயல்முறை: 343,344, 642,772,778,790,799
செய்தி: 24-27,29-32, 332,343,344,367,432,456, 461,475,505,527,542,554, 555,568,571,581,597,603, 616,641,678,691,709,725, 740,757,778,785,793,799, 817,818,835,842,852,911, 941,958,972,1023,1050, 1052,1067,1099-1105
செய்துகாட்டல்: 790, 847-854
செல்லுதல்: 292,321, 330,405,416,514,515,532, 545,548,558-563,565,589-597,625,627,637,646,653, 656,716,835
செல்வம்: 355,356,432, 1026
செல்வாக்கு: 285,785
ஜெபம்: 21,28,51,62,85, 87,97,98,102,103,135,138, 140,162,183,184,186-189, 201,208,216,224,233,234, 235,239,240,244,248,249, 250,253,260,261,264,273, 283,286,289,290,294,300, 301,309,318,319,326,328, 330,331,337-341,346,347, 350,354,357,358,366,370, 371-375,380-396,399-409,427,439,445,449,454, 466,469,473,483,486,489, 492-497,499,505,506,507, 509,521,533,536,537,539, 540,544,548,549,586, 570-578,594,595,597,608, 609,619,621,625,641, 644-646,651,653,656, 658,663,666,668,669,683, 684,686,693,695,697-701, 705,712,714,718,720,721, 723,728,732,738,744,745, 747,758,759,770,772,776, 777,781,783,784,796,799, 801,802,816,824,827,850, 852,858,859,862,865,866, 873,890,892,897,898,902, 906,920,923,926,929,937, 948,969,971,991,992,999, 1002,1006,1007,1010,1031, 1034,1044,1045,1052,1057, 1062,1067,1069,1075,1078, 1089,1101
சேவை: 52,53,143,198, 226,275,298,309,455,456, 490,501,517,527,542,555, 557,616,687,720,721,765, 776-778,784,789,824,837, 840,846,848,864,879, 899,900,917,918,1059, 1061,1067
சொற்கள்: 99,186,187, 208,211-214,312,317,319, 676,843,847,882-884,898, 901,923-925,931,941, 1016,1041,1050
சோதனைகள்: 47,197, 264,328,406,528,758,771, 898,899,1059
சோம்பல்: 535,644,665, 667,760,846,849,853,857, 862,870,871,874
சோரம்போதல்: 397,528
சோர்பு: 144,200,329-335, 349,431,449,869,921,963
ஞானம்: 33,35,61,172, 183,186,247,248,301,359, 372,381,382,409,416,442, 472,494,573,733,743,744,762, 772,796,804,843,857,878, 885,890,912,913,947,948, 997,1026,1051,1052
தகுதி: 741,742,841
தசமபாகம்: 108,145,195, 311,355,536,586,834
தண்டனை: 282,307, 317,468,556,644,713,789, 993,1024,1025,1085
தத்தெடுத்தவர்: 716,841
தந்திரம்: 40,41,159,188, 211,296,317,323,325,368, 733,740,762,763
தந்தைத்துவம்: 26,28, 31,57,110,124,233,234, 238,285,290-293,296,297, 303,307,308,310-312,329, 435,446,859, 860,921,959, 960,1014,1029

தயவு: 273,274,441,474,489,559,564,1055,1056
தயவுகாட்டு: 285,418,1056
தயாளம்: 296,358,548,549,556,557,832,910
தரம் & அளவு: 508,781,804
தரிசனம்: 68,100-105,245,289,327,398,399,404,478,480,507,519,520,549,556,565,566,573,601,613,614,623,639,664,683,688,736,770,795,798,815,902
தரித்திரம்: 171,193,417,926,927,948
தலைமை: 140,284,324,332,345,475,477,482,649,656,684,685,695,699,707,724,761,762,765,778,787,801,802,806,809,820,822,879,880,890-893,899-902,917,919,921,931,932,935,984
தளர்த்து: 382,385,873,874,886
தள்ளப்படுதல்: 710,825,931,932,983,984
தற்பரிசோதனை: 51,97,216,321,339,379,426,427,663,722,723,770,774,775,791,800,858,936,961,1078
தனிமை: 173,394,395,410,414,449,839,893,973,984-986
தன்னடக்கம்: 37,39,140,242,275,441,559,1040,1057
தன்னல மறுப்பு: 292,293,352,416,447,556
தன்னலமின்மை: 387,555,557,878,924,1061
தன்னலம்: 40,183,222,292-294,387,469,520,521,555,760,779,839,851-853,873,877-879,931,932,1079
தாகம்: 206,226,520,663,664,840,906
தாக்கம்: 259,785
தாங்கிக்கொள்ளுதல் (Endurance): 98,99,131,153,436,472,557,569,774,775,996
தாங்குதல்: 585,586,715,786,796,802,999,1013
தாழ்மை: 35,36,72,76,208,209,250,253,286,290,291,315,345-348,373,394,407,426,448,488,554,730,739,764,766,776,777,786,826,828,834,850,854,865,888,900,902,908, 932,943,1049,1052,1053,1055,1059,1072,1073
தானதர்மம்: 39,73,108,109,139,147,185-187,194,273,274,283,298,357,460,463,501,668-672,785,786,828,852,862,955,1075,1079
திட்டம்: 569,841,842,856,883,889
தியாகம்: 143,147,226,227,290,292,303,310,334,352-358,379,419,455,456,474,481,488,505,524,535,536,538,574,577,582,588,610,616,621,632,666,669,685,773,781,826-828,840,869,870,873,893,918,921,927,965,993,1003,1012,1027,1078,1079
தியான வாழ்வு: 559,858,870
தியான வேளை: 338,363,365,366-376,384,454
திருச்சபை: 29,42,87,88,102,103,106,107,133,141,166,188,195,196,204,236,249,262,285,288,291,294,297-299,302,315,327,328,332,333,335,340,344,345,349,350, 351,359,367,398,418,426,429,430,435,436,456,459,463,469,475,477,479,480,486,489-491,508,525,536,539,543,556,567,568,577,586,598,599,614,625,627,630,631,654,655,657,659,660-662,664,666,667,671,674-722,750,758,761,779,784,789,794,800,806,812,816,826,827,840, 841,851,897,920,958,974,975,989,990,991,996,1001,1007,1032,1038,1045,1078,1082,1100,1102,1103,1105
திருத்தம்: 296,333,404,759,791,885,920,956,960,961,976,986
திருத்தொண்டன்: 47,337,345,380,384,421,787,788,856,935,1048-1052,1062

திருப்தி (Contentment)**:** 277,357,383,848,858,938
திருப்தி (Satisfaction)**:** 29,31,229,337,378,383,485,508,700,753,805,827,838,858,865,874,975,978,979,1038,1045
திருப்பணி: 354,381,428,806,1075
திருமணம்: 26,307,310,311,326,947,1010,1011,1013,1043,1099-1105
திருமுழுக்கு: 540,565,644
திறமை: 537,782,796,849,912
தீட்டுப்படுத்து: 521,574,609,710,711,853,874,1039-1042
தீயவை: 282,390,702-708,862,877,1013,1085,1088,1089
தீர்க்கதரிசனம்: 56,194,504,507,508,572,620,674,675,683,712,733,782,787,820,885
தீர்க்கதரிசிகள்: 160,350,354,368,541,566,567,674,675,683,746,747,764,774,787,801,806,808,809-820,831,838,911,912,921,925,934,1000,1061,1095
தீர்க்கமானது: 386,389,683,758,885
தீர்மானம்: 367,472,753,754,856,1036,1039,1056
துக்கங்கள்: 43,44,98,182,304,305,341,363,444,449,492,1093,1094,1097,1098,1100
துதி: 371,426,468,470,512-518,550,776,781,823,870,1001,1008,1073
துவக்குதல்: 302,399,400,869
துன்புறுத்தப்படல்: 817,820,988-993,999,1000,1098
தூதுவர்: 560,765,828
தெரிந்தெடுப்பு: 404,562,605,634,640,767,788,804-808,808,946,1043,1097
தேக்கம்: 485,508,509,838,870,874,1045
தேர்ந்தெடுப்பு: 332,837,838
தேவதூதர்: 41,290,294,301, 302,317,327,412,413,943,944
தேவபக்தி: 152,175,209,216,242,295,324,485,800,802,858,885,886,923,1050
தேவனைப் பிரியப்படுத்தல்: 22,147,245,294,316,433,756,763,767,782,788,828,862,896,1039,1058,1073
தேவைகள்: 404,479,846,1106
தைரியம் (Boldness)**:** 302,394,402,441,494,514,521,527,540,544,555,632,739,742,745,816,901,925,926,937,991,997,1002,1003,1060,1076,1106
தைரியம் (Courage)**:** 409, 527-529,929,937,948
தொடர்பு: 300,348,366,444,732,921,1015,1041,1078
தொழில் நுட்பம்: 537,576,772
தோல்வி: 125-128,172,182,200,282,286,287,307,318,363,464,500,550,555,606,634,643,688,707,769,771,793, 976,1043,1106
தோழமை: 112,284,446,836,959,1025
தோற்றப்பொலிவு: 327,552,944
நஷ்டம்: 170,976,977,1097
நடக்கை: 228,289,300,368,411,414,438,469,498,516,559,676,770,852,898,915,1027,1041
நடத்துதல்: 112,209,248,251-257,288,330,326,367,381,382,387,476,606,665,732-734,772,773,775,786,790,796,820,841,885,918,919,926,944,1057,1060
நடுவர்: 28,43,124,824
நண்பர்/நட்பு: 209,232,234,238,272,281, 296,320,337,344,373,387,421,455,481,548,551,558,590,634,635,638,659,711,771,786,850,851,935,957,985,989,998,1014,1015,1024,1030,1035,1042,1054,1055,1062,1102
நம்பகம்: 53,196,274,314,320,363,376,441,446,481,496,499,518,559,560,599,618,638,763,764,773,774,776,793,823,843,858,859,860,862,872,883,893,899,

901-915,921,924,926,969,979,994-1004,1022,1049,1051,1052,1070,1078,1079,1102

நம்பிக்கை (Confidence)**:** 171,187,230,245,300,329,385,389,445,451,472,555,938,966,1067

நம்பிக்கை (Hope)**:** 94,175,196,329,452,464,569,852-854,1008,1031,1078,1084,1097

நம்பிக்கை (Trust)**:** 187,238,281,297,300,382,466,505,536,773,775,895,976,1042,1048,1075,1076

நரகம்: 23,28,316,390,489,601,602,621,640,683,1090

நல்லது: 390,404,441,466,518,544,559,751,824,1014,1017

நவநாவுகள்: 374,439,508

நவநாகரீகம்: 786,956,1035

நற்குணம்: 468,575,848

நற்செய்தி: 24-31,56,98,108,142,149,152,159,174,193,213,218,224,225,232,246,267,280,289,328,335,343,344,367,398,436,437,509,514,517,522,532,542,545,548,553,554-557,560,566,568,569,581,589,590,593,616,621,628,634,635,641,659,660,671,672,677,693,695,757,761,786,788,831,847,852,853,859,860,906,912,952,974,990,991,1020,1039,1041,1068,1087

நற்செய்திப்பணி: 155,156,177,194,218,219,298,333,334,345,359,413,428,429,436,475-477,509,519-525,530-538,539-546,561,566,571,586,590-594,603,612,614,616,621,624,625,628,639,650,653-667,687,725,726,757,780,784,785,798,820,842,892,974,996,1003,1087,1088

நற்செய்தியாளர்: 69,417,436,629,630,653,654,808,838,921

நற்பண்பு: 241,242,423,478

நாமம்: 234,239,371,422,958,1054

நாவு: 37,39,182,208,211-214,242,347,419,857,882,1041,1106

நிச்சயமின்மை: 376,1026,1027

நிச்சயம் (Assurance)**:** 26,31,143,198,246,251,448,730,731,881,926,969,971,1033,1084

நிச்சயவுணர்வு (Conviction)**:** 488,495,761,778,801,850,937,990,1035,1041

நிதானிப்பு: 201,295,296,315,485,494,753,815,839,885

நித்தியம்: 64,144,216,284,287,297,336,358,403,461,500,520,601,621,709,743,746,767,805,823,824,841,843,917,947,1002,1104

நித்திய வாழ்வு: 199,403,569

நியாயத்தீர்ப்பு: 27,89,197,267,302,316,492,542,719,746,852,1100

நியாயம்: 377,378,384,492,1070

நிரூபணம்: 838,839

நிர்வாகம்: 756,787,825

நிலைத்திருப்பு: 233-240,408,496

நிறைவேற்றம்: 432,788,847

நினைப்பூட்டு (Remind)**:** 304,360,361,364,548

நினைவு (Remembrance)**:** 360-364,418, 420,543,741-746,769, 843,860,877,885,914,915,1033,1034,1046

நீதிபதி: 290,321,751,850

நீதிமானாக்கப்படல்: 25,26,45,129,197,231,387,431,615,674,961,1083,1088,1095

நீதியாயிருத்தல்: 22,30,35,42,57,89,105,124,129,169,206-210,216,221,235,237,251,290,300,332,377,378,403,420,421,444,452,453,473,493,509,556,614,660,675,676,702,750,791,792,802,818,819,826,829,833,863,901,1000,1022,1032,1036,1038,1051,1074,1089

நீர்த்துப்போதல் (Dilution)**:** 506,507,801

நெடுகவே: 74,285,411,496,498,499,554,557,904,938,979,1051,1052,1058

நேரம்: 270,336,338,340,366,770

நேர்த்தி: 207,748,749,849,857,951

நேர்மை: 139,452,644,793,805,848,853,857,863,882,899,903-915

நோக்கம்: 460,512,513,743,826,846

பகிர்தல்: 469,521,556,557,897,1045,1067

பகுப்பாய்வு: 296,301

பக்திவிருத்தி: 66,167,212,294,295,359,429,496,544,664,734,757,763,781,784,789,798,819,878,879,902,1041

பஞ்சம்: 301,363

படித்தல்: 69,77,78,169,296,301,345,368-370,435,494,506,733,738,743,756,773,782,801,829,844,949,950

படிப்பினை: 385-389,390-395,403,424-430,530-538,758,887-889,894-900

படைப்பு: 197,296,297,312,411,954

படையெடுப்பு: 524,643

படைவீரன்: 283,866

பணக்காரியம்: 537,656,659,755-760,783,793,799,806,848,864,875,891,910,911,968,976,977,1106

பணியாளர் (Servants)**:** 226,283,518,720,765,883,893-900,917,921,932,935,938,969,1059,1067,1070

பணியாள் (Worker)**:** 555,646,788,848,849,855,856,859,863,865,880,887-889,935

பண்டிகைகள்: 124,457-464,626

பண்பு: 805,815,817,867,871,1056,1057

பதவியுயர்வு: 362,561,773-775,858,993,1008,1009

பயங்கரங்கள்: 604,605,973

பயபக்தி: 71,81,282,307,309,435,486,833,948,1079

பயமுறுத்தல்: 285,441,532,537,782

பயம்: 197,246,282,295,302,351,394,444,449,470,474,491,494,526,529,536,537,543,560,561,637,641,648,678,691,692,745,748,804,838,839,874,895,925,929,948,966,1048,1060

பயனுள்ளது: 837,867

பயன்பாடு: 370,371,494

பயிற்சி: 211,297,338,362,363,382,782,794,829,1008

பரலோகம்:42,202,207,316,390,415,459,464,489,506,548,569,600,621,640,669,678,719,767,779,793,811,821,846,861-866,901,913,961,1010,1011,1025,1028,1067,1068,1089,1090,1093-1098

பரவசம்: 327,403,404,498,782,1101

பரிசுத்த ஆவி: 26,29,61,65,66,87,89,107,111,113,117,119,120,130,146,153,164, 166,203,239,240,245-247,253,261,274,294,303,319,320,326,350,356,359,361,364,373,374,397,398,411-414,425,426,431-437,438-442,446,459,464,468,473,475-477,480,486,491,495,503,506,514,533,537,540,541,544-546,565,566,570,604,617,620,639,645,663,665,677,683,684,688,690,691,700,701,709-713,726,728-734,737,749,750,751,758,772,786,787,795,796,798,799,823,825,834,841,847,864,865,885,895,906,907,918,952,984,967,996,997,1003,1017,1027,1029,1037,1040,1044,1045,1051,1057,1060,1066,1078,1082,1087,1104

பரிசுத்தம்: 26,43,59,67,72,79,84,88,100,112,124,140,142,143,146,153,167,191,197,203,204,208,210,211-216,222,231,232,244,247,253,298,299,300,315,318,323,328,331,333,335,352,371,372,379,395,

410,420,421,431,440,452, 466,468471,473,478,488, 509,516,571,615,616,663, 674,675,676,704,718,719, 749,771,792,793,798-800, 805, 806,815,826,846,853, 854,856,863,864,874, 890,892,894-898,901, 902,916,918,919,923,934, 962,989,990,993,1022,1030-1032,1038,1039,1053,1072-1074,1077,1078,1083,1085

பரிசுத்தவான்கள்: 281, 296,306,328,452,454,455, 719,776,923,1027,1059,1062, 1074,1084-1086,1091

பரிந்து பேசுதல்: 113, 239,396

பரிபூரணம் (Abundance): 332, 405,865

பரிவு: 270,305,314,376, 420,520,707,777,880,897, 929,1083

பலமாயிருத்தல்: 450, 760,1066-1068

பலம்: 34,171,200,297, 336,348,363,379,380,384, 386,389,393,407,409,432, 445,453,456,466,483,485, 517,537,540,541,546,726, 888,906,916,948,967,985, 1026,1055,1067,1106

பலவீனம்: 155,171,247, 343,348,449,467,494,536, 551,734,745,756,799,839, 878,905,906,1021

பழிச்சொல்: 280,919

பழிவாங்குதல்: 44,275, 277,283,294, 1075

பழைய உடன்பாடு: 190

பாடகர்: 719,721

பாடுகள்: 43,45,85,98, 112,119,125,131,132,143, 150,159,170,197,227,237,242, 252,270,271,285,286,290, 300,301,304,305,324,325, 329,347,351,352,362,378, 441,455,456,476,499,500, 528-530,537-542,546, 548,557,565,571,582,616, 669,694,695,734,758,774, 775,787,817,825,836,858, 864,879,893,898,907 908, 945,961,968,974,979,980, 981-993,997,1000-1002, 1025,1055,1060,1067,1072, 1079,1087,1102

பாடுதல்: 308,428,439, 443-449,453

பாதுகாப்பு: 31,113,157, 294,372,468,489,561,574, 794,890,901,944,975,976, 998,1013,1056,1057,1104

பாபேல்: 350,785,887-889

பாரபட்சம்: 183,310,332, 471,895,978

பாரபட்சமின்மை: 184, 750,919,1054

பாரம்: 280,290,299,385, 387,389,397,398,544,564, 738,781,816,873

பாரம்பரியம்: 61,288, 291,390,410,736,765,849, 855,887,934,1007,1015,1030

பாராட்டு: 806,807

பார்வையின்மை: 284, 564,641,760

பாவச் சோதனை: 47, 60,66,67,143,183,187,189, 200,229,282,320,330,332, 358,367,373,383,393,713, 734,737,758,823,864,866, 937,955,1013,1026,1034,1095

பாவ நிவாரணம்: 460, 461

பாவமறியாமை: 531, 944

பாவம்: 21,22,25,83,107, 121,130,141,182,200,207, 210, 211,221,231,239,250, 253,297,314,316-318,320, 332,358,360,367,378,383, 392,418,419,426,427,440, 444,452,460,461,469,470, 472-474,482,483,487,488, 504,516,549,554,565,581, 634,668,676,705,710,720, 770,776,793,806,816,821, 822,855,923,955,965,966, 972,973,997,1012,1020-1022,1024,1031,1034,1036-1039, 1045,1053,1058,1069, 1082,1084,1085,1089,1090, 1094,1096-1098,1100

பாவிகள்: 21,194,209,272, 281,302,312,328,421,488, 506,546,554,569,601,806, 955,972,973,1020,1021,1037, 1062,1074

பிசாசு: 21,107,136,280, 302,322-328,334,341,355,

390,470,487,745,746,751, 795,966,967,1001,1020-1022,1106

பிரகாசிப்பு: 397,790

பிரசங்கித்தல்: 155,156, 289,335,355,399,475,491, 492,505,506,514,521,545, 548,558,560,580,595,596, 608,641,642,657,664,669, 671,679,687,690,706,707, 735-755,757,782,783,786, 828,831,842,902,911,912, 921,933,997,1050,1051,1087, 1092,1106

பிரசங்கிமார்: 259,332-335,342,348,350,425,486, 490,494,507,524,664,669, 671,706,707,731,737,742, 746,753,754,761,774-782, 786,793,892,919,935, 1106

பிரச்னைகள்: 47,222, 331,332,373,379,391,476, 495,548,566,574,606, 646-652,656,669,724,734, 840,864,878,941,946,948, 966,967,978,984,1008, 1023-1025,1038,1045,1106

பிரதிஷ்டை: 109,212, 288,291,662,936

பிரதிபலன்கள்: 113, 169,182,229,287,500,501, 551,563,569,862,867,870, 901,993,1091

பிரபலம்: 771,808,888, 957,1035

பிரமாணக் கொள்கை: 114,124,125,158,159,190, 236,246,299,834,879,1056

பிரமாணம்: 117,158, 190,280,368

பிரித்தல்: 41,44,108, 109, 191,238,311,324,513,794, 851,923,954,990,1095

பிரிவினைகள்: 126-128,188,434,505,521,524, 525,574,609,800,801,888,927

பிள்ளைகள்: 21-23,136, 198, 235,280,283,286,292-294,297,307,309,311,331, 337,354,355,357,360,383, 384,394,415,488,489,531, 769,779,837,945,950,959, 960,967,972,973,997, 1014-1017,1029,1033, 1042,1045,1048

பின்மாற்றம்: 42,312-314,324,481-484,489,490, 526,655,759,816,818,996, 1039,1043-1046

புண்படல்: 330,392,709-713,981

புதிய உடன்பாடு: 27, 43,83,125,142,159,160,190

புத்திக்கூர்மை: 259, 283,372,382

புத்திமதி: 66,175-178, 284,357,720,762-767,782, 819

புத்துணர்வு: 1077,1104

புரிதல்: 283,284,295, 296,299,316,327,330,373, 442,495,548,563,772,777, 805,1050

புலம்புவோர்: 714,715

புறக்கணிப்பு: 480,482, 860

பூரணம் (Perfection): 67, 178,182,183,208,211,231, 293,298,300,302,338,473, 615,709,754,822,824,825, 897,903,1008,1014,1027,1041, 1084-1086

பூவுலகச் சிந்தை: 223, 232,779,930

பூவுலகு: 415,861-866, 1010,1025

பெந்தெகொஸ்தே: 91, 191,424,433,453,458,459, 477,505,515,523,527,540, 545,565,580,615,617,631, 660,678,688,689,719,728, 800,1088

பெரியது: 351,421,545, 751,771,776,817,819,823, 1020-1022,1045,1055, 1088,1101

பெருமை: 36,101,142, 221,315,346,373,470,471, 482,485,490,576,644,745, 770,788,882,883,854,914, 957,974,1026,1070,1072, 1073,1077,1089

பெற்றோர்: 27,285,331, 337,357,593,594,604,636, 716,717,841,972,1014

பேராசை: 134,135,140, 223,258,317,318,357,405, 507,556,669,753,760,793, 848,910

பொய்: 280,317,329,470, 676,848,1020-1022

பொருளாசை: 29,34,35, 42,79,122,128,139,168, 216,223,253,276-279,309,

318,332-334,355-358,405,417,479,488,490,507,508,548,555,556,571,604,627,658,676,680,685,686,721,764,767,784,791,793,799,816,827,840,870,899,902,955,956,974-976,1043,1061,1076,1082, 1106

பொருளாதாரத் தேவை: 372,373,1012

பொல்லாப்பு: 207,209,317,327,426,458,466,535,847,848,853,937,953,1037

பொறாமை: 183,316,489,556,771,877,1089

பொறுப்பு: 294,297,300,306,307,368,385,400,512,552,687,688,755,814,896,901,902,932,1039,1040,1048,1034

பொறுமை: 174,216,242,260,273,289,305,306,409,441,557,559,731,805,860,870,871,897,902,998,1008,1050,1052,1056

பொறுமையின்மை: 259,644,1008,1044

போட்டி: 302,771,779,781,802,807,928

போதகர்: 69,160,207,282,435,528,551,755,774,834,847,867-872,889,892,911,912,917,921

போதாமை: 637,931,969

போதித்தல்: 244,280,288,291,297,299,301,345,355,356,361,367,403,415,435,439,493,494,512,518,549,643,727,758,760,763,782,795,801,828,852,868,902,921,934,937,948,958,986,999,1000,1027

போராட்டங்கள்: 92,95,172,287,362,439,494,558,745,804,883,905,906,977,979,997,1006

போராயுதங்கள்: 326,329,335,550

பௌதீகத் தேவை: 134,223,372,373

மகிமை: 52,53,144,146,227,228,291,292,306,332,333,349,355,359,387,395,406,412,413,416,421,431,438,460,466,467,482,485,486,497,501,516,545,553,559,564,669,674-721,731,749,766,767,780,788,789,797,828,841,846,861,864,895,896,912,927,932,961,1001,1008,1010,1013,1070,1083,1086,1088,1100

மகிமைப்படுதல்: 26,45,231,571,615,674,788,961,1083,1085,1095

மகிழ்ச்சி: 72,86,93,95,107,114,119, 170,175,177,210,227,232,234,237,272,300,305,320,331-333,352,354,376,377,407,419,428,440,441,444,445,449,450-456,457-464,469,487,514,541,542,546,552,555,556-558,563,565,569,626,660,669,676,677,696,701,712,719,749,806,834,840,864,881,898,899,924,930,941,945,963,972,1030-1032,1054,1061,1093-1098,1100,1101,1104

மகிழ்ந்திரு: 309,444,453,869,1038

மக்கள்: 292,338,351,479,486,490,495,527,568,767,779,781,784,801,890-893,919,1051

மணமகள்: 335,566,729-734,1100-1104,1099

மணமகன்: 1099-1100,1104

மண்ணாலானது: 793,805,811,821

மரணம்: 26,172,197,226,285,300,301,325,329,602,994-1004,1090-1092

மரண துக்கம்: 1079

மரியாதை: 387,850,885,896

மறுதலிப்பு: 292,293,323,416,526,811,893,1038

மறைந்திருத்தல்: 113,327,551,552,584,861,862

மறைபொருள்: 101,113,835

மனச்சாட்சி: 41,244,461,543,762,763,767,782,901,911,1034,1059,1078,1094,1106

மனத்தெளிவு: 439,494,495,748,781

மனத்தொய்வு: 323-325,375, 376,451,456,495,521,574,609,864,978

மனவுறுதி: 171,187,230,245,300,329,385,389,445,451,472,555,938,966,1067

மனதில் பதிவு (Impressive)**:** 410,931

மனதில் பதிவு (Impressions)**:** 639,769,914

மனது: 232,244,245,248,276-279,285,293,315,324,330,382,442,557,748,782,799,800,842,862,868,1040

மனந்திரும்புதல்: 23,25,36-39,210,231,233,308,314,317,319,321,371,372,470,473,483,488,496,540,543,569,575,668,711,778,818,852,972,1077,1098

மனப்பான்மை: 296,312,346,348,367,387,405,560,736,737,776,785,883,868,870,914,930,1053,1054

மனப்பூர்வம்: 473,536,924

மனமாற்றம்: 33,350,542,658,693,703,1041,1043

மனனம்: 77,743,759,1037,1040

மனித ஆவி: 329,472-474,677,684,781

மன்றாட்டு: 130,289-291,300,309,318,319,339-342,396-401,521,831,938

மன்னிப்பு: 24,25,31,44,53,84,107,197,256,273,297,302,372,392,408,420,443,444,571,752,822,877,927,965,971,981,1012,1021,1034,1075,1093,1096

மாணவர்: 283,719,868,870

மாண்பு: 278,283,307,308,311,320,823,861,896,917

மாம்சீகம்: 42,92,116,119,122,199,259,311,322,330,390,425,439,445,479,536,576,620,624,711,729,730,745,762,795,799,842,869,937,948,1082

மாய்மாலம்: 40,41,82,210,215,315,320,321,332,470,691,706,807,872,896,908,933,937,1023

மார்க்கம்: 33,35,92,108,133-141,180,182,248,284,293,319,334,338,403,410,523,642,702,807,809,821,847,874,930,974,975,988,990,1077

மிஷனரிப்பணி: 195,196,219,270,288,289,291,303,327,328,334,341,345,354,355,412,429,436,437,475-477,479,512,513,519,520,521,523,525,530,545,546,556,564-652,653-661,663,666,671,680,682-688,714,716,721,726,779,787,798,828,869,907,908,918,992,993,1087

மீட்பு: 35,117,118,125,157,194,197,199,270,286,307,368,371,566,577,758,885,1078,1079,1086,1087,1095,1096

முடிக்கப்பட்டது: 30,31,228,464,975,1036,1042,1061

முடித்திடு (Finish)**:** 322,450,565,825,873-875,936-938,969,1021,1051,1061,1095

முடித்துவிடு (Complete)**:** 1022,1056,1085

முடிவானது: 343,509,767,804,846,867,915,1050

முடிவு ஆசீர்வாதம்: 691,787,1029

முதிர்ச்சி: 221,292-297,302,429,839,890,1067

முரட்டாட்டம்: 22,154,307

முழு மனது: 868,881,1049,1052

முள்: 407,494,839,905,953

முன்மாதிரி: 473,790,879,880,914,1014

முன்னுரிமை: 215-218,278,291,357,399,505,506,614,780,815,977,1076,1077

முன்னேற்பாட்டுதவி: 380,439,440

முன்னோடிகள்: 285,286

மூப்பர்: 830,1007

மெச்சப்படுதல்: 296,297,557,881,978,1016

மென்மை: 183,216,274,559,860

மேய்ப்பர் (Shepherds)**:** 283,334,413,632,633, 755-760,773,774,781,891-893,921,935,947

மேற்கொள்ளல்: 330,833,1001,1021,1103

யுத்தம் (Battle): 322,390, 439
யுத்தம் (War): 200,369, 375,390,391,439,440,549, 571,576,603,618,744,745,1001
ராஜரீகம்: 447,527,560, 832,835,863,1105
லஞ்சம்: 471,848
வசதி: 319,488,775,869, 870,990,997,1028,1035
வஞ்சகம்: 296,323,324, 760,797,1041,1103
வணிகமயம்: 333,507, 534,780,791
வரங்கள்: 30,66,83,91, 95,126,130,143,175,212, 247,294,298,345,355,377, 380,384,431,442,460,463, 469,515,527,533,545,617, 620,670,678,683,734,737, 744,748,800,802,805,835, 838,849,885,913,921,975, 1033,1075,1082,1087
வரம்பு: 795,802
வலுவூட்டல்: 345,380, 441,495, 544
வல்லமை: 35,61,68,87, 113,125,129,131,152-157, 167,189,197,203,234,239, 241,266,289,301,302,305, 327,329,345,351,356,373, 391,412,424,429,440,466, 476,478,485,514,515,522, 537,538,540,544,545,550, 569,570,582,603,615, 617-619,661,663,667,678, 688,690,709,720,730,766, 790,796,799,805,835,852, 865,916-918,980,994, 1013,1037,1044,1045,1050, 1060,1067,1079,1085
வழிகாட்டல்: 288,359, 545,787
வழிவிலகல்: 301,332, 444,445,505,506,771,787, 798,807,927,1045
வளமை: 64,171,175, 193,357,409,489,506,517, 572,616,617,680,740,806
வளர்ச்சி: 47,96,158,234, 292,294,297,298-306,334, 344,345,403,477,501,568, 643, 679
வாக்குகள்: 22,35,93,95, 117,241,260,287,314,326, 361,367,374,384,410,427, 431,456,466,471,502,512, 563,576,679,824,825,832, 866,887,926,929,950,955, 973,980,1022,1037,1044, 1046,1084,1089,1094
வாசிப்பு: 286,382,743, 801,839,872,902
வாய்ப்புவளம் (Resourceful): 358,405, 464,470,501,680,791, 1061,1091
வாய்மை: 97,99,142, 332,335,374,452,458,618, 762,779,862,863,905, 1049,1075
வாழ்வு: 26,57,65,84,85, 90,118,120,172,200,224, 250,263-268,287,291, 301,310,349,363,388,402, 403,424,441,485,549,564, 737,749,755,758,829, 833,842,856,858,916, 917,947-953,994,1041, 1058-1062,1067,1086, 1092,1096,1098
வாழ்வு முறை: 150,232, 334,543,585,666,685,1092
விக்கிரகமாக்குதல்: 503,504
விக்கிரகாராதனை: 21, 140,223,250,327,332,432, 433,507,542,576,704,848
விசுவாசம்: 30,50,53, 91,116,157,160,174,175, 185-194,202,216,241,243, 245,250,255,259,264,265, 267,281,289,293,294,299, 300,306,310,322,326-328, 335,362,369,383,385,389, 391,399,405,406,408,437, 469,473,486,508,528,549, 583,616,618,632,671,672, 677,778,802,814,895,896, 901,903,905,936,959,963, 972,973,975,988,989,991, 998,999,1008,1021,1027, 1030,1033,1042,1045,1048, 1049,1052,1060,1066,1067, 1078,1091,1098
விசுவாசிகள்: 304,391, 434,435,496,499,541,543, 567,580,602,608,609,619, 646,655,662,682,687,761, 765,781,798,812,814,829, 890,1026,1030,1038,1058, 1082,1084
விசுவாசித்தல்: 50,118, 129,238,241,248,281,290, 324,329,343,367,391,512, 540,566,638,678,742,791,

856,968,979,1010,1025, 1026,1031,1032,1036,1046, 1049,1060,1086
விடுதலை/சுதந்திரம்: 114-120, 158,163,173,236,299,417, 729,730,931
விடுவி: 197,383,390, 441,443,444,463,571,624, 786,972,1002,1013,1038, 1080,1085
விட்டுக்கொடுத்தல்: 23,31,49-53,76,116,143, 145,182,201,245,288,373, 374,386,389,393,408,732,975
விண்ணேற்றம்: 121, 459,477
விதைப்பு: 547-549,642, 777,791
விபசாரம்: 21,181,280, 284,284,318,332,356, 481-483,1074
வியாக்கியானம்: 168, 615,912
வியாதி: 521,574,609
வியாபாரம்: 333,772, 780-787,901
விரக்தி: 394,839
விரிவாக்கம்: 496,547-553,780,789
விருப்பம்: 564,782,800, 801,802,920
விவாதம்: 296,885,886
விழித்திருப்பு: 201,289, 357,387,389,392,393,549, 746,1044
விளக்கு: 21,82,171,225, 339,878
விளைவுகள்: 305,428, 887
வெளிப்பாடு: 84,91,94, 154,189,234,245,250,258, 324,330,335,338,346,366, 367,371,385,388,397,413-415,494,566,701,730,731, 744,770,773,815,894,911, 1042,1081,1105
வெறுப்பு: 312,1023, 1024,1035
வெற்றி (Success): 343, 486,770,865
வெற்றி (Victory): 130, 172,182,199,200-205,262, 263-268,297,300-302,322-328,339,362,363,373,400, 415,418,421,440,446,460, 486,734,744,745,769,804, 823,833,834,836,839,840, 883,889,915,965-970,974, 1003,1033-1038,1040, 1082,1100,1105,1106
வேத அடிப்படை: 110, 388,436,506,507,925,944
வேதத் தியானம்: 75-81, 108,109,154,162,189,204, 213,217,235,260,269,270, 295,309,324-326,337-339, 345-347,361,366-368,374, 382,385,395,397,412,453, 559,597,663,723,738,743, 756,758,759,785,794,795, 858,877,949,950,962,976, 1037,1040,1044,1076,1077
வேதம்: 26,28,32,47, 50,56-74,91,92,96,102, 108,140,158,160,162-167, 189,203,211,213,217,225, 233,235,239,250,260,265, 266,269,281,283,284,286, 291,295-297,300,301,307, 315,317,323,324,326,328, 332,337,338,342,345-347, 359,361,368,370,374,382, 383,387,388,391,397,406, 407,412,415,430,435,436, 439,444,445,447,452,453, 474,482,490,494-496,506, 518,528,544,548,549,563, 570,576,628,629,641,663, 680,682,683,690,706,721, 733,736-740,742-745,753, 756,757,762,763,769,776, 777,790,795,805,811,812, 820,829,838,847,887,889, 895,902,912,917,937,949, 950,962,1006,1027,1028, 1031,1034,1037,1040,1042, 1044,1049,1051,1056,1060, 1066,1075,1077,1106
வேதனை (Agony): 416, 937,993
வேதனை (Pain): 320, 328,330,529,981-987,995, 1090,1098
வேலை/பணி: 93,95, 119,441,442,767,846-854, 861-866,873-875,923,930, 950,951
வேலைகள்: 22,30,31,57, 124,133,185,287,299,300, 315,363,383,441,453,498, 516, 547,550,561,563,564-569,767,820,855-866, 873-875,888,969,976,1057, 1091,1095
வேறுபாடுகள்: 402-409, 505,800,839
வைராக்கியம்: 436,479, 840

நபர்கள் அட்டவணை Character Index

திருமறையிலுள்ள பல்வேறு கதாபாத்திரங்களின் சரிதைக் குறிப்புகளைப் படிப்பதில் மிகுந்த நடைமுறைப் பயனுண்டு. காலம், கலாச்சாரம், மொழி வேறுபாடுகளிருந்தாலும், இந்நபர்கள் நாம் கற்கவும் களையவும் நிறைய படிப்பினைகள் தருகின்றனர். எனவேதான் பழைய ஏற்பாட்டு நபர்கள் பலர் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளனர். இந்நூலின் 200 அத்தி யாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 188 பெயர்களின் அட்டவணை இங்கு தரப்பட்டுள்ளது. எந்த நபரையும் பற்றிய அனைத்துச் சரிதைக் குறிப்புகளும் இங்கு இல்லாவிடினும், இந்நபர்களைக் குறித்த ஒட்டுமொத்தமான, பொது வான தகவல்களைப் பெற இவ்வட்டவணை உதவும்.

அகபு: 259
அகிரிப்பா: 103,695,998, 1084
அசரியா: 529,607,1024, 1042
அந்திக்கிறிஸ்து: 811
அந்தியோகியர்: 147
அந்திரேயா: 46,436, 583,635,998
அபிசாய்: 726
அபிமெலேக்கு: 253, 282,320,647,648,816
அப்பொல்லோ: 504, 610,643,726,800,807,811, 888,913
அர்க்கிப்பு: 837,921
அர்தசஷ்டா: 842
அனனியா: 90,285,529, 607,1024,1042
அனனியா & சப்பீராள்: 277,320,432,670,692
அன்னாள் (Anna): 410,414
அன்னாள் (Hannah): 148,255,325,354,454, 595,636
ஆகார்: 252,650
ஆகான்: 146,318
ஆக்கில்லா & பிரிஸ்கில்லாள்: 353, 593,855
ஆசாப்: 985
ஆதாம்: 21,22,182,184, 231,257,282,284,319,383, 393,544
ஆபகூக்: 86,238,428
ஆபிரகாம்: 22,27,36,47, 109,119,123,129,146,147, 171,238,241,253,259,281, 282,284,285,293,309,330, 337,339,354,383,385,389, 405,416,421,451,512,527, 535,566,582,596,597,616, 635,638,646-651,665, 679,702,709,731,758,773, 805,816,817,823,824, 827, 831,887,889,937,976, 982,1007,1008,1012,1014, 1027,1048,1049,1052,1060, 1065,1091
ஆபேல்: 44,133,198,199, 804,817,818,988,1000, 1024,1091
ஆமோஸ்: 733
ஆயக்காரன்: 135
ஆரோன்: 460,707,724, 809,812,813,821,827,829, 831,1049
இஸ்ரவேல்: 42,290,828
இம்மானுவேல்: 943
ஈசாக்கு: 30,32,119,254, 293,383,385,389,638,644, 652,709,727,731,758,827, 831,988,989,1048
உரியா & மனைவி: 320,942
எசேக்கியா: 915,960, 1026,1087
எசேக்கியேல்: 397,424, 431,504,740,809
எஸ்தர்: 353,394,407,561, 574
எஸ்றா: 65,70,189,346, 394,399,424,426,490
எத்திரோ: 829
எபிரெயர் நிருப ஆக்கியோன்: 577
எப்பாப்பிரா: 351,713, 904,921
எப்பாப்பிரோதீத்து: 226,555,918,1086
எப்பிராயீம்: 481,484, 960
எம்மாவூர் சீடர்: 65,91, 263
எரேமியா: 224,596,597, 637,757,766,770,817,866, 895,903,912,1000

எலிசபெத்து: 255,354, 410,411,881,941,1007
எலிசா: 318,328,344,479, 587,746,809,911,950,1061
எலியா: 306,339,408,427, 587,667,677,693,696,698, 746,809,816,817,911,949, 960,990,1091
ஏசா: 134,308,804
ஏசாயா: 100,103,136,516, 555,565,600,601,640,664, 675,770,815,817,842,861, 866,895,1050,1052,1094
ஏரோது: 273,695,789, 816,944
ஏரோதின் மகன்: 944
ஏலி: 912,1016
ஏவாள்: 231,257,284
ஏழை விதவை: 535,586,
ஏனோக்கு: 819 [707
ஐனிக்கேயாள்: 383,1007
ஒநேசிமு: 904,921
ஓசியா: 352,481
காபிரியேல்: 919,1083
காயீன்: 242,317,804,988, 1024
காய்பா: 719,809,819
காலேப்: 49,53,866,1049, 1052
கிதியோன்: 597,637,692, 704,745,766
கேயாசி: 318,479
கொர்நேலியு: 22,46,70, 427,439,494,503,545, 597,698,700,750
கோலியாத்: 202,550, 1054
சகரியா (ப.ஏ.): 817, 1000
சகரியா (பு.ஏ.): 33,354, 410,411,447,463,1007
சகேயு: 27,108,217, 279, 355,537,586,590,668,670, 852,967,971
சங்கீதக்காரன்: 76,283, 286,338,361,362
சதுசேயர்: 61,123,138
சமாரியப் பெண்: 438, 615,715,810,830,859
சவுல்: 196,319,557,708, 764,809,833,848,909, 916, 931,1054,1055
சாத்தான்: 60,61,133, 201,320,322,390,543,555, 568,614,681,938
சாமுவேல்: 255,338,346, 352,384,806,809,816,827, 848,910,931,932
சாராள்: 282,284,647, 650,976,1012
சாலேமின் ராஜா: 123, 824
சாலொமோன்: 301, 338,346,350,353,372,571, 674,719,720,772,830,915, 923,925,942,959,960,974, 1043,1052
சாறிபாத் விதவை: 587
சிமியோன்: 33,390,397, 410,413
சிம்சோன்: 483
சிறைச்சாலைக்காரன்/சிறையதிகாரி: 27,46, 450,693, 967,971
சீமேயி: 1049,1055
சீமோன் (செலோத்தே): 583,998
சீமோன்(தோல் பதனி டுகிறவன்): 855
சீமோன் (மாயவித்தை): 507
சீலா: 540,593,632,661, 819,838
சூனேமியாள்: 587
செருபாபேல்: 178,299, 475, 691,715,1051,1052
செல்வந்தன் (லாசரு): 23,197,241,942,967
செல்வந்தனாகிய மதியீனன்: 34
செல்வந்தனாகிய வாலிபன்: 34,1027
சேபா நாட்டு ராணி: 1089
சோதோமின் ராஜா: 123,824
ஸ்தேவான்: 151,256,346, 436,515,541,542,546,557, 561,692,695,718,747,813, 992,993,997,1004,1066- 1068
தரியு: 529,626
தாவீது: 37,69,115,196, 202,316,319,338,339,344, 348,353,362,374,378,383, 397,399,428,446,455,460, 472,475,520,699,711,764, 792,806,807,809,816,827, 839,848,855,866,893,903, 909,914,917,960,977,985, 1044,1049,1053-1055, 1060,1090,1094,1100
தானியேல்: 62,76,97, 156,285,332,346,366,374, 385,386,389,399,442,446, 472,490,526,529,541,575, 578,591,607,626,668,679, 698,758,817,842,853-857, 859,904,978,1002,1034, 1039,1042,1044,1061

தியானாள்: 952
தீகிக்கு: 904,921
தீத்து: 96,633,651
தீமோத்தேயு: 50,78,96, 158,164,175,226,248,325, 340,342,357,383,394,490, 521,537,539,542,555,560, 567,573,597,617,646,661, 662,691,740,777,789,820, 837,839,866,901,904,919, 953,995,999,1042,1086,1088
தீர்க்கனின் விதவை:
தெலீலாள்: 483 [911
தேமா: 921,956,1043, 1061
தோமா: 264,437,583, 639,785,991,998
நாகமான்: 34,318,344
நாத்தான்: 352,816,1053
நாத்தான்வேல்: 241, 509,810,998,1008
நிக்கொதேமு: 136,537, 559,715,1063
நூற்றுக்கதிபதி: 916, 1063
நெகேமியா: 65,70,189, 374,393,394,399,541,622, 725,839,842,855,873,923, 978
நேபுகாத்நேச்சார்: 668, 679,842,854
நோவா: 27,63,122,282, 285,350,352,385,386,389, 903,904,957,967,1037
பத்சேபாள்: 942
பரிசேயர்: 1074
பர்திமேயு: 372
பர்தொலொமேயு: 437, 583, 998
பர்னபா: 185,194,241, 340,476,503,540,545,593, 596,597,644,648,684,688, 694,696,788,983
பவுல்: 22-24,31,33,46,48, 49,59,61,62,77,78,86,90, 96,101,103,106,122,123,125, 127,129,136,138,146,155, 158,164,165,169,173,185, 194,195,197,222,225,227, 228,230,232,244,249,252, 256,259,267,288,292,296, 299,303,304,318,322,331, 336,339,340,342,346,349, 351,353,357,373,374,379, 394,398,399,407,416,433, 437,445,454,476,490, 491,492,499,503,506,515, 520,539,540,542,549,554, 559,566,572,574,577,583, 585,592,593,596,597,599, 601,606,608,611,612,615, 617,620,623,626,632,633, 635,641,642,644,646,648, 649,651,656-658,661-663, 675,678,684,688,691,693, 695,696,699,706,714,722, 724,726,727,730,745,747, 748,753,759,761,763,764, 767,772,776-781,784,785, 788,790,791,796,800,801, 806,807,811,816,819,835, 837,838,842,855,859,861, 866,879,880,882,888,890- 892,898,901,904-908,910, 911,913,914,918-920, 930, 952-955,968,970,980,989, 990,991,993,995,998,999, 1002,1003,1007,1020,1022, 1030,1042,1058,1062,1066, 1084,1086,1088,1098
பார்வோன்: 90,885
பாவியான பெண்: 148
பிசாசு: 470,487,576,578, 725,746,763,834,899,904, 956,966,967,982,1010,1020, 1024,1037,1040,1087
பிலாத்து: 273,521,938, 995
பிலிப்பு: 46,437,476,504, 530,545,583,597,642,696, 715,835,998
பிலேமோன்: 175
பிலேயாம்: 90,134,135, 161,256,258,479,556,681, 764, 925
பெசலெயேல்: 441,857
பெயல்செபூல்: 983,997
பெல்ஷாத்சார்: 469
பேதுரு: 281,283,284,292, 294,296,306,331,346,349, 353,358,366,374,375,385, 387,389,432,434,436,476, 495,503-505,507,509,526, 527,529,536, 539,540,542, 545,559,560,576,577,583, 593,596,597,600,601,633, 635,642,648,675,679,689, 690,692,698,701,706,718, 723,724,726,728,733,740,747, 748,750,755,759,762,763,770- 772,774,811,813,855,861, 879,882,889,890,894,914, 927,929,983,984,991,997, 998,1001,1024,1041,1044, 1045,1046,1066,1094,1103
போத்திப்பார்: 858
மத்தியா: 437,583,998
மத்தேயு: 576,583,632, 635,942,998

மரியாள் (இயேசு): 33, 66,76,124,193,281,338,368, 390,395,410,412,413,451,476
மரியாள் (லாசரு): 75,
மனாசே: 960 [417
மனோவா: 354
மார்த்தாள்: 75,404
மாற்கு: 436,576,593,632,
மிகாயா: 817 [648,921
மிகாவேல்: 1083
மிரியாம்: 363,1049
மீகா: 876
மீஷாவேல்: 90,285,529, 607,1024,1042
மெல்கிசேதேக்கு: 264, 809,821
மொர்தெகாய்: 1100,1103
மேவிபோசேத்: 1055
மோசே: 63,83,275,283, 285,306,310,333,336,338, 353,399,407,446,468,516, 517,520,545,574,594,596, 597,603,605.609,637,692, 965,707,766,767,809,813- 815,817,827,838,855,885, 889,896,909,914,919,959, 960,1049,1052,1056,1091
யவீரு: 590
யாக்கோபு (ப.ஏ.): 34, 256,308,383,385,386,389, 407,466,482,550,758,764, 774,804,831,889,937
யாக்கோபு (கிலெயோப்பா): 583,998
யாக்கோபு (நிருபம்): 68,106,175,180,181,185,186, 194,301,347,353,385,387- 389,437,476,577,633,635, 642,672,690,733
யாக்கோபு (B/0 யோவான்): 583,882,998
யுஸ்து: 921
யூதா (Judah)**:** 318,728, 821,863,880
யூதா (Judas)**:** 819
யூதா (Jude)**:** 135,175, 437,583,869,963,970,998, 1022,1046
யூதாஸ்காரியோத்: 79, 500,505,638,829,1020,1046
யேசபேல்: 161,681
யோசபாத்: 433,445,919
யோசியா: 58,62,65
யோசுவா: 665,916
யோசேப்பு (அரிமத்தியா): 587,982,1063
யோசேப்பு (இயேசு): 410,412,413,943,944,1007, 1056,1057,1094
யோசேப்பு (ப.ஏ.): 37, 40,90,170,254,282,285, 320,332,378,591,619,626, 679,848,856,858,864,880, 885,951,962,978,1025,1037
யோபு: 34,37,101,136, 217,271,277,331,386,555, 668,758,770,904,1025,1031, 1050,1052
யோய்தா: 829
யோவாஸ்: 862
யோவாப்: 726
யோவான்: 176,185,164, 215,266,280,284,296,302, 350,353,357,366,374,375, 385,387,388,389,434,476, 504,539,540,549,552,559, 567,576,583,586,593,596, 598,611,632,635,648,671, 677,678,690,692,701,718, 719,724,728,740,748,759, 764,768,807,810,811,816, 817,833,855,914,941,990, 997,998,1006
யோவான் ஸ்நானகன்: 36,39,67,78,152,185,207, 276,336,562,618,667,670, 677,695,699,702,729,740, 764,774,801,817,818,848, 852,881,884,938,941,990, 1088,1095,
யோவேல்: 426,490,733, 759,812,814
யோனத்தான்: 1055
யோனா: 41,193,406, 572,642,703,707,880,1025
ராகாப்: 27,197,241,942,
ராகேல்: 255 [967
ராயர்: 140,988
ரெகொபெயாம்: 1053
ரெபெக்காள்: 709,729, 731,1002
லாசரு (செல்வந்தன்): 23,279,407,601,640,660,716, 1083,1090
லாசரு (மார்த்தாள் & மரியாள்): 896,968,949
லாபான்: 256,731
லீதியாள்: 255,494,521, 576,608,641,903
லூக்கா: 168,262,340, 436,576,632,768,869,921
லூசிபர்: 865,878,1026
லோத்து: 648,649,1037
லோவிசாள்: 383,1007
வேதபாரகர்: 136,137

மேற்கோள் அட்டவணை Quotes Index

‘‘எவரையும் மேற்கோள் காட்டாதவரை எவரும் மேற்கோள் காட்டமாட்டார்!’’ இது ஒரு முதுமொழி. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள், இயேசுவானவர், அப்போஸ்தலர், புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் ஆகியோர் பிரசங்கிக்கும்போதும் எழுதும்போதும் பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளனர். பிரசங்கங்களுக்குப் பழமொழிகள் ருசியூட்டும். அவர்களது வாழ்க்கை அல்லது கூற்றுகளுக்காய் ஏறத்தாழ 120 பேர் இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர். மற்ற ஒரு சிலரும் இங்கு இடம்பெற்றுள்ளனர்.

Abraham, K.S.: 533
Abraham Lincoln: 286
Adoniram Judson: 286, 582
Alfred H. Ackley: 132
Amy Carmichael: 155, 285,354,531,594,618, 640, 695
Andrew, Brother: 577,992
Andrew Murray: 592,655, [715
Bakthsingh: 693
Billy Graham: 72,155,156, 343,427,735,807, 891
Billy Sunday: 1018
Bounds, E.M. : 400
Cameron Townsend: 606
Campbel Morgan: 156
Chapin, E.M. : 1018
Charles Finney: 398,424, 431,676,694,752,855
Charles Wesley: 156,355, 434,489,594
Clinton, Bill: 543
Constantine, King: 345, [350
Daniel Webster: 430
David Barret: 524,586,630
David Brainerd: 155,400, 714
David Livingstone: 285, 524,582,606,618,651,1065
David Pawson: 78,654
David Weiss: 882
Donald McGavran: 606
Douglas MacArthur: 604
Edwin Orr: 510
Elisha A. Hoffman: 445
Evan Roberts: 398, 424-426
Fanny Crosby: 155,448, 451,517,600,725,966
Frances Ridley Havergal: [588
Francis Xavier: 556
Franklin Graham: 917
George Fox: 752
George Muller: 156,400, 455,556,578,875
George Verwer: 52,773, 840
George Whitefield: 144,574
Gladys Staines: 265
Graham Staines: 185,256, 286,542,670
Henry Ford: 286
Henry Smith: 1018
Henry Vos: 991
Hepzie Pandian: 1031
Hitler: 156,989
Horace: 607
Hudson Taylar: 286,354, 563,582,593,606,1050
Ida Scudder: 618,640, 846,861
Jamisson-Fausset-Brown: 756
Jebamani, P.: 533
Jim Elliot: 562,1092
Jim Reeves: 462
John Bowring: 1018
John Calvin: 528
John Foxe: 1004
John C. Hagee: 1080
John Hyde: 714
John Knox: 350,574,714, 816
John Newton: 30,144,178
John Pollack: 562
John Wesley: 28,96,144, 279,355,398,424,429,431, 436,489,536,585,694,847, 855,944,968,1018
Jonathan Goforth: 74, 424,694
Joseph Scriven: 85
Karl Max: 589

Leonard Ravenhill: 153, 155,315,336,491,699,796, 844,1000,1001
Lilian Stanley: 1017,1046
Lorry Peabody: 856
Louis Brailee: 516
Martin Luther: 28,30,32, 61,156,431,529,695
Mary Slessor: 286,531, 606
Matthew Henry: 51,556, 756
Miscellaneous/Bible: 1169-1172
Miscellaneous/Family: 1018
Moody, D.L.: 155,156,503, 554,593,855,1018
Morarji Desai: 592
Mother Teresa : 149,185, 273,502,543,558,670,917
Napolean: 433
Niles, D.T.: 590
Osborn,T.L.: 538,655
Oswald Chambers: 229
Oswald J. Smith: 534,595, 656,716
Pandit Ramabai: 531
Patrick Johnstone: 396, [575
Paul Brand, Dr.: 257
Philip Doddridge: 48
Polycarp: 991
Queen Mary: 350
Rajaji: 695,990
Rees Howells: 398,714
Richard Baxter: 520
Richard Foster: 685
Robert Arthington: 585
Robert Munger: 554
Robert Murray M'Cheyne: 253
Ruth Graham: 561,573
Ryle, J.C.: 529
Sadhu Sunder Singh: 286,516
Scotland Mother: 595
Spurgeon, C.H.: 32,156, 528
Stanley Jones: 149,185, [672
Stephen Neil: 616
Studd, C.T. : 149,353,499, 517,524,528,536,545,556, 588,617,775,993,1018,1048, 1065,1092
Susanna Wesley: 331, 354,489,594,699
Tahir Iqbal: 991
Tim Lahaye: 1080
Theodore, H. Epp: 64
Theodore, M. Hesburgh: 1018
Thomas Alva Edison: 517
Tozer, A.W.: 155,167
Unger: 756
Watchman Nee: 270,556, 556,557,775
Wayne Grudem: 756
William Beckham: 345
William Booth: 194,492, 596,602,683,775,786
William Carey: 98,156, 285,396,398,436,606,618, 696,715,865
William Tyndale: 992
William Walford: 445
William Walsham: 447
William Wilberforce: 436
Winston Churchill: 627

தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன் இருந்தார்; அவர் பெயர் ஜான் (வெஸ்லி) (1703-1791). வேறு எவரையும்விட இவரே இந்நூலில் அதிகம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளார். இவர் இங்கிலாந்தை அசைக்கத் தேவனால் பயன்படுத்தப்பட்ட ஓர் எழுப்புதல் வீரர். நமது சபைகளிலிருந்து செத்த சடங்காச்சாரங்களை விரட்டியடிக்க இன்னொரு ஜான் வெஸ்லியைத் தேவன் எழுப்புவாராக!

ஆசிரியரது நூல்களில்
‘‘கட்டுரைகளாய்’’ விரிவாக்கப்பட்டுள்ள
‘‘பிரசங்கக் குறிப்புகள்’’

இந்நூலின் 200 பிரசங்கக் குறிப்புகளில் கீழ்க்கண்ட 33 குறிப்புகள் முழுநீளக் கட்டுரைகளாய் விரிவாக்கப்பட்டு கீழேயுள்ள ஆசிரியரது நூல் களில் சேர்க்கப்பட்டுள்ளன.

<u>குறிப்புகளும் வரிசை எண்களும்</u> <u>நூல்களும் அத்தியாய எண்களும்</u>

2. சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷம் — *‘‘ஆனந்த தைலம்’’* (அத்தியாயம் 6)

9. பைபிளின் பயன்கள் — *‘‘காட்டுத் தேன்’’* (அத்தியாயம் 2)

12. திருமறைத் தியானத்தில் நிறைவான பயன்
— *‘‘காட்டுத் தேன்’’* (அத்தியாயம் 5)

16. தரிசனம் — *‘‘ஊழியரும் மக்களும்’’* (அத்தியாயம் 20)

21. இறங்கினார், ஏறினார், ஆதலால் ...
— *‘‘வல்லமை தேவனுடையது!’’* (அத்தியாயம் 3)

25. ஆராதனையின் அடுத்த பக்கம்
— *‘‘நெஞ்சில் நெருப்பு’’* (அத்தியாயம் 4)

29. துர்வுபதேசங்களுக்குத் தப்பி ...
— *‘‘சமநிலைக் கிறிஸ்தவன்’’* (அத்தியாயம் 3)

34. சமநிலைக் கிறிஸ்தவன் யார்?
— *‘‘சமநிலைக் கிறிஸ்தவன்’’* (அத்தியாயம் 1)

36. வெற்றி வேந்தர் மூலம் வெற்றி — *‘‘காட்டுத் தேன்’’* (அத்தியாயம் 7)

46. நாம் திருச்சித்தம் செய்யத் தவறுவதேன்?
— *‘‘நெஞ்சில் நெருப்பு’’* (அத்தியாயம் 5)

51. கீழ்ப்படிதலை எளிதாக்குவது எங்ஙனம்?
— *‘‘கீழ்ப்படிதலே மேல்படி!’’* (அத்தியாயம் 4)

65. ஆண்டவரோடு அமைதி நேரம் — *‘‘எதிர்நீச்சல் வாலிபர்’’* (அத்தியாயம் 6)

69. மன்றாட்டு ஜெபம் — *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 9)

72. ஓசன்னா! அல்லேலூயா! — *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 3)

74. எழுப்புதல் பற்றிய பாடங்கள்
— *‘‘உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்’’* (அத்தியாயம் 3)

77. புதிய பாடல் — *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 2)

78. கர்த்தருக்குள் மகிழ்ச்சி — *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 23)

88. எழுப்புதல் முகாம்களுக்காய் ஜெபிப்பது எப்படி?
— *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 8)

90. எழுப்புதல் அணைவது ஏன்?
— *‘‘உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்’’* (அத்தியாயம் 10)

94. பரிசுத்த வாரம் தரும் நற்செய்திப்பணிப் பாடங்கள்
— *‘‘ஆனந்த அறுவடை’’* (அத்தியாயம் 8)

96. பரிசுத்த ஆவியானவரும் நற்செய்திப்பணியும்
— *‘‘ஆனந்த அறுவடை’’* (அத்தியாயம் 17)

105. மிஷனரிகளை அனுப்புவதென்றால் என்ன?
— *‘‘ஆனந்த அறுவடை’’* (அத்தியாயம் 9)

109. விளைச்சல் குறைவதேன்? — *‘‘நெஞ்சில் நெருப்பு’’* (அத்தியாயம் 7)

110. மிஷனரிகளின் பிரச்னைகள் — *‘‘ஆனந்த அறுவடை’’* (அத்தியாயம் 15)

111. சுற்றுப்புற சுவிசேஷப்பணி
— *‘‘கண் திறக்கும் கட்டுரைகள்’’* (அத்தியாயம் 13)

113. கிறிஸ்தவமே தானதர்மம்தான்! — *‘‘நெஞ்சில் நெருப்பு’’* (அத்தியாயம் 10)

120. சபைகளில் பரிதாபங்கள் — *‘‘ஆனந்த அறுவடை’’* (அத்தியாயம் 21)

123. ஒருமனம், ஒற்றுமை — *‘‘ஊழியரும் மக்களும்’’* (அத்தியாயம் 11)

151. தேவ இரக்கமும் மனித உறவுகளும்
— *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 16)

177. இன்ப இல்லம் — *‘‘எழுப்புதல் வரும்போது ...’’* (அத்தியாயம் 22)

181. எதிர்பாராததை எதிர்பார்! — *‘‘எதிர்நீச்சல் வாலிபர்’’* (அத்தியாயம் 3)

194. பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி?
— *‘‘உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்’’* (அத்தியாயம் 12)

197. இரண்டாம் வருகையின் ஆசிகள்
— *‘‘வல்லமை தேவனுடையது’’* (அத்தியாயம் 10)

பைபிள் பற்றிய பொன்மொழிகள்

- பைபிளை வைத்துக்கொண்டு ஒரு கிறிஸ்தவர் என்ன செய்கிறார் என்பதைவிட அவர் அதை நம்புகிறாரா என்று கேட்பது அவ்வளவு முக்கியமல்ல! *— பேராயர் லெஸ்லி நியுபிகின் (1905-1998)*
- தூயாவியானவரின் உதவியின்றி வேதம் வாசிப்பது நிலவொளியில் சூரியக் கடிகாரம் போன்றது! *— D.L. மூடி (1837-1899)*
- நமது வாழ்விலும் சிந்தையிலும் பைபிளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இடமே நமது ஆன்மீக வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கும்!
— ஜார்ஜ் முல்லர் (1805-1898)
- நான் பைபிளை வாசிப்பதைவிட பைபிள் என்னை வாசிக்கிறது!
— A.W. டோசர் (1897-1963)
- கொஞ்சம் வேதம், கொஞ்சம் ஜெபம் என்றால் ஆன்மீக வாழ்விற்குச் சாவு மணிதான். அதிகம் வேதம், கொஞ்சம் ஜெபம் என்றால் நோயுற்ற வாழ்வு. அதிகம் ஜெபம், கொஞ்சம் வேதம் என்றால் உறுதியற்ற வாழ்வு. நிறைவான வேதத் தியானம், நிறைவான ஜெப வேளை ஆகியவையே ஆரோக்கிய வாழ்வு!
— ஆன்ட்ரூ முரே (1828-1917)
- முழங்கால்களில் நின்றால்தான் உங்களுக்குத் திருமறை நன்கு புரியும்! *— மாரிஸ் ஜீண்டல் (1897-1975)*
சுவிட்சர்லாந்து ஆயர் & கவிஞர்
- தேவனது வார்த்தையைக் கேட்டவன் அவரது அமைதியையும் சகிக்க முடியும்! *— புனித இக்னேஷியஸ், லயோலா (1491-1556)*
ஸ்பானிய இறையியலர்
- ஜெபித்து வேதம் வாசியுங்கள்; வேதம் வாசித்து ஜெபியுங்கள்; தேவ சத்தம் கொஞ்சம் கேட்பது மனித சத்தம் அதிகம் கேட்பதைவிட மேல்!
— ஜான் பனியன் (1628-1688)
''மோட்சப் பிரயாணம்'' எழுதிய ஆங்கிலேயர்
- பரதீசில் அன்று நடந்து வந்தது போலவே தேவன் இன்று மனிதனைத் தேடி நடந்து வருகிறார்! *— புனித அம்புரோஸ் (339-397)*
மிலான் எனுமிடத்திலிருந்த சபைத் தலைவர்

- நேர்த்தியாய் வாழ்வது எப்படி, மேன்மையாய்ப் பாடனுபவிப்பது எப்படி, ஆறுதலாய் மரிப்பது எப்படி எனப் போதிப்பது திருமறையே!
— ஜான் ஃபிளேவெல் (1639-1691)
ஓர் ஆங்கிலேயச் சபைத் தலைவர்
- பைபிளிலுள்ள எளிய பகுதிகளை வாசித்து அவற்றிற்குக் கீழ்ப்படிவதே அதிலுள்ள கடினமான பகுதிகளைப் புரிந்துகொள்ள ஒரே வழி! *— ஜான் ரஸ்கின் (1819-1900)*
- பேப்பரையும் பென்சிலையும் வைத்துக்கொண்டு பைபிளைத் திறக்கும் எவனும் தனது குறைவை விரைவில் உணர்ந்துகொள்வான்!
— A.W. டோசர் (1897-1963)
- வாழ்வின் காலத்திலும் தாழ்வின் காலத்திலும் திருமறைக்கே விரையும் பழக்கம் நமக்கிராவிடில், ஒளியையும் இருளையும் ஒருங்கிணைத்துக் கையாளத் தெரியாத நிலையில் திருமறையின் ஆறுதல்களை நமக்கு அனுபவிக்க முடியாது!
— ஹெலன் கெல்லர் (1880-1968)
19ஆம் மாதத்திலிருந்து பார்வையில்லாது,
காது கேளாதிருந்த ஓர் அமெரிக்க சமூகச் சீர்திருத்தவாதி
- மற்ற புத்தகங்கள் நமக்கு அறிவூட்டுவதற்கானவை; பைபிளோ நம்மை உருமாற்றுவதற்கானது! *— டார்லோ (1858-1927)*
- பிதாவானவராகிய தேவனே பரிசுத்த வேதம் தந்தவர்; குமாரனானவராகிய தேவனே பரிசுத்த வேதத்தின் மையப்பொருள்; ஆவியானவராகிய தேவனே பரிசுத்த வேதத்தின் ஆக்கியோன், ஆசிரியர்
— ஜேம்ஸ் பேக்கர்
ஆங்கிலேய இறையியலர்
- பஞ்ச காலத்திற்காய்த் தானியம் சேமித்து வைத்த யோசேப்பு போல, நமக்கு வரக்கூடிய பாடுகளின் காலத்திற்காய் நமது இதயங்களில் இறைவார்த்தையின் சத்தியங்களைச் சேமித்து வைப்போம்!
— பில்லி கிரஹாம் (1928-)
- திருவார்த்தையானது தெளிவானது; அதில் விளங்காத பகுதி இருக்குமானால் தமக்குத்தாமே முரண்படாத தூயாவியானவர் அப்பகுதியை வேறொரு இடத்தில் தெளிவுபடுத்தியிருப்பார்!
— ஜான் நாக்ஸ் (1505-1572)
புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதி, ஸ்காட்லாந்து

■ பைபிள் போதிக்கும் மார்க்கத்தைவிட அதிகம் நிரூபிக்கப்பட்ட அறிவியல் எதுவுமில்லை! *— ஐசக் நியூட்டன் (1642-1727)*
கணித, பௌதீக மேதை, இங்கிலாந்து

■ மக்களுடையதும், மக்களாலானதும், மக்களுக்கானதுமான அரசையே பைபிள் போதிக்கிறது! *— ஜான் விக்ளிப் (1320-1384)*

■ இடையில் விட்டுவிடாதீர்! சோர்ந்துபோகாதீர்! நான் பைபிளின் இறுதியை வாசித்துவிட்டேன்! நாம்தான் ஜெயிப்போம்!
— டேஸ்மண்ட் டூட்டு
சமூக உரிமைப் போராளி

■ பைபிள் வாசிக்கும் மக்களை மன ரீதியிலோ, சமூக ரீதியிலோ அடிமைப்படுத்துவது கூடாத காரியம். மனிதனது சுதந்திரத்திற்கு அடிக்கல் நாட்டுவது பைபிள்தான்!
— ஹோரேஸ் கிரீலி (1811-1872)
New York Tribune பத்திரிகை நிறுவனர் & ஆசிரியர்

■ ஒரு பைபிளும், ஒரு விளக்கும் கொடுத்து என்னை இருட்டறையில் அடையுங்கள்; முழுவுலகும் என்ன செய்கிறதென்று சொல்லிவிடுவேன்! *— யாரோ*

■ தேவனும் பைபிளும் இல்லாது உலகைச் சரியாய் அரசாள முடியாது!
— ஜார்ஜ் வாஷிங்டன் (1732-1799)
அமெரிக்காவின் முதல் அதிபர்

■ தனது நோக்கத்திற்காய் திருமறையைப் பிசாசு மேற்கோள் காட்டுவான்! *— வில்லியம் ஷேக்ஸ்பியர்*

■ நமது அயலானை நேசிக்கவேண்டுமென பைபிள் போதிக்கிறது; அப்படியே நமது எதிரியை நேசிக்கச் சொல்லுகிறது; ஒருவேளை இருவரும் ஒரே நபர்தானோ? *— G.K. செஸ்டர்டன் (1874-1936)*
ஆங்கிலேயக் கட்டுரையாளர் & கவிஞர்

■ தனது வாழ்வுக் காலத்தில் இன்னும் ஐம்பதாண்டுகளில் ஒரு பைபிள்கூட உலகில் இருக்காது என்று வால்டேர் எதிர்பார்த்தார். ஆனால் இன்று அவரது வீடுதான் பல மொழிகளில் பைபிள் வினியோகிக்கப்படும் மையமாகத் திகழ்கிறது!
— காரி டென் பூம் (1892-1983)

■ திருமறையின் பொதுவான கருத்திற்கு எதிர்மறையானவற்றை ஆமோதிப்பது போன்ற பல வசனப் பகுதிகளைச் சுட்டிக்காட்டலாம். துர்வுபதேசம் தோன்றுவதே இப்படித்தான்!
— அன்னாள் விட்டல் ஸ்மித் (1832-1911)
ஒரு தீவிர சுவிசேஷகி

■ புத்திக் கூர்மையையோ, அறிவாற்றலையோ பாராட்டும் ஒரு வசனம்கூட சுவிசேஷங்களில் கிடையாதென்பதே நான் கண்டது!
பெர்ட்ராண்ட் ரசல் (1872-1970)
— ஆங்கிலேய கணித மேதை & தத்துவ ஞானி

■ பைபிளில் விளங்காத பகுதிகளே பலருக்கும் பிரச்னை; என்னைப் பொருத்தவரை நன்கு விளங்கும் பகுதிகளே எனக்குப் பிரச்னை!
— மார்க் டுவெய்ன் (1835-1910)
அமெரிக்க எழுத்தர் & நகைச்சுவை மன்னர்



ஜெர்மனியில் 1450களில் ஜோஹன் குட்டன்பர்க் என்பவர் கண்டுபிடித்த கோர்ப்பெழுத்து அச்சியந்திரத்தில் அச்சடிக்கப்பட்ட முதல் புத்தகம் லத்தீன் மொழி பைபிள்தான்!

வேத ஆராய்ச்சிக்கும்
பிரசங்கப்பணிக்கும்
இன்னும் சில
உபகரணங்கள்

இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?

அடுத்த தலைமுறைப் பிரசங்கிமாருக்கு
உதவவேண்டுமென்ற பாரத்துடன்
சகோதரன் R. ஸ்டான்லி
இந்தியாவெங்கிலுமிருந்து 250 பேரைத் தெரிந்தெடுத்து
மூன்று நாள் கருத்தரங்கு ஒன்று நடத்தி
அதில் கீழ்க்கண்ட தலைப்புகளில் உரையாற்றினார் —

1. ***கடவுளிடமிருந்து செய்திகளைப் பெறுவது எப்படி?***
2. ***பிரசங்கங்களை வடிவமைப்பது எப்படி?***
3. ***சபையாருக்குப் பிரசங்கிப்பது எப்படி?***

பல்லாயிரங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி
இச்செய்திகள் ஒளித்தட்டுகளில் (DVD) வெளியிடப்பட்டுள்ளன.

- ஆங்கிலத்திலிருந்து தமிழ் ... 10 ஒளித்தட்டுகள்
  ஓடும் நேரம்: மொத்தம் 15 மணி ... ரூ. 500/-
  (திருச்சி, 2007)
- ஆங்கிலத்திலிருந்து இந்தி ... 9 ஒளித்தட்டுகள்
  ஓடும் நேரம்: மொத்தம் 14 மணி ... ரூ. 500/-
  (நாக்பூர், மகாராஷ்டிரா, 2008)

இச்செய்திகள் புத்தக வடிவிலும் தமிழில் உண்டு.
விலை ரூ. 75/-

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>

Bible Foundation

Brother Stanley's handwritten notes
of 4 weeklong Study Programmes
of 1977, 1978, 1979 & 1984

Genesis to Revelation

Subjects include Bible Introduction,
Bible Study Methods, Dispensations,
Covenants, Church History, Trinitarian Godhead,
Gifts & Ministries, Personal Sanctification,
Last Things, etc.

4 Volumes, totally 400 pages of A4 size paper,
spiral-bound, including a Master Index Card.
Cased in an attractive paded rexin pouch.

Ideal for personal studies,
Bible Study groups and classroom teaching.

Suitable for both new believers
and mature Christians.

Price Rs. 500/- per Pack; forwarding Rs. 100/-

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>

''பைபிள் புதையல்கள்''

by **R. ஸ்டான்லி**

ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
ஆங்கிலத்திலும் உண்டு.

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
ஆங்கிலத்திலிருந்து தமிழ்.

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

■

100 மணி நேரத் திடமான வேத போதனை

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.

பைபிள் பதில்கள்

Bible Answers

by R. ஸ்டான்லி

அடிக்கடி கேட்கப்பட்டும்
அபூர்வமாய்ப் பதிலளிக்கப்படும்
100 கேள்விகளுக்குக் கீழ்க்கண்ட பிரிவுகளில்
தெளிவான பதில்கள் —

1. கிறிஸ்தவ வாழ்வு
2. கிறிஸ்தவ உபதேசம்
3. ஆவியானவரும் வரங்களும்
4. திருச்சபை
5. கிறிஸ்தவ ஊழியம்
6. பாலுறவும் திருமணமும்
7. சமூக வாழ்வு

**ஒவ்வொரு கிறிஸ்தவரும் பிரசங்கியாரும்
கட்டாயம் வாசிக்கவேண்டியது!**

256 பக்கங்கள், சாதா அட்டை ரூ. 100/-, தடித்த அட்டை ரூ. 125/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002
Tel: 91 44 28450411 <blc@bymonline.org>

வேதபாடக் குறிப்புகள்

(Bible Study Outlines)

ஜெபக்குழுக்களுக்கும், வேத ஆராய்ச்சி வகுப்புகளுக்கும்,
சீடத்துவப் பயிற்சித் திட்டங்களுக்கும் பயனளிக்கும்
வேத பாடக் குறிப்புகளடங்கிய மூன்று புத்தகங்கள்.
by R. ஸ்டான்லி



பொற்பழங்கள் (1979) 60 பக்கங்கள்

மறுபிறப்பு முதல் மறுவருகை வரை
26 அடித்தள வேதபாடங்கள்.
இச்சத்தியங்களை அப்பியாசித்தால்
ஆன்மீக வாழ்வும் இறைப்பணியும் மேம்படும்.



சிறு நரிகள் (1984) 60 பக்கங்கள்

நமது கனிவாழ்வைக் கெடுக்கும் 22 பாவங்கள்.
நமது திராட்சச்செடிகளை நாசமாக்கும்
''சிறு நரிகள்'' இவை.
தற்பரிசோதனைக்கு ஏற்ற வழிகாட்டி!

ஐந்தப்பம் இருமீன் (1998) 110 பக்கங்கள்

5000க்கும் அதிகமானோருக்கு உணவளிக்க
ஐந்தப்பம் இருமீனை ஆண்டவர் ஆசீர்வதித்ததுபோல
இப்புத்தகத்திலுள்ள 40 சுருக்கக் குறிப்புகளைத்
தனித்தியானத்திற்கும், குழு ஆராய்ச்சிக்கும்,
பிரசங்கப்பணிக்கும் பெருக்கலாம்.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

"ஊழியரும் மக்களும்"



Preachers
&
People

ஊழியரே மக்களை உருவாக்குகின்றனர்;
மக்களே ஊழியரை உருவாக்குகின்றனர்!
"மக்களுக்கு எப்படியோ, ஆசாரியனுக்கும் அப்படியே!" (ஓசி 4:9)
நடத்தப்படுவோர் நடத்துவோரைப் பாதிப்பர்;
நடத்துவோர் நடத்தப்படுவோரைப் பாதிப்பர் (ஏசா 24:2).
கடவுளுடைய நித்தியமான திட்டங்களை நிறைவேற்றுவதில்
கிறிஸ்தவத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் உள்ள
சரிசமப் பொறுப்பைச் சகோதரன் ஸ்டான்லி
இந்நூலில் எடுத்துரைக்கிறார்.

22 நேரடிச் செய்திகள்
216 பக்கங்கள்
விலை ரூ. 80/-
ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

"பாலும் தேனும்"



Milk
&
Honey

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் ஒவ்வொரு வருடாந்திர முகாமிலும்
குறிப்பிட்டதொரு வேதாகமக் கருப்பொருள் தியானிக்கப்பட்டது.
1971 முதல் இச்செய்திகளில் பெரும்பாலானவை
சகோதரன் ஸ்டான்லியினால் கொடுக்கப்பட்டன.
அவ்வித ஆறு கருப்பொருட்கள் மீதான செய்திகள்
இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன —

1. ***பாலும் தேனும்*** (1982)
2. ***ஆமென், அல்லேலூயா*** (1979)
3. ***அல்பா, ஓமெகா*** (1980)
4. ***உமது இராஜ்யம் வருவதாக!*** (1980)
5. ***புதிய வானம் புதிய பூமி*** (1981)
6. ***தேவ பக்தி*** (1982)

□ 288 பக்கங்கள் □ உறையுடன் தடித்த அட்டை □
விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-
ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

Youth Revival Letters

AßøÓ¯U Piu[PÒ u¸®
Kº GÊ¨¦uÀ \›zvµ®
1970&1990

by R. *ஸ்டான்லி*

☐ *160 இதயம் பேசும் கடிதங்கள்* ☐

☐ *800 புகைப்படங்களும் வரைபடங்களும்* ☐

☐ *30 எழுப்புதல் அறிக்கைகள்* ☐

☐ *50 சவால் நிறை கட்டுரைகள்* ☐

☐ *33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள்* ☐

☐ *8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள்* ☐

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

**கிறிஸ்தவ வாழ்வில்
நிறைவாய் வளர உணவளிக்கும்
ஒரு தினசரித் தியான நூல் ...**



Better Everyday

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

*அனைத்துச் சபையினரும் ...
அனைத்து வயதினரும் ...
அனைத்துத் துறையினரும் ...
விரும்பி வாசிக்கும்
ஒரு புதிய படைப்பு!*

*432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-
10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி*

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

கிடைக்குமிடம்:

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>

StanleyOnBible.com

A WEBSITE FOR BIBLE LOVERS

CONTENTS

- ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for
  Personal Meditation and Pulpit Preaching
- ***Bible Studies***
  Studies on specific themes
  and select books of the Bible
- ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold
  Sound Doctrines of the Bible
- ***Youth Matters***
  Practical Guidelines to Young Men
  and Young Women for Successful Living
- ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons
  on Christian Leadership
- ***Missionary Challenge***
  Calling Christians to obey
  the Great Commission of Christ
- ***My Answers***
  Answers to Questions
  frequently asked but rarely answered
- ***Quotable Quotes***
  Stanley's analytical Statements
  about Christian Life and Ministry
- ***Video Talks***
  Stanley's Bible Sermons
  in Video & Audio format, freely downloadable

Register your e-mail id in this website
to receive updates and daily devotions.

முடிவு வரிகள்

- இந்நூல் எவ்விதம் உங்களுக்குப் பயனளித்தது என்று பகிர்ந்து கொண்டால் ஆசிரியரும் அவரது குழுவினரும் ஊக்கமடைவர்.
- இந்நூலின் சமநிலைப் போதனையினால் உங்கள் நண்பர்களும் பயனடையும்படி பிரதிகள் வாங்கி அவர்களுக்கு விநியோகியுங்கள்.
- பிறந்த நாட்கள், ஆண்டுவிழாக்கள், புத்தாண்டு மற்றும் பட்டமளிப்பு போன்றவற்றிற்கு விசுவாசிகளுக்கு அன்பளிக்க இந்நூல் சிறந்தது. 10 அல்லது கூடுதல் பிரதிகள் வாங்கினால் ரூ. 1000/- என்ற தனிப் பிரதி விலையில் 25% தள்ளுபடி.
- உங்கள் சபை ஆயருக்கும், பிரசங்கிகளான நண்பருக்கும் இந்நூல் அர்த்தமுள்ள அன்பளிப்பு. முழுநேர ஊழியர் அல்லது இறையியல் கல்லூரி மாணவர் தங்கள் ஊழிய விபரங்களை எங்களுக்கு எழுதி அனுப்பினால் தனிப்பிரதியின் விலையிலேயே 50% தள்ளுபடி.
- இறைமக்களைப் பக்குவப்படுத்த இந்நூலின் ஆசிரியர் மேற்கொள் ளும் அனைத்து முயற்சிகளுக்காகவும் ஊக்கமான ஜெபத்தினாலும் தாராள காணிக்கையினாலும் அவரது கரங்களைப் பலப்படுத்துங்கள்.

(For Online Remittance: R. STANLEY, SB Account No. 10545862765,
State Bank of India, Branch No. 7274, IFS Code: SBIN0007274,
SWIFT Code: SBININBB473, Vellore 632 006, Tamilnadu, India)

பைபிள் முத்துக்கள்

தேவன் சகோதரன் R.ஸ்டான்லியை 1963இல், அவரது 16 வயதினில், தமது திருவார்த்தையைப் பிரசங்கிக்க அபிஷேகம்பண்ணினார். இவர் சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரியில் (IIT Madras) முதுநிலைக் கட்டிடப் பொறியியல் பட்டம் பெற்றவர். இவரது பிரசங்கங்கள் திருவசனச் செறிவு நிறைந்தவை, உபதேசத்தில் ஆரோக்கியமானவை, வலியுறுத்துவதில் சமநிலையானவை, முழுக்க முழுக்க நடைமுறையானவை. இவர் பிரசங்கப் பீடங்களில் 53 ஆண்டுகள் (1963-2016) பயன்படுத்திய 200 சொந்தப் பிரசங்கக் குறிப்புகளைக் கீழ்க்கண்ட 14 பிரிவுகளில், பைபிள் பிரியர்களையும் பிரசங்கிமாரையும் ஆசீர்வதிக்க, இந்நூலில் தொகுத்துள்ளார்.

1. மனந்திரும்புதல் & இரட்சிப்பு
2. திருமறை & திருவுபதேசம்
3. கிறிஸ்தவ வாழ்வு
4. ஜெபம் & தொழுகை
5. எழுப்புதல் & ஆதிநிலையேகுதல்
6. தற்செய்தியறிவிப்பு & மிஷனரிப்பணி
7. திருச்சபை
8. பிரசங்கித்தல் & ஊழியம்
9. வேலை, சகவுறவுகள் & தலைமை
10. சிலுவை & பாடுகள்
11. குடும்பம்
12. இளைஞர்
13. நபர்கள் வாழ்க்கை & பொதுவானவை
14. இறப்பு & இரண்டாம் வருகை

வசன அட்டவணை, பொருள் அட்டவணை, கதாபாத்திரங்கள் அட்டவணை & மேற்கோள் அட்டவணை உள்ளடக்கம்.

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>